COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH

வண்ணத்துப் பூச்சியின் கண்கவர் துணிகள்
எண்ணத்தைக் கவர்ந்து வாங்க வைப்பவை.

கோ ஆப்டெக்ஸ் துணிகள் நீங்கள்
வாங்கும்போதே குறைந்த விலையில் நல்ல
தரமிருந்த நீடித்து உழைக்கக் கூடிய
துணிகளையே வாங்குகிறோம் என
உணர்வீர்கள். எனவேதான்
கோ ஆப்டெக்ஸ் அனைவரது
விருப்பத்துக் கேற்ற வகையில் உள்ளன.

உங்களது ஆடை அணிகலனில்
கோ ஆப்டெக்ஸ் புடவைகளையும்
சேர்த்திடுவீர்! உங்களது கலை உணர்வையும்
தேர்ந்து எடுக்கும் திறமையையும் அது
வெளிப்படுத்துகிறது.

வீட்டில் நடக்கும் திருமணங்கள்,
பண்டிகைகள், மதசம்பந்தமான
விழாக்கள் மற்றும் சமூக கலாசார
வைபவங்களில் நீங்கள் உடுத்துவதற்
கேற்ற வகையில் பட்டு மற்றும் பருத்தி
புடவைகள் - எல்லாமே அழகுமிக்கவை
ஆமாம் - கோ ஆப்டெக்ஸ் அளித்திடும்
வண்ண வகைகள்.

வாங்கிடுவீர்
கோ ஆப்டெக்ஸ் துணிகளையே!

வந்திடுவீர்
எமது காட்சிக் கூடங்களுக்கு!!

கோ-ஆப்டெக்ஸ்

காணிக்கை

தமிழக அரசின் ஓராண்டுப் பணிகள் தொகுப்பு மலரைத் தமிழக மக்களுக்குக் காணிக்கையாக்குகிறோம்.

அரசின் பணிகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லி வரும் 'தமிழரசு' தனது ஒன்பதாவது ஆண்டைத் துவக்குகிறது.

'தமிழரசு'க்குத் தங்கள் மேலான ஆதரவை நல்கி வரும் அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி!

மலர் 9 1-7-1978 இதழ் 1

முதல்வரின் உறுதி

"இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் மதுவிலக்கை முழு வெற்றி பெறச் செய்யமுடியும். இந்தப் பிரச்சினையை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு செயல்பட நான் உறுதி கொண்டுள்ளேன்", என்று தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சென்னை பத்திரிகை நிருபர்கள் சங்கத்தில் ஜூன் மாதம் 11-ஆம் தேதி உரையாற்றுகின்றபோது குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது :

மதுத் தீமையை ஒழிப்பதற்குத் தமிழக அரசு பல்வேறு திட்டங்களையும் உருவாக்கிக் கொண்டு வருகிறது. மதுவிலக்கை அமல் செய்வதற்காகத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சட்டத்தை மீறி மது அருந்துகிறவர்களையும் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களையும் தண்டிப்பதற்கான சட்டங்கள் மேலும் கடுமையாக்கப்படும்.

மற்ற மாநிலங்களில் மது விலக்கு முயற்சி தோற்றுவிட்டது என்பதற்காகத் தமிழகத்திலும் அது தோல்வி அடைய வேண்டும் என்கிற அவசியமில்லை. மது விலக்குக் கொள்கை வெற்றி பெறுவதும் தோல்வி அடைவதும் அந்த மாநிலத்திலுள்ள மக்களுடைய விருப்பத்தையும், மனோபாவத்தையும் பொறுத்த விஷயம். அண்டை மாநிலங்கள் மது விலக்கை அமல் செய்யத் தயக்கம் காட்டுகின்றன என்பதற்காக அந்த விஷயத்தில் நாம் பின்வாங்கத் தேவை இல்லை.

மொழிப் பிரச்சினை

இந்தி மொழி மீது நமக்கு வெறுப்பு இல்லை. இந்தி ஆட்சி மொழியாக ஆவதை நாம் எதிர்ப்பதற்குக் காரணம் உண்டு. இந்தி மட்டுமே ஆட்சி மொழியானால் இந்தி பேசாத மக்களை அது இரண்டாந்தரக்.குடிமக்களாக ஆக்கிவிடும். பல ஆண்டுகளுக்கு முன் மேற்கு வங்க முதலமைச்சராக இருந்த பி.சி. ராய் அவர்கள், 'மேற்கு வங்கத்தின் மீது இந்தி திணிக்கப்படுமானால் அது பிரிவினையில் தான் போய் முடியும்' என்று மத்திய அரசை எச்சரித்து இருக்கிறார். இந்தித் திணிப்பால் இந்திய ஒருமைப்பாடு பாதிக்கப்படும் என்று நாம் சொல்லுகிறோம். மொழி விஷயத்தில் நம்முடைய உணர்ச்சிகளை இந்தி பேசுகிறவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டுமென்று நான் விரும்புகிறேன். மத்திய-மாநில உறவுகளுக்குத் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லுகின்றவர்கள் மாநிலத்துக்கு மாநிலம் தொடர்பு மொழியாக இந்தி மொழி இருக்கலாம் என்று கூறுவது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருக்கலாம் என்றால் அதே ஆங்கிலம் மாநிலங்களுக்கிடையே தொடர்பு மொழியாக ஏன் இருக்கக்கூடாது? மத்திய அரசோடு ஆங்கிலத்தில் தொடர்பு வைத்துக்கொள்ளும் மாநில அரசின் அதிகாரிகள் ஆங்கிலத்தில் பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள். ஆகவே, இன்னொரு மாநிலத்தோடு நிர்வாகத் தொடர்பு வைத்துக்கொள்ளும்பொழுது ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதுதானே அவர்களுக்கு வசதியாக இருக்கும்? ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகு, இந்தி எதற்காகத் தேவை என்றே எனக்குப் புரியவில்லை.

பத்திரிகைகள்

வெறும் விளம்பரத்திற்காக இந்த அரசு எந்தக் காரியத்திலும் ஈடுபடாது. மக்களுக்காக என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியமானதே தவிர, என்ன செய்யப் போகிறோம் என்று சொல்லி விளம்பரங்கள் செய்துகொண்டு இருப்பதால் யாருக்கும் எந்தவிதமான பயனும் இல்லை.

நான் பத்திரிகைக்காரர்களை அடிக்கடி சந்திப்பது இல்லை என்கிற குறை இருந்து வருவது எனக்குத் தெரியும். ஓர் அரசு வெற்றிகரமாகச் செயல்பட்டு அதனுடைய கொள்கைகளையும், திட்டங்களையும் அவ்வப்போது பத்திரிகைகள் வாயிலாக மக்களுக்குத் தெரிவிப்பது எவ்வளவு அவசியமானது என்பதை அறியாதவன் அல்ல நான்.

ஆனால், நான் அரசின் சார்பாக வெளியிடுகின்ற எண்ணங்களையும் கருத்துக்களையும் எந்த அளவுக்குப் பத்திரிகைகள் திரித்துப் போடாமல் அப்படியே வெளியிடும் என்பது பற்றி எனக்குக் கொஞ்சம் அச்சம் உண்டு. கருத்துக்கள் சரியான முறையில் பத்திரிகைகளில் வெளியாகாமல் போய் விடுகிறபோது, எந்த நோக்கத்துக்காக அந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டனவோ அந்த நோக்கமே வெற்றி பெறாமல் போவதற்கு அது வழி வகுத்து விடக்கூடும். ஆகவேதான் பத்திரிகையாளர்களைச் சந்திப்பது பற்றித் தயக்கம் காட்ட வேண்டியவனாக இருந்தேன். இப்போது இந்த அரசு பொறுப்பு ஏற்று ஓர் ஆண்டு முடியப் போகிறது. இனி, பத்திரிகையாளர்களைச் சந்திக்கும் வாய்ப்பை நிறைந்த அளவில் நான் பயன்படுத்திக்கொள்வேன்.

மக்கள் வைத்துள்ள நம்பிக்கை

மக்கள், நான் நல்லவன் என்று நம்பித்தான் என்னைப் பெரிய பொறுப்புக்குத் தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். எனக்கு வேறு எந்தத் தகுதியும் இருப்பதாக நான் கருதவில்லை. நான் நல்லவனா, இல்லையா என்பதைப் பற்றிக்கூட நானாக ஒன்றும் சொல்லமுடியாது. வருங்காலச் சந்ததியர்கள் தான் அதைப் பற்றி அபிப்பிராயம் சொல்லமுடியும். ஆனால், என்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொள்ள என்னாலான எல்லா முயற்சிகளையும் செய்வேன் என்று மட்டும் என்னால் உறுதியாகச் சொல்லமுடியும். ஆகவேதான் என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் நான் மிகுந்த கண்காணிப்புடனும் விழிப்புடனும் இருக்க வேண்டியவனாக இருக்கிறேன்.







நிர்வா கத்தில் நிகரிலா நாணயம்
தலையீ டில்லாச் சக்கரச் சுழற்சி
காலத் தாலே காரியம் செய்தல்
இன்ன தேவை இப்பொழு தென்று
அன்னதை மட்டும் அளந்து முடித்தல்
வெற்றுப் பேச்சுகள் விளம்பர மேளம்
அண்டா திருக்கும் அடக்கப் பெருநிலை
மந்திரி என்னும் மமதையில் லாமல்
கலந்து பழகும் கண்ணியப் போக்கு
போலீஸ் கூட்டம் புடைசூ ழாமல்
மக்கள் நடுவே வலம்வரும் அழகு
வேளாண் மைக்கு வியத்தகும் உதவி
தமிழின் மேன்மையைத் தரணியில் காக்க
புதுப்புதுச் செயல்கள்! பொன்னெழுத் தாக
எழுதும் வண்ணம் இயக்கும் திறமை;
குறையையே தேடும் கூட்டங் களுக்குத்
தீனிபோ டாத செம்மையும் மேன்மையும்
பற்றுக் குறையெனப் பதறு திருத்தல்
கடன்களை எழுப்பிக் கவலை தராமல்
நிவாரணப் பணிஎன நிதிதிரட் டாமல்
திட்டத் துடனே செயல்படும் உயர்வு ;
கட்சிக் காரனைக் கட்டுப் படுத்தி
ஆட்சி நேர்மையின் அறத்தினைக் காத்தல்;
வள்ளுவன் வகுத்த வழிகளுக் கிணங்க
நல்லர சொன்றை நடாத்திக் காட்டுதல்;
இவையெலாம் பெற்றதே இன்றைய ஆட்சி ;
சுவையெலாம் திரண்டு சோற்றில் விழுந்தபோல்
பசியுள பேர்க்கெலாம் பயனுள விருந்து
புகழ்ந்து பேசாது போகின் றவர்களும்
இகழ்ந்து பேசிட எதுவுமே இல்லை;
நல்லர சென்று நவிலும் முறைக்கு
இலக்கணம் வகுத்தது இன்றைய ஆட்சி ;
ஓராண்டு போல உயர்ந்து வளர்ந்து
நூறாண்டு வாழ்கஇந் நோயில்லா அரசு.

அரசவைக் கவிஞர்

கண்ணதாசன்

இடுக்கண் களைந்த அரசு

1977-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்!

வடகிழக்குப் பருவ மழை தீவிரமடைந்த நேரம்!

"இலங்கை அருகே கடலில் உருவாகி உள்ள புயல், கன்னியாகுமரிக்கும் இலங்கைக்கும் இடையே மையம் கொண்டிருந்தது. இதன் விளைவாக, தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் பலத்த மழை பெய்யும்..." என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் அவ்வப்போது அறிவித்துக் கொண்டிருந்த சூழ்நிலை!

பிறகு இந்தப் புயல், தமிழ்நாட்டுக்குக் கிழக்கே வங்காள விரிகுடாவில் 1,000 மீட்டர் (625 மைல்) தூரத்தில் உருவாகி தமிழ்நாட்டின் கரையைத் தாக்கிய வேளை!

இவ்வாறு கோரப் புயலும், கனத்த மழையும் சேர்ந்து ஆடிய ஆட்டத்தில் தமிழகமே ஆட்டங் கண்டதல்லவா!

சென்னையில் வெள்ளக் காடு !

அக்டோபர் மாதம் 17ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை பெரும்பாலும் விடா மழை பெய்ததால் சென்னை மாநகரின் தாழ்வான பகுதிகளில் நீர் புகுந்தது. பொது மக்களின் அன்றாட வாழ்வு சீர் குலைந்தது. சென்னையில் வியாசர்பாடிப் பகுதி குறிப்பாகப் பெரிதும் பாதிக்கப்பட்டது. அடையாற்று வெள்ளம் கோட்டூர்புரத்திலுள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் புகுந்தது.

முந்திக் கொண்டது !

தமிழ்நாட்டிற்கு மழை வழங்கும் வடகிழக்குப் பருவ மழை இந்த ஆண்டில் (1977) முன் கூட்டியே —அக்டோபர் மாத ஆரம்பத்திலேயே தொடங்கி, 17ஆம் தேதி முதல் வலுத்துப் பெய்தது.

வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளபடி 1977 அக்டோபர் முதல் நாள் முதல், 17 ஆம் நாள் வரை 14,824 மில்லி மீட்டர் அளவுக்குப் பெரு மழை பெய்திருக்கிறது. வழக்கமாகப் பெய்யும் மழையளவைக் காட்டிலும் இது 6,219 மில்லி மீட்டர் அதாவது 72 சதவிகிதம் கூடுதலானதாகும்.

நாகம் போல் சீறியது !

அக்டோபர் மாதம் பெய்த மழையின் பிடியிலிருந்து முற்றிலுமாக நாம் விடுபடும் முன்னர், மேலும் ஓர் இடியாகக் கடும் சூறைக் காற்று நவம்பர் 12ஆம் தேதி காலையிலிருந்தே மணிக்கு 100 கிலோ மீட்டருக்கும் அதிகமான வேகத்துடன் நாகப்பட்டினம் நகரை வன்மையாகத் தாக்கிச் சீர் குலைத்துச் சின்னாபின்னப்படுத்தியது.

கிராமங்கள் மூழ்கின !

பெரும் புயலோடு வலுத்த மழையும் தமிழகத்தைத் தாக்கியது. கால்வாய்களும், காட்டாறுகளும், சிற்றாறுகளும், பேராறுகளும் பெருக்கு எடுத்துக் கரை புரண்டு சுற்றுப்புறங்கள் அனைத்தையும் வெள்ளக் காடாக்கின. புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றிலும், குண்டாற்றிலும் வெள்ளம் மிகுந்து பல கிராமங்களை மூழ்கடித்தது.

மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் அருகேயுள்ள குடகனாற்று அணை உடைந்து, தாழ்வான பகுதிகளிலிருந்த கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

சோதனை மேல் சோதனை !

நாகப்பட்டினத்தைப் புயல் தாக்கியவுடன் மேலும் ஒரு புயல் உருவாகித் தீவிரமடைந்து வருவதாக வானிலை ஆராய்ச்சித் துறை அறிவித்தது. இச்சூறைக் காற்று, நவம்பர், 17, 18 தேதிகளில் பாம்பன் கடற்கரையைத் தாக்கக்கூடும் என்று முதற்கண் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது வடக்கே நகர்ந்து நாகப்பட்டினம், கடலூர், சென்னைப் பகுதியை நோக்கி வந்தது. பின்னர் திசை மாறி வடக்கு நோக்கி மேலும் நகர்ந்து 19ஆம் தேதி பிற்பகல் ஆந்திர மாநிலத்தில் சிராலாப் பகுதியைத் தாக்கிச் சீரழித்தது.

முன்னெச்சரிக்கையாக.... !

தமிழ்நாட்டின் கடற்கரையோர மாவட்டங்களில் வாழும் மக்கள் அனைவருமே இப் புயலால் அஞ்சிப் பெரிதும் திகைத்தனர். புயலால் நேரவிருந்த பாதிப்பை, முடிந்த அளவுக்குத் தணிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு உடனே மேற்கொண்டது.

வரலாறு காணாத வகையில் தமிழகத்தைத் தாக்கிய கடும் புயலாலும், பெரு வெள்ளத்தாலும்



பாதிக்கப்பட்டு மோசமாகச் சேதமடைந்த தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் துயர்துடைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்றன.

அரசின் வேண்டுகோளுக்கு இணங்கி விமானப் படையினரும், கப்பற் படையினரும் பெரிதும் உதவினர்.

போர்க்காலப் பணி போல்.... !

இத்தகைய சோதனையான சூழ்நிலையில், தமிழக அரசு துயர் துடைப்புப் பணிகளைக் கொஞ்சமும் துவளாமல், தளராமல் போர்க் காலப் பணிகளைப் போல் விரைவாகச் செயல்படுத்தியது.

முதல் தவணையாக....

20—11—'77 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் உயர் அதிகாரிகளுடன், புயல்-வெள்ள நிவாரண நடவடிக்கைகள் குறித்துக் கலந்தாலோசித்தார். அந்தக் கூட்டத்தில் வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்கு முதல் தவணையாக ரூ. 15 கோடி ஒதுக்குவது என்று தமிழக அரசு முடிவு செய்தது.

அதோடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் கொடுக்கப்படும் உதவித் தொகை ரூ. 80லிருந்து ரூ. 100 ஆக உயர்த்தப் படும்; அது தவிர ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2 சேலைகளும், 2 வேட்டிகளும் வழங்கப்படும்' என்றும் தீர்மானிக்கப்பட்டது.

குடியரசுத் தலைவர் பார்வையிட்டார்....

மேதகு குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களும், மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களும் 25-11-'77 அன்று விமானம் மூலம் வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

" முன்னெச்சரிக்கையாக இருந்ததால், தமிழ் நாடு காப்பாற்றப்பட்டது. அதிகாரிகளும், மருத்துவர்களும் உடனடியாக வெள்ளப் பகுதிக்கு விரைந்து சென்று, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் " என்று குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

புயல், மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், நாகப்பட்டினம் பகுதிகளைப் பார்வையிடுவதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் 30-11-'77 அன்று திருச்சிக்கு வருகை தந்தார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட பிரதமர் அவர்கள், தமிழகத்தில் நடைபெற்று வரும் நிவாரணப் பணிகளைப் பற்றி வெகுவாகப் பாராட்டினார்கள்.

" தமிழ்நாடு அரசு அதிகாரிகள் காட்டும் சமூகப் பணி உணர்வைப் பாராட்ட வேண்டும் " என்று அவர் அப்போது கூறினார்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு
அரசு வழங்கியுள்ள சலுகைகள் :

கடும் புயல், பெய்த பெரும் மழை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட விவசாயிகட்கு, தமிழக அரசு பல சலுகைகளை வழங்கியது. 28-11-'77 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இது தொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட சலுகைகளாவன :

புயலாலும், வெள்ளத்தாலும் பயிர்கள் சேதமடைந்துள்ள பகுதிகளில் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ள குறுகிய காலக்கடன், மத்திய காலக் கடனாக மாற்றப்படும். இதற்கு "அன்னாவாரி" சான்றிதழ் அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

மத்திய காலக் கடன்களைப் பொறுத்த வரையில் இயன்ற நிவாரணம் அளிக்க 'ரிசர்வ்' வங்கியுடன் தொடர்பு கொள்ளப்படும்.

தாளடிப் பயிருக்கு நாற்றுப் பாவிட, நெல் விதைகள் இனமாக வழங்கப்படும்.

வெள்ளத்தாலும் புயலாலும் சேதமடைந்த பகுதிகளில் தாளடிப் பயிருக்கு உரமிடுவதற்காகச் செயற்கை உரங்கள் 25 சதவிகித மானியத்துடன் வழங்கப்படும். உரச் செலவுக்கான மீதமுள்ள தொகை, கூட்டுறவுக் கடனாக வழங்கப்படும்.

சம்பாப் பயிர்கள் பல பகுதிகளில் நீரில் மூழ்கி விட்டன. இதனால் மகசூல் பாதிக்கப்பட்டது. இந்தப் பகுதிகளில் மீண்டும் ஒரு முறை யூரியா மேலுரமாக இடுவது அவசியம். மேலுரம் இடுவதற்கான உரச் செலவில் 25 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும். உரத்திற்கான மிகுதிப் பணம் கூட்டுறவுக் கடனாக வழங்கப்படும்.

1978 மார்ச் மாதம் 31ஆம் நாள் வரை, மாநிலம் முழுவதும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 25 சதவிகித மானியத்துடன் எல்லா விவசாயிகளுக்கும் வழங்கப்படும்.

மணலால் மூடப்பட்ட நிலங்களில் சிறு விவசாயிகளுக்கு அரசே தன் பொறுப்பில் மணலை அகற்றித் தரும்.

ஏனைய விவசாயிகளுக்கு மணலை அகற்ற 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

பரந்த அளவில் தென்னை மரங்கள் சேதமடைந்துள்ளன. தென்னை சேதமுற்ற பகுதிகளில் தென்னங் கன்றுகள் இனமாக வழங்கப்படும்.

சேதமுற்ற கரும்பு, வாழைத் தோட்டங்களை மீண்டும் புதுப்பிக்க ஓர் ஏக்கருக்கு ரூ. 100 என்ற அடிப்படையில் மானியம் அளிக்கப்படும்.

விதை, உரம், விதை முதல் போன்ற பொருளுக்கான மானியங்கள் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் (நீர்ப் பாசன வசதியுள்ள நிலமாக இருந்தால் (நன்செய்) 2.50 ஏக்கரும், அதற்குக் குறைவான நிலங்கள் உடையவர்களும், இதர நிலங்களாக இருந்தால் (புன்செய்) 5 ஏக்கரும், அதற்குக் குறைவான நிலங்கள் உடையவர்களும், குத்தகைக்குச் சாகுபடி செய்பவர்களும் சிறு விவசாயிகள் எனக் கணக்கிடப்படுவர்).

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி, நீர்த் தீர்வை, இதர வரிகள், வர்த்தகப் பயிர்கள் வரி ஆகியவைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

எங்கு நில வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் உள்ளூர் வரி ('லோக்கல் செஸ்') விலக்கும் அளிக்கப்படும்.

இந்த இடங்களில், ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளூர் வரியின் மேல் விதிக்கும் கூடுதல் வரியையும் (லோக்கல் செஸ் சார்ஜையும்) தள்ளுபடிசெய்ய வேண்டும் என்று அரசு கேட்டுக் கொள்ளும்.

நிலவரி மற்றும் 'லோக்கல் செஸ்' தள்ளுபடி பெறுகின்றவர்களுக்குத் தக்காவிக் கடன் பாக்கிகளும், நடப்பு ஆண்டில் செலுத்த வேண்டிய தக்காவிக் கடன் தவணையும் 1387ஆம் பசலியிலிருந்து 1388ஆம் பசலிக்குத் தள்ளி வைக்கப்படும்.

கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் கால்நடை வாங்கக் கடன் உதவி வழங்கப்படும்.

புயல்-வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரக் கம்பங்கள் விழுந்ததன் காரணமாகவும், 'டிரான்ஸ்ஃபார்மர்'கள் கீழே சாய்ந்து பாழ்பட்டதன் காரணமாகவும் கடந்த 11-11-'77, 12-11-77 ஆகிய இரு நாட்களில் மின்சாரத் தொடர்பு அறவே இல்லாமல், கிராமங்களும் நகரங்களும் இரவில் இருண்டு கிடந்தன!

பாழ்பட்ட 'டிரான்ஸ்ஃபார்மர்களை'ச் சீரமைத்து மீண்டும் மின்சாரத் தொடர்பை அளித்திடுவதற்கு மின்சார வாரியத்தின் பணியாளர்கள் இரவு பகலெனப் பாராமல்—கொட்டும் மழையையும் குளிரையும் பொருட்படுத்தாமல்—மின்னல் வேகத்தில் பணியாற்றினார்கள்! அதன் பயனாய், 5,402

ஆக இருந்த பாழ்பட்ட டிரான்ஸ்ஃபார்மர்களின் எண்ணிக்கை 10 நாட்களில் 759 ஆகக் குறைந்தன!

இயற்கையின் கோரத் தாண்டவத்தால் வீடு இழந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 200 வீதம் கொடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடைப்புகள் அடைக்கப்பட்டுச் சீரமைக்கப்பட்டன. சாலைகள் செப்பனிடப்பட்டன. தொலைபேசிகள் மீண்டும் தொடர்பு பெற்றன. டிரான்ஸ்ஃபார்மர்கள், மின் கம்பங்கள் பழுதுபார்க்கப்பட்டன.

குடிசை இழந்தவர்களுக்குக் கருணை மானியமும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேட்டிகளும், புடவைகளும் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு தடுப்பு ஊசிகளும் போடப்பட்டன. சம்பாதிக்கும் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்குக் கருணை உதவி வழங்கப்பட்டது.

புயலால் பாதிக்கப்பட்ட பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும், மீனவர்களுக்கும் அரசு விரைந்து தக்க உதவிகள் செய்தன.

குடிசைகள் கட்டுவதற்கான தென்னந் தட்டிகள், பனந் தட்டிகள், சவுக்குக் கம்புகள், மூங்கில் மரங்கள், கயிறுகள் ஆகிய ஐந்து பொருள்களையும் அத்தியாவசியப் பொருள்கள் எனத் தமிழ்நாடு அரசு பிரகடனம் செய்தது.

''இயற்கையின் கடுமையான சீற்றத்துக்கு ஆளாகி, தொடர்ந்து பெய்த பெருமழையின் காரணமாக வீடு, கால்நடைகள், உடைமைகள் அனைத்தையும் இழந்தோர், கண்ணீர் சிந்தி நிற்கும் தாய்மார்கள் இவர்கள் தம் துயர் துடைக்கும் பணியில் மிகத் தீவிரமாகச் செயலாற்றிடும் தமிழக அரசிற்கு உதவிட ஏராளமான, தாராள உள்ளம் படைத்த பெருமக்கள் முன்வந்துள்ளனர். அவர்களுக்கெல்லாம் எனது நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

உடனே ''முதலமைச்சர் நிவாரண நிதி''க்கு வெள்ளம்போல் நிதிகள் வந்து குவிந்தன.

புயல்-வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய அரசு தக்க உதவி செய்தது.

முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு தமிழ்நாட்டு மக்களிடமிருந்தும் இந்தியாவின் பல பகுதிகளிலுள்ள மக்களிடமிருந்தும், பல நிறுவனங்கள், அறக்கட்டளைகள் மூலமும் நன்கொடைகள் வந்து குவிந்தன. உலக நாடுகளும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்ததுடன், தம்மாலியன்ற நிதியை, பொருள்களாக உதவின. 'யூனிசெஃப்', செஞ்சிலுவைச் சங்கம், ஐ. நா. நிறுவனம், 'கேர்' நிறுவனம், 'காஸா' நிறுவனம் போன்ற பல்வேறு நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமது பங்கைச் செலுத்தின.

இடுக்கண் களைந்த அரசு!

இயற்கையின் கொடுமைகளுக்கு ஆளாகி, அல்லற்பட்டு ஆற்றாது அழுதவரின் கண்ணீரைத் துடைக்க, தமிழ்நாடு அரசு துயர் துடைப்புப் பணிகளைப் போர்க்காலப் பணிகளைப் போல விரைவாகச் செயல்படுத்தியது.

உடுக்கை இழந்தவன் கைபோல, விரைந்து சென்று இடுக்கண் களைந்த தமிழக அரசை யாவரும் பாராட்டுகின்றனர்.

எல்லாரும் எல்லாம் பெற வேண்டும்

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பார்கள். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்றும் சொல்வார்கள். இதனை உணர்த்த வந்த புதுயுகக் கவிஞர் பாரதியும் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்று ஒரே வரியில் முழங்கிச் சொன்னார். கூட்டுறவின் அருமை பெருமையினை இந்த வரிகள் நமக்குச் சொல்லாமல் சொல்கின்றன அல்லவா?

கூட்டுறவின் மூலம் எல்லாரும் எல்லாம் பெற வேண்டும். அதன் மூலம் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற நன்னோக்கோடு உருவானதுதான் கூட்டுறவு இயக்கம்.

தமிழ்நாட்டில் பல்வேறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளிலும் விரிந்து பரந்துள்ள கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகிறது.

குறிப்பாகக் கீழ்க்காணும் முக்கியத் துறைகளில் கூட்டுறவு இயக்கம் சீரான முறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அவை :

* வேளாண்மைக் கடன் வசதி
* விற்பனை வசதி
* வேளாண் விளைபொருள்கள் பதனிடுதல்
* பயன்கொள்வோர் நுகர் பொருட்கள் பங்கீடு

வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களை வழங்குவதில் கணிசமான அளவு முன்னேற்றம் எய்தியுள்ளன.

தமிழ்நாட்டில் 45.63 இலட்சம் உழவர் குடும்பங்கள் உள்ளன. இவர்களில் 31.3.'78 வரை மொத்தம் 38.72 இலட்சம் உழவர் குடும்பங்கள், அதாவது, தமிழ்நாட்டில் உள்ள மொத்த உழவர் குடும்பங்களில் 84.8 சதவீதக் குடும்பங்கள் வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகியுள்ளன. இன்னும் குறிப்பாகச் சொன்னால், தமிழ்நாட்டில் உள்ள சிறு உழவர்கள் மிகச் சிறு உழவர்கள், நிலமற்ற குத்தகைக்காரர்கள் ஆகிய மூவகையினரின் குடும்பங்களது மொத்த எண்ணிக்கையில் 22.83 இலட்சம் குடும்பங்கள் இந்தச் சங்கங்களில் உறுப்பினர்களாகியுள்ளன. 30-6-'77 வரை 22.28 இலட்சம் குடும்பங்கள் உறுப்பினர்களாயிருந்தனர்.

சிந்தனை

உலகின் எல்லா திசைகளிலிருந்தும் சிந்தனைகள் வந்து சேருவதற்கு வசதியாக நமது வாசல்கதவுகளையும், ஜன்னல் கதவுகளையும், திறந்தே வைத்திருக்க வேண்டும்:

—பண்டித நேரு

வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடனாக வழங்கிய தொகை முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ரூ. 5 கோடியாக இருந்துள்ளது. 1976-77ல் இவ்வாறு வழங்கப்பட்ட தொகை 125 கோடி ரூபாயாக உயர்ந்தது. நடப்பாண்டில் (1977-78ல்) இத்தொகை 127 கோடியாக மேலும் உயர்ந்தது.

இவ்வாறு வழங்கப்படும் கடன் அளவை, 1978-79ஆம் ஆண்டில் 145 கோடி ரூபாயாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இத்தொகை இம்மாநிலத்திலுள்ள உழவர்களுக்குத் தேவைப்படுகின்ற குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களின் அளவில் 70 சதவீதத்துக்குச் சற்றுக் கூடுதலாக இருக்கும்.

பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 12.6 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக அண்மையில் குறைக்கப்பட்டுள்ளது. உணவுப் பயிர் செய்யும் சிறு விவசாயிகளுக்கான கடன்களின் வட்டி வீதம், 10.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளுக்கு மேலும் ஒரு சலுகை வழங்கும் நோக்கத்துடன் இந்த 10.5 சதவீதம் வட்டி, உணவுப் பயிர்களுக்கு மட்டும் பொருந்தும் என்ற நிலையை மாற்றி, சிறு விவசாயிகளின் எல்லாப் பயிர்க் 'கடன்களுக்கும் பொருந்தும் என்று இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

நடுத்தரக் காலக் கடன்களுக்கான 13.8 சதவீத வட்டிக்குப் பதிலாக இப்பொழுது 12.5 சதவீத வட்டியே செலுத்த வேண்டியுள்ளது. நகைகளின் மீதான கடனுக்கு வட்டி வீதம் 16 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பஞ்சம், வெள்ளம், வறட்சி முதலியவற்றின் காரணமாகப் பயிர் விளைச்சல் பாதிக்கப்படுகின்ற போது, உழவர்கள் வாங்கியுள்ள குறுகிய காலக் கடன்களை, நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றுவதன் மூலம் அவர்களுக்கு நிவாரணமளிக்கும் நோக்குடன், மாநிலக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் ஆகியவை தத்தம் நிலையில் வேளாண்மைக் கடன் வசதி நிலைப்படுத்து நிதியை ஏற்படுத்தித் தங்களது நிகர ஆதாயத்திலிருந்து இந்நிதிக்குத் தொகை வழங்கி வருகின்றன.

புயல்-வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்குக் குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றியதன் மூலமும், முன்னதாக மாற்றப்பட்ட கடன்களை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்ததன் மூலமும் நிவாரண வசதி அளிக்கப்பட்டது.

1977-78ன் முற்பகுதியில் வறட்சி நிலை ஏற்பட்டபோதும், 1977 நவம்பர் மாதத்தில் புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டபோதும் ரூ. 26.97 கோடிக்குக் கடன் வசதி மாற்றியளிக்கப்பட்டது. மற்றும் ரூ. 17.79 கோடிக்குக் கடனைத் திருப்பித் தரும் காலம் நீட்டிக்கப்பட்டது.

நீண்ட காலக் கடனைப் பொறுத்த வரையில், மாநில நிலவள வங்கி 3 கோடி ரூபாய்க் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தவணைகளை மாற்றியமைக்கக் கருதுகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீண்ட காலக் கடன் பெற்றவர்கள் அதற்கு அளித்துள்ள பிணையச் சொத்துக்களின் மதிப்பு இயற்கை இன்னல்களின் காரணமாகக் குறைந்து போனதால், அவற்றிற்கு ஈடாக அரசு உத்தரவாதமளிக்கவும் முடிவு செய்துள்ளது. இது ஏறத்தாழ 1 கோடி ரூபாயாக இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மாநில நிலவள வங்கி ஆகியவை பாதிக்கப்பட்ட இடங்களில் தொடர்ந்து கடன் அளிக்கும் பொருட்டு அரசு இவ்வங்கிகள் ஒவ்வொன்றுக்கும் வழி வகை முன் பணமாக முறையே 5 கோடி ரூபாய், 7 கோடி ரூபாய் கொடுத்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் உரம் வாங்குவதற்காக 1.02 கோடி ரூபாய் அளவுக்குக் கூடுதல் கடன்களையும், பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துள்ள பகுதிகளில் புதிதாகப் பயிர் செய்ய 5.54 கோடி ரூபாய் அளவுக்குப் புதிய கடன்களையும் வழங்கின.

செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்குத் தாளடிப் பயிருக்கு ஓர் ஏக்கருக்கு 50 ரூபாய், சம்பாப் பயிருக்கு ஓர் ஏக்கருக்கு 20 ரூபாய் என்ற உச்ச வரம்புக்குட்பட்டு, உரத்திற்கான விலையில் 25 சதவீதத்தை உதவித் தொகையாக வழங்க அரசு 150 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள எல்லா உழவர்களுக்கும் வழங்கப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான விலையில் 25 சதவீதத்தை உதவித் தொகையாக ரூ. 18.75 இலட்சம் வரை 1978ஆம் ஆண்டு மார்ச் மாதய 31ஆம் தேதி வரையில் வழங்க, அரசு வகை செய்துள்ளது.

உழவர்களுக்கு, குறிப்பாக சிறு உழவர்கள், மிகச் சிறு உழவர்கள் ஆகியோருக்கு ஒரே அமைப்பின்கீழ் ஒருங்கிணைந்த கடன் வசதியையும், வேளாண் பணிகளையும் அளிக்கும் பொருட்டு, சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம், மாநில அரசு இவற்றின் உதவியுடன் அண்மையில் 1977 நவம்பர் மாதத்தில் அமைக்கப்பட்ட 14 சங்கங்கள் உட்பட, 26 உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1977-78ல் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களாக 3.23 கோடி ரூபாயும் மற்றும், 1.23 கோடி ரூபாய்க்கு நகை ஈட்டுக் கடன்களையும் சொந்த ஜாமீன் பேரில் நுகர் கடன்களையும் இந்தச் சங்கங்கள் வழங்கியுள்ளன.

749 வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் வசதிச் சங்கங்களும், 331 மத்திய-மாநிலக் கூட்டுறவு வங்கி

களின் கிளைகளும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும் நகைகளின் பேரில் கடனுதவி அளித்து வருகின்றன.

1976-77ல் ரூ. 40.10 கோடி ரூபாய்க்கு நகை யீட்டுக் கடன்களை 919 கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கியதற்குப் பதிலாக, 1,208 கூட்டுறவு நிறுவனங்கள் 1977-78ஆம் ஆண்டிற்கு 50.77 கோடி ரூபாய்க்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கியுள்ளன.

நகை ஈட்டுக் கடன் வசதியை விரிவாக்கும் பொருட்டு கூட்டுறவு நிறுவனங்களின் எண்ணிக்கை 300க்கு மேல் அதிகரித்துள்ளது. 1978-79ல் மேலும், 300 வேளாண்மைக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் நகை ஈட்டுக் கடன் வசதியை அளிக்கும். ஒரு கிராம் தங்கத்திற்கு முன்னதாக ரூ. 20 என்ற வீதத்தில் அளித்து வந்த கடன் தொகையை இப்பொழுது கிராம் 1க்கு ரூ. 40 வீதம் அளிக்கக் கூட்டுறவு நிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில வங்கி, மாவட்ட மத்திய வங்கிகள், வேளாண்மைக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை 30-6-77ல் 154.24 கோடி ரூபாய் அளவுக்கு வைப்புத் தொகைகளைத் திரட்டியிருந்தன. 1978-79ஆம் ஆண்டிற்கான கடன் வழங்கு திட்டத்தை அனுசரித்து, இவை, வைப்புத் தொகைகளை 185 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தத் திட்டமிட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள உழவர்களுக்குத் தேவைப்படும் நீண்ட காலக் கடன்களை மாநில நிலவள வங்கியுடன் இணைந்துள்ள 223 தொடக்க நிலவள வங்கிகள் வழங்கி வருகின்றன. 1977-78ல் நீண்ட காலக் கடன்களாக ரூ. 12.28 கோடி வழங்கப்பட்டுள்ளது.

வேளாண் மறு நிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் திட்டங்களை வகுப்பதன் மூலம், வேளாண்மை வளர்ச்சிக்குக் கடன் வழங்கப் பகுதி வாரியான வளர்ச்சி பற்றித் திட்டமிடப்பட்டது. 37.22 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 45 சிறு பாசனத் திட்டங்களும், 11.08 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 30 சிறு பாசனமில்லாத திட்டங்களும் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொடக்க நிலவள வங்கிகள், சிறு பாசனத் திட்டங்களுக்கும், நில மீட்புக்காகவும், டிராக்டர்கள் வாங்குவதற்காகவும், நிலம் வாங்குவதற்காகவும் கடனுதவி வழங்கி வருகின்றன.

1978-79ல் சாதாரணத் திட்டத்தின்கீழ் 11.10 கோடி ரூபாயும், வேளாண் மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவி பெறும் திட்டங்களின்கீழ் 7.90 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 19 கோடி ரூபாய் அளவுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படும்.

நிலத்தடி நீர் பற்றாக் குறையினால் சிறு பாசனத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான வாய்ப்புக் குறைந்து வருவதால், தென்னை, முந்திரி, காப்பி பயிரிடுதல், மலைத் தோட்டங்கள் அமைத்தல், பட்டுப் புழு வளர்த்தல், டிராக்டர்கள், கலப்பைகள் வாங்குதல், பண்ணை வீடுகள், கால்நடைக் கொட்டகைகள், பால் பண்ணைத் திட்டங்கள், குத்தகைதாரர்கள் நிலம் வழங்குதல் முதலிய சிறு பாசனத் திட்டங்களுக்காகக் கடன் வழங்க நிலவள வங்கிகள் முயன்று வருகின்றன.

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் உபரி நிலம் ஒப்படைக்கப் பெற்றவர்கள் தங்கள் நிலத்தை நிலவள வங்கிகளிடம் அடமானம் வைத்து அரசு உத்தரவாதத்துடன் வளர்ச்சிக் கடன் பெற அரசு அனுமதி அளித்துள்ளது. சுமார் 85,000 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப் பெற்ற சுமார் 50,000 சிறு உழவர்கள் இதனால் பயனடைவர்.

1977- ஜுலை முதல் 1978 ஏப்ரல் முடிய உள்ள பகுதிகளில் 33,529 நிலத்தடி நீர்ப் பிரிவுகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது. 30-4-'78 வரையில் 6,928 நிலநீர்ப் பிரிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 12,000 நிலநீர்ப் பிரிவுகளுக்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. 1977 ஜுலை முதல் 1978 ஏப்ரல் முடிய நிலவள வங்கிக் கடன்களைக் கொண்டு கிணறுகளில் நிறுவப்பட்ட 1,747 மின் சாரப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது.

புதுக் கிணறு வெட்டுவதற்காகும் செலவில் 25 சதவீதம் அல்லது 500 ரூபாய், இதில் எது குறைவானதோ அத்தொகையை உதவித் தொகையாகத் தொடக்க நிலவள வங்கிகள் மூலம் சிறு உழவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. 1977-78ல், 1,002 சிறு உழவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்தனர். மேலும், 1,000 சிறு உழவர்களுக்கு ஒரு கிணற்றுக்கு 500 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்க 1978-79ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடக்க நிலையில் 118 வட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருந்தன. இவை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்போடு இணைந்துள்ளன. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு ஒன்றுதான், மாவட்ட அளவில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கமாகும்.

1976-77ல் ரூ. 35.72 கோடிக்கு வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. 1977-78ல் ரூ. 53.44 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டன. 1976-77ல் ரூ. 49.20 கோடி பெறுமானமுள்ள 3.03 இலட்சம் டன் இரசாயன உரத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகம் செய்தன. 1977-78ல் ரூ. 56.34 கோடி பெறுமான 3.48 இலட்சம் டன் இரசாயன உரத்தை விநியோகித்துள்ளன.

மக்களுக்கு, குறிப்பாகக் கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கும், நலிந்த பிரிவைச் சார்ந்தவர்களுக்கும் இன்றியமையாத நுகர் பொருட்கள், தரமானவையாகவும் குறைந்த விலையிலும் கிடைக்கும் பொருட்டு, பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கேடுகள் களைய

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக முறையில் மலிந்திருந்த முறைகேடுகளையும், ஒழுங்கீனங்களையும் அதற்கென்று ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த பாரதி குழு தன்னுடைய அறிக்கையில் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தது. அந்த அறிக்கையின் அடிப்படையில், ரூ. 45.88 இலட்சம் தொகை தொடர்பாக 233 நேர்வுகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 49 நேர்வுகளில் வழக்கு மன்றங்களில் வழக்குகள் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அமைப்புகள் சீரான முறையில் இயங்கவும், குறைநீக்கி, தூய்மையான முறையில் செயல்படவும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

30-6-77ல் 20 சிறப்பங்காடிகளும், 86 சிறப்புச் சிற்றங்காடிகளும் இருந்தன. 2 சிறப்பங்காடிகளும், 29 சிறப்புச் சிற்றங்காடிகளும் புதிதாக நிறுவப்பட 1977-78ல் அரசு நிதி உதவி அளித்துள்ளது. இதே ஆண்டில் சமுதாயத்தில் நலிந்தவர்களுக்காக 32 சிறிய கிளைகளையும், 38 மிகச் சிறிய கிளைகளையும் கூட்டுறவு நுகர்வோர் சங்கங்கள் அமைக்க அரசு நிதி உதவி வழங்கியுள்ளது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்முதலை ஓர் அமைப்பின் மூலம் ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் வட்டாரப் பகிர்ந்தளிப்பு நிலையங்கள் நிறுவும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோவையில் ஒரு நிலையம் அமைக்க ஏற்கெனவே அனுமதி அளிக்கப்பட்டு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மற்றொரு நிலையம் சென்னையில் நிறுவப்பட 1977-78ல் அரசு 25 இலட்சம் ரூபாய் நிதி உதவி அனுமதித்துள்ளது.

1977-78ஆம் ஆண்டில் வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் மூலமாக 25 கிராமப்புற நுகர்வோர் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், 43 திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான செயற்குறிப்புகள் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டு, இவற்றில் 30 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த 30 திட்டங்கள் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ. 39.81 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படும். இதனால், படித்து வேலையில்லாமல் இருப்பவர்களில் 647 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலம் முழுவதிலும் பத்தாயிரம் நியாய விலைக் கடைகள் உள்ளன. இவற்றுள் சுமார் ஏழாயிரம் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடையாவது திறப்பது அரசின் கொள்கை

யாகும். இதனால் அத்தியாவசியப் பண்டங்கள் தாராளமாகக் கிடைப்பதற்கு வகை செய்யப்படும். முதல் கட்டமாக திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இவை திறக்கப்படும். திருநெல்வேலி மாவட்டத்தில் இத்திட்டம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், மற்றும், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இத் திட்டம் கூட்டுறவுச் சங்கங்களினாலும் அமல் நடத்தப்படும்.

ஒரு கிராமத்திற்கு ஒரு நியாய விலைக் கடை அமையும் வகையில், ஏற்கெனவே உள்ள 1,176 கடைகளுக்கும் கூடுதலாக மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்களினால் 1,04 புதிய நியாய விலைக் கடைகளைத் திறக்க ரூ. 43.7 இலட்சம் அரசு நிதியுதவி அனுமதித்துள்ளது.

விடுதியில் தங்கிப் பயிலாதவர்களுக்கும், கிராமப்பகுதியிலிருந்து வந்து பயில்வோருக்கும் ... வான விலையில் உணவு வழங்கக் கல்லூரி மாண ... கூட்டுறவுப் பண்டகசாலைகளில் பொதுச் சமை ... நிலையங்களை ஏற்படுத்துவதற்கான திட்டம் ... தமிழ்நாட்டில் அண்மையில் கொண்டுவரப்பட்டு உள்ளது. 1977-78ல் 24 நிலையங்கள் துவக்கப்பட்டன.

1976-77ல் சென்னை மாநகரம் நீங்கலாக மாநிலத்தின் மற்ற இடங்களில் தேசியமயமாக்கப்பட்ட பாட நூல்கள் விற்பனை செய்யும் பணியை மாநில அரசு முதன் முறையாகக் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைத்தது. 1977-78ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் 3.70 கோடி ரூபாய் மதிப்புள்ள 236.91 இலட்சம் பாடநூல்களை விற்பனை செய்துள்ளன. 35,530 பள்ளிகளில் பயிலும் சுமார் 77 இலட்சம் மாணவர்களுக்குச் சரியான விலையில் உரிய நேரத்தில் இப்பாட நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அரசு எடுத்த முடிவினையொட்டி பின்தங்கிய வகுப்பினர் அரிசனங்கள், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், மெட்ரிக் வகுப்பிற்கு முந்திய படிப்பு உதவித் தொகை

பாட நூல்கள் வடிவில்தான் 1977-78ல் கொடுக்கப்பட்டது. ரொக்கமாகக் கொடுக்கப்படவில்லை. 1978-79ஆம் ஆண்டிலும் கூட்டுறவுச் சங்கங்கள் பாடநூல்கள் விற்பனையைத் தொடர்ந்து செய்து வருகின்றன.

சலுகைக் கட்டணத்தில் தாள்களை இந்திய அரசிடம் பெற்று, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து மாநில அரசு முடிவு செய்யும் விலையில் மாணவர்களுக்கு விற்பனை செய்து வருகின்றன.

நலிந்த பிரிவினருக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், தம் பணிகளைப் பெருக்கிடும் பொருட்டு அவற்றிற்கு உதவி செய்தல் ஆகியவற்றிலும் அரசு அக்கறை கொண்டது. இவ்வகைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

திண்டுக்கல்லில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சைக்கிள் ரிக்ஷா வாங்குவதற்கு ஒவ்வொருவருக்கும் மான்யமாக ரூ. 200ம், வட்டியில்லாக் கடனாக ரூ. 800ம் 50 பேருக்கு வழங்கப்படும். இச்சங்கத்திற்கு மான்யமாக ரூ. 6,600, வட்டியில்லாக் கடனாக ரூ. 5000 நடைமுறைச் செலவுக்காக வழங்கப்பட்டுள்ளது.

நவீன உலர் சலவை நிலையங்களை அமைப்பதற்காக ஒவ்வொன்றுக்கும் ரூ. 33,000 வீதத்தில் மதுரையிலும், ஈரோட்டிலும் இரண்டு சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 1978-79ல் மேலும் இரண்டு சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நவீன முடிதிருத்தும் நிலையங்களை அமைப்பதற்காக ஒவ்வொன்றுக்கும் ரூ. 21,000 வீதத்தில் பரமக்குடியிலும், உடுமலைப்பேட்டையிலும் முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டிற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 1978-79ல் மேலும் இரண்டு முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த உதவியைப் பெறும்.

ஐந்து தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1978-79ல் மேலும், இரண்டு வனத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூன்று இலட்சம் ரூபாய் அளவிற்கு உதவியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாநிலத்திலுள்ள 15 கூட்டுறவு அச்சகங்களில் 5 கூட்டுறவு அச்சகங்களுக்கு அரசு பங்கு மூலதன உதவி அளித்துள்ளது. 1978-79ல் மேலும் 5 கூட்டுறவு அச்சகங்களுக்குப் பங்கு மூலதனமளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மலைச்சாதியினர் மிக அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒரே இடத்தில் கடன் மற்றும் விற்பனை வசதிகளுக்கும், ஏனைய ஒருங்கிணைந்த பணிகளுக்கும் வகை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1976-77ஆம் ஆண்டில் சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் ஏழு பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்(LAMPS)அமைக்கப்பட்டன. மலைச்சாதி உறுப்பினர் ஒருவர் குறுகிய காலக் கடன் மற்றும் நடுத்தரக் காலக் கடன் மீது செலுத்த வேண்டிய வட்டி 4 சதவீதம் மட்டுமேயாகும். சாதாரணமாக, வசூலிக்கப்படும் வட்டி வீதங்களுக்கும் இந்த வட்டி வீதத்திற்கும் உள்ள வித்தியாசம், அதாவது குறுகிய காலக் கடன்களுக்கு 6.5 சதவீதமும், நடுத்தரக் காலக் கடன்களுக்கு 8.5 சதவீதமும் அரசால் மான்யமாக ஈடு செய்யப்படுகிறது.

1977-78ஆம் ஆண்டில் மேலும் இரு பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தில் புதூர் நாட்டில் ஒன்றும், சேலம் மாவட்டத்தில் அருநூத்துமலையில் மற்றொன்றுமாக அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன சங்கங்களில் 9,254 மலைச்சாதியினர் உறுப்பினர்களாக உள்ளனர். இவை 1977-78ல் 30.95 இலட்சம் ரூபாய் அளவிற்கு விவசாய உற்பத்திக் கடன்களையும் 23,000 ரூபாய் அளவிற்கு நுகர்பொருள் கடன்களையும், 7.84 இலட்சம் ரூபாய் அளவிற்கு நடுத்தரக் காலக் கடன்களையும் வழங்கின. இச்சங்க உறுப்பினர்கள் 5.19 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காடுபடு சிறுபொருள்களைத் திரட்டினர். உறுப்பினர்களுக்கு 6.65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நுகர் பொருட்கள் விற்கப்பட்டன.

மலைச்சாதியினரின் முன் கடன்களைத் தீர்ப்பதற்காக, அவர்களுக்குக் கடன் வசதி செய்து தரும் பொருட்டு இச்சங்கங்களுக்கு ஒரு நிதி உருவாக்கப்படும். இதற்காக 1978-79ல் அரசு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் ஆகியவற்றின் பொறுப்பை சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நிறைவேற்றி வருகிறது. கூட்டுறவுத் துறையின் இடைநிலையில் உள்ள பணியாளர்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மூலமும், இளநிலைப் பணியாளர்களுக்குச் சென்னையில் உள்ள மத்தியக் கூட்டுறவுப் பயிற்சிச் சாலை மூலமும் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் தேவைப்படும் இளநிலைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக மாவட்டங்களில் உள்ள 7 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் 36 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடத் தொகுதி ஒன்று கட்டப்படுகிறது. இதற்காக அரசு தனது பங்காக 10 இலட்சம் ரூபாய் 1977-78ல் மான்யமாக வழங்கியுள்ளது.

இவ்விதமாக, கூட்டுறவின் மூலம் எல்லாருக்கும் எல்லாம் கிடைத்திடும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிலையை மேம்படுத்த எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

15



கால்நடைகளைக் காத்திட!

நமது நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பான்மையோர், கிராமப் புறங்களில் வாழ்கின்றனர். அவர்களின் முன்னேற்றத்திற்கான தேவைகளை தமிழக அரசு நன்குணர்ந்துள்ளது. இவர்களில் 70 முதல் 80 சதவிகிதத்திற்கும் மேலான மக்கள் சமுதாயத்தின் தாழ்த்தப்பட்ட பிரிவினர்களான சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் இதுபோன்றவர்கள் ஆவர். கால்நடைப் பராமரிப்புத் துறையில் கண்ட முன்னேற்றங்களும், சாதனைகளும் இத்துறை புனரமைக்கப்பட்டதால் பெருமளவு பாதிக்கப்பட்டு செயலற்றுப் போய் விட்டது. புனரமைப்பால் ஏற்பட்ட குறைகளைக் களைந்து கால்நடை வளர்ச்சியின் பல்வேறு திட்டங்களுக்குப் புத்துயிர் கொடுத்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆகவே, அதன் முதற்கட்டமாக தீவிர கால்நடைப் பராமரிப்புத் திட்டங்களும், கேந்திர கிராமத் திட்டங்களும் மீண்டும் துவங்கப்பட்டன. தற்போது 4 தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டங்களும், 39 கேந்திர கிராமத் திட்டங்களும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவை தவிர, தற்போது 29 கோழி விரிவாக்க நிலையங்களும், இரண்டு குஞ்சு பொரிக்கும் நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேற்கூறியவைகள் அனைத்தும் இன்றைய அரசு கிராமப்புற வளர்ச்சியில் தனி கவனம் செலுத்துகிறது என்பதைத் தெளிவாக்குகிறது.

1977-78-ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்பில் கண்டுள்ள சில குறிப்பிடத்தக்க சாதனைகள் பின்வருமாறு:—

1. கால்நடைகள் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருப்பதாலும் அவைகள் அடிக்கடி தொத்து நோய்களினால் பாதிக்கப்பட்டு அகாலமாகச் செத்து போய் விவசாயிகளுடைய பொருளாதார முன்னேற்றத்தைத் தடுப்பதாலும் இவ்வரசு தனி கவனம் செலுத்தியது. இதன் பலனாக, கடந்த ஓராண்டில் இராணிப்பேட்டையிலுள்ள கால்நடைநோய்த்தடுப்பு ஆராய்ச்சி நிலையம் (1) தென்னிந்தியாவிலேயே முதன் முறையாக வெறிநோய் ஒற்றை ஊசித் தடுப்பு மருந்தைத் தயாரித்து மக்களின் நீண்ட நாள் தேவையைப் பூர்த்தி செய்துள்ளது (2) புதியதொரு ஆட்டு அம்மை தடுப்பு மருந்தை தயாரித்து விரைவில் வெளியிடவிருக்கிறது. (3) கோமாரி நோய் தடுப்பு மருந்தையும் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

2. கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள்:

தேவையான தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகளைக் கையாண்டு கொடிய கால்நடை நோய்களைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன், கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் மதுரை, திருநெல்வேலி, வேலூர், உதகமண்டலம், கடலூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

3. ஈச்சங்கோட்டையில் உயர் அயலின கால்நடை பண்ணை நிறுவுதல்:

தமிழகத்தில் செயல்படும் பல்வேறு கால்நடைத் திட்டங்களுக்குத் தேவையான உயர் அயலின காளைகளை அளிக்கும் நோக்குடன் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் 50 ஜெர்சி கிடாரிகளையும், 2 ஜெர்சி காளைகளையும் கொண்டு உயர் அயலின கால்நடைப் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. மேலும் மானியத் தொகை உதவியுடன் உறைவிந்து வங்கி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தஞ்சையைச் சுற்றிலும் தரமான அயலினக் கலப்பு கன்றுகள் உற்பத்தியாகும்.

4. கால்நடை சுகாதாரப்பணி :

கால்நடை சுகாதாரப்பணிகளை விரிவாக்கும் வகையில் 12 புதிய கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏற்கனவே இயங்கி வந்த 5 கால்நடை மருந்தகங்கள் (Dispensaries) கால்நடை மருத்துவ மனைகளாக (Hospitals) உயர்த்தப்பட்டன. 1977-78-ம் ஆண்டில் 1 பிரதம மருத்துவ மனையும், 3 கால்நடை மருத்துவ இயங்கும் நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. 3 வெக்கை நோய் சோதனைச் சாவடிகளும், 1 நோய் கண்டுபிடிக்கும் சுழற்சி நிலையமும், 15 கேந்திர கிராம நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. இதுதவிர 80 ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களும் நிறுவப்பட்டன. பசுந்தீவன வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிறு அளவிலான புல் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 450 பேர் பயனடைந்தனர்.

5. சிறப்புத் திட்டங்கள் :

(அ) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 4303 பேர்களுக்கு, கன்று மானியம் வழங்கப்பட்டன. இது தவிர 2450 ஆடு வளர்ப்பு நிலையங்களும், 29 கோழி வளர்ப்பு நிலையங்களும் நிறுவப்பட்டன.

(ஆ) வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 258 கறவை மாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 43 பேர்களுக்கு உழவுப் பயிற்சி அளிக்கப்பட்டன. 699 ஆடு வளர்ப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. 595 பேர்களுக்கு, கன்று மானியம் வழங்கப்பட்டது. 19 கோழி விரிவாக்க நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன.



மேற்கூறிய இச் சிறப்புத் திட்டங்கள், தமிழகத்திலுள்ள சேலம், வடஆர்க்காடு, மதுரை, தென்ஞர்க்காடு, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு, தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

6. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

(Hill area development Scheme)

மலைப்பகுதியில் வாழும் சமுதாயத்தின் மிக அடித்தளத்திலுள்ள மக்களின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 200 ஆடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டத்தைச்செயல்படுத்துவதற்காக நீலகிரி மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் :

(Western-ghat development Scheme)

இத்திட்டத்தின் கீழ் சமுதாயத்தின் தாழ்த்தப்பட்ட பிரிவினரைச் சேர்ந்தவர்களிடமிருந்து 1000 கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளுக்கு, கன்று மானியம், கால்நடைத் தீவனமாக வழங்கப்பட்டது.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் :

(Tribal Welfare Scheme)

தமிழகத்தில் சேலம், தென்ஞர்க்காடு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, வடஆர்க்காடு ஆகிய 5 மாவட்டங்களில் மலைவாழ் மக்கள் வாழும் 9 பகுதிகள் உள்ளன. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மக்களுக்கு, கறவை மாடுகள் வளர்ப்பதற்கும், கோழி, பன்றி வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தவும் மற்றும் பசுந்தீவன நாற்றுகள் வழங்கவும் சுகாதார வசதிகளை அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. இப்பகுதிகளில் மலைவாழ் மக்களுக்கு 420 கறவை மாடுகள் வழங்கப்பட்டன. 128 ஆடு வளர்ப்பு நிலையங்களும், 105 பன்றி வளர்ப்பு நிலையங்களும் 135 கோழி வளர்ப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உணவுதானிய உற்பத்தியில் ஒரு சாதனை !

தமிழ்நாட்டில் 1977-78 ஆம் ஆண்டில் மொத்த உணவு தானியங்களின் உற்பத்தி 81.10 இலட்சம் டன்களாகும். முந்தைய ஆண்டு உணவு தானியங்களின் மொத்த உற்பத்தியின் அளவு 70.68 இலட்சம் டன்களாகும்.

அகில இந்திய அளவில் இவ்வாண்டு உணவுதானியங்களின் உற்பத்தியின் மொத்த அளவு 12 கோடியே 50 இலட்சம் டன்களாகும். கடந்த ஆண்டில் உணவுதானியங்களின் மொத்த உற்பத்தி 11 கோடியே 10 இலட்சம் டன்களாகும். உணவுதானியங்களின் உற்பத்தி அகிலஇந்திய அளவில் 12.6 சதவீதம் அதிகமாகியுள்ளது. அதேசமயத்தில் தமிழ்நாட்டில் உணவுதானியங்களின் உற்பத்தி 14.7 சதவீதம் அதிகமாகியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர் வனத்துறையின் வளர்ச்சித் திட்டங்கள் புதிய நோக்குடன் விரைந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மரங்களைப் பயன்படுத்தி நடைபெறும் தொழில்கள் வளர வனவளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. காகிதம் செய்வதற்குப் பயன்படும் மரங்களை ஏலம் விட்டால், அத் தொழிலுக்குத் தேவையான மரங்கள் போதிய அளவுக்கு இருப்பில் இல்லாமல் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும். எனவே, ஏலம் விடுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இடைத்தரகர்களின் தலையீடும் தவிர்க்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கிடைக்கும் மூங்கிலும், பிரம்பும் தமிழகத் தொழில்களுக்குத் தேவைப்படும் அளவு கிடைக்க வேண்டும் என்பதற்காக, பிற மாநிலங்களுக்கு அவற்றை ஏற்றுமதி செய்வது தடைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் குடிசைத் தொழில்களுக்குத் தேவைப்படும் பிரம்பு தாராளமாகக் கிடைக்கவும் வழி ஏற்படும்.

காகிதம் தயாரிக்கப் பயன்படும் மரவகைகளைத் தொடர்புடைய தொழில்களுக்கு வழங்குவதில் புதிய முறை கையாளப்படுகிறது. நீண்டகாலத் தவணையில் வழங்கி வந்ததை மாற்றி ஆண்டுதோறும் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஆண்டுதோறும் விலைகளைத் திருத்தி அமைக்கவும், ஆண்டுதோறும் பல்வேறு தொழில்களுக்கு எவ்வளவு மரங்கள் வழங்கப்படுகின்றன என்பதைக் கணக்கிடவும் அரசுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. சில மர வகைகளின் விலைகள் உயர்த்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சேஷசாயி பேப்பர் & போர்ட்ஸ் நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட யூகலிப்டஸ் மரங்களின் விலை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 60 என்றிருந்த விலை ரூ. 80 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறே கேரளாவில் உள்ள குவாலியர் ரேயான் நிறுவனத்திற்கும், சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்தாருக்கும் வழங்கப்படும் யூகலிப்டஸ் மரப் பொருட்களுக்கும் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் வனத்துறையின் வருவாயும் பெருகுகிறது; பேப்பர் ரேயான், போன்றவற்றின் மொத்த விலையும் முறையாக விதிக்கப்படுகிறது.

தீப்பெட்டி செய்வதற்குரிய மென் மரப்பொருட்கள் ஏலத்தில் விற்கப்பட்டால், தீப்பெட்டித் தொழில் போன்ற சிறு தொழில்கள் பெரும் ஏலப்போட்டியில் போட்டியிட்டுத் தமக்கு வேண்டியவற்றைப் பெற முடியாமல் தளர்ந்துவிடுகின்றன. எனவே, தீப்பெட்டித் தொழில்களுக்கான பொருட்களைத் தயாரிக்கும் தொழில்கள்தான் மென் மர ஏலப் போட்டியில் பங்குபெற வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

வன வனத்தைக் காப்பாற்ற விழிப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மைசூர் மாநிலத்தின் எல்லையை அடுத்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து சந்தனக் கட்டைகள் அதிகம் கடத்தப்படுவதால், பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த எல்லைப் பகுதிகளிலுள்ள காவல் துறையினரை விழிப்புடன் இருக்கும்படி அரசு ஆணையிட்டுள்ளது. தவறு செய்கிறவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுகிறது. வனத்துறை அலுவலர்மீது ஏதாவது குற்றம் சாட்டப்பட்டு ஆதாரம்இருப்பதாகத் தெரிந்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படுகிறது; வனவளக் காப்பாற்றப்படுகிறது.

மகளிர் நலங்காக்கும் மகத்தான பணி!

'பெண்களே, நாட்டின் வாழ்வுக்கும் வளத்திற்கும் கண்கள்' என்பதை நாம் உணர்ந்து செயல்படும் காலமிது.

மகளிர் நலனுக்காகப் பாடுபடுவது சமுதாய வளர்ச்சிக்கான அடிப்படையாகும். எனவே, இப்பணியில் மிகுந்த அக்கறையுடன் நமது அரசு செயல்பட்டு வருகிறது. கடந்த ஓராண்டில் மகளிர் நலனுக்காக ஆற்றியுள்ள பணிகள் வருமாறு :—

ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்குக் குறைவாக உள்ள குடும்பத்தைச் சேர்ந்த 16-30 வயதுக்குட்பட்ட பெண்களில் 1,000 பேருக்குத் தட்டச்சு-சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி பெற ஒவ்வொருவருக்கும் உதவி நிதியாக ரூ. 150 தரப்படுவதற்கான திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

கைம்பெண்களுக்கு உதவுவதற்காக அரசு மேற்கொண்டுள்ள பணிகளை அறியாதோர் பலர். அவர்களுக்கு அத்திட்டங்களைப் பற்றி விளக்குவதற்காக மாநிலத்தில் பல்வேறு இடங்களில் ஆலோசனை நிலையங்கள் நிறுவப்படும் என்று 1977-'78 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி முதற்கட்டமாக சென்னை, தஞ்சை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் ஆலோசனை நிலையங்கள் அமைக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்குக் குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் 1977-'78-ல் அறிவிக்கப்பட்டு இந்த ஆண்டிலிருந்து தொடங்கப்படுகிறது.

முன்பு தாம்பரம்-கடலூர் — தஞ்சாவூர் ஆகிய மூன்று இடங்களில் மகளிர் பணி மனைகள் இருந்தன. இந்த அரசு புதிதாக இரண்டு இடங்களில் (திருநெல்வேலி, சேலம்), மகளிர் பணி மனைகள் தொடங்க ஆணையிட்டுள்ளது.

கிராமப் புறங்களில் நல்ல முறையில் மகளிர் நல்வாழ்வுப் பணிகளுக்காகப் பாடுபடும் தனியார் நிலையங்களுக்கு ஊக்கமூட்டுவதற்காக மானியம் வழங்கும் திட்டத்தையும் அரசு அறிவித்துள்ளது.

ஆதரவற்றுப் போன கைம் பெண்களில்—தையல் வேலை தெரிந்தவர்களுக்கு அந்தத் தொழில் செய்வதற்கு உதவியாக 1977-'78-ம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள 500 தையல் இயந்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

கைம்பெண்கள் மறுமணத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதிலும் இந்த அரசு ஆர்வத்துடன் உள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் விதவைகள் மறுமணத்தின்போது ஒவ்வொரு தம்பதிக்கும் ரூ. 5,000 மதிப்புள்ள 7 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்க அரசு ரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

> **பெண் கல்வி**
>
> **வெறும் உத்தியோக நோக்குடன் கல்வி, பயில்வதோடு நின்றுவிடாமல் நம் பெண்கள் அறிவு வளர்ச்சி வேகத்தோடும் கல்விபெற முற்படுவது மிக முக்கியம்!**
>
> —பண்டித நேரு

இவ்வாறு மகளிர் நலனுக்காக, கடந்த ஓராண்டில் மட்டும் பல்வேறு பணிகளை நமது அரசு முனைப்புடன் செயலாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுவர் சீர்திருத்தப் பணிக்காக...

சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளில் இடநெருக்கடி இல்லாமல் அங்குள்ள சிறுவர்களுக்குப் போதிய இடவசதி இருக்க வேண்டும் என்பதற்காக அரசு கூடுதலான சீர்திருத்தப் பள்ளிகள் கட்ட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் பொழுது இது ஒரு சாதாரண திட்டமாகத் தோன்றினாலும், மனோதத்துவ ரீதியில் சிறுவர்கள் தங்களைத் தாங்களே சீர்திருத்திக்கொள்ள இத்தகைய பணிகள் பேருதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இம்மாநிலத்தில் 3,154 குழந்தை நல நிலையங்கள் உள்ளன. இவற்றுள் 30 நிலையங்கள் இந்த ஓர் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டவையாகும். 1978-79-ல் புதிதாக 150 நிலையங்கள் தொடங்கப்படும்.

உடல் ஊனமுற்ற-குறிப்பாக இரண்டு கால்களும் செயலற்றுப் போனவர்களின் நடமாட்டத்திற்கு உதவுவதற்காக அரசு இந்த ஆண்டில் (1977-78) ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள மூன்று சக்கர வண்டிகள் 500 வழங்கியுள்ளது.

காது கேளாச் சிறுவர்கள்—கண்பார்வையற்றோர் ஆகியோரும் அரசின் கவனத்துக்கு வந்துள்ளனர். காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டன. கண் பார்வையற்றோர் கைத்தறி நெசவு-பாய் முடைதல் ஆகிய சிறு தொழில்களில் பயிற்சி பெறுவதற்காக 40 பேர் தங்கிப் படிக்கக் கூடிய ஒரு தொழிலகமும் தொடங்கப்பட்டுள்ளது.



சீரான நிதி நிலைமை...

வேலை வாய்ப்பைப் பெருக்குதல், வறுமை நிலையை அகற்றுதல், கிராமப்புற வளர்ச்சி, சமுதாயத்தில் அடித்தள மக்களின் மேம்பாடு ஆகியவையே அரசின் அடிப்படைக் குறிக்கோள்கள். சொல்லப்போனால், இவையே தற்போது தேசிய அளவிலும் குறிக்கோள்களாக விளங்குகின்றன.

நாட்டின் இன்றையப் பொருளாதார நிலைமையைக் கவனிக்குங்கால், உணவுத் தானியங்களும், அன்னியச் செலாவணியும் பெரும் அளவில் இருப்பது அரிய வாய்ப்பாகும். விலைவாசிகளில் ஓரளவு ஏற்றம் இருப்பினும், இது அச்சமுறுமளவுக்கு இல்லையென்றே சொல்ல வேண்டும்.

மின் உற்பத்திக்குப் பயன்படும் அணைகளில் நீர் அளவு நன்றாக உள்ளது. தென் மேற்குப் பருவ மழை இயல்பாக இருந்தால், வரும் ஆண்டில் மின் வெட்டு ஏதும் இராதென்று எதிர் பார்க்கலாம். வேளாண்மைக்குத் தேவையான இடுபொருள்களின் இருப்பு திருப்திகரமாக உள்ளது. தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களிலும் பற்றுக் குறை ஏதும் இல்லை. தொழிலாளர் நலத் துறையில் பல பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப் பட்டு, பெருமளவிற்கு அமைதி நிலவுகிறது. இந்த அரிய வாய்ப்புகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு, வளர்ச்சியின் வேகம் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

நிறைவேறத் தயாராயுள்ள நல்ல திட்டம் எதுவும், நிதிப் பற்றுக்குறையின் காரணமாகத் தடங்கலோ தாமதமோ அடையக் கூடாது. இந்த அடிப்படையில், மத்திய அரசு, மாநிலங்களுக்குப் போதிய நிதி உதவி செய்து, அவர்களுடன் தோளோடு தோள் நின்று செயல்பட வேண்டுமென்பதே தமிழக அரசின் விருப்பமும் வேண்டுகோளும் ஆகும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த ஆண்டுடன் முடித்து, 1978-79-ஆம் ஆண்டிலிருந்து புதிய ஐந்தாண்டு விரிவடையும் திட்டம் (Rolling Plan) ஒன்று தொடங்கப்படும் என்று தேசிய அளவில் எடுக்கப் பட்டுள்ள முடிவை அனைவரும் அறிவர்.

வரும் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் முன்னர், 1978-79 ஆம் ஆண்டுத் திட்டம், 1974-75-லிருந்து செயற்படுத்தப்பட்டு வந்த ஐந்தாவது திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு 1974 முதல் 1979 வரையிலான ஐந்து ஆண்டுத் திட்ட அளவை 1,122 கோடி ரூபாய் எனத் தேசிய வளர்ச்சிக் குழு நிர்ணயித்து இருந்தது. இந்தக் கால அளவில் நடப்பாண்டுடன் முடிவடையும் நான்கு ஆண்டுகளில், நமது திட்டச் செலவு 864 கோடி ரூபாயாக இருக்கும். வரும் ஆண்டில், திட்ட அளவு 305 கோடி ரூபாயாக இருக்கும். இது நடப்பாண்டிற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்ட அளவான 260 கோடி ரூபாய்க்கு மேல், 45 கோடி ரூபாய் அளவில், அதாவது 17 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இது, திட்டவட்டச் செலவை மேம்படுத்துவதில் அரசு கொண்டுள்ள அக்கறைக்கு அறிகுறியாகும். 1974 முதல் 1979 வரை நமது திட்டச் செலவு 1,169 கோடி ரூபாயாக, அதாவது தேசிய வளர்ச்சிக் குழு நிர்ணயித்த அளவுக்கு மேலாகவே இருக்கும்.

கிராமப் பகுதிகளுக்கும் நலிந்த பிரிவினருக்கும் முன்னுரிமை கொடுத்து, வளர்ச்சிப் பணிகளுக்கான ஒதுக்கீடுகளை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மேலும் உயர்த்துவது நமது அடிப்படை நோக்கம் ஆகும்.

மத்திய அரசு பாராட்டும் வகையில் மாநிலத்தின் சாதனை !

கிராமங்களில் நியாயவிலைக் கடைகளைத் திறப்பதற்கு மத்திய அரசும் ஒரு திட்டம் வகுத்துள்ளது; அதற்கு முன்னதாகவே அத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழக அரசு முனைந்துள்ளது.

இதனை மத்திய அரசும் மனமுவந்து பாராட்டி உள்ளது.

மத்திய அரசு வகுத்துவரும் திட்டத்தின் அடிப்படையில் இப்புதிய விநியோகச் சங்கிலித் தொடரை விரிவுபடுத்தவும், மாநில அரசுக்கு ஏற்படும் கணிசமான செலவை ஈடுசெய்ய, மத்திய அரசு மாநில அரசுக்கு நிதியுதவி செய்ய முன்வரவேண்டுமென்று வலியுறுத்தப் பட்டு வருகிறது !

மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
மேலுரமிட மேன்மையான உரம்
ஸ்பிக் யூரியா

...ரிய
...வண்முத்து
...டிவங்கள்
...திகத் தழைச்சத்து
...6.2%
மிகக் குறைவான
பையூரெட்-0.3% தான்
ஆசியாவிலேயே மிகப்
பெரிய. ஸ்பிக் தொழிற்-
...லையில் தயாராகிறது.

சிறப்பான
யூரியா வேண்டுமா? **ஸ்பிக் யூரியா** என்று கேட்டுவாங்குங்கள்.

கிருஷ்ணா ஆற்றிலிருந்து

சென்னைக்குக் குடிநீர்!

ஆந்திர மாநிலத்திலுள்ள கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் கோடைக் காலத்தில் ஏற்படும் தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்காக கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டது. அதற்கான பேச்சுவார்த்தை 1978 ஜூன் 15ஆம் நாளன்று ஆந்திராவிலுள்ள ஐதராபாத் நகரில் நடந்தது.

இந்தப் பேச்சு வார்த்தையில் இரு மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் எடுத்துச் சொன்ன கருத்துக்களை அனைவரும் கவனத்துடன் ஆலோசனை செய்தனர்.

பேச்சு வார்த்தை நடந்து ஒரு மணி நேரத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆந்திராவிலுள்ள ஸ்ரீசைலம், சோமசீலா அணைக்கட்டிலிருந்து கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரைத் திறந்த கால்வாய் மூலம் கொண்டுவருவதா? அல்லது பாதுகாக்கப்பட்ட மூடிய கால்வாய் வழியாகக் கொண்டு வருவதா? என்று இனிமேல்தான் முடிவு செய்யப்படும். அதுபற்றி ஆராய நிபுணர்கள் குழுவொன்று உடனடியாக அமைக்கப்பட்டு, வேலைகள் உடனடியாகத் தொடங்கப்படுகிறது.

கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீருக்காக ஆண்டுதோறும் 1500 கோடி கன அடி தண்ணீர் எடுத்துக் கொள்ள ஆந்திரம், கர்நாடகம், மராட்டிய மாநிலங்கள் சம்மதம் அளித்துள்ளன.

எனவே, கிருஷ்ணா ஆற்றின் மீதுள்ள ஸ்ரீசைலம் அணைக்கட்டிலிருந்து தண்ணீரை எடுத்து, 98 மைல் தூரத்துக்குக் கால்வாய்மூலம் கொண்டுவந்து சோமசீல அணையில் விடப்படும். அங்கிருந்து 162 மைல் தூரமுள்ள பூண்டி நீர்த் தேக்கத்திற்குத் தண்ணீர் கொண்டுவரப்படும். பூண்டியில் சென்னைக் குடிநீர்த் திட்டத்துடன் அது இணைக்கப்படும்.

கிருஷ்ணா ஆற்றுக்கும் பூண்டி நீர்த் தேக்கத்துக்கும் இடையே உள்ள தூரம் 260 மைல் ஆகும்.

இந்தப் பேச்சு வார்த்தையில் தமிழ்நாட்டின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள், மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள், வேளாண்மை-நீர்ப்பாசன அமைச்சர் திரு பி. குழந்தைவேலு அவர்கள் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் மூவர் கலந்து கொண்டனர்.

ஆந்திர மாநிலத்தின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் சென்னாரெட்டி அவர்கள், வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. சுதாகர ராவ் அவர்கள், வேளாண்மைத்துறைச் செயலாளர், பாசனத்துறை ஆலோசகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வரும் விடுதலை நாளில் வெற்றிக்கு திறவுகோல் இதோ!

தமிழ்நாடு பரிசுச் சீட்டு விடுதலை நாள் சிறப்புக் குலுக்கல்!

சிறப்பு முதல் பரிசுகள் இரண்டு
ஒவ்வொன்றும்

ரூ.5,00,000 வீதம்.

சிறப்பு இரண்டாவது பரிசுகள் மூன்று
ஒவ்வொன்றும் ரூ. **1,00,000** வீதம்.
முதல் பரிசுகள் வரிசைக்கு இரண்டு
ஒவ்வொன்றும் ரூ. **50,000** வீதம்.
மற்றும் ஆறுதல் பரிசுகளும் ஏராளமான இதர பரிசுகளும் உண்டு
மேலும் அதிக மக்கள் வெற்றி பெற்றிட வாய்ப்புகள் அதிகம்.

குலுக்கல் நாள் 19-8-1978

மொத்தப் பரிசுத் தொகை ரூ. 41 லட்சம்
10 வரிசைகள் — மொத்தப் பரிசுகள் 13,075

மறவாதீர்! தமிழ்நாடு பரிசுச் சீட்டுத்திட்டம்
ஒரு நல்வாழ்வுத்திட்டம்— நீங்கள் செலவிடும்
தொகைக்கு உரிய பயன் உண்டு.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத்திட்டம்,
அரசினர் தோட்டம், சென்னை-600 002

புகழோடு வளரும் போக்குவரத்துத் துறை

சாலை வசதிகளும், போக்குவரத்தும் இணைந்து வளர்ந்தாலன்றி ஒரு மாநிலம் எல்லாத் துறைகளிலும் சம முன்னேற்றம் காண்பது எளிதல்ல. அந்த ஒருங்கிணைந்த வளர்ச்சியினைக் கருதித்தான் சாலை வசதிகள்-போக்குவரத்து ஆகிய இரு துறைகளும் ஒரே அமைச்சரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. படிப்படியாக ஒரே செயலாளரின் நிர்வகிப்பின் கீழும் கொணரப்பட்டன.

புதிதாக ஒரு சாலை உருவாக்கப்படுகிறபோது, அதனை மக்களுக்குப் பயன்படுகின்ற பேருந்துத் தடமாக்குவதென்பது அவ்வகை நிர்வாகச் சீரமைப்பால் எளிதாகுமல்லவா?

அரசுடைமையாக்கப் பட்ட பின்னாலே, நமது மாநிலத்தில் போக்குவரத்துத் துறை பெரிதும் வளர்ச்சி யடைந்து வருகிறது.

இங்குள்ள பத்தாயிரம் பேருந்துகளில், 52 சதவீதம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. அரசுடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கைக் கேற்ப மாநிலத்திலுள்ள ஏழு பேருந்து போக்குவரத்துக் கழகங்கள் சீராகப் பணியாற்றிச் சிறப்புற வளர்ந்துள்ளன.

அவற்றில் இரண்டொரு போக்குவரத்துக் கழகங்களில் நிதி நெருக்கடி இருந்தபோதிலும், மொத்தத்திலே பார்க்கிறபோது 1977-78-ல் போக்குவரத்துத்துறை அடைந்துள்ள முன்னேற்றம் மகத்தானதாகும். ஆகவே, இந்த ஆண்டிலே மட்டும் மூன்று கோடி ரூபாய் இத்துறை மூலம் இலாபம் இட்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த எதிர்பார்ப்பின் காரணமே—

பேருந்துகளின் பராமரிப்பு, தேவையான நேர மாறுதல்கள், தொழிலாளர் பெருமக்களின் அயராத தொண்டின் அடிப்படையிலான உற்பத்திப் பெருக்கம், நட்டமில்லாத வருவாய் ஆகியவைகளேயாகும்!

இந்த ஓராண்டுக் காலத்தில்— டீசல், டயர் போன்றவற்றின் விலை உயர்ந்துவிட்டதனை யாரும் மறுக்க முடியாது. அந்த நிலைமையிலேயும் பேருந்துகளின் கட்டணம் உயர்த்தப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். அதுமட்டுமல்ல; விரைவுப் பேருந்துகளிலேயே ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆறு காசு கட்டணம் என்றிருந்ததை, ஐந்து காசாக அரசு குறைத்திருக்கிறது.

வேலைநிறுத்தம் போன்ற இடர்ப்பாடுகளை இடையிலே சந்திக்க நேர்ந்தபோதிலும், ஏழை எளியோர் நலன் பற்றி இந்த அரசு சிந்திக்கத் தவறுது என்பதற்கு இவையெல்லாம் சிறந்த உதாரணங்கள் அல்லவா?

போக்குவரத்துக் கழகங்களின் மூலம் வருகின்ற வருவாயில் பெரும் பங்கு, சாலை வளர்ச்சி போன்ற அது தொடர்பான பணிகளுக்கும் பெரிதும் பயன் படுத்தப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் சிற்றுந்துகள் (Mini Buses) இயக்கிடவும் திட்டம் இடப்பட்டுள்ளது. இந்த ஓராண்டுக் காலத்திற்குள் 221 புதிய வழித் தடங்களில் பேருந்துகளை இயக்கி இதுவரை போக்குவரத்துத் தொடர்பில்லாத 466 கிராமங்களில் உள்ள 7 இலட்ச மக்கள் பயன்பெறுமாறு பேருந்து வசதிகளைப் பெருக்கியுள்ளது இவ்வரசு.

புதிய வழித் தடங்கள் மட்டுமல்லாமல், 681 புதிய பேருந்துகள் இவ்வாண்டில் ரூ. 10.22 கோடி மதிப்பில் வாங்கப்பட்டு பேருந்துத் தடங்களில் பணிபுரிகின்றன. அத்துடன் சென்னைப் பெருநகரில் மட்டும், நிறைவுற்ற இவ்வாண்டில் 59 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. அத்துடன் இன்னும் மூன்று ஆண்டுகளில் தடங்களில் புதிதாக 550 பேருந்துகள் அதிகமாக விடப்படும்.

பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 380 புதிய பேருந்துகளை சென்னைப் பெருநகர் பிரிவிற்கு உலக வங்கியின் உதவி கொண்டு வாங்கி இயக்கிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவை மட்டுமல்ல; 3 புதிய பணிமனைகள், 8 பேருந்து முனை நிலையங்கள், 400 நிழற் கொடைகள் ஆகியவற்றைக் கட்டிடவும், 2 பெரும் கிடங்குகள் 1 சிறுகிடங்கு ஆகியவைகளுக்காகவும் ரூ. 6.55 கோடி செலவில் அமைத்திடத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவைகளினால் பயணிகளுக்கு மட்டுமல்லாமல் வேலையில்லா

மல் அவதிப்படும் இளைஞர்களுக்கும் பயன் உண்டு. இத்திட்டங்கள் இப்போது உள்ளதைவிட 1,275 புதிய நபர்கள் வேலை பெறும் வாய்ப்பினையும் அளிக்கும்.

ஏறத்தாழ எட்டு இலட்சம் மக்கள் வாழக்கூடிய 325 கிராமங்களுக்குப் புதிதாகப் பேருந்துகள் விடப்பட்டன. பயணிகளின் வசதி கருதி இந்த ஆண்டிலே மட்டும் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 2.38 கோடி செலவிட்டுள்ளன.

பயணிகளின் வசதி கருதிச் செலவிடும் நேரத்தில், போக்குவரத்துக்கழகத் தொழிலாளர் நலன் கருதுவதும் இன்றியமையாததல்லவா?

இந்த ஆண்டில்-தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் பல, அரசினாலே ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. அதன் மூலம் உண்டான கூடுதல் செலவு மூன்று கோடியே 53 இலட்சம் ரூபாயாகும்.

அண்மையில்-பேச்சு வார்த்தைகளினால் ஏற்பட்ட உடன்பாட்டின் பயனாக, போக்குவரத்துப் பிரிவிலுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் கூடுதல் ஊதியம் மற்றும் பிற படிகள் என்ற வகையில் அதிகமாக ரூ 62-ம் (ஓட்டுநர் எனில் ரூ. 69-ம்) பெறுவதோடு, பிற சலுகைகள் என்ற அடிப்படையில் ரூ. 24-ம் பெறுவர்.

தொழிலாளர்களுக்கென நிதி உதவிபெற்ற சிற்றுண்டிச் சாலை வசதி, தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வி நலம் பெற பள்ளி-கல்லூரி சென்றுவர இலவசப் போக்குவரத்து வசதி, ஓட்டுநர்களுக்குக் குளிர்கண்ணாடி, நியாய விலைக்கடைகள், மருத்துவ வசதி எனத் தொழிலாளர்களுக்கு உற்றுழி உதவி வருகிறது அரசு.

விபத்தின்றிப் பேருந்தைச் செலுத்திடுவோர்க்கு ரொக்கப் பரிசுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பணிக்காலத்தில் இறந்து போகும் தொழிலாளர் குடும்பத்தில் எவரேனும் ஒருவருக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

இப்படிப் பல்வேறு வகையிலே போக்குவரத்துத் துறை ஆற்றி வரும் பயனுள்ள பணிகள் ஏராளமாகும். போக்குவரத்துத் துறையின் ஓராண்டுக் கால வளர்ச்சியும் சாதனைகளும் அரசின் பெருமைக்கு அணி செய்வதன்றோ!

சிறிய நலநிலையம்
சிறந்திட அரசு உதவி

ஆரம்ப சுகாதார நிலைய அமைப்பில், கிராம மக்களுக்கு மருத்துவப் பணிகளை வழங்கத்தக்க அமைப்பொன்றினை உருவாக்குவது பயன்மிக்கதாயிருக்குமெனக் கருதியது அரசு.

அந்த அடிப்படையில், 1976ல், சென்னை-அடையாறில் உள்ள சுகாதாரத் தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் சஞ்சீவி 'சிறிய சுகாதார நிலையம்' என்றோர் திட்டம் துவக்குவது குறித்து, தக்க கருத்தினைத் தெரிவித்தார். அதன்படி அன்றைய அரசு மூலம் 34 சிறிய சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டன. மத்திய அரசு, மாநில அரசு, தொண்டு நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து பெறும் நிதியுதவியோடு இந்நிறுவனம்—கிராமங்களில் நோய்த்தடுப்பு, நோய் நிவாரணம், நோய்க்குப்பின் உடல்நலம் பேணல் ஆகிய பணிகளைக் கவனிக்கும்.

இச்சிறிய சுகாதார நிலையங்கள் சாதிமத பேதமின்றி ஆயிரம் குடும்பங்களுக்கு அல்லது ஐயாயிரம் பேருக்கு சுகாதார நலப் பணிகளை வழங்கும்.

மருத்துவ அதிகாரி, பெண் பணியாளர், ஆண் பணியாளர், சுகாதாரப் பணியாளர் ஆகியோரே சிறிய சுகாதார நிலையத்தில் இருப்பர். அவர்களுக்கான சம்பளத் தொகையோடு மருந்துகள், எழுதுபொருள், எதிர்பாராத செலவு, பயணப்படி மற்றும் வருகை தருவோர்க்கான செலவுகள் ஆகியவற்றுக்குமாகச் சேர்த்து ஆண்டொன்றுக்குப் பதினெட்டாயிரம் ரூபாய் செலவாகும்.

இத்திட்டம் மக்களுக்குப் பயன்படும் வகையில் சிறப்புறச் செயல்பட வேண்டும் என்பதற்காகவும், செலவினங்களை ஏற்கின்ற வகையில் தயக்கமின்றி, மத்திய அரசின் பங்கு கிடைக்கின்ற வரையில் ஆகும் காலதாமதத்தையும் தவிர்க்கின்ற வகையிலே சிறிய சுகாதார நிலையம் அமைப்பதில் ஆகும். அந்த ஆண்டுச் செலவில் சரிபாதியை ஏற்கத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

1976-77 மற்றும் 1977-78-ஆம் ஆண்டுகளில் 54 சிறிய சுகாதார நிலையங்களை ஏற்படுத்த, தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது.

1978-79-ஆம் ஆண்டு பகுதித் திட்டத்தின்கீழ் மேலும் 50 சிறிய சுகாதார நிலையங்களை அமைத்திடவும் அரசு ஆலோசித்து வருகிறது. இதனைச் செயல்படுத்த ரூ. 4.50 இலட்சம் வரை செலவாகும். விரைவில் இதற்கான உத்தரவு தமிழக அரசினாலே பிறப்பிக்கப்படும்!

உணவுத் துறையில் ஓராண்டுச் சாதனைகள்

இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, இந்த ஓர் ஆண்டுக் காலத்தில், உணவு முனையில் மத்திய அரசின் கொள்கை முடிவுகளின் காரணமாக, எதிர்பாராத பல திருப்பங்களும் மாறுதல்களும் ஏற்பட்டன.

1976 அக்டோபர் முதற் கொண்டு, கேரளம் நீங்கலாக, ஆந்திரம், கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகிய பகுதிகள் உள்ளடங்கிய தென் உணவு மண்டலத்தில் தமிழ்நாடு இணைக்கப்பட்டிருந்தது. 1977 ஆம் ஆண்டில் கேரளத்தையும் தென் உணவு மண்டலத்துடன் சேர்த்துக் கொள்ளலாமா என்பது குறித்து மாநில அரசுகளின் கருத்துக் கேட்கப்பட்டது.

தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் பெரிதும் புழங்கப்படுவது புழுங்கல் அரிசியே. ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பெரும்பாலும் தயாரிக்கப்படுவதும் புழங்கப்படுவதும் பச்சரிசியே. இந்நிலையில் கேரளத்தைத் தென் உணவு மண்டலத்துடன் இணைத்துவிட்டால், தமிழகத்தின் நலன்கள் பாதிக்கப்படும் என்று இந்த அரசு அஞ்சியது. தமிழ் நாட்டிலிருந்து புழுங்கல் அரிசி பெருமளவு கேரளத்திற்குச் சென்றுவிட்டால், அதற்கு ஈடு செய்யும் அளவுக்கு ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலிருந்து புழுங்கல் அரிசு வருவதற்கு வாய்ப்பு இராது என்பதையும், ஆகவே தமிழகத்தின் உணவு நிலைமை பாதிக்கப்படும் என்பதையும் எடுத்துக் காட்டி இதுவரை இருந்தது போலவே, தென் உணவு மண்டல ஏற்பாடு தொடர்ந்து இயங்கலாம் என்ற கருத்தை இந்த அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தியது.

இக்கருத்துப் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த நேரத்திலேயே மாநில அரசைக் கலக்காமலும், மாநில அரசுக்கு எந்தவிதமான முன்னறிவிப்புச் செய்யாமலும், நாடு முழுவதையும் ஒரே உணவு மண்டலமாக அமைத்து, மத்திய அரசு 1977 அக்டோபரில் ஆணையிட்டது.

அகில இந்திய உணவுக் கொள்கை அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கை முடிவை, இதனால் தமிழகத்திற்குப் பாதிப்பு வராமல் பார்த்துக் கொள்ள மத்திய அரசும் உதவும் என்ற உறுதிமொழி கூறப்பட்டதன் பேரில், முழு மனதுடன் செயல்படுத்தத் தமிழக அரசு முன் வந்தது.

நாடு முழுவதையும் பொது உணவு மண்டலமாக அறிவித்ததனால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாத நிலை இருந்தும்கூடத் தமிழகத்தின் உணவு நிலைமையைச் சீராகச் சமாளித்து முடிந்துள்ளது. முன்னெச்சரிக்கையாக இந்த அரசு மேற்கொண்ட பல நடவடிக்கைகளுக்கும், நிலைமைக்கு ஏற்றவாறு நெறி முறைகளை வகுத்து நிர்வகித்த தமிழக அரசின் கொள்கைகளுக்கும் சீரிய வெற்றியாகும்.

உணவுக் கொள்கையில் ஏற்பட்ட இந்த அடிப்படை மாறுதலுக்கு ஈடு கொடுப்பதில் தமிழக அரசு முனைந்திருந்த நேரத்திலேயே, 1977ஆம் ஆண்டு இறுதியில் வெள்ளம்-புயலினால் ஏற்பட்ட பாதிப்புக்குப் பின்பும், தமிழகத்தில், அரிசியைப் பொறுத்த வரையிலே, எந்தவிதத் தட்டுப்பாடு இல்லாமலும், விலை உயர்வு இல்லாமலும், வெளிச் சந்தையில் அரிசிப் புழக்கம் இயல்பாகவும், பொது விநியோக முறையின் கீழ் அரிசி வழங்குதல் சீராகவும் நடந்து வருகின்றன.

உணவு உற்பத்தியைப்பெருக்க மேற்கொள்ளப் பட்டுள்ள பல நடவடிக்கைகளின் பயனாக, 1978-79ஆம் பசலி ஆண்டில் 64 இலட்சம் டன்கள் அரிசி உற்பத்தியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது நம் மாநிலத்தின் தேவைகளுக்குப் போதுமானதாகும். வெளிச் சந்தையில் அரிசியின் விலைவாசிகள் உயர்ந்துவிடாமல் காக்கும் பொருட்டும், வெளிச் சந்தை வியாபார மாற்றங்களுக்கும் விலை ஏற்றங்களுக்கும் உட்படாமல், ஆண்டு முழுவதும் தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்ட நியாயமான விலைகளில் அரிசி மக்களுக்குக் கிடைக்க வழி செய்வதற்கும், பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது.

இந்த அரசு நிர்வாகப் பொறுப்பேற்று ஓர் ஆண்டு நிறைவு பெறும் இக்கட்டத்திலே, உணவு நிலைமை சீராக அமைந்துள்ளது என்பது குறித்தும், அறுவடை இல்லாத நேரங்களிலும், தட்டுப்பாடு ஏற்படாமலும், விலை ஏறுமலும், பொது மக்களுக்குப் பொது விநியோக முறையின் கீழ் நிர்ணய விலைகளில் அரிசி வழங்குவதற்கு அரசிடம் கணிசமான கையிருப்பு உள்ளது என்பது குறித்தும் இந்த அரசு மட்டுமல்ல, தமிழக மக்களும், மன நிறைவு கொள்ளலாம்.

பொது விநியோகத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்ட அதே நேரத்தில், வெளிச் சந்தை வர்த்தகம், சுதந்திரமாகவும் சுமுகமாகவும் செயல்படுத்வதற்குச் சாதகமான சூழ்நிலைகளையும் இந்த அரசு உருவாக்கியுள்ளது. விவசாயப் பெருமக்களுக்கு இடர்ப்பாடு ஏற்படாத வகையிலும் தன்னுடைய கொள்முதல் கொள்கையிலும் மாற்றங்களைச் செய்துள்ளது.

நெல்லின் உற்பத்திச் செலவுக்கு ஏற்ப நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. நெல்லின் கொள்முதல் விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. மத்திய விவசாயப் பொருள்கள் விலைவாசி ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய அரசு இந்த விலைகளை நிர்ணயிக்கின்றது.

1977-78ஆம் ஆண்டுக்கு விலை நிர்ணயப் பிரச்சினை எழுந்த பொழுது, நெல் கொள்முதல் விலைகளைக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்று தமிழக அரசு வன்மையாக வற்புறுத்தியது. அதற்கு முன்பு மோட்டா ரக நெல்லுக்கு, குவிண்டாலுக்கு ரூ. 74 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த கொள்முதல் விலையை ரூ. 77 என்ற அளவில் உயர்த்தி, மத்திய அரசு ஆணைகள் பிறப்பித்தது. அனைத்திந்திய அடிப்படையில் மத்திய அரசு நிர்ணயிக்கும் இந்தக் கொள்முதல் விலைகள், எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும். தங்கள் சொந்த நிதிப் பொறுப்பிலிருந்து கூட, மாநில அரசுகள் இந்தக் கொள்முதல் விலைக்கு மேலாக, போனசாகவோ வேறு எந்த இனத்திலோ, கூடுதல் தொகை வழங்கக் கூடாது என்பதும் மத்திய அரசால் தெளிவாக்கப்பட்டுள்ளது.

1978-79ஆம் ஆண்டுக்கு நெல் கொள்முதல் விலை நிர்ணயப் பிரச்சினை 1978 செப்டம்பரில் ஆய்வுக்கு வரும். அக்கட்டத்திலும் விவசாயிகளுக்கு மன நிறைவு ஏற்படும் வகையில் கொள்முதல் விலைகளை உயர்த்த வேண்டுமென்றகருத்தைத் தமிழக அரசு மீண்டும் மத்திய அரசிடம் வலியுறுத்தும்.

கொள்முதல் விலைகளை உயர்த்தும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லையென்ற நிலையில், தமிழக விவசாயிகளுக்கு இலாபகரமான விலை கிடைக்க வகை செய்யும் பொருட்டுத்தான், கட்டாயக் கொள்முதல் நீக்கப்பட்டு, தங்கள் நெல்லை, வியாபாரிகளுக்குத், தடையின்றி விற்றுக்கொள்வதற்கு விவசாயிகளுக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. 1977 அக்டோபருக்குப் பின்பு, விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யாமல், மொத்த வர்த்தகம் செய்த பெரிய ஆலைகளிடமிருந்து, அவை உற்பத்தி செய்யும் அரசியில் 20 சதவீத லெவி வசூலிப்பது என்ற கொள்கை பின்பற்றப்பட்டு வந்தது. இத்திட்டத்தின் கீழும், தமிழகத்தில் உள்ள சுமார் 14,000 ஆலைகளில் 9,000க்கு மேற்பட்ட ஆலைகள், ஆலைகள் என்று கருதப்பட்டு, அவற்றிற்கு லெவித் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. உபரி மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல் அரிசியில், நெல்லில் 20 சதவீதமும் அரிசியில் 10 சதவீதமும், வர்த்தக லெவி விதிக்கப்பட்டது.

தமிழகத்தில் உற்பத்தியாகும் 64 இலட்சம் டன்கள் அரிசியில், கொள்முதல் மூலம் அரசு சேகரிப்பது ஆண்டுக்கு 6 இலட்சம் டன்களுக்கும் குறைவாகவே இருக்கும். ஆகவே, உற்பத்தியில் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவாகவே எந்த ஆண்டிலும் வழக்கமாகக் கொள்முதல் ஆகும். அதிலும் சென்ற ஓர் ஆண்டில், விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் நிறுத்தப்பட்டதையொட்டியும், ஆலை லெவி, வர்த்தக லெவி மூலம் மட்டுமே கொள்முதல் நடந்ததையொட்டியும், இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டது, ஒரு இலட்சம் டன்களுக்கும் குறைவாகவே இருந்தது. ஆகவே, இந்த ஓராண்டில் அரசு கொள்முதல் விலைகளில் வாங்கியது, உற்பத்தியில் அறுபதில் ஒரு பங்குதான் ஆகும்.

இந்நிலையில், விவசாயிகளின் உபரி நெல்லை இலாபகரமான விலைக்கு வெளிச்சந்தையில் விற்றுக் கொள்ள அவர்களுக்கு முழு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது தெளிவாகும். இவ்வளவு குறைவான அளவிலே கொள்முதல் செய்யப்பட்ட போதிலும் கூட, லெவி விதிக்கப்படுவதால், தங்களுக்கு வெளிச் சந்தையில் இலாபகரமான விலை, வர்த்தகர்களிடமிருந்து கிடைக்கவில்லை என்ற குறையை விவசாயிகள் தெரிவித்து வந்தனர்.

மேலே சொன்ன புள்ளி விவரங்களிலிருந்து இக்குறைக்கு நியாயமான இடம் இல்லையென்பது தெளிவாகும் என்ற போதிலும் விவசாயிகளுக்கு இருந்த இந்தக் குறையையும் போக்க வேண்டும் என்ற கவலையில், 1978 மே பதினொன்றும் தேதி முதற் கொண்டு இந்த லெவிகளையும் அரசு நீக்கி விட்டது. இப்புதிய கொள்கை 1978ஆம் ஆண்டு இறுதி வரை ஆய்வு முறையில் செயல்படுத்தப்படும் என்றும், இந்த அனுபவத்தை ஆய்ந்து அதன் அடிப் படையில் அடுத்த ஆண்டின் உணவுக் கொள்கை வகுக்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

கொள்முதல் விலைகளை உயர்த்த மாநில அரசுக்கு வழியில்லை என்ற போதிலும் இலாபகரமான விலைக்கு விவசாயிகள் நெல்லைவிற்றுக்கொள்ள செய்து தரக் கூடிய வசதிகளை யெல்லாம் தமிழக அரசு செய்துள்ளது என்பது இதிலிருந்து தெள்ளத் தெளிவாகும்.

வெளிச் சந்தையில் இலாபகரமான விலை விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு உந்துதலாக, தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம், மோட்டா ரக நெல்லை குவிண்டாலுக்கு ரூ. 90 என்ற விலையிலும், நடுத்தர ரக நெல்லை குவிண்டாலுக்கு ரூ. 95 என்ற விலையிலும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கத் தமிழக அரசு ஏற்பாடு செய்தது. 1978 பிப்ரவரி முதற்கொண்டு செயல் படும் இத்திட்டத்தின் பயனாக, இந்த அதிகப்படியான விலைகளில் ஒரு இலட்சம் டன்களுக்கு மேலாக நெல் வாங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மோட்டா ரக நெல்லுக்கு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 77. இந்த நெல்லை, வாணிபக் கழகம் ரூ. 90 என்ற விலைக்கு வாங்குகிறது. நடுத்தர ரக நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலை ரூ. 81. இதை வாணிபக் கழகம் குவிண்டாலுக்கு ரூ. 95 என்ற விலைக்கு வாங்குகிறது.

நெல்லை, விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்க வாணிபக் கழகம், நூற்றுக்கணக்கான கிராமங்களில், நேரடி நெல் வாங்கும் நிலையங்களைத் திறந்து நிர்வகித்து வருகிறது. இத்திட்டத்தின் பலன் விவசாயிகளுக்குப் பெரும் அளவில் மேலும் சேர வகை செய்ய வேண்டுமென்ற அடிப்படையில், 1978 ஜூன் மாதம் முதற் கொண்டு, வடஆர்க் காடு, தஞ்சை ஆகிய இரு மாவட்டங்களிலும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலமாக வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. ஆய்வு முறையில் இரண்டு மாவட்டங்களில் செயல் படும் இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும். விவசாயிகளின் நலனைக் கருதித் தமிழக அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைகள் பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளதோடு, மற்ற மாநிலங்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இயல்பான சூழ்நிலையை உருவாக்க இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அதேநேரத்தில், நுகர்வோரின் நலனுக்கு ஒவ்வாத முறையில் விலைவாசிகள் ஏறிவிடாமல் காக்கவும், கண்காணிக்கவும் விழிப்பான பல நடவடிக்கைகளைத் தமிழக அரசு இந்த ஓராண்டுக் காலத்தில் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

1975ஆம் ஆண்டில், உபரி மாவட்டங்களில் அரிசியின் விலை கிலோ ரூ. 3 வரையிலும், பற்றுக் குறை மாவட்டங்களில் ரூ. 4 வரையிலும் எட்டியிருந்தது. இப்பொழுது நடுத்தரப் புழுங்கல் அரிசியின் விலை உபரி மாவட்டங்களில் கிலோ ரூ. 1.50 முதல் ரூ. 1.65 வரையிலும் பற்றுக்குறை மாவட்டங்களில் ரூ. 1.80க்கு மேற்படாமலும் உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஜூன் மாதத்தில் நிலவிய விலைகளை விட அரிசியின் விலை ஜூன் 78ல் மிகக் குறைவாக உள்ளது.

பருப்பு வகைகளைப் பொறுத்த வரை சென்ற ஆண்டு நிலவிய விலைகளை விட இவ்வாண்டு விலைகள் சற்று உயர்ந்துள்ளன. இதற்குக் காரணம் தமிழ் நாட்டில் பருப்பு வகைகளின் உற்பத்தி மிகக் குறைவே. வெளி மாநிலங்களிலிருந்துதான் வாங்க வேண்டியுள்ளது. வெளி மாநிலங்களில் உற்பத்தி ஆகும் இடங்களிலேயே விலைகள் அதிகமாக உள்ளன.

கடலை எண்ணெய்யின் விலை 1975ல் கிலோ ரூ. 8.80க்கும், 1976ல் கிலோ ரூ. 10.00 அளவிற்கும், 1977 பிப்ரவரி மாதத்தில் ரூ. 11.70 அளவிற்கும் உயர்ந்து இருந்தது. இப்பொழுது, கடலை எண்ணெய்யின் விலை கிலோ ரூ. 6.50 முதல் ரூ. 7.00 வரை அமைந்துள்ளது. மணிலாப் பருப்பு, கடலை எண்ணெய் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதை ஒழுங்குபடுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த சில ஏற்பாடுகள், விவசாயிகளின் நலனைக் கருதி அண்மையில் நீக்கப்பட்ட பின்பும், கடலை எண்ணெய்யின் விலை கட்டுப்படுத்தப்பட்டிருப்பது மிகவும் தெம்பு ஊட்டுவதாகும். நல்லெண்ணெயின் விலையும் சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் கிலோ ரூ. 10.15க்கு விற்றது, இப்பொழுது ரூ. 8.50 அளவில் நிலவுகிறது.

மிளகாயின் விலை 1975ல் கிலோ ரூ. 15.50 முதல் ரூ. 20 வரை சென்றது. இவ்வாண்டு ஜூன் மாதத்திய விலைகள் கிலோ ரூ. 6 முதல் ரூ. 7 வரை நிலவுகின்றன. தனியாவின் விலையும் ஜூன் 77-ல் கிலோ ரூ. 8 அளவில் இருந்ததற்கு எதிராக, இப்பொழுது ரூ. 4.50 முதல் ரூ. 5.50 வரை உள்ளது. சிறு தானியங்களின் விலைகளும் 1975ல் கிலோ ரூ. 2.00 முதல் ரூ. 2.40 வரை நிலவியதற்கு எதிராக இப்பொழுது கிலோ ரூ. 1.00 முதல் ரூ. 1.25 வரை நிலவுகின்றன. சென்ற ஆண்டு நிலவிய விலைகளை விட கிலோவுக்கு 20 காசு அளவில் விலைகள் குறைந்துள்ளன.

பதுக்கல், நடுத் தரகர்கள் கொள்ளை இலாபம் அடித்தல், வியாபாரச் சூதாட்டம் ஆகிய சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தப் பல வர்த்தக ஒழுங்கு முறை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் பயனாக, வர்த்தகர்களின் சுதந்திரத்தில், தேவைக்கு மீறிக் குறுக்கிடாத அதே நேரத்தில், நுகர்வோரின் நலனையும் பாதுகாக்கக் கூடிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அன்றாடத் தேவைக்கு இன்றியமையாத பொருட்கள் மக்களுக்கு நியாயமான விலைகளில் கிடைக்கச் செய்யும் பொருட்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு நியாய விலைக் கடை திறக்கும் திட்டத்தை இந்த அரசு வகுத்துள்ளது. தமிழகத்தில் இது வரை இயங்கி வந்த சுமார் 9,000 பொது விநியோகக் கடைகளில் அரிசி, கோதுமை, லெவி சர்க்கரை மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. பருப்பு

வகைகள், சமையல் எண்ணெய் வகைகள், புளி, மிளகாய் போன்ற பண்டங்களேயும் வழங்கும் வகையில் இவற்றைப் பல பொருள் நியாய விலைக்கடைகளாக மாற்றவும், தேவைப்படும் இடங்களில் புதுக் கடைகளைத் திறக்கவும், நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் அடிப்படையில் நெல்லை மாவட்டத்தில் 442 புதிய நியாய விலைக் கடைகள் கிராமங்களில் திறக்கப்பட்டுள்ளன. மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,046 புதிய கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன. நெல்லை, மதுரை, முகவை மாவட்டங்களின் அனுபவத்தின் அடிப்படையில் சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளது.

உற்பத்தியைப் பெருக்குவது, விவசாயிகளுக்கு நியாயமான விலைகள் கிடைக்க வகை செய்வது, உற்பத்தியாகும் உணவுப் பொருட்களைச் சீராக விநியோகிப்பது, தனியார் வர்த்தகம் சுதந்திரமாகவும், அதே நேரத்தில் சமுதாயப் பொறுப்பு உணர்வுடனும், இயங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையை அமைப்பது, வெளிச்சந்தை விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் விரிவான பொது விநியோக முறையை, அரசுச் சார்புடைய நிறுவனங்கள் மூலமாகவும், கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும் தீவிரமாக நடத்துவது ஆகியவையே தமிழக அரசின் உணவுக் கொள்கையின் அடிப்படை அம்சங்களாக அமைந்துள்ளன.

விவசாயிகள், வர்த்தகர்கள், நுகர்வோர் ஆகிய பல்வேறு சாராரின் நலன்களேயும் பாதுகாக்கும் முறையில், ஒருங்கிணைந்த உணவுக் கொள்கையைத் தமிழக அரசு பின்பற்றி வருகிறது. அமைதிக்கு உலை வைக்கக் கூடிய பிரச்சினையாக உணவுப் பிரச்சினை இருந்த ஒரு காலம் மாறி, உணவு முனையில் நிறைவும், நிம்மதியும், ஆக்கமும், ஊக்கமும் நிலவும் சூழ்நிலையை விவசாயிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோர் ஒத்துழைப்புடன், இந்த ஓர் ஆண்டுக் காலத்தில் உருவாக்க முடிந்தது பற்றித் தமிழக அரசும் மக்களும் பெருமிதம் கொள்ளலாம்.

விவசாயப் பெருமக்களின் வேதனை துடைக்கும் அரசு!

தமிழ்நாடு விவசாயிகளின் குறைகளையும், கோரிக்கைகளையும் ஆராய்ந்து ஆவன செய்திட முன்பிருந்த அரசுகள் போதுமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. அவ்வப்போது கிளர்ச்சிகள் நடந்தபோது மட்டுமே விவசாயிகளின் குறைகளைத் தீர்க்க, தாற்காலிக பரிகாரத்தை அப்போதிருந்த அரசுகள் —ஓரளவே செய்து வந்தன.

இந்த அரசு பொறுப்பேற்றபின், நாலரைக் கோடி மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் ஏழை விவசாயிகளின் இன்னல் நீக்கிட நிரந்தரமான ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினரின் ஆலோசனைப்படி நல்லதோர் முடிவினை, காலந்தாழ்ந்தாமல் மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டிருப்பது பெருமையோடு குறிப்பிடத்தக்கதாகும்.

முந்தைய அரசு—வேளாண்மைத்துறை, மற்றும் பல்கலைக்கழகத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட விதைகளுக்கு அரசியல்வாதிகளின் பெயரையோ அல்லது வேறெந்தத் தனியார் பெயரையோ வைத்தது.

உதாரணமாகக் குறுவைக்கு 'கருணா' என்றும், பாசிப்பயிறுக்கு 'அஞ்சுகம்' என்றும் அப்போது பெயரிடப்பட்டன.

ஆனால் இன்றைய அரசு அமைந்தபிறகோ, அம்முறை மாறிவிட்டது. ஆராய்ச்சிப் பண்ணைகள் மூலம் கண்டுபிடிக்கப்படும் வீரிய அல்லது புதிய விதைகளுக்கு அவற்றைக் கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயர் வைக்கப்படும் என்றும், புதிய ரகத்தைக் கண்டுபிடிப்பவர்கள் பலரானால் அவர்கள் சார்ந்த ஆராய்ச்சிப் பண்ணையின் பெயர்தான் சூட்டப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அரசியல்வாதிகளின் பெயரோ, ஏனைய தனியார் பெயரோ அவற்றிற்கு வைக்கப்பட மாட்டாது என்று அரசு ஆணையே பிறப்பித்திருக்கிறது.

அரிய கண்டுபிடிப்புகளுக்கு ஆராய்ச்சியாளர்களின் பெயர்கள்

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி



விவசாய மாநிலமாகவே இருந்த தமிழ்நாடு கடந்த இருபது ஆண்டுகளில் படிப்படியாகத் தொழில் வளர்ச்சி பெற்று இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. கனி வளம், மூலப் பொருள், எரி பொருள் போன்றவற்றின் பற்றாக் குறை, இடவசதிக் குறை போன்ற தடைகளுக்கிடையிலும் தமிழகம் பெற்றிருக்கிற தொழில் வளர்ச்சி பெருமைக்குரியதாகும்.

மக்களால் அதிக அளவில் பயன்படுத்தப்படும் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கவும், கிராமப் பகுதிகளிலும், பின்தங்கிய பகுதிகளிலும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் சிறு தொழில் வளர்ச்சியே சிறந்தது என்று உணரப்பட்டுள்ளது. 1977 ஜூன் திங்கள் முடிய 46,725 சிறு தொழில் 1977 ஜூலை கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. முதல் 1978 மார்ச் முடிய 8,567 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டன. ஆக, 1978 மார்ச் திங்கள் முடிய மொத்தம் 49,292 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1977 ஜூலை முதல் 1978 மார்ச் முடிய 35,388 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் 28,090 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் மொத்தம் 63,478 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

கிராமத் தொழில், சிறுதொழில்களுக்கு ஊக்கம்

சிற்றூர்களிலும், சிறுநகர்ப் பகுதிகளும் பரவலாக அமைக்கப்பட்டுள்ள கிராமத் தொழில்களை ஊக்கப்படுத்துவதே முக்கிய குறிக்கோள் என்று 1977 டிசம்பர் திங்களில் அறிவிக்கப்பட்ட புதிய தொழிற் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சிறு தொழில்களாலும், கிராமத் தொழில்களாலும் உருவாக்கப்படக் கூடிய பொருட்களை அந்தத் தொழில்களின் மூலமே உற்பத்தி செய்யவேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும். சிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்வதற்காக முன்பு ஒதுக்கப்பட்டவை 180 வகைப் பொருட்களே. அவை இப்போது 504 வகைப் பொருட்களாக உயர்த்தப்பட்டுள்ளன. இவைகளை எப்படியெல்லாம் உற்பத்தி செய்யலாம் என்பது குறித்து ஆராய்ந்து, அதற்குரிய சிறு தொழில்களைத் துவக்க முன் வரும் தொழில் முனைவர்களுக்குத் தொழில் திட்டங்களை அதிகாரிகளின் மூலம் வகுத்து, உதவிடத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐம்பதாயிரம் பேருக்குக் குறைந்த மக்கள் தொகை கொண்ட சிறுநகர்ப் பகுதிகளில் ஒரு லட்சம் ரூபாய் வரை செலவிடப்பட்டு நடைபெற்று வரும் சிறு தொழில்களின் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தப்படும். வேலையில்லாத் திண்டாட்டத்தை, குறிப்பாக படித்தவர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்க, சிறு தொழில், குடிசைத் தொழில்களை வளர்த்து, அத்தொழில்களில் படித்தோர் ஈடுபட்டுத் தாமே தொழில் தொடங்கி முன்னேறும் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. எனவே, 10,000 சிறு தொழில்களை ஓராண்டுக்குள் ஏற்படுத்தி 50,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்க ஏற்ற தொழில்கள் எவையெவை என்பதைக் கண்டறியவும், தொழில் முனைவர்களை ஊக்கப்படுத்தி அவர்களுக்குத் தொழில் அமைப்பதற்கான இடங்களையும், மின் வசதிகளையும், உரிமங்களையும் பெற்றுத் தருவதில் உதவி செய்வதற்கும் தக்க ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது. தொழிலை நடத்துவதற்கான பயிற்சி பெறுவதற்கும் அரசு உதவுகிறது. இதனால், கிராமப் புற மக்கள் தமது தொழில்களைத் தொடர்ந்து வளர்ப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

1978 பிப்ரவரித் திங்கள் முடிய 946 சிறு தொழிலமைப்புக்கள் தொடங்கப்பட்டு 12,714 பேருக்கு வேலை தரப்பட்டுள்ளது.

கிராமப்புறத் தொழில் திட்டம், மத்திய அரசின் உதவியுடன், சேலம், தர்மபுரி, செங்கற்பட்டு, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் மட்டுமே வளரக் கூடிய தொழில்களை வளர்த்து, கிராமங்களின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு உதவுவதே கிராமப் புறத் தொழில் திட்டத்தின் குறிக்கோளாகும்.

கிராமப் புறத் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த 5 மாவட்டங்களிலும் 1976-77ல் 2,163 தொழில்கள் பதிவு செய்யப்பட்டன. 1977-78-ல் 2,693 தொழில்கள் பதிவு செய்யப்பட்டன.

மாவட்டத் தொழில் மையங்கள்....

மத்திய அரசின் புதிய தொழிற்கொள்கையில், கிராமத் தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் ஒரே இடத்திலிருந்து உதவிகள் கிடைத்து, அவை

வளர வேண்டுமென்னும் நோக்குடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழில் மையம் அமைக்கப் பட வேண்டும் என்ற ஆலோசனை வழங்கப்பட்டது. தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள், இயந்திரங்கள், கடன் உதவிகள் ஆகியவற்றைப் பெற்றுத் தொழில்கள் தொடங்குவதில் இம் மையங் கள் தொழில் முனைவர்களுக்கு உதவும்.

மத்திய அரசின் ஆலோசனையை ஏற்றுத் தமிழக அரசு, செங்கற்பட்டு, தர்மபுரி, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங் கள் இத்தொழில் மையங்களை அமைக்கத் திட்டம் இட்டுள்ளன. முதல் ஐந்து மாவட்டங்களில் இவ் வாண்டு ஜூன் திங்களிலும் ஏனைய மூன்று மாவட் டங்களில் ஆகஸ்டு திங்களிலும் இம் மாவட்ட மையங்கள் அமைக்கப்படும்.

இந்த மையங்கள் தொழில்-வணிகத் துறை இயக்குநரகப் பணிகளின் ஒரு பகுதியை மாவட்ட அளவில் நிறைவேற்றுவதுடன், மின்வாரியம், நக ராட்சி, மக்கள் நல்வாழ்வுத் துறை அலுவலர்களு டன் தொடர்பு கொண்டு தொழில்கள் வளர்வதற்கு எல்லா வகையான ஒத்துழைப்பையும் நல்கும். சிறு தொழில் மையங்களை அமைப்பதற்குத் தேவையான அனுமதிகளை மாவட்ட அளவிலேயே வழங்கி, விரைந்து பணிகள் தொடர்வதற்காக, இம் மா வட்ட மையங்களுக்குத் தேவையான அதிகாரங் களும் வழங்கப்படும்.

பட்டுப் புழு வளர்த்தல் ....

கிராமப் புறங்களில் மக்களுக்கு உதவும் தொழில்களில் பட்டுப் புழு வளர்ப்பு, முக்கிய இடம் வகிக்கிறது. கிராமங்களில் சிறு விவசாயிகள் இதனை ஒரு துணைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். விவசாயத்தோடு இணைந்த இந்தத் தொழிலை வளர்ப் பதில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. 1976-77ல் முசுக்கட்டை மரங்கள் வளர்க்கப்பட்ட நிலப்பரப்பு 11,900 ஏக்கர்; 1977-78ல் அது 13,900 ஏக்கராக உயர்ந்துள்ளது. 1976-77ல் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப் புழுக் கூடுகள் 10.06 இலட்சம் கிலோ கிராம். 1977-78ல் 16.06 இலட் சம் கிலோ கிராம். 1976-77ல் உற்பத்தி செய்யப் பட்ட கச்சாப் பட்டு 16,285 கிலோ கிராம் ; 1977-78ல் உற்பத்தி செய்யப்பட்ட கச்சாப் பட்டு 27,853 கிலோ கிராம்.

மத்திய அரசின் புதிய அனுமதியின் கீழ், தமிழ்நாட்டில் தஞ்சை, குமரி மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் பட்டுப் புழு வளர்ப்பு ஊக்குவிக்கப்படும். அதன் பிறகு, நான்கு ஆண்டுகளில் மேலும் 11,900 ஏக்கர் நிலத் தில் முசுக் கட்டை மரங்கள் வளர்க்கப்பட்டு, 2,50,000 கிலோ கச்சாப்பட்டுக் கிடைக்க வகை செய்யப்படும். இத் திட்டத்தால் 58,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர்.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வழங் கும் கடன் தவிர, 25 சதவிகிதம் உதவித் தொகை வழங்கப்படும். இத்தொழிலுக்காகக் கிணறுகள் தோண்டவும், கூடங்கள் அமைக்கவும், பிற தேவைகளை நிறைவேற்றவும் நிதி உதவி அளிக்கப் படும்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

கிராமப்புறத் தொழில்களை வளர்ப்பதில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் சிறந்த பணியாற்றி வருகிறது. இக்கழகம், தமிழ கத்திலுள்ள தச்சர், கருமார் போன்ற தொழிலா ளர்களுக்கு உதவுவதற்காகவே தனித் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. அவர்களுக்குத் தொழிற் கூடங்கள் அமைக்கப்பட்டு தவணை முறையில் வாங்குவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. தொடக் கத்தில் ரூ. 413 முன் தொகையாகக் கட்டவேண்டும். பின்னர் நாள்தோறும் ரூ. 3 மட்டும் கட்டினால், 10 ஆண்டுகளில் அந்தக் கூடம் தொழிலாளருக்கே சொந்தமாகிவிடும்.

ரூ. 319 இலட்சம் மதிப்புள்ள பல்வேறு தொழிற்கூடங்களை அரசு அமைத்துள்ளது. அவற் றால் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 347 தொழில் முனைவர்கள் பயன் பெற்றுள்ளனர். மேலும், அம்பத்தூர், ஒசூர், இராணிப்பேட்டை, திருப்பூர், திருச்செங்கோடு, நாமக்கல், கிருஷ்ண கிரி, வடலூர் போன்ற பல இடங்களில் 200 தொழிற்கூடங்களைக் கட்டத் திட்டமிடப்பட்டு உள்ளது.

1977-78ஆம் ஆண்டில் ரூ. 1,686 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்களைத் தவணை முறையில் பெற்று 1,050 தொழில் முனைவர்கள் பயனடைந் துள்ளனர். அதே ஆண்டில் ரூ. 2,910 இலட்சம் மதிப்புள்ள கச்சாப் பொருட்கள் வாங்கப்பட்டு சிறு தொழில் முனைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இச் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1977-78ல் 233 தொழில் அமைப்புகளுக்கு ரூ. 57.34 இலட்சம் உதவியாக வழங்கியுள்ளது. சிறுதொழில் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கும், உற் பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் உதவி செய்து வருகிறது.

கிராமப் புறங்களில் 11,661 பேருக்கும் நகர்ப் புறங்களில் 10,161 பேருக்கும் ஆக மொத்தம் 21,822 பேருக்கு வேலை வாய்ப்புக்களைத் தந்து உள்ளது. அதற்காகப் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 1,672 இலட்சமாகும்.

'சிட்கோவின்' உதவியால் நடைபெறும் தொழில்களையும், வேறு தொழில்களையும் பற்றிய விவரங்களைச் சேகரித்து, வளர்ச்சியடையாமல் தயங்கி நிற்கும் தொழில்களை மீண்டும் இயக்கிட உதவுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

எல்லாத் தொழில்களுக்கும் ஆலோசனை வழங் குவதற்காக ஓர் அமைப்பினை உருவாக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)

தமிழகத்தில் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு, தமிழக அரசின் தொழில்-வணிக இயக்குநரகத்தின் மேற்பார்வை யில் இருந்து வந்த சிறு தொழில்களை வணிக அடிப் படையில் நடத்தும் நோக்குடன் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் அமைக்கப்பட்டது. அரசு இந்த நிறுவனத்திற்குக் கடன் தந்து உதவுகிறது. தொழில்களை வணிக முறையில் நடத்தி இலாபம் தேடுவதில் இந்நிறுவனம் அக்கறை கொண்டுள்ளது.

இந் நிறுவனம் 'தமிழ்நாடு மொபெட்ஸ் லிமிடெட்' என்ற துணை நிறுவனத்தை நிறுவி 'மயூரம்' என்னும் பெயரில் மொபெட்ஸ் ஸ்கூட் டர்களைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு உள்ளது. 'டான்சி' 1977-78ல் மேற்கொண்ட திட்டங்கள் :

1. இயந்திரக் கருவிகள் தயாரிப்புத் திட்டம், இராணிப்பேட்டை.

2. கருங்கல் நிலையம், குன்னம்.

3. கடிகார இணைப்பு அமைப்பு, உதகமண் டலம்.

தனது பணிகளை விரிவுபடுத்திப் புதிய தொழில் களைத் தொடங்கவும், உற்பத்தியைப் பெருக்கவும், வேலைவாய்ப்பை அதிகப்படுத்தவும் டான்சி திட்ட மிட்டுச் செயற்பட்டு வருகிறது.

டான்சி, தொழிலாளர்களுடன் நல்லுறவு கொண்டுள்ளது. கிண்டியிலுள்ள கண்ணாடிப் பிரி வில் பணியாற்றிய 200 தொழிலாளர்கள், அந்தப் பிரிவு இயந்திரக் கோளாறினால் இயங்க முடியாமல் மூடப்பட்டதால் வேலையிழக்க நேரிட்டுவிட்டது. மூன்றாண்டுகள் தொழிலகம் மூடப்பட்டிருந்தது. 1977 அக்டோபர் திங்கள் முதல் தொழிலாளர்கள் வேலைக்கு மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப்போது தெர்மாஸ் பிளாஸ்க்குக்குரிய கண்ணாடிக் குடுவைகள் தயாரிக்கப்படுகின்றன.

சர்க்கரைத் தொழில்

1977-78ஆம் ஆண்டில் கரும்பு பயிரிட்டு சர்க்கரைத் தொழில் நடைபெறுவதற்கான பருவ காலத்தில் 20 சர்க்கரை ஆலைகள் இருந்தன. இந்த ஆலைகள் அனைத்தும் நாள் ஒன்றுக்கு 34,750 டன் கரும்பு பிழியும் திறன் கொண்டவை. தினமும் 1,250 டன் பிழிவுத் திறன் கொண்ட பொதுத் துறை ஆலை ஒன்று திருச்சி மாவட்டத்தில் உள்ள எறையூரில் அமைக்கப்பட்டு வந்தது. இந்த ஆலை கட்டி முடிக்கப்பட்டால் கிராமப் புற மக்க ளுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதால், அதனை விரைந்து முடிக்க முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டு, 1978ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களி லேயே சோதனையோட்டமாகச் சாறு பிழியப் பட்டது. 700 பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். **சோதனைக் கட்டத்திலேயே 1.3இலட்சம்டன் கரும்பு இங்கே பிழியப்பட்டது. இந்தியாவிலேயே வேறு எந்த ஆலையும் இந்த அளவுக்கு சோதனைக் கட்டத்திலேயே சாதனை புரிந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.** சர்க்கரைத் தொழிலுக்கேற்ற பருவ காலத்தில் நான்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் விரிவாக்கப் பட்டு, தமது அரைவைத் திறனை நாள் ஒன்றுக்கு மேலும் 3,000 டன் கரும்பு பிழியும் அளவுக்கு உயர்த்திக் கொண்டன. அத்துடன் 300 பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைத்தது.

1977-78ஆம் ஆண்டில், ஆம்பூர், மதுராந்தகம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் வேலை நிறுத்தம் நடைபெற் றது. ஆம்பூரில் தொடங்கிய வேலை நிறுத்தம், உடன்பாட்டு முயற்சிகளின் விளைவாக விரைவி லேயே நிறுத்தப்பட்டது. மதுராந்தகத்திலும் அரசு காட்டிய அக்கறையின் விளைவாக வேலை நிறுத்தம் நின்றது.

அடிக்கடி மிகையூதியம் கேட்டுத் தொழிலாளர் கள் வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர்க்க, ஊக்க ஊதியம் வழங்க வேண்டும் என்று அரசு ஆலோசனை கூறியது. அதனைக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் ஏற்றுக் கொண்டனர். அதையொட்டிக் கூட்டுறவு ஆலை களுக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. ஒப்புக்கொண்ட உடன் பாட்டின்படி, 1977-78ஆம் ஆண்டுக்கும் 1978-79 ஆம் ஆண்டுக்கும் தொழிலாளர்களுக்கு உற்பத்தி ஊக்க ஊதியம் வழங்கப்படும். வேலை நிறுத்தங்கள் நடைபெற்ற போதெல்லாம் கரும்பு பயிரிடு வோர்க்கும் தொழிலாளர்களுக்கும் இழப்பு ஏற் படாத வகையில் உடன்பாட்டுக்கு ஏற்பாடு செய் யப்பட்டு வேலை நிறுத்தங்கள் நிறுத்தப்பட்டு வந் துள்ளன.

கரும்பு பயிரிடுவதில் புதிய முறைகளைக் கையாள் வதாலும், கரும்புக்கு மத்திய அரசு விதித்துள்ள விலையைவிடவும் அதிகமாக விலை தரப்படுவதாலும் 1977-78-ல் 56 இலட்சம் டன் கரும்பு சாறு பிழி வதற்குக் கிடைத்தது. இதனால் 4.5 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இது முந்திய ஆண்டைவிட 40 சதவிகிதம் அதிகம் என்பதுடன் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்த அளவு உற் பத்தி என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டி.ஐ.ஐ.சி.)

1949ஆம் ஆண்டு இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் மாநில அளவில் அமைந்துள்ள நிதி நிறுவனங்களில் இது ஒரு முன்னோடி அமைப்பாகும். தமிழ்நாட்டில் தொழில்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து தொழில் வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் இது அமைக் கப்பட்டது. இக் குறிக்கோளுடன் செயற்படும் இந் நிறுவனம், தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப் படும் நிரந்தரச் சொத்துக்களான நிலம், கட்டடங் கள், இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு நீண்டகால—நடுத்தரக் காலக் கடன்களை வழங்கு கிறது. தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்கு

கள், கடனீட்டுப் பத்திரங்கள், இவைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. மேலும் தவணை முறையில் இயந்திரங்கள் வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்து கொண்ட உத்தரவாதம் / மாற்று உத்தரவாதம் அளிக்கிறது. இந் நிறுவனம், கிராமப் பகுதிகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும் போக்குவரத்து வாகன உரிமையாளர்களுக்கும் ஓட்டல் உரிமையாளர்களுக்கும் உதவுகிறது. தொழிற்சாலைகளைப் புதிதாக ஆரம்பிப்பதற்கு மட்டுமல்லாமல், ஏற்கெனவே செயற்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும் புதிய முறையில் மாற்றியமைக்கவும், தொழில்களைப் பல்திறப்படுத்துவதற்கும் நிதி உதவி அளிக்கிறது. இதன் மூலம், சிறுதொழில் வினைஞர்களுக்கும் 'தொழில்நுட்ப முனைவோர் திட்டம்' என்னும் சிறப்புத் திட்டத்தின் கீழ் அதிக நிதியுதவி அளிக்கப்படுகிறது. இயந்திரங்கள், இயந்திரப் பாகங்கள் போன்றவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய உலக வங்கியின் மூலமாக அந்நியச் செலாவணிக் கடன் உதவியையும் இந்நிறுவனம் வழங்குகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆலங்குளத்தில் சிமிண்ட் தொழிற்சாலையையும், அரக்கோணத்தில் தமிழ்நாடு உருக்காலை என்று அழைக்கப்படுகிற தொடர் வார்ப்பட உருக்காலையையும் அமைப்பதற்காக 1965ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பின்னர் தனியார் தொழில் முனைவர்களின் உடனுழைப்புடன் கூட்டுத் துறையில் தொழில் நிறுவனங்களை அமைக்கும் வகையில் அதனுடைய நடவடிக்கை விரிவுபடுத்தப்பட்டது.

பொதுத் துறைத் திட்டங்கள்

தற்போது இந்நிறுவனத்தின் கீழ் 5 பொதுத் துறைத் தொழில் திட்டங்கள் இருக்கின்றன. அவற்றில் ஆலங்குளம் சிமிண்ட் ஆலையும், அரக்கோணம் உருக்காலையும் ஏற்கெனவே உற்பத்திப் பணியைத் தொடங்கிவிட்டன. எஞ்சிய மூன்று தொழில்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் முதலீட்டு விவரமும், அவற்றால் உருவாகும் வேலை வாய்ப்பு விவரங்களும் வருமாறு:

	30-6-'77 முடிய ரூபாய் (கோடியில்)	31-5-'78 முடிய ரூபாய் (கோடியில்)
1. பொது, கூட்டுத் துறைத் தொழில் திட்டங்களில் மொத்த முதலீடு	131	139
2. கூட்டுத் துறைத் திட்டங்களில் மொத்த முதலீடு	152.61	37.72
3. வேலை வாய்ப்புக்கள் (உருவாக்கிக் கொண்டிருக்கிற திட்டங்கள் உட்பட)	5000பேர்	7600பேர்

அரியலூர் சிமெண்ட் ஆலை

அரியலூரில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காகத் தொழில் உரிமம் ஒன்று பெறப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலை உலர்ந்த முறைப்படி சிமெண்ட் தயாரிக்கும். இத்திட்டத்திற்குரிய மூலதனச் செலவு ரூ. 28.76 கோடி. இதற்கான கட்டட அமைப்பு வேலைகள் முடிந்து, 1978 செப்டம்பர் திங்கள் முதல் இயங்கத் தொடங்கும்.

அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு 1-4-'76 முதல் 30-6-'77 வரை ரூ. 358.26 இலட்சமும், 1-7-'76 முதல் 31-5-'78 வரை ரூ. 889.9 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேறினால் 1,100 பேருக்கு வேலை கிடைக்கும்.

கல்நார் தகடுகள் தயாரிப்புத் திட்டம்

ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறன் உள்ள கல்நார் தகடுகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் 1.66 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கிறது. 1978-79ஆம் ஆண்டில் இது நிறுவப்படும். இத்திட்டம் நிறைவேறினால் 270 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

உருக்கு உருளை ஆலைத் திட்டம்

தமிழ்நாடு உருக்கு உற்பத்திப் பொருள் இரகங்களைப் பலதரப்படுத்தவும், அவற்றை மேலும் ஆதாயம் ஈட்டும் வகையில் செயற்படச் செய்யவும், தனி உருக்குப் பாளங்களை மீண்டும் உருட்டியடிக்கும் வசதிகளுடன் கூடிய உருளை ஆலை ஒன்றை ரூ. 8 கோடி செலவில் நிறுவுவது குறித்துத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பரிசீலித்து வருகிறது. இத் திட்டம் 1978-79ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.

நியூஸ் பிரிண்ட் திட்டம்

கரும்பாலையிலிருந்து கிடைக்கும் சக்கை போன்ற பொருட்களைக் கொண்டு ரூ. 100 கோடி செலவில், செய்தித் தாள்களுக்கான தாள் தயாரிக்கும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடத்த வேண்டும் என்று அரசு திட்டம் வகுத்து வருகிறது.

மக்னீசிய உலோகத் திட்டம்

1978ஆம் ஆண்டு தேசிய ஆராய்ச்சிக் கழகம், இந்திய மின்சார இரசாயன ஆய்வு நிலையம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பொதுத் துறையில் ஒரு மக்னீசிய உலோகத் திட்டம் ஒன்றை நிறைவேற்ற அரசின் அனுமதியைத் தமிழ்நாடு தொழில்வளர்ச்சி நிறுவனம் தந்து, அதனை அரசு ஏற்றுக் கொண்டு உள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 200 இலட்சம் செலவாகும்; 200 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

கூட்டுத் துறை நிறுவனங்கள்

தொழில் அனுபவமும், முதலீட்டு வசதியும் கொண்ட தொழில் முனைவர்களுடன் இணைந்து கூட்டுத் துறையில் தொழில் திட்டங்கள் பலவற்றை நடத்துவதில் 'டிட்கோ' பெரும் பங்கு வகிக்கிறது. இன்றைய அரசு பொறுப்பேற்ற பிறகு கூட்டுத் துறையில் பின் வரும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் சில நிறைவேற்றப்பட்டும் வருகின்றன.

சங்கப்பா காகித ஆலை

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ரூ. 350 இலட்சம் செலவில் இந்தக் காகித ஆலை நிறுவப்பட இருக்கிறது. இதனால் 400 பேர் நேரடியாகவும், 2,000 பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புக்களைப் பெறுவர்.

தமிழ்நாடு இரசாயனப் பொருள் உற்பத்தி

இரசாயனப் பொருள் உற்பத்தித் திட்டம் இராமநாதபுரம் மாவட்டம், காரைக்குடி வட்டத்தில் உள்ள கழனிவாசல் கிராமத்தில் நிறைவேற்றப்பட்டு, ஆண்டொன்றுக்கு 3,300 டன் சோடியம் சல்ஃபைட் உற்பத்தி செய்ய வகை செய்யப்பட்டு உள்ளது. 1977ஆம் ஆண்டில் டிசம்பர் திங்களில் உற்பத்தி தொடங்கியது. இத்திட்டத்தில் 1978 மார்ச் திங்கள் வரை 250 பேர் வேலை வாய்ப்புக்களைப் பெற்றிருக்கின்றனர்.

கலப்பு உலோக வார்ப்படத் திட்டம்

தொழில் நுணுக்க வல்லுநர் திரு பி. எஸ். சந்திரசேகருடன் இணைந்து கலப்பு வார்ப்படத் திட்டம் ஒன்றை நிறைவேற்ற 'டிட்கோ' அளித்த கோரிக்கையை, 1978 மே மாதத்தில் அரசு ஏற்பளித்தது. இத்திட்டம் 320 பேருக்கு வேலை வாய்ப்பைத் தரும். தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தொழிலில் பின் தங்கிய பகுதியான ஒசூரில் இத்திட்டம் இடம் பெறும்.



'வானவில் வண்ண இரசாயனத் திட்டம்

கைத்தறி நெசவாளர்களுக்குப் பயன்படும் இரசாயன வண்ணக் கலவைகளை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 'கோ-ஆப்டெக்ஸ்' இதற்கு ஒத்துழைப்புத் தருகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கடலூரில் இது துவக்கப்படும். இதற்குச் செலவு ரூ. 3.5 கோடி ஆகும். 400 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர்.

தொலைக்காட்சிக் கருவி உற்பத்தி

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட கூட்டுத் துறை நிறுவனமான 'டைனாவிஷன்' எனும் அமைப்பு பரவலாகப் புகழ் பெற்று விற்பனையாகிக் கொண்டிருக்கிற 'டயனோரா' தொலைக்காட்சிப் பெட்டிகளை உற்பத்தி செய்கிறது.

1976ஆம் ஆண்டு 4,308 தொலைக் காட்சிப் பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1977ஆம் ஆண்டில் இது 10,766 ஆக வளர்ந்தது. இதனால் 240 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிப்காட்)

தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் 1971ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமான வரையறுக்கப்பட்டதொரு நிறுவனமாக, தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும், விரிவடைவதற்கும், இது வரை இம் மாநிலத்தில் பின் தங்கியுள்ள பகுதிகளை விரைவாகத் தொழில் மயமாக்குவதற்கும் அமைக்கப்பட்டதாகும். 'சிப்காட்' உதவியுடன் தொழில்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் :

(1) சாத்தியக் கூறு ஆய்வுகளுக்கு உதவித் தொகை.

(2) நடுத்தர, பெரிய தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன்.

(3) மத்திய அரசின் உதவித் தொகை.

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டை, தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒசூர் ஆகிய இரண்டு பின் தங்கிய இடங்களில் இரண்டு

தொழில் வளர்ச்சி மையங்களை 'சிப்காட்' அமைந்து உள்ளது.

நலிவுற்ற தொழிற் பிரிவுகளுக்கு உதவி:

தொழில் நிறுவனங்கள் தொடர்பான தொழில் நல்லுறவுகள், நிதிக் கட்டுப்பாடுகள் போன்றவற்றைப் பொறுத்த வரையில் நலிவுற்ற ஆலைகளுக்குக் குறிப்பிட்ட காலத்திற்கு அரசு பாதுகாப்பு அளித்தல், வேலைவாய்ப்பு இழப்பைத் தடுத்தல், ஆகிய நோக்கத்தின் அடிப்படையில் நலிவுற்ற ஆலைகளுக்குக் குறிப்பிட்ட அரசு 1969ல் ஒரு சட்டத்தை இயற்றியது.

இந்தச் சட்டத்தின்படி 17 நிறுவனங்கள் நிவாரணம் பெறத் தக்கவை என்று இந்த அரசு அறிவித்தது. அந்த 17 நிறுவனங்களில் 7 நிறுவனங்கள் 1977-78ஆம் ஆண்டில் முதல் முறையாக நிவாரணம் பெற்றன.

ரூபாய் 1 கோடி மூலதனம் வரை உள்ள தொழில்களுக்கு மட்டும் என்றில்லாமல் அதற்கு மேலும் மூலதனம் உள்ள நலிவுற்ற தொழில்களுக்கும் அரசு நிவாரணம் அளித்துள்ளது.

நிவாரணம் பெற்ற நிறுவனங்கள்:

1. சதர்ன் சுவிட்ச் கியர் லிமிடெட், சென்னை
2. சௌத் இந்தியா கிளாஸ் அண்ட் எனமல் ஒர்க்ஸ் லிமிடெட், சேலம்.
3. ரவீந்திரா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
4. மது ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிமிடெட்.
5. பிரகாஷ் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
6. கோயம்புத்தூர் கமலா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
7. சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், முத்தனேந்தல், இராமநாதபுரம் மாவட்டம்.

இன்றையத் தமிழக அரசு மூலதனத்திற்காகவும். இயந்திரங்கள் வாங்குவதற்காகவும் சில நிறுவனங்களுக்குக் கடனாகவும், கருவிகள் பொருட்கள் வாங்க முன் பணமாகவும் கீழ்க்கண்ட ஆலைகளுக்கு நிதியுதவி அளித்துள்ளது. அவையாவன :

1. சதர்ன் ஸ்ட்ரக்சரல் லிமிடெட், சென்னை.
2. சக்தி பைப்ஸ் லிமிடெட், சென்னை.
3. டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட், சென்னை
4. லோட்டஸ் மில்ஸ், கோயம்புத்தூர்.

முடிக்கிடந்த ஆலைகள் திறக்கப்பட்டன :

இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட் . .

இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் 1974 நவம்பர் முதல் மூடிக்கிடந்தது. நிதி நிறுவனம், தொழில் புனரமைப்புக் கழகம், மத்திய அரசு, பாரத் எலெக்ட்ரிகல்ஸ் ஆகியவற்றுக்கிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் தமிழக அரசு விறுவிறுப்புடன் கலந்து கொண்டு, இந்நிறுவனத்திற்குப் புது வாழ்வு தருவதற்குத் திட்டம் வகுத்தது. அத்திட்டத்தின்படி, இந்த நிறுவனத்திற்கு ரூ. 47 இலட்சம் தந்து உதவிய இந்திய மத்திய வங்கிக்குத் தமிழக அரசு பொறுப்புறுதி அளித்துள்ளது. அத்துடன், தமிழ்நாடு மின் வாரியம் இந்நிறுவனத்திலிருந்து முதலாண்டில் 50,000 மீட்டர்களையும், பின்னர் நான்காண்டுகள், ஆண்டுதோறும் 1,00,000 மீட்டர்களையும் வாங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. இந்த நிறுவனம் 1977 டிசம்பர் திங்களில் மீண்டும் திறக்கப்பட்டது. இதுவரை 436 பேர் மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

30-6-'77ல் முடிக்கிடந்த நெசவு ஆலைகள் :

1. பத்மா மில்ஸ், கோவை.
2. லோட்டஸ் மில்ஸ், கோவை.
3. சோமசுந்தரம் சூப்பர் மில்ஸ், முத்தனேந்தல், இராமநாதபுரம் மாவட்டம்.
4. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர்.
5. ராஜா மில்ஸ், மதுரை.
6. சிவகுமார் ஸ்பின்னிங் மில்ஸ், திருநெல்வேலி.
7. லட்சுமி மில்ஸ், மதுரை.
8. பிரகாஷ் மில்ஸ், கோவை.

தமிழக அரசு விரைந்து செயற்பட்டுத் திறந்துவிட்ட நெசவாலைகள் :

1. லட்சுமி மில்ஸ், மதுரை.
2. சிவகுமார் ஸ்பின்னிங் மில்ஸ், நெல்லை.
3. பிரகாஷ் மில்ஸ், கோவை.
4. லோட்டஸ் மில்ஸ், கோவை.
5. சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், முத்தனேந்தல், இராமநாதபுர மாவட்டம்.

இந்த ஆலைகள் மீண்டும் இயங்குவதற்கு வங்கிகள் அளித்த ரூ. 120 இலட்சத்திற்குத் தமிழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதுடன், தமிழக அரசே ரூ. 30 இலட்சம் கடனுக வழங்கியுள்ளது. இந்த ஐந்து ஆலைகளில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சோமசுந்தரம் சூப்பர் ஸ்ப்பின்னிங் மில்ஸ் என்ற நிறுவனத்தின் மேலாண்மையை தமிழக அரசே ஏற்று நடத்துகிறது. இந்த ஐந்து ஆலைகளைத் திறந்து மீண்டும் இயங்க வைத்ததால் 1,740 பேருக்குவேலை கொடுக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் தமிழக அரசு ஆர்வம் காட்டி, தொழில் வளத்தைப் பெருக்கி வருகிறது. தொழில் வளர்ச்சி தொடர்கிறது.

வீட்டு வசதிக்கு ஆற்றிய பணிகள்!

சமுதாயத்தில் வாழும் அனைவருக்கும் உணவும் உடையும் உறையுளும் வழங்குவது நல்லரசின் கடமையாகும். அந்த வகையில் நமது அரசு பல்வேறு சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது.

மக்கள் தொகைப் பெருக்கம் நாளுக்கு நாள் பெரும் பிரச்சினைகளை உருவாக்கி வரும் இந்நாளில் மக்களுக்கு வீட்டுவசதி அளிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இவ்வகையில், நமது அரசு கடந்த ஓராண்டில் 1977-78-ல் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் ஆற்றியுள்ள அரும்பணிகளை நாம் காணலாம்.

இந்த ஆண்டில் வீட்டுவசதித் திட்டங்களுக்காக 17.41 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது, 1969-70-ல் செலவு செய்யப்பட்டதைவிட 300 விழுக்காடு அதிகமாகும்.

5,108 குடியிருப்புகள் கட்டி அவை மக்களுக்கு ஒப்படைக்கப்பட்டன. மேற்கொண்டும் 1318 குடியிருப்புகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மக்களுக்காக ரூ. 96.91 இலட்சம் செலவில் 2465 குடியிருப்புகள் (1866 முடிவுற்றவை-595 முடியும் நிலையில் உள்ளவை) உருவாக்கப்பட்டுள்ளன.

குறைந்த வருமானமுள்ளவர்களுக்காக ரூ. 275.99 இலட்சம் செலவில் 5140 குடியிருப்புகள் கட்டும் பணியில் 1368 குடியிருப்புகள் முடிவடைந்துவிட்டன. எஞ்சியவை முடிவடையும் நிலையில் உள்ளன.

நடுத்தர வருமானமுள்ளோருக்காக 2604 குடியிருப்புகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் 1238 குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்பட்டு-உரியவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. இதற்கான செலவு ரூ. 478.57 இலட்சம்.

அரசு ஊழியர்களுக்கு வாடகைக்குத் தருவதற்காக மேற்கொண்டு கூடுதலாக 636 குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டன.

சென்னை நகரிலும்-அதைச் சுற்றிலும் நில ஆர்ஜிதம் மற்றும் அபிவிருத்திக்காகவும் ஈரோடு—திருச்செங்கோடு-புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புறநகர்கள் அமைக்கவும் ரூ. 3.46 கோடி செலவிடப்பட்டுள்ளது.

சென்னை நகரை விரிவுபடுத்துவதற்காக, சென்னை-திருச்சி சாலையில் சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் மறைமலை நகரையும் சென்னை-பொன்னேரி சாலையில் சென்னையிலிருந்து வடக்கே 12 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு சிறு நகரையும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமைத்து வருகிறது. இந்த இரு திட்டங்களுக்கும் ரூ. 6 கோடி செலவாகும். இதில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தீவிரப் பங்கேற்று, சாலை அமைத்தல், சிறு மதகுகள் கட்டுதல், நிலத்தைச் சமப்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. இது தவிர 543 குடியிருப்புகள் கட்டும் பணியையும் மேற்கொண்டுள்ளது.

பாளையங்கோட்டை பேருந்து நிலையமருகே 6.34 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு ஊழியர் குடியிருப்புகள் 24ன் தோற்றம்

சென்னை நகரிலும்-சுற்றுப்புறங்களிலும் உள்ள பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியிருக்கும் மக்களுக்காக உலக வங்கியானது ரூ. 9.33 கோடி செலவில் 13,467 வீட்டு மனைகளை ஏற்படுத்தித் தர திட்டமிட்டு, அதற்கான பொறுப்பைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது. இது, இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரும் திட்டமாகும்.

கோவையிலும் மதுரையிலும் தொழிலாளர் குடியிருப்புகள்—அங்காடிகள்-குடிநீர் வசதி ஆகியவை செய்துதர மத்திய அரசு ரூ. 15.62 கோடி செலவில் திட்டங்கள் வகுத்துள்ளது. இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தீவிரமாக முனைந்துள்ளது.

ஏழை எளியோருக்காக குறைந்த வாடகையில் வீடு கட்டிக் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. அவர்களிடமிருந்து வாடகையை வசூலிக்க வேண்டும். இல்லையென்றால் தொடர்ந்து வரும திட்டங்களுக்குப் போதுமான நிதி இராது. இந்த ஆண்டு வாடகை வசூல் இதற்கு முன்பு எப்போதுமில்லாத அளவுக்கு அதாவது ரூ. 947.95 இலட்சமாக உயர்ந்துள்ளது. முந்திய ஆண்டு வசூலான வாடகை ரூ. 575.72 இலட்சம் தான்.

புதிதாகக் குடியிருப்புகள் கட்டி வாடகைக்கு விட்டதால் இந்த ஆண்டு ஓரளவு கூடுதலாக வாடகை வந்ததாக வைத்துக் கொண்டாலும், இந்த ஆண்டின் வாடகை வசூல் குறிப்பிடத்தக்கதாகும்.

1977-78-ல் இவ்வளவு சிறப்பான பணிகளை ஆற்றியுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்-1978-79-ல் ரூ. 24 கோடி செலவில், 10,000 குடியிருப்புகளைக் கட்டித் தரும் பணியினை மேற்கொண்டுள்ளது.

வணிக வரி-சில சிறப்பு அம்சங்கள்

பெரும்பான்மை மக்களின் பேரபிமானத்தைப் பெற்று இந்த அரசு பொறுப்பேற்ற பின்னுலே, வணிகப் பெருமக்களின் வாட்டம் நீங்கியிருப்பதனை யாரும் மறுக்க முடியாது. வணிகவரி வசூலில் இருந்த தேக்கநிலை மாறி அதில் ஒரு புது வேகம் ஏற்படவும், ஊழல்கள் ஒழியவும், பிறரால் நேரும் பெருந்துன்பங்களிலிருந்து வணிகர்கள் விடுபடவும் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்தது இந்த அரசு.

இலாப மதிப்பீடு, வரிவிதிப்பு மற்றும் அப்பீல் செய்வது தொடர்பானவற்றை ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டது அவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒட்டு மொத்தக் கணிப்பு முறை :

சிறு வணிகர்களுக்கு உதவுவதற்காக அரசு செய்துள்ள மற்ருெரு புதிய ஏற்பாடு ஒட்டு மொத்தக் கணிப்பு முறை. இந்த முறைப்படி ஒரு லட்சம் ருபாய்க்கு அதிகப்படாமல் வணிகம் செய்யும் வணிகர்கள் மூவகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு தங்கள் கணக்குகளுக்கு மதிப்பீட்டு அதிகாரிகளின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முதலாவதாக அந்த வணிகர் முழுவதும் பலமுனை வரி விதிப்புப் பொருள்களை விற்பனை செய்பவராக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக - வணிகாது விற்பனைத் தொகை குறித்த விவரக்கணக்கு வணிகப் போக்குக்கு நிகராக இருக்க வேண்டும்.

மூன்ருவதாக-வணிக இடங்களைப் பார்வையிடுகையில் மோசமான முறைகேடுகள் இல்லாததாக இருக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த வரிவிதிப்பு

'வர்த்தக வரித்துறையைச் சார்ந்த ஆய்வு அலுவலர்கள், உடனுக்குடன் ஒருங்கிணைந்த வரி விதிக்கிருர்கள்; வர்த்தகர்கள் விளக்கம் சொல்லக்கூட அனுமதிக்கப்படுவதில்லை' என்று நெடுங்காலமாகக் குறை சொல்லப்பட்டு வந்தது. இப்போதுள்ள அரசு இதனை மாற்றிவிட்டது. இனிமேல் ஆய்வு அலுவலர்கள் தாங்களாகவே ஒருங்கிணைந்த வரியை விதிக்காமல், தாங்கள் கண்டுபிடித்த முறைகேடுகளை வணிகவரி அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் அந்த முறைகேடுகளைப் பரிசீலித்து எவ்வளவு ஒருங்கிணைந்த வரி விதிக்கலாம் என்பதனை முடிவு செய்வார்.

கேளிக்கை வரி

1977-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26-ஆம் நாள் முதல் ஊராட்சி கிராமங்கள், பேரூராட்சிகள் மற்றும் இரண்டாம் நிலை மூன்ரும்நிலை நகராட்சிகள் ஆகியவற்றிலுள்ள திரையரங்கங்களுக்கு இவ்வரங்குகளின் மொத்த இருக்கைக்கான வசூல் அடிப்படையில் காட்சி ஒன்றிற்கு மொத்தமாக வரி விதிக்க அரசு முடிவு செய்தது.

ஒரு திரைப்பட அரங்கில் நடத்தப்படும் ஒவ்வொரு காட்சிக்கும் அந்த அரங்கில் இருக்கக் கூடிய இருக்கைகளினுல் வசூலாகும் மொத்த வசூலில் 20 சதவீதத்திலிருந்து 27.5 சதம் வரை வரி நிர்ணயிக்க தற்போதுள்ள முறையில் வகையுள்ளது. ஒரு திரைப்பட அரங்கில் ஒரு வாரத்தில் எத்தனைக் காட்சிகள் நடத்தப்பட்ட போதிலும் வாரம் ஒன்றுக்கு 14 முதல் 20 வரை குறிப்பிட்ட எண்ணிக்கையிலான காட்சிகளுக்கு ஆகும் மொத்த (இருக்கைகளுக்கான) வசூலில், 15 சதவீதத்திலிருந்து 22.5 சதவீதம் வரை வரி செலுத்துவதன் மூலம் வரி இணக்கம் செய்து கொள்ள உரிமையாளர்களுக்கு விருப்ப உரிமை அளிக்கவும் இம்முறையில் வழி உள்ளது.

1974-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1975 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் வரையில் மிகவும் குறைந்த கால அளவிற்கு நடைமுறையிலிருந்து வந்த, முன்பிருந்த முறையினைக் காட்டிலும் தற்போது நடைமுறையிலிருந்து வரும் வரிவிதிப்பு முறை சில சிறப்பு அம்சங்களைப் பெற்றுள்ளது. பழைய முறையில் வரி விதமானது மொத்த வசூலில் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையிலிருந்தாலும் இணக்க முறையில் வரி செலுத்த விருப்பப்பட்ட திரையரங்க உரிமையாளர்கள், மொத்த வசூலில்-இருக்கைகளின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினையோ அல்லது ஒரு வரையறுக்கப்பட்ட கால வரையறைக்குள் நடைபெறும் ஒரு காட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகளின் சராசரி தொகை இவைகளில் எது அதிகமாக உள்ளதோ அத்தொகையினை வரியாகச் செலுத்த வேண்டும். எதிர் பார்த்த அளவிற்கு இத்திட்டம் வெற்றியடையாத காரணத்தினுல் 1975-ஆம் ஆண்டு சூலை மாதம் 21-ஆம் நாள் முதல் நடைமுறையிலிருந்து விலக்கப்பட்டது. வசூலும் திருப்திகரமானதாக இல்லாததோடு பல நிர்வாகச் சிக்கல்களும் அத் திட்டத்தில் ஏற்பட்டிருந்தன.

மாநிலத்திலுள்ள 1,500 திரையரங்குகளில் 1,000 திரையரங்குகள் புதிய முறை வரி விதிப்பின் கீழ் வந்துள்ளன. பெரும்பான்மையான திரையரங்கங்கள் இணக்க முறையில் வரி செலுத்த விரும்புவது குறிப்பிடத்தகுந்ததாகும். வரி ஏய்ப்பு செய்பவர்களுக்கு கடும் தண்டனை அளிக்கவும் திருத்தச் சட்டம் வழி வகை செய்கிறது.

தவருன வழியில் வரி ஏய்ப்பு செய்யும் குற்றத்திற்கு ஓராண்டு வரையில் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

திரையரங்க உரிமையாளர்களினுல் செய்யப்படும் வரி ஏய்ப்பினைத் தடுக்கவும் வரி வசூலிக்கும் அதிகாரிகளிடையே லஞ்சத்தினை ஒழிக்கவும், அரசினுல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் மிகவும் சிறந்ததென இத் திட்டம் கருதப்படுகிறது.

விளக்கேற்றி வைத்த அரசு

பேட்டிக் கட்டுரை

ஒருங்கிணைந்த வரிச் சட்டத்தில் சில பல முக்கியத் திருத்தங்கள் இன்றைய அரசினால் அண்மையில் செய்யப்பட்டன. அதனால் திரையரங்க உரிமையாளர்கள் பெறும் பயன்கள் குறித்தும், அரசுக்கு உண்டாகும் வருவாய் குறித்தும், முன்னைய சட்டத்திற்கும் இன்றைய சட்டத்திற்கும் உள்ள வேறுபாடு-மக்கள் அதனால் பெறும் பலாபலன்கள் பற்றியும் **தமிழ்நாடு திரையரங்குகள் உரிமையாளர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. டி. ராமானுஜம் அவர்களைப் பேட்டி** கண்டோம். அப்போது அவர் சொன்ன சில முக்கிய கருத்துக்களாவன:

தமிழ்நாட்டில் 1,500 திரையரங்குகள் உள்ளன. இதில் 750 'டூரிங்' தியேட்டர்கள். 750 நிரந்தர அரங்குகள். இதே அளவு 1974ஆம் ஆண்டிலும் இருந்தன. ஆனால், அன்றையதினம அரசுக்குத் தமாஷா வரி மூலம் ரூ. 13 கோடிதான் வந்தது. இன்றைய தினம் 1977-78-ஆம் ஆண்டின் பட்ஜெட்படி அரசின் வருமானம் தமாஷா வரி மூலம் மட்டும் வந்த தொகை ரூ. 21 கோடி!

படத்தொழில் நசிந்தது!

தமாஷா வரிதான் அதிகமாயிற்றே தவிர, திரையரங்குகளின் வருமானம், படம் பிடிப்பவர்களுடைய வருமானம் இவைகளெல்லாம் ஒரேயடியாகக் குறைந்து, ஸ்டூடியோக்களை மூடுவதாகவும், திரையரங்குகளை நடத்தாமல், அரசின் உணவுக் கிடங்குகளுக்கு வாடகைக்குக் கொடுக்கும் அளவுக்கும் படத்தொழில் நசிந்து விட்டது.

அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திரம், பாண்டிச்சேரி இங்கெல்லாம் நாளுக்கு நாள் திரைப்படத் தொழில் வளர்ச்சி அடையவும், படப்பிடிப்புகள் சுறுசுறுப்பாக இயங்கவும், திரையரங்குகளின் எண்ணிக்கை அதிகமாகப் போகவும், தமிழ்நாட்டில் மட்டும் திரைப்படத் தொழில் குன்றி, கூனி, கருகிக் கொண்டுவந்தது!

வரி விகிதம் அதிகம் !

இதற்குக் காரணம், மற்ற மாநிலங்களைவிட இங்குத் தமாஷா வரி அதிகமாக இருப்பதுதான் என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். இதற்கு முந்திய அரசுகள்கூட வரி விகிதம் அதிகம் என்பதை ஒப்புக் கொண்டார்களே தவிர, இந்தத் தொழிலை அந்தக் கஷ்டத்திலிருந்து விடுவிக்க ஏனோ பாடுபடவில்லை. பாடுபடாததுமட்டுமல்ல, படம் பார்ப்பதற்கான நுழைவுக் கட்டணம் 17 காசு என்றால், அதற்கு வரி மட்டும் 23 காசு என்ற அளவிலே 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டில் அதிகமாக்கி விட்டார்கள்.

கலையின் சக்தி

கலையையும், இலக்கியத்தையும் நான் பெரிதும் மதிக்கிறேன்; விரும்புகிறேன். ஏனென்றால் கோடிக்கணக்கான மக்களுடன் பேசும் சக்தி கொண்டவை அவை என்பதுதான்!

—அண்ணல் காந்தியடிகள்

இதன் காரணமாகப் படங்கள் அதிகமாக ஓடமுடியாத நிலைமையும், படங்களை ஏழை மக்கள் அதிகம் பார்க்க முடியாத நிலையும், அப்படி அதிக நாள் ஓடாத காரணத்தால், தியேட்டர்களின் படத்தேவைக்காக அதிகமான படங்கள் தயாரிக்கவும், அதன் காரணமாகத் தொழிலின் மூலதனம் அதிகமாகி, தொழில் ஸ்தம்பித்துவிட்டது.

விளக்கு அணையாமல் :

'டூரிங்' தியேட்டர்களின் வளர்ச்சி குறைந்துவிட்டது. ஏழை-எளிய மக்களின் பொழுதுபோக்காக உள்ள இந்தச் சாதனமும் - அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

இந்நிலையில்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பதவியேற்றதும் முதன் முதலில் அளித்த வரவு செலவுக் கணக்கில் சுமார் 4 கோடி மக்கள்-குறைந்த செலவில் சினிமா பார்க்கின்றவர்களுக்கு-உபரி வரியாக வசூலித்துக் கொண்டிருந்த 5 அல்லது 10 காசுகள் குறைத்தார். இதனால் மட்டும் அரசுக்கு ரூ. 1.5 கோடி இழப்பு ஏற்பட்டது. இதுமட்டுமல்லாமல் தொழிலில் இருந்தவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும், பிலிம் விசாரணைக் குழு சிபாரிசினை ஒப்புக் கொண்டு அரசின் வருமானம் குறையாமலும், அதே சமயம் வரி ஏய்ப்பினால் சிதறிப்போகும் தொகையை மீண்டும் இத்தொழிலுக்கே கிடைக்கும் அளவுக்கு ஒட்டுமொத்த வரி விதிப்பு (Compound-Tax) கொண்டு வந்தார்கள். திரையுலக விளக்கு அணைந்துவிடுமோ என்று பயந்தவர்களின் மனத்தில் நிம்மதி ஏற்படுத்தினார்கள்.

ஆறு வகையான வரிகள் :

இந்த ஒட்டுமொத்த வரி தமிழ்நாட்டிலுள்ள 1500 திரையரங்குகளில் இரண்டாவது மட்ட முனிசிபல் நகரங்கள் வரையிலுள்ள சுமார் 1050 திரையரங்குகளுக்குப் பொருந்தும்படி செய்யப்பட்டது. இதுவரை (1) தமாஷா வரி (2) தமாஷா வரி, உபரி தமாஷா வரி (3) கூடுதல் தமாஷா வரி (4) காட்சி வரி (5) கூடுதல் காட்சி வரி (6) அமித கூடுதல் வரி-ஆக 6 விதமான வரிகள் கட்டிக் கொண்டிருந்த 1050 திரையரங்குகள், ஒரே வரியாகக் காட்சி வரி என்ற பெயரில் கட்ட அனுமதித்ததும், இதைக் கட்டுவதில் இதுவரை அனுபவித்து வந்த தொந்தரவை, அறவே நீக்கவும் இது வழிசெய்ததையும் திரையுலகத்தில் உள்ள அனைவரும் பாராட்டுதலுடன் வரவேற்றார்கள்.

அரசின் வருமானம் குறையாமலும், அதே சமயத்தில் திரையரங்கு உரிமையாளர்களும், திரைப்படத் தொழிலில் உள்ளவர்களும் இதை வரவேற்பதற்கு என்ன காரணம் என்பதையும் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந்த வரி விதிப்பின் மூலம், வரி ஏய்த்தவர்கள் இனி ஏய்க்காமல் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டுவதற்கு, ஏற்கெனவே ஒழுங்காக வரி கட்டிக் கொண்டிருந்தவர்கள், வரியைக் குறைத்துக் கட்டி, வரியின் பளுவிலிருந்து அவர்களை விலக்கிவிடவும் இந்தத் திட்டம் வழி செய்தது. இது மட்டுமல்ல; வரி ஏய்ப்பினால் அரசுக்கும் வராமல், திரைப்படத் தொழிலுக்கும் வராமல் வரி ஏய்ப்புச் செய்ய உடந்தையாக இருந்தவர்களுக்குச் சுமார் 2 லிருந்து 3 கோடி ரூபாய் சிதறிக் கொண்டிருந்த அந்தப் பணம், இன்று அரசு வரி வருமானம் குறையாமலே, இன்றைய தமிழ்த் திரை உலகிற்கும் எவ்விதமான பயம் இல்லாமல் வந்துகொண்டிருக்கிறது.

பெரிய சாதனை!

அரசின் வருமானம் குறையாமலே இந்தத் தொழிலைச் சேர்ந்தவர்களுக்கு 2, 3 கோடி ரூபாய் ஆண்டுதோறும் திரையுலகிற்குச் சுலபமாகவும் நியாயமாகவும் வந்து சேரும் அளவுக்கு அமல் செய்யப்பட்ட திட்டம்தான் இந்த ஒட்டுமொத்த வரியாகும். மொத்தத்தில் சுமார் 60லிருந்து 65 வரை வரியாகக் கட்டிவந்த தமாஷாவரி இன்று 33 அளவுக்குக் குறைந்திருக்கிறது என்றால், இதை ஒரு பெரிய சாதனையாகத்தான் கருத வேண்டும்.

இதன்காரணமாக, அன்று 10,000 ரூபாய் வசூலாகியிருந்தால் 6,000 ரூபாய் வரி கிடைக்கும், 20,000 ரூபாய் வசூலாகி இருந்தால், 12,500 ரூபாய் வரி கிடைக்கும். 30,000 ரூபாய் வசூலாகியிருந்தால் 16,000 ரூபாய் வரி கிடைத்திருக்கும். இதைத் தமிழக அரசு திரைப்படத் தொழிலுக்குச் செய்த சாதனையாக இருந்தாலும் அரசையும், அரசின் வருமானம் குறையாமல் இருக்கவேண்டும் என்பதையும் மனத்தில் கொண்டு அதே சமயத்தில் திரைப்படத் தொழிலில் ஏய்க்கப்படும் பணம் வெளியில் செல்லாமல், அந்தப் பணம் திரைப்படத் தொழிலிலேயே இருக்க வேண்டும் என்று செய்த இந்த முறையினால்தான் இன்று தமிழ்ப்பட உலகம் பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது. இழுத்து மூடி வைக்கப்பட்ட ஸ்டூடியோக்கள் பெருமையுடன் திறந்து செயலாற்றுகின்றன.

1-10-'77 அன்று கலைவாணர் அரங்கில் நடந்த தமிழ் நாடு திரையரங்குகள் உரிமையாளர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள்

கடந்த ஆண்டு வந்த தமிழ்ப் படம் 60. இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் தமிழ்ப்படம் 150. கடந்த ஆண்டு வெளிவந்த தமிழ் வெற்றிப் படங்கள் 5. இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் தமிழ் வெற்றிப் படங்கள் 20. எடுக்கப்படும் தமிழ்ப் படங்கள் போட்ட முதலீட்டை எடுக்கும் திறன் பெற்றுள்ளது. இவ்வளவுக்கும் காரணம் ஒட்டுமொத்த நிர்ணய வரி தான் என்றால் அது மிகையல்ல.

தொழில் முன்னேற....

இதைத் தவிர அரசு செய்துள்ள கீழ்க்கண்ட காரியங்களும் இந்தத் தொழில் முன்னேற்றமடைவதற்குக் காரணங்களாக அமைந்தன. மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றவுடனே அரசின் அதிகாரிகளையும் தொழிலில் உள்ளவர்களையும் சேர்த்து ஒரு கூட்டம் நடத்தி, அரசின் கொள்கை திரைப்பட அரங்குகள் நிறைய வளர வேண்டும் என்று சொல்லி, அதற்கான சட்ட திட்டங்களை இலகுவாக்கினது மேலும் பல திரைப்பட அரங்குகள் வருவதற்கு வழி செய்வதாகும்.

திரையரங்குகளுக்கு நன்மை செய்யும் அதே நேரத்தில் பொது மக்களுக்கும், திரையரங்குகள் நல்ல சௌகரியத்தையும் சுகாதார வசதியையும் செய்து கொடுக்க வேண்டியது திரையரங்குகளின் உரிமையாளர்களின் பொறுப்பு என்று சுட்டிக் காட்டியதிலிருந்தே மக்கள்பால் அவர்கள் கொண்டுள்ள அக்கறை நன்கு தெரிகிறது.

'டூரிங்' சினிமாக்களுக்கு 3 ஆண்டு லைசென்ஸ் கொடுத்ததும் மேலும் திரையரங்குகளைக் கட்டும் விதிகளைத் தளர்த்தியதையும், மேலும் பல திரைப்பட அரங்குகள் வருவதற்கு வழி செய்யும் என்னும் நம்பிக்கை வீண்போகாது.

இதே ஒட்டுமொத்த வரியை மற்ற இடங்களுக்கும் விரிவாக்க அரசு உறுதி பூண்டிருக்கிறது என்பதும், அதுவும் அமலாக்கப்பட்டு விட்டால், இந்தத் தொழிலின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

என்ன நன்மை?

இதனால் பொது மக்களுக்கும் நன்மை ஏற்படாமல் இல்லை. இந்தத் திட்டத்தால் பல ஊர்களில் பல திரையரங்குகளில் வரி குறைவு காரணமாக நுழைவுக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. பெரிய ஊர்களில் 'பால்கனி'யில் உட்கார்ந்து படம் பார்க்க ரூ. 2.50 என்று இருந்த கட்டணம் இன்று ரூ. 1.25 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, வடார்க்காடு மாவட்டம் ஆரணி கார்த்திகேயன் திரையரங்கில் மற்றும் அதுபோன்ற ஊர்களில் உயர்ந்த வகுப்பு நுழைவுக் கட்டணம் ரூ. 2.50லிருந்து இப்போது ரூ. 1.25 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கடைசி வகுப்பு 70 காசிலிருந்து இப்போது 50 காசாகக் குறைக்கப்கப்பட்டுள்ளது. ஏழை மக்கள் குறைந்த கட்டணமாக ரூ. 1.25 கொடுத்து இன்று மேல்வகுப்பில் (சோபா) உட்காரவும், 50 காசு கொடுத்து திரும்பத் திரும்பக் குடும்பத்துடன் படம் பார்க்க வசதியும், மக்களிடம் நம்பிக்கை கொண்டுள்ள இந்த அரசைவிட வேறு யார் செய்ய முடியும்?

சுருங்கச் சொன்னால் இந்த ஒட்டு மொத்த வரியினால் விளைகின்ற நன்மைகள்தான் எத்தனை எத்தனை!

*அரசின் வரிவருமானம் குறையவில்லை.

*திரையரங்க உரிமையாளர்கள் வரவேற்கிறார்கள்.

*கிராமங்களில் சினிமா பார்க்கும் நுழைவுக் கட்டணம் குறைந்திருக்கிறது.

*நிறைய தமிழ்ப்படங்கள் தயாராகின்றன.

*ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிம்மதியுடன் வாழ்கிறார்கள்.

*வரி ஏய்ப்பினால் வெளியே போய்க்கொண்டிருந்த கோடிக்கணக்கான பணம் மீண்டும் திரைப்படத் தொழிலுக்கே வரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது!

இந்த ஓராண்டில் தமிழ்த் திரைப்படத் தொழிலின் விதியை மாற்றி, இந்தத் திரைப்படத் தொழிலில் உள்ள அனைவரின் இல்லங்களிலும் விளக்கேற்றி வைத்த தமிழக அரசுக்கும், முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களுக்கும், தமிழ்த் திரையுலகம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

எளியோர்க்கு உதவும் சட்டங்கள்

1-7-'77 முதல் 31-12-'77 முடிய பத்து சட்டங்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தில நிறைவேற்றப்பட்டன. 1-7-'78லிருந்து இன்றைய நாள் வரை 25 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆறு சட்ட முன்வடிவுகள், இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன.

கடன் ஒத்திவைப்புச் சட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுவது, இங்கே மிக முக்கியமானது. ஏழை உழவர்களின் கடன்கள் வசூலிக்கப்படுவது, இதன் மூலம் ஒத்தி வைக்கப்படுகிறது. கடன்பட்ட உழவர்கள் நிவாரணச் சட்டம், கடன்பட்டோர் நிவாரணச் சட்டம் ஆகியவை குடியரசுத் தலைவரின் ஆட்சியின் போது நிறைவேற்றப்பட்டாலும், 1978 ஜூலை 15 வரை நீடிக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் பயன்பெறுவோர், கிராமப்புற ஏழை மக்களேயாவர்.

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் சட்டம்,

பயிரிடும் குத்தகைதாரர்களை, நிலத்திலிருந்து வெளியேற்றுவதைத் தடை செய்கிறது. 1978 ஜூலை 15 வரை இச்சட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. புயல், வெள்ள நிவாரணச் சட்டம் 1977, அக்டோபர், நவம்பர் மாதங்களில் தமிழ்நாட்டில் கோரமாக வீசிய புயலாலும், மழையாலும் தமிழக மக்கள் பாதிப்புக்குள்ளானார்கள். பயிர்கள் நாசமுற்றன. கணக்கில்லாத கால்நடைகள் அழிந்தன. மனித உயிர் இழப்புகள் ஏற்பட்டன. புயலால், மழையால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள், தாங்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அவதியுற்றனர்; அவர்கள் நிலையுணர்ந்த அரசு நடப்பு பசலி ஆண்டில், அவர்கள் செலுத்த வேண்டிய கடன்களை 1978 ஜூன் 30 வரை ஒத்தி வைப்பதற்கான சட்டத்தை இயற்றியது.

அரிசன நலன்களுக்காக தமிழ்நாடு அரசு நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டம்:

அரிசன மக்களுக்கு, குடியிருப்பு மனைகள், சாலை வசதிகள், இடுகாடுகள் மற்றும் தேவையான வசதிகள் செய்து தருவது, ஒரு சமூகப் பொருளாதாரத் திட்டமாகும். இதன் அடிப்படையில் அரிசன நலன்களுக்காக நிலங்களை கையகப்படுத்தும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு நகரநிலை உச்சவரம்புச் சட்டம்:

1976ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட நகரநிலை உச்சவரம்புச் சட்டத்தில் காணும் சில குறைகளையும், உடன் உண்டாகும் இடையூறுகளையும் நீக்கி, இச்சட்டம் வழி செய்கிறது.

கிராமங்களே நாட்டின் உயிர்நாடிகள். கிராம மக்களின் வாழ்வு வளம் பெற்றால் அன்றி—எத்தனை திட்டங்களைத் தீட்டியும் பயன் இல்லை. தீட்டப்படும் திட்டங்கள் கிராம மக்களை மேம்படுத்துவதான அடிப்படையில் அமைய வேண்டும். ஊர் வளர்ச்சி உண்மையான மக்கள் அரசின் முக்கிய குறிக்கோளாக அமைந்தாலன்றி, பல்வேறு துறைகளில் சாதனைப் பட்டியலைக் காட்டுவது எந்த விதப் பயனையும் அளித்து விடாது. கிராம மக்களின் மேம்பாட்டுக்கு, கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கு இன்றைய தமிழக அரசு மிகுந்த முன்னுரிமை அளித்துப்பணியாற்றி வருகிறது. அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீர், அனைத்துக் கிராமங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பது இந்த அரசின் தலையாய இலட்சியம். ஊர் வளர்ச்சித் துறையில் பாராட்டத்தக்க பணிகள் இந்த ஓர் ஆண்டில் நடைபெற்றுள்ளன.

உள்ளாட்சி அமைப்பு நிர்வாகத்தை மேம்படுத்துதல்:

ஊராட்சிகளும், ஊராட்சி உறுப்பினர்களும் இருப்பினும், அரசின் திட்டங்கள் வெற்றி பெறுவது, மக்களைப் பொறுத்தே அமைகிறது. எனவே திட்டங்களின் மீது முடிவு எடுக்கும் பொறுப்பில் மக்களை ஈடுபடுத்தவும், அரசிற்கும் மக்களுக்கும் இடையேயுள்ள இடைவெளியை இணைக்கவும் வேண்டி, இம்மாநிலத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மக்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு, கோட்ட வளர்ச்சி அலுவலர் தலைவராவர். மற்றும் 12 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவில் அந்தந்தப் பதவியைச் சார்ந்த சட்ட மன்ற, சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொது வாழ்வில் களங்கமற்ற தலைவர்களும் உறுப்பினர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர். இதே போன்ற குழுக்கள் ஊராட்சிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. குழுவின் தலைவர்கள் அரசு அலுவல் சார்பற்றவர்களாக இருப்பர். தேவையானால் கிராம முன்சிப்பு ஓர் உறுப்பினராக இருப்பார். சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளிலும், அனைத்து நகராட்சிகளிலும் இதேபோன்று குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சியின் நிர்வாகத் திறனை மேம்படுத்த ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட உள்ளது. முன்னாள் நகரத் தந்தை, ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர், கல்லூரிக் கல்வி இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கும் இக்குழு, மாநகராட்சி நிர்வாகத்தை ஆராய்ந்து, திறமையான நிர்வாகத்திற்கு ஆலோசனைகளை வழங்கும். இப்படிப்பட்ட குழுக்கள் அமைக்கப்பெற்றது இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி:

அண்மையில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் சிதைவுற்ற சாலைகளைப் பழுது பார்க்க, 79 நகராட்சிகளுக்கும், சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளுக்கும் சேர்த்து, ரூ. 168.75 இலட்சம் மானியமாகவும், ரூ. 171.25 இலட்சம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியின் சாலைகளைப் பராமரிக்க நெடுஞ்சாலைக் கிராமப் பணித் துறைகளில் தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மத்திய அரசு திட்டத்தின்கீழ், ஊர்ப்புற இணைப்புச் சாலைகள் அமைக்கப்படவும், மேம்படுத்தப்படவும், ரூ. 65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வெள்ளம், மற்றும் புயலால் சிதைவுற்ற ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் கட்டடங்கள், மற்றும் குறு நீர்ப்பாசனத் திட்டக் குளங்களைச் செப்பனிடும் பணிக்காக ரூ. 620 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களுக்கான நிதி ஒதுக்கீடு உயர்ந்து வருகிறது:

ஊராட்சி ஒன்றியங்களுக்கான நிதி ஒதுக்கீடு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கப்பட்டு வருகிறது:

ஆண்டு	ஒதுக்கீடு (ரு இலட்சங்களில்)	ஓர் ஒன்றியத்திற்கு ஒதுக்கீடு வீதம் (ரூ. இலட்சங்களில்)
1976-77	1,16,25.40	31.08
1977-78	1,32,55.30	35 44
1978-79	1,43,07.06	38.23

கிராமக் குடிநீர்த் திட்டம் :

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான, குடிநீர் இல்லாத குறையினைப் போக்குவதில் தமிழக அரசு தீவிரமாய் முனைந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் தற்போதுள்ள குடிநீர் வசதிகளைக் கண்டறிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வு ஒன்றினை மேற்கொண்டது. குடியிருப்புகள் யாவும் அவைகளில் உள்ள குடிநீர் ஆதாரங்களுக்கு ஏற்ப ஆறு வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. மொத்தம் உள்ள 55,007 குடியிருப்புகளில் ஒரு கிலோ மீட்டர் தொலைவு வரை நீர் நிலைகளே இல்லாத அல்லது குடிக்கத் தகுதியற்ற நீர்நிலைகள் மட்டுமே உள்ள குடியிருப்புகள் 5,783 ஆகும் எனக் கண்டறியப்பட்டது. இக்குடியிருப்புகளில் ஏறத்தாழ 17 இலட்சம் மக்கள் வாழுகின்றனர்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இப்படி ஆய்வுகள் கண்ட விவரங்களின்படி, மிகத் தேவையான இடங்களைத் தேர்ந்தெடுத்து, குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியது. 1977-78ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், மேற்கூறிய முதல் இரண்டு வகைகளைச் சார்ந்த குடியிருப்புகளுக்கு, அதாவது, ஒரு கிலோ மீட்டர் தொலைவு வரை நீர்நிலைகளே இல்லாத அல்லது குடிக்கத் தகுதியற்ற நீர்நிலைகள் மட்டுமே உள்ள குடியிருப்புகளுக்கு முன்னுரிமை தந்து குடிநீர் வழங்க அரசு ஆணையிட்டு உள்ளது. இவ்விரண்டு வகைகளுக்குள் அடங்கும் குடியிருப்புகளுக்கும், பழங்குடியினர், அரிசனங்கள் வாழும் குடியிருப்புகளுக்கும் உடனே குடிநீர் வழங்கப்படும். மொத்தமுள்ள இப்படிப்பட்ட 5,783 குடியிருப்புகளில், 4,010 குடியிருப்புகளுக்கு 1978ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் இறுதிக்குள் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ஆம் நாள் வரை முதல் இரண்டு வகைகளைச் சார்ந்த 1,364 குடியிருப்புகளில் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுவிட்டன. 1,558 குடியிருப்புகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு, குடிநீரே இல்லாத அல்லது குடிக்கத் தகுதியற்ற குடிநீர் நிலைகள் உள்ள முதல் இரண்டு வகைக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணி முடிவுற்ற பின்னரே இதர நான்கு வகைகளைச் சார்ந்த பணி மேற்கொள்ளப்படும்.

நீர் வழங்கு சிறு திட்டங்களுக்காக, 1977-78, மற்றும் 1978-79ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 140 மற்றும் ரூ. 130 இலட்சம் அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்குப் பின் அநேகமாக நல்ல குடிநீர் வசதி இல்லாத குடியிருப்பே இல்லாமல் ஆகிவிடும் என்று கணக்கிடப்படுகிறது.

ஊராட்சி அமைப்புப் பணியாளர்கள் நலன் :

பதினன்கு ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

அரசிதழ் பதிவுறு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் அத்தனை மருத்துவச் சலுகைகளும் உள்ளாட்சி நிறுவன ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டு உள்ளன. மேலும், வேளாண்மை விரிவாக்கத்தில் 'டிப்ளமோ' பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் ஊர்நல அலுவலர்களுக்கு ரூ. 100 தொகு மானியமாக வழங்கப்பட அரசு ஆணையிட்டுள்ளது.

கிராமப்புற—நலிந்த மக்கள் நலன் :

சென்னையைச் சுற்றி வாழும் மக்களுக்கும், சென்னை வாழ் மக்களுக்கும்அளிக்கப்படும் வசதிகளை அளிக்கும் நோக்கத்துடன், சென்னையைச் சுற்றி அமைந்துள்ள பதினொரு பேரூராட்சிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேர்மையான முறையில் தேர்தல்கள் நடைபெற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் :

பாகுபாடற்ற சீரிய முறையில் தேர்தல்களை நடத்தவும், ஊராட்சி ஒன்றிய மற்றும் நகராட்சிப் பெருந் தலைவர்களைப் பொறுப்பு மிக்கவர்களாக மாற்றுவதற்காகவும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சிப் பெருந் தலைவர் தேர்தல்களில், வாக்காளர்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் 'நேரடித் தேர்தல் முறை' அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இம்முறை, வரும் நகராட்சி, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களில் பின்பற்றப்படும். தீண்டாமைக் குற்றங்களின் கீழ்த் தண்டனை பெற்றவர்கள் உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் போட்டியிடத் தகுதியற்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டு அதற்குரிய சட்டத் திருத்தமும் செய்யப்பட்டுள்ளது.

கிராம முழு வளர்ச்சித் திட்டம் :

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில், மேலநீலிதநல்லூர் ஒன்றியத்திலுள்ள நான்கு கிராமங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அக்கிராமங்களைச் சேர்ந்த 1,002 குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டி தீட்டப்பட்ட இத் திட்டம் நல்ல பலனை அளித்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம், மூன்றுண்டுகளுக்காக ரூ. 32 இலட்சத்திற்கான செயற்குறிப்புகள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டதில் 1976-77க்கு ரூ. 4.96 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

1977-78 ஆண்டுக்காக ரூ. 27 இலட்ச மதிப்புள்ள திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன. அதில் ரூ.9,39,500க்கு 1978 மார்ச் திங்களில் மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கிராம மேம்பாட்டுத் திட்டம் :

அரசின் ஆய்வில் உள்ள இத்திட்டம், சமுதாயத்தில் நலிந்த பகுதியினருக்கு அதிக வேலை வாய்ப்பு ஏற்படுத்தி, விளைபொருள்கள் உற்பத்தியை அதிகரித்து, கிராமப் புற மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்படும் ஒன்று. இத்திட்டம், இராமநாதபுரம், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, மதுரை, கன்னியாகுமரி, செங்கல்பட்டு ஆகிய எட்டு மாவட்டங்களில், ஒருங்கிணைந்த பத்துப் பத்துக் கிராமங்களில நிறைவேற்றப்படும். இந்தக் கிராமங்களில் கிடைக்கும் வெற்றி இனி வரும் திட்டங்களுக்கு அடிப்படையாக அமையும்.

வாழ்க்கைக் கல்வித் திட்டம் :

பொருளாதாரத்தில் பின் தங்கிய, பல வகுப்புகளைச் சார்ந்த இடையிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களுக்கு இக்கல்வித் திட்டம் ஓர் அரிய வாய்ப்பாகும். படிப்பை இடையிலேயே நிறுத்தி தன் குடும்பத்துக்காக உழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளான அவல நிலையில் உள்ள ஏழை மாணவ மாணவிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம். இந்த மாணவ மாணவிகள் அறியாமை அகற்றப்பட்டு, அவர்கள் பள்ளிப் படிப்புக்கு அனுப்பப்படவும் வசதி அளிக்கப்படுகிறது.

தற்பொழுது இத் திட்டம் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும், ஓர் ஒன்றியத்திற்கு இரண்டு நிலையங்கள் வீதம், கல்வித் துறையால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நிதி வசதி அதிகமாக உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் வாழ்க்கைக் கல்வி நிலையங்களைத் தொடங்கி, இத் துறை கல்வித் துறையின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும். பத்து மாவட்டங்களில் 780 வாழ்க்கைக் கல்வி நிலையங்கள் தொடங்கப்படவும் அரசு ஆணை இட்டுள்ளது. இக் கல்வி நிலையங்கள் செயல்படுவது குறித்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்குத் திருச்சி மற்றும் மதுரையில் தக்க பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்தியாவிலேயே, இம்மாநிலத்தில்தான் முதன் முறையாக இந்த மாபெரும் வாழ்க்கைக் கல்வித் திட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் பெரும் பங்கேற்கின்றன.

நகர்ப்புற குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள் :

இவ்வாண்டில் மட்டும் ரூ. 316 கோடி மதிப்புள்ள நகர்ப்புற குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள் 34க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 34 சிறிய, பெரிய நகரங்களுக்குப் பலன் அளிக்கும். கடந்த ஆண்டில் பதின்மூன்று குடிநீர் வழங்குத் திட்டங்களும் இரண்டு வடிகால் திட்டங்களும் மொத்தம் ரூ. 4 கோடி மதிப்புள்ள திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூ. 16.16 கோடி மதிப்புள்ள சிறுவாணி நீர்வழங்கு திட்டம், நிறைவு தரும் வகையில் முன்னேறி வருகிறது. ரூ. 16.14 கோடி மதிப்புள்ள 64 நீர்வழங்குத் திட்டங்களும், ரூ. 9.58 கோடி மதிப்புள்ள 8 வடிகால் திட்டங்களும் நிறைவு பெறும் தறுவாயில் உள்ளன. உலக வங்கியின் துணையுடன் ரூ. 9 கோடி மதிப்பில் சென்னைக்கான நீர்வழங்கு மற்றும் வடிகால் திட்டங்களுக்கான பணிகள் செயல்படுத்தப்பட எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

நகர—ஊர்ப்புறத் திட்டங்களின் வளர்ச்சி :

நகர ஊர்ப்புறங்களை மேம்படுத்துவதற்குரிய மகத்தான பொறுப்பினை நகர ஊர்ப்புறத் திட்ட இயக்ககம் மேற்கொண்டு, திறமுடன் பணியாற்றுகிறது. இவ்வியக்ககம் ஆற்றியுள்ள பணிகளில் முக்கியமானவை பின்வருமாறு :

(அ) மதுரை, கோயம்புத்தூரிலுள்ள முக்கியமான இடங்களுக்கு முழுமையான நகர் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

(ஆ) புயல் வெள்ளத்தால் விளையும் இயற்கைச் சீற்றங்களை எதிர்த்திடும் திட்டங்களை உருவாக்குதல்.

இவ்விரண்டு திட்டங்களும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளன. நகர மக்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகளில் ஏற்படக்கூடிய குறைகளை நீக்க, தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த, இந்நகரங்களில் வசிக்கும் நலிந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் முன்னதாகக் கூறியுள்ள திட்டம் பெரிதும் பயன் அளிக்கும். இயற்கையின் சீற்றத்தால் விளையும் கொடுமைகள், சேதங்களை, விஞ்ஞான முறையில் தீர்வு கண்டு, வாழ்க்கையினைச் சீராக அமைக்க இரண்டாவது திட்டம் பெரிதும் துணை செய்யும்.

முழுமையான நகர் வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த மதுரைக்கு ரூ. 7.76 கோடியும், கோயம்புத்தூருக்கு ரூ. 7.86 கோடியும் சுமாராகத் தேவைப்படுகின்றன. இவற்றில் 50 சதவீதத்தை, மைய அரசு கடனாகத் தரும்.

மிசா சட்டத்தின் கீழ் கைதானோரின் துயர் களையும் நடவடிக்கை

உள்நாட்டு அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டிருந்த காலத்தில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து வேலையிலிருந்து நீக்கம் அல்லது தற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்ட அரசு அலுவலர்கள் தொடர்பான கொள்கையினை 1977 அக்டோபர் மாதம் அரசு மறுபரிசீலனை செய்தது. குற்றவழக்கில் சம்பந்தப்பட்ட ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டனர். அவ்வாறு வேலையிலிருந்து நீக்கம் அல்லது தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்ட நாளில் இருந்து சம்பந்தப்பட்ட அலுவலர் மீண்டும் வேலையிலமர்த்தப்பட்ட நாள்வரையிலான இடைப்பட்ட காலத்தை ஊதிய உயர்வு மற்றும் ஓய்வூதியம் போன்றவற்றிற்கு அலுவலில் இருந்த காலமாகக் கணக்கிடப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் அவ்வாறு வேலை நீக்கம் அல்லது தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்ட நாள் முதல் சம்பந்தப்பட்ட அலுவலர் மீண்டும் வேலையிலமர்த்தப்பட்ட நாள் வரையிலான காலத்திற்கு முழுச் சம்பளமும் இதர படிகளும் கொடுக்கப்படலாம் என்றும் உத்தரவு போடப்பட்டுள்ளது.

1977-78ஆம் ஆண்டுக்கான திட்டத்தினைச் செயல்படுத்த, 50 சதவீத மைய அரசுக் கடனையும் சேர்த்து, ரூ. 3.56 கோடிக்குரிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையைக் கொண்டு சிங்காநல்லூர், குறிச்சி பகுதிகளிலுள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, குடி நீர் வசதிகளைச் செயது தருவதுடன், மதுரையிலுள்ள இஸ்மாயில்புரம் வட்டத்திலுள்ள ஏழை நெசவாளர்களின் வசதிக்காக, கழிவு நீர்த் திட்டங்களை விரிவாக்குதலும் அடங்கும். தவிர, கழிவு நீரை அகற்றும் பணிகள், கழிவு நீர்ப்பண்ணை, வடக்கு மதுரைக்குக் குடிநீர் வழங்குதல், லாரிகளை நிறுத்துவதற்கான இடங்கள், மொத்த வியாபார இடங்கள், மதுரைப் பேருந்து நிலையத்திற்கருகே சுரங்கப்பாதை அமைத்தல் போன்ற வேலைகளும் இந்நிதியினைக் கொண்டு செயல்படுத்தப்படும்.

இவ்விதமான பணிகளில் உதவி செய்வதற்கென, உலக வங்கியும் உதவி செய்யும். இவ்வங்கியின் உதவித் தொகை ரூ. 95 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (இதில் 39 கோடி மதுரைக்கும், ரூ. 56 கோடி கோயம்புத்தூருக்கும் ஒதுக்கப்படும்) மேற்கண்ட நிதியுதவியுடன, திருச்சி, சேலம் போன்ற நகரங்களின் மேம்பாட்டிற்கும் உதவி செய்வது பற்றி யோசனை செய்து வருவதாகவும் உலக வங்கி கூறியுள்ளது.

நகர்ப்புற ஏழைகள் நலன் :

நகர்ப்புற ஏழைகளுக்கு உதவும் வகையில் தற்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ. 48 கோடி மதிப்புள்ள திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அதன் இன்றியமையாக் கூறுகள் பின் வருமாறு:

இடமும் இடவசதிகளும் :

அரும்பாக்கத்தில் நிறைவேற்றப்பட்டு வரும், மற்றும் வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய பகுதிகளில் நிறைவேற்றப்படவிருக்கும் இத்திட்டம் நகர்ப்புற ஏழைகளுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்குகிறது. மொத்தத்தில் மூன்றாண்டுக் கால அளவிற்குள், பொருளாதாரத்தில் நலிந்த 10,000 குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொள்ள இடங்கள் வழங்கப்படும். அதற்குரிய தொகை மாதம் ரூ. 22 வீதம் எளிய தவணையில் செலுத்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னை நகரின் வெகு அருகாமையில் அமைந்துள்ள இப்பகுதிகளில் மருத்துவம், கல்வி வசதி, வேலை வாய்ப்பு போன்ற பல வசதிகள் எளிதில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

சாலை மேம்பாடு :

பெருகி வரும் போக்குவரத்துச் சிக்கல்களைத் தீர்ப்பதே இதன் குறிக்கோள். சென்னை நகரத்தினுள் 200 கி.மீ. நடைபாதையும் 50 கி.மீ. துவிச்சக்கர வண்டிப்பாதையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துடன், அண்ணாசாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலைகளில் குறுக்கே கடக்க, சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பெரும்பான்மையோர் பயன்படுத்தும் போக்குவரத்தான பேருந்துகளைப் பொறுத்தவரை சென்னை பல்லவன் போக்குவரத்துக் கழகம், 285 பேருந்துகளை அளிக்கும்.

மேலும், கட்டட அமைப்புத் திட்டங்களை ஒப்புதலளிக்கும் முறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. கட்டடம் கட்டும் பணி விரைவில் பொதுமக்கள் மேற்கொள்ளும் வகையில் புதிய முறைகள் சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இம்முறை, பொதுமக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

கிராம மக்களின் வாழ்வு மேம்பாடடைய, அடித்தளத்து மக்களின் அவல நிலையைப் போக்கிட, அடிப்படை வசதிகளை அவர்கள் பெற்றிட, தமிழக அரசு பணியாற்றி வருகிறது.

அரிசன மக்களுக்கு அரிய உதவிகள்

புகுமுக வகுப்பிற்கு மேல் படிக்கும் அரிசன ஆதிவாசிகள் மாணவ-மாணவியர்களுக்கும் அவர்களது பெற்றோர் பாதுகாவலரின் வருமானம் ரூ. 2,500-க்கு மேற்படாமல் இருந்தால் மட்டுமே 1976-77ம் ஆண்டு முடிவு வரை கல்லூரிப் படிப்புக் கட்டணம் சலுகை அளிக்கப்பட்டு வந்தது. இந்த வருமான வரம்பை நீக்கி எல்லா அரிசன ஆதிவாசிகள் மாணவ-மாணவியர்களுக்கும் அவர்கள் பெற்றோர் பாதுகாவலரின் வருமானத்தைப் பாராமல் கல்லூரிப் படிப்புக் கட்டணச் சலுகை 1977-78ம் ஆண்டிலிருந்து அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் இம்மாணவர்கள் எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி பெறுகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டம் 1949 முதல் அமுலில் உள்ளது. 1949 முதல் 1977 வரை 28 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் ஐந்து கோடியே பதினாறு லட்சம் ரூபாய் செலவில் 16,824 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 2,62,693 மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

1977-78-ல் இதற்கென ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டு 1283 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 20,799 மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோல் 1978-79-க்கும் ஒரு கோடி ரூபாய் இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏழை அரிசனங்களில் எவரேனும் இறந்து விட்டால் அவரது ஈமக்கடன்களைச் செய்ய ரூ. 50 நிதி உதவி உடனே அளிக்கப்படும்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு வழங்கும் மானியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 60-லிருந்து ரூ. 82-50ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

1977-78ஆம் ஆண்டு வரை அரிசன நலத் துறையின் மூலம் குழந்தைகள் காப்பகம் நடத்தப்படவில்லை.

1977-78ஆம் ஆண்டில் ஐம்பது குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1978-79ல் ஐம்பது குழந்தைகள் காப்பகங்கள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தூய்மையான நிர்வாகம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்ற அன்றே சென்னை அண்ணாசாலையிலுள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகே ஆற்றிய பேருரையில் தெளிவாக முழக்கமிட்டார், "இலஞ்ச லாவண்யம் இல்லாத-ஊழலற்ற-நீதித்துறையில் நிர்வாகம் தலையிடாத-அரசை நடத்துகிற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபடுவோம்" என்று.

அந்த உறுதிமொழியை நடைமுறையில் செயல்படுத்த அரசு முழு மூச்சுடன் உடனடியாகச் செயலில் இறங்கியது. அரசு இயந்திரமானது வேகமாகச் செயல்பட அரசுப் பணிகளில் வீண் காலதாமதங்களைக் களைய, மக்கள் குறைகளை நிவர்த்திக்கும் வகையில் அரசு இயந்திரமானது முடுக்கி விடப்பட்டது. அப் புதிய அணுகுமுறையின் ஒரு சிறப்புக் கூறுபாடாக, தமிழகத்தின் தலைநகரிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள அரசு அலுவலகங்களில் உள்ள ஆய்வுப் பிரிவுகள் (Inspection cells) செயல்படுவதைப் பரிசீலித்து, அவற்றை மேலும் பயனுடையவையாக ஆக்கபூர்வமானவையாக-திறமை கொண்டவைகளாக மாற்றியமைக்க அரசு மேற்கொண்ட ஏற்பாட்டினைக் குறிப்பிடலாம்.

மாநிலத் தலைநகரில் உள்ள ஆய்வுப் பிரிவின் பணிமுறை முற்றிலும் திருத்தி அமைக்கப்பட்டது. அரசுப் பணிகளை ஆய்வு செய்ய மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் உண்மையிலேயே பொருள் பொதிந்தனவாக ஆக்கரீதியானவையாகச் செயல்படுத்தப் படுகின்றன. அரசு இயந்திரம் மாசின்றிச் செயல்பட வழிவகைகள் காணப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் கீழ்க்கண்ட, இரண்டு புதிய அணுகு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அரசு அலுவலக நடைமுறையில் பயிற்சி அளித்தல், மாவட்டத் தலைமை இடங்களில்-மாவட்டத் தலைமைத் துறை அலுவலகங்களில் அலுவலக நடைமுறை பற்றி மூன்று நாள் பயிற்சி அளிப்பது; திடீர் ஆய்வுகள், சோதனைகள் செய்தல்—ஊக்குவிப்பு நடைமுறைகளையும் மேற்கொள்ளுதல். இந்தப் பயிற்சி முறையின் நோக்கங்களாவன:—

* அரசு அலுவலகப் பணி நடைமுறையின் தரத்தை உயர்த்துதல், நிர்வாகத் திறமையை மேம்பாடடையச் செய்தல்.

* அரசு அலுவலகங்களில் குறிப்பாகத் தென்படும் குறைபாடுகளைக் களைதல்.

* பொது மக்களின் குறைகள் குறைபாடுகள், புகார்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தை அரசு அலுவலர்கள் உணரும்படிச் செய்தல்.

இதுவரை 200 அரசு ஊழியர்சளுக்கும் 75 மாவட்ட/வட்டார அளவில் உள்ள அலுவலர்களுக்கும் இம்முறையில் பயிற்சி அளிக்கப்படடுள்ளது.

தூய்மையான, திறமையான நிர்வாகம் என்ற உன்னதமான இலட்சியத்தின் அடிப்படையில் மாவட்டங்களில் செயல்படும் மாவட்ட ஆய்வுப் பிரிவுகள் குறித்து, மறுபரிசிலனை செய்யப்பட்டது.

1-9-77 முதல் அரசு நிர்வாகத்தில் மாவட்ட ஆய்வுப் பிரிவுகளிடம் பல்வேறு அரசுத் துறைகளிலும், அரசு சார்புள்ள நிறுவனங்களிலும் 'திடீர்ச் சோதனைகள்' செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மக்கள் குறைகாணும் இடங்களிலே சிறப்பாக இப்படிப்பட்ட திடீர்ச் சோதனைகள் நடக்தப்பட வேண்டும் என்பதே இதன் இலட்சியமாகும்.

இந்தச் சோதனைகளின் கண்டு பிடிப்புகளி மீது முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. துறைத் தலைவர்களுடன் கலந்து தலைமைச் செயலகத்தில் இதற்கான 'தொடர் நடவடிக்கைகள்' மேற்கொள்ளப்படுகின்றன.

கால காலமாக நடைமுறையிலே இருந்து வரும்-காலத்திற்கொவ்வாத நடைமுறைகள் பரிசீலிக்கப்பட்டு, அந்த முறைகள் மாற்றியமைக்கப்பட்டு அரசுப் பணிகள் நடைபெறுவதில் ஏற்படும் வீண் காலதாமதம் தவிர்க்கப்படுகின்றது.

ஒன்பது திங்களுக்குள்ளாகவே, இந்தத் திடீர்ச் சோதனைகளின் வளைவாக, வரவேற்கத்தக்க நல்லதொரு மாற்றம் நிர்வாகத் துறையில் ஏற்பட்டுள்ளது. இந்தச் சோதனைகளின் விளைவாக பல ஒழுங்கீனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அரசுப்பணியில் ஏற்படும் தாமதம், ஒழுங்கீனங்கள், குறையீடுகளை ஒழிக்க அரசின் மேல்மட்ட அளவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிர்வாகம் தூய்மையாக நடைபெற-குறைகளைக் களைந்தெறிய தமிழக அரசு கடைப்பிடித்து வரும் நடைமுறை ஆய்வுகள்-திடீர்ச் சோதனைகள் நடத்துகின்ற நடைமுறை-மற்ற மாநிலங்களால் பெரிதும் பாராட்டப் பெற்றுள்ளன! பீகார், குஜராத், கர்நாடகம், ஒரிசா போன்ற மாநிலங்கள் தமிழ்நாட்டில் தமிழக அரசு அமலுக்குக் கொண்டுவந்துள்ள இத்திட்டம் செயல்படுகிற முறை குறித்து விவரம் கேட்டுள்ளார்கள்!

தூய்மையான, ஊழலற்ற நிர்வாகமே மக்களின் வளமான வாழ்வுக்கு அடித்தளம். ஊழலைக் களைந்து, ஒழுங்கீனங்களை ஒதுக்கித் தூய்மையான ஆட்சியை நடத்த உறுதி கொண்டுள்ளது தமிழக அரசு! அந்த எண்ணத்தின் செயல் வடிவமாகத் திகழ்பவையே மேற்சொன்ன நடைமுறை ஏற்பாடுகளாகும்!

மின் துறையில் ஓராண்டுச் சாதனை



முடிவடையும் தருவாயில் உள்ள சுருளியாறு நீர் மின் திட்டம்

மின்வெட்டு நீக்கப்பட்டது:

1972-லிருந்து நம் மாநிலத்தில் விட்டு விட்டு மின்வெட்டு இருந்து வந்துள்ளது. சென்ற ஆண்டு சூன் மாதம் 30 சதவிகித மின் வெட்டு அமலிலிருந்தது. சூலை மாதம், 1977 முதல் நாள் இந்த மின்வெட்டு நீக்கப்பட்டது. அதன்பின் இவ்வாண்டு முழுவதும் மின்வெட்டு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மின்சாரம் உபயோகப்படுத்துவதில் புதிய சாதனை:

கடந்த 12 மாதங்களில் தமிழ்நாட்டில் 938 கோடி யூனிட் மின்சாரம் உபயோகப்படுத்தப்பட்டது. இது அதற்கு முந்தைய 12 மாதங்களை விட 20 சதவிகிதம் அதிகமாகும். கடந்த ஆண்டு மின்சார உச்சத் தேவை 1641 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டில் பதிவாகிய உச்சத் தேவை 1313 மெகாவாட்டை விட 25 சதவிகிதம் அதிகமாகும்.

குந்தா நீர்-மின் நிலையத்தில் மேலும் ஒரு யூனிட்:

குந்தா மின்திட்டம் 4-ஆம் நிலையின் கீழ் குந்தா 3-வது நீர்-மின்நிலையத்தில் 60 மெகாவாட் யூனிட் ஒன்று இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளது. குந்தா 4-வது நீர்மின் நிலையத்தில் மேலும் ஒரு 50 மெகாவாட் யூனிட் விரைவில் உற்பத்தித் தொடங்கும்.

புது மின் திட்டங்கள்:

சுருளியாறு நீர்-மின் திட்டத்தின் கீழ் 35 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட ஒரு யூனிட் நிறுவும் கட்டுமானவேலைகள் விரைவுபடுத்தப்பட்டு வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன. வரும் ஆகஸ்ட் மாதம் முறைப்படி இந்திட்டம் செயல்படத் துவங்கும். இந்திட்டத்தை உரிய காலத்தில் கட்டி முடித்ததற்காக இந்திட்டத்தில் செயலாற்றும் ஊழியர்களுக்கு ஊக்க ஊதியமாக ஒரு மாத சம்பளம் கொடுக்கப்படும்.

தூத்துக்குடி அனல் மின் நிலையம் நிறுவும் பணிகளும் விரைவு படுத்தப்பட்டுள்ளன. இந்திட்டத்தின் முதல் 210 மெகாவாட் யூனிட் டிசம்பர் 1978-ல் செயல்படத் துவங்க ஆவன செய்யப்பட்டு வருகின்றன இந்தத் திட்டத்தில் வேலை செய்பவர்களுக்கும் ஒருமாத சம்பளம் ஊக்க ஊதியமாகக் கொடுக்கப்படும். இவ்வாறு குறித்த காலத்தில் வேலைகளை முடிப்பவர்களுக்கு ஊக்க ஊதியம் கொடுப்பது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இதுவே முதல் முறையாகும்.

காடம்பாறை நீர்-மின்விசையேற்றத் திட்டம், சேர்வலாறு நீர்-மின்திட்டம், பாண்டியாறு-புன்னம் புழா நீர்-மின்திட்டம், நெல்லித் துறை நீர் மின்திட்டம் ஆகியதிட்டங்களை நிறைவேற்றுவதற்குத் திட்டக்குழு ஒப்புதல் உள்ளது. இந்திட்டங்களின் ஆயத்தப் பணிகள் நடந்து வருகின்றன.

மேட்டூர் அணைத்திட்டம்:

மேட்டூரிலும், அதைச் சார்ந்த பகுதிகளிலும், மின்சக்தியை அதிக அளவில் உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள் பல உள்ளன. சேலத்தில் ஒரு இரும்பு உருக்காலை அமைக்கும் பணியும் நடந்து வருகிறது. இதற்கும் அதிக அளவில் மின்சாரம தேவைபடும். சேலம், தர்மபுரி மாவட்டங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேலான பம்பு செட்டுகள் இயங்கி வருகின்றன. இவ்வாறு மேட்டூரைச் சுற்றி வளர்ந்து வரும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, மேட்டூரில் ஒரு அனல் மின்நிலையம் அமைப்பது அவசியமாகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் இதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்து, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. இந்திட்டத்தின்கீழ், இந்த மின்நிலையத்தில், இரண்டு 210 மெகாவாட் உற்பத்தி இயந்திரங்கள் நிறுவப்படும். இதற்குச் சுமார் 140 கோடி ரூபாய் செலவாகும். இந்தத் திட்டம் தமிழ்நாட்டின் வளரும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதில் முக்கிய இடம் வகிக்கும்.

இத்திட்டம், நிறைவேற்றப் பட்டபின், தமிழ்நாட்டில், மின்சாரப் பற்றுக்குறை நீங்கும். மின்வெட்டு விதிக்க வேண்டிய அவசியம் நேராது.

கீழ் மேட்டூர் அணைத்திட்டம்:

மேட்டூர் அணைக்கும், பவானி நகரத்திற்கும் இடையே, காவிரியாற்றின் குறுக்கே நான்கு சிறு அணைகள் கட்டி, மொத்தம் 120 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டமொன்றை, தமிழ்நாடு மின்சார வாரியம் தயாரித்து, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. இந்தத் திட்டத்திலிருந்து 537 மில்லியன் யூனிட்டுகள் ஆண்டொன்றுக்குக் கிடைக்கும். இந்தத் திட்டத்திற்கும் விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது.

தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்கு மின் இணைப்பு:

சென்ற ஆண்டு 205 தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கு மின்வசதி வழங்கப்பட்டது. இன்னும் 691 குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட வேண்டும். இந்தப் பணி நடந்து வருகிறது. இவ்வாண்டு இறுதிக்குள் இந்த 691 குடியிருப்புகளும் மின்வசதியைப் பெற்றுவிடும். இத்துடன் தமிழகத்திலுள்ள எல்லா தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளும் மின்வசதி பெற்றுவிடும்.

கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின் இணைப்பு:

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 64,198 கிராமங்கள், குக்கிராமங்களில் 31-5-78 வரை 63,345 கிராமங்கள், குக்கிராமங்கள் மின்வசதி பெற்றுள்ளன. கடந்த 12 மாதங்களில் 60 கிராமங்கள் குக்கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டது. மீதமுள்ள 853 கிராமங்கள், குக்கிராமங்களுக்கு இவ்வாண்டு இறுதிக்குள் தெருவிளக்கு வசதி செய்து கொடுக்க ஆவன செய்யப்படும்.

விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு:

தமிழ்நாட்டிலுள்ள மொத்தக் கிணறுகள் 12 இலட்சம். 31-5-78 வரை 8,09,838 விசையேற்றங்களுக்கு மின்விசை கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த 12 மாதங்களில் 22,373 விசையேற்றங்களுக்கு மின்விசை கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு 48,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

விவசாயிகளுக்குச் சலுகை:

விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் மின்கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 16 காசிலிருந்து 14 காசாக 1-7-77 முதல் சிறு விவசாயிகளுக்குக் குறைக்கப்பட்டது.

1-6-78 முதல் சிறு விவசாயிகளுக்கு மின்கட்டணம், யூனிட் ஒன்று 14 காசிலிருந்து 12 காசாகவும், பெரும் விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 16 காசிலிருந்து 14 காசாகவும் குறைக்கப்பட்டது

புஞ்சை 5 ஏக்கர் அல்லது நஞ்சை 2.5 ஏக்கர்-இதற்கு அதிகமாக வைத்திராதவர்கள் சிறு விவசாயிகள் என கணக்கிடப்படுவர்.

மேலும் மீட்டர் வாடகைக் கட்டணத்தை மாதமொன்றுக்கு ஒரு மீட்டருக்கு 5 ரூபாயாக இருந்தது 4 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு:

90,000 மூன்றும் நிலை, நான்காம் நிலை மின் தொழிலாளர்களுக்கு 1977 பிப்ரவரி மாதம் அளித்த ஊதிய உயர்வைத் தொடர்ந்து 5,000 அலுவலர்களுக்கு சூன் மாதம் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. மேலும் எல்லா ஊழியர்களுக்கும் சிறப்பு ஊதியமும் படித்தொகையும் மாற்றியமைக்கப்பட்டன. இதன் விளைவாக வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு அதிகப்படியாக 5 கோடி ரூபாய் செலவாகும். 1977-78 ஆம் ஆண்டில் மட்டும் ஊதிய மாற்றத்தின் விளைவாக அதிகப்படியாக 12 கோடி ரூபாய் வாரியம் அளித்துள்ளது.

அனல் மின்திட்டப் படித்தொகை:

அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் புதிதாக அனல் மின் திட்டப்படித்தொகை வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி சம்பளத்தின் அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 40 முதல் ரூ. 100 வரை அனல் மின்திட்டப் படித்தொகையாக அளிக்க வாரியம் முன்வந்துள்ளது.



உருவாகி வரும் தூத்துக்குடி அனல் மின் திட்டம்

பெரியாறு வைகை

நவீனப்படுத்தும் திட்டம்

ஏற்கெனவே உள்ள நீர்ப்பாசன முறையால் விரயமாகும் நீரை விரயமாகாமல் தடுப்பது, துணை ஆயக்கட்டுகளுக்கு இதன் மூலம் நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்துவது என்பவை பெரியாறு நீர்ப்பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவதன் அடிப்படை நோக்கமாகும்.

* வைகை அணையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் கீழே தண்ணீரைத் திருப்பிவிடக் குறுக்கே ஓர் அணைக்கட்டு கட்டுதல்.

* குறுக்கே கட்டும் அணைக்கட்டிலிருந்து 32 கி.மீ. தூரமுள்ள பேரணை மதகுக்கு இணைப்புக் கால்வாய் ஒன்றை உருவாக்குதல்; இந்த இணைப்புக் கால்வாய் காண்கிரீட்டால் செய்யப்படும். இணைப்புக கால்வாயிலிருந்து 8 துணைக் கால்வாயகள் பிரியும். 4,000 ஏக்கர் நிலம் இதனுல் புதிதாகப் பாசன வசதி பெறும்.

* குறுக்கே கட்டும் அணைக்கட்டிலிருந்து பிரதான பாசனக் கால்வாய், துணைக்கால்வாய்கள், மற்றும் சிறு கிளைக் கால்வாய்கள் (25 ஏக்கருக்குப் பாசன வசதி தரும் கால்வாய்கள்) அனைத்தும் காண்கிரீட்டினுல், அமைக்கப்படும்.

* 2326 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும் வகையில் திருமங்கலம் பிரதான கால்வாயை மேம்படுத்துதல்.

* பெரியாறு பிரதான நீர்ப்பாசனக் கால்வாயைப் புளிப்பட்டி மதகுக்குக் கீழே 22 கி.மீ தூரத்திற்கு விரிவுபடுத்துதல். இதனுல் 23,000 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்.

* பெரியாறு—வைகை நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் வரும் தற்போதுள்ள குளங்கள், கால்வாய்கள் ஆகியவைகளை மேம்படுத்துதல், குளங்களுக்குப் பாசனக் கால்வாய்களிலிருந்து தண்ணீர் பெற நேரடி நீர்வரத்துக் கால்வாய்கள் அமைத்தல்.

* திட்டப் பகுதிகளில் கிராம சாலை வசதிகளை மேம்படுத்துதல்.

பெரியாறு முக்கியக் கால்வாய்:

காண்கிரீட் பூசத் திட்டமிடப்பட்டுள்ள பெரியாறு முக்கியக் கால்வாயின் 58 கி.மீ.-ல், இந்த ஓராண்டில் மட்டும் 25 கி.மீ காண்கிரீட் பூசி முடிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ள மீதிப் பகுதி காண்கிரீட் பூசும் வேலை முழு வேகத்தில் நடைபெற்று வருகிறது. கால்வாயின் அடித்தளம் காண்கிரீட்டினுல் உருவாக்கப்படும். அதனுடைய கரைகள் சிமெண்ட், காண்கிரீட் (Slabs)களாலும் அமைக்கப்பட்டு கால்வாய் ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவரப்படுகிறது.

இத்திட்டம் 1981-82ல் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.

இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி அளிககிறது. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ. 41.04 கோடி.

விரயமாகும் தண்ணீரை மீதப்படுத்துதல் என்ற உயரிய நோக்கின்கீழ் செய்யப்படும் இத்திட்டத்தினுல் 16 கோடி கியூபிக் மீட்டர் தண்ணீர் சேமிக்கப்படும். இதனுல் ஒட்டுமொத்தமாக 29,500 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்.

இத்திட்டம் செயல்படுத்தப்படும் போது 16,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.



மீனவர்களுக்கு மேலும் சலுகைகள்

மனித வாழ்விற்கு இயற்கை வழங்கிடும் செல்வங்கள் நிலத்தில் மட்டுமல்ல - நீருக்கடியிலும் உண்டு!

ஆழ்கடலின் செல்வங்களை எடுத்துவர ஆர்ப்பரிக்கும் கடலலை மேல், வாழ்வோடு போராடி வாழ்ந்திடும் மீனவத் தொழிலாளிகளுக்குத் தமிழக அரசு பல்வேறு சலுகைகளை வாரி வழங்கியுள்ளது:

மீனவர் குடும்பநல — துயர் துடைப்பு நலநிதி:

மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது இறந்துவிட்டால், அவருடைய குடும்பத்திற்கு இதுகாறும் அரசு ஆயிரம் ரூபாய் உதவி வழங்கி வந்தது.

இந்தத் தொகையை ரூபாய் ஐயாயிரமாக உயர்த்தியுள்ளது இன்றைய தமிழக அரசு. இவ்வுயர்வு 25-7-'77 முதல் அமலுக்கு வந்துள்ளது. இந்த ரூபாய் ஐயாயிரத்தில், இரண்டாயிரம் ரூபாய் மொத்தமாகவும் எஞ்சியுள்ள மூவாயிரம் ரூபாயும் மாதம் நூறு ரூபாய் வீதம் 30 மாதத் தவணைகளில் வழங்கப்படும். இறந்துபோன மீனவத் தொழிலாளியின் குடும்ப மறுவாழ்வுக்காகவும், குழந்தைகளின் உயர் கல்விக்காகவும் விதவையாகிவிட்ட அன்னாருடைய மனைவிக்கு 5,000 ரூபா நிதி உதவி வழங்கப்படும்.

இதற்காக வேண்டி, ஒவ்வோர் ஆண்டும் மாநில நிதியிலிருந்து ரூபாய் மூன்று இலட்சத்தையும்-மேலும் இரண்டு இலட்சத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் ஒதுக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிதி 'தமிழ்நாடு மீனவர்கள், நலன் துயர் துடைப்பு நிதி' என அழைக்கப்படும்.

இந்நிதியின் மற்ற நோக்கங்களாவன:—

*மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும்பொழுது இறந்து போகின்ற மீனவத் தொழிலாளியை முழுக்க முழுக்க நம்பியுள்ள அவருடைய குடும்பத்தினைச் சேர்ந்தவர்களுக்கு நிதி உதவி அளித்தல்:

அப்படிப்பட்ட நேர்வுகளில், அந்த மீனவத் தொழிலாளியின் குழந்தைகளுக்கு மீன்பிடி தொழிற்பயிற்சி அல்லது மீன் பிடி தொழிலில் நுட்பக்கல்வி அல்லது அது சம்பந்தப்பட்ட தொழிற்கல்வி பயில நிதி உதவி அளித்தல்; படிப்பு உதவித் தொகை அளித்தல் (அந்த மாணவன் முன்னே அனுபவித்து வரும் சலுகைகளுக்கு மேல் தேவையான உதவியே இந்த நிதியிலிருந்து தரப்படும்.)

*வெள்ளம், புயல், தீ விபத்துக்கள் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் விளைவுகள்—அப்படிப்பட்ட நேரங்களில் மீனவர்களுக்கு உணவு, துணி மற்றும் இன்றியமையாப் பொருள்களை வழங்குதல்.

*ஒவ்வோர் ஆண்டும் மீனவர் நலனுக்காக மீனவர் வாரம் என்று ஒரு வாரத்தினைக் கொண்டாடுதல்.

*மீனவக் குடியிருப்புகளில் முறைசாராக் கல்வியைச் சொல்லிக் கொடுக்க மாலைநேர வகுப்புகள் நடத்துதல்.

,அரசினுல் அவ்வப்போது நல் வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்ற உதவிபுரிதல்.

மீனவர்களுக்குக் கடன் நிவாரணம்:

மாதம் ரூபாய் 200-ம், அதற்குக் குறைவாகவும் வருமானம் உள்ள மீனவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கச் சட்டமொன்று இயற்றுவது அரசின் பரிசீலனையில உள்ளது. இதற்கு முன்னுல் இப்படி ஒரு நிவாரணம் அளிக்கப்பட்டதில்லை.

'உண்மையாக மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டுமே இயந்திர மீன் பிடி படகுகள் வழங்கப்பட வேண்டும்; யாருக்கு வேண்டுமானுலும் கொடுப்பது என்பது கூடாது' என்று அரசு ஆணையிட்டுள்ளது.

மீன் பிடி தொழிலாளர் கடலிலிருந்து எடுக்கும் சங்குகளுக்குரிய விலையை திருநெல்வேலி மாவட்டத்தில் 1977-78-ஆம் ஆண்டின் சங்கு எடுக்கும் பருவத்திலிருந்து இந்த அரசு உயர்த்தியுள்ளது.

ஆழ்கடலில் மூழ்கி முத்து எடுப்போர்:

ஆழ்கடலில் மூழ்கி முத்து எடுப்போர், தண்டுகைப்பவர் (OARSMEN) ஆகியோரின் நாள் ஊதியத்தை, அவர் செய்யும் பணியின் கடுமையை உத்தேசித்து, இந்த அரசு, மே 1978-ல் உயர்த்தியுள்ளது. எனவே ரூ. 10, ரூ. 8, ரூ. 5 என இருந்த ஊதிய அமைப்பு முறையே ரூ.20 ரூ. 15, ரூ. 10 என உயர்த்தப்பட்டுள்ளது.

சங்குத் தொழில்:

தமிழகத்தின் கடற்கரை முழுதும் சங்கு எடுக்கும் தொழிலை 1-4-78 முதல் அரசுடைமையாகக் கருதி, துறைவாரியாக இயக்கப்படவேண்டும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொழில் இடைத் தரகர்களின் தலையீடு இல்லாமல் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இம்முடிவு எடுக்கப்படுகிறது. இது குறித்து ஏதாவது மறுப்புகள இருந்தாலும், யோசனைகள் இருந்தாலும், அவற்றைப் பொதுமக்கள் தெரிவிக்க வேண்டுமென ஏப்ரல்'78ல் அரசு ஓர் அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.



1200 சதுர கி. மீ. பரப்பும் 40 இலட்சம் தொகையும் கொண்டு வளர்ந்து வரும் சென்னை மாநகரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் திட்டமிடும் அமைப்பாகச் "சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்" உருவாக்கப்பட்டது. தன்னளவில் முக்கிய அமைப்பான இது, ஜூன் 1977-லிருந்து வியத்தகு சாதனைகள் செய்துள்ளது. வாழ்வின் அடிமட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு முதன்மை தந்து, அவைகளைக் குறைந்த செலவில் தீர்வு கண்டிருப்பது, குறிப்பிடத்தகுந்த அம்சமாகும்.

* பல்நோக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்குவது; 'செயற்படுத்துத் துறைகள்' மூலம் இதனைச் செயல்படுத்துவது; உலக வங்கியும், மத்திய அரசும் அளிக்கும் நிதி உதவியுடன் இவை செயல்படுகின்றன.

* மணலியில், ஒரு புறநகர் உருவாக்குவது.

* மறைமலை நகர் என்ற ஒரு புதிய நகரை நிர்மாணிப்பது,

* நகர அளவிலான வசதிகளை உண்டாக்கித் தருவதற்கான திட்டங்கள் தீட்டுதல்; ஒரு மொத்த விற்பனை நிலையம், பல்வேறு அலுவல்க, வணிக மையங்கள் அமைத்தல் ஆகியவையும் இதில் அடங்கும்.

சென்னை நகர வளர்ச்சித் திட்டம்:

இத்திட்டம் எட்டுத் துறைகள், பத்து செயல்படுத்தும் அமைப்புக்கள் கொண்டது. இவை முழுமையும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுவின், கண்காணிப்பில், ஒத்துழைப்பில் செயற்படும்.

அரும்பாக்கம் மனைகள், தளங்கள் திட்டம்:

200-க்கும் அதிகமானவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கான திட்டம் இது. 1977-ல் இது தொடங்கப் பெற்றது. குறிப்பிடத்தகுந்த முன்னேற்ற முத்திரைகள் பதித்துள்ள இதன் பணியால், இவ்வாண்டு அக்டோபர் 2-ஆம் நாளுக்குள், ரூ. 350-க்குக் குறைவான மாதாந்திர வருமானமுள்ளோர் பலர் புதுமனையில் குடிபுகுவார்கள். சாலை வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்சார வசதி, மின்சார வசதிகளுடன் ஆன மனைகள், வீடுகளுக்கு இவர்கள் புதுச் சொந்தக்காரர்களாகிறார்கள் குளியல், கழிவறை வசதிகளுடன் 40 சதுர மீட்டர் இடத்தில் மாதாமாதம் இவர்கள் செலுத்த வேண்டியது ரூ. 22 மட்டுமே. 1980-க்குள் 13,000 மக்கள் பயன்பெறுவர். 1978-79ல் இதற்கான ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 275 இலட்சம். நடப்பு ஆண்டில், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களிலும் இப்பணி தொடங்கப்படும்.

குடிசை மேம்பாட்டுத் திட்டம்:

4,000 மக்களை, குடிசைகளிலிருந்து அகற்றி, புதுவீடுகளில் குடியேற்றும் திட்டம், நிறைவேறும் தறுவாயில் உள்ளது. கல்வி, சுகாதாரம் ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டவை இக்குடியிருப்புகள். இரண்டாண்டுகளில், இன்னும் 26 ஆயிரம் பேருக்குப் புதிய குடியிருப்புகள் தயாராகிவிடும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம், புதிய குடியிருப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. 1978-79ல், இச்சீரிய பணிக்கான ஒதுக்கீடு ஒரு கோடி ரூபாயாகும்.

சாலை, போக்குவரத்து வசதிகள் :

12 கி.மீ. தூரமுள்ள 'உள் வட்டச் சாலைகள் திட்டம்' ஒன்று செயலுக்குக் கொண்டு வரப்படுகிறது. அம்பத்தூர்-கிண்டி சாலை அமைப்பதும் இதில் அடங்கும். தற்போது போக்குவரத்து நெருக்கடியும் மக்கள் நெருக்கமும் உள்ள வீதிகள் வழியே கிண்டி செல்வதுபோல், விரிவான பயணப்பாதை இதனால் உருவாகும். மக்களுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெருக்கும் வகையில் நகரில் 285 புதிய பேருந்துகள் விடும் திட்டம் செயல்படவிருக்கிறது. 92 புதிய பேருந்துகள் இப்போது சாலையில் ஓடத் தொடங்கிவிட்டன. மீதி 193 புதிய பேருந்துகள் இவ்வாண்டுக் கடைசிக்குள் ஓடத் தொடங்கும். சாலை வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 276 இலட்சம்; போக்குவரத்து வசதிக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 264 இலட்சம்.

மணலி நகர மேம்பாட்டுத் திட்டம் :

திருவொற்றியூர், எண்ணூர் பகுதிகளில் வாழும் தொழிலாளர்களுக்காக வீடுகட்டித்தரும் திட்டத்தில், 543 வீடுகள் கட்டி முடியும் நிலையில் உள்ளன. மணலி, மாதவரம், திருவொற்றியூர், வடசென்னை முதலிய தொழிற்சாலைப் பகுதிகளில் வாழும் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்குப் படிப்படியாகக் குடியிருப்பு வசதிகளை உண்டாக்கித்தருவது என்ற திட்டத்தில் இது அடங்கும்.

மறைமலை நகர் :

சென்னையிலிருந்து 45 கி. மீ. தொலைவில், தாம்பரம், செங்கல்பட்டுக்கு இடையில் ஒரு இலட்சம் மக்கள் வாழ்வதற்காக உருவாகும் புதிய நகர் இது; 42 தொழிற்சாலைகள், 170 சிறு தொழிற்சாலைகள் அமைப்பதற்கான இடம் தற்போது தயார் நிலையில் உள்ளது. 177 குடியிருப்புகள் அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்படவிருக்கிறது. மணலி, மறைமலைநகர் உருவாக்கத் திட்டங்களுக்காக 1978-79ல் நிதி ஒதுக்கீடு ரூ. 65 இலட்சம்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டங்களுக்கு, 1978-79—க்கான நிதி ஒதுக்கீடு, ஜூன் 78 வரை செலவிடப்பட்ட தொகை ஆகியவை பின்வரும் பட்டியல் மூலம் கொடுக்கப்படுகிறது :

திட்டம்	திட்ட மதிப்பீடு	31-3-78 வரை செலவிடப்பட்ட தொகை	1978-79-க்கான முதலீடு
	(ரூபாய் இலட்சத்தில்)		
நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்:			
1. மனைகளும் தளங்களும்	932.88	175.74	275.00
2. குடிசை மேம்பாட்டுத் திட்டம்	606.00	27.86	100.00
3. சாலை வசதி	975.08	150.04	276.00
4. போக்குவரத்து வசதி	657.00	105.16	264.00
5. குடிநீர், வடிகால் திட்டம்	954.00	—	75.00
6. பிற செலவினங்கள்	512.90	16.40	125.00
மொத்தம் ...	4637.86	475.20	1115.00
புறநகர் வளர்ச்சித் திட்டம்:			
1. மணலி	810.00	134.78	65.00
2. மறைமலை நகர்	152.00	108.39	
மொத்தம் ...	462.00	243.17	65.00



இதுதவிர, 1980-லிருந்து இரண்டாவது மிகப் பெரிய திட்டத்தைத் துவக்க, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், அதற்கான பணியையும் இப்போதே தொடங்கியுள்ளது. அதற்கான பல்வேறு வகையான ஆய்வுகள் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சீரிய பணிகள்

மத்தியிலும் மாநிலங்கள் பலவற்றிலும் புதிய அரசுகள் அமைந்துள்ளன, கடந்தபொதுத் தேர்தலின் பின்னலே.

பல வரலாற்றுப் பின்னணியில், பத்திரிகைகள், வானெலி, கலை நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி, திரைப்படம், பொருட்காட்சி, வெளியீடுகள் போன்றவற்றின் மூலம் மக்களுக்குச் செய்திகளைத் தெரிவிப்பதற்கான ஒரு கொள்கையை உருவாக்கிட மாநில அரசுகள் கடமைப் பட்டிருக்கின்றன.

அரசுக்கு-அதற்கான முக்கியக் கருவியாகப பயன்படுவதே செய்தி-மக்கள் தொடர்புத் துறையாகும். அரசின் சாதனைகளையும் திட்டங்களையும் அறிவிப்புகளையும் அவ்வப்போது மக்களை உணரச் செய்வது இத்துறையின் தலையாய கடமை. அதைப் போலவே மக்களின் தேவையையும் மக்கள் எதிர்பார்ப்பையும் அவ்வத்துறைகளுக்குத் தெரிவிக்கும் அரும்பணியும் இத்துறையினுடையதே!

நாடு வாழ தான் வாழ்ந்தவர்கள், நல்வழி காட்டிகள், பொதுத் தொண்டாற்றிப் புகழ் கொண்டவர்கள், தேசியத் தலைவர்கள் ஆகியவர்களுக்கு விழா எடுப்பதனை அரசு கொள்கையளவிலே ஏற்றுப் பெருமை கொள்கிறது.

30-6-77ல், தமிழகத்தில் புதிய அமைச்சரவை பொறுப்பேற்ற பின்னலேதான் அவ்வகையில்—முதன் முதலாக, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா, அரசின் சார்பிலே, செய்தித் துறையினல் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காயிதெ மில்லத், புரட்சிக் கவிஞர் பாரதிதாசஞர் ஆகியோரின் விழாக்களும் அந்த அடிப்படையிலேதான் அரசு மூலம் கொண்டாடப் பட்டன.

காமராசரின் 75-வது ஆண்டு நிறைவு விழா ஜூலைத் திங்களில் கொண்டாடப்பட விருக்கிறது.

தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பிலே செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் ஒத்துழைப்புடன் சங்கரதாஸ் சுவாமிகள் விழா கொண்டாடப்பட்டது.

சுயமரியாதைச் சுடர் கொளுத்திய தந்தை பெரியாரின் பிறந்த நாள் நூற்ருண்டு இது. எனவே, இந்த ஆண்டில் ஒரு நாள் அல்ல, நூற்ருண்டு விழா ஆண்டு முழுவதுமே ஒவ்வொரு நாளும் தமிழகம் விழாக் கோலம் பூண்டு அந்தத் தன்மானத் தலைவனின் புகழ் பாட வேண்டுமென அரசு மூலம் திட்டமிடப் பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தந்தை பெரியாரின் நூற்ருண்டு விழா, ஈரோட்டிலுள்ள பெரியார்-அண்ணு நினைவகத்தில் தொடக்கம் செய்யப்படுகிறது.

தமிழகத்துப் பழங் கலைகள் புத்துணர்ச்சி பெற்று மலர வேண்டும் என்பதிலே இந்த அரசு பெரிதும் அக்கறையோடு செயல்பட்டு வருகிறது. அதற்கான உதாரணம்தான்—'வாடாத தாமரைக்கை வானில் ஒளி தெறிக்க ஆடாத பொற்பாவை ஆடவந்தாள்' என்ற புரட்சிக் கவிஞரின் பாடல் அடிகளுக்கு எடுத்துக்காட்டான செல்வி சுவர்ணமுகிக்கு உதவிட அரசு முன்வந்தது. அவரது நடனத்தை, அண்மையிலே பழம்பெரும் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண்கூடக் கண்டு வியந்து பாராட்டியிருக்கிருர். சென்னை வந்த வியட் நாம் கலைக் குழுவினரும் அயர்லாந்து நாட்டுத் தலைவரும் பார்த்துப் பரவசப்பட்டனர்.

அத்தகைய ஆற்றலாளருக்கு, வறிய ஏழைக் குடும்பத்தவர் என்பதால்—குடத்துக்குள் விளக்கென இருக்கும் அவர் ஆடல் திறம் குன்றின் மேலிட்ட விளக்காகித் தமிழகம் புகழ் பெற வேண்டுமென்ற கருத்திஞல்—அரசு உதவ முன்வந்தது. இதன் மூலம் தமிழக நாட்டியக் கலையின் சிறப்பினை நம் நாடு முழுவதும் மட்டுமல்ல; உலகு முழுவதும் பரப்பும் பணிக்கு அரசு உதவியுள்ளது.

முத்தமிழில் மூன்ரும் தமிழான நாடகத்தின் ஆக்கத்திற்கு இன்றைய அரசு அளித்து வரும் ஊக்கம் பாராட்டுக்குரியதாகும்.

தமிழகம் முழுவதும் தீண்டாமை ஒழிப்பு, மது விலக்குப் பிரச்சார நாடகங்கள் நடத்துவதற்கெனச் சிறந்த நாடகங்களைத் தேர்வு செய்திட அரசின் மூலம் ஒரு போட்டியே நடத்தப்பட்டது. அந்தப் போட்டியின் மூலம்—'விதியின் பின்னல்!', 'இருட்டு', 'முள் நடுவே ரோஜா', 'உறுதிமொழி', 'சம்பந்தி' ஆகிய நாடகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் பரிசாக ஆயிரம் ரூபாய் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டதனை நாடறியும்.

தமிழ் நாடெங்கும் இன்றைய தினம் இந்த நாடகங்கள் நடத்தப்படுகின்றன.

திரைப்படம் சமூகத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றது; செய்திகளைச் சொல்லுவதில் அதற்கு உள்ள சக்தி மகத்தானது. ஆயிரக் கணக்கானேருக்கு வேலைவாய்ப்பும், அரசுக்கு அதிக அளவிலான வருமானமும் தரும் துறை திரைப்படத் துறை.

வெறும் பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமின்றி, ஏழை-எளியோர் நெஞ்சிலே ஏற்றமிகு கருத்துக்களை விதைக்கும் சாதனமாகவும்திரைப் படங்கள் பயன்பட வேண்டுமெனக் கருதுகிறது இந்த அரசு.

எனவே, குடிப்பழக்கத்திஞல் விளையும் கேடுகளை விளக்கியும்—தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப் பற்று போன்றவற்றை வலியுறுத்தியும்



செல்வி சுவர்ணமுகி

தரமான படங்கள் தயாரித்தளிப்போர்க்கு உதவித் தொகை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

அதன் முதலாவது கட்டமாக, 1976-77ல் தயாரிக்கப்பட்ட பத்துப் படங்களில் மூன்று படங்கள் (அன்னக் கிளி, சில நேரங்களில் சில மனிதர்கள், சந்ததி) தேர்ந்தெடுக்கப்பட்டன.

கடந்த தமிழ்ப் புத்தாண்டு நாளிலே, அந்த மூன்று லட்சியப் படங்களைத் தயாரித்தவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மூன்று இலட்ச ரூபாய் பரிசளித்துச் சிறப்பித்தார்கள்.

''தமிழ்த் திரையுலகுக்குப் புத்துயிர் அளிக்கவே இந்தத் திட்டம்'' என அவ்விழாவில் பேசிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது எத்துணைப் பொருத்தமானது!

அதுமட்டுமல்லாமல்—சிறந்த படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த தொழில் நுணுக்க வல்லுநர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டிப் பரிசு வழங்கிடும் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

இது வரை, தமிழ் நாட்டில் உள்ள டூரிங் அரங்குகளுக்கு இரண்டு ஆண்டுகள் மூன்று மாதங்கள் மட்டும்ம நடத்த அனுமதி உரிமம்—வழங்கப்பட்டு வந்தது. அதனை மூன்று ஆண்டுகளாக நீட்டித்துப் பெருமை கொண்டது இந்த அரசு.

கேளிக்கை வரி விதிப்பிலும் சிறந்ததோர் சீர்திருத்தத்தினைச் செய்துள்ளது இந்த அரசு.

1977 டிசம்பர் 26 முதல் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சிகள், மற்றும் இரண்டாம் நிலை—மூன்றும் நிலை நகராட்சிகள் ஆகியவற்றிலுள்ள திரையரங்கங்களுக்கு, அந்தந்த அரங்குகளின் மொத்த இருக்கைக்கான வசூல் அடிப்படையில் காட்சி ஒன்றுக்கு மொத்தமாக வரி விதிக்க அரசு முடிவு செய்தது.



காமராசர் இல்லம் - சென்னை



ஒரு வாரத்தில் எத்தனை காட்சிகள் நடத்தப்பட்டாலும் சரி; வாரம் ஒன்றுக்கு 14 முதல் 20 வரை குறிப்பிட்ட எண்ணிக்கையிலான காட்சிகளுக்கு ஆகின்ற மொத்த இருக்கைகளுக்கான வசூலில், 15 சதவீதத்திலிருந்து 22.5 சதவீதம் வரையிலே வரி செலுத்துவதன் மூலம் வரி இணக்கம் செய்து கொள்ள உரிமையாளர்களுக்கு விருப்ப உரிமை அளித்திடவும் இந்த முறையிலே வழிவகை உள்ளது.

சென்னையில் காமராசர் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமையாக்கி அதனைக் 'காமராசர் நினைவு இல்ல'மாகச் செய்வதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. காமராசர் பயன்படுத்தி வந்த பொருள்கள் எல்லாம் இந்த இல்லத்தில் நினைவுச் சின்னங்களாகப் பாதுகாத்து வைக்கப்பட உள்ளன.

காமராசர் வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லமாக ஆக்கும் விழா ஜூலை 15ல் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் நடைபெற இருக்கிறது.

தமிழகத்திலே உள்ள 1,500 திரையரங்குகளில், 1,000 திரையரங்குகள் புதிய முறை வரி விதிப்பின் கீழே வந்துள்ளன. பெரும்பான்மையான திரையரங்குகள் இணக்க முறையில் வரி செலுத்திட விரும்புவதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இத் திருத்தச் சட்டத்தின் 'மூலம், வரி ஏய்ப்புச் செய்திடுவோர் கடும் தண்டனைக்கு ஆளாக்கப்படுவர். தவறான முறையிலே வரி ஏய்ப்புச் செய்யும் குற்றத்திற்கு ஓராண்டு வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படலாம்.

திரையரங்க உரிமையாளர்களினால் செய்யப்படும் வரி ஏய்ப்பினைத் தடுக்கவும், வரி வசூலிக்கும் அதிகாரிகள் வஞ்ச ஊழல் போன்ற சபலங்களுக்கு ஆளாவதைத் தவிர்க்கவும் அரசு எடுத்த இந்த நடவடிக்கை மிகவும் ஏற்றதென—கலைத் துறைத் திறனாளர்களாலேயே அரசு போற்றிப் புகழப்படுகின்றது.

காமராசர் நினைவாலயத்தை நன்முறையில் பராமரிக்கவும், பெரியார், அமரர் அண்ணா ஆகியோர் இல்லங்களை ஈரோட்டிலும் காஞ்சியிலும் சிறந்த முறையில் பாதுகாக்கவும் தமிழக அரசு உடனடி நடவடிக்கைகள் மேற்கொண்டது.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியின் பணிகள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் செயல்முறை நடவடிக்கைகள் சிக்கல் இன்றி நிகழப் புதிய கட்டடமொன்றும் பல்வேறு வசதிகளோடு கட்டப்பட்டிருக்கிறது. நடிப்புக் கல்லூரியிலே சேர்வோருக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன.

செய்தித் துறைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் உள்ள உறவு மிகவும் நெருக்கமானதாகும். அதனை உறுதிப்படுத்தும் வகையிலே 'பத்திரிகையாளர் உதவி நிதி' ஒன்றினை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

நீண்ட நெடுங்காலம் பத்திரிகைத் துறையிலே பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் — மற்றும் எதிர்பாராமல் இயற்கை எய்திய பத்திரிகையாளர்கள் குடும்பங்கள் வறுமையிலே வாடாமல் காக்க வழி செய்யும் திட்டமிது.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக — குறைந்த பட்சம் ரூ. 5 இலட்சத்தோடு இந் நிதி துவங்கும். அரசு கொடுக்கும்ஆரம்பத்தொகை, பத்திரிகை நிர்வாகங்களும். பத்திரிகையாளர்களும் வழங்கும் பங்கு ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டே இந்தப் 'பத்திரிகையாளர் உதவி நிதி' துவக்கப்படுகிறது.



இந்த உதவி நிதியின் முதலீட்டுத் தொகைக்கு அரசின் பங்காக இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். இந்த நிதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய்க்குக் குறையாமலும், இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படாமலும் உதவித் தொகை வழங்கப்படும்.

சிறு பத்திரிகையாளர்களுக்கு உதவிட அரசின் மூலம் மற்றோர் அரிய திட்டமும் உருவாக்கப்பட்டு வருகிறது.

அவற்றிற்குத் தேவைப்படும் 'நியூஸ் பிரிண்ட்' காகிதங்களைத் தமிழக அரசின் சார்பில் 'சிட்கோ' மூலமாக வெளிநாட்டிலிருந்து ஏற்றுமதி செய்து மொத்தமாக அளித்துதவுவது பற்றிய திட்டமே இது.

இதனை அரசு ஆழ்ந்து பரிசீலித்து வருகிறது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகளில் சிலபல இந்தக் கட்டுரையிலே தொகுத்துரைக்கப்பட்டன. இத்தகைய அரும் பணிகள் இனியும் தொடரும்—இனிதே வளரும்!

ஜூலை 16ல்
தமிழரசு இதழில்
தமிழரசு கூட்டாசிரியர்
திரு. பி. சி. கணேசன்
எழுதும்
வளர்ச்சிப் பாதையில் தமிழகம்
தொடர் கட்டுரை
ஆரம்பமாகிறது.

பல்லவன் போக்கு வரத்துக்கழகத்திற்கு தமிழ்நாடு அரசு அளிக்கும் 4.05 கோடி ரூபாய்கள், இனி உங்களுக்கு அளிக்கப்போவது இன்னும் அதிக புதிய பேருந்துகள், அதிக பேருந்து நிலையங்கள், அதிக பேருந்துப் பணிமனைகள், அதிக அளவு பேருந்து நிழற் குடைகள்.

சமீப காலத்தில் நீங்கள் அதிக அளவில் புதிய வெளிர் பச்சை நிற பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகளைக் காணத் தொடங்கியிருப்பீர்கள். இன்னும் இரண்டு ஆண்டுகளில் இதே மாதிரியான 285 பேருந்துகள் சாலையில் ஓடத்துவங்கும். விசாலமான இப்பேருந்துகள் மற்ற பேருந்துகளிலிருந்து மாறுபட்டு, பலவிதங்களில் புதுமை கொண்டதாக மிளிருகின்றன. இப்பேருந்துகளில் புதுவகை இருக்கைகள் மிருதுவான ரெக்ஸினால் மூடப்பட்ட லேடக்ஸ் ரப்பர் குஷன் கொண்டவை. இருக்கையின் சாய்மானம் சற்று சரிவாக அமைந்திருப்பது எல்லோராலும் வரவேற்கப்படுகிறது. பேருந்துகளில் இருக்கும் அகலமான நடை வழி, பயணிகள் நிற்பதற்கு சௌகரியமாய் உள்ளது. இறங்கும் வழியும், ஏறும் வழியும் அகலமாக இருப்பதால் பயணிகள் விரைவாக ஏறுவதற்கும் இறங்குவதற்கும் வசதியாக இருக்கிறது. இரவில் அதிக வெளிச்சத்திற்காக பேருந்தினுள் குழல் விளக்குகள் அமைக்கப்பட்டிருக்க, படிக்கட்டுகள் அருகில் இருக்கும் விளக்குகள், பயணிகள் படிகளைப் பார்த்து ஏறவும், இறங்கவும் வசதியாக இருக்கும்.

பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு வசதி அளிப்பதற்காகவும், பயணிகளின் எண்ணிக்கை மிகவும் வேகமாக அதிகமாகிவரும் இடங்களுக்கு அதிக தடங்களை ஏற்படுத்துவதற்காகவும், வில்லிவாக்கம், திருவொற்றியூர், திருவேற்காடு, சிம்சன் (பெரியார் பாலம்), திருவான்மியூர், பூவிருந்தமல்லி, அரும்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் ஆகிய எட்டு இடங்களில் புதிய பேருந்து நிலையங்கள் கட்டப்பட விருக்கின்றன.

இப்பேருந்துகளில் தினமும் பயணம் செய்யும் 20 லட்சம் மக்களை மழை, வெய்யில், இவற்றினின்று பாதுகாக்கவே 400 புதிய பயணிகள் நிழற்குடைகள் சென்னை முழுவதும் கட்டப்பட்டு வருகின்றன. தவிர, விரைவில் பூவிருந்தமல்லி, பெரம்பூர், பேஸின் பிரிட்ஜ் ஆகிய மூன்று இடங்களிலும் தலா 100 பேருந்துகளைப் பராமரிக்கும் வகையில் புதிய பணிமனைகள் கட்டப்படவிருக்கின்றன.

இப்புதிய திட்டத்தால் உங்கள் பயணம் இனி வசதியாகவும் விரைவாகவும் இருக்குமென நம்புகிறோம் ஏனெனில் வசதியான பேருந்துப் பயணமே சென்னை நகரில் சிறப்பாக வாழ்வதற்கு ஓர் வழியாகும் என்று நம்புகிறோம்

பல்லவனின் மகத்தான முன்னேற்றம்

இனி உங்கள் பேருந்துப் பயணங்கள் மிக வசதியாக இருக்கும்



பல்லவன் போக்கு
வரத்துக் கழகம்,
"போக்குவரத்து இல்லம்"
அண்ணா சாலை, சென்னை 600 002.

குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்

கிராமப்புறக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குதல், என்ற திட்டத்தின் அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள கிராமக் குடியிருப்புக்கள் ஆறு வகையாகப் பிரிவு செய்யப்பட்டன. உடனடியாக 5794 கிராமங்களில் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வது என்று அரசு முடிவு செய்தது. இவை முற்றிலும் குடிநீர் வசதியே இல்லாத கிராமங்கள், அல்லது குடிப்பதற்குத் தகுதியான நீர் இல்லாத கிராமங்கள். இந்தக் கிராமங்களின் மொத்த மக்கள் தொகை 23 இலட்சத்து, 66 ஆயிரத்து 175. இப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்குவதற்குப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு 1-7-'77 முதல் செயல்வடிவம் கொடுக்கப்பட்டு வருகின்றன.

முழுமையான பொறியியல் ஆய்வுக்குப்பின், 1329-கிராமங்களில் தனித்திட்டமாக அல்லது கூட்டுத் திட்டமாக, குடிநீர் வழங்குதல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பயனடையும் மக்கள் தொகை 4,80,792. இதுவல்லாமல், வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சத் தேவையைப் பூர்த்தி செய்தல் என்ற அடிப்படையில், 1205 கிராமங்களில் 9,80,381 மக்கள் பயன் பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மேலும் 1411-கிராமங்களில், 7,95,000 பேர் பயன் பெறும் வகையில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதித் திட்டங்கள் பூர்த்தியடைந்து வருகின்றன. இன்னும் 2540 கிராமங்களில் 9,11,886 பேருக்குக் குடிநீர் வழங்கும் பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்து, திட்டமிடல் முடிந்து செயல்பாட்டில் உள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 45 குடியிருப்புக்களில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதித் திட்டங்கள், பல்வேறு கட்டங்களில் பூர்த்தியாகி வருகின்றன. இதனால் 19 ஆயிரத்து 839 பேர் பயன் பெறுவர்.

மேற்கூறிய திட்டங்களுக்கு; இதுவரை ரூ. 5 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

விஞ்ஞான முறையில் குடிநீரைச் சோதித்தறிதல், பின்னர் செயல்படுத்துதல் என்ற வகையிலான திட்டங்களின் இன்னொரு நேர்த்தியான அம்சம்., இனி வறட்சிக்காலத்திலும் குடிநீர் கிடைக்கும்படியான நிரந்தர நிவாரணத்தை அளிக்கிறது. நிரந்தர நிவாரணத்தை வழங்கும் சிறப்புத் திட்டங்களை; பொருட் செலவைப் பற்றிக்கூடக் கவலைப் படாமல் அரசு செயற்படுத்தி வருகிறது.

ஏற்கெனவே நிறைவேற்றப் பட்ட திட்டங்களின் பயன்கள் சிதறிவிடாமல், பாதுகாக்கிற பணியையும் அரசு கொண்டிருக்கிறது. கைப்பம்புகளைப் பாதுகாக்கும் பணி, 'யூனிசெப்' என்ற உலக அமைப்பின் உதவியுடன், செய்யப்பட்டு வருகின்றது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில், 3,000 கைப்பம்புகளைப் பாதுகாக்கும் பணியை, 1-4-78லிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளது. பழுதடைந்த கைப் பம்புகள் முறையாகப் பழுது பார்க்கப்பட்டு, எப்போதும் பயன்பாட்டில் இருக்கும் வகையில் வைக்கப்பட்டுள்ளன.

ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய 740 நகரங்கள், தமிழகத்தில் உள்ளன. சென்னை, மதுரை ஆகிய இரு மாநகராட்சிகள், 97 நகரவைகள், 8 நகரியங்கள், 13 பேரூராட்சி நகரியங்கள், 620 நகரப் பஞ்சாயத்துக்கள் இதில் அடங்கும். இந்த 740 நகரங்களின் மொத்த மக்கள் தொகை ஒரு கோடியே 55 இலட்சம்.

இதில் 740 நகரங்களில், இரு மாநகராட்சிகள், 88 நகரவைகள், 5 நகரியங்கள், 8 பேரூராட்சி நகரியங்கள், 101 நகரப் பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றில் குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. பயன் பெறுவோர் எண்ணிக்கை 105 இலட்சம். இது மொத்த நகர மக்கள் தொகையில் 68 விழுக்காடு ஆகும்.

புதிய குடிநீர் வழங்கு திட்டங்கள், 50 நகரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 138 நகரங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள கழிவுநீர்த் திட்டங்களினால் மொத்த நகரவாழ் மக்கள் தொகையில் 25 சதவிகிதமக்களே பயனடைந்துள்ளனர். இத் திட்டம் 12நகரங்களில் நிறைவேற்றப் பட்டுள்ளது. ஏழு நகரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது; மேலும் 24 நகரங்களில் நிறைவேற்றுவதற்கான ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

ஜூலை 1977-லிருந்து, நகர்ப்புற குடிநீர்த் திட்டத்திற்காக அரசு வழங்கிய தொகை ரூபாய் 302.45 இலட்சம்; இதில் ரூ. 274.56 இலட்சம் செலவிலான 13 குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன; ரூ. 142.82 இலட்சம் செலவிலான இரண்டு பெரிய கழிவுநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

1977-78-ஆம் ஆண்டுக்கான, திருத்தப்பட்ட புதிய மதிப்பீட்டுத் திட்டத்தில், நகர்ப்புற குடிநீர், வடிகால் திட்டத்திற்காக ரூ. 849.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 518 இலட்சம் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்தும், ரூ. 307.17 இலட்சம் தமிழக அரசிடமிருந்தும் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, ரூ. 10.38 இலட்சம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. பழனி, திருவாரூர், லப்பைக் குடிக்காடு ஆகிய நகரங்களில் உள்ள உயர்ந்த கழிப்பிடங்கள், சுகாதாரக் கழிப்பிடங்களாக மாற்றுதல் என்ற 'முன்னோடி கழிவுநீர்த் திட்டங்களுக்காக' ப் பயன்படுத்தப்படும். உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்து 1977-78ஆம் ஆண்டுக்காகப் பெறப்பட்ட ரூ. 13.80 இலட்சம் இந்திட்டங்களுக்காகப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டுகளுக்கு, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 518 இலட்சமும் தமிழக அரசு ரூ. 251.907 இலட்சமும் குடிநீர் வடிகால் திட்டங்களுக்கு வழங்கியுள்ளன. மேலும் பழனி, திருவாரூர், லப்பைக்குடிக்காடு ஆகிய மூன்று நகரங்களிலும் 'முன்னோடி கழிவுநீர்த் திட்ட' நிறைவேற்றத்துக்காக, ரூ. 31.62 இலட்சம் செலவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை!

'நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை'

அருமை பெருமைக்குரிய கைத்தறித் தொழில், கூட்டுறவு மூலம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகப் பெற்றுவரும் ஏற்றம் அளவிடற்கரியதாகும்.

1976-77 ஆம் ஆண்டு வரை சுமார் 1.50 இலட்சம் நெசவாளர் களைக் கொண்டு 756 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் இயங்கி வந்தன. ஆண் டொன்றுக்கு, சுமார் ஆறுயிரத் துக்கும் குறைவான தனியார் துறை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டு வந் தனர்.

1-7-77-க்குப் பின் தமிழ்நாட் டில் 81 புது நெசவாளர் சங் கங்கள் அமைக்கப்பட்டு தனியார் துறையிலிருந்த 22,489 நெசவா ளர்களுக்கு இப்புதுச் சங்கங்கள் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. இப்பொழுது தமிழ் நாட்டில் 946 கைத்தறி நெச வாளர் சங்கங்கள் 2.07 இலட்சம் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

இதுவரை தனியார் துறையில் செயல்படும் நெசவாளர்களுக் கென எவ்விதத் திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. தற் பொழுது இவ்வகை நெசவாளர் களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் இதர வசதிகளும் செய்து கொடுக்க மத்திய அரசால் அங்கீ கரிக்கப்பட்ட திட்டப்படி கீழ்க் கண்ட தீவிர கைத்தறி அபி விருத்தி நிலையங்கள் அமைக்கப் பட்டுச் செயல்படத் துவங்கியுள் ளன.

	இயங்கும் தறிகள்
குறிஞ்சிப்பாடி கைத்தறி ஏற்றுமதி உற்பத்தி நிலையம்	400
சேலம் தீவிர கைத்தறி அபிவிருத்தி நிலையம்	300
மதுரை கூட்டுறவு தீவிர கைத்தறி அபிவிருத்தி நிலையம்	350

செங்கை மாவட்டம் பொதட் டூர்பேட்டைப் பகுதியில் காஞ்சி புரம் கைத்தறித் தீவிர அபி விருத்தி நிலையத்தின் கிளை ஒன்று சமீபத்தில் திறக்கப்பட்டு 300 தனியார் துறை நெசவாளர்க ளுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது.

கூட்டுறவு நெசவாளர் சங்கங் களுக்கு ரிசர்வ் வங்கியினர் மூல தனக் கடன் வழங்கும் திட்டப் படி ஒரு சங்கத்தின் முந்தைய ஆண்டு உற்பத்தி மதிப்பில் 25 சதவிகித அளவு அடுத்த ஆண்டு கடன் வழங்கப்பட்டு வந்தது. இந்தக் கடன் அளவு, சங்கங்களின் முழு உற்பத்திக்குப் போதவில்லை என்றும் அளவை உயர்த்த வேண்டுமென்றும் எல்லா நெச வாளர் சங்கங்களும் பல ஆண்டு களாகக் கோரி வந்தன. ஆனால் ரிசர்வ் வங்கி அக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய அரசின் கைத்தறி வளர்ச்சி ஆணை யர் மூலம் தமிழக அரசு எடுத் துக் கொண்ட நடவடிக்கைகளின் பலனாக 77-78-ம் ஆண்டு முதல் இந்தக் கடனளவு முந்தைய ஆண்டு உற்பத்தியில் 33-33 சத விகிதமாக உயர்த்தப்பட்டது. இதனால் 1976-77-ஆம் ஆண்டில் ரூ. 15.57 கோடி கடன் பெற்ற தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 24.29 கோடி கடன் வசதி பெற்றன.

சென்ற ஆண்டுகளில் ரிசர்வ் வங்கியினரிடமிருந்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 8.2 சதம் வட்டி விகிதத்தில் மூலதனக் கடன் வசதி பெற்று வந்தன. வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பலனாக இந்த வட்டி விகிதம் 1-4-1978 முதல் 6.5 சதவிகிதம் ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங் கங்களின் விற்பனையைப் பெருக்கு வதற்கு முந்தைய ஆண்டுகளில் தீபாவளி, ரம்ஜான், கிறிஸ்துமஸ், பொங்கல், அகில இந்திய கைத் தறி வார விழா ஆகிய காலங் களில் அரசு சிறப்பு விற்பனைத் தள்ளுபடி அளித்து வந்தது. **சென்ற ஆண்டு மேலே கண்ட காலங்கள் தவிர தந்தை பெரி யார், அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தின விழாவையொட்டி 3-9-'77 முதல் 17-9-'77 வரை தமிழக அரசு கைத்தறித் துணி விற்பனைக்கு 10 சதவிகிதம் தள்ளுபடி மானியம் வழங்கியது.** அந்த 15 தினங்களில் கூட்டுறவுத் துறையில் ரூ. 3.64 கோடி பெறு மானமுள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டு, கூட்டு றவுச் சங்கங்களுக்கு நிவாரணம் அளித்தது குறிப்பிடத்தக்கது.

கைத்தறித் துணியின் தரத்தை யும் கவர்ச்சியையும் உயர்த்து வதில் முந்தைய ஆண்டுகளில் எவ்வித கவனமும் செலுத்தப் படவில்லை. தற்பொழுது இவ் வகையில் முழுக்கவனம் செலுத் தப்பட்டு பல திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. தர மான கெட்டிச்சாயமிட்டு துணி யின் கவர்ச்சியைப் பெருக்க, தமிழ்நாட்டில் சேலம், கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களில் ரூ. 60 இலட்சம் செலவில் ஐந்து பெரிய நவீன சாயச்சாலைகள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. இதற்கென தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திட மிருந்து ரூ. 48 இலட்சம் கடன் வசதி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஈரோட்டில் உள்ள கூட்டுறவு துணி பதனிடும் ஆலையும் ரூ. 22 இலட்ச செலவில் விஸ்தரிப்பு வேலையைத் தொடங்கி யுள்ளது. இதில் ஒரு துணி அச் சிடும் பிரிவும் துவக்கப்பட்டுள் ளது.

புது டிசைன்கள் உருவாக்குவ தற்கும், சங்கங்களில் அவைகளை உற்பத்தி செய்வதில் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதற் கும் மதுரையில் ஒரு புது 'வடி வமைப்பு நிலையம்' (Design Cum Service Centre) ரூ. 3.5 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. இதுபோன்ற நிலையங்கள் சேலம் கோவை, மற்றும் இதர இடங் களிலும் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

பொதுவாக, மெருகூட்டுதல், முன்கூட்டிச் சுருக்குதல் போன்ற பதனிடப்பட்ட துணிகளுக்கு மக் களிடையே பெருமளவு வரவேற்பு இருந்த போதிலும் இதுவரை கைத்தறித் துணிகள் இவ்வாறு பதனிடப்பட்டதில்லை. பதனிடப் பட்ட கைத்தறித் துணிகளுக்கு ஆலைத் துணிகள் அளவுக்கு மத் திய அரசு சுங்க வரி விதித்து வந்தது இதற்கு முக்கிய கார ணம். எனவே, தமிழக அரசு கைத்தறி துணிகள் பதனிடு வதற்கு சுங்க வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று மத்திய அரசி டம் வற்புறுத்தியதன் பயனாக கூட்டுறவு பதனிடும் ஆலைகள் அல்லது அரசு சம்பந்தப்பட்ட ஆலைகளில் பதனிடப்படும் கைத் தறித் துணிகளுக்கு முழு வரி விலக்கு அளித்துள்ளது. இதனால் தற்பொழுது கைத்தறித் துணிகள் தமிழ்நாடு கூட்டுறவு துணி பத னிடும் ஆலையின் மூலம் பதனிடப் பட்டு மக்கள் விரும்பக் கூடிய வகையில் விற்பனை செய்யப்படு கின்றன.

கூட்டுறவுத் துறையின் மூலம் இதுவரை வெளிநாடுகளுக்கு கைத்தறித்துணி ஏற்றுமதி நடை பெறவில்லை. சென்ற ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் "கோ—ஆப்டெக்ஸ்" நிறுவனமும் 'கைத் தறி நிதி வர்த்தக கார்ப்பரேஷ னும்' அமெரிக்கா, இங்கிலாந்து பிரான்ஸ், சிங்கப்பூர், ஜப்பான், மலேசியா போன்ற நாடுகளுக்கு இரு தூதுக் குழுக்களை அனுப்பி, ஒரு கோடி ரூபாய் பெறுமான டவல்கள், லுங்கிகள், சட்டைத் துணி ரகங்கள் போன்ற கைத் தறித் துணிகளை ஏற்றுமதி செய்ய ஆர்டர் பெற்று வந்தன. இந்த ஆர்டர்கள் தற்பொழுது நிறை வேற்றப்பட்டு வருகின்றன. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்த இரு நிறுவனங்களும் ரூ. 5 கோடி அளவிற்கு கைத்தறித் துணி ஏற்றுமதியை உயர்த்த நட வடிக்கை எடுத்து வருகின்றன.

பல ஆண்டுகளாக உண்மை யான கைத்தறி நெசவாளர் களுக்கு செயற்கைப் பட்டு நூல் நியாய விலையில் கிடைக்காம லிருந்தது. இதுபற்றி மீண்டும் தமிழக அரசு, புது டில்லியிலுள்ள கைத்தறி வளர்ச்சி ஆணையர் அவர்களுடனும், மத்திய அரசுட னும் தொடர்பு கொண்டு வற் புறுத்தியதன் விளைவாக சுய ஒப் பந்தத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டுக்கென ஒதுக்கப்படும் செயற்கைப்பட்டு நூல் விநி யோகம் கைத்தறி இயக்குநருக்கு மாற்றப்பட்டுள்ளது. தற்பொழுது புதிய அணுகு முறையின் காரண மாக முன்பு ஏற்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள் தவிர்க்கப்பட்டு, நெசவாளர்களுக்கு, செயற்கைப் பட்டு விநியோகம் சீரான முறை யில் செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை கைத்தறி நெசவா ளர்களின் சுகாதாரத்தைப் பற்றியோ, வேலைப்பாதுகாப்பு மற்றைய வசதிகள் பற்றியோ, எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் பட்டதில்லை.

இவ்வகையில் தற்பொழுது தமிழக அரசு தீவிர சிந்தனை செய்து கீழ்க்கண்ட திட்டங் களைத் தீட்டியுள்ளது. அவை விரைவில் செயல்படுத்தப்பட உள்ளன.

* சுகாதாரமற்ற சூழ்நிலையில் இரவு பகல் பாராமல் கைத் தறி நெசவாளர்கள் தங்கள் தொழிலைச் செய்வதால் நெச வாளர்கள் குழுமியுள்ள பகுதி களுக்குச் சென்று "எக்ஸ்ரே" மூலம் சோதனை செய்து அவர் களுக்குத் தக்க சிகிச்சை அளித்து சேலம் மாவட்டத்தில் ஒன்றும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒன்றும், மதுரை, இராமநாத புரம் ஆகிய இரு மாவட்டங் களுக்கு ஒன்றும் ஆக மூன்று நட மாடும் மருத்துவ சோதனை நிலை யங்களை ரூ. 25 இலட்சம் செல வில் அமைக்க ஒரு திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப் பட உள்ளது.

* பல ஆண்டுகளாக, தங் களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க நெசவாளர்கள் வற் புறுத்தி வந்த போதிலும் இதற் கென ஒரு திட்டம் வகுக்கப்பட வில்லை. நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க கிராம வீட்டு வசதித் திட்டத்துடன் இணைத்து ஒரு திட்டம் தீட்டப்பட்டு வரு கிறது. இத்திட்டத்தின் கீழ் 78-79-ம் ஆண்டில் நெசவாளர் களுக்கு சுமார் 2,000 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது.



* பொதுவாக, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அவர் களுடைய ஊதியம், வேலை உத் தரவாதம், போனஸ் முதலிய வற்றிற்குச் சட்டப் பாதுகாப்பு உள்ளதுபோல் கைத்தறி நெச வாளர்களுக்கு எவ்வித சட்டப் பாதுகாப்பும் இல்லை. இதுவரை இதற்காக தமிழக அரசால் அமைக்கப்பட்ட குழு கொடுத் துள்ள பரிந்துரைகளை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு நெசவாளர்களுக்குத் தக்க சட்டப் பாதுகாப்பு அளிப் பதற்கான நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ளது.

தனியார் துறையில் மாஸ்டர் வீவர்கள் கீழ் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு நூல் விலை யேற்றம், துணித்தேக்கம் ஆகிய காரணங்களைக் காட்டி வேலைக் குறைப்பு செய்தார்கள் என்பதற்

காக கரூர், அருப்புக்கோட்டை, பரமக்குடி ஆகிய இடங்களில் நெசவாளர்கள் கிளர்ச்சி, போராட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டனர். கரூர் போராட்டம் சம்பந்தப்பட்ட வரையில் இரு தரப்பாரும் மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. மற்ற போராட்டங்கள் மாண்புமிகு கைத்தறி அமைச்சர், கைத்தறித் துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியாளர் ஆகியோர் சம்மந்தப் பட்டவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன.

கடந்த நவம்பர் மாதம் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பெரும் மழை புயல் காரணமாக தஞ்சாவூர், திருச்சி, தென் ஆர்க்காடு, மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சுமார் 5,000 கைத்தறி நெசவாளர்கள் தங்கள் வீடு மற்றும் உடைமைகளை இழந்து பாதிப்புக்கு உள்ளாயினர்.

அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் தமிழக அரசு ரூ. 40.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. வீடு, தறி, இழந்த நெசவாளர்களுக்கு வீட்டுக்கு ரூ. 500-ம் (ரூபாய் 300 கடன், ரூ. 200 மானியம்) தறி அமைக்க ரூ. 125 மானியமும் வழங்கப்பட்டது. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சொந்தத் தறியில்லாத நெசவாளர்களுக்கென 10 புதிய தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து 1,000 நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் உடனடி முயற்சியால் 1,200 பேருக்கு, நலிந்த ஆலையில் உள்ளோருக்கு மீண்டும் வேலை வாய்ப்புக் கிடைத்தது.

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்றார் இராமலிங்க அடிகள். அதே போல், நெசவுத் தொழிலுக்கு, இடையில் ஏற்பட்ட நலிவினாலே வாடிய தொழிலாளர்க்காக வருந்திடும் இன்றைய தமிழக அரசு அவர்களின் வாட்டம் போக்கிட மேற்கண்ட வகையிலெல்லாம் செயல்படுத்தி வரும் திட்டங்கள் அளவிடற்கரியதாகும்!

அகதிகள் அவலம் போக்கிட!.

பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் குடிபெயர்வோரை குடியமர்த்திடும் நோக்கோடு பணியாற்றி வருகிறது மறுவாழ்வுத்துறை.

தமிழகத்தில் இப்போதைய அரசு பதவியேற்றுக் கொண்ட பிறகு ஸ்ரீலங்காவிலிருந்து 7,815 அகதிகள் குடும்பம் தாயகம் குடிபெயர்ந்தன. இவர்கள் தேயிலைத் தோட்டங்கள், சின்கோனா தோட்டங்கள், வேளாண்மைத் திட்டங்கள், மாநில பண்ணைக் கழகத் திட்டங்கள், நூற்பாலைகள் ஆகிய இடங்களில் வேலைக்கு அமர்த்தப் பட்டனர். வியாபாரம் செய்வதற்காக சிலருக்கு கடன்களும் வழங்கப் பட்டன.

பர்மாவிலிருந்து வந்த 936 குடும்பங்களுக்கும் வியட்நாமிலிருந்து வந்த 26 குடும்பங்களுக்குச் சிறு வியாபாரங்களுக்கான கடன்கள் வழங்கப்பட்டன.

தாயகம் குடிபெயர்ந்தவுடன், உடனடியான செலவுகள், போக்குவரத்துச் செலவு, உணவு பங்கீடு முதலியவைகளுக்காக 1977-78ஆம் ஆண்டு ஜூலை முதல் இதுவரை ரூ.31,26,511 செலவிடப்பட்டு உள்ளது. அவர்களை நிரந்தரமாக குடியமர்த்துவதற்காக ரூபாய் 3,84,33,378 செலவிடப்பட்டது.

கீழ்க்கண்ட புதிய திட்டங்களை கடந்த ஓராண்டில் நமது அரசு நிறைவேற்றியுள்ளது :—

* ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புவோர் மண்டபம் முகாமில் தங்கும் பொழுது அவர்களுடைய சுகாதாரப் பணிகளுக்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டன. குடிநீர் வடிகால் வசதிகளுக்காக மொத்தம் ரூ. 88,000 செலவிடப் பட்டுள்ளது.

* நெய்வேலியிலுள்ள மாநில பண்ணைக் கழகத்தின் திட்டத்தில் பணியாற்றும் ஸ்ரீலங்கா அகதிகள் நல்வாழ்வுப் பணிகளுக்காக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டது.

* அகதிகள் மறுவாழ்வு வங்கியின் உதவியுடன் ஸ்ரீலங்காவிலிருந்து குடிபெயர்ந்த அகதிகள் குடும்பத்தினருக்கு சலுகை விலையில் ஒரு கிலோ அரிசி 57 காசுகள் என்ற விலையில் வழங்கப்பட்டது.

* உடனடியாக நிரந்தரக் குடியிருப்பு வசதி அளிக்க முடியாத அகதிகள் குடும்பங்களுக்கு — அவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகள் வழங்கும்வரை தங்கியிருக்க —குடிசைகள் போட்டுக் கொள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூ 250 வழங்கப்பட்டது.

* இலங்கையிலிருந்து குடி பெயர்வோருக்காக நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டம் அமைக்க 1,500 ஏக்கர் ஒதுக்கப் பட்டது.

* அகதிகளின் குழந்தைகளுக்கு கல்விச்சலுகைகள் வழங்க, அகதிகள் வருமானம் ரூ. 250-க்குள்ளாக இருக்க வேண்டும் என்று உச்ச வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. அது இப்பொழுது ரூ. 400-க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

ஆறுவது திட்டக் காலத்தில் 1-4-1978 முதல் 31-3-83 முடிய ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்வோரின் குடும்பங்களின் எண்ணிக்கை 64,000 ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1,600 குடும்பங்களுக்கு, கிராமக் கைத்தொழில்களிலும், 1,400 குடும்பங்களுக்கு மாநில பண்ணைக் கழகத் திட்டங்களிலும், 2,750 குடும்பங்களுக்கு கூடலூர் தேயிலைத் தோட்டங்களிலும், 100 குடும்பங்களுக்கு மலர்ச்செடி தோட்டப்பணிகளிலும், 2,000 குடும்பங்களுக்கு, டிட்கோ போன்ற அமைப்புகளின் உதவியுடன் செயல்படும் தொழிற்கூடங்களிலும் வேலைவாய்ப்பு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அகதிகள் மறுவாழ்வுத் திட்டங்களை முனைப்புடன் விரைந்து செயல்படுத்துவதற்காக மாநில அளவில் ஆலோசனைக்குழு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

வருவாய்த்துறை வழங்கியுள்ள சலுகைகள்

கடந்த ஓராண்டில் மாவட்ட நிருவாகத்தில் பல்வேறு சீரமைப்புப் பணிகள் நடைபெற்றுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேசுவரம் பிர்க்கா, 1977 அக்டோபர் 8ஆம் நாளிலிருந்து துணை வட்டமாக (Sub-Taluk) அமைக்கப் பட்டது. இராமேசுவரம் தீவில் வாழும் மக்களுக்கு பல்வேறு வகையில் இது நன்மை பயக்கும்.

துணை வட்டங்களாக உள்ளவைகளை வட்டங்களாக உயர்த்த வேண்டும் என்ற கொள்கையின்படி 43 துணை வட்டங்களில் 11 துணை வட்டங்கள் 1977 ஜூலை முதல் நாளுக்கு முன்னர் வட்டங்களாக மாற்றப்பட்டன.

1977 அக்டோபர் 15ஆம் நாள் முதல் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர், சேலம் மாவட்டத்திலுள்ள ஏர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள விருதுநகர் ஆகியவை துணைவட்டங்களாக உயர்த்தப்பட்டன. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள காட்டுமன்னார்கோவில் துணை வட்டத்தை வட்டமாக உயர்த்த தீர்மானிக்கப்பட்டது.

1978 மே முதல் நாள் முதல் நீலகிரி மாவட்டத்திலுள்ள கூனூர் கோத்தகிரி என்று இரண்டு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டம் முழுமைக்கும் பத்மநாபபுரம் வருவாய்க் கோட்டம் ஒன்று மட்டுமே இருந்தது. 1978 ஏப்ரல் 17-ம் தேதி முதல் பத்மநாபபுரம், நாகர்கோயில் என்று இரு வருவாய்க் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



வறட்சி நிவாரணப்பணிகள்:

தமிழ்நாட்டில் 1977-78ஆம் ஆண்டில் வறட்சிநிலை சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி கன்னியாகுமரி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் இருந்ததைத் தவிர வேறு எங்குமில்லை.

அந்தப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் பெருமளவில் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. குடிநீர்த் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. 1977ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்களில் பெய்த பெருமழையினால் வறட்சிநிலை பிற மாவட்டங்களில் தொடரவில்லை.

கடந்த ஓராண்டில் தமிழகத்தில் இப்போதைய அரசு பதவி ஏற்ற பின்னர் ஆற்றியுள்ள பணிகள் பற்றிய விவரம் வருமாறு:—

குடிநீர் வழங்கும் திட்டங்கள்

	முடிக்கப்பட்ட பணிகள்	செலவு (ரூ. இலட்சத்தில்)
துளைக்கிணறுகள்	960	96.00
ஆழமாக்கப்பட்ட கிணறுகள்	1,153	22.69
ஆழமாக்கப்பட்ட நீர்நிலைகள்	98	1.80

அந்த வட்டார மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்த திட்டங்களின் செலவு விவரம் :

	செலவு (ரூ. இலட்சத்தில்)
	300.875
பாசனத் திட்டங்கள்	32.19
சாலை வேலைகள்	47.70
மண்வள பாதுகாப்புப் பணிகள்	1.562
காடு வளர்ப்புப் பணிகள்	

குடிநீர் வழங்கும் திட்டங்கள் விவசாயிகளுக்குச் சலுகைகள் :

1978 ஏப்ரல் திங்களில் விவசாயிகள் சங்கத்தினர் வைத்த கோரிக்கைகளை ஆழ்ந்து பரிசீலித்து உழவர் பெருமக்களுக்கு மன நிறைவு அளிக்கும் வகையில் சக்தி மீறிய சில சலுகைகளை 10-5-1977 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதன் விவரம் வருமாறு:—

மின்கட்டணம் குறைப்பு :

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 8 இலட்சம் பம்பு செட்டுகள் மின்சார இணைப்பைப் பெற்றுள்ளன. விவசாயத்திற்குப் பயன்படும் மின்சாரக் கட்டணத்தை யூனிட்டுக்கு 12 காசிலிருந்து 16 காசாக உயர்த்தி 1975-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அப்போது இருந்த அரசு ஆணையிட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, சிறு விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 14 காசாக 1-7-1977 முதல் குறைத்து ஆணையிட்டது. இப்போது அரசு மேலும் ஒரு சலுகை அளிக்க முடிவு செய்துள்ளது. பெரிய விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 14 காசாகவும், சிறு விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 12 காசாகவும் மின் கட்டணத்தைக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ஆறு கோடி ரூபாய் கூடுதல் நட்டம் ஏற்படும். இந்தச் சலுகை 1-6-'78 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

விவசாயிகளுக்குப் பயன்படும் பம்பு செட்டுகளைப் பொறுத்த வரையில் மீட்டர் வாடகை இப்போது மாதம் 5 ரூபாய் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளதைக் குறைத்து, மாதம் 4 ரூபாயாக நிர்ணயிக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சலுகையும்

1-6-1978 முதல் செயல்படத் துவங்கியது. இதன் விளைவாக மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு மேலும் 1 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும்.

மின் கட்டணப் பாக்கியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாதமும் பாக்கியில் ஒரு பகுதித் தவணையையும் அந்த மாதத்திற்குரிய கட்டணத்தையும் செலுத்த விவசாயிகளை அனுமதிக்கும் சலுகையை அரசு அளிக்க முடிவு செய்துள்ளது.

கூட்டுறவுக் கடன்கள் :

1977-'78 ஆம் ஆண்டில் குறுகிய காலப் பயிர்க் கடன்களாக விவசாயிகளுக்கு வழங்கிய 121 கோடி ரூபாய்க்கு மாறாக 1978-79 ஆம் ஆண்டில் 140 கோடி ரூபாய் கடன்கள் வழங்க அரசு



முடிவு செய்துள்ளது. சென்ற ஆண்டு வழங்கப்பட்ட கடன்களை வசூலித்து, ரிசர்வ் வங்கி ஏற்றுக் கொள்ளும் குறைந்த பட்ச அளவுக்காகிலும், 30-6-78-க்கு முன் செலுத்த வேண்டிய கடன்களைச் செலுத்தாவிட்டால் ரிசர்வ் வங்கியின் நிதியுதவி கிடைக்காது. விவசாயிகளுக்குக் கூடுதலாக நிதியுதவி ஒதுக்கச் செய்யும் அரசாங்கத்தின் திட்டம் நிறைவேற்ற இயலாமல் போய் விடும். இதனால் விவசாயிகளுக்குப் பெருத்த நிதிப் பாதிப்பு ஏற்படும். இந்த நிலையைத் தடுப்பதற்காக இப்போது பெற்றுள்ள குறுகிய காலக் கடன்களை விவசாயிகள் செலுத்த வேண்டுமென்று அரசு கேட்டுக் கொள்கிறது. இருந்த போதிலும் இந்த ஆண்டு தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதற்காக சிறு விவசாயிகளின் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப் பட்டது.



1977-'78 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களாக வழங்கப்பட்ட 121 கோடி ரூபாயில் 12 கோடி ரூபாய் அளவில் உள்ள கடன்கள் மத்திய காலக் கடன்களாக ஏற்கெனவே மாற்றப்பட்டுள்ளன. மேலும் 16 கோடி ரூபாய் அளவு உள்ள குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில் தவணைகளில் செலுத்தும் காலத்தை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 4.30 கோடி ரூபாய் அளவுள்ள கடன்களுக்கு கால நீட்டிப்பு அளிக்கப்பட்டு விட்டது. மேலும் 14 கோடி ரூபாய் அளவிலே உள்ள கடன்களுக்குக் கால நீட்டிப்புச்செய்ய ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 12.6 சதவிகிதத்தில் இருந்தது, 12 சதவிகிதமாக அண்மையில் குறைக்கப்பட்டுள்ளது. உணவுப் பயிர் செய்யும் சிறு விவசாயிகளுக்கான கடன்களின் வட்டி விகிதம் 10.5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளுக்கு மேலும் ஒரு சலுகை வழங்கும் நோக்கத்துடன் இந்த 10.5 சதவிகித வட்டி உணவுப் பயிர்களுக்கு மட்டும் பொருந்தும் என்ற நிலையினை மாற்றி, சிறு விவசாயிகளின் எல்லாப் பயிர்க் கடன்களுக்கும் பொருந்துமாறு இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

1971-ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலவள வங்கியிடமிருந்து கடன் பெற்று தோண்டப்பட்ட கிணறுகளுள் பொய்த்துப்போன கிணறுகளைப் பொறுத்த வரையில் கடனில் 75 சதவிகிதத்தை பத்தாயிரம் ரூபாய் வரம்புக்குட்பட்டு, தள்ளுபடி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் இந்தப் பொய்த்துப்போன கிணறுகளுக்காக வாங்கிய கடனில் 90 சத விகிதம் வரை பத்தாயிரம் ரூபாய் வரம்புக்கு உட்பட்டுத் தள்ளுபடி செய்யப்படும். நில வள வங்கியிலிருந்து கடன் பெற்றுப் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு, இன்னமும் மின் இணைப்புப் பெறாத கிணறுகளுக்கு நட்டக் கணக்குப் பொருட்படுத்தாமல் முன்னுரிமை அடிப்படையில் இணைப்பை வழங்குமாறு அரசு மின் வாரியத்திற்கு ஆணையிட்டுள்ளது.

அரசுக் கடன்கள் :

புயலாலும் - வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசு கடன்களைப் பொறுத்த வரையில், இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் வசூல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மற்ற பகுதிகளைப் பொறுத்த வரையில் கடன் பாக்கித் தொகை முழுவதையும் வசூல் செய்ய வேண்டாம் என்றும், ஒரு தவணையை மட்டும் இந்தப் பசலியில் வசூல் செய்ய வேண்டும் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. சிறு விவசாயிகள் மீது அரசாங்கக் கடன்களை வசூலிக்க ஜப்தி நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட மாட்டாது என்றும் அரசு உறுதிகூற விரும்புகிறது.

சில பணப்பயிர்களுக்கு முதன் முறையாக விதித்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 1386-ஆம் பசலிக்கு உரிய வரி வசூல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பின்பு, ஒத்தி வைக்கப்பட்ட அந்த வரி வசூலை முழுமையாகத் தள்ளுபடி செய்தது. மேலும் திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை ஆகியவற்றின் மீது எக்டர் ஒன்றுக்கு, பயிர் ஒன்றுக்கு விதிக்கப்பட்டு இருந்த வரி விகிதத்தை ரூபாய் 20லிருந்து 15 ஆக இந்த அரசு குறைத்தது. புகையிலை, மிளகாய், பாசன வசதியுடன் சாகுபடியாகும் பருத்தி, வேர்க்கடலை ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட வரியை முழுமையாக இந்த அரசு நீக்கியுள்ளது. இந்த வரி விதிப்பையும் ஆராய்ந்து பரிசிலனை செய்யுமாறு அரசு அமைத்துள்ள விவசாயிகள் உயர் மட்டக் குழு கேட்டுக்கொள்ளப்படும். இதற்கிடையில் இந்தப் பசலியில் பணப்பயிர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்த வரி வசூலிக்கப்பட மாட்டாது. இதன் விளைவாக மட்டும் இந்த ஆண்டில் தமிழக அரசுக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பு ஏற்படும்.

இவ்வாறு பல்வேறு சலுகைகளை அளித்து, சிக்கலான பிரச்சினைகளுக்குச் சீரான தீர்வு காண சாதகமான நிலையை நமது அரசு உருவாக்கியுள்ளது உழவர் பெருமக்களுக்கு மனநிறைவு அளிக்கும் மகத்தான பணியாகும்.

கல்வி சிறந்த தமிழ்நாடு

'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்று, தமிழகத்தைப் பாராட்டிப் போற்றினார் கவியரசர் பாரதியார்.

கல்வியைச் செல்வமாக நம் முன்னோர்கள் மதித்துப் போற்றினர்.

''எண்ணும் எழுத்தும் இருகண் ஆகும்'' என இசைப் புலவர்கள் பாட்டுக் குரலில் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த உண்மைகளை எல்லாம் நன்கு உணர்ந்திருக்கும் தமிழக அரசு—கல்வித் துறையில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது; கல்வியை வளர்க்கும் திருத்தொண்டில் பேரார்வம் காட்டி வருகிறது ; நாட்டில் அறிவாலயங்கள் பெருகிட — அரும்பணி ஆற்றி வருகிறது ; நம்மரும் நாட்டில் கல்வி அனைவர்க்கும் கிடைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தைக் கடைப்பிடித்து, அதற்கான முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது.

கல்வித் துறைக்கு அதிக ஒதுக்கீடு :

தமிழ்நாட்டில் தற்போது 36,000 பள்ளிகள் உள்ளன. மொத்தம் 2.5 இலட்சம் ஆசிரியர்கள் இருக்கின்றனர். இந்தப் பள்ளிகளில் ஏறக்குறைய 85 இலட்சம் மாணவர்கள் பயில்கின்றனர். 1978-79ஆம் ஆண்டில் கல்விக்காக ரூ. 176 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1975-76ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 123 கோடிதான். இந்தத் தொகை, மாநிலத்தின் மொத்த செலவினத் தொகையான 727 கோடி ரூபாயில் 24 சதவீதம் ஆகும். 1960ஆம் ஆண்டிலிருந்து—கல்விக்காக ஒதுக்கப்பட்டு வந்த தொகை, எந்த வருடத்திலும் 22 சதவீதத்திற்கு மிகவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் கல்விக்கெனச் செலவிடப்படும் தொகை 24 சதவீதமாகியது. எல்லா நிலைகளிலும் கல்வியின் வளர்ச்சிக்கு இந்த அரசு ஏராளமான நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன், குக்கிராமங்களில் உள்ள மக்களும் கல்விக் கனியைப் பெறுவதற்குரிய வழி வகைகளை வகுப்பதற்கு உறுதியளிக்கிறது.

பள்ளிக் கல்வி :

கல்வித் தரத்தை உயர்த்துதல் : 1977-78ஆம் ஆண்டில், 36 துவக்கப் பள்ளிகள், 44 உயர் துவக்கப் பள்ளிகள், 29 உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவை புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன. 6 வயதிலிருந்து 11 வயது வரை உள்ள மாணவர்கள் 2.19 இலட்சம் பேரும், 11 வயதிலிருந்து 19 வயது வரை உள்ள மாணவர்கள் 94 ஆயிரம் பேரும் 14 வயது முதல் 17 வயது வரை உள்ள மாணவர்கள் 30 ஆயிரம் பேரும், பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆக, ஏறக்குறைய 85 இலட்சம் மாணவர்கள் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தற்பொழுது கல்வி பயில்கின்றனர். இந்த மாணவர்களுக்குக் கல்வி தரும் 2 இலட்சத்து 53 ஆயிரம் ஆசிரியர்களுள், 1 இலட்சத்து 56 ஆயிரம் பேர் ஆடவர்; 97 ஆயிரம் பேர் பெண்டிர். 1977-78ஆம் ஆண்டில்—ஏறக்குறைய 1,100 ஆசிரியர் பதவிகள் அனுமதிக்கப்பட்டன. தமிழாசிரியர் 200 பேரும், உடற்பயிற்சி ஆசிரியர் 200 பேரும் இந்தத் தொகையில் அடங்குவர்.

1978-79ல் 1,000 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களையும், 200 தமிழாசிரியர்களையும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்களையும் நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1972-73 கல்வியாண்டிலிருந்து, [illegible] கல்வித் ஆம் [illegible] அறிமுகம் செய்யப்பட்ட—திருத்திய[illegible]

திட்டம், மாணவர்களுக்கு மிகவும் பளுவாக உள்ளதென்று பல முனைகளிலிருந்தும் குற்றச்சாட்டுகள் பல வருடங்களுக்கு முன்பிருந்தே இருந்து வந்தன. பல வருடங்களுக்கு முன்பிருந்தே இந்தக் குரல் தொடர்ந்து ஒலித்து வந்தாலும் — முந்தைய அரசு இக் குறைபாட்டைக் களைவதற்கு நிலையான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. ஆனால், இந்த அரசு—பொறுப்பேற்றுக் கொண்ட உடன், கல்வித் துறை நிபுணர்களைக் கலந்து, 1978-79ஆம் கல்வியாண்டில் எல்லா வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கும் உள்ள பாடங்களின் பளுவைக் (குறிப்பாகக் கணிதம்) குறைப்பதற்கு உடனடியாக ஆணை பிறப்பித்தது.

1977-78 கல்வி ஆண்டிலிருந்து துவக்கப் பள்ளியின் முதல் மூன்று (1 — 3) வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் தேர்ச்சி வழங்குவது என்றும் அவர்களை 'ஃபெயில்' ஆக்குவது கூடாது என்றும் முடிவெடுக்கப்பட்டது. மாணவர்களிடையே ஏற்படும் தொய்வு, இந்த நடவடிக்கையினால், ஓரளவு குறைக்கப்படுகிறது.

அறிவியல் கல்வியின் போதனையை [illegible] முறையில் ஆய்வுக் கூடம் அமைப்பதற்காக [illegible] ரூபாய் [illegible]

ஆயிரம் வீதம் 50 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1978-79ஆம் ஆண்டில் 25 பள்ளிகள் இந்த வாய்ப்பைப் பெறுகின்றன. 1977-78ஆம் ஆண்டில் நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வாகனங்கள் 6 வாங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, கிராமப் புறங்களில் ஆய்வுக்கூடங்கள் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் அறிவியல் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள 48 கல்வி மாவட்டங்களில் 42 மாவட்டங்களில், மாவட்டத்துக்கு ஒன்றாக நடமாடும் அறிவியல் கூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மாநில அளவில் அறிவியல் கண்காட்சி ஒன்று 1977 நவம்பர் மாதத்தில் சென்னையில் நடத்தப் பெற்றது. 64 பள்ளிகள் அதில் கலந்து கொண்டன.

குடியரசுத் தலைவரின் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டுப் பாட நூல்களில் வெளியிடப்பட்டு இருந்த அறிஞர் அண்ணா, பெரியார் ஆகியோரைப் பற்றிய பாடங்கள் அகற்றப்பட்டு இருந்தன. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு அந்தப் பாடங்களை மீண்டும் இடம் பெறச் செய்தது. இந்தப் பாடங்கள் மட்டும் கொண்ட இணைப்பு நூல் ஒன்று வெளியிடப்பட்டு ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்ட பாடப் புத்தகங்களுடன் இணைத்துத் தரப்பட்டது.

எஸ்.எஸ்.எல்.சி., ஏ.ஐ.எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி. ஆகிய வகுப்புத் தேர்வுகளில் வெற்றி பெறும் முதலாவது, இரண்டாவது, அதையடுத்த சில வரிசைகளில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், சான்றிதழ்கள் ஆகியவற்றை 1977 டிசம்பரில் அரசு வழங்கிச் சிறப்பித்து இருக்கிறது. மாணவர்களுக்கு இது போன்ற பரிசு வழங்கப்படுவது இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத் தக்கது.

1977-78 கல்வியாண்டில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளாவன :

ரூ. 5 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வழங்கியது, உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூபாய் 1.5 இலட்சத்திற்கு அறிவியல் கருவிகள் வழங்கியது ; ஐந்து உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூபாய் 5 ஆயிரம் செலவில் 16 மி.மீ. திரைப்படக் கருவி (புரொஜக்டர்) வழங்கியது ; மாநில திரைப்பட நூலகத்திற்காக 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திரைப்படங்கள் வழங்கியது.

இந்தத் திட்டங்கள் 1978-79 ஆம் கல்வியாண்டிற்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

1977ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயலின்போது சேதமுற்ற, அரசு உதவிப் பள்ளிகளுக்கு, புதுப்பிக்கும் பணிகளுக்காக, 40 இலட்ச ரூபாய் உதவித் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் சேதமுற்ற அரசுப் பள்ளிகளின் கட்டடங்களை மராமத்து, செய்வதற்காக 60 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டு இருக்கிறது.

எஸ்.எஸ்.எல்.சி. பயிலும் மாணவர்கள் மேல் வகுப்புக்குச் செல்ல வேண்டுமென்றால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குரிய எல்லாப் பாடங்களிலும் ஏககாலத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிலை இருந்தது. முந்தைய அரசு இந்த விஷயத்தில் சற்றுத் தாராளமான மனப்பான்மையுடன் நடந்து கொள்வதில் அக்கறை காட்டவில்லை. இந்த அரசு பழைய வழக்கத்தை அடியோடு மாற்றி, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் புதிய 'கம்பார்ட்மெண்டல் முறையை' அறிமுகம் செய்திருக்கிறது. இதனால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை ஒவ்வொன்றாக எழுதித் தேர்ச்சி பெறும் மாணவர்கள் கல்லூரிக் கல்வியைத் தொடர்வதற்குத் தகுதி உள்ளவர்களாகிறார்கள்.

1978-79 கல்வியாண்டிலிருந்து ஆங்கிலோ — இந்தியப் பள்ளிகளில் பயிலும், ஆங்கிலோ—இந்திய மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு 8 இலட்ச ரூபாய் அதிகச் செலவாகிறது.

அண்மைக் காலம் வரை, தமிழகத்தில் உள்ள 375 ஊராட்சி ஒன்றியங்களில் கிராமப் புறத் திறமை உதவித் தொகைத் திட்டத்தின் வாயிலாக ஆண்டொன்றுக்கு ஒன்றியத்திற்கு இருவருக்குப் பரிசு வழங்கப்பட்டு வந்தது. 1978-'79 முதல் இந்த எண்ணிக்கை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது, ஒன்றியத்திற்கு நான்கு பேர்களுக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. இந்த அரசின் கிராம வளர்ச்சிக் கொள்கைக்கு இந்தத் திட்டம் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு, துவக்கப் பள்ளிகளில் கல்வி முறையை வளர்ச்சியடையச் செய்வதற்குப் பல திட்டங்களை அமல் செய்து வருகின்றது. அவையாவன : கல்வி நிலையங்களில் இனவாரியான ஒதுக்கீடு ; கல்வியின் மூலமாக கிராமப்புற வளர்ச்சி; விழுக்காட்டையும், முடக்கத்தையும் குறைத்தல், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றி பெற்ற அரிசன, மலைச்சாதி மாணவர்களுக்குத் தகுந்த இடத்தை அளித்தல்.

பள்ளி ஆசிரியர்கள் நலன் :

1973ல் ஊதிய உயர்வு கேட்டுப் போராட்டம் நடத்திய ஆசிரியர்களிடத்தில் முந்தைய அரசு கொடுமையாக நடந்ததுடன் மன்னிப்புக் கடிதங்கள் தருமாறு ஆசிரியர்களை வற்புறுத்தியது. ஆசிரியர்கள் நடத்திய போராட்டக் காலங்கள் அவர்களது பணிக் காலத்துடன் சேர்க்கப்படவில்லை. அந்த ஆசிரியர்களின் மன்னிப்புக் கடிதங்களை ரத்து செய்ததுடன் அவர்களது பணிக் காலத்தில் ஏற்பட்ட இடைவெளிக் காலம், ஆசிரியர்களுக்கு உரிமையுள்ள விடுமுறைக் காலமாகக் கருதப்பட வேண்டுமென்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

செகண்டரி கிரேட் தகுதி பெற்றிருந்தும், பல ஆசிரியர்கள், பல துவக்கப் பள்ளிகளில் ஹையர் கிரேட் ஆசிரியர்களாகப் பணி புரிந்து, குறைவான ஊதியம் பெற்று வந்தார்கள். இத்தகைய ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர் பதவிகள் அளிக்கப்பட்டன. இதனால் 1-6-77 முதல் 1,500 ஆசிரியர்களும் 1-6-78 முதல் 1,500 ஆசிரியர்களும் பயன்பெற்றனர்.

ஏற்கெனவே அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வந்த பட்டதாரி ஆசிரியர்களுள் 1-4-70 முதல், தமிழ்நாடு அரசுப் பணிக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் நிலைப்படுத்தப்பட்டவர். மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களின் தற்காலிகப் பணிக் காலத்திலிருந்து அவர்களது பணியை நிலைப்படுத்துவதுடன் முழு ஊதிய உயர்வுக்கும், அவர்களை, உரியவர்களாக்குவதற்கு முடிவு செய்துள்ளது இந்த அரசு.

31-3-'77 அன்று ஓராண்டுப் பணிக்கு மேல் (1-4-74 அன்று பணியில் இருந்து விலக்கப்பட்டவர்கள், விலக்கப்படுவதற்கு முன்பு ஓராண்டுப் பணியில் இருந்தவர்கள் உட்பட) உயர்நிலைப் பள்ளிகளில் தாற்காலிகமாகப் பணி புரியும் பட்டதாரி ஆசிரியர்கள், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் ஆகியோரைத் தமிழ்நாடு அரசுப் பணிக் கழகத்தின் மூலம் நிரந்தர ஊழியராக்குவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.

1977-'78 கல்வியாண்டிலிருந்து ஆசிரியர்களின் (பணியிலிருப்பவர்—ஓய்வு பெற்றவர்—காலமானவர்) ஆண் மக்கள், பெண் மக்கள் ஆகியோர் வேலை வாய்ப்புக் கல்வி பெற உதவித் தொகை வழங்கும் திட்டமொன்றினை இந்த அரசு அனுமதித்துள்ளது. ஆண்டொன்றுக்குப் பொறியியல் கல்விக்கு 25 பேர், மருத்துவக் கல்விக்கு 25 பேர், வேளாண்மைக் கல்விக்கு 20 பேர், கால்நடைக் கல்விக்கு 10 பேர் ஆக 80 பேர்களுக்குப் புதிதாகப் படிப்பு உதவித் தொகை வழங்கப்படும். ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு 500 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

முறை சாராக் கல்வி:

முதியோர் கல்வி வளர்ச்சிக்கும், படிப்பின்மையைப் போக்கும் முயற்சிக்கும், தேவைப்படும் நியாயமான அக்கறையை முந்தைய அரசு காண்பிக்கவில்லை. முதியோர் கல்விக்கும் முறைசாராக் கல்விக்கும் இந்த அரசு முனைப்பான ஆர்வத்தைச் செலுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. இந்தக் கல்வி முறை, பள்ளிக் கல்வியில் உருவாகும் வீண் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கும், அனைவருக்கும் எழுத்தறிவை வழங்குவதற்கும் வழி வகுப்பது திண்ணம்.

1971ஆம் ஆண்டு கணக்குப்படி, தமிழ்நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்தவர் எண்ணிக்கை 39.39 சதவீதமாக இருந்தது (இதில் ஆடவர் 51.68 சதவீதமும், பெண்கள் 26.83 சதவீதமும் ஆவர்). அப்போது அனைத்திந்திய அளவில் எழுத்தறிவு பெற்றவர் 29.34 சதவீதம் ஆவர். (இதில் ஆடவர் 39.51 சதவீதமும் பெண்கள் 18.44 சதவீதமும் ஆவர்). சுருக்கமாகச் சொன்னால் 1971ஆம் ஆண்டுக் கணக்குப்படி தமிழ்நாட்டின் 4.12 கோடி மக்கள் தொகையில் 1.63 கோடி பேர்தான் எழுத்தறிவு பெற்றிருந்தார்கள். இந்த அரசு எழுத்தறிவை வளர்ப்பதற்குத் தன்னால் இயன்ற பல்வேறு வழி முறைகளைக் கடைப்பிடித்து வருகிறது. மாநில அளவில் முதியோர் கல்விக்காகவும், முறைசாராக் கல்விக்காகவும் 1978-'79ஆம் ஆண்டில் 40 இலட்ச ரூபாயைச் செலவு செய்ய அனுமதித்திருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட ஆண்டில் மாநிலத்தில் உள்ள 375 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்தையும் சார்ந்த கிராமப் புறங்களில்; கல்வியைத் தொடராமல் இடையிலேயே நிறுத்தி விட்ட மாணவர்களுக்காக முறைசாராக் கல்வி நிலையங்கள் 4 உருவாக்கப்படுகின்றன. இவை தவிர மத்திய அரசின் உதவியுடன் முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி ஆகியவற்றில் மையங்கள் 1,400 உருவாக்கப்பட இருக்கின்றன.

விளையாட்டுக்கள் :

எல்லாக் கல்வி நிலையங்களிலும் பயிலும் மாணவர்களின் உடல் நலத் தகுதி, விளையாட்டுத் திறமை ஆகியவை குறித்து தனிக் கவனம் செலுத்த வாய்ப்புத் தருவதற்கு அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. தமிழ்நாடு மாநில விளையாட்டுக் குழுவுக்கு வழங்கி வரும் ஆண்டு மானியத் தொகை 16 இலட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கல்வி நிலையங்கள், தமது மாணவர்களுக்காக உடற் பயிற்சிக் கூடங்களை உருவாக்குவதற்கு, உதவி செய்யும் திட்டத்தை அரசு அனுமதித்திருக்கிறது.

மாநிலத்தில் விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் ஊக்குவித்து, அவர்களின் வீர விளையாட்டுக்களை வளர்ச்சியுறச் செய்வதற்கும் அவர்களைச் சிறப்பிப்பதற்கும் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு கருத்துச் செலுத்தி உள்ளது. மாத நூற்றைம்பது ரூபாய்க்கும் குறைவாக வருமானம் பெற்று வரும் புகழ் பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோரின் முதுமைக் காலத்தில் அவர்களுக்குப் பொருளாதார உதவி வழங்கும் திட்டத்தை அரசு உருவாக்கியிருக்கிறது. இவர்களுக்கு மாதத்திற்கு 75 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 1978-79ஆம் ஆண்டில் 25 விளையாட்டு வீரர்கள் இந்த உதவித் தொகை பெற இருக்கிறார்கள்.

மேல்நிலைக் கல்வி :

பத்தாண்டுக் கல்வி முறையைப் பள்ளிகளில் அமலாக்குவதற்கு முந்தைய அரசு 1972-73ல் ஆணையிட்டிருந்தாலும் கூட—10+2+3 என்ற கல்வி முறையில், தக்க சமயத்தில் தகுந்த—நிலையான முடிவுகளை அது எடுக்கத் தவறிவிட்டது. அந்தப் பிரச்சினையைக் குழப்பத்துக்குரியதாக்கிவிட்டது. இந்த அரசு, முக்கியமான இந்தக் கல்வி முறைப் பிரச்சினையில் தீர்வு காணத் தனிக் கவனம் செலுத்தியதோடு நிலையான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. கிராமப்புற வளர்ச்சியை மனத்தில் கொண்டு, கல்வித் துறை நிபுணர்களைக் கலந்தாலோசித்து — 10+2+3 முறைக் கல்வியில் 2வது நிலை, பள்ளிகளிலேயே இருக்கலாம் என அரசு முடிவு செய்தது. மாநிலத்தில் மொத்தம் 800 உயர்நிலைப் பள்ளிகளில், பெரும்பாலும் கிராமப் புறத்தைச் சேர்ந்த பள்ளிகளில்தான் இந்த மேல்

நிலைக் கல்வியைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. மேல்நிலைக் கல்வியைத் தொடங்குவதற்குரிய எல்லா நடவடிக்கைகளும் மிகவும் இலகுவாக எடுக்கப்படுகின்றன. தேவைப்படும் திறமை மிக்க ஆசிரியர்களும்— தேவையான இடவசதிகளும், துணைக் கருவிகளும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு விரைவில் ஏற்பாடு செய்யப்பட இருக்கின்றன.

மேல்நிலைப் பள்ளிகளின் விவரங்களும் அவற்றிற்குரிய பாடத் திட்டங்களும் அனுமதிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேல்நிலைப் பள்ளி வகுப்பை நடத்துவதற்கு ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வகுப்புகளுக்குரிய பாடப் புத்தகங்கள் தயாரிப்பில் உள்ளன. மேல்நிலைக் கல்வியின் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால் கல்வியுடன் சேர்ந்த வேலை வாய்ப்புக் கல்வியாக இது இருக்கும் என்பதுதான்.

தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பயிலும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பயிற்சிக்குப் பணம் செலுத்தத் தேவையில்லை.

கல்லூரிக் கல்வி :

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு கல்லூரிக் கல்விக்குச் செலவிடப்படும் தொகை 2 மடங்காகப் பெருகியிருக்கிறது. 1975-76ல் 10 கோடி ரூபாய்; 76-77ல் 12 கோடி ரூபாய், 77-78ல் 21 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 78-79ல் 23 கோடி ரூபாய் செலவிடப்பட இருக்கிறது.

பல்கலைக் கழக மானியக் குழு-1974 ஆம் ஆண்டிலேயே பல்கலைக் கழக ஆசிரியர்கள் சம்பள விஷயமாக முந்தைய மாநில அரசை அணுகியபோதும் கூட அந்த அரசு அப்பிரச்சினையைக் கவனிக்காமலும் கல்லூரி ஆசிரியர்களின் கிளர்ச்சிக்கு வழி வகுத்தும் வந்தது. இந்த அரசு, ஆசிரியர்களின் நலனில் அக்கறை கொண்டு சென்னை, மதுரை, அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழகங்களைச் சார்ந்த அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு உதவிபெறும் கலைக் கல்லூரிகள், விஞ்ஞானக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், பல்தொழில் பயிலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியப் பெரு மக்களுக்கும் 1-1-74ல் இருந்தே சம்பள உயர்வு கிடைக்கும் வகையில்— ஆனால் 1-1-77ல் பணப்பயன் கிடைக்கும் வகையில் அரசு ஆணையிட்டது. இதனால் அரசுக்கு 1979-80ல் இருந்து கூடுதல் செலவு ஏற்படும்.

1-12-77 அன்று மூன்று ஆண்டும் அதற்கு மேலும் பணிபுரிந்து வரும் பட்ட மேற்படிப்புப் பட்டதாரி டெமான்ஸ்ட்ரேட்டர்களும், டியூட்டர்களும், விரிவுரையாளர்களாக / உதவிப் பேராசிரியர்களாக 1-12-77ல் இருந்து உயர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் பதவி உயர்வுக்குத் தக்க வகையில் சம்பள உயர்வு பெறுவதற்கும் அனுமதிக்கப்பட்டது.

அரசு உதவி பெறும் கல்லூரியின் ஆசிரியர்களும் 18 மாத மருத்துவ விடுமுறைக்குத் தகுதியுடையவர்கள் என அரசு அனுமதித்திருக்கிறது. முன்பு இவர்களுக்கு 12 மாத மருத்துவ விடுமுறை வசதிதான் கொடுக்கப்பட்டு வந்தது.

திருச்சிராப்பள்ளியிலும், கோயம்புத்தூரிலும் இரு பல்கலைக் கழகங்களைத் தொடங்குவதற்கு மத்திய அரசினிடமும், பல்கலைக் கழக மானியக் குழுவினிடமும் தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வருகிறது.

எல்லா வகையிலும் தமிழைப் பரப்பும் நோக்கத்தின் அடிப்படையில், கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கு, முன்பு புத்தகங்கள் இனமாக வழங்கி வந்ததற்குப் பதிலாக 1978-79 முதல், உதவித் தொகை வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

1977-78ல் இருந்து கல்லூரிகளில் பயிலும் அரிசன, மலைவாழ் வகுப்பு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பைப் பற்றிக் கருத்தில் எடுத்துக்கொள்ளாமல் அந்த இன மாணவர்கள் அனைவருக்கும், கல்வி பயில முழுச் சம்பளச் சலுகை அளிக்க அரசு முன் வந்துள்ளது. ஆண்டு வருமானம் 2,500 ரூபாய்க்குக் குறைவாக உள்ள அரிசனப் பெற்றோரின் குழந்தைகளுக்குத்தான் சலுகை உண்டு என்ற நிலை தற்போது மாற்றப்பட்டுவிட்டது.

கல்லூரிகளில், பி. யு. சி. வகுப்பை முடித்து விட்டு, பட்ட வகுப்பின் முதலாவது ஆண்டில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு, மருத்துவக் கல்லூரி போன்ற தொழில் துறைக் கல்லூரிகளில் இடம் கிடைத்து அவர்கள் செல்ல விரும்பினால், கலைக் கல்லூரியில் அவர்கள் கட்டிய பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

தொழிற் பயிற்சிக் கல்வி :

பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைப் படி, கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பள விகிதம், பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் பயிலகம் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் என அரசு அறிவித்தது. தமிழ் நாட்டில் 12 பொறியியல் கல்லூரிகளும், 34 பல்தொழில் பயிலகங்களும் தொழில் நுட்ப உயர் நிலைப்பள்ளிகளும் உள்ளன. இவற்றில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 20 ஆயிரம் ஆகும். 1977-78, 1978-79 ஆகிய ஆண்டுகளில், பொறியியல் கல்லூரிகளிலும், பல் தொழில் பயிலகங்களிலும் பல்வேறு புதிய பிரிக்கப் பட்ட— வேலை வாய்ப்பு அதிகம் உள்ள பயிற்சி வகுப்புகள் துவக்கப்பட உள்ளன.

தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று தமிழ் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும் என்று முந்தைய அரசு பல முறை சொல்லி வந்தபோதிலும், இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே இந்தப் பிரச்னையில் தனிக் கவனம் செலுத்தி — சென்னையில் "பேரறிஞர்.

அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக"த்தை உருவாக்க, சட்ட மன்றத்தில் மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளது. கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியில் இந்தப் பல்கலைக் கழகம் அமைய இருக்கிறது. கீழ்க்கண்ட நிறுவனங்கள், அந்தப் பல்கலைக் கழகத்தின் அங்கங்களாக இருக்கும் :

1. சென்னை, பொறியியற் கல்வி நிறுவனம், குரோம்பேட்டை.

2. கட்டடக் கலை—நகரமைப்புப் பள்ளி, சென்னை.

3. நெசவுத் தொழில் நுட்பக் கல்லூரி, தோல் தொழில் நுட்பக் கல்லூரி, சென்னையில் உள்ள அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த இரசாயனப் பொறியியல் துறைகள்.

கலை மற்றும் கலாச்சாரம்

தொல்பொருள் ஆய்வு :

திருமலை நாயக்கர் மஹால், இராமநாதபுரத்திலுள்ள இராமலிங்க விலாசம், தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டை போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பழங்காலக் கட்டடங்களைப் பாதுகாக்கும் முயற்சியும்—அந்தந்த இடங்களில் அரும்பொருட் காட்சியகங்களை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநிலத்தில் 4 மாவட்டங்களில் காணப்படும் மதிப்பு வாய்ந்த உதிரிச் சிற்பங்களையும் ஓலைச் சுவடிகளையும் சேகரித்துப் பாதுகாக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது.

நூலகங்கள்—அரும்பொருட் காட்சியகங்கள் :

பொது நூலக முறையின் மூலமாகவும் அரும்பொருட் காட்சியகத்தின் மூலமாகவும் பொதுமக்களுக்குச் சேவை செய்யும் பணியில் அரசு முனைப்புக் காட்டி வருகிறது.

தமிழ்நாட்டின் புராதன—பரம்பரைக் கலைகளைக் காப்பதற்குரிய வகையில்—நடவடிக்கைகளை எடுத்து வரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், ஓவியம் நுண்கலைக் குழு ஆகியவற்றின் பணிகளுக்கு அரசு ஒத்துழைப்புந் தந்து உதவுகிறது.

1978-79ல் மதுரையில் இசைக் கல்லூரி ஒன்று நிறுவப்பட இருக்கிறது.

நாதஸ்வரத்தைக் கற்றுக் கொள்ளும் 5 மாணவர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ. 500 படிப்புக்கால உதவித் தொகையும், தவுல் வாசிக்கக் கற்றுக் கொள்ளும் 5 மாணவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 300 படிப்புக் கால உதவித் தொகையும் வழங்கும் திட்டமொன்றை அண்மையில், அறநிலையத் துறை அறிமுகம் செய்து, தொகையை வழங்கியிருக்கிறது.

ஒவ்வோராண்டும்—பாரம்பரியப் பெருமையைப் பாட்டில் எடுத்துரைக்கும் கவிஞர் ஒருவருக்கு, 5,000 ரூபாய் பரிசளிக்கப்படவிருக்கிறது. இதைப் போலவே, நமது பாரம்பரிய இசைக்குத் தக்கவாறு தமிழ்ப் பண் பாட்டுக்கு எந்த விதமான குந்தகமும் ஏற்படாமலும் புதிய இராகங்களை—புதிய மெட்டுக்களை உருவாக்குகின்றவர்களுக்கும் பரிசு வழங்கப்பட உள்ளது. இந்தத் திட்டங்களையெல்லாம் இயல் இசை நாடக மன்றம் நடைமுறைப்படுத்த விருக்கிறது.

நாடகக் கலையை வளர்ப்பதற்குப் பல புதிய திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட உள்ளன. பொதுக் கல்வியுடன் நாடகக் கலையையும் இளம் மாணவர்களுக்குக் கற்பித்துத் திறமை மிக்க நாடகக் கலைஞர்களாக அவர்களை உருவாக்க—அவர்களுக்குத் தேவையான வசதிகளைத் தருவதற்குரிய திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

தமிழ் வளர்ச்சித் துறை :

தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் வளர்ப்பதில் இந்த அரசு, முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வசதியற்ற தமிழ்ப் புலவர்களுக்கு மாதம் ரூ. 100 உதவித் தொகையாக வழங்கும் திட்டத்தை மேற்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

பிற மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்கள்—கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பகுதி நேரத் தமிழ் டிப்ளமா பயிற்சியை ஏற்பாடு செய்வதற்குத் தாராளமாக நிதி உதவியைத், தமிழக அரசு அளித்து வருகிறது.

பிற மொழிகளில் வெளியாகும் நூல்களை, தமிழ் மொழியில் பெயர்த்து வெளியிடுவதற்குரிய திட்டத்தைச் செயலாக்க, நிபுணர்கள் கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது.

கம்பர், வள்ளலார் போன்ற தமிழ்ச் சான்றோர்களைச் சிறப்பிக்கும் வகையில், ஒரு தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்றைச் சென்னையில் உருவாக்க, அரசு முடிவெடுத்திருக்கிறது. நூலகம், படிப்பகம், கண்காட்சிக் கூடம், அரங்கம் ஆகியவை இந்த மையத்தில் இடம் பெறும்.

உமறுப் புலவரின் பெயரால் இஸ்லாமிய இலக்கியங்களுக்கு ரூ. 2 இலட்சம் தொகை கொண்ட அறக்கட்டளை ஒன்றை மதுரைப் பல்கலைக் கழகத்தில் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அகம், தமிழ் வளர்ச்சித் துறையின் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது. அந்தப் பணிகளாவன : சிறந்த நூல்களுக்குப் பரிசளித்தல், தமிழகத்தின் ஆதார பூர்வமான வரலாற்றைத் தயாரித்தல், தமிழ் மொழியில் நல்ல புத்தகங்களை வெளியிட உதவி செய்தல்—மாநில அரசின் அலுவலகங்களில் எல்லா நிலைகளிலும் கடிதத் தொடர்பு கொள்வதில் தமிழ் மொழியைப் பயன்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்த்தல்.

தமிழக அரசில் நியமிக்கப்பட்டிருந்த அரசவைக் கவிஞர் பதவி 1953லிருந்து நடைமுறைப் படுத்தப்படாதிருந்தது. நாமக்கல் கவிஞர் திரு வே. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் 1948-1953 வரை அரசவைக் கவிஞராக இருந்தார். முந்தைய அரசு இந்தப் பிரச்சினையில் எவ்வித அக்கறையையும் காட்டவில்லை. **இந்த அரசு இந்தப் பிரச்சினையில் தக்க கவனம் செலுத்தித் தமிழகத்தின் புகழ்பெற்ற கவிஞர் கண்ணதாசன் அவர்களை அரசவைக் கவிஞராக நியமித்துள்ளது.** புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாள் விழாவின்போது, ஆண்டுதோறும் சிறந்த தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளார். **இந்த ஆண்டு கவிஞர் சுரதா அவர்களுக்கு அந்தத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது.**

இத்தகைய சிறந்த—ஆக்கப் பணிகளை இந்த அரசு— மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே செய்து முடித்திருப்பது பாராட்டுக்குரியது என்பதை எவரும் ஒப்புக் கொள்வர்.

உழைக்கும் கரங்களை உயர்த்துவோம்!

தமிழ்நாடு இன்று தொழில் அமைதியில் முன்னோடியாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள், தோட்டத் தொழில் நிறுவனங்கள், மோட்டார் தொழில் நிறுவனங்கள், மோட்டார் தொழிற்கூடங்கள் ஆக 10,374 நிறுவனங்கள் 6,61,245 தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியுள்ளன. இவற்றுள் 92,141 தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர்.

அவற்றில் இன்று தொழில் தகராறுகளினாலும், வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பினாலும் பாதிக்கப்பட்டவை 15 தொழில் நிறுவனங்களும் 4,469 தொழிலாளர்களுமே ஆவர்.

இவ்வாண்டு ஜூன் திங்கள் முடிய 5,375 தொழில் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளருக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தக் கால கட்டத்தில், கீழ்க்காணும் முக்கிய தொழில் நிறுவனங்களோடு உடன்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

(அ) டி. யூ. சி. எஸ். நிறுவனம் சென்னை.

(ஆ) பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னை.

(இ) நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெய்வேலி.

(ஈ) இங்கிலீஷ் எலெக்ட்ரிக் கம்பெனி லிமிடெட், சென்னை

(உ) சென்னை ரப்பர் தொழிற்சாலை, சென்னை.

(ஊ) பக்கிங்காம்-கர்னாட்டிக ஆலை லிமிடெட், சென்னை.

(எ) இ. ஐ. டி. இந்தியா லிமிடெட். இராணிப்பேட்டை.

(ஏ) டி. வி. எஸ். தொழிற் பிரிவு, பாடி.

(ஐ) என்பீல்டு இந்தியா, சென்னை.

(ஒ) யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட், சென்னை.

(ஓ) கரூர் மில்ஸ், கரூர்.

கீழ்க்கண்ட நிறுவனங்கள், தொழிலாளர் நல, தொழில் துறைகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாக மீண்டும் திறக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகின்றன:

(அ) சிவகாமி மில்ஸ் லிமிடெட், திருநெல்வேலி.

(ஆ) சோமசுந்தரா சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், முத்தனேந்தல்.

(இ) இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை.

(ஈ) பிரகாஷ் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், கோயம்புத்தூர்.

(உ) லோட்டஸ் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

தொழிலாளர்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவதற்காகச் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று குழுக்கள் செயலாற்றி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஓய்வு பெற்ற நீதித்துறை அதிகாரியால், அல்லது ஓய்வு பெற்ற ஓர் தொழிலாளர் நல அதிகாரியால் நிர்வகிக்கப்படுகின்றன.

வசதி குறைந்த மக்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவது குறித்துத் திட்டமொன்றினை உருவாக்குவதில் ஏற்படும் பிரச்சினை பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழுவால் செய்யப்பட்ட பரிந்துரைகளை ஒட்டி அரசால் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முதல்தர நிறுவனமாக உயர்த்தப்பட்டுள்ள தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம், தொழிலாளர் சட்டங்கள், மனித உறவுகள், நிர்வாகப் பயிற்சி ஆகியவற்றில் பாடங்கள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உரிமைகள்

முதலானவற்றுக்கு மிக்க உதவியாக இருக்கின்றன.

தொழில்துறை அலுவலர்கள், தொழிலாளர் நீதிமன்றம் அல்லது தொழில் நடுவர் நீதிமன்றங்கள் முன்னிலையில் தொழிலாளரால் அல்லது தொழிலாளர் சார்பாகத் தொழிலாளர் சட்டங்கள்படி தாக்கல் செய்து கொள்ளப்படும் மனுக்களில், நீதிமன்றக் கட்டண முத்திரைத் தாள் ஒட்ட வேண்டியதில்லை என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக்குழு முதன்மையான ஆலோசனைக் குழுவாகும். இதனிடம் தொழிலாளர் தொடர்பான கொள்கைகள் பற்றிய பொருள்கள் அனைத்துக்கும் அறிவுரைகள் கேட்கப்படுகின்றன. மாநிலத் தொழிலாளர்கள் நல அமைச்சர் அவர்களின் தலைமையில் இந்த முத்தரப்பு ஆலோசனைக்குழு மாற்றியமைக்கப்பட்டது. தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் அவர்களுடைய பிரதிநிதிகள், மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் பணிகள்:

இவ்வாரியம் தொழிலாளர் நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி வருகின்றது.

தாம்பரத்திலுள்ள உடல் உருக்கிநோய் மருத்துவ நிலையத்தில் தொழிலாளர்களுக்கென்றே 26 படுக்கைகளுடன் கூடிய உடல் உருக்கு நோய் வார்டு (இணைப்பு) ஒன்று கட்டப்பட்டுள்ளது; தற்போது நோயாளிகள் சென்று தங்குவதற்கு ஏற்ற நிலையில் உள்ளது.

தொழிலாளர்களுக்கான விடுமுறை இல்லம் (Holiday Home) ஒன்று ஏர்க்காட்டில் 8-5-'78 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கோடைக்கானல், உதகமண்டலம் ஆகிய இடங்களில் விடுமுறை இல்லம் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாமல்லபுரத்தில் விடுமுறை இல்லம் ஒன்றைக் கட்டுவதற்கு ரூ. 7.51 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு படிப்பகங்கள் தொழிலாளர்களின் நலன் கருதித் திறக்கப்பட்டுள்ளன.

அன்றும் இன்றும் அரிசி நெல் நிலை

முந்தைய பல ஆண்டுகளில் விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இப்போது அப்படிச் செய்யப்படுவதில்லை.

முன்னர் ஒவ்வொரு மாவட்டமும் ஒரு தனித் தொகுதியாகப் பாவிக்கப்பட்டு, அந்த மாவட்டத்திலிருந்து அரிசியையோ, நெல்லையோ மற்ற மாவட்டத்திற்குக் கொண்டுபோகத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்தக் கட்டுப்பாடெல்லாம் அடியோடு நீக்கப்பட்டு தமிழகம் முழுவதும் நெல்லும் அரிசியும் தாராளமாகப் புழங்கிட வகை செய்யப்பட்டு உள்ளது.

தனிப்பட்ட வியாபாரிகள் முன்பு அரிசியையோ, நெல்லையோ மொத்த வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. இப்போது அந்தத் தடை நீக்கப்பட்டு, மொத்த வியாபார உரிமங்களும் தாராளமாக வழங்கப்படுகின்றன.

முன்பு சில்லறை வர்த்தகர்கள், வியாபாரிகள் நெல்லை வாங்குவதில் பல நிபந்தனைகளும், தடைகளும் இருந்தன. இப்போது அவைகளும் நீக்கப்பட்டுவிட்டன.

சொந்தத் தேவைக்கான அரிசியைக்கூட அதிகாரிகளிடம் சான்றிதழ் பெற்றே கொண்டு போக வேண்டுமென்ற நிலை முன்பு இருந்தது. இன்றோ அந்தத் தடையும் நீக்கப்பட்டுவிட்டது.

இவற்றின் காரணமாகத் தமிழகம் முழுவதும் நெல்லும், அரிசியும் தாராளமாகவும்-தடையேதுமின்றியும் புழங்கிடவும், தனியார்-வியாபாரிகள் சுதந்தரமாகச் செயல்படவும், விவசாயிகள் தங்கள் நெல்லை இலாபகரமான விலைக்கு வெளிச்சந்தையில் விற்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு ஆற்றிடும் பணிகள்!

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு

'தாழ்த்தப்பட்ட மக்களை 'தெய்வத்தின் குழந்தைகள்' என்று அழைத்தார் அண்ணல் காந்தியடிகள். தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் சமுதாயம் வளர்ச்சியடையும் என்றும் எடுத்துரைத்தார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட நமது அரசு, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைப்பதை தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. எனவே, அரிசன மக்களின் நல்வாழ்வுக்கான பல பணிகளை அரசு கடந்த ஓராண்டில் முனைப்புடன் செயல்படுத்தியது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு அளிக்கும் உதவிகளில் முக்கியமானது கல்விக்காக அளிக்கும் உதவியேயாகும்.



1976-77 இறுதி வரையில், முதல் படிவத்திலிருந்து 11ஆம் படிவம் வரை தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கும், மதம் மாறிய மாணவர்களுக்கும் புத்தகம் வாங்கவும், சிறப்புக் கட்டணம் கட்டவும் உபகாரச் சம்பளம் தரப்பட்டது. இது தவிர, தேவையான காலங்களில், தேர்வுக் கட்டணமும் தரப்பட்டது. இதற்கு பெற்றோர் அல்லது காப்பாளர் ஆண்டு வருமானம் ரூ. 3,000க்குள் இருக்க வேண்டும் என்ற வரம்பு இருந்தது. 1977-78லிருந்து நான்காம் வகுப்பிலிருந்து 11ஆம் வகுப்பு வரை மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் வருமான வரம்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மற்ற சலுகைகள் வழங்குவதிலும் வருமான வரம்பைக் கணக்கில் எடுத்துக் கொள்வது தவிர்க்கப்பட்டது.

கல்லூரிக் கல்வி...

1977-78லிருந்து வருமான வரம்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுக்கும்—மதம் மாறிய மாணவர்களுக்கும் அனைவருக்கும் புகுமுக வகுப்பு முதற் கொண்டு இலவசக் கல்வி தரப்படுகிறது.

மலைவாழ் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்காக 1977-78ல் தங்கிப் படிக்கும் வசதியுடன் கூடிய ஏழு பள்ளிகள் திறக்கப்பட்டன.

அரிசன மக்கள் வசிக்கும் பகுதிகளில், குழந்தைகளின் கல்வி பராமரிப்புக்காக 100 குழந்தைகள் [illegible] அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப் [illegible]

1977-78ல் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்காக 7 விடுதிகளும், மாணவிகளுக்காக 5 விடுதிகளும் கட்டப்பட்டன. மாணவர்களுக்கு உணவுக்காகத் தரப்படும் மான்யமும் கீழ்வருமாறு உயர்த்தப் பட்டது :

	ஒவ்வொரு மாணவருக்கு	
	முன்பு தரப்பட்டது	இப்போது தரப்படுவது
	ரூ.	ரூ.
1. சென்னையில் கல்லூரி மாணவர்களுக்கான அரசினர் விடுதி	65	80
2. வெளியூர்களில் கல் லூரி மாணவர்களுக் கான அரசினர் விடுதி	55	65
3. உயர்நிலைப் பள்ளி மாணவர் விடுதி	40	45

தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் படிக்கும் மாண வர்களுக்குத் தரப்படும் உதவித் தொகையும் மாதத் திற்கு ரூ. 60லிருந்து ரூ. 82.50 ஆக அதிகரிக்கப் பட்டது.

பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பி னர்களாக உள்ள அரிசனங்களுக்குக் கறவை மாடு கள் வாங்குவதற்கென தரப்படும் நிதி உதவி ரூ. 1,500 ஆக (ரூ. 500 மான்யம், ரூ. 1,000 கடன்) உயர்த்தப்பட்டு, இந்த ஓராண்டில் மட்டும் 1,200 பேருக்குத் தரப்பட்டுள்ளது.

இதேபோல் கிணறுகள் தோண்டுவதற்கு நிதி உதவி தரும் திட்டத்தில் 1978 பிப்ரவரியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் பயனாக ஒரு கிணறு வெட்டி முடிப்பதற்கு ஆகும் முழுச் செலவையும் மதிப்பிட்டு அதனை அரசாங்கமும்—நிலவள வங்கிகளும் ஏற்றுக்கொள்கின்றன.

அனைத்திந்தியப் பணித் தேர்வுகளில் வெற்றி பெறும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு மாணவர் ஒவ்வொருவருக்கும் மேற்கொண்டுபயிற்சி செலவுக்காக ரூ. 1,000 தரப்படும். இது 1977 ஜூலைத் திங்களில் அறிவிக்கப்பட்ட புதிய திட்ட மாகும்!

அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்குவதில் காலதாமதம் ஏற்படாமல் இருக்க இந்த அரசு 1978 ஏப்ரலிலிருந்து ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்துள்ளது. அதன்படி புறம்போக்கு நிலம் இல்லாமற்போனால் தனியார்களிடமிருந்து நிலத்தை விரைவாக ஆர்ஜிதம் செய்து அரிசனங்களுக்கு வழங்குவதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1977-78ல் ரூ. 63 இலட்சம் மதிப்புள்ள 20,800 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. 1978-79ல் இதற்கென ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்பு அரிசனங்களுக்காகக் கட்டித் தரப்பட்ட வீடுகள் ஒழுகுவதாகவும்—இட வசதி போதவில்லை யென்றும் முறையீடுகள் வந்தன. எனவே அரசு இப்போது புது மாதிரி டிசைன் ஒன்று தயாரித்து —இட வசதியையும் அதிகப்படுத்தி வீடுகள் கட்டித் தருமாறு ஆணையிட்டுள்ளது. இதன்படி 1977-78ல் புது டிசைனில் 5,000 வீடுகள் கட்ட ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டது.

நகராட்சிகளில் வேலை செய்யும் துப்புரவுப் பணியாளர்கள், நகராட்சிக்குச் சொந்தமான வீடு களில் குடியிருந்தால், அவர்கள் வேலையிலிருக்கும் வரை வாடகை தர வேண்டியதில்லை என்று 1978 மே திங்களில் அரசு புதிதாக ஆணை பிறப்பித்தது.

மலைவாழ் மக்கள்

தமிழ் நாட்டில் 3.11 இலட்சம் மலைவாழ் மக்கள் உள்ளனர். இவர்களது முன்னேற்றத்திற் காக வேளாண்மை—கால்நடை வளர்ப்பு—கல்வி—மருத்துவம் ஆகிய பல்வேறு துறைகளின் கீழ் 1976-77ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 101.32 இலட்சம் தான். ஆனால் 1977-78ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 153 இலட்சம். அதாவது 50 விழுக்காடு அதிகம்.

கடன் தொல்லைகளிலிருந்து மலைவாழ் மக்களுக்கு நிவாரணம் அளிக்கவும், மலைப் பகுதிகளில் வெளி யார் நிலம் வாங்குவதைத் தடுக்கவும் அரசு சட்டம் கொண்டுவர ஆலோசித்து வருகிறது.

குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப் பினரின் நலனுக்காகவும் அரசு ஆவன செய்துள் ளது. அந்த வகுப்பைச் சேர்ந்த மகளிர்க்கு தையல் மற்றும் பிற தொழில்களில் தொழிற் பயிற்சி வழங் கப்படுகிறது. இந்த ஓர் ஆண்டில் மட்டும் புதிதாக ஐந்து தையல் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட் டன. இந்த வகுப்பினைச் சேர்ந்த பள்ளி மாணவர் களுக்குப்பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப் படுகின்றன.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள 'போயர்' வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ரூ. 100 மதிப்புள்ள கருவிகளை அரசு இலவசமாகத் தரு கிறது. சலவைத் தொழிலாளர்களுக்கும் —முடி திருத்துவோருக்கும் தொழிற் கருவிகளை இலவச மாகத் தரவும் அரசு 7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி யுள்ளது.

பிற்பட்ட—மிகவும் பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் பெருமளவில் உதவிச் சம்ப ளம் மற்றும் பிற சலுகைகளைப் பெற வேண்டும் என்பதற்காக, அம்மாணவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமான வரம்பு உயர்த்தப்பட்டிருப்ப தானது அப் பிரிவு மாணவர்களின் கல்வி வளர்ச் சிக்குப் பெரும் துணை புரிகிறது.

இவ்வாறு கடந்த ஓராண்டில் தாழ்த்தப்பட்ட—மிகவும் பிற்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக அரிய பணிகளை அரசு ஆற்றியுள்ளது.

பாசன வசதிக்கும்
பயனுள்ள பணிகள்!

கடந்த ஓராண்டில் தமிழ் நாட்டில் பாசன வசதிக்காகப் பயனுள்ள பல்வேறு பணிகளை நமது அரசு மேற்கொண்டுள்ளது. அப்பணிகள் இங்குக் கோடிட்டுக் காட்டப்படுகின்றன:

தமிழகத்தில் 30-6-1977-ல் நமது அரசு பொறுப்பேற்ற போது காவிரி நீர்ப்பாசன வசதிப் பகுதியில் வழக்கமான குறுவைச் சாகுபடி ஏற்கெனவே தொடங்கிவிட்டிருந்தது. ஜூனில் மேட்டூரிலிருந்து பாசனத்துக்கு நீர் திறந்துவிடப்படவில்லை. ஏனெனில் மேட்டூர்த் தேக்கத்தில் நீர்மட்டம் மிகக் குறைவாக இருந்தது. மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களின் நேரடி முயற்சியினால், கர்நாடக மாநிலத்திலிருந்து தண்ணீர் கிடைத்து, மேட்டூர் நீர்த்தேக் கம் 15-7-'77ல் பாசனத்துக்குத் திறந்துவிடப்பட்டது. 1977-ல் புயல்-வெள்ளத்தினால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டுவதற்காக விவசாயிகள் கூடுதலாக ஒரு போகம் விளைவிக்க, உதவியாக காவிரி ஆயக்கட்டில் 1978 மார்ச் மூன்றாம் வாரம் வரை நீர் விடப்பட்டது.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள்

மேற்கு நோக்கிப் பாயும் ஆறு களின் உபரி நீரை இந்த மாநிலத் துக்குத் திருப்பி விடுமாறு பல் ஆண்டுகளாக முறையீடு செய் யப்பட்டு வந்தது. ஆனால் இப் பிரச்சினையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்பட வில்லை. தமிழகம் குடியாட்சித் தலைவரின் நிர்வாகத்தில் இருந்த போது, மத்திய அரசு ஒரு தொழில் நுணுக்கக் குழுவை அமைத்தது. ஆனால் இந்தக் குழு செயல்படாததோடு, இக்குழு வின் பணிகள் என்ன என்பதும் வரையறுக்கப்படாமல் இருந்தது. 1977 செப்டம்பரில் இந்தியத் தலைமையமைச்சர் தமிழ்நாட் டுக்கு வருகை தந்தபோது, தமிழக முதல்வர் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக திருவனந்தபுரத்தில் தலைமை யமைச்சர் முன்னிலையில் கேரளா-தமிழ்நாடு முதல்வர்களின் பேச்சு வார்த்தை நடைபெற்றது. முன்பு அமைக்கப்பட்ட தொழில் நுணுக் கக் குழுவின் பணிகள் எவை என் பது பற்றி இரு முதல்வர்களின் பேச்சு வார்த்தையின்போது வரையறுக்கப்பட்டது.

சென்னைக்குக் கிருஷ்ணா ஆற்றுநீர்

சென்னை நகரின் குடிதண் ணீர்த் தேவையை நிறைவு செய்ய [illegible] பேசிக்.

மற்றும் பாசன அமைச்சரின் முன்னிலையில் தமிழ்நாடு, கர் நாடகம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிர மாநிலங்களின் முதல்வர்களின் கூட்டம் நடை பெற்றது. 15 T. M. C. கிருஷ்ணா ஆற்று நீரைச் சென்னைக்கு எப் படிக் கொண்டு வருவது என்பது பற்றி இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கௌவேரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம்

தர்மபுரி மாவட்டத்தில் பொன்னையாற்றுக்குக் குறுக்கே ரூபாய் 5.5 கோடி செலவு மதிப் பீட்டில் கௌவேரப்பள்ளி நீர்த் தேக்கம் கட்டுவதற்கு 13-10-'77 அனுமதி வழங்கப்பட்டது.

இதனால் புதிதாக 8,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் கிடைப்ப துடன், 1,000 ஏக்கர் நிலங்களுக் குப் பாசனம் உறுதிப்படுத்தப் படும். ஹோசூரில் உள்ள 'சிப் காட்' தொழில் நிறுவன அமைப்பு களுக்கும் இதிலிருந்து நீர் கிடைக்கும்.

பெரியாறு-வைகை புதுப்பிக்கும் திட்டம்

உலக வங்கியின் உதவியைக் கொண்டு பெரியாறு-வைகைத் திட்டத்தை நவீனப்படுத்து வதற்கான பணிகள் தொடங்கி விட்டன! இதற்கு ரூ. 41 கோடி செலவாகும். இந்த வேலைகளைக் கவனிப்பதற்காக ஒரு சிறப்புத் தலைமைப் பொறியாளரும், மூன்று விசேஷப் பிரிவுகளும் தேவையான பிற பணியாளர் களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ள நிவாரணம்

1977 நவம்பர் மாதத்தில் புயல்-வெள்ளக் கொடுமையால் பல்வேறு பகுதிகளில் ஆறுகளி லும்-கால்வாய்களிலும் ஏற்பட்ட உடைப்புகளையும் சேதங்களையும் பொதுப்பணித்துறையினர் இரவு பகலாகப் பணியாற்றி மிகக் குறுகிய காலத்தில் சரிசெய்து விட்டனர். இந்தப் பணிகளுக்காக ஒரு தனித் தலைமைப் பொறி யாளரும்-அவருக்குக் கீழ் சிறப்பு அலுவலர்களும் நியமிக்கப்பட்ட னர்.

பணி ஆலோசனைக் குழுக்கள்

பொது மக்கள் பணம் பயனுள்ள முறையில் செலவிடப்படுகிறதா? [illegible]

கதர் கிராமத் தொழில்கள்



வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கிராமத் தொழில்களும், குடிசைத் தொழில்களும் வளர்வதுதான் நல்லது என்று கண்டு, அதன் மூலமே கிராமப் புறங்களில் பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க அரசு திட்டமிட்டுள்ளது. கதர்-கிராமத் தொழில்களின் மூலம் கடந்த ஓராண்டில் 9634 கைத்திறப் பணியாளர்களுக்கு அரசு வேலை வாய்ப்பைத் தந்துள்ளது; அதற்கேற்ற நிதி உதவிகளையும் அரசு அளித்துள்ளது.

1977 ஏப்ரல் முதல் 1978 மார்ச் திங்கள் வரை ரூ. 511.01 இலட்சம் மதிப்புள்ள கதர்த் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கதர் விற்பனையை அதிகப்படுத்துவதற்காக 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி தரப்பட்டு, மூன்று மாத காலம் விற்பனை நடந்தது. இச் சிறப்புத் தள்ளுபடியினாலும் கதராடைகளை வாங்கும்படி தமிழக முதல்வர் விடுத்த வேண்டுகோளாலும் கதர் விற்பனை அதிகமாகி, கதர் உற்பத்தி செய்யும் கிராமங்களில் வேலைவாய்ப்பும் அதிகரித்தது. இதனால் கதர் விற்பனையில் 20 சதவிகிதம் கடந்த ஆண்டைவிட முன்னேற்றம் காணப்பட்டது. 1976-77-இல் ரூ. 405.55 இலட்சத்திற்கு விற்ற கதர் இந்த ஆண்டு ரூ. 607.64 இலட்சத்திற்கு விற்கப்பட்டது. கதர் வாரிய வரலாற்றில் இது என்றுமே இல்லாத ஒன்றாகும்.

இந்த ஆண்டு இத்தாலி நாட்டுக்கு ரூ. 26.31 இலட்சம் மதிப்புள்ள 3.88 இலட்சம் மீட்டர் கதர் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த அளவுக்கு அதிக ஏற்றுமதி இந்த ஆண்டுதான் நடந்துள்ளது. இதனால் ஒரு புதுவழி பிறந்துள்ளது; ஏற்றுமதிக்கு மேலும் அதிகமாகக் கதராடை தேவை என்று கேட்கப்பட்டுள்ளது.

கோகோகோலாவைச் சுவைத்துக் கொண்டிருந்த உயர்குடியினரிடமும் பனைவெல்லத்திலிருந்து தயாரிக்கப்பட்ட 'பாம் கோலா' எனும் சுவை நீர் செல்வாக்குப் பெற்று சீராக வளர்ந்து வருகிறது. வளர்ந்து வரும் தேவையை நிறைவேற்ற நாள்தோறும் 3,500 புட்டி பாம் கோலாவைத் தயாரித்து சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் விரைந்து வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'பாம் கோலா' டில்லி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

கையினால் செய்யப்படும் காகிதத்தைக் கொண்டு முட்டைகள் வைக்கும் தட்டுகளைச் செய்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மத்திய அரசை அணுகி இந்தத் தட்டுகளைத் தயாரிக்கும் உரிமையை கிராமத் தொழிலுக்கு மட்டுமே தரும்படி கேட்கலாம் என்று கதர் குழுவுக்குத் தமிழக அரசு ஆலோசனை கூறியுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல்லை, இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் உள்ள கைவினைப் பொருள் உற்பத்தியையும், கிராமத் தொழிலையும் ஊக்கப்படுத்தி உதவுவதற்காகக் கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்துக்கு ரூ. 15.09 இலட்சம் மானியமாகவும், ரூ. 4.30 இலட்சம் கடனாகவும் தமிழக அரசால் வழங்கப்பட்டது. இத்துடன், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் ரூ. 16.9 இலட்சம் கிடைக்கும்.

கதர் நெசவாளர்களையும் கைத்தறி நெசவாளர்களைப்போலவே கருதி, நெசவுக் கருவிகள் வாங்குவதற்காக ரூ. 2 இலட்சத்தை அரசு வழங்கியுள்ளது. இதில் 50 சதவிகிதம் கடன்; 50 சதவிகிதம் மானியமாகும்.

பழங்குடி மக்களுக்கு 4,000 தேன்கூடுகள் வழங்குவதற்காக ரூ. 1.75 இலட்சம் உதவித் தொகையாக அரசால் வழங்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் திங்களில் புயலால் பாதிக்கப்பட்ட கைவினைத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகையாக ரூ. 9.74 இலட்சம் மானியமாகவும், கடனாகவும் அரசால் அளிக்கப்பட்டது. இப்படிப்பட்ட உதவி தரப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

கதர்-கிராமக் கைத்தொழில் வாரியம் 3,09,844 பேருக்கு வேலை கொடுத்துள்ளது. 1976-77-ல் சம்பளமாகக் கொடுத்தது, ரூ. 770.7 இலட்சம். 1977-78-ல் இத்தொகை ரூ. 905.3 இலட்சமாக உயர்ந்தது.



பால்வளம் பெருக்குவோம்!

பெரும்பான்மையான பால் வள மேம்பாட்டுப் பணிகள் 1972-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதற்கொண்டு தமிழ்நாடு பால் வள நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. அதன்பிறகு தமிழ்நாடு அரசு பால் வள மேம்பாட்டுத் துறை, தனது வளர்ச்சிப் பணிகளை, மாதவரம் அரசு பால் பண்ணையிலும், தஞ்சை, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் உள்ளடக்கிய பகுதிகளிலும் (பால்வள நிறுவனத்தின் தீவிர செயல்பாட்டுக்கு உட்படாத பகுதிகள்) தனது வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

மாதவரம் பால்பண்ணைப் பகுதியில், குறிப்பாக அரசு கால்நடைப் பண்ணையில் காசநோயற்ற கறவைகளை மட்டுமே இனம் கண்டு கொள்ளும் பொருட்டும், அவைகளை மட்டுமே பால் உற்பத்திக்கு இருத்திக் கொள்ளும் பொருட்டும் 1977-78ஆம்ஆண்டில் அரசு பால்பண்ணையின் எல்லா இனங்களும் காசநோய் ஆய்வு செய்யப்பட்டு, நோயற்றவை என்ற இனங்களை மட்டுமே தனியாக நிலைப்படுத்திச் செயல்பட்டு வருவது சாதனைகளையெல்லாம் மிஞ்சிய சாதனையாகும்.

நடப்பாண்டில் ஒரு பசுவின் பால் உற்பத்தித் திறன் நாளொன்றிற்கு 5.5 லிட்டர்களாக உயர்ந்து காணப்படுகிறது. இவ்வுற்பத்தித் திறன் அளவை மேலும் உயர்த்தும் பொருட்டு, பெங்களூரிலுள்ள தேசிய பால் பண்ணை ஆராய்ச்சித் துறையின் அலுவலர்களைக் களப்பணி கொண்டு ஆய்ந்தறிந்து கொள்ளவும் அதிக உற்பத்திக்கு வடிவமைப்புக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சென்னைவாழ் கறவையாளர்களுக்கு மாதவரம் பண்ணையில் மறுவாழ்வ வழங்குவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

செப்டம்பர் 1977-ல் பால் வளத்துறையில் மூன்று நடமாடும் கால்நடை ஊர்திப் பிரிவுகள் முறையே கன்னியாகுமரி, திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கி உள்ளது. இதன் முக்கிய நோக்கம் கூட்டுறவு விவசாயிகள் மற்றும் பால் சங்க உறுப்பினர்களுடைய கால்நடைகளுக்கு உரிய காலத்தில் வேண்டிய மருத்துவ உதவியை வழங்குவதாகும். ஐந்து அல்லது பத்து மைல் தூரத்தில் ஒரு மருத்துவ மனை இருப்பதால் உரிய காலத்தில் மருத்துவ உதவியினை கால்நடைகளுக்கு அளிக்க முடியவில்லை. ஆதலால் உரிய காலத்தில் மருத்துவ உதவியினை அளிக்கவும், நோய்த் தடுப்பு முறைகளை மேற்கொள்ளவும், கன்னியாகுமரி, திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் மூன்று நடமாடும் கால்நடை ஊர்திப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், கிராமங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு இராமநாதபுரம், திருச்சி மாவட்டங்களில் முறையே இரு பால் கொள்முதல் குழுக்களை ஏற்படுத்த அரசு 1977-78-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதன் முக்கியப் பணிகள் பால் உற்பத்தி ஆகும் இடங்களை ஆய்வு செய்வதும், குறிப்பிட்ட இடங்களில் பால் சங்கங்களை ஏற்படுத்துவதும் ஆகும். மேலும் இக்குழுக்கள் பால் அதிகமாகக் கிடைக்கும் இடம் எது எனவும் ஆராயும்.

மேலும், இம்மாநிலத்தில் 'ஆனந்த்' பாணியில் புதிய வகை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த 'ஆனந்த்' பாணியில் அமைக்கப்பட்ட உற்பத்தியாளர் சங்கங்களின் சிறப்பு அம்சங்களாவன:

(அ) ஒவ்வொருவர் தரும் பாலிலும் உள்ள கொழுப்புச் சத்து எவ்வளவு என்று முடிவு செய்து அதன் அடிப்படையில் பாலுக்கு அந்த இடத்திலேயே பணம் கொடுக்கப்படுகிறது.



(ஆ) சங்கங்கள் கடனை மையமாகக் கொண்டதல்ல.

(இ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கால்நடை மருத்துவப்பணி, செயற்கை முறைக் கருத்தரிப்பு, கால்நடை சமனீட்டுத் தீவனம் முதலிய அடிப்படை வசதிகள் உறுப்பினர்கள் இருப்பிடங்களிலேயே செய்து கொடுக்கப்படுகின்றன.

மேற்கண்ட திட்டங்கள் ஒருங்கிணைந்து செயல்படும்போது நகர்ப்புற மக்களின் பதப்படுத்தப்பட்ட பால் மற்றும் பால் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்வதோடு கிராமப்புற பால் பண்ணையாளருக்கு ஏற்ற வருவாயும் கிடைக்க வழி செய்யும்.

102 பாலுற்பத்திக் கூட்டுறவு சங்கங்களுக்கு அவற்றின் 2077 உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்குவதற்காக ரூபாய் இருபது இலட்சம் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் நலத்துறையின் ஒத்துழைப்புடன் கடன் திட்டத்தின் கீழ் 32 தாழ்த்தப்பட்டோர் பாலுற்பத்திச் சங்கங்களின் 1200 உறுப்பினர்கள் 6 இலட்சம் ரூபாயை மான்யமாகவும், 17.5 இலட்சம் ரூபாயை கடனாகவும் பெற்றிருக்கிறார்கள். பசும்புல் தீவனம் மிகுந்த அளவில் உற்பத்தி செய்யும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 10,000 மான்யமாக வழங்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட பால் சுகாதார முறைகளில் கையாளப்படுவதற்கு வேண்டிய சாதனங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும், கறவை இடங்களுக்கு வேண்டிய கட்டட வசதிகள் ஏற்படுத்திக் கொள்ளவும், பால் சேகரிப்புக்கு வாகன வசதிகள் ஏற்படுத்திக் கொள்ளவும் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களுக்கு ரூ. 2 இலட்சம் அளவிற்கு நிதி வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கண்டவாறு திட்டமிட்டு செயல்பட்டதன் விளைவாக 4555 பாலுற்பத்திச் சங்கங்களாலும், 25 பால் வழங்கு சங்க ஒன்றியங்களாலும் நாள் ஒன்றுக்கு, சராசரி 3087 இலட்சம் லிட்டர் பால் உற்பத்து செய்யப்பட்டு, 1.85 இலட்சம் லிட்டர் பால் மேற்படி ஒன்றியங்களால் சென்னை மற்றும் மதுரை நகர்ப்புற மக்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாகத் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 2.02 இலட்சம் லிட்டர் பால் மேற்படி ஒன்றியங்களிலேயே அந்தந்த ஊர் மக்களுக்கு உள்ளூரிலேயே விற்கப்பட்டு வருகிறது.





தொழிலாளர் நலத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனத்திலும், தமிழ்நாடு அரசு பாலுற்பத்தித் துறையிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு (காலநிலை அடிப்படைச் சம்பள விகிதத்தில் உள்ளவர்கள் மற்றும் அவ்வடிப்படையின் கீழ் வராதவர்கள்) முடிந்தவரை தனித்தனி இருக்கை வசதி (Residential accommodation) வாடகைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள், மேலாளர்கள் என்ற பாகுபாடின்றி 1976-77, 1977-78 ஆண்டுகளில் அவர்களது சீரிய பணிக்காகக் கருணைத் தொகையாக இவ்வாண்டில் (1977-78) (Exgratia Payment) அளிக்கப்பட்டுள்ளது.

1977-78-ஆம் ஆண்டில் திட்டமிட்ட செலவினங்கள் மற்றும் திட்டம் சாரா செலவினங்கள் இவைகளுக்காக ரூ. 77.49 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இவை தவிர தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் மூலமாக நீலகிரி மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் பாலுற்பத்திக்கு ரூ. 17.70 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

மேற்கண்டவாறு திட்டங்களும் பணிகளும் நன்கு செயலாற்றப்பட்டதால் ஓரளவிற்கு கிராமப்புறங்களில் வேலையில்லாத திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு இத்துறையும் செயல்பட்டுள்ளது.

பெருகிவரும் வேலை வாய்ப்புகள்

1977—ஜூன் முதல் 1978 ஏப்ரல் வரை 3,18,431 பேர்கள் பல்வேறு வேலைவாய்ப்பகங்களில் வேலைக்காகப் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 21,000 பேர் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இக்கால கட்டத்தில் வேலை வாய்ப்பகத்தில் தெரிவிக்கப்பட்ட காலி இடங்கள் 34,993. வேலை வாய்ப்பகங்களைப் பயன்படுத்தி, 11,200 பேர் வேலையில் அமர்ந்துள்ளனர்.

*தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்யப்பட்ட ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை 2,045. இவர்களில் மதுரை முதலான இடங்களில் வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 353. சொந்தமாகத் தொழில் தொடங்குவதற்காக, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் உதவி பெற, உதவி பெற்ற ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை 104.

*1978-ஆம் ஆண்டில் ஊனமுற்றோர் உலகநாள் விழா சென்னையில் கொண்டாடப்பட்டது. 1978-ஆம் ஆண்டில் ஊனமுற்றவர்களை வேலையில் அமர்த்த சிறப்பு முயற்சிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப் பட்டுள்ளன. உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்திற்கு அரசு அனுமதித்த தொகையாகிய 60,000 ரூபாயை உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக்கான பல்வேறு திட்டங்களுக்காகச் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்ற திறமையான பணியாளர்களுக்கான விருது பெற்றவர்களில் 9 பேர்களில் 4 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தேசிய விருதுக்காகத் தேர்வு பெற்ற 18 பேர்களில் இருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

பயிற்சிப் பிரிவுகள்:

கலைவினைஞர் (பொது மின்னணுவியல்) துறையில் பயிற்சி பெற்ற கலைவினைஞர்கள் பெருகி வரும் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ய 1977-78ஆம் ஆண்டுகளில் 32 பயிற்சியாளர்கள் கொண்ட தொழிற்பயிற்சிப் பிரிவு ஒன்று ரூ. 3.95 இலட்சம் செலவில் அடையாறு மின் அணுத் தொகுதி வளாகத்தில் தனியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொழில்களைப் பலதிறப்படுத்துதல் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூரிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் 32 கலைவினைஞர்களைக் கொண்ட (குளிர்ப்பதனம்-தட்ப, வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்) பயிற்சிப் பிரிவு ஒன்றைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கான சாதனங்களை வாங்க ரூ. 2.35 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. ஓட்டல்கள் சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், திரைப்பட அரங்குகள் முதலானவற்றில் பணி புரிகின்ற தொழிலாளர்கள், தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கோயம்புத்தூர், மதுரை நகர்களிலும், வடார்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியா குமரி, இராமநாதபுரம், தென்னார்க்காடு மாவட்டப் பகுதிகளிலும் மேற்சொன்ன பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளனர். கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை 500 ஆக உயர்த்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு, தொழிலாளர் நலத்துக்கும், வேலைவாய்ப்புக்கும் தக்க உதவிகளைச் செய்து வருகின்றது தமிழக அரசு.

தாழ்த்தப்பட்டோருக்கு தனியே இட ஒதுக்கீடு

மருத்துவத் துறையிலே, பட்டமேற்படிப்புக்குத் தேர்ந்தெடுக்கும்பொழுது—பிற்பட்ட வகுப்பினர்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கும், மலைவாழ் பிரிவினருக்கும் தனியே இட ஒதுக்கீடு செய்திட வேண்டாம் எனக் கருதியது இந்திய மருத்துவக் கவுன்சில்.

அந்தக் கருத்து தமிழக அரசினால் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டது. முடிவில், இப்போதுள்ள இடஒதுக்கீட்டு முறையையே தொடர்ந்து செயல்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மாநில மக்களின் சமூக-பொருளாதார அளவில் உள்ள பின்தங்கிய நிலையையும், சமுதாயத் துறையிலும்—பொருளாதாரத் துறையிலும் பிற்பட்ட வகுப்பினரின் நலனைப் பாதுகாக்கும் நல்லுணர்வோடும் எடுக்கப்பட்ட இந்த முடிவு மத்திய அரசுக்கும், இந்திய மருத்துவக் கவுன்சிலுக்கும் நமது அரசின் மூலம் தெரிவிக்கப்பட்டுவிட்டது!

வேளாண்மை வளர்ச்சிக்குத் திட்டங்கள்

வேளாண்மை வளர்ச்சியே நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என நன்கு அறிந்த தமிழக அரசு, வேளாண்மை உற்பத்திக்காக நிதி ஒதுக்கீட்டினை அதிகப்படுத்தி, பல திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்தியது.

சென்ற சில ஆண்டுகளாக, ஆண்டொன்றுக்கு 22 முதல் 24 கோடி ரூபாய் வரை இத்துறைக்குச் செலவிடப்பட்டு வந்ததை இவ்வாண்டு ரூ. 30 கோடி அளவிற்கு இத்துறையின் வளர்ச்சிக்காக அதிகப்படுத்தப்பட்டது. கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள், வேளாண்மை வளர்ச்சிக்கு அரசு எத்துணை முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை விளக்கும்:

ஆண்டு	செலவிடப்பட்ட தொகை (கோடி ரூபாய்)
1973-74	22.91
1974-75	24.08
1975-76	22.93
1976-77	23.45
1977-78	30.75

1976-77ல் வேளாண்மை வளர்ச்சிக்கு ரூ. 23.45 கோடி செலவிடப்பட்டது. அது 1977-78ல் ரூ. 30.75 கோடியாக அதிகரித்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

உற்பத்தியில் சாதனை :

1976-77ஆம் ஆண்டு, 53 இலட்சம் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி 1977-78ஆம் ஆண்டில் 62 இலட்சம் டன் அளவிற்கு உயர்த்தப்பட்டது. இது, இது வரை அடைந்திராத சாதனையாகும். இதன் மூலம் அரிசித் தட்டுப்பாடு அறவே நீங்கியது குறிப்பிடத் தக்கது. ஏனையப் பயிர்கள் விளைச்சலும் பெருமளவிற்கு அதிகப்படுத்தப்பட்டுள்ளன. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பயிர்	1970-71	1976-77	1977-78
	(இலட்சம் டன்களில்)		
1. அரிசி	50.67	53.00	62.00
2. சிறு தானியங்கள்	15.65	18.00	19.00
3. பயறு வகைகள்	1.33	2.90	3.00
4. கரும்பு (வெல்லமாக)	10.74	13.43	14.00
5. பருத்தி (இலட்சம் பேல்களாக)	0.59 (3.23)	0.58 (3.09)	0.68 (4.04)
6. எண்ணெய் வித்துகள்	10.36	13.50	14.90

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிகள்! சலுகைகள்!



நீர்ப் பாசனம் :

1976-77ஆம் ஆண்டு, சில அணைகள் காலம் தாழ்ந்து திறக்கப்பட்டன. ஆனால், 1977-78ஆம் ஆண்டு எல்லா அணைகளும் அரசின் சீரிய முயற்சியால், பாசனத்திற்கு முன்னதாகவே திறக்கப்பட்டு செயல்பட்டமை விளைச்சலைப் பெருக்குவதற்கு உறுதுணையாக அமைந்தது.

அணைகள் (1)	வழக்கமாக திறந்துவிடப்படும் நாள் (2)	1976-77ஆம் ஆண்டு திறந்த நாள் (3)	1977-78ஆம் ஆண்டு திறந்த நாள் (4)
1. மேட்டூர்			
அ. காவேரி டெல்டா	12 ஜூன்	24-7-76	15-7-77
ஆ. காவேரி மேட்டூர் திட்டம்	12 ஜூன்	திறக்கவில்லை	1-8-77
இ. மேட்டூர் கால்வாய்			
ஈ. கட்டளைக் கால்வாய்	1 ஆகஸ்டு	திறக்கவில்லை	1-8-77
உ. புள்ளம்பாடி கால்வாய்			
2. பவானிசாகர் (முதல் முறை)	15 ஆகஸ்டு	திறக்கவில்லை	16-8-77
3. அமராவதி	1 ஆகஸ்டு	15-12-76	5-8-77
4. பெரியாறு (இருபோகப் பகுதி)	1 ஜூன்	1-11-76	1-6-77
(ஒரு போக பகுதி)	14 ஆகஸ்டு	1-11-76	15-8-77
5. வைகை (திருமங்கலம் கால்வாய்)	1 ஜூன்	9-12-76	5-8-77
(பெரியாறு புதிய பகுதி)	15 செப்.	திறக்கவில்லை	15-10-77
6. சித்தாறு அணை	1 ஜூன்	26-11-76	10-6-77

புயல் மற்றும் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் :

இயற்கையின் சீற்றத்தால் தமிழகம் அடிக்கடி அவதிக்குள்ளாகிறது. இதனால் வேளாண்மை உற்பத்தி குறைவதுடன் வேளாண் பெருமக்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். 1972ல் இத் தமிழ் நாட்டை பெரு வெள்ளமும் புயலும் தாக்கியது. ஆனால் 1977ஆம் ஆண்டு தமிழ்நாடு வரலாறு காணாத வகையில் கொடிய புயலாலும் வெள்ளத்தாலும் தாக்கப்பட்டுப் பெருத்த சேதத்திற்கு உள்ளாகியது. இது வரை எந்த அரசும் வழங்கியிராத அளவுக்கு வேளாண்மை மக்களுக்கு குறிப்பாக சிறு விவசாயிகள் மற்றும் குத்தகை தாரர்களுக்கு இலவசமாக விதைகளும் தென்னங் கன்றுகளும் இவ்வரசு வழங்கியது. அத்துடன் கரும்பு, வாழை, வெற்றிலை போன்ற தோட்டங்களை புதுப்பிக்க மான்யமும் வழங்கியது. 1972ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின்போது, அன்றைய அரசு, நிலத்தை சமன்படுத்துதற்காக ரூ. 75 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இன்றைய அரசு இதற்கென ரூ. 230 இலட்சம் ஒதுக்கீடு செய்தது மட்டுமின்றி, விவசாயிகளின் துயர் துடைக்க வேறு பல நிவாரணப் பணிகளையும் செயல்படுத்தியது. நிவாரணப் பணிகளுக்கென ரூ. 380 இலட்சம் செலவிடப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

1. சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு ரூ. 30 இலட்சம் மதிப்புள்ள 1,718 டன் நெல் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

2. கரும்பு சாகுபடி செய்திருந்த சிறு விவசாயிகள் மற்றும் குத்தகை தாரர்களுக்கு ரூ. 87,352 மான்யமாக வழங்கப்பட்டு உள்ளது.

3. வாழை சாகுபடி செய்திருந்த சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு ரூ. 5,42,602 மான்யமாக வழங்கப்பட்டு உள்ளது.

4. சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு 98,164 தென்னங் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

5. வெற்றிலைச் சாகுபடி செய்திருந்த சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு ரூ. 10,27,420 மான்யமாக வழங்கப்பட்டுள்ளன.

6. இது வரை 7,064 ஹெக்டேர்களில் நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும் இதர விவசாயிகளுக்கு 50 சத மான்யத்திலும் சீர்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

7. தமிழகம் முழுவதும் எவ்வித பாகுபாடும் இன்றி எல்லா விவசாயிகளுக்கும் பூச்சி பூசன மருந்துகள் 23 சதவிகித மான்ய விலையில் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு என ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அமோக விளைச்சல் திட்டம் :

அமோக விளைச்சல் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும் திட்டம் என்றாலும் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் இதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியது. இதனால் 20.08 இலட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டிருந்த நெல் உயர் விளைச்சல் ரகம் 24.36 இலட்சம் ஹெக்டேரிலும், 4.69 இலட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டிருந்த சிறு தானியங்கள் 5.30 இலட்சம் ஹெக்டேரிலும் பயிர் செய்யப்பட்டது.

	1974-75	1976-77	1977-78
	(இலட்சம் ஹெக்டேரில்)		
நெல்	18.60	20.08	24.36
சிறு தானியங்கள்	3.56	4.49	5.39

ஏனைய ரகங்களை விட உயர் விளைச்சல் தரவல்ல ஏடீடி, ஐஇடி 1722, டிகேஎம் 8 ரகமும், சோளத்தில் ஐஎஸ் 3541, சி.எஸ் 3541 கோயில் பட்டி நெட்டை, சிஎஸ்எச் 5 மற்றும் சிஎஸ்எச் 6 ஆகிய ரகங்கள் பரப்பும் அதிகப்படுத்தப்பட்டது.

பயறு வகைகள் :

பயறு வகைகளைப் பொறுத்த வரை உற்பத்தி நமது தேவையை விடக் குறைவாகவே உள்ளது. அண்டை மாநிலங்களில் இருந்துதான் நாம் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். இந்நிலையினைப் போக்க அரசு பல திட்டங்களை உடனடியாக மேற்கொண்டது. 9.70 இலட்சம் எக்டேர்களாக இருந்த பரப்பு 10.40 இலட்சம் எக்டேருக்கு உயர்த்தப்பட்டது. மான்ய விலையில் 80,000 எக்டேர்களில் ஒட்டு மொத்த மருந்து தூவவும் 20,000 எக்டேரில் மணிச் சத்து தெளிக்கவும் புதிய திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.



இது நாள் வரை 600—800 டன் விதைகள் மட்டுமே விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலை மாறி இவ்வாண்டு 1,430 டன் அளவிற்குத் தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்று வரை விநியோகம் செய்யாத அளவுக்கு இவ்வாண்டு 3.60 இலட்சம் நுண்ணுயிர்க் கலவைகள் வழங்கப்பட்டன.

பயறு வகைகள் உற்பத்திக்காக ரூ. 13.72 இலட்சம் மத்திய அரசிடம் இருந்து பெற்று கீழ்க்கண்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- 2,150 எக்டேருக்கு நுண்ணுயிர்க் கலவை இலவசமாக வழங்கப்பட்டது.
- 1,770 எக்டேரில் பயிர்ப் பாதுகாப்புக்காக இயக்கும் செலவு, மேற்கொள்ளப்பட்டது.
- 115 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் 50 சதம் மான்யத்தில் வழங்கப்பட்டது.
- பயறு வகைப் பயிர்களுக்கு 25 சதம் மான்யத்தில் 14,284 எக்டேருக்கு பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டன.

பயறு வகைகள் உற்பத்திக்காக உலக வங்கி உதவியுடன் தீவிர பயறு வகைகள் அபிவிருத்தித் திட்டம் ஒன்றினை மேற்கொள்ள, பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டம் :

எண்ணெய் வித்துகள் உற்பத்தி நமது தேவைக்குச் சற்றுக் குறைவாகவே இருக்கின்றது. இதிலும் தன்னிறைவு காணப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிலக்கடலையில் விளைச்சலைப் பெருக்குவதற்காக நுண்ணூட்டச் சத்துக்கள் வேளாண் துறை மூலம் தயாரிக்கப்பட்டு பெருமளவில் 1977-78ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்டது. 332 டன் (MICRO NUTRIENTS) நுண்ணூட்டச் சத்துக்கள் 26,560 எக்டேர் பரப்பளவிற்கு இவ்வாண்டு விநியோகிக்கப்பட்டது. இது ஒரு புதிய முயற்சியும் பெரும் சாதனையுமாகும். இதன் மூலம் நிலக்கடலையின் உற்பத்தி பெருமளவில் பெருகியுள்ளது.

தவிர, இது வரை 1,000—2,000 டன் என்ற அளவில் விநியோகிக்கப்பட்டு வந்த ஜிப்சம் என்ற ஊட்டச் சத்தும் கடந்த ஆண்டு 11,374 டன் விநியோகிக்கப்பட்டது. இது நிலக்கடலை உற்பத்திக்கு ஓர் திருப்பு முனையாக அமைந்தது.

பயிர்ப் பாதுகாப்புப் பணியில் நிலக்கடலையைப் பொறுத்த வரை இவ்வாண்டு ஒட்டு மொத்தமாகச் சுமார் 5,000 எக்டேர் பரப்பில் பயிர்ப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நிலக்கடலைப் பயிரில் பிற பயிர்களைப் போல் அதிக விளைச்சல் தரும் ரகங்கள் இல்லாத குறையை நீக்கிப் புதிய உயர் விளைச்சல் ரகங்கள் (டி.எம்.வி. 11ம், டி.எம்.வி. 12ம்) கண்டுபிடிக்கப்பட்டன.

நிலக்கடலையில் தரமான விதைகள் போதிய அளவு விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை என்ற குறையை நீக்க இந்த ஆண்டு தனித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன் மூலம் கரு விதைகள் (BREEDERS SEEDS) செங்கல்பட்டு மாவட்டம் புட்லூர் அரசு விதைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு விதைப் பண்ணைகள் அமைக்க விவசாயிகளுக்கு விதைகள் விநியோகிக்கப்படுகின்றன.

சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தியை மேலும் பெருக்குவதற்காகத் தரமான விதைகள் உற்பத்திக்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 13.5 டன் சிறப்பு விதைகள் (ELITE SEEDS) வழங்கப்பட்டன. இவைகள் நமது மாநிலத்திற்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்ய வழி வகுக்கும். மேலும் அதிக விளைச்சல் தரும் உயரிய ரகத்தை உருவாக்குவதற்கான புதிய ஆராய்ச்சித்திட்டம் திண்டிவனம் ஆராய்ச்சிப் பண்ணையில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டது.

தென்னை அபிவிருத்தித் திட்டத்தில் இதுவரை பெரும்பாலும் நெட்டை ரகங்களே அதிக அளவு விநியோகிக்கப்பட்டு வந்தது. நெட்டை குட்டை ரகம் தென்னை விநியோகத்தில் இந்த ஆண்டு 28,000 கன்றுகள் வழங்கப்பட்டன. மேலும் ஒரு இலட்சம் நெட்டை குட்டை தென்னங் கன்றுகளும் உற்பத்தி செய்யப் புதிய திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னைச் சாகுபடியையே அழிக்கக் கூடிய வாடல் நோய் அண்டை மாநிலத்தில் இருந்து பரவியது. இதனைத் தடுக்க இம்மாவட்டத்தில் இவ்வாண்டு ஓர் ஆராய்ச்சித் திட்டம், மேற்கொள்ளப்பட்டது. தென்னை அபிவிருத்திக்கென கோவை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் புதிய தென்னை அபிவிருத்தித் திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்பட்டது.

பருத்தி :

பருத்திச் சாகுபடியிலும் புதிய வரலாறு படைத்துள்ளோம். சீரிய வீரிய ஒட்டு ரக வரலட்சுமி பருத்தி ரக விதைகள் இது வரை கர்நாடக மாநிலத்தில் இருந்துதான் பெற்று வந்துள்ளோம். கிலோ ஒன்றுக்கு ரூ. 200 என்று விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருந்தது. இதனை மாற்றித் தமிழகத்திலேயே விதைகள் உற்பத்தி செய்வதற்கென ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் இந்த ஆண்டு 25 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் விதை கிலோ ஒன்றுக்கு ரூ. 60 முதல் 70 என்ற அளவில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தப் பருத்தி ரகம் 31,515 எக்டேரில் இந்த ஆண்டு பயிரிடப்பட்டுள்ளது. 15,000 எக்டேர் பரப்பில் கூடுதலாகப் பருத்திப் பயிர் செய்ததுடன் 1 இலட்சம் பேல்கள் கூடுதலாகவும் உற்பத்தி செய்யப்பட்டன.

தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டையில் கூடுதலாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கரும்பு :

கரும்பு உற்பத்தியிலும் இவ்வரசு பெரும் சாதனை புரிந்துள்ளது. 12,000 எக்டேர் பரப்பில் கூடுதலாகப் பயிர் செய்யப்பட்டு, 50,000 டன் வெல்லம் கூடுதல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு உள்ளது. கரும்பு உற்பத்தியை மேலும் அதிகரிக்கத் தரமான கரணைகள் உற்பத்திக்காக ஆறு வட்டார நாற்றங்கால்கள் அமைக்க அரசு அனுமதியளித்து அவற்றில் கீழ்க்கண்ட ஐந்து இடங்களில் நாற்றங்கால்கள் நிறுவப்பட்டுள்ளன :

கோனேரிகுப்பம்	காஞ்சிபுரம் வட்டம், செங்கை மாவட்டம்
காட்டேரி மாமண்டூர்	ஆரணி வட்டம், வட ஆர்க்காடு மாவட்டம்
வளவனூர்	விழுப்புரம் வட்டம், தென்னார்க்காடு மாவட்டம்
ஓட்டபள்ளி பாப்பாரபாளையம்	கிருஷ்ணகிரி வட்டம், தர்மபுரி மாவட்டம்
மூவா நல்லூர்	மன்னார்குடி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

பெயர் மாற்றம் !

கிராமங்களில் தலையாரி, வெட்டி, நீர்கண்டி என்று அழைக்கப்பட்ட ஊழியர்கள் முறையே கிராமக் காவலர், கிராமப் பணியாளர், பாசனக் காவலர் என்று அழைக்கப்பட வேண்டும் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆறுவது வட்டார நாற்றங்கால் திருச்சி மாவட்டத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இடுபொருள்கள் :

வேளாண்மைக்கு உறுதுணையாக உள்ள இடுபொருள்கள் — விதை, உரம், பூச்சி மருந்துகள் ஆகியவைகளின் விலைகள் தொடர்ந்து அதிகமாக இருந்து வந்துள்ளன. இதனைக் குறைக்க அரசு பல நடவடிக்கைகள் எடுத்ததுடன் மத்திய அரசுடன் தொடர்ந்து வலியுறுத்தி உரங்களின் விலையை— முக்கியமாக யூரியாவின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. 1974ஆம் ஆண்டு, டன் ஒன்றுக்கு ரூ. 1,920 ஆக இருந்த யூரியாவின் விலை 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ரூ. 1,435 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் ரகம் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களின் விதைகள் உற்பத்தியை அதிகப்படுத்தி விதைகளின் விலை பெருமளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது. கிலோ ஒன்றுக்கு ரூ. 10 முதல் 12 வரை விற்று வந்த விதைகள் இன்று ரூ. 6 முதல் 8 வரை விற்கப்படுகின்றன.

உர விநியோகம் :

உரங்கள் கார்டுகள் மூலம்தான் வழங்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாட்டினை 1973ஆம் ஆண்டு முந்தைய அரசு விதிமுறைகள் வகுத்தது. இதன் மூலம் விவசாயிகள் பல தொல்லைகளுக்கு ஆளாக நேர்ந்ததை இவ்வரசு அறிந்து, அம்முறையை அடியோடு ஒழித்ததுடன் உரங்கள் தாராளமாகக் கிடைக்கவும் வழி வகைகள் செய்துள்ளது. இதன் மூலம் உர விநியோகத்தில் இது வரை ஏற்படாத அளவு பெரும் சாதனையை இவ்வரசு ஏற்படுத்தியது.

	1974-75	1976-77	1977-78
	(இலட்சம் டன்னில்)		
தழைச்சத்து	1.48	1.96	2.87
மணிச்சத்து	0.53	0.45	0.78
சாம்பல் சத்து	0.43	0.57	0.97

குறிப்பாக தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், கோவை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சென்ற ஆண்டில் விநியோகம் செய்ததை விட இரட்டிப்பு மடங்கு இவ்வாண்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

	1976-77ம் ஆண்டின் தழைச்சத்து விநியோகம் (டன்)	1977-78ம் ஆண்டின் தழைச்சத்து விநியோகம் (டன்)
திருச்சி	17,518	27,816
தஞ்சாவூர்	26,565	41,736
புதுக்கோட்டை	2,815	4,692
மதுரை	15,663	25,691
இராமநாதபுரம்	7,585	14,518
திருநெல்வேலி	11,816	18,922
கோவை	28,099	45,072

வளமான வேளாண்மைக்குத் தரமான விதைகளே அடிப்படை என்பதற்கு இணங்க இவ்வரசு தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்குவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இதற்கு உறுதுணையாக விதைச் சட்டத்தின் கீழ் விதைச் சான்றிதழ் நிறுவனம் ஒன்று இவ்வாண்டு நிறுவப்பட்டு உள்ளது. இது வேளாண்மை இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் தனி நிறுவனமாக இயங்கி வரும். இதன் மூலம் வேளாண் பெரு மக்களுக்குச் சான்றிதழ் பெற்ற விதைகள் அதிக அளவு கிடைக்க வகை செய்யப்படும்.

மேலும் விற்பனை மையங்களில் தரமற்ற விதைகள் விற்பனை செய்வதைத் தடுப்பதற்கும் விற்கப்படும் விதைகள் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்குச் சிறிதும் குறையாமல் இருக்கிறதா என்பதனைப் பரிசோதிக்கவும், தனியே ஓர் ஆய்வகம் இவ்வாண்டு நிறுவப்பட்டது. இது கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு மதுரை, கோவை மற்றும் சேலம் மாவட்டங்களில் முன்னோடியாகச் செயல்பட்டு வருகிறது.

தரமான விதைகளின் அதிகப்படியான தேவையைக் கருத்தில் கொண்டு மேலும் ஒரு விதை உற்பத்தி மையம் கோவையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையம் கோவை, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களின் தேவையைப் பூர்த்திசெய்யும்.

விதைகளின் தரத்தினையும் தூய்மையையும் சோதிப்பதற்கென ஓர் ஆய்வு மையம் புதுக்கோட்டை மாவட்டம் அண்ணா பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது.

பயிர்ப் பாதுகாப்பு :

இந்த ஆண்டு இது வரை இல்லாத அளவு புரொடீனியா என்ற வெட்டுப் புழு கோவை மாவட்டம் பொள்ளாச்சிப் பகுதியிலும், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியிலும் பல பயிர்களைத் தாக்கிப் பெரும் சேதத்தினை உண்டு பண்ணியது. இவற்றினை அறவே ஒழிக்க அரசு உடனடி நடவடிக்கைகள் எடுத்ததுடன் இதற்கான பூச்சிமருந்துகள் 25 சதவிகித மான்ய விலையில் வழங்கவும் உத்தரவிடப்பட்டது. இதற்கு மான்யமாக 4,372 எக்டேருக்கு ரூ. 53,148 செலவிடப்பட்டுள்ளது. இத்தகையதொரு சலுகை விவசாயிகளுக்கு சமீப காலங்களில் வழங்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நெல்லில் தோன்றும் புகையான் பூச்சியைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மத்திய அரசின் உதவியுடன் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மத்திய அரசு முதலில் 8,000 எக்டேர்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்தது. இவ்வரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க மத்திய அரசு 20,000 எக்டேர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்திற்கென ரூ. 17.74 இலட்சம் செலவிடப்பட்டு, 20,000 எக்டேர்களில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பிட்ட பகுதிகளில் நெல்லைத் தாக்கும் தண்டுப் புழு மற்றும் மணிலாவைத் தாக்கும் சிவப்பு கம்பளிப் பூச்சி மற்றும் சுருள் பூச்சி ஆகியவைகளைக் கட்டுப்படுத்த மத்திய அரசின் உதவியுடன் ஒட்டு மொத்த மருந்துத் தெளிப்பு மேற்கொள்ளப்பட்டது. நெற்பயிர் 34,000 எக்டேர் பரப்பிலும், மணிலாவில் 53,000 எக்டேர் பரப்பிலும் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வி தம் மருந்து தெளிப்பதற்கு மான்யமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3 வழங்கப்பட்டது. இம்மான்யத்திற்காக மத்திய அரசு ரூ. 7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஏற்றம் காண ஏற்ற வழி

படித்தவன் உழவேண்டும்; உழுபவன் படிக்க வேண்டும். படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க, உழுபவன் உற்பத்தியைப் பெருக்க, இருசாராரும் இணைந்தால் தானே ஏற்றம் காண முடியும்?

—பேரறிஞர் அண்ணா

இவ்வாண்டு மேலும் புதிதாக 900 விசைத் தெளிப்பான்கள் வாங்கி விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வாடகைக்கு விடப்பட்டன. எல்லா விவசாயிகளுக்கும் காலத்தே மருந்து தெளிப்பதற்காக மேலும் பல தெளிப்பான்கள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மான்ய விலையிலும் விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வழங்கப்படுகின்றன. தீவிர எண்ணெய் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு 5,386 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இது இதுவரை கண்டறியாத சாதனையாகும்.

தீவிரப் பருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 550 தெளிப்பான்களும் மான்ய விலையில் வழங்கப்பட்டன.

இந்திய ஜெர்மானிய நீலகிரி மாவட்ட அபிவிருத்தித் திட்டம் :

மேற்கு ஜெர்மனி அரசு ஒத்துழைப்புடன் நீலகிரி மாவட்ட அபிவிருத்திக்காக இத்திட்டம் 1967ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி தொடங்கி 31-3-1977 அன்றுடன் முடிவடைந்தது. நீலகிரி மாவட்ட மலைவாழ் மக்களின் நலன் கருதி இத்திட்டத்திற்கு ஆகும் செலவினைத் தமிழக அரசே ஏற்று இத்திட்டத்தினைத் தொடர்ந்து நடத்திட உத்தேசித்துள்ளது. இதன் மூலம் உருளைக் கிழங்கு மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் கீழ், நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாகப் பெருமளவு காய்கறிகள் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்வாண்டு 43.83 இலட்ச ரூபாய் மதிப்பில் 9,583 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. இது இதுவரை கண்டறியாத சாதனையாகும்.

மலைப் பகுதிகள் அபிவிருத்தி :

மலைப் பகுதிகள் அபிவிருத்திக்காக, குறிப்பாக நீலகிரி மலைப் பகுதிக்காகத் தனியே ஒரு திட்டமும், பிற மலைப் பகுதிகளுக்கான தனியே ஒரு [illegible]மும் செயல்படுத்தப்படுகின்றன.

நீலகிரி மலைப் பகுதிக்கான திட்டம் :

இதன் கீழ் 9 திட்டங்கள் செயல்படுகின்றன. இத்திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும் அரசு இப்பகுதி வாழ் மக்களின் நலன் கருதி 1975-76ல் 10.73 இலட்சமும், 76-77ல் 41.15 இலட்சமும் செலவு செய்யப்பட்டிருந்ததை 77-78ல் ரூ. 85.30 இலட்சம் அளவிற்கு உயர்த்தியது. 78-79ல் மேலும் இத்தொகையை ரூ. 110.38 இலட்சத்திற்கு உயர்த்தி ஒதுக்கீடு செய்துள்ளது.

பிற மலைப் பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின் மூலம் மலைவாழ் மக்களுக்கு பழக் கன்றுகளும், கருவிகளும் 50 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன. இது நாள் வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 18 இலட்சம் முதல் ரூ. 20 இலட்சம் வரை மட்டுமே செலவு செய்து வந்திருந்ததை இவ்வரசு இத்திட்டத்திற்கு 77-78ஆம் ஆண்டில் ரூ. 24 இலட்சம் ஒதுக்கீடு செய்து மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது.

ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டம் :

பல்வேறு திட்டங்கள் செயல்பட்டு வந்தாலும், இவ்வரசு மிகப் பின்தங்கிய மாவட்டங்களில் வேளாண் மக்களின் நல்வாழ்விற்காக ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தை மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தியதில் தீவிர கவனம் செலுத்தியது. இதற்கு முன்னோடித் திட்டமாக தர்மபுரி மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு 69.66 இலட்சம் வேளாண்மைத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டில் இப்பணி மிக அதிக அளவில் நடைபெற வழி வகைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

வறட்சிச் சார்புப் பகுதித் திட்டம் :

அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்படும் மாவட்டங்களான தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களின் அபிவிருத்திக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் பெரும்பான்மையான சிறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உற்பத்தியினைக் கணிசமாகப் பெருக்கவும் வழி வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. 1976-77ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 219.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இவ்வரசு பொறுப்பேற்ற பின் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து 77-78 ஆம் ஆண்டில் இதற்கான ஒதுக்கீட்டினை ரூ. 299.02 இலட்சம் என உயர்த்தி திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன.

தோட்டக் கலை :

பெரிய அளவில் பழத் தோட்டங்கள் அமைக்கும் திட்டத்தை இதுவரை தமிழகத்தில் செயல்படுத்தியது இல்லை. பழங்களின் உற்பத்தியைப் பெருக்கவும் வேளாண் பெருமக்களுக்குத் தரமான பழக் கன்றுகள் கிடைக்கவும் பெரிய அளவில் பழத்தோட்டங்கள் அமைக்க அரசு உத்தேசித்து முன்னோடித் திட்டமாகப் புதுக்கோடை மாவட்டத்தில் 400 எக்டேர் பரப்பில் ஒரு பழத்தோட்டம் அமைக்க அனுமதியளித்து அதற்கான வேலைகள் தொடங்கப் பட்டுள்ளன.

ரொபாஸ்டா வாழையைப் பெருக்குவதில் அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு முன்னோடியாக நல்ல தரமான சிறப்புக் கன்றுகள் வழங்குவதற்கு இரண்டு நாற்றங்கால்கள் புதுக்கோட்டை மாவட்டம் முதலைப்பட்டியில் ஒன்றும், வட ஆர்க்காடு மாவட்டம் நவ்வாக்கில் ஒன்றும் இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளது.

வாழையில் முடிக்கொத்து நோய்த் தடுப்பு :

கொடைக்கானல் மலைப் பகுதிகளில் வாழை சாகுபடியே அழிந்து போகும் நிலையில் கடுமையான அளவில் முடிக்கொத்து நோய் காணப்பட்டது. இவ்வரசு இந்நோயைக் கட்டுப்படுத்த உரிய பாதுகாப்பு முறைகளை உடனடியாகக் கையாண்டு, நோய் தாக்கப்பட்ட தோட்டங்கள் மீண்டும் வளம் காண வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டு இத்திட்டம் 36,000 ஏக்கரில் ரூ. 12.47 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. இந்நோயை அறவே ஒழிக்க இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பயிற்சித் திட்டம் :

உழவர்களுக்குப் பயிற்சி அளிக்க, இம்மாநிலத்தில் ஒன்பது பயிற்சி நிலையங்கள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. எனினும் மாவட்டத்திற்கு ஒரு பயிற்சி நிலையம் இருந்தால்தான் உழவர் பெருமக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நிலையம் அமைக்க இவ்வரசு தீர்மானித்து இவ்வாண்டில் புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் தர்மபுரியில் மூன்று பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தியது. நடப்பு ஆண்டில் மேலும் மூன்று பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட இருக்கின்றன.

ஆராய்ச்சிப் பணிகள் :

இவ்வாண்டு 16 புதிய ரகங்களை வேளாண்மைத் துறை வெளியிட்டுள்ளது. அவை நெல்லில் 2 ரகங்களும், சிறு தானியத்தில் 7 ரகங்களும், பயறு வகைகளில் 4 இரகங்களும், எண்ணெய் வித்தில் 2 ரகங்களும் மற்றும் பருத்தியில் ஒரு ரகமும் ஆகும்.

நீர்ப் பராமரிப்பு :

மண் மற்றும் நீர்ப் பராமரிப்பு வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு அடிப்படையாய்



அமைந்துள்ளது என்பதனை அறிந்த அரசு புதிய முயற்சியாக மண் மற்றும் நீர்ப் பராமரிப்புப் பணிகளுக்காக மதுரை மாவட்டத்தில் மேலூரிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகாசியிலும் இரண்டு திட்டங்களை ஆரம்பித்துள்ளது. பெரியார் நீர்ப் பிடிப்புப் பகுதிக்கு மேலூர் மையமும், வறட்சி சார்புப் பகுதிக்குச் சிவகாசி மையமும் செயல் படும்.

கசிவு நீர்க் குட்டைகள் :

இத்திட்டம் மிகச் சிறிய அளவிலே நடைபெற்று வந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் இறவைப் பாசனப் பகுதிகளை அதிகப்படுத்த முடியும் என எண்ணிய அரசு பெரிய அளவில் திட்டத்தைச் செயல்படுத்த எண்ணி இவ்வாண்டு மட்டும் ரூ. 54.85 இலட்சம் செலவில் 280 கசிவு நீர்க் குட்டைகளை நிறுவியது. தொடர்ந்து பெரும் [illegible] கசிவு நீர்க் குட்டைகளை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[illegible] சீர்திருத்தம் :

இப்பணி மேலும் தீவிரப்படுத்தப்பட்டு இவ்வாண்டில் புல்டோசர்களின் உதவியால் 4,600 எக்டேர் நிலம் சமப்படுத்தப்பட்டது. தவிர டிராக்டர்கள் மூலம் 29,324 எக்டேர் நிலம் உழவு செய்யப்பட்டது.

அதிக அளவு பரப்பு நீர்ப்பாசனத்தில் [illegible] [illegible]

இவ்வாண்டு 4,172 குழாய்க் கிணறுகளும் 2,689 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் நிறுவப்பட்டன. மேலும் 2,109 கிணறுகளில் துளைகள் இட்டும், 2,215 கிணறுகளை ஆழப்படுத்தியும் அதிக அளவு நீர்ப்பாசனத்திற்கு வழி வகைகள் மேற்கொள்ளப் பட்டன.

கிணறுகளைத் தோண்டுவதற்கும் ஆழப்படுத் துதற்கான நவீன கருவிகள் நம்மிடையே இல்லாத குறையை நீக்க வேண்டி நடப்பு ஆண்டில் ரூ. 116 இலட்சம் செலவில் நவீன 4 ஹாமர் (Hammer Drill)துளையிடும் கருவிகளை இத்துறை வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்துள்ளது. இக் கருவி மிகவும் கடினமான பாறைப் பகுதிகளிலும் ஒரு நாளைக்கு 120 அடி ஆழம் துளைக்க வல்லது.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி, திருச் செந்தூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் பகுதிகளில் காற்றரிப்பினால் பெரிதும் அவதிக்குள்ளாகிய வேளாண் மக்களின் துயர் துடைக்க 1977ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ரூ. 3.80 இலட்சம் செலவில் காற்றரிப்புத் தடுப்புத் திட்டம் ஒன்றினை மேற்கொண்டது. இதன் மூலம் 10,000 எக்டேர் நிலப்பரப்பு காற்றரிப்பினால் ஏற்படும் பாதகமான விளைவுகளில் இருந்து பாதுகாக்கப்படும். இத்திட் டம் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்து செயல் படும்.

நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் :

நடமாடும் மண் பரிசோதனை நிலையம் தமிழகத் தில் மூன்று இடங்களில் இயங்கி வருகின்றன, எனினும், பின்தங்கிய மாவட்டமான இராமநாத புரம் மாவட்ட வேளாண் மக்களின் நலம் கருதி, ஒரு நடமாடும் மண் பரிசோதனை நிலையம் பரமக் குடியைத் தலைமையிடமாகக் கொண்டு இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளது. இது, இம்மாவட்ட மக்களின் நெடுங்காலக்குறையைப் போக்குவதாக அமைந்து உள்ளது.

கோட்ட அளவு மண் பரிசோதனை நிலையங்கள் :

தற்பொழுது மாவட்டத்திற்கு ஒரு மண் பரி சோதனை நிலையம் இயங்கி வருகிறது. வேளாண்மை மக்கள் அடிக்கடி சென்று மண் வளத்தைப் பரிசோ தனை செய்து கொள்வதற்கு வசதியாக கோட்ட அளவிலும் மண் பரிசோதனை நிலையங்கள் இருக்க வேண்டும் என்று அரசு கருதிய முன்னோடித் திட்ட மாக மதுரை மாவட்டம் தேனியிலும், இராமநாத புரம் மாவட்டம் சிவகங்கையிலும் ஆக இரண்டு கோட்ட மண் பரிசோதனை நிலையங்கள் இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டம் மேலும் பல கோட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

உரம் மற்றும் பூச்சி மருந்துகள் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் :

இவ்வாண்டு இது வரை காணாத அளவு உரம் மற்றும் பூச்சி மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு உள்ளன. அதிக அளவு விற்பனை செய்யப்படும் பொழுது அவற்றில் ஏற்படும் தரக் குறைவினைத் தடுக்க இவ்வரசு தீவிர கவனம் செலுத்தி மத்திய அரசின் உதவியுடன் இரண்டு பரிசோதனை நிலையங் கள் இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளன. திருநெல் வேலி மாவட்டம் கோவில்பட்டியில் நிறுவியுள்ள நிலையம் உரங்கள் பரிசோதனை செய்யவும், செங்கல் பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள நிலையம் பூச்சி மருந்துகள் பரிசோதனை செய்யவும் இயங்கிவரும். இவ்விரண்டு நிலையங்கள் ரூ. 9.58 இலட்சம் செலவில் அமைக்கப்படுகின்றன.

மாவட்டங்களின் மண் தன்மை பற்றி ஆய்வு செய்ய இரண்டு நிலையங்கள் கோவையிலும் தஞ்சை யிலும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத் திலும் உள்ள மண் தன்மை பற்றி ஆய்வுகளை உட னடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கருதிய அரசு மேலும் இரண்டு ஆய்வு நிலையங்கள் (ஒன்று வேலூரிலும் மற்றொன்றுபாளையங்கோட்டையிலும்) ரூ. 6.92 இலட்சம் செலவில் இவ்வாண்டு நிறுவி யுள்ளது.

இவ்வாண்டு புதிய முறையாக மணிலாவில் நுண்ணூட்டச் சத்துக்கள் இடும் முறை புகுத்தப்பட்டுள்ளது. இதனைப் பெருமளவில் வேளாண் மக்கள் வரவேற்றதைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் ஆண்டொன்றுக்கு 1,000 டன் நுண்ணூட்டச் சத் துக்கள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று துவக்கப் பட்டுள்ளது.

விதை சுத்திகரிக்கும் நிலையங்கள் :

தமிழகத்தில் இரண்டு விதை சுத்திகரிக்கும் நிலையங்கள் மட்டுமே இயங்கி வந்தன. பெருமளவு தரமான விதைகளை விவசாயப் பெருமக்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்று கருதிய அரசு மேலும் மூன்று விதை சுத்திகரிக்கும் நிலையங்களை போரூர், சோழவந்தான் மற்றும் கள்ளக்குறிச்சியில் இவ்வாண்டு நிறுவியது. இது போன்று மேலும் இரு நிலையங்கள் திருநெல்வேலி மாவட்டம் கிள்ளி குளத்திலும், கோயம்புத்தூர் மாவட்டம் பவானியி லும் கட்டப்பட்டு வருகின்றன.

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்பதை நன்கு உணர்ந்துள்ள தமிழக அரசு, விவசாயப் பெருங்குடி மக்களின் நல்வாழ்வில் மிகுந்த அக் கறை கொண்டு, தன்னுடைய சக்திக்கு மீறிய பல சலுகைகளை அவர்களுக்கு வழங்கியுள்ளது. வேளாண்மையைப் பெருக்க —உழவர் வாழ்வில் உவகை பொங்கிட —அரசு கொண்டுள்ள ஈடு பாடும் அக்கறையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறதல்லவா?

'நோய்நாடி நோயின் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்பது திருக்குறள்.

அதற்கிணங்க மருத்துவத் துறை செயல்பட் டாலன்றி மக்கள் வாழ்வு நல்வாழ்வாவது முயற் கொம்பாகிவிடும்.

அந்த வகையிலே அத்துறை செயல்படுவதற் கான ஆக்கபூர்வமாக அத்தனை முயற்சிகளையும் அயராது மேற்கொண்டிருக்கிறது இந்த அரசு. அவ் வாறான அரிய நடவடிக்கைகளிலே ஒன்று தான் மக்கள் நல்வாழ்வுத் துறையின் புதிய அமைப்பான நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஆகும்.

கிராம மக்களுக்கு மருத்துவ நல்வாழ்வுப் பணிகள் :

கிராம மக்களுக்கு ஒருங்கிணைந்த நல்வாழ்வுப் பணிகளை அளிக்கும் குறிக்கோளுடன் ஆரம்ப சுகா தார நிலையங்கள் தொடங்கப்பட்டிருந்த போதிலும் ஒரு வட்டாரத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மருத்துவ அலுவலர்கள் சென்று மருத்துவ வசதி அளிக்க முடிவதில்லை. ஆதலால் 1977-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய திட்டமான நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலம் கிராம மக்களுக்கு மருத்துவ நல்வாழ்வுப் பணிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் மூன்று மருத்துவ அதிகாரிகள் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவ அதிகாரி காலையிலும், மாலையிலும் நிலையத்திலேயே தங்கி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பார். மற்ற இரு மருத்துவர்கள் கிராமப் புற மக்களுக்கு நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்பு, நோய்த் தீர்ப் புக்குப் பின் நலம் பேணுதல் ஆகிய பணிகளை அளிப்பார்கள். ஒவ்வொரு குழுவும் ஒரு நாளில் 6 முதல் 8 கிராமங்களுக்குச் செல்லும். அக் குழு குறிப்பிட்ட கிராமத்திற்கு ஒரு குறிப்பிட்ட நாளில் செல்லும். அவ்வாறு ஒரு வாரத்திற்குள் அந்த வட்டாரம் முழுவதும் சென்று வரும். சிக்கலான நோய் கண்டவர்களை அருகிலுள்ள பெரிய மருத்துவ மனைக்கு அனுப்பி வைப்பார்கள்.

கிராம மக்களுக்கும் வருகை தரும் நடமாடும் மருத்துவக் குழுவிற்கும் இடையே உடல் நல ஆய் வாளர்கள் சிகிச்சை சம்பந்தமான ஆதாரப் பணி களைச் செய்கிறார்கள். மருத்துவ அதிகாரியும் மருத்துவக் குழுவும் வருவதற்கு முன்னதாக் நியமிக் கப்பட்ட நாட்களில் தகுந்த பிணியாளர்களைச் சிகிச் சைக்காக ஒன்று சேர்ப்பார்கள். மற்ற நாட்களில் வேண்டிய மருத்துவப் பணிகளைச் செய்வார்கள். இவ்வாறாக, மக்களுக்கு மருத்துவப் பணிகள் அவர் கள் இருப்பிடங்களிலேயே அளிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் இது வரை இரண்டு மருத்துவ அதிகாரிகளே இருந் தனர். இப்புதிய திட்டத்தின் கீழ், இப்பொழுது, மூன்றாவது மருத்துவ அதிகாரி ஒருவரும் இருப்பார். இதனால் ஒன்றியத்தில் உள்ள எல்லாக் கிராமங் களையும் கவனிக்க முடியும். இத்திட்டம் ரூ. 7.16 இலட்சம் செலவில் 24 ஆரம்பச் சுகாதார நிலையங் களில் துவக்கப்பட்டுள்ளது. இந்தப் புதுமையான திட்டம் துவக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இரண்டு வாகனங்கள் உள்ளன. மருத்துவக் குழுவின் நடமாட்டத்தை மேம்படுத்துவதன் பொருட்டு பெட்ரோல் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங் குவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 14,000 அல்லா மல் மேலும் ரூ. 10,000 இம் மருத்துவக்குழுக்களின் பணிக்காக அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு குழு விற்கும் ஒரு மருந்து கலக்குநர் நியமிக்கப்பட்டு உள்ளார்.

இந்திய அரசு இந்தியா முழுவதிலும் உள்ள கிராம மக்களுக்கு, சுகாதாரப் பணிகள் மற்றும் மருத்துவ உதவி அளிக்கின்ற வகையில் "சமூக சுகாதாரப் பணியாளர்கள் திட்டத்தை" கடந்த 2-10-77லிருந்து துவக்கியது. இத்திட்டத்தை தமிழ்நாட்டிலும் செயல்படுத்த மத்திய அரசு கோரியது. இதற்கான முழுச் செலவையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்ளும். எனினும் இத்திட்டத் திற்கு, தமிழ்நாட்டில் ஆதரவு இல்லாதது மட்டு மின்றி, மருத்துவக் கல்விப் பட்டம் பெறும் மாண வர்களும் மருத்துவர்களும் மற்றும் மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் நலனைக் கருதி இத்திட்டத்தைத் தமிழ்நாட்டில் செயல்படுத்த வில்லை. இதற்கு மாற்றுத் திட்டமாகத் தமிழ் நாட்டில் துவக்கப்பட்டதுதான் நடமாடும் மருத் துவக் குழுத் திட்டமாகும்.

130 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன் றிலும் மூன்றாவது மருத்துவர் ஒருவர் பணியாற்று கிறார். தமிழ்நாட்டில் மொத்தம் 383 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 2,880 கிளை நிலையங்களும் இருக்கின்றன. வெளிப்புற நோயாளிகளின் எண்

ணிக்கை அதிகமாயிருப்பதை கருத்தில் கொண்டும் நடமாடும் மருத்துவக் குழுத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தவும் 1978-79ஆம் ஆண்டு 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றுவது மருத்துவர் ஒருவரை நியமிக்க அரசு இப்போது ஆணை பிறப்பித்துள்ளது. ஏற்கெனவே, 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் தங்கள் பணிகளைச் செய்து வருகின்றன. 78-79ஆம் ஆண்டில் மேலும் மேற்குறிப்பிட்ட 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் பணிகளைத் தொடங்கும். இதற்காக, இவ்வாண்டிற்கு மேலும் 100 மருத்துவ அதிகாரிகளையும், 200 மருந்து கலக்குநர்களையும் நியமிக்கவும், 50 புதிய ஊர்திகளை வாங்கவும், 50 ஊர்தி ஓட்டுநர்களை நியமிக்கவும் அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. மேலும் 1979-80ஆம் ஆண்டு 153 மூன்றும் மருத்துவர்களையும் 125 நடமாடும் மருத்துவக் குழுக்களையும், 1980-81ஆம் ஆண்டு 134 நடமாடும் மருத்துவக் குழுக்களையும் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே நடமாடும் மருத்துவப் பிரிவுகள் (Mobile Medical Unit) என்னும் ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவுகள், தமிழ்நாட்டில் 11 இடங்களில் மட்டுமே உள்ளன. இந்த நடமாடும் மருத்துவப் பிரிவுகள் தொலை தூரங்களில் உள்ள சிறிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்கின்றன. இவைகளின் சேவை நோய்த் தீர்ப்புக்கு மட்டுமே பயன்படுகின்றன. நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்புக்குப் பின் நலம் பேணுதல் ஆகிய முறைகளுக்கு இப்பிரிவுகள் பணி புரிவதில்லை. இம்மூன்று பணிகளும் ஒரே அமைப்பில் கிராம மக்களுக்கு அவர்களுடைய இருப்பிடங்களிலேயே கிடைக்க வழி செய்யும் அரிய திட்டமே நடமாடும் மருத்துவக் குழுத் திட்டமாகும்.

அரசினர் தொழுநோய் மருத்துவ நிலையங்களில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு ஊக்கச் சலுகைகள் :

தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்களில் பணியாற்றும் எல்லா உதவி மருத்துவர்களும் தொழுநோய் நிவாரணப் பணியில் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தும்படி செய்யவும், அவர்கள் இந்நோய்க்கான சிறப்புச் சிகிச்சை முறையில் உண்மையான ஆர்வம் கொள்ளுமாறு செய்யவும், 1977ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அரசு பின்வரும் ஆணைகளைப் பிறப்பித்துள்ளது :

* அரசினர் தொழுநோய் மருத்துவ நிலையங்களில் உள்ள எல்லா மருத்துவ அலுவலர்களும் தொழுநோய் நிவாரணப் பணியில் தங்கள் முழு நேரத்தையும் கவனத்தையும் செலுத்தும் பொருட்டு அவர்கள் எந்த வகையிலும் தனித் தொழில் நடத்துவது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

* மேற்படி மருத்துவ அலுவலர்களுக்கு அப்போது வழங்கப்பட்டு வந்த சம்பள விகிதமான ரூ. 525—25—600—30—690—35—900 என்பது ரூ. 575—25—600—40—1,000 என்பதாக உயர்த்தப்பட்டுள்ளது.

* மேற்படி மருத்துவ அலுவலர்களுக்கு முன்பு வழங்கப்பட்டு வந்த ஈடுசெய் படியான ரூ. 75க்குப் பதிலாக தனித் தொழில் நடத்தாமைக்கான படியாக மாதமொன்றுக்கு ரூ. 100 வழங்கப்பட்டுள்ளது.

* மேற்படி மருத்துவ அலுவலருக்கு மாதமொன்றுக்கு ரூ. 125 வீதம் வழங்கப்பட்டு வந்த தொழுநோய்ச் சிறப்புப் படி மாதமொன்றுக்கு ரூ. 200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பள்ளிச் சிறுவர்களுக்குத் தொழுநோய் மருத்துவச் சோதனை செய்யும் திட்டம் :

தமிழ்நாடு தொழு நோய் பெருமளவு பரவியுள்ள மாநிலம் என்பதாலும், சிறுவர்கள் இந்நோயால் வெகு எளிதாகப் பாதிக்கப்படக் கூடிய பருவத்தினர் என்பதாலும், குழந்தைகள் காப்பகங்களுக்குச் செல்லும் சிறுவர்களுக்கும் தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் 11 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் சத்துணவுக் குறைவு மற்றும் பொதுவாக தீர்க்கப்படக் கூடிய பிற நோய்களைக் குறிப்பாகத் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை—கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் மருத்துவச் சோதனை செய்யும் திட்டத்திற்கு 1977 நவம்பரில் அரசு ஒப்புதல் அளித்தது. இத்திட்டம் செங்கல்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் மற்றும் தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் நோய் பரவியுள்ள பகுதிகளிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் பொருட்டு குடும்ப நலப் பிரிவைச் சேர்ந்த இருநூற்று நாற்பது சுகாதார ஆய்வாளர்களுக்கு ஒரு குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின்போது இவர்களுக்கு, தொழுநோயின் அறிகுறிகளைக் கண்டறியும் முறைகள் பயிற்றுவிக்கப்படும்.

தொழுநோய், காசநோய் மருத்துவ நிலையங்களில் "முதுநிலைப் பயிற்சி மருத்துவர்களை" நியமிக்கும் திட்டம் :

மருத்துவப் பட்டதாரிகள் தொழுநோய், காசநோய் ஆகியவற்றுக்கான சிறப்புச் சிகிச்சை முறைகளில் உண்மையான ஆர்வம் கொள்ளுமாறு செய்திடும் பொருட்டு, 1977 அக்டோபரில் அரசு ஐம்பது முதுநிலைப் பயிற்சி மருத்துவர் (Senior House Surgeons) பதவியிடங்களை ஓராண்டுக் காலத்திற்கு ஏற்படுத்தியது. இப்பதவியிடங்களில் ஐம்பது மருத்துவப் பட்டதாரிகள் (ஆண்கள்) நியமிக்கப்பட்டு அவர்களுள் இருபத்தைந்து பேர் தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்களிலும் மற்றுமுள்ள இருபத்தைந்து பேர் காச நோய் நிலையங்களிலும் பணியாற்றிட அனுப்பப்படுவர். அவ்வாறு அனுப்பப்படுவதற்கு முன்பு இரண்டு மாத காலத்திற்கு அவர்களுக்கு முறையே தொழு நோய், காச நோய் ஆகியவற்றின் தடுப்பு, சிகிச்சை முறைகளில் முறையான பயிற்சி அளிக்கப்படும். மேற்படி பதவியிடங்களில் நியமிக்கப்படுபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 450 வீதம் மதிப்பூதியமாக வழங்கப்படும்.

இயங்கும் நடமாடும் விபத்து மருத்துவக் குழு :

பொது மக்களிடமிருந்தோ காவல் துறையினரிடமிருந்தோ விபத்து நடந்து விட்டதற்கான அழைப்பு வந்த உடனேயே விபத்து நடந்த இடத்திற்கே சென்று விபத்துக்குள்ளானவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிப்பதற்காக சென்னை, அரசு பொது மருத்துவமனை மற்றும் அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, ஒவ்வொன்றிலும் மூன்று மருத்துவர்கள், மூன்று அரங்க உதவியாளர்கள் மற்றும் மூன்று ஓட்டுநர்கள் அடங்கிய குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. விபத்து நடந்ததற்கான செய்தி கிடைத்த உடனேயே நடமாடும் விபத்து மருத்துவர் தன்னுடைய குழுவுடன் விபத்து நடந்த இடத்தினை அடைந்து விபத்துக்குள்ளானோருக்கு அளிக்க வேண்டிய முதல் உதவிச் சிகிச்சைகளை அந்த இடத்திலேயே அளிப்பர். மேலும் விபத்துக்குள்ளானோருக்குத் தேவையான கூடுதல் சிகிச்சை அளிக்க வேண்டியதாக இருந்தால் அவர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு வந்து தேவையான சிகிச்சைகளை அளித்து உதவுவர். மேற்கண்ட நடமாடும் விபத்து மருத்துவக் குழு ஏற்படுத்தப்பட்டதால் அரசுக்கு ஆண்டிற்கு ரூ. 1,38,000 கூடுதல் தொடர் செலவும், ரூ. 1,20,000 தொடரா‍ச் செலவும் ஆகும்.

இந்த நடமாடும் விபத்து மருத்துவக் குழுவானது மேற்கண்ட மருத்துவ மனைகளில் மிகவும் திருப்திகரமான சேவையைச் செய்து வருகிறது.

அரசு இலவச கண் சிகிச்சை முகாம் திட்டம் :

அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் திட்டம் 1972ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தொடங்கப்பட்டது. இலவசக் கண் சிகிச்சை முகாம் செயல்படும் முறையில் காணப்பட்ட சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குத் தெரியவந்தன. அதாவது, முன்பு புரை அறுவை செய்துகொண்ட நோயாளிகளுக்குக் கண்களில் தையல் போடப்படுவதில்லை. புரை அறுவை செய்து கொண்டவர்களுக்குக் கண்களில் ஏற்படும் இரணத்தைக் குணப்படுத்துவதற்குரிய கண் நோய் 'ஆயின்மெண்ட்' வழங்கப்படவில்லை. புரை அறுவை செய்து கொண்ட நோயாளிகள் முகாம் முடிந்து வெளியேறும்போது அவர்களுடைய கண்கள் தனித் தனியே பரிசோதனை செய்யப்படாமலேயே ஒரே மாதிரியான மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டு வந்தன. மேலும் அந்த மூக்குக் கண்ணாடிகள் ரூ. 2.50 மதிப்புள்ள தாக-தரத்தில் குறைந்தவையாகவும் உறுதியற்றதாகவும் இருந்தன. புரை அறுவைகள் நிதானமான முறையில் நடைபெறுமல் அவசரமான முறையில் நடைபெற்றதுமன்றி எண்ணிக்கையில் அதிகமாகவும் நடைபெற்று வந்தன. அதாவது சில தினத்தில் 400க்கு மேல் புரை அறுவைகள் செய்யப்பட்டன. இக்குறைகளைக் கண்ணுற்ற இந்த அரசு, இவற்றை நீக்கப் புதிய வழி முறைகளை மேற்கொண்டது. இதன் பயனாக, தற்போது புரை அறுவை செய்து கொள்ளும் நோயாளிகளுக்கு அவர்களது கண் நலத்தினைக் கருத்திற் கொண்டு கண்களில் தையல் போடப்படுகிறது. புரை அறுவை செய்து கொண்ட நோயாளிகளுக்குக் கண்களில் உள்ள இரணம் ஆறுவதற்கான ஒரு ரூபாய் விலையுள்ள கண் நோய் ஆயின்மெண்ட் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றது —ஆயின்மெண்ட் உபயோகப்படுத்தப்பட வேண்டிய விதமும் தெரிவிக்கப்படுகிறது. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகள் ஆறு வாரம் கழித்து தனித் தனியே பரிசோதனை செய்யப்பட்டு அவரவர் பார்வைக்கேற்ப ரூ. 20 மதிப்புள்ள தரம் மிக்க உறுதி வாய்ந்த மூக்குக் கண்ணாடிகள் வட்டார வளர்ச்சி அதிகாரி மூலம் நோயாளிகளின் வீட்டிலேயே வழங்கப்படுகின்றன. புரை அறுவை நிதானமாகச் சரிவர நடைபெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தினால் ஒவ்வொரு முகாமிலும் 300 புரை அறுவைக்கு மேல் செய்யக் கூடாது என்றும், ஒரு நாளில் 150 புரை அறுவைகளுக்கு மேல் செய்யக் கூடாது என்றும், ஒரு மருத்துவர் ஒரு நாளில் 30 புரை அறுவைக்கு மேல் செய்யக் கூடாது என்றும் அரசு பணித்துள்ளது. எனவே, தற்பொழுது இலவசக் கண் சிகிச்சை முகாம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது.

மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு :

எம்.பி.பி.எஸ். படிப்புக்கான தேர்வு 1975ல் 'இண்டர்வியூ' முறை மூலம் செய்யப்பட்டது. தேர்வு பெறாத மாணவர்களில் 19 பேர் ரிட் மனு தாக்கல் செய்தனர். அனைத்தும் நிராகரிக்கப்பட்டன.

1976-77ல் இந்தத் தேர்வு முறையானது தகுதியை அடிப்படையாகக் கொண்ட இண்டர்வியூ முறையில் நடைபெற்றது.

1977-78ல், 76-77ஆம் ஆண்டின் நடைமுறையே கையாளப்பட்டது. ஐந்து ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஒன்று தவிர மற்ற நான்கும் நிராகரிக்கப்பட்டன. ஒன்றில் வழக்கு மன்றத்தின் ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

ஜூலை 1977ல் நடைபெற்ற எம்.பி.பி.எஸ். படிப்புக்கான தேர்வு நியாயமானதாகவும் தகுதி அடிப்படையிலும் அமைந்திருந்தது.

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்'

என்கிற குறளுக்கு ஏற்ப வாழ்வது நம்மில் பெரும்பாலானோர்க்கு நடைமுறைச் சாத்தியமில்லைதான். ஆனாலும் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதனை நம்மால் மறக்கவோ, மறுக்கவோ இயலாது.

நாலரைக் கோடி மக்களின் நல்வாழ்விலே நாட்டம் கொண்ட இந்த அரசு அத்தகைய வாழ்வு அனைவர்க்கும் அமைந்திட, துவளாமல் தொண்டாற்றும் என்பது உறுதி!

கடந்த நான்கு ஆண்டுகளில் எம்.பி.பி.எஸ். படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரம் :

	1974-75 சதவிகிதம்	1975-76 சதவிகிதம்	1976-77 சதவிகிதம்	1977-78 சதவிகிதம்
பிற்பட்ட வகுப்பினர்	51.6	51	54.7	55.1
தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (மலைவாழ் மக்கள்)	18	18	18.1	18.4
மற்ற வகுப்பினர்	30.4	31	27.2	26.5

அறநிலையத் துறையின் அரும் பணிகள்

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று படித்திருக்கிறேம். அந்த ஆலயங்கள் வழிபடும் தலங்களாக மட்டுமல்லாது, அறிவாலயங்களாக, அனாதைச் சிறுவர்களுக்கு ஆதரவளிக்கும் அன்பு இல்லங்களாக விளங்குவதைப் பார்க்க முடிகின்றது.

சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சமூகநலப்பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன.

செவிடர், ஊமையர் பள்ளிகள், அன்பு இல்லங்கள், நூலகங்கள், சித்த மருத்துவமனைகள், கருணை இல்லங்கள், கல்லூரிகள், தொடக்க நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், நாதஸ்வரப் பள்ளிகள், ஓதுவார்களுக்கான பள்ளிகள், வேத ஆகமப் பள்ளிகள் முதலானவை செவ்வனே செயல்பட்டு வருகின்றன.

கோயில்களைப் புதுப்பித்துச் சீரமைக்க இந்த ஆண்டு கீழ் வருமாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது:

		ரூபாய்
(1)	ஆணையாளரின் பொதுநல நிதி	30,000
(2)	ஆலயங்களில் உபரி நிதி	4,02,982
(3)	அரசு மான்யம்	17,01,000

இராமேசுவரத்தில் உள்ள இராமநாதசுவாமி ஆலயத்தில் இந்து கலை-கலாச்சாரத் துறையில் ஒரு டிப்ளமா படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

அரிசன மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள கோயில்களைப் புதுப்பிக்க அரசு ரூ. 1 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதுவரை 36 கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

நாதஸ்வரம்-தவில் ஆகியவற்றில் பயிற்சி பெறும் மாணவர்களில் 5 + 5 மாணவர்களுக்கு 'வித்வான் டி. என். ராஜரத்தினம் பிள்ளை நினைவு உதவித்திட்டம்' எனும் திட்டத்தின்கீழ் மாதமொன்றுக்கு ஒவ்வொரு மாணவருக்கும் முறையே ரூ. 500, ரூ. 300 வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு உதவிநிதி வழங்கப்படும்.

அறநிலையத்துறையினர் நடத்தும் தேவாரப் பாடசாலைகளில் பயின்று சிறந்த முறையில் தேறிய முதல் மூன்று மாணவர்களுக்கு அவர்கள் ஓதுவார்களாக வேலையில் சேரும்வரை ஆண்டொன்றுக்கு ரூ. 1000 ரொக்க மானியமாகத் தரப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களுக்கு மீண்டும் அறங்காவலர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருந்த போது பரம்பரை அறங்காவலர்கள் அல்லாதவர்கள் அனைவரும் அறங்காவலர் குழுவிலிருந்து 1976 ஜூன் மாதத்திலிருந்து நீக்கப்பட்டனர். அந்த ஆலய நிர்வாகங்கள் தனி அதிகாரியின் நிர்வாகத்தின்கீழ் வந்தன. இவ்வாறு அறங்காவலர் குழுக்கள் கலைக்கப்பட்டு, தனி அதிகாரிகள் நிர்வாகப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட திருக்கோயில்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரம் ஆகும். இத்தகைய ஆலயங்களுக்குப் புதிய அறங்காவலர்கள் 3 மாதத்திற்குள் நியமிக்கப்படுவார்கள்.

இவ்வாறு, தமது கலைகளுக்கும் [illegible] பண்பாட்டிற்கும் [illegible] களாகவும், [illegible] வும் உள்ள கோயில்களைப் [illegible] பாதுகாப்பதற்கு அரசு [illegible] தொடர்ந்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும்!

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்
துணையாகும்!

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.

சுற்றுலா, உலகம் தழுவிய நமக்கு மிகுந்த பயன் தரக்கூடிய ஒரு தொழிலாக இன்று விளங்குகிறது. பல நாடுகளின் பொருளாதார மேம்பாட்டிற்குச் சுற்றுலா பெரிதும் உதவியுள்ளது. எனவே, சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்ந்த தற்போதைய அரசு, தமிழ் நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்காகத் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

புதிய அமைச்சரவை பொறுப்பு ஏற்றவுடன், இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினைத் தீட்டுவதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வளர்ச்சியும் விளம்பரமும் :

சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க சுற்றுலா முகவர்களையும், பயண எழுத்தாளர்களையும் வரவேற்பதன் மூலம் நல்ல பயன் அடையலாம் என்பதால் தமிழக அரசு உலகின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த 60 பயண எழுத்தாளர்களை, "தென்னகத்தை நோக்கி" எனும் திட்டத்தின் கீழ் செப்டம்பர் '77ல் வரவேற்று உபசரித்தது.

இத்திட்டம் மத்திய அரசின் சுற்றுலாத் துறை, ஏர் இந்தியா, இந்தியன் ஏர்லைன்ஸ், தென் மாநிலங்கள் ஆகியவற்றின் கூட்டு முயற்சி ஆகும். அவர்களுக்காகத் தென்னிந்தியாவின் கலாச்சாரம், சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற இடங்கள் போன்ற மற்றும் பல்வேறு அம்சங்களைக் குறித்து ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் முதலமைச்சரும், செய்தி - சுற்றுலா அமைச்சரும் பங்கேற்றனர். சென்னை, மாமல்லபுரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்க[illegible] இப்பயண எழுத்தாளர்கள் பார்வையிட்ட [illegible]ன்னர் தென்னகத்தைச் சுற்றிப் பார்க்க மூப்பி[illegible] வுகளாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்களை (Tourism Potential) யாவரும் தெரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு நாளிதழ்களில் சுற்றுலாச் சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டன. இதன் பயனாக இந்தப் பயண எழுத்தாளர்கள் தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புகளை விளக்கிக் கட்டுரைகளையும், படங்களையும் அவர்கள் நாட்டுப் பத்திரிகைகளில் வெளியிட்டார்கள்.

அகில உலக பசிபிக் கடற்கரைப் பகுதிச் சுற்றுலா முகவர்கள் சங்க 27வது ஆண்டுக் கூட்டம் டில்லியில் சனவரி 1978ல் நடைபெற்றது. அதில் 2,000 சுற்றுலா நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். அக் கூட்டத்திற்குச் சென்னை வழியாகச் சென்ற நூற்றுக்கும் அதிகமான பிரதிநிதிகளை இத்துறை வரவேற்றுச் சிறப்பித்தது. அக்கூட்டத்திற்கு முன்னதாகக் கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலுக்குச் (Work Shop) சென்றவர்களையும் இத்துறை உபசரித்தது. இப் பிரதிநிதிகளை வரவேற்பதற்கு விமான நிலையத்தில் சிறப்பான ஏற்பாடுகளை இத் துறை செய்து இருந்தது. அவர்கள் சென்னை, மாமல்லை, காஞ்சி போன்ற இடங்களைச் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. இத்துறை செய்திருந்த ஏற்பாடுகளைப் பாராட்டி நிறையக் கடிதங்கள் வந்துள்ளன. தமிழகத்தில் சுற்றுலாப் போக்குவரவை அதிகரிக்க அவர்கள் உதவி அளித்துள்ளார்கள். இக் கூட்டத்தை யொட்டி புதுதில்லியில் உள்ள அசோகா ஓட்டலில் நடைபெற்ற "பசிபிக் அணி வகுப்பு" எனும் பொருட்காட்சியில் இத் துறையும் பங்கு கொண்டது. இதனால் நல்ல விளம்பரம் கிடைத்தது.

இந்தியப் பயண முகவர்களின் 29வது ஆண்டுக் கூட்டம் ஏப்ரல் 7ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை பெங்களூரில் நடைபெற்றது. [illegible]ழக அரசு இதில் பெரிய அளவில் பங்கு[illegible]றது. அக்கூட்டத்தை ஒ[illegible] அரங்கு[illegible]தப்பட்ட பொருட்காட்சியில் இத் து[illegible]

அமைத்து முதல் பரிசு பெற்றது. 'தமிழ் நாடு மாலை' (Tamil Nadu Evening) வெஸ்ட் எண்ட் ஓட்டலில் கொண்டாடப்பட்டது. இதில் தமிழ் நாட்டின் கலாச்சாரங்களை வெளிப்படுத்தும் வகையில் சங்கீதம், நாட்டியம், கிராமியக் கலை போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டன. பிரதிநிதிகளுக்கு விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழகத்தின் சிறப்பு மிக்க சைவ, அசைவ உணவுகளும் பரிமாறப்பட்டன. நிகழ்ச்சிக்கு ஒருமித்த பாராட்டுக்கிடைத்தது. செய்தி-சுற்றுலா அமைச்சர் அவர்கள் சுற்றுலா முகவர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு அரசு ஒத்துழைப்பை நல்கும் என்று உறுதியளித்தார்.

கைவினைப் பொருட்கள், கைத்தறி, பீங் கான் மற்றும் சுற்றுலாச் சிறப்புகளை விளக்கும் வகையில் வண்ணப் படங்கள் கொண்டு தமிழ் நாடு அரங்கு அமைக்கப்பட்டது. நடுவர் குழுவிற்குத் தலைமை வகித்த திரு இந்தர் சேத்தி, ஏர் இந்தியா வணிக இயக்குநர் அவர் கள் பரிசு வழங்கும் விழாவில் பேசும்போது, 'இந்தியப் பயண முகவர்கள் மாநாடு எதிர் பார்த்த எல்லாச் சிறப்புகளையும் தமிழ் நாடு அரங்கு பெற்று இருந்தது' என்று பாராட்டி முதல் பரிசான 'வசந்த கோதக் சுழற்கேடயத்' தைத் தமிழ் நாடு அரசிற்கு வழங்கினர். (Vasanth Kodak Trophy) இதனல் தமிழகத் திற்கு நல்ல விளம்பரம் கிடைத்தது.



பெங்களூரில் நடந்த இந்தியப் பயண முகவர்களின் மாநாட்டில் இத்துறை எடுத்துக் கொண்ட முயற்சியின் தொடர்ச்சியாக செய்தி —சுற்றுலா அமைச்சர் அவர்கள் 11-5-78 அன்று தமிழ் நாட்டில் உள்ள சுற்றுலாத் தொடர்புள்ள பிரதிநிதிகளின் சிறப்புக் கூட் டத்தைக் கூட்டினர். முன்னணி ஓட்டல் அதிபர் கள், விமானக் கம்பெனி பிரதிநிதிகள், பயண முகவர்கள் ஆகியோர் யாவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு, சுற்றுலா மேம்பாட்டிற்காக அரசு எடுக்க வேண்டிய பலவித முயற்சிகளைப் பற்றி விளக்கிக் கூறினர்.

தமிழ் நாட்டில் உள்ள சுற்றுலா இடங் களைப் பற்றி விரிவான தகவல்கள் அடங்கிய பல வண்ண வெளியீடு ஒன்றும் கொண்டுவரப் பட்டுள்ளது.

1977 நவம்பரில் தில்லியில் நடைபெற்ற வேளாண்மைப் பொருட்காட்சியில் சுற்றுலாத் துறை பங்கேற்றது.

கொடைக்கானலில் இரு தொலை நோக் காடிகள் ஒன்று "கோக்கர்ஸ் வாக்' எனுமிடத் திலும், மற்ருென்று "குறிஞ்சி ஆண்டவர் ஆலயத்தின்' அருகாமையிலும் 1977ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட் டன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இத்தொலை நோக்காடிகள் ரூ. 1.60 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன. மிகத் தொலைவில் அமைந்துள்ள வைகை அணை யின் அழகு மிகு காட்சிகளையும், பழனி ஆண்ட வர் ஆலயத்தின் வடபகுதியையும், இத்தொலை நோக்காடிகளின் வழியாக மக்கள் கண்டு களிக்க முடிவதால், இது மிகவும் சிறப்புப் பெற்றுள்ளது. கொடைக்கானலில் உள்ள ஏரியை அழகுபடுத்துவதற்காக ரூ. 58,100 சென்ற ஆண்டு செலவிடப்பட்டது.

1978-79ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைகள், மேலும் அதனுடைய மேம் பாட்டுப் பணிகளுக்குக் கூடுதலாக ரூ. 2.03 இலட்சம் செலவு செய்ய அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

ஏர்க்காடு ஏரியை மேம்படுத்துவதற்காக ரூ. 2.06 இலட்சம் ஏற்கனவே வழங்கப்பட்டு, அப்பணியும் நடைபெற்று வருகின்றது. மேலும் இதனுடைய மேம்பாட்டுப் பணிக்கு ரூ. 1.5 இலட்சம் 1978-79ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்த மரங்கள் மண்ணில் புதையுண்டு, தற்போது பாறைபோல் கடினமாகத் தோற்றமளிக்கும் பகுதியான தென்னர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவக்கரைக்குச் செல்ல அணுகுசாலை அமைப்பதற்கு ரூ. 1 இலட்சம் வழங்கப்பட்டு அவ்வேலை விரைவில் முடிவடையும் நிலையில் உள்ளது.

கீழ்க்காணும் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களை, 1978-79ல் செயற்படுத்துவதற்கு, சுற்றுலாத் துறையின் சார்பாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் செயற்படுத்தி வரு கின்றது.

கோடை, ஏர்க்காடு ஏரிகளை மேலும் மேம் படுத்துதல்.

இராமேஸ்வரம், மற்றும் குருசடை தீவிற்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மண்டபத்தில் [illegible]மும், படகுத்துறையும் ரூ. 2 இலட்சம் செலவில் அமைத்தல்.

பிச்சாவரத்தில் ரூ. 3.5 இலட்சம் செல வில் (அடிப்படை வசதிகளான) படகுத் துறை யும், படகு வீடும் அமைத்தல்.

மாமல்லபுரத்தில் மத்திய, மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு, தங்குமிடம் ரூ. 3.10 இலட்சம் செலவில் அமைத்தல். இதற் கான நிலத்தைக்கையகப்படுத்தும் தொகையும் இதில் அடங்கும்.

ஆவுடையார் கோயிலிலும், விராலிமலை யிலும் ரூ. 75,000 செலவில் அடிப்படை வசதி களைச் செய்து கொடுத்தல்.

1977-78-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சாதனைகள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் 13 சுற்றுலா மாளிகைகளை நிர்வகித்து வரு கிறது; சொகுசுப் பேருந்துகளில் பல்வேறு சுற்றுலாப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது. உதகையில் உல்லாசப் படகு விடுதலும் இக்கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

உதகையில் உள்ள சுற்றுலா மாளிகை 76 அறைகள் கொண்டது. சராசரி ஆண்டு முழுவதற்கும் 80 சதவிகிதம் அறைகள் வாட கைக்கு விடப்படுகின்றன. கூடுதல் தங்கும் வசதி இவ்விடத்தில் தேவையெனக் கருதப்பட் டதால் எட்டுக் குடில்கள் (Cottages) கட்டும் பணியை இக்கழகம் மேற்கொண்டது. ஒரு சில மாதங்களில் இக்குடில்கள் கட்டி முடிக்கப் பெறும். மாமல்லபுரம், கோடைக்கானல் ஆகிய இரு இடங்களிலும் மாநாடுகள் நடத்துவதற் கேற்ற அரங்குகள் கட்டி முடிக்கப்பட்டன. கடந்த 1977-78 ஆண்டில் பல்வேறு திட்ட வேலைகளுக்காகச் சுமார் ரூ. 30.28 இலட்சம் செலவிடப்பட்டது.

போக்குவரத்து :

தென்னகத்து மாநிலங்களை உள்ளடக்கிய சுற்றுலாப் பயணங்களை ஏற்பாடு செய்து நடத் துவதில் இக்கழகம் தனிப் பெருமை தேடிக் கொண்டுள்ளது. மொத்தம் 10 சொகுசுப் பேருந்துகள் உள்ளன. அவற்றில் 9 இந்தியா முழுவதும் செல்லக் கூடிய அனுமதி பெற்றவை. ஆறு வகைச் சுற்றுலாப் பயணங்களை நடத்தி வருகிறது. இச்சுற்றுலாப் பயணங்கள் தமிழகத் தில் உள்ள எல்லா முக்கியச் சுற்றுலா இடங்களை யும் அண்டை மாநிலங்களில் சில இடங்களையும் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்க்க வகை செய்கிறது. கப்பல் படையைச் சார்ந்தோர் மற்றும் சாதாரணக் கப்பல்களில் பணி புரியும் அலுவலர்களுக்கும் சிறப்புச் சுற்றுலாப் பயணங் கள் ஏற்பாடு செய்யப்படுகிறது. இவற்றைத் தவிர கழகத்தின் பேருந்துகள் பொது மக்க ளுக்கும் பயண முகவர்கள் போன்றவர்களுக்கும் வாடகைக்கு விடப்படுகின்றன.

நெடுஞ்சாலை ஓய்விடங்கள் (Motels)

1977-78ஆம் ஆண்டில் சாலைவழிச் செல் லும் சுற்றுலாப் பயணிகளின் சௌகரியத்தைக் கருத்தில் கொண்டு இராணிப்பேட்டை, உளுந் தூர்ப்பேட்டை ஆகிய இடங்களில் தேசிய நெடுஞ்சாலைக்கருகில் ஓய்விடங்கள் (Motels) கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டது.

இராணிப்பேட்டையில் உள்ள நெடுஞ்சாலை ஓய்வு விடுதி ரூ. 8 இலட்சம் செலவில் கட்டப் பட்டுள்ளது. இது 1978 ஜுலை மாதத்தில் திறக்கப்பட உள்ளது.

இந்தச் சாலைவழி ஓய்விடங்களின் இரவில் தங்கும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

அகில இந்திய சுற்றுலா-வர்த்தகப் பொருட்காட்சி... ....

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னையில் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை ஆண்டு தோறும் நடத்துகிறது. இவ்வருடம் 24 ஏக்கர் பரப்பளவில் 5-வது தடவையாகப் பொருட் காட்சியை நடத்தியது. 255 அரங்குகள் இப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டன. தென் னிந்தியாவிலேயே இது மிகவும் பெரிய பொருட் காட்சியாகும்.


மதுரை சித்திரைப் பொருட்காட்சி நுழைவு வாயில்

இப்பொருட்காட்சி பல வகை மனமகிழ்வு வாய்ப்புக்கள் மட்டுமல்லாது மக்களுக்குப் படிப்பினை ஊட்டுவதாகவும் அமைந்திருந்தது. இப்பொருட்காட்சியின் வாயிலாகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 5.5 இலட்சம் இலாபமாகக் கிடைத்தது.

சித்திரைச் சுற்றுலாப் பொருட்காட்சி, 1978........

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச் சர் முன்னிலையில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் 12-4-'78 அன்று இப் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தார். இப்பொருட்காட்சியை எட்டு இலட்சம் மக்கள் கண்டு களித்தனர். இப்பொருட்காட்சியின் மூலம் ரூ. 3 இலட்சம் இலாபம் கிடைத்தது.

போராட்டங்களும் அரசின் அணுகுமுறையும்

தமிழகத்தில் 17 மாத காலம் நடைபெற்ற குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று, அச்சமற்ற நேர்மையான தேர்தல் நடைபெற்றது. 30-6-1977ல் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'மக்களாட்சி' மலர்ந்தது!

அகில இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கடந்த ஓராண்டுக் காலத்தில் துறைதோறும் நடைபெற்றுள்ள பணிகளைப் பட்டியல் போட்டு மகிழ்கின்ற இந்த நேரத்தில், கடந்த ஓராண்டில் தொடர்ந்து மாணவர்கள் போராட்டம், பஸ் தொழிலாளர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம் என்று பல போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும் தமிழக அரசு சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. போராட்டங்களை எப்படியும் அடக்க வேண்டும் என்ற பழி வாங்கும் உணர்வுக்குச் சிறிதளவும் இடம் கொடுக்காமல், மனிதாபிமான உணர்வுடன், சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசி, பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்னும் சீரிய அணுகுமுறையை இவ்வரசு கையாண்டு வந்துள்ளது.

விவசாயிகள் போராட்டம் :

1970, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் இதுவரை மூன்று விவசாயப் போராட்டங்கள் நடந்து உள்ளன. போராட்டத்தின் முக்கியக்கோரிக்கையாக மின்சாரக் கட்டணக் குறைப்புத்தான் வைக்கப்பட்டது.

மின்கட்டண உயர்வு :

1971ல் மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 9 காசாக இருந்தது. முன்பிருந்த தி.மு.க. அரசு இதனை 1.1.72லிருந்து 12 காசாக உயர்த்தியது. இதன் விளைவாக, தமிழகமெங்கும் விவசாயப் போராட்டம் வெடித்தது.

இதன் விளைவாக 100 யூனிட்டுக்குமேல் மின்சாரம் உபயோகப்படுத்துவதற்கு மட்டும் யூனிட் மின் கட்டணத்தை 12 காசிலிருந்து 11 காசாக தி.மு.க. அரசு குறைத்தது. 1974ல் அதை 14காசாகவும், நாட்டில் அவசர நிலை அமலில் இருந்தபோது 1975 செப்டம்பரில், 16 காசாகவும் மீண்டும் உயர்த்தியது.

அரசின் முதல் நடவடிக்கை :

ஆனால் இன்றைய அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் செய்த முதல் உன்னதமான காரியம் மின்கட்டணத்தை 16 காசிலிருந்து 14 காசாகக் குறைத்ததுதான்.

இதனால், மின்சார வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு 2.5 கோடி ரூபாய் கூடுதல் இழப்பு ஏற்பட்டது. ஏற்கெனவே விவசாயத்திற்கு அளிக்கப்படும் மின் சலுகைகளால், மின் வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தையும் வேளாண் பெருங்குடி மக்களின் பிரச்சினைகளையும் நன்குணர்ந்துள்ள இன்றைய அரசு, தன் இரத்தத்தையும் பாலாக மாற்றித் தருகிற தாய் போல், கூடுதல் இழப்பையும் பொருட்படுத்தாமல் விவசாயிகளுக்குத் தன் சக்திக்கும் மீறிய சலுகைகளை வழங்க முன் வந்தது.

விவசாயிகள் பிரச்னை : தனிக் குழு அமைப்பு :

விவசாயிகளின் கோரிக்கைகளை ஆராய்ந்து பரிசீலனை செய்வதற்காக 1977, டிசம்பரில் அரசு ஒரு குழுவை நியமித்தது. குழுவை அமைத்த கையோடேயே. கீழ்க்கண்ட சலுகைகளையும் அறிவித்தது

*1-3-77 முதல் 31-11-77 சேர்ந்துள்ள விவசாயிகள் செலுத்த வேண்டிய பம்பு செட்டுகளுக்கான மின் கட்டண வசூலிப்பு, குழுவின் அறிக்கை வரும் வரை நிறுத்தி வைக்கப்படும். மின் இணைப்புத் துண்டிக்கப்பட மாட்டாது.

*வறட்சிக் காலத்தில் செலுத்த வேண்டிய மின் பாக்கிக்காக, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால் மீண்டும் மின் இணைப்புத் தரப்படும். தவணை தவணையாகப் பாக்கித் தொகையைச் செலுத்தவும் வகை செய்யப்படுகிறது.

*1-12-77 முதல் உபயோகிக்கப்படும் மின்சாரத்திற்கு, தற்போது நடைமுறையிலுள்ளபடியே வசூலிக்கப்படும்.

*விவசாயப் போராட்டத்தினைத் தொடர்ந்து, விவசாயிகளின்மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும்.

கோரிக்கைகளை ஆராயும் குழுவின் அறிக்கை வருவதற்கு முன்பே பல்வேறு சலுகைகளை அளித்த அரசின் இந்த அறிவிப்பு, விவசாயிகள்மீது அரசு கொண்டுள்ள பரிவான அணுகுமுறையைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

விவசாயிகளுக்குப் பல சலுகைகள் :

இதற்கும் முன்பாகவே, இந்த அரசு பதவியேற்றதிலிருந்து மேலும் பல சலுகைகளை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது:

1. மோட்டா ரக நெல்லின் கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு ரூ. 90 ஆகவும், நடுத்தர நெல்லுக்கு குவிண்டால் விலையை ரூ. 95 ஆகவும் உயர்த்தியது.

2. கூட்டுறவு விவசாயக் கடன்கள் வசூலிப்பது. அறுவடை முடியும் வரை ஒத்தி வைக்கப்பட்டது.

3. கூட்டுறவு விவசாயக் கடன்களுக்கான வட்டி 12.6 சதவிகிதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

4. மதுரை, மதுரை மாவட்டங்களில்* பருத்தி, கம்பு போன்ற பயிர் வகைகளுக்கு உர வகைகள், பூச்சி மருந்துகள் 25 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.

5. கரும்பின் அகில இந்திய விலையை டன்னுக்கு ரூ. 85 என்று மத்திய அரசு நிர்ணயித்த போதிலும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் மூலம் டன் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 125 வரை சர்க்கரைத் தரத்தின் அடிப்படையில் விலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மீண்டும் 7-4-78ல் இவ்வரசு மேலும் பல சலுகைகளைச் சட்டமன்றத்தில் அறிவித்தது.

கூட்டுறவுக் கடன் வசூல் இன்னும் இரண்டு மாத காலத்திற்கு அறுவடைக் காலம் முடியும் வரை ஒத்தி வைக்கப்படும் என்று அரசு அறிவித்தது. சட்டமன்றத்தில் இந்த அறிவிப்பு வந்து கொண்டிருக்கிறபோதே, வெளியில் போராட்ட ஆவேசக் குரல்கள் கேட்டன. விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த சில குறிப்பிட்ட பிரிவினர் போர்க் கொடி உயர்த்தினர்கள். சாலைப் போக்குவரத்துகள் தடைசெய்யப்பட்டன. போக்குவரத்து வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. இத்தடைகளை நீக்குவதற்காகச் சென்ற காவல் துறையினரின் ஜீப்புகள் தீக்கிரையாக்கப்பட்டன. மக்கள் பேருந்துகளிலிருந்து ஈவிரக்கமின்றி இறக்கப்பட்டனர்; பேருந்துகள் கொளுத்தப்பட்டன

போராட்டம் என்ற பெயரால்....

அதுமட்டுமல்லாமல், சாலைகளைக் குறுக்கே வெட்டி, வெட்டப்பட்ட மண்ணுல் தடைச் சுவர் எழுப்பினுர்கள்.

விவசாயிகள் போராட்டம் என்னும்பெயரால், சட்டம்-ஒழுங்கைக் குலைக்க முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒரு சதியேயாகும் இது. பாலங்களை வெடி வைத்துத் தகர்ப்பது, இடித்துத் தகர்ப்பது—இவையெல்லாம் அப்பாவி ஏழை எளிய விவசாயிகளின் செயலாக—அவர்கள் செய்கின்ற காரியங்களாக நிச்சயம் இருக்காது. இப்போராட்டத்தின் பின்னணியிலிருந்து இப்படிப்பட்ட நாசவேலைகளில் நன்கு பழக்கப்பட்ட ஒரு கூட்டம் இதை இயக்கியது என்றே கூற வேண்டியுள்ளது.

என்றைக்குமே இந்த அரசுக்குப் பழி வாங்கும் உணர்வு இல்லை. பரிவுணர்ச்சிதான் உண்டு. உள்ளும் புறமும் இப்பரிவுணர்ச்சி ஊடாடுவதால்தான், உடனே விவசாயச் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி அரசு மேலும் 13 சலுகைகளை வாரி வழங்கியது:

அச்சலுகைகள் 'விவசாயிகளுக்குத் தமிழக அரசு வழங்கும் சலுகைகள்' என்ற அரசு வெளியீட்டில் தெளிவாக இடம் பெற்றுள்ளன.

தாராள மனப்பான்மை :

விவசாயப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் மேலுள்ள வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. கைது செய்யப்பட்ட அனைவரும் நிப்பந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்கள்.

தாராள மனப்பான்மை, தயை நோக்கு இவைகளுடனேயே ஒவ்வொரு கட்டத்திலும் விவசாயிகளின் பிரச்சினையை இவ்வரசு அணுகி வந்திருக்கிறது. அதிகாரப் போக்குடன் அல்ல என்பதை நல்லிதயம் படைத்த எவருமே. மறுக்க முடியாது. மறக்க முடியாது!

மாணவர்கள் போராட்டங்கள் :

இந்த அரசு பதவியேற்று எண்ணி முப்பது நாள் கூட ஆகவில்லை. மாணவர் போராட்டங்கள் 26-7-77ல் மாநிலத்தில் ஆங்காங்கே தொடங்கப்பட்டு—பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நடைபெற்றது.

26-7-77ல் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். நகரின் எல்லா வழித் தடங்களுக்கும் செல்லும் வகையில் இலவச பாஸ் வழங்க வேண்டுமென்பது மாணவர் கோரிக்கை.

முதல்வர்-மாணவர்கள் சந்திப்பு :

27-7-77ல் பச்சையப்பன் கல்லூரி மாணவர் போராட்டம் நடந்தது. பேருந்துகளை வழிமறித்தனர். பயணிகளுக்கும் மாணவர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. மற்ற கல்லூரி மாணவர்களும் போராட்டத்திற்கு ஆதரவாய், தலைமைச்செயலகம் நோக்கி ஊர்வலம் சென்றனர். சட்டக் கல்லூரி மாணவர்கள் செயலகத்திற்குள் . நுழைந்தனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வெளியே வந்து மாணவர்களைச் சந்தித்து மாணவர்களின் கோரிக்கைகளைப் பொறுமையுடன் கேட்டார். அவர்களின் கோரிக்கைகள் சிலவற்றிற்கு அந்த இடத்திலேயே மாண்புமிகு முதல்வர் ஏற்பளித்தார்.

4-8-77ல் மீண்டும் மாணவர் போராட்டம்! மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாணவப் பிரதிநிதிகளுடன் நடத்திய நேரடிப் பேச்சுவார்த்தையால் போராட்டம் திரும்பப் பெறப்பட்டது.

29-8-77ல் கல்லூரி முதல்வர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் கூட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டி மாணவர் பிரச்சினைகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினுர்.

இவையனைத்தும் இந்த அரசின் புதிய அணுகுமுறைக்கு அசைக்க முடியாத சான்றுகளாய் நின்று, பின்வரும் உண்மைகளை மக்கள் மன்றத்தின் முன் தெளிவாக்குகின்றன.

நியாயமான பிரச்சினைகளை அனுதாபத்தோடு கவனித்தல், மாணவர், பெற்றோர், கல்லூரி முதல்வர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்தல், இதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணல்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரடியாக மாணவர்களைச் சந்தித்தல்; பிரச்சினைகளுக்கு விரைந்து சுமுகமான தீர்வு காணல்.

மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மோதல் ஏற்படும் நேரங்களில் தலையிடுவது தவிர, பிற வகையில் காவல் துறையினர் தலையீடு என்பது இடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாக் கட்டங்களிலும், எவ்வளவு மோசமான நிலைமை உருவானுலும் பிரச்சினைகளை உயிர்த்துடிப்போடு, உன்னதமான நோக்கோடு அணுகி நிவர்த்திக்க முயல்வது, பேச்சளவில் அல்ல-செயல் வடிவம் பெற்று ஒரு புது அத்தியாயமே இந்த ஓராண்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

பயிற்சி மருத்துவர்கள் வேலைநிறுத்தத்தின் போது முதலமைச்சர் அவர்களே நேரடியாகச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியது குறிப்பிடத் தக்கதாகும்.

மதுரைக் கல்லூரி மாணவர்களின் போராட்டம் வன்முறையில் திசை திருப்பிவிடப்பட்டபோது—என்.சி.சி. துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு—அவர்களில் சிலர் வன்முறையில் ஈடுபட்டபோது—அதனை அடக்க காவல்துறையினர் முயன்றதில் சில மாணவர்கள் காயமுற்றனர். காயமுற்ற மாணவர்களை மதுரை மருத்துவமனைக்குச் சென்று கவனிக்க, சென்னையிலிருந்து தேர்ச்சி பெற்ற மருத்துவ வல்லுநரைத் தமிழக முதல்வர் அவர்கள் அனுப்பியதோடு

மட்டுமல்லாமல், முதல்வரே நேரில் சென்று காயமுற்றவர்களைப் பார்வையிட்டார்கள்.

மாணவர்க்கு உறுதுணை :

மாணவர் பிரச்சினை என்பது எப்பொழுதுமே ஒரு சிக்கலான பிரச்சினைதான். இந்நாட்டின் எதிர்காலத்தின் வழிகாட்டிகளாக, தலைமைப் பொறுப்பேற்கிறவர்களாக வரவேண்டியவர்கள் மாணவர்கள். அவர்களின் வளர்ச்சிப் பாதையில் தடைக்கல்லாக எதுவும் நடைபெறக் கூடாது என்பதை இந்த அரசு மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. அதே சமயத்தில் சில கட்டங்களில் வன்முறை வடிவம் எடுக்கும்பொழுது, அவ்வன்முறைச் செயல்களால் அவற்றுடன் சம்பந்தப்படாத பொதுமக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் இந்த அரசு தீவிர அக்கறை கொண்டுள்ளது. எந்த ஓர் அரசுக்குமே மாணவர் பிரச்சினை என்பது ஒரு சிக்கலான பிரச்சினைதான். ஆனாலும், ஆத்திரமூட்டப்பட்டாலும், அமைதியுடன் பிரச்சினைகளை அணுகுவதன் மூலம் மாணவர்களுக்கு உறுதுணையாகவும், அதே நேரத்தில் மக்கள் சமுதாயத்திற்கு உற்ற நண்பனாகவும்—பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படாத வகையில் பார்த்துக் கொள்ளும் பாதுகாவலனாகவும் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது.

போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டம்:

வன்முறையும் நன்முறையும் :

30-6-77-ல் இன்றைய அரசு பொறுப்பேற்றதென்றால், ஒருமாத கால இடைவெளிக்குப் பின்னால் 27-8-77-ல் போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டம் தொடங்கியது. கல்வீச்சு, கடமையுணர்வோடு வேலைக்குச் செல்லும் ஊழியர்களைத் தடுத்தல் ஆகியவை அந்தப் போராட்டத்தில் முக்கிய அங்கங்களாயின.

போராட்டத்தை ஒடுக்குவதில், போராடுவோரின் உணர்வுகளை அப்படியே பிரதிபலிப்பது ஒருமுறை எனினும், இந்த அரசு அந்த முறையினைக் கையாளவில்லை. வன்முறை என்பது நன்முறையல்ல என்று வலியுறுத்திய அமரர் அண்ணாவின் வழி நடக்கும் அரசாதலால், புயல் வேகத்தில் வந்த தொழிலாளர்களை, அரசு தென்றல் வேகத்திலேயே அணுகி அமைதிப்படுத்தியது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன், அவர்களது கோரிக்கைகளை நிவர்த்திப்பது தொடர்பான அரசின் கருத்துப்பரிமாற்றம் தொடர்ந்து நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலின் முடிவு நன்முடிவாகவே அமைந்தது.

செப்டம்பர் 3-ஆம் நாளன்று போக்குவரத்துத் தொழிலாளரின் அந்தப் போராட்டம் திரும்பப் பெறப்பட்டது.

அடக்குமுறை அன்றும்—இன்றும் :

1975-ல் தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையிலும் பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களும் போராட்டம் துவக்கியபோது அன்றிருந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் இங்கே நினைவுகூரத்தக்கவை.

அன்றைய அரசு, கோரிக்கைகளை முன்வைத்துப் போராடிய தொழிலாளர்கள்மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. அவர்களுடைய கோரிக்கைகளிலே செம்பாதிகூட அல்ல ஒரே கோரிக்கைகூட ஏற்றுக் கொள்ளப்படவில்லை. போராட்டம் அடக்கி ஒடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல; அன்றைய தினம் இந்தப் போராட்டத்திற்குக் காரணமானவர்கள்மீது, காரணமில்லாமலே பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொழிலாளர் நலனில் அன்றிருந்த அரசுக்கும், இன்றிருக்கும் அரசுக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது பார்த்தீர்களா?

அடக்குமுறையினாலே அல்ல; அமைதி முறையினாலேயே தொழிலாளர் நலனைக் காப்பது என்பதில் எத்தனை இன்னலானாலும் அதை இன்முகத்தோடு ஏற்பதைத்தான் இந்த அரசு பெருமையாகக் கருதுகிறது.

திரும்பவும் வேலை :

1973-ல் நடைபெற்ற போராட்டங்களிலே பங்கேற்றார்கள் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அன்று பழிவாங்கப்பட்டனர், 98 பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள்! அவர்கள் அனைவருக்கும் திரும்ப வேலைதந்து, அவர்கள் முகத்திலே அரும்பும் மகிழ்ச்சி கண்டு இறும்பூதெய்தியது அரசு இன்றைய அரசு!

இந்த ஆண்டு மேத் திங்கள் 8-ஆம் நாள்கூட போக்குவரத்துத்துறை தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடமிருந்து, 16-ஆம் நாளன்று போராட்டம் தொடங்கப்படவிருப்பதாக அறிவிப்பொன்று வெளியாயிற்று.

அதனை அறிந்த இந்த அரசு 'என்னதான் நடக்கும் நடக்கட்டுமே!' என்று வாளாவிருக்கவில்லை. 'எதைச் சந்திக்கவும் நாங்கள் தயார்' என கறுமொட்டான தர்பார் வாசகங்களிலே பதில் சொல்லவில்லை.

அந்த அறிவிப்பு வந்ததுமே-மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்து அவர்களது கோரிக்கைக் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

அதன்முடிவில்-போராட்டம் திரும்பப் பெறப்பட்டது. இப்படிப்பட்ட அணுகுமுறையிலே எப்படிப்பட்ட போராட்டத்தையும் இந்த அரசு இல்லாமலாக்கிவிடுவது சொல்லாமல் விளங்கக்கூடியதாகும்.

கேட்காமலே கொடுக்கப்படும் !

நெருக்கடி நிலைக் காலத்தில் போக்குவரத்துத் துறையில் சிறு குற்றங்களுக்கெல்லாம் வேலைநீக்கம் போன்ற பெருந்தண்டனைகள் அளிக்கப்பட்டன. அவையாவும் மறுபரிசீலனை செய்யப்பட்டு இந்த அரசு அவர்களை மீண்டும் வேலைபெறச் செய்தது. கடுந்தண்டனை என்பதே பெருமளவில் குறைக்கப்பட்டது.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் கேட்டால்தான் கிடைக்குமென்பதில்லை; அவர்கள் கேட்காமலே பல்வேறு சலுகைகள் இந்த அரசின் மூலம் அளிக்கப்பட்டிருக்கின்றன.

43 ஆயிரம் போக்குவரத்துக்துறைத் தொழிலாளர்களின் நலனைக் காப்பதில் இன்றைய அரசு பெரிதும் கவனமாகச் செயல்பட்டு வருகிறது. 'வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் புவி மக்களெலாம் ஒப்புடையார்' எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் பாடியதற்கேற்ப, தொழிலாளர் இல்லந்தோறும் மகிழ்ச்சி தேக்கிடுவதிலே இந்த அரசு கொண்டுள்ள அக்கறை குன்றாது! குறையாது!

ஆசிரியர்கள் போராட்டம் :

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்பதனை இந்த அரசு பெரிதும் உணர்ந்தே செயல்பட்டு வருகிறது. ஆசிரியப் பெருமக்களின் குறைகள் அவ்வப்போது களையப்படுவதே அதற்கான எடுத்துக்காட்டு உதாரணமாகும்.

கல்லூரி-பல்கலைக்கழக ஆசிரியர்களின் நீண்ட நெடுநாளைய கோரிக்கையான, பல்கலைக்கழக ஊதியக் குழுவின் சம்பள விகிதத்தைச் செயல்படுத்திச் சிறப்புற்றது இந்த அரசு.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஆண்டு டிசம்பர் திங்களில் மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பல்கலைக்கழகத் தேர்வுகளைப் புறக்கணித்தார்கள். அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலே சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில கல்லூரி ஆசிரியர்களும் விடைத்தாள் திருத்தும் வேலையை நிறுத்தம் செய்யலாயினர்.

இந்த நிலை நீடித்தால் கல்வி வளர்ச்சியிலே மந்த நிலை ஏற்பட்டுவிடும் எனக் கருதியது அரசு. ஆசிரியர்களின் போராட்டத்தினாலே மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை விளக்க, போராட்டத்தைத் திரும்பப் பெறுமாறு அறிக்கை விடப்பட்டது.

முதல்வர்-ஆசிரியர்கள் சந்திப்பு :

10-ஆம் தேதியன்று அப்போராட்டத்தின் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே போராடும் ஆசிரியப் பெருமக்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர், அரசுத் தலைமைச் செயலாளர் ஆகியோரும் அந்தக் கலந்துரையாடலிலே பங்கேற்றனர்.

ஆசிரியப் பெருமக்களின் பெரும்பான்மையான கோரிக்கைகளுக்கு அப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணப்பட்டது. அதன் விளைவாகப் போராட்டம் முற்றுப் பெற்றது. ஆசிரியப் பெருமக்களும் அரசின் அணுகுமுறை கண்டு வியந்து, அளித்த சலுகைகளை மனத்தில் நிறுத்தி நெஞ்சார்ந்த நன்றியை இன்றைய அரசுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மீனவர் பிரச்சினைகள் :

தரைமேல் பிறக்க வைத்தான்; எங்களைத் தண்ணீரில் பிழைக்கவைத்தான்' என்று ஓலமிடும் உள்ளத்திற்குச் சொந்தக்காரர்கள் மீனவர்கள். அப்படி அல்லல் வாழ்வை நடாத்தும் அவர்கள் அண்மையில் ஒரு தொல்லை நிலைக்கு ஆளாயினர்.

பெருவாரியாக மின்விசைப் படகுகள் அறிமுகம் செய்யப்பட்டதால் மீன்பிடிப்பதில் விசைப் படகு மீனவர்களுக்கும், கட்டுமர மீனவர்களுக்கும் இடையிலே மோதல்கள் மூண்டன; கலவரங்கள் விளைவிட்டன.

வழிவழியாகக் கட்டுமரத்தினைப் பயன்படுத்துவோர், விசைப்படகுகளின் வரவினாலே தங்கள் தொழில் பாதிக்கப்படுவதாக உணர்வது இயல்பே. அதன்காரணமாக அவர்களிடையே மூண்ட தகராறினைத் தவிர்ப்பதில் அரசு கொண்ட அக்கறை மகத்தானது.

எப்போதெல்லாம் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுகிறதோ, அப்பொழுதெல்லாம் — மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மீன்வளத்துறை அதிகாரிகளும் உடனுக்குடன் தலையிட்டு அவர்களிடையே அமைதி நிலவுவதற்கான ஆக்கப் பூர்வமான வழிவகைகளை ஆற்றியுள்ளனர்.

இந்தப் பிரச்சினை மீனவர்களுக்குள்ளேயே— இருசாரருக்கு இடைப்பட்டு நடப்பதேயல்லாமல், அரசுக்கும், மீனவர்களுக்கும் இடையிலான பிரச்சினையல்ல.

ஆகவே, அதனைத் தீர்த்து வைப்பதில் அரசு மிக மிகக் கவனமாகச் செயல்பட்டது.

கடந்த ஆண்டு நவம்பரிலும், இந்த ஆண்டு ஏப்ரலிலும் அவ்வாறான பிரச்சினைகள் தலைதூக்கிய போது, மாண்புமிகு உணவு-மீன்வளத்துறை அமைச்சர், சென்னை, செங்கற்பட்டு, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விசைப்படகு—கட்டுமர மீனவர்களுடன் பயன்மிகு பேச்சுவார்த்தை நடத்தினார்.

இருசாராரும் ஏற்கத்தக்க நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. முடிவுகள் தெரிவிக்கப்பட்டன, கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மீன்பிடி தொழிலில் மீனவர்களுக்கு இடையிலிருந்த குழப்பங்களும், கொந்தளிப்பு நிலையும் அரசு மேற்கொண்ட அந்த முயற்சியினால் மிக எளிதாகத் தீர்த்து வைக்கப்பட்டன.

அரசு ஊழியர் போராட்டம் :

புதிய அரசு பொறுப்பேற்றதுமே உடனடியாக அரசு ஊழியர்களின் குறைகள் பற்றியும் கோரிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து முடிவெடுத்திட மூன்றாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டது.

அக்குழு ஆக்கபூர்வமான பணியில் ஈடுபட்டிருந்தபோதே-கடந்த பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் அரசு ஊழியர்கள் போராட்டம் துவங்கியது. 15 அம்சக் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது.

போராட்டம் அமைதியின் எல்லைகளுக்குள் இருக்கும்வரை, அரசு அனுமதித்தது. அலுவலகங்கள் முன்பு அமைதியான முறையில் மறியல் செய்தபோதும் பொறுத்தது. வேலைக்குச் செல்லும் ஊழியர்களிடம் விரும்பத்தகாத முறையில் நடக்க ஆரம்பித்தபோதுதான், அப்படிச் செய்தவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது அரசு மூலமாக!

பிப்ரவரி. 1975-ல் முந்தைய அரசு இருந்த போது, நடைபெற்ற அரசு ஊழியர்கள் போராட்டம், இவ்வேளையில் ஒப்புநோக்கத்தக்கது. அவ்வேளையில் அரசிதழ் பதிவிலா ஊழியர் சங்கத்தின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது. அதுபோல், இப்போது செய்யப்படவில்லை.

பழிவாங்கும் நோக்கம் இம்மியளவும் எழாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, அரசு பெருந்தன்மையுடன் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது.

இரண்டு முறை மாண்புமிகு முதலமைச்சரே அரசு ஊழியர்களுடன் நேரடியாகப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார். மூன்றாவது ஊதியக் குழுவின் முன்னுள்ளவை தவிர, பிற கோரிக்கைகள், ஏற்கெனவே உடன்படிக்கையில் உள்ள கோரிக்கைகள் ஆகியவைமீது உடனடியான முடிவுகள் அறிவிக்கப்பட்டன. மனிதாபிமான நேச நோக்கில் நடந்து கொண்டதால் விளைந்த நலன்கள் இவை என்றால் மிகையல்ல!

கோரிக்கைகளுக்காகப் போராடுவதை இந்த அரசு தடை செய்யவில்லை. போராடுபவர்களின் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதை இந்த அரசு ஒரு பிரச்சினையாகக் கொண்ட போதும் கௌரவப் பிரச்சினையாகக் கொண்டதில்லை.

போராட்ட நேரங்களில் அரசின் அணுகுமுறைகள் இருந்தவிதமே இன்றைய அரசின் சீருக்கும் சிறப்புக்கும் எடுத்துக்காட்டாகும்!

பெருமை கொள்கிறோம்: பெருமகிழ்ச்சி அடைகிறோம்!

நடந்த ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளன்றுதான் தமிழகத்திலே புதிய அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பேற்றது. திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்ருர்.

பாட்டாளிகளின் கூட்டாளி எனப் புகழப்படும் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களின் அமைச்சரவைப் பதவியேற்பு விழா சென்னை—ராஜாஜி மண்டபத்தில் சீரோடும் சிறப்போடும், நல்லிதயங்களின் வாழ்த்தோடும் நடைபெற்றது.

ராஜாஜி மண்டபத்திலே அரசுச் சார்பிலான பதவியேற்பு விழா முடிவுற்றதும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அண்ணாசாலையில் உள்ள அமரர் அண்ணா திருவுருவச் சிலையினை வந்தடைந்தார்.

கடல் நடுவே மிதக்கும் கப்பலெனத் திகழ்ந்தது அங்கு அமைக்கப்பட்டிருந்த அலங்காரமேடை. மக்கள் வெள்ளத்தில்! அங்கே அன்றைய தினம்—நமது முதல்வர் அவர்கள் ஆற்றிய அரிய உரை, வரலாற்றுப் பெருமையுடைய தாகும். அந்த உரைவருமாறு:

"அன்புக்குரிய தாய்க்குலமே! என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே! இதய தெய்வம் அண்ணாவின்மீது ஆணையிட்டு இங்கே உறுதி எடுக்க விரும்புகிறேன்.

"அங்கே—ராஜாஜி மண்டபத்தில் நடந்தது அரசாங்கச் சடங்கு, ஆனால் இங்கே நடப்பது உங்களின் கட்டளையை எதிர்பார்த்து நடக்கும் சடங்கு.

"மக்களின் குரலே மகேசன் குரல்" என்ற அண்ணாவின் தத்துவப்படி, மக்களின் பிரதிநிதிகள் நாங்கள் என்ற எண்ணம் தவறாமல் இந்த அரசாங்கத்தை நடத்துவோம்.

"எங்கள் அமைச்சரவையின் சார்பில் தமிழகத்தில் உள்ள மக்களுக்கும், இந்தியத் துணைக் கண்டத்தின் பிற மாநிலங்களில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கும் நாங்கள் உழைப்போம்.

"மக்களின் எண்ணங்களை—மக்களின் விருப்பங்களைச் சட்டமாக்கவும், அவர்களது தேவைகளை நிறைவேற்றவும்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் சட்டமன்றத்திற்கு அனுப்பப்படுகிருர்கள், என்று அமரர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல அதனை உள்ளத்திலே இருத்தி, இலஞ்ச லாவண்யம் இல்லாத—ஊழலற்ற—நேர்த்துறையில் நிர்வாகம் நடைபெற அரசை நடத்துகின்ற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபடுவோம்.

"எங்களது வாழ்வு வசதிகள் அத்தனையும் இழக்கவேண்டிய நிலை வந்தாலும் அதற்காக எதிர்ப்படுகிற அத்தனை தடைகளையும் எதிர்த்து எங்கள் கடமைகளை நிறைவேற்றுவோம்.

"இதனை, அமரர் அண்ணா அவர்களின் மீது ஆணையிட்டு அமைச்சரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இப்பொழுது, உங்களது ஆசிபெற்று எங்களது பணியைத் தொடரச் செல்கிறோம்.

"அண்ணா நாமம் வாழ்க!"

—இவ்வாறு தமிழக முதல்வர் அவர்கள் அன்றைய தினம் கொள்கை முழக்கம் செய்தார்.

இந்த ஓராண்டுக் காலத்தில், முதல்வர் அவர்கள் வலியுறுத்திய கொள்கைகள் அரசுத் துறைதோறும் கண்ணும் கருத்துமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதைக் காணகிறோம்.

இந்த ஓராண்டில்—பொறுப்பேற்ற புதிய அரசு சந்தித்த போராட்டங்கள் ஏராளம். ஆனாலும், அவற்றைத் தவிர்க்கும் முயற்சியிலேயே காலம் கடத்திடாமல், தவிர்க்கும் முயற்சி ஒரு பக்கம்; நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தும் முயற்சி மறுபக்கம் என்ற வகையிலே தமிழக அரசின் பணிகள் அமைந்திருப்பதை அகிலம் பாராட்டுகிறது!

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்று சொன்ன சொல்லில் அணுவளவும் பிசகாமல்—

நாடு நலம்பெற—

நன்மை விளைந்திட—

நாளும் உழைத்திடும் இந்த அரசின் ஆக்கபூர்வமான திட்டங்களைப் பொதுமக்களுக்கு எடுத்துரைக்க வாய்ப்புக் கிடைத்தமைக்காகப் பெருமை கொள்கிறது 'தமிழரசு'! பெருமகிழ்வும் அடைகிறது!

மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையிலான தமிழக அரசு இரண்டாவதாண்டில் அடியெடுத்து வைக்கின்ற இந்த நேரத்தில், கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் அரசு சந்தித்த போராட்டங்களையும் கிளர்ச்சிகளையும் பட்டியல் போட்டுக் கீழே காட்டியுள்ளோம்

26-7-77
சென்னையில் ஐந்து கல்லூரிகளின் மாணவர்கள் போராட்டம்.

27-7-77
மாணவர்கள் சட்டசபைக் கட்டடத்தின் முன் ஆர்ப்பாட்டம்.

12-8-77
தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் போராட்டம்.

16-8-77
சென்னையில் மாணவர்கள்—பொதுமக்கள் மோதல்.

17-8-77
கோவை மாவட்டத்தில் 65 ஆயிரம் மில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்.

18-8-77
சென்னை எம். சி. ராசா அரிசன விடுதி மாணவர்களுக்கும்—பொதுமக்களுக்கும் மோதல்.

18-8-77
சட்டக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம்.

21-8-77
நெசவுத் தொழிற்சாலையின் தொழிலாளர் ஊர்வலம்.

22-8-77
மதுரையில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ் தொழிலாளர்கள் நாலாயிரம் பேர் வேலைநிறுத்தம்.

23-8-77
காஞ்சி கலெக்டர் அலுவலகம் முன்பு 500 கிராம அதிகாரிகள் ஊர்வலம்—உண்ணாவிரதம்.

திருப்பாதிரிப் புலியூரில் தென் ஆர்க்காடு மாவட்ட கிராம அதிகாரிகள் உண்ணாவிரதம்.

சென்னை சட்டக்கல்லூரி மாணவர்கள் ஊர்வலம்.

24-8-77
இலங்கையில் தமிழர் படுகொலையைக் கண்டித்து சென்னையில் 5 இலட்சம் பேர் ஊர்வலம். பஸ்கள், டாக்சிகள் ஓடவில்லை. கடைகள் அடைக்கப்பட்டன.

27-8-77
பல்லவன் போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தம். கல்லூரிகள் மூடப்பட்டன.

27-8-77
செமஸ்டர் தேர்வுமுறையை எதிர்த்து மதுரை தியாகராசர் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம்.

28-8-77
தொடர்ந்து வேலைநிறுத்தம்.

1-9-77
தஞ்சை சரபோஜி கல்லூரி மாணவர்கள்—சோழன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் மோதல்—கல்லூரி மூடப்பட்டது.

5-9-77
பயிற்சி டாக்டர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதம்.

6-9-77
மதுரையில் கல்லூரி மாணவர்கள் பஸ் கண்டக்டர்கள் மோதல்.

7-9-77
தமிழ்நாடு முழுவதுமுள்ள பயிற்சி டாக்டர்கள், மருத்துவக் கல்லூரிகளின் மாணவர்கள் உண்ணாவிரதம்.

8-10-77
தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வரை கேரோ செய்தனர்.

13-10-77
சென்னையினை அடுத்த பாடியில் உள்ள டி. வி. எஸ். தொழிலாளர்களுக்கும் போலீசாருக்கும் இடையே மோதல்.

19-10-77
விசைப்படகு மீனவர்களுக்கும் கட்டுமர மீனவர்களுக்கும் இடையே மோதல்—பஸ்களை நிறுத்தி மறியல் செய்தனர்.

29-10-77
மதுரையில் திருமதி இந்திரா காந்திக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்.

திருச்சியில் இந்திரா காந்திக்கு எதிராகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்.

30-10-77
சென்னையில் இந்திரா காந்திக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்.

கைது செய்யப்பட்ட தி. மு. க. தலைவர்களை விடுதலை செய்யக்கோரி கடையடைப்பும் - ஊர்வலமும்.

வேலூர், கோவை, தஞ்சை, காஞ்சி முதலிய பல்வேறு நகர்களிலும் அமளி.

31-10-77
சென்னையில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்-தமிழ்நாடு எங்கும் கலவரம்—மோதல்கள்.

2-11-77
சென்னையில் ஆட்டோ-டாக்சி ஓட்டுநர்கள் வேலை நிறுத்தம்.

3-11-77
சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்.

1-12-77
சென்னையில் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம்—பஸ்களின் மீது கல்வீச்சு.

5-12-77
மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் மறியல்—மாணவர்கள் போராட்டம்.

சென்னையில் பஸ்தொழிலாளர்கள்—மாணவர்கள் மோதல்.

6-12-77
தொடர்ந்து, மாணவர்கள் பஸ்களில் கல் வீசினர்.

9-12-77
கேள்வித் தாள்களைக் கிழித்தெறிந்து மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்.

103

13-12-77
சென்னையில் கல்லூரி ஆசிரியர்கள் ஊர்வலம்.
15-12-77
தாம்பரம் அருகே மிராசுதாரர்கள் — விவசாயத் தொழிலாளர்கள் மோதல்.
18-12-77
மீனவர்கள் மோதல்.
19-12-77
18 ஊர்களைச் சேர்ந்த-பொதுப்பணித் துறையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட என்ஜினியர்கள், தலையை மொட்டை அடித்துக் கொண்டு ஊர்வலம்.
மீனவர்கள் மோதல்.
21-12-77 30-12-77
என்ஜினியர்கள் உண்ணாவிரதம்.
9-1-78
தமிழ்நாடு அடித்தள அரசு ஊழியர் கள்—ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சித் துறை ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் கள் கோட்டையை நோக்கி ஊர்வலம்.
11-1-78
பல்லவன் பஸ் ஊழியர்கள் (மூன்று பணிமனைகளைச் சேர்ந்தவர்கள்) திடீர் வேலை நிறுத்தம்.
27-1-78
சென்னையில் 4 மருத்துவமனைகளைச் சேர்ந்த சுமார் 500 பயிற்சி டாக்டர் கள் வேலை நிறுத்தம்.
கோவை அரசினர் மருத்துவமனையைச் சேர்ந்த 175 பயிற்சி டாக்டர் கள் வேலைநிறுத்தம்.
28-1-78 - 1-2-78
சென்னையில் 8 மருத்துவக் கல்லூரிகளின் பட்ட மேற்படிப்பு மாணவர்களும் பயிற்சி டாக்டர்களும் வேலைநிறுத்தம்.
2-2-78
கல்லூரி ஆசிரியர்கள் 800 பேர் கோட்டையை நோக்கி ஊர்வலம்.
8-2-78
பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த இரு டிப்போக்களில் திடீர் வேலை நிறுத்தம்.
9-2-78
பல்லவன் போக்குவரத்து ஊழியர்கள் —மாணவர்கள் மோதல்.
13-2-78 - 27-2-78
தமிழ்நாடு முழுவதுமுள்ள என்.ஜி.ஓ. வினர் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பும், வட்டாட்சி அலுவலகம் முன்பும் ஆர்ப்பாட்டம்.
16-2-78
சென்னையில் கல்லூரிகளின் பேராசிரியர்கள் ஊர்வலம்.
22-2-78 - 13-3-78
என்.ஜி.ஓ.வினர் போராட்டம்.
3-3-78 - 13-3-78
ஊதிய உயர்வு கோரி, தமிழ்நாடெங்கும் என்.ஜி.ஓ.வினர் திடீர் வேலை நிறுத்தம்—ஊர்வலம் முதலியன.
8-3-78
கோர்ட்டுகள் மூடப்பட்டன.
மாநகராட்சிப் பள்ளிகள், மாநகராட்சி ஊழியர்கள் வேலைநிறுத்தம்.
அரசினர் பொதுமருத்துவமனை டாக்டர்கள், செவிலியர்கள் வேலை நிறுத்தம்.
மருந்து கலக்குநர்கள், செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்கள் வேலை நிறுத்தம்.
12-3-78
சென்னை ஆசிரியர் கில்டு ஊர்வலம்.
3-4-78
10 ஆயிரம் மீனவர்கள் ஊர்வலம்.
7-4-78
மீண்டும் விவசாயிகள் போராட்டம். வட ஆர்க்காடு மாவட்டத்தில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்.
9-4-78
விவசாயிகள் போராட்டம். சேலம் ராசிபுரம் அருகே தாளம்பாக்கத்தில் ஒரு பாலத்திற்கு வெடிகுண்டு வைக்கப்பட்டது.
ஆர்ப்பாட்டக்காரர்கள் 2 பஸ்களைத் தீயிட்டுக் கொளுத்தினர்.
கள்ளக் குறிச்சியில் ஓர் எக்ஸ்பிரஸ் பஸ் தீயிடப்பட்டது.
போலீசார் மீது வெடிகுண்டு வீச்சு.
31-5-78
தமிழ்நாடு முழுவதும் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பும், வட்டாட்சியர் அலுவலகம் முன்பும் 6,000 விவசாயிகள் தர்ணா.
13-6-78
விவசாயிகள் போராட்டம் — இரண்டாவது கட்டம்.
14-6-78
சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகம் முன்பும் விவசாயிகள் உண்ணாவிரதம்.
15-6-78
தமிழகம் முழுவதும் விவசாயிகள் உண்ணாவிரதம்.
16-6-78
விவசாயிகள் கிளர்ச்சி.
18-6-78
விவசாயிகள் தீக்குளிக்க முயற்சி.
கோவையில் விவசாயிகள் உண்ணாவிரதம்.
கோவை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு விவசாயிகள் கோவணத்தோடு ஊர்வலமாகப் போய் மறியல் செய்தனர்.
20-6-78 - 21-6-78
தொடர்ந்து விவசாயிகள் கிளர்ச்சி; ஏராளமான பெண்களும் கலந்து கொண்டனர்.
22-6-78
சென்னையில் 2,000 விவசாயிகள் ஊர்வலம்.

புதிய அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னர் ஆற்றியுள்ள பணிகள்-வகுத்துள்ள முக்கியத் திட்டங்களில் சில இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

- 1977-78-ஆம் ஆண்டில் கல்வித்துறையில் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ள தொகை ரூ. 176 கோடி. இது மாநிலத்தின் மொத்தச் செலவினத் தொகையில் 24 சதவீதமாகும்.
- 1977-78-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1100 ஆசிரியர் பதவிகள் அனுமதிக்கப்பட்டன. 1978-1979-ல் 1000 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களையும் 200 தமிழாசிரியர்களையும் 200 உடற்பயிற்சி ஆசிரியர்களையும் நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- இப்போதைய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கல்லூரிக் கல்விக்காகச் செலவிடும் தொகை இருமடங்காகப் பெருகியுள்ளது.
- வாழ்க்கையில் வசதியற்ற தமிழ்ப் புலவர்களுக்கு மாதம் ரூ. 100 உதவித் தொகை வழங்கப்படுகிறது.
- பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி-கல்லூரி ஆசிரியர்களுக்குத் தரும் சம்பள விகிதத்தை அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அளித்தல்.
- ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்திய மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளித்தல்.
- கம்பர், வள்ளலார் போன்ற தமிழ்ச் சான்றோர்களைச் சிறப்பிக்கும் வகையில் ஒரு தமிழ்ப் பண்பாட்டு மையத்தை உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது.
- தமிழகத்தின் புகழ்பெற்ற கவியரசர் கண்ணதாசன் அவர்களை அரசவைக் கவிஞராக நியமித்துள்ளது.
- 800 உயர்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளை அமைத்தல்.
- பள்ளி இறுதித் தேர்வில் 'கம்பார்ட்மெண்டல்' முறையை அறிமுகம் செய்தல்.
- துவக்கப் பள்ளிகளில் முதல் மூன்று வகுப்பு வரையிலும் எல்லா மாணவர்களுக்கும் தேர்ச்சி வழங்குதல்.
- சென்னையில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்க முடிவு.
- ஆண்டுதோறும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாள் விழாவின் போது சிறந்த தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாயும், பதக்கமும் கொண்ட பாவேந்தர் பாரதிதாசனார் விருது வழங்கப்படுகிறது. இவ்வாண்டு கவிஞர் சுரதா அவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- 1972-லிருந்து தமிழ்நாட்டில் மின்வெட்டு இருந்தது. இப்போதைய அரசு பதவி ஏற்ற அன்றே 1977 ஜூலை முதல்நாளில் மின்வெட்டு நீக்கப்பட்டது. இவ்வாண்டு முழுவதும் மின்வெட்டு இல்லை.
- சென்ற ஆண்டு 205 தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கு மின்வசதி வழங்கப்பட்டது. இவ்வாண்டு 691 குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படும். இத்துடன் அனைத்துக் குடியிருப்புகளும் மின்வசதி பெற்றுவிடும்.
- விவசாயிகள் பயன்படுத்தும் மின்கட்டணம் யூனிட்டு ஒன்றுக்கு 16 பைசாவிலிருந்து 14 பைசாவாக 1-7-'77 முதல், குறைக்கப்பட்டது
- 1-6-78 முதல் சிறு விவசாயிகளுக்கு மின்கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 14 பைசாவிலிருந்து 12 பைசாவாகவும், பெரும் விவசாயிகளுக்கு 16 பைசாவிலிருந்து 14 பைசாவாகவும் குறைக்கப்பட்டது. மீட்டர் வாடகைக் கட்டணம் மாதமொன்றுக்கு ஒரு மீட்டருக்கு 5 ரூபாயாக இருந்தது, 4 ரூபாயாகக் குறைக்கப்பட்டது
- புகுமுக வகுப்பிற்கு மேல் படிக்கும் அரிசன பழங்குடி மாணவர்களின் பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம் ரூ. 2500-க்குக் குறைவாக இருந்தால் தான் கல்லூரிப் படிப்புக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு வந்தது. இதனை மாற்றி இந்த வருமான வரம்பு நீக்கப்பட்டு 1977-1978 முதல் பெற்றோரின் வருமானம் எவ்வளவு இருந்தாலும், அரிசன பழங்குடி மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்பு முழுவதும் இலவசமாக்கப்பட்டு உள்ளது.
- ஏழை அரிசனங்களில் எவரேனும் இறந்து விட்டால், அவரது ஈமக்கடன்களைச் செய்ய ரூ. 50 - நிதி உதவி உடனே அளிக்கப்படும்.
- உள்ளாட்சி நிருவாக அமைப்பை மேம்படுத்தும் வகையில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊராட்சியிலும் மக்கள் குழு அமைக்கப்படும்.
- தமிழ்நாடு அரசு மூன்றாவது ஊதியக் குழுவை 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அமைத்தது.
- விரைவுப் பேருந்துகளில் கட்டணம் கிலோ மீட்டருக்கு 6 காசாக இருந்தது, 5 காசாகக் குறைக்கப்பட்டது.
- கிராமப்புறங்களில் 221 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடப்பட்டு 466 கிராமங்களில் உள்ள 7 லட்சம் மக்களுக்குப் போக்குவரத்து வசதி கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.
- போக்குவரத்துத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு கூடுதலாக ரூ. 53 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. போக்குவரத்துத் தொழிலாளிக்கு கூடுதல் ஊதியமாக ரூ. 62 கூடுதலாகப் படி, ஓட்டுநருக்கு ரூ. 69, பிற சலுகைகள் ரூ. 24, மருத்துவ வசதி, விபத்தின்றிப் பேருந்து செலுத்துவோருக்கு, ரொக்கப் பரிசுத் திட்டம், பணிக்காலத்தில் இறந்து போகும் தொழிலாளியின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு.
- கிராமப் புறங்களில் தொழில் வளர, சிறு தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த ஓராண்டில் 8,567 தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- சிறுதொழில்கள் மூலம் உற்பத்தி செய்ய முன்பு ஒதுக்கப்பட்ட பொருட்கள் 180, இப்போது 504.
- 1978 பிப்ரவரித் திங்கள் முடிய 946 சிறு தொழிலமைப்புகள் தொடங்கப்பட்டு 12,714 பேருக்கு வேலை தரப்பட்டுள்ளது. 'சிட்கோ' கிராமப்புறங்களில் 11,661 பேருக்கும் நகர்ப்புறங்களில் 10,161

பெருக்கும் வேலைவாய்ப்புகளைத் தந்துள்ளது. அதற்காகப் பயன்பட்ட தொகை ரூ. 1,672 லட்சமாகும்.

1976-77-ஆம் ஆண்டில் நபர் வாரித் திட்ட முதலீடு ரூ. 59 ஆகும். ஆனால் 1977-78-ஆம் ஆண்டில் நபர் வாரித் திட்ட முதலீடு 73 ஆகும்.

வேளாண்மைத் துறைக்காக இதுவரை ஆண்டொன்றுக்கு 22 முதல் 24 கோடி ரூபாய் வரை செலவிடப்பட்டுள்ளது. இப்பொழுது 30 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது.

1976-77-ஆம் ஆண்டு 53 லட்சம் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி 1977-78-ஆம் ஆண்டில் 62 இலட்சம் டன் அளவிற்கு உயர்ந்தது.

வெள்ளச் சேத நிவாரணப் பணிக்கு ரூ. 380 இலட்சம் செலவிடப்பட்டது.

இவ்வாண்டு வீட்டு வசதித் திட்டங்களுக்காக ரூ. 17.41 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

1978-79-ல் ரூ. 24 கோடி செலவில் 10,000 குடியிருப்புகளைக் கட்டித் தரும் பணியினை மேற்கொண்டுள்ளது.

பொதுத் தொண்டாற்றிப் புகழ் கொண்டவர்கள், தேசியத் தலைவர்கள் ஆகியோருக்கு அரசுச் சார்பில் விழா எடுக்கப்படுகிறது.

மதுவிலக்கு, தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப்பற்று போன்றவற்றை வலியுறுத்தும் தரமான படங்கள் தயாரிப்போருக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

கேளிக்கை வரி விதிப்பிலும் சிறந்தோர் சீர்திருத்தம் செய்யப்பட்டு 'காம்பவுண்டிங் முறையில்' வரி செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்களுக்கு உதவும் வகையில் பத்திரிகையாளர் உதவி நிதி அமைக்கப்பட்டுள்ளது. சிறு பத்திரிகையாளர்களுக்கு உதவிட 'சிட்கோ' மூலம் நியூஸ் பிரிண்ட் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1329 கிராமங்களில் தனித் திட்டமாகவும் கூட்டுத் திட்டமாகவும் குடிநீர் வழங்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பயனடைவோர் 4,80,798 பேர்.

வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் குறைந்தபட்சத் தேவையை நிறைவேற்றும் நோக்குடன், 1,205 கிராமங்களில் 9,80,381 பேர் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டது.

1411 கிராமங்களில் 7,95,000 பேர் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதித் திட்டங்கள் நிறைவேறி வருகின்றன.

2540 கிராமங்களில் 9,11,886 பேருக்குக் குடிநீர் வழங்கும் பல்வேறு திட்டங்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 45 குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள், பலவேறு கட்டங்களில் நிறைவேறி வருகின்றன. இதனால் 19,839 பேர் பயன்பெறுவர்.

புதிய குடிநீர்த் திட்டங்கள் 50 நகரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 138 நகரங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற குடிநீர்த் திட்டத்திற்காக அரசு வழங்கிய தொகை ரூ. 302.45 இலட்சம். இதில் ரூ. 274.55 இலட்சம் செலவில் 13 குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1977-78-ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட புதிய மதிப்பீட்டுத் திட்டத்தில் நகர்ப்புற குடிநீர் வடிகால் திட்டத்திற்காக ரூ. 849.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ. 142.82 இலட்சம் செலவில் இரண்டு பெரிய கழிவுநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1978-79-ல் நகர்ப்புற குடிநீர் வடிகால பணிகளுக்காக ரூ. 850 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1974-முதல முடிக்கிடந்த இந்தியா மீட்டர்ஸ நிறுவனம் புதுவாழ்வு பெற தமிழக அரசு திட்டமிட்டது. இந்நிறுவனத்திற்கு ரூ. 47 இலட்சம் தந்துதவிய இந்திய மத்திய வங்கிக்கு தமிழக அரசு பொறுப்புறுதி அளித்தது. இதனால் இந்நிறுவனம் 1977 டிசம்பரில் திறக்கப்பட்டது. 436 போ மீண்டும் வேலை பெற்றனர்.

30-6-77-ல முடிக்கிடநத 8 நெசவாலைகளில் தமிழக அரசின் முயறசியால், லட்சுமி மில்ஸ் மதுரை, சிவகுமார் ஸ்பின்னிங் மில்ஸ் நெல்லை, பிரகாஷ மில்ஸ் கோவை, லோட்டஸ் மிலஸ கோவை, சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங மில்ஸ் முத்தனேந்தல், (முகவை மாவட்டம்) ஆகிய ஐந்து ஆலைகள் திறககப்பட்டன

முடிக்கிடந்த ஆலைகள் மீண்டும் இயங்க தமிழக அரசு ரூ. 50 இலட்சம் கடனை வழங்கியதுடன் வங்கிகள் அளித்த 120 இலட்ச ரூபாய்க்குப் பொறுப்புறுதியும் அளித்துள்ளது. இந்த ஆலைகள் இயக்க வைத்ததால் 1,740 பேர் வேலைவாய்ப்புப் பெற்றனர்.

மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்பொழுது இறந்து விட்டால் ஆயிரம் ரூபாய் நிதி வழங்குவது என்பதை மாற்றி ரூ. 5000 நிதி உதவி 25-7-77 முதல் வழங்கப்படுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

101



தமிழரசு



... OF TAMIL NADU
... AND HISTORICAL RESEARCH
22 ஜுலை 1978
... MADRAS.

6-7-1978 50 காசு



வேளாண்மைச் சிறப்பிதழ்

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனல்
உழந்தும் உழவே தலை.

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴ தாற்ருது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை.

தொடிப்புழுதி க∴சா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

— திருவள்ளுவர்

திரு காமராஜ் அவர்கள் சென்னையில் வாழ்ந்த இல்லத்தைத் தமிழக அரசு, அரசுடைமையாக்கி, 'காமராஜ் நினைவு இல்லமாக்கியுள்ள இந்நன்னாளில் அன்னாரின் திருஉருவப் படத்தை மேலட்டையில் வெளியிட்டு மிகுந்த பெருமை கொள்கிறது 'தமிழரசு'. அவர் வாழ்ந்த இல்லத்தின் தோற்றத்தையும் முகப்பில் காணலாம்.

தமிழரசு

மலர் : 9 இதழ் : 2

16—7—1978

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக 5—7—1978 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது. அணையின் மற்றொரு தோற்றத்தைப் பின்பக்க அட்டையில் காணலாம்.

பாராட்டுவது நமது பண்பாடு!

பேரறிஞர் அண்ணா

காமராசர் தமது பணிகளின் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்றார்; தமிழர்களுக்கு நற்பணி ஆற்றினார்; தமிழர்கள் பெருமைப் படத் தக்க நல்ல காரியங்களைச் செய்தார்.

ஆனால், நான் ஓர் அரசியல் கருத்தைப் பின்பற்றுபவன்—அவர் இன்னொரு அரசியல் கருத்தைப் பின்பற்றுபவர். அப்படி வேறு பல அரசியல் கருத்தைப் பின்பற்றுபவரின் நல்ல குணங்களைப் பாராட்டுவதாலேயே அவர் வழியில் நான்

செல்ல வேண்டும் என்று விதியும் இல்லை; நியாயமும் இல்லை; சட்டமும் இல்லை.

உண்மையான மக்களாட்சி இருக்கும் நாட்டில்தான் ஒரு கட்சித் தலைவரை இன்னொரு கட்சித் தலைவர் மதிப்பார். ஒரு கட்சித் தலைவர் படத்தை இன்னொரு கட்சித் தலைவர் திறந்து வைப்பார்.

ஆனால், சர்வாதிகார நாட்டில் ஒரு தலைவர் இன்னொரு தலைவரின் சமாதியைக் கட்டுவார்!

ஆகவே, சனநாயக நாடான இந்த நாட்டில் இப்படிப்பட்ட காரியங்கள் தேவையான காரியங்களாகும்.

இதைப் பார்த்த பிறகாகிலும்—

அரசியல் கருத்து வேறுபாடு இருக்கலாம்; கசப்பு இருக்கத் தேவையில்லை!

கட்சி வேறுபாடு இருக்கலாம்; கத்திக் குத்து வரை செல்லக் கூடாது. கட்சி வேறுபாடு இருக்கலாம்; ஆனால், சந்து முனையிலிருந்து அது கத்துவதாக இருக்கக் கூடாது!

காமராசர் 'படிக்காத மேதை' என்று தலைமையாசிரியர் கூறினார்.

சிலர்தான் படிக்காமலேயே மேதை ஆக முடியும். ஆனால், அனைவருமே மேதையாக வேண்டும் என்றால், படிக்காமல் இருக்க வேண்டும் என்று பொருள் கொண்டு விடக் கூடாது.

படிக்காதவர்கள் சிலர்தான் மேதையாகலாம். ஆனால், படித்தவர்களை நிச்சயம் அந்தப் படிப்பு உயர்த்தாமல் விடாது.

25 மார்க்கு வாங்கிய மாணவனை ஆசிரியர் கண்டிக்கும்பொழுது; 'அவன் படித்தால்தானா......?' என்று திருப்பிக் கேட்பதற்கு இந்தப் 'படிக்காத மேதை' என்ற கருத்துப் பொருள் தராது.

—காமராசர் அவர்கள் படிக்கவில்லையே தவிர,

''கல்லூரிகளில் நான் படிக்கவில்லையே!'' — என்ற ஏக்கம் கொண்டவர்.

அவர் இருந்த காலம்—குடும்பச் சூழ்நிலை-நேரங்கிடைக்காத்தன்மை — அரசியல் ஈடுபாடு ஆகியவைகளால்தான் அவர் கல்லூரியில் படிக்க முடியவில்லை.

கல்லூரியில் அவர் படித்துப் பட்டம் பெறவில்லையே தவிர, படிக்கவே இல்லை என்று பொருள் கொள்ளக் கூடாது. அவர் தமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் படித்துக் கொண்டுதான் இருப்பார். இதை, ஆறடி மேடையில் மாலை நேரத்தில் பொதுக் கூட்டங்களில் மட்டுமே பார்ப்பவர்கள் புரிந்து கொள்ள முடியாது.

ஆனால், என்னைப்போல் நெருங்கிப் பழகுகிறவர்கள், அவரது படிப்பார்வத்தைப் புரிந்து கொள்வார்கள்.

அவர் கல்லூரியில் படிக்கவில்லையே தவிர வாழ்க்கைப் பாடத்தைப் படித்தார்.

மக்களின் புன்னகையை—பெருமூச்சை — கண்ணீரைப் படித்துப் பாடம் பெற்றார்!

முப்பது வருடம், நாற்பது வருடம் என்று மக்களிடம் தொண்டாற்றினால்தான் இந்தப் பாடத்தைப் பெற முடியும்!

என்னையும் அவரையும் 'பச்சைத் தமிழர்கள்'—என்று குறிப்பிட்டார்கள். 'பச்சை'—என்பதற்கு நாட்டில் இரண்டு, மூன்று அர்த்தங்கள் உண்டு.

ஒன்றும் விவரம் தெரியாதவர்களைப் 'பச்சைக் குழந்தைகள்' என்பார்கள்.

வளம் இருப்பவர்களைப் 'பச்சையாக' இருக்கிறார்கள் என்பார்கள்!

'நாங்கள் இருவருமே பச்சைக் குழந்தைகளும் அல்ல; வளம் சேர்த்துக் கொண்டவர்களும் அல்ல!

'இவர்கள் தமிழர்கள்' — என்று கூறினால் நாட்டில் 'இவர்கள் உண்மையான தமிழர்களா ?' — என்று கேள்வி பிறக்கிறது, என்ன காரணத்தாலோ!

அதனால்தான் உண்மைத் தமிழர்கள் என்று கூறி, அந்தச் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளத்தான் 'பச்சைத் தமிழர்கள்' என்கிறார்கள்; தரம் பிரிக்கிறார்கள்.

> வைரம் என்பது நீண்ட நெடுங் காலத்திற்கு முன்பு பூமியின் அழுத்தத்தால் கீழே அடங்கி ஒடுங்கிக் கிடந்த கரித் துண்டுதான்!
>
> அதுபோல, நெடுங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் இருந்து தோன்றிய வைர மணிகளில் ஒருவர்தான காமராஜர்!
>
> அவர் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும் அவரை நான் போற்றுவதற்கு இது ஒரு காரணம்.
>
> —பேரறிஞர் அண்ணா

தரம் — மற்றவர்கள் பிரித்ததே தவிர நாங்கள் பிரித்ததல்ல!

ஒருவர் புகழடைந்த பிறகுதான் பாராட்ட வேண்டும் என்ற பண்பு எவ்வளவுக் கெவ்வளவு நாட்டில் குறைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது.

நாம் பெறும் புகழ் என்பது இங்கிலாந்து நாட்டில் பவனி வருவதாலோ அமெரிக்காவில் பேசுவதாலோ ஏற்படுவது என்று நாம் நம்பக் கூடாது.

'ஈதல் இசைபட வாழ்தல்'.

—இவைதான் புகழுக்கு இலக்கணம் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார். அந்தப் பண்புகள் இருந்தால் போதும்.

உலகத்தை முழுவதும் சுற்றினார்களா, உலகத்தில் பாதிப் பகுதியைச் சுற்றினார்களா என்று பார்க்கத் தேவை இல்லை.

மனிதனின் மனம் எல்லா உலகங்களையும் விடப் பெரிது! அந்த இதயம் பண்புக்கேற்றபடி பெரிதாகத் தக்கது; நினைப்புக்கேற்றபடி குறுகத் தக்கது! ஆகவே அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்!

நமக்கு அறிவுரைகள் கூறுபவர்கள் பலர் இருக்கலாம். 'மனத்திற்கு எத்தகைய இடையூறு வந்தாலும் தாங்கிக் கொள்கிற வலிவு இருக்கிறதா? அந்த வலிவைத் தயக்கம் காட்டாமல் பயன்படுத்துகிறோமோ? என்று பார்க்க வேண்டும். இதைக் கொண்டுதான் தனி மனிதனின் புகழ் மட்டுமல்ல, நாட்டின் புகழே நிர்ணயிக்கப்படுகிறது.

இங்கு நான் மாணவர்களுக்குப் பரிசளித்தேன்.

இப்போது நான் திறந்து வைத்த காமராசர் படத்தை யாருக்குப் பரிசளிப்பது? எதற்குப் பரிசளிப்பது?

அதை நான் இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கே பரிசாகத் தருகிறேன்!

ஒருவர்க்கொருவர் மாறுபாடான கருத்து இருந்தாலும் மதிக்க வேண்டும். அப்படி மதிப்பதாலேயே ஒன்றுபட்டுவிட வேண்டும் என்பதில்லை.

தனித்தனித் தன்மையுடன், ஆனால், ஒருவர்க்கொருவர் மதிப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை (காமராசர் படத்தை நான் திறந்து வைக்கும்) இந் நிகழ்ச்சி உலகத்துக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

அதிலும் குறிப்பாக—சிறப்பாக —அவர் படத்தைத் திறப்பதிலோ, அவரைப் பாராட்டுவதிலோ எப்போதும் நான் தயக்கம் காட்டியதில்லை; தயக்கம் காட்டவும் மாட்டேன்.

இதனால் அவர் என்னை மதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. அது அவரது விவகாரம்!

கருத்து வேறுபாடு இருந்தாலும் பாராட்ட வேண்டியதைப் பாராட்டுவது என்பது தமிழ்ப் பண்பாடு; அந்தப் பண்பாடு மென்மேலும் சிறக்க வேண்டும் என்பதைத்தான் இந்த நிகழ்ச்சி மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அவர் படத்தை நான் திறக்கிறேன் என்றால் அவர் தமிழகத்துக்கு நன்மை செய்தார் என்பதற்காக!

—(23-4-1967-ல் காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியின் ஆண்டு விழாவில் திரு. காமராசர் அவர்களின் படத்தைத் திறந்து வைத்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை)

①



②

③

1. முதலாவது இந்தியக் குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத் அவர்களுடன்.

2. இரண்டாவது இந்தியக் குடியரசுத் தலைவர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களுடன்.

3. முதலாவது இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, மூதறிஞர் ராஜாஜி ஆகியோருடன்.

பேரறிஞர் அண்ணா அவர்களுடன்.

திரு எம்.ஜி.ஆர். அவர்களுடன்.

அறிவுடையார் மானமுள்ளார் காம ராசர்
அன்புடையார் திரவிடநன் மக்கள் மீதில்
நெறியறிந்து செலத்தக்க ஆற்றல் உள்ளார்
நெஞ்சத்தில் தெளிவுடையார் தந்நலத்தைச்
சிறிதேனும் எண்ணாத பெரும்பண் புள்ளார்
திரவிடத்தைக் காத்திடுமோர் உறுதி யுள்ளார்

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

அவர்களது சந்தேகமும் அவரது சாதனையும்

அவர் (காமராஜர்) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரான போது, இவ்வளவு பெரிய அமைப்புக்குத் தலைவராக இருந்து இவரால் செயல்பட முடியுமா என்று கேட்டவர்கள் உண்டு. ஏறத்தாழ ஒன்பதாண்டுக் காலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்து கோஷ்டிப் பூசல் எதுவுமே இல்லாமல் ஸ்தாபனத்தை வழி நடத்திச் சென்றதோடு அவருடைய ஆதரவு பெற்றவர்கள் மட்டுமே தான் முதலமைச்சராக இருந்து பணியாற்ற முடியும் என்கிற நிலைமையினையும் உருவாக்கினார்.

அவர் தமிழக முதலமைச்சரானபோது ஆங்கில அறிவு இல்லாத இவரால் நிர்வாக இயந்திரத்தை எப்படி செம்மையாக இயக்கி செயல்படுத்த முடியும் என்று கேட்டவர்கள் உண்டு. முதலமைச்சர் பொறுப்பிலும் அதே ஒன்பதாண்டுக் காலம் சிறப்பாகப் பணியாற்றி திறமை மிக்க நிர்வாகத்தைக் கொண்ட மாநிலம் தமிழ் மாநிலம் என்கிற பெயரையும் பெற்றுத தந்தார். நிர்வாகப் பணியைவிட கட்சிப் பணியை மேற்கொள்வது அவசரம் என எண்ணியபோது பதவியை உதறி எறிந்து கட்சிப் பணிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது ஆங்கிலத்தில் ஆழமான அறிவில்லாதவர்— இந்தி மொழி தெரியாதவர்— எப்படி இவ்வளவு பெரிய அனைத்திந்திய ஸ்தாபனத்தைக் கட்டி மேய்க்கப் போகிறார் என்று கண் சிமிட்டிக்கேட்டவர்களும் உண்டு. ஆனால் அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டவுடன் நேருவின் மரணத்துக்குப் பிறகு எழுந்த வாரிசுரிமைப் பிரச்சினையை இரண்டுமுறை தீர்த்து வைத்து இந்திய ஜனநாயகத்தின் உறுதித் தன்மையை உலகம் உணரச் செய்தார்.

ஒவ்வொரு முறையும் இவரால் ஆகுமா, என்று கேட்டவர்கள் தான் வெட்கித் தலை குனிந்தார்களே தவிர, காமராஜர் மட்டும் தான் வகித்த ஒவ்வொரு பதவிக்கும் தனிச் சிறப்பு சேர்த்த பிறகே அந்தப் பதவிகளைவிட்டு விலகியிருக்கிறார்.

மகாத்மா காந்தியிலிருந்து பாரதப் பிரதமர் இந்திரா காந்தி வரை எவரும் அவரை அலட்சியப்படுத்தி செயல்பட முடியவில்லை என்கிற ஒன்றே, இந்திய வரலாற்றில் எவ்வளவு பெரிய சக்தியாக அவர் விளங்கி வந்திருக்கிறார் என்பதற்குப் போதுமான சான்றாகும்.

—(திரு பி. சி. கணேசன் எழுதிய 'பாரதப் பெருந்தலைவர் காமராஜ்' என்ற புத்தகத்திலிருந்து)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 18-8-77 அன்று குடியரசுத்தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்ற பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவப்படம்.





காணக் கிடைக்காத தலைமைப் பண்பு

—மு. நமசிவாயம்

பெருந்தலைவர் காமராஜ்! இந்திய வரலாற்றில் குறிப்பிடத் தக்க சிறப்பிடம் பெற்றுள்ள பெருந்தமிழன்!

பள்ளிப்படிப்பு என்பது ஆறும் வகுப்புடன் முடிந்து விட்டது. எனினும் அனுபவ அறிவு, மனிதாபிமானக் கண்ணோட்டம், 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனும் உணர்வுடன் தொண்டனாக வாழ்வினைத் தொடங்கி நாடாளும் தொண்டனாக உயர்ந்தார்.

ஆறாவது வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்திக் கொண்ட காமராஜ் ஆட்சிக் காலத்தில்தான் தமிழகத்தில் படிப்போர் எண்ணிக்கை பலநூறு மடங்கு உயர்ந்தது. பள்ளி இறுதி வகுப்புவரை இலவசக் கல்வி, இலவச மதிய உணவுத் திட்டங்கள் நடைமுறைக்கு வந்தன.

இலவசப்படிப்பு என்றாலும் பள்ளி ஆண்டுத் தொடக்கத்தில் ஸ்பெஷல் ஃபீஸ், புத்தகம், நோட்டு முதலியவற்றுக்காகப் பணம் செலவிட முடியாத ஏழைகள் பலருக்கும் பெருந்தலைவர் தமது சொந்தப்பணத்தில் இருந்து உதவி செய்து வந்தார்.

ஏழை மாணவர் எனும் பரிந்துரையை ஆசிரியரிடமிருந்து பெற்று வந்தால் போதும், காமராஜ் பண உதவி செய்து வந்தார்.

ஒரு நாள் இரண்டு சிறுமிகள் பண உதவி கேட்டு வந்தனர். அவர்களை ஏற இறங்கப் பார்த்த காமராஜ் ஏதோ சந்தேகப்பட்டார். தமது உதவியாளரை அழைத்து வெளியில் இருந்த அந்தப் பள்ளிச் சிறுமிகளுடன் வந்திருந்த தலைமை ஆசிரியரை அழைத்து வரச் சொன்னார்.

இதுதான் விஷயம்! பணவசதி படைத்த அந்தச் சிறுமிகளை காமராஜிடம் அனுப்பி, ஏழை என்று உதவி கேட்டுவரும்படி செய்து, அந்தப் பணத்தைத் தாமே எடுத்துக் கொள்ளத் தலைமை ஆசிரியர் திட்டமிட்டிருந்தார்!

சிறுமிகளின் முகக்களை, வசதி மிகுதியைப் பளிச்சிட்டுக் காட்டும் நடை, உடை, பாவனைகளைக் கொண்டு பெருந்தலைவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. தீர விசாரித்து உண்மையைக் கண்டறிந்தார். கண்டிப்பு ஒன்றோடு தலைமை ஆசிரியரை மன்னித்து அனுப்பி விட்டார்!....

செவிலியர் படிப்புத் (Nursing Course) தேர்வில் மும்முறை, தோற்ற பெண், நான்காவது முறை தேர்வு எழுத விதிவிலக்கு பெற்றும் தோற்றுவிட்டு, ஐந்தாவது முறை தேர்வு எழுத அனுமதி கேட்டார். சட்டம் இடம் தரவில்லை என அரசு முடிவான பதிலை அனுப்பி விட்டது!

எப்படியும் நர்ஸ் தேர்வு எழுதித் தேர்வு பெற வேண்டும் எனும் ஆர்வமும் துடிப்பும் அந்தப் பெண்ணை விட்டு அகலவில்லை. முதல்வர் காமராஜ் கவனத்திற்கு இந்தப் பிரச்னை எப்படியோ சென்றுவிட்டது.!

'நர்ஸ் வேலைக்குத் தான் போகணும்'' என்று ஒரு பெண் பிடிவாதமா இருக்குதா? நல்ல aptitude (ஆர்வம்). படிக்கட்டும். மூணுமுறைதான் பரிட்சை எழுதலாம். சட்டம் அது. நான்காவது தடவையும் எழுத விதி விலக்கு இப்போ இருக்கு. சட்டம் அதோட திட்டவட்டமா நிற்குது! சரி. ஐந்தாவது தடவையும் எழுதலாம் அப்படின்னு உத்தரவு போட்டாப் போச்சி. அந்தப் பெண்ணு கிட்டே இருந்து ஒரு காகிதம் (application)

எழுதிக் கொண்டா! பார்க்கலாம்!' என்ருர் என்னிடம்!

உற்சாகத்தோடு அந்தப் பெண்ணைத் தேடினேன். சொந்த ஊருக்குச் சென்றிருந்ததால் அந்தப் பெண்ணிடமிருந்து பதினைந்து தினங்களுக்கும் மேலாக அப்ளிகேஷன் வாங்க முடியவில்லை

ஒருநாள் இரவு பத்து மணி சுமாருக்கு வீடு திரும்பியபோது எனது வீட்டில் ஒரு கடிதம் இருந்தது. அடுத்த வருடம் நடக்கும் செவிலியர் தேர்வில் எழுத அந்தப் பெண்ணுக்கும் அதே போல வேண்டியிருந்த மற்ற ஐந்தாறு பெண்களுக்கும் ஐந்தாவது முறையாகத் தேர்வு எழுத அரசு அனுமதி அளித்திருந்த கடிதம் அது! பிரமித்துப்போய்விட்டேன்!

கடிதத்தைத் தூக்கிக்கொண்டு காமராஜ் வீட்டிற்குப் பறந்தேன். 'என்ன! நர்சுக்கு exemption (விதி விலக்கு அனுமதி) கிடைத்துவிட்டதா! ரொம்பச் சந்தோஷம்! நல்லாப் படித்து பாஸ் பண்ணச் சொல்லு! இதுக்கு எதுக்காக இப்ப ராத்திரியிலே ஓடி வந்தே?''

நான் வாய் திறந்து நன்றிகூற முற்படுவதற்கு முன்னதாக காமராஜரே பேசி முடித்துவிட்டார்.

'அந்தப் பெண் ஊருக்குப் போயிடுச்சு! அதனலே........'' பேச்சை முடிக்கவில்லை நான். காமராஜ் குறுக்கிட்டார்.

''அதுக்காக என்ன! ஹெல்த் செக்ரட்டரி வந்தார். நீ சொன்ன நர்சுப் பெண்ணு பேரு நல்லா ஞாபகம். இருந்திச்சு...அந்தப் பெண்ணைப் போலவே 'எக்செம்ஷன்' கேட்ட மற்ற பெண்களுக்கும் வந்துட்டுதுல்லே!'' பேச்சை முடித்தார் காமராஜ்!

அந்தப் பெண் நர்ஸ் பரீட்சை எழுதித் தேர்வு பெற்று இப்போது ஸ்டான்லி மருத்துவ மனையில் ஸ்டாஃப் நர்ஸ் ஆகப் பணியாற்றி வருகிருர்!...

அரசுத் தலைமைச் செயலகத்திற்கு முன்ஞல் ஒரு குடும்பம். கணவன், மனைவி, ஆணும் பெண்ணுமாக ஏழு குழந்தைகள்! எல்லோரும் முதலமைச்சர் காமராஜ் அறைக்குள் நுழைகின்றனர்.

அந்தக் குடும்பத்தலைவருக்கு வயது ஐம்பதுக்கு மேலாகிறது. காவல் துறைப் பணியிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டார். எல்லா முறையீடுகளும் பயன் தரவில்லை. முதலமைச்சரிடம் நேரில் முறையிட்டார்.

'இந்தாப்பா! ''Misbehave'' (ஒழுங்கீனம்') காரணமாக டிஸ்மிஸ் ஆகியிருக்கே! உண்மையை என்ன நடந்தது சொல்லு! ஏதும் தப்பு பண்ணல்லேன்னு சொல்றது சரியில்லே! உம்..நான் கேட்கிறேன்... வயசு ஆனதாலே, ராத்திரி சென்ட்ரி (இரவு காவல்) வேலை பாத்தியா? அப்ப தூங்கிட்டாயா? மேல் அதிகாரி தட்டி எழுப்பிருரா? தூக்கக் கலக்கத்திலே ரொம்பத் திட்டிப் போட்டாயா? சொல்லு..உண்மை என்ன?'' காமராஜ் கேட்டார், மெத்தவும் கனிவோடு!

'உண்மை அதுதான்' என்று அந்தப் போலீஸ்காரர் ஒப்புக் கொண்டார். 'சரி. தப்பு செய்தேன். மன்னித்துவிடுங்கள் என்று ஒரு Mercy Petition (கருணை வேண்டும் மனு) கொடு! பார்க்கலாம்' என்று முற்றுப்புள்ளி வைத்தார் முதல்வர் காமராஜ்!

மறுதினம் கருணை மனு கொடுக்கப்பட்டது. ''சரி.. ஊர் போய்ச் சேர். வேலைக்கு வரும்படி ஆர்டர் வரும். ஒழுங்கா இருந்து பென்ஷன் வாங்குகிற மாதிரி ரிடையர் (ஓய்வு) ஆகணும்..சரி ஊருக்குப் போக பணம் இருக்கா?' என்று கேட்ட பெருந்தலைவர் அந்தப் போலீஸ்காரருக்குப் பண உதவியும் செய்தார்!...

உயிருடன் உலாவரும் எவருக்கும் உருவச்சிலை கூடவே கூடாது எனும் கூஞரையைக் கொண்டிருந்த பிரதமர் நேரு அவர்கள், விதிவிலக்காக பெருந் தலைவர் காமராஜ் அவர்களது உருவச்சிலையினைத் திறந்து வைத்தார்.

சிலை திறப்பு கூடாது என இருந்த தாமே, காமராஜ் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்டது ஏன்? எனவும் பிரதமர் நேரு விழா மேடையில் விளக்கிஞர்.

''இந்திய நாட்டின் தலைவர்கள் எல்லாம் படித்த, பணவசதி மிகுந்த, செல்வாக்கு மிகுந்த குடும்பத்திலிருந்து தான் தோன்றியிருக்கின்ருர்கள். ஆனுல் 'காமராஜ் தலைமை' என்பது சாதாரண இந்தியக் குடிமகனது இடத்திலிருந்து தோன்றியது ஆகும். "Kamaraj leadership is an unique leadership" (காமராஜரது தலைமைப் பண்பு காணக் கிடைக்காத தலைமைப் பண்பு ஆகும்.)

பிரதமர் நேரு அவர்கள் குறிப்பிட்டபடி 'காணக் கிடைக்காத தலைமைப்பண்பு'' படைத்த பெருந்தலைவர் எண்ணம் வாழ்க! அவர் தம் நினைவு போற்றி நடத்திடும் மக்களாட்சிப் பண்பு வாழ்க!



தமிழகத்தில் வேளாண்மை வளர்ச்சி...

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

திரு. ப. குழந்தைவேலு



தமிழகத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கு முதலிடமும் முக்கியத்துவமும் அளித்து உற்பத்தி மேம்பாட்டிற்கு வழி வகுத்து, வளம் காண எண்ணிறைந்த திட்டங்களைத் தீட்டி, புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. வேளாண்மை என்பது அறிவியல் பூர்வமான ஒரு தொழில் என்ருலும் இயற்கையோடு இயைந்து பல்வேறு திட்டங்களைத் தீட்ட வேண்டியுள்ளது. இயற்கையின் தன்மைக்கேற்ப திட்டங்களைக் கூட்டியும், குறைத்தும், மாற்றியமைத்தும் செயல்பட வேண்டியது இன்றியமையாததாக உள்ளது.

1977-78-ஆம் ஆண்டில் சீரான பருவநிலையும், பயிர் உற்பத்திக்குச் சாதகமான சூழ்நிலையும் இருக்குமென எதிர்பார்த்தோம். தென் மேற்குப் பருவக்காற்று தாமதமாகப் பெய்தது. ஆயினும் வழக்கமான அளவு பெய்ததனுல் முன்பயிரில் ஏற்பட்ட குறைவை, சம்பா பருவ பயிரில் நிறைவு செய்ய முடிந்தது. வடகிழக்குப் பருவக்காற்று வழக்கத்திற்கு மாருக பெருமளவு மழையையும், வெள்ளத்தையும், புயலையும் தருவித்து தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை மற்றும் மதுரை போன்ற மாவட்டங்களில் பயிர் சேதத்தையும் உயிர் சேதத்தையும் விளைவித்து கடந்த ஆண்டினை சோதனை மிகுந்த ஆண்டாக மாற்றி விட்டது. இதனுல் நெல் உற்பத்தியில் 2 இலட்சம் டன் அளவிற்கும், இதர பயிர் உற்பத்தியில் ஒரு இலட்சம் டன் அளவிற்கும் உற்பத்தி இழப்பு நேரிட்டது.

உற்பத்தியை உயர்த்திடுவோம்!

இயற்கையின் சீற்றத்தினுல் ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்த தோடல்லாமல், 1977-78 ஆம் ஆண்டின் உற்பத்தியை அதற்கு முந்திய ஆண்டின் உற்பத்தியைவிட கணிசமான அளவு உயர்த்துவதற்காகத் திட்டங்கள் தீட்டப் பெற்று செயல்படுத்தப்பட்டன. 1976-77ஆம் ஆண்டில் 53 இலட்சம் டன்னுக இருந்த நெல் உற்பத்தியைச் சென்ற ஆண்டில்

62 இலட்சம் டன்ஞகவும், 18 இலட்சம் டன்ஞகவும் இருந்த சிறு தானியங்கள் உற்பத்தியை 19 இலட்சம் டன்ஞகவும், 2.90 இலட்சம் டன்ஞக இருந்த பயறு வகைகள் உற்பத்தியை 3 இலட்சம் டன்ஞகவும், 13.43 இலட்சம் டன்ஞக இருந்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை 14.90 இலட்சம் டன்ஞகவும், கரும்பு (வெல்லம்) உற்பத்தியை 13.50 இலட்சம் டன்னிலிருந்து 14.00 இலட்சம் டன்ஞகவும், 3.50 இலட்சம் பேலாக இருந்த பருத்தி உற்பத்தியை 3.75 இலட்சம் பேலாகவும் உயர்த்தப்பட்டன. மேலும் சிறு தானியங்கள் மற்றும் பருத்தி உற்பத்தியில் குறியீட்டைவிட அதிகமான அளவு உற்பத்தியைப் பெறுவதற்காகச் ''சிறப்புக் கோட்டத் திட்டம்'' துவங்கப் பெற்று செயல்படுத்தப் பட்டன.

புயல்-வெள்ள நிவாரணங்கள்

கடுமையான மழையினாலும், வெள்ளத்தினாலும், புயலினாலும் பாதிக்கப்பட்ட வேளாண் மக்களுக்கு அரசு இயன்ற வழிகளிலெல்லாம் துயர் துடைக்கும் பணியாகப் பல்வேறு உதவிகளைச் செய்துள்ளது. பல்வேறு நிவாரணப் பணிகளுக்கென ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகாறும் 1,693 டன் அளவுள்ள வித்துக்கள் சிறு உழவர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு பயிர் செய்திருந்த 1,363 உழவர்களுக்கு ரூபாய் 87,352 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

வாழை சாகுபடி செய்திருந்த 7,784 உழவர்களுக்கு ரூபாய் 5,42,702 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

புயலால் பாதிக்கப்பட்ட 5,455 வெற்றிலைக் கொடிக்கால்காரர்களுக்கு ஏக்கருக்கு ரூபாய் 500 வீதம், ரூபாய் 10.23 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

புயல்-வெள்ளத்தால் தென்னை மரங்களை இழந்த 24,609 சிறு விவசாயிகளுக்கும், குத்தகை சாகுபடியாளர்களுக்கும் ரூபாய் 2,68,435 செலவில் 98139 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

புயல் வெள்ளத்தினால் பூச்சிகளும் நோய்களும் அதிக அளவில் தோன்றி பயிர்களை அழிக்க முயன்றதைத் தடுப்பதற்காக, பூச்சி பூஞ்சாண மருந்துகளை 25 சத மானிய விலையில் இன்றைய அரசு வழங்கியது. இவ்வாறு மானியம் வழங்கிய வகையில் 31.3.78 வரை, தமிழ்நாடு அரசுக்கு ரூபாய் 1 கோடி செலவு ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தால் மணல் குவிந்து பாழடைந்த சிறு உழவர்கள் மற்றும் குத்தகைத்தாரர்களின் நிலங்களை இலவசமாகவும், மற்ற உழவர்களின் நிலங்களை 50 சத மானியத்திலும் சீர்திருத்தம் செய்து கொடுத்து வருகிறது. கடந்த மார்ச்சு மாதம் 31ஆம் தேதி வரை ரூபாய் 1.20 கோடி செலவில் 12,609 ஏக்கரில் குவிந்திருந்த மணல் அகற்றப்பட்டு சீர்திருத்தம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

விதை உற்பத்தியும், விநியோகமும்

''வித்தைப் போல் விளைவு'' தரமான வித்துக்களே உற்பத்தி உயர்வுக்கு அடிப்படை என்பதைக் கருத்தில் கொண்டு கோவை, சேலம், மற்றும் தருமபுரி மாவட்டங்களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு ஈரோட்டில் விதை மையம் ஒன்று கடந்த ஆண்டில் துவக்கப்பட்டுள்ளது. இவ்விதை மையத்திலிருந்து ஆண்டுக்கு 125 டன் நெல் விதையும், 288 டன் சிறுதானிய விதைகளும் .பத்தி செய்யப்படும். இவ்விதை உற்பத்தி மையத்தில் சி. எஸ். எச். 5 மற்றும் சி. எஸ். எச். 6 வீரிய ஒட்டு ரக சோள விதைகள் உற்பத்திக்கு ஏற்ற தட்பவெப்பநிலை உள்ளதால் மாநிலத்தில் மொத்த தேவையையும் இங்கே உற்பத்தி செய்யப்படும்.

கடந்த ஆண்டில் 1,750 டன் விதை உற்பத்தி செய்ய வல்ல மூன்று புதிய 'விதை சுத்திகரிக்கும் நிலையங்கள்' போளூர், சோ... வந்தான் மற்றும் கள்ளக்குறிச்சிஆகிய இடங்களில் நிறுவப்பட்டு ள்ளன. திருவாரூர் மற்றும் சாக்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில் முன்பே இரண்டு விதை சுத்திகரிக்கும் நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும் இரண்டு நிலையங்கள் கிள்ளிகுளம் மற்றும் பவானியில் கட்டப்படுகின்றன. இவைகள் எல்லாம் இவ்வாண்டில் இயங்கத் துவங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்காடிகளில் விற்கப்படும் விதைகளின் தரம், முளைப்புத்திறன், சுத்தம் ஆகியவை குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு கோயம்புத்தூரைத் தலைமை இடமாகக் கொண்டு இயங்கக் கூடிய பிரத்தியேகமான விதை ஆய்வகம் ஒன்று கடந்த ஆண்டில் துவக்கப்பட்டது. இவ்வாய்வகம் மதுரை, சேலம் மற்றும் கோவை மாவட்டங்களில் செயல்படும்.

1966-ஆம் ஆண்டு விதைச் சட்டத்தின்படி வேளாண்மை இயக்கக மேற்பார்வையில் விதைச் சான்றிதழ் அளிக்கும் திட்டம் இயங்குகின்றது. இதுவரையில் 4,608 எக்டேரில் நெற்பயிருக்கும், 447 எக்டேரில் உயர் விளைச்சல் ரக சிறுதானியங்களுக்கும், 811 எக்டேரில் வீரிய ஒட்டு சிறு தானியங்களுக்கும் 728 எக்டேரில் உயர் விளைச்சல் ரக பருத்திக்கும், 115 எக்டேர் வீரிய ஒட்டுப் பருத்திக்கும் 974 எக்டேரில் பயறு வகைப் பயிர்கள் மற்றும் இதர பயிர்களுக்கும் விதைச் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக வேளாண்துறை மூலம் விதைப் பண்ணைகளும், விதை மையங்களும், நாற்றங்கால்களும் அமைத்து, வேளாண் மக்களுக்குத் தேவையான தரமான வித்துக்களையும், நாற்றுக்களையும் வழங்குவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இம்முறையில் கடந்த ஆண்டில் 10,229 டன் நெல் விதையும் 70 டன் கேழ்வரகு விதையும், 229 டன் சோள விதையும், 211 டன் கம்பு விதையும், 82 டன் மக்காச் சோள விதையும், 3652 டன் நிலக்கடலை விதையும், 745 டன் பயறு விதையும்,



1397 டன் உயர் விளைவு ரக பருத்தி விதையும் 13.6 டன் வீரிய ஒட்டுப் பருத்தி விதையும் வேளாண் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இத்துடன் 10.23 இலட்சம் தென்னங்கன்றுகளும், 25,936 நெட்டை, குட்டை தென்னங்கன்றுகளும், 1.92 இலட்சம் பழங்கன்றுகளும், 41,200 கிலோ காய்கறி விதையும், 1030 டன் பசுந்தாளுர விதையும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

உரமும் உற்பத்தியும்

இடுகின்ற உர அளவை உயர்த்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்பாக உரமேற்கும் தன்மை வாய்ந்த பயிர் ரகங்கள் நம்மிடையே உள்ளன. 1976-77 ஆம் ஆண்டு முடிய 1.96 இலட்சம் டன் தழைச்சத்தையும் 0.45 இலட்சம் டன் மணிச்சத்தையும், 0.57 இலட்சம் டன் சாம்பல் சத்தையும் பயன்படுத்தினோம். கடந்த ஆண்டில் ''இதுவரை எந்த ஆண்டிலும் இந்த அளவுக்கு இரசாயன உரம் உபயோகப்படுத்தப்படவில்லை'' என்று கூறத்தக்க அளவில் 2.87 இலட்சம் டன் தழைச்சத்தும், 0.78 இலட்சம் டன், மணிச்சத்தும், 0.97 டன் சாம்பல் சத்தும் தரும் இரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

உர விநியோகம் அல்லாது 1000 டன் அளவிற்குப் பசுந்தாளுர விதைகளும், 3 இலட்சம் நுண்ணுயிர் குடுவைகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், உரத்திற்காகச் செலவிடும் தொகையைக் குறைக்கும் பொருட்டு பெருமளவில் 'நீலப்பச்சைப்பாசி' உற்பத்தி செய்து வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடியாக விளங்குகின்றது என்பது குறிப்பிடத்

உயர் விளைச்சல் ரகங்கள்

உயர் விளைச்சல் தரவல்ல 'ஆடுதுறை-31', ''ஐ. இ. டி. 1,722', 'டி. கே. எம். 8' போன்ற நெல் ரகங்கள் பெருமளவு பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் 21.96 இலட்சம் எக்டேர் பரப்பளவில் உயர் ரகங்கள் பயிரிடப்பட்டன. அவற்றில் ஐ. ஆர். வகை இனங்கள் மட்டும் 19.75 இலட்சம் எக்டேர் ஆகும்.

சிறுதானியங்களைப் பொறுத்தவரை 'ஐ. எஸ். 3541', 'சி. எஸ். 3541', 'கோவில்பட்டி நெட்டை' போன்ற சோள ரகங்களும் 'கே. எம். 1.' 'கே. எம். 2' போன்ற கம்வு ரகங்களும், 'கே. எம். 1.' 'கே. எம். 2' போன்ற கம்பு ரகங்களும், 'கோ.. 7', 'கோ. 10', 'பி. ஆர். 202' போன்ற கேழ்வரகு ரகங்களும், 'தக்காண மக்காச் சோளம்', 'கங்கா-5' போன்ற மக்காச்சோள ரகங்களும் பெருமளவில் பயிரிடப்பட்டன. 5.10 இலட்சம் எக்டேர் பரப்பளவில் சிறு தானியங்கள் பயிரிடப்பட்டன.

கடந்த ஆண்டில் பயறு உற்பத்தியைப் பெருக்க ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 6.56 இலட்சத்திற்கு மேலாக ரூ. 11.17 இலட்சம் மத்திய அரசு வழங்கியுள்ளது. இதன் மூலம் நுண்ணுயிர்க் கலவைகள் 2,000 எக்டேர் பரப்பளவிற்கு இலவசமாக வழங்கவும் பயறு வகைப் பயிர்களுக்கு மருந்து தெளிப்பதற்கு ஆகும் செலவில் 2,000 எக்டேர் பரப்புக்கு மான்யம் வழங்கவும் வகை செய்யப்பட்டது. மேலும், இத்திட்டத்தில் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும் மான்ய விலையில் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தரமான நிலக்கடலை மூல விதை உற்பத்தி செய்து வழங்குவதற்காக முதன் முறையாக மூன்று மாநில விதைப் பண்ணைகளில் ஏற்பாடு செய்யப்பட்டது. நிலக்கடலைப் பயிருக்கு 298 டன் நுண்ணூட்டக் கலவையும், 7,84 டன் ஜிப்சம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தரமான சூரியகாந்தி விதைகள் உற்பத்தி செய்யும் பொருட்டு முதன் முறையாக 13,000 கிலோ மூல விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்நிலை சூரிய காந்தியின் உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவும்.

தீவிர எண்ணெய் வித்துப் பெருக்கத் திட்டத்தின்கீழ் 1,000 கைத்தெளிப்பான்களும், விசைத் தெளிப்பான்களும் எண்ணெய் வித்துப் பயிரிடும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு உள்ளன. இதில் தெளிப்பான் ஒன்றிற்கு ரூ. 200 என்ற அளவில் மான்யம் அளிக்கப்பட்டுள்ளது.

பருத்தி உற்பத்தியில் கடந்த ஆண்டின் உற்பத்திக் குறியீடான 3.75 இலட்சம் பேல் உற்பத்தி எதிர்பார்க்கப் பட்டுள்ளது. வீரிய ஒட்டுப் பருத்தி ரகமான வரலட்சுமிப் பருத்திப் பயிரிடும் பரப்பளவும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. கோவை, மதுரை கனைவிட அதிக அளவு உற்பத்தி எதிர்பார்க்கப் படுகின்றது. கடந்த ஆண்டில் கோடைப் பருத்திப் பரப்பை 50,000 எக்டேரிலிருந்து 65,000 எக்டேர் என்ற அளவுக்கு அதிகரிக்கப்

திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வீரிய ஒட்டு ரக வரலட்சுமிப் பருத்தி 20 டன் அளவிற்கு விதைப்பெருக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கரும்பு உற்பத்தியைப் பெருக்கும் வகையில், தரமான விதைக்கரணைகள் தயார் செய்வதற்குச் செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், திருச்சி மற்றும் தஞ்சை ஆகிய 6 மாவட்டங்களில் நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பயிர்ப் பாதுகாப்பு

அண்மைக் காலம் வரையிலும் குறிப்பிட்ட பகுதிகளில், குறிப்பிட்டப் பருவத்தில் மட்டுமே தாக்கி வந்த நெல் புகையான், சென்ற ஆண்டில் தீவிரமாகத் தாக்கியது. இவற்றைத் தடுக்க 8,000 எக்டேர் பரப்பளவில் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்தது. பின் இது 20,000 எக்டேர் பரப்பளவிற்கு உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தில் பூச்சி மருந்துகள் மானிய விலையிலும், மருந்து தெளிப்பதற்காக ஆகும் செலவில் மான்யமும் வழங்கப்பட்டது.

நெற்பயிரில் பெருமளவு சேதம் விளைவிக்கவல்ல' 'குருத்துப் பூச்சி' மற்றும் நிலக்கடலையைத் தாக்கி கடும் சேதத்தினை உண்டாக்கும் 'சிவப்புக் கம்பளிப்பூச்சி' போன்றவற்றைத் தடுப்பதற்கென நெற்பயிரில் 3,918 எக்டேர் பரப்பிலும், நிலக்கடலையில் 17,540 எக்டேர் பரப்பளவிலும் ஒட்டுமொத்தமாக மருந்து அடிக்கப்பட்டுள்ளது. இதில் விவசாயிகளுக்கு மருந்து தெளிப்பதற்கு ஆகும் செலவிற்காக ஏக்கருக்கு 3 ரூபாய் என்ற அளவில் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் வாடகைக்கு விடுவதற்காக, புதிதாக 900 விசைத் தெளிப்பான்கள் இப்பணிக்காக வாங்கப் பெற்றுள்ளன. இவை குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளைச் செப்பனிடுவதற்கென தற்போது 7 நடமாடும் பணிமனைகள் இயங்கி வருகின்றன. இப்பணிமனைகள் கடந்த ஆண்டில் 3,739 விசைத் தெளிப்பான்களை பழுது பார்த்துள்ளன.

பழப்பயிர் அபிவிருத்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேம்பனில் 1,000 ஏக்கர் பரப்பளவில் பழத்தோட்டம் ஒன்று துவங்கத் திட்டமிட்டு அதற்கான முன்னோடிப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அத்துடன் தரமான வாழைக்கன்றும் தயார் செய்து வழங்கும் வகையில் திருச்சி மாவட்டத்தில் முதலைப்பட்டியிலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் நவலக்கிலும் நாற்றங்கால்கள் துவக்கப்பட்டுள்ளன.

வேளாண்மை விற்பனைப் பிரிவு

வேளாண்மை விளைபொருள் விற்பனைத் தொடர்பான பணிகளை கவனிப்பதற்கென வேளாண் துறையின் மேற்பார்வையில் பிரத்தியேகமான வேளாண்மை விற்பனை இயக்கம் ஒன்று துவக்கப் பெற்று இயங்கி வருகின்றது.

உழவர் பயிற்சி நிலையங்கள்

கடந்த ஆண்டில் புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள் புதிதாகத் துவங்கப்பெற்று செயல்பட்டு வருகின்றன.

வேளாண்மை ஆய்வுப் பணிகள்

இவ்வாண்டில் உயர் விளைச்சல் தரவல்ல புதிய ரகங்களாக நெல்லில் 2 ரகங்களும், சிறுதானியங்களில் 7 ரகங்களும், பயறு வகைப் பயிர்களில் 4 ரகங்களும், எண்ணெய் வித்துக்களில் இரண்டு ரகங்களும் பருத்தியில் ஒரு ரகமுமாக மொத்தம் 16 ரகங்கள் வேளாண்மைத் துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் 8 புதிய ரகங்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடந்த ஆண்டில் வெளியிட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் பிரிவின் பணிகள்

நிலவளம், சிறுபாசனம், மண்வளப்பாதுகாப்பு போன்றவைகள் தொடர்பான பணிகளை மேற்கொள்ள வேளாண்மைப் பொறியியல் பிரிவின் வசம் 163 புல்டோசர்களும், 177 டிராக்டர்களும்; பலதரப்பட்ட 815 துளைக்கும் மற்றும் பாறை உடைக்கும் கருவிகளும் உள்ளன. வேளாண் மக்களுக்கு இக்கருவிகள் குறைந்த வாடகைக்கு விடப்பட்டன 1,27,00 மணி நேரத்திற்கு, நிலங்களைச் சமன்

படுத்துவதற்கும், ஏரி குளங்களைத் தூர் எடுப்பதற்கும் புல்டோசர்கள் பயன்படுத்தப்பட்டன. டிராக்டர்களைக் கொண்டு 62,500 ஏக்கர் அளவுக்கு உழவு செய்யப்பட்டன.

கடந்த ஆண்டில் 1,793 கிணறுகளை ஆழப்படுத்தியும், 2,124 வடிமுனை குழாய்க் கிணறுகள் அமைத்தும் வேளாண் மக்களுக்கு நீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் வேளாண் துறை 4 சக்தி வாய்ந்த 'ஹாமர்' துளைப்பான்களை இறக்குமதி செய்துள்ளது. இத்துளைப்பான்கள் பாறைகள் நிறைந்த பகுதியை உடைய சேலம், கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கு மிகவும் ஏற்றது.

நிலத்தடி நீரைக் கண்டுபிடிக்கவும் அதன் அளவையும் தன்மைகளையும் ஆராய்ந்து கிணறுகள் தோண்டுவதற்கு வசதியாக ஒரு டி.சி. ரெசிஸ்டிவிட்டி மீட்டரும், ஒரு எலக்ட்ரிக்கல் லாக்கரும் வாங்கப்பட்டுள்ளன. மேலும் இத்தகைய ஒன்பது கருவிகள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

புதிய திட்டங்கள்

1978-79ஆம் ஆண்டில் பல புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

தரமான ஆதார விதைகளையும், சான்றிதழ் பெற்ற விதைகளையும் உற்பத்தி செய்ய 24 மாநில விதைப் பண்ணைகளுக்குப் போதுமான பாசன வசதி, நிலச் சீர்திருத்தம் மற்றும் இதர உள்ளமைப்புத் தேவைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஈரமற்ற, நோய் தாக்காத விதைகளை உரிய பருவத்தில் வழங்குவதற்கு வழிசெய்யும் வகையில் 5 விதை சுத்திகரிப்பு நிலையங்களில் மூட்டை இடைச் செருகு கட்டைகள் மற்றும் ஈர அளவைக் கண்டுபிடிக்கும் கருவிகள் பொருத்தப்படும். மேலும் ஒரு விதைப் பரிசோதனை நிலையம் குடுமியான் மலையில் உள்ள அண்ணா பண்ணையில் நிறுவப்படும்.

80,000 எக்டேர் பயறு வகைப் பயிர்ப் பரப்பில் ஒட்டு மொத்த மருந்து தூவியும் 20,000 எக்டேர் பரப்பில் டை-அமோனியம் பாஸ்பேட் தெளித்தும் பயறு வகைகளில் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வடகரை, பவானிசாகர் மற்றும் துரைராஜ் நகரில் உள்ள எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் முதன் நிலைப் பண்ணைகளுக்குப் பாசன வசதியும் மற்றும் இதர உள்ளமைப்புத் தேவைகளை வழங்குவதன் மூலம் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

பட்டுக்கோட்டை, திப்பம்பட்டி மற்றும் தேவிப்பட்டினத்தில் உள்ள தென்னை நாற்றங்கால்களுக்குக் கூடுதலான பாசன வசதி அளிப்பதன் மூலம் அவைகளையும் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் வீரிய ஒட்டு தென்னங்கன்றுகள் பட்டுக்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியில் உற்பத்தி செய்யப்படும். தீவிர தென்னை அபிவிருத்தி திட்டம், வாய்ப்பு அதிகம் உள்ள கன்னியாகுமரி, கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தப்படும்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பெரிய அளவில் பழத்தோட்டம் ஒன்று நிறுவப்படும். கொல்லி மற்றும் கல்ராயன் மலைப்பகுதியிலும் அம்மலைவாழ் மக்களின் பயனுக்காகப் பெரிய அளவில் பழத்தோட்டங்கள் நிறுவப்படும். மற்றும் தரமான பழக்கன்றுகள் உற்பத்தி செய்து வழங்கும் பொருட்டு சேலம் மாவட்டத்தில் மாதிரி பழத்தோட்டம் நாற்றங்கால் ஒன்று நிறுவப்படும்.

11 வேளாண்மைப் பள்ளிகளுக்கு வசதிகள் செய்துதர திட்டமிடப்பட்டுள்ளது. சேலம், இராமநாதபுரம் மற்றும் ஊட்டியில் மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள் புதிதாகத் துவக்குவதன் மூலம் உழவர் பயிற்சி மற்றும் கல்வித் திட்டம் தீவிரப்படுத்தப்படும்.

குறைந்த செலவில் அதிக வருமானம் தரவல்ல பயிர் முறையை உருவாக்க பயிர் மாற்று ஆய்வுகள் திருச்சி மற்றும் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

தென்னையைத் தாக்கும் [illegible] பற்றிய ஆய்வுகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

செம்மண் மற்றும் [illegible] மண் நிலங்களில் [illegible]

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா



சுயமரியாதைச் சுடரொளி தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. தந்தை பெரியாரின் 100–வது பிறந்தநாள் செப்டம்பர் 17 ஆம் தேதி வருகிறது. இந்த ஆண்டில் ஒரு நாள் அல்ல; நூற்றாண்டு விழா ஆண்டு முழுவதுமே ஒவ்வொரு நாளும் தமிழகம் விழாக் கோலம் பூண்டு அந்தத் தன்மானத் தலைவரின் புகழ்பாட வேண்டுமென அரசு மூலம் திட்டமிடப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா, ஈரோட்டிலுள்ள பெரியார்-அண்ணா நினைவகத்தில் தொடக்கம் செய்யப்படுகிறது.

இந்த விழாவை எந்தெந்த வகையில் சிறப்பாகக் கொண்டாடலாம் என்பது பற்றித் திட்டங்கள் தீட்டி அரசுக்கு ஆலோசனை கூற நாவலர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. குழுவின் மற்ற உறுப்பினர்கள் விவரம் வருமாறு :

திரு க. ராசாராம், திருமதி சத்தியவாணி முத்து (எம்.பி.), திரு ஏ. பி. ஜனார்த்தனம் (எம்.பி.), திரு ப. உ. சண்முகம் (எம்.எல்.ஏ.), திரு கே. எஸ். அப்துல் வகாப் (எம்.எல்.சி.), செட்டிநாடு ராஜா முத்தையா செட்டியார், டாக்டர் வி. சி. குழந்தைசாமி, திரு என். டி. சுந்தரவடிவேலு, டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், திரு வி. வி. ராமசாமி, குன்றக்குடி அடிகளார், ஆர். ராமகிருஷ்ணன் (முன்னாள் செரீப்), திருவாரூர் தங்கராசு, டாக்டர் கே. ராமச்சந்திரன், திரு வ. சுப்பையா, திருமதி ஈ.வெ.கி. சுலோசனா சம்பத், திரு ஈ. வெ. அ. வள்ளிமுத்து, திரு என். எஸ். சம்பந்தம், திரு டி. கே. சீனிவாசன், மதுரை திரு எஸ். முத்து, திரு என். கிருஷ்ணமூர்த்தி ஐ.ஏ.எஸ்., (செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்-குழுவின் செயலாளர்.)

யிலும் பயிரிடுவதற்கு உகந்த உயர் விளைச்சலும் அதிக எண்ணெய் சத்தும் உடைய சூரிய காந்தி ரகங்கள் திண்டிவனம் ஆராய்ச்சிப் பண்ணையில் உருவாக்கப்படும்.

நிலத்தடி நீரை வெளிக் கொணர அதிக சக்தி வாய்ந்த காற்றழுத்தக் கருவிகள் வாங்கப்படும்.

1978-79-ஆம் ஆண்டின் உற்பத்தி இலக்கு

சோதனைகள் பல நிறைந்த 12 மாதங்களில் சாதனைகள் படைத்துள்ள தமிழ்நாடு அரசு, 1978-79ஆம் ஆண்டில் பசுமைப் புரட்சியைப் பட்டி தொட்டி எங்கும் பரப்பியும், பல்வேறு புதிய யுக்திகளைப் பயன்படுத்தியும் உழவர்களுக்குப் பல சலுகைகளை அளித்தும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிட்டுள்ளது.

இவ்வாண்டில் 64 இலட்சம் டன்கள் அரிசியையும், 20 இலட்சம் டன்கள் சிறுதானியங்களையும், 3.25 இலட்சம் டன்கள் பயறு வகைகளையும், 15.70 இலட்சம் டன்கள் எண்ணெய் வித்துக்களையும், 14.30 இலட்சம் டன்கள் வெல்லம் என்ற அளவுக்கு கரும்பையும், 4.25 இலட்சம் பேல்கள் பருத்தியையும் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த இலக்கினை எய்துவதற்குத் தேவையான இடுபொருள்களையும், கடன் வசதிகளையும் காலத்தில் வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு இதனால் இந்த ஆண்டில் வேளாண்மை உற்பத்தி பெருகி உழவர் பெருமக்கள் வருவாய் அதிகரித்து, அதன் பயனாய் அவர்களின் வாழ்வு வளம் பெறும் என்பது திண்ணம்.

சுவையான பசுங்கீரைகள்

சிவ. சுந்தரராஜன்,
இணைப் பேராசிரியர்,
தோட்டக் கலைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை.

கீரை வகைகளில் தண்டுக்கீரை, முளைக்கீரை, சிறுகீரை, அரைக்கீரை, புங்கிக்கீரை, குப்பைக்கீரை, தானியக்கீரை, வெந்தயக்கீரை, பருப்புக்கீரை, பொன்னாங்கண்ணிக்கீரை, புளிச்சக்கீரை, சுக்காங்கீரை என்னும் சப்பாங்கிரை முதலியன நாட்டுக்கீரைகள். மேலும்கொடிப் பசலைக்கீரை (சிவப்பு, பச்சை) சிலோன் பசலைக் கீரையும் உள்ளன.

இது தவிர சீமைக்கீரை வகைகளில் ''ஃபிரனுஷ்'' 'ஸ்பினுஷ்பீட்' ''செலரி'', ''லெட்டூஸ்'', 'பாலக்' போன்றவைகளும் இருக்கின்றன. நிரந்தரப் பலன் தரும் கீரை வகைகளில் அகத்திக்கீரை, தவசிக்கீரை என்ற ''செக்கூர் மனீஸ்'', முருங்கைக்கீரை, லெச்சக் கொட்டைக் கீரை போன்றவை உள்ளன. வாசனை இலைக்கீரைகளில் கறிவேப்பிலை, புதினா, கொத்தமல்லி, வெந்தயக் கீரை போன்ற வகைகள் உள்ளன.

கோ.1 தண்டுக்கீரை கோடைக் காலத்திலும் மழைக் காலத்திலும் பயிரிடலாம். இலைகளும், இளந்தண்டுகளும் கீரையாக உபயோகப்படுத்தப்படுகிறது. இதை நல்ல மண்ணும் மணலும் கலந்த மண் வகையில் பயிரிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும். விதைத்து மூன்று வாரங்களில் முளைக்கீரையாகப் பயன்படுத்தலாம். விதைத்து 30 நாட்கள் கழித்து வாரம் ஒருமுறை வதம 8 அறுவடை செய்யலாம். தண்டுக்கீரையாக எடுக்க செடிக்குச் செடி 15 செ. மீ. இடைவெளியிட்டு செடிகளைக் கலைத்துவிடவும். தண்டுக்கீரை பெரிய செடிகளாக வளர்ந்து கிளைகளும் இலைகளும் கூடியிருக்கும். செடியை வேரோடு பிடுங்காமல், தண்டையும், இலையையும் எடுக்கவும். மறுபடியும் தண்டு தழைக்கும். கடைசியில் தண்டுக்கீரையை வேருடன் பிடுங்கி விட வேண்டும். எக்டேருக்கு 12,500 கிலோ கீரை மகசூல் கிடைக்கும்.

சொந்த உபயோகத்திற்காக வீட்டுத் தோட்டங்களிலும், வியாபாரம் செய்வதற்காகப் பெரிய அளவிலும் பயிர் செய்வதற்கு ஏற்றது கோ. 2 ருசியுள்ள பசுங்கீரை. இதனை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். இதன் விதைகள் பெரியதாக இருக்கும். விரைவில் முளைக்கும் தன்மையும், திறனும் உள்ளவை. செடிகள் வீரியத்துடன் வளர்ந்து, 25 முதல் 30 நாட்களில் தரம் மிகுந்த கீரை விளைச்சலை அதிக அளவில் கொடுக்கிறது. இதன் இலையும் தண்டும் கவர்ச்சிகரமான பசுமை நிறத்துடன் இருக்கும். இவற்றில் நார்ச்சத்து அதிகம் கிடையாது. இதன் இலையும் தண்டும் 18:1 என்ற விகிதத்தில் உள்ளது. இக் குணங்கள் இந்த ருசியான பசுங்கீரைக்கு உள்ளது.

உண்ணுவதற்குத் த்குந்த 100 கிராம் பசுங்கீரையில், 3.5கிராம் புரதச்சத்தும், 39.8 மி. கிராம் மணிச்சத்தும், 379 மி.கி. சாம்பல் சத்தும், 310 மி.கி. சுண்ணாம்புச்சத்தும், 19 மி.கி. இரும்புச் சத்தும் உள்ளன. இந்தக் கீரை விதைத்த 25 நாட்களில் எக்டருக்கு 10,780 கிலோ கீரை கொடுக்கவல்லது. அதாவது சதுரமீட்டருக்கு 3,234 கிலோ கீரை கொடுக்கும்.

இதை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். முளைக்கீரையாக 25 முதல் 30 நாட்களில் அறுவடை செய்ய வேண்டும். தண்டுக்கீரையாக 35 முதல் 40 நாட்களில் அறுவடை செய்ய வேண்டும். விதை உற்பத்திக்கு 75 முதல் 80 நாட்கள் தேவைப்படுகிறது. நிலத்தை நன்றாக 3 முதல் 4 தடவைகள் உழுது 2. மீ. 1.5 மீட்டர் அளவுள்ள பாத்திகள் அமைக்கவும். மூன்று சதுரமீட்டர் பாத்திகளுக்கு 4.5 கிராம் விதை தேவைப்படும். விதையைச் சம அளவு மணலுடன் கலந்து பாத்தி முழுவதும் தெளிக்கவும். விதை போட்ட பின், பாத்தியை இலேசாகக் கிளறிவிடவும், அடி உரமாக 20 டன் மக்கிய தொழு உரம் அதாவது 40 வண்டி கடைசி உழவில் சேர்க்கவும். மேலும், 25, கிலோ தழைச்சத்து அதாவது 125 கிலோ அம்மோனியம் சல்பேட், 50 கிலோ மணிச் சத்து, 300 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ சாம்பல் சத்து அதாவது 35 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் போட வேண்

டும். மூன்று சதுர மீட்டர் பாத்தி அளவுக்கு 8 கிலோ மக்கிய தொழு உரம், 40 கிராம் அம்மோனியம் சல்பேட், 100 கிராம் சூப்பர் பாஸ்பேட், 20 கிராம் அம்மோனியம் சல்பேட், சூப்பர்பாஸ்பேட் மியூரியேட் ஆப் பொட்டாஷ் என்ற அளவில் போட வேண்டும். பின்னர் விதைத்து, பூவாளிக் கொண்டு தண்ணீர் தெளித்தல் வேண்டும். பின்பு வாரத்திற்கு ஒரு முறையாக நீர்ப்பாய்ச்சவும், பயிர்ப்பாதுகாப்பாக, விதைத்து நீர்ப்பாய்ச்சியவுடன், பி. எச். சி. 10 சத தூளை ஒரு கையளவு எடுத்து, பாத்தியின் நான்கு பக்கங்களிலும் போட்டு, எறும்புத் தொல்லையைத் தடுக்க வேண்டும். விதைத்து 20 நாட்களுக்குப் பிறகு இலைப்புழுக்களினால் சேதம் ஏற்பட்டால், ''மாலாத்தியான்'' மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும்.

விதைத்த 20 நாட்களுக்குப் பிறகு வெள்ளைத் தேமல் நோயின் அறிகுறி தென்பட்டால், டைத்தேன் எம். 45 என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் இரண்டு கிராம் மருந்து என்ற அளவில் கலந்து தனியாகவோ அல்லது பூச்சி மருந்துகளுடன் கலந்தோ தெளிக்க வேண்டும். எந்த மருந்து தெளித்தாலும், மருந்து தெளித்த ஒரு வாரத்திற்குள் கீரையை அறுவடை செய்து உபயோகிக்கக்கூடாது. முளைக்கீரையாக 25 முதல் 30 நாட்களில் பிடுங்கவேண்டும். தண்டுக்கீரையாக 35 முதல் 40 நாட்களில் அறுவடை செய்ய வேண்டும். விதைக்காக 75 முதல் 80 நாட்களில் அறுவடை செய்யலாம். முளைக்கீரை மகசூல் மூன்று சதுர மீட்டர் பாத்திகளில் சுமார் 3,234 கிலோ வீதம் ஒரு எக்டரில் 10,780 கிலோ கீரை அறுவடை செய்யலாம். தண்டுக்கீரையாக மூன்று சதுர மீட்டர் பாத்திகளில் சுமார் 4,875 கிலோ கீரை வீதம் ஒரு எக்டரில் 16,250 கிலோ கீரை அறுவடை செய்யலாம்.

'பாலக்' என்னும் 'இந்தியன் பிஞஷ்' அதனுடைய இளமையான பசும் இலைக்காகப் பயிரிடப்படுகிறது. இதில் உண்ணுவதற்குத் தகுந்த 100 கிராம் பசும் கீரையில் 3.4 கிராம் புரதச்சத்தும், 30.0 மி. கிராம், மணிச் சத்தும், சுண்ணச்சத்து 2.2 கிராம், 380 கிராம் சுண்ணும்புச்சத்தும், 16.2 கிராம் இரும்புச் சத்தும், 9.770 மி.கி. ''வைட்டமின் ஏ'யும் 70 கிராம் ''வைட்டமின் சியும்'' அடங்கி உள்ளது. இதைக் கீரையைப் போன்று பயிரிடலாம். 'ஆஸ்கிரீன்' என்ற ரகம் சிறந்தது. இதை எல்லா நிலங்களிலும் ஆண்டு முழுவதும் பயிரிடலாம். எக்டருக்குச் சுமார் 30 கிலோ விதை தேவைப்படும். வரிசையில் பாத்திகளில் 20 செ. மீ. இடைவெளியில் விதைக்க வேண்டும். அடி உரமாக 25 டன் மாட்டு எரு போட வேண்டும். மேலும் 20 கிலோ தழைச்சத்து அல்லது 100 கிலோ அம்மோனியம் சல்பேட்டை, பாதியை விதைக்கும் போதும், மீதியை 40 நாட்களுக்கும் பின்னர் மேலுரமாகப் போட வேண்டும். விதைத்து 30 முதல் 40 நாட்களில் கீரை 20 முதல் 30 செ. மீ. உயரம் இருக்கும்போது, தரைமட்டத்தில் அறுவடை செய்தால், மீண்டும் மீண்டும் தழைக்கும். இலைகள் பசுமையாகவும் சதைப்பிடிப்பு மிகுந்த ஈரப்பசையுள்ளதாகவும் இருக்கும்.

15 நாட்களுக்கு ஒரு முறையாக 3 அல்லது 4 அறுவடைகள் செய்யலாம். சுமார் 10,000 கிலோ கீரை மகசூல் கிடைக்கும். ஆனால், கீரையை அறுவடை செய்த அன்றே உபயோகப் படுத்தவேண்டும்.

ஆகவே, பசுங்கீரைகளைப் பயிரிட பெரிய வசதிகள் தேவையில்லை. நிலத்தை ஓரளவு கொத்திக் கொடுத்துப் பண்படுத்தி பூமியில் விதைகளைத் தூவினால் போதுமானது. தண்ணீர் பாய்ச்சிய மூன்று, நான்கு நாட்களில் முளைக்கும். 15 முதல் 20 நாட்களில் இளங்கீரைச் சமையல் செய்ய கிடைக்கும். செலவு மிகக்குறைவு. பயன் மிகுதியானது. மேலும், வீட்டின் முன்புறம் அல்லது பின்புறம் சிறிய பாத்திகள் போதுமானது. விதையை அவ்வப்போது தூவி இளங்கீரையாகச் சமையலுக்குப் பயன்படுத்தலாம். சிறுகீரை, அரைக்கீரை போன்ற இனங்கள் கிள்ளக் கிள்ளத் தளிர்க்கும் தன்மையுடையன. இவைகளை விதைத்தால் ஐந்து அல்லது ஏழு நாட்களுக்கு ஒரு முறை கீரையைக் கிள்ளிக் கொள்ளலாம். இவை மூன்றிலிருந்து ஐந்து மாதங்கள் வரை தொடர்ச்சியாகப் பயனளிக்கும். பின்னர் புதிதாக விதைக்க வேண்டும்.

இலை, தண்டு மட்டுமின்றி வேறு பல வகைகளில் கீரை பயன்படுகிறது. அரைக்கீரைகளின் விதைகள் தைலம் தயாரிக்கப் பயன்படுகின்றன. இக்கீரை விதையை மாவாக்கி உண்பதும் உண்டு. மலையில் வாழும் சில பிரிவினர், கீரை விதையை திணை, ராகி மாவு போன்று மாவுப் பதார்த்தங்கள் தயாரித்து உண்கின்றனர்.

இக்கீரை விதைகள், வெள்ளை, பழுப்பு, கறுப்பு நிறங்கள் உடையன. கரிசலாங்கண்ணியில் நீலம், மஞ்சள், சிவப்பு எனப் பலவகை உண்டு. இதைக் 'கரிப்பான்' எனவும் கூறுவர். இது இரத்த சுத்தி செய்யவும், கண்ணொளியை கூர்மையாக்கவும் உபயோகப் படுத்தப்படுகிறது. தற்காலத்தில் தயாரிக்கப்படும் ''கண்மை' தயாரிப்பில் இது ஒரு முக்கிய சர்க்கைப் பொருள் ஆகும்.

புளிச்சக்கீரையின் இலைகள் பித்தத்தைக் குறைக்க வல்லன. இது ஆந்திராவில் கோங்குராச்சட்னி செய்ய உபயோகிக்கப்படுகிறது. நார் எடுக்கவும் உதவுகிறது. மூள்ளுக்கீரையைச் சுட்டு அதன் கரியைப் பத்துப் போட்டால் இரத்தக் கட்டிகள் உடைய ஏதுவாகிறது. முருங்கையின் பட்டை இலைக்கொழுந்து மருந்தாக உபயோகப்படுத்தப்படுகிறது. முருங்கை விதை எண்ணெய், கடிகார உற்பத்தியில் உபயோகப் படுத்தப்படுகிறது.

பொன்னாங்கண்ணிக் கீரை வகைகள் பாத்திகள் ஓரங்களிலும், நடைபாதை வரப்புகள், மலர்ப்படுக்கையின் விளிம்புகள் ஆகியவற்றில் பயிரிட உகந்தது. இவற்றை அவ்வப்போது அறுவடை செய்து கீரையாக உபயோகப்படுத்தலாம். மேலும், கீரை இலை தைலம் எடுக்க உபயோகப்படுகிறது.

செக்கூர் மணீஸ் என்ற தவசிக் கீரையும் ஒரு பசுங்கீரையே. இவற்றின் தண்டுக் கிளைகளை வெட்டி இனவிருத்தி செய்ய வேண்டும். நட்டு மூன்று நான்கு மாதங்களில் தழைத்து வளர்ந்து பசுங்கீரை கொடுக்கும். மேலும், பசலையின் பச்சை சிவப்பு ரகங்களைப் பயிரிட்டால் பசுங்கீரை கிடைக்கும். இவற்றைத் தாழ்வாரங்களிலும், வேலிகளிலும், கூரையின் மேலும் படரவிட்டால் பார்க்க அழகாகவும் இருக்கும். பசுங்கீரையும் அவ்வப்போது அறுவடை செய்யலாம். மேலும், சிலோன் பசலைக்கீரையும் ஒரு நல்ல பசுங்கீரையாகும். மணத்தக்காளியின் இலைகளும் ஒரு நல்ல பசுங்கீரையாகும்.

ஆகவே, பசுங்கீரைகள் ருசியுள்ள கீரையாகவும், அழகுக்காகவும், தைலங்களாகவும், மருந்துகள் தயாரிக்கவும் உதவுகின்றன. மேலும், பலவகைப் பசுங்கீரைகளைக் கலவைக்கீரையாக உபயோகப்படுத்துவது நல்லது. பாகற்காயின் இளம் இலைகளைக் கீரையாக, மற்றக் கீரைகளோடு சேர்த்துச் சாப்பிட்டால் ஆஸ்த்துமா, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் நீங்கும். வயிற்றுப்புண், குடல் இரணம், வயிற்றுப்புழுக்கள் தோன்றுது; அறவே குணம் அடையும். என்னே பசுங்கீரைகளின் மகிமை! பசுங்கீரைகளைப் பயிரிட்டுப் பலன் அடையுங்கள்!

வேளாண்மை வளர்ச்சி- எதிர்காலத் திட்டங்கள்

வேளாண்மை இன்று வேகமாக வளர்ந்து வருகிறது.

உலகின் அச்சாணியாக விளங்கும் வேளாண்மைத் தொழில் வளம் பெறவும், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள உழவர் பெருமக்கள் நலம் பெறவும் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

உற்பத்திப் பெருக்கம், உழவர் மேம்பாடு முதலானவற்றில் அக்கறையும், ஆர்வமும் காட்டி வரும் வேளாண்மைத்துறை, ஒளிமயமான எதிர்காலத்துக்கும் உன்னதமான பல திட்டங்களைத் தீட்டி வருகின்றது.

உற்பத்தித் திட்டம் :

உற்பத்தித் திட்டங்கள் மூலம் பெற்ற பயிர் முன்னேற்றங்களையும், உற்பத்திக்கான வாய்ப்பினையும் கருத்தில் கொண்டு 1978-79ஆம் ஆண்டில் உணவு தானியங்கள் உற்பத்திக் குறியீடு 87.25 இலட்சம் டன்னுகவும், வணிகப் பயிர்கள் உற்பத்தி குறியீடு 30.76 இலட்சம் டன்னுகவும் கீழே குறிப்பிட்டுள்ளபடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

		1978-79 ஆண்டிற்குத் திட்டமிடப்பட்டுள்ள குறியீடு (இலட்சம் டன்கள்)
அரிசி	...	64.00
சிறு தானியங்கள்	...	20.00
பயறு வகைகள்	...	3.25
எண்ணெய் வித்துக்கள்	...	15.70
கரும்பு (வெல்லம்)	...	14.30
பருத்தி (இலட்சம் பேல்)	...	4.25
		(0.76 இலட்சம் டன்).

செயல் திட்டங்கள் :

புதிய உயர் விளைச்சல் ரகங்களையும், வீரிய ஒட்டு ரகங்களையும் பரப்புவதன் வாயிலாகவும், அதிக விளைச்சல் தரும் திறன் வாய்ந்த ரகங்களின் பரப்பளவை அதிகரித்தும், முறையான உழவியல் முறைகளையும், உரிய நீர்ப் பராமரிப்பு முறைகளை யும் மேற்கொண்டும் நெல்லில் கூடுதலாக 2 இலட் சம் டன்னும், சிறு தானியங்களில் 1 இலட்சம் டன்னும் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிடும் பரப்பு 22 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 22.40 இலட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்படும். 1977-78-ஆம் ஆண்டில் 18 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட ஐ. ஆர். வகை சார்பினங்கள் பரப்பு 19.00 இலட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப் படும். மற்ற ரகங்களைவிட அதிக உற்பத்தித் திறன் வாய்ந்த ஆடுதுறை-31 ரகம் செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, மற்றும் தென் ஆர்க்காடு மாவட்டங் களில் நவரை மற்றும் சொர்ணவாரிப் பருவங்களில் கூடுதலாக 0.40 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்படும். இதற்கென 9,500 டன் சான்றிதழ் பெற்ற விதைகள் விநியோகம் செய்யப்படும். சமச் சீர் உரமிடுதல், பயிர்ப்பாதுகாப்பு முறைகளை முக் கியமாக அடிக்கடி பூச்சி நோய்களால் தாக்கப்படும் இடங்களில் தீவிரப்படுத்துதல், புகையான், தடுப்பு, விதையுடன் மருந்து கலத்தல் ஆகிய மற்ற நட வடிக்கைகளும், உற்பத்திக் குறியீட்டை அடைய மேற்கொள்ளப்படும்.

1977-'78 ஆம் ஆண்டில் 5.10 இலட்சம் ஹெக்டேராக இருந்த உயர் விளைச்சல் சிறு தானி யங்களின் பரப்பு 1978-'79-ல் 5.60 இலட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்படும். இத்துறை, கீழ்க் கண்ட அளவில் விதை விநியோகம் செய்யத் ... மிட்டுள்ளது.

வீரிய ஒட்டுரகக்
சிறுதானியங்கள்

		டன்கள்
1. கம்பு	...	150
2. சோளம்	...	480
3. மக்காச்சோளம்	...	315
4. கேழ்வரகு	...	175

பயறு வகைப் பயிர்கள் :

தற்போது பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும் 10.40 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு இரு பயிர் சாகுபடி மற்றும் கலப்புப் பயிர் சாகுபடி வாயிலாக 11.00 இலட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்படும். 0.80 இலட்சம் ஹெக்டேர் பரப்பிற்கு நுண்ணுயிர்க் குடுவைகள் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 0.40 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இலை வழியாக மணிச் சத்துத் தெளிக்கும் முறை மேற்கொள்ளப்படும். முதன் முறையாக 2,000 ஹெக்டேரில் தழைச் சத்தையும், மணிச்சத்தையும் அடியுரமாக இடும் புதிய உத்தி மேற்கொள்ளப்படும். இத்துடன் உழவியல் முறைகள். உரிய பராமரிப்பு முறைகள் ஆகியவற்றில் தீவிரக் கவனம் செலுத்தப்படும். 1,700 டன் பயறு வகைப் பயிர் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

எண்ணெய்வித்துப் பயிர்கள் :

கடலை எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் ஆகியவற்றின் அதிகப்படியான தேவையைக் கருத்தில் கொண்டு நிலக்கடலை, எள், சூரியகாந்தி ஆகிய பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க பெரிய அளவில் திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 14.90 இலட்சம் டன்னிலிருந்து 15.70 இலட்சம் டன்னாக அதிகரிக்கப்படும். எண்ணெய் வித்துக்கள் 38,000 ஹெக்டேர் பரப்பளவில் கூடுதலாகப் பயிரிடப்படும். மேலும் 750 டன், நுண்ணூட்டக் கலவையும் 12,000 டன் ஜிப்சமும் நிலக்கடலைப் பயிருக்கு விநியோகிக்கப்படும். 5,000 ஹெக்டேர் எள் பரப்பளவில் மாங்கனீஸ் சல்பேட்டு இடுதல் மேற்கொள்ளப்படும். கீழ்க்கண்ட அளவில் விதைகள் இத்துறை மூலமாக விநியோகிக்கப்படும்.

		டன்கள்
நிலக்கடலை	...	4,320
எள்	...	50
சூரியகாந்தி	...	900

பருத்தி உற்பத்தி :

பருத்தி உற்பத்திக் குறியீடான 4.25 இலட்சம் பேல் அளவை அடையும்பொருட்டு, பருத்தி பயிரிடும் பரப்பு 3.20 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 3.50 ஹெக்டேராக அதிகரிக்கப்படும். தற்போதுள்ள தழைச்சத்துப் பயன்படுத்தும் அளவு இறவையில் கூடுதலாக ஏக்கருக்கு 8 கிலோ என்ற அளவிலும் மானாவாரியில் 2 கிலோ என்ற அளவிலும் அதிகரிக்கப்படும். 6,000 ஹெக்டேர் பரப்பளவில் ஒட்டுமொத்தமான மருந்துத் தெளிப்பு மேற்கொள்ளப்படும். இத்துறை மூலமாக 50 சதவீதம் இறவைப் பயிருக்கும், 30 சதவீதம் மானாவாரிப் பயிருக்கும் நிறைவு செய்யும் வகையில் 1,760 டன் விதை விநியோகம் செய்யப்படும்.

கரும்புச் சாகுபடி :

கரும்புச் சாகுபடியின் மொத்தப் பரப்பு 1.48 இலட்சம் ஹெக்டேராக இருக்கும்பொருட்டு கூடுதலாக 1,000 ஹெக்டேரில் கரும்பு பயிரிடப்படும். மேலும், நோய் தாக்காத தரம் வாய்ந்த குறுகிய வயதுடைய விதைக் கரணைகளை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1978-79-ஆம் ஆண்டுக்குக் கரும்புச் சாலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 110 இலட்சங்கள் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காய்கறிப் பயிர்கள் :

நகர்ப் புறங்களை ஒட்டியுள்ள பகுதிகளிலும், வீட்டுத் தோட்டங்களிலும் காய்கறி உற்பத்தியைப் பெருக்கத் தனிக்கவனம் செலுத்தப்படும். இத்துறை மூலமாக 75 டன் காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்படுவது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இடுபொருள் தொடர்பு நடவடிக்கை :

அரசு நடத்தும் விதை மையங்களில் 9,500 டன் நெல் விதைகளும் 1,120 டன் சிறுதானிய விதைகளும் 500 டன் பயறு வகைப் பயிர்களின் விதைகளும் 50 டன் எண்ணெய் வித்து விதைகளும் உற்பத்தி செய்யப்படும். 12 இலட்சம் தென்னங்கன்றுகளும், 8 இலட்சம் பழக்கன்றுகளும் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

இயற்கை மற்றும் இரசாயன உரங்கள்

தனியார் மற்றும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த 12,000 விற்பனை மையங்கள் மூலம் தொடர்ந்து உர விநியோகம் செய்யப்படும். இதனுடன் 1,000 டன் பசுந்தாளுர விதைகளும், 3.5 இலட்சம் நுண்ணுயிர்க் குடுவைகளும் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மற்றும் 84 இலட்சம் டன் கலவை உரமும், கழிவுரமும் உற்பத்தி செய்யப்படும்.

பயிர்ப் பாதுகாப்பு :

பூச்சிப் பூசனங்கள் வழக்கமாகத் தோன்றும் பகுதிகளில் நெற் பயிரில் 30,000 ஹெக்டேர் பரப்பிலும், நிலக்கடலைப் பயிரில் 30,000 ஹெக்டேர் பரப்பளவிலும் ஒட்டுமொத்த மருந்து தெளிப்பு மேற்கொள்ளப்படும். புகையான் தாக்குதலை ஒழிக்க 20,000 ஹெக்டேர் பரப்பில் மருந்து தெளித்தல் மேற்கொள்ளப்படும்.

பயிர்க் காப்புறுதித் திட்டம் :

பயிர்க் காப்புறுதித் திட்டம் இவ்வரசின் உறுதியான கொள்கைகளில் ஒன்றாகும். இந்தியப் பொதுக் காப்புறுதி நிறுவனம் பயிர்க்காப்புறுதிக்கான முன்னோடித் திட்டத்தினைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தினைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்வது பற்றிய ஆய்வு அரசின் பரிசீலனையில் உள்ளது.

தோட்டக் கலை :

உற்பத்தியை அதிகரிக்க 1977-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ரூ. 10.95 இலட்சம் செலவில் இரண்டு சிறப்புத் தோட்டங்கள் அமைப்பதற்கான திட்டமொன்றுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

விற்பனையும் தரக்கட்டுப்பாடும் :

இன்றியமையாப் பொருட்களை 'அக்மார்க்' தரம் பிரிக்கும் திட்டத்தை இத்துறை தீவிரப்படுத்தும். மேலும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வேளாண்மை ' விளைபொருட்களை உற்பத்தியாளர்கள் அதிக அளவில் கொண்டுவந்து பயனடைவதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும். வறட்சிக்குட்பட்ட பகுதித் திட்டம் அமலாக்கப்படும். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒன்றும், தருமபுரி மாவட்டத்தில் இரண்டும் ஆக மூன்று ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதற்கான செயல்முறைகளுக்குத் தேவையான ரூ. 7.57 இலட்சங்களை இவ்வரசு மத்திய அரசின் நிதி உதவியாகக் கோரியுள்ளது. ரூ. 644.41 இலட்சம் மொத்தச் செலவில், 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், பழங்கள், காய்கறிகளுக்காக 8 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் அமைக்கப்படுவதற்கான திட்ட . அறிக்கை ஆய்வில் உள்ளது. இதற்காக உலக வங்கியின் உதவி பெறுவது குறித்து எடுக்க வேண்டிய முயற்சிகளும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

மண்வளப் பாதுகாப்பு :

தற்போது ஆண்டொன்றுக்கு இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும் 44,000 ஹெக்டேர் பரப்பளவு, 1978-79-ல் 30,000 ஹெக்டேர் பரப்பளவாக அதிகரிப்பதுடன், நீர்ப் பராமரிப்புப் பணிகளில் தனிக் கவனம் செலுத்தப்படும்.

உருளைக்கிழங்கு விதைப் பெருக்குத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் சிம்லாவிலிருந்து உருளைக் கிழங்கு விதைகள் தருவித்து 300 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 3.80 இலட்சம் செலவில் இத்திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் :

1978-79-ஆம் ஆண்டிற்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 218.52 இலட்சம் மதிப்பீடும், தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 285.74 இலட்சம் மதிப்பீடும் கொண்ட வரைவுத் திட்டங்கள் அனுப்பப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், தருமபுரி மாவட்டத்தில், வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் ரூ. 1.75 கோடி செலவில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு மாவட்ட அளவு ஒருமைப்பாட்டுக் குழு தோற்றுவித்தல் :

இராமநாதபுரம் மாவட்டத்தின் படிப்படியான வளர்ச்சியை முக்கியமான குறிக்கோளாகக் கொண்டு இவ்வரசு அங்கு ஒரு திட்டக் குழுவை அமைக்க இசைந்துள்ளது. இத்திட்டக் குழுவின் முக்கியப் பொறுப்பு யாதெனில், அம்மாவட்டத்திற்கான வருவாயினை ஆராய்ந்து அதற்கேற்ப ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்துதல் ஆகும். இத்திட்டத்திற்கான செலவினை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மத்திய அரசு வழங்க இசைந்துள்ளது. 1977-78-ஆம் ஆண்டிற்கு ரூபாய் இரண்டு இலட்சத்துத் தொண்ணூற்று மூன்றாயிரம் (ரூ. 2.93 இலட்சம்) மத்திய அரசு வழங்கியுள்ளது. மேலும் 1978-79-ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரத்தினை அளிக்கும். இதற்கான மீதித் தொகையினை 'போர்டு' அறக்கட்டளையும் (Ford Foundation) இந்தியப் பொது நிர்வாகக் கழகமும் ஏற்கும். இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட திட்டக் குழுவைத் தாமதமில்லாமல் ஏற்படுத்த தீவிரமான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தின் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் :

மத்திய அரசு ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தினை நூறு சதவீதம் உதவித் தொகையுடன் செயற்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இருபது மாவட்டங்களில் தருமபுரி மாவட்டமும் ஒன்று. தருமபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சில திட்டங்களை 1977-78-ல் நிறைவேற்ற மத்திய அரசு ரூ. 69.66 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டங்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாறு வேளாண்மைத்துறை வருங்கால வளமான வாழ்வுக்கு வழிகோலி வருகின்றது என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

விவசாய விற்பனைப் பிரிவு வருங்கால மேம்பாட்டுத் திட்டங்கள் :





'அக்மார்க்' பொருட்களின் மாதிரிகளை ஆய்வு செய்ய, தலைமைக் கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடம் ஒன்று 4.45 இலட்சம் ரூபாய் செலவில் சென்னையில் நிறுவுதல்.

தமிழ்நாட்டில் மேலும் 15 புதிய இடங்களில் 'அக்மார்க்' தரம் பிரிப்பு நிலையங்கள் நிறுவுதல்.

மேலும் 118 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலேயே வணிக முறைத் தரம் பிரிப்புக்கூடங்கள் ரூ. 419 இலட்சம் அமைத்தல்.

வறட்சிக்குட்பட்ட பகுதித் திட்டம் அமலாக்கப்படும் இராமநாதபுரம், வட ஆர்க்காடு மற்றும் தருமபுரி மாவட்டங்களில் புதிதாக 8 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 32 இலட்சம் ரூபாய் செலவில் விவசாயிகளுக்கு வசதிகள் செய்து கொடுத்தல்.

உலக வங்கியின் உதவித் திட்டத்தின்கீழ் 30 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் வசதிகள் செய்தல்.

உலக வங்கியின் உதவித் திட்டத்தின்கீழ் காய்கறி மற்றும் கனி வகைகள் விற்பனையை ஒழுங்குபடுத்த 8 இடங்களில் விற்பனை நிலையங்கள் குளிர்பதன வசதியுடன் அமைத்தல். உலக வங்கிக் கடன் திட்ட மதிப்பீடு ரூ. 455 இலட்சமாகும்.

மேலும், 27 இடங்களில் ரூ. 46.28 இலட்சம் செலவில் பருத்தி தரம் பிரிப்புக் கூடங்கள் நிறுவுதல்; இதன் மூலம் பருத்தி உற்பத்தியாளர்கள் நியாய விலை பெற வசதி செய்தல்.

ரூ. 150 இலட்சம் செலவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் தங்கவும், விளைபொருள்களைச் சேமித்து வைக்கவும், சேமித்த பொருள்களின்மீது வங்கிகளின் மூலம் முன் பணம் பெறவும் வசதி செய்யப்படும்.

மேற்படி திட்டங்களினால், விவசாயிகள் பலனடைவதைத் தவிர சுமார் 15,000 ஏழை எளிய வேலை வாய்ப்பற்ற மக்களின் தரம் உயரவும், சுமார் 2,000 படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெறவும் திட்டமிடப் பட்டுள்ளது.

வேளாண்மை விற்பனைப் பிரிவின் ஓராண்டுச் சாதனை

வேளாண்மை விற்பனை என்பது ஒரு தனிச் சிறப்புத் துறையாகும். இதன் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு 14-10-'77 முதல் தனித்துறை ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

இத்துறையின் மிக முக்கிய நடவடிக்கைகளாவன:

'அக்மார்க்' தரம் பிரிப்பு

வணிக முறையில் தரம் பிரிப்பு

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் நடவடிக்கைகள்

'அக்மார்க்' தரம் பிரிப்பு :

வியாபாரிகள் உணவுப்பொருள்களைத் தரம் பிரிக்க வழி செய்யும் பொருட்டு 1977-78-ல் திருச்சி மற்றும் பண்ருட்டி ஆகிய இரு இடங்களில் 'அக்மார்க்' தரம் பிரிக்கக் கூடங்கள் தொடங்கப் பட்டன.

1976-77-ஆம் ஆண்டைவிட 1977-78-ல் உணவுப் பொருள்கள் 20 சதவீதம் அதிகமான அளவில் 'அக்மார்க்' முறையில் தரம் பிரிக்கப்பட்டன. இதன் மூலம் அதிகப்படியான நுகர்வோர்களுக்கு, தரமான பொருள்கள் கணிசமான விலையில் கிடைக்க வழி வகை செய்யப்பட்டது.

வணிக முறைத் தரம் பிரிப்பு:

1977-78-ல மத்திய உதவியின் கீழ் உற்பத்தியாளர்கள் நிலையில் தரம் பிரிக்க ஏதுவாக ஆறு தரம் பிரிப்புக் கூடங்கள் நிறுவ அரசாணை 17-12-77-ல் உத்தர விடப்பட்டு, தொடங்கப்பட்டது. இதன் மூலம் புகையிலை, முந்திரி, பருத்தி மற்றும் நிலக்கடலை இவைகளை விற்பனையாகும் இடங்களிலேயே தரம் பிரிக்க வழி வகை செய்யப்பட்டது. இவை தவிர, வணிக முறையில் தரம் பிரிப்பு நிலையங்களில் நெல் மற்றும் பருத்தி ஆகிய பயிர்கள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வரும் மொத்த அளவும் தரம் பிரிக்கப்பட்டு, தமிழ்நாடு நுகர்வோர் வாரியம் மற்றும் இந்தியப் பருத்தி வாரியம் இவைகள் நேரடியாகப் போட்டி முறையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விவசாயிகளிடம் இருந்து வாங்க வழி செய்யப்பட்டது. இதனால், விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் :

1976-77-ஆம் ஆண்டைவிட 1977-78-ல் அறிவிக்கப்பட்ட பயிர்கள் 15 சதவீதம் அதிக அளவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டன. இதனால் விவசாயிகளுக்குக் கணிசமான அளவில் வருமானம் பெற வகை செய்யப்பட்டது. இந்தத் துறையில் தனிப்பட்ட முயற்சியினால் சிறு விவசாயிகள் அதிக அளவில் தங்கள் விளைபொருள்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலம் விற்பனை செய்து பயனடைந்தார்கள்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வரத்து அதிகரிக்கவும், விவசாயிகளின் நிலையை மேம்படுத்தவும் இந்தத் துறை கீழ்க்கண்ட முயற்சிகளை எடுத்துக் கொண்டது.

*சிறப்பான சுகாதார மற்றும் பல வசதிகள் (தங்குமிடம் கால் நடைகள் தங்க வசதி முதலியன.

*தீவிர விளம்பர, பிரச்சாரம் நடவடிக்கைகள்.

*உற்பத்திப் பொருள்களின் விலை விவரங்கள் உடனுக்குடன் அறிவித்தல்.

*போக்குவரத்து வசதிகள்.

அனைத்து நாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி

ஐ.நா.வின் சார்பில் அனைத்து நாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி அமைக்கப்பட்டு இருக்கிறது. வளர்ந்துவரும் நாடுகளில் வேளாண்மை மேம்பாட்டிற்காகச் சலுகை வட்டி விகிதங்களில் கடன்களை வழங்குவது இந்த நிதியின் முக்கிய கடமை.

உணவு தானிய உற்பத்தி, விரிவாக்கம், வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடன் வழங்கப்படும் இந்த உதவிகள் தேசிய திட்ட முறை வகுப்புகள், உத்திகள் அடிப்படையில் உதவி அளிக்கப்படும். சமுதாயத்தின் பலவீனமான பிரிவினரின் சத்துணவுத் தேவைகளுக்கும் நிதியுதவி அளிக்கப்படும். மானியங்களும், சலுகை அடிப்படையில் கடன்களும் அளிக்கப் படும்.

இந்த நிதியைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் அண்மையில் தில்லி வந்திருந்தனர். அனைத்து நாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியளிக்கும் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அந்த அலுவலர்கள் இந்தியா வந்திருந்தனர்

பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்

1971-ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் பழங்குடியினரின் மக்கட்தொகை 3.11 இலட்சம் ஆகும். தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட ஒன்பது இடங்கள் 'பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டப் பகுதிகள்'' என்று அறிவிக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டம் :

1. கொல்லிமலை.
2. ஏர்க்காடு.
3. கல்ராயன் மலை.
4. அரநூத்துமலை.
5. பச்சைமலை.

வடஆர்க்காடு மாவட்டம் :

6. ஜவ்வாது மலை.

தென்ஆர்க்காடு மாவட்டம்:

7. கல்ராயன் மலை.

தர்மபுரி மாவ்ட்டம்:

8. சித்தேரி மலை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்:

9. பச்சைமலை.

மேற்கண்ட ஒன்பது பகுதிகளிலும் வாழும் மொத்தம் 1.45 இலட்சம் பழங்குடியினர் மட்டுமே இந்தத் துணைத் திட்டத்தின்கீழ் பயன் அடைகிருர்கள். இப்பகுதியில் வாழும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காகத் துணைத்திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டுள்ளது. இத்துணைத்திட்டம் பழங்குடியினரின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், விவசாயம், கால்நடை வளர்ப்பு, சாலை வசதி மற்றும் சமூக நிலைகள் மேம்பாடடைய வழி வகுக்கிறது. இந்தத் துணைத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 842.54 இலட்சங்கள் ஆகும். இது '76-77ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் ஆரம்பகட்டமாக 1976-77-ல் ரூ. 101.82 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டு ரூபாய் 94.00 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. 1977-78-ஆம் ஆம் ஆண்டில் ரூ. 153.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 144. இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. நடப்பு 1978-79—ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 200 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி, கோயமுத்தூர், நீலகிரி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வசிக்கும் 'பண்டைய பழங்குடியின்''ரின் மேம்பாட்டுக்கான திட்டம் ஒன்றைத் தயார் செய்து இந்திய அரசின் ஒப்புதலுக்கென அனுப்பப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் வாழுகின்ற பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான திட்டம் மத்திய காலத் திட்டத்தில் சேர்க்கப்படும்.

பழங்குடியினரிடையே சுரண்டலற்ற சூழ்நிலை ஏற்படுத்துவதற்கென அரசு (1) கடன் நிவாரணச் சட்டம் (2) அவர்கள் வாழும் பகுதிகளில் அவர்களுக்குச்சொந்தமான நிலங்களை ஏனையோருக்கு உரிமை மாற்றம் செய்யப்படுவதைத் தடுக்கும் சட்டம் கொண்டுவர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உதவி

ஏலக்காய் தோட்ட

தமிழ்நாடு, கேரளம், கர்நாடகத்தைச் சேர்ந்த ஏலக்காய் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள், ஐந்தாம் வகுப்பு, அதற்குமேல் படிப்பதற்கான கல்வி உதவித்தொகை 1978-79-ஆம்கல்வி ஆண்டிற்கு வழங்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பங்களும், விவரக் குறிப்புகளும் கொச்சியிலுள்ள ஏலக்காய் வாரியச் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மற்றும், ஏலக்காய் வாரியத்தின் கள அலுவலகங்கள், ஏலக்காய்த் தோட்டப் பகுதிகளிலுள்ள கல்வி நிலையங்கள், தொழிற்சங்க அலுவலகங்கள் ஆகியவற்றிலும் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1978 ஜுலை 30 அல்லது அதற்கு முன்னர் ஏலக்காய் வாரிய அலுவலகத்தில் சேர்த்து விட வேண்டும்.

வேலை வாய்ப்புப் பெறும் வேளாண்மைத் தொழிலாளர்கள்!

உலகின் முதன்மைத் தொழிலாக வைத்தெண்ணப்படுவது வேளாண்மைத் தொழில். அதனுற்றான் வான்புகழ் வள்ளுவர் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்று முழங்கிச் சொன்னுர்.

வேளாண்மைத் தொழில் இன்றுவளத்தோடு வளருவதற்குக் அரசு எடுத்துவரும் தீவிர நடவடிக்கைதான் காரணம் என்றுல் மிகையல்ல. இத்தொழிலில்ஈடுபட்டுள்ள இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் நலனுக்கென அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

விவசாயத் தொழிலாளர் நலன்கள்:

விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டில் பாதி நாட்கள் வேலை கிடைப்பதே அரிதாக உள்ளது. அவர்களுக்கெனத் தனியே ஓரிரு திட்டங்கள்தான் செயல்பட்டு வருகின்றன. வேளாண்மைத் துறையில் நடைபெற்று வரும் திட்டங்களைத் தீவிரப்படுத்தியும் புதிய திட்டங்களைச் செயல்படுத்தியும் இவ்வாண்டு வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பினை இவ்வரசு உருவாக்கித் தந்தது.

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் உதவிகள் தீவிரப்படுத்தப்பட்டு, இவ்வாண்டு மட்டும் அடையாளப்படுத்தப்பட்ட 20,116 வேளாண்மைத் தொழிலாளர்களில் 7,605 வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கறவை மாடு, உழவு மாடு, மாட்டு வண்டி மற்றும் உழவுக் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்கு மானியத்தோடு கூடிய கடன் வசதி அளித்துள்ளது.

இத்துறை செயல்படுத்தி வந்துள்ள திட்டங்கள் மூலம் சுமார் 1.61 இலட்சம் விவசாயிகளுக்குக் கூடுதலாக வேலை கிடைத்துள்ளது. இவ்வரசு, திட்டங்களைத் தீவிரப்படுத்தியதன் மூலமும், புதிய திட்டங்களைப் புகுத்தியதன் மூலமும் மேலும் 41,000 வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளது.

சிறு விவசாயிகள் நலன்கள்:

வேளாண்மைத் துறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய உத்தியைச் செயல் விளக்கப் பண்ணைகள் அமைத்து விளக்கிக் காட்டுவதில் முந்தைய அரசுகள் ஆங்காங்கே ஒரு சிறிய நிலப் பரப்பில் மட்டும் செயல்படுத்தி வந்தன. இவ்வரசு பொறுப் பேற்ற உடன், இந்நிலையை மாற்றி, சிறு விவசாயிகள் பெருமளவில் பங்கு கொண்டு, அவர்களும் எல்லா நுட்பங்களையும் அறிதல் வேண்டிப் பெருவிளக்கப் பண்ணைகள் அமைத்துள்ளது. ஒவ்வொரு பண்ணையும் குறைந்தது 20 சிறு விவசாயிகள் பங்கு கொள்ளும் 25 ஏக்கர் முதல் 40 ஏக்கர் வரை பரப்புடையதாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறு விவசாயிகள் அதிக அளவில் பங்கு பெறவும், அதிக அளவு உற்பத்திக்கான வழி முறைகளை அவர்கள் அறியவும் முடிகிறது. இவ்விதப் பண்ணைகள் இவ்வாண்டு 1,335 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பண்ணைகள் மற்ற விவசாயிகள் அண்மைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை அறிந்து கொள்ளும் மையமாகவும் அமைந்துள்ளது.

மண் பரிசோதனை நிலையம்:

1976-ஆம் ஆண்டிற்கு முன்பு வரை மாவட்டத்திற்கு ஒரு மண் பரிசோதனை நிலையம் மட்டுமே இயங்கி வந்துள்ளது. எனினும், சிறு விவசாயிகள் எளிதில் தங்களது நிலத்தின் மண்ணின் தன்மையை அறிந்து கொள்ள வசதியாக ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு மண் பரிசோதனை நிலையம் இருக்கவேண்டும் என்று எண்ணிய இவ்வரசு முன்னோடியாக மதுரை மாவட்டத்திலுள்ள தேனியிலும், இராமநாதபுரம் மாவட்டத்தி

லுள்ள சிவகங்கையிலும் இந்த இரு நிலையங்களை இவ்வாண்டு நிறுவியுள்ளது.

உழவர் பயிற்சி நிலையம் :

1976-ஆம் ஆண்டு வரை உழவர் பயிற்சி நிலையம் எட்டு மாவட்டங்களில் மட்டுமே இயங்கி வந்துள்ளது. எல்லா மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகளும், குறிப்பாக, சிறு விவசாயிகள் உழவர் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வேளாண்மை உற்பத்தியினைப் பெருக்க வேண்டும் என்று கருதி இவ்வரசு மேலும் மூன்று நிலையங்களை புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இவ்வாண்டு நிறுவியுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் மூன்று மாவட்டங்களில் இந்த நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. இதன் மூலம் எந்த மாவட்டத்திலும் உழவர் பயிற்சி நிலையம் இல்லையென்ற குறை நீங்குகிறது.

காய்கறி உற்பத்தித் திட்டம் :

நீலகிரி மாவட்டத்தில் சிறு விவசாயிகள் அதிக அளவு காய்கறிகளை உற்பத்தி செய்து நல்ல விலைக்கு விற்க முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிறு விவசாயிகள் தங்கள் உற்பத்திக்குப் பலன் காணும் வகையில் நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் அதிக அளவு காய்கறிகள் இவ்வாண்டு விற்பனை செய்யப்பட்டன. 1975-76-ல் 9 இலட்ச ரூபாய்க்கும், 76-77-ல் 26 இலட்ச ரூபாய்க்கும் விற்பனை செய்த சங்கம், 1977-78-ல் 48 இலட்ச ரூபாய்க்கு விற்பனை செய்தது, ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்!

வெள்ள நிவாரணப் பணிகள் :

1977-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தமிழகத்தைத் தாக்கிய புயலும் வெள்ளமும் பெரும் சேதத்தினை உண்டு பண்ணியது. வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் பெரும் பகுதி சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும். ரூ. 30 இலட்சம் பெறுமானமுள்ள 1,718 டன் நெல் விதைகள் 77,989 சிறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

கரும்புச் சாகுபடி செய்திருந்த 1,362 சிறு விவசாயிகளுக்கு ரூ. 87,325 மான்யமும், வாழைச் சாகுபடி செய்திருந்த 7,990 சிறு விவசாயிகளுக்கு ரூபாய் 5,42,602 மான்யமும், வெற்றிலை சாகுபடி செய்திருந்த 5,870 சிறு விவசாயிகளுக்கு ரூ. 10,27,420

இயற்கையின் சீற்றங்களால்— விபத்துக்களால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு நிதி உதவி

இயற்கையின் சீற்றத்தால் உண்டாகும் தீ விபத்துக்கள், வெள்ளம், இடி, மற்றும் சுவர் இடிந்து விழுதல், கிணறு தோண்டும்போது உண்டாகும் விபத்துக்கள், சாலை விபத்துக்கள் முதலிய வற்றால் உயிரிழந்தவர்கள் குடும்பத் தலைவர்களாக இருந்தால், அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு ரூ. 1,000 வீதம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்படுகிறது. மேலும் இயற்கையின் சீற்றத்தினால் வினையும் தீமைகளாலும், விபத்துக்களினாலும் முழுமையாக செயலிழந்த குடும்பத் தலைவர்களுக்கும் இந்நிதியுதவி அளிக்கப்படுகின்றது.

கீழ்க்கண்ட ஆபத்து நிறைந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கும் (அவர்கள் குடும்பத் தலைவர்களாக இருந்தால்) நிதியுதவி அளிக்கும் பொருட்டு அரசு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000 வழங்கி வருகிறது.

அ. பாதாள சாக்கடைகளில் வேலை செய்யும் பணியாட்கள்.

ஆ. பூச்சி மருந்தும், இரசாயன கலவைகளும் தெளிக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள்.

இ. பொது நிதியிலிருந்து, தோண்டப்படும் பாசனக் கிணறுகள், குடிநீர்க் கிணறுகளைத் தோண்டுதல் மற்றும் ஆழப்படுத்துதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருக்கும் பணியாட்கள்.

ஈ. தென்னை மற்றும் பனை மரங்கள் ஏறுபவர்கள். குடும்ப நலத்திட்டத்தின்கீழ் பயனடைபவர்கள் இந்த மானியத்தைப் பெறத் தகுதியற்றவர்களாவர்.

2. 1-7-'77லிருந்து அரசு மொத்தம் 17 நபருக்கு இத்தகைய நிதி உதவியளித்துள்ளது.

மான்யமும் வழங்கப்பட்டன. மண்மேட்டிலிருந்து சிறு விவசாயிகளின் நிலங்கள் இலவசமாக சீர்திருத்தம் செய்துதரப்பட்டன.

சிறு விவசாயிகள் நலனுக்காகவே பாடுபடும் அரசு இது போன்ற மேலும் பல திட்டங்களை வரும் ஆண்டில் செயல்படுத்த எண்ணியுள்ளது.

வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு :

இவ்வரசு பொறுப்பேற்ற பின்பு 323 வேளாண்மைப் பட்டதாரிகள் வேலை வாய்ப்பு இல்லாதிருந்தனர். இதனை அறிந்த அரசு இவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தருவதிலேயே தன்னுடைய கவனத்தைச் செலுத்தி, அரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை 276 வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. மிகுதி உள்ள பட்டதாரிகளுக்கும் உடனடியாக வேலை கொடுக்க அரசு முயன்று வருகிறது.

ஒட்டு மொத்தப் பூச்சி மருந்துத் தெளிப்பு :

விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதை மேற்கொண்டதனால் விவசாய மக்களுக்குப் போதுமான அளவு பலன் கிடைக்கவில்லை. இத்தகைய முறையினை ஏற்காமல் தரையிலேயே ஒட்டு மொத்த மருந்து தெளிப்பதில் தீவிரக் கவனம் செலுத்தப்பட்டது. இவ்வாண்டு மட்டும் 87,708 ஹெக்டேரில் இவ்வித மருந்து தெளிப்புமுறை மேற்கொள்ளப்பட்டது.

இடுபொருட்களின் தரம் :

வேளாண்மைக்குத் தேவையான இடுபொருட்கள் தரமாக இருப்பதில் தனது கவனத்தை அரசு செலுத்தியது. எந்த ஆண்டும் இல்லாத அளவு உரம் மற்றும் பூச்சி மருந்துகள் விநியோகம் செய்த போதிலும் அவைகளின் தரம் குறையாவண்ணம் பாதுகாக்கப்பட்டது. அதிக அளவு உரமாதிரிகள் எடுக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டன. சென்ற ஆண்டு, 4,634 உர மாதிரிகள் எடுக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டன. இவ்வரசு இடுபொருட்கள் தரமாக இருத்தல் எத்துணை வேண்டும் என்பதில் செயல்படுகிறது அக்கறையோடு என்பதற்குக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களே சான்றாகும்.

என்பது மேற்கண்ட குறிப்புகளிலிருந்து புலனாகிறது.

விதை உற்பத்தி :

சில வீரிய ஒட்டுரக சிறு தானிய விதைகள், வரலட்சுமி பருத்தி விதைகள் வெளி மாநிலங்களில் இருந்து பெறப்பட்டன. இதனால் விலையும் அதிக அளவில் இருந்தது. நம் நாட்டு விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்யவும், இதன் மூலம் இங்குள்ளோர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் இவ்வாண்டு முதன் முறையாக 25 இலட்சம் டன் வரலட்சுமி விதைகள் உற்பத்தி செய்யும் திட்டத்தினை இவ்வரசு தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது.

இதனால் விலைகள் பெருமளவு குறைந்ததுடன், பெருவாரியான வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளும் அதிகரித்தன என்றால் மிகையல்ல.

	1976—77	1977—78
உர மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டது	4,634	6,015
உர 'லைசன்ஸ்' நீக்கப்பட்டது	113	69
உர 'லைசன்ஸ்' தற்காலிக நீக்கம்	195	120
எச்சரிக்கைகள் வழங்கப்பட்டது	1,582	1,013

1977-78-ல் கண்காணிப்பு தீவிரமாக இருந்தமையால், ஒழுங்கீனங்கள் குறைந்துள்ளன

கோ.11.ராகி

கட்டுக் கோப்பு சாகுபடி முறைகள்

இரகம் : கோ. 11

பருவம்	ஆடிப்பட்டம், தைப்பட்டம்.
வயது	நாற்றங்கால்: 18-21 நாட்கள். மொத்த வயது :95 நாட்கள்,
நாற்றங்கால்	நிலத்தை நன்கு பண்படுத்தவும். ஓர் எக்டருக்கு 12.5 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவும். ஓர் எக்டர் நடுவதற்கு 12 செண்ட் நாற்றங்கால் தேவை. பாத்திகளை மேட்டுப் பாத்திகளாக அமைக்கவும். நாற்று பிடுங்குவதற்கு ஒரு வாரம் முன்பு செண்டுக்கு .5 கிலோ வீதம் அம்மோனியம் சல்பேட் உரம் இடவும்.
விதையும் விதைப்பும்	எக்டருக்கு 5 கிலோ விதையை செரசான் (ஒரு கிலோவுக்கு 2 கிராம் வீதம்) கலந்து விதைக்கவும்.
முன்செய் நேர்த்தி	நடவு வயலை 3-4 முறை நன்கு உழுதுபண்படுத்தவும். தண்ணீர் வசதிக்குத் தக்கவாறு பாத்திகளை அமைக்கவும். நட்டு மூன்ருவது வாரத்தில் முதல் களை எடுத்த பிறகு எக்டருக்கு 45 கிலோ தழைச்சத்தை மேலுரமகா இடவும்.
உரமிடுதல்	எக்டருக்கு 25 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் 45 கிலோ தழைச் சத்து, 45 கிலோ மணிச்சத்து, 22.5கிலோ சாம்பல் சத்து இவற்றைக் கடைசி உழவின்போது அடியுரமாக இட்டுக் கலக்கவும்.
நடவு	18-21 நாட்கள் வயதான நாற்றுக்களைப் பிடுங்கி 15 செ.மீ., 15 செ.மீ. இடைவெளி இருக்குமாறு நடவும்.
பின்செய் நேர்த்தி	நட்டு மூன்ருவது வாரத்தில் முதல் களை எடுக்கவும். பிறகு தேவைக்குத் தக்கவாறு அடுத்த 3 வாரத்தில் மற்ெருரு களை எடுக்கவும்.
நீர்பாய்ச்சுதல்	நடவுப் பாத்திகளில் தண்ணீர் விட்டு நடவு செய்யவும். நட்ட 3ஆம் நாள் மற்றும் ஒரு முறை நீர் கட்டவும். பிறகு தேவைக்குத் தக்கவாறு 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் கட்டவும்.

பயிர்ப் பாதுகாப்பு:

நாற்றங்காலில் தண்டு துளைப்பானைத் தடுக்க பி.எச்.சி. 0.1 சதம் மருந்தை நாற்றுப் பிடுங்க ஒரு வாரத்திற்கு முன்ஞல் தெளிக்கவும். அசுவிணியைத் தடுக்க ரோகார் மருந்தை லிட்டருக்கு 3 மில்லி லிட்டர் வீதம் கலந்து வேர்ப் பகுதிகளை நனைக்கவும். கொலை நோயைத் தடுக்க டைத்தேன் எம். 45 என்ற மருந்தை 0.2 சதம் அல்லது ஹிஞேசான் மருந்தை 0.1 சதம் என்ற அளவில் தெளிக்கவும்.

நடவு வயலில் கொலை நோயையும், அசுவிணியையும் தடுக்க டைத்தேன் எம். 45 என்ற மருந்தை 0.2 சதம் அல்லது ஹிஞேசான் என்ற மருந்தை 0.1 சதம் அளவிலும், மெடாசிஸ்டாக்ஸ் மருந்தை 0.1 சதம் அளவிலும் கலந்து தாக்குதலுக்குத் தக்கவாறு 1 முதல் 5 முறை வரை தெளிக்கவும்.

அறுவடை	நன்கு முற்றிய கதிர்களை ஒரு முறை அல்லது இரு முறையாக அறுவடை செய்யவும்.
மகசூல்	எக்டருக்கு 4,000 கிலோ தானியம். எக்டருக்கு 9,000 கிலோ தட்டு.

தகவல் :

டாக்டர் ஆர். அப்பாதுரை,
பயிரியல் துறை பேராசிரியர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்—641003.

கத்தரி கோ—1 சாகுபடிக் குறிப்புகள்

வயது	160 நாட்கள்
பருவம்	மே-அக்டோபர் டிசம்பர்-மே

முன்செய் நேர்த்தி :

நாற்றங்கால்

சம அளவு மணல் மக்கிய மாட்டு எரு கலந்து நிலத்தைத் தயார் செய்யவும். மேட்டு நாற்றங்கால் சிறந்தது. பாத்திகளில் தாமிரக் கலவை மருந்தை 2 கிராம் 1 லிட்டரில் கரைத்து ஊற்றவும். விதையை 10 செ.மீ. இடைவெளியில் வரிசையில் விதைத்து இலேசாக மணலால் மூடி பின்னர்பூவாளியால் தண்ணீர் விடவும். 15 நாட்களுக்குப் பிறகு நாற்றங்கால் பாத்திகளில் கரையும் 'செரசான்' 1 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஊற்றி நாற்று அழுகல் நோயைத் தடுக்கவும். தேவைக்கு ஏற்ப தண்ணீர் ஊற்றி, நாற்றுகளை 30 நாட்களில் நடுவதற்கு ஏற்பத் தயார் செய்யவும்.

விதை அளவு :	எக்டருக்கு 400 கிராம் (160 கிராம்—ஏக்கர்).
இடைவெளி :	75, 60 செ.மீ.

உரமிடல் ;

அடியுரம்

எக்டருக்கு 25 டன் மக்கிய மாட்டு எரு கடைசியில் உழவில் போட்டு, மண்ணுடன் கலக்கவும். நடும்பொழுது 50 கிலோ தழைச் சத்து (அம்மோனியம் சல்பேட்டாகவும்), 100 கிலோ பாஸ்பேட் சூப்பர் பாஸ்பேட்டாகவும் 50 கிலோ சாம்பல் சத்து (மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்) செடிகளைச் சுற்றிலும் போட்டு, மண்ணுடன் சேரும்படி செய்யவும்.

மேல் உரம் :

நட்டு நாற்பது நாட்களில் எக்டருக்கு 50 கிலோ தழைச் சத்தும் (யூரியா மூலமாக). அறுபது நாட்களில் (நட்ட பின்) மேலும் 50 கிலோ தழைச் சத்தும் (அம்மோனியம் சல்பேட் மூலமாக) செடிகளைச் சுற்றிலுமோ, அல்லது வரிசையிலோ போட்டு, மண் அணைத்து, தண்ணீர் பாய்ச்சவும்.

பின்செய் நேர்த்தி :	மாதத்திற்கு ஒரு முறை களை எடுத்துக் கொத்திக் கொடுத்து மண்ணை அணைக்கவும்.
தண்ணீர் பாய்ச்சுதல் :	தேவைக்கு ஏற்ப, வாரத்திற்கு ஒரு முறை (அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறை) தண்ணீர் பாய்ச்சவும்.

பயிர்ப் பாதுகாப்பு :

நட்டு ஏழு நாட்களுக்குப் பிறகு ''டெமிக்'' குருணை மருந்தை எக்டருக்கு 10 கிலோ வீதம் (ஏக்கருக்கு 4 கிலோ) செடிகளைச் சுற்றிப் போட வேண்டும். மேலும், 'செவின்' மருந்தை நட்டு 30 நாட்களுக்குப் பிறகு 2 மில்லி லிட்டரை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். 'டைதேன் எம். 5 (2 கிராம் 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) 'எண்டோசம்பான்' (2 மில்லி / 1 மில்லி தண்ணீர்) குருத்தை நட்டு 45 நாட்கள் 60 நாட்களில் இரு முறையாகத் தெளிக்கவும்.

மேலும், 'நூவக்கிரான்' 1.25 மில்லி லிட்டர் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து 90 நாட்கள், 120 நாட்கள் (நட்ட பிறகு) முறையே தெளிக்கவும்.

அறுவடை :	நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு ஒரு முறையாக அறுவடை செய்யவும்.

தகவல் :

திரு இருளப்பன்,
திரு எஸ். சுந்தரராஜன்,
டாக்டர் சி. ஆர். முத்துக்கிருஷ்ணன்.
தோட்டக்கலைத் துறை,
தகவல் தொடர்பு மையம்,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோவை-3.

எக்ரோமின் கண்கூடான பயனைத் தருகிறது...
லாபம் 20 சதவீதத்திற்கு மேல் உயர்கிறது



தாவர உணவுச் சத்துக்கள் சிலேடேட் வடிவில் அடங்கியிருப்பதனால் எக்ரோமின் பயிர் விளைச்சலைச் சிக்கனமான முறையில் 20% அல்லது அதற்கு மேலும் உயர்த்துகிறது.

● எக்ரோமின் இந்தியாவின் முதல் தாவர உணவு இலைத் தெளிப்பாகும். ஈரப்படுத்தவும், பரப்பவும் உதவும் ஊக்கி, கிரகிப்புத் தன்மையை மேலும் அதிகரிக்கிறது.
● எக்ரோமின் தண்ணீரில் கரைகிறது. மற்ற எக்ரோ கெமிக்கல்களுடன் இதை உபயோகிக்கலாம்.
● எக்ரோமின் முக்கியமான ரசாயன உரங்களின் உபயோகிப்புத் தன்மையை உயர்த்துகிறது.
● எக்ரோமின் பயிர்களின் மகசூலையும், தரத்தையும் செம்மையாக்குகிறது.



நிரூபணம் இதோ:
"செல்... எக்ரோமின் மூலம் விளைச்சல் 20% அதிகரித்தது"
ஆண்டிப்பாளையம்
தமிழ்நாடு

தபால் பெட்டி எண் 1417, பம்பாய் 400 001

எம்.யு.சி பருத்தி-9

சாகுபடி முறைகள்

1.	விதையும் விதைத்தலும்	பிசிரு நீக்கிய விதை ஏக்கருக்கு 4 கிலோ.
2.	இடைவெளி	பாருக்குப் பார் 90 செ.மீ. செடிக்குச் செடி 30 செ.மீ. (குழிக்கு 3-4 விதை வீதம் ஊன்றிப்பின் குழிக்கு இரண்டு செடி விட்டுக் கலைத்து விடவும்).
3.	பருவம்	ஆவணி முதல் வாரம்.
4.	உரமிடல்	தொழு உரம் ஏக்கருக்கு 5-10 வண்டி. தழைச் சத்தும் ஏக்கருக்கு 24 கிலோ. இதில் பாதியை அடி உரமாகவும், மறு பாதியை மேலுரமாக மண் அணைக்கும் பொழுதும் இட வேண்டும். மணிச்சத்து-12 கிலோ சாம்பல் சத்து-12 கிலோ அடியுரமாக இடவும்.

குறிப்பு : உரத்தின் தேவையும், செடிகளின் இடைவெளி அளவும் நிலத்தின் வளத்திற்கு ஏற்ப மாறுபடும்.

5.	நீர்பாய்ச்சுதல்	எம்.சி.யு. போன்று நீர்பாய்ச்சவும்.
6.	பயிர்ப் பாதுகாப்பு	(அ) பிசிரு நீக்கிய விதைகளைக் கிலோவுக்கு 4 கிராம் திரம் அல்லது பிராசிக்கால் மருந்துகளில் ஒன்றை 4 கிராம் வீதம் கலந்து தோய்த்துப் பின் விதைக்கவும்.

(ஆ) இளஞ் செடி வாடல்நோய் கண்டால் 0.1 சத பிராசிக்கால் மருந்தை (1 லிட்டர் நீரில் 1 கிராம் வீதம் கலந்து) வாடிய இளஞ் செடிகளின் வேர்ப்பாகம் நன்கு நனையும்படி ஊற்றவும். வாடிய செடிகளைச் சுற்றியுள்ள செடிகளுக்கும் அவ்விதம் ஊற்றவும்.

(இ) அசுவுணி, பேன், தத்துப் பூச்சி போன்ற சத்து உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த விதைக்கும் சமயம் விதைகளிலிருந்து 2-3 செ.மீ. தள்ளி 3-4 செ.மீ. ஆழத்தில் குருணை மருந்துகளைத் தூவி நீர்பாய்ச்ச வேண்டும். குருணை மருந்துகளில் டை சல்படான் (சால்விரெக்ஸ்) மருந்து ஏக்கருக்கு 80 கிலோ தேவைப்படும். அல்லது கார்போ ஃபுயூரான் (ஃபியூரடான்) ஏக்கருக்கு 13 கிலோ தேவைப்படும். அல்லது மிதைல் டெமடான் 0.205 சதம் (மெட்டாசிஸ்டாக்ஸ் ஏக்கருக்கு 300 மில்லி) (அல்லது) டைமிதோவெட் 0.03 சதம் (ரோகார் ஏக்கருக்கு 300 மில்லி) மருந்துகளில் ஒன்றை விதைத்த 15ஆம் நாள், 30ஆம் நாள், 45ஆம் நாள் ஆக மூன்று முறை தெளிக்கவும்.

(ஈ) காய்ப் புழுக்களைக் கட்டுப்படுத்த 55-ஆம் நாள் முதல் 10-12 நாட்களுக்கு ஒரு முறையாக ஏழு முறைகள் கீழ்க் கண்ட மருந்துகளைத் தெளிக்கவும்.

மானோகுரோட்டோபாஸ் 0.05 சதம் (நுவக்ரான்) ஏக்கருக்கு 500 (மில்லி) பாசலோன் 0.1 சதம் (ஜோலோன்) ஏக்கருக்கு 1 லிட்டர் வீதம் எண்டோசல்பான் 0.07 சதம்(தையோடான் 800 மில்லி).

(உ) இலைப் புள்ளி நோய்களைக் கட்டுப்படுத்த 60-ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பே நோய் கண்டால் பூஞ்சாணக் கொல்லி மருந்துகளான டைத்தேன் எம். 45 (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் கலந்து) அல்லது காப்பர் ஆக்சி குளோரைட் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் வீதம் கலந்து) 15 நாட்களுக்கு ஒரு முறை மூன்று அல்லது நான்கு முறைகள் தெளிக்க வேண்டும்.

கருங்கிளை நோய் தோன்றினால் அதை மேலும் பரவாமல் தடுக்க அக்ரிமைசின் 100 என்ற மருந்தை ஏக்கருக்கு 30-50 கிராம் வீதம் இதரப் பூஞ்சாணக் கொல்லி மருந்துகளுடன் கலந்து தெளிக்கவும்.

தகவல் :
பேராசிரியர் எஸ். கமலநாதன்,
திரு சி. பி. தியாகராஜன்'
திரு என். கடம்பவனசுந்தரம்,
பயிரியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3

பண்ணைக் கழிவில் பயனுள்ள காகித அட்டை!

நம்முடைய தேவைக்கு ஏற்ற வகையிலே பலவகையான பயிர் இனங்களையும் நாம் பயிர் செய்கின்றோம். ஆனால், பயிரில் எல்லாப் பாகங்களையும் நாம் நல்ல முறையிலே உபயோகிப்பதில்லை. பெரும்பாலான பாகங்களை வீணே அழிய விடுகிறோம்.

உதாரணமாக, வாழையை எடுத்துக் கொள்வோமாயின் அதிலிருந்து கிடைக்கும் வாழைப் பழத்தையும், அதன் பூவையும், நடுவேயுள்ள தண்டையும் உணவாக உட்கொள்கிறோம். இலையையும் நாம் நல்ல விதமாக உபயோகிக்கக் கற்றுக் கொண்டு உள்ளோம். ஆனால், மற்றப் பாகங்களை எருக் குழியிலேதான் போடுகிறோம்.

சோளம், கம்பு, இராகி போன்ற தானிய வகைப் பயிர்களை எடுத்து கொள்வோமாயின் தானியத்தை எடுத்துக் கொண்டு அதன் பதரை எறிந்து விடுகிறோம். தாள்களைக் கால்நடைகளுக்கு உணவாக்குகிறோம். அது தட்டை கழித்து விடுகிறது. அதனையும் எடுத்து எருக்குழியிலேதான் போடுகிறோம்.

இது போல் அநேகமாக எல்லாப் பயிர் வகைகளிலும் ஒரு சில பகுதிகள் வீணாகத்தான் போகின்றன. இதில் பெரும்பாலான செடியின் உறுப்புகள் காகிதம் தயாரிக்க இன்றியமையாத 'செல்லுலோஸ்' என்னும் நுண் இழைகளைக் கொண்டுள்ளன.

எனவே, நம்மிடம் வீணாகும் விவசாயக் கழிவுப் பொருட்களைப் பயனுள்ள வகையில் உபயோகிப்பதுபற்றி தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகத்தின், பண்ணை இயந்திரத் துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுவாக, அடுப்பு எரிப்பதற்கோ, உரமாகவோ அல்லது வீணே அழியவிடப்பட்ட பயிரின் பல பாகங்களைக் கொண்டு காகித அட்டைகள் செய்ய இயலும் என்று அறியப்பட்டது.

இது வரை சோளத் தட்டு, பருத்திச் செடி, விதை நீக்கப்பட்ட மக்காச் சோளக் கதிர்கள், சூரியகாந்திச் செடிகள், கம்பு உமி, வாழை மரம், பப்பாளி மரம், இலைகள், மரவள்ளித் தண்டுகள், இலைகள், வெண்டைச் செடி போன்ற பல பகுதிகளையும் உபயோகித்துக் காகித அட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

அழைப்பிதழ் அச்சிடவும், அலுவலகக் கோப்புகள், விளம்பர அட்டைகள், புத்தகங்களுக்கு மேலட்டைகள், தடுப்புச்சுவர்கள், இடைக் கூரைகள் அமைக்கவும் இக்காகித அட்டைகளைப் பயன் படுத்தலாம்.

இது போன்ற அட்டைகள் தயாரிப்பதைக் குடிசைத் தொழிலாகவும் மேற்கொள்ளலாம். எனவே, வாழை, சூரியகாந்தி போன்ற பயிர்களை அதிகப் பரப்பில் உற்பத்தி செய்யும் விவசாயிகள் கூட்டுறவு முறையிலோ, தனித்தோ இத்தொழிலை இலாபகரமாக மேற்கொள்ளலாம் எனப் பரிந்துரைக்கப்படுகிறது.

களைச் செடிகளிலிருந்து கவின்மிகு காகித அட்டைகள்!

காகிதம், காகித அட்டைகள் உற்பத்தி செய்வதற்கு மரங்களே பெரிதும் உபயோகப்படுத்தப்படுகின்றன. அதன் விளைவாய் அடர்ந்த காடுகள் அழிக்கப்பட்டு, நாட்டின் மழை அளவும் குறைந்து விடுகிறது. எனவே, காகிதம் செய்வதற்கு மரம் அல்லாத பிற பொருட்களைப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

காடுகளிலும், வரப்பு ஓரங்களிலும் வீணே வளர்ந்து பயனின்றிக் கிடக்கும் லேன்டானா செடி, காட்டு மஞ்சள் செடி, ஊனாங் கொடி, நொச்சி போன்ற செடிகளும் குளங்களில் படர்ந்து வளர்ந்து நீர்த் தேக்கத்தைக் கெடுக்கும் தண்ணீர்த் தாமரையும் காகித அட்டைகள் செய்ய உபயோகப் படுத்தப்பட்டன. இவைகளிலிருந்து காகித அட்டைகளையும் இலேசான அட்டைகளையும் தயாரிக்கலாம்.

இவ்வட்டைகளை அழைப்பிதழ்கள் அச்சிடவும், அலுவலகக் கோப்பு அட்டைகள் செய்யவும், விளம்பர அட்டைகள்செய்யவும், நோட்டுப் புத்தக மேலட்டைகள் செய்யவும் உபயோகிக்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

தகவல் : வி. கே. சண்முகநாதன்,
பண்ணைப் பொறியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை-3

பாகற்காய் கோ.1 சாகுபடிக் குறிப்புகள்

வயது	115 நாட்கள்.
பருவம்	ஆடிப்பட்டம்—தைப்பட்டம்
முன்செய் நேர்த்தி	விதைப்புக்கு ஏற்றபடி அதிக பட்சம் நான்கு உழவுகள் செய்து, தயார் செய்யவும் 45 க. செ.மீ. அளவு குழிகள் வெட்டவும்.
விதை முன்செய் நேர்த்தி	ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் "ஆர்கானோ மெர்க்குரிக் கலவை" போன்ற பூஞ்சாளக் கொல்லிகளுடன் கலந்து விதைக்கவும்.
விதை அளவு	எக்டருக்கு 2.5 கிலோ கிராம்.
இடைவெளி	2.5க்கு 2.0 மீட்டர்.
உரமிடல்	குழி ஒன்றுக்கு நன்கு மக்கிய மாட்டு எரு அல்லது கம்போஸ்ட் (10 கிலோ) போட்டு மண்ணுடன் கலந்து மூடவும். எக்டருக்கு 25 டன் மாட்டு எரு தேவை. கடைசி உழவின்போது போட்டும் இதைச் செய்யலாம். எக்டருக்கு 40 கிலோ தழைச் சத்தும், 30 கிலோ மணிச் சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும் போடவேண்டும்.

குறிப்பு : தழைச் சத்தில் பாதியை (20 கிலோ) விதைத்து 45 நாட்கள் கழித்து மேல் உரமாகப் போட வேண்டும்.

விதைத்தல்	குழி ஒன்றுக்கு 5 விதைகள் வீதம் விதைத்து, மூன்று வாரங்களுக்குப் பின்னர், நல்ல திடமான மூன்று செடிகளை மட்டும் வைத்துக் கொண்டு மீதிஇரண்டு செடிகளை எடுத்துவிடவும்.
தண்ணீர் பாய்ச்சுதல்	வாரத்திற்கு அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறை தேவைக்கு ஏற்பதண்ணீர் பாய்ச்சவும்.
பின் செய் நேர்த்தி	இரண்டு தடவைகள் களை எடுத்து இலேசாக வெட்டிக் கொடுத்து களைகளை நீக்கவும். ஒரு மாதத்தில் தரைப் பந்தலாகப் பருத்தி, வெண்டை, கத்தரி, துவரைச் செடிகளின் (அறுவடைக்குப் பின்) மாரைப் போடவும். அல்லது தட்டிகள் செங்குத்தாக அமைக்கவும். இதனால் செடிகள் மார்களின் மேல் படர்ந்தோ, அறுவடை செய்வதற்குச் சுலபமாக செடிகள் அமையும். செடிகளைச் சுற்றி நன்கு வட்டமாகப் பாத்திகள் (பண்ணைகால்)அமைக்கவும்.

பயிர்ப் பாதுகாப்பு:

1. பூச்சிகள் : "கார்பரில் 0.1 சதம் அல்லது 'ரோகார்' 0.05 சதம் (2 மில்லி லிட்டர் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து) மருந்தைத் தெளிக்கவும்.

குறிப்பு : "பி.எச்.சி.", "டி.டி.டி." அல்லது "எண்டிரின்" போன்ற மருந்துகளை உபயோகித்தால் செடிகள் பாதிக்கப்பட்டு, செடிகளின் பாகங்களில் நீண்ட நாட்களுக்கு மருந்து தங்கும் தன்மை ஏற்பட்டு வளர்ச்சி, மகசூல் பாதிக்கப்படும்.

2. நோய்கள் : கரையும் கந்தகம் எக்டருக்கு 20 கிலோ வீதம் சாம்பல் நோய் ஏற்பட்டால் தூவவும்.

விதைத்து 55-60 நாட்களில் அறுவடை ஆரம்பித்து வாரத்திற்கு ஒரு முறையாக 6-8 தடவைகள் அறுவடை செய்ய வேண்டும்.

தகவல் :
திரு எல். சுந்தரராஜன்,
டாக்டர் கெ. ஆர். முத்துக்கிருஷ்ணன்,
தோட்டக் கலைத் துறை,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோவை-3.

தற்சமயம் தமிழ் நாட்டில் கோ. 1, கோ. 2, கோ. 3 ஆகிய உயர் விளைச்சல் உளுந்து இரகங்கள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

கோ. 1 என்ற இரகம் 110 நாட்கள் வயதுடையது. மானாவாரிக்கேற்றது. சுமாரான மகசூல் (எக்டேருக்கு 600 கிலோ) கொடுக்கக் கூடியது.

கோ. 2 இரகம் முக்கிய இறைவைப் பயிராகச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதன் வயது மிகவும் குறைவு (65 நாட்கள் தான்). எக்டருக்குச் சராசரி 900 கிலோ மகசூல் கொடுக்கவல்லது.

1976ல் வெளியிடப்பட்ட கோ. 3 என்ற உளுந்து இரகம் மானாவாரிக்கேற்றது. இதன் வயது 85 நாட்கள். எக்டருக்கு சராசரி 650 கிலோ மகசூல் கொடுக்கிறது.

மேற்சொன்ன இரகங்களை விட அதிக உற்பத்தித் திறன் கொண்ட உளுந்து இரகத்தை உருவாக்க எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக சடுதி மாற்று இரகம் 3 உருவாக்கப்பட்டது. இது கோ. 1 இரகத்தினை எம்.எம்.எஸ் (மீதைல் மீதேன் சல்பனேட்) எனப்படும் ஒரு வகை இரசாயன மருந்தின் மூலம் சடுதி மாற்றம் செய்து உளுந்து இரகம் உருவாக்கியிருப்பது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில்தான் என்பது குறிப்பிடத் தக்கது.

''சடுதி மாற்ற இரகம்-3'' என்ற உளுந்து இரகம் 70 நாட்கள் வயதுடையது. நடுத்தர உயரம் (25-30 செ.மீ.) கொண்டது. படராதது, நெருக்கமாகப் பயிர் செய்ய ஏற்றது; குறுகிய காலத்தில் பூத்து ஏக காலத்தில் காய்கள் முற்றி அறுவடை செய்ய ஏற்றது ; எப்பருவத்திலும் பயிர் செய்யலாம். மகசூல் எக்டருக்கு இறைவையில் சராசரி 1050 கிலோவும், மானாவாரியில் 640 கிலோவும் கொடுக்கக் கூடியது. கோ. 2 இரகத்துடன் ஒப்பிடு செய்து பார்த்ததில் இறைவையில் 18 சதமும் மானாவாரியில் 32 சதமும் அதிக விளைச்சல் தரக்கூடியது. சடுதி மாற்ற இரகம் 3-ல் ஒரு நாளைய விளைச்சல் இறைவையில் எக்டருக்கு 14.9 கிலோ தானியமும், மானாவாரியில், 9.2கிலோ தானியமும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இந்த ரகம் கோ. 4 உளுந்து என்ற பெயரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. கோ. 4 உளுந்தை இறைவையில் பயிர் செய்வதன் மூலம் எக்டருக்கு ரூ. 1,250 நிகர இலாபம் பெறலாம்.

உளுந்து கோ. 4—சாகுபடிக் குறிப்புகள்

1. வயது	70 நாட்கள்.
2. பருவம்	எல்லாப் பருவங்களிலும் பயிர் செய்யலாம். மானாவாரியில் செம்மண் நிலப் பகுதிகளில் ஜூன்-ஜூலையிலும், கரிசல் நிலப்பகுதிகளில் செப்டம்பர்-அக்டோபரிலும் இறைவையில் மார்ச்-ஏப்ரலிலும் பயிர் செய்தால் அதிக மகசூல் பெறலாம்.
3. முன்செய் நேர்த்தி	விதைப்புக்கு ஏற்றபடி அதிக பட்சம் மூன்று உழவுகள் செய்து தயார் செய்யவும்.
4. விதை முன் செய் நேர்த்தி	ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் 'பிரேசிக்கால்', 'திரம்' ஆகிய இரண்டு பூசாணக்கொல்லிகளுடன் கலந்து, விதைப்பதற்கு முன்பாக 'ரைசோபியம்'' (பேக்டீரியா) நுண்ணுயிர்க் கலவையில் கலந்து விதைக்கவும்.
5. விதையளவு	எக்டருக்கு 25 கிலோ.
6. இடைவெளி	தனிப் பயிராகப் பயிர் செய்யும் போது விதைகளை 2.5 செ.மீ. ஆழத்தில் வரிசைக்கு வரிசை 20 செ.மீ.யும் செடிக்குச் செடி 10 செ.மீ.யும் இடைவெளியிட்டு விதைக்கவும்.
7. உரமிடல்	எக்டருக்கு 25 டன் தொழு உரம் கடைசி உழவின்போது இட்டு நன்கு கலந்து விடவும். எக்டருக்கு 10 கிலோ தழைச்சத்தும் 25 கிலோ மணிச்சத்தும் விதைப்பதற்கு முன் போட வேண்டும்.
8. பின்செய் நேர்த்தி	விதைத்து 30 நாட்களில் முதல் களை எடுக்க வேண்டும். பின்னர் தேவைக்கு ஏற்ப களை எடுக்கவும்.

சாம்பல் நோய்:

கந்தகத் தூள் எக்டருக்கு 20-25 கிலோ தூவலாம். அல்லது நனையும் கசைலாக இருந்தால் 0.2 சதக் கலவையை (எக்டருக்கு 1,000 கிராம் மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து) உபயோகிக்கவும்.

காய்ப் புழு, தண்டுப் புழு, இலைப் புழு, அசுவணி: ''மோனோகுரோடோபாஸ்'' (நுவக்கிரான்) 0.04 சதக் கலவையை (500 மி.லிட்டர் எக்டருக்கு) காய் காய்க்கும் சமயம் தெளிக்கவும். ஒரே ஒரு முறை தெளித்தாலே போதுமானது.

தகவல் :

திரு ஜி. சௌந்திரபாண்டியன்,
ஏ. ஐயம்பெருமான்,
ஏ. மயில்சாமி,
பயிரியல் துறை,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோவை-3

மண் பரப்பைப் பொன் பரப்பாக மாற்றுவோம்!

''தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்ற பாட்டுக்கொரு புலவன் பாரதியின் பாடல் வரிகளும், ''ஒரு மனிதனுக்கு உணவில்லையெனில் அவனுக்கு மதமும், கடவுளும் ரொட்டித் துண்டைவிட சிறியதாகப் போய்விடும்'' என்ற விவேகானந்தர் அவர்களின் விழுமிய கருத்துக்களும் நமக்கு உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்த்த வல்லனவாக உள்ளன.

இந்தியத் துணைக் கண்டத்தில் எப்போதுமே தனிச்சிறப்பை உடையதாகிய தமிழகம் வேளாண்மை வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்கதாக விளங்குகின்றது. ''உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குத் தேறுது'' என்ற பழமொழியை நாம் பழைய மொழியாகவே ஆக்கி விட்டோம். இன்றைக்குக் 'கட்டு கலங்காணும் கதிர் உழக்கு நெல் காணும்'' என்ற நிலையை எட்டியுள்ளோம்.

இன்றைய நிலையில் விவசாயமும் ஒரு வாணிகம் போன்றதே. இதில் இட்டது எவ்வளவு எடுத்தது எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்ப்பது அவசியம் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். அத்தோடு குறைந்த செலவில் கூடுதலான மகசூல் பெறுவதற்கான வழிவகைகளை அறிவியலின் துணை கொண்டு இவ்வாண்டு உழவர்களுக்குப் பயிர் உற்பத்தி உத்திகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இன்றைய நிலையில் 'குறைந்த செலவில் நிறைந்த உற்பத்தி'' என்பதே தாரக மந்திரமாக விளங்குகின்றது.

பழையன கழிதலும் புதியன புகுதலும்!

அரிய பல அறிவியல் உத்திகள் அன்றாடம் வந்த வண்ணமாக உள்ளன. ஆண்டுதோறும் புதுப் புது ரகங்கள் வெளியிடப்படுகின்றன. இவை மத்திய கால ரகங்கள்-இவை குறுகிய கால ரகங்கள்- இவை பூச்சிகளையும் பூசணங்களையும் தாங்கும் தன்மையுடையவை-இவை வறட்சியைத் தாங்க வல்லவை-இந்த ரகம் எந்தப் பருவத்திற்கும் ஏற்ற ரகம் என சிறப்புகள் பல உள்ளடக்கியவை-இவை உயர் விளைச்சல் தரவல்லவை. உன்னதமான ரகங்கள்-இவை நம் உழவர்களின் வயலை மணிகளாலும் மனத்தை மகிழ்ச்சியாலும் நிரப்புகின்றன. நெல் என்றதும் ஐ. ஆர். 20, பொன்னி, பவானி போன்ற ரகங்கள் நம் நினைவில் ஆடுகின்றன. சிறுதானியங்கள் என்றால், சி. எஸ். எச். 5., சி. எஸ். எச். 6, கோவில்பட்டி நெட்டை போன்ற சோள ரகங்களும், கே.எம். 1, கே. எம். 2, போன்ற கம்பு ரகங்களும், கோ. 7, கோ. 10, கோ. 11, பி. ஆர். 206 போன்ற கேழ்வரகு ரகங்களும், கங்கா, டெக்கான் 5 போன்ற மக்காச் சோள ரகங்கள் நம் நினைவைத் தொடுகின்றன. நிலக்கடலை என்றால் டி. எம். வி. 7, 9, 10, 11, 12 ரகங்களும், எள் என்றதும் டி. எம். வி. 3, டி. எம். வி. 4. ரகங்களும், மிகு விளைவும் வருமானமும் தரவல்ல கே. 1, கே. 2. சூரியகாந்தி ரகங்களும் எண்ணெய்ச் சுரங்கங்களாகத் தெரிகின்றன.

டி. 9, உளுந்து, அஞ்சுகம், பாசிப்பயறு, எஸ். ஏ. 1 துவரை, தோபசலி தட்டைப் பயறு ரகங்கள் நமக்குப் புரதப் புதையல்களாகக் காட்சியளிக்கின்றன. எகிப்துப் பருத்திக்கு இணையான நீண்ட இழைப் பருத்திகளான சுஜாதா, லட்சுமி போன்ற ரகங்களும் பெருமளவு மகசூல் தரவல்ல கி. பி. எஸ். 156, வரலட்சுமி போன்ற வீரிய ஒட்டு ரகங்களும் நமக்குப் பரிச்சயமானவைகளாக உள்ளன. கரும்பில் கோவை ரகங்களும், கோவை, கடலூர், கோவை- குடியாத்தம் ரகங்களும், கோவை-சிறுகமணி ரகங்களும், கரும்பு பயிரிடும் உழவர் பெருமக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன.

பழைய ரகங்களையும், பழைய வேளாண்மை உத்திகளையும் நாம் மறந்து பல ஆண்டுகளாகிற்று. புதிய ரகங்களும், புதிய உத்திகளும் நம்முடைய வயல்களிலே வளம் சேர்த்து வருகின்றன.

ஏருவும் உரமும் :

வேளாண்மையில் உரத்திற்காக நாம் அதிகம் செலவு செய்கின்றோம். இச்செலவைக் குறைத்து வருவாயைப் பெருக்கிட — உற்பத்தி குறையாமல் பெருக்கிட, பல வழிவகைகள் உள்ளன. மண்ணில் உள்ள ஊட்டச் சத்துக்கள் நிலத்திற்கு நிலம் வேறுபடும். மேலும், களர் தன்மையும் காரத் தன்மையும் உடைய மண்வகைகளில் உரமிடுவதனுல் முழுமையான பயனை அடைய முடியாது. எனவேதான், தற்போது பயிரிடுவதற்கு முன்னர் மண் பரிசோதனை செய்வது மிக முக்கியமான செயல்பாடுகளில் ஒன்ருகப் பரிந்துரைக்கப்படுகின்றது. மண் பரிசோதனை செய்து, காரத் தன்மையோ அல்லது களர்த் தன்மையோ இருந்தால் அதைப் போக்குதற்கு வழி வகைகள் செய்தல் வேண்டும். பரிசோதனை நிலையப் பரிந்துரைப்படி உரமிடுதல் வேண்டும்.

இந்தப் புதிய செய்திகள்கூட நம் உழவர்களுக்குப் பழைய செய்திகளாகிவிட்டன. அவர்களுக்குப் பரிச்சியமானவைகளாக மாறிவிட்டன.

இன்று நம் உழவர்கள் பரிசோதனை நிலையம் நோக்கிப் படையெடுத்த வண்ணமாய் உள்ளனர். தொழு உரம், குப்பை உரம், பசுந்தாளுரம், பசுந்தழையுரம் போன்ற அங்கக உரங்களும், அனங்கக உரங்களாகச் செயற்கை உரங்களையும் இடுவதே சிறப்பு என்பதை உணர்ந்திருக்கின்ருர்கள். இயற்கை உரங்கள் ஊட்டச்சத்துக்களை ஓரளவு அளிப்பதுடன், மண்ணின் பௌதிகத் தன்மையை மேம்படுத்துவதுடன், மண்ணில் நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் (பாக்டீரியாக்கள்) பல்கிப் பெருகி வளம் சேர்க்கின்றன என்பதையும் புரிந்திருக்கின்ருர்கள்.

ஊட்டந்தரவல்ல உயிரியல் உரங்கள்

பயிர்களுக்கு ஊட்டமளிக்கும் இயற்கை மற்றும் செயற்கை உரங்களோடு உயிரியல் உரங்களும் தற்போது நமக்கு உதவி வருகின்றன. உழவர்கள் நீலப் பச்சைப் பாசி, அசோலா போன்ற உயிரியல் உரங்களைப் பயன்படுத்தத் துவங்கியுள்ளது குறிப்பிடத் தகுந்ததாகும். இவை, வானவெளியில் உள்ள தழைச் சத்தை மண்ணில் வெளிநிலைப்படுத்திப் பயிர்களை வளம்படுத்துகின்றன. இவை மிகக் குறைந்த செலவில், மிக எளிமையாகத் தயாரிக்க வல்லவையாக உள்ளமையால் இது உழவர்களை மிகவும் கவர்ந்துள்ளது.

மண்வளம் சேர்க்கும் நுண்சத்து உரங்கள்

பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான முக்கியச் சத்துக்களான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆகியவற்றை மட்டிலுமே இட்டுவந்த நம் உழவர்கள் இன்று பரிந்துரைத்த அளவில் பயிர்களுக்கேற்ப நுண்ணூட்டக் கலவைகளையும், நுண் சத்துக்களையும் இட்டு வருவது பயிர்த் தொழிலின் பரிணும வளர்ச்சியின் ஓர் அங்கம் என்ருல் அது மிகையாகாது. இந்த நுண் சத்துக்கள் பயிர்களுக்கு மிக நுண்ணிய அளவில் தேவைப்பட்டாலும் பயிர்களின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்க வல்லனவாக விளங்கி வருகின்றன.

புஞ்சைப் புலங்களில் ஒரு புரட்சி!

வானத்தையே நம்பியிருப்பவை புஞ்சை நிலங்கள். புஞ்சை நிலங்கள் என்ருல் மிகக் குறைவாக மகசூல் தருபவை; பல சமயங்களில் தராமலும் போகலாம்- என்ற நிலைதான் இருந்து வந்தது. பருவம் மாறிப் பெய்வதனுலும், மீறிப் பெய்வதனுலும், பொய்த்துப் போவதாலுலும் புஞ்சைப் பகுதிகள் பஞ்சப் பகுதிகளாக விளங்கின. நன்கு மழை பெய்தாலும் சரிவான பகுதிகளிலும், சமமான பகுதிகளிலும் நீர்வடிந்து ஓடின. நிலத்தில் பாய்ந்து செல்லவில்லை. இதனுல் புஞ்சைப் பயிர்களின் நீர் வசதியன்றி வறண்டு போயின.

அண்மைக் காலத்தில் இந்தப் பிரச்சினைகள் சாமர்த்தியமாகச் சமாளிக்கப்பட்டுள்ளன. இன்று தமிழகமெங்கும் 'புஞ்சையில் இரு பயிர்ச் சாகுபடி' என்பது பரவலாகக் காணப்படுகின்றது. பருவநிலை மாற்றத்திற்கேற்பப் பயிர்வகைகள் சிபாரிசு செய்யப்படுகின்றன. பெய்யும் மழை வடிந்து போகாமல் பயிர் வளர்க்க வாகாக, சரிவான நிலங்களில் சமதள வரப்புகள் அமைத்தும், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தும் நீரை நிலத்தில் ஈர்க்கச் செய்ய அனைத்து வழிமுறைகளும் உழவர் பெருமக்களுக்கு எடுத்துரைத்துச் செயலாக்கப்படுகின்றன. புஞ்சைப் புலங்களில் பயிரிட ஏற்ற ரகங்கள், வறட்சியைத் தாங்கவல்ல, ரகங்கள், புஞ்சைக்கும் உரப் பரிந்துரைகள் இப்படிப் பல்வேறு வகைகளில் புஞ்சைப் புலங்கள் நஞ்சைக்கும் ஈடுதர வல்லனவையாய் வளர்ந்து வருவது தமிழகத்தின் வேளாண்மை வளர்ச்சிக்குக் கட்டியங்கூறி நிற்கின்றன.

நீர் நிர்வாகம்

விசும்பின் துளிவீழின்
அல்லால்மற் ருங்கே
பசும்புல்தலைகாண்பு அரிது

என்ற வள்ளுவரின் குறள் வரிகள் நீரின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றன. பயிர்களுக்கான ஊட்டச்சத்துக்களைத் திரவ வடிவில் கொடுக்கும் சாதனமாக, பயிர்களின் பல்வேறு அங்கங்களுக்கு ஊட்டச்சத்துக்களை எடுத்துச் செல்லும் வாகனமாக விளங்குவது நீர்.

பயிர்களின் வளர்ச்சிக்குப் பாசனம் அவசியம் என்பதை மட்டுமே அறிந்திருந்த நம் உழவர் பெருமக்கள் பயிருக்குக் குறைவாகப் பாசனமளித்தாலும், அதிகமாகப் பாசனமளித்தாலும் தீங்கு என்பதை உணர்ந்து செயல்படுகின்ருர்கள். அத்தோடு பயிரின் வளர்ச்சிக் காலங்களுக்கேற்ப, பாசனத்தைக் கூட்டியும், குறைத்தும், நிறுத்தியும் அளிக்க அறிந்திருக்கின்ருர்கள். அத்துடன் சிக்கனமான நீரைப் பயன்படுத்திச் சிறந்த முறையில் பயிர் வளர்க்கத் துவங்கியுள்ளார்கள். இவை வேளாண்மை முன்னேற்றத்தின் நல்ல அறிகுறிகளாகத் தென்படுகின்றன.

பூச்சி, பூசணங்களுடன் ஒரு புனிதப் போர் !

பயிரைத் தாக்கும் பூச்சிகளும், பூசணங்களும் பயிர் உற்பத்தியைப் பெருமளவு பாதிக்கின்றன. பூச்சி மற்றும் பூசணங்களின் தாக்குதல் போக எஞ்சியதே உழவனுக்கு என்ற நிலை இன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. பூச்சிகளையும், நோய்களையும் தாங்குகின்ற திறன் படைத்த ரகங்கள் இன்று நம்மிடையே பல உள்ளன. பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைப் பல்வேறு வழிகளிலே கட்டுப்படுத்துகின்ரேம். திரவ வடிவில், திட வடிவில், புகை வடிவில் இப்படிப் பல்வேறு விதங்களில் பூச்சிப் பூசணக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தி, பூச்சி பூசணங்களைக் கட்டுப்படுத்தி வருகின்ரேம். அத்தோடு தென்னைக் கருந்தலைப்புழு, கரும்பு குருத்துப் புழு போன்றவற்றை உயிரியல் முறைப்படி விரோதிப் பூச்சிகளால் கட்டுப்படுத்தி வருகின்ரேம். தூய்மையான சாகுபடி முறைகள், விதை நேர்த்தி செய்து விதை மூலம் பரவுகின்ற நோய்களைத் தடுத்தல், நாற்றங்காலில் பயிர்ப் பாதுகாப்பு, நடவு வயலில் பயிர்ப் பாதுகாப்பு, பூச்சிகள், பூசணங்கள் தாக்கும் முன்னராகத் தற்காப்பு நடவடிக்கைகள், தாக்கிய பின்னர் தடுப்பு முறைகள் பயிரைப் பருவத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ பயிர் செய்து பூச்சிகளின் தாக்குதலுக்குத் தப்ப வைத்தல் போன்ற பல்வேறு நடைமுறைகளை ஆய்ந்து அவற்றை உழவர் பெருமக்கள் கடைப்பிடிக்குமாறு செய்து வருகின்ரேம். மேலும், ஒட்டுமொத்த மருந்துத் தெளிப்பு, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு போன்ற புதிய பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவும் பயனுடையதாக விளங்குகின்றன.

உழவர்கள் உயர !

இவ்வாருக, பயிர்த்தொழிலில் அறிவியல் பூர்வமான சாகுபடி முறைகள் இன்றைய நிலையில் உழவர்களால் பின்பற்றப்படுகின்றது. இந்தப் பல்வேறு சாகுபடி நுட்பங்களை எளிதில் பின்பற்றுவதற்கு உழவர்களுக்கு உழவர் பயிற்சிகள் வாயிலாகவும், கருத்துக் காட்சிகள், மற்றும் பருவ விழாக்கள் வாயிலாகவும் விளக்கப்படுகின்றது. இம்முறைகளைக் கடைப்பிடிக்க வேளாண் துறை எண்ணிறைந்ததிட்டங்கள் தீட்டி, பல்வேறு சலுகைகள் வழங்குகின்றது. பழமையிலேயே ஊறிப் போன உழவர் பெருமக்களிடையே ஒரு புதிய உத்வேகத்தை நம்மால் காண முடிகின்றது. புதிய முறைகளைக் கைக்கொள்ளுவதிலே, நவீன தொழில் உத்திகளைக் கடைப்பிடிப்பதிலே, ஒரு பற்றுதல் இருப்பதை நம்மால் உணர முடிகின்றது.

கோலும் குடியும் !

''குடியுயரக் கோலுயரும்'' என்பது நமது முன்ஞேர்களின் வாக்கு. இன்றைய தமிழக அரசு இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு வேளாண்மை ஒன்றுதான் அடித்தளமாக அமைய முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையின்பால் வேளாண்மைத் தொழில் சிறப்புற, சீர்பெற, பயனுடைய பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. இன்னும் எவ்வழிகளிலெல்லாம் உழவர்கள் உயர வழிவகுக்க இயலும் என்பதை ஆராய்ந்து வருகின்றது.

இனி வருங்காலம் உழவர்களின் பொற்காலமாக, உழவர்களின் நீண்ட நெடுங்கனவு நனவாகக் கூடியதாய் அமையும் என நாம் நம்பலாம். எனவே, உழவர்கள் தங்களின் சலியாத உழைப்பை நவீன உழவியல் உத்திகளின் துணை கொண்டு, அரசு அளிக்கும் சலுகைகளைப் பயனுறும் வகையில் பயன்படுத்தி, தொல் புகழ் தங்கிய இந்தத் தமிழகத்தின் மண் பரப்பைப் பொன் பரப்பாக மாற்றியமைப்பார்கள் [illegible]!

திருந்திய விதைக்கும் கருவி

பேராசிரியர் சி. ஆர். சண்முகம், எம்.எஸ்ஸி.,
முதுநிலைப் பொறியாளர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை.

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற வள்ளுவரின் வாக்கு உங்களுக்குத் தெரியும். அந்தப் பெருமை அடைந்துள்ள உங்களுடைய முன்னேற்றத்திற்காகவும், நம் நாட்டின் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காகவும், விவசாய வல்லுநர்கள் அதிக மகசூல் தரவல்ல புதிய புதிய பயிர் வகைகளைக் கண்டு பிடிக்கிறார்கள். விவசாய வல்லுநர்களோடு ஒருங்கிணைந்து செயற்பட்ட எந்தெந்த விவசாய முறைகளை இயந்திர மயமாக்க வேண்டும்; அதன் மூலம் வேளாண்மையில் வளர்ச்சி காணலாம் என்றெல்லாம் கவனித்து அவற்றிற்குத் தேவையான பற்பல வேளாண்மைக் கருவிகளையும் நுணுக்கங்களையும் வேளாண்மைப் பொறியியல் பணியாளர்கள் உருவாக்கி வருகிறார்கள்.

குறிப்பாக விதைக்கும் காலத்தில் எல்லா நிலங்களையும், மழை பெய்தவுடன், மண்ணில் உள்ள ஈரப்பதம் குறைவதற்கு முன்னாலேயே விதைக்க வேண்டும் என்று நமக்குத் தெரியும். ஆகவே, சில நாட்களுக்குள்ளே ஏக காலத்தில் ஏர் வேலையாட்கள் இவற்றிற்குப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதை நாம் எல்லோரும் அனுபவத்தில் அறிந்திருக்கின்றோம். இதனால் காலத்தே விதைக்க முடிவதில்லை. அடுத்த மழை வரும் வரை காத்திருக்க வேண்டி இருக்கிறது. சில சமயங்களில் பருவத்தையும் தவற விடும்படி நேருகிறது. தேவையான ஈரம் இல்லாததால் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு அதனால் மகசூலும் கணிசமாகக் குறைகிறது. இந்த கஷ்டங்களையெல்லாம் நிவர்த்தி செய்து உரிய காலத்தில் விதை விதைப்பதற்கேற்ற ஒரு திருந்திய விதைக்கும் கருவி தேவைப்படுகிறது.

மேலும், விதைக்கும் கருவியைக் கொண்டு விதைப்பதனால், விதைகளைத் தேவையான ஆழத்தில் விதைக்கலாம். அந்த விதைகள் உடனே மண்ணால் மூடப்பட்டு மேல்மண் அழுத்தப்படுகிறது. இதனால் மண்ணின் ஈரத்தன்மை ஆவியாகாமல் காக்கப்படுகிறது. விதைகளின் முளைப்புத் திறனும் அதிகரிக்கிறது; பயிரும் நன்றாக வளருகிறது.

நம் மாநிலத்தில் பொதுவாக விதைகள் நிலத்தில் தூவப்பட்டு பிறகு நாட்டுக் கலப்பையைக் கொண்டு மண்ணால் மூடப்படுகிறது. சில விதைகள் நாட்டுக் கலப்பைக்குப் பின்னால் விதைக்கப் (சால்விட) படுகிறது. சில மாவட்டங்களில் 'கொர்ரு' என்னும் விதைக் கலப்பையைக் கொண்டு விதைப்பதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். கொர்ருக் கருவியைக் கொண்டு விதைக்கும் பொழுது, விதை சீராக விழுவது, விதை போடும் ஆளைப் பொறுத்ததேயாகும். மேலும் விதை, நிலத்தில் விழுந்தவுடன், மண் மூடப்படுவதில்லை. மண்ணின் ஈரத்தன்மையும் குறைகிறது. டிராக்டருடன் பொருத்தி விதைக்கும் கருவிகள் இருப்பினும் இவைகளைக்கொண்டு குறைந்த அளவுள்ள நிலங்களில் விதைக்க முடிவதில்லை.

மேலும், நிலக்கடலையை விதைப்பதற்கு ஏற்ற, ஒருசீராக விதைக்கும் கருவி இல்லாததும் விவசாயிகளுக்கு ஒரு பெருங்குறையாக இருந்தது. இந்தக் குறையை நிவர்த்தி செய்ய மாடுகளால் இழுக்கப்பட்டு இயங்கும் விதைக்கும் கருவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திருந்திய விதைக்கும் கருவி கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தத் திருந்திய விதைக்கும் கருவியின் சில முக்கிய அம்சங்களைப் பற்றிப் பார்ப்போம்.

இந்த விதைக் கருவி இரண்டு சக்கரங்களின் மேல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதை சிரமம் இல்லாமல் எல்லா நிலங்களுக்கும் எடுத்துச் செல்ல முடியும். சக்கரம் சுழலும்பொழுது, இதனுடன் இணைக்கப்பட்டுள்ள பல்சக்கரமானது விதைத் தட்டை இயக்குகிறது. இந்த விதைத் தட்டில் பொருத்தப்பட்டுள்ள கரண்டிகள் விதைப் பெட்டியிலிருந்து ஒவ்வொரு விதையாக எடுத்துப் புனலில் போடுகிறது. இவ்வாறு எடுத்துப் போடப்பட்ட விதைகள் இரப்பர்க் குழாய்களின் மூலமாக, ஒரே ஆழத்தில் தோண்டப்பட்ட சால்களில் வரிசையாக விழுகின்றன. சால்களைத் தோண்டுவதற்கு வசதியாக ஐந்து சால் தோண்டிகள் இந்த விதைக் கருவிகளில் பொருத்தப்பட்டுள்ளன. தோண்டப்பட்டுள்ள சால்களில் விழுந்த விதைகள் உடனே சால் மூடிகளால் மூடப்பட்டு, பிறகு, மேல் மண் அழுத்தப்படுகிறது.

நாம், நாட்டுக் கலப்பையை உபயோகிக்கும்பொழுது, நிலத்தின் மேற்பரப்பில் உள்ள மண்ணைக் கலந்து வருகிறோம். இதனால் மண்ணின் ஈரப்பசையானது வெகு சீக்கிரத்தில் ஆவியாகிவிடுகிறது. விதையின் முளைப்புத்திறனும் குறைகிறது. முளைத்து வந்த பயிர்கள் நீர்ப் பற்றாக்குறையினால் வாடுகின்றன. அடுத்த மழை வரும் வரையில் தாங்குவதும் இல்லை. திருந்திய விதைக் கருவியில் இருக்கும் சால்தோண்டிகளின் உதவியால் போதுமான அளவுள்ள சிறிய சால்களே தோண்டப்படுகின்றன. அது மட்டும் அல்லாமல், சால்களுக்கு இடையே உள்ள மண் கலக்கப்படுவதில்லை. இதனால் மண்ணின் ஈரப்பசை பாதுகாக்கப்படுவதினாலும் விதையின் முளைப்புத் திறன் அதிகமாகிறது. அடுத்த மழை வரும் வரை பயிர்கள் நீடித்தும் நிற்கமுடிகிறது.

இந்தக் கருவியைக் கொண்டு வரிசைகளில் விதைக்க முடியும். ஒரு சாலுக்கும் மறு சாலுக்கும் இடையிலுள்ள தூரத்தைத் தேவைப்பட்ட இடைவெளியில் மாற்றியமைக்க வசதி இருக்கிறது. கரண்டிகளும் பல [illegible] உள்ளன. இதனால், பலதரப்பட்ட விதைகளை விதைக்க ஏதுவாகிறது. இதைப் போல செடிக்குச் செடி இடையேயுள்ள இடைவெளியை 15 செ. மீ. ஆகவோ 22.5 செ. மீ. ஆகவோ பல்சக்கரங்களின் உதவியால் மாற்றி அமைக்க முடியும். விதைத் தட்டில் உள்ள பல அளவுள்ள கரண்டிகளின் மூலம் நிலக்கடலை, பஞ்சு நீக்கிய பருத்தி விதை, மக்காச்சோளம், கொத்துக்கடலை

மற்றும் பயறு, சோளம், கம்பு போன்ற பலவகை விதைகளை இந்த ஒரு கருவியைக் கொண்டே விதைக்க முடியும்.

ஓர் இடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு இந்தக் கருவியை எடுத்துச் செல்லும் பொழுது, கொத்துகள் தரையில் படாதவாறு மேலும் மேலே தூக்கி வைத்துக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. தலைமாறு போன்ற இடங்களில் விதை விதைப்பை தற்காலிகமாக நிறுத்திக் கொள்ள ஏற்ற அமைப்பும் இதில் உள்ளது. கொத்துகளில் பொருத்தும் கன எடையைப் பொறுத்து சால்களின் ஆழத்தைக் கூட்டியோ, குறைத்தோ தேவையான அளவுக்கு வைத்துக் கொள்ளலாம். மேலும், ஒவ்வொரு கொத்தும் தனித்தனியாக இயங்குவதால், நிலப்பரப்பின் மேடு பள்ளங்கள் இருந்தாலும் சால்கள் ஒரே சீரான ஆழத்தில் தோண்டப்படுகின்றன.

ஐந்து கொத்துள்ள விதைக்கும் கருவியை இழுக்க சுமார் 70 கிலோ இழுவைத் திறன் தேவைப்படும். அதேபோல மூன்று கொத்துள்ள விதைக்கும் கருவியை இழுக்க 50 கிலோ இழுவைத் திறன் போதுமானது. சாதாரண அளவுள்ள ஒரு ஜோடி மாடுகளுக்கு இந்த இழுக்கும் திறன் உண்டு. ஐந்து கொத்துள்ள விதைக்கும் கருவியைக்கொண்டு ஒரு நாளைக்கு 1.6 முதல் 2 எக்டேர் வரையிலும் அதாவது 4 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரையியிலும், மூன்று கொத்துள்ள விதைக்கும் கருவியைக் கொண்டு ஒரு நாளைக்கு 0.8 முதல் 1 எக்டேர் வரையிலும் அதாவது 2 ஏக்கரிலிருந்து 2.5 ஏக்கர் வரையிலும் விதைக்கலாம். அதே பரப்பில் நாட்டுக் கலப்பையைக் கொண்டு விதைத்தால் இரண்டு முதல் ஐந்து நாட்கள் பிடிக்கும். நாட்டுக் கலப்பையினுல் அதிகபட்சம் 0.4 எக்டேர் அதாவது 1 ஏக்கர் வரையிலும்தான் ஒரு நாளைக்கு விதைக்க முடியும். நாட்டுக் கலப்பைக் கொண்டு 1 எக்டேர் விதைக்கச் சுமார் ரூ. 45.00 அதாவது 1 ஏக்கருக்கு ரூ. 18.00 செலவாகும். ஐந்து கொத்துள்ள விதை விதைக்கும் கருவியைக் கொண்டு விதைப்பதால், செலவில் ஒரு எக்டேருக்கு ரூ. 28—அதாவது ஏக்கருக்கு ரூ. 11-ம் நேரத்தில் ஒரு எக்டேருக்கு 15 மணி நேரம் அதாவது எக்டேருக்கு 6 மணி நேரமும் மீதப்படுத்த முடிகிறது. இதேபோல் மூன்று கொத்துள்ள விதை விதைக்கும் கருவியைக் கொண்டு விதைப்பதால் செலவில் ஒரு எக்டேருக்கு ரூ. 16-ம் அதாவது ஏக்கருக்கு ரூ. 650-ஆம், நேரத்தில் ஒரு எக்டேருக்கு 10 மணி நேரமும் அதாவது ஏக்கருக்கு 4 மணி நேரமும் மீதப்படுத்த முடிகிறது.

விதைகள் முளைத்த பிறகு எடுத்த கணக்கெடுப்பில் ஒரே மாதிரியான சோளம் மற்றும் நிலக்கடலை விதைகளை நாட்டுக் கலப்பையைக்கொண்டு விதைத்ததில் முளைப்புத்திறன் சராசரியாக 70 சதமாக இருந்தது. அதே நாளில் அதே விதைகளை மேற்குறிப்பிட்ட விதைக் கருவிகளைக் கொண்டு விதைத்ததில் கிடைத்த முளைப்புத் திறனுனது, சராசரியாக 80 சதமாக இருந்தது. ஆகையால் திருந்திய விதைக் கருவியை உபயோகிப்பதன் மூலம் விதைக்கும் செலவில் கணிசமான மீதம் ஏற்படுகிறது. மண்ணிலுள்ள ஈரம் குறைவதற்கு முன்னுல், காலத்தே விதைப்பதுடன், நேரத்திலும் மீதம் ஏற்படுகிறது. விதைகளின் முளைப்புத்திறன் அதிகமாகி, நிகர வருமானமும் அதிகரிக்கிறது.

இதுவரை சொன்ன காரணங்களினுல் இந்த இரண்டு திருந்திய விதைக்கும் கருவிகளும் வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஒரு உற்ற நண்பர்களாக இருக்கும் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை.

முந்திரி விளைச்சலை உயர்த்த வளர்ச்சி ஊக்கி :

முந்திரியின் மகசூல் குறைவாக இருப்பதற்கு முக்கிய காரணம் அதன் காய்பிடிக்கும் தன்மை மிகவும் குறைவாய் இருப்பதுதான். முந்திரி பூக்கும் காலத்தில் 2-4-டி என்னும் வளர்ச்சி ஊக்கியை 5 பி.பி.எம். என்ற அளவில் தெளிப்பதால் அதிக அளவு காய்கள் பிடித்து மகசூலும் அதிகரிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முந்திரி ஆராய்ச்சி நிலையத்தில் இம்முறை கையாண்டு பார்க்கப்பட்டது. அதனுல் மரம் ஒன்றிற்கு 5.6 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. வளர்ச்சி ஊக்கி தெளிக்காத மரத்தில் 2.5 கிலோ மகசூல் தான் கிடைத்தது. எனவே, முந்திரி மகசூலை உயர்த்த வளர்ச்சி ஊக்கியைப் பயன்படுத்திப் பலன் பெறலாம்.

தகவல்:

முந்திரி ஆராய்ச்சி நிலையம்,
விருத்தாச்சலம்.

வெற்றிலையில் வாடல் நோயைக் கட்டுப்படுத்துதல் :

வாடல் நோயால் வெற்றிலைப் பயிர் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் நோயியல் துறையில் இந்நோயைக் கட்டுப்படுத்தும் முறை பற்றிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு பூசணம் கொல்லிகளை உபயோகித்துப் பார்த்ததில் 0.5 சத போர்டோ கலவை, 0.25 சத காப்பர் ஆக்சிகுளோரைடு, 0.2 சத ஆரியோபஞ்சின், 0.06 சத மயில் துத்தக் கலவை ஆகிய வாடல் நோயை 50 சதம் வரை கட்டுப்படுத்தின.

நோய்த் தடுப்பு மருந்துகள் உபயோகிக்காத பகுதியில் 74 சதம் பயிர்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டிருந்தன. எனவே, மேற்கூறிய மருந்துகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி வெற்றிலையில் வாடல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

தகவல்:

திரு ஏ. வெங்கட்டராவ்,
இணைப் பேராசிரியர்,
தாவர நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை.

நீலப்பச்சைப் பாசி தயாரித்தல்

நீலப்பச்சைப்பாசி என்பது பாசி இனத்தைச் சேர்ந்த ஒரு வகை ஆகும். இஃது காற்றில் கலந்துள்ள நைட்ரசன் வாயுவைக் கிரகித்து நெல் பயிருக்குத் தழைச்சத்து வழங்கும் சக்தி வாய்ந்த ஒரு சிறந்த பாசியாகும். ஒரு ஏக்கரில் 22 கிலோ யூரியாவுக்குச் சமமான 10 கிலோ தழைச்சத்தைக் கிரகித்துப் பயிருக்கு வழங்கும் ஆற்றல் பெற்றது.

நீலப்பச்சைப் பாசி போட்ட வயல்களுக்கு, தழைச்சத்தைக் குறைத்து இட்டும் நல்ல மகசூல் தந்துள்ளன என்று ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே, ஏன் நீங்களும் உங்கள் வயலில் நீலப்பச்சைப் பாசியை வளர்த்து நெல் வயலுக்கு இட்டு, செலவைக் குறைத்து, நல்ல மகசூல் பெறக்கூடாது?

நீலப்பச்சைப் பாசி தயாரித்தல் :

நன்கு சூரிய ஒளி படக்கூடிய, ஆழ்குழாய்க் கிணற்றுக்கு அருகிலுள்ள வயல் தேர்ந்தெடுக்கப்பட்டது. தண்ணீர் நிலையாக நிற்பதற்கு வசதியாக, நிலத்தை நன்கு கொத்திவிடப்பட்டது. தண்ணீர் பாய்ச்ச வசதியாக, வயலை 20 மீட்டர் நீளமும், 4 மீட்டர் அகலமும் கொண்ட இரண்டு செண்ட் பாத்திகளாக 5 பாத்திகள் தயார் செய்யப்பட்டன. புல், பூண்டுகள், தாள் இல்லாமல் சுத்தம் செய்த பின், மட்டை அடித்துச் சமப்படுத்தப்பட்டது.

பாத்திகளில் 2 செ. மீ. அளவு தண்ணீர் கட்டி, செண்டிற்கு 2 கிலோ விதம் 10 செண்டிற்கு 20 கிலோ சூப்பர் பாஸ்பேட் பரவலாக இடப்பட்டது. பின் செண்டிற்கு 5 கிலோ விதம் 10 செண்டிற்கு 50 கிலோ நீலப்பச்சைப் பாசியை நன்கு தூள் செய்து, பாத்தியில் எல்லா இடங்களிலும் நன்குபடும்படி பரவலாக 20-5-78 அன்று இடப்பட்டது. பிறகு, பாத்தியில் இறங்கி கையினுல் சமமாகக் கலக்கி விடப்பட்டது. இவ்வாறு இரண்டு நாட்களுக்குக் காலையிலும் மாலையிலும் 2 செ. மீ. தண்ணீர் நிறுத்தி, கையினுல் நன்கு கலக்கி விடப்பட்டது.

23-5-78 முதல் பாசி நன்கு வளரத்தொடங்கியது. பாசி போட்ட 20-வது நாளில் அதாவது 9-6-78 அன்று நன்கு வளர்ந்து விட்டது. பாசி நன்கு வளர்ந்து தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தது. பின்பு வயலிலுள்ள தண்ணீர் வடிக்கப்பட்டது. தண்ணீர் வடிந்த பின்பு, லேசான ஈரத்துடன் பாசி வயலில் படிந்திருக்கிறது. வயலின் மேல் படிந்துள்ள பாசியை எடுத்து, நன்கு உலர்த்தி, சேமித்து வைக்கப்பட்டது. 10 செண்டிலிருந்து மொத்தம் 250 கிலோ நீலப்பச்சைப் பாசி அறுவடை செய்யப்பட்டது.

பாசி எடுத்த பிறகு, மீண்டும் செண்டிற்கு 2 கிலோ விதம் சூப்பர் பாஸ்பேட் மட்டும் இட்டு நன்கு கலக்கிவிடப்பட்டது. மீண்டும் பாசி இடவில்லை. ஏனெனில், முதல் முறை இட்ட பாசியே மண்ணில் போதுமான அளவு தங்கி இருந்தது. இந்த முறை 15 நாட்களிலேயே நன்கு வளர்ந்துவிட்டது. 10 செண்டில் 200 கிலோ பாசி எடுக்கப்பட்டது. ஆக, 35 நாட்களில் 450 கிலோ பாசி எடுக்கப்பட்டது. இதற்கான செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

10 செண்ட் நிலத்தில் பாசி தயாரிக்க ஆன செலவு

		ரூபாய்
வயலைக் கொத்தி, பாத்தி கட்ட	...	29.00
சூப்பர், பாசி போட்ட செலவு	...	4.50
50 கிலோ பாசியின் விலை	...	150.00
சூப்பர் பாஸ்பேட் 20 கிலோ	...	11.60
பாசி எடுத்தல், காய வைத்தல்	...	14.00
கூடுதல்	...	209.10

வரவு:

மொத்தம் 35 நாட்களில் எடுத்த பாசி	450 கிலோ	
மதிப்பு	ரூபாய் 1350	

நன்கு சூரிய ஒளி உள்ள நாட்களில் பாசி வேகமாக வளர்கின்றது.

எனவே, நீங்களும் இவ்வாண்டு முதற்கொண்டே, நெல் நாற்றங்காலுக்கு அருகிலேயே, நீலப்பச்சைப் பாசிக்குத் தனியே நாற்றங்கால் தயார் செய்து வளர்க்கலாம். ஒரு ஏக்கர் நடவு வயலுக்கு 4 கிலோ நீலப்பச்சைப் பாசி இடவேண்டும். ஒரு செண்ட் நிலத்திலிருந்து 20 நாட்களில் 25 கிலோ நீலப்பச்சைப் பாசி கிடைக்கின்றது. உங்கள் தேவைக்கேற்ப, நாற்றங்கால் தயார் செய்து, நீலப்பச்சைப் பாசியை வளர்த்து, வயலுக்கு இட்டுப் பயனடையுங்கள்!

1. பி. சுப்பிரமணியன்,
மாவட்ட வேளாண்மை
அலுவலர்,
கும்பகோணம்.

2. என். காளிமுத்து,
துணை வேளாண்மை அலுவலர்,
அரசு விதைப்பண்ணை,
சாக்கோட்டை.

பாய் நாற்றங்காலின் பயன்கள்!

"பாய் நாற்றங்கால்'' என்பது நமக்கு, முன்னரே அறிமுகமான ஒன்றாக இருப்பினும் தற்போது புதிய வேளாண்மை உத்திகளுடன் பரிந்துரைக்கப்படுகின்றது. பாசனத் திட்டம் தட்டுப்பாடுள்ள பகுதிகளிலும், இரு பயிர் சாகுபடி செய்யப்படுகின்ற பகுதிகளில் இரண்டாவது பயிருக்கு நாற்றுக்கள் தயாரிப்பதற்கு எளிதாகவும் பாசனத்திற்கென அதிகம் செலவிடும் கிணற்றுப் பாசனப் பகுதிகளிலும் இந்தப் பாய் நாற்றங்கால் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என நம்பலாம்.

நாற்றங்கால் தயாரிக்க !

நாற்றங்காலை வீட்டிற்கு அருகிலோ அல்லது வயலின் அருகிலோ வசதியாக அமைத்துக் கொள்ளலாம். 20 மீட்டர் நீள அகலமுள்ள சமமான நிலப்பரப்பைத் தெரிந்தெடுத்து, 2 மீட்டர் நீளமும் 1 மீட்டர் அகலமும் உள்ள பாத்திகளாகப் பிரித்தல் வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் இடையில் 10 செ.மீ. அகலத்துக்குச் சிறு வரப்புகள் அமைக்கவும். இரு பாத்திகளுக்கு இடையே 30 செ. மீ. அகலத்திற்கு நடைபாதை ஒன்று அமைத்தல் வேண்டும். பாத்திகளின் உட்புறம் பாலித்தின் தாளினைப் பரப்பி சுற்றிலுமுள்ள வரப்புகளின் மீது படியுமாறு செய்ய வேண்டும்.

நாற்றுகளுக்கு ஊட்டமும் பாதுகாப்பும் !

25 சத தொழு உரம், 75 சத மண் அல்லது மணல், 140 கிராம் தழைச்சத்து, 140 கிராம் மணிச்சத்து, 140 கிராம் சாம்பல் சத்து தரவல்ல இரசாயன உரம் டி.டி.டி. 5 சதப் 200 கிராம் ஆகியவற்றை நன்கு கலந்து பாத்திகளின்மீது 1 செ. மீ. உயரத்திற்குச் சீராகப் பரப்புதல் வேண்டும்.

பின்னர், அமிலத் தன்மை உள்ளிட்ட எல்லா மண் வகைகளிலும் 800 கிராம் மங்கனீஸ் சல்பேட் நுண்ணூரத்தையும், சமானமான கார அமில நிலையும், காரமான தன்மையும் உடைய மண்வகைகளில் பெரஸ் சல்பேட்டு நுண்ணூரத்தையும், 40 லிட்டர் நீரில் கரைத்து அதில் விதைப்புக்கான விதைகள் 20 நிமிடம் முக்கிவைத்தல் வேண்டும்.

பயிரை பாக்டீரியல் நோய் தாக்காமல் இருக்க முளைப்பு கண்ட விதைகளைப் பெவிஸ்டின் 16 கிராம் அல்லது 1.25 கிராம் அக்ரிமைசின் அல்லது ஸ்ட்ரெப்டோ சைக்கிளின் மருந்தை 40 லிட்டர் நீரில் கரையத்தக்க கரைசலில் 20 நிமிடம் முக்கி வைத்திருத்தல் வேண்டும்.

பின்னர், விதைகளைப் பாத்திகளின்மீது பரப்பி, கையினால் லேசாக அமுக்கி விடுதல் வேண்டும். அதன்மேல் லேசாக மணல் தூவி வைக்கோலைப் பரப்பி மூடுதல் வேண்டும். நாற்றங்கால் உலராமல் பூவாளியினாலோ அல்லது துடைப்பத்தின் உதவியாலோ தண்ணீர் தெளிக்கலாம். நாற்றங்காலில் நீர் தேங்கி நிற்றல் கூடாது.

விதைத்த 10-ஆம் நாள் 3 சத கார்போஃபியுரான் சதுரமீட்டருக்கு 4 கிராம் 1 கிராம் பைட்டலான் என்ற அளவில் கலந்தும் அல்லது 40 மி.லி. ரோகார் மருந்தை பட்டலான் மருந்துடன் கலந்து தெளித்து பயிர்ப் பாதுகாப்பு செய்யலாம்.

நாற்றுக்களைப் பறிக்கும் நாளைக்கு முதல் நாள் மாலை நாற்றங்காலுக்குப் பாசனம் அளித்து அடுத்த நாள் காலை நாற்றுக்களைப் பறித்து நாற்றுக்களின் வேர்கள் நீரில் இருக்குமாறு வைத்தல் வேண்டும்.

பறித்த நாற்றுக்களை டர்ஸ்பான் யூரியா கரைசலில் முக்கி நடுதல், நடவு வயலில் பயிர்களை 30 முதல் 35 நாள் வரை பாதுகாக்கும்.

இதற்கு 3 மீட்டர் நீளம், 0.6 மீட்டர் அகலம், 0.15 மீட்டர் ஆழம் என்ற அளவில் வயலில் குழி அமைத்து உட்புறம் பாலித்தின் தாளினைப் பரப்புதல் வேண்டும். குழியினுள் 50 லிட்டர் நீரை ஊற்றி அதில் 100 கிராம் டர்ஸ்பான் மருந்தையும், 500 கிராம் யூரியாவையும் கரைத்து, நன்கு கலக்கி, நாற்றின் வேர்ப் பகுதியை 20 நிமிட நேரம் முக்கி வைத்திருத்தல் வேண்டும்.

*இவ்வாறாகப் பாய் நாற்றங்கால் மூலம் நாற்றுக்கள் தயாரிக்க குறைவான நிலப்பரப்பு போதுமானது.

*நாற்றுக்களை 40 நாட்கள் வரை நாற்றங்காலில் வைத்திருக்கலாம்.

*மிகக் குறைவான நீரே போதுமானது.

*இவ்விதத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ. 75 மட்டுமே தேவை.

*இது சாதாரணமான நாற்றங்காலுக்கு ஆகும் செலவில் பாதியளவே யாகும்.

இருபயிர் சாகுபடி பகுதிகளில் நாற்றங்காலுக்கென ஒரு சிறு துண்டினை ஒதுக்கினால் போதுமானது.

எனவே, வேளாண் மக்கள் இப்புதிய உத்திகளை அனுசரித்து பாய் நாற்றங்கால் குறைந்த செலவில் அமைத்து, நல்ல ஆரோக்கியமானதும் வாளிப்பானதுமான நாற்றுக்களைத் தயாரித்து உயர் விளைவிற்கு வழி வகுக்கலாம்!

இரு கருத்துக்கள்

அ. வேங்கடராமன், ஐ.ஏ.எஸ்.
வேளாண்மை இயக்குநர்

தமிழக வேளாண்மை வளர்ச்சியில் இன்று இரண்டு பொருட்களின் மீது நமது கவனம் மிகவும் தேவை. ஒன்று நீர், மற்றது உரம்.

நீர் கிடைத்தற்கரிய ஓர் இடு பொருள். இயற்கை அன்னை அளிக்கும் இப்பொருளை அறிவுடன் சேர்த்து ஆற்றலுடன் பயன் படுத்தினால் வளம் பெற்றிட முடியும். நம்மைப் போல ஆண்டு ஒன்றுக்கு 30-ல் இருந்து 40'' மழை கிடைக்கும் பகுதிகளில் வாழும் மக்கள், அதிலும் நான்கு ஐந்து மாதங்களில் எல்லா மழையும் பெய்திடும் பகுதிகளில் வாழும் மக்கள் நீரைச் சரியாகப் பேணிக் காக்கத் தெரிந்து கொண்டால்தான், பெருகி வரும் தேவையை நிறைவு செய்து வளத்துடன் வாழ முடியும்.

ஆற்று நீரையும், குளத்து நீரையும், கிணற்று நீரையும் பாசனத்திற்குப் பயன்படுத்தி நல்ல பலன் பெறுகின்றோம். ஆனால், இந்த நீர் நிலைகளிலிருந்து, தண்ணீரைச் சீரான முறையில் பயன்படுத்தி அதிக அளவில் பல பயிர்களைப் பயிர் செய்ய முடியாதா? எந்த முறையிலே நீரைச் சேகரிக்கின்றோம்; சேகரிக்கும்பொழுது எவ்வாறு சேதாரத்தைத் தவிர்க்கின்றோம்; சேகரிக்கப்பட்ட நீரை எந்த முறையில் விளை நிலங்களுக்குக் கொண்டு வருகின்றோம்; வரும் வழியில் வீணாகும் நீரை எவ்வாறு தவிர்ப்பது; எவ்வளவு, எப்போது எவ்வாறு நீரைப் பயிர்களுக்குப் பாய்ச்சுகின்றோம் என்பதைப் பற்றிய ஆழ்ந்த—தெரிந்த கருத்துக்கள் நமது நடைமுறைச் செயல்களுக்குத் தேவை. பயிர் இனங்களைத் தெரிந்து எடுக்கும்போது குறுகிய காலத்திலே அதிகப் பலன் தரத்தக்க பயிர்களைத் தெரிந்து எடுத்து இருக்கும் நீரைக்கொண்டு அதிக வருவாய் கண்டிடலாமே—ஒரு பயிர் செய்யும் இடங்களிலே, இரண்டு பயிர்களும், இரண்டு பயிர் செய்யும் இடங்களிலே மூன்று பயிர்களும் பயிர்களைச் சரியாகத் தெரிந்தெடுப்பதன் மூலம் விளைவித்திடலாமே! நீர் நிலைகளில் நீரைச் சேகரிப்பதும், சேதாரத்தைத் தடுப்பதையும், கால்வாய்களில் ஏற்படும் இழப்பைத் தவிர்த்திடவும் பொதுப் பணித்துறை தற்போது தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறது. அரசுத் துறையின் செயலுடன்கூட நம்மால் முடிந்த வரை நீரை வீணாக்காமல் பாதுகாப்பது நல்லது அல்லவா? சில பகுதிகளில் நீர்நிலைகளிலுள்ள மடைப் பலகையைத் திறந்து விட்டால், அந்தப் பட்டம் முடியும் வரை மீண்டும் மடையை அடைப்பதே இல்லை. இதனால் ஏற்படும் நீர்ச் சேதாரத்தைத் தவிர்க்க நம்மால் முயற்சி எடுக்க முடியாதா? ஊர் மக்கள் ஒன்று கூடி முடிவெடுத்தால் இதைத் தவிர்க்கலாமே! ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்கு நீரைப்பாய்ச்சும் இன்றைய நிலையில், வேண்டிய நேரத்தில் நீரைப் பாய்ச்சவும், வடிக்கவும் தகுந்த செயல் முறைகளைத் தெரிந்து எடுக்கவும், இயலாத நிலையில் பல பகுதிகளில் நாம் இருக்கின்றோம். கிராம அளவில் ஒருங்கிணைந்து செயல்பட்டால் ஒவ்வொரு வயலுக்கும் வேண்டிய நேரத்தில் நீரைப் பாய்ச்ச உள் வாய்க்கால்களை அமைத்துக் கொள்ள முடியாதா? இவ்வாறு ஒருங்கிணைந்து செயல்பட மனித உழைப்பும், ஓரளவுக்கு விஞ்ஞான அறிவும் தேவை. இவை இரண்டும் நமது பகுதிகளிலே கிடைக்கக் கூடிய பொருட்கள் தானே?

பயிர்கள் விளையும்போது சில கட்டங்களிலே தண்ணீர் மிக மிகத் தேவை. சில கட்டங்களிலே நீர் தேங்கி நிற்காமல் இருப்பது நல்லது. எந்தக் கட்டத்தில் நீர் தேவை; எப்பொழுது நீர் தேங்கி நிற்பதைத் தவிர்க்க வேண்டும் என்று தெரிந்து செயல்பட்டால், கிடைக்கின்ற நீரை நல்ல முறையில் பயன்படுத்திடலாமே! இதற்கு அறிவும், செயல் திறனும்தானே நமக்கு வேண்டிய மூலதனம். நீர் உபயோகம் என்றால் ஆற்று நீரையும் குளத்து நீரையும்தான் நாம் எப்பொழுதும் மனத்தில் எண்ணுகிறோம். வானம் பார்த்துப் பயிர் செய்யும் பகுதிகளில் வாழும் மக்கள் மழை நீரை நல்ல முறையில் மண்ணில் ஈர்த்து வைத்துப் பயன் பெற்றிட வேண்டும். கிடைக்கின்ற மழை நீர் ஓடையாக மாறி, மண்ணை அடித்துச் சென்றுவிடாமல் அந்த அந்தப் பகுதிகளிலே மண்ணில் ஈர்த்துப் பாதுகாக்க பல வழி முறைகளைக் கடைப்பிடித்திடலாம். மண் அரிப்புத் தடுப்பு வரப்புகள் கட்டுவதன் மூலமாகவும் கசிவு நீர்க் குட்டைகள் அமைப்பது மூலமாகவும் நல்ல உழவு முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாகவும் மண்ணுக்கு இயற்கை உரங்கள் இடுவதன் மூலமாகவும் நீரை ஈர்த்து வைத்துக் கொள்ளலாம். இவை போன்ற எளிய, நல்ல, பலன் தரும் விதிமுறைகளைப் பல பகுதிகளில் செயல் விளக்கப் பண்ணைகளை அமைத்து மக்களுக்கு விளக்க இந்த ஆண்டு ஏற்பாடு செய்துள்ளோம். இந்தப் பண்ணைகளின் மூலமாக வேளாண் பெருமக்கள் பலன் பெற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்?

அடுத்து உரத்தைப் பற்றி இரு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம் எனக் கருதுகிறேன். உரம் என்றவுடன் செயற்கை உரத்தைத்தான் நாம் எப்பொதும் எண்ணுகிறோம். மண் உயிருள்ள ஒரு பொருள். அதில் வாழும் உயிரினங்களைப் பொறுத்து அதன் வளமும் அமைகின்றது. மண்ணின் வளத்தைப் பாதுகாக்க இயற்கை உரங்களையும் இடுதல் அவசியம். வண்டல் அடிப்பது, பசுந்தழை உரம் இடுவது, மாட்டு உரம் இடுவது, ஆட்டுக் கிடை போடுவது போன்ற பழைய ஆனால் பயன்தரும் பழக்கங்கள் குறைந்து வருகின்றன. இவற்றை மீண்டும் பயன்படுத்துவது மிக மிக அவசியம்.

தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, இவை தவிர நுண்ணுயிர் ஊட்டச் சத்து பயிர்களுக்கு இட்டு நல்ல பலன் அடையலாம். அனுபவத்தின் அடிப்படையில் இச் சத்துக்களின் அளவைத் தற்பொழுது நிர்ணயிக்கிறோம். பல இடங்களிலே ஆய்ந்து பார்த்ததில் நாம் இடுகின்ற தழைச் சத்தை விட அதிகமாக இட்டால் பல பயிர்களிலிருந்து மேலும் நல்ல பலன் கிடைக்கும் என்பதைக் கண்டுள்ளோம். நமது மாநிலத்தில், மணிச்சத்தின் அளவும், சாம்பல் சத்தின் அளவும் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகத் தேவைப்படுவதில்லை. நிலத்தின் மண்வளத்தை மண் பரிசோதனை நிலையங்கள் மூலமாகச் சோதித்து உரமிட்டால் உரச் செலவைக் குறைக்கவும், இடும் உரங்களிலிருந்து பலன் அதிகமாகப் பெறவும் திட்டமாக முடியும்.

இந்த ஆண்டு நீர் நிர்வாகத்திலும், உரம் இடுவதிலும் தனிக் கவனம் செலுத்திடவாரீர்!

மதுரை மாவட்டத்தில் வேளாண்மைத் துறையின் பணிகள்

ஜே. பால்ராஜ் ஜோசப் துணை வேளாண்மை இயக்குநர், மதுரை.

தமிழ்நாட்டின் 15 மாவட்டங்களில் ஒன்று மதுரை மாவட்டம். இம் மதுரை மாவட்டம் வேளாண்மைத் தொழிலில் சிறப்பு வாய்ந்தது. வேளாண்மை அறிவியலும், அதன் விளைவான வியத்தகு வித்துக்களும், அவற்றைப் பயிரிடும் பாங்கான முறைகளும், உழவியல் நுட்பங்களும் நாளும் வளர்ந்து வருகின்றன. இவற்றைத் தெரிந்து, தெளிந்து ஏற்ற வகையில் நம் வேளாண்மைப் பெருமக்கள் பயன்படுத்தியதால் உணவு தானிய உற்பத்தியும், பணப் பயிர்களின் விளைச்சலும் போற்றத்தக்க வகையில் உயர்ந்துள்ளன.

ஒரு காலத்தில் உற்பத்தியின் எல்லைகள் இவையென்று எண்ணப்பட்ட வரையறையெல்லாம் இன்று உடைத்தெறியப் பட்டு, உற்பத்தியின் வரம்புகள் உவகையூட்டும் வகையில் உயர்ந்து வருகின்றன. எனினும், பெருகிவரும் மக்கள் தொகைக்கு உணவளிக்க, உடையளிக்க இன்னபிற தேவைகளைத் தந்திட, வேளாண்மை உற்பத்தி விரைந்து பெருகி, மேலே மேலே உயர்ந்தே ஆக வேண்டும். இதற்கு வழிமுறை கண்டிட, அடிக்கடி பருவ மழை பொய்ப்பதால் ஏற்படும் வறட்சி நிலைகளையும் இயற்கையின் சோதனைகளையும் வென்று உற்பத்தியை நிலைநிறுத்திட, வேளாண்மை அறிவியல் ஆராய்ச்சிகளும் அனுசரணை ஆய்வுகளும், சோதனைகளும், செயல் விளக்கங்களும் விரைந்து நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இதன் பயனாகப் புதிய புதிய தொழில் நுட்பங்களும், வழிமுறைகளும், யுக்திகளும் நமக்கு நாள்தோறும் கிடைத்து வருகின்றன.

ஆராய்ச்சியில் கண்ட அரிய தொழில் நுட்ப முறைகளை, விளைச்சலைக் குவிக்கும் விந்தைமிகு வித்துக்களை விளைத்திடும் முறைகளை, பயிர்களைத் தாக்கும் பலவகைப் பூச்சி நோய்களைப் பக்குவமாகத் தடுத்துக் காத்திடும் பாங்கினை விரைந்து பயன்படுத்திடச் செய்திடும் பணியில் ஈடுபட்டுள்ள வேளாண்மைத்துறையின் சாதனைகளை ஈண்டுக் காண்போம்.

உணவு உற்பத்தி :

மதுரை மாவட்டம் இன்று உணவு உற்பத்தியில் தன்னிறைவு எய்தியுள்ளது என்றால் அதனை யாராலும், மறுக்கவோ மறக்கவோ முடியாது. இம் மாவட்டத்தில் 1970-71ஆம் ஆண்டில் உணவு உற்பத்தி 4.41 இலட்சம் டன்களாகும். அதுவே படிப்படியாக உயர்ந்து 1971-72ல் 5.32 இலட்சம் டன்களை எட்டி, 1975-76-ல் 5.82 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. 1977-78-ல் உணவு உற்பத்தி 6.99 இலட்சம் டன்களை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் உணவு உற்பத்தி 1.41 இலட்சம் டன்கள், அதாவது 31.9 சதம் கூடியுள்ளது. அத்துடன் நெல் சாகுபடியில் 1970-71-ல் 1,845 கிலோவாக இருந்து ஒரு எக்டேர் சராசரி அரிசி மகசூலும் படிப்படியாக உயர்ந்து 1975-76-ல் 2,200 கிலோவை எட்டி, 1977-78-ல், 2,500 கிலோவாக உள்ளது.

விதை விநியோகம் :

விதைக்கின்ற விதை, பழுதற்ற, தூய்மையான, தரமான விதையாக இருத்தல் வேண்டும் என்பதனை நன்குணர்ந்து, உழவர் பெருமக்கள் தரமான விதைகளை விதைக்கும் பொருட்டு, இம்மாவட்டத்திலுள்ள ஆறு அரசு விதைப்பண்ணைகளில் தரமான விதைகள் தயாரித்து உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. விதைகளின் தரத்தினைக் காக்க ஒரு விதை மையமும், விதைச் சான்றிதழ் திட்டமும் செயல்பட்டு வருகின்றன. இதன் பயனாக இவ்வாண்டு (1977-78ஆம் ஆண்டு) விதை மையத்தில் 1,543 ஏக்கரில் நெல் விதைப்பண்ணையும், 363 ஏக்கர் பரப்பில் கலப்பின (வீரிய ஒட்டு) சிறுதானியங்கள் விதைப்பண்ணையும் அமைக்கப்பெற்று 1,743 டன் தரமான விதைகளும், 122 டன் சிறு தானிய விதைகளும் வாங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட இம் மாவட்டத்தில் உள்ள 71 வேளாண்மைக் கிடங்குகள் மூலம் வேளாண் பெருமக்களுக்குச் சீரிய முறையில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இவ்வாறு 791 டன் சான்றிதழ் அளிக்கப்பட்ட நெல் விதைகளும், 166 டன் சான்றிதழ் அளிக்கப்பட்ட சிறு தானிய விதைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

உர விநியோகம் :

பயிரின் துரித வளர்ச்சிக்கும் அமோக விளைச்சலுக்கும் உரம் இன்றியமையாதது. போதிய உரம் உபயோகிப்பதுடன் சீரிய பண்ணை நிர்வாக முறைகளைக் கடைப்பிடிப்பதாலும் 60 சதவீதம் மகசூலை அதிகரிக்க முடியும் என்பது ஆராய்ச்சியின் முடிவு. கடந்த பத்து ஆண்டுகளில் உர உபயோகமும் பன்மடங்கு அதிகமாகியுள்ளது என்பதைப் புள்ளி விவரங்கள் விளக்கும்.

கடந்த 1967-68ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் சுமார் 6,200 டன் தழைச்சத்தும் 1,250 டன் மணிச் சத்தும் மட்டுமே விநியோகமாயின. அச்சமயத்தில் சாம்பல் சத்தின் விநியோகமே இல்லை எனக் கூறலாம். ஆனால், இவ்வுர விநியோகம் நாளுக்கு நாள் அதிகரித்து, கடந்த 1977-78 ஆம் ஆண்டில் ஓர் உச்சக் கட்டத்தை அடைந்தது. 1977-78 ஆம் ஆண்டில் மட்டும் மதுரை மாவட்டத்தில் 26,500 டன் தழைச் சத்தும், 9,400 டன் மணிச் சத்தும், 12,350 டன் சாம்பல் சத்தும் விநியோகமாகியுள்ளன. இவை மதுரை மாவட்டத்தில் மொத்த உரத் தேவையில் 55 சதவீதமேயாகும்.

இவ்வாண்டு சம்பா பட்டத்தில் 17:17:17 காம்பிளக்ஸ் உரம் கிடைப்பதற்குச் சிரமமாக இருந்த காலத்தில் வேளாண் துறையின் விடா முயற்சியினாலும், தமிழக அரசின் ஒத்துழைப்புடனும் 16,234 டன் 17:17:17 காம்பிளக்ஸ் இம் மாவட்டத்திற்கு ஒதுக்க

பயிர்ப்பாதுகாப்புப் பணிகள் :

பயிர்ப் பாதுகாப்புப் பணிகளில் குறிப்பாக இவ்வாண்டில் கணிசமான அளவில் இம்மாவட்டத்தில், விவசாயிகள் நன்மை அடைந்திருக்கின்றனர்.

அதிக மழையின் காரணமாகப் பயிர்களுக்குப் பூச்சி தொல்லைகள் அதிகம் இருக்கும் என்ற எண்ணத்தில், மாநில அரசு பூச்சி மருந்துகளை 25 சதவீதம் மானியத்தில் வழங்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பித்தது. அந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நடப்பு நிதி ஆண்டில் மட்டும் 71 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பூச்சி மருந்துகள் விவசாய 'டெப்போக்கள்' மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் ரூ. 30 இலட்சம் பெறுமானமுள்ள மருந்துகளும், அதற்கு முந்திய ஆண்டில் ரூ. 40 இலட்சம் பெறுமானமுள்ள மருந்துகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. எனவே, இதுவரை இந்த அளவு மருந்துகள் விநியோகம் செய்யப்படவில்லை. இதனில் கிட்டத்தட்ட ரூ. 35 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள், புயல் மழையினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, 8.69 இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உணவுப் பயிர்கள், பணப் பயிர்கள் உற்பத்தித் திறன் சுமார் 20,000 டன் குறையாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக மருந்தடிக்கும் பணியில், இதற்கு முன்பு செய்திராத வகையில் இந்த மாவட்டத்தில் 11,542 ஏக்கர் நெல் பயிரிலும், 10,672 ஏக்கர் நிலக்கடலைப் பயிரிலும், 5 இலட்சம் ரூபாய் செலவில் பணியாளர்களின் நேரடிப் பார்வையில் மருந்து தெளிக்கும் பணி நடத்தப்பட்டது. இதற்கு அரசு மானியத்தில் ஏக்கருக்கு ரூ. 3 வீதம் 66,643 மானியமாக விவசாயிகளுக்குக் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

எதிர்பாராத வகையில் கடும் மழையின் காரணமாக, சோழ வந்தான், பழனி பகுதிகளில் புகையான் என்ற பூச்சி கடுமையாகத் தாக்க ஆரம்பித்தது. வேளாண்மைத் துறையின் உரிய கால நடவடிக்கையின் காரணமாக 5,000 ஏக்கரில் அரசு மானியத்துடன் 1.40 இலட்ச ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் விற்கப்பட்டு, புகையான் மேலும் வராது தடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிட்டத்தட்ட 1000 டன் உணவு உற்பத்தி குறையாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் ''புரோடினியா'' என்ற புழு இம் மாவட்டத்தில் பெரிய குளம் பகுதியில் புரட்டாசிப் பட்ட பருவப் பருத்தியில் 3,000 ஏக்கரில் தாக்கி இருந்தது. வேளாண்மைத்துறை போர்க்கால நடவடிக்கை போன்று பயிர்ப் பாதுகாப்பு முறைகள் எடுத்தமையின் காரணமாகவும், மேற்படி புழு தற்பொழுது மாசிப்பட்டத்தில் அதிகமாக இல்லை. எனினும் போடி, வடுகப்பட்டி வட்டாரங்களில் சுமார் 500 ஏக்கர் அளவில் மேற்படி புழு தென்பட்டு மேற்படி இடங்கள் 'புரோடினியா' புழுவால் தாக்கப்பட்ட இடங்கள் என அறிவிக்கப்பட்டு, பூச்சி மருந்துகள் 25 சதவீதம் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

ஆகஸ்ட் 1 தமிழரசு இதழில்

தமிழரசு கூட்டாசிரியர்

திரு. பி. சி. கணேசன்

எழுதும்

"வளர்ச்சிப் பாதையில் தமிழகம்"

தொடர் கட்டுரை ஆரம்பமாகிறது.

மேலும், பழனி வட்டாரத்தில், புரோடினியாத் தாக்குதல் ஏற்பட்டு, பூச்சி மருந்துகள் 25 சதவீதம் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு, 673 ஏக்கரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ. 4,360 மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொடர்பு:

வேளாண்மைத் துறையில் நமது நாடு விழித்தெழுந்த காலத்தில், கிராமப் பெருமக்களின் வளர்ந்து வந்த தேவையை முன்னிட்டு, விவசாயம் சம்பந்தப்பட்ட புதிய தகவல்களை மிகக் குறுகிய காலத்திலும், திறமையாகவும் அளிக்க வேண்டிய அவசியம் எழுந்தது. ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் புதிய கட்டுக்கோப்பு முறைகளில் பயிர் சாகுபடி செய்ய வேண்டிய நிலையில் வேளாண் பெருமக்களின் தேவைக்காக, அவர்களின் அறிவுப் பசியைத் தணிக்கும் வண்ணம் வேளாண்மைத் தகவல் தொடர்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு இவ்வேளாண்மைத் தகவல் தொடர்பு நிலையத்தின் மூலம் பல அரிய திட்டங்கள் தீட்டப்பெற்று, செவ்வனே நடத்தப்பட்டன. 176 செய்தி வெளியீடுகளும் 23 சுவரொட்டிகளும், 7 புத்தகங்களும் வேளாண் பெருமக்களுக்காகப் பருவத்தில் வெளியிடப்பட்டன. இது தவிர ஆராய்ச்சியில் கண்ட அரிய கருத்துக்களை, பயிர்களைத் தாக்கிடும் பூச்சி நோய்களைப் பக்குவமாகத் தடுத்துக் காத்திடும் பாங்கினை விவசாயிகளுக்கு உடனுக்குடன் 194 பத்திரிகைச் செய்திகள் மூலமும், 641 வானொலிச் செய்திகள் மூலமும், 609 நிறற்படக் காட்சிகள் மூலமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

வேளாண் பெருமக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு இந்நிலையம் செயல்படுவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். சேவையைக் குறித்துப் பாராட்டுகளும், பரிந்துரைகளும் பெருமளவில் வருகின்றன. விவசாயிகளின் ஆர்வத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில், தீவிரமாகச் செயல்பட்டு பசுமைப் புரட்சி மூலம் கிராமப்புற மறுமலர்ச்சிக்கு இது உறுதுணையாக இருக்கும் என்பது திண்ணம்.

மண் நீர் மேலாண்மைத் திட்டம்:

உயர் மகசூல் பெறுவதற்கு ஒவ்வொரு பயிருக்கும் எவ்வளவு உரம் தேவை என அறிவியல் வேளாண்மையில் கணக்கிடப்பட்டு அதன்படி அவ்வுரங்களைத் தக்க அளவில் அடி உரமென்றும், மேல் உரமென்றும் தக்க தருணத்தில் இடுவது போலவே உயர் மகசூலுக்கு ஒவ்வொரு பயிருக்கும் அதன் வளர்ச்சிக் காலத்தில் எவ்வளவு நீர் தேவைப்படும், எப்பொழுது தேவைப்படும் என ஆராய்ந்து கண்டுள்ளனர்.

உதாரணமாக, நெற்பயிருக்கு வேளாண் பெருமக்கள் பொதுவாக நினைப்பதுபோல் அதிகமான அளவு நீர் தேவையில்லை என்பதை வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். இதற்குச் சான்றாகக் கடந்த சில ஆண்டுகளாகப் பெரியாறு, வைகை நீர்த்தேக்கங்களில் நீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டும், முறை வைத்து நீர் விட்டும் நாம் துணிந்து நெல் சாகுபடி செய்து மகசூல் அடைந்து வருகின்றோம்.

எனவே, இவை போன்று தொடர்ந்து வரும் பாசன நீர்த்தட்டுப்பாட்டினைச் சமாளித்து உயர் மகசூல் பெறுவதற்குப் பாசன நீர்ப் பராமரிப்பு முறைகள் நன்கு உதவிடும் என்பதில் ஐயமில்லை. இதனை விளக்குவதற்கு ஒரு திட்டம் மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தில் கடந்த ஆண்டிலிருந்து செவ்வனே செயல்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 595 ஏக்கரில் நிலச் சீர்திருத்தம் மேற்கொள்ள எடுத்துக் கொள்ளப்பட்டு, 535 ஏக்கரில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1,22,467 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதில் 3/4 (.75 சதவீதம்) பங்கு மானியமாகவும், மீதியை சுலபத் தவணைகளிலும் திருப்பிச்செலுத்த வேண்டும், இதன் மூலம் பல விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.

மதுரை மாவட்டத்தின் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்

வெள்ள நிவாரணப் பணிகள்:

நவம்பர் மாதத்தில் இயற்கையின் சீற்றத்தால் மதுரை மாவட்டத்தில் ஏற்பட்ட கொடுமைகள் பல. விளைநிலங்கள் மண் அரிக்கப்பட்டும், மண் மேடிட்டும் பாழாயின. பயிர்கள், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்து, அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் தமிழக அரசு பல சலுகைகளையும், நிவாரணப்பணிகளையும் அறிவித்தது.

வேடசந்தூரில் வெள்ள நிவாரணப் பணிகள்:

குடகனுறு அணை உடைந்த காரணத்தினுல் சுமார் 6,926 ஏக்கர் விளைநிலம் மண்ணுல் மூடப்பட்டது. இந்த நிலங்களில் 46 புல்டோசர், இரவு பகலாக 27,641 மணி நேரம் வேலை செய்து 3,050 ஏக்கர் நிலத்தைச் சீராக்கி, பயிர் செய்வதற்கு ஏற்ற நிலமாக அமைத்துள்ளன. இதுவரை இதன் மூலம் அரசுக்கு ரூ 28,04,000 செலவாகியுள்ளது. இதன் மூலம் 1,430 சிறு விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். இவர்களுடைய நிலத்தை இலவசமாகவே அரசு 13,13,600 ரூபாய் செலவில், சீர்திருத்தம் செய்துள்ளது. மற்றும் 1,620 பெரிய விவசாயிகளுடைய நிலத்தை 14,90,400 ரூபாய் செலவில் விளைநிலமாக மாற்றியுள்ளது. இதற்கு ஏற்பட்டுள்ள செலவில் 50 சதவீதத்தை மானியமாக அரசு ஏற்றுக் கொள்கிறது. மீதிப் பணத்தைக் கடனுகச் சுலபத் தவணைகளில் சிறு விவசாயிகள் திருப்பிச் செலுத்த வேண்டும்.

மதுரைக் கோட்டத்தில் வெள்ள நிவாரணப் பணிகள்:

மதுரைக் கோட்டத்திலுள்ள மாங்குளம், பொன்மேனி கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கொடிக்கால் விவசாயிகள் 147 பேருக்கு மானியமாக ரூ. 18,115 வழங்கப்பட்டது. ஒரு ஏக்கருக்கு ரூபாய் 500 என்ற விகிதத்தில் 36.23 ஏக்கருக்கு மானியம் வழங்கப்பட்டது.

மண், நீர் வளப்பாதுகாப்பு:

பாதுகாப்பு அளிக்கப்படாத நிலம் பயனற்றதாகிறது. பெய்யும் பெருமழை மண் அரிப்பை ஏற்படுத்துகிறது. வீசும் காற்று வளமான மண் பரப்பை மணலால் மூடிவிடுகிறது. பயனளித்த நிலங்கள் பாழ்பட்டுப் போகின்றன. ஓடைகள் உண்டாகின்றன. உழவு, தடைபடுகிறது; விளைச்சல் குறைகிறது; ஏரி-குளங்கள் மண் படிந்து தகர்ந்து போகின்றன.

இத்தீமைகளை நீக்குவதற்கு, மண் சரிவிற்கேற்ப, நிலத்திற்குப் பாதுகாப்பும், பராமரிப்பும் தேவை. குறைந்த செலவில் படிமட்டம், கற்சுவர், சமவெளிப் பிரதேசத்தில் சம உயர வரப்பு, நிலத்தைச் சமன் செய்தல், செய்யுப்பட்டுப் பயிரிடுதல் அவசியம். காற்றின் மூலம் சேதத்தைத் தவிர்க்க காற்று வீசும் திசையில் குறுக்கில் பலவகை

மரங்கள் கொண்ட காற்றுத் தடுப்பு முறை அமைக்க வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 19,22,000 ரூபாய் இப்பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. 3,465 எக்டேரில் சம உயர வரப்புகள் 25 சதவீத மானியத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 4083 எக்டரில் இலவசமாகக் காற்றுத் தடுப்புச் சாலைகளும் 48 கசிவுநீர்க் குட்டைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம்:

வேளாண் சமுதாயத்தின்கீழ் நிலையிலுள்ள சிறு விவசாயிகளின் பொருளாதார வசதியை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். சிறு விவசாயிகள் கடன் பளுவை ஓரளவுக்குக் குறைத்து, கடனை அவர்கள் சுலபமாகத் திருப்பச் செலுத்த மானியம் அளித்து அதன் மூலம், விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது இத் திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

அளிக்கப்படும் மானியம் பயன் பெறுவோர் கடன் தொகையில் குறைக்கப்படுமே தவிர நேரடியாக மானியம் வழங்கப்படமாட்டாது. மதுரை மாவட்டத்தில் 21 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்களாவன:

திட்டம்	செலவழித்த தொகை (இலட்சத்தில்)	சிறு உழவர்கள்	குறு உழவர்கள்	விவசாயத் தொழிலாளர்கள்	மொத்தம்
வேளாண்மை					
1. கூடுதல் பயிர்க்கடன் ...	4.01	9,915	6,748	...	16,663
2. மானிய விலையில் உள்ளீடுகள் ...	0.87	—	2,049	—	2,049
3. திராட்சைச் சாகுபடி ...	0.19	34	—	—	34
4. செயல்விளக்கத்திடல் ...	1.04	495	330	—	825
5. விவசாயக் கருவிகள் ...	0.24	219	1,132	284	1,635
6. விசைத் தெளிப்பான் ...	2.13	306	348	—	654
7. கைத் தெளிப்பான் ...	0.41	79	250	—	329
8. வண்டி மாடுகள் ...	1.87	402	47	—	449
9. மாட்டு வண்டிகள் ...	0.44	95	15	—	110
10. நிலச்சமன் செய்தல் ...	1.12	240	219	—	459
11. டிராக்டர் உழவு செய்தல் ...	0.27	484	206	—	690
சிறுபாசனத் திட்டங்கள்					
1. புதிய கிணறுகள் ...	0.31	59	2	—	61
2. கிணறு தூர் எடுப்பதற்கு ...	0.32	68	—	—	68
3. பம்பு செட்டுகள் ...	0.44	52	8	—	60
கால்நடைகள்					
1. பால் மாடுகள் ...	10.22	201	1,081	722	2,004
2. மாட்டுத் தொழுவம் ...	0.20	16	36	—	52
3. பால் மாடுகள் பாதுகாப்பு ...	0.16	106	637	802	1,545
4. ஆடு வளர்ப்பு ...	1.66	111	133	—	244
சேமிப்புக் கிடங்குகள்					
தானிய சேமிப்புக் கிடங்குகள் ...	0.12	47	69	—	116
மொத்தம் ...	26.02	12,929	13,310	1,808	28,047

காமராசர் தங்கைக்கு மாதம் ரூ. 500 உதவிப் பணம்

"காமராஜரின் தங்கை திருமதி நாகம்மாள் அவர்களுக்கு மாதம் 500 ரூபாய் வீதம் உதவிப் பணம் வழங்கப்படும்" என்று மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி ஆர். அவர்கள் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

"சென்னையில் காமராஜர் வசித்த வீட்டை நினைவுச் சின்னம் ஆக்குவதற்கு ரூ. 3 இலட்சத்துக்கு அரசு வாங்கியிருக்கிறது.

"காமராஜர் உயர்ந்த இலட்சியத்துக்காக வாழ்ந்த பெருந் தலைவர். அப்படிப்பட்டவர் சொத்துச் சேர்க்கவில்லை, சுகத்தை விரும்பவில்லை.

"அவருடைய தங்கை, பணத்துக்காகக் கவலைப்படக்கூடாது என்பதற்காக, அவருக்கு மாதம் ரூ. 500 உதவிப் பணம் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

"இந்த உதவித் தொகை ஜூலை 1-ந் தேதி முதல், அவரது ஆயுட்காலம் வரை வழங்கப்படும்!"

(மதுரைப் பொதுக்கூட்டத்தில் 30-6-'78)

கடன் வழங்கப்பெற்றது (இலட்ச ரூபாயில்)

	தொகை	பயனடைந்த விவசாயிகள்	அளிக்கப்பட்ட மானியத் தொகை (இலட்சத்தில்)
குறைந்த காலக் கடன் ...	196.25	16663	4.01
நடுத்தரக் காலக் கடன்.	72.78	11161	27.20
நீண்ட காலக் கடன் ...	8.42	223	1.07
	277.45	28047	32.28

மொத்தத்தில் 26.02 இலட்சம் ரூபாய் மானியமாக விவசாயக் கருவிகள், வண்டிமாடுகள், புதிய கிணறுகள் தோண்டுதல், கறவை மாடுகள் வாங்குதல் முதலியனவற்றிற்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 12,929 சிறு உழவர்கள், 13,310 குறு உழவர்கள், 1,808 விவசாயத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

இது தவிர 32.28 இலட்சம் ரூபாய் பயிர்க் கடன் மானியமாக 28,047 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று எண்ணிலடங்கா பலப்பல புதுப் புது உன்னதத் திட்டங்களை உழவர் நலன்கருதித் தீட்டிச் செயலாற்றி வருகிறது தமிழக அரசு. தக்க திட்டங்களை நன்முறையில் பயன்படுத்தி இன்றும் உணவு உற்பத்தியில் தன்னிறைவெய்தி பிற மாநிலங்களுக்கும் உணவு வழங்கும் உன்னத நிலையை எய்தச் செய்தவர்கள் தமிழக உழவர் பெருமக்கள்.

பார்லிமெண்டரி செயலாளர்கள் பதவி ஏற்பு

தமிழ்நாட்டில் புதிதாக நியமிக்கப்பட்ட எட்டு பார்லிமெண்டரி செயலாளர்களும் கடந்த 26-6-'78 அன்று பதவி ஏற்றார்கள். அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்கள்.



நிதி அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளராக திரு. நாஞ்சில் எம். வின்சென்ட்

கூட்டுறவு அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளராக திரு. ஆனூர் ஜெகதீசன்

வருவாய்த்துறை அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளராக திரு. பி. முசிறிப்புத்தன்

செய்தி-அறநிலையத்துறை அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளராக திரு. ஐசரிவேலன்

சட்ட அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளராக திரு. எம். ஏ. ஜெயவேலு

கல்வி அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளராக திரு. ஏ வெள்ளைச்சாமி

போக்குவரத்துத்துறை அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளராக திரு ப. கோ. கிட்டு

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளராக திரு. ஆர். அருணாசலம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




தமிழரசு
1-8-1978
50 காசு

தீண்டாமையை ஒழிப்போம்!

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித்
தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப்
பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை
உலகத்தில் எங்குமே இருந்ததில்லை
என்று சொல்லத் தோன்றுகிறது."

— அண்ணல் காந்தியடிகள்

இக்கொடுமையை
ஒழிக்கப் பாடுபடுவதே
அண்ணல் காந்தியடிகளுக்கு
நாம் செய்யும்
நன்றிக் கடனாகும்!

வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

நற்பணி ஆற்றுவதே நமது இலட்சியம்

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
7 ஆக 1978
MADRAS-8.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை பதவி ஏற்று ஓராண்டு முடிந்திருக்கிறது. இந்த ஓராண்டில் அரசு நிறைவேற்றிய பணிகள் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துக்களை அவர் அனுமதியுடன் உங்கள் முன் வைக்கிறேன்.

பதவி ஏற்ற 77ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முப்பதாம் நாள் இலட்சோப இலட்சம் மக்கள் முன்னிலையில், அமரர் பேரறிஞர் அண்ணாவின் திருஉருவச் சிலையின் முன்னே, நின்று, தமிழக மக்களுக்கு, அமைச்சரவையின் சார்பில், மாண்புமிகு முதல்வர் ஓர் உறுதி அளித்தார்கள்.

''இலஞ்ச லாவண்யம் இல்லாத—ஊழலற்ற—நீதித் துறையில் நிர்வாகம் தலையிடாத—அரசை நடத்துகிற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபடுவோம்.

எங்களின் வாழ்வு, வசதிகள் அத்தனையும் இழக்க வேண்டிய நிலை வந்தாலும் அதற்காக எதிர்ப்படுகிற அத்தனை தடைகளையும் தகர்த்து எங்கள் கடமைகளை நிறைவேற்றுவோம். இதனை அமரர் அண்ணா அவர்களின் மீது ஆணையிட்டு அமைச்சரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்''.

இந்த உறுதி மொழியை மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது என்பதை உறுதியோடும், அதேநேரத்தில் பெருமையோடும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

முதல்வரின் கருத்துக்கள்

ஒரு புதிய அரசு பொறுப்பு ஏற்ற ஓராண்டுக் காலத்தில் ஆற்றிய பணிகளை 'சாதனை' என்ற பெயரால் அழைக்க நமது முதல்வர் விரும்பவில்லை. ஆனால்—ஆற்ற வேண்டிய பணிகளுக்கு அடித்தளம் அமைத்திருக்கிறோம். . . நிகழ்த்த வேண்டிய சாதனைகளுக்கு வடிவம் கொடுத்திருக்கிறோம். . . நடைபெற்று வந்த நல்ல காரியங்களைத் தொடர்ந்திருக்கிறோம். . . தடைப்பட்ட சிறந்த திட்டங்களைப் புதுப்பித்து இருக்கிறோம்.

எதிரிப் படைகளால் வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட பாலங்களையும், பாதைகளையும் மீண்டும் புதிதாக அமைத்துக் கொண்டே முன்னேறும் போர்க்கால ராணுவத்தைப் போல் எங்களுடைய பணி இந்த ஓராண்டில் அமைந்தது; இந்த உண்மையை நியாய உணர்வு படைத்த யாரும் மறுக்க மாட்டார்கள்.

ஏனெனில், கடந்த காலத்திலே ஆட்சி செய்தவர்கள்—இடைக் காலத்திலே நிர்வாகப் பொறுப்பை ஏற்றவர்கள் —இவர்களெல்லாம் நிறைவேற்றத் தவறிய அல்லது நிறைவேற்ற மறுத்த, பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளையும் ஏற்றுத் தீர வேண்டிய பொறுப்பு எங்கள் மீது சுமத்தப் பட்டது.

போக்குவரத்துத் தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், பொதுத் தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற சமூகத்தின் எல்லாத் தரப்பிலும், நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் தேங்கிக் கிடந்த பிரச்சினைகள் போராட்டங்களாக வெடித்தன. இதில் வேடிக்கை என்னவென்றால், இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலே இருந்தவர்கள் அன்றைக்கு நிறைவேற்றாததோடு இன்று இந்தக் கிளர்ச்சிகளுக்குத் தூபமிடும் செயலில் தீவிரமாக ஈடுபடுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச் சொல்கிறேன். . .

விவசாயிகள் மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று 72ஆம் ஆண்டிலே கிளர்ச்சி செய்தார்கள். அந்தக் கிளர்ச்சியிலே கூட, இன்று தலைகாட்டிய வன்முறைச் சம்பவங்கள் நிகழவில்லை. அந்தக் கிளர்ச்சியை ஒடுக்க அன்றைக்கு இருந்த அரசு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்து, 20க்கும் மேற்பட்டவர்களை பலி வாங்கியது. இந்தக் கொடுமை போதாது என்று, அவசர நிலை அமலாக்கப்பட்டவுடன், அதைப் பயன்படுத்திக் கொண்டு, 1975 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், தி.மு.கழக அரசு 12 காசாக இருந்த மின் கட்டணத்தை 16 காசாக உயர்த்தியது. ஆனால் இந்த அரசு 16 காசாக இருந்த மின் கட்டணத்தை, பெரிய விவசாயிகளுக்கு 14 காசாகவும், சிறிய விவசாயிகளுக்கு 12 காசாகவும் குறைத்துள்ளது. இது போக, கடன்களுக்கு வட்டிக் குறைப்பு, சலுகை விலையில் உரம்—பூச்சி மருந்து, நிலவரியில் தள்ளுபடி, கடன் வசூல் ஒத்திவைப்பு என்று பல முறைகளால் ஏறத்தாழ ரூ. 10 கோடிக்கு மேல் சலுகைகள் வழங்கியுள்ளது.

இதைப் போலவே அன்றைய ஆட்சியினரால் அரசு அலுவலர் கோரிக்கைகள் ஏற்கப்படாமல் மிரட்டப்பட்டு வந்தனர். அவர்களின் கோரிக்கைகளையும் இந்த ஆட்சிதான் நிறைவேற்றியது. போக்குவரத்துத் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டங்கள் 1973, 1975 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் கடுமையான அடக்கு முறைகளால் முறியடிக்கப்பட்டன. தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டனர். அப்படிப் பழி வாங்கப்பட்ட தொழிலாளர்கள் 98 பேர்களுக்கு இந்த அரசு நிவாரணம் அளித்தது. இப்படி, கடந்த காலத்தில் பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளும், ஏற்கப்படாமல் அடக்கி ஒடுக்கி வைத்ததன் காரணமாகப் பிரச்சினைகள் வெடித்துக் கிளம்பின.

செயற்கையாகத் தோன்றிய இந்தத் தொல்லைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் போதே, இயற்கையின் சீற்றம் என்றும் இல்லாத அளவு தமிழகத்தைத் தாக்கியது.

கோடிக் கணக்கில் சொத்துக்களுக்குச் சேதம் — பல்லாயிரக் கணக்கான வீடுகள் நாசமடைந்தன— நூற்றுக் கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்டன. இவ்வளவு இழப்புக்களும் இந்த அரசு பதவி ஏற்று நான்கு மாதங்களே ஆன நிலையில் நிகழ்ந்து விட்டன. இந்தச் சோதனையையும் இந்த அரசு உறுதியுடன் நின்று சமாளித்தது.

முகப்பில்

இப்பொழுது குற்றாலத்தில் சாரல் திருவிழா. அருவிகள் நிரம்பி வழிகின்றன.

"இந் நானிலத்தில் உள்ள நன்னீர் அருவிகளுள் தலைசிறந்தது குற்றால அருவி" எனத் தமிழின் தொன்மையையும் செம்மையையும் உலகறியக் காட்டிய கால்டுவெல் பெருமகனார் பாராட்டியுள்ள குற்றால அருவிகளுள் சிறப்புமிக்க ஐந்தருவியின் எழில்மிகு தோற்றத்தை மேலட்டையில் காணலாம்.

அழிந்துவிட்ட குடிசைகள் ஆக்கப்பட்டன — குடிசை ஒன்றுக்கு இருநூறு ரூபாய் தரப்பட்டது — இது வரை முன்னால் இருந்த அரசு கொடுத்த தொகை 80 ரூபாய்தான். மண் மூடிவிட்ட வயல்வெளிகள் சீராக்கப்பட்டன. போர்க் கால வேகத்தில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வெள்ளத்தாலும், புயலாலும் ஏற்பட்ட அழிவிற்குப் பிறகும் அரிசி உற்பத்தி சென்ற ஆண்டில் 63 இலட்சம் டன்னாக உயர்ந்தது. அதற்கு முந்திய ஆண்டு உற்பத்தி 53 இலட்சம் டன்தான். அரிசி உற்பத்தி அதிகமானதால் நடமாட்டத்தடை அகற்றப்பட்டது. மாவட்டங்களுக்கிடையே எல்லைச் சாவடிகள் எடுக்கப்பட்டன. மக்கள் சுயமாக தட்டுப்பாடின்றி அரிசி வாங்க முடிகிறது. கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டதால், விலை குறைந்துவிட்டது. 1975-ஆம் ஆண்டில் நடுத்தரப் புழுங்கல் அரிசியின் விலை ஒரு கிலோ மூன்று ரூபாயிலிருந்து நான்கு வரை இருந்தது. இந்த ஆண்டு இவ்வளவு புயல், வெள்ளச் சேதத்திற்குப் பின் ரூ. 1.50முதல் 1.80 வரை தான் விற்பனை ஆகிறது. கடந்த 5 ஆண்டுகளில் இந்த அளவு குறைந்த விலையில் அரிசி விற்றதில்லை.

ஆனால் அதே நேரத்தில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் குவிண்டாலுக்கு 90—95 ரூபாய் என்ற விலைகளில் அரசே நெல்லைக் கொள்முதல் செய்தது. இதைப் போலவே, எண்ணெய், மிளகாய் தனியா—போன்ற உணவுப் பொருள்களின் விலைகள் பெரிய அளவில் குறைக்கப்பட்டுள்ளன.

பதுக்கல்—நடுத் தரகர் — கொள்ளை இலாபம்—வர்த்தகச் சூதாட்டம் ஆகிய சமூக விரோதச் செயல்கள் ஒடுக்கப்பட்டு, நியாயமான வர்த்தகர்களின் சுதந்திரமும், வாங்குவோரின் நலனும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இவைகளையெல்லாம் மு[illegible] ஆட்சியாளர்கள் சாதனை எ[illegible] பறை சாற்றுவார்கள். உதாரணமாக, குடி தண்ணீர் திட்டத்திற்காக எங்கள் ஆட்சிக் காலத்தில் தான் 53 கோடி ரூபாய் செலவு செய்தோம் என்று கணக்கைக் காட்டி எதிர்க் கட்சி வக்கனை விளம்பரம் வெளியிடுகிறது. இவர்கள் கணக்குச் சொன்னதற்குப் பிறகுதான், அடேயப்பா —53 கோடி செலவு செய்திருக்கிறார்களா என்று கேட்கத் தோன்றுகிறது. இந்த 53 கோடிக்குள் தானே, வீராணம் திட்டத்தின் பேரால் 23 கோடி, பாலாற்றிலிருந்து பரங்கிமலைக்கும், பல்லாவரத்திற்கும், ஆலந்தூருக்கும் தண்ணீர் கொண்டு வருவதாகச் செலவு செய்த 2 கோடியும் அடங்கிக் கிடக்கிறது. இப்படி இன்னும் பல கோடிகள் திட்டங்களின் பெயரால் செலவழிக்கப் பட்ட கோடிகள் என்று எண்ணத் தோன்றுகிறது. என்ன பலன்? வக்கனை விளம்பரத்திலே தெரிவித்திருப்பது போல 'பூஜ்யம்' தான். கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்தோமே, தவித்த வாய்க்குத் தண்ணீர் எங்கே? என்று கேட்கும் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் இந்த அரசைக் கேலி செய்து வக்கனை விளம்பரம் வெளியிடுகிறார்களே இதுதான் வேதனைக்குரிய வேடிக்கை!

ஆனால் இந்த அரசு 1-7-'77 முதல், திட்டமிட்டு இந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குள் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் 4,0[illegible] தண்ணீர் கிடைக்காத கிராமங்களுக்குக் குடிநீர் அளிக்கத் திட்டமிட்டு நிறைவேற்றி வருகிறது. நகர்ப்புற குடிநீர்த் திட்டத்திற்காக சுமார் 303 இலட்சத்தில் திட்டமிடப்பட்டு இதுவரை 13 275 இலட்சம் செலவிட்டு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை தவிர கேரளத்தில் மேற்கே பாயும் நதி நீரைத் தமிழகத்திற்குத் திருப்பி விடவும், ஆந்திரத்திலிருந்து சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வரவும், அந்த அரசுகளோடு நட்புறவு முறையில் பேசி ஒப்புதல் பெறப்பட்டு ஆய்வுப் பணிகளும் தொடங்கப் பட்டுள்ளன.

இதை எல்லாம் சாதனையென்று நாங்கள் கூறமாட்டோம். ஏன் எனில், தமிழகத்தின் தலைநகரம் சென்னையில்—சைதைப் பகுதியில். ஒரு சிலையை நிறுத்தி அதன் கைகளிலே ஒரு குடத்தைக் கொடுத்து அதன் வழியாகத்தான் [illegible] வீராணத்திலிருந்து காவிரி [illegible] சென்னைக்கு வரப் போகிறது [illegible] என்று நம்மையெல்லாம் [illegible] வைத்து ஆண்டுகள் 10 ஆகியும் ரூ. 23 கோடி செலவாகியும் வீராணத்தை விட்டே காவிரி தாய் புறப்படாமல் இருக்[illegible]

விந்தையைச் செய்துள்ள அற்புதம் படைத்தவர்களுக்கே அந்த உரிமையை அளித்து விடுகிறோம். எப்படியாவது, நல்ல தண்ணீருக்காக காடு மேடெல்லாம் அலையும் கிராமப்புறத்துத் தாய்மார்களின் தவிப்பைத் தீர்த்து, கண்ணீரைத் துடைத்த பிறகுதான், 'சாதனை' என்று நாங்கள் கூறுவோம்.

சாதனை மன்னர்களின் ஆட்சியிலே, 1972 முதல் திரும்பத் திரும்ப மின் வெட்டு அமல் படுத்தப்பட்டு வந்ததைத் தமிழகம் மறக்க முடியாது. அது மட்டுமின்றி, மின் வெட்டை அறிவிப்பது; அதையொட்டி மின் சக்தி வழங்குவதில் பேரங்கள் — வியாபாரங்கள். இப்படி ஊழலுக்கு உறைவிடமாக விளங்கி வந்த மின் வெட்டை இந்த அரசு பதவியேற்ற முதல் நாளே நீக்கியது. இதுவரை மின் வெட்டு இல்லை; கடந்த 12 மாதங்களில் 938 கோடி யூனிட் மின் சக்தி உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வித் துறைக்காக இந்த ஆண்டு 196 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1975—76ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 123 கோடிதான். கடந்த ஆண்டில் 1,100 ஆசிரியர்கள் பதவிகள் அனுமதிக்கப்பட்டன. இந்த ஆண்டு 1,400 ஆசிரியர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் பல்வேறு வகையான பள்ளிகள் 109—புதிதாகத் துவக்கப்பட்டன. கல்லூரிக் கல்விக்காக 1975—76ல் 10 கோடி ரூபாய் — இந்த ஆண்டில் 21 கோடி ரூபாய்; 2 மடங்காக இந்த அரசு உயர்த்தியுள்ளது.

74ஆம் ஆண்டிலேயே, பல்கலைக் கழக மான்யக் குழுவின் பரிந்துரையின்படி கல்லூரி ஆசிரியர்கள் சம்பள விகிதத்தை ஏற்றுக் கொள்ளாமல், அன்றைய அரசு, கல்லூரி ஆசிரியர்களின் பால் மிகுந்த கருணை காட்டி, அவர்களைச் சிறையில் அடைத்தது. மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கப்பட்டது. ஆனாலும் சம்பள விகிதம் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. ஆனால் இந்த அரசு தான் 1—1—74ல் இருந்தே கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும் வகையில் உத்தரவிட்டது.

பி.யு.சி. வகுப்புக்கு மேல் படிக்கும் அரிசன, பழங்குடி மாணவர்கட்கு, பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம் 2,500 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் தான் கல்லூரிப் படிப்புக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசு வருமான வரம்பே இல்லாமல் எல்லா அரிசன—பழங்குடி மாணவர்கட்கும் கல்லூரிப் படிப்பை இலவசமாக்கியுள்ளது.

மேலும் பள்ளி இறுதித் தேர்வில் தோல்வியுற்ற பாடங்களை மட்டும் மீண்டும் எழுதி, தேர்வு பெற்றால் கல்லூரியில் சேரலாம் என்று ஆணை பிறப்பித்ததால் இன்று தாழ்த்தப்பட்ட — பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சுலபமாகக் கல்லூரிகளில் சேர வாய்க்குக் கிடைத்தது.

எந்த ஆண்டையும் விடச் சென்ற ஆண்டுதான், மருத்துவக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதிகமாக இடம் பெற்றனர். ஏழை அரிசனங்களில் எவரேனும் இறந்துவிட்டால், அவரது ஈமக் கடன்களை நிறைவேற்ற அரசு உடனே, 50 ரூபாய் நிதியுதவி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது.

தாழ்த்தப்பட்டோர் வீடு கட்டும் திட்டத்தில் ஊழலைப் போக்கி, ஒழுகாத வீடுகள் அமைக்க, அதிகமாக வீடு ஒன்றிற்கு இரண்டாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு உள்ளது. இப்படி இன்னும் எத்தனையோ சலுகைகள். . . .

போக்குவரத்துத் துறையில், எக்ஸ்பிரஸ் பஸ்களின் கட்டணத்தை 6 காசுகளிலிருந்து 5 காசாகக் குறைத்திருக்கிறோம். கிராமப் புறங்களில் 221 புதிய வழித் தடங்களில் பேருந்துகள் விடப்பட்டு, 446 கிராமங்களில் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 5 கோடிக்கு மேல் செலவு ஏற்படும் அளவில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டாலும் அதற்காக ஆத்திரம் அடையாமல், தொழிலாளர்கட்கு சலுகைகள் அளிக்கப் பட்டுள்ளன.

மூடிக் கிடந்த 8 ஆலைகளில் இந்த அரசின் முயற்சியால், 5 ஆலைகள் திறக்கப்பட்டுள்ளன. 1,740 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். 1974 முதல் மூடிக் கிடந்த இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் இந்த அரசின் முயற்சியால் திறக்கப்பட்டது. 436 பேர் மீண்டும் வேலை பெற்றனர். கடந்த ஓராண்டில் சிறு தொழில்கள் மூலம் 35,388 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது.

மேலும், கிராமத் தொழிலுக்கென்று, தனி அமைச்சரும், நெசவுத் துறைக்கெனத் தனி அமைச்சரும் நியமிக்கப்பட்டு, அந்தந்தத் துறைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபடத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மீனவர்கள், மரம் ஏறும் தொழிலாளர்கள், கிணறு வெட்டுவோர் ஆகியோர் தொழிலில் ஈடுபடும்போது மரணம் அடைந்தால், ஆளுக்கு ரூ. 5,000 என்று உதவுவது போன்ற திட்டங்களிலிருந்து, வறுமையில் வாடும் தமிழ் அறிஞர்கட்கு மாதந்தோறும் 100 ரூபாய் — ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது 10,000 ரூபாய் என்று இப்படிப் பல்வேறு உதவித் திட்டங்கள் வரை எடுத்துச் சொன்னால், பெருகும்.

அதனால்தான் குறுகிய நேரத்திற்குள் சிலவற்றை மட்டுமே சொல்லியிருக்கிறோம். தமிழக முதல்வரைப் பொறுத்த வரை, அமைதியோடு, ஆனால் உறுதியோடு, எதிர்ப்புகளை புறந்தள்ளி, நல்லோர் ஆதரவுடன்— ஏழை எளிய மக்களின் இதய வாழ்த்துக்களுடன் நாட்டு மக்களுக்கு நற்பணி ஆற்றுவதுதான் இலட்சியம். மக்கள் நம்பிக்கையோடு அளிக்கும் வரிப் பணத்தை மோசம் செய்யாமல், ஒவ்வொரு காசும், உழைப்பின் சின்னம் என்பதை உணர்ந்து, முழுத் தொகையும், சிந்தாமல் சிதறாமல்; மக்களுக்கே பயன்படும் வகையில் திட்டங்கள் தீட்டி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான் மாண்பு மிகு புரட்சித் தலைவரின் இலட்சியம். அதுதான் அமரர் அண்ணா எங்களுக்குக் கற்றுத் தந்த வழி. அந்த வழியில் செயலாற்றியதால் தான் நபர் வாரித் திட்ட முதலீடு 76-77ஆம் ஆண்டில் 59 ரூபாயாக இருந்ததை, 77-78ஆம் ஆண்டில் 73 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். இந்தப் பணியைத் தொடர்வோம்.

இதற்குத் தமிழ்மக்கள் நல்லாதரவு நல்க வேண்டுகிறோம். "ஊழல் இல்லை-இலஞ்சம் இல்லை —நிர்வாகத்தில் குறுக்கீடு இல்லை —நீதியில் தலையீடு இல்லை" என்று நல்லோர் அனைவரும் பாராட்டுவதை ஒரு சாதனை என்றால் அந்த நான் மனநிறைவோடு ஏற்றுக்கொள்கிறேன் என்பது தான் மாண்புமிகு முதல்வர் என் மூலம் நாட்டிற்கு வழங்கும் செய்தி.

அண்ணாவின் அரசு வாழ்க! வெல்க!

—தமிழக அரசு ஓராண்டில் நிறைவேற்றிய பணிகள் குறித்து மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களின் சார்பில், மாண்புமிகு செய்தி [illegible] அமைச்சர் ஆர். எம். [illegible] அவர்கள் [illegible] அன்று [illegible] ஆற்றிய உரை.



தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு 16-7-78 அன்று சென்னையில் நடைபெற்றது. மாநாட்டில் கலந்துகொண்ட மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு சென்னா ரெட்டி அவர்கள், மாண்புமிகு கருநாடக முதல்வர் திரு தேவராஜ் அர்ஸ் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், மாண்புமிகு கேரள முதல்வர் திரு ஏ.கே. அந்தோணி அவர்கள், மாண்புமிகு புதுவை முதல்வர் திரு எஸ். ராமசாமி அவர்கள்.

கற்க, கசடறக் கற்க !

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம்

இரண்டாண்டுக் காலத்துக்கு முன் தமிழ்நாட்டில் சுமார் 5,000 பள்ளிகளில் மட்டுமே வானொலிப் பெட்டிகள் இருந்தன. ஆனல், இன்று 30,000க்கும் மேற்பட்ட பள்ளிகளில் வானொலிப்பெட்டிகள் உள்ளன. நம் மாநிலம் முழுவதும் மிகப் பெரும்பாலான மாணவர்கள் வானொலி நிலையத்தாரால் நடத்தப்பெறும் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

நம் மாணவர் அனைவரும் வானொலி நிலையத்தார் அளிக்கும் இவ்வரிய வாய்ப்பை முழுதும் பயன்படுத்தி அதன்மூலம் சிறந்த பலனைப் பெறவேண்டும்.

கல்வி என்பது ஒரு சில விவரங்களை மட்டுமே தெரிந்து கொள்ளுகிற முயற்சியாகவே கருதப்பட்டது ஒரு காலத்தில். நல்ல முறையில் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் திறமையை அறிவுக்குச் சமமாக மதித்து எடைபோட்டோம். ஆனல் உண்மையான கல்வியின் நோக்கம் அது அல்ல.

ஒவ்வொரு குழந்தைக்கும் இயற்கையாகவே அறிவும், ஆற்றலும், திறமையும் உண்டு. இவற்றிற்குச் சாதிப் பாகுபாடுகளோ, வாழ்க்கை வசதிகளோ அடிப்படைகளாக அமைவதில்லை. ஏழைக் குடும்பத்திலே பிறந்த குழந்தைகூட நல்லமுறையில் கல்வி பெற்றால் அறிவோடும், ஆற்றலோடும் விளங்க முடிகிறது.

எனவே, கல்வி என்பது, இயல்பாக உள்ள அறிவையும், ஆற்றலையும், திறமையையும் வளர்ப்பதுதான். இப்பெரும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியப் பெருமக்கள், தம் பணி சிறக்கப் பல்வேறு உத்திகளைக் கையாளுகிறார்கள். ஆசிரியருக்குப் பக்க பலமாக விளங்கும் ஒரு சிறந்த சாதனம் வானொலியாகும். வானொலி நிகழ்ச்சிகள் மாணவர்கட்குக் கல்வி பெறுவதில் உள்ள ஆர்வத்தை அதிகப்படுத்த வேண்டும். மேலும், வானொலி விளக்கங்கள், அறிவுசார்ந்த முறையில் வளரும் வகையில் சிறப்பாக அமையவேண்டும்.

இவற்றைக் கருத்திற்கொண்டே தமிழக வானொலிக் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வகுப்பறையில் நடத்தும் பாடத்துக்கு உறுதுணையாக வானொலி நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும். வகுப்பறையில் சொல்லித் தரப்பட்டவற்றையே திரும்பவும் வானொலி நிகழ்ச்சிகளாக அமைத்துவிடக் கூடாது. வகுப்பறையில் சொல்லித் தரப்படுவதற்கும் மேலாக, கூடுதலாக உயரிய ஆக்கம் தேடும் வகையில் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட வேண்டும். நமது வானொலி நிகழ்ச்சிகள் மாணவர்கள் விரும்பிக் கேட்கும் வண்ணம், நல்ல முறையில் ஆலோசனை செய்து திட்டமிடப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் வகுப்பறையில் சொல்லித் தருவதற்கு மேலும் நல்ல விளக்கம் தரக்கூடியவையாக இந் நிகழ்ச்சிகள் பயன்படுகின்றன.

நமது பள்ளிகள் இந்நிகழ்ச்சிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இவற்றை முழுமையாகப் பள்ளிகள் பயன்படுத்திக் கொள்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ள, மதிப்பீடுமுறை ஒன்றை வானொலி நிலையம் பின்பற்றுகிறது.

இம்முயற்சிக்குத் தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தமது ஒத்துழைப்பை அளிக்கவேண்டும். வானொலி நிலையம் நடத்தும் போட்டிகளிலும் அனைத்துப் பள்ளிகளும் பங்கு கொண்டு பரிசு பெற முயல வேண்டும். வானொலி நிலையத்தாரின் கல்விச் சேவையை அனைத்துப் பள்ளிகளிலும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமது ஆசிரியர் பெருமக்களுக்கும் மாணவச் செல்வங்களுக்கும் நான் ஒன்று கூற விரும்புகிறேன்.

நம்முடைய நோக்கம் வள்ளுவப் பெருமான், ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்றபடி, சிறந்ததாக இருக்க வேண்டும். எப்படியாவது தேர்வில் தேற வேண்டும் என்பது மட்டும் நம் நோக்கமல்ல. தேறுவதற்கு 35 எண்கள் எடுத்தாலே போதும். அதற்காக அந்த அளவிற்கு மட்டும் நம் படிப்பு அமைந்தால் போதுமா? படிப்புக்கு, நாம் ஒரு கட்டுப்பாடு விதித்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை. அனைவரும், தமிழக மாணவ மணிகள் யாவரும், 100-க்கு 100 மதிப்பு எண்கள் வாங்க வேண்டும். கற்கின்ற, அனைத்தையும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். இதுவே நமது நோக்கமாக இருக்க வேண்டும். நமது கல்வி, வள்ளுவப் பெருந்தகை கூறியபடி, 'கற்க கசடறக் கற்க' என்ற முறையில் அமைய வேண்டும்.

சமுதாயத்தில், எவரும் மேல் நிலையடையச் சிறந்த கருவி, கல்விதான். அதை அனைத்து மாணவரும் நன்கு பயன்படுத்தி, நாடும், வீடும் உயர் வழி வகுக்க வேண்டும். ஒருவருடைய முன்னேற்றம் இன்னொருவர் வளர்ச்சிக்குத் தடையல்ல.

எல்லோரும் படிக்க வேண்டும். எல்லோரும் நன்கு படிக்க வேண்டும். இந்தப் பெருமுயற்சியில் வானொலி கல்வி ஒலிபரப்பு நமக்குக் கிடைத்துள்ள நல்ல கருவி. இக்கருவியை நன்கு பயன்படுத்தி நம் கல்வி நிலை வளரப் பாடுபடுவோமாக.

—(1[illegible]-[illegible]-'7[illegible] அன்று சென்னை வானொலியில் ஆற்றப்பட்ட இவ்வாண்டு [illegible] ஒலிபரப்புத் தொடக்க உரை.)

வளரும் தமிழகம்

கதர்- கைத்தறித் தொழில் வளர்ப்போம்

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்

திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்

மேல் நாடுகளில் தொழிற் புரட்சிக்குப் பின்தான் அமைதி காணப்பட்டு அங்கு தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒரு நாடு முன்னேற, தொழில் வளர்ச்சி மிக அவசியம். தொழில் வளர்ந்தால்தான் நாடு முன்னேறும். அந்த நிலையிலே நம் தமிழகத்தை நோக்கினால் பல தொழில்களில் தமிழகம் முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காணலாம். அந்த வரிசையில் கைத்தறி நெசவுத் தொழிலும் காதி உற்பத்தித் தொழிலும் இந்த ஓராண்டில் தலைசிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளது.

''கிராமப்புற மக்கள் முன்னேற, காதி கிராமத் தொழிலும் குடிசைத் தொழிலும்தான் முக்கியக் காரணம். கிராமங்கள் உயர்ந்தால் நம் நாடு முன்னேறும்'' என்று காந்திஜி கூறிய பொன்மொழியை மனத்திலே கொண்டு கதர்த் தொழிலில் தமிழகம் அக்கறை காட்டி வருகிறது.

கடந்த ஆண்டு தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக 90 நாட்களுக்குக் கதர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் விற்பனை செய்யும் எல்லா வகைக் கதர்த் துணி விற்பனைக்கும் தமிழக அரசு 5 சதவிகிதம் சிறப்பு விழுக்காடு தள்ளுபடி அளித்தது.

மேலும், வாரியத்திற்கு கூடுதலாக 5 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி, குறித்த காலத்திற்கு வழங்க அனுமதி அளித்தது. முதன் முதலாகத் தமிழ்நாடு அரசு அமரர் பெருந்தலைவர் காமராசர் அவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் அவர் பிறந்த நாள் விழாவையொட்டிக் கதர் விற்பனைக்குச் சிறப்புத் தள்ளுபடியாக 10 சதவிகிதம் வழங்கியுள்ளது, இந்த அரசின் அரிய சாதனையாகும். இந்தத் தள்ளுபடி இவ்வாண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1 முதல் 15 வரை பதினைந்து நாட்களுக்கு வழங்கப்படும். இந்தச் செயல் இந்த அரசு கர்ம வீரர் காமராசர் மேல் கொண்டுள்ள நல்ல எண்ணத்தையும் மதிப்பையும் எடுத்துக் காட்டுவதாகும்.

மாண்புமிகு முதல்வர் விடுத்த வேண்டுகோளினால் இந்த ஆண்டு கதர் அதிகமாக விற்பனையாகியுள்ளது. சென்ற ஆண்டில் ரூ. 405.55 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனையானதற்கு மாறாக இவ்வாண்டு ரூ. 607.67 இலட்சத்திற்கு விற்றது. அரும் பெரும் சாதனையாகும்.

மேலும், கதர் வாரியம் 3,36,500 நபர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகிறது. கதர் வாரியம் இந்த ஆண்டு இத்தாலிய நாட்டிற்கு, கைவினைப்பொருள், கைத்தறி ஏற்றுமதிக் கழகத்தின் சென்னைக் கிளை மூலம் ரூ. 26.31 இலட்சம் மதிப்புள்ள 3.85 இலட்சம் மீட்டர் கதர்த் துணியை ஏற்றுமதி செய்து பலரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

திக்கற்ற பெண்களுக்கும் விதவைகளுக்கும் மறு வாழ்வுத் திட்டத்தின் கீழும் கிராமிய நூற்புக்கூட ராட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்தின்கீழ் 26,856 நூற்பாளர்கள் உள்ளனர். இவர்கள் கடந்த ஆண்டில் (1977-78) 290.67 இலட்சம் சிட்ட நூலை உற்பத்தி செய்து ரூ. 68.80 இலட்சம் ரூபாய் ஊதியமாகப் பெற்றனர்.

இவ்வாண்டில் மேலும் புதிய கிராமிய நூற்புக் கூடங்கள் புதிதாகத் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இதன் மூலம் 5,400 பேருக்கு நிலையான வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

வாரியம் தனது உற்பத்தி அலகுகள் மூலம் 61 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர்ப்பட்டை சென்ற ஆண்டு உற்பத்தி செய்தது. கதர்ப்பட்டு வகைகளுக்கு நல்ல வரவேற்பு என்றுமே உள்ளது. இதனால் வரும் ஆண்டில் 110 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பட்டுத் துணி உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. வாரியத்திற்கு வேண்டிய பட்டு நூல் உற்பத்தி செய்ய, கோவையில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கத்தை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தரமான மற்றும் சமமான நூல் உற்பத்திக்குச் சரியான முறையில் பஞ்சை அடித்துப் பட்டை போட வேண்டும். இதுகாறும் இது கையினாலேயே பெரும்பாலும் செய்து வரப்பட்டது. இயந்திரத்தின் மூலம் பஞ்சை உடைத்துப் பட்டை போடும் அலகுகளைத் துவக்கத் தமிழக அரசு நிதியுதவி அளித்துள்ளது. இவ்வலகுகள் விரைவில் துவக்கப்படவுள்ளன. இதன் மூலம் நூற்போர், நெய்வோரின் வருவாய் கணிசமாக உயரும். நூலின் தரமும் துணியின் தரமும் உயரும்.

கிராம ஏழ்மை நிலையைப் போக்கவும் உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருள்களையும் ஆட்களையும் கொண்டு கிராமிய நுகர்வோரது தேவைக்கேற்ற பொருட்களை உற்பத்தி செய்ய ஏதுவாக கிராமத் தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய கிராமத் தொழில்கள் மூலம் சற்றேறக்குறைய இருபது கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு இருபத்திரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. இப்பணியில் மூன்று இலட்சம் பேர் வேலைவாய்ப்பினைப் பெற்று, எட்டுக்கோடி ரூபாயை ஊதியமாகப் பெற்றனர்.

இவ்வரசு எடுத்து வருகின்ற சிறப்பு முயற்சிகளினால் விரைவில் நாடெங்கும் பனஞ்சீனியிலிருந்து தயாரிக்கப்படும் 'பாம்கோலா' எளிதில் கிடைக்கும். இதன் உற்பத்தி நிலையம் டெல்லியிலும், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களிலும் துவக்கப்பட உள்ளன. பனை செல்வம் ஒரு கற்பகத் தரு என்ற முதுமொழிக்கொப்ப பனை நார், தும்புகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றன.

கைக்காகிதங்களின் மூலம் முட்டை நிறைப்பான்களும் தயாரிக்கப்படும் திட்டம் திட்டப்பட்டுள்ளது.

பழங்குடியினர் வாழும் பகுதிகளைத் தீவிரமாக மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் தேன் கூடுகளை அரசு மான்யத்துடன் அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமத் தொழில்களைத் துவக்க, தனி நபர்களுக்கு நிதி, மற்ற உதவிகள் வாரியம் அளிக்கும். ஏற்கெனவேயுள்ள இருபத்திரண்டு கிராமத் தொழில்களுடன் கூடுதலாக நாற்பத்து மூன்று இனங்களைக் கிராமத் தொழில் என வகைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பயனாகப் பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரம் உயர வழிகோலப்படும். கதர் கிராமத் தொழில் திட்டம் உழைத்து வாழும் உணர்வைப் போதிக்கிறது. எனவே, இத்திட்டம் நிலவிவரும் வேலையின்மையைப் போக்கக் கூடிய தன்மையுடையதாகும்.

இவ்வரசு பதவி ஏற்றவுடன் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நிலவிவரும் வேலையின்மைப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண விரும்பியது. கடந்த ஓர் ஆண்டில் ஒன்பதாயிரத்து அறுநூற்று முப்பத்து நான்கு நபர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு கதர் கிராமத் தொழிலின் மூலம் ஏற்படுத்தித் தரப்பட்டது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராமத் தொழில்களை ஊக்குவித்து, வறட்சி நிலையை மாற்றுவதற்கு 19.39 இலட்சம் ரூபாய் அரசு மான்யமாகவும், கடனாகவும் நிதி உதவி அளித்துள்ளது.

இதுவன்றி இதே காரியத்திற்காக அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 16.90 இலட்சம் ரூபாய் பெற ஆவன செய்யப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கைவினைஞர்களின் துயரைத் துடைப்பதற்காக 9.74 இலட்சம் கடனாக வழங்கியது. இதைத் தவிர கதர் கிராமத் தொழில்களில் சிறந்த ஆராய்ச்சிகள் நடத்தி நல்ல அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. பல்வேறு அரசுத் துறைகளின் மூலமும், அரசு நிறுவனங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்பட்ட தொழில்கள் அனைத்தையும் ஒரே துறையின் கீழோ நிறுவனத்தின் கீழோ கொண்டு வரவேண்டுமென்று நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையை இவ்வரசு ஏற்று, இருநூற்றுக்கு மேற்பட்ட தொழிற் கூட்டுறவு அலகுகளை கதர்க் கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது.

கதர் உள்ளிட்ட கிராமத் தொழில்கள் மூலம் ஏறத்தாழ மூன்றரை இலட்சம் கிராம மக்கள் இன்று தமிழகத்தில் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். இத்தொழில்கள் மூலம் பல இலட்சம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்திய முன்னேற்றத்தினாலும், நகர்ப்புற நாகரிகத்தினாலும் கவரப்பட்டு கிராம மக்கள் மெல்ல மெல்ல நகரங்கட்குக் குடியேறுவதைத் தடுத்து, அவர்கட்குக் கிராமங்களிலேயே வேலை வாய்ப்பு உண்டு, வாழ்வு உண்டு, வளமும் உண்டு என்று கதர் கிராமத் தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் எடுத்துக் காட்டி கிராமிய பொருளாதாரத்தைச் சீர்குலையாமல் காத்து, வளர்த்து வரும் பெரும் பொறுப்பைத் தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம் ஏற்று நடத்தி வருகிறது. இவ்வகையில் அது ஆண்டுக்காண்டு கணிசமான முன்னேற்றத்தையும் கண்டு வருகிறது. பனஞ்சீனியிலிருந்து தயாரிக்கப்படும் பாம்கோலா நமக்கெல்லாம் வாய்க்கும் மனத்திற்கும் இனிக்கும் செய்தியாகும். இந்தத் தித்திக்கும் செய்தியுடன் கைத்தறித் தொழிலின் முன்னேற்றத்தைப்பற்றி நோக்கலாம்.

வேளாண்மைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய தொழிலாக— பெரும்பான்மையான மக்களுக்கு வாழ்வு அளிக்கும் தொழிலாக- நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்ற தொழிலாக விளங்கும் கைத்தறிக்கு நல்வாழ்வு அளிக்கவும் முதல்வர் கொண்டுள்ள அளவற்ற ஈடுபாட்டின் பயனே, கைத்தறித் துறைக்கு என்று தனி அமைச்சர் முதல் முறையாக நியமிக்கப்பட்டிருப்பதாகும்.

மூடப்பட்டுக் கிடந்த நூல் ஆலைகளுக்குப் புத்துயிர் ஊட்டி நல்ல செயல்திறத்துடன், பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்துள்ளது இந்தத் தமிழக அரசின் ஓராண்டுச் சாதனையாகும்.

தமிழ்நாட்டில் உழைக்கும் தொழிலாளர்களில் 6 சதவிகிதத்தினர் கைத்தறித் தொழிலில் நேரிடையாகவோ அல்லது கண்டு சுற்றுதல், பாவு ஓட்டுதல் போன்ற உபதொழில்களிலோ ஈடுபட்டுள்ளனர். இம்மாநிலத்தின் பொருளாதாரத்தில் கைத்தறித் தொழில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. தற்பொழுது மாநிலத்திலுள்ள சுமார் 5.5 இலட்சம் கைத்தறிகளில் 2 இலட்சத்திற்குமேல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்குகின்றன. எஞ்சியுள்ள சுமார் 3.5 இலட்சம் கைத்தறிகள் தனியார் துறையில் செயல்படுகின்றன.

இத்துறையில் கைத்தறி நெசவாளர்கள் குறைந்த கூலி, அடிக்கடி வேலை குறைப்பு, நிரந்தரமான முழு நேர வேலையில்லாமை போன்ற இன்னல்களுக்கிடையே நெசவு செய்து வருகின்றனர். தவிர, நெசவாளர்களில் பலர் சொந்தத் தறியில்லாமல் மாஸ்டர் வீவர்களுக்குச் சொந்தமான தறிகளில் சொற்பக் கூலிக்கு வேலை செய்து மிகவும் மோசமான வாழ்க்கை நிலையில் உள்ளனர். இப்படிப்பட்ட நெசவாளர்களுக்கு நிரந்தர-முழுநேர வேலையும் நியாயமான கூலியும் இதர வசதிகளும் கிடைக்கச் செய்ய அவர்களைப் புதுக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தலும் தற்சமயம் செயல்படும் நலிந்த சங்கங்களை வலுப்படுத்தியும் தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்களில் 60 சதவிகிதத்தினரைக் கூட்டுறவுத் துறையின்கீழ்க் கொண்டு வர ரூ. 16.05 கோடி செலவில் ஒரு மாபெரும் திட்டம் தீட்டப்பட்டு மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

அரிசனங்களுக்கு படிப்பு உதவி வழங்கும் திட்டம்

1976-77ஆம் ஆண்டு முடிவு வரை அரிசன ஆதிவாசிகள் நலத் துறையால் மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு படிப்பு உதவித் தொகை பணமாகவே வழங்கப்பட்டு வந்தது. 1977-78ஆம் ஆண்டு இம்முறை மாற்றப்பட்டு, புத்தகங்களாகவே வழங்கப்படுவதுடன், இச்சலுகையை பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான வரம்பு ரூ. 3,000/- என்பதையும் நீக்கி எல்லா மாணவ மாணவியருக்கும் அவர்கள் பெற்றோரின் வருமானத்தைப் பாராமல் எல்லாப் புத்தகங்களும் வழங்கப்படுவதுடன், சிறப்புக் கட்டணமும் பள்ளிகளுக்குத் தேர்வுக் கட்டணமும் அரசுத் தேர்வு இயக்குநருக்கு நேரடியாகவும் செலுத்தப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சென்ற இரண்டு ஆண்டுகளில் 201 புது நெசவாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு, தனியார் துறையில் வேலை செய்துவந்த சுமார் 60,000 நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறையின்கீழ்க் கொண்டு வரப்பட்டனர். சொந்தத் தறியில்லாத 1,300 நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க 12 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது 2.07 இலட்சம் நெசவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழ்நாட்டில் 946 பிரதம நெசவாளர்கள் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை ஆண்டுக்குச் சுமார் ரூ. 45 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துணியை உற்பத்தி செய்கின்றன. 6-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் சுமார் 20 இலட்சம் தனியார் துறை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்படுவர். இவர்களில் சுமார் 40,000 தறியில்லா நெசவாளர்கள் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் சேர்க்கப்படுவார்கள்.

கவர்ச்சிகரமான, கெட்டிச் சாயமுடன் துணி உற்பத்தி செய்ய உதவ தமிழ்நாட்டில் சேலம், கோவை, மதுரை திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ரூ. 60 இலட்சம் செலவில் ஐந்து பெரிய நவீன சாயச்சாலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. அதோடு தமிழ்நாடு கூட்டுறவுப் பதனிடும் ஆலையில் துணிக்கு மெருகிடுதல், முன் கூட்டிச் சுருக்குதல், அச்சிடுதல் ஆகிய பதனிடும் வசதிகளை ரூ. 22.50 இலட்சம் செலவில் விஸ்தரிக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்களின் விருப்பத்திற்கேற்றவாறு புதிய டிசைன்களில் கவர்ச்சிகரமான முறையில் உற்பத்தியை மாற்றி அமைக்கவும் பாலியெஸ்டர், ரேயான் போன்ற வகைகள் புதிதாக உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்பொழுது எல்லாத் தரப்பட்ட மக்களுக்கும் தேவையான சேலைகள், வேட்டிகள், லுங்கிகள், சட்டைத் துணிகள், 2/2 வாயில்ஸ், பள்ளிக்கூடச் சீருடை, காக்கி ட்ரில், அலங்கார விரிப்புகள் போன்ற எல்லா ரகங்களும் கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாவது குறிப்பிடத்தக்க அம்சம்.

மத்திய அரசு, எளிய மக்களுக்கு மலிவு விலை ஜனதா ரகத் துணி உற்பத்தியைக் கைத்தறிகளில் செய்து விநியோகிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததன் பேரில் சென்ற 1977-78 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சுமார் 13 மில்லியன் மீட்டர் ஜனதா புடவை, வேட்டி லுங்கி ரகங்கள் கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 42 மில்லியன் மீட்டர் ஜனதா ரகத் துணிகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற உள்நாட்டு விற்பனையைப் பெருக்கும் முயற்சிகள் தவிர கைத்தறித் துணி ஏற்றுமதியையும் அதிகரிக்க கோ-ஆப்டெக்ஸ் மற்றும் கைத்தறி வர்த்தகக் கழகம் ஆகிய நிறுவனங்கள் பெரும் முயற்சி எடுத்து வருகின்றன. இவ்விரு நிறுவனங்களும் சுமார் 2 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணியை ஆஸ்திரேலியா, ஃபிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளன.

கூட்டுறவுத் துறை மூலம் இலாபகரமான முறையில் கைத்தறித் தொழிலை வளர்க்க இது வரை விவரித்த பல திட்டங்கள் தவிர நெசவாளர்களின் வாழ்க்கை வசதிகளை உயர்த்தவும் பல திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. முக்கியமான மத்திய மாநில அரசுகள் மற்றும் "HUDCO" ஆகியவைகளிடமிருந்து நிதி உதவி பெற்று நெசவாளர்களுக்குச் சுமார் 2,000 வீடுகள் கட்டும் திட்டம், நெசவாளர்களுக்கு வேலைப் பாதுகாப்பு மற்ற சலுகைகளை உறுதி செய்ய சட்டம் இயற்றுதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கூட்டுறவுச் சங்கங்கள் தவிர பெரிய அளவில் எல்லா நவீன சாதனங்களுடன் நெசவாளர்களுக்கு முழுவேலை கொடுக்க கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இரண்டு இடங்களில் ஏற்றுமதி ரக உற்பத்தி நிறுவனங்களும், காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களிலும், தீவிர கைத்தறி வளர்ச்சி நிறுவனங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் தற்போது சுமார் 4,500 நெசவாளர்களுக்கு, நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக நெசவாளர்களின் எண்ணிக்கை 22,000 ஆக உயர்த்தப்படும்.

தமிழ்நாட்டில் இயங்கும் பிரதம சங்கங்களில் உற்பத்தி செய்யும் பணிகளை விற்பனை செய்து கொடுக்கும் மாநில சங்கமாகிய 'கோ-ஆப்டெக்ஸ்' தமிழ்நாட்டிலும், இந்தியாவில் இதர மாநிலங்களிலும் 340 விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. இச்சங்கம் பிரதம நெசவாளர் சங்கங்களிடமிருந்து அவற்றின் உற்பத்தியில் பாதி அளவு கொள்முதல் செய்து ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 23 கோடி பெறுமான துணி விற்பனை செய்து வருகிறது. நூதன டிசைன்களைக் கண்டறிந்து நெசவாளர் சங்கங்களில் உற்பத்தி செய்ய உதவ மதுரையில் ரூ. 3.50 இலட்சம் செலவில் ஒரு 'டிசைன் சென்டர்' ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபோல் சேலம், கோவை போன்ற மாவட்டங்களிலும் 'டிசைன் சென்டர்கள்' அமைக்கதிட்டமிடப்பட்டுள்ளன.

இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான பணிகளால் தமிழகத்தில் கைத்தறித் தொழிலில் சிறந்த முன்னேற்றம் காணப்படும்; ஏறத்தாழ 4,500 நெசவாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் ஆண்டுகளில் தமிழக மக்கள் இந்தத் தொழிலுக்கு நல்ல ஆதரவு அளிப்பதன் மூலம் குறிப்பாக, தாய்க்குலம் தங்களின் நல்லாதரவை அளிப்பதன் மூலமும் இன்னும் அதிகப்படியான நெசவாளர்களுக்கு வேலைதர வாய்ப்பும் வசதியும் ஏற்படும்.

நாலரைக்கோடி மக்களில் ஏறத்தாழ ஒரு கோடி மக்களுக்கு அதிகமானோர் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பெரியவர்கள் மட்டுமல்ல, அந்தக் குடும்பங்களிலுள்ள சின்னஞ் சிறு குழந்தைகளும் அந்தக் குடும்பத்தின் வறுமையின் காரணமாகப் பாடுபட வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட இந்தக் குடும்பங்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்தால்தான் அவர்கள் ஒருநேர சோற்றுக்காவது நாம் வழிசெய்தோம் என்ற உணர்வு நமக்கு ஏற்படும்.

பெரியார் போற்றிய தொழில், அமரர் அண்ணா ஆர்வமுடன் வளர்த்துப் போற்றிய கதர், கைத்தறித் தொழில், கரும வீரர் காமராசர் காத்துப் போற்றிய கதர் நெசவுத் தொழில், புரட்சித் தலைவர் ஆட்சியில் புத்துயிர் பெற்ற இந்தத் தொழில் நசிந்து விடாமல் காப்பது நமது தலை சிறந்த கடமையாகும்.

தேங்கிக்கிடக்கும் துணிகளைக் குறைக்க நம் நாட்டு மக்கள் எல்லோரும் கதர் கைத்தறித் துணிகளை உடைகளுக்காக மட்டுமல்ல, திரைச்சீலை, கொசுவலை, விரிப்புகள் போன்ற எல்லாவற்றிற்கும் உபயோகப்படுத்தினால் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு நாம் ஓரளவாவது சேவை செய்தவர்களாவோம்.

எனவே, இந்த உன்னதமான கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள எண்ணற்ற மக்களின் கண்ணீரைத் துடைக்க தமிழக மக்கள் தங்களின் பங்கைத் தாரீர்! என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

[சென்னை வானொலியில் 2-7-1978 அன்று ஆற்றிய உரை]

மறைமலை நகரில் மோபெட் தொழிற்சாலை

தமிழ்நாடு மோபெட்ஸ் நிறுவனம் தயாரித்து வரும் 'மயூரம்' மோபெட்களை உற்பத்தி செய்வதற்கென்றே தனித் தொழிற்சாலை ஒன்று சென்னை அருகே மறைமலை நகரில் வெகுவிரைவாக உருவாகி வருகிறது. இன்னும் மூன்று மாதங்களில் தொழிற்சாலை நிறுவும் பணிகள் முற்றுப்பெற்று அங்கு மோபெட் உற்பத்தி தொடங்கிவிடும்.

குறைந்த விலையிலும் சிறந்த முறையிலும் பயன்படும் வாகனம் ஒன்றை உருவாக்கி, சாமானிய மக்களின் போக்குவரத்து வசதிக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் 'டான்சி' என்று சுருக்கமாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், மோபெட் தயாரிப்பில் முனைந்தது. இம்முயற்சி வெற்றி பெற்றதையடுத்து, டான்சியின் மோபெட் தயாரிப்புப் பிரிவு, தமிழ்நாடு மோபெட்ஸ் லிமிடெட் என்ற தனி நிறுவனமாக அமைக்கப்பட்டது. இதன் பிறகு தான் டான்சி மோபெட்டுக்கு 'மயூரம்' என்ற அழகான காவியப் பெயர் சூட்டப்பட்டது.

வடிவேல் முருகன் உலகை விரைவாய் வலம்வரத் துணை புரிந்தது மயில் வாகனம். முருகன் ஏறும் வாகனத்தின் மறுபெயரே மயூரம். இப்பெயருக்கு முற்றிலும் பொருத்தமாய் மயிலைப் போன்ற எழிலோடும், விரைவாகவும் எளிதாகவும் இயங்கக்கூடியதாகவும் விளங்குகிறது, தமிழ்நாடு மோபெட்ஸ் நிறுவனம் தயாரிக்கும் 'மயூரம் மோபெட்.

மயூரம் மோபெட்டை அதிக அளவிலும், வியாபார ரீதியிலும் உற்பத்தி செய்யும் பொருட்டு தனித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் கழகம் சென்னைக்கு அருகில் எல்லா நவீன வசதிகளோடும் அமைத்து வரும் புறநகர்ப் பகுதிகளில் குறிப்பிடத்தக்கது, மறைமலை நகர். இங்கு ரூ. 130 லட்சம் செலவில் தமிழ்நாடு மோபெட்ஸ் நிறுவனத்தின் தொழிற்சாலை உருவாகி வருகிறது. இந்த ஆண்டு மொத்தம் 8,000 மோபெட்டுகள் உற்பத்தி செய்வதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 24 ஆயிரம் மோபெட்கள் தயாரிக்கும் திறன் வாய்ந்ததாக இத்தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. இத்தொழிற்சாலையின் பயனாக சுமார் 500 பேருக்கு நேரடி வேலைகிடைக்கும். மேலும் மறைமுகமாக ஏராளமானோர் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

இளைய தலைமுறையினர் பெரிதும் விரும்பும் விதத்தில் மயூரம் மோபெட் காட்சியளிக்கிறது. சென்னையில் அதன் விலை ரூ. 2,800 தான். 'டீலக்ஸ் மயூரம்' எனப்படும் நவீன மாதிரி வண்டி சாதாரண மாதிரி வண்டியின் விலையைவிட ரூ. 150 மட்டுமே கூடுதலாகும். அவரவர் விருப்பப்படித் தேர்ந்தெடுத்து வாங்க அழகான ஐந்து வண்ணங்களில் மயூரம் மோபெட் கிடைக்கிறது. வங்கிகளின் மூலம் தவணை முறையில் சுலபமாக வாங்கிக் கொள்ளவும் வாய்ப்புள்ளது.

முற்றிலும் நம் நாட்டுத் தொழில்நுட்ப முறைகளையும், நம் நாட்டில் தயாராகும் பொருட்களையும் கொண்டே மயூரம் மொபெட் உற்பத்தி செய்யப்படுகிறது. டான்சி மோபெட் பிரிவைச் சேர்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களே இதனைத் திட்டமிட்டு உருவாக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு 70 கிலோ மீட்டர் தொலைவு ஓடும் மயூரம் மோபெட், சிக்கனமானது, சீரானது, பராமரிப்பதற்கும் எளிதானது; நவநாகரிக வாழ்க்கைக்கு ஓர் அடையாளச் சின்னமாக அது விளங்குகிறது.

போக்கு வரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இந்நாளில், நகரப் பகுதியில் உள்ள மக்கள் இடநெருக்கடியையும், விலைவாசி உயர்வையும் கருதிப் புறநகர்ப் பகுதிகளில் பெருமளவில் குடியேறும் இன்றைய நிலையில் குறைந்த விலையில் எளிதான வாகன வசதிகள் அதிக அளவில் கிடைக்காதது ஒரு பெருங்குறையாக இருந்து வருகிறது.

மறைமலை நகரில் அதிக அளவில் மயூரம் மோபெட்களை உற்பத்தி செய்யும் தனித் தொழிற்சாலை தொடங்கப்படுவதன் மூலம் இக்குறை தீரும் என நம்பலாம்.

இனிப்பான செய்தி தரும் இரையூர் சர்க்கரை ஆலை

இரையூர், திருச்சி மாவட்டம் பெரம்பலூரை அடுத்த சிறிய கிராமம்!

பசுமையே இல்லாத வறட்சியான பகுதி அது! செழுமையான மரங்களையோ, நீரோட்டங்களையோ கண்ணில் காணமுடியாத மண் அது!

கரிசல் மண்ணும், கற்களும், முட் புதர்களும், கற்றாழைகளும் இப்படி நெடுந்தூரம் வரை சாலையின் இரு மருங்கும் காணப் படும்.

இந்த வறண்ட பகுதியில்—பாலைவனத்தில் பசுஞ்சோலை போலக் காட்சி தருகிறது பண்டித் ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை!

நேருவின் பிறந்தநாளில் அடிக்கல் நாட்டப்பட்டதால் இந்தப் பெயரினை அதற்குச் சூட்டியிருக்கிறார்கள். 1976-ல் அடிக்கல் நாட்டப் பெற்று 1978-பிப்ரவரியில் சர்க்கரை தயாரிக்கும் பணி துவங்கி விட்டது.

அரசின் ஆலையான இது, இன்று அகில இந்திய அளவில் பல்வேறு சாதனைகளை ஏற்படுத்தியுள்ளது.

துவங்கி 98 நாட்களில் ஒரு இலட்சம் டன் கரும்பில் சர்க்கரை பிழியப்பட்டுள்ளது; ஒரு இலட்சம் மூட்டை சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில், 17-5-'78 அன்று மட்டும் 1,850 டன் கரும்பு பிழியப்பட்டுள்ளது.

இந்த அளவில், இவ்வளவு குறுகிய காலத்தில், எந்தச் சர்க்கரை ஆலையும் இந்தச் சாதனைகளை எட்டியதில்லை.

வயல் வெளிகளிலிருந்து கொண்டுவரப்படும் கரும்புகள் கட்டுக் கட்டாக லாரியில் வருகின்றன. அவை ஆலையின் முதல் பகுதியில் கொட்டப்படுகின்றன. இயந்திரத்தின் உதவியால் கரும்புகள் துண்டு துண்டாக ஆக்கப்பட்டு, கசக்கிப் பிழியப்பட்டுப் பல்வேறு இயந்திரங்களின் மூலமாகச் சாறாகி, கொதிக்க வைக்கப்படுகிறது. இறுதியில் சர்க்கரையாக ஆலையின் கடைசிப் பகுதியில் வந்தடைகின்றன. அங்கு அவை கோணிப்பைகளில் நூறு கிலோ என்ற அளவில் நிரப்பப்பட்டு, எடை போடப்பட்டுக் கிடங்கிற்கு அனுப்பப்படுகின்றன.

இந்தப் பகுதி வறண்ட இடமாகத் தெரிகிறதே! இதனை எவ்வாறு தேர்ந்தெடுத்தார்கள்?

இந்தப் பகுதியில் கரும்பு விளையாவிட்டாலும், சுற்றுப் பகுதிகளில் சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள லெப்பைக் குடிக்காடு என்ற பகுதியில் கரும்பு பயிரிடப்படுகிறது. பொதுவாக ஒரு கரும்பாலை ஏற்படுத்த வேண்டுமெனில் சுமார் 8 ஆயிரம் அல்லது 9 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடப்பட வேண்டும். கோத்தாரி சர்க்கரை ஆலை வெகு தொலைவிலிருந்தபடியாலும், இந்த வட்டாரத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடப்பட்டு வந்ததாலும், இங்காவது, முசிறிப் பகுதியிலாவது கரும்பாலை ஒன்று நிறுவலாம் எனத் திட்டமிடப் பட்டது.

இந்தக் கரும்பாலைக்கு ஒரு நாளைக்கு 1,400 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இங்கு தண்ணீர் வசதியில்லாததால் 12 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது.

கரும்புகள் லெப்பைக் குடிக்காடு பகுதியிலிருந்தும், செந்துறை, மாத்தூர் என்ற ஊர்களிலிருந்தும் போதுமான அளவு கிடைக்கிறது.

இங்கு ஒரு நாளைக்குச் சராசரி 1,000 டன் கரும்பு அரைக்கப் படுகிறது. நாளொன்றுக்கு 1,071 மூட்டை சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது இந்த ஆலையில் கரும்பிலிருந்து சர்க்கரை அதிக அளவில் (சுமார் 11 சதவிகிதம்) கிடைக்கிறது. இது, இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கும் மராட்டிய ஆலைகளுடன் ஒப்பிடும் அளவில் உள்ளது. அதுவும் ஆரம்பக் கட்டத்தில் இவ்வளவு அதிக உற்பத்தி எந்த ஆலையிலும் இருந்ததில்லை. இன்னும் மூன்று ஆண்டுக்குள் நாளொன்றுக்கு 1,500 டன் கரும்பு அரைக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

இந்த ஆலைக்கு 13 முக்கிய இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. என்றாலும், தற்போது 11 இயந்திரங்களே இயங்கி வருகின்றன. இதனால் இவ்வாலைக்கு இலாபம் அல்லது சேமிப்பு 5.6 இலட்சம் ரூபாயாகும்.

இங்கு, மேலும் ஓர் இயந்திரத்தை நிறுவத் திட்டமிடப் பட்டிருக்கிறது. அப்போது 1,500 டன் கரும்பு சுலபமாக அரைக்க முடியும்.

ஆண்டு முழுவதும் அரைவைக்குக் கரும்பு கிடைக்கிறதா?

சாதாரணமாக மே, ஜூன் மாதங்களில் அரைவை இருக்காது. இந்த ஆண்டு பல இடங்களில் கரும்பு இருந்ததால், அரசு இந்த மாதத்திலும் அரைத்தல் வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது. மற்றபடி கரும்பு இல்லாத காலங்களில் அரைவை இருக்காது.

உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கப் பல்வேறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன. விரைவாகப் பணம் பட்டுவாடா செய்தல்; கரும்பு தந்த ஒரு வாரத்திற்குள் விவசாயிகளுக்குப் பணம் தந்து விடுதல்; பதிவு செய்த விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூ. 115 வழங்குதல் (மற்றவர்களுக்கு ரூ. 100) முதலியன.



சர்க்கரைப் பாகைக் குளிர வைக்கும் நீர்த் தொட்டிகள்

கரும்பை முன்னதாகப் பயிரிடுபவர்களுக்குப் பண உதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகையில் ஒரு ஏக்கருக்கு ரூ. 300 வழங்கப்படுகிறது.

60 கிலோ மீட்டருக்கு அதிகத் தொலைவிலிருந்து கரும்புகொண்டு வருபவர்களுக்குப் போக்குவரத்துப் படி தரப்படுகிறது.

வீரிய வகைக் கரும்பைப் பயிரிடுபவர்களுக்கு ரூ. 250 உதவித் தொகை வழங்கப்படுகிறது. வீரிய வகைக் கரும்பிற்காக ஒரு ஏக்கர் அளவில் ஒரு விதைப் பண்ணையும் உள்ளது.

இவ்வாலையில் வேலை செய்கிறவர்களில் இலங்கையிலிருந்து வந்த தமிழர்கள், 100 பேர். முக்கிய தொழில் நுணுக்கப் பணிகள் தவிர, பிற வேலைகளில் இப்பகுதியிலுள்ளவர்களே உள்ளனர்.

கிராமப்புறச் தொழில் வளர்ச்சியில் அரசு காட்டிவரும் அக்கறைக்கேற்ப இந்தச் சர்க்கரை ஆலை, கிராமப்புறத்திலேயே தோன்றி வெற்றி நடைபோடுவது இனிப்பான செய்தியாகும்!

—கே. நடராஜன்

நாகையில் புயல் பாதுகாப்புப் புகலிடம்

1977-நவம்பர் திங்களில் வீசிய கொடிய புயலால் பேரழிவுக்கும் பெரும் சேதத்துக்கும் உட்பட்ட நாகப்பட்டினம் நகரமும் அதன் சுற்றுவட்டாரமும் புதுவாழ்வு பெற்று வருகின்றன.

புயலின் சீற்றத்தால் சின்னாபின்னமான நிலையை அடைந்த இடங்கள் நமது அரசின் போர்க்கால நடவடிக்கைகள் போன்ற நிவாரணப் பணிகளால் இன்று புத்துருவம் பெற்று வருகின்றன.

ஆறு மாதங்களுக்கு முன்பு வீசிய புயலால் உருமாறிப் போயிருந்த ஊர்கள் புதுவாழ்வுடன் மட்டுமல்ல, புதிய பொலிவும் பெற்று வருகின்றன.

நாகப்பட்டினத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருப்பது அக்கரைப் பேட்டை. மீனவர் குடியிருப்புகள் உள்ள இப்பகுதியில் புதிய குடிசைகளும் புதிய கிணறுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

'கேர்' நிறுவனம் அக்கரைப் பட்டி செருதூர், பிரதாபராமபுரம், கல்லல், வடக்கு பொய்கை நல்லூர், நம்பியார் நகர் ஆகிய இடங்களில் 800 குடிசைகள் அமைத்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற பல்வேறு வசதிகளை மாநில அரசு செய்துள்ளது. இந்தக் குடியிருப்புகளில் இரண்டு தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள்; ஏனையவை மீனவர் குடியிருப்புகளாகும்.

இதுபோன்று புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்திலும் உதவிப் பணிகள் நடைபெற்றுள்ளன.

தஞ்சை மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் மாநில அரசு, அனைத்து நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் பத்து இடங்களில் 'புயல் பாதுகாப்புப் புகலிடம்' அமைத்திடத் திட்டமிட்டுள்ளது.

ஒவ்வொரு புயல் பாதுகாப்புப் புகலிடத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் செலவாகும். இப்பொழுது அக்கரைப்பேட்டையில் புயல் பாதுகாப்புப் புகலிடம் கட்டப் பட்டு வருகிறது.

ஏனைய புயல் பாதுகாப்புப் புகலிடங்கள் நாகப்பட்டினம் வட்டத்தில் நம்பியார் நகர், பிரதாபராமபுரம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் நாலுவேடபாடி, கோடிக்கரை, பட்டுக்கோட்டை வட்டத்தில் அந்தோணிபுரம், மல்லிப்பட்டினம், சீர்காழி வட்டத்தில் ஆலங்குடி, மாயூரம் வட்டத்தில் கலம்நல்லூர் ஆகிய ஊர்களில் கட்டப்படும்.

புயல் பாதுகாப்புப் புகலிடம் இரண்டு மாடிக் கட்டடமாகும். அடித்தளத்தில் நான்கு அல்லது ஐந்து அறைகள் அமைந்திருக்கும். முதல் மாடியில் பெரும் கூடம் அமைந்திருக்கும்.

புயல் பாதுகாப்புப் புகலிடம் வெளிநாட்டுத் தொழில்நுட்பத் துணையுடன் மணிக்கு 250 கிலோ மீட்டர் வேகத்தில் வீசும்புயலைத் தாங்கிக் கொள்ளும் வகையில் கட்டப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் புதிய வலிவும் பொலிவும் பெறத் தக்க வகையில் பல திட்டங்களைச் செயலாற்றி வருகின்றது.

புதுக்கோட்டையிலுள்ள பனந்தும்பு தூரிகை (பிரஷ்) உற்பத்தி நிலயம் 14 பெண் ஊழியர்களுக்குப் பயிற்சியும் வேலை வாய்ப்பும் தந்து செவ்வனே நடந்து வருகிறது.

இந்நிலயத்தின் மூலம் மாதமொன்றுக்கு ரூ. 1,100 வீதம் மொத்தம் ரூ. 13,200 வரை பிரஷ்கள் உற்பத்தி செய்து ரூ. 10,798.95-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இங்குச் செய்யப்படும் பிரஷ்கள் நல்ல தரமானதாக இருப்பதால் உள்ளூரிலும், சென்னை, பம்பாய் முதலிய இடங்களிலும் இதற்கு நல்ல ஆதரவு பெருகி வருகிறது.

ஆரம்பச் சுகாதார நிலயம் :

கடியாப்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலயமொன்று கட்டப்பட்டுள்ளது. இதில் மருத்துவ அலுவலருக்கான அறை, மருந்தகம், மகப்பேறு பகுதி, 6 படுக்கைகளுடன், சுகாதார ஆய்வாளர் அறை, மகப்பேறு மேற்பார்வையாளர் அறை, சுகாதார வசதிகள் அறை, மகப்பேறு மேற்பார்வையாளர் அறை, சுகாதார வசதிகள், மற்றும் கட்டுக், கட்டுவதற்கான அறை ஆகியவைகள் உள்ளன. ரூ. 1.60 இலட்சம் செலவில் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மருத்துவமனை :

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கிக் கோட்டம் சுப்பிரமணியபுரம் கிராமத்தில் 24 படுக்கை வசதி கொண்ட முழு அளவிலான மருத்துவமனைக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

சுற்றிலும் தென்னை மரங்களும், மா, பலா மரங்களைக் கொண்டும், முன்புறம் காவிரியின் கிளை வாய்க்காலான அம்மணி சத்திரம் வாய்க்காலின் வடபுறம் குளிர்ச்சியான சூழ்நிலையிலும் இம்மருத்துவமனை அமைந்துள்ளது.

இம்மருத்துவமனை 24 உள் நோயாளிகளுக்கான வசதி, மகப்பேறு, அறுவைச் சிகிச்சை, அரங்கம், அவசரச் சிகிச்சைப் பகுதி மற்றும் ஆய்வகம் கொண்டதாய் அமைக்கப்பட்டுள்ளது. இந்த 24 படுக்கை மருத்துவமனைக்கென மருத்துவர், செவிலியர் மற்றும் பணியாளர்களுக்கான வேலை வாய்ப்பு உள்ளது.

துணைக் கட்டடம் :

புதுக்கோட்டை அரசினர் மருத்துவமனை துணைக் கட்டடம் ஒன்று ரூ. 5.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் 100 படுக்கை வசதி உள்ளது. 1-6-'78-ல் கட்டட வேலை முடிக்கப்பட்டு மருத்துவத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பகுதியில் ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான பகுதிகளும், தீவிர சிகிச்சைப் பகுதியும் அமைய உள்ளன. இதில் மருத்துவர், செவிலியர் மற்றும் பணியாளர்களுக்கான வேலை வாய்ப்பு உள்ளது.

சமூகப்பணி :

புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரி தேசியப் பணித்திட்ட மாணவர்கள், அன்னவாசல் பேரூராட்சியில் 26-5-'78 முதல் 4-6-'78 வரை முகாம் செய்து குளத்திற்குத் தூர் எடுத்தல், தெருக்களைச் செப்பனிடுதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டனர். மாணவர்கள் செய்த பணியின் மதிப்பு ரூ. 5,000 ஆகும்.

வெட்டன் விடுதி கிராமத்தில் அரிசன மாணவர்களுக்கான விடுதி ரூ. 2,18,000 செலவில்

புதுக்கோட்டை அரசினர் மருத்துவமனை துணைக் கட்ட



கட்டப்பட்டுள்ளது. இதில் 45 மாணவர்கள் தங்கிப் படிந்து வருகின்றனர்.

பள்ளிக் கட்டடம் :

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், இரத்தினக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த வைரவயல் கிராமத்தில் ரூ. 29,500 மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டடம் 14-5-'78 முதல் செயல்பட்டு வருகிறது. மூன்று ஆசிரியர்கள் பணி செய்யும் இப்பள்ளியில் 68 மாணவர்களும், 28 மாணவிகளும் பயின்று வருகின்றனர்.

மாணவியர் விடுதி :

புதுக்கோட்டை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி மாணவிகள் விடுதி ரூ. 328 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் 35 பேர், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் 35 பேர், மற்றும் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் 5 பேர், ஆக 75 மாணவிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது.

வீடுகள் :

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வல்லத்திராக்கோட்டை கிராமத்தில் 'கேர்' நிறுவனத்தினர் உதவியுடன் வெள்ளத்திஞல் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட 100 வீடுகளில், 12-2-1978 முதல் தாழ்வான பகுதியிலிருந்து குடிபெயர்ந்த மக்கள், வசித்து வருகின்றனர்.

இவ்வாறு இம்மாவட்டத்தில் நாளும் பல நற்பணிகள் நடந்து வருகின்றன.



ஊருணி அமைக்க ஊரே கூடியது!

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. எந்த ஒரு காரியத்தையும் ஒன்று கூடிச் செய்தால், அதை எளிதாக முடிக்க முடியும்.

ஊருணி ஒன்று அமைக்க வேண்டும். அதற்கு ஊரே ஒன்று கூடி வேலை செய்தது!

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு மாதமும் 30-ஆம் தேதியன்று, கிராம மக்கள் சக்தியைச் சிரமதானப் பணியில் ஈடுபடுத்தும் ஒரு நல்ல திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். அதன்படி திருவில்லிபுத்தூர் வட்டாரம், புதுராமச்சந்திராபுரம் கிராமத்தில் உள்ள ஊருணியைக் கடந்த மே மாதம் 30-ஆம் தேதி முந்நூறுக்கு மேற்பட்ட கிராம மக்கள், இலவச உழைப்பு முகாம் நடத்தி வேலை செய்தனர். ரூ. 3,000 மதிப்புள்ள வேலையை அவர்கள் செய்து முடித்தனர். பிறகு அவர்கள் குளத்தைத் தூர்வாரி, வாய்க்காலும் வெட்டினர். பொதுமக்களுக்கு உற்சாகம் தாங்கவில்லை.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவில்லிப்புத்தூர் சட்டமன்ற உறுப்பினர், மற்றும் அரசு அலுவலர்கள் முதலானோர் மண்வெட்டும் பணியில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

'ஜவான் பவன்!'

கோவை மாநகரில் 'ஜவான் பவன்' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

உபரியாக உள்ள நிலத்தில் கட்டடங்களைக் கட்டி வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வருவாயை முன்னாள் இராணுவத்தினர், அவரைச் சார்ந்தோர்கள் நலனுக்காகச் செயல்படுத்தும் திட்டங்கட்குப் பயன்படுத்துதல்; இத்தொகையினை ஒவ்வொரு ஆண்டும் கொடி நாளன்று வசூலிக்கும் நிதியுடன் சேர்க்கப்பட்டு, நலத் திட்டங்களை அதிகமாகச் செயல்படுத்த உதவுதல் ஆகியவை இதன் நோக்கமாகும்.

'ஜவான் பவன்' இரண்டு அடுக்குகள் கொண்ட மாடிக் கட்டடமாகும். மேலும், மூன்றாவது மாடி கட்டுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கீழ்த்தளத்தில் மொத்தம் கட்டப்பட்டுள்ள கடைகள் 22. ஒவ்வொரு கடையும் 158.08 சதுர அடி பரப்புள்ளது.

முதல் மாடியில் மொத்தம் கட்டப்பட்டுள்ள சிறிய அறைகள் 11. பரப்பு 151 சதுர அடி; பெரிய அறைகள் 6. பரப்பு 224 சதுர அடி.

கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட முன்னாள் இராணுவத்தினரே வியாபாரம் செய்தால், அவர்கட்குச் சிக்கன வாடகையில் 25% தள்ளுபடி சலுகை கொடுக்கப்படுகிறது.

கட்டடப் பராமரிப்பு, சொத்து வரி, நகர்ப்புற நிலவரி, நிர்வாகச் செலவுகள் மற்றும் திரும்பக் கட்ட வேண்டிய கடனைத் தவிர மீதி உள்ள தொகை முழுவதும் தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது. மேற்படி தொகை முன்னாள் இராணுவத்தினர் நலத் துறையின் அமைச்சரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது.

இம் மாவட்டத்தில் முன்னாள் இராணுவத்தினர் மற்றும் அவரைச் சார்ந்தோர், ஊனமுற்றோர் ஆகியோர்க்கு மேற்படி நிதியிலிருந்து இவ்வாண்டில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன



தமிழில் தயாரிக்கப்படும் சிறந்த முழுநீளப் படங்கள், குழந்தைகளுக்கான படங்கள், செய்தி படங்கள், ஆகியவைகளுக்கும் சிறந்த நடிகர்கள், நடிகையர்கள், இயக்குநர்கள், ஆகியோருக்கும் ஆண்டுதோறும் பரிசு வழங்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

கலைச்சிறப்பும் தொழில் நுணுக்கமும் மிக்க படத்தயாரிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஏற்கெனவே செயல்படுகின்ற ஒரு இலட்சம் ரூபாய் பணஉதவித் திட்டத்துடன்கூட இந்தப்பரிசுத் திட்டமும் கூடுதலாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

பரிசுகள் பின்வருமாறு :-

• சிறந்த தமிழ்ப்படம்	ரூ. 50,000-ம் ஒரு பொற் பதக்கமும்
• இரண்டாவது சிறந்த தமிழ்ப்படம்	ரூ. 30,000-ம் ஒரு வெள்ளி பதக்கமும்
• மூன்றாவது சிறந்த தமிழ்ப்படம்	ரூ. 20,000-ம் ஒரு வெள்ளி பதக்கமும்
• சிறப்புப்பரிசு-ஒரு சிறப்புத்தகுதி பெற்ற தமிழ்ப்படம்	ரூ. 25,000-ம் ஒரு வெள்ளி பதக்கமும்
• சிறந்த நடிகர்	தங்கப்பதக்கம்
• சிறந்த நடிகை	தங்கப்பதக்கம்
• சிறந்த இயக்குநர்	தங்கப்பதக்கம்
• சிறந்த கதாசிரியர்	தங்கப்பதக்கம்
• சிறந்த வசனகர்த்தா	தங்கப்பதக்கம்
• சிறந்த இசை அமைப்பாளர்	தங்கப்பதக்கம்
• சிறந்த ஒளிப்பதிவாளர்	தங்கப்பதக்கம்
• சிறந்த பின்னணிப் பாடகர்	தங்கப்பதக்கம்
• சிறந்த பின்னணிப் பாடகி	தங்கப்பதக்கம்
• சிறந்த பாடலாசிரியர்	தங்கப்பதக்கம்
• சிறப்பாக நடித்த நடிகர்	தங்கப்பதக்கம்
• சிறப்பாக நடித்த நடிகை	ரூ. 25,000-ம் வெள்ளி பதக்கமும்
• குழந்தைகளுக்கான சிறந்த படம்	ரூ. 5,000-ம் வெள்ளி பதக்கமும்
• சிறந்த செய்திப்படம்	ரூ. 25,000-ம் பொற் பதக்கமும்
• "ராஜா ஸாண்டோ நினைவு" பரிசு	

இந்தியாவில், இந்தியத் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டு தணிக்கைக் குழுவால் 1977-78-ஆண்டு (1-4-77 முதல் 31.3.78 வரை) தணிக்கை செய்யப்பட்ட, எல்லாத் தமிழ் படங்களும் (மொழி மாற்றம் ஆக்கப்பட்டவை, மறுபதிப்பு செய்யப்பட்டவை, தழுவித் தயாரிக்கப்பட்டவை, நீங்கலாக போட்டியில் கலந்து கொள்ளலாம்



எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும் !

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்
துணையாகும் !

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.

செங்கை மாவட்டத்தில்

வேளாண்மை வளர்ச்சி

செங்கை மாவட்டம் நெல், கடலை, ராகி, கம்பு மற்றும் காய்கறிப் பயிர்களுக்குச் சிறந்து விளங்கும் மாவட்டம் ஆகும்.

சென்ற ஆண்டில் இம்மாவட்டத்தில் 1167 டன் சான்றிதழ் பெற்ற நெல் விதைகளும், 13 டன் கம்பு விதைகளும், 9 டன் ராகி விதையும், 312 டன் நிலக்கடலை விதையும் வேளாண்மைத் துறையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியைப் பெருக்க அதிக விளைச்சலைத் தரக்கூடிய ஐ. ஆர். 20, பவானி, பொன்னி மற்றும் காஞ்சி, கண்ணகி ரகங்கள் 7 இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளன.

விரிய ஒட்டுக் கம்பும், கோ 7 ராகியும் 75,000 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன.

உர உபயோகம் மற்றும் பயிர்ப் பாதுகாப்புப் பணிகளும் செவ்வனே நிறைவேற்றப்பட்டுள்ளன. 32,000 டன் தழைச்சத்து உரங்களும் தலா 5,000 டன் மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்களும் சென்ற ஆண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தழை உர விதை விநியோகத்தில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு, 100 டன் தழை உர விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 25,000 டின் உயிர்க் குடுவைகளும் விவசாயிகளுக்கு வழங்கி மண்ணின் வளத்தைக் காக்கவும் மேம்படுத்தவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தரமான பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பெருமளவில் மழை பெய்து ஏற்பட்ட சேதத்தைத் தவிர்க்க அரசு ஆணையின்படி பூச்சிமருந்துகளுக்கு 25 சதவிகிதம் வரை தள்ளுபடி செய்து மார்ச் மாதம் முடிய விற்பனை செய்யப்பட்டது.

பண்ணைகளும் அமைக்கவும் விவசாயிகளுக்குப் புதிய தொழில் நுட்ப முறைகள் விளக்கப்பட்டன. உழவர் பயிற்சிகளும், மற்றும் சிறுவிவசாயி மேம்பாட்டுத் திட்டம் இவையும் வேளாண்மை முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டன.

கருத்துக் காட்சிகளும், கருத்தரங்கங்களும் நடத்தி வேளாண்மை வளர்ச்சி அடைய ஏற்பாடு செய்யப்பட்டன.

வருகிற ஆண்டில் வேளாண்மை முன்னேற்றத்திற்காகவும், வேளாண்மை இலாபகரமான ஒரு தொழிலாக மலர்வதற்கும் பல புதிய வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. அவற்றில் ஒரு சில:

(1) மானாவாரி சாகுபடிக்காகப் புதிய கருவி, நிலம் தயாரிக்கவும் உரமிடுதல் மற்றும் விதைத்தல் போன்ற வேலைகளுக்கும் பயன்படுத்தக் கூடியது.

(2) சத்தூட்டப்பட்ட தொழு உரம்.

(3) நஞ்சை நிலங்களுக்கு நீலப் பச்சைப்பாசி.

(4) பாய் நாற்றங்கால்.

(5) சூபர் நாற்றங்கள்.

வேளாண்மைத் துறை வேளாண்மை வளர்ச்சிக்காகவும் புல புதியரக வித்துக்களைப் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளையும் மருந்துகளையும் தொடர்ந்து அளிப்பதுடன். வேளாண்மைப் பெருமக்களுக்குச் சிறந்த முறையில் தொடர்ந்து பணியாற்றி வர உறுதி பூண்டுள்ளது.

எனவே, உழவர் பெருமக்கள் இவ்வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி வேளாண்மைத் துறைப் பணியாளர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு நமது மாநில மாநிலத்தின் வேளாண்மை செழிக்கவும், உற்பத்தித் திறன் உயர [illegible]

மதுராந்தகம் பெருவிளக்கப் பண்ணை சாதனை....

செங்கற்பட்டு மாவட்ட வேளாண்மைக் கோட்டத்தைச் சேர்ந்த மதுராந்தகம் கிராமத்தில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட பெருவிளக்கப்பண்ணையினால் 20 விவசாயிகள் கீழ்க்கண்ட நன்மைகள் பெற்றனர்.

இவ்விவசாயிகள் பயிரிட்டு வரும் 22 ஏக்கர் நிலப்பரப்பு துணைக்கால்வாய் ஒன்றின் மூலம் நீர்ப்பாசனம் பெற்று வந்தது. இத் துணைக்கால்வாய் பிரதான கால்வாயைக் கடக்க இவ் விவசாயிகள் நூறுண்டுக் காலமாக பனைமரத்துண்டுகளையும், மண் கால்வாய்களையும் பயன்படுத்தி வந்தனர். இதனால் சீரான நீர்ப்பாசனம் பாதிக்கப்பட்டதுடன், நீர்ச் சேதமும் ஏற்பட்டது. இந் நிலப்பரப்பில் விவசாயத் துறையினரால் பெருவிளக்கப்பண்ணை அமைக்கப்பட்டு ரூ. 1129 செலவில் நிரந்தர மேல்கால்வாய் கட்டப்பட்டது. (இச்செலவுகள் அனைத்தும் விவசாயிகளாலேயே செலவிடப்பட்டது) இந்த மேல் கால்வாய் அமைக்கப்பட்டதால் விவசாயிகள் எவ்வித தொந்தரவும் இல்லாமல் நீர்வசதி பெறுவதுடன் நீர்ச் சேதமும் தடுக்கப்பட்டது.

2. விவசாயிகள் மற்ற ஆண்டுகளை விட கடந்த ஆண்டு 6.8 கிலோ தழைச்சத்து, 5.1 கிலோ மணிச்சத்து, 5.1 கிலோ சாம்பல்சத்தும் அதிக உரமிட்டதால் அதிக லாபம் பெற்றனர்.

3. தங்கள் கிராமத்திற்கு ஏற்ற பயிர்சுழற்சி சம்பா பருவத்தில் பொன்னி நெற்பயிரும், நவரைப் பருவத்தில் ஐ. ஆர். 20 நெற்பயிரும் என்பதை இப் பண்ணையின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

4. இப்பண்ணை விவசாயிகள் விவசாயத் துறை சிபாரிசுப்படி புதிய முறைப்படி பயிரிட்டதால் கூடுதல் லாபமாக ரூ. 140 பெற்றனர்.

இதே போல் 28 பெருவிளக்கப் பண்ணைகள் செங்கற்பட்டு விவசாயக் கோட்டத்தில் அமைக்கப்பட்டன.

இவ்வருடமும் 28 பெருவிளக்கப் பண்ணைகள் அமைக்க [illegible]

மஞ்சள் சாகுபடிக் குறிப்புகள்

மஞ்சள் சாகுபடிக்கு மண்வளம், குறுமண்ணும் வண்டலும் கலந்த வடிகால் வசதியுடைய நிலம் மிகவும் ஏற்றது. வண்டல்மண், வண்டல் கலந்த மணல் மற்றும் குறைவான களியுடைய நிலங்களும் ஏற்றவை.

நடும் பருவம் : மே மாதம் முதல் ஜூன் கடைசி வரை.

நிலம் தயாரிப்பு : நிலத்தை நன்கு உழுது 1.5 அடி இடைவெளியில் பார் அமைக்க வேண்டும்.

விதைக்கிழங்கு : உருண்டையான தாய் மஞ்சளையும், விரல் மஞ்சளையும் உபயோகிக்கலாம். தாய் மஞ்சளானால் ஒரு ஏக்கர் நட 1,000 கிலோவும், விரல் மஞ்சளானால் 1,200 கிலோவும் தேவைப்படும்.

நடவு : விதைக்கிழங்குகளை ஒரு லிட்டர் நீருக்கு 1 கிராம் நனையும் செரசான் விதம் கலந்து நீரில் நனைத்து பார்களின் ஒரு பகுதியில் 3/4 அடி இடைவெளி விட்டு நடவேண்டும்.

உரம் : ஒரு ஏக்கருக்குப் பத்து வண்டி தொழு உரத்துடன் 20 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 40 கிலோ மூரியேட் ஆப் பொட்டாசையும் அடி உரமாக இடவேண்டும். மேலுரமாக 20 கிலோ யூரியாவை நடவு செய்த 30, 60, 90, 120-வது நாட்களில் பார்களில் பயிருக்கும் சிறிது இடைவெளி இடவேண்டும்.

களையெடுப்பு : நட்ட 45-வது 90-வது நாளில் களைகளை வெட்டி நீக்கியபின் மண் அணைக்கவும்.

ஊடுபயிர் : பார்களின் மறுபுறத்தில் வெண்டை, வெங்காயம், உளுந்து, துவரை, பாசிப் பயறு போன்றவற்றைப் பயிரிடலாம், மக்காச் சோளம், ராகி பயிரிட்டால் மஞ்சளின் வளர்ச்சி குறைந்து விளைச்சலும் குறையும்.

நீர்ப்பாசனம் : கிழங்கு நட்டவுடனும், நட்ட மூன்றும் நாளும் நீர்கட்ட வேண்டும். மஞ்சள் முளைக்கும் வரை வாரம் ஒருமுறையும் பின்னர் 10-12 நாட்களுக்கு ஒருமுறையும் நீர்ப் பாய்ச்ச வேண்டும். தண்ணீர் எப்பொழுதும் தேங்கக்கூடாது.

பயிர்ப் பாதுகாப்பு : மஞ்சளை இலைப்புள்ளி மற்றும் தூர் அழுகல் நோயும் தாக்கும். இவற்றைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் டைத்தேன் எம். 45 மருந்தையும் கலந்து 10 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும்.

சாற்றை உறிஞ்சும் அசுவினி, இலைப்பேன் மற்றும் கண்ணாடி இறக்கைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீருக்கு 2 மில்லி ரோகார் அல்லது மெட்டாசிஸ்டாக்ஸ் கலந்து தெளிக்க வேண்டும்.

தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீருக்கு 1 மில்லி லெபாசிட் அல்லது 2 கிராம் செவின் கலந்து தெளிக்க வேண்டும்.

கிழங்குகளின் சாற்றை உறிஞ்சும் செதிள் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீரில் 1.5 மில்லி ஜோலோன் அல்லது 0.5 மில்லி நுவான் கலந்து தெளிக்கலாம். நடுவதற்கு ஒருவாரம் முன் அதே மருந்துக் கலவையில் கிழங்குகளை 15 நிமிடம் நனைத்து எடுக்க வேண்டும்.

விளைச்சல் : ஏக்கருக்கு 7500-8000 கிலோ பச்சை மஞ்சள் கிடைக்கலாம். பக்குவப்படுத்தினால் 1500-1600 கிலோ காய்ந்த மஞ்சள் கிடைக்கலாம்.

மஞ்சள் பக்குவப்படுத்தும் முறை

மஞ்சளை அறுவடை செய்தபின் நன்றாகக் கழுவி மண்ணை நீக்கி, வேரை அகற்றிவிட்டு, தாய்க் கிழங்கு, விரல் கிழங்குகளைத் தனித்தனியே பிரித்து எடுக்க வேண்டும். விதைக்க வேண்டிய மஞ்சளைத் தனியாக எடுத்து வைத்துவிட்டு பக்குவப்படுத்தும் மஞ்சளைத் தாய்க்கிழங்கைத் தனியாகவும், கிழங்குகளைத் தனியாகவும் மண்பாண்டத்தில் அல்லது இரும்பு, தகரப் பாத்திரத்தில் முக்கால் பங்கு மஞ்சளை நிரப்பி அதற்குச் சமமான அளவு சாணம் கலந்த நீரை ஊற்றி; மஞ்சளும் நீரும் சரியாக இருக்கும் பக்குவத்தில் பாத்திரத்தை மூடி அல்லது சாக்குகளினால் கட்டி பின் வேகவைக்க வேண்டும். வெண்ணிற ஆவி வரும்வரை அல்லது ஒரு சிறிய குச்சி கொஞ்ச அழுத்தத்துடன் கிழங்கின் உள்ளே செல்லும் பக்குவத்தில் வேக வைப்பதை நிறுத்த வேண்டும். கிழங்குகளை எடுத்து விரல்களினால் அழுத்தினால் சிவப்பான உள்தோற்றமுடையதாக இருந்தால் நன்றாக வெந்துவிட்டது என்று பொருள்.

வேகவைத்த மஞ்சளை வெயிலில் நன்றாக 7 முதல் 10 நாட்கள் வரை உலர வைக்கவேண்டும். இரண்டு மூன்று முறை திருப்பிப் போட்டு ஒரே மாதிரியாகக் காய வைக்க வேண்டும். பின்னர் சாக்குகளில் கட்டியோ அல்லது கடினமான தரையிலோ போட்டு நன்றாகத் தேய்த்துப் பின்னர் தூசிகளை அகற்றிச் சுத்தப்படுத்த வேண்டும். இவற்றை 'மஞ்சள் பாலிஷர்' என்னும் கருவியில் போட்டு நன்றாகச் சுற்றினால் மஞ்சள் மெருகேற்றப்பட்ட நல்ல தோற்றமுடையதாகத் தோன்றும்.

சேமித்து வைத்தல் : இவ்வாறு பக்குவப்படுத்தப்பட்ட மஞ்சளை உடனடியாக விற்க இயலாவிட்டால் சாக்குகளில் கட்டி 15' 10' 7' அடி ஈரப்பதமற்ற குழிகளில் சாக்குகளோடு அடுக்கிச் சேமித்து வைக்கலாம். குழியின் அடிப் பகுதியிலும் ஓரப்பகுதிகளிலும் நன்றாகக் காய்ந்த வைக்கோல் அல்லது ஓலைப்பாய் போட்டு அதன்மேல் மூட்டைகளை அடுக்க வேண்டும்.

விதைக்கிழங்குகளைச் சேமித்தல் :

விதைக்கிழங்குகளை நிழல் தரும் மரக்கிளையினடியில் குவித்து மேலே காய்ந்த மஞ்சள் இலைகள் அல்லது தென்னை மட்டை போன்றவற்றைப் போட்டு மூடி வைக்க வேண்டும். இவை அடுத்த நடவு வரை பாதிக்கப்படாமலிருக்கும்.

கே. சந்திரகாந்தன்

இரா. நேதாஜி சீதாராமன்

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம். கோவை.

ராகியின் தேமல் நோயும் தடுக்கும் முறைகளும்

ராகியில் தோன்றும் நோய்களுள் தேமல் நோய் மிக முக்கியமானது. இது நச்சுயிரியினால் ஏற்படுகிறது. இந்நோய் தமிழ் நாட்டில் தற்பொழுது கோவை மாவட்டத்தில் அதிகமாக உள்ளது. வடஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் இந்நோய் சுமார் 74 சதம் வரை காணப்படுகிறது. இதனால் பயிரின் விளைச்சலும் 52 முதல் 78 சதம் வரை குறைந்து விடுகிறது. இந்நோய் மார்ச் முதல் ஜூன் வரை விதைக்கப்பட்ட பயிர்களில் அதிகம் காணப்படுகிறது. ஜூலை மாதத்திற்குப் பிறகு விதைக்கும் பயிர்களில் குறைவாகக் காணப்படும்.

நோயின் அறிகுறிகள் :

ராகியின் தேமல் நோய், விதைத்த 45 நாட்களுக்குப் பின்பே தெரிகிறது. 60 நாட்களுக்குப் பின் அறிகுறிகளை நன்கு காணலாம். நோயின் அறிகுறிகள் இளம் இலைகளில் முதலில் தோன்ற ஆரம்பிக்கும். இலைகள் முதலில் வெளிறிய மஞ்சள் நிறமாக இருக்கும். வெளிறிய சிறிய புள்ளிகளும், பசுமையான பாகங்களும் இடையிடையே காணப்படும் இவ்வறிகுறிகள் செடியின் மற்ற இலைகளுக்கும் பரவுகின்றன. நன்கு முதிர்ந்த பயிர்களின் இலைகள் மிகவும் வெளிறிய மஞ்சள் நிறமாக மாறி விரைவில் பழுத்து விடுகின்றன. நோய், இளஞ்செடிகளிலேயே தோன்றினால் கதிர்களில் மண் பிடிப்பதில்லை. முதிர்ந்த பயிர்களில் நோய் தோன்றினால் விளைச்சல் மிகவும் குறைந்து விடும்.

நோய் பரவும் விதம் :

ராகியின் தேமல் நோய் ஒரு வகைத் தத்துப்பூச்சிகளின் மூலம் பரவுகிறது. நோயுற்ற செடியின் சாற்றை உறிஞ்சிய பின்பு நோய் தாக்காத செடிகளில் சென்று இப்பூச்சிகள் சாற்றை உண்ணும் பொழுது நச்சுயிர்கள் பரவுகின்றன.

தடுப்பு முறைகள் :

ராகி நாற்றங்காலில் விதைத்த 15-வது நாளில் நுவக்ரான் 40. இ. சி. 0.05 சதமருந்தை (125 மில்லி மருந்தை 100 லிட்டர் நீர் என்ற அளவில்) கலந்து தெளிக்க வேண்டும். நாற்று எடுத்து நட்ட 15-வது நாட்களில் இருமுறை நுவக்ரான் 40 இ.சி. 0.05 சதம் (250 மில்லி 200 லிட்டர் நீரில்), அல்லது டிமக்ரான் 100-0.05 சதம் (100 மில்லி 200 லிட்டர் நீரில்), அல்லது மெடாசிஸ்டாக்ஸ் இ.சி. 50.0.05 சதம் (200 மில்லி 200 லிட்டர் நீரில்) அல்லது ரோகார் 30 இ. சி. 0.05 சதம் (200 மில்லி-200 லிட்டர் நீரில்) மருந்தைக் கைத்தெளிப்பான் மூலம் காலை வேளைகளில் தெளித்து இந்நோய் பரவாமல் சிறந்த முறையில் தடுக்கலாம். விசைத் தெளிப்பான் மூலம் தெளித்தால் மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம்.

தகவல்:

டாக்டர் டி. கே. கந்தசாமி,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம், கோவை-3.

பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில்...

மீனவர் வகுப்பில், கீழ்க்கண்ட ஆறு பிரிவுகளைச் சேர்ந்த கிறித்துவர்களும் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தமிழக அரசு அறிவித்து உள்ளது.

(1) பரவர் (2) முக்குவர் (3) பர்வத இராஜகுலம் (4) பட்டனவர் (6) செம்படவர் (6) மீனவர்

இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருகிறது. கல்வி நிலையங்களில், குறிப்பாக தொழிற்கல்வி அளிக்கும் கல்வி நிறுவனங்களில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது இவ்வாண்டிலிருந்து. இவ்வுத்தரவு வழுவாமல் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அரசு அறிவித்துள்ளது.

முசுக்கட்டை பயிர் செய்தல்

டாக்டர் டி. எஸ். முத்துக்கிருஷ்ணன்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

பட்டுத் தொழிலில் முசுக்கட்டைச் செடி பயிரிடுதல் முதல் இடத்தை வகிக்கிறது. ஏனெனில் முசுக்கட்டைப் பட்டுப் புழுக்கள், முசுக்கட்டை இலைகளைத் தவிர வேறு எந்த இலைகளையும் உணவாக உட்கொள்ளுவதில்லை. பட்டுப்புழுக்களுக்கு உயர்ந்த ரக முசுக்கட்டைச் செடி இலைகளை உணவாகக் கொடுத்து அதிகமாகப் பட்டு நூலைப் பெற முடியும். முசுக்கட்டை வகைகளிலே பல ரகங்கள் இருக்கின்றன. அதில் கன்வா-2, என். ஆர். 2 எஸ். 54, எஸ். 30, எஸ். 36 என்கிற ரகங்கள் நன்றாக வளர்ந்து ஆண்டு முழுவதும் இலைகளைக் கொடுக்கும்.

முசுக்கட்டைப் பயிர், மணல் கலந்த மண், வண்டல்மண், செம்புரை மண், செம்மண் முதலிய நிலங்களில் நன்கு வளரும். அதிக அமிலத்தன்மையோ அல்லது களர் தன்மையோ உள்ள நிலங்களில் முசுக்கட்டைச் செடி பயிர் செய்தால் வளமாக வராது. முசுக்கட்டைப் பயிர் விதைகள் மூலமும் பயிர் செய்யலாம். ஒட்டுக்கட்டியும் செய்யலாம். பதியன் போட்டும் செய்யலாம். தண்டுகளை நட்டும் பயிர் செய்யலாம். இவற்றிலே தண்டுகளை நடும் முறை தான் நடைமுறையில் கையாளப் படுகிறது.

தண்டு நடுதல் :

பூச்சிகளாலும் நோயாலும் பாதிக்கப்படாத சுமார் ஓராண்டு வளர்ச்சியடைந்த முற்றிய தண்டுகள்தான் நடவிற்குச் சிறந்தவை. நல்ல பருமனாகவும், கணுக்கள் சிதையாமலும் மூன்று வகைக் கணுக்கள் உள்ள தண்டுகளைத்தான் நடவுக்குப் பயன்படுத்த வேண்டும். அவைகளை நேரிடையாகவும் நடலாம். அல்லது நாற்றங்கால்களில் நட்டு வேர்விட்ட பின் பெயர்த்தெடுத்துத் தோட்டங்களிலும் நடலாம்.

நாற்றங்கால்களுக்கு, நல்ல வடிகால் வசதியுள்ள, சற்று மேட்டுப்பாங்கான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நன்றாக ஆழமாக வெட்டி கற்கள், மற்றச் செடிகளின் வேர்களையும் கட்டைகளையும் களைந்தெறியலாம். எக்டருக்கு 20 டன் அளவு நன்கு மக்கிய தொழு உரம் போட வேண்டும். மண்ணைக் கிளறிச் சமன் செய்ய வேண்டும். சமன் செய்த இடத்தில் 1.5 மீட்டர் அகலத்தில் தேவையான அளவு நிலத்திலே மேட்டுப் பாத்திகளை அமைக்க வேண்டும். அப்படிச் செய்வதாலே பாத்தியின் நான்கு பக்கங்களிலும் வடிகால் வசதியோடு அமையும். முசுக்கட்டைத் துண்டுகளை 8.0 × 8.0 செ. மீ. இடைவெளி விட்டு, சற்றுச் சாய்த்தும் அடிப்பக்கக் கணு மண்ணில் நன்கு புதையுமாறும் இருக்கிறமாதிரி தண்ணீர் விட வேண்டும். நட்ட 15 நாட்களில் தண்டுகள் துளிர்விட ஆரம்பிக்கும். 2 மாதம் ஆன பிறகு அவற்றை வேருடன் எடுத்துத் தோட்டத்தில் நடலாம்.

நிலத்தைப் பண்படுத்துதல் :

முசுக்கட்டைச் செடி பல ஆண்டுகள் நீடித்து வளரக்கூடியது. ஆகவே வேர்கள் நன்றாக வளர நிலத்தை 30 முதல் 45 செ. மீ. வரை ஆழமாக 3 அல்லது 4 முறை உழவேண்டும். உழுத பின் களைகளையும், கற்களையும் அப்புறப்படுத்தித் தேவைக்குத் தக்கவாறு பாத்திகளாகப் பிரிக்க வேண்டும்.

உரமிடுதல் :

முசுக்கட்டைச் செடிக்கு உரமிடுதல் மிகவும் அவசியமாகும். தோட்டக்கால் நிலத்திற்கு ஓர் ஆண்டில் எக்டருக்கு 10 முதல் 20 டன் தொழு உரம் போட வேண்டும். நடுவதற்கு முன்பு அடி உரமாகவும் போட வேண்டும். மானாவாரி நிலமானால் ஒரு எக்டருக்கு 5 முதல் 10 டன் தொழு உரம் ஆண்டிற்கு ஒரு முறை போட வேண்டும்.

சத்துமிக்க முசுக்கட்டை இலைகளைப் பெற, இரசாயன உரமும் போட வேண்டும். நீர்ப்பாசன வசதியுள்ள தோட்டக்கால் நிலத்திற்கு, ஓர் ஆண்டில் ஒரு எக்டருக்கு 250 கிலோ தழைச்சத்தும் போட வேண்டும். 100 கிலோ மணிச்சத்து போட வேண்டும். 100 கிலோ சாம்பல் சத்தும் போட வேண்டும். இந்த அளவு போடும் போது 5 பகுதிகளாகப் பிரித்து 5 முறை போட வேண்டும். முதல் முறையாக குச்சிகள் நடுவதற்கு முன் அடியுரமாக 50 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச்சத்தும், 50 கிலோ சாம்பல் சத்தும் போட வேண்டும். அடுத்து இரண்டாம் தடவையாக 50 கிலோ தழைச்சத்தைக் குச்சிகள் நட்டு நான்காம் மாதத்தில் போட வேண்டும். அதாவது முதல் முறையாக இலை அறுவடையான பிறகு இட வேண்டும். 2-ம்முறை உரம் இட்டு 10 வாரங்கள் சென்ற பின் அதாவது 2-ம் முறை இலை அறுவடையான பிறகு 50 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச்சத்தும், 50 கிலோ சாம்பல் சத்தும் 3-ம் முறையாக இட வேண்டும். 3-ம் முறை உரம் போட்ட 10 வாரங்களுக்குப் பின்னாலே, அதாவது 3-வது தடவையாக தழை அறுவடையான பின் 50 கிலோ தழைச்சத்தை நான்காம் தடவையாகப் போட வேண்டும். அதன் பின் 10 வாரங்கள் சென்றபின், நான்காம் முறை இலை அறுவடையான பின் 50 கிலோ தழைச்சத்தை ஐந்தாம் முறையாக இட வேண்டும்.

மானாவாரி நிலத்திற்கு ஒரு எக்டருக்கு வருடத்தில் 100 கிலோ தழைச்சத்தையும், 50 கிலோ மணிச்சத்தையும், 50 கிலோ சாம்பல் சத்தையும் இரண்டு பகுதிகளாகப் பிரித்து இடவேண்டும். முதல் முறை 50 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச்சத்தும் 50 கிலோ சாம்பல் சத்தும் அடியுரமாக இட வேண்டும். இரண்டாம்முறை 50 கிலோ தழைச்சத்து மட்டும் முதல் இலை அறுவடையான பிறகு போட வேண்டும்.

நடவு முறைகள் :

தண்டுகளைக் குழிகளிலும் நடலாம். பார்கட்டியும் நடலாம். கோலார் நடவு முறையிலும் நடவு செய்யலாம். குழிகளில் நடவு செய்யும் முறை மானாவாரி நிலங்களிலே கையாளப்படுகிறது. குழிகளை 30 செ. மீ. X 30 செ. மீ. X 3 செ.மீ. அளவுக்கு அமைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 75 செ. மீ. அளவு இடைவெளியும், குழிக்குக் குழி 75 செ. மீ. இடைவெளியும் இருக்க வேண்டும். தோண்டி, தண்டுகள் நடுதல் நன்று.

பார்கட்டி நடும் முறையானது நீர்ப்பாசன வசதியுள்ள நிலங்களில்தான் கையாள முடியும். 45 செ. மீ. முதல் 60 செ. மீ. வரை இடைவெளியில் பார்களை அமைக்க வேண்டும். துண்டுகளை 15 செ. மீ. முதல் 23 செ. மீ. வரை இடைவெளி விட்டு நட வேண்டும்.

இவை தவிர கோலார் நடவு முறையிலேயே முற்றிய நீளக் குச்சிகளை பாரின் நீளவாக்கிலே படுக்கையாக 3-5 செ. மீ. ஆழத்திலே புதைத்துவிட வேண்டும். இம்முறை மூலம், பெரும்பாலான கணுக்களிலிருந்தும், துளிர்கள் தோன்றி அதிகமாகச் செடிகள் வளர வாய்ப்புண்டு:

நடவு காலம் :

ஜூலை முதல் ஜனவரி வரை அதாவது பருவமழைக் காலங்களில் நடவு செய்தால் செடிகள் விரைவில் வேர்பிடித்து, தழைத்து நன்கு வளரும்.

நீர்பாய்ச்சுதல் :

முசுக்கட்டைச் செடிக்கு வாரத்திற்கு ஒரு முறை அல்லது 10 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். மணல் கலந்த நிலமாக இருந்தால் 7-10 நாட்களுக்கு ஒருமுறையும், களி மண் கலந்த நிலமாக இருந்தால் 15 நாட்களுக்கு ஒருமுறையும் நீர் பாய்ச்ச வேண்டும்.

செய்நேர்த்திகள் :

களையெடுத்தல் :

களை எடுப்பது மண்ணின் ஈரத்தைப் பாதுகாப்பதற்கும், மண் நல்ல காற்றோட்டம் பெறவும், வேர்கள் நல்ல மண்ணில் ஊடுருவிச் செல்லவும் வசதி செய்கிறது. வருடத்தில் நான்கு அல்லது ஐந்து முறை, களை எடுக்க வேண்டும்.

பார் கட்டுதல் :

அவ்வப்போது அழிந்த பார்களைச் சரிசெய்ய வேண்டும். அப்போதுதான் தண்ணீர் உறிஞ்சப்பட்டு, மண்ணின் ஈரம் போகாமல் இருக்கும்.

கட்டை வெட்டுதல் :

முசுக்கட்டைச் செடிகளை வருடம் ஒரு முறை பூமி மட்டத்திலிருந்து 8—15 செ. மீ. விட்டு வெட்ட வேண்டும். தவிர வருடத்தின் இடையே, பட்டுப்புழு

வளர்ப்பு முடிந்த பிறகு, செடிகளை மேல் மட்டத்திலாவது, அல்லது நடுவிலாவது தண்டுகளை வெட்டுதல் அவசியமாகும். இப்படிச் செய்தால்தான் இலைகள் அதிகமாக உற்பத்தியாகும்.

தழை மடித்தல் :

வெட்டப்பட்ட அல்லது உபயோகமற்ற இலைகளை, முசுக்கட்டைச் செடிகளுக்கு இடையில் போட்டு மக்கச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதாலே, மண்ணின் தரம் உயருகிறது.

இலை அறுவடை :

இலைகளை இரண்டு முறைகளில் அறுவடை செய்யலாம். ஒன்று இலைகளை மாத்திரம் பறித்தல், மற்றது தண்டுடன் இலைகளை அறுவடை செய்தல்.

இலை பறிக்கும் முறையிலே :

இலைகளை ஒவ்வொன்றாகப் பறிக்க வேண்டும். செடியின் நுனியிலிருந்து முதல் இரண்டு, இலைகளை விட்டு விட்டு மூன்றும், நான்காம், ஐந்தாம் இலைகளைப் பறித்து இளம் புழுக்களுக்கு உணவாகக் கொடுக்க வேண்டும். புழுக்கள் மூன்றும் முறை சட்டையுரிக்கும் சமயும், செடியின் நுனி பாகத்தை வெட்டிவிட வேண்டும். இதனால் அடி இலைகள் வளர்ந்து, நான்காம், ஐந்தாம் பருவப் புழுக்களுக்கு உணவாகக் கொடுக்க ஏற்ற வகையில் முற்றி விடும்.

இலைகளைத் தண்டுடன் அறுவடை செய்தல் :

நான்காம், ஐந்தாம் பருவத்தில் தண்டுடன் இலைகளைப் புழுக்களுக்கு உணவாகக் கொடுக்கலாம். இதற்கு நில மட்டத்திற்கு 8.15 செ. மீ. மேலே இலைகளோடு தண்டையும் சேர்த்து அறுவடை செய்ய வேண்டும். இம்முறையிலே இலைகள் தண்டுடன் இருப்பதால் சீக்கிரம் காய்ந்துவிடுவதில்லை. மேலும் அறுவடைச் செலவும் குறைவு. இது 'கோலார் முறை' என்றும் குறிப்பிடப்படும்

இலை மகசூல் :

இலை மகசூல், செடியின் வகை, மண்ணின் தரம், உரத்தின் அளவு நீர்ப்பாசன அளவு, திருந்திய சாகுபடி முறைகள் முதலியவற்றைப் பொறுத்து இருக்கிறது. மானாவாரி நிலத்திலே ஒரு எக்டரிலிருந்து ஒரு வருடத்தில் சுமார் 8,000 முதல் 9,000 கிலோ வரையும் நீர்ப்பாசனவசதியுள்ள தோட்டக்கால் நிலத்திலே 25,000 முதல் 30,000 கிலோ வரையும் மகசூல் கிடைக்கும்.

ஒரு விவசாயி ஒரு எக்டர் நிலத்தில் கிடைக்கும் இலைகளைக் கொண்டு, வருடம் ஒன்றிற்கு ஒரு தடவைக்கு 1000 முட்டைகள் வீதம் ஆறுமுறை அதாவது மொத்தத்தில் 6000 முட்டைகள் வீதம் முட்டைகளைப் பொரித்துப் புழுக்களை வளர்க்க முடியும். இதிலிருந்து குறைந்தது 1800 கிலோ கூடுகள் கிடைக்கும். அதனை (1800—30) குறைந்தது ரூ. 54,000த்திற்கு விற்பனை செய்யலாம். இதில் தோட்டப் பராமரிப்பு, புழுக்கள் வளர்க்கும் செலவு இவை இரண்டுக்கும் சேர்த்து ரூ. 21,250 செலவாகும் இந்தச் செலவு போக நிகர இலாபம் ரூ. 32,750 கிடைக்கும்.

முசுக்கட்டையில் முக்கியமாக செதிள் பூச்சிகள், மாவுப் பூச்சிகள் இவை இரண்டும் தாக்கும். அவ்வப்போது தண்டு வெட்டுதல் மூலமாக இப்பூச்சிகளின் தாக்குதலிலிருந்து செடிகளை எளிதில் காப்பாற்றலாம்.

கருமபு சாகுபடிக் குறிப்புகள்

மண் வளம் :

கரும்புச் சாகுபடிக்கு வடிகால் வசதியுடைய வண்டல்மண் மிகவும் ஏற்றது. கரிசல், செவ்வல் மற்றும் மணல் கலந்த பூமியிலும் சாகுபடி செய்யலாம்.

பட்டங்கள்	ஏற்ற ரகங்கள் ஆலைப்பகுதிக்கு	வெல்லம் தயாரிக்க
முன்பட்டம் ... (டிசம்பர்-ஜனவரி).	கோ. 6806	கோ. 449
	கோ. 658	
	கோ. சி. 771	
மத்தியபட்டம் ...	கோ. 419	கோ. 449
(பிப்ரவரி-மார்ச்).	கோ. 449	கோ. 740
	கோ. 658	கோ. 6304
	கோ. 6304	கோ. 650
	கோ. சி. 775, 776, 777	
பின்பட்டம் ...	கோ. 419	கோ. 449
(ஏப்ரல்-மே) ...	கோ. 6304	கோ. 740
	கோ. சி. 7710, 7711	
ஆடிப்பட்டம் ...	கோ. 658	கோ. 449
(ஜூலை-செப்டம்பர்)	கோ. 853	கோ. 740
		கோ. 853

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை.

நிலம் தயாரிப்பு : நிலத்தை 4-5 முறை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். 2 —3 அடி இடைவெளியில் 18—20 அடி நீளத்திற்குப் பார்கள் அமைக்க வேண்டும்.

விதைக்கரணைகள் : ஒரு ஏக்கர் நடவு செய்ய சுமார் 30,000 இரு பருக் கரணைகளும் 20,000 முப்பருக் கரணைகளும் போதுமானது. நோயற்ற, பூச்சி தாக்காத 8 மாதப் பயிரிலிருந்து கரணைகள் எடுக்கலாம். மறுதாம்புப் பயிரில் கரணைகள் எடுக்கக்கூடாது. ஒரு ஏக்கரில் 60,000 பருக்கள் இருக்கும்படி நடவு செய்ய வேண்டும்.

கரணை நடவு :

கரணை நடவு : கரணைகளை 1 அங்குலத்திலிருந்து 3 அங்குல ஆழம் வரை நடவு செய்யலாம். நடும்பொழுது பருக்கள் பக்கவாட்டில் இருக்க வேண்டும். நடும்முன் 500 கிராம் அக்லால் மருந்தை 100 லிட்டர் தண்ணீர் கலந்த கரைசலில் கரணைகளை முக்கி நடவேண்டும்.

உரமிடல் : ஏக்கருக்குப் பத்து வண்டி நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இட வேண்டும். அத்துடன் 150 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் அடியுரமாக இடவேண்டும்.

நடவு செய்த 45-வது 90-வது நாட்களில் சிபாரிசு செய்யப்பட்ட யூரியா மற்றும் 40 கிலோ பொட்டாசையும் மேலுரமாக இட வேண்டும்.

மேலுரத்து இடவேண்டிய அளவு

மாவட்டங்கள்	45-வதுநாள் யூரியா (கிலோ)	90வது நாள் யூரியா (கிலோ)
தென் ஆர்க்காடு, ... தஞ்சாவூர், திருச்சி	120	120
வடஆர்க்காடு, செங்கல்பட்டு, சேலம், தருமபுரி, கோவை.	100	100
மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி	75	75

இலை மூலம் யூரியா தெளித்தல் : இலைமூலம் தெளிப்பதற்கு 2.5 கிலோ யூரியாவை 100 லிட்டர் நீரில் கரைத்து நட்ட 45-வது நாளில் தெளிக்கலாம். மேலுரமாகச் சிபாரிசு செய்யப்படும் யூரியாவில் முக்கால் பாகத்தை இவ்வாறு தெளித்தால் போதுமானது.

நீர்ப்பாசனம் : முதல் 45 நாட்களுக்கு 7 நாட்களுக்கு ஒருமுறையும், 45-90வது நாள்வரை 10 நாட்களுக்கு ஒருமுறையும் பின்னர் வளர்ச்சிப் பருவத்தில் 7 நாட்களுக்கு ஒருமுறையும் நீர் கட்ட வேண்டும். முதிர்ச்சிப் பருவத்தில் மாதம் இருமுறை நீர் கட்டினால் போதுமானது.

பின்செய் நேர்த்திகள் : நடவு செய்த 40-வது 100-வது நாட்களில் மண்வெட்டி கொண்டு வெட்டிக் களையெடுக்க வேண்டும். நடவு செய்த 6 அல்லது 7-வது மாதத்தில் காய்ந்த சோகைகளைக் கழிக்க வேண்டும். இதனால் பக்கக் கிளைகள் வராமலும் குருத்துப் பூச்சி காக்காமலும் தடுக்கப்படுகின்றது.

நடவு செய்த 8-வது மாதத்தில் இரண்டு வரிசைக் கரும்புகளை ஒன்றாகச் சேர்த்து பின்னி விட்டம் கட்ட வேண்டும். இதனால் கரும்பு சாயாமல் பாதுகாக்கலாம்.

ஊடுபயிர் செய்தல் : கரும்பில் ஊடுபயிராகச் சிறிய வெங்காயம், உளுந்து, பாசிப்பயறு போன்ற பயிர்களையும், சணப்பு எனும் பசுந்தாள் உரச் செடியையும் பயிர் செய்யலாம். சூரியகாந்தியை ஊடுபயிர் செய்தால் நல்ல பலன் பெறலாம்.

பயிர்ப்பாதுகாப்பு முறைகள் : தண்டு துளைப் பானையும் இடைக்கணுத்துளைப்பானையும் தடுக்க 3 மில்லி வீதம் கலந்த பயிர் முளைத்தபின் 15 நாள் இடைவெளியில் 2.3 முறை தெளிக்க வேண்டும். அல்லது லிண்டேன் குருணை மருந்தை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் இலைக் குருத்துக்களில் இடவேண்டும். (பானையும் ... நீருக்கு 3 ... தையோடான் மருந்தை 1 லிட்டர்)

கரையானைக் கட்டுப்படுத்த கரணை நடும் பொழுது ஏக்கருக்கு 10 கிலோ வீதம் காம்மா பி. எச். சி. மருந்தை நிலத்திலிட வேண்டும். வெண் புழுக்களைக் கட்டுப்படுத்த டாசினிட் குருணை மருந்தை ஏக்கருக்கு 15 கிலோ அளவில் ஜூன் மாதத்தில் நிலத்தில் பரவலாக இட வேண்டும்.

கரும்புப் பயிரைக் கரிபூட்டை நோய், வாடல் நோய், கரணை அழுகல் நோய் மற்றும் புல்தண்டு நோய் போன்றவைகள் தாக்கலாம். இந்நோய்களை மருந்தடித்துக் கட்டுப்படுத்த இயலாது. நடவு கரணைகளை நோயற்ற பயிர்களிலிருந்து எடுத்து நடுவதால் இந்நோய்கள் ஏற்படாமல் தடுக்கலாம்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் பல நோக்கங்களைக் கொண்ட பல பள்ளத்தாக்குத் திட்டமாகும். இந்தியாவின் மேற்கு மலைத் தொடரைச் சேர்ந்த ஆனைமலைச் சாரலில் உள்ள மாநிலங்களுக்கிடையேயான ஆறுகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீர், மின் வளத்தை தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களின் பயனுக்காகப் பயன்படுத்த இத்திட்டம் விழைகிறது. தமிழ்நாடு, கேரளாவில் தற்போதுள்ள பாசன முறையின் 12,150 ஹெக்டேர் (30,000 ஏக்கர்) நிலங்களின் நீர்த் தேவையை நிலைப்படுத்துதல், பெருக்குதல், 185 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்தல் ஆகியவற்றோடு தமிழ் நாட்டைச் சேர்ந்த கோயம்புத்தூர் மாவட்டத்தின் வறண்ட பகுதிகளில் சுமார் 97,200 ஹெக்டேர்களுக்கு (2,40,000 ஏக்கர்) பாசன வசதி அளிக்க இத்திட்டம் விழைகிறது. இத்திட்டத்தின் கீழுள்ள ஆயக்கட்டு பகுதி பெரும் பாலும் பாசனம் பெறும் புன்செய்ப் பகுதியாகும். மொத்த ஆயக்கட்டுப் பகுதியில் உயரளவு 20 சதவிதப் பகுதி தாழ்ந்த பகுதியில் அமைந்துள்ளதோடு கசிவு நீராலும் பாதிக்கப்படுகின்றன. இங்கு மட்டும்தான் நன்செய் சாகுபடி நடைபெறுகிறது. ஆனைமலையில் உள்ள 5 ஆறுகளையும் சமவெளியில் உள்ள இரண்டு ஆறுகளையும் ஆக மொத்தம் 7 ஆறுகளை அணை ஒன்று கட்டுவதன் மூலமும், திசை திருப்பிவிடும் பணிகளை நிறைவேற்றுவதன் மூலமும், குடைவரைகள் மூலமும் ஒருங்கிணைக்க இத்திட்டம் விழைகிறது. இந்த ஆறுகள், 3,009 அடி உயரத்திலும், + 1,050 அடி உயரத்திலும் பல்வேறு உயரங்களில் அமைந்துள்ளன. இதன் விளைவாக இவ்வாறுகளில் இருந்து விழும் நீரை புனல் மின்சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுத்த இயலுகிறது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு 8,575.50 இலட்சம் ரூபாயாகும். பரஸ்பர உதவிக்காக பொது நீர் நிலைகளை மேம்படுத்தவும், மாநிலங்களுக்கு இடையேயுள்ள ஒத்துழைப்புக்கு இத்திட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கைவண்ணம் காப்போம் கைத்தறியைப் போற்றுவோம்

"கைத்தறித் துணிகளை மேலும் மேலும் ஆர்வத்துடன் ஆதரிக்கும்படி மக்களை - குறிப்பாக தாய்க்குலத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பல இலட்சக் கணக்கானவர்களின் வாழ்க்கை இந்தத் தொழிலுடன் பின்னப்பட்டிருக்கிறது.

பன்னெடுங்காலமாக நாம் பெற்றுள்ள தொழில் நுட்பமும் நேர்த்தியும் இதனுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

கைவண்ணத்துக்கோர் எடுத்துக்காட்டு—கைத்தறித் துணி.

கைத்தறியாளர்களின் வாழ்வு செம்மையடைவது, நமது சமூகத்தில் ஒரு பகுதி செம்மையடைவதாகும்.

கைத்தறி ஆடை மக்களை ஒளி பொங்கச் செய்வதுபோல் நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளி பொங்க செய்யவேண்டியது நம் கடமை. உழவுக்கு அடுத்த இடம், கைத்தறித் தொழில் பெற்றிருக்கிறது.

இதனை காத்திடுவது நமது கடமை."

—பேரறிஞர் அண்ணா



நெசவாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் தன் பணியை ஆற்றுவதில் புதிய உயர்நிலையை எட்டுகிறது கோ-ஆப்டெக்ஸ்.

- நெசவாளர்களுக்கு மூலப்பொருள் வழங்கல்
- தொழில் நுணுக்க சேவை
- விற்பனை அமைப்புகள்
- கைத்தறியில் பாலியஸ்டர் துணி உற்பத்தியில் அபிவிருத்தி
- அரசாங்க கண்ட்ரோல்டு விலையில் ஜனதா துணிவகைகள் விற்பனை
- கைத்தறித் துணிகள் ஏற்றுமதி
- கூட்டுறவு நெசவாளர்களுக்கு வீடமைப்பு போன்ற நல்வாழ்வுத் திட்டங்கள்.
- உற்பத்தியில் பல்வேறு மாதிரிகள்
- புதிய உற்பத்தியில் அபிவிருத்தி

கடந்த ஆண்டில் வாடிக்கையாளர்கள் எங்கள் மீது அதிகப்படியான தொடர்ந்த நம்பிக்கையை வைத்துள்ளனர்.

எனினும், இன்னும் சிறந்த பணிக்காக — நல்ல பலன்களுக்காக — நாங்கள் தொடர்ந்து முயற்சிக்கிறோம்.

கூட்டுறவில் உள்ள நெசவாளர்களுக்காகவும், வாடிக்கையாளர்களுக்காகவும் என்றும் எங்களை அர்ப்பணித்துக் கொள்கிறோம்.

கோ-ஆப்டெக்ஸ் — கைத்தறியில் இந்தியாவின் தலையாய மொத்த விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள்.

கோ-ஆப்டெக்ஸ்

நெற்பயிருக்கு உரமும், குருணை மருந்தும் அளிப்பதற்குகந்த புதிய கருவி!

பொதுவாகப் பயிர்களுக்குத் தேவையான உரங்ளையும், குருணை வடிவில் உள்ள மருந்துகளையும் யிரின் வேருக்கு அருகாமையில் வைப்பதால், உரங் ளும், மருந்துகளும் மிகச் சிறந்த முறையில் பயன் டுத்தப்படுகின்றன.

தற்போது நெற்பயிரில் உரமும், மருந்தும் இடுவ ற்கென ஒரு புதிய கருவியைத் தமிழ்நாடு வேளாண் மைத் துறை வெளியிட்டுள்ளது. இக்கருவியின் மூலம் இடுவதனால் நெற்பயிருக்குப் பரிந்துரைக்கப்படும் யூரியாவில் பாதியளவையும், குருணை மருந்தில் 75 சதவீதத்தையும் குறைத்துக் கொள்ளலாம்.

இக்கருவியைப் பயன்படுத்த வேண்டுமென்றால் பயிரை வரிசைக்கு வரிசை 20 செ.மீ. இடைவெளி இருக்குமாறு நடவு செய்தல் அவசியம். இக்கருவியில் சிறு கொழு ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். முன்பக்கம் சிறு உருளையும், பின்புறம் சமன் செய்யும் பலகை ஒன்றும் இணைத்திருக்கும். கருவியை இழுத்துச் செல்லுவதற்கு வாய்ப்பாக முன்பக்கம் இரண்டு நீண்ட சட்டங்கள் பொருத்தப்பட்டிருக்கும். மேலும் பயிருக்கு இடுவதற்கான யூரியாவையோ அல்லது குருணை மருந்தையோ இடுவதற்கு ஏற்ப தகரத்தாலான கொள்கலன் ஒன்றும் அதிலிருந்து அவற்றை வெளிச் செலுத்தவும், நிறுத்தவும் ஏற்ற முறையில் கட்டை ஒன்றும் பொருத்தப்பட்டிருக்கும்.

போதுமான அளவு யூரியாவையோ அல்லது மணல் கலந்த குருணை மருந்தையோ தகரத்தாலான கொள்கலமிட்டு நிரவிக்கொள்ளுதல் வேண்டும். உரம் இடும்போது இரண்டு வரிசைக்கு அல்லது நான்கு வரிசைக்குத் தேவையான அளவு உரத்தை மட்டிலும் அந்த டப்பாவினுள் போட்டுக் கொள்ளுதல் வேண்டும். பின்னர் இந்தக் கருவியை பயிர் வரிசைகளுக்கு இடையே கைவண்டியைப் போல் இழுத்துச் செல்லுதல் வேண்டும். இழுத்துச் செல்லும்போது வலது கைப் பக்கத்திலுள்ள கைப்பிடியை முன்னும் பின்னுமாக அசைத்தால் தகர டப்பாவில் உள்ள மருந்துக் கலவை அல்லது யூரியாக் கலவை, கொழுவினால் ஏற்படும் பள்ளத்தில் விழும். கருவியினை ஒரு வரிசைவிட்டு ஒரு வரிசையில் இழுத்துச் செல்லுதல் வேண்டும்.

மிகச் சிறந்த முறையிலும், சிக்கனமான முறையிலும் உரமிடுவதற்கும் பயிர்ப் பாதுகாப்பு செய்வதற்கும் வாய்ப்பாகவும் மிக எளிமையான அமைப்பும், மிகவும் மலிவான விலையில் தயாரித்துக் கொள்ளுவதற்கும் ஏற்ற முறையில் அமைந்துள்ள இக்கருவி உழவர்களுக்கு மிகச் சிறந்த முறையில் பயன்படும் என்பது திண்ணம்.

ஆடுதுறையில் உள்ள வேளாண்மைப் பரிசோதனை நிலையத்தில் தயாரிக்கப்பட்ட இக்கருவி , அனைத்துத் தமிழக வேளாண் மக்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான விவரமான தகவல்களுக்குத் தங்கள் பகுதித் துணை வேளாண்மை இயக்குநரை அணுகுங்கள்!

மனுப்படிவத்தில் எளிய முறை

மாநில அரசு வழங்கும் படிப்பு உதவித் தொகையைப் பெற மனுச்செய்யும் அச்சுப் படிவம் ஏழு பக்கங்களைக் கொண்டதாகவும் தேவையற்ற சிறு விவரங்கள் அடங்கியதாகவும் இருந்ததை நன்கு பரிசீலித்து, தேவையற்ற விவரங்களை நீக்கியும் நல்லமுறையில் மாற்றியமைத்து, மாணவர்கள் எளிதில் நிரப்பக் கூடியதாகவும் நான்கு பக்கங்களுக்கு மேற்படாததாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

கோவில்பட்டி பருத்தி, சிறுதானியப் பரிசோதனை நிலையச் செயல்களும், சாதனைகளும்

கோவில்பட்டி பருத்தி, சிறு தானியப் பரிசோதனை நிலையம், கன்னியாகுமரி, காசி நெடுஞ் சாலையில் திருநெல்வேலிக்கும், மதுரைக்கும் இடையில் திருநெல்வேலியிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்நிலையத்தின் மொத்தப் பரப்பளவு 68.84 ஹெக்டர்கள். இதில் 53.29 ஹெக்டர்கள் மானாவாரியாகவும், மீதி 15.55 ஹெக்டர்கள் தோட்டக்காலாகவும் உள்ளன. மொத்த பரப்பளவான 68.84 ஹெக்டர்களில், 7.54 ஹெக்டர்கள் செம்மண் பாங்கானவை. ஏனையவை கரிசல் நிலமாகும்.

இப்பகுதியில் ஆண்டு சராசரி மழையளவு 751. மி. மீட்டர். இவை 44 மழை நாட்களில் பெய்கிறது. இதில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிக அளவு மழை 23 மழை நாட்களில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்கிறது. மழையின் அளவு ஒரே சீராகவும், பரவலாகவும் இருப்பதில்லை. சில ஆண்டுகளில் ஒரே நாளில் 100 மி. மீட்டர் மழை பெய்ததும் உண்டு. இவ்வாறு பெய்வதால் கழனிகளில் உடைப்பும் பெரும் மண்ணரிப்பும் ஏற்படுகின்றன. பொதுவாக இப்பகுதியில் உறுதியற்ற மழையை நம்பியே வேளாண்மை அமைந்துள்ளது.

கோவில்பட்டியில் முதன் முதலில் 1901-ஆம் ஆண்டு வேளாண்மை மாதிரிப்பண்ணையாக வேளாண்மை விளக்குநரின் பொறுப்பில் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு இது வேளாண்மை ஆராய்ச்சி நிலையமாக ஒரு வேளாண்மை உதவி ஆராய்ச்சியாளரின் தலைமையில் இயங்கி வரலாயிற்று. 1948-ஆம் ஆண்டு அரசிதழ் பதவி பெற்ற ஒரு கண்காணிப்பாளரின்கீழ் இவ்வாராய்ச்சி நிலையம் செயல்படத் தொடங்கியது.

இப்பகுதியின் முக்கிய பணப் பயிராகிய பருத்தியில் அபிவிருத்தி காண்பதற்கும், மானாவாரி பகுதிக்கேற்ற புதிய உழவியல் கருவிகளையும் திருந்திய சாகுபடி முறைகளையும் கண்டுபிடிப்பதற்கான குறிக்கோளுடனே ஆர காலத்தில் இந்நிலையம் செ பட்டு வந்தது. இப்பகுதி மானாவாரி கரிசல் நிலங்க பருத்தியுடன், சிறுதானியங் கலப்புப் பயிராகவும், சு பயிராகவும் சாகுபடி செய் படுகின்றன. இதைக் கருத் கொண்டு, பிற்காலத்தில் கிய சிறுதானியப் பயிர்களா சோளம், கம்பு, ராகி ப களிலும் அபிவிருத்தி ஆரம் கப்பட்டது.

தென் மாவட்டங்களா கன்னியாகுமரி, திருநெல்வே இராமநாதபுரம், மதுரை ஆ மாவட்டங்களில் அவ்வப்போ சாகுபடிக்காகப் புதிய ரகங் அளிப்பதற்கும், அவைகள் அமோக விளைவு பெற விஞ்ஞா சாகுபடி உத்திகளைப் பரிந்துரை கும் நோக்குடன் இந்நிலைய 1962-ஆம் ஆண்டு மண்ட வேளாண்மை ஆராய்ச்சி நில மாக உயர்நிலை பெற்று முன்னரே செயல்பட்டு பயிர் இன அபிவிருத்தி வோடு, உழவியல்

வதியியல், பூச்சி இயல், நோய் யல் பிரிவுகளும் புதிதாக ரம்பிக்கப்பட்டன. 1975-ஆம் ண்டு முதல் இவ்வாராய்ச்சி லேயம், பருத்தி, சிறுதானி ங்கள் பரிசோதனை நிலையம் னப்பெயர் மாற்றம் பெற்றுள் து. இந்நிலைய பயிர் நிபுணர் ாநில பருத்தி, சிறுதானியங்கள் புணராக நியமிக்கப்பட்டுள் ார்.

சோளப்பயிர் இன அபி ருத்திக்காக 1970-ஆம் ஆண்டு தல் தனியான ஒரு திட்டம் யங்கி வருகிறது. இந்தப் பகுதி ல் கம்புப் பயிர் பசுங்கதிர் நாயினால் பெரிதும் பாதிக்கப் ட்டு, கம்பு சாகுபடி செய்யவே ழவர் பெருங்குடியினர் தயக்க ற்றனர். இந்த அவலநிலை ங்க கம்புப் பயிரில் பசுங்கதிர் நாய் தாக்காத ரகங்கள் கண்டு டிப்பதற்காகத் தனித்திட்டம் ன்று 1977-ஆம் ஆண்டு ஆரம் க்கப்பட்டுச் செயல்படுகிறது.

எண்ணெய் வித்து உற்பத்தி ல் தொடர்ந்து பற்றுக்குறை ாக உள்ள நமது மாநிலத்தில், ண்ணெய் வித்து உற்பத்தியை யர்த்தும் நோக்கத்தோடு சும்பா ஆராய்ச்சித் திட்டம் ன்று 1960-ஆம் ஆண்டு தொடங் ப் பெற்று, கே. 1 என்ற புதிய சும்பா ரகமொன்று வெளி டப்பட்டுள்ளது. மேலும், அதி ரித்து வரும் எண்ணெய்ப் பற்றுக் றையை நீக்க சூரியகாந்தி ஒரு றந்த பயிராகும். இப்பயிர் ல்லா மண்பாங்கு, காலநிலை ளிலும் எளிதில் வளரும் இயல் னது. ஆனால், இப்பயிரிலும் அதிக விளைவு தரவல்ல புதிய ரகங்கள் , கண்டுபிடிப்பதற்கு 971-ஆம் ஆண்டு சூரியகாந்தி ஆராய்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுச் செயல்படு கிறது.

உழவர்களின் விளைநிலங்களி லுள்ள மண்ணின் வளத்தை அறுதியிட்டு அதற்கேற்ப இரசா யன உரப்பரிந்துரைகள் வழங்கும் நோக்குடன் அரசு மண் பரி சோதனை ஆய்வுக்கூடம் ஒன்று இவ்வாராய்ச்சி நிலையத்தில்தான் அமைந்துள்ளது. நடமாடும் பரிசோதனை ஆய்வுக்கூடம் றும் செயல்படுகிறது. பூச்சி மருந்துகளின் தன்மை, தரம் இவைகளைக் கண்டறிய பூச்சி மருந்துகள் தர ஆய்வுக்கூடம் ஒன்றும் இந்நிலையத்தில் உள்ளது.

வேளாண் காலநிலை ஆராய்ச்சி யும் 1901-ஆம் ஆண்டு முதல் நடை பெற்று வருகிறது. அகில இந்திய காலநிலைப் பதிவு நிலையங்களுள் ஒன்றாகச் செயல்படுகிறது. இங் குப் பதிவு செய்யப்படும் பல்வகை காலநிலை விவரங்கள் பூனைவி லுள்ள அகில இந்திய பருவநிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப் பப்படுகிறது. பூனைவிலிருந்து தான் எல்லா மாநிலங்களுக்கு மான பயிர்கள் பருவநிலை அறிக்கை வெளியிடப்படுகின் றது.

அகில இந்திய அளவில் மானா வாரி பருத்தி, சோளம், கம்பு, ராகி, குசும்பா, சூரியகாந்தி ஆகிய பயிர்களில் ஒருங்கிணைந்த பரிசோதனைகள் இங்கு மேற் கொள்ளப்படுகின்றன. அகில உலக வெப்ப மண்டலப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தின் ஒருங் கிணைந்த மையங்களுள் ஒன்றாக வும் இந்நிலையம் செயல்படுகிறது.

இந்தப் பரிசோதனை நிலையத்தில் பல பிரிவுகளிலும் 1901 முதல் 1976 முடிய தீவிரமாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டு வெளியிடப்பட்டுள்ள பயிர் ரகங்களாவன :

1. **பருத்தி:-** சி. 7, எ. 10, கே. 1, கே. 2, கே. 5, கே. 6, கே. 7, கே. 8, பாரதி (எம்.சி. யு. 6).

2. **சோளம்:-** கே. 1, (தீவனப் பயிர்), கே. 2 (தானியப்பயிர்) கே. 3 (தானியம், தீவனம்), கே. 4 கோவில்பட்டி நெட்டை (வீரியச் சோளம்).

3. **கம்பு:-** கே. 1.

4. **ராகி:-** கே. 1, கே. 2, சாரதா, பி.ஆர். 202.

5. **குதிரைவாலி :-** கே. 1.

6. **தினை :-** கே.1.

7. **குசும்பா:-** கே. 1.

8. **சூரியகாந்தி:-** கே. 1.

9. **மிளகாய்:-** கே. 1.

1977-ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட ரகங்கள்

1. **சோளம்:-** கே. 5.

2. **கம்பு:-** கே. 2, கே.3.

3. **சூரிய காந்தி:-** கே. 2.

1978-ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட புதிய ரகங்கள்

1. **சோளம்:-** கே. 6.

2. **ராகி:-** கே.5., கே.6.

3. **பருத்தி:-** கே. 9.

4. **தினை:-** கே 2.

5. **குதிரைவாலி:-** கே. 2.

6. **பனிவரகு:-** கே. 1.

7. **மக்காச்சோளம்:-** கே.1.

பயிர் இன அபிவிருத்தியோடு, புதிய உழவியல் உத்திகள், பூச்சி, நோய்களைக் கட்டுப்படுத்தும் முறைகள், உர பரிந்துரைகள் ஆகியவைகளும் உழவர்களின் நிலங்களில் ஹெக்டர் விளைவைக் கணிசமாக உயர்த்த உதவுகின் றன.

சூரியகாந்தி விதையின் முளைப்புத் திறனை அதிகரிக்க விதைகளை 12 மணி நேரம் நீரில் ஊறவைத்து விதைக்க வேண்டும் என ஆராய்ச்சி மூலம் முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பயிரில் அயல் மகரந்தச் சேர்க்கை விதை கட்டும் திறனை அதிகரிக்கின்றது. இதற்குப் பூக்களைக் கையினால் தடவுவதும், மக்காச்சோளம், கம்புப் பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்வதும் நல்ல பலனை நல்கி உள்ளது.

சோளச் சாகுபடியில் நாற்று பரவி பின்னர் நடவு செய்தால் குருத்துப்பூச்சி கட்டுப்படுத்தப் படுவதோடு, உயர் விளைவும் கிடைக்கிறது எனக் கண்டுபிடிக் கப்பட்டு உழவர்களுக்குப் பரிந் துரைக்கப்பட்டுள்ளது.

பிளானோபிக்ஸ் போன்ற பயிர் வளர்ச்சி ஊக்கிகளைத் தெளிப் பதன் மூலம் சூரியகாந்தியில் ஹெக்டர் விளைவை அதிகரிக்க லாம் என அறுதியிடப்பட்டுள் ளது. இப்பயிர் வளர்ச்சி ஊக்கி மானாவாரி பருத்தியில் பாங்காக விளைவை அதிகரிக்கின்றது என வும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மக்காச்சோளப் பயிரிலும், பருத்திப் பயிர்களிலும் ஊடு பயிர்கள் சாகுபடி செய்யின் சாகுபடி திறன் கூடுகின்றது என முடிவு செய்யப்பட்டு உள்ளது.

பூச்சி நோயியல் பிரிவுகளில் பல பயிர்களிலும் தோன்றும் பூச்சி நோய்களை நன்கு கட்டுப் படுத்தும் வழிமுறைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பயிர்ப் பாதுகாப்பில் ஒருங்கிணைந்த அணுகு முறைகள் வகுக்கப்பட் டுள்ளன. புதியதாக விற்பனைக்கு வரும் பூச்சி, பூஞ்சாண மருந்து களின் திறன் கழனிகளில் பல பயிர்களில் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் உழவர்களுக்குப் பரிந் துரைக்கப்படுகின்றன.

உழவர் பெருங்குடியினரின் விளைநிலங்களில் பயிர்ப் பாது காப்பு உழவியல் முறைகளைக் கையாளும்போது அவ்வப்போது எழும் பிரச்சினைகளை உழவர் களே நேரில் இங்கு வந்து தெரிந்து தீர்த்துக் கொள்ளும் நோக்குடன் பயிர்க் காப்பகம் ஒன்று இந் நிலையத்தில் செயல்படுகிறது.

பல பயிர்களுக்கும் தேவை யான இரசாயன உரத்தேவைகள் வேளாண்மை வேதி இயல் பிரிவில் ஆராயப்பட்டு உழவர் பெருங்குடியினருக்குப் பரிந்து ரைக்கப்படுகின்றன. பயிரியல் இன அபிவிருத்தியில் பல நிலை களில் இருந்து தானியங்கள் மாதிரி எடுத்து, அவைகளில் அடங்கியுள்ள புரதம், அமினோ அமிலம் இவைகளின் அளவு, வேளாண்மை வேதியியல் பிரி வில் கண்டுபிடிக்கப்படுகின்றது. இஃது எதிர்காலத்தில் வெளி யிடப்படும் உயர்விளைச்சல் ரகங் களில் அதிக உணவுச் சத்துக்கள் அடங்கியிருக்கத் துணை புரியும்.

புதிய பலநோக்கு உழவியல் கருவி:

1978-ஆம் ஆண்டு இந்நிலையத் தில் தனிச்சிறப்பு வாய்ந்த பல நோக்கு உழவியல் கருவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இப் புதிய கருவி நிலம் தயாரிக்கவும், மேட்டுப்பாத்திகள் அமைக்கவும், உரமிடவும், வரிசையில் விதைக்க வும், விதைகளை மூடவும், பின் செய்நேர்த்தி செய்யவும் ஏற்றது. இக்கருவியின் வடிவமைப்பை மதுரையிலுள்ள தமிழக வேளாண் தொழில் கழகம் ஏற்று அதிக அளவு உற்பத்தி செய்து விநி யோகித்து வருகின்றது. இதன் விலை ரூ. 550 ஆகும்.

இப்பரிசோதனை நிலையம் தென் மாவட்ட உழவர் பெருங்குடி மக்களின் வேளாண்மைப் பிரச் சினைகளை உடனுக்குடன் கவ னித்து ஆவன செய்து வருகின் றது. இப்பகுதியில் தற்பொழுது சாகுபடியில் உள்ள ரகங்களை விடவும் மேலும் அதிக விளைவு அளிக்கும் புதிய புதிய ரகங்களை உருவாக்குவதிலும், புதிய உத்தி களைக் கண்டுபிடிப்பதிலும் தீவிர ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தென் மாவட்டங்களிலுள்ள உழவர் களின் பொருளாதார வளர்ச்சி யில் இக்கோவில்பட்டி பருத்தி, சிறுதானியப் பரிசோதனை நிலை யத்திற்குக் கணிசமான பங்கு உண்டு.



புதிய பலநோக்கு உழவியல் கருவி

கோவை மாவட்டத்தில் வேளாண்மைத் திட்டங்கள்

கோவை மாவட்டம் வேளாண்மை வளர்ச்சியிலும், அதன் தொடர்பாகத் தொழில் வளர்ச்சியும் சிறந்து விளங்கும் தமிழகத்திலே ஓர் உன்னதமான, மாவட்டம் என்றே கூறலாம். கோவை மாவட்டத்தில் 4 வேளாண்மைக் கோட்டமும் 41 ஊராட்சி ஒன்றியமும் உள்ளன. இம்மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 15,54,916 எக்டர். அதில் நிகர சாகுபடி பரப்பு 6,70,223 எக்டர். இம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுகின்றன:

1. கீழ் பவானி அணைக்கட்டுத் திட்டம்.
2. பரம்பிக் குளம் ஆளியாறு திட்டம்.
3. புதிய அமராவதித்திட்டம்.
4. பழைய அமராவதித்திட்டம்.
5. மேல் பவானித் திட்டம்.
6. காளிங்கராயன் வாய்க்கால்.
7. தடப்பள்ளி வாய்க்கால்
8. அரக்கன் கோட்டை வாய்க்கால்.

பாசனத் திட்டங்களின் மூலமும், கிணற்றுப் பாசனம் மற்றும் குளங்களின் பாசனத்தின் மூலம் 2,66,856 எக்டர் நீர் பாய்ச்சப்படுகிறது.

இம்மாவட்டத்தின் சராசரி மழை அளவு 694 மில்லி மீட்டர், நெல், பருத்தி, நிலக்கடலை, சோளம், ராகி, கம்பு, கரும்பு, வாழை, மஞ்சள், பயறு வகைகள், காய்கறி வகைகளும் சாகுபடி செய்யப்படுகின்றன. அநேகமாக எல்லாவித பயிர் வகைகளும், எல்லாக் காலங்களிலும் பயிரிடப்படுகின்றன. ஆண்டு முழுவதும் ஏதாவது ஒரு பயிர் இருந்து கொண்டே இருக்கும். இம்மாவட்டத்தில் பருத்தி நூற்பு ஆலைகளும், பருத்தி விதை பிரிக்கும் ஆலைகளும் அதிகம் உள்ளன. இதனால் பருத்தி ஒரு முக்கிய பயிராகப் பயிரிடப்படுகிறது. இரண்டு கரும்பு ஆலைகள் உள்ளன. கரும்புப் பயிரும் கணிசமான விஸ்தீரணத்தில்பயிரிடப்படுகிறது. நிலக்கடலையும், புகையிலையும் முக்கியப் பயிர்களாக உள்ளன. மலைத் தோட்டப் பயிர்களும் உள்ளன. குளிர் கால [illegible]காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. உணவுப் பயிர் [illegible] சிறு தானியப் பயிர்கள் சாகுபடி குறிப்பிடத் [illegible] அளவு செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் முக்கியமாகப் பயிரிடப்படும் பயிர்களும், அதன் விஸ்தீரணமும் வருமாறு:

		எக்டர்
நெல்		113800
சோளம்	...	186740
கம்பு	...	47552
மக்காச்சோளம்	...	19000
ராகி	...	33784
நிலக்கடலை	...	105000
பருத்தி	...	50000
கரும்பு	...	32000
புகையிலை	...	13322
தென்னை	...	12762

இம்மாவட்டத்தில் ஒரு போக நஞ்சைச் சாகுபடியும், இருபோக நஞ்சைச் சாகுபடியும், மூன்று போக நஞ்சைச் சாகுபடியும் செய்யப்படுகிறது. தோட்டக்கால் பூமியில் இரு போகமும், மூன்று போகமும் சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரி நிலங்களில் பெரும்பாலும் ஒருபோகச் சாகுபடி மட்டுமே செய்யப்படுகிறது. மானாவாரி நிலங்களிலும் இருபோகச் சாகுபடியை ஊக்குவிக்க குறுகிய கால அமோக விளைச்சல் தரவல்ல சிறுதானியங்கள் மற்றும் நிலக்கடலை முதல் பயிராகவும், பயறுவகைகளையும், எள் போன்றவைகளை இரண்டாம் பயிராகவும் சாகுபடி செய்யப்படுகிறது. இருபோகச் சாகுபடி முறையை மானாவாரி நிலங்களில் செம்மையாகச் செயல்படுத்த இம்மாவட்டத்தில் பெரு விளக்கப் பண்ணைகள் அமைத்து அதன் மூலம் உழவர்களைப் பெருமளவு கடைப்பிடிக்க பரிந்துரை செய்யப்படுகிறது. 182 பெருவிளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. இதன் மூலம் மானாவாரி சோளப்பயிராக ஐ. எஸ். 3541 ரகமும், உரமிடும் பழக்கமும், நெல் நாற்றங்காலில் டை அம்மோனியம் பாஸ்பேட் உரமிடுதலும், நிலக்கடலைப் பயிருக்கு நுண்ணூட்டச்சத்து, ஜிப்சம் இடுதலும் பிரபலமடைந்து வருகிறது. 361 அனுசரணை ஆராய்ச்சி பாத்திகள் அமைக்கப்பட்டன. அனுசரணை ஆராய்ச்சி முடிவுகளின்படி புதிய ராகி, சோளம், மக்காச்சோளம், பயறு ரகங்கள் தேர்வு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

1977-78ஆம் நிதியாண்டில் பல்வேறு வேளாண் துறைத் திட்டங்களைத் தீவிர முறையில் செயல்படுத்தியதின் மூலம் 2.98 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் 3.68 இலட்சம் மெட்ரிக் டன் சிறு தானியமும், 2.18 இலட்சம் டன் எண்ணெய் வித்து உற்பத்தியும், 36570 டன் பயறு வகை உற்பத்தியும் ஏற்பட்டுள்ளது. அமோக விளைச்சல் திட்டத்தின் மூலம் அமோக விளைச்சல் தரும் நெல் ரகங்களும், வீரிய சிறுதானிய வித்துக்களும் கீழ்க்கண்ட பரப்பில் 1977-78-ஆம் நிதியாண்டில் சாகுபடி செய்யப்பட்டன.

		எக்டர்
அமோக விளைச்சல் நெல் ரகங்கள்	...	108676
வீரிய சோளம்	...	11804
வீரிய கம்பு	...	26242
வீரிய மக்காச் சோளம்	...	19000
அமோக விளைச்சல் ராகி ரகங்கள்	...	27634

புரோடீனியா புழு ஒழிப்பு இயக்கம்

662.2 டன் சான்று பெற்ற நெல் மற்றும் சிறு தானிய விதைகள் வேளாண்மைப் பண்டகசாலை மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய வித்து உற்பத்தி: இத்திட்டத்தைச் செயல்படுத்த மூன்று மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் கோபி, கோவை, பொள்ளாச்சியை மையமாகக் கொண்டு பணியாற்றுகின்றனர். வேளாண்மைப் பண்டகசாலை மூலம் 654 டன் பொறுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. நுண்ணூட்டச்சத்து 45 டன் விநியோகிக்கப்பட்டுள்ளது.

பயறு வகைத் திட்டங்கள்:

இம்மாவட்டத்தில் பயறு வகை உற்பத்தியைப் பெருக்க தரமான பொறுக்கு வித்துக்கள் விநியோகம் செய்ய உழவர்களின் வயலிலும், அரசு விதைப் பண்ணையிலும் 136 எக்டரில் விதைப் பண்ணை அமைத்து விதை சேகரம் செய்து உழவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. பயறு [illegible] பரப்பை அதிகரிக்கும் பொருட்டு சிறுதானிய[illegible] கரும்பு, நிலக்கடலை, பருத்தி ஆகிய பயிர்க[illegible] ஊடுபயிராகவும் சாகுபடி செய்யப்பட்டுள்ள[illegible] விதை விநியோகத்துடன் அல்லாமல் பயறு வ[illegible] பயிர்களின் மகசூலை அதிகரிக்கும் பொரு[illegible] 18308 நுண்ணுயிர் ராசி கலந்து விதைத்த, [illegible] வத்தே பயிர்ப் பாதுகாப்பு மேற்கொண்டு மக[illegible] பெருக்கப்பட்டுள்ளது.

சிறு உழவர்களும் பயறு வகைப் பயிர்[illegible] சாகுபடி செய்ய 26 மெட்ரிக் டன் விதைக்கு [illegible] கிலோவுக்கு ரூபாய் ஒன்று வீதம் மான்யத்துட[illegible] வழங்கி, நுண்ணுயிர் ராசிகளை இலவசமாக [illegible] யோகம் செய்து, 840 எக்டரில் எக்டருக்கு ரூபா[illegible] 7-50 மான்யத்துடன் பயிர்ப் பாதுகாப்பும் மே[illegible] கொள்ளப்பட்டது. 5 விசைத் தெளிப்பான்[illegible] ரூ. 500 மான்யத்துடன் வழங்கப்படுகிறது.

உர விநியோகம்: கோவை மாவட்டத்[illegible] சென்ற நிதியாண்டில் 43,055 டன் தழைச்ச[illegible] உரமும், 16,337 மணிச் சத்து உரமும், 16,[illegible] டன் சாம்பல் சத்து உரமும் விநியோகம் செய்[illegible] பட்டுள்ளன. உர விநியோகம் இம்மாவட்டத்[illegible] உள்ள 1,048 சில்லரை விற்பனை நிலையங்[illegible] மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. சில்ல[illegible] விற்பனை நிலையத்தில் தரமான உர விநியோ[illegible] செய்ய உரக்கட்டுப்பாட்டுச் சட்டம் செ[illegible] படுத்தப்படுகிறது.

பயிர்ப் பாதுகாப்பு:

இம்மாவட்டத்தில், நஞ்சை மற்றும் தோ[illegible] டக்கால் பூமியில் தொடர்ந்து பயிர்கள் [illegible] செய்யப்படுவதால் எல்லாப் பயிர்களையும் [illegible] நோய்களின் தொல்லை அதிகமாக உள்ளது. [illegible] நோய்களைக் கட்டுப்படுத்த இம்மாவட்ட[illegible] உள்ள 41 ஊராட்சி ஒன்றியங்களில் செய[illegible] வேளாண்மைக் கிடங்குகளிலிருந்து ரூபாய் [illegible] இலட்சம் மதிப்புள்ள பூச்சி பூஞ்சான மருந்[illegible] விநியோகம் செய்யப்பட்டுள்ளன. வேளாண்[illegible] விநியோகம் செய்யப்பட்டுள்ளன. வேளாண்[illegible] துறையில் உள்ள 787 விசைத் தெளிப்பா[illegible] வாடகைக்கு விட்டு 1 இலட்ச ரூபாய் [illegible] விக்கப்பட்டுள்ளது. தனியார் பூச்சி மருந்[illegible] உரிமம் வழங்கப்பட்டு தரமான [illegible]

செய்ய பூச்சி மருந்து சட்டம் அமல் செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் தொடர்ந்து, தொல்லை தரும் பூச்சிகளான நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப் பூச்சி, நெல்லில் புகையான் மற்றும் தண்டுப்புழுவைச் சீரிய முறையில் கட்டுப்படுத்த தரை வழி மருந்து தெளிக்கும் பணியில் நிலக்கடலையில் 1,735 எக்டரிலும், நெல்லில் புகையானைத் தடுக்க 4,500 எக்டரிலும், தண்டுப்புழுவைத் தடுக்க 5,375 எக்டரிலும் வேளாண் துறை மூலம் மருந்து தெளிக்கப்பட்டது.

நிலக்கடலைப் பயிரில் சிவப்புக் கம்பளிப் பூச்சியை ஒழிக்கவும், நெல்லில் தண்டுப்புழுவைத் தடுக்க மருந்து அடிக்கும் செலவில் எக்டருக்கு ரூ. 7.50 மான்யமும் வழங்கப்பட்டுள்ளது.

புரொடீனியா ஒழிப்பு முகாம்: சென்ற நிதியாண்டில் பிப்ரவரி மார்ச் மாதத்தில் இம்மாவட்டத்தில் உடுமலைப் பகுதியில் திடீரென மர்மப் புழுவான புரொடீனியா புழுவால் பயிர் இனத்தையே அழிக்கும் அபாயம் தோன்றியது. இதனை முழுமையாகக் கட்டுப்படுத்த இம்மாவட்டத்தில் பணிபுரியும் விரிவாக்கப் பணியாளர்களைச் சேகரம் செய்து புரொடீனியா ஒழிப்பு இயக்கம் நடத்தி 2,272 எக்டரில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்து இப்புழுவை ஒழித்து உழவர்களைத் தொல்லையிலிருந்து பாதுகாக்கப்பட்டது. உழவர்களுக்குப் பூச்சி மருந்து விநியோகத்தில் ரூ. 48,392-ம் மான்யம் வழங்கப்பட்டது.

பயிர்களைப் பூச்சி நோய்த் தொல்லைகளிலிருந்து வருமுன் காக்க 32 இடங்களில் பூச்சி பூஞ்சாள இயல் சர்வே மேற்கொள்ளப்படுகிறது. விளக்குப் பொறி வைத்து வயல்களில் தாய் அந்துப்பூச்சிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சென்ற நிதியாண்டில் அக்டோபர், நவம்பரில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பயிர்கள் பூச்சி நோய்களினின்று தடுக்க உழவர்களுக்கு 25 சதம் மான்யத்தில் பூச்சி பூஞ்சாள மருந்துகள் மான்ய விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. ரூபாய் 10.126 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

அரசு விதைப் பண்ணைகள் :

இம்மாவட்டத்தில் 6 அரசு விதைப் பண்ணைகளும், ஒரு மூல வித்து எண்ணெய் வித்து உற்பத்தி நிலையமும் செயல்படுகிறது. இம்மாவட்டத்திற்குத் தேவையான சான்றிதழ் வித்துக்களையும், வீரிய வித்துக்களையும் பெற அரசு விதைப்பண்ணையுடன் தனியார் வயல்களில் விதைப் பண்ணை அமைத்து விதை சேகரம் செய்யப்படுகிறது. நெல் 382 டன்னும், சிறுதானியம் 257 டன்னும் உற்பத்தி செய்து உழவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

தென்னை : தரமான நாற்றுகள் தயாரித்து விநியோகிக்க இம்மாவட்டத்தில் இரண்டு நாற்றங்கால்கள் உள்ளன. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 1.5 இலட்சம் கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. இரண்டு ஒட்டுண்ணி தயாரிக்கும் நிலையமும் உள்ளன. இதன் மூலம் கருந்தலைப்புழு ஒழிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.



கரும்பு அபிவிருத்தித் திட்டம், ஒரு தனி மாவட்ட வேளாண்மை அலுவலரை தலைமையாகக் கொண்டு இயங்கி வருகிறது. இதன் மூலம் புதிய தொழில் நுணுக்கங்கள் அறிமுகப்படுத்துவதுடன், செயல் விளக்கங்கள் அமைத்து அதிக மகசூல் எடுக்கும் வழிகள் உழவர்களிடையே புகுத்தப்படுகின்றன. கரும்புக் கரணைகள் தயாரித்து வழங்குகின்றனர்.

பருத்தி சாகுபடிக்குக் கூடுதல் வேளாண்மை இயக்குநர் அவர்கள் கோவை தலைமையிடமாக அமைத்து மூன்று துணை வேளாண்மை இயக்குநர்கள் ஒத்துழைப்புடன் மான்ய திட்டங்களைச் செயல்படுத்துகின்றார். விசைத் தெளிப்பான்கள், பருத்தி விதைகள், நுண்ணூட்டச்சத்து வழங்குதல், விளக்கப் பாத்திகள் அமைத்தல் முதலியன செயல்படுத்தப்படுகின்றன. விளம்பரப் பணிக்காக வானொலி, செய்திப் பத்திரிகைகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது. சுவரொட்டிகள் தயாரித்து விநியோகிக்கப்படுகின்றன. வெளியீடுகள் அச்சடித்து வழங்கப்படுகின்றன.

கிராமக் கூட்டங்கள் போட்டும், விளம்பர ஊர்தியின் மூலம் அறிவிப்புகள் செய்தும், படக் காட்சிகள், ஸ்லைடுகள் காட்சிகள் காண்பித்தும் புதிய சாகுபடி முறைகள் புகுத்தப்படுகின்றன.

எல்லா முயற்சிகளின் மூலமும், உழவர்களின் ஒத்துழைப்பின் மூலமும் சராசரி மகசூல் கீழ்க் காணும் அளவு அடையப்படுகிறது.

		டன்
அரிசி	...	1.050
சோளம்-இறைவை	...	0.876
மானாவாரி	...	0.218
ராகி	...	0.741
கம்பு	...	1.025
மக்காச்சோளம்	...	1.200
நிலக்கடலை-இறைவை	...	0.764
மானாவாரி	...	0.598

சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம் :

இம்மாவட்டத்தில் உள்ள சிறு மற்றும் குறு உழவர்களின் வாழ்க்கைத் தரம் உயர உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டிற்கு ரூபாய் 15 இலட்சம் மான்யமாக வழங்கப்படுகிறது. கருவிகள், விதைகள், நிருபணங்கள் மற்றும் கிடங்குகள் வசதிக்காக மான்யம் வழங்கப்படுகிறது.

நில வளம் அறிந்து உரமிட மண் பரிசோதனை நிலையமும், கிணற்றுநீர் தன்மை அறிந்து உபயோகிக்கவும், பரிசோதிக்க ஆண்டு ஒன்றுக்கு 30,000 மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. இது தவிர, விதை மாதிரிகளும், உர மாதிரிகளும், பூச்சி மருந்துகளும் பரிசோதிக்க சோதனைக் கூடங்களும் உள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் சமூக நலத்துறையின் சாதனை!

தருமபுரி மாவட்டத்தில் சமூக நலத்துறை, மகளிர் முன்னேற்றம், குழந்தைகளின் நல்வாழ்வு கருதி சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

சிறப்புக் கவனம் :

மகளிர்க்குச் சிறந்த உலகறிவு புகட்டுதல், மகளிரைச் சிறந்த குடும்பப் பெண்டிராக உருவாக்குதல், கிடைக்கின்ற வருவாயில் சிக்கனத்தைக் கடைப்பிடித்துக் குடும்பம் நடத்தக் கற்றுத்தரல், வருங்காலக் குடிமக்களாகிய குழந்தைகளைப் பேணிக் காத்தல், உடல் ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு அளித்தல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், சத்துணவுத் திட்டங்களைப் பரப்பி, அதனால் மகளிர் பயன்பெறுதல் போன்றவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது.

அடித்தளம் :

திட்டங்களைச் செயல்படுத்த மகளிர் மன்றங்கள் அடித்தளமாய் செயல்படுகின்றன. மகளிர் மன்றங்களின் மூலமே அனைத்துத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

இம்மாவட்டத்தில் 466 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகளில் 146 மகளிர் மன்றங்கள் பதிவு செய்யப் பெற்றுள்ளன. மகளிர் மன்றங்களில் உள்ள அங்கத்தினர்கள் குறிப்பாக தையற்கலை, சிறப்புச் சத்துணவுத் திட்டம், கல்வி, தொழிற் பயிற்சி முதலியனவற்றில் பயிற்சி பெறுகின்றனர்.

குழந்தைகள் நலம் பெற !

குழந்தைகளின் நலன் காப்பதில் குழந்தைகள் காப்பகங்கள் செயல்படுகின்றன. குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றும் குழந்தைகள் காப்பாளர் ஒருவரையும், ஓர் ஆயாவையும் கொண்டு பணி புரிகின்றது.

இம் மாவட்டத்தில், குழந்தைகள் காப்பகங்கள் 132 இயங்கி வருகின்றன. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தனியில் மட்டும் 100 காப்பகங்கள் செயல்படுகின்றன. இதற்கென ஒரு சமூகநல அலுவலர் தனியினைத் தலைமையிடமாகக் கொண்டு பணி புரிந்து வருகிறார். சித்தேரி மலையில் குழந்தைகள் காப்பகங்கள் 6 இயங்கி வருகின்றன.

நல்வாழ்வு வழங்கிட !

மேலும், சமூக நலத்துறையின் மூலம் உடல் ஊனமுற்றோருக்கு 12 தையல் இயந்திரங்களும், 63 மூன்று சக்கர வண்டிகளும், 3 பெட்டிக் கடைகளும், 13 காது கேட்கும் கருவிகளும் வழங்கி நல்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளன.

வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 130 பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் இனமாக வழங்கப்பட்டுள்ளன. அரூர், போச்சம்பள்ளி, காவேரிப்பட்டினம் ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சிக் கூடங்கள் ஆரம்பிக்கப் பெற்றுள்ளன. மத்திய சமூக நல வாரியத்தின் மூலம் 225 பெண்களுக்கு ரூபாய் 6,30,000 செலவில் கறவை மாடுகள் வாங்கி வழங்கப் பெற்றுள்ளன. மேலும், 70 பெண்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சிறந்த பணிகள் :

இம்மாவட்டத்தில் குழந்தைகளின் நலன் காத்திடச் சிறப்புச் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மதிய உணவு 132 மையங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. சிறப்புச் சத்துணவுத் திட்டம் 75 மையங்களில் அமல்படுத்தப்படுகின்றது.

மேலும், சமூக நலத்துறை, விதவைகளுக்கு மறுமணம் செய்வித்தல், அனாதைக் குழந்தைகளைக் கருணை இல்லங்களில் சேர்த்தல், சிறுசேமிப்பு வளர்ச்சி, குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்தல், பள்ளி மாணவர்களுக்குச் சீருடை வழங்குதல், முதியோர்களுக்குக் கல்வி கற்பித்தல் போன்ற சிறந்த பணிகளையும் செய்து வருகின்றது.

திருமதி கே. விஜயலட்சுமி,
மாவட்ட சமூகநல அலுவலர்,
தருமபுரி.



தென்னைச்சாகுபடிக் குறிப்புகள்

தென்னை ரகங்கள்

குட்டை ரகம்: சுமார் 8 மீட்டர் உயரம் வளரக்கூடியது. 3.5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி 25 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும்.

நெட்டை ரகம்: சுமார் 20 மீட்டர் உயரம் வளரக்கூடியது. 5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி 60-70 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும். மேற்குக் கடற்கரை நெட்டை சிறந்த ரகம்.

ஒட்டு வகை : சுமார் 10-14 மீட்டர் உயரம் வளரக்கூடியது. நான்கு ஆண்டுகளில் பலனுக்கு வந்து 40 ஆண்டுகள்வரை காய்க்கக்கூடியது.

பயிரிடும் காலம்:

தென்மேற்கு அல்லது வடகிழக்குப் பருவமழை ஆரம்பமாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு நடவேண்டும். கோடை காலத்தில் நடவு செய்யக்கூடாது.

ஏற்ற மண்வகை:

வடிகால் வசதியுடைய மணல் கலந்த வண்டல்மண், மணற்பாங்கான கடற்கரைப் பகுதிகள், கரிசல் மண் பகுதிகள் ஏற்றவை.

நிலம் தயாரித்தல் :

நிலத்தை நன்கு உழுது சமப்படுத்தி நடவு செய்யும் ரகத்திற்கேற்றவாறு இடைவெளி விட்டு 3 அடி அகலம், 3 அடி நீளம் மற்றும் 3 அடி ஆழம் உள்ள குழிகள் வெட்ட வேண்டும்.

இடைவெளி:

நெட்டை மற்றும் ஒட்டுவகை —25 அடிகள்
குட்டை வகை —18 அடிகள்
வரப்புகளில் வரிசையாய் நட —22 அடிகள்

தேவையான நாற்றுகளின் எண்ணிக்கை:

இடை வெளி	சதுர முறை	முக்கோண முறை
18 அடி	135	155
25 அடி	70	80

குழி தயார் செய்தல்:

தோண்டிய குழியை 1 மாத காலம் ஆறவிட்டு, பின்பு கழிவுகளை இட்டு எரிக்கவும். நன்கு மக்கிய தொழுஉரம் அல்லது கம்போஸ்ட் எருவைக் குழியின் மேல் மண்ணுடன் கலந்து குழிகளை நிரப்ப வேண்டும். குழிக்கு 0.5 கிலோ உப்பும் சேர்த்து மண்ணுடன் கலக்க வேண்டும்.

நடவு முறை :

தயார் செய்த குழிகளில் 2 அடி ஆழத்திற்கு மண்ணை எடுத்துவிட்டு, அதில் பி. எச். சி. 10 சத தூளைத் தூவி அதில் நாற்றுக்களை நடவேண்டும். காற்றில் நாற்றுக்கள் பாதிக்காதவாறு ஒரு குச்சியை நட்டு அத்துடன் நாற்றைச் சேர்த்துக்கட்ட வேண்டும்.

உரம் இடுதல்

வயது	தழை உரம் அல்லது கம்போஸ்ட்	யூரியா	சூப்பர் பாஸ்பேட்	மூரியேட்ஆப் பொட்டாஷ்
நட்ட 3வது மாதம்	...	100 கிராம்	100 கிராம்	100 கிராம்
ஒரு வயது	20 கிலோ	0.5 கிலோ	0.5 கிலோ	0.5 கிலோ
2—வயது	40 ,,	0.5 ,,	0.5 ,,	0.5 ,,
3—வயது	50 ,,	1.5 ,,	1.5 ,,	1.5 ,,
4—வயது	50 ,,	2 ,,	2 ,,	2 ,,
5—வயது	50 ,,	2.5 ,,	2.5 ,,	2.5 ,,
6—வயதுக்கு மேல்	50 ,,	3 ,,	3 ,,	3 ,,

உரம் இடுதல் :

உரங்களை முதல் இரண்டு ஆண்டுகளும் குழிகளிலேயே இடலாம். பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்திற்குமுன் மரத்திலிருந்து 4 அடி தள்ளி வட்ட வடிவில் 1அடி ஆழக் குழி வெட்டி அதில் உரங்களை இட்டு மூட வேண்டும்.

நீர்பாய்ச்சுதல் :

மண்ணின் ஈரத்தை அனுசரித்து 10-15 நாட்களுக்கு ஒரு முறை நீர்பாய்ச்ச வேண்டும்.

ஊடுபயிர் தென்னை நடவு செய்தது முதல், இரண்டு ஆண்டுகளுக்கு நிலக்கடலை, ராகி, சோளம், நெல், வாழை, மஞ்சள் போன்ற பயிர்களை ஊடுபயிர் செய்யலாம். ஊடுபயிருக்குத் தேவையான உரமிட வேண்டும்.

இடை உழவு : பருவமழைக் காலங்களில் ஆண்டிற்கு நான்கு முறை இடை உழவு செய்யவேண்டும். பசுந்தாளுரப் பயிர்களைச் சாகுபடி செய்து உழுதுவிட வேண்டும்.

தென்னையைத் தாக்கும் பூச்சிகளும்—தடுப்புமுறையும்

காண்டா மிருக வண்டு: இவற்றைக் கட்டுப்படுத்த கூர்மையான இரும்புக் கொக்கியாலே துவாரங்களிலுள்ள வண்டுகளைக் குத்தி எடுத்துக் கொல்ல வேண்டும்.

பி.எச்.சி. 10 சதத் தூளையும் மணலையும் சம அளவில் கலந்து மரத்திற்கு 0.5 கிலோ வீதம் மட்டைகளுக்கிடையில்ஆண்டுக்கு மூன்று முறை இடவேண்டும்.

குப்பைக் குழிகளைக் கிளறிப் புழுக்களை அழிக்க வேண்டும். அத்துடன் பி. எச். சி. 10 சதத் தூளையும் இடவேண்டும்.

சிவப்புக்கண் வண்டு:

அதிகம் தாக்கப்பட்ட மரங்களை வெட்டி எரித்துவிட வேண்டும்.

ஒரு லிட்டர் நீரில் பைரக்கோன்-இ 10 மில்லி அல்லது 50 சத செவின் 20 கிராம், அல்லது 1 மில்லி நுவான் விட்டுக் கரைத்து தாக்கப்பட்ட பகுதிக்கு மேல் சிறுதுவாரம் செய்து மரத்திற்கு 1.5 லிட்டர் வீதம் புனல் மூலம் ஊற்ற வேண்டும்.

கருத்தலைப்புழு :

சிறிய மரங்களில் இப்புழுவைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீரில் 4 கிராம் டிடிடி 5 சதத்தூள், அல்லது 8 கிராம் பி.எச்.சி. 50 சதத்தூள் கலந்து ஓலைகளின் அடிப்பாகத்தில் தெளிக்க வேண்டும். வளர்ந்த மரங்களில் இப்புழுக்களைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகளை ஏவி அழிக்கலாம்.

தென்னையைத் தாக்கும் நோய்களும் தடுப்புமுறைகளும்

தஞ்சாவூர் வாடல்நோய்:

நோய் தாக்கிய மரத்தின் தூரிலிருந்து 1 மீட்டர் உயரத்தில் இரும்பு ஆக்கர் கொண்டு 0.5 அடி ஆழத்திற்குத் துளை போட வேண்டும். ஆறு கிராம் அரியோ பைஞ்சின்-கால் மருந்தையும் 3 கிராம் மயில் துத்தத்தையும் 6 லிட்டர் நீரில் கரைத்துக் கொள்ள வேண்டும். இக்கரைசலில் 1 லிட்டரை குறுகிய வாயுள்ள பாட்டிலில் எடுத்து மரத்திலிட்ட துவாரத்தில் பொருத்திவிட வேண்டும். மீதமுள்ள மருந்தைக்கொண்டு அவர்கள் நனையும்படி கிளறி ஊற்ற வேண்டும். மறுநாளில் மருந்துப்பாட்டிலை எடுத்துவிட்டு சிமெண்டால் துவாரத்தை அடைத்து விட வேண்டும்.

சாறு ஒழுகல் நோய்:

நோயுள்ள பகுதிகளை உளியால் செதுக்கியெடுத்து பின் தீப்பந்தத்தால் நன்கு பொசுக்க வேண்டும். பின்னர் சூடான தாரைப் பூசி செதுக்கிய பாகத்தை சிமெண்ட்டால் அடைத்துவிட வேண்டும்.

இலைக் கருகல் நோய்:

இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீருக்கு 2.5 கிராம் பைட்டலான் அல்லது புளுகாப்பர் வீதம் கலந்து ஓலைகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.

அறுவடை:

குளிர்காலங்களில் 45 நாட்கள் இடைவெளியிலும், கோடைக் காலங்களில் 60 நாட்களுக்கு ஒரு முறையும் காய்கள் வெட்டலாம். ஒருமுறையில் ஒரு மரத்திலிருந்து இரண்டு குலைகளுக்குமேல் அறுவடை செய்யக்கூடாது.

திரு. கே. சந்திரகாந்தன்,
இரா. நேதாஜி சீதாராமன்,
தகவல் தொடர்பு நிலையம்,
வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-

குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
பயிர்களுக்குத் தேவை
விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக் களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக் கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS

MFL-1517

கடன் நிவாரணம் அவசரச் சட்டம்

பலவீனமான தரப்பினரில் குறிப் பிட்ட வகையினரின் கடன் சுமையை முற்றிலுமாக ரத்து செய்து அல்லது கடன் சுமையைக் குறைத்து தமிழ்நாடு அரசு ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள் ளது. அடகு வைக்கப்பட்ட பொருள்களை அடகுக் கடைக் காரர்கள் விற்கக்கூடாது என்ற தடை இந்த அவசரச் சட்டத்தின் கீழ் மேலும் 6 மாதம் நீடிக்கப்பட் டுள்ளது.

விவசாயிகள் மற்றும் விவ சாயிகள் அல்லாதோர் பெற் றுள்ள கடன்களை வசூலிக்கக் கூடாது என்று தற்போதுள்ள கடன் நிவாரணச் சட்டங்களின் கீழ் உள்ள தடை 1978 ஜூலை 15-ஆம் தேதியுடன் முடிவடை கிறது. இவ்வித நிலைமையில் நிரந்தர நிவாரணம் அளிக்கும் நடவடிக்கையாக இந்த அவசரச் சட்டம் போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசரச் சட்டத்தின் விவரம் வருமாறு :

(1) ஒவ்வொரு தடவையும் அளிக்கப்பட்ட கடன்களில் அசல் தொகை ரூ. 500-க்கு மேற்படா மல்இருந்தால் அவ்விதக் கடன்கள் அனைத்தும் பூராவாக திருப்பி செலுத்தப்பட்டுவிட்டதாக இந்த அவசரச் சட்டத்தின்படி கருதப் படும்.

2. ஒவ்வொரு தடவையிலும் அளிக்கப்பட்ட கடனில் அசல் ரூ. 500-லிருந்து ரூ. 5000க்குள் ளாக இருந்தால் அவ்விதக் கடன்கள் விஷயத்தில் அசலில் பாதியும், வட்டியில் பாதியும், திருப்பிச் செலுத்தப்பட்டு விட்ட தாகக் கருதப்படும்.

3. ஒவ்வொரு தடவையிலும் அளிக்கப்பட்ட கடனில் அசல் ரூ. 5,000லிருந்து ரூ. 10 ஆயிரத் துக்குள்ளாக இருந்தால் வட்டி பூராவும் திருப்பிச் செலுத்தப் பட்டுவிட்டதாகக் கருதப்படும். அசல் பூராவும் திருப்பிச் செலுத் தப்பட்டாக வேண்டும்.

4. அனுபோக அடமான விஷயத்தில் கடன் கொடுத்த வர்கள் 10 ஆண்டு அனுபவித்தி ருந்தால் அந்த அடமானம் தீர்க் கப்பட்டு விட்டதாகக் கருதப் படும்.

யார் யார் பலன் பெறுவர் :

எனினும் இந்த அவசரச் சட்டத்தின் கீழ் சமூகத்தில் பல வீனமான தரப்பினரில் குறிப் பிட்ட வகையினர்தான் பலன் பெறுவர்.

அதாவது 1977 மார்ச் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த, 1978 மார்ச் 31-ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுகளில், வருமான வரி, அல்லது விவசாய வருமான வரி அல்லது விற்பனை வரி விதிப்புக்கு உள் ளாகியவர்கள் இந்த அவசரச் சட்டத்தின் கீழ் பலன் பெறத் தகுதி உடையவர்கள் அல்லர்.

அதேபோல, 1978 மார்ச் 1ஆம் தேதிக்கு முந்தைய 4 அரை ஆண்டுகளில் ஒரு கட்டடத்தின் மீது அல்லது ரூ. 1200க்கு குறை யாத வருடாந்தர வாடகை மதிப்புக் கொண்ட நிலத்தின்மீது உள்ளாட்சி நிறுவனம் விதித்த சொத்து வரியைச் செலுத்திய வர்களும் இந்த அவசரச் சட்டத் தின் கீழ் பலன் பெறத் தகுதி யுடையவர்கள் ஆகமாட்டார்கள்.

1978 மார்ச்சுக்கு முந்தைய 4 அரை ஆண்டுகளில் ரூபாய் 1200-க்கும் அதிகமான அரை யாண்டு வருமானத்துக்கு, தொழில் வரி செலுத்தியவர்களும் இதே போல இந்த அவசரச் சட்டத்தின் கீழ் பலன் பெறத் தகுதி உடைய வர்கள் அல்லர்.

மேற்கூறிய வகைகளில் வராத வர்களே இந்த அவசரச் சட்டத் தின் கீழ் பலன் பெறத் தகுதி கொண்ட ''பலவீனமான தரப் பினர்'' என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது.

ஒரு விதவை, அல்லது பெற் றோரை இழந்த மைனர் குழந்தை, தகப்பனை இழந்த மைனர் குழந்தை ஆகியோருக்கு வர வேண்டிய கடன் அல்லது கடன்கள் சம்பந்தப்பட்ட அசல் உட்பட அவர்களுக்கு இருக்கிற சொத்தின் மதிப்பு இந்த அவ சரச் சட்டம் பிரசுரிக்கப்பட்ட தேதியில் ரூ. 10 ஆயிரத்துக்கு மேற்படாமல் இருக்குமானால், அவர்களுக்கு வரவேண்டிய கடன் அல்லது கடன்களுக்கு இந்த அவசரச் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

அடகுப் பொருள் :

அடகுக் கடைக்காரர்கள் தங் களிடம் அடகு வைக்கப்பட்ட பொருட்களை 1978 ஜூலை 15-ஆம் தேதி வரை விற்கக்கூடாது என்று இருந்து வந்துள்ள தடை, மேற்கொண்டு 6 மாத காலத் துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

அடகு வைத்த அனைவரும் தாங்கள் அடகு வைத்த பொருட் களை மீட்க இந்த அவசரச் சட் டத்தின்கீழ் 1979 ஜனவரி 15ஆம் தேதிவரை மேற்கொண்டு கால அவகாசம் அளிக்கப்பட்டு உள் ளது. அவர்கள் மேலே குறிப் பிட்ட காலத்துக்குள் தங்களது கடனை, தவணைகளில் செலுத்தி அடகுப் பொருட்களை மீட்கலாம்.

தறபோதுள்ள கடன் நிவார ணச் சட்டங்கள் விவசாயிகள், மற்றும் விவசாயிகள் அல்லாத வர்களின் கடன்களை 1978 ஜூலை 15ஆம் தேதி வரை வசூல் செய் யக்கூடாது என்று தடை விதித் திருந்தன.

அச்சட்டங்களின் கீழ் அளிக்கப் பட்ட நிவாரணம் தற்காலிகமான தாக இருந்ததால், பலவீனமான தரப்பினரில் குறிப்பிட்ட வகை யினர் மீது சேர்ந்து வந்துள்ள கடன் சுமை காரணமாக அவர் களால் ஒரு நிம்மதியான வாழ்வு பெற முடியவில்லை. எனவே கடன்களை ஒழித்து அல்லது தகுந்த அளவில் அவற்றைக் குறைத்து நிரந்தரமான நிவாரண மளிக்க முடிவு செய்து இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளது என்றும் அரசு அறி வித்துள்ளது.

தொழுநோய் சில உண்மைகள்

தொழுநோய் என்றவுடன் மனத்திலே ஓர் அச்சமும் அருவருப்பும் அளிக்கக்கூடிய ஒரு மானிட உருவம்தான் உருவாகிறது. ஏன்? வாழையடி வாழையாகத் தொழுநோய் என்ருல், அங்கத்தைக் குறைத்துச் செயலிழக்கச் செய்து துன்புறுத்தும் நோய் என்ற பயமிக்க எண்ணம் மனிதனின் உள்ளத்தில் வேருன்றியுள்ளது. அத்தகைய நோயுடையோரைப் பார்த்தாலோ தொட்டாலோ நமக்கும் வந்துவிடுமோ என்ற ஐயமும் நிலைத்து இருக்கிறது.

ஆனுல் இந்நோயினைப் பற்றிய உண்மைகளை அறிந்தால், நாம் எவ்வளவு கோழைகளாக இருக்கிருேம் என்பது தெரியும். அந்நோய்க்கிருமிகளும் மற்றைய நோய்க்கிருமிகளும் ஆண்டவனுல் படைக்கப்பட்டு ஏனைய உயிரினங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் வழியில் உருவாக்கப்பட்டது. மனிதன் தனது அறிவினுல் அநேகமாக நோய் அளிக்கக்கூடிய கிருமிகளின் வளர்ப்பு இரகசியங்களை நன்கு அறிந்து அவைகளை அழிப்பதற்கும் வழிகோலியுள்ளான். நோயினை வராமல் தடுக்கும் முயற்சியிலும் வெற்றி பெற்றுள்ளான். ஆனுல், தொழுநோய்க் கிருமி கண்டுபிடிக்கப்பட்டு 105 ஆண்டுகள் கடந்தும் மனிதனுல் இந்நோய்க் கிருமிகளைப்பற்றிப் பூரணமாக இன்னும் அறிந்து கொள்ள இயலவில்லை.

இந்நோய்க்கிருமியை இதுவரையில் செயற்கை முறையில் வளர்ச்சி செய்ய முடியவில்லை. இது எவ்வாறு மற்றவர்களுக்குப் பரவுகிறது, என்று உறுதியாகக் கூற இயலவில்லை. இந்நோய்க் கிருமிகளைச் சிறிது நாளில் கொன்றிட மருந்துகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆதலின், இந்நோய் ஆண்டவனின் சாபம் என்று கருதாமல், மனிதனின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அளிக்கப்பட்டுள்ள, ஆண்டவனின் அறைகூவல் என்று கருதிடல் வேண்டும்.

இந்நோய்க் கிருமிகள் காச நோய்க் கிருமியின் குடும்பத்தைச் சார்ந்தன. இந்நோய்க் கிருமிக்கும் மற்றைய நோய்க் கிருமிகளுக்கு இல்லாத சில தனிப்பட்ட அம்சங்கள் உண்டு. அவையாவன:

1. மற்றைய கிருமிகளெல்லாம் இனப்பெருக்கு குறுகிய காலத்தில் செய்யும். அதாவது காலரா கிருமி ½ மணிக்கு ஒரு முறையும், காசநோய்க் கிருமி 2 மணிக்கு ஒரு முறையும் செய்யும். ஆனுல், தொழுநோய்க் கிருமியோ 14லிருந்து 21 நாட்களுக்கு இனவிருத்தி செய்யும்.

2. மற்றைய கிருமிகளெல்லாம் தொடர்ந்து இனவிருத்தி செய்து கொண்டே இருக்கும். மருந்தின் வீரியத்தாலோ அல்லது உடலில் உருவாக்கப்பட்ட அதி தீவிரத் தன்மையால் இனவிருத்தி தடுத்து நிறுத்தப்படுமேயன்றி வேறு எக்காரணமின்றியும் நிற்காது. ஆனுல், தொழுநோய்க் கிருமியோ செங்கின்கானின் போர்த் திறனை அனுசரித்து சில சமயங்களில் தொடர்ந்து இனவிருத்தி செய்யும். பிற்பாடு இனவிருத்தி செய்யாமல் இருக்கும். அதனுல், அதன் எண்ணிக்கை மெள்ள மெள்ளதான் வளரும். நோயினை உருவாக்கிட தேவையான குறைந்தபட்ச கிருமிகள் வளருவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கப்படுகின்றது. அதனுல் நோய் அறிகுறி காண்பதற்கு நாட்கள் பல ஆகும்.

3. முன்பு கூறியபடி இந்நோய்க் கிருமியைச் செயற்கை முறையில் வளர்த்திடல் முடியாது.

4. இந்நோய்க்கிருமி மனிதனை மட்டுமேயல்லாது மற்றைய எந்தப் பிராணியையும் அணுகுவ இல்லை.

5. மனிதனின் உடலில் இருக்கும் நரம்புகளைச் சுற்றி அதனைக் காப்பாற்றிட ஒருவிதமான ஜவ்வு இருக்கிறது. அதனை ஊடுருவிச் செல்ல தொழுநோய்க் கிருமியைத் தவிர மற்றைய எந்தக் கிருமியாலும் முடியாது.

6. மற்றைய நோயினைப் போல இந்நோய் தொடக்கத்தில் உடலிலே எந்தவிதமான உபாதையோ நமைச்சலோ வலியோ ஏற்படுவதில்லை. ஆதலின் இந்நோயினைப் பற்றி யாரும் தொடக்கத்தில் அக்கறை கொள்வதில்லை. இந்நோயின் அறிகுறி இருக்கிறது என்று கற்று அறிந்தவர்கள் கூறினுலும் எள்ளி நகையாடுவார்கள்.

7. இந்நோய்க் கிருமி ஏராளமாக உள்ள நோயாளியின் உடலிலிருந்து ஒரு பகுதியை நோயற்றவர்களின் தோலிற்குள் வைத்து நோய்வருகிறதா என்ற பரிசிலனையில் இதுவரையில் தோல்வியைத்

டாக்டர் சி. எஸ். கங்காதர் சர்மா
துணை இயக்குநர் (தொழுநோய்),
நல்வாழ்வுத்துறை.

தான் விஞ்ஞானிகள் கண்டுள்ளார்கள்.

ஆதலின், இந்நோயினைப்பற்றி நன்கு அறிந்து கொள்வது நன்று. இந்நோய்க்கிருமி எப்படி எவ்வாறு ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகிறது என்று ஆதாரப்பூர்வமாக நிருபிக்கப்படவில்லை. நீண்ட காலம் தொற்று உள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்ப கொண்டால்தான்



வரும் என்று முந்தைய கொள்கை இன்று ஏற்றுக் கொள்வதற்கில்லை. நோயுள்ளோருடன் நீண்ட நாட்கள் நெருங்கி பழகி தொழுநோய் பணியில் ஈடுபட்டிருப்பினும் அவர்களில் இதுவரையில் யாருக்கும் நோய் வந்ததாக ஆதாரம் இல்லை.

நோயுள்ளோர் மூக்கிலிருந்து வெளியேறும் மூக்குச் சளியுடனும் வெளியே காற்றினுலும் பரவலாம் என்ற விஞ்ஞான உலகம் கண்டறிந்தும் நோய்க் கிருமி உடலில் உள்ளே புகுந்தாலும் இந்நோய் உடலில் உருவாகும் எதிர்ப்புச் சக்தியால் வராமல் தடுத்து நிறுத்தப்படுகின்றது. அப்படியே ஆரம்ப அறிகுறி கண்டாலும் எதிர்ப்பு அணுக்கள் உருவாக்கப்படுவதால் நோயின் அறிகுறி எந்தவிதமான மருந்து உட்கொள்ளாமலும், இயற்கையாகவே மறைகிறது. அல்லது மருந்தின் சேர்க்கையாலும் சீக்கிரம் குணமடைகிறது. ஆதலால் நோய்க் கிருமி உள்ளே புகுந்தாலும் நோயின் அறிகுறி கண்டவர்கள் சமுதாயத்தில் அதிகமாய் இருந்தாலும் நோயினால் அவதியுறுபவர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள்.

நோயின் அறிகுறிகள் கண்டவர்கள் அவ்வளவு பேரும் அங்கக் குறைவால் பீடிக்கப்படுவதில்லை. அங்கக்குறைவினால் அவதியுறுபவர் மிகக் குறைவே.

அங்கக் குறைகள் ஏற்படுவதற்கு முன்பாகக் கண்டு அறியும் அறிகுறிகள்:

1. உடலிலே நிமாற்றுமை (காணின்) வெளிர்ந்த அல்லது சிவந்த படை காணுதல். அதில் உணர்ச்சி இழந்திருத்தல். வேர்வை அற்றிருத்தல்.

2. நரம்புகள் பாதிக்கப்படும் போது கை கால்களில் வலியோ அல்லது உணர்ச்சியிழத்தலோ ஏற்படும்.

3. விரல்கள் வலிவிழந்து வளைவுகளும் ஏற்படும்.

4. கால்கள் திடீர் எனத் துவண்டு விழலாம்.

5. கால்களில் ஆருத புண்கள் கண்டிடலாம்.

6. உடலிலே எண்ணெய் தடவியதுபோல் ஒரு மினுமினுப்போ அல்லது சிவந்த தடித்த படையோ காணலாம்.

நோயைத் தொடக்கத்தில் கண்டு அறிந்து மருந்து உட்கொள்ளத் தொடங்கினால் நோய் முற்றிலும் குணமடையும். நோயினைக் குணப்படுத்த விஞ்ஞான உலகம் புதிய மருந்தினைக் கண்டுபிடிப்பதில் முனைந்திருந்தாலும் சல்போன் என்ற மருந்து சிறந்த முறையில் பலன் அளித்து வருகின்றது.

இந்நோயை தொடக்கத்தில் கண்டு அறிந்து விடாமுயற்சியுடன் 3 அல்லது 5 ஆண்டுக்குக் குறையாமல் மருந்து உட்கொண்டு வந்தால் இந்நோய் அறவே மறைந்துவிடும்.

இன்று எதிர்ப்பு அணுக்களை உருவாக்கி நோயினைக் கட்டுப்படுத்தி நிறுத்திட தடுப்பு மருந்து வாக்சீன் (Vaccine) இல்லாமையால் நோயுள்ளோரைக் கண்டு அறிந்து அவர்கள் ஒழுங்கு முறையாக மருந்து உட்கொள்ளத் தொடங்கினால் அவர்களது உடலில் இருக்கும் கிருமிகள் கொல்லப்பட்டு அவர்களால் மற்றவர்களுக்கு நோய் வராமல் காப்பாற்றிட முடியும்.

ஆதலின், இத்தொழுநோய் திட்டத்தில் கற்றறிந்த பணியாளர்கள்சமுதாயத்தில் நோயுள்ளோரைக் கண்டு அறிய கணக்கு எடுக்கும்போது அவர்களை உதாசீனப்படுத்தி விரட்டி அடிக்காமல் அவர்களுடன் ஒத்துழைத்து நோயுள்ளோரைத் தெரிந்து கொண்டு அவர்களை ஒழுங்கு முறையில் மருந்து உட்கொள்ள ஊக்குவிக்க வேண்டியது இன்றைய சமுதாயத்தில் முதற்பணியாகும்.

நோயுள்ளோரைச் சமூகத்திலிருந்து அகற்ற முயற்சித்தாலோ அவர்களைப் புண்படும்படி செய்தாலோ, நோயுள்ளவர்கள் பரிசிலனை செய்து கொள்ள வரமாட்டார்கள். நோயினை மறைக்கத் தொடங்குவார்கள். அவர்கள் மறைப்பதால் சமுதாயத்தில் நோய் பரவிக் கொண்டேதான் இருக்கும்.

ஆதலின் தொழுநோய்த் திட்டம் வெற்றி பெற, பொது மக்கள் இத்திட்டத்தில் ஈடுபட்டு இதில் பணிபுரியும் ஊழியர்களுடன் ஒத்துழைத்து நோயுள்ளவர்களை மருந்து உட்கொள்ள ஊக்குவித்தால் இந்நோயினை நமது நாட்டிலிருந்து சீக்கிரமே விரட்டிடலாம்.

முன்னேற்றமடைந்த, நாகரிகம் அடைந்த நாட்டிலெல்லாம் இந்நோயினை விரட்டிவிட்டார்கள். நமது நாட்டையும் நாகரிகம் அடைந்த நாடு என்று கூற வேண்டுமாயின் இத்திட்டத்தை வெற்றிகாணும் முயற்சியில் ஈடுபடுத்தல் வேண்டும்.

இந்நோய்க்கு மருந்து எல்லா அரசினர் மருத்துவமனைகளிலும் இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அரசும் தனியாரும் நடத்தும் கட்டுப்பாட்டு நிலையங்களிலும் இலவசமாகக் கிடைக்கும்.

பெருந்தலைவர் காமராஜ் பிறந்தநாள் விழா

முதன் முதலில் நடக்கும் எதுவுமே வரலாற்றில் முக்கியத்துவம் பெறுவதுண்டு. அந்த வகையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 76-வது பிறந்தநாள் விழாவினைத் தமிழக அரசு முதன்முதலாகக் கொண்டாடுவது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுவதாகும்.

1978-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15-ஆம் நாள் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் 76-வது பிறந்த நாளன்று சென்னை, தியாகராயநகர், 8, திருமலைப் பிள்ளை சாலையில் காமராஜ் நினைவு இல்லத் திறப்பு விழா மாலையில் மிகச் சீரும் சிறப்புமாக நடந்தது.

பொருட்காட்சி :

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் வாழ்ந்த இந்த இல்லத்தை, தமிழக அரசு ரூ. 3 இலட்சம் கொடுத்து வாங்கி நாட்டுடைமையாக்கியிருக்கிறது.

இந்த இல்லத்தில் ஒரு பொருட்காட்சியை அமைத்து திரு காமராஜ் அவர்கள் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்திய பல்வேறு பொருள்கள், பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுப் புகழ்பெற்ற— பல வரலாறுகள் உருவாகக் களமாகத் திகழ்ந்த அந்த இல்லத்தினுள் நுழைகிறோம், நினைவுகள் அசைபோட!

திரு. காமராஜ் அவர்கள் படித்த ஏராளமான நூல்களைப் பார்க்கிறோம்.

கலைக்களஞ்சியங்கள், திருக்குறள், திருவாசகம் முதலான இலக்கிய நூல்களும், புராண நூல்களும், ஆங்கில நூல்களும் காணப்படுகின்றன. இவற்றுள் தேர்தல் முடிவுகள் அடங்கிய 1971 மார்ச் திங்கள் 'தமிழரசு' இதழொன்றும் உள்ளது.

ஒரு அலமாரியில் திரு. காமராஜ் அவர்களின் 'சோதிடக் குறிப்புகள்' காணப்படுகின்றன.

டெல்லியில் இருந்த போது....

திரு காமராஜ் அவர்கள் டெல்லியில் இருந்தபோது பயன்படுத்திய பொருள்கள் ஒரு மேசையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

பீங்கான் தட்டுகள், பிளாஸ்க், குக்கர், பாட்டரி, கண்ணாடித் தம்ளர்கள், ரூத் பிரஷ், ஷேவிங் செட், சோப்புப்பெட்டி, காலிங் பெல், கத்தரி ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறையாகப் பார்த்துக்கொண்டே செல்கிறோம். திரு காமராஜ் அவர்கட்கு அமெரிக்க அரசின் அழைப்பும்—அவரது பதிலும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றது.

திரு காமராஜ் அவர்கள் டெல்லியில் இருக்கின்றபோது அமருகின்ற சோபாவும் இங்கே உள்ளது.

புகைப்படக் காட்சி :

அடுத்து, அரிய அழகிய புகைப்படக் காட்சியைப் பார்க்கிறோம்.

அன்னையுடன் காமராஜ், ஐந்து வயதில் காமராஜ் புகைப்படங்கள் நம்மை வெகுவாகக் கவர்கின்றன.

1935-ஆம் ஆண்டு நடந்த அரசியல் மாநாட்டில், கவிக்குயில் சரோஜினி நாயுடு, தீர சத்தியமூர்த்தி ஆகியோரோடும் 1946-ல் காந்தியடிகளுடன் ஆவடி ரயில் நிலையத்திலும் உள்ள காமராஜர் அவர்களின் இருவுருவப் படங்களைப் பார்த்து மகிழ்கிறோம்.

புகைப்படக் காட்சியில் முதல்வராகப் பதவியேற்கும் காமராஜ் அவர்களையும், 1954-ல் அமைக்கப்பட்ட திரு காமராஜ் அவர்களின் முதல் அமைச்சரவையையும் பார்த்துப் பரவசமடைகிறோம்.

தந்தை பெரியாருடன், பேரறிஞர் அண்ணாவுடன், தமிழக முதல்வர் [illegible]

அவர்களுடன், பத்திரிகையாளர்களுடன் பெருந்தலைவரைப் பார்க்கிறோம்.

1965-ல் திரு. காமராஜ் அவர்கள் ரஷ்ய நாட்டிற்குச் சென்றிருந்தபோது அங்கு எடுக்கப்பட்ட புகைப்படங்களும், அங்கு அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருள்களும், பொன்னாடைகளும், கண்ணாடிப் பேழைகளில் வைக்கப்பட்டுள்ளன.

கடிதங்கள்-கணக்குகள்!

பொருட்காட்சி இதோடு முடியவில்லை.

1933-ல் திரு காமராஜர் அவர்கள் தம் கைப்பட எழுதிய கடிதங்கள் பல இங்கு வைக்கப்பட்டுள்ளன. சுப்பிரமணிய சிவம், வ. வே. சு. ஐயர், திரு. வி. க. பற்றிய அவரது குறிப்புகளும் நம்மைக் கவர்கின்றன.

திரு காமராஜர் அவர்கள் உணவு அருந்தும் மேசை, தட்டு, தம்ளர் முதலானவற்றைப் பார்க்கிறோம். அவர் பயன்படுத்திய வெண் கதராடைகள் ஒரு பக்கம் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதையும் பார்க்கிறோம்.

1923 ஆம் ஆண்டில் நடந்த சாத்தூர் அரசியல் மாநாட்டுக் கணக்குகளைத் திரு காமராஜர் அவர்களே தம் கைப்பட எழுதி வைத்திருந்ததை இங்கே பார்க்கலாம்.

அது என்ன பெட்டி?

அதோ, ஓர் கண்ணாடிப் பேழையில், ஒரு பெட்டி திறந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. அது, திரு காமராஜ் அவர்கள் வெளியூர் பயணம் செல்லும் போது பயன்படுத்தி வந்த பெட்டி என்று தெரிந்து கொள்கிறோம்.

திரு காமராஜ் அவர்களின் படுக்கையையும், அவர் படிக்கும் அறையையும் பார்க்கிறோம்.

இவை மட்டுமா? அவருக்கு அன்புடன் வெள்ளிப் பேழையில் வைத்து வழங்கப்பட்ட ஏராளமான வாழ்த்து மடல்கள், அன்பளிப்புகள், அவர் பயன்படுத்திய காலணிகள், கைத்தடி ஆகியவையும் பொருட்காட்சியில் உள்ளன.

விழாக்கோலம் !

வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வனப்புடைய மேடை! வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட காமராஜ் நினைவு இல்லம்! சாலை இருமருங்கும் நிறைந்து வழிந்த மக்கள் கூட்டம்! மேடையில் காமராஜ் அவர்களின் அருமைத் தங்கையார் **திருமதி நாகம்மாள் அவர்கள்** அமர்ந்திருக்கிறார். பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், அமைச்சர் பெருமக்களும் வீற்றிருக்கின்றனர். விழா துவங்குகிறது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''மறைந்தும் மறையாமலும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிற பெருந்தலைவருக்கு இன்று நாம் விழா எடுக்கிறோம். இந்திய வரலாற்றில் பல குறிப்பிடத்தக்க சம்பவங்களை உருவாக்கக் காரணமாக இருந்த இந்த இல்லம் இன்று அரசுடைமையாக்கப்படுகிறது.

முதன் முறையாக சிறை சென்று திரும்பியபோது

சிறந்த எடுத்துக்காட்டு !

''பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே, அல்லது குடும்பப் பெருமை உள்ளவர்கள் மட்டுமே அரசியலில் நுழைய



முடியும் என்றிருந்த நிலையினை மாற்றிக் காட்டியவர் காமராஜர். பட்டம் பெறாதவர்களும், ஏழைகளாய்ப் பிறந்தவர்களும் உண்மையாகவும் சுயநலமின்றியும் உழைத்தால் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டும் அவரே.

''நாட்டுக்கு உழைத்த உத்தமர்களின் பிறந்தநாள் அல்லது நினைவு நாட்களைக் கொண்டாடுவது என்று தமிழக அரசு கொள்கை பூர்வமாக முடிவெடுத்தது. அதன் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா, பாரதி, நேரு, காந்தி, முத்துராமலிங்கத் தேவர், வள்ளுவர், காயிதேமில்லத், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரை நினைவுகூரும் வகையில் தமிழக அரசு விழாக்களை எடுத்து வருகிறது.

''பெருந்தலைவர் காமராஜர் வாழ்ந்த இல்லத்தை விலைக்கு வாங்கி மதசியச் சொத்தாக மாற்றியிருக்கிறோம். ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக முதல்வராக இருந்தாலும் தனக்கென சொந்த இல்லம் இல்லாமல் வாழ்ந்த தலைவர் காமராஜர்!''

பண்புத் தலைவர் !

கேரள மாநில ஆளுநர் மேதகு திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள், விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''காமராஜ் அவர்கள் நம்முடைய அன்புத் தலைவர்; பாசத் தலைவர்; பண்புத் தலைவர். அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்வதில் ஒவ்வொருவருக்கும் பங்குண்டு. இன்று கிராமத்திலே படித்தவர்கள் [illegible] கிருர்கள் என்ருல், அதற்குக் காரணம் காமராஜர் வகுத்த கல்வித் திட்டம்தான். அறிவுக்கண்ணைத் திறந்தவர் அவர். அவர் தனக்கென வாழாதவர். நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்; இந்திய ஒற்றுமைக்கு இறுதி மூச்சு வரை பணியாற்றியவர்.''

கர்ம வீரர் :

திரு காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து **தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள்** பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''காமராஜருடன் இருபது ஆண்டுக் காலம் தொடர்பு கொண்டிருந்தவன் நான். சாதி, ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு, அரிசன முன்னேற்றம், மது ஒழிப்பு ஆகிய இலட்சியங்களை உயிர்க் கொள்கைகளாகக் கொண்டு செயல்பட்ட கர்மவீரர் காமராஜர்.

''அதிகாரிகளுடன் நட்புறவுடன் வாழ்ந்த காமராஜர்-ஏழை எளியவர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். சரியான முடிவை உரிய நேரத்தில் எடுக்கும் திறன்படைத்த ஆற்றலாளர். சுருங்கப் பேசி நிரம்பக் காரியங்களைச் செய்தவர்.



''காமராஜரின் நேர்மை, எளிமை, நெறி தவரு வாழ்க்கை ஆகியவற்றைப் பின்பற்றி நடப்பதே நாம் அவருக்கு எழுப்பும் நினைவுச் சின்னம். 9 ஆண்டுகள் தமிழக முதல்வராக இருந்து நேர்மை, நாணயத்துக்கு உதாரண புருஷராக விளங்கினார்.

''ஏழ்மை, வறுமை, அறியாமை ஆகியவற்றை அகற்றி மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக முன்னுதாரணமாகத் தமிழகம் விளங்குகிறது. காமராஜர் வழியை-அரசியல் நெறியை-இன்று தமிழக அரசு பின்பற்றுகிறது. ஊழலை ஒழிப்பதிலும், கிராமப்புற முன்னேற்றத்திலும் எதிர்ப்பைச் சமாளித்து தமிழக அரசு விறுநடை போடுகிறது.''

டெல்லியில் காமராஜர் சிலை !

பொருட்காட்சியைத் திறந்து வைத்து **இந்திய அரசு மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு பா. இராமச்சந்திரன் அவர்கள்** பேசுகையில், ''இந்திய நாட்டின் பெருமையை உயர்த்திய மாபெரும் தலைவர் காமராஜர்'' என்ற அவர், ''காமராஜர் வீட்டை நினைவு இல்லமாக மாற்றியதற்குத் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கிறேன். இந்தியத் தலைநகரிலே விரைவில் அவருக்கு ஒரு சிலையை வைக்க இருக்கிறோம். அந்தப் பகுதியிலே உள்ள அந்த வீதிக்குக் காமராஜர் பெயரிடக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்'' என்றும் தெரிவித்தார்.

வழிகாட்டி !

தமிழக மேலவைத் தலைவர் மாண்புமிகு திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துகையில், தஞ்சையில் ராஜராஜன் எடுத்த கோயில் எவ்வளவு சிறப்பானதோ அதைப்போல தியாகராய நகரிலே தேசபக்தருக்கு எடுத்த இந்தக் கோயிலும் சிறப்பு வாய்ந்தது'' என்ற அவர், ''காமராஜர் அடக்கத்துடன் வாழ்ந்த ஒரு பெருந்தலைவர். ஒழுக்கத்துக்கு-அடக்கத்துக்கு-எளிமைக்கு அவர் வழிகாட்டி'' என்றும் குறிப்பிட்டார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அருமை பெருமைகளைப் பற்றியெல்லாம் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் பேசினார்கள்.

திரு அப்துல் வகாப் எம்.எல்.சி. அவர்கள் பேசுகையில், "காமராஜர் சிறந்த செயல்வீரர். மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தியாகச் செம்மல். அவர் தலைவருக்கெல்லாம் தலைவர் வைரத்திலே ஜொலிக்கும் வைரமாக விளங்கியவர்" என்றார்.

திரு. பி. மாணிக்கம் எம்.எல்.சி. அவர்கள் பேசுகையில், "அவரது வாழ்வில் பல்வேறு படிப்பினைகள் உள்ளன. அவற்றையெல்லாம் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளும் வகையில் இந்த விழா அமைந்திருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

கல்விக் கண் திறந்தவர்!

திரு. திருவாரூர் தங்கராசு அவர்கள் பேசுகையில், 'கல்விக் கண்ணைத் திறந்தவர் காமராஜ், காமராஜர் என்றால், 'செயல் வீரர்' என்று பொருள்' என்றார்.

திரு கருப்பையா மூப்பனார், எம். பி. அவர்கள் பேசுகையில், "பெருந்தலைவருக்கு நினைவு இல்லம் அமைத்தது தமிழக முதல்வரின் உயர்ந்த பண்பை வெளிப்படுத்துகிறது. எனவே, தமிழக அரசையும், முதல்வரையும் மனதாரப் பாராட்டுகிறேன்' என்றார்.

திரு பி. இராமமூர்த்தி, எம். பி. அவர்கள் பேசுகையில், 'கருத்து வேறுபாடு நிலவிய போதிலும், எதிரி எனக் கருதாமல் எதிரியின் கருத்தையும் ஏற்றுச் செயல்பட்டவர் காமராஜ்" என்றார்.

காலக் கண்ணாடி !

திரு ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், "ஏழைகளின் இதயங்களில் வாழ்ந்தவர், வாழ்பவர் காமராஜர். இந்த நினைவாலயம் வருங்காலத்தில் புனித யாத்திரை ஸ்தலமாக விளங்கும். காமராஜர் அரசியல்வாதிகளுக்கு எல்லாம் அகராதி போன்றவர்; வருங்கால மாணவர்களுக்கோ அவர் காலக் கண்ணாடி" என்றார்.

இலக்கியமாக வாழ்ந்தவர் !

முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் பேசுகையில், "எளிய தொண்டனாகப் பணியாற்றியவர். பதவிக்கு ஆசைப்படாதவர்; பதவி

ஐந்து வயதில் காமராஜர்

அவரைத் தேடிவந்தது. கடைசி மூச்சுவரை கட்சிக்காகவும், ஏழை மக்களின் நலனுக்காகவும்-நல்வாழ்வுக்காகவும் ஓய்வில்லாமல் உழைத்தார்" என்றார்

நாவலர் திரு இரா நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், "காமராஜர் அவர்கள் எல்லார் உள்ளங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிற பாங்கைப் பார்க்கிறோம். அவர் தமக்கென வாழாதவர். அவர் ஓர் இலக்கியமாகவே திகழ்ந்தார். அவர் வாழ்ந்ததால் இந்த வீடு பெருமைப்படுகிறது. ஏன், இந்தத் தெரு பெருமைப்படுகிறது; இந்த நாடே பெருமைப்படுகிறது" என்றார்.

பெருந்தலைவர் காமராஜ் நினைவு இல்லத்தினைத் திறந்து வைத்து, **மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள்** பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தியாகத்தின் அடையாளச் சின்னம் காமராஜர். அந்த அடிப்படையில் காமராஜர் இல்லத்தை அரசுடைமையாக்கி நினைவு இல்லமாக்கும் பணியை இங்குத் தொடங்கி இருக்கிறோம்.

"காமராஜர் எப்போதும் தன்னிடம் ஒரு சிறிய பெட்டியை வைத்திருப்பாராம். அதை யாரையும் திறக்க அனுமதிப்பதில்லையாம். இப்போது அதைத் திறந்து பார்த்தபோது, அதில் இருந்த முக்கியமான பொருள் என்னவென்றால், அது அவரது தாயாரது படம்தான் !

"அந்தத் தாய் நோய்வாய்ப்பட்டபோதுகூட அவர் போய்ப் பார்க்கவில்லை. பாசம், கடமை, உரிமை, உணர்வு அத்தனையும் அவருக்கு இருந்த போதிலும் பிறருக்காக, நாட்டுக்காகத் தொண்டு செய்யும் பண்பு இருந்ததே-அதுதான் தியாகம்.

மக்களுக்காகச் சட்டம் !

"போராடிப் போராடி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர். இன்றைக்கு நான் பல கோப்புகளைப் பார்க்கிறேன். காமராஜர் முதல்வராக இருந்தபோது விளைகச் சட்டப் பிரச்சினையை வைத்து, அவர் செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப் போட்டதில்லை; **மக்களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்.**

"தமிழ்நாட்டு மக்களும், தமிழக அரசும் நல்லவர்களின் தியாக உணர்வைப் போற்றிப் பாராட்டக் கடமைப் பட்டவர்கள். தியாக உள்ளம் படைத்தவர்களின் நினைவை எல்லார் உள்ளத்திலும் நிரந்தரமாக இடம்பெறச் செய்ய தமிழக அரசு ஆவன செய்யும்.

காமராஜர் பல்கலைக்கழகம் :

"கல்லூரிக்குக் காமராஜர் பெயர் சூட்ட வேண்டும் என்று கேட்டார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்துக்குக் காமராஜர் பெயர் சூட்டப்படும் என்று நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அழுத்தப்பட்ட, தூக்கியெறியப்பட்ட மக்களின் உள்ளத்திலே உறுதியும் வீரமும் துணிவும் அறிவும் வர, செயல்பட்ட காமராஜருக்குப் பல்வேறு வகையில்-நினைவுகூரத்தக்க வகையில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்த ஆவன அனைத்தையும் அரசு செய்யும்."

செய்தி-மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் நன்றி நவில, விழா இனிது நிறைவுற்றது.

அல்லும் பகலும் அயராது பாடுபட்ட அமரர் காமராஜர் அவர்களுக்கு, அரசு எடுத்த இந்த முதல் விழா-முத்தான விழாக் கண்டு நம் நெஞ்சமெல்லாம் இனிக்கின்றது. நெஞ்சார அஞ்சலியும் செலுத்துகின்றது!

—நிகழ்ச்சித் தொகுப்பு :

பி. வி. கிரி.

அரசவைக் கவிஞருக்கு விருதுவழங்கும் விழா

தமிழ்ப் பண்பாட்டைச் செழிக்க வைக்கும் வகையிலும் எங்கும்தமிழ் எதிலும் தமிழ் என்ற கொள்கை கொண்டு தமிழை வளர்க்கும் பணியிலும் முனைப்பாக ஈடுபட்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 15-1-'78 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் பிறந்தநாள் விழாவில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குரிய பல்வேறு திட்டங்களை அறிவித்தார்.

"நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களைப் போன்று திறமை வாய்ந்த ஒருவருக்கு அரசவைக் கவிஞர் விருதினை இந்த அரசு வழங்க இருக்கிறது"—என்று முதல்வர் அவர்கள் அவ்விழாவில் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் பல்வேறு மேடைகளில் அரசவைக் கவிஞர் நியமனம் குறித்து முதல்வர் அடிக்கடி குறிப்பிட்டு வந்தார். அவரது அறிவிப்புகளைத் தொடர்ந்து, 28-3-'78 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், "கவிஞர் கண்ணதாசன் தமிழக அரசின் அரசவைக் கவிஞராக நியமிக்கப் பெற்றிருக்கிறார்" என்று அறிவித்தார். அந்த அறிவிப்பு தமிழக மக்களுக்குத் தேனாக இனித்தது.

அரசவைக் கவிஞருக்கு விருது வழங்கும் விழா 9-7-'78 அன்று மாலையில் ராஜாஜி மண்டபத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்ச் சான்றோர்களும், அறிஞர் பெருமக்களும், அரசு அலுவலர்களும், திரையுலகப் பிரமுகர்களும் பொதுமக்களும் இந்த விழாவிற்கு அணி திரண்டு வந்திருந்தனர்.

கல்வித்துறைச் செயலர் திரு சி. இ. ரெங்கபாஷ்யம், ஐ.ஏ.எஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அதன்பின்னர், கல்வி அமைச்சர் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

"ஒவ்வொரு துறையிலும் தமிழன் முன் நிற்பான் என்று உறுதி எடுத்துக் கொள்ளும் நாளாக-இந்த நாளை நான் எண்ணுகிறேன்.

"கண்ணதாசன் அவர்களைச் சிறப்பிப்பதற்காகத்தான் இந்த அரசவைக் கவிஞர் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, அவரது கருத்துக்களுக்குத் தடை விதிப்பதற்கு அல்ல! அவரது சொந்தக் கருத்துக்கள் எதுவாக இருந்தாலும் அதை இந்தப் பதவியின் மூலம் நாங்கள் கட்டுப்படுத்தவில்லை!"

பின்னர், முதல்வர் அவர்களால், அரசவைக் கவிஞருக்கு வழங்கப்பட்டிருந்த தகுதி உரையைப் படித்தார் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் திரு ஏ. வி. நாராயணசாமி அவர்கள்.

அரசவைக் கவிஞர்

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் சாத்தப்பச் செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆகியோரின் எட்டாவது மகனாக 24-6-1927-ல் பிறந்த கவியரசு கண்ணதாசன், தமது 16-வது வயதிலிருந்து கவிதைகளை எழுதி வருகிறார்.

பல இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், இதுவரை 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகளையும் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும் எழுதியிருக்கிறார். தமிழ்த் திரைப்பட உலகில் பாடல்களுக்கு ஒரு சிறப்பு இவரால் உருவாகியது எனக் கூறலாம்.

இலக்கியத் துறையின் எல்லாப் பிரிவுகளிலும் திறம் பெற்ற இவர், கவிதை, காவியம், நவீனம், கட்டுரை என 60-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர், மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், தமிழக அரசின் சின்னமான கோபுரம் பதித்த தங்கச் சங்கிலியை, அரசவைக் கவிஞருக்கு அணிவித்து, தகுதி உரையை அளித்து, பொன்னாடை போர்த்துச் சிறப்பித்து உரையாற்றினார். ஆளுநர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"அரசுக் கவிஞர் என்னும் பட்டமும் பதவியும் தமிழ்ப் பண்பாட்டின் மரபாகும். கவிஞர்களின் கவிதைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களைச் சிறப்பிப்பது, தமிழ் மன்னர்களின் மரபாகும். அந்த மரபையொட்டி தமிழ்நாடு அரசும், கண்ணதாசனை அரசுக் கவிஞராக நியமித்துள்ளது. இதன் மூலம் இந்த அரசு தமிழைப் பெருமைப்படுத்தியுள்ளது.

"தத்துவம் போன்ற கடினமான விஷயங்களைச் சாதாரண மனிதனும் புரிந்து கொள்ளும் வகையிலே கவிதையாக வடிக்கக் கூடிய திறமை-கண்ணதாசனுக்கு உண்டு."

ஆளுநரின் உரைக்குப் பின்னர் **உவமைக் கவிஞர் சுரதா** அவர்கள் அரசவைக் கவிஞரைப் பாராட்டிப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

"பொறுமை மிகுந்த இந்த பூமியில், கண்ணதாசன் மிகச் சிறந்த கவிஞர் என்று பெருமையுடன் சொல்கிறேன். சங்க காலத்திற்குப் பின்னர், மிகச் சுருக்கமான வரிகளில், பெரிய கருத்துக்களைச் சொல்லுபவர் கண்ணதாசன் ஒருவர்தான்.

"இவரது வரலாறு மாணவர் படிக்கும் பாடப் புத்தகமாகப் பள்ளிகளில் இடம் பெற வேண்டும். இவரை அரசு, வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைத்து, அந்நாடுகள் குறித்து அறிந்துவரச் செய்ய வேண்டும்."

உவமைக் கவிஞரையடுத்துப் பேசிய மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. **வி. சி. குழந்தைசாமி** அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

"கவிதை என்பது மக்களைக் கவரத் தக்க ஆற்றல் படைத்தது; இனிய-அரிய கருத்துக்களை எடுத்துரைப்பது. அந்தக் கவிதை-கண்ணதாசன் அவர்களுக்குக் கைவந்திருக்கிறது. எளிய இனிய கவிதை வரிகளால் பொதுமக்களின் இதயங்களைத் தொடுவதிலே கண்ணதாசன் அவர்களுக்குத் தனிச் சிறப்பு உண்டு"

பின்னர், மாண்புமிகு உயர்நீதி மன்ற நீதிபதி திரு பு. ரா. **கோகுலகிருஷ்ணன்** அவர்கள் பாராட்டுரை வழங்கினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

"கவிஞர் கண்ணதாசனை அரசவைக் கவிஞராக நியமித்து இந்த ஆட்சியைப் போற்றாமல் இருக்க முடியாது. தமிழுக்குத் தரப்பட வேண்டிய இடத்தைத் தந்திருக்கிறார்கள்."

பின்னர், பாராட்டுரை வழங்கிய மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு **ஆர். எம். வீரப்பன்** அவர்கள் குறிப்பிட்டார்:

"கவிஞர் கண்ணதாசன், முன்பு, தம்மைப் பற்றி என்ன பேசினார் என்பதைப் பற்றிக் கருத்தில் எடுத்துக் கொள்ளாமல் அவருக்கு இருக்கும் தகுதியை எண்ணிப் பார்த்து, இந்தப் பதவியை அவருக்கு அளித்திருக்கிறார் தமிழக முதல்வர்."

அவருக்குப் பின்னர், மாண்புமிகு நிதியமைச்சர் திரு **கி. மனோகரன்** அவர்கள் பாராட்டுரை வழங்கினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

"கவிஞர் கண்ணதாசன் குழந்தையுள்ளம் கொண்டவர். பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு ஒப்பற்ற கவிஞராகத் திகழ்கிறார், கண்ணதாசன். இவரது கவிதைகளைத் தொகுத்துக் கல்லூரி மாணவர்களுக்குத் தருவது நியாயம் ஆகும். கண்ணதாசனின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளிநாடுகளுக்கு அனுப்பினால் நோபெல் (Nobel) பரிசுகூடப் பெற முடியும். தமிழ மக்கள் அவருக்கு நோபில் (Noble) பரிசு வழங்கியிருக்கிறார்களே!"

மாண்புமிகு நிதியமைச்சரின் உரைக்குப் பின்னர், மாண்புமிகு மேலவைத் தலைவர், சிலம்புச் செல்வர் திரு **ம.பொ.சி.** அவர்கள் பாராட்டுரை வழங்கினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

"அதியமான் என்ற மன்னனுக்கு நெல்லிக் கனி கிடைத்தது; அதைத் தின்றால் நெடுங்காலம் உயிர் வாழலாம். அப்படிப்பட்ட நெல்லிக் கனியை அவன் உண்ணவில்லை. தமிழ் மீதுள்ள பற்றினால் அதனைத் தமிழ்ப் புலவரான ஔவையாருக்கு வழங்கினான். அதைப் போலவே, மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழ்ப்பற்றின் காரணமாக, கண்ணதாசனை ஆயுட்காலக் கவிஞராக நியமித்திருக்கிறார். இது மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. தமிழர்கள் தோள்தட்டி, நெஞ்சு நிமிர்ந்து இதைப் பாராட்ட முடியும்."

பாராட்டுரைகளுக்குப் பிறகு, அரசவைக் கவிஞர் திரு. **கண்ணதாசன்** அவர்கள் ஏற்புரையாகத் தெரிவித்ததாவது:

"இந்தப் பதவியை, என் தகுதிக்குக் காட்டிய மரியாதையாக தமிழுக்குக் காட்டிய மரியாதையாக-நான் எண்ணிக் கொள்கிறேன்.

"அரசவைக் கவிஞர் என்ற முறையில் எனக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. கார் கொடுத்திருக்கிறார்கள். இதை எல்லாம் விட மகிழ்ச்சியானது ஒன்று உள்ளது. அது, என் சாவின்போது பீரங்கி வண்டி வரும் என்பதுதான்!"

இறுதியில், தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு **கொண்டல் சு. மகாதேவன்** அவர்கள் நன்றியுரை நவில, விழா இனிது நிறைவேறியது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
எஸ். சண்முக சுந்தரம்.

வளர்ச்சிப் பாதையில் தமிழகம்

பி.சி.கணேசன்

ஜனநாயகத்தில் பழைய அரசுகள் மாறிப் புதிய அரசுகள் பொறுப்பேற்பது ஓர் இயற்கையான நிகழ்ச்சி தான் என்றாலும் பழைய அரசை மாற்றி, புதிய அரசை மக்கள் ஏன் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அடிப்படை விஷயமாகும்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 1977-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் நாள் பதவிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டது. தமிழக மக்கள் அதனுடைய கொள்கைகளிலும், வேலைத் திட்டத்திலும் நம்பிக்கை வைத்து ஆட்சிப் பொறுப்பை அதனிடம் ஒப்படைத்தார்கள். தேர்தல் அறிக்கையில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், லஞ்ச ஊழலற்ற நிர்வாகத்தை மக்களுக்கு அளிப்பதாக உறுதி மொழி கொடுத்து இருந்தது.

ஆகவே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் ஆட்சியாளர்கள் இந்த உறுதி மொழியைக் காப்பாற்றும் வகையில் நடந்து கொள்ள முயற்சிக்கிறார்களா என்று மக்கள் எதிர்பார்ப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

தேர்தல் நேரத்தின் போதும் சரி, அதற்குப் பிறகும் சரி ஊழலற்ற ஓர் ஆட்சியைக் கொடுப்பது ஒரு பெரிய லட்சியமாகி விட முடியுமா என்கிற கேள்வி பலராலும் கேட்கப்பட்டது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இந்தக் கேள்வி நியாயமானது போலக் கூடத் தோன்றலாம். ஆனால் ஊழலற்ற ஆட்சி என்ற சொல்லுகிற போது எதைக் குறிப்பிடுகிறோம் என்பதையும், அதனால் மக்களுக்கு விளையக் கூடிய பலன் என்ன என்பதையும், தெரிந்து கொண்டால், ஊழலற்ற ஆட்சி என்பது எவ்வளவு இன்றியமையாதது என்கிற விஷயம் தெளிவாகப் புலனாகும்.

உதாரணமாக ஒரு காரியத்திற்கு 100 ரூபாய் செலவு செய்வதாக வைத்துக் கொள்வோம். அந்த 100 ரூபாயின் கடைசிப் பைசா வரை அந்தக் காரியத்திற்கே செலவழிக்கப்படுமானால் 100 ரூபாய் செலவழித்ததற்கான முழுப் பலனும் கிடைக்க வாய்ப்பு உண்டு. மாறாக 100 ரூபாயை நான் ஒருவரிடம் கொடுக்க, 30 ரூபாய் அவர் எடுத்துக் கொண்டு, 70 ரூபாயை, வாங்க உத்தேசிக்கப்பட்ட பொருளை வாங்குவதற்குக் கொடுத்து அனுப்புகிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த 70 ரூபாயை, பொருளை வாங்குவதற்காகக் கடைக்கு எடுத்துச் செல்லுகிறவன் 5 ரூபாயைத் தன் சொந்தச் செலவுக்கு வைத்துக் கொண்டு 65 ரூபாயைக் கடைக்காரரிடம் கொடுத்து அந்தப் பொருளை வாங்குவதாக வைத்துக் கொள்வோம். அந்தக் கடைக்காரரும் நாணயம் இல்லாத வியாபாரியாக இருப்பாரேயானால் அமித லாபம் பெற எண்ணி 45 ரூபாய் மதிப்புள்ள பொருளை 65 ரூபாய் என்று கூறி, வாங்கவந்தவனிடம் ஒப்படைத்து விடக் கூடும்.

இப்போது சிந்திப்போம். பொருள் வாங்குவதற்காக நாம் ஒதுக்கிய ரூபாய் 100. வாங்கப்பட்ட பொருளின் உண்மையான விலை 45 ரூபாய். ஆனால் நடைமுறையில் 100 ரூபாய் மதிப்புள்ள பொருளைப் பெற்றது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தி 45 ரூபாய்பெறுமானமுள்ள பொருளைப் பெறுகின்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. அந்தப் பொருளை 100 ரூபாய் கொடுத்து நாம் வாங்க முடிவு செய்ததன் நோக்கமே 100 ரூபாய் கொடுத்தால்தான் நீடித்து உழைக்கக் கூடிய நல்ல பொருள் கிடைக்கும் என்பதாகும்.

ஆனால் 45 ரூபாய் மதிப்புள்ள பொருள் 100 ரூபாய் என்கிற போலி மதிப்பைத் தாங்கிக் கிடைக்கின்றபோது, அது நீடித்துப் பயன்படாததாகி, பொருள் வாங்கப்பட்ட நோக்கத்தையே வீணாக்கி விடுகிறது.

கணக்கில் 100 ரூபாய் செலவு எழுதப்படுகிறதே தவிர அதற்கு உரிய பலன் கிடைக்காமலே போய்விடுகிறது.

நிர்வாகத்தில் ஊழல் என்று சொல்லுகிறபோது — பொறுப்பில் [illegible] என்று சொல்லுகிறபோது அவைகளைத் தனி மனிதர்களின் சொந்த பலவீனங்களாகக் கருதி ஒதுக்கி விட முடியாது. ஏனென்றால் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப் பணம் முழுவதும் மக்களுக்காகவே, சிக்கனமாக, பயனுள்ள வகையில் செலவழிக்கப்பட வேண்டும் என்பது நிர்வாகத்தின் பால பாடம்.

வளர்கின்ற சமுதாயத்தில் வரிகள் அதிகமாக விதிக்கப்படுவது தவிர்க்க முடியாத விஷயம் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். காரணம், வளர்ச்சிக்குத் தேவையான நிதியை அதிகப்படியான வரி விதிப்பதன் மூலம் பெறுவது அவசியமாகிறது. இப்படி வரிப் பளுவை மக்கள் மேல் சுமத்தி வசூலித்த தொகையை, ஊதாரித் தனமாகச் செலவழிப்பதும், ஒரு சிலர் தங்களைக் கொழுக்க வைத்துக் கொள்ள அதைக் கையாள்வதும், நிர்வாகத்திலும் பொதுவாழ்க்கையிலும் மன்னிக்க முடியாத குற்றங்கள் ஆகும்.

மக்களின் வரிப் பணம் முழுவதும் மக்களுக்காகவே செலவழிக்கப்படும்போது கூட மக்களுக்கு முழுப் பலன் கிடைப்பது சந்தேகம் என்கிற நிலையில், கிடைத்த பணத்தைச் சுருட்டிய வரையில் லாபம் என்ற ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் செயல்படுவார்களேயானால் அது மிகப் பெரிய சமூக விரோதச் செயல் என்பது பற்றி இரண்டு கருத்துக்களுக்கு இடம் இருக்க முடியாது.

ஜப்பான் நாட்டில் மழைக் காலங்களில்மக்களுக்குப்பயன்பட வேண்டும் என்பதற்காகப் பொது இடங்களில் குடைகள் வைக்கப்பட்டு இருக்குமாம். தேவையானவர்கள் எடுத்து உபயோகித்து விட்டு திரும்பவும் எடுத்த இடத்திலேயே கொண்டு வந்து வைத்து விடுவார்களாம்.

அங்குள்ள பொது இடங்களில் மக்களின் உபயோகத்திற்காக வைக்கப்படும் பொருள்கள் திருட்டுப்போவதுகிடையாது. காரணம், அங்குள்ள திருடர்கள் கூடத் தனிப்பட்டவர்களின் உடைமைகளைத்தான் களவாடுகிறார்களே தவிர பொதுச் சொத்தினைத் திருடுவது தங்களைத் தாங்களே திருடிக் கொள்வது போன்ற ஒரு காரியம் என்று எண்ணிப் பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து கொள்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆக, எல்லோருக்கும் பயன்படும் பொதுச் சொத்தை, திருடர்களே கூட, திருடக்கூடாது என்று எண்ணி ஒழுக்கத்துடன் நடந்து

கொள்கிற நாடுகளும் உலகில் இருக்கின்றன.

அப்படி இருக்க, மக்களின் வரிப் பணம் என்கிற, பொது மக்களின் பணத்தை லஞ்சமாகப் பெறுவதும், ஊழல் முறையில் ஒதுக்கிக் கொள்வதும், எவ்வளவு பெரிய சமூகக் குற்றங்கள் என்பதை எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஊழலின் தன்மையை விளக்க ரஷியநாட்டில் நடைபெற்றதாக கதை ஒன்றைச் சொல்வார். அந்தக் கதை இது தான் :

ரஷியாவை ஆண்ட ஒரு மன்னன், மக்களுக்குப் பெருமளவில் பணத்தைக் கஜானாவிலிருந்து செலவழித்தும், மக்கள் ஏன் திருப்தி அடையாமல் அரசைக் குறை கூறுகிறார்கள் என்று புரியாமல் குழப்பம் உற்றான். அதுபற்றித் தன்னுடைய அமைச்சரிடம் விளக்கம் கேட்டான். அமைச்சருக்கு நிலைமை புரிந்தது. ஆனால் ஆட்சித் தலைவரிடம் அதை எப்படி எடுத்துச் சொல்வது என்று அவருக்குத் தயக்கம். மன்னனிடம் விஷயத்தை விளக்க நேரம் கருதிக் காத்து இருந்தார் அமைச்சர்.

ஒரு நாள் மன்னன் விருந்து ஒன்று நடத்தினான். மன்னனும் பிரபுக்களும் அமைச்சரும் விருந்து அருந்திக் கொண்டு இருக்கும் போது, மன்னன் அமைச்சரைப் பார்த்து, அவருக்கு அருகிலுள்ள ஐஸ் கிரீமைத் தன்னிடம் அனுப்பி வைக்கச் சொன்னான். அந்தச் சந்தர்ப்பத்தைச் சாதுர்யமாகப் பயன்படுத்திக்கொள்ள எண்ணிய அமைச்சர், ஐஸ் கிரீமைக் கையிலேயே வழித்து அருகிலிருந்தவரிடம் கொடுத்து, அப்படியே ஒவ்வொருவராக வாங்கி, அதை மன்னனிடம் சேர்ப்பிக்கும்படி செய்தார். ஐஸ் கிரீம் ஒவ்வொருவரது கையிலும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து போய் மன்னனைச் சென்று அடைந்த போது சிறு துளி ஆயிற்று.

மன்னன் விஷயம் புரியாமல் அமைச்சரை ஆச்சரியத்தோடும் கோபத்தோடும் பார்த்தான். அப்போது அமைச்சர் "கஜானாவில் உள்ள பணத்தை மக்களுக்குச் செலவழித்தும் மக்கள் ஏன் திருப்தியற்று இருக்கிறார்கள் என்று ஒரு முறை என்னைக் கேட்டீர்கள். கஜானாவில் இருந்து செலவழிக்கப்படும் பணமும் பல கைகளுக்கு மாறி, மக்களை அடையும்போது ஐஸ் கிரீமுக்கு ஏற்பட்ட கதியையே அடைகிறது" என்று விளக்கம் சொன்னார்.

இந்தக் கதையை அறிஞர் அண்ணா அடிக்கடி மேடைகளில் கூறி, நிர்வாகத்தில் லஞ்ச ஊழல் தலைவிரித்து ஆடுகிற போது எத்தனை வரிகள் போட்டாலும் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காமல் போய்விடும் என்று எடுத்துச் சொல்வார். ஆகவேதான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலேயே ஊழல் அற்ற ஆட்சியை மக்களுக்குக் கொடுப்பதாகத் தெள்ளத் தெளிவாக வாக்குறுதி கொடுத்தது.

புதிய திட்டங்கள் போடுவதை விட ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டங்கள் முறையாகச் செயல்பட்டு மக்களுக்குப் பலன் தர வேண்டுமானால் லஞ்ச ஊழல் அற்ற நிர்வாக அமைப்பைக் காண்பது இன்றியமையாதது ஆகிவிடுகிறது. ஆகவே வளர்ச்சிப் பாதையில் தமிழகம் பீடு நடை போட வேண்டுமானால் ஊழல் அற்ற ஆட்சியினை அமைப்பதைத் தன்னுடைய தலையாய கடமை என்று தமிழக முதல்வர் கருதி இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்.

தமிழக அரசும் ஊழலற்ற ஆட்சியை உருவாக்குவதற்கு எத்தகைய இருதய சுத்தியோடு பாடு படுகிறது என்பதை மேதகு தமிழக ஆளுநர் பட்வாரி அவர்களும் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகப் பாராட்டித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் ஆட்சியில் ஊடுருவிவிட்ட ஊழலைக் களைந்து எறிய, பல நிர்வாக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டது. அவற்றை மத்திய அரசில் உள்ளவர்களும் மனம் உவந்து பாராட்டி இருக்கிறார்கள்.

—தொடரும்.

பிறந்த ஊரில் பெருந்தலைவர் விழா !

பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் 76-வது பிறந்த நாள் விழா அத்தலைவரின் பிறந்த ஊரான விருதுநகரில் 15-7-'78 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் வணிகர்கள் கலந்து கொள்ளும் வகையில் கடைகளுக்கு அன்று விடுமுறை விடப்பட்டிருந்தது. காமராஜ் இல்லம் மலர்களாலும், வண்ணத் தோரணங்களாலும் அழகுபடுத்தப் பட்டிருந்தது.

முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சா. சுப்பிரமணியம் அவர்கள் காமராஜ் இல்லத்தில் உள்ள காமராஜ் சிலைக்கு மாலை அணிவித்து நூற்பு இயக்கத்தையும், இசை நிகழ்ச்சியையும் துவக்கி வைத்தார்.

விழாவையொட்டி க்ஷத்திரியா பெண்கள் உயர்நிலைப்பள்ளி—எஸ். எஸ். அண்ணாமலை கலையரங்கத்தில் முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

காமராஜ் நகர்

சென்னை திருவான்மியூர் புறநகர்த் திட்டப் பகுதிக்குக் 'காமராஜ் நகர்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

காமராஜரின் பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசு இவ்வாறு அறிவித்துள்ளது. இந்தப் பெயர் மாற்றம் அவரது பிறந்த நாளான ஜூலை 15 முதலே அமலாகிறது.

'தனி மனிதன் தத்துவமாகலாம்' என்ற தலைப்பில் கருத்தாழம் நிறைந்த சொற்பொழிவு ஒன்றினை ஆற்றி திரு குமரி அனந்தன் அவர்கள் பெருந்தலைவருக்குப் புகழாரம் சூட்டினார்.

விருதுநகர் கல்வி மாவட்டத்தில் உள்ள கல்லூரி-உயர்நிலைப் பள்ளிகளிடையே பெருந்தலைவர் காமராஜ் பற்றிய பேச்சுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் இராமநாதபுரம் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகத்தால் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் ரூ. 780 மதிப்புள்ள நூல்களைப் பரிசாக வழங்கினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம்,

கனி வளம் கொஞ்சும் சேலம்
கலை நலம் கொஞ்சும் கோலம்
ஆடித் திருவிழாக் காலம் !
அரசுப் பொருட்காட்சி '78
சேலம்
(1978 ஆகஸ்ட் 6 முதல் செப்டம்பர் 19 வரை)
சேலம் நகரில்
போஸ் மைதானத்தில்
முதன் முறையாக அரசுப் பொருட்காட்சி !
மத்திய - மாநில அரசுத்துறைகள்
பொதுத்துறை நிறுவனங்கள்—
தனியார்துறை நிறுவனங்கள் பலவும்
பங்கேற்கின்றன.
தனிப்பட்ட சேளிக்கைப் பகுதிகளில்
நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள் !
திரைப்படக் காட்சிகள் !
எல்லாரும் மகிழ — நல்லதொரு வாய்ப்பு





இந்த இதழில்...

நலிந்த பிரிவினர்க்கு நல்வாழ்வு அளிப்பதே திட்டமிடுதலின் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும் என்ற மையக் கருத்தை வலியுறுத்தி, வானொலியில் மாநிலத் திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு கோவை செழியன் அவர்கள் ஆற்றிய உரையினை இவ்விதழில் வெளியிட்டுள்ளோம். தமிழகத்தில் மின் வளர்ச்சிக்கு மேலும் ஒரு மைல் கல் எனச் சொல்லக்கூடிய சுருளியாறு மின்நிலையம் இத் திங்கள் செயல்படத் தொடங்குகிறது. அத்திட்டம் குறித்து தமிழ்நாடு மின்வாரியத் தலைவரின் கட்டுரையும் இவ்விதழில் இடம் பெறுகிறது. 'வளர்ச்சிப் பாதையில் தமிழகம்' என்னும் கட்டுரைத் தொடரில் 'தமிழரசு' கூட்டாசிரியர் திரு பி. சி. கணேசன் அவர்களின் இரண்டாவது கட்டுரையை இவ்விதழில் காணலாம். வழக்கமான அம்சங்களும் உண்டு.

16-7-78 அன்று தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க அம்மாநாட்டில் கலந்து கொண்ட முதலமைச்சர்களின் திருஉருவப் படங்கள் இவ்விதழின் மேலட்டையை அலங்கரிக்கின்றன. நான்காவது அட்டை மற்றுமொரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியைத் தாங்கி வெளிவருகிறது. கானமாடக் கூடலாம் மதுரையம்பதி மாநகராட்சியின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு எஸ். முத்து அவர்களிடம் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்கள் வெள்ளியிலான செங்கோலை அளிக்கும் சிறப்புமிக்க நிகழ்ச்சியினை இவ்வட்டையில் காணலாம்.



விடுதலை நாள் விழா வாழ்த்து!

இந்தியத் திருநாட்டின் 32-வது விடுதலை நாள் விழாவின்போது நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்வாழ்த்தினை 'தமிழரசு' தெரிவித்துக் கொள்கிறது.

தமிழரசு
16-8-78
மலர். 9 இதழ். 4

அடுத்த இதழில்....

மாண்புமிகு முதல்வர் அவர்களின் விடுதலை நாள் விழாப் பேருரை இடம் பெறும்.

வளரும் தமிழகம்

நலிந்த பிரிவினரின் நல்வாழ்வுக்கே நமது திட்டங்கள்

திரு. கோவை செழியன்

துணைத்தலைவர், மாநிலத் திட்டக்குழு, தமிழ்நாடு அரசு

திட்டமிட்டுச் செயலாற்றினால் பதினைந்து ஆண்டுகளில் ஜப்பான் நாட்டை விட நாம் சிறப்பான முன்னேற்றம் காண முடியும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகளை நீக்கிடவும், சமூக மறுமலர்ச்சி ஏற்படவும், திட்டமிட்டுச் செயல்பட்டால்தான் எளிதில் முன்னேற்றம் காண முடியும் என்றுணர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தத் துவங்கினோம்.

இருபத்தைந்து ஆண்டுகள் திட்டமிட்ட வளர்ச்சிக்குப்பின் இப்போது திட்டமிடலில் ஒரு புதிய அத்தியாயத்திற்கு வந்துள்ளோம். மக்கட் தொகையில் 70 சதவீதத்தினர் வாழும் கிராமப்புற முன்னேற்றத்திற்கும், நமது நாட்டின் முக்கிய தொழிலான விவசாயத்திற்கும் இப்போது வளர்ச்சித் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக ஆரம்ப காலத்தில் திட்டமிட்டவர்கள் பெரும்பாலும் மேலைநாடுகளின் திட்ட அணுகு முறையைப் பின்பற்றி முதலில் பெரிய தொழில்கள் பெருக வேண்டுமென்று விரும்பினார்கள்.

நமது நாட்டில் அன்றிருந்த பொருளாதார நிலை, கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப அறிவுத்திறன், எதிர்நோக்கியிருந்த முக்கிய சமூகப் பிரச்சினைகள், அவைகளுக்கு விரைவில் தீர்வு காணவேண்டிய அவசியம், ஆகியவற்றை முக்கியமாகக் கருதி திட்டம் தீட்டியிருப்பார்களேயானால் இன்று நம்மிடையே நிலவிவரும் பிரச்சினைகள் இவ்வளவு இருக்காது என்பது ஒரு கருத்து.

ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் நாம் முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டிருந்தவை:—(1) தனிநபர் வருமானம் உயர வேண்டும்; (2) வேலை வாய்ப்பு வசதிகளை விரிவாக்க வேண்டும்; (3) மக்களின் வாழ்க்கைத் தர வசதி பெருக வேண்டும் மற்றும் (4) ஏற்றத் தாழ்வுகளை நீக்கி சமதர்ம சமுதாயம் ஏற்பட வேண்டும் என்பனவாகும். எனினும் இருபத்தைந்து ஆண்டுகள் திட்டமிட்ட வளர்ச்சிக்குப் பின்னும், வறுமையில் உழல்வோரின் எண்ணிக்கையும், வேலையின்றி இருப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்ற நிலையினைக் காணும்போது, இதுகாறும் நாம் செயல்படுத்திய திட்டங்களில் ஏதோ ஒரு குறை இருக்கிறது என்ற கேள்விக்குறி எழுகிறது. திட்டமிடலில் அடிப்படை மாறுதல்கள் தேவை என்பதை உணர்ந்து, இப்போது செயல்படத் துவங்கியிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் பெருமதிப்பிற்குரிய நமது முதல்வர் புரட்சித் தலைவர் உயர்திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு தீட்டிய முதல் ஆண்டுத் திட்டத்திலேயே (1978-79-ஆம் ஆண்டுக்கான திட்டம்) கிராமப் பகுதிகளுக்கும், நலிந்த பிரிவினருக்கும் முன்னுரிமை கொடுத்துள்ளது. அதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

எனது உரையில் புள்ளிவிவரங்களை அடுக்கி விவரிக்க விரும்பவில்லை. அது பட்ஜெட் உரை போல் ஆகிவிடும்; கேட்பதற்கும் சுவையாக இருக்காது. திட்டமிடும்போது ஒரு துறையின் வளர்ச்சி, மற்றதை பாதிக்காத வகையிலும், எல்லாத் துறைகளும் அதனதன் தகுதிக்கேற்றவாறு வளர நிதி ஒதுக்கிட வேண்டும்.

உதாரணத்திற்கு எடுத்துச் சொல்லவேண்டுமானால், விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்குக் கவனம் செலுத்தும் அதே நேரத்தில் கிராமப்புறங்களில் உற்பத்தியாகும் அதிகப்படியான விவசாயப் பொருட்கள் நகர்ப்புறங்களுக்கும் அருகிலுள்ள மார்க்கெட்டுகளுக்கும் வரவேண்டியிருப்பதால் கிராமங்களை இணைக்கும் சாலை வசதிகளையும், போக்குவரத்தையும் பெருக்க வேண்டியது அவசியம் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே வகையில் தொழில்துறை வளர்ச்சிக்கும், விவசாயத் துறைக்கும் நிலத்தடி நீரை பெருமளவு உபயோகிப்பதற்குத் திட்டம் வகுக்கும்போது அதற்கேற்ப மின்சக்தி உற்பத்தி இருக்கிறதா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். மின் உற்பத்தி போதிய அளவில் அதிகரிக்கப்படாவிட்டால் மற்ற துறைகளின் வளர்ச்சியும் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படும்.

இந்த நாட்டில் எந்த உற்பத்தி பெருகினாலும் பெருகாவிட்டாலும், ஜன உற்பத்தி பெருகிப் பொங்குகிறது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஓரளவேதான் பயன் தந்திருக்கிறது. தமிழ்நாட்டில் 1951-ல் மூன்று கோடியாக இருந்த மக்கட்தொகை இப்பொழுது 4½ கோடியாக இருக்கிறது. பின்னால் வரக்கூடிய ஆண்டுகளில் இன்னும் அதிகமாகலாம். அவர்கள் தேவைகளையும் கருத்தில் கொண்டு திட்டமிடுதல் அவசியமாகும். பல்வேறு பிரச்சினைகளையும் ஆராய்ந்து, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக 1978 முதல் 1983 வரையிலான ஐந்தாண்டுகளுக்கான திட்டத்தை உருவாக்கும் பணியில் இன்று மாநிலத் திட்டக்குழு முழு முயற்சியுடன் ஈடுபட்டுள்ளது. திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:

(1) அடுத்து பத்து ஆண்டுக் காலத்திற்குள் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, உழைக்க முன்வரும் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவது,

(2) வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு உதவிகரமான திட்டப் பணிகளைச் செயல்படுத்தி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது.

மாதம் 65 ரூபாய்கூட உணவுத் தேவைகளுக்காகச் செலவு செய்ய இயலாத நிலையில் தமிழ்நாட்டில் மொத்த மக்கட்தொகையில் 52 சதவிகிதத்தினர் இருக்கின்றனர்.

வேலையில்லாப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் படித்தவர்கள் வேலை வாய்ப்பு நிறுவனங்களில் பதிவு செய்து வேலைக்காகக் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் 4½ இலட்சத்திற்கு மேல் உள்ளார்கள்.

கிராமப் புறங்களில் விவசாயத்தையே நம்பி வாழும் பெரும் பகுதியினருக்கு வேலை வாய்ப்பு விவசாயப் பருவகாலத்தில் மட்டுமே உள்ளது.

இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுவதுதான் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

தமிழ்நாட்டிற்கான அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு ரூ. 2020 கோடியாக இருக்கலாம் என்று மத்திய திட்டக்குழு யோசனை கூறியுள்ளது. விவசாயம், நீர்ப்பாசனம், மின்சக்தி, தொழில் வளம் ஆகிய பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திற்காகத் திட்ட காலத்தில் என்னென்ன வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று தொகுத்து அளிப்பதற்காக 25 செயற்குழுக்களை அமைத்துள்ளோம். இக்குழுக்கள் கூறும் பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுத்துச் செயல்படுத்தப்படும்.

நமது முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களே மாநிலத் திட்டக்குழுவின் தலைவராகவும் இருக்கின்றார். அவர்களின் மேலான ஆலோசனையின் பேரில் கிராமப்புற வளர்ச்சிக்கும், விவசாய முன்னேற்றத்திற்கும் முன்னுரிமை அளித்து, கணிசமான நிதி ஒதுக்கீடு செய்ய இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய ஏற்பாடுகளினால் திட்டத்தின் பயன் இனி வரும் ஆண்டுகளில் நலிந்த நிலையில் வாழ்வோருக்குச் சென்றடையவும், அவர்களது வாழ்க்கைத் தரம் வறுமைக் கோட்டினின்றும் சற்று மேம்படவும் நிச்சயமாக உதவும் என்று இந்த அரசு நம்புகிறது.

ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட எல்லாத் திட்டங்களிலும் திட்ட முதலீட்டில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் மின் சக்தி உற்பத்திக்காகச் செலவிடப்பட்டது. இந்தத் திட்டத்திலும் மின் உற்பத்திக்காக 35 சதவீதத்திற்கு மேலாக நிதி ஒதுக்கீடு செய்ய எண்ணியுள்ளோம். விவசாய வளர்ச்சியில் உயர்ரக விளைச்சல் தரக்கூடிய விதைகளை அதிக அளவில் விநியோகிக்கவும், பணப் பயிர்கள் சாகுபடியை அதிகப்படுத்தவும் கவனம் செலுத்தி வருகிறோம். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைத்தால்தான் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உற்சாகமாக ஈடுபடுவார்கள். இதற்காக முதலமைச்சர் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகள் வெற்றி பெற்று இத்திட்டகாலத்தில் விவசாயிகள் கணிசமான இலாபம் தரக்கூடிய அளவில் உற்பத்திப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படும் என்று நம்புகிறேன்.

மக்களுடைய மேம்பாட்டிற்காகத்தான் திட்டமிடுகிறோம். திட்டப் பணிகள் அவர்களுடைய தேவையை நிறைவேற்றுவதாக அமைய வேண்டும். அப்போதுதான் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மக்களுடைய முழு ஒத்துழைப்பையும் பெறமுடியும். இதனை மனத்தில் கொண்டுதான் மக்களின் பல்வேறு பிரிவினர்களான விவசாயப் பெருங்குடி மக்களையும், சிறு, நடுத்தர, பெரிய தொழில் அதிபர்களையும் ஏனையோரையும் நேரில் சந்தித்து அவர்கள் தொழில் முன்னேற்றத்தில் உள்ள தடங்கல்களைக் கேட்டறிந்தேன். கோயமுத்தூர் திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களைச் சந்தித்து உரையாடினேன். இதர மாவட்டங்களுக்கும் வெகு விரைவில் செல்ல எண்ணியுள்ளேன். இந்தச் சந்தர்ப்பங்களில், முன்னேற்றத்திற்குத் தடங்கல்களாக இருப்பதை அகற்ற கூறப்பட்ட யோசனைகளைப் பரிசீலித்து, திட்ட காலத்தில் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தமிழ்நாட்டின் பெரிய தீர்

அரசுப் பணிவிதிகள் ஆணைக்குழு நியமனம்

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான அடிப்படை-பணிவிதிகளைத் தற்போதைய தேவைகளுக்கு ஏற்பச் சீரமைக்க ஆணைக்குழு ஒன்று அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார குழுமத் துணைத் தலைவர் திரு எம். ஜி. பாலசுப்பிரமணியம், ஒழுக்கக் கண்காணிப்பு ஆணையாளர் சி. வி ஆர். பணிக்கர், நிதித்துறைச் செயலாளர் கே. வெங்கடேசன் அல்லது அவரது பிரதிநிதி, பொதுப்பணிதுறைத் தலைமைப் பொறியாளர் (பொது), அரசு துணைச் செயலாளர் தரத்தில் உள்ள ஓர் அதிகாரி அல்லது தலைமைச் செயலகப் பணி அதிகாரி ஆகியோர் இந்த ஆணைக்குழுவில் இடம்பெறுவார்கள். 6 மாதத்துக்குள் இந்த ஆணைக்குழு ஓர் அறிக்கை தயாரித்து அரசுக்குக் கொடுக்கும்.

வாய்ப்பில்லை. ஆனால், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை கேரள மாநில ஒப்புதலுடனும், ஒத்துழைப்புடனும் திருப்பி விடுவதன் மூலம், கோயமுத்தூர், இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் 8 இலட்சம் ஏக்கருக்கு மேல் பாசன வசதி கொடுத்து வறண்ட பூமிகளை வளம் கொழிக்கச் செய்யலாம். உபயோகப்படுத்தப்படாமல் வீணாக அரபிக் கடலில் போய்ச் சேரும் தண்ணீரில் 82 TMC அளவை நாம் கேட்கிறோம். இது கேரள மாநிலத்தில் கிடைக்கக்கூடிய மொத்த நீர்வளமான 2500 TMC-ல் ஒரு சிறு பகுதியே ஆகும்.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளிலிருந்து தண்ணீரைத் தமிழகத்துக்குத் திருப்பிவிடும் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கென்று மத்திய அளவில் நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலமான கேரளாவுடன் இப்பொழுது நிலவிவரும் சுமுகமான நட்புணர்வும், நமது முதலமைச்சர் காட்டும் தனி ஆர்வமும், இத்திட்டத்திற்கான கேரள மாநிலத்தின் ஒப்புதல் விரைவில் கிடைக்குமென்ற நம்பிக்கை தெரிகிறது. தென் மாநில முதல்வர்கள் மாநாடு இதற்கு வழி வகுக்கும் என நம்புகிறேன். இத்திட்ட காலத்தில் பாசனத் துறைகளையும், கால்வாய்களையும் நவீனப்படுத்துதல் முழு முயற்சியுடன் செயல்படுத்தப்படும்.

கீழ்பவானி ஆற்றுக் கால்வாய்களுக்குக் கரைகளில் காரை பூசுதல் (லைனிங்), கல்லணை கால்வாய்களுக்குக் காரை பூசுதல் ஆகியவற்றிற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. ஏரிகள் பாசனத்தை நவீனப்படுத்த 111 கோடி ரூபாய் அளவிலான ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு வசதியைப் பெருமளவு அதிகரிக்க சிறு தொழில்கள், கைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் வளர்ச்சிக்கெனத் தனி கவனம் செலுத்தப்படுகிறது. மாவட்டங்களில் துவங்கப்படவிருக்கும் தொழில் மையங்கள் சிறு தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும். இப்பொழுது தொழில் தொடங்குவதற்கு முன்வருபவர்களுக்கு நிறைய சிரமங்கள் இருக்கின்றன. அரசாங்கம் நிதி உதவி செய்தும், அனுமதி கொடுத்தும், நிலம் கொடுத்ததற்குப் பின்பும், ரூ. 20 இலட்சம், 30 இலட்சம் மூலதனம் செய்து கட்டடங்களைக் கட்டி, இயந்திரங்களை நிறுவியதற்குப் பின்பும், ஹெல்த் கிளியரன்ஸ் சர்டிபிகேட், பஞ்சாயத்து சர்டிபிகேட் கிடைக்காத காரணத்தால் பல இடங்களில் உற்பத்தி தொடங்காமலே சிரமப்படுகின்றனர். இவைகளை மனத்தில் வைத்துத்தான் மாவட்ட தொழில் கேந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள சிரமங்களை அது தவிர்க்கும்.

1948-ம் ஆண்டு இயற்றிய பேக்டரி ஆக்ட் சட்டத்தை மாற்ற பரிசீலனை செய்ய அரசாங்கம் விரும்புகிறது. மத்திய அரசு அண்மையில் 504 உற்பத்திப் பொருட்களைச் சிறு தொழில் கிராமத் தொழில், குடிசைத்தொழில் துறைக்கு ஒதுக்கவேண்டும் என்ற கொள்கையை அறிவித்திருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தொழில் பேட்டையை அமைத்தல், சீர் செய்த மனைகள், சாலைப் போக்குவரத்து வசதிகள்செய்து கொடுத்தல், மின் சக்தி வழங்கல், நீர் வசதி செய்து கொடுத்தல், விற்பனை வசதிகளைப்பெருக்குதல், கடன் வழங்குதல் ஆகியவற்றில் திட்டம் அதிக அக்கறை காட்டும்.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சிக்கு (Integrated Rural Development) ஆக்கம் கொடுத்தல் இத்திட்டத்தின் மற்றொரு குறிக்கோளாகும். கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை அதிகரிக்க, ஆங்காங்கு இருக்கக்கூடிய நீர்வளம், நிலவளம், மனித சக்தி இவைகளைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்குப் பஞ்சாயத்து ஒன்றிய அளவிலான திட்டங்களைத் (Block-level Plans) தீட்ட வேண்டுமென்று மத்திய திட்டக் குழு வலியுறுத்திக் கூறியிருக்கிறது. திட்டமிடுதலில் இந்தப் புதிய அணுகுமுறை வேலையில்லாப் பிரச்சினையைப் பெருமளவில் தீர்க்க வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படும் இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மாடு வளர்ப்பு, குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், மானுவாரி பயிர் சாகுபடி இவைகளுக்கென பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் இம்மாவட்டத்திலுள்ள பொது மக்களின், குறிப்பாக ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், வறட்சியால் இவர்களுக்கு ஏற்படும் நலிவைக் குறைப்பதற்குமான வழி ஏற்படும்.

வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரவும், நாட்டின் மொத்த வருமானத்தை உயர்த்தவும், புரட்சித் தலைவரின் தலைமையிலான இந்த அரசு திட்டம் தீட்டி, ஒளிமயமான எதிர்காலத்திற்குப் பாதை வகுக்கிறது.

[6-8-78 அன்று மாலை 6.15 மணிக்குச் சென்னை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.]

வடகிழக்குப் பகுதியில்

நீர் மின்திட்டங்கள்



இந்தியாவில் வடகிழக்குப் பகுதியில் நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நிறைய வாய்ப்பு உள்ளது. 1978 முதல் 83 வரையில் வடகிழக்குப் பகுதியில் நீர் மின்சார உற்பத்திக்கான திட்டங்களை மத்திய அரசு தயாரித்திருக்கிறது.

இந்தத் தகவலை மத்திய எரிபொருள் அமைச்சர் திரு பா. இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார். மேகாலயா, மணிப்பூர், மற்றும் வடகிழக்குப் பகுதியில் மூன்று நீர் மின்சாரத் திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும், மேலும் பல நீர் மின்சாரத் திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆயத்த வேலைகள் மும்முரமாக நடத்தப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சுருளியாறு நீர் மின் திட்டம்

கே. சொக்கலிங்கம், ஐ. ஏ. எஸ்.
தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்.

1978 ஆகஸ்ட் திங்கள் 20-ஆம் நாள் மின் உற்பத்தியினைத் துவங்கும் சுருளியாறு நீர் மின் நிலையம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆளுகையின்கீழ் உள்ள நீர்மின் நிலையங்களில் பதினெட்டாவது நீர் மின் உற்பத்தி நிலையமாகும்.

சுருளியாறு வைகை ஆற்றின் ஒரு கிளை ஆறாகும். சுருளியாறும் அதன் முக்கிய கிளை ஆறுகளான மணலாறு, வெண்ணியாறு, எரவங்கலாறு ஆகிய ஆறுகளின் நீரைப் பயன்படுத்தி, ஒரு மின் உற்பத்தி நிலையம் அமைய இச்சுருளியாறு நீர் மின்திட்டம் வகை செய்துள்ளது. மதுரை மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியைப் பெரியாறு நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து பிரிக்கும் பச்சைக்குமாச்சி என்றழைக்கப்படும் மலைத் தொடரிலிருந்து சுருளியாறு பிறக்கிறது.

மொத்தம் 38.85 சதுர கிலோ மீட்டர் நீர்ப்பிடிப்புப் பகுதியை உள்ளடக்கிய பல்வேறு வடிநிலங்களிலிருந்து வந்து விழும் நீரானது நீர்க்கால்களுக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்ச்சேமிப்பு அணைகள் - சிறு அணைகளில் (Weirs) தேக்கி வைக்கப்பட்டு, அதன் பிறகு விரிகுடா முன் அமைந்துள்ள அணைக்குள் வெற்றிகரமாகத் திருப்பிவிடப்படுகிறது. விரிகுடா முன் அமைந்துள்ள அணையிலிருந்து, நீரானது சுரங்கப்பாதைவழியாகக் கொண்டு செல்லப்பட்டு பென்ஸ்டாக்கைச் சென்று அடைகிறது. இப்படி கொண்டு செல்லப்படும் நீரானது ஆண்டொன்றுக்கு 114 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தியினை உற்பத்தி செய்யும்.

சுருளியாறு நீர் மின் திட்டத்திற்கு 1973 மே திங்களில் திட்டக்குழு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்திற்காகும் செலவு, இறுதியாகச் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி, 25.06 கோடி ரூபாயாகும். ஹேவேவிஸ் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து நேரடியாக வந்து விழும் நீரும், ஹேவேவிஸ் திருப்பு அணையிலிருந்து குழாய் மூலம் கொண்டு செல்லப்படும் நீரும், 1406 மீட்டர் நீளமுள்ள ஒன்றோடொன்று தொடர்புபடுத்தும் சுரங்கவழி மூலமாக, மணலாறு அணையில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கத்தினுள் செலுத்தப்படும்.

மணலாறு அணையில் தேக்கப்படும் நீரானது 2928 மீட்டர் நீளமுள்ள மற்றொரு சுரங்க வழி மூலமாக வெண்ணியாறு அணையில் உள்ள நீர்த்தேக்கத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது. வெண்ணியாறு மதகில் தேக்கி வைக்கப்பட்டுள்ள சிறிதளவு நீரும் ஒரு சிறு சுரங்க வழியாக வெண்ணியாறு அணைக்குக் கொண்டுச் செல்லப்படுகிறது. மேற்சொன்ன எல்லா நீர்ப் போக்குகளும் வெண்ணியாறு

சுருளியாறு நீர்மின் நிலையம்



அணையில் தேக்கப்பட்டு 2015 மீட்டர் நீளமுள்ள மற்றொரு தொடர்புபடுத்தும் சுரங்க வழி மூலமாக எரவங்கலாறு விரிகுடா முன் அமைந்துள்ள அணைக்குக் (Forebay dam) கொண்டு செல்லப்படுகிறது.

எரவங்கலாறு விரிகுடா முன் அமைந்துள்ள அணையிலிருந்து, 803 மீட்டர் நீளமுள்ள குழாய் மூலமாக, நீரானது, 30 மீட்டர் ஆழமுள்ள சர்ஜ்-ஷாப்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பட்டர்ஃபிளை வால்வு அவுசுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அந்த வால்வு அவுசிலிருந்து 2904 மீட்டர் நீளமுள்ள பென்ஸ்டாக்கானது மின்நிலையத்துக்கு நீரைக் கொண்டு செல்கிறது. இந்தப் பென்ஸ்டாக் குழாய் உருக்குத் தகடுகளால் ஆனது.

இந்த பென்ஸ்டாக்தான் தமிழ்நாடு மின்வாரியம் கட்டியுள்ள பென்ஸ்டாக்குகளிலே மிகவும் நீளமானதாகும். அதுமட்டுமல்ல, இந்த நீர் மின்நிலையத்தில் மின் உற்பத்தி செய்ய நீர்வந்து விழும் உயரமானது 1,028 மீட்டர்களாகும். தென் கிழக்கு ஆசியாவிலேயே இதுதான் மிகவும் உயரமானது எனக் கருதப்படுகிறது.

இந்த மின் திட்டத்திற்கான கட்டட வேலைகளும் அதிகமானவையேயாகும். மூன்று அணைகளும் இரண்டு மதகுகளும் (சிறு அணைகளும்) (Weirs) இறுதியில் மின் உற்பத்திக்கு நீரைத் திருப்பி விடுவதற்காகக் கட்டப்பட்டுள்ளன. இந்த நீர் மின் உற்பத்தி நிலையத்தில் மிக உயரத்தில் உள்ள ஹேவேவிஸ் அணையானது இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் இடத்தில் அமைந்துள்ளது. அவ்வணையைச் சுற்றிலும் கண்ணைக் கவரும் காடுகள்—ஓங்கி வளர்ந்த மரங்கள்-தேயிலைத் தோட்டங்கள் தான். சுற்றி எங்கு நோக்கினும் மரகதப்படுதா விரித்தாற்போல் கண்ணுக்கு விருந்தான அழகுக் குவியல்! அணையின் ஒரு பகுதி கற்களால் கட்டப்பட்டது.... மற்றொரு பகுதி மண்ணாலானது.

ஹைவேவிஸ் நீர் திருப்பி விடும் சிறு அணையின் கீழ் நோக்கிப் பிரியும் பகுதியில் நீரைக் குழாய்' மூலம் மேலே ஏற்றும் பிரிவு (pump house) நிறுவப்பட்டுள்ளது. இங்கிருந்து உபரியான நீரானது குழாய் மூலம் ஹைவேவிஸ் அணைக்கே மறுபடியும் திருப்பிச் செலுத்தப்பட்டு மேலும் மின் சக்தி உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது.

ஆக, இந்த மின் திட்டத்தில், மின் திட்டப் பகுதியில் அமையப் பெற்றுள்ள ஒவ்வொரு பகுதியுமே மின் உற்பத்திக்காகப் பயன் படுத்தப்படுகிறது. மணலாறு அணை, வெண்ணியாறு அணை, எரவங்கலாறு அணை ஆகிய மூன்றுமே முழுக்க முழுக்க கல்லால் கட்டப்பட்ட அணைகளேயாகும். நீர்த்தேக்கங்களை ஒன்றோடொன்று தொடர்புபடுத்துவதற்காக வேண்டி, மொத்தம் 7454 மீட்டர் நீளமுள்ள பாறைப் பகுதியானது குடையப்பட்டு சுரங்கப்பாதை உருவாக்கப்பட்டுள்ளது. அச்சுரங்க வழிகளுக்கு எங்கெங்கு கான்க்ரீட் தேவையோ அங்கெல்லாம் கான்க்ரீட் பூசப்பட்டு அவை உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. 440 மீட்டர் உயரத்தில் வண்ணாத்திப்பாறை என்னும் இடத்திற்கு அருகில் இந்த மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. 35 மெகாவாட் மின் சக்தி உற்பத்தி செய்யும் திறன் கொண்ட யூனிட் ஒன்று நிறுவப் பட்டுள்ளது. உட்புற சுவிட்ச் கியர் உட்பட மின்உற்பத்தி சாதனங்கள் முழுமையும் (Austrian Suppliers credit) - கீழ் மெசர்ஸ் எலின்-யூனியன் ஆஸ்திரியா நிறுவனத்தால் சப்ளை செய்யப்பட்டவையாகும். இம் மின்நிலையத்திற்கான டர்பைன் செட்டானது மெசர்ஸ் வாய்த்—ஆஸ்திரியா நிறுவனத்தால் சப்ளை செய்யப்பட்டது. டர்பைன் 50,000 குதிரைத் திறன் கொண்டது. 979 மீட்டர் மொத்த உயரத்திற்குப் பயனுள்ள வகையில் வடிவமைப்புச் செய்யப் பட்டது.

டர்பைனின் மேல்மட்டப் பகுதியில் 700 மீட்டர் விட்ட அளவுள்ள ஒரு வால்வு இந்த மின் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ''வால்வு ஹவுசி''ல் அமைக்கப்பட்டுள்ள பட்டர்ஃபிளை வால்வினைச் சேர்க்காமல் இது மற்றொரு வால்வாகும்! இரண்டு வால்வுகளும் அவற்றை இயக்கும் கருவிகளும் மெசர்ஸ் வாய்த் ஆஸ்திரியா நிறுவனம் சப்ளை செய்ததாகும்.

டர்பைனுடன் சேர்க்கப்பட்டு உள்ள மின் உற்பத்தி இயந்திரமானது 38.9 எம். வி. ஏ. திறனுடையது. வோல்டேஜ் 11. கே.வி ஆகும். மின் உற்பத்தி இயந்திரத்துக்குக் கார்பன்-டை-ஆக்சைட் நெருப்பணைக்கும் பாதுகாக்கும் முறை அமைக்கப்பட்டுள்ளது. எல்லா மின் உற்பத்திச்சாதனங்களையும் மெசர்ஸ்-எலின்-யூனியன் ஆஸ்திரியா நிறுவனம் சப்ளை செய்துள்ளது. ரிலே மற்றும் கண்ட்ரோல் போர்டுகள் உள்ள உட்புற சுவிட்ச் கியரும் இந்த நிறுவனமே சப்ளை செய்ததாகும். இந்த மின் உற்பத்தி இயந்திரத்தை டர்பைன் ஆகவும் இயக்கலாம்; அல்லது 'சின்கரனஸ்-கண்டென்சராகவோ' (Synchronous Condensor) இயக்கலாம்.

இதற்கென தானே இயங்கும் கண்ட்ரோல் இயக்கமுறை, முதன் முறையாக, இந்த மின் நிலையத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், மின் இயந்திரத்தை ஒரு சில விநாடிகளில் மின் உற்பத்தி செய்யும் இயந்திரமாகவோ, மின் சமனுக்கும் மோட்டாராகவோ இயக்கலாம். இப்படி இயக்கும் பொழுது, ஏதாவது தவறுகள் நேர்ந்து விட்டால், அவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். அந்தத் தவறுகள் பிரகாசமான ஒரு பகுதியில் சுட்டிக் காட்டப்படும் வகையில் ஓர் அமைப்பு உள்ளது. உடனடியாகச் சுலபமாகவும் தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் இதனால் முடிகிறது.

வெளிப்புறத்தில் நிறுவப் பட்டுள்ள மூன்று 13 எம்விஏ ஒற்றைக் கட்ட மின்மாற்றிகள் (Single Phase Transformers) மூலமாக உற்பத்தியாகும் வோல்டேஜ் அளவு 11 கே. வி. யிலிருந்து 110 கே. வி. யாக உயருகிறது.

அண்மையில் உள்ள பெரியாறு கயத்தாறு 110 கே. வி. இரட்டைச் சுக்யூட் மின் கம்பித் தடத்தைப் பயன்படுத்தி, ஒரு 110 கே. வி. கம்பி மூலமாக தமிழ்நாடு மின் இணைப்புடன் இந்த மின்நிலையமானது இணைக்கப்படுகிறது.

சுருளியாறு அனல் மின் நிலையம் செயல்படத் துவங்குவதனால் தமிழ்நாடு மின் இணைப்பின் (GRID) நிறுவனத் திறன் (Installed Capacity) மேலும் 35 மெகாவாட் அதிகமாகும். அதாவது தமிழ்நாடு மின் இணைப்பின் மொத்த நிறுவனத்திறன் 2,459 மெகாவாட்டுகளாக உயரும். மின்தேவையில் உச்ச நேரக்காலத்தில் ஏற்படுகிற நெருக்கடியைக் குறைக்க இந்த மின்நிலையம் கணிசமான அளவில் உதவுவதுடன், சின்கரனஸ் கண்டென்சராகவும் செயல்படுமாதலால் கோடை காலத்தில் இந் நிலையம் மிகவும் பயனுள்ள வகையில் செயலாற்றும். மதுரையையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மின் தாழ்வழுத்தத்தை (Voltage) தகுந்த அளவில் சீர் செய்து நல்ல மேம்பாட்டினையும் அடையமுடியும்.

இம்மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தி மூலம் சுமார் 40 ஆயிரம் பம்பு செட்டுகள் கூடுதலாகப் பலன் பெறும்.

மதுரை மாநகராட்சி மேயராகவும் துணை மேயராகவும் 8-8-78 அன்று தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள திரு எஸ். முத்து அவர்களும், திரு கே. எஸ். சந்தானம் அவர்களும்





மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சேலத்தில் 6-8-78 அன்று அரசுப் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்.

ஒரு கிழவனின் இறுதிப் பயணம்

— சத்தியபாரதி

அம்மாசிக் கிழவனின் உயிர் பிரிந்திருந்தது. மாமரத்தின் அடியில் சாய்ந்தபடி, ஒரு காலே நீட்டி, இன்னொரு காலே மடக்கிய நிலையில், இரண்டு கைகளையும் பரக்கப் போட்டபடி தலே சாய்ந்து, வெட்டிப்போட்ட மரக்கிளை துவண்டு கிடப்பதைப் போல அவன் இறந்து கிடந்தான்.

ஊருக்கு மேற்கே ஒரு பெரிய கடல்போன்ற குளமும், மற்ற மூன்று ப்க்கமும் பச்சைப் பசேல் என்ற வயற்காடும் சூழ்ந்த அந்த 'முல்லேக்காடு' கிராமத்தின் செல்லப் பிள்ளையாகத் திரிந்தவன் அம்மாசி.

குழந்தைகளும் பெரியவர்களுமாக ஒரு சிறு கும்பல் அந்த இடத்தில் கூடியிருந்தது. எல்லோருடைய பார்வையிலும் இரக்கம் ததும்பியிருந்தது.

அந்தக் கூட்டத்திலிருந்த ஆண்டிக்கோனர் சொன்னர். ''ம்ம்....அம்மாசிக் கிழவனின் கதையும் முடிஞ்சி போச்சு...... பிராயத்தில் எப்படி இருந்தான் தெரியுமா?....ஒரு மலையைப் பொறட்டற மாதிரி உடம்பு.... முகத்தில பெரிய கட்டபொம்மன் மீசை..எப்பவும் தலேயில் முண்டாசு..வெட்டிட்டுவான்னு கட்டி இழுத்துட்டு வந்துடுவான்....அப்பேர்ப்பட்டவன் இப்படி அனுதையா, ரோட்டடி மரத்தில சாஞ்சால போயிட்டான்....'''' அவர் குரலில் அனுதாபம் தெரிந்தது.

அந்தப் பக்கமாக வந்த தலேயாரி கொம்பையாத் தேவர் ''வே ஆண்டிக் கோனரே..... என்னவே அங்க கூட்டமாயிருக்கு'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தார்.

''நம்ம அம்மாசிக் கிழவன் செத்துக் கிடக்கான்.''

''அடப் பாவமே...இனிமேல் அந்தக் கிழவிபாடுதான் சிரமம்'' என்ற கொம்பையாத் தேவர், அந்தக் கூட்டத்தில் உள்ள சிறுவர் கூட்டத்தில், யாராவது சேரிக் குழந்தைகள் இருக்கிருர்களா என்று பார்த்தார்.

ஒரு ஓரத்தில், பரட்டைத்தலேயுடன், வலதுகைப் பெருவிரலேச் சூப்பியபடி நின்று கொண்டிருந்த வேலாயுதக் குடும்பனின் மகளே அடையாளம் கண்டு கொண்ட தேவர், ''தா...பிள்ள இங்க வா'' என்ருர்.

அவள் வாய்க்குள்ளிருந்த விரலே எடுத்தபடி அவர் அருகே வந்து நின்றவாறு ஏறிட்டுப்பார்த்தாள்.

''ஒம் பேரு என்ன?''

''எச்சிமி''

''லட்சுமியா.? கெட்டிக்காரி... ஒரே ஓட்டமாப் போயி, அந்த வீதி ஓரமா ஒரு குடிசை இருக்கு பாரு..... அங்க.... அம்மாசிக் கிழவன் பெஞ்சாதி சுடலி இருப்பா....அவகிட்ட போயி இதைச் சொல்லிட்டு வர்றியா?''

அவர் கைகாட்டிய திசையில் அந்தச் சிறுமி ஓடினுள்.

அம்மாசி எங்கிருந்தோ வந்து அந்த ஊரில் குடியேறியவனல்ல. தலேமுறை தலேமுறையாக அந்த 'முல்லேக்காடு' கிராமத்து மண்ணில் பிறந்து, அந்த மண்ணிலேயே உருண்டு புரண்டு உழுதுயாடி அதே மண்ணே பயிரிட்ட விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன்.

அந்த மண்ணின் மீது மாருத பிரியம் கொண்டவன். ''இந்த மண்ணேவிட எனக்குச் சொந்தமானது வேறெதுவுமில்ல'' என்று ஓயாமல் சொல்லி வந்தவன்.

ஒரு கடும் கோடையில், ஊரெல்லாம் வறட்சி கோலோச்சிய கொடிய நேரத்தில், ஊருக்குத் தெற்கே ஒதுங்கி வாழ்ந்து வந்த சேரி மக்களெல்லாம் பிழைப்பைத் தேடி வேற்றூர்களுக்குச் சென்ற நேரத்திலும் கூட, இந்த அம்மாசிக் கிழவனும் அவனது மனேவி சுடலியும் மட்டும் தனித்து நின்று, 'மழை விழும்; பூமித்தாய் நனேந்து நமக்கெல்லாம் படியளப்பாள்'' என்கிற நம்பிக்கையில், குளத்திலிருந்து வயலுக்கு வரும் வாய்க்கால்களேச் செம்மைப்படுத்தும் பணியில் ஒரு வெறியோடு ஈடுபட்டிருந்ததை அந்த ஊரே கண்டு வியந்தது.

இறந்துபோன பெரிய பண்ணேயார், தம் பையனிடம் உழைப்பைப் பற்றிப் பேசும்போதெல்லாம் இந்த அம்மாசிக் குடும்பத்தைத்தான் உதாரணம் காட்டுவார்.

ஒரு மழைக்கால ராத்திரியில் தான் அம்மாசியின் வாழ்க்கையில் இடி விழுந்தது.

பகலில் வரப்பு வெட்டிவிட்டு வந்தான். படுக்கும்போது தோள் பக்கம் லேசாக வலித்தது. காலேயில் படுக்கையிலிருந்து அவனுல் எழ இயலவில்லே. பக்கவாதம்! நாக்கு இழுத்துக் கொண்டது.

அசையாமல் கிடந்து, பொங்கும் நீருடன் கண்களே மிரள விழித்து, வாய் குளறும் புருஷனேப் பார்த்து முகத்திலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள், சுடலி.

அந்தக் கிராமத்து நாட்டு வைத்தியர் ஒருமாதம் சிகிச்சையளித்த பிறகு, அம்மாசி எழுந்து தடிஊன்றி, காலே இழுத்து, இழுத்து நடக்கையில், அதுவரை அவன் பார்த்து வந்த பண்ணே விட்டு ''உழவு'' கைமாறியிருந்தது!

நெஞ்சில் வேதனேயோடு, அம்மாசி பெரிய பண்ணே வீட்டு வாசலுக்கு நேராகத் தள்ளி நின்று கொண்டு, துண்டைக் கக்கத்திலே இடுக்கியபடி, ''சாமி...... அடியாள் வந்திருக்கேன் சாமி..' என்றபோது அவனுடைய துயரங்கள் எல்லாம் நீராகக் கண்களில் திரண்டிருந்தது!

ரொம்பவும் சிநேகத்தோடு அம்மாசியிடம் நலம் விசாரித்த பண்ணேயார், ''உனக்கு ஏலாதுன்னுதான் உழவை மாத்திணேன்...அதனுல் என்ன.... நீ பரம்பரை பரம்பரையா இந்தப் பண்ணேக்கு உழைத்தவன்..... பூவுக்கு அரைக்கோட்டை நெல்லு தரச்சொல்றேன்....நீ போ'' என்றபோது அவரை விசுவாசத்தோடு பார்த்து நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினுன் அம்மாசி.

பருவகாலங்கள் மாறின. ஒரு இலேயுதிர் காலத்தில் பண்ணேயார் பரலோகம் போனபோது அம்மாசியின் வயிற்றில் விதி மண்ணே அள்ளிப் போட்டது. பண்ணேயாரின் மகன் பொறுப்புக்கு வந்தபோது அம்மாசியின் மானியம் நிறுத்தப்பட்டது.

அடுத்தவேளே அரைவயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லாமல் போன போதுதான், முதன் முதலாக அவன் வாழ்க்கையை வெறுத்தான், ஒரு உச்சிப் பொழுதில் வயிற்றிலும் பசித்தீ சுட்டபோது அம்மாசி கையில் சட்டியேந்தி ஒவ்வொரு வீட்டு வாசல் முன்பும் பேசாமல் போய் நிற்கலானுன்.

ஒரு கவளம் சோறு பெறுவதற்காக, அந்த மகத்தான மனிதன், தன் கம்பீரங்களேயெல்லாம் இழந்து அலேந்தபோது அரசாங்கத்தின், 'மூப்புக்கால உதவித் தொகைத் திட்டம்' பற்றி அவருக்குச் சொல்லப்பட்டது.

எல்லா இரவுகளுக்கும் ஒரு விடியல் உள்ளதுபோல, அந்தத் தள்ளாத கிழவனுக்கும், அவனது மனேவிக்கும் இந்த அரசு ஒரு புதிய ஒளியைக் காட்டியிருந்தது; உதவிப்பணம் என்ற ஊன்றுகோல் அந்த வயோதிகத் தம்பதியைக் கீழே விழுந்து விடாமல் தாங்கிப் பிடித்தது.



காலையில் நீரும் சோறுமாகச் சாப்பிட்ட பின், மெதுவாகக் கிராமத்திற்குள் நடந்து திரும்புகிற பழக்கத்தை மேற்கொண்டிருந்தவன் அம்மாசி. அப்படி நடக்கிற சமயங்களில் நீர் நிரம்பிய வயல்களில் பச்சைப்போர்வை விரித்ததுபோல் இளம் பயிர் அசைந்து ஆடுகிற காட்சியைப் பார்க்கிறபோது ஒரு உன்னதமான சுகத்தை அவனால் பெற முடிந்தது.

அன்றும் அவ்வாறு நடந்து திரும்புகிறபோது திடீரென்று தொண்டை உலர்ந்து, கண்கள் இருளுவதை உணர்ந்தான். மூச்சுவிட முடியாதபடி ஒரு திணறல் ஏற்பட்டது. அந்தத் தெரு ஓரத்து மாமரத்தில் சாய்ந்தவன், நிரந்தர நித்திரையில் ஆழ்ந்து போனான்!

* * * *

கறுத்து மெலிந்த வயோதிக மேனி; அழுக்குப் படிந்த கந்தல் சேலை, கையில் கோணல்மானலான ஒரு ஊன்றுகோல், முடிக்கப்படாத, சிக்குப்பிடித்த கட்டைக் கூந்தல்-இவள்தான் சுடலி.

தூரத்தில் வரும்போதே அவளுடைய அழுகையொலி மாமரத்து அடியில் கூடியிருந்த கூட்டத்திற்குக் கேட்டது.

அருகே வந்து அம்மாசியின் அசைவற்ற உடலைப் பார்த்ததும் அவளுக்குள் ஒரு சோகப் பிரவாகம் உருவாகியிருக்க வேண்டும். ''என் அதியாரி...போயிட்டீகளா...'' என்று, கேட்போர் நெஞ்சை உருக்கும் விதமாகக் கேட்டு, கண்களின் நீர் நதியாகப் பெருக்கெடுக்க அழுது அரற்றினாள்.

நாற்பது வருட தாம்பத்தியத்தில் அம்மாசியின் எண்ணங்களையெல்லாம் செயலாக்கிய இனிய துணை இந்தச் சுடலி.!

விழுதில்லா மரத்திற்கு வேர் தான் உயிர்; அந்த வேருக்குக் கேடு வந்தால் மரமென்ன செய்யும்?

பிள்ளையில்லாத சுடலிக்கு ஒரே ஆதரவு அம்மாசிதான். இன்று அம்மாசியும். இறந்துவிட்டார். சுடலி தவித்துத் துடித்தாள்.

வார்த்தையால் விவரிக்க இயலாத சோக உணர்வுகளை எல்லாம் அவள் அழுகை உணர்த்தியது.

சற்று நேரம் கழித்து?, ஆண்டிக் கோனார் சுடலியிடம் ஆறுதலாக, ''சரி..சரி..ரொம்ப அழுவாதே.. இனிமே என்ன செய்ய முடியும்? ஆகவேண்டிய காரியத்தப் பாரு..'' என்றார்.

அப்போதுதான் சுயஉணர்வு பெற்று, தனக்குள்ள பொறுப்பை உணர்ந்தாள் சுடலி. கிழவனை நல்லடக்கம் செய்ய வேண்டும். அவனைக் கொண்டுபோக 'பாடை' கட்ட வேண்டும். வைக்கோல் மெத்தை, இரண்டு நீண்ட அகத்திக் கம்புகள், பூமாலை, எரியூட்டத் தேவையான விறகு, எருக்கட்டிகள், கிழவனுக்குக் கோடிவேட்டி-துண்டு, இறுதிப் பயணம் என்றால் இவையெல்லாம் அவசியம் வேண்டுமே!

இவற்றை வாங்கப் பணம் வேண்டும். சுடலி எங்கே போவாள்? என்ன செய்வாள்?

தன் திக்கற்ற நிலை கண்டு அவளால் தாளமுடியவில்லை.'உங்களை அடக்கம் பண்ணக்கூட வக்கில்லாதவளா இருக்கேனே....நீங்க இருந்து நான் போயிருக்கப் படாதா? சுடலி கதறினாள்! என்ன செய்றதுன்னு தெரியாமல் நிலைகுலைந்து போய் நின்றாள் அவள்!

அந்த நேரத்தில் சுந்தரம் அங்கு வந்தான். பட்டப்படிப்புப் படித்துவிட்டு, வேலை தேடி அலையாமல் விவசாயத்தைக் கவனித்து வரும் இளைஞன் அவன். கிராம மக்களுக்கு அரசாங்கத்தின் புதிய திட்டங்களைப் பற்றிச் சொல்வான். அந்தப் பலன்களை உரியவர்கள் பெற, அவனே உதவியும் புரிவான். சுருக்கமாகச் சொன்னால் வள்ளுவர் சொன்ன, 'உடுக்கை இழந்தவன் கை'யாக உதவுகிற நட்பு நெஞ்சத்திற்குச் சொந்தக்காரன் அவன்.

விவரங்களை அறிந்து கொண்ட சுந்தரம், முதலில் சுடலியை அமைதிப்படுத்தினான். அம்மாசியின் உடலை அவனது குடிசைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தான். பிறகு சுடலியிடம் சொன்னான். ''பாட்டி..இந்த மாதிரி ஏழை அரிசனங்க இறந்துபோனா .....அவங்கள அடக்கம் செய்றதுக்காக, நம்ம தமிழக அரசு ஐம்பது ரூபாய் தருகிறது. இது இப்ப புதுசா வந்திருக்கிற திட்டம். ஆகையினால் நீங்க பணமில்லையேன்னு கவலைப்படாதீங்க''

தனது டைரியிலிருந்து, ஒரு நீண்ட வெள்ளைத்தாளை எடுத்து, சுடலியின் விண்ணப்பத்தை எழுதினான். அவளுடைய இடது கைப் பெருவிரல் ரேகையைப் பதிந்துகொண்டு, சைக்கிளில் கிராம அதிகாரியைப் பார்க்கப் பறந்தான், சுந்தரம்.

அரசின் நேர்மையான நிர்வாகத்தில், சுடலியின் விண்ணப்பம், முறையாகவும், விரைவாகவும் அதிகாரிகளின் கையெழுத்தைப் பெற்றது.

திக்கற்ற அந்த ஏழை அரிசன விவசாயியின் இறுதிச் சடங்கிற்காகத் தமிழக அரசின் உதவிப் பணமான ஐம்பது ரூபாய் மாலையில் சுடலிக்குக் கிடைத்தது.

எதிர்பார்த்ததை விடச் சிறப்பாக, தாரை தப்பட்டைகளுடன் அம்மாசிக் கிழவனின் இறுதிப் பயணம் புறப்பட்டது.

முல்லைக்காடு மண்ணிலேயே பிறந்து முல்லைக்காட்டை விட்டு ஒரு நிமிடம் கூடப் பிரியாமல் வாழ்ந்த-பிறந்த மண் மீது பாசத்தைக் கொட்டி வாழ்ந்த-அந்த ஏழை அரிசன விவசாயியின் உடல் அந்த மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டது.

தமிழில் கையெழுத்து

அரசு ஆவணங்களில் அலுவலர்கள் தமிழில் கையெழுத்துப் போட வேண்டும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* * *

அரசு அலுவலகங்களில் கடைநிலை "ஊழியர்"கள் அணியும் "டவாலி" ஒழிக்கப்பட்டது. இதற்கான உத்தரவைத் தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

அரசு அலுவலகங்களில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்கள் தோளில் இருந்து இடுப்பு வரை குறுக்கு வசத்தில் சிவப்புநிறத் துணிப் பட்டையும், கையில் ஒரு பட்டையும் அணிந்து இருப்பார்கள். இந்த "டவாலி"யைத் தமிழக அரசு ஒழித்து அதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த 'டவாலிக்கு'ப் பதில் அவர்களுக்குப் பெயர் பொறிக்கப் பட்ட வில்லைகள் (''பேட்ஜ்'') வழங்கப்படும். இந்த வில்லைகளை கடைநிலை ஊழியர் சட்டையின் பை அருகே மாட்டிக் கொள்ள வேண்டும்.

மலேரியா சில உண்மைகள்!

டாக்டர் எஸ். பட்நாயக்,
இயக்குநர் : மலேரியா தேசிய ஒழிப்புத் திட்டம்.

நம் நாடு இன்று பெரியம்மையினின்றும் முற்றும் விடுபட்டுவிட்டது. ஆனால், மலேரியா நோய் மீண்டும் நம்நாட்டில் தலையெடுக்கத் தொடங்கியிருக்கிறது. 1965-ல் மலேரியா ஒழிப்பில் கணிசமான முன்னேற்றம் அடைந்துவிட்டதாகக் கருதியிருந்த நிலையில், மீண்டும் அந் நோய் நம் நாட்டில் பரவத் தொடங்கியிருக்கிறது.

தேசிய அளவில் மலேரியா ஒழிப்புத் திட்டம் 1958-ல் தொடங்கப்பட்டது. அப்பொழுதிலிருந்து படிப்படியாகக் குறைந்து 1965-ல் மலேரியாவினால் நோய்வாய்ப்படுவோர் அல்லது இறப்பவர் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து காணப்பட்டது. 1952-ல் மலேரியாவினால் தாக்கப்பட்டோரின் எண்ணிக்கை 7.50 கோடி பேராக இருந்தது, அது படிப்படியாகக் குறைந்து 1965-ல் ஓர் இலட்சம் பேர்தான் மலேரியா நோய்வாய்ப்பட்டனர். அந்த ஆண்டில் ஒருவர்கூட மலேரியாவினால் இறக்கவில்லை. இதன் விளைவாக, நாட்டின் பல்வேறு துறைகளில் தொழில், வேளாண்மை, நிலச் சீர்திருத்தப் பணிகள் ஆகியவற்றில் நல்ல வளர்ச்சியினைக் கண்டோம்.

1976-ல் மலேரியாவினால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை 64.67 இலட்சமாகும். இப்படி மலேரியாவினால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை உயர்ந்து வருவதோடு 1974-லிருந்து மலேரியாவினால் இறந்தவர்களும் உண்டு. 1964 லிருந்து மலேரியாவினால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை எப்படிப் பெருகி வந்திருக்கிறது என்பதைக் கீழ்க்கண்ட புள்ளிவிவரங்கள் நன்கு புலப்படுத்தும்:

ஆண்டு		(இலட்சத்தில்)
1964	...	1.12
1965	...	1.00
1966	...	1.48
1967	...	2.78
1968	...	3.74
1969	...	3.48
1970	...	6.94
1971	...	13.22
1972	...	14.28
1973	...	19.30
1974	...	31.67
1975	...	51.66
1976	...	64.67
1977	(உத்தேசமாக)	45.66

இப்படி மலேரியா அதிகமாகி வருவதற்குக் காரணங்கள் பல உண்டு. நிர்வாகப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை, சிறப்புப் பயிற்சி பெற்ற ஊழியர் பற்றாக்குறை இவற்றைக் காரணமாகச் சொல்லலாம். மற்றொரு காரணம் மலேரியா ஒழிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களிடையே ஏற்பட்டிருந்த ஒரு தேக்கமான மனப்பான்மை.

மீண்டும் மலேரியா தலையெடுத்திருப்பது எல்லாருக்கும் கவலை அளிக்கின்ற ஒன்றாகும். வேளாண்மையில், தொழில் துறையில் முன்னேற்றத் திட்டப்பணிகளில் ஈடுபட்டிருப்போரின் தேக ஆரோக்கியத்தை மலேரியா வெகுவாகப் பாதிப்பதால் அதன் விளைவாக ஏற்படுகின்ற சமுதாய, பொருளாதார இழப்புகள் மிகப்பெரிய அளவினதாக இருக்கின்றன.

நிதி, நிர்வாக ஊழியர் பற்றாக்குறையை ஈடுபடுத்த 1977-ல் ஏப்ரல் முதல் சிறிது மாற்றப்பட்ட மலேரியா ஒழிப்புத் திட்டம் நமது நாட்டில் மேற்கொள்ளப்பட்டது.

இப்படி மாற்றப்பட்ட மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

*மலேரியாவினால் மரணம் என்பதைத் தடுப்பதும், நோயுற்ற காலத்தினைக் குறைப்பதும்.

*தொழில் விவசாயத்துறை முன்னேற்றத்தைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்வது.

*இதுவரை அடைந்துள்ள வெற்றிகளைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வது.

மேற்கண்ட இலட்சியங்களை அடைய அரசு மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் மூன்று அம்சங்களை முனைப்பாகச் செயல்படுத்தத் தீர்மானித்துள்ளது. அவையாவன; அரசுத் திட்டங்கள்; மலேரியா ஒழிப்பில் தீவிர ஆராய்ச்சியும், பயிற்சியும், மக்களை இப்பணியில் நேரடியாக ஈடுபடச் செய்வது.

அரசுத் திட்டங்கள் :

இத்திட்டத்துக்காக அரசு அதிக அளவில் பணத்தையும், பொருளையும் செலவழித்திருக்கிறது. சமீப காலம் வரை தனது சுகாதார செலவினத்தில் 75 சதவிகிதத்தை மலேரியாவைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு ஈடுபடுத்தி வந்தது. தற்சமயம் மலேரியாவினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு மலேரியா ஒழிப்புச் சாதனங்களையும், கொசு ஒழிப்பு மருந்துகளையும் வழங்க இரட்டிப்பு நிதி வழங்கத் தீர்மானித்துள்ளது. தீவிர பணியாற்றத் தேவைப்படும் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் முடிவு செய்துள்ளது.

ஆராய்ச்சியும், பயிற்சியும்

தொடர்ந்து கிருமிநாசினி மருந்துகளையும் மற்ற மருந்துகளையும் உபயோகிப்பதால் பல பிரச்சினைகள் எழுகின்றன. அப்பிரச்சினை..

...த தாக்க தீவிர ஆராய்ச்சி தேவைப்படுகிறது. சில இடங்களில் மலேரியா கொசுக்கள் வீடுகளில் வசிக்கும் மக்களைக் கடித்துவிட்டு டி. டி. டி. யினால் இறப்பதற்கும் தயாராய் அவ்வீட்டுச் சுவர்களில் நிற்பதில்லை. அவை மக்களைக் கடித்துவிட்டு வெளியே பறந்து சென்றுவிடுகின்றன. மற்றொரு பிரச்சினை, மக்கள் உடலில் சென்றுவிடும் மலேரியாக் கிருமிகள் அவற்றைக் கொல்ல மக்கள் ஏற்கும் மருந்துகளை வெற்றி கொண்டுவிடுகின்றன. எனவே, ஆராய்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய அவசரப் பிரச்சினையாக இது உருவெடுத்துள்ளது. வைசூரியைத் தடுக்க குழந்தைப் பருவத்திலேயே அம்மை குத்தப்படுவது போல மலேரியாவைத் தடுக்க மருந்து ஒன்று கண்டுபிடிக்க இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் முதற்கட்டம் ஊக்கமளிப்பதாக இருப்பினும், இன்னும் அது சோதனை கட்டத்தில்தான் இருக்கிறது

இந்தத் திட்டத்திற்கு நன்றாகப் பயிற்சிப் பெற்ற ஆட்கள் பெருவாரியாகத் தேவைப்படுகின்றன. எனவே, இந்தத் தேவையை நிறைவு செய்ய தீவிர பயிற்சி அளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

மக்களின் ஒத்துழைப்பு

மலேரியா மனிதனால் உண்டாக்கப்படும் பிரச்சினை. மலேரியாவினை ஒழிக்க மக்கள் முழு அளவில் தீவிரமாகப் பங்கு கொள்ளவில்லை எனில், அரசு முயற்சிகள் பயன் அளிக்க அளிக்கா. தங்கள் ஆரோக்கியத்தைப் பேண மக்கள் பொறுப்பேற்று கிடைக்கும் வசதிகளை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேசிய அளவிலான மலேரியா ஒழிப்புத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற, பின் கண்ட முறையில் மக்கள் ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

மலேரியாவைக் கட்டுப்படுத்த மக்கள் ஆற்ற வேண்டிய பணி

கிராமப்புறங்களில் பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தெளிப்பதுதான் இந்தத் திட்டத்தின் முக்கியப் பணி. டி. டி. டி. மருந்து தெளிப்பினால் கொசுக்கள் சாகவில்லையெனில், அதற்கு மாற்றாக பி. எச். ஸி. என்ற மருந்தும், மலேத்தியான் என்று மருந்தும் தெளிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டிலும் மே முதல் செப்டம்பருக்குள் இருமுறை டி. டி. டி. தெளிக்க வேண்டும்.

நினைவில் கொள்ள வேண்டிய குறிப்புகள்

தெளிப்பு மருந்தைப் பற்றி

*வீட்டின் எல்லா அறைகளும் மாட்டுக் கொட்டில் உள்பட இம்மருந்து தெளிக்கப்பட வேண்டும்.

*சுவரில் தொங்கவிடப்படும் காலண்டர்கள், போட்டோக்கள், படங்கள் ஆகியவற்றை நீக்கிவிட்டு சுவர்களில் தெளிக்கப்பட வேண்டும்.

*எல்லாத் தின்பண்டங்களும், சாப்பிடக் கூடிய பொருட்களும், மாட்டுத் தீவனங்களும்

மருந்து தெளிக்கும்போது மூடி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

*கிராமத்திலுள்ள எல்லா வீடுகளிலும் மருந்து தெளிக்கப்பட வேண்டும். இல்லையேல் மருந்து தெளிக்கப்படாத வீட்டிலிருந்து கொசுக்கள் வரக்கூடும். எனவே, மற்ற வீடுகளில் மருந்து தெளித்த பயன் அற்றுப் போகும்.

*மருந்து தெளித்த பின்னர் இரண்டரை மாத காலத்துக்குச் சுவர்களில் சுண்ணாம்பு அடித்தலோ, மண் பூசுவதோ ஆகியவை செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் மருந்து தெளித்த பயன் கிடைக்காமல் போகும்.

*கிராம இளைஞர்கள் கிராம வீடுகளில் மருந்து தெளிக்கும் பணியில் உதவ முன்வர வேண்டும். மலேரியா மேற்பார்வையாளர்கள் மேற்பார்வையில், இளைஞர்கள் தாங்களாகவே பூச்சி கொல்லி மருந்தைத் தெளிக்கும் வேலையை மேற்கொள்ளலாம்.

தங்கள் இல்லங்களுக்கு வரும் சுகாதார ஊழியர்களின் பணியை மக்கள் உற்சாகமாக வரவேற்க வேண்டும். வீட்டில் யாருக்கு ஜுரம் வந்தாலும் அதைப் பற்றிச் சுகாதார அதிகாரிகளுக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

*ஊராட்சிகள் மலேரியா ஒழிப்புப் பகுதி பணியில் ஆற்ற வேண்டிய பணி மிக முக்கியமானதாகும். கொசு ஒழிப்பு மருந்தைத் தெளிக்கும் பருவத்தில் தெளிப்புப் பணிக்கு ஊராட்சிகள் தொண்டர்களை வழங்கி உதவ வேண்டும். இத் தெளிப்புப் பணிக்குத் தேவையான சிறப்புப் பயிற்சியை உள்ளூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தின் ஊழியர்களோ அல்லது மாவட்ட மலேரியா ஒழிப்பு அலுவலகத்தின் ஊழியர்களோ வழங்குவார்கள். இந்தத் தொண்டர்கள் சாக்கடைகளைத் தேங்கவிடாமல் நன்கு வடிகால் வெட்டியும் ஆங்காங்குள்ள பள்ளங்களைக் கிராம மக்களின் உதவியோடு நிரப்பி நல்ல பணி புரியலாம்.

ஊராட்சிகள் மருந்து விநியோக நிலையங்களையும், ஜுரக் குணப்படுத்தும் டிப்போக்களையும் நிறுவி, ஜுரத்துடன் வரும் நோயாளிகளின் வயதுக்கு ஏற்ப குளோரோக்வின் மாத்திரைகளை வழங்கி உதவலாம். ஊராட்சிகளுக்கு மாத்திரைகளும் மற்ற பொருட்களும் அரசு இலவசமாக வழங்கும்.

குளோரோக்வின்

வயது	மில்லி கிராம்	மாத்திரை அளவு
1 வயது	75	½
1—4 வயது	150	1
4—8 வயது	300	2
8—14 வயது	450	3
14ம் அதற்கு மேலும்	600	4

இந்த மருந்தை வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது என்பதைக் கவனிக்க வேண்டும்.

மலேரியா ஜுரம் உச்சக் கட்டத்தில் இருக்கும் போது சாப்பிடக்கூடாது என்று சிலர் எண்ணுகிறார்கள், இது உண்மையல்ல. மலேரியா குணமாவதற்கு இந்த மருந்தை இருவேளை சாப்பிட்டால் போதும் என்பதனையும் நினைவில் கொள்ள வேண்டும்.

மலேரியாவைப் பற்றிச் சில உண்மைகள், அதனைத் தடுக்கும் சில முறைகள் :

*மலேரியா ஜுரம் ஒரு நுட்பமான கிருமியினால் ஏற்படுகிறது. இந்தக் கிருமி மலேரியா கிருமி, மலேரியா ஜுரம் வந்த நோயாளியிடமிருந்து அனாபிலிஸ் என்னும் பெண் கொசுவின் மூலம் ஆரோக்கியமுள்ள மனிதனுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இந்த வகைக்கொசு வீட்டினுள்ளும், வெளிப்புறத்திலும் தேங்கி நிற்கும் தண்ணீரில் வளருகிறது.

*மலேரியா ஜுரம் உதறலோடும், குளிரோடும் பொதுவாக வரும். அந்த ஜுரம் ஒருநாள் விட்டு ஒருநாள் அல்லது வாரத்திற்கு ஒருமுறை இப்படி ஒரு குறிப்பிட்ட காலம் இடைவெளி விட்டுவிட்டு வரும்.

*எந்த ஜுரமும் மலேரியா ஜுரமாகலாம். இரத்தப் பரிசோதனை செய்தால் ஜுரம் மலேரியா ஜுரமா அல்லவா என்பது தெரிந்து போகும். எனவே, இரத்தத்தைப் பரிசோதனை செய்து மலேரியா ஜுரம் என்று தெரிந்தால் குளோரோக்வின் மாத்திரைகள் சாப்பிடுங்கள்.

*உங்கள் இரத்தத்தில் மலேரியா இருக்கிறது என்று தெரிந்தால் மலேரியா ஊழியரின் மேற்பார்வையில் 5 நாட்களுக்கு ப்ரைமாப்வின் மாத்திரை உட்கொள்ளும் தீவிர சிகிச்சையை மேற்கொள்ளுங்கள்.

*வீட்டிலும் வெளியிலும் தண்ணீரைத் தேங்கவிடாதபடி செய்தால் கொசு வளர்ச்சியைத் தடுக்கலாம்.

*வீட்டிலுள்ள தண்ணீர் நிரப்பும் எல்லாத் தொட்டிகள், பானைகள், பக்கெட்டுகளை வாரத்திற்கு ஒருமுறை காலி செய்தால் கொசு வளர்ச்சியைத் தடுக்கலாம்.

*காலி தகர குவளைகளிலும் மற்ற டப்பாக்களிலும், ரப்பர் டயர்களிலும் தண்ணீர் தேங்கவிடாதீர்கள்.

*நகர்ப்புறங்களில் தண்ணீர் நிரப்பி வைக்கும் மேல்மாடித் தொட்டிகள், அறையைக் குளிர்விப்பதற்காக உபயோகப்படுத்தும் மின்சாரச் சாதனங்களின் தேக்கும் தண்ணீர் ஆகியவற்றை வாரத்துக்கு ஒரு முறை காலி செய்து நிரப்ப வேண்டும்.

மலேரியா ஒழிப்பு என்பது மகத்தான பணி. இப்பணியில் வெற்றி பெற அனைவரும் தங்களால் ஆன வரை ஒத்துழைக்க வேண்டும். அரசு மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது. மக்களின் முழு ஒத்துழைப்பு மிகவும் அவசியம். அப்பொழுதுதான் மலேரியாவை எதிர்த்து நாம் தொடுத்துள்ள போரில் முழுவெற்றியை அடைய முடியும்!

புதுக்கோட்டையில் கிராமிய நூற்புத் திட்டங்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோகர்ணம், உசிலாங்குளம், திருவரங்குளம் ஆகிய இடங்களில் கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இதில் திருவரங்குளத்தில் செயல்படும் கிராமிய நூற்புக் கூடத்தில், இலங்கை அகதிகளைச் சேர்ந்த 32 பெண்கள் பணி புரிந்து வருகின்றனர்.

புதுக்கோட்டை கிராமிய நூற்பு நிலையம்—இந்த அலகில் 25 ஆறு கதிர் உலோக ராட்டைகள் உள்ளன. அரசுடைமையாக்கப்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலிருந்து மூலதனம் மற்றும் கருவிகள் கடனாக மொத்தம் ரூ. 55,652 நிதி உதவி பெறப்பட்டுள்ளது. 32 பேர் பணிபுரியும் இந்த அலகில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒரு நபர் ரூ. 3 முதல் ரூ. 3.50 வரை சராசரி நாட்கூலியாகப் பெறுகின்றனர்.

கருவிகளுக்கு உண்டான தொகை வாராவாரம் வேலை செய்பவர்களிடம் கூலியிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. நான்கு ஆண்டுகளில் இராட்டையின் தொகை சரிசெய்யப்படும். பிறகு இராட்டைகள் நூற்போர்களுக்குச் சொந்தமாகி விடுகின்றன.

அரிசன ஆதிவாசிகள் நலம்

வி. சண்முகம்
மாவட்ட அரிசன நல அலுவலர்,
தருமபுரி

1965 அக்டோபர் மாதம் 2-ஆம் தேதியன்று தர்மபுரி மாவட்டம் தனி மாவட்டமாக ஏற்படுத்தப்பட்டது.

தமிழகத்தில் அரிசன மக்கள் அதிகமாக உள்ள மாவட்டம் தருமபுரி மாவட்டமாகும்.

கடந்த மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்தில் அரிசனங்கள் 2,27,825 பேரும், ஆதிவாசிகள் 30,123 பேரும் உள்ளனர். அரிசனங்கள் மற்றும் ஆதிவாசிகளின் கல்வி, சமூக, பொருளாதார மற்றும் வாழ்க்கை மேம்பாட்டிற்கான திட்டங்கள் அரிசன மற்றும் ஆதிவாசிகள் நலத்துறையினரால் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கல்வி :

அரிசன மாணவ மாணவிகளுக்காக இம்மாவட்டத்தில் மூன்று ஆரம்பப் பள்ளிகள், இரண்டு இடைநிலைப் பள்ளிகள், ஐந்து ஓராசிரியர் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 829 மாணவர்களும், 716 மாணவிகளும் கல்வி பயிலுகின்றனர். இவர்களுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது. மாணவ மாணவிகளுக்கு எழுது பலகை மற்றும் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைகளின்போது இலவசச் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

விடுதிகள் :

கல்வி பயிலும் அரிசன மாணவ மாணவிகளுக்காக இம்மாவட்டத்தில் மொத்தம் 24 விடுதிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் மொத்தம் 1,024 மாணவ, மாணவிகள் தங்கிக் கல்வி பயிலுகின்றனர். விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு (கல்லூரி விடுதி நீங்கலாக) ஆண்டு இருமுறை அதாவது பொங்கல், தீபாவளிப் பண்டிகைகளின்போது சீருடைகள் வழங்கப்படுகின்றன. விடுதியிலிருந்த மாணவர்களுக்குத் தனிவகுப்பு ('டியூஷன்') நடத்தப் பகுதி நேர ஆசிரியர்கள நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உடல் ஆரோக்கியத்தைக் கவனிக்க அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அடிக்கடி விடுதிகளுக்கு வந்து பரிசோதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. கல்லூரி மாணவர்களின் பொது அறிவு வளர்ச்சிக்காகச் செய்தித் தாள்கள் வாங்கித் தரப்படுகின்றன.

கல்வி உதவித் தொகை :

பள்ளி இறுதி ஆண்டு மாணவர் வரை நடப்பு ஆண்டு முதல் உதவித் தொகையினை ரொக்கமாகக் கொடுப்பதற்குப் பதிலாகப் பாடப் புத்தகங்கள் வாங்கி இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. உதவித் தொகை ரொக்கமாகக் கொடுத்தால் சிலர் அதனைச் சரிவரக் கல்விக்காகப் பயன்படுத்தாமல் போவதால், இம்முறையினை அரிசன நலத் துறை மூலம் அரசு செயல்படுகிறது. கல்லூரியில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கும், தொழிற் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், ஆசிரியர் பயிற்சி பெறுவோருக்கும் கல்வி உதவித் தொகை இரு தவணைகளில் வழங்கப்படுகிறது.

இதன் மூலம் எல்லா ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் அரிசன மற்றும் ஆதிவாசிகள் இனத்தைச் சேர்ந்த 8,775 மாணவர்களும், 3,788 மாணவியரும், கல்லூரியில் பயிலும் 250 மாணவர்களும் பயனடைந்து வருகின்றனர்.

சமூக நிலை :

தாழ்த்தப்பட்ட சகோதரர்களின் குடியிருப்புகள் மிகவும் சுகாதாரக் கேடான இடங்களில் இருப்பதாலும், இட நெருக்கடியால் பல குடும்பங்கள் ஒரே வீட்டில் இருக்க நேரிட்டுள்ள துயரத்தைப் போக்கவும் அரசு அவர்களுக்காகக் கூடுமானவரை இதர சமூகத்தினரின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே நிலம் வாங்கி அவர்களுக்கு வீட்டு மனைகளை இலவசமாக வழங்கி வருகிறது. அவ்வாறு இதுவரை தருமபுரி மாவட்டத்தில் 227 கிராமங்களில் வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் வீட்டு மனைக்காகவும், இதர காரியங்களுக்காகவும் 143 கிராமங்களில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலவச வீடுகள் :

1973 வரை அரசினரே இலவசமாக இச்சமூகத்தினருக்கு வீடுகள் கட்டிக் கொடுத்து வந்தனர். இதனை வேகமாகவும் திறம்படவும் செய்து முடிக்க இப்பணியை அரிசன வீட்டு வசதி முன்னேற்ற வாரியத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது. இதுவரை இம்மாவட்டத்தில் 103 கிராமங்களில் 2,769 இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

அரிசன காலனிகளின் சுகாதார நலனுக்காகப் பாதை வசதிகள், பொதுக் குளியலறைகள், கழிவு நீர் வடிகால்கள் ஆகியவையும், சிறு பாலங்கள், வெள்ளத் தடுப்புச் சுவர்களும் அரிசன நலத் துறையால் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் பாதைகள் 1, சிறுபாலங்கள் 22, (இவற்றில் 14 முடிவு பெற்றுள்ளன). தடுப்புச் சுவர்கள்-2, கழிவு நீர் வடிகால்கள்-5 (இதில் ஒன்று முடிவு பெற்றுள்ளது., குளியலறைகள்-6 (இதில் 2 முடி. பெற்றுள்ளன) ஆகிய வேலைகள் நடைபெற்று வருகின்றன.

குடிநீர் :

தருமபுரி மாவட்டத்தில் குடிநீர்க் கிணறுகள் இல்லாத காலனிகளே இல்லை எனலாம். மேலும், இதனைச் சிறப்பான முறையில் கையாளப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, வீட்டு வசதி வாரியத்தினர் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

விவசாயம் :

அரிசன மக்களில் இரண்டு ஏக்கருக்குக் குறையாமல் புஞ்சை நிலமுள்ளவர்களுக்குக் கிணறு வெட்ட 2,000 ரூபாய் இலவச மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலைமைக்குத் தக்கவாறு 20 பேர்கள் பயன்பெறுகின்றனர். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 167 அரிசனங்கள் பயனடைந்துள்ளனர்.

ஏழை அரிசன விவசாயிகளுக்கு நிதி நிலையை அனுசரித்து ஆண்டுக்கு ஒருமுறை 10 முதல் 15 இணை உழவு மாடுகள் மான்யமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 164 அரிசனங்கள் பயன்பெற்றுள்ளனர்.

தற்சமயம் அரிசன நலத்துறையால் கறவை மாடுகள் வாங்கக் கடன் வழங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாகக் கூட்டுறவுத் (பால்வளம்) துறை மூலம் தலா ரூ. 1,500 வழங்கப்படுகின்றது. இக்கடன் தேசிய வங்கிகளின் மூலமாக வழங்கப்படுகின்றன. இத்தொகையில் 500 ரூபாயை அரசு ஏற்றுக் கொள்கிறது. மீதமுள்ள தொகை 1,000 ரூபாயை சுலப மாதாந்திர தவணைகளில் வங்கிக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடனைப்பொருத்த மட்டில் ஒரு நபர் இரு கடன் பெறத் தகுதியுள்ளவர்.

தொழில் முன்னேற்றம் :

அரிசனங்கள் தங்களுக்குத் தெரிந்த தொழில்களை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள அரிசன நலத் துறையில் வட்டியில்லாத் தொழிற் கடன்கள் அந்தந்தத் தொழிலுக்குத் தக்கவாறு வழங்கப்படுகின்றன.

உதாரணமாக, மளிகைக் கடை, தானிய வியாபாரம், பழம் மற்றும் காய்கறிக்கடை, சைக்கிள் (வாடகை) கடை, பெட்டிக் கடை, சிறிய உணவு விடுதி ஆகியவற்றிற்காகவும் தொழில் நுணுக்கப் பயிற்சிப் பெற்றவர்களுக்கு 'ஒர்க்ஷாப்', 'லேத் வைண்டிங்' போன்ற தொழில்களுக்கும், அச்சகம், மருந்துக்கடை போன்ற பெரிய தொழில்களுக்கும் வட்டியில்லாக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 63 அரிசனங்களுக்குத் தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தொழிற் கருவிகள் :

உழவு மாடுகள் வழங்குதல் போலவே (1) சலவைத் தொழில் (2) தச்சுத் தொழில் (3) தையல் தொழில், (4) தோல் காலணிகள் (5) சிகை அலங்கரிக்கும் தொழில் ஆகியவைகளுக்குக் கருவிகள் தகுதி பெற்ற ஏழை அரிசனங்களுக்கு வழங்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் இதுவரை 92 அரிசனங்களுக்குச் சலவைத் தொழிற் கருவிகளும், 113 அரிசனங்களுக்குத் தச்சுத் தொழிற் கருவிகளும், 248 அரிசனங்களுக்குத் தையல் இயந்திரங்களும், 68 அரிசனங்களுக்குச் செருப்பு தைக்கும் கருவிகளும், 103 அரிசனங்களுக்கு முடிதிருத்தும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிவாசிகள் :

கல்வி, சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள ஆதிவாசிகளுக்கும், அரிசனங்களைப் போன்றே சகல உதவிகளும், அரிசன நலத்துறையால் அளிக்கப்படுகின்றன. தருமபுரி மாவட்டத்தில் இவர்களுடைய மேம்பாட்டிற்காகக் கீழ்க்கண்ட திட்டங்கள் அரிசன நலத்துறையினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கல்வி :

ஆதிவாசிகள் அதிகமாக உள்ள வாச்சாத்தி, நரிப்பள்ளி, எஸ். எஸ். தாதம்பட்டி ஆகிய ஊர்களில் அரசினர் மலைச்சாதி உறைவிடப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கைகள்: வாச்சாத்தி மாணவர்-73, மாணவியர்-34, நரிப்பள்ளி-மாணவர் 36, மாணவியர்-14, எஸ். தாதம்பட்டி-மாணவர் 33, மாணவியர்-17 பேர்களாகும்.

மேற்காணும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு உணவும், உறைவிடமும் இலவசம். ஆண்டு இருமுறை பொங்கல், தீபாவளிப் பண்டிகைகளின் போது சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்குப் பள்ளி இறுதியாண்டு வரை இலவசப் பாடப் புத்தகங்கள்

களும்,

ருக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகின்றன.

விவசாயம் :

வசதியில்லா சிறு விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட கிணறு ஒன்றுக்கு ரூ. 2,000 வீதம் மான்யம் வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 143 ஆதிவாசிகள் பயனடைந்துள்ளனர்.

ஆதிவாசிகளுக்கு ஆண்டு ஒரு முறை நிதி நிலையை அனுசரித்து 6 முதல் 10 இணை ஏர்மாடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

ஆதிவாசிகளுக்குத் தையற் கருவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 72 தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

தீண்டாமை ஒழிப்பு :

நமது நாட்டில் தொன்று தொட்டு இருந்து வரும் சமூக நோயான தீண்டாமையை ஒழிக்க அரசு தன்னாலியன்ற எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தில் தலை நிமிர்ந்து நிற்க கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்கான எல்லா உதவிகளையும் செய்து வருகிறது. இருந்தும் இக்கொடுமை பூரணமாக ஒழிக்கப்படவில்லை. இதற்காக அரிசனங்களும் நமது சமகாதரரே எனக் காட்டும் வகையில் மாதந்தோறும் ஒவ்வொரு வட்டத்திலும் ஏதாகிலும் ஒரு கிராமத்தில் அரசு ஆதரவின் கீழ் தீண்டாமை ஒழிப்பு விழா நடத்தப்படுகிறது. ஆண்டுதோறும் மாவட்ட அளவில் அண்ணல் காந்தியடிகள் மறைந்த நாளான ஜனவரி 30-ஆம் தேதி விரிவான முறையில் அரசு சார்பில் தீண்டாமை ஒழிப்பு விழா நடைபெறுகிறது. இதில் அரிசனங்களுடன் இதர சமூகத்தினரும் சகோதரன்போல் ஒன்று கலந்து அரிசனங்களின் மேம்பாட்டிற்கான வழிகளையும், தீண்டாமையை அறவே ஒழிப்பதற்கான திட்டங்களையும் ஆராய கின்றனர்.

கலப்புத் திருமணம் :

சாதிக் கொடுமைகளைக் களைய இன்னுமொரு முக்கிய வழி கலப்புத் திருமணந்தான். கலப்புத் திருமணங்களால் நாளடைவில் சாதிகளே இல்லாமற்போய் எல்லாரும் ஓர் குலம் என்ருகும் நிலை வரப்போகிறது. எனவே, இத்தகைய திருமணங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இத் திருமணங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசினர் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்குத் தங்கப்பதக்கமும், ரொக்கப் பரிசும் வழங்குகின்றனர். இந்த ஆண்டில் ஐந்து கலப்புத்திருமண ஜோடிகள் பரிசும், பதக்கமும் பெற்றுள்ளனர்.

தீண்டாமையை ஒழிக்க குடி உரிமைப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன்கீழ் தீண்டாமையை அனுசரிப்பவர்கள் மீதும், அரிசனங்கள் தங்களுடைய சமுதாய உரிமைகளை அடைவதில் அவர்களுக்கு அநீதி இழைப்பவர்கள் மீதும் கடுமையான கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், தாழ்வு மனப்பான்மை அகற்றவும், அரிசன மக்கள் சுகாதாரமாய் நல்வாழ்வு வாழவும் அவர்களுடைய சுற்றுப்புறச் சூழ்நிலைகள் துப்புரவாய் இருப்பது மிகவும் அவசியம். எனவே, அரிசன மக்களை இவ்விஷயத்தில் விழிப்புறச் செய்யவும், ஊக்கமளிக்கவும் ஆண்டுக்கு ஒருமுறை துப்புரவாயும், சுகாதாரமாயும் பராமரிக்கப்பட்டு வரும் ஆறு அரிசனக் காலனிகள் சிறந்தவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றிற்கு அரசினரால் வானொலிப் பெட்டி பரிசாக வழங்கப்படுகிறது.

சமுதாயக் கொடுமைகள் அகல...

ஆர். ஆர். திவாகர்
தலைவர், காந்தி அமைதிக் குழு.

மதுவிலக்கு என்பது இந்தியாவில் புதிய விஷயமல்ல. என்னுடைய பள்ளி நாட்களிலேயே இதைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். 1906-வது ஆண்டில் ஒரு சிறிய குழுவுடன் சேர்ந்து மதுக்கடைகள் முன்னால் மறியல் செய்தேன். அது இன்னும் நினைவில் இருக்கிறது.

லோகமான்ய திலகர் பூனாவில் கள்ளுக்கடை மறியல் போராட்டத்தை ஆரம்பித்தார் என்று அவரது 'கேஸரி' பத்திரிகையில் படித்த உடன் நாங்கள் பெல்காமில் மறியலைத் தொடங்கினோம்.

அடுத்து, மதுவிலக்கு அவசியம் தான் என்பதை அண்மையில் எனக்கு நினைவூட்டிய ஒரு சம்பவம் மார்ச் 24-ஆம் தேதி கர்னாடகத்திலுள்ள தவளகிரியில் நடந்தது. நாங்கள் சென்ற கார் ஒரு கோயிலின் அருகே நிறுத்தப்பட்டிருந்தது. ஒரு இளைஞன் குடிபோதையில் கையினால் குத்துவதும் காலால் உதைப்பதுமாக இருந்தான். அவனைப் பிடித்து எங்களுடைய டிரைவர் கீழே படுக்கவைக்கவேண்டியதாயிற்று. ஏனெனில், வேறு எதைச் செய்தாலும் அவனைக் கட்டுப்படுத்த இயலாது. இச்சம்பவம் நூற்றுக்கணக்கான பேர் கண்ணெதிரிலேயே நடந்தது.

மதுவிலக்கு நிச்சயம் அமல் செய்யப்பட வேண்டும் என்பது வரட்டுப் பிடிவாதமோ அல்லது அர்த்தமற்ற ஆசையோ அல்ல. நாட்டின் பல இட்சக்கணக்கான மக்கள் குடிப்பழக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பதைக் காணும் எவருமே இந்தக் கருத்தினை ஒத்துக்கொள்வார்கள்.

சட்டபூர்வமாக மதுவிலக்கை அமல்படுத்துவதற்கு ஆதரவாகவும் எதிராகவும் விவாதிக்கப்படுவது பழங்காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்ற ஒன்றுதான். கௌடில்யரின் அர்த்த சாஸ்திர காலத்திலேயே (கி.மு. 41-வது நூற்ருண்டு) மது குடிப்பதற்குக் கட்டுப்பாடு இருந்ததை நாம் அறிகிருேம். 1874-84 காலகட்டத்தில், ஏன் அதற்குப் பின்னும் அமெரிக்காவில் சட்டபூர்வ மதுவிலக்கு அமலில் இருந்தது அனைவருக்கும் தெரிந்ததுதான். மதுவிலக்கை ஆதரித்துத் தீவிரப் பிரச்சாரம் செய்த பெண்மணி குமாரி வில்லார்டு என்பவர் சொன்னார்: ''மது வியாபாரத்தால் ஆண்டுதோறும் பணம் தங்கமாகக் கொட்டுகிறது. அந்தத் தங்கத்தில் நமது அன்பிற்குரிய மக்களின் இரத்தம் தோய்ந்திருக்கிறது. இந்தத் தங்கம் மாசு பட்டது. இது நமது கருவூலத்தை மாசுபடுத்த அனுமதிக்கக் கூடாது''

இந்த வரிகள் இந்தியாவில் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்யும் எவருடைய வார்த்தைகளையும்விட கடுமையானது.

''பசுமைப்புரட்சிப் பின்னணியில் மது'' என்ற புத்தகம் 1977-இல் வெளியிடப்பட்டது. இதை எழுதியவர் பி. சி. டப் என்பவர். பஞ்சாப் மாநிலத்தில் உள்ள கிராமப்புறங்களைத் தீவிரமாக ஆராய்ந்து மிக சுவையான தகவல்களை அவர் இந்தப் புத்தகத்தில் கூறியுள்ளார்.

குடிகாரர்களை மூன்று வகையாக அவர் கணக்கிட்டுக்காட்டுகிருர். எப்போதாவது குடிப்பவர்கள்; அவ்வப்போது குடிப்பவர்கள்; எப்போதும் குடிப்பவர்கள் என்று மூன்று வகையாகப் பிரித்துக் காட்டியுள்ளார்.

குடும்பத்தில் நடக்கும் திருமணம் போன்ற நல்ல நிகழ்ச்சிகளின்போது தவிர பிற நேரங்களில் அதிகமாகக் குடிப்பவர்கள் 18 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள். இந்த வயதில்தான் மிகவும் துடிப்பாகச் செயல்பட வேண்டும் என்று கூறுவார்கள். மேற்கண்ட மூன்று வகைக் குடிகாரர்களும் மாதந்தோறும் முறையே 29.93 ரூபாய், 65.62 ரூபாய், 74.40 ரூபாய் செலவிடுகிருர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எல்லா மது வகைகளும், போதைப் பொருள்களும் மற்ற கொடுமைகளைப் பொறுத்தவரை ஓர் அம்சத்தைப் பெற்றுள்ளன. அது தன்னையே இழந்து விடுவதும் அடிமைப்படுவதும் ஆகும்.

ஒரு குடிகாரன் தன்னைக் கட்டுப்படுத்தும் சக்தியை இழந்துவிடுகிருன். மது அல்லது போதைப் பொருள்களின் தயவை நாடுகிருன். இதனால் பலவிதமான நோய்க்குக் கட்டுப்பாடற்ற நடவடிக்கைகள், மனக்கோளாறுகள், அதிகம் குடிப்பதால் விஷம் அருந்தியதைப்போல் மரணத்தின் பிடியில் சிக்கும் கொடூரம், கொலைகள், வெறிச் சேர்க்கைகள் ஆகியவற்றில் ஈடுபடுகின்ருன். இதை தவிர மின்னல் வேகத்தில் கார் ஓட்டுவது, கடமை தவறுவது, தெருச் சண்டைகள் முதலிய சமுதாயக் கொடுமைகளுக்கும் குடியே காரணமாகும்.

விட்டை எடுத்துக் கொண்டால் குடும்பத்தில் பட்டினி, மனமுறிவு, சண்டைகள், மனைவியைக் கொடுமைப்படுத்துவது, குடும்பத்தினையே புறக்கணிக்கும் கொடூரம் ஆகியவை மிகச் சாதாரணமாகக் காணப்படும் விஷயங்களாகும்.

மதம், தத்துவம், ஆன்மீகம், தார்மீக நெறிமுறைகள் ஆகியவற்றைக் காட்டி குடிப் பழக்கத்தைத் தடுப்பதற்கு இனிமேல் அவசியமுமில்லை.

மதுவினால் அரசுக்கு மொத்தம் 500 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. மது அருந்துவோர் செலவிடும் தொகையோ 2,000 கோடி ரூபாய். துரதிருஷ்டவசமாக ஏழைகள்தான் பணத்தை இழந்து குடும்பத்திலும் சமுதாயத்திலும் அவதிப்படுகிருர்கள். இதை ஒழிப்பதற்குச் சட்டத்தைத் தவிர வேறுஎன்ன வழியிருக்கிறது? அதே நேரத்தில் ஏழைகளையும், பாமரர்களையும் குடிப்பழக்கத்தில் சிக்கியவர்களையும் மேலும் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காகத் தீவிரப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும்.

கள்ளத்தனமாக மது வகைகள் உற்பத்தி செய்யப்படும் என்ற வாதம் தவருனது என்பதை நீதிபதி தேக்ஷந்த் தலைமையில் அமைக்கப்பட்ட மதுவிலக்கு விசாரணைக்குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது. ஒழுக்கமற்ற அணுகுமுறைகள் மனிதனின் பலவீனத்தை ஒட்டிய சதி சுயநல வர்த்தகம் ஆகியவற்றைத் தவிர வேறு எதைக் கூறி மதுவிலக்கை அமல் செய்யக் கூடாது என வாதிட முடியும்.

வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல. தார்மீக இதயபூர்வ வளர்ச்சியாகவும் அது இருக்க வேண்டும். இந்திய மக்களின் வாழ்க்கைத் தரமும் நெறிமுறைகளும் இதன் மூலம் உயர்ந்தோங்க வேண்டும்.

(நன்றி: அகில இந்திய வானொலி)

கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர்
மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ்.
பற்பல டிசைன்கள். அசல் சரிகை.
அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர்
வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல்
பட்டுச் சேலைகள், உறையூர்,
கோயமுத்தூர், சேலம் கைத்தறி
நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள்,
சின்னாளப்பட்டி சேலைகள்.

இதோ நிதி உதவு!

டாக்டர் எஸ். ஜோதிராஜ்

அண்மைக் காலமாக விவசாயத் தொழில் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், பெருமளவில் நிதி உதவி வழங்கும் பணியில் ஈடுபட்டு உள்ளன. இதனால், விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் விவசாயத் தொடர்புடைய அனைத்துத் தொழில்களிலும் ஒரு மறுமலர்ச்சி தோன்றியுள்ளது எனலாம். இன்று உப தொழிலாகக் கருதப்பட்ட கால்நடை வளர்ப்பு பெரும் தொழில்முறை அடிப்படையில் செயல்படும் ஒரு தொழிலாகி விட்டது.

மற்ற தொழில்களை விட கால்நடை வளர்ப்பில் பராமரிப்புச் சிக்கல்களும் மூலதனத் தேவையும் அதிகம். ஆனால், சொந்த உழைப்பை வருமானமாக்க இது ஒரு சிறந்த தொழிலாகும். விஞ்ஞான முறைகளைக் கையாளுவதன் மூலம் வருமானம் பெருக வாய்ப்புண்டு. ஏனெனில் வருமானத்தின் நிலைமை, கால்நடைகளின் உற்பத்தித் திறன், சிறந்த பராமரிப்பு, உற்பத்தியாகும் பொருட்களின் உடனடி விற்பனை வசதி இவைகளையே பொறுத்தது. பால், முட்டை, இறைச்சி முதலிய கால்நடை உற்பத்திப் பொருள்களுக்கு நமது நாட்டில் பற்றாக்குறை இருப்பதனால் முறையான விற்பனை வசதிகள் ஏற்படுத்தப்படின், சிறந்த இலாபகரமான தொழிலாக இது விளங்க முடியும்.

தற்போது அரசு வங்கிகளில் பாரத ஸ்டேட் வங்கியும், அதன் இணை வங்கிகளும் தவிர 14 தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் விவசாயப் பொருளாதார உதவியில் ஈடுபட்டுள்ளன. இவைகள் தவிர, விவசாயக் கடனுதவி தனியார் துறை வங்கிகள் மூலமும், பல்வேறு கூட்டுறவுக் கடனுதவிச் சங்கங்கள் மூலமும் வழங்கப்படுகிறது.

எனவே, கால்நடைப்பண்ணைத் திட்டம் அமைக்க விரும்புவோர் அருகிலுள்ள ஏதாவது ஒரு நிதி நிறுவனத்தின் கிளைகளுடன் தொடர்பு கொண்டு, தங்களுக்குத் தேவையான பொருளாதார உதவியினைப் பெற்றுக் கொள்ளலாம். எத்தகைய உதவியாயினும் ஒரே நிதி நிறுவனத்துடன் இணைந்து செயல்படுவது முன்னேற்றத்திற்குச் சிறந்ததும் இன்றியமையாததும் ஆகும். கால்நடைப் பண்ணைத் திட்டங்களில் இலாபநோக்கத்துடன் வங்கிகள் நிதி உதவி அளித்தாலும், நாட்டின் உற்பத்தித் தேவையின் அடிப்படையில்தான் கடனுதவி அளிக்கப்படுகிறது. வங்கிகள் அளிக்கும் கடனுதவியை இரு வகையாகப் பிரிக்கலாம். 1 நேரடிக் கடனுதவி, 2. மறைமுகக் கடனுதவி.

நேரடிக் கடனுதவித் திட்டம் :

இத்திட்டத்தின் மூலம் சிறு பண்ணையாளர்களுக்கும், தனிப்பட்ட பண்ணையாளர்களுக்கும் கால்நடை வளர்ப்பிற்குக் கடன் உதவி வழங்கப்படுகிறது. இக்கடனுதவி உற்பத்தியையும், தரஉயர்த்துதலையும் அடிப்படையாகக் கொண்டது. உதாரணமாக, விவசாயிகளுக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடனுதவி அளிப்பதன் மூலம் பால் உற்பத்தி பெருகுகின்றது. சிறு கோழிப் பண்ணைகள் அமைக்க உதவுவதன் மூலம் முட்டைகளும் கோழி இறைச்சியும் அதிகமாக உற்பத்தியாக வழி வகுக்கிறது.

மறைமுகக் கடனுதவித் திட்டம் :

இதன் மூலம் பெரிய அளவில் கடனுதவி அளிக்கப்படுகிறது. பல்வேறு இடங்களில் சிறு உற்பத்தியாகும் பொருட்களைத் தகுந்த முறையில் உபயோகப்படுத்தவும், வியாபார வசதியைப் பெருக்கவும் பல்வேறு நிறுவனங்கள் ஏற்படவும் உதவுகிறது. உதாரணமாக, பால் பவுடர் தொழிற்சாலை ஒன்று நிறுவ உதவி செய்யப்பட்டால் அது மறைமுகமாக இந்த இடங்களில் பால் உற்பத்தி பெருக வழி வகுக்கிறது.

வங்கிகள் தற்போது பெருமளவில் பால் பண்ணைத் திட்டங்களுக்கும், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு முதலியவற்றிற்கும் கடனுதவிகள் வழங்குகின்றன.

சிறு கடன்கள் :

சிறு பால் பண்ணைகள், ஆட்டுப் பண்ணை முதலியவற்றிற்குப் பெரும்பாலும் இதற்கான தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடனுதவிகள் அளிக்கப்படுகின்றன. இத்தகைய கடன்கள் பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் 3 அல்லது 5 நபர்கள் இணைந்து கூட்டு நபர்கள் பொறுப்பின் பேரில் வழங்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்களில் கூட்டு நபர் பொறுப்பின் பேரிலும், நில அடமான அடிப்படையில் கடனுதவி வழங்கப்படும்.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர் திட்டப் பேரவை வெளியிட்டுள்ள "புதிய உலகம் காணீர்" மலரிலிருந்து....



பெரிய கடனுதவிகள் :

இவைகள் தனிப்பட்ட நபர்களுக்குத் தகுந்த உத்தரவாதத்தின் பேரில் வழங்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட நபரோ அல்லது மூன்றுவது நபரோ, கடனுதவிக்கேற்ப நிலம் அல்லது நிலையான சொத்துக்களை வங்கிக்குக் கடன் காலத்திற்கு ஈடு கொடுக்க வேண்டும்.

எந்த விதக் கடனுதவி பெற்றாலும் வங்கிக்குக் கடனுதவியின் கீழ் வாங்கப்பட்ட கால்நடைகளையும், உபகரணங்களையும் ஈடு கொடுக்க வேண்டும். வங்கியின் முன் அனுமதியின்றி எதையும் விற்பனை செய்யக் கூடாது. பண்ணையாளர்களின் நலன் கருதி, கடனுதவித் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட கால்நடைகள், உபகரணங்கள், கொட்டகைகள், ஆகியவைகளை வங்கிச் சார்பில் பண்ணையாளர்கள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது முக்கியமாகக் கீழ்க்கண்ட கருத்துக்களில் வங்கியைத் திருப்திப்படுத்த வேண்டும்.

1. திட்டத்தின் தொழில் நுட்பச் சாத்தியக் கூறுகள்.

2. திட்டத்தின் பொருளாதார சாத்தியக் கூறுகள்.

3. திட்டத்தின் நோக்கமும் வாய்ப்புகளும்.

4. கால்நடைகளின் நவீன பராமரிப்பு வசதிகள்.

5. நோய்த் தடுப்புச் சிகிச்சை வசதிகள்.

6. விற்பனை வசதிகள்.

7. விண்ணப்பதாரரின் பொருளாதார நிலை.

-''முயற்சியுடையார் இகழ்ச்சியுடையார்'' என்பது பழமொழி. நமது பொருளாதாரம் விவசாயத்தை முதுகெலும்பாகக்கொண்டுள்ளது. விவசாய வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமான கால்நடை வளர்ப்புத் தொழில் சிறிது பின் தங்கியுள்ளது. இதனைத் தவிர்த்து முன்னேற்றம் ஏற்படுத்தும் முயற்சியில் வங்கிகள் பொருளாதார உதவிகள் செய்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டமும், உணவுப் பொருள்கள் பற்றுக் குறையும், ஏழ்மையும் நிரம்பியுள்ள நமது நாட்டில் நமது கவனம் கால்நடை வளர்ப்புத் தொழிலை அபிவிருத்தியடையச் செய்வதில் செலுத்தப்படவேண்டும். வங்கிகளின் நன்முயற்சியில் உழவர்குடி மக்கள் முழு அளவில் பங்கு கொண்டால் நாமும் நாடும் வளப்படும் என்பது திண்ணம்.

கிழக்கு தஞ்சை மாவட்ட விவசாயிகள் கூலி நிர்ணயம் - ஒரு நபர் கமிஷன் நியமனம்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி, நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர் ஆகிய வட்டங்களுக்குப் பொருந்துகின்ற தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் கூலி நிர்ணயச் சட்டம் 1969-ல் (தமிழ்நாடு சட்டம் 19/69) கண்ட கூலி நிர்ணயத்தை மாற்றி அமைப்பது சம்பந்தமாக நிலவருவாய், நிலச் சீர்திருத்தம், மற்றும் உணவு உற்பத்தி ஆணையாளர் திரு இராமசந்தர், ஐ.ஏ.எஸ்., அவர்களைக் கொண்ட ஒரு நபர் கமிஷனைத் தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. இக்கமிஷன் மாநில அரசுக்குத் தனது அறிக்கையை அளிக்கும்.

இது சம்பந்தமாக சங்கங்களும், நிறுவனங்களும், மற்றையோரும் தங்களது கருத்துக்களையும் கோரிக்கைகளையும் இக்கமிஷனிடம் நேரிலோ எழுத்து மூலமாகவோ தெரிவிக்கலாம்.

எழுத்து மூலம் அனுப்பப்படும் கோரிக்கைகளை, **ஒரு நபர் கமிஷன் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் கூலி நிர்ணயச் சட்டம் 1969 மே/பா தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற முகவரிக்கு 20-8-1978-க்குள் அனுப்ப வேண்டும்**

உங்களுக்குத் தெரியுமா?

நமது நாட்டில் சுமார் 150 இலட்சம் மாட்டு வண்டிகள் உள்ளன. இவற்றிற்கான மொத்த முதலீடு சுமார் 3,000 கோடி. இந்த மாட்டு வண்டிகளை நம்பி 200 இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்திய ரயில்வேக்கான முதலீடு ரூ. 4,000 கோடி. சாலைப்போககுவரத்து வாகன வகைகளுக்கான முதலீடு ரூ. 2,500 கோடி.

பார்த்தீனியம் களைத் தடுப்பு

வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு விதை மற்றும் உணவு தானியங்கள் மூலம் கொண்டு வரப்பட்ட இக் களைச்செடி நம் நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் அதிகப் பரப்பில் பரவி தொல்லை தந்து வருகின்றது. இது அதிக நச்சுத் தன்மை வாய்ந்தது.

களையைக் கட்டுப்படுத்தும் முறைகள்:

*கைக்களை மூலமாகவோ, களைக் கொத்தினைக் கொண்டோ குறைந்த அளவு இடங்களில் பரவியிருந்தால் அழிக்கலாம். ஆனால், இம்முறையைக் கையாள்வதின் மூலம் உடலில் பலவித நோய் உண்டாக ஏதுவாகிறது. மேலும், அதிகமான இடங்களில் இக்களை ஒழிப்பை மேற்கொள்ளும்போது இது இலாபகரமாகவும் இராது. வீட்டுத் தோட்டங்களிலோ, கால்நடைத் தொழுவங்கள் அருகிலோ ஓரிரண்டு களைகளைக் காணும்போது இம்முறையைப் பின்பற்றுவதில் தவறில்லை. இம்முறையைப் பின்பற்றும்போது பாதுகாப்புடன் களையை எடுக்க வேண்டும்.

*பகைமை உயிரினங்களைக் கொண்டும் இக்களைகளைக் கட்டுப்படுத்தலாம். உதாரணமாக, ஏபிஸ் பேபே, குடேகாக்கஸ் ஒருவகை மைட்ஸ் ஆகியவற்றின் மூலம் இக்களையின் வளர்ச்சி ஓரளவு கட்டுப்படுத்த முடிகிறது. ஆனால், இப்பூச்சிகள் மற்ற பயிர்களையும் தாக்குவதால் முழுமையாகப் பயன்படுத்தவில்லை.

*எல்லா முறைகளையும்விட களைக் கொல்லிகளின் மூலம் இக்களையை எளிதாகக் கட்டுப்படுத்த முடியும். நம்நாட்டில் பல இடங்களில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் கீழ்க்கண்ட களைக் கொல்லிகள் இக் களையைக் கட்டுப்படுத்த பெரிதும் பயனுள்ளதாகத் தெரிகிறது.

(அ) இக்களைகள் சிறு நாற்றுப் பருவத்திலிருக்கும்போது எக்டருக்கு 2.0 கிலோ அளவில் 2,4-டி (2.4-) என்னும் களைக் கொல்லியை 600 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்த முடிகிறது.

(ஆ) எம். சி. பி. ஏ. என்னும் களைக்கொல்லியை எக்டருக்கு 2.0 லிட்டர் விளவில் தெளிக்கலாம்.

(இ) அன்சார்-529 என்னும் களைக் கொல்லியை எக்டருக்கு 4. லிட்டர் அளவில் தெளிப்பதன் மூலம் இக்களையை நன்கு கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிகிறது.

(ஈ) ரவுண்டப் களைக்கொல்லியை எக்டருக்கு 2.0 லிட்டர் விதம் தெளிக்கலாம்.

(உ) பாராகுவாட், டைகுவாட் ஆகிய களைக் கொல்லிகளும் இக்களையைக் கட்டுப்படுத்த பெரிதும் பயன்படுகின்றன.

(ஊ) லாஸோ, அட்ரசின், டையூரான் ஆகிய களைக்கொல்லிகளின் மூலமும் இக்களையைக் கட்டுப்படுத்த இயலும் என பலவித ஆராய்ச்சிகளின் மூலம் தெரியவருகிறது. இவ்வாறு பல களைக்கொல்லிகளின் மூலம் இக்களையைக் கட்டுப்படுத்த முடிந்தாலும், எளிதில் நமக்குக் கிடைக்கக் கூடியதாயும், குறைந்த விலையுள்ளதாகவும் உள்ள இரு களைக்கொல்லிகளைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சிபாரிசு செய்கிறது.

(1) 2. 4-டி களைக் கொல்லியை எக்டருக்கு 2.0 கிலோ விதம் 600 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

(2) அன்சார்-529 களைக் கொல்லியை எக்டருக்கு 4.0 லிட்டர் என்ற அளவில் 600 லிட்டர் நீரில் கலந்து தெளித்தால் நல்ல முறையில் கட்டுப்படுத்த முடியும்.

களைக் கொல்லியைப் பயன்படுத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்:

சிபாரிசு செய்யப்படும் அளவிற்கு மேலாகக் களைக்கொல்லியை உபயோகப்படுத்தாதீர்கள்.

2, 4-டி களைக்கொல்லியைப் பருத்தி போன்ற இருவிதையிலைத் தாவரங்கள் பயிரிடப்படும் இடங்களில் பயன்படுத்தக்கூடாது. மக்காச்சோளம், கம்பு போன்ற பயிருள்ள இடங்களில் உபயோகப் படுத்தலாம்.

*முடிந்த அளவு களைக் கொல்லிகளுக்கென்று தனி ஸ்ப்ரேயர்களை வைத்திருக்கவும். இல்லாவிட்டால் களைக்கொல்லி பயன்படுத்திய பிறகு நன்கு கழுவிய பிறகே வேறு பூச்சி மருந்துகள் தெளிக்க பயன்படுத்துதல் வேண்டும்.

*காற்று எந்தத் திசையில் அடிக்கிறதோ, அதே திசையில் தெளித்தல் நன்று.

*களைக்கொல்லி தெளித்த பிறகு சுமார் 24 மணி நேரத்திற்காவது அந்த இடங்களின்மீது நடமாடாதீர்கள்.

*ஸ்ப்பேரயரைக் கொண்டு தெளிக்கும்போது அதை ஒரே உயரத்தில் பிடித்திருக்க வேண்டும். அப்போதுதான் ஒரே சீராக எல்லா இடங்களிலும் தெளிக்க முடியும்.

,களை பூ விடுவதற்கு முன்பு களைக்கொல்லியைத் தெளிப்பது அவசியம். இதன்மூலம் விதை உற்பத்தியைத் தவிர்க்கலாம்.

தகவல் :
டாக்டர் எஸ். சங்கரன்,
ராஜன்,
உழவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்
கோவை—3.

உடனடி மதிப்பீட்டுத் திட்டம்
சுலபமாக விரைவாக
வருமானவரி மதிப்பிட உதவுகிறது

- வருமானவரி அலுவலகத்திற்கு வரச்சொல்லி நோட்டீஸ் இல்லை.
- கணக்குப் புத்தகங்களை வருமானவரி அதிகாரியிடம் காட்டச் சொல்லி உத்தரவு இல்லை.
- உங்கள் ரிட்டர்னில் அறிவிக்கப்பட்ட வருமானத்தில் கணக்குப் பிழைகள் இருந்தால் திருத்த வேண்டிய அவசியம் அல்லது நிலையான திருத்தங்களைச் செய்ய வேண்டிய அவசியம் தவிர, கூடுதல் இல்லை.

உங்கள் மதிப்பீடு இந்த வகையில் இருக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான் :

- சரியான பாரத்தில் ரிட்டர்னை சமர்ப்பியுங்கள்.
- உங்கள் வருமானம் பற்றிய சரியான, முழுமையான விவரங்களையும் ரிட்டர்னில் இணைத்து மற்ற விவரங்களையும் கொடுங்கள்.
- உங்கள் ரிட்டர்னோடு வியாபாரம் / தயாரிப்புக் கணக்கு, லாப நஷ்டக் கணக்கு பாலன்ஸ் ஷீட் போன்ற பொருத்தமான அறிக்கைகளைக் கொடுங்கள்.
- உங்கள் ரிட்டர்னோடு வரி விதிக்கப்பட்ட சான்றிதழ் அட்வான்ஸ் வரி மற்றும் சுயமதிப்பீட்டு வரி, சலானின் பிரதி, கட்டாயச் சேமிப்பிற்கான ரசீது, லைஃப் இன்ஷ்சூரன்ஸ் பிரிமியம் போன்றவற்றை இணையுங்கள்.

வரிக்கவலை வேண்டாம்; சரியான முழுமையான ரிட்டர்னைச் சமர்ப்பியுங்கள்.

வெளியிடுவோர் :
டைரக்டரேட் ஆஃப் இன்ஸ்பெக்ஷன்,
(ஆராய்ச்சி மற்றும் புள்ளிவிவர வெளியீடுகள் பிரிவு)
வருமான வரித்துறை,
புதுதில்லி - 110 001.

davp 78/157

பூவன் வாழை
கட்டுக்கோப்புச் சாகுப

பூவன் சாகுபடிக்கேற்ற சில குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

முன்செய் நேர்த்தி: கன்றுகளை 2.0 × 2.0 மீ (7 × 7 அடி) இடைவெளியில் நடவும்.

கன்றுத் தேர்வு: ஒரே அளவுள்ள ஈட்டிக் கன்றுகளைத் தேர்ந்தெடுக்கவும். எக்டேருக்கு 2,200 கன்றுகள் தேவைப்படும்(ஏக்கருக்கு 890 கன்றுகள்).

நடவுப் பருவம்: மார்ச்-ஏப்ரல்

நடும் முறை: கிழங்கை மூடக்கூடிய அளவிற்குச் சிறிய குழிகள் வெட்டவும். கன்றுகளை நட்ட பின்னர் கிழங்கைச் சுற்றி நன்முக மண் அணைக்கவும்.

பின்செய் நேர்த்தி: இரண்டு வரிசைகளுக்கு இடையில் கிடங்கு வெட்டவும். ஆறு வரிசைக்கு ஒன்றுகக் குறுக்கே கிடங்கு வெட்டவும். ஆண்டிற்கு மூன்று முறை குறுக்கில் உள்ள கிடங்குகளை ஆழப்படுத்தவும். தாய்மரம் குலை ஈனும் வரை பக்க வாட்டில் வளரும் கன்றுகளை அகற்றிவிடவும். குலை ஈன்ற பிறகு நல்ல திடமான ஈட்டிக் கன்றுகளில் ஒன்றை மட்டும் வளரவிடவும். ஆண்டிற்கு நான்கு அல்லது ஐந்து முறை நிலத்தை நன்முக ஆழமாகக் கொத்தவும்.

உரமிடுதல்:

முதல் உரம்: நட்ட 12ஆம் வாரம்.

இரண்டாவது உரம்: நட்ட 20 ஆம் வாரம்.

வாழைத் தண்டிலிருந்து 60 செ. மீ. (2 அடி சுற்றி 10 செ. மீ. ஆழத்திற்குக் கிண்ணம் பறிக்கவும். உரமிட்டவுடன் உரத்தை மூடி நீர் பாய்ச்சவும். ஒரு மரத்திற்குத் தேவையான உரம்.

110N 35P 330K (தழை, மணி, சாம்பல் சத்துக்கள்) கிராம் சத்துக்கள்.

உரம்		கன்று நட்ட 3-வது மாதம்	கன்று நட்ட 5-வது மாதம்
தொழு உரம்	...	12 கிலோ	12 கிலோ
அம்மோனியம் சல்பேட்	...	300கிராம்	150கிராம்
சூப்பர் பாஸ்பேட்	...	200 ,,	...
மூரியேட் ஆப்பொட்டாஷ் (அல்லது)	...	250 ..	250 ..
பொட்டாசியம் ஷியோலைட்		625 ,,	625 ,,
புண்ணக்கு	...	100 ,,	100 ,,

தனிப்பட்ட உரங்கள் இடைக்கவில்லையானு எட்டாம் நெம்பர் கலப்பு உரம் (66—18) ஒரு எக் ருக்கு 1,500 கிலோ (ஒரு ஏக்கருக்கு 600 கிலோ விதம் கன்று நட்ட மூன்றுவது மாதத்திலும், ஒன் தாம் நெம்பர் கலப்பு உரம் (10-0-30) ஒரு எக் ருக்கு 1,850 கிலோ (ஒரு ஏக்கருக்கு 750 கிலோ விதம் கன்று நட்ட ஐந்தாவது மாதத்திலும் இ வும்.

நீர்ப்பாசனம்: ஆண்டிற்கு 30—40 முறைகள்

குலை தள்ளிய பிறகு கவனிக்க வேண்டியவை:

விதை உண்டாவதைக் கட்டுப்படுத்தும் முறை குலை தள்ளிய கொட்டை வாழை 15-20 நாட்க கழித்து, 2.4-டி என்னும் வளர்ச்சி ஊக்கியை ஒ லிட்டர் தண்ணீரில் 25 மி. லி. விதம் கரைத்து குலையின்மேல் தெளிக்கவும். சாதாரணமாக, தார்போட்ட மடல் பிரிந்தவுடன் காய்கள்மே நோக்கி வளரும். ஆனல், கொட்டை வாழையி காய்கள் மேல் வளர்ச்சி குன்றி மேல்நோக்கி வ யாமல் விரிந்து காணப்படும். 2.4-டி தெளிப்பதா காய்கள் சுரக்கும். குலை தள்ளிய 20 நாட்க கழித்து ஆண் பூவை ஒடித்துவிடவும். குலை தள்ளி பிறகு மரத்திற்கு மூங்கில்களைக் கொண்டு ஒட் கொடுக்கவும்.

பயிர்ப் பாதுகாப்பு:

சிகடோகா இலைப்புள்ளி நோய்: அக்டோப முதல் டிசம்பர் வரை ஆறு முறை டைத்தே எம். 45 என்ற மருந்தை (ஏக்கருக்கு 400 லிட்ட நீரில் ஒரு கிலோ மருந்தைக் கரைத்து) சாண்டே விட் அல்லது ட்ரைதியான் போன்ற நனைப்பா லிட்டருக்கு இரண்டு மி.லி. விதம் மருந்துட கலந்து உபயோகிக்கவும், அதிகமாகப் பாதிக்க பட்ட வாழையினது இலைகளை நீக்கிய பிறகே மரு தைத் தெளிக்க வேண்டும். வாழைத் தோட்ட திலிருந்து காய்ந்த இலைகளை அகற்றுவது மிகவு அவசியம். காய்ந்த சருகு இலைப்புள்ளி நோயி தீவிரத்தை மிகைப்படுத்தும்.

தகவல்:

சி. மு. பக்தவத்சலு.

இரா. செ. அழகிய மணவாளன்,

மு. பஜுலு ரஹ்மான் மாலிக்

தோட்டக்கலைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

குடி கெடுக்கும் குடி!

கலைமாமணி உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

குடிகெடுக்கும் குடிக்கு ஒரு அடிகொடுக்க—ஏழைக்
குடும்பங்கள் வாழ்வதற்கு வழிவகுப்போம்
(குடிகெடுக்கும்)

அழுதழுது ஓய்ந்துவிட்ட பெண்ணினத்தின்—கொடும்
அடிமைநிலை தீர்வதற்கு முடிவெடுப்போம்
(குடிகெடுக்கும்)

தடிகொண்டு தாக்கிடுவான் குதிகுதிப்பான்—எட்டித்
தரையினிலே வீழ்ந்திஒரு மிதுமிதிப்பான்
எதுசெய்வோம் என்பதையே அறியாதான்—கெட்ட
இழிநிலைக்குத் தன்னையே பலிகொடுப்பான்
(குடிகெடுக்கும்)

மாலைவரை மனிதனென உலவிடுவான்—அந்தி
வேளையிலே மிருகமென நிலைகெடுவான்
சாலையிலே குளத்தருகே மரத்தடியில்—சந்தி
சாக்கடையில் வீழ்ந்திடுவான் காப்பதுயார்?
(குடிகெடுக்கும்)

தெருத்தெருவாய்ப் பிள்ளைகளைத் திரியவிட்டே—நட்ட
நடுத்தெருவில் ஒருநாளில் உயிர்விடுவான்
அடுத்தடுத்தே இவன்கதையைத் தொடர்ந்திடுவார்-நாளும்
கணக்கின்றிப் பெருகுவதைத் தடுத்திடுவோம்!
(குடிகெடுக்கும்)

குடிசை நோக்கி வீசும் குளிர் தென்றல்

கொட்டடம் கட்டும் கொத்தனார், சாலை போடும் தொழிலாளி, துப்புரவு வேலை செய்வோர், முதுகெலும்பு ஒடிய மூட்டை தூக்கி வண்டி இழுத்து வயிற்றை நிரப்பும் ஏழை எளியோர், இவர்களெல்லாம் வாழும் பகுதி அது!

நாட்டின் நரம்புகளாய், நகரினை வனப்புடையதாய், பிறர் வாழ்வை ஒளிமயமானதாய் மாற்றிடும் இந்தத் தொழிலாளர்கள் வாழும் அந்த இடம் எவ்வாறு உள்ளது?

கல்லும் முள்ளும் நிறைந்த அந்த இடத்தின் நடுவிலே துர்நாற்றம் வீசும் சாக்கடை; நீர்க் குட்டைகள்; அதன் மத்தியில் அங்குமிங்கும் நடக்க முடியாத இடங்களில் குடிசைகள். மழைக் காலம் வந்து விட்டால் இவர்களின் அவதி சொல்லி முடியாது. சேறும் சகதியும் கீழே கால் ஊன முடியாத அளவு கோரமாயிருக்கும்.

இதுதான் திருச்சி நகர்ப் பகுதிகளிலுள்ள வாமடம், கமலா நேரு நகர், அண்ணாநகர் போன்ற குடிசைப் பகுதிகளில் நேற்று வரை இருந்து வந்த நிலை!

ஆனால், இன்று நடப்பது என்ன?

திருச்சி நகராட்சியின் பார்வை இவர்கள் பக்கம் திரும்பியது! குடிசைகளை நோக்கிக் குளிர் தென்றல் வீசத் தொடங்கி விட்டது! குடிசைப் பகுதிகளைச் சீரமைப்பு செய்ய நகராட்சி திட்டம் தீட்டியது.

முதலில் பாதைக்கான வழி வகுக்கப்பட்டது. வழியை மறைத்துக் கொண்டு ஆக்கிரமித்துக் கொண்டிருந்த புதர்கள், மரங்கள் முதலானவை வெகு சிரமத்திற்கிடையே அப்புறப் படுத்தப்பட்டன. இடங்களுக்கேற்ப, 10 அடி அல்லது 15 அடி இன்னும் சில இடங்களில் 25 அடிகளுக்கும் மேலாகப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

வீதியின் நடுவேஓடும் சாக்கடைக் காகச் சாலையின் அல்லது பாதையின் இரு மருங்கிலும் சிமெண்டினால் வடிகால் ஏற்படுத்தப்படுகிறது. இந்த வடிகால் அகலத்தில் சிறியதாக ஓர் அடி அல்லது 2 அடி ஆழத்தில் பாதை நெடுக அமைக்கப்படுகிறது. அதன் பின்னர் பாதைமீது செம்மண் சரள் போட்டு, சுமார் 2 அடி உயரம் உயர்த்தப்படுகிறது. பாதை பள்ளம் மேடின்றி ஒரே மட்டமாக்கப்படுகிறது. அதன் பின்னர் அதன்மீது 4 சதுர அடி அளவுள்ள கற்கள் அல்லது சிமெண்ட் 'ஸ்லாப்புகள்' பதிக்கப்பட்டு இடைவெளிகளில் சிமெண்ட் பூசப்படுகிறது. இவ்வாறு குடிசைப் பகுதிகளுக்குள் செல்லும் முக்கிய பாதை மட்டுமின்றி குறுக்குச் சந்துகள் போன்ற எல்லாப் பாதைகளும் சீரமைக்கப்பட்டு விடுகின்றன.

இப்போது சுத்தமான நேர்த்தியான பாதை தயார்! முன்பு இதே இடத்தைப் பார்த்தவர்கள் தங்கள் கண்களையே நம்ப முடியாத அளவுக்குப் பிரமிக்கத் தக்க தோற்றம்!

இத்துடன் விட்டு விடவில்லை. நகராட்சியினர், தெருவிளக்குகள், குடிநீர்த் தொட்டிகள், கழிப்பிடங்கள் ஆகியவற்றையும் ஒவ்வொரு குடியிருப்பிலும் போதுமான அளவு வசதியாக அமைத்துத் தருகின்றனர்.

இதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது, கழிப்பிடங்கள் ஆகும். பொதுவாக, பொதுக் கழிப்பிடங்கள் மிகவும் சாதாரணமான முறையில் அமைக்கப்படுவது வழக்கம். ஆனால், இங்கு இந்தக் குடிசைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளவை 'மொசைக்' தரையுடன் எளிதில்

குடிசைப்பகுதியில் நவீன வசதிகளுடன் கழிவிடம்.

சுத்தம் செய்யக் கூடிய வகையில்) கட்டப்பட்டுள்ளன. எப்போதும் தண்ணீர் வசதி உள்ளது. அத்துடன் நல்ல உயரத்தில், தரையிலிருந்து சுமார் 4 அடி உயரத்யில் படி வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மழைக் காலத்தில் நீர் தேங்கி நிற்காது. சுத்தப்படுத்துவதும் மிக எளிது.

திருச்சி நகரத்தில் மொத்தம் 51 குடிசைப் பகுதிகள் உள்ளன. அவை அனைத்திலும் இம்மாதிரி வசதிகள் செய்து தருவதற்காகத் திருச்சி நகராட்சி ஒரு திட்டம் தீட்டி, 1976 நவம்பரில் அரசுக்கு அனுப்பியது.

அத்திட்டத்தின் அடிப்படையில் சூரன் சேரி, பெரிய மிளகுப் பாறை, வடவூர், ஆட்டுமந்தை, கல்நாயக்கன் தெரு முதலிய 5 குடிசைப் பகுதிகளின் சீரமைப்பிற்காக 1976, 77-ஆம் ஆண்டிற்கு அரசு 3.6 இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கியது. மாநகராட்சி தனது நிதியில் ரூ. 2 இலட்சம் செலவிட்டது. இத்திட்டத்தின் மூலம் 10 ஆயிரம் மக்கள் (சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள்) பயன் பெற்றனர்.

மீதமுள்ள குடிசைப் பகுதிகள் சீரமைப்பிற்காக 1977-78 ஆம் ஆண்டில் (30-11-'77-ல்) தமிழ் நாடு அரசு 30 இலட்ச ரூபாய் மானியமாக அனுமதி வழங்கியது.

இந்த நிதியினைக் கொண்டு திருச்சி நகராட்சி துரிதமாகக் குடிசைப் பகுதிகள் சீரமைப்புப் பணியை மேற்கொண்டுள்ளது. அதில் நவீன கழிப்பிடங்களுக்காக 11.23 இலட்சம் ரூபாயும், சாலைகள் மேம்பாட்டிற்காக 12.64 இலட்சம் ரூபாயும், குடிநீர்த்திட்டங்களுக்காக 9.54 இலட்ச ரூபாயும், தெரு விளக்கிற்காக 93 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிசைப் பகுதிகளில் சுமார் 200 புதிய மின் விளக்குகள் அமைப்பதுடன் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 250 விளக்குகளை மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக 4 அடி நீளமுள்ள குழல் விளக்குகள் போடப்படவிருக்கின்றன.

அண்மையில் வாமடம், கமலா நேரு நகர் ஆகிய குடிசைப் பகுதிகளில் சீரமைப்புப் பணிகள் முடிவடைந்து திறப்பு விழா நடைபெற்றது.

இதுபோன்று, பிற பகுதிகளிலும் முனைப்பாகப் பணிகள் நடைபெறுகின்றன. அடுத்த மூன்று மாதங்களில் எல்லாக் குடிசைப் பகுதிகளிலும் குளிர் தென்றல் காற்று வீசும்; புதுப் பொலிவும், வலிவும் ஏற்படும்.

அரிசனங்களுக்கு அரசு செய்யும் நன்மைகள்

அரிசன மாணவர்களுக்காக ஜூலை 1977-ல் 10 உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் விடுதியும் 5 மாணவியர் விடுதியும் திறக்க ஆணையிடப்பட்டது. 113 இளநிலை ஆசிரியர் பதவிகள் இடைநிலை ஆசிரியர் பதவிகளாக மாற்றப்பட்டன.

* * *

புகுமுக வகுப்புக்கு மேல் படிக்கும் அரிசன, ஆதிவாசி மாணவர்களுக்கு வழங்கப்படும் கடன் உபகாரச் சம்பளம் ரூ. 500 முதல் 1,750 வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், 1976-77 ஆண்டு முடிய, குறைந்த நிதி ஒதுக்கீட்டினைக் கருத்தில் கொண்டு ரூ. 300 முதல் ரூ. 600 வரை தான் வழங்கப்பட்டு வந்தது. அவ்வாறு 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 11.24 இலட்சம் மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால் 1977-78ஆம் ஆண்டு முதல் ரூ. 500 முதல் 1,750 வரை என நிர்ணயிக்கப்பட்ட முழுத் தொகையும் கடன் உபகாரச் சம்பளமாக வழங்கப்பட்டு, இதற்கென ரூ. 22.76 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

* * *

1977-78ஆம் ஆண்டு வரை அரிசன நலத்துறையின் மூலம் குழந்தைகள் காப்பகம் நடத்தப்படவில்லை.

1977-78ல் ஐம்பது குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1978-79ல் ஐம்பது குழந்தைகள் காப்பகங்கள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அரிசன மக்களுக்கு குடிதண்ணீர் வசதிக்காகக் கிணறு தோண்டுவதற்கு உச்சவரம்புத் தொகை ரூ. 5,000/-லிருந்து ரூ. 6,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்பெல்லாம் அரசு அங்கீகாரத்தின் பேரில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டு வந்தன. தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு எங்கெங்கே நீர்த் தொட்டிகள் அவசியமோ அங்கங்கே கட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிதண்ணீர் வசதியில்லாத காலனிகளிலும் தண்ணீர் இருந்தும் குடிக்க லாயக்கில்லாத வசதியற்ற காலனிகளிலும் 1978-79-ல் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க தீவிர திட்டம் வகுத்துச் செயல்பட்டு வருகிறது.

* * *

அரிசன மக்களுக்குக் கறவை மாடுகளுக்கு மான்யம் ரூ. 125/-ம் கடன் ரூ. 375/-ம் இருந்ததை 77-78ஆம் ஆண்டிலிருந்து முறையே ரூ. 500/-ம், ரூ.1,000 மாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டு ரூபாய் 6.12 இலட்சமும், 1978-79ஆம் ஆண்டு ரூபாய் 10.12 இலட்சமும் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

* * *

1977-78ஆம் ஆண்டில் அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு நூலக வசதி செய்து கொடுக்கும் திட்டத்தின் கீழ், ஒரு பள்ளிக்கு ரூ. 1,000 வீதம் 24 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 24,000 அளிக்கப்பட்டது.

* * *

ஐ.ஏ.எஸ். பள்ளியில் படித்து தேர்ச்சி பெற்று ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மான்யமாக வழங்கப்படுகின்றது.

முன்னேடிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வெற்றியுடன் வெளியேறும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவாற்றலுள்ள அரிசன ஆதிவாசி மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அம் மாணவர்களைப் பாராட்டும் வண்ணமாகவும், வெற்றிபெற்ற ஒவ்வொரு மாணவருக்கும் ரூ. 1,000 வீதம் உதவித் தொகையாக 1976 முதல் வழங்க இவ்வரசு ஆணையிட்டுள்ளது. அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வில் வெற்றி பெற்ற பின்னர் மேற்படி பணிகளுக்காக பல்வேறு இடங்களில் நடத்தப்படும் பயிற்சியில் சேருவதற்கான செலவுக்காகவும் மேற்படி உதவித்தொகை பயன்படுத்தப்படுவதற்காக வழங்கப்படுகிறது.

பிளானேபிக்ஸ் ஊக்கிகள்

கி. இராமச்சந்திரன்,
தாவர வினை இயல் துறை,
வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.

பிளானேபிக்ஸ் ஊக்கி என்பது திரவ ரூபத்தில் உள்ள ஆல்பா நாப்தலின் அசிடிக் அமிலத்தின் சோடியம் உப்பு ஆகும். பல வருடங்களாக பல்வேறு பயிர்களில், பூக்கள், பிஞ்சுகள், பழங்கள் உதிர்வதைத் தடுப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டு அதிக விளைச்சலைத் தந்துள்ளது. இவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டு வரும் பயிர்களில் பருத்தி, மிளகாய், நிலக்கடலை, மா, திராட்சை, அன்னாசிப் பழ வகைகள், பயறு வகைகள், முக்கியமானவைகள்,

பிளானேபிக்ஸ் தண்ணீரில் ஊற்றி கலக்கப்பட்டு தெளிக்கப்படுவதாகும். எண்ணெய் போன்ற திரவங்களில் கலக்கலாகாது. ஏறக்குறைய பெருந்தொகையான பூச்சி கொல்லி மருந்துகளுடன் இணைந்து கொள்ளக் கூடியதொன்றாகும். ஊக்கியின் அளவும், தெளிக்கும் காலமும், ஒன்றாய் இருந்தால் பூச்சி மருந்துகளுடன் கலந்து தெளிக்கலாம். பிளானேபிக்ஸ் ரொம்பவும், பாதுகாப்பானது. அதிலுள்ள நாப்தலின் அசிடிக் அமிலத்தின் உயிரைக் கொல்லும் வீரியம் சுமார் 1 கிலோ கிராம் உடம்பின் எடைக்கு ஒரு கிராம். பல வருடங்களாக உபயோகத்தில் இருந்த போதிலும் இதுவரையில் இதன் விஷத் தன்மையினால் தீங்கு ஏற்பட்டதாக ஒரு நிகழ்ச்சியும் இல்லை. ஒரு மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 4 லிட்டர் தண்ணீரில் கலந்தால் 10 லட்சத்தில் 10 பகுதி வீரிய மருந்தான ஆல்பா, நாப்தலின் அசிடிக் அமிலக் கரைசல் கிடைக்கும். பிளானேபிக்ஸ் தாவர ஊக்கியாக பல்வேறு தினுசுப் பயிர்களில் தெளிக்கப்பட்டு அடைந்துள்ள பயன்களும் அடிக்கப்பட வேண்டிய அளவு முறைகளும் பின்வருமாறு:—

பருத்தி: இந்தியாவில் 1952 முதல் பிற தாவர ஊக்கிகளுடன் பிளானேபிக்சும், தெளிக்கப்பட்டு அதனால் கிடைக்கும் மகசூல் அதிகரிப்பு ஆராயப்பட்டு வருகிறது. பிளானேபிக்ஸ் ஊக்கியின் பயன் ஏற்கெனவே பூத்து முடிந்த பூக்களில் விட புதியதாய் உண்டான பூ மொட்டுகளில் அதிகமாய்க் காணப்படுகிறது. அதனால்தான் முதல் பூ விரிந்தவுடன் பத்து லட்சத்தில் நாற்பது பகுதிக் கரைசல் தெளிப்பது (40 PPM) 32 சதம் அதிக விளைச்சலைத் தந்துள்ளது. உதாரணமாய் எம். சி. யு. 1., எம். சி. யு. 4, பி. ஆர். எஸ். 30/2. சுஜாதா பருத்தியில் 10 இலட்சத்தில் பத்துப் பகுதி, கரைசல் நாப்தா அசிடிக் அமிலம் (பிளானேபிக்ஸாக) ஒரு எக்டருக்கு 1000 லிட்டர் கரைசல் வீதம் இலைத் தெளிப்பாக, முதல் பூ, பூக்கும் தருணத்திலும், மூன்று வாரங்கள் கழித்து மற்றொரு முறையும் தெளித்ததில் ஊக்கி தெளிக்கப்படாததைவிட சுமார் 8 சதம் முதல் 16.2 சதம் வரையில் அதிக மகசூல் கொடுத்துள்ளது. எம். சி. யு. 5ல்—1974-ஆம் வருடத்தில் பத்து இலட்சத்தில் பத்துப் பகுதி கரைசல் (10 PMM) நாப்தலின் அசிடிக் அமிலம், பிளானேபிக்ஸாக முதல் பூ பூத்தவுடன் ஒருமுறையும், 3 வாரங்களுக்குப் பின்னர் ஒரு முறையும் தெளித்ததில் எக்டருக்கு சுமார் 234 கிலோ விதைப் பருத்தி அதிக மகசூல் கிடைத்துள்ளது. இது, பூ பிஞ்சு உதிர்வதைக் கட்டுப்படுத்தி மகசூல் கொடுக்கக்கூடிய காய்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகிறது.

இதுவரையில் [illegible] பட்ட ஆராய்ச்சிகளின் [illegible]

களிலிருந்து அறிவது என்னவென்றால் பத்து இலட்சத்தில் பத்து பகுதி நாப்தலின் அசிட்டிக் அமிலம் (10PPM NAA) பிளானேபிக்ஸ்-ஆகத் தெளிப்பதுதான் மிகுந்த லாபத்தை தரக்கூடியதாய் உள்ளது. (ஒரு மில்லி லிட்டர் பிளானேபிக்ஸ் 4.5 லிட்டர் தண்ணீரில் கலக்குதல்) இதன் பகுதிக் கரைசலைக் கூட்டுவதினால் அதிகப் பயன் ஒன்றும் கிடைப்பதில்லை. தவிர பிளானேபிக்ஸ் ஊக்கி தனியாகவும், மற்ற பூச்சி மருந்துக் கலவைகள், உரக் கலவைகள் ஆகியவற்றுடன் கலந்து தெளிப்பதும் ஒரே மாதிரியான கூடுதலான பயனைத்தான் கொடுக்கிறது.

பருத்திக்கு சிபாரிசு செய்யப்படும் அளவு :-

125 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 550 லிட்டர் தண்ணீரில் கலந்து, எக்டருக்கு 550 லிட்டர் முதல் 1100 லிட்டர் கலவை வரையில் பயிர்களின் வளர்ச்சிக்கு தகுந்தபடி தெளிக்கலாம். இரண்டு முறைகள், அதாவது முதல் பூ மலர்ந்தவுடன் ஒரு முறையும், 3 அல்லது 4 வாரங் கழித்து பின்னர் ஒரு முறையும் அடிக்க வேண்டும்.

நிலக்கடலை : நிலக்கடலையில் பிளோனேபிக்ஸ் பத்து இலட்சத்தில் 40 பகுதிக் கரைசல் வீரிய மருந்து (40PPM) முப்பது முதல் நாற்பது நாட்களில் ஒன்றும், முதல் தெளிப்புக்குப் பின்னர் 30 முதல் நாற்பது நாட்களில் மற்றொன்றும் ஆக இரண்டு தெளிப்புகள் கொடுக்க வேண்டும். இதற்கு நான்கு மில்லி லிட்டர் பிளானேபிக்ஸ்-ஐ 4.5 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும்.

பயறு வகைகள் : துவரையில் பிளானேபிக்ஸ் 10 லட்சத்தில் 20 பகுதி கரைசல் (20) முதல் பூ பூக்கும் பருவத்திலும், அதிகபட்சப் பூக்கள் பூக்கும் பருவத்திலும் ஆக 2 முறை தெளிப்பதால் சுமார் 42 சதம் அதிக மகசூல் கிடைப்பதாய் அறியப்பட்டது. இந்த ஊக்கியினால் ஒரு செடியில் காய்களின் எண்ணிக்கையும், தனிப்பட்ட விதைகளின் எடை



யும் கூடுகின்றன. இரண்டு மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்தால் மேற்கூறிய 10 லட்சத்தில் 20 பகுதி கரைசல் கிடைக்கும். உளுந்திற்கு, பத்து இலட்சத்தில் 25 பகுதி கரைசல் நாப்தலின் அசிடிக் அமிலம் வீரிய மருந்தாக (25 PPM) பிளானேபிக்ஸ் ஓரிரண்டு பூக்கள் பூத்த பருவத்தில் ஒரு தெளிப்பும், நிறையப்பூக்கள் பூத்திருக்கும் பருவத்தில் ஒரு தெளிப்பும், தெளிப்பதினால் சுமார் 35 சதம் அதிக மகசூல் கிடைக்கிறது. இந்த அதிக விளைச்சல் செடிகளில் அதிகமாய் காய்ப்பதாலும், காய்களில் அதிக விதைகளிருப்பதாலும் கிடைக்கப் பெறுகின்றன. 2.5 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸ் ஊக்கியை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

பச்சைப் பயிரில் 2 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து உளுந்துக்கு அடிப்பதைப் போல சில பூக்கள் பூத்துள்ளபோது ஒரு முறையும், 50 சதம் பூக்கள் பூத்திருக்கும்போது ஒருமுறையும் தெளிப்பதால் அதிகப் பயன் கிடைப்பதாகத் தெரிகிறது.

சோயா மொச்சையில் பத்து இலட்சத்தில் இருபது பகுதிக் கரைசல் வீரிய மருந்தை பிளானேபிக்ஸாக 50 சதம் பூக்கள் பூத்திருக்கும் பருவத்தில் ஒரு முறை தெளித்தால் 24 சதம் அதிக மகசூல் கிடைப்பதாய் ஆராய்ச்சிகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. இது காய்களின் எடையையும், விதைகளின் எண்ணிக்கையையும், விதைகளின் எடையையும், கூடுதலாக்குகிறது. 2 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

பச்சைப் பட்டாணியில் பிளானேபிக்ஸ் வீரிய மருந்தை பத்து இலட்சத்தில் 10 பகுதி கரைசல், முதல் சில பூக்கள் பூத்திருக்கும் சமயத்தில் ஒரு தெளிப்பும், பின்னர் 3 வாரங்கள் இடைவெளியில் இரண்டு தெளிப்பும் ஆக மொத்தம் மூன்று தெளிப்புகள் அதிக விளைச்சலைத் தந்துள்ளது. ஒரு மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 4.5 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும்.

நெல் பயிரில் பிளானேபிக்ஸ் பத்து இலட்சத்தில் பத்து பகுதி வீரிய மருந்து (1 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸ் 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து) பூப்பதற்கு முன்னர் ஒரு தெளிப்பும், 10 இலட்சத்தில் 15 பகுதி வீரிய மருந்து (1.5 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து) மொட்டுகள் விடும் பருவத்தில் ஒரு தெளிப்பும், பத்து இலட்சத்தில் 20 பகுதி வீரிய மருந்து (2 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸ் 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து) நெல் மணிகளில் பால் பிடிக்கும் பருவத்தில் ஒரு தெளிப்புமாக 3 தெளிப்புகள் எக்டருக்குச் சுமார் 500 கிலோ கிராம் அதிக விளைச்சல் கொடுப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கோதுமையில் பத்து இலட்சத்தில் 20 பகுதி வீரிய மருந்தை (2 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸ் 4.5 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து) கதிர்கள் வெளிவருவதற்கு முன்னர் ஒரு தெளிப்பும், கதிர்கள் வெளிவந்த பின்னர் ஒரு தெளிப்பும் கொடுத்தால் சராசரி 16.5 சதம் அதிக விளைச்சல் கொடுக்கிறது. இந்த ஊக்கியை யூரியா உரத்துடன் கலந்து தெளிக்கலாம்.

இதுவரையில் பருத்தி, பயறு வகைகள், நெல், கோதுமை, பயிர்களில் பிளானேபிக்ஸ் ஊக்கியின் பயன்பற்றி அறிந்தோம். இனி, பழவகைகளில் இதன் பலனைப் பற்றி அறிவோம்:—

பழவகைகள் :

மா :—பிளானேபிக்ஸ் ஊக்கியின் ஆராய்ச்சிகள் மா-வில் 1951 முதல் நடத்தப்பட்டு வருகின்றன. பல ரகங்களில் வித்தியாசமான பலன் கிடைத்தபோதிலும் கீழ்க்கண்ட இரண்டு விதமான தெளிப்புகள் மிகுந்த பயன் தருவதாய் கண்டறியப்பட்டுள்ளது.

பத்து இலட்சத்தில் 20 பகுதி கரைசல் நாப்தலின் அசிடிக் அமிலம் (20 PPM) அதாவது இரண்டு மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கரைத்து பிஞ்சு பிடிக்கும்



காலத்தில் ஒரு தெளிப்பும் (Pea Stage) பின்னர் காய்முற்றும் காலத்தில் (Marble Stage) ஒரு தெளிப்பும் கொடுக்கலாம்.

(அல்லது)

பத்து இலட்சத்தில் நாற்பது பகுதி கரைசல் வீரிய மருந்தை அதாவது 4 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸ் 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து பிஞ்சு பிடிக்கும் காலத்தில் ஒரு முறை மட்டும் தெளிக்கலாம்.

மேற்கூறிய தெளிப்புகளினால் பழம் விளைச்சல் சுமார் 45 சதம் அதிகமாகவும், அதிக அஸ்கார்பிக் அமிலத்துடன் கூடின கனமான பழங்களும் கிடைக்கப் பெறுகின்றன. தவிர, மா மரத்தில் பூக்கொத்துக்களில் பத்து இலட்சத்தில் 200 பகுதி கரைசல் (20 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து) வீரிய மருந்து பிளானேபிக்ஸாக. பூ பிடிக்கும் காலத்தில் ஒரு முறை அடித்தால் அதில் உண்டாகும் கோளாறுகள் தவிர்க்கப்படுகின்றன. இதே மாதிரி பிஞ்சு பிடித்த பின்னர் ஒரு முறை அடித்தால் காய்களில் ஏற்படும் கோளாறுகள் சுமார் 75 சதம் குறைவதாயும் அறியப்பட்டுள்ளது.

அன்னாசிப் பழம் :

ஒரு மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கரைத்து அதில் 30 முதல் 50 மில்லி லிட்டர் கரைசலை செடியின் இருதய பாகத்தில் பூக்கள் விடுவது எதிர்பார்க்கும் காலத்திற்கு சற்று முன்னர் ஊற்றினால் செடி விரைவில் பூப்பதற்கு உந்தப்படுகின்றது.

பழத்தின் பருமன் அதிகமாவதற்கு பத்து மில்லி லிட்டர் பிளானேபிக்ஸ் ஊக்கியை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து இளம் பழங்களின் மேல், பழம் பூராவும் படும்படி அறுவடையாவதற்கு 8 வாரங்களுக்கு முன்னர் தெளித்தால் நல்ல பயன் கிடைக்கின்றது.

அறுவடை ஆவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னால் பழங்களை நன்கு நனையும்படி மேற்கூறிய பிளானேபிக்ஸ் கரைசலை தெளித்தால், பழங்கள் முற்றுவது தாமதமாகிறது.

திராட்சைப் பழம் :

பிளானேபிக்ஸ் 10 மில்லி லிட்டர் 4.5 லிட்டர் நீரில் கலந்து (100 PPM) அறுவடைக்கு பத்து அல்லது பதினைந்து நாட்களுக்கு முன்னர் தெளித்தால் பழங்கள் உதிர்வது கட்டுப்படுத்தப்படுகின்றன. மேலும் ஒரு மில்லி லிட்டர் பிளானேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து (10 PPM) கொடிகள் கவாத்து செய்யும்போது ஒருமுறையும், கொடியில் பூங்கொத்து விடும் சமயத்தில் இரண்டாவது முறையும் அடித்தால் பழங்களின் அளவும் கனமும் அதிகரிக்கின்றன.

ஆரஞ்சு, சாத்துக்குடி பழ வகைகளின் மரங்களின் முன் அறுவடை பழ உதிர்தல் பிளானேபிக்ஸ் பத்து இலட்சத்தில் பத்து பகுதி கரைசல் (1 மில்லி லிட்டர் + 4.5 லிட்டர் தண்ணீர்) அடிப்பதால் தவிர்க்கப்படுகின்றன. கமலா ஆரஞ்சு பழ மரங்களில் 62 சதமும், சாத்துக்குடி பழ மரங்களில் 67 சதமும்

பப்பாளி, கொய்யா, பலா, மரங்களில் கூட பிஞ்சு பழுத்து உதிர்தல் பிளானேபிக்ஸ் 1 மில்லி லிட்டர் 1 லிட்டர் தண்ணீரில் கலந்து (45 PPM) தெளிப்பதால் குறைக்கப்படுகின்றது.

ஆப்பிள், பேரிக்காய் முதலிய மலைப் பிரதேச பழங்களில் பிளானேபிக்ஸ் பத்து இலட்சத்தில் பத்துப் பகுதி கரைசல் (1 மில்லி லிட்டர் + 4.5 லிட்டர் தண்ணீர்) அதிகப் பழ உதிர்தல் எதிர்பார்க்கப்படும் காலத்திற்கு ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு முன்னால் ஒருமுறை தெளிப்பதால் பழம் உதிர்தல் குறைந்து விடும். அதே சமயத்தில் பழ முதிர்வது தாமதமாவதில்லை. சுமார் பதினைந்து முதல் இருபத்தைந்து லிட்டர் கரைசல் ஒவ்வொரு மரத்திற்கும் தெளிக்கப்படவேண்டும்.

காய்கறிகள் :

மிளகாய்: மிளகாய் செடியின் பத்து லட்சத்தில் ஐந்தல்லது பத்து பகுதி நாப்தலின் அசிடிக் அமிலம் (5 அல்லது 10PPM) வீரிய மருந்தை பிளானேபிக்ஸ் ஆக (0.5 அல்லது 1.0 மில்லி லிட்டர் பிளானேபிக்ஸ் + 4.5 லிட்டர் தண்ணீர்) இரண்டு முறைகள் அதாவது பூக்கள் விடும் சமயத்தில் முதலாவதாயும், இருபது அல்லது முப்பது நாட்களுக்குப் பின்னர் இரண்டாவதாயும், தெளித்தால் நல்ல பயனைத் தருகின்றன. இது பூக்கள் உதிர்வதை குறைத்து சுமார் 39 சதவிகித அதிக மகசூல் (வறமிளகாய்) கிடைக்கச் செய்கின்றது.

கத்தரி, தக்காளி: செடிகளிலும் பத்து லட்சத்தில் நாற்பத்தைந்து பகுதி (பிளானேபிக்ஸ் ஒரு மில்லி லிட்டர் + 4.5 லிட்டர் தண்ணீர்) வீரிய மருந்தான நாப்தலின் அசிடிக் அமிலக் கரைசல் பூ, பிஞ்சு, உதிர்தலைக் கட்டுப்படுத்தி, பழங்களின் பருமனை அதிகப்படுத்துவதன் காரணமாய் அதிக விளைச்சலைக் கொடுக்கின்றது.

மேற்கூறிய பலவகையான பயன்களை கூர்ந்து நோக்கினால், பிளானேபிக்ஸ் தாவர ஊக்கி

யானது குறைந்த அளவுகளில் அதாவது பத்து இலட்சத்தில் பத்து பகுதி முதல் ஐம்பது பகுதி நாப்தலின் அசிடிக் அமிலக்கரைசலாக தெளிப்பதால் அநேக வகையான பயிர்களில் பூ, பிஞ்சு உதிர்வதைக்கட்டுப்படுத்தி, நல்ல மகசூலை கிடைக்கச் செய்கிறது என்பது தெளிவாகிறது. பழவர்க்கங்களில், பழங்களின் பருமனை அதிகரிக்கச் செய்வதுடன் அவற்றின் வடிவங்களில் ஏற்படும் கோளாறுகள் தவிர்க்கப்படுகின்றன.

எண்ணெய்வித்துப் பயிர்கள்

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் எண்ணெய்வித்துப் பயிர்கள் முக்கியமானவை நிலக்கடலை, எள், சூரியகாந்தி முதலியவை.

நிலக்கடலை தமிழ்நாட்டில் 1.14 மில்லியன் ஹெக்டர் நிலப் பரப்பில் பயிர் செய்யப்பட்டு, ஆண்டுதோறும் 1.21 மில்லியன் டன் நிலக்கடலையைக் கொடுக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் இது பயிரிடப்பட்டபோதிலும், முக்கியமாக வடார்க்காடு, தென் ஆர்க்காடுமாவட்டங்களின்பெரும் பகுதிகளிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி, மற்றும் கீழ்பவானி பாசனத் திட்டப் பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தில் தேனி, கம்பம், உத்தமபாளையம் பகுதிகளிலும் அதிக அளவு சாகுபடி செய்யப்படுகிறது.

நிலக்கடலை பயிரிடுவதற்கு மணற்பாங்கான செம்மண் அல்லது வண்டல்மண் நிலம் ஏற்றது. நல்ல வடிகால் வசதி அவசியம். நிலத்தை 6 அங்குல ஆழத்திற்கு மேற்படாமல் உழுது மண்ணை புழுதியாக்க வேண்டும். ஆழமாக உழுவதால் செடியில் விழுதுகள் ஆழமாக இறங்கி, அறுவடை சமயத்தில் காய்கள் பூமியிலேயே தங்கிவிட ஏதுவாகும்.

மானாவாரியாக நிலக்கடலை விதைக்க ஏற்றபருவம் வைகாசி-ஆனி மாதங்களாகும். ஆயினும், பொள்ளாச்சி, கம்பம் முதலிய பகுதிகளில் பங்குனி-சித்திரை மாதங்களில் பெய்யும் பருவ முன் மழையைக் கொண்டு மற்றப் பகுதிகளுக்கு முன்னதாகவே நிலக்கடலை விதைக்கப்படுகிறது. பொதுவாக, பாசனப் பயிராக நிலக்கடலை விதைக்க ஏற்ற பருவம் மார்கழி-தை மாதங்களாகும். பெருவாரியான பரப்பளவில் கொத்து நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. இதனுடைய வயது 100-105 நாட்களாகும். பட்டாணி ரகம் என்று சொல்லப்படுகின்ற டி. எம். வி. 2-ஆம் நம்பர் கடலையே அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகிறது.

பி. ஓ. எல். 2 முதலிய ரகங்களும் கொத்து வகையைச் சேர்ந்தவை. இந்த ரகங்கள் ஏக்கருக்கு மானாவாரியாக 600 கிலோவும் பாசனப் பயிராக 1000 கிலோ கடலையும் கொடுக்கக் கூடியவை. 75 சதம் தொலிப்புத் திறன் கொண்டவை. இவற்றில் 50 சதம் எண்ணெய்ச் சத்து உண்டு. இவைகளில் ஏதாவதொரு ரகத்தைப் பயிரிடுவதன் மூலம் அதிக இலாபத்தைப் பெறலாம்.

அடர்கொத்து ரகமான டி.எம வி. 10 மானாவாரியாகப் பயிரிட ஏற்றது. இதன் வயது 120 நாட்கள். ஏக்கருக்கு 750 கிலோ காய்களைக் கொடுக்கும். 77 சதம் தொலிப்புத் திறனும், 54.4 சதம் எண்ணெய்ச் சத்தும் கொண்ட சிறந்த ரகம் இது.

தேவையான உரத்தைக் கடைசி உழவின்போது அடியுரமாக இட வேண்டும். 5 டன் தொழுவுரம், 20 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 11 கிலோ யூரியா 50 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவை ஏக்கர் ஒன்றுக்குத் தேவையான உரங்களாகும். முதல் முறையாக வெண்காரம் எனப்படும் போராக்ஸ் போடுவதாயிருந்தால் ஏக்கருக்கு 8 கிலோ வரை போடலாம். முந்திய ஆண்டுகளில் வெண்காரம் போட்டிருந்தால் 1 ஏக்கருக்கு 2 கிலோ போதுமானது. இது விதைகள் பருமனடைந்து தொலிப்புத் திறன் அதிகரிக்க உதவும்.

ஏக்கருக்கு 45 முதல் 50 கிலோ விதைப் பருப்பு தேவைப்படும். விதைப்பதற்கு முன்தினம் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் திராம் அல்லது கேப்டான் மருந்தைக் கலக்க வேண்டும். இதனுல் விதைகளின் மூலம் பரவும் வேர் அழுகல் நோய், செடி அழுகல் நோய் இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

விதைக்கும் நாளன்று 120 கிராம் வெல்லத்தை அரை லிட்டர் தண்ணீரில் கலந்து நன்ருகப் பாகு வரும்படி காய்ச்சி ஆற வைக்க வேண்டும். ஆறிய வெல்லப்பாகில், 2 பாக்கெட் ரைஸோபிய நுண்ணுயிரைக் கலக்க வேண்டும். ஒரு ஏக்கருக்குத் தேவையான விதையை இந்தப் பாகுடன் கலந்து, சிறிதுநேரம் நிழலில் உலர வைக்க வேண்டும். இந்த நுண்ணுயிர், செடிகளின் வேர்களில் வேர் முடிச்சுக்கள் அதிகரித்து, தழைச்சத்து அதிகம் சேமிக்கப்படவும், இதன் காரணமாக மகசூல் பெருகவும் வழி செய்கிறது. இவ்வாறு கலக்கப்பட்ட விதையை நாட்டுக் கலப்பையின் பின்சாலில் விதைக்க வேண்டும். மானாவாரி ...ரா ...னுல் 6 அங்குலத்துக்கு 6 அங்குலம் இடைவெளியுடனும், பாசனப் பயிரானுல் 9 அங்குலத்துக்கு 6 அங்குலம் இடைவெளியுடனும் விதைக்க வேண்டும்.

விதைத்த 20 நாட்களில் முதல் களை எடுக்க வேண்டும். இப்பருவத்தில் சாதாரணமாக சுருள் பூச்சி தோன்றி இலைகளைச் சேதப்படுத்தும். இப்பூச்சியைக் கட்டுப்படுத்த, ஜோலோன் 300 மில்லி அல்லது நூவான் 200 மில்லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பானுல் தெளிக்க வேண்டும். தண்ணீர் வசதியில்லாத இடங்களில் ஜோலோன் 4 சதம் தூள், அல்லது டீப்டிரக்ஸ் 5 சதம் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவலாம்.

விதைத்த 40-45 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது முறையாகக் களை எடுக்க வேண்டும். இச்சமயத்தில் செடிகளைச் சுற்றிலும் மண்ணைக் கிளறிவிட்டு, மண் அணைப்பது சிறந்தது. இதனுல் விழுதுகள் அதிகமாக மண்ணில் இறங்கி அதிக அளவு காய் பிடிக்கும். மண் அணைப்பதற்கு முன்பு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இடுதல் சிறந்தது. ஜிப்சத்திலுள்ள சத்துக்களை வேர்களின் மூலம் மட்டுமின்றி விழுதுகளின் மூலமாகவும் கடலைச் செடி எடுத்துக் கொள்ளுகிறது. இதன் மூலம் பருப்பு நன்கு முதிர்ச்சி அடையவும், பொக்குக் காய்களின் அளவு குறையவும் உதவுகிறது. சுண்ணும்புச் சத்து அதிகமாக இருக்கும் பகுதிகளில் ஜிப்சம் போட அவசியமில்லை.

செடி 50-55 நாட்கள் வயதாயிருக்கும்பொழுது டிக்கா இலைப் புள்ளி நோயும், துரு நோயும் அதிகமாகத் தாக்க ஆரம்பிக்கும். இந்நோய்களைக் கட்டுப்படுத்த ''ட்யூடர்'' அல்லது ''டைத்தேன் எம். 45'' மருந்தை ஏக்கருக்கு 400 கிராம் வீதம் கைத் தெளிப்பான் மூலம் 200 லிட்டர் தண்ணீரிலும், விசைத் தெளிப்பான் மூலம் 50 லிட்டர் தண்ணீரிலும் கலந்து தெளிக்க வேண்டும்.

கடலைச்செடி இளம் பருவத்தில் இருக்கும்பொழுதே சில பகுதிகளில் மானாவாரிப் பருவத்தில் சிவப்புக் கம்பளிப் புழுவின் தாக்குதல் காணப்படுவதுண்டு. மழை பெய்தவுடன் இப்புழுக்கள் ஆயிரக்கணக்காகத் தோன்றி, கூட்டம் கூட்டமாக ஒரு வயலிலிருந்து மற்ற வயல்களுக்கு நகர்ந்து, இலைகளைத் தின்று பெரும் சேதம் விளைவிக்கின்றன. சிவப்புக் கம்பளிப் புழுவைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும்.

மழை பெய்தவுடன், தாய் அந்து பூச்சிகள் வெளிப்படும். வெள்ளை இறக்கைகளில் சிவப்புப் புள்ளிகளுடன் காணப்படும் இந்த அந்துப் பூச்சிகளை உடனே அழித்து விடவேண்டும். ஒரு பூச்சி ஆயிரக் கணக்கான முட்டைகள் இடுகிற தினால் அதிகமான அளவு கம்பளிப் புழுககள வெளிப்படும். ஆகவே, மழை பெய்தவுடன் விளக்குப் பொறி, பெட்ரோமாக்ஸ் விளக்கு, சொக்கப்பனைக் கொளுத்துதல் போன்ற முறைகளை இரவு நேரங் களில் கையாண்டு, அந்துப் பூச்சி களை அழிக்க வேண்டும். புழுக்கள் வெளிவந்த 7 முதல் 14 நாட் களுக்குள், பி. எச். சி. 10 சதத் தூளை ஏக்கருக்கு 8 கிலோ வீதம் தூவி, இளம் புழுக்களைக் கட்டுப் படுத்தலாம். வளர்ச்சி அடைந் தப் புழுக்களைக் கட்டுப்படுத்த, நூவான் 200 மில்லி அல்லது நூவக்ரான் 250 மில்லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விதைத்த 100-105 நாட்களில் அறுவடை செய்ய வேண்டும். கால தாமதம் செய்தால் கொத்து நிலக்கடலை விதைகள், விதை மந்தம் இல்லாத காரணத்தால், பூமியிலேயே முளைத்து மகசூலை பாதிக்கும். அறுவடை செய்த வுடன் கடலையில் சுமார் 40 முதல் 45 சதம் ஈரத்தன்மை இருக்கும். ஆகவே, அறுவடை செய்யப்பட்ட கடலையை வெய்யி லில் நன்கு உலர்த்தி, ஈர நிலையை 6 முதல் 8 சதம் வரும்படி குறைத்துவிட வேண்டும்.

நிலக்கடலைக்கு அடுத்தாற் போல், எள் ஒரு முக்கியமான எண்ணெய்வித்துப் பயிர். தமிழ் நாட்டில் 1.23 இலட்சம் ஹெக் டர் நிலப்பரப்பில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. எள்ளைப்பயிரிடு வதற்கு மூன்று முக்கிய பருவங்கள் உள்ளன. மானாவாரிப் பயிராக 110 முதல் 125 நாட்கள் வயது டைய கே. ஆர். ஆர். 1 அல்லது கே. ஆர். ஆர். 2 முதலிய ரகங் களை ஆடி மாதத்தில் விதைக்க லாம். இதே பருவத்தில் 90 நாட்கள் வயதுடைய டி. எம். வி. 3 ரகமும் ஏற்றது. குளிர் காலப் பயிராக, கார்த்திகை-மார்கழி மாதங்களில், 80-85 நாட்கள் வயதுடைய டி. எம். வி. 2 ரகம் பயிரிட ஏற்றது. கோடைப் பருவத்தில்பாசனப் பயிராக தை, மாசி மாதங்களில் டி.எம்.வி. 3 ரகத்தைச் சாகுபடி செய்யலாம்.

நல்ல வடிகால் வசதியுள்ள மணற்பாங்கான வண்டல் மண் அல்லது செம்மண் எள் சாகு படிக்கு ஏற்றது. பூமியை நன்கு உழுத பின், அடி உரமாக ஏக்க ருக்கு 2.5 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியா, 56 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றை மானாவாரிப் பயி ருக்கு இடுதல் வேண்டும். பாசனப் பயிரானால், மானாவாரிப் பயிரைப் போல் 1.5 பங்கு உரமிடுதல் அவசியம். இவற்றுடன் ஏக்க ருக்கு 2 கிலோ மாங்கனீஸ் சல் பேட் என்ற நுண்சத்தை 2 கிலோ போடுவதால் விளைவைப் பெருக்கலாம். ஏக்கருக்கு 2 கிலோ விதை தேவைப்படும். செடி முளைத்த 10வது நாளில் முதல் முறையாகவும், 20-வது நாளில் 2-வது முறையாகவும் செடிகளைக் கலைத்துவிட வேண் டும். மானாவாரிப் பயிருக்கு 3/4 அடிக்கு 3/4 அடி இடைவெளி விட்டும், பாசனப் பயிருக்கு ஒரு அடிக்கு ஒரு அடி இடைவெளி விட்டும் செடிகளைக் கலைக்க வேண்டும்.

விதைத்த 25-30 நாட்களில் முதல் களையும், அவசியமானால் விதைத்த 40 நாட்களில் 2-வது களையும் எடுக்க வேண்டும். இலை சுருட்டுப்புழு, சாம்பல் நோய் இவற்றைக் கட்டுப்படுத்த விதைத்த 40-வது நாளிலும் 60-வது நாளிலும் 'எண்டோ சல் பான்' 500 மில்லி மருந்துடன், 600 கிராம் டைத்தேன் எம். 45 என்ற பூசண மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும்.

இலைகளும் செடிகளின் தண்டு பாகமும் மஞ்சள் நிறமாக மாறத் தொடங்கியதும் செடிகளை அறு வடை செய்து குவியல்களாக வைத்து, பிறகு உலர்த்தி, குச்சி யால் அடித்து, விதைகளைப் பிரித்து எடுக்க வேண்டும். மானா வாரிப் பயிரின் மூலமாக ஏக்க ருக்கு 150 முதல் 200 கிலோ மகசூலும், பாசனப் பயிரின் மூலம் 250 முதல் 300 கிலோ மகசூலும் பெறலாம்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டிற்குப் புதிதாக அறி முகப்படுத்தப்பட்ட சூரியகாந்தி நம் மாநிலத்தின் குறிப்பிட்டச் சில பகுதிகளில் செழித்து வளரு கிறது. இதைப் பயிர் செய்ய கரிசல் மண் ஏற்றது. மானா வாரிப் பயிராக ஆடி, புரட்டாசி மாதங்கள் விதைப்பதற்கு ஏற்ற காலமாகும். என்றாலும் ஆண் டின் எல்லாப் பருவங்களிலும் இதைப் பயிர் செய்யலாம்.

பாசனப் பயிராக தை, சித்திரை மாதங்களில் விதைப்பது நல்லது. 90 நாட்கள் வயதுடைய இ. சி. 68413, 68414, 68415 ஆகிய வற்றில் ஏதாவது ஒரு ரகத்தைப் பயிரிடுவது நல்லது. ஏக்கருக்கு 5 கிலோ விதை தேவை. விதைப் பதற்கு முன் 1 கிலோ விதைக்கு 2 கிராம் பிராசிகால் மருந்தைக் கலந்து விதைப்பதன் மூலம் தண்டு அழுகல் நோயைக் கட்டுப் படுத்தலாம். மானாவாரிப் பயி ருக்கு 1.5 அடிக்கு 1 அடி இடை வெளியும், பாசனப் பயிருக்கு 1.5 அடிக்கு 3/4 அடி இடைவெளி யும், பாசனப் பயிருக்கு 1.5 அடிக்கு 3/4 அடி இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

விதைப்பதற்கு முன், அடி உர மாக ஏக்கருக்கு 50 கிலோ அம் மோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 16 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றைப் போட வேண்டும். மேலும், விதைத்த 30வது நாளில் 17 கிலோ யூரியாவாக மேல் உர மாக இடுதல் நல்லது. பூக்கும் தருணத்தில் அதிக வறட்சியோ அல்லது மழையோ இருக்கு மானால் விதைப்பிடிப்பு குறைந்து விடும்.

இலைப்புழு, துருநோய் இவற் றைக் கட்டுப்படுத்த பென்தி யான் 0.05 சதம், தயோவிட் 0.1 சதம் ஆகிய இரண்டையும் கலந்து விதைத்த 30வது நாளி லும், 45வது நாளிலும் தெளிக்க வேண்டும். கொண்டைத் துளைப் பான் புழுக்களை ஒழிக்க எண்டோ சல்பான் 0.07 சதம் மருந்தை மாலை நேரத்தில் பூக்களில் படு மாறு தெளிக்க வேண்டும். பூக் களின் பின்பகுதி மஞ்சளாக மாறியபின் பூக்களை அறுவடை செய்து, விதை பிரித்து காய வைக்க வேண்டும். பாசனப் பயிரின் மூலம் ஏக்கருக்கு 700 முதல் 800 கிலோ மகசூலும், மானாவாரிப் பயிரின் மூலம் 300 முதல் 400 கிலோ மகசூலும் பெறலாம்.

மு. ஸ்டீபன் துரைராஜ்,
இணைப் பேராசிரியர்,
பயிரியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை.

தமிழ்நாட்டில் நிலக்கடலை சாகுபடி

கே. பெருமாள்
இணை இயக்குநர்
(எண்ணெய் வித்துக்கள்)
வேளாண்மை இயக்ககம்

உலக நாடுகளில் உணவு எண் ணெய் உற்பத்தியில் இந்தியா பெரும்பங்கு வகிக்கிறது. ஆண்டு தோறும் சுமார் ரூ. 1,200 கோடி மதிப்புள்ள எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாவதன் மூலம் தேசிய வருமானத்தில் இப்பயிர் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டில் நெற்பயிருக்கு அடுத்து பயிரிடப்படும் முக்கிய பயிர் எண்ணெய் வித்துப்பயிர் களாகும். சுமார் 11.5 இலட்சம் டன் எண்ணெய்வித்துக்கள் 11 இலட்சம் எக்டேரிலிருந்து கிடைக் கிறது. இதன் மதிப்பு ரூ. 200 கோடியாகும். தானிய உற்பத்தி யில் தன்னிறைவு கண்ட தமிழ் நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் ஒரு தேக்கநிலை காணப்படுகிறது. தற்பொழுது சுமார் 4.31 இலட்சம் டன் உணவு எண்ணெய் கிடைக்கிறது. சுகாதாரத் தேவைக்குத் தனி மனிதனுக்கு நாளொன்றுக்கு ஒரு அவுன்சு எண்ணெய்யாவது தேவைப்படும் என்பது சத்துணவு நிபுணர்களின் கருத்து.

இந்த அடிப்படையில் பெருகி வரும் மக்கள் தொகையைக் கணக்கிட்டு 83-84 ஆம் ஆண்டு இறுதிக்குள், அதாவது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் 5.12 இலட்சம் டன் எண்ணெய் உற்பத்தி செய்யத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருக்கிறது. அதற்கேற்ப எண்ணெய்வித்துப் பயிரிடும் பரப்பையும் 35.40 இலட்சம் ஏக்கரிலிருந்து 41.90 இலட்சம் ஏக்கராக அதிகரித்தும் எண்ணெய் வித்து உற்பத்தி யிலுள்ள பற்றாக்குறை நீக்கப் படும் எண்ணெய் வித்துப்பயிர் களில் முக்கியமானது நிலக்கடலை. நிலக்கடலை மற்றும் எள் போன்ற முக்கிய எண்ணெய்வித்துப் பயிர்கள் பெரும்பாலும் மானா வாரிப் பயிராகப் பயிரிடுவதே யாகும். சாகுபடி செய்யும் பரப் பில் 80 சதம் மழையை நம்பிய பயிராகிறது. எனவே, உழவர்கள் இப்பயிரைப் பயிரிடுவதில், முத லீடு செய்வதில் தயக்கம் காட்டு கிறார்கள். புதிய ரக வித்துக்களை உபயோகிப்பதிலும், வேண்டிய அளவில் உரமிடுவதிலும், பயி ரைப் பாதுகாப்பதிலும் அதிக ஊக்கம் காட்டுவதில்லை.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மானாவாரிப் பயிரிலும் அதிக மகசூல் பெற ஆராய்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டுப் பல் வேறு புதிய முறைகளைக் கையாள உழவர் பெருமக்களுக்கு இன்று தமிழ்நாடு வேளாண்மைத் துறை சிபாரிசு செய்கிறது.

பசுமைப் புரட்சிக்கு முக்கிய காரணங்கள் உயர்விளைச்சல் தரும் ரகங்களும், திருந்திய முறை சாகுபடி முறைகளுமாகும். ஏனைய தானிய வகைகளைப் போன்று நிலக்கடலையில் உயர் விளைச்சல் தரும் வித்துக்கள் இன்றும் வெளிவராவிட்டாலும் தற்போதுள்ள ரகங்களைக் காட்டி லும் அதிகப் பலன் தரக்கூடிய வித்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டி ருக்கின்றன. இந்த வரிசையில் தற்போது டி. எம். வி. 9, டி. எம். வி. 10, டி. எம். வி. 12 போன்ற ரகங்கள் அடங்கும். இவைகள் மூன்றும் மானாவாரிக்கு ஏற்றவை. டி. எம். வி. 10 என்ற ரகம் மற்ற இரு ரகங்களையும்விட வயதில் சற்றுக் கூடுதலானது. மானாவாரிப் பருவத்திற்கே சிபாரிசு செய்யப்படுகிறது. 125 நாட்களில் அறுவடைக்கு வரும். ஏனைய நிலக்கடலை ரகங்களைவிட கூடுதலான எண்ணெய்ச் சத்து உள்ளது. எனவே, வியாபாரிகளை

புதிய நிலக்கடலை ரகம் —திண்டிவனம்-12

இதற்குத் தனி விலை கொடுத்து வாங்குகிறார்கள். மற்ற இரு ரகங்களின் வயது 105 நாட்களே, டி. எம். வி. 2. என்றும், விதையைவிட அதிகப் பலன் தரக்கூடியது டி. எம். வி. 9 என்ற ரகம்; டி. எம். வி. 12 என்ற ரகம் இந்த ஆண்டில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ரகம் விதை உற்பத்திப் பெருக்கம் செய்யும் நிலையடைந்துள்ளது.

பொதுவாக நிலக்கடலைப் பயிரில், விதைப்பெருக்கம் ஏனைய பயிர்களைக் காட்டிலும் மிகக் குறைந்த விகிதாச்சாரத்திலிருக்கிறது. ஏக்கருக்கு 80 கிலோ நிலக்கடலை அல்லது 50-55 கிலோ நிலக்கடலை பருப்பு என்ற அளவில் உபயோகத்தில் இருக்கிறது. உற்பத்தி செய்யப்படும் நிலக்கடலையில் நான்கிலிருந்து ஆறில் ஒரு பங்கே விதைப் பொருளாக உபயோகப்படுத்தப்படுகிறது. இம்மாதிரி நிலையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ரகங்களை வேகமாக அபிவிருத்தி செய்து மக்களுக்கு விரைவில் கிடைக்க, திட்டவட்டமான ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மற்ற பயிர்களில் கிடைப்பது போன்று நிலக்கடலையிலும் போதிய அளவில் பொறுக்கு வித்துக்கள் கிடைக்க வகை செய்யப்படும். இதற்காகப் புதிய பண்ணை ஒன்று திருவள்ளூருக்குச் சமீபத்தில் புட்லூர் என்கிற கிராமத்தில் உதவிப் பயிர் நிபுணரின்கீழ் சென்ற ஆண்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. இங்கு திண்டிவனம் ஆராய்ச்சிப் பண்ணையில் உருவாக்கப்படும். புதிய ரக நிலக்கடலை, எள், போன்ற எண்ணெய் வித்துக்கள் பெருக்கப்பட்டு மாநிலத்திலுள்ள 4 ஆதாரப் பண்ணைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இங்கும் நிபுணர்களின் நேரடிப் பார்வையில் விதை உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கிருந்து கிடைக்கும் விதையை முற்போக்கு விவசாயிகளின் பண்ணைகளில் உற்பத்தியைப் பெருக்கித் தரமான எண்ணெய்வித்துக்கள் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பயிர்களின் எண்ணிக்கை விளைச்சலுக்கு அடிப்படையாகும்: எந்த அளவு பயிர்கள் இருந்தாலும் மகசூல் அதிகம் கிடைக்கும், என்பதை ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. அதன்படி 30 செ.மீ.X10 செ.மீ. என்ற இடைவெளியில் ஒரு சதுர மீட்டரில் 33 செடிகள் இருக்க விதைக்க வேண்டும். இதற்கான விதை அளவு 38-லிருந்து 42 கிலோ விதைப்பருப்பு போதுமானது. முன்பு கூறிக் கொண்டிருந்த விதை அளவைவிட சுமார் 12, 13 கிலோ விதை குறைவாக இருக்கும். இதனைச் சீராகப் போடுவதற்கு இவ்வாண்டு புதியதொரு கலப்பையை ஒத்த கருவி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால் விதையுடன் உரமும் கலந்து விதைப்பதற்கு வசதி ஏற்படுகிறது. விதைப்பதற்குக் கிலோவிற்கு 4 கிராம் தைரம் அல்லது 3 கிராம் காப்டன் மருந்தினைக் கலந்து விதைப்பது மிகவும் அவசியம். இதன் மூலம் விதையில் உள்ள பூஞ்சாளங்கள் அழிக்கப்படுவதோடு அல்லாமல் முளைப்புத் திறனும் நன்றாக இருக்கும்.

மானாவாரி நிலத்தில் நில ஈரத்தைக் காப்பது மிகவும் அவசியம். பயிர் விளைச்சலில் நிச்சயமற்ற தன்மையைப் போக்க, பெய்கின்ற மழை நீரைப் பயிர் அனுபவிக்க வகை செய்ய வேண்டும். மழை நீர் நிலத்திலிருந்து வெளியேறிப் போய்விடாது பாதுகாக்கப் பாத்திகள் அமைக்க வேண்டும். நிலச்சரிவுக்கு எதிராக இப்பாத்திகள் அமையச் சால்கள் எடுத்துவிட வேண்டும். இதன் மூலம் தண்ணீர் தேங்கிப் பயிர்களுக்குக் கிடைக்கிறது. இம்மாதிரியான சால்கள் போட்டுப் பாத்திகள் அமைக்க முன்பு சொன்ன கருவியைச் சிறந்த முறையில் பயன்படுத்தலாம். இதனைக் கொண்டு, உழவு செய்யவும், சால் போடவும், விதைக்கவும், உரமிடவும், பரம்பு அடிக்கவும் போன்ற பல்வேறு காரியங்களைச் செய்ய முடியும். இதற்கு (Multi purpose Implement) என்று பெயர். சென்ற ஆண்டில் அம்மாதிரி மண் ஈரங்காக்கும் வழிவகைகளைப் பெருவிளக்கப் பண்ணை மூலம் விளக்கிக் காட்டப் பட்டுள்ளது. அந்த வெற்றியின் அனுபவத்தைக் கொண்டு இவ்வாண்டு அதிகப் பரப்பில் பெரு விளக்கப் பண்ணைகள் அமைக்க வேளாண் துறையினர் முனைந்திருக்கின்றனர். இம்மாதிரியான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் நன்மைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்த மாபெரும் விளக்கப்பண்ணைகள் அமைக்கப்படும். மானாவாரி நிலங்களில் மாவட்டம் ஒவ்வொன்றிலும் இரண்டு அல்லது மூன்று விளக்கப் பண்ணைகள் அமையும்.

அதிக விளைச்சல் பெற இரசாயன உரங்கள் இடுவது மிகவும் அவசியம். மானாவாரிக் கடலைக்கு உரமிட்டால் பயிர் காய்ந்துவிடும் என்ற ஐயப்பாடு இன்றும் சில விவசாயிகளிடம் இருந்து வருகிறது. இதற்கு ஆதாரமேயில்லை. விதைக்கும்போதே உரமிடுவதன் மூலம் முளைக்கின்ற பயிர் வீரியமாக வளருகிறது. வேர்கள் ஆழமாகப் போகின்றன. எனவே, மழை பெய்வதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும் வேர்கள் ஆழமாகப் போய்விடுவதன் காரணமாக ஆழத்திலுள்ள நீரைப் பயிருக்குக் கொடுக்கும் சக்தி இவ்வேர்களுக்குக் கிடைக்கின்றன. எனவே, மானாவாரிப் பயிருக்கு உரமிடுவதனால் பயிர் காய்ந்துவிடும் என்ற கருத்து ஆதாரமற்றது. மானாவாரிப் பயிரில் அதிக மகசூல் பெற உரமிடுவது அவசியம். உரமிடுவதற்கு முன்பு மண்ணைப் பரிசோதனை செய்து பயிரின் தேவைக்கு ஏற்ப இடுவது விளைச்சலை அதிகரிப்பதுடன் இது விஞ்ஞான ரீதியான செயலாகும். மண் பரிசோதனை செய்வதற்கு அவகாசம் இல்லாத விவசாயிகள் ஏக்கருக்கு 4 கிலோ தழைச் சத்து, 4 கிலோ தானியச்சத்து, 18 கிலோ சாம்பல் சத்து விதைக்கும்போது உழவு சாலிலேயே இடுவது நல்லது.

மணிலாவுக்கு ஊட்டமிகு தொழு உரம் :

மானாவாரிப் பயிருக்குத்தொழு உரமிடுவது தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கம். கிணற்று இறவையில் தீவிர சாகுபடி செய்ய ஆரம்பித்த பின் தொழு உரம் மானாவாரிப் பயிர்களுக்கு அதிகம் இடுவதற்குத் தேவையான அளவு கிடைப்பதில்லை. எனவே, கிடைக்கும் உரத்தை எல்லாப் பயிர்களுக்கும் பகிர்ந்து இடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தொழு உரத்தை இரசாயன உரத்தோடு கலந்து, ஊட்டமிக்கதொரு உரமாக்கி, நிலத்திற்கு உழவு சாலிடலாம். இவ்வாறு செய்வதனால் தொழு உரத்தின் அளவைக் குறைப்பதோடு பயிரின் தேவைக்கேற்ப பயிர் உணவுச் சத்துக் கிடைக்க வழி செய்யலாம். ஏக்கருக்கு 300 கிலோ தொழு உரமே போதுமானது. 300 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் 25 கிலோ சூப்பர். 30 கிலோ பொட்டாஷ் உரத்தைத் தொழு உரம், இரசாயன உரம் என்று அடுக்கு அடுக்காகப் போட்டபின் சிறிது நீர் தெளித்து நன்றாகக் கலந்து, பின்பு மூடி வைக்கவும். 30 நாட்கள் கழித்து இதனை நிலத்தில் உழவு சாலில் போடுவதன் மூலம் பாஸ்பரஸ் சத்து, கடலைக்கு முழுமையாகக் கிடைக்கும். இவ்வுரத்தினை இடுவதற்கு முன்பு 9 கிலோ யூரியாவை தொழு உரத்துடன் கலந்து அதனையும் சேர்ந்து இடவேண்டும். இதனால் நல்ல மகசூலும் தொழு உரச் செலவில் சிக்கனமும் பெறுகிறோம்.

> ### இலவச பாடப் புத்தகம்
>
> ரூ. 200/-க்குக் குறைவாக சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்களின் ("என்.ஜி.ஓ"க்கள்) குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகம் வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
>
> இந்த ஆண்டுக்கான பாடப் புத்தகங்களை ஏற்கெனவே அவர்கள் வாங்கி இருப்பார்கள். என்றாலும் பாடப் புத்தகத்தின் விலையை அந்த ஊழியர்களிடம் அரசு நிதியிலிருந்து திருப்பிக் கொடுக்க அரசு ஆணையிட்டு உள்ளது.
>
> ரூ. 200-க்குக் குறைவாக மாதச் சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்களின் குழந்தைகளில் தேவைப்படுகிறவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க அதிகபட்சம் ரூ. 40 கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அரசு ஏற்றுக் கொண்டது.

தவிரவும், நிலக்கடலைக்குச் சில நுண்ணூட்டச் சத்தும் மிகக் குறைந்த அளவில் தேவைப்படுகிறது. இத்தேவையை நாம் பொதுவாக அறிவதில்லை. துத்தநாகம், இரும்பு, போரான், மாங்கனீஸ், மாலிப்படினம் போன்றவைகள் பயிரின் விளைச்சலை 15 சதம் அதிகப்படுத்துகிறது என்பது ஆராய்ச்சியின் முடிவு. எனவே, நுண்ணூட்டச் சத்துக்கள் கலந்த உரம், ஏக்கருக்கு 5 கிலோ அடி உரமாக இடவேண்டும். மேலே சொன்ன நுண்ணூட்டச் சத்துக்களோடு நிலக்கடலைப் பயிருக்குக் கந்தகமும் சுண்ணாம்புச் சத்தும் தேவைப்படுகிறது. இவையிரண்டும் குறிப்பாக நிலக்கடலைப் பயிரில் கம்பிகள் இறங்கும்போது தேவைப்படுகிறது. எனவே, 80 கிலோ ஜிப்சம் (கால்சியம் சல்பேட்), இரண்டாவது களையெடுத்து மண் அணைக்கும்போது இடும்போது கம்பிகளிலிருந்து உருவாகும் இளங்கடலை இச்சத்துக்களை நேரடியாக எடுத்துக் கொண்டு திரட்சியான கனம் மிகுந்த கடலை கிடைக்க வகை செய்கின்றன. இவ்வாறு பயிரின் வளர்ச்சிக்கும் ஊட்டத்திற்கும் வேண்டிய அளவு உரமிடும் பொழுதுதான் மகசூல் அதிகம் பெற வாய்ப்பிருக்கும்.

பயிர்ப் பாதுகாப்பு :

எத்தனைதான் உரமிட்டுப் பயிர் செய்தாலும் பயிரை அதன் எதிரிகளிடமிருந்து காப்பது மிகவும் அவசியம். மானாவாரிப் பயிரின் முக்கிய எதிரி கம்பளிப் புழுவாகும். விவசாயப் பெருமக்கள் இதனால் ஏற்படும் சேதத்தை நன்கு உணர்வார்கள். இதனை ஒழித்திட இதன் கூட்டுப் பருவம் முதல், வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் எச்சரிக்கையுடனிருப்பது அவசியம். பூமிக்குள்ளே மோன நிலையிலிருக்கும் கூட்டுப்புழுவைத் தோண்டியெடுத்து அழிப்பது, பயிரான நிலையில் மழை பெய்தவுடன் இக்கூட்டுப் புழுக்களிலிருந்து வெளிவரும் தாய்ப்பூச்சிகளை விளக்கொளியில் ஈர்த்து அழிப்பது. பயிரின் இலையின் அடிப்பாகத்திலிடும் இவைகளின் முட்டைகளை அழித்தல் போன்றவை எளிய முறையில் செலவின்றி விவசாயப் பெருங்குடி மக்களே செய்து கொள்ளக்கூடியவை. இக்கட்டுப்பாடுகளையும் மீறி வரும் புழுக்களை கூட்டு முயற்சியில் மருந்து தெளித்து அழிப்பது அவசியமாகிறது.

இப்பூச்சியினை அழிக்க ஒட்டு மொத்தமாக இவ்வாண்டு தமிழக அரசு மருந்து தெளிக்க கடன் வசதியும் மான்யமும் தருகிறது. அதன்படி 30,000 ஏக்கரில் மருந்து தெளிக்க ஏற்பாடு செய்யப்படும். இதுதவிர நிலக்கடலையில் விழும் சுருள் பூச்சி மற்றும் நோய்களைத் தடுக்க ஏக்கருக்கு ரூ. 3 மானியமாக மருந்து தெளிக்க உதவும். சுமார் 1.50 இலட்சம் ஏக்கராவில் மருந்து தெளிக்க ஆகும் செலவிற்கு மானியம் வழங்கப்படும்.

தவிரவும், இரசாயன உரங்கள் போதிய அளவு கிடைக்க, முன்னதாகவே இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவையான நுண்ணூட்டச் சத்து கிடைக்கப் புதிய உரக்கலவை நிலையம் குடுமியான் மலையில் இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 1,000 டன் இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு அடக்க விலைக்கே அரசு டெப்போக்கள் மூலம் விநியோகிக்கப்படும்.

எனவே, நிலக்கடலையைப் பயிரிடுவதில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் புதுமைகளைக் கடைப்பிடித்தும் தமிழக அரசின் பல்வேறு சலுகைகளைப் பயன்படுத்தியும் வருகின்ற மானாவாரிப் பருவத்தில் ஏனைய ஆண்டைவிட அதிக மகசூல் பெற முயலுவோமாக!

கடலூர் கரும்பு ஆராய்வு நிலையத்தின் சாதனைகள்

ப. சு. சஞ்சீவி
பயிர் நுண்ணறிஞர் (கரும்பு)
கடலூர்.

தமிழ்நாட்டில் கரும்பு ஆராய்வுப் பணியில் தக்க கவனம் செலுத்தி, சாதனைகள் பலபுரிந்திட கரும்பு ஆராய்வு நிலையம் தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் நகரில் 1957 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அதிகக் கரும்பு மற்றும் சர்க்கரை விளைச்சல் தரக்கூடிய புதிய கரும்பு ரகங்களைத் தேர்ந்தெடுத்தல், கரும்பு விளைச்சலைப் பெருக்கிட உகந்த உர அளவுகளைக் கண்டறிதல், கரும்புச் சாகுபடி முறையில் சிக்கன உழவியல் மற்றும் சீரிய செய்நேர்த்தி முறைகளைக் கையாண்டு சாகுபடிச் செலவைக் குறைத்தல். கரும்புப் பயிரைத் தாக்கும் பூச்சி பூசாண சேதங்களைக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கண்டறிதல் ஆகிய சிறப்பான நோக்கங்களுடன் இந் நிலையம் செயல்பட்டு வருகிறது.

கடலூர் கரும்பு ஆராய்வு நிலையத்தின் சீரிய பணியின் காரணமாகக் குறிப்பிடத்தக்க சாதனைகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பான சில சாதனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

உயர் விளைச்சல் ரகங்கள் :

பல்லாயிரக்கணக்கான கரும்பு வகைகள் இதுவரை சோதனை செய்யப்பட்டு அதிகக் கரும்பு மற்றும் சர்க்கரை விளைச்சல் தரும் ரகங்களான கீழ்க்கண்டவை பல்வேறு பட்டங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சாகுபடிக்கு வெளியிடப்பட்டுள்ளன.

முன் பட்டம் (டிசம்பர்-ஜனவரி)	கோ. க. 671, கோ. க. 771 கோ. க. 772.
மத்திய பட்டம் (பிப்ரவரி-மார்ச்)	கோ. க. 6304, கோ. க. 774. கோ. க. 775.
பின்பட்டம் (ஏப்ரல்-மே)	கோ. க. 777, கோ. க. 778 கோ. க. 779.

இந்த ரகங்களைப் பற்றிய குறிப்புரை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிய இடைவெளி :

கரும்பு சாகுபடியில் 80 செ.மீ. இடைவெளி விட்டு பார் அமைத்தல் அதிகப் பயனைத் தருகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. உரிய விளைச்சலும் ஏக்கருக்கு 20,000 முப்பரு அல்லது 30,000 இருபரு கரணைகள் நடவுக்குத் தேவை எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சோகை பரப்புதல் :

கரும்பு நடவு செய்யுமுன் பார்களுக்கிடையேயுள்ள சால் மேடுகளில் காய்ந்த கரும்புச் சோகையை 10 செ.மீ. கனத்துக்கு அடர்த்தியாகப் பரப்புவதன் மூலம் களைகளைக் கட்டுப்படுத்துதல் மண் ஈரம் பாதுகாக்கப்பட்டுப் பாசனச் செலவில் சிக்கனம் செய்தல், இளம் கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப் புழுவின் சேதத்தைக் கணிசமாகக் குறைத்தல் ஆகிய பயன்களைப் பெற முடியும் என்று அறியப்பட்டுள்ளது. இம் முறையில் சாகுபடிச் செலவில் ஏக்கருக்கு ரூ. 150 வரை சிக்கன மேற்படுவதுடன், 2-3 டன்கள் கூடுதல் கரும்பு விளைச்சல் கிடைப்பதால் அதிக வருவாய் பெற முடிகிறது. இந்தப் புதியமுறை கோடைக்கால கரும்பு நடவுக்கும், நீர்ப் பற்றாக்குறை பகுதிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.

(அட்டவணை)—புதிய ரகங்கள் பற்றிய விவரங்கள்

ரகம்	எக்டேருக்கு கரும்பு விளைச்சல் (டன்கள்)	சர்க்கரை சத்து விதம்	எக்டேருக்கு சர்க்கரை விளைச்சல்	பிற குறிப்புகள்
(1)	(2)	(3)	(4)	(5)
கோ. க. 6304	116.2	13.3	16.7	எல்லாவித நிலங்களிலும் பயிரிடலாம்.
கோ. க. 671	123.5	14.2	17.5	,,
கோ. க. 771	140.0	13.1	18.3	,,
கோ. க. 772	143.2	14.0	20.0	,,
கோ. க. 774	159.8	11.9	17.9	களிப்பு நிலங்கள், களிப்பு கலந்த மணற்பாங்கான நிலங்கள் ஏற்றது.
கோ. க. 775	122.5	13.4	16.4	தோட்டங்காற் குறுமண் நிலங்களுக்கு ஏற்றது.
கோ. க. 777	171.3	11.8	20.0	களிப்பு நிலங்களில் பயிரிட ஏற்றது.
கோ. க. 778	165.5	11.0	18.1	,,
கோ. க. 779	304.6	11.8	24.0	,,

கூடுதல் வருவாய்க்கு ஊடுபயிர் :

தண்ணீர் வசதி நன்றாக உள்ள இடங்களில், முன் மத்திய பட்டங்களில் கரும்பு நடவு செய்த 3-ஆம் நாளில் கட்டைகளின்மேல் உளுந்து, பச்சைப் பயறு, சூரிய காந்தி ஆகிய பயிர்களில் ஏதேனும் ஒன்றை ஊடுபயிராகச் சாகுபடி செய்து ஏக்கருக்கு 200 முதல் ரூ. 250 வரை கூடுதல் வருவாய் பெறலாம் என்றும் தெரியவந்துள்ளது. இவ்வாறு சாகுபடி செய்வதால் கரும்புப் பயிரின் வளர்ச்சி மற்றும் விளைச்சல் எவ்வகையிலும் பாதிக்கப்படுவதில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

பார் அமைக்க விக்டரி கலப்பை :

விக்டரி கலப்பை பயன்படுத்தி சிக்கனமாகவும் சீராகவும் பார் அமைக்கலாம். ஒரு ஜதை எருதுகள் பூட்டிய கலப்பை கொண்டு எட்டு மணி நேரத்தில் ஒரு ஏக்கர் பரப்பில் ஆழமாக அதன் மூலம் பார் அமைக்கலாம். இதனால் ஏக்கருக்குச் சாகுபடி செலவில் ரூ. 50.00 சிக்கனமாகிறது. விக்டரி கலப்பையைப் பயன்படுத்தி வளரும் கரும்புப் பயிருக்கு மூன்றாவது மாதத்தில் உயர மண் அணைக்கவும் முடிகிறது.

உழவுக்கு ஜூனியர் கலப்பை :

ஜூனியர் கலப்பையால் கரும்பின் பயிர் வரிசைகளுக்கிடையே 2-3வது மாதங்களில் 20 நாட்களுக்கொரு முறை இடையுழவு செய்வதால் களைகள் அகற்றப்படுவதுடன் சாகுபடிச் செலவில் சிக்கனமேற்படுகிறது. ஜூனியர் கலப்பையால் எட்டுமணி நேரத்தில் 2-3 ஏக்கர் பரப்பில் இடையுழவு செய்யலாம்.

உரிய உர அளவுகள் :

ஏக்கருக்கு 10 டன் கம்போஸ்ட் அடியுரமாக இடுவதால் கரும்பு விளைச்சல் 2 முதல் 3 டன் வரை உயருகிறது எனத் தெரியவந்துள்ளது.

மண்வளத்தைத் தொடர்ந்து பாதுகாக்க ஏக்கருக்கு 25 கிலோ மணிச்சத்தை அடியுரமாக இட வேண்டும் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏக்கருக்கு 110 கிலோ தழைச்சத்து இரண்டும் சம தவணைகளில் கரும்பு நடவு செய்த 45 மற்றும் 90-வது நாட்களில் இடுவதன் மூலம் உரிய கரும்பு மற்றும் சர்க்கரை விளைச்சல் அடைய முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

கரும்புக் கரணைகளை மருந்தில் முக்கி விடுதல்

மாண்புமிகு முதல்வர் திரு எம் ஜி. ஆர். அவர்கள் திருச்சியில் 31.7.78 அன்று நடைபெற்ற கால்நடைக் கண்காட்சியைத் திறந்து வைத், செயற்கை முறைக் கன்றுகளைப் பார்வையிட்டார். மாண்புமிகு சமுக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அம்மோனியம் சல்பேட், யூரியா, அம்மோனியம் குளோரைடு, கால்சியம் அமோனியம் நைட்ரேட் போன்ற தழைச்சத்து உரங்களில் ஏதேனும் ஒன்றைத் தழைச்சத்து தரும் உரமாகப் பயன்படுத்தலாம்.

இலைமூலம் தழைச்சத்து உரமிடல் :

மண்ணில் தழைச்சத்து உரத்தை முழுவதுமாக இடுவதற்குப் பதில் முதல் தவணையாக 45 கிலோ தழைச்சத்தை 45-வது நாளில் மண்ணிலும், 23 கிலோ தழைச்சத்தை இரண்டு சம தவணைகளில் யூரியா கரைசலாக 90-வது மற்றும் 110-வது நாளில் இலை மூலம் தெளிப்பதால் ஏக்கருக்கு 42 கிலோ தழைச்சத்து சேமிக்கப்படுகிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது. கைத்தெளிப்பான் கொண்டு 7.5 சத யூரியா கரைசலாகவும், விசைத் தெளிப்பான் எனில் 30 சத யூரியா கரைசலையும் பயன்படுத்தி உரச் செலவில் சிக்கனம் செய்யலாம்.

பொதுவாக ஏக்கருக்கு 45 கிலோ சாம்பல் சத்தை இரு சம தவணைகளில் கரும்பு நடவு செய்த 45 மற்றும் 90வது நாட்களில் இடுவதால் நல்ல பலன் கிடைக்கிறது. சாம்பல் சத்து குறைவாக 'உள்ள நிலங்களில் ஏக்கருக்கு 60 கிலோ சாம்பல் சத்து இடுவது கூடுதல் பலனைத் தருகிறது.

கரும்புப் பூச்சிகளைத் தடுக்க :

இளம் கரும்புப் பயிரைத் தாக்கி குருத்துப்புழு, அதிக சேதம் விளைவிக்கிறது. பொதுவாக கரும்பு நடவு செய்த 100 நாட்கள் வரை இப்புழுவின் சேதம் காணப்படுகிறது. கோடைக் காலத்தில் இதன் சேதம் அதிகமாக உள்ளது. கரும்பு நடவு செய்தவுடன் சால்மேடுகளில் காய்ந்த கரும்புச் சோகையைப் பரப்புவதன் மூலம் இப்புழுவின் சேதத்தைக் கணிசமாகக் குறைக்கலாம். வின்டேன் 10 சதம், அல்லது செவிடால் 3 அல்லது 4 சதம், குருணைகளை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் நடவு செய்த 30-35 நாட்களில் சோகை இடுக்குகளில் இடுவதன் மூலம் இப்புழுவைக் கட்டுப்படுத்தலாம். பதினைந்து நாட்களுக்கொருமுறை ஏக்கருக்கு 1. சி. டி. சி. டிரைகோகிரம்மா ஒட்டுண்ணிப் பூச்சிகளைக் கரும்பு வயலில் பரலவிடுவதன் மூலம் இப்புழுவின் சேதத்தைக் குறைக்கலாம்.

வளரும் கரும்பைத் தாக்கும் இடைக்கணுப்புழுவின் சேதத்தைத் தடுக்க 4 சத செவிடால் குருணைகளை ஏக்கருக்கு 12.5 கிலோ வீதம் 90-வது நாளிலும், 135-வது, நாளிலும் இட வேண்டும். பின்னர், 180-வது நாள் முதல் 300 வது நாள் வரை 15 நாட்களுக்கு ஒரு முறை ஏக்கருக்கு 1 சி. சி. டிரகோகிரம்மா ஒட்டுண்ணிப் பூச்சிகள் வீதம் பரவ விட வேண்டும். இம்முறையில் நல்ல பயன் உண்டாகிறது. 5 மற்றும் 7-வது மாதங்களில் இரண்டுமுறை சோகைகளை நீக்குவதாலும் இடைக்கணுப் புழுவின் சேதம் கணிசமாகக் குறைகிறது.

கரும்புப் பயிரின் வேர்ப்பகுதியைத் தாக்கி சேதம் விளைவிக்கிறது வெள்ளைப்புழு. இப்புழுவின் தாய் பூச்சிகள் தோன்றும் பருவத்தில் பி.எச். சி. 10 சதத் தூளை ஏக்கருக்கு 50 கிலோ வீதம் வேர்ப் பகுதியில் தூவுவதன் மூலம் இப்புழுவின் சேதத்தைக் கட்டுப்படுத்தலாம்.

கரும்பு நோய்களைத் தடுக்க :

விதைக்கரணைகளைத் தாக்கி சேதமேற்படுத்தும் கரணையழுகல் நோயைத் தடுக்க அரிடான் 250 கிராம் அல்லது அகலால் 500 கிராம் அல்லது பெவிஸ்டின் 50 கிராம் மருந்து கரைத்த கரைசலில் கரணைகளை 5 நிமிடங்கள் ஊறவைத்து நடவு செய்தல் சிறந்ததாயுள்ளது. இதனால் பருமுளைப்புத் திறனும் அதிகரித்து பயிர் வீரியமாக வளருகிறது.

கரும்பில் தோன்றும் கரிப் பூட்டை நோயை மருந்து வகைகளால் கட்டுப்படுத்துவது அரிது. இந்நோய் தாக்காத கோ. க. 771, கோ. க. 772 போன்ற புதிய ரகங்களை நடவு செய்து பயனடையலாம்.

அண்மையில் தமிழ்நாட்டில் செவ்வழுகல் நோய் தோன்றி கரும்புக்குப் பெரும் சேதம் விளைவித்துள்ளது. இந்நோயைக் கட்டுப்படுத்த மருந்து எதுவும் இல்லை. இந்நோய் தாக்காத கோ. க. 671, கோ. க 771, கோ. க. 772, கோ. க. 774, கோ. க. 775, கோ. க. 777, கோ. க. 778 மற்றும் கோ. க. 779 ஆகிய ரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டு சாகுபடிக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

உரத்தொழில் வளர்ச்சியும் வாய்ப்புகளும்

1977-78ஆம் ஆண்டு காலத்தில் 20 இலட்சம் டன் நைட்ரஜனும், 6 இலட்சத்து 71 ஆயிரம் டன் பாஸ்பேட்டும் உற்பத்தியாகியுள்ளன. இது முந்தைய ஆண்டு உற்பத்தியைவிட முறையே 7.4 சதவிகிதம் 40.4 சதவிகிதம் அதிகமாகும். 1978-79 ஆம் ஆண்டுக் காலத்தில் 25 இலட்சம் டன் நைட்ரஜனும், 8 இலட்சம் டன் பாஸ்பேட்டும் உற்பத்தி செய்யக் குறியளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது நைட்ரஜன் உற்பத்தியைப் பொறுத்தவரையில் 25 சதவிகிதம் கூடுதலாகும்.

1968-69 ஆம் ஆண்டுக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நைட்ரஜனின் அளவு இந்த ஆண்டு கூடுதலாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கூறுவது சாலப் பொருத்தமாகும்.

கச்சாப் பொருட்களின் அளவுகளும், விலை முறைகளும் மாறிவரும் இன்றைய உலகில் இந்திய உரத் தொழில் அரிய சாதனைகள் சிலவற்றைச் செய்துள்ளது. முற்போக்கான தொழில்நுட்பங்களில் அதனுடைய முதலீடுகள் கணிசமாக அதிகரித்துள்ளன.

1974-ல் பெட்ரோல் நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னரே, முக்கியமான முதலீடுகள் பற்றி முடிவுகள் எடுக்கப்பட்டு, ராமகுண்டம், தால்ச்சர் ஆகிய இரு நிலக்கரி அடிப்படையாகக் கொண்ட ஆலைகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை இந்தியாவிலேயே முதல் முயற்சிகளாகும். உள்நாட்டுக் கச்சாப் பொருள்கள் பற்றிய திட்டத்தின் புதிய பரிணாம வளர்ச்சியை எடுத்து இயம்பும் சின்னங்களாக இத்திட்டங்கள் காட்சி தருகின்றன. இவை 1978-79-ல் இயங்கத் தொடங்கும். இந்தியாவின் உரத் தொழிலில் புதிய மைல் கல்லாக இவை காட்சி தரும். பெருமளவு நிச்சயமற்ற தன்மையும் பட்டறிவும் இதில் இருந்தபோதிலும் நீண்ட கால அடிப்படையில் இவை அவசியமானவைகளாகத் திகழும் என்பது திண்ணம்.

1978-79-ஆம் ஆண்டுக் காலத்தில் உற்பத்திப் பெருக்கம் பெட்ரோலியம் பொருள்களின் அடிப்படையில்தான் இன்னும் அமைந்துள்ளது. மங்களூர், தூத்துக்குடி பரோளி, நாம்ரூப் முதலிய இடங்களில் உர ஆலைகள் ஏற்கெனவே பணிகள் முடிந்து செயல்பட ஆரம்பித்துள்ள போதிலும் அவை மேலும் நிலையான உற்பத்தியை உயர் அளவு எட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது இதனால் உர சேமிப்பு அதிகரிக்கும். முற்றிலும் புதிய ஆலைகளும் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கின்றன. நங்கல் என்ற இடத்திலுள்ள உரத் தொழிற்சாலை கன ஏரி எண்ணெய் நிலைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டது. இது ஏற்கெனவே செயல்படத் தொடங்கி நிலைநிறுத்தம் அடையும் கட்டத்தில் உள்ளது. இதேபோன்ற ஆலைகள் பதிந்தா, பானிபட்டு, ஸிந்திரி ஆகிய இடங்களில் ஆரம்ப நிலையில் உள்ளன.

இந்த ஆலைகள் ஒவ்வொன்றிலும் நைட்ரஜன் உற்பத்தி 2 இலட்சம் டன்னுக்கு மேலும் எட்டி, ஆரம்ப ஆண்டிலேயே ஒட்டு மொத்த உற்பத்தியளவு கணிசமாக ஏற்பட வாய்ப்புள்ளது. உரத் தொழில் வரலாற்றில் எந்த ஓர் ஆண்டிலும் இவ்வளவு பெரிய ஆலைகள் செயல்படுவதற்குத் தயாராக இருந்ததில்லை. எனவே, இந்த ஆண்டு அதிக உற்பத்தி ஏற்படும் என எதிர்பார்ப்பது, புதிதாக இயங்கவிருக்கும் பெரிய ஆலைகளை அடிப்படையாகக் கொண்டேயாகும்.

அண்மையில் யூரியா விலை குறைக்கப்பட்டதும் பொதுவாக விலைகள் ஒரு நிலையான தன்மையை அடைந்ததும் கடந்த இரண்டு ஆண்டுகளில் சப்ளை, நிலையான தன்மை ஆகியவற்றின் வெளிப்பாடுகள் ஆகும். உரத்தைப் பயன்படுத்துவதை அதிகரிக்க இது வாய்ப்பளிக்கும்.

கடந்த இரு ஆண்டுகளின் புள்ளி விவரங்கள் இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. 1970-ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்தைய சில ஆண்டுகளிலும் ஒரு தேக்கநிலை காணப்பட்டது. ஆனால், 1975-க்குப் பின்னர் இத்துறையில் வளர்ச்சி கணிசமாக ஏற்பட்டுள்ளது. பல மாநிலங்களில் பயன்படுத்தப்படும் உரத்தின் அளவு உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. உர விற்பனை சீராக இருந்ததால் விநியோகஸ்தர்கள் பரந்த அளவில் ஏற்பாடுகளைச் செய்து தொலைதூர இடங்களுக்கும் உரம் கிடைக்க வழிவகை காணும் திட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் வளர்ச்சி வேகம் அதிகரித்தது. தேசிய, சராசரி, தேவையான அளவுக்குக் குறைவாக உள்ளது என்பது உண்மைதான்.

1978-79 முதல் 1983-84 வரை நைட்ரஜன் நுகர்வு 50 சதவிகிதம் அதிகரிக்குமென்று கணிக்கப்பட்டுள்ளது. திட்டமிட்டபடி உற்பத்தியும் நடந்தால் விநியோக மேம்பாட்டுத் திட்டங்கள் கணிசமான அளவு முடுக்கிவிடப்பட வேண்டும். உரங்கள் கிடைத்தால் மட்டும் போதாது. விலை நிலைமைகள் நிலையாக இருப்பதோடு சிறப்பு முயற்சிகள் மூலம் தொலைதூர

கிராமங்களுக்கும் உரம் செல்லும் வகையில் உற்பத்தியாளர்கள் ஊக்கம் பெறுவதாகவும் அது அமைய வேண்டும். விவசாய விளைபொருள், செலவு, உர விலை களும் உரத்தைப் பயன்படுத்து தலை முக்கியமாகப் பாதிக்கின் றன. கடந்த 10 ஆண்டுகளில் விலை விகிதம் பற்றி நடத்தப் பட்ட ஆய்வு, தற்போதைய நிலைமையைப்போல் வேறு எப் போதும் விலை விகிதங்கள் சாதக மாக இருந்ததில்லை என்று கூறு கிறது. நுகர்வுப் பெருக்கத்திற்கு விலைதான் முக்கியக் காரணம் என்றால் தற்போதைய விலைகள் மிகவும் சாதகமாக இருக்கின்றன என்பது உண்மை. இதைப் பொது வாக எளிதில் ஏற்க இயலாமல் இருக்கலாம். ஆனால், நிலைமைகள் அப்படி இருக்கின்றன என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

1974-75 ஆம் ஆண்டில் பாஸ் பேட் நுகர்வு குறைந்த அளவில் இருந்தது. தற்போது, குறிப்பாக வட மாநிலங்களில் கணிசமான உயர்வு கண்டுள்ளது. அரசின் சலுகைக் கொள்கையும் உற்பத்தி யாளர்களின் தீவிர நடவடிக்கை களும் இத்தகைய சாதகமான நிலைமை உருவாவதற்குக் கார ணங்களாகும். ஒட்டுமொத்த விகிதம் இன்னும் குறைவாகவே காணப்பட்டாலும் விவசாயிகள், விலை ஊக்கம் மற்றும் மேம்பால நடவடிக்கைகளுக்கு ஆதரவாக உள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதுபோன்ற நிலைமை பொட் டாஷ் உரத்தைப் பொறுத்த வரையிலும் காணப்படுகிறது. பல பகுதிகளில் தீவிரச் சாகு படிகள் மேற்கொள்ளப்படுவது பொட்டாஷ் விவசாய உற்பத்தி யின் முக்கியக் கூறு என்பதை எடுத்துக் காட்டுகிறது. பொட் டாஷ் உரத்தைப் பயன்படுத்து தல் கணிசமான அளவு உயர்ந் துள்ளது. எனினும் குறிப்பாக வட மாநிலங்களில் அதிக முன் னேற்றம் காண வேண்டியுள்ளது.

விவசாய உற்பத்தி மற்றும் தன் காலிலேயே நிற்கின்ற அணு கும் முறை ஆகியவை ஏற்படுத்தி யுள்ள சூழ்நிலையின் காரணமாக, கூடுதல் உற்பத்தித் திறனை ஏற் படுத்தத் திட்டங்கள் தீட்டப் பட்டு வருகின்றன. 1978-79ஆம் ஆண்டுக் காலத்தில் நைட்ரஜன் நுகர்வு 34 இலட்சம் டன்னாக இருக்கும். இது 1982-83ஆம் ஆண்டில் 52 இலட்சம் டன்னாக உயரும். பாஸ்பேட்டு நுகர்வு 9.3 இலட்சம் டன்னிலிருந்து 17 இலட்சம் டன்னாக உயரும். இந்த சப்ளைகளில் பெரும்பகுதி உள் நாட்டு உற்பத்தியிலிருந்து கிடைத் தால் உள்நாட்டுத் தொழில் வளர்ச்சி எதிர்பார்த்தபடி அமை யும்.

மகாராஷ்டிரம், குஜராத் வட் டாரத்தில் கடலுக்கடியில் எண் ணெய் எடுக்கும் முயற்சி வெற்றி கரமாக அமைந்ததையடுத்து, உர ஆலைகள் பற்றிய திட்டங்கள் பெரும்வளர்ச்சி அடைந்துள்ளன.

பம்பாய் ஹைபகுதியிலிருந்து எரி கெனவே எண்ணெய்யும், எரி வாயும் கிடைத்துள்ளன. இவை விரயத்தைத் தவிர்க்க விரைவில் பயன்படுத்தப்படும். ட்ராம்பே யில் எரிவாயுவைப் பயன்படுத் தும் தற்காலிக ஏற்பாடுகள் ஏற் கெனவே திட்டமிடப்பட்டுள் ளன. புதிய உரத் தொழில்களில் இவற்றை அதிக அளவு பயன் படுத்த கொள்கை அடிப்படை யில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பம்பாய் அருகே இரண்டு ஆலை களை ஏற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இவை ஒவ்வொன் றும் 1,350 டன் அமோனியா உற்பத்தி செய்யும் திறன் கொண் டவை. அமோனியாவின் பெரும் பகுதியை யூரியாவாகப் பின்னர் மாற்றுவதற்கான வசதிகள் உள்ளன. இந்த ஆலைகளை, புதி தாக அமைக்கப்பட்டுள்ள பாரத கெமிகல்ஸ் அண்டு பெர்ட்டிலை சர்ஸ் நிறுவனம் நிர்மாணிக்கும். எரிவாயுவைத் தரைப் பகுதிக்குக் கொண்டு வருவதற்கான குழாய் இணைப்புகள் அமைக்கப்பட்டு அவை செயற்படுத்தப்பட்டு வரு கின்றன.

பஸைன் பகுதியிலிருந்து குழாய் இணைப்பு மூலம் செயல்படும் இதே போன்ற இரு ஆலைகள் குஜராத் மாநிலத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டு வருகின்றது. மேலும் 3 அல்லது 4 ஆலைகளுக்கு இதே அளவு எரிவாயு விநியோகம் கிடைப்பதற்கான ஆலோசனைகள் நடந்து வருகின்றன. பாஸ்பேட் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டு வரு கின்றன.

மறுவாழ்வு பெறும் கைம்பெண்கள்

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, 1977-78-ஆம் ஆண்டிற்கு கைம் பெண்கள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் ரூ. 60,000 அனுமதிக்கப்பட் டுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் மறுமணம் செய்து கொண்ட 12 தம்பதி களுக்குத் தலா ரூ. 5000 வீதம் ரூ. 60 ஆயிரத்துக்குத் தேசிய சேமிப்புப் பத்திரம் வடிவில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிசுத் தொகை வழங்கப்பட்டது

பல்லைப் பாதுகாப்போம்

முத்துப்பல் முறுவல்

முல்லைப்பூ பல்வரிசை.

மோகனப் புன்னகைத் தோற் றம்.

—இப்படிப் பற்களால் முகம் பெறும் பொலிவைப் புகழ்ந் துரைக்கின்றோம்.

ஆரோக்கியமான அழகிய பற் களால் முகம் பெறும் அழகு போல் உடல் நலமும் பெறு கிறோம்.

பற்களில் நோய்க்கு இடம் கொடுத்தால் பல நோய்கள் உரு வாக வழிவகுத்தவர்களாவோம்.

பல்லில் நோய் வந்தபின் மருத்துவம் செய்வதைவிட, பல்லை ஒழுங்காய்ப் பாதுகாத்துப் பேணி வருவதே சிறந்த செய லாகும்.

பல்லைப் பாதுகாப்பதைச் சின்ன வயது முதற்கொண்டே கடமை யாகக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் பல் வேறுபட்ட நோய்களுக்கு இடம் கொடுத்தவர்களாகின்றோம்.

(பல்லில் வரும் நோய்களைப் பற்றியும், சிகிச்சை முறைகளைப் பற்றியும் சுருக்கமான முறையில் தனித்தனியாக வெளியிடப்பட்டி ருக்கிறது).

சென்னை மருத்துவக் கல்லூரி யின் பல் மருத்துவப் பிரிவில் பல் நோய்க்கான பல்வேறு சிகிச்சை முறைகளும் உள்ளன.

இப்பல் மருத்துவப் பிரிவுபற்றிய விவரங்களை டாக்டர் ஆர். விசுவ நாதன் அவர்களும், டாக்டர் பி.பி ராஜன் அவர்களும் சுருக்கமாக எடுத்துரைத்தார்கள்.



சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப் பிரிவு 1953-ல் தொடங்கப்பட்டது. இன்று இந்தியாவிலுள்ள பல் மருத்துவப் பிரிவுகளில் குறிப் பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது. எதிர்காலத்தில், பல்மருத்துவக் கல்லூரியாகவோ, நிறுவனமாகவோ அமையும் நல்வாய்ப்பைப் பெற்றுள்ளது. இத்தகைய மதிப்புடைய பல்மருத்துவப் பிரிவின் வெள்ளி விழா 1978 ஜூலை-ஆகஸ்ட் திங்களில் கொண்டாடப்பட்டது.

'பல்லினைக் காட்டி வெண்முத்தினைப் பழித்திடும்' என்று பாடுகிறார் பாரதியார். பல்லினைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

பல் மருத்துவப் பிரிவு கீழ்க் கண்டாறு,

வாய்நோய் அறிதல்

குழந்தைகள் பல் மருத்துவம்

ஊடுகதிர் பகுதி

பல் எடுக்கும் இடம்

பல் கட்டும் பகுதி (செயற்கைப் பற்கள் அமைக்கும் பிரிவு).

பல் பாதுகாக்கும் பிரிவு

ஈறுநோய்ச் சிகிச்சைப் பிரிவு.

பல் சீரமைப்புப் பகுதி

என்று பலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பல் மருத்துவத்துக்கான சிறிய அறுவைச் சிகிச்சைக்கான அரங்கம் ஒன்றும் உள்ளது. நாள்தோறும் 700 பேர் இங்கு சிகிச்சைப் பெறுகின்கின்றனர்.

ஒவ்வொரு சிகிச்சைப் பகுதியும் மிகப் பெரியதாகவும் துப்புரவாகவும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பல் மருத்துவத்தில் மிக நவீனமான சிகிச்சைகள் என்று கருதப்படுபவைகள் மேலே நாட்டின் முன்னேற்றமடைந்த சிகிச்சை முறைகள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் இங்கு அளிக்கப்படுகின்றன.

வாய் நலம்

பல் நோய்களை வெறும் மருத்துவ ஆலோசனைகளின் மூலம் மட்டும் குணப்படுத்திவிட முடியாது. பல் மருத்துவர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையில்போதிய கருத்துப் பரிமாற்றங்கள் இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இன்மையால் பொதுமக்கள், பல் நோய்த் தடுப்பு முறைகளை பற்றி அறியவும், பல் நோய்களைக் கட்டுப்படுத்தும் முறைகளை உணரவும் முடியாமல் உள்ளனர்.

நோய் உருவானபின், அதைக் குணப்படுத்தவது என்னும் பழைய கொள்கையைத் தகர்த்தெறிந்து, நோய் வருமுன் காத்தலும், பல் நலம் பேணுதல் பற்றி மக்களுக்கு உணர்த்தலும்தான் இன்றைய சூழ்நிலையில் பல் மருத்துவத்தில் மிக நல்ல பயன்களை விளைவிக்கும்.

பரவிவரும், வாய், பல் நோய்களில் முக்கியமானதும், முதன்மையானதும், பெரும்பான்மை மக்களைப் பாதிக்கக்கூடியதும் ஈறு நோய்கள் ஆகும். ஈறு நோய் தோன்றுவதற்கு, "பிளாக்" என்னும் மென்மையான படிமானங்கள் முக்கியக் காரணமாக அமைகின்றன. எனவே ஈறு நோய்களின் தோற்றதைக் கட்டுப்படுத்த, "பிளாக" பற்களின் மேல் படிவதைத் தடுக்க வேண்டும். பல் மருத்துவர்களும், மக்களும் "பிளாக்" படிவதைக் கட்டுப்படுத்தும் முறைகளை விழிப்புணர்வுடன் செயல்படுத்துவதன் மூலம் ஈறுகளின் நலம் நன்கு பராமரிக்கப்படுகின்றன.

"பிளாக்" மூலம் ஈறு நோய்கள் உண்டாவதைத் தடுக்கும் முறை மூன்று நிலைகளில் செயல்படுத்தப்படுகிறது.

முதல்நிலை :- நோய் தோன்றாமல் தடுத்தல்.

இரண்டாம் நிலை :—நோய் தோன்றிய பின் அதைக் கட்டுப்படுத்துதல்.

மூன்றாம் நிலை :—அவ்வாறு தோன்றிய நோயின் விளைவுகளைச் சீர்படுத்தி, அந்நோய் மீண்டும் தாக்காத வண்ணம் செய்தல்.

பற்சொத்தை, இளம் வயதினரை அதிகம் தாக்குகிறது இந்நோய் துவக்கத்தில் வலியில்லாமல் இருப்பதால் மக்கள் தகுந்த சிகிச்சையை உடனே பெற்றுக் கொள்ளத் தவறிவிடுகிறார்கள். எனவே இந்நோய் தீவிரமடைகிறது. நோய் தாக்கிய பற்களும், ஈறுகளும், உடலில் மற்ற பகுதிகளும் நோயினால் பாதிக்கப்படக் காரணமாக அமைகின்றன. இது "ஃபோகல் செப்ஸிஸ்" என்று கூறப்படுகிறது. எனவே பல்பராமரிப்பு, உடல் பொதுநலத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

தகுந்த பல் சிகிச்சை மூலம் "வாய்நலம்" நன்கு பேணப்பட வேண்டும். இதனால் ஈறுநோய்கள் தோன்றாமல் தடுக்கலாம்.

குழந்தைப் பருவம் முதற்கொண்டே வாய்நலம் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். காலையில் முதல் கடமையாகவும் இரவில் கடைசிக் கடமையாகவும், ஒழுங்காகவும் பல்லைச் சுத்தம் செய்வது, பல்துலக்கி (புருசு) கொண்டு பல் துலக்குவது, ஈறுகளை நன்கு தடவி விடுதல், நாக்கைச் சுத்தப்படுத்துதல் முதலான காரியங்களைத் தவறாமல் செய்யவேண்டும். இந்தப் பணிகளைத் தவறாமல் செய்ய வேண்டும். இதன் மூலம் ஈறுகள் நல்ல வலிவுடனும் பொலிவுடனும் திகழ்ந்து, பல் நலம் பேணப்பட்டு, உடல்நலம் காக்கப் படுகிறது.

வாயை நன்கு சுத்தப்படுத்துவதை நாம் புறக்கணித்தால் அதனால் உருவாகும் "பிளாக்" போன்ற மென்மையான படிமானங்களும், பற்காறைகளும், "ஹாலிடோஸிஸ்" என்னும் வாய் நாற்றத்திற்குக் காரணமாக அமைகின்றன. மேலும் இதன் விளைவாக ஏற்படும் பற் சொத்தையையும், ஈறு நோய்களும், மனிதனின் பொது நலத்தைப் பாதிக்கின்றன. உணவு உண்பதற்கு முன்பும், பின்பும் வாயை, தண்ணீர் கொண்டு நன்கு கொப்பளித்தும், ஈறுநோய் மருத்துவர்களின் உதவி கொண்டும் மிக நல்ல முறையில் வாய் நலம் பேணவேண்டும்.

அறியாமை, வறுமை, அலட்சியம், தீயப்பழக்கங்கள் முதலியவைகளால் உருவாகும் பல் நோய்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளது என்றாலும் பல் நோய்களுக்கு இடங் கொடுக்கக் கூடாது, தொடக்கத்திலேயே தடுத்துவிட வேண்டும் என்ற எண்ணம் மக்களிடம் பரவ வேண்டும். பல் மருத்துவத்தின் அவசியத்தை அனைவரும் உணர வேண்டும்.

அதே சமயத்தில் பல் மருத்துவத்தில் மருத்துவர்கள் சிறந்து விளங்க வேண்டும். பல் மருத்துவத்தில் மேல்நிலை பட்ட படிப்பு வரை உள்ள பல் மருத்துவப் பகுதியாகச் சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப் பிரிவு விளங்குகின்றது.

வெள்ளி விழா

இந்தப் பல் மருத்துவப் பிரிவு 1953-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. சென்னைப் பொது மருத்துவமனையில் புறநோயாளர் பகுதியில் இயங்கி வந்தது. அப்பொழுது பிரிக்கப்படாத சென்னை மாநிலமாக இருந்தமையால் எல்லாப் பகுதியினருமாக 15 மாணவர்கள் சேர்க்கப்பட்டு இருந்தனர். ஒரே ஒரு பேராசிரியரும், ஓர் உதவிப் பேராசிரியரும் தான் இருந்தனர். ஆனால், இன்று மருத்துவக் கல்லூரி பல் மருத்துவப் பிரிவில் 10 பேராசிரியர்களும், 22 உதவிப் பேராசிரியர்களும் பணியாற்றுகின்றனர்!

முதன் முதலில் மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டபொழுது மாணவர்களாக இருந்தவர்கள் இன்று தென்னகத்தின் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளின் பல் மருத்துவத்துறையின் தலைவர்களாக இருக்கின்றனர்.

1953-க்குப் பின் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த சென்னை மருத்துவக் கல்லூரி பல் மருத்துவப் பிரிவுக்கு 1962-ஆம் ஆண்டில் தனியான கட்டடம் அமைக்கப்பட்டது. பிறகு மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்த்தப்பட்டது.

1966-67-ல் பல் மருத்துவத் துறையில் மேல்நிலை பட்டப் படிப்பு இங்கு தொடங்கப் பட்டது. பல் மருத்துவத்தின் பல்வேறு பிரிவுகளுக்கான மேல்நிலை பட்டப் படிப்புகள் இங்கு உள்ளன. இந்தியாவில் உள்ள பெரிய பல் மருத்துவப் பிரிவுகளில் ஒன்றாக இது திகழ்கிறது.

இங்குப் பணியாற்றும் பேராசிரியர்கள் வெளிநாடுகளிலுள்ள பல் மருத்துவத்திலும் பயிற்சிகள் பெற்றுள்ளனர்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், தென்கிழக்கு ஆசியாவிலேயே உள்ள பல் மருத்துவத் துறையில் பல்வேறு வசதிகளுடன் கூடிய பல் மருத்துவப் பிரிவுகளில் இது ஒன்றாகத் திகழ்கிறது.

இலவச பல் பரிசோதனை முகாம்

பல் மருத்துவப் பிரிவின் வெள்ளிவிழாவை முன்னிட்டு ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களும் பல் மருத்துவ வசதிகளைப் பெற்றிட 'இலவசபல் பரிசோதனை முகாம்கள்' நடத்தப் பட்டன.

மதுரை மாவட்டத்தில் அனுப்பானடி, சிந்தாமணி, டி. கல்லுப் பட்டி, இராமநாதபுரம் மாவட்

டத்தில் ஆத்திப்பட்டி, திருநெல்வேலி மாவட்டத்தில் வீரபாண்டியன் பட்டினம், தென்னார்க்காடு மாவட்டத்தில் வடலூர், வட ஆர்க்காடு மாவட்டத்தில் காவலூர், தர்மபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டிணம், திருச்சி மாவட்டத்தில் அமூர், நீலகிரி மாவட்டத்தில் சோலூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் செல்லப்பாளையம், சேலத்தில் குமாரப்பாளையம், தஞ்சாவூர் மாவட்டத்தில் சீர்காழி, பாபநாசம், திருக்காட்டுப் பள்ளி, செங்கற்பட்டு மாவட்டத்தில் முடிச்சூர், போரூர் ஆகிய ஊர்களில் இம்



இளமையிலேயே பல்லைத் திருத்துவது ஏற்ற செயலாகும்.

பற்களைத் திருத்தி ஒழுங்குபடுத்தும் மருத்துவ முறைக்கு ஆங்கிலத்தில் ஆர்த்தோடான்டிக்ஸ் என்று பெயர். கிரேக்க மொழியில் -'ஆர்த்தோஸ்'' என்றால் சரியான, திருத்தமான என்று பொருள். 'டான்ஸ்'' என்றால் பல் என்று பொருள். இந்த இரண்டு சொற்களிலிருந்து உருவானது ''ஆர்த்தோடான்டிக்ஸ்'. கோணல் மாணலாயுள்ள பற்களையும், சரியாய்ப் பொருந்தாத தாடைகளையும் ஒழுங்குபடுத்தி, பல் வரிசையையும் முகத் தோற்றத்தையும் சரிப்படுத்தி விடும், இந்தச் சிகிச்சை பல் மருத்துவத்திலே ஒரு தனிப் பகுதியாகும்.

ஒரு குழந்தையின் பல் அமைப்புகள் மிகவும் மெலிந்ததாயிருந்தது. அதனால் அதன் தோற்[illegible]யும் பாதிக்கும் படியிருந்தால, பல் மருத்துவர் சாதாரணமாய் அதன் முக அழகை மேம்படுத்துவதில்தான் அதிக அக்கறை காட்டுவார். ஆனால், இப்போதெல்லாம், பற்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில்தான் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. ஏனெனில், பற்கள் ஒழுங்காய் அமைந்திருந்தால், வரிசை ஒழுங்காயிருந்தால், ஈறு நோய் ஏற்படுவதற்கான நிலைகளும் குறைந்து போகும். பெரியவர்கள் பல்லை இழப்பதற்கு இந்த ஈறு நோய் தான் முக்கிய காரணம்.

குழந்தையின் பற்கள் ஏன் கோணலாய் இருக்கின்றன? அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். பெற்றோர்களில் ஒருவர் பெருத்த எலும்புகளும் பெரிய பற்களும் உடையவராயிருக்கலாம். மற்றொருவர் சிறுத்த எலும்பு உடையவராய் இருக்கலாம். அவர்களுடைய பரம்பரைத் தன்மைகள் ஒன்று சேருவதன் மூலம் குழந்தைக்கு, அதன் தாடைகளுக்குப் பொருத்தமில்லாத பெரிய பற்கள் அமைந்து விடுகின்றன. அதனால் பெரிய கடைவாய்ப் பற்கள் முளைக்கும் பொழுது, முன் பற்கள் கடிப்பதற்கு ஏற்பச் சரியாய்ப் பொருந்தாதபடி முன்னோக்கித் தள்ளப்படுகின்றன. அத்துடன், குழந்தைப் பருவத்துப் பழக்கங்களும் இதற்குப் பெரிதும் காரணமாயிருக்கின்றன. நாக்கை வெளியே நீட்டிக் கொண்டிருப்பது, கட்டை விரலைச் சப்புவது, பென்சிலைக் கடித்து மெல்லுவது, பாடங்களை எழுதும்போது முகத்தில் கையை ஊன்றிக் கொண்டு வெகு நேரம் ஒரு பக்கமாய்ச் சாய்ந்து கிடப்பது இவை போன்ற கெட்ட பழக்கங்களும் இதற்குக் காரணமாயிருக்கலாம்.

குழந்தைப் பருவத்தில் முளைக்கும் பால் பற்களில் ஏதாவது ஒன்று விழவேண்டிய காலத்திற்கு முன்னமே விழுந்து விடுவதனாலும் அதையடுத்துள்ள பல் நகர்ந்து விடக்கூடும். குழந்தை பிறக்கும்போதோ, இளங் குழந்தைப் பருவத்திலோ ஏற்படக் கூடிய காயத்தாலோ, நீண்ட நாட்களாய் இருந்து வரும் ஜீரணக் கோளாறாலோ, தொண்டையில் சதை வளர்வதாலோ, உள் நாக்கு வீங்குவதாலோ, ஏதேனும் உடம்புக்குப் பொருந்தாமையால் ஏற்படும் 'அலர்ஜி'யாலோ, வாய் வழியாய் மூச்சு

முகாம்கள் 23-7-78 முதல் 29-7-78 முடிய நடைபெற்றன.

இதனால் 25,000 மக்கள் பயனடைந்தனர்.

நகர்ப்புற மக்கள் மட்டுமல்லாது ஊரகப்பகுதி மக்களும் பல் மருத்துவத்தின் அவசியத்தை உணர இந்த இலவச பல் பரிசோதனை முகாம் வழிவகுத்துள்ளது. கிராமப்புற மக்களுக்கு நல்வாழ்வுப் பணிகள் எளிதில் கிடைக்க வாய்ப்பளித்த இப்பணியினை எல்லாரும் பாராட்டுவார்கள் என்பது உறுதி!

—மாமூலன்.

விடுவதாலோ சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

பல் வரிசைத் திருத்தத்தில், பற்களை நேராக நிமிர்த்துவதற்கு அவைகளைப் பிடித்துக் கொண்டிருக்கும் எலும்பைத் திருத்த வேண்டும். திருத்தத்துக்கான சாதனங்களைச் சரியாகப் பொருத்தினால் அவைகள் பற்களை அழுத்தும். அந்தப் பற்கள் சம்பந்தப்பட்ட எலும்பை அழுத்தும். அப்போது, நகர்ந்து வரும் ஒவ்வொரு பல்லுக்கும் இடம் கிடைப்பதற்காகச், சில செல்லுகள் சேர்ந்து அந்த எலும்பைப் பின்னே தள்ளும். திருத்த வேண்டிய பல், இவ்வாறு மெது மெதுவாக இடம் மாறுகிறது. பல பேருக்கு பற்கள் ஒழுங்காக அமைந்து சீராக வேலை செய்வதற்காகவும், தோற்றம் சரியாய் அமைவதற்காகவும் ஒருபல்லையோ பல பற்களையோ கூடப் பிடுங்க வேண்டியிருக்கும்.

பற்களை நகர்த்தி விடுவதற்காக உபயோகிக்கும் சாதனங்கள் அகற்றி விடக் கூடியவையாக இருக்கலாம். அல்லது அங்கேயே பொருத்தி விட்டுவிடக் கூடியவையாகவும் இருக்கலாம். அவை உலோகத்தால் செய்தவையாகவோ, பிளாஸ்டிக்கால் செய்தவையாகவோ, இரண்டாலும் ஆனவையாகவோ இருக்கலாம்.

பல் திருத்தச் சிகிச்சையைச் சரியாகச் செய்து முடிப்பதற்கு ஒன்றரை ஆண்டு முதல் மூன்று ஆண்டுக் காலம் வரை ஆகக் கூடும். ஆகவே, சிகிச்சை செய்து கொள்பவரும் அவருடைய பெற்றோர்களும் மருத்துவரோடு ஒத்துழைப்பது மிகவும் அவசியமாகும். இம்மூன்று தரத்தாரும் இசைந்து வேலை செய்தால்தான் பல் திருத்தம் சரியாக நடைபெறும். வீட்டிலே தாங்களாக என்னென்ன செய்து கொள்ள வேண்டும், சிகிச்சைக்குரியவரை எப்படிக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி மருத்துவர் கூறும் ஆலோசனைகளைச் சரியாய்க் கடைப்பிடித்தாக வேண்டும். இல்லையேல் சிகிச்சை மிகவும் கடினமானதாகிவிடும். காலமும் அதிகமாகிவிடும்.

மருத்துவச் சிகிச்சை முடிந்த பிறகு, பற்கள் பிடுங்கப்பட்ட இடங்களில் புதிய எலும்பு வளரும் வரை, நகர்ந்துள்ள பற்களை அந்த இடங்களிலேயே நிறுத்தி

வைப்பதற்காகப் பிடிப்புக் கம்பியொன்று போடப்படுகிறது.

பல் திருத்தச் சிகிச்சைக்கு வயது வரையறை ஒன்றும் கிடையாதென்று சொல்லலாம். ஆயினும், பற்கள் மிகவும் வேகமாய் வளரக் கூடிய பருவம் (அதாவது பதினொரு வயது முதல் பதினைந்து வயது வரை) மிகவும் ஏற்றதென்று கருதப்படுகிறது. அனுபவத்திலே, சிலருக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட வயதில்கூட பிரமாதமான பயன் கிடைத்திருக்கிறது.

நிலையான பற்கள் சீர்கேடாக முளைத்து உறுதிப்பட்டு விடுவதற்கு முன்னமே, அவற்றைத் தடுத்துத் திருத்தி விடுவதன் அவசியத்தைப் பெற்றோர்களுக்கு எடுத்துக் கூறி வற்புறுத்துவதன் மூலம் பல் மருத்து வர்கள் மக்களுக்கு மிகவும் முக்கியமான பணியாற்ற முடியும். உதாரணமாக, விழுந்து விட வேண்டிய காலத்தில் விழா மலே இருக்கும் பால் பற்களைப் பிடுங்குவ தன் மூலமும், விழ வேண்டியதற்கு முன்ன தாகவே பால் பற்கள் விழுந்து விடும் போது அந்த இடத்தில் தவறாகப் பல் முளைத்து விடாதபடித் தடைச் சாதனங் களைப் பொருத்தி வைப்பதன் மூலமும், சீர்கேடான பல் வளர்ச்சியைத் தடுப்ப தற்குப் பெரிதும் உதவிடலாம்.

—(பல் மருத்துவப் பிரிவு வெள்ளி விழா மலரிருந்து தொகுக்கப் பட்டது.)

பல் சொத்தை நோய்

பல் சொத்தை நோய் எல்லா நாடுகளிலும் பரவலாக காணப்படும் ஒரு நோய் ஆகும். பல்லில் ஏற்படும் சொத்தைகளை உரிய நேரத்தில் சரியான முறையில் கவனித்து சிகிச்சை அளிக்காவிடில் பற்சிப்பி, பல்தந்தினி, நரம்புத் திசுக்கள், இரத்தக் குழாய்கள் முதலியவற்றைச் சிதைத்துவிடும்.

வயதானவர்களைவிட இளம் வயதினரே பல் சொத்தை நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதற்குக் காரணமாக அமைவது அவர்கள் விரும்பி அதிகமாக உண்ணும் இனிப்புப் பண்டங்களும் ஒட்டும் தன்மையுடைய பொருட்களுமே ஆகும்.

இந்நோயின் முதல் அறிகுறியாக, பல்லின் மேல் புறத்தில் சுண்ணாம்பு போன்ற வெண்மை நிறத் தோற்றம் காணப்படும். இந்த வெண்மை நிறம் நோயின் பிற்பகுதியில் கருமையாக மாறிவிடும். நோயின் உச்சக் கட்டத்தில் அதனால் உருவாகும் குழிகளில் உணவுத் துகள்கள் தங்கி, மிகுந்த வலியினையும், துன்பத்தையும் அளிக்கும்.



உணவு உட்கொண்ட பின்னர், வாயைச் சரியாகக் கொப்புளித்துச் சுத்தம் செய்யாவிடில் பற்களின் இடுக்குகளில் தங்கும் உணவுத் துகள்கள் மீது வாயிலுள்ள பாக்டீரியாக்கள் இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தி பற்சிப்பியினைக் கரைத்துக் குழிகளை உருவாக்குகின்றன. இக்குழிகளில் வசதியாகத் தங்கும் நோய்க் கிருமிகள் பற்களைத் துளைத்து, பற்கூழ்க் குழியை அடைவதால், பற்கள் அழியத் துவங்குகின்றன. பல் ஈறும் அழிக்கப்பட்டு, புண்ணும் சீழும் உண்டாகின்றன. இவ்வாறு ஒரு பல்லில் உருவாகும் சொத்தை மற்ற பற்களுக்கும் பரவுகிறது. உண்ணும் உணவுடன் சீழ் கலந்து குருதியோட்டத்தில் கலப்பதால் உடலின் மற்றப் பகுதிகளிலும் பல நோய்கள் உருவாகின்றன.

நோயாளிகள் பல் மருத்துவரை அணுகி, தங்கள் பற்களை அடிக்கடி சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். காலையிலும், இரவிலும், சாப்பிடுவதற்கு முன்பும், சாப்பிட்ட பின்பும், வாயை நன்ருகக் கொப்புளித்து, புருசு கொண்டு பற்களை நன்ருகச் சுத்தப்படுத்துவதன் மூலம் பல் இடுக்குகளில் உணவுத்துகள்கள் தங்குவதைத் தவிர்க்கலாம்.

குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையேனும் மருத்துவரைக் கலந்தாலோசித்து உரிய சிகிச்சை பெற வேண்டும்.

இனிப்புப் பண்டங்களையும், அதிக மாவுச் சத்துள்ள பொருட்களையும் முடிந்தவரை உண்ணுமல் இருக்க வேண்டும். கருத்தரித்த பெண்களும், வளரும் குழந்தைகளும் புரோட்டீன்களை அதிகம் உட்கொள்ள வேண்டும். சர்க்கரைக்குப் பதில் தேன் சேர்த்துக் கொள்வது நல்லது. சுண்ணாம்பு, சாம்பல் சத்து நிறைந்த உணவுகள் பல் சொத்தையைத் தவிர்க்க உதவும். ஆப்பிள், பச்சைக் காய்கறிகள், பட்டாணிக் கடலை முதலானவைகளும் பல் சொத்தை வராமல் தடுக்க உதவும் உணவுப் பொருட்கள் ஆகும்.

புளோரைடு, பற்சிப்பியினைப் பலப்படுத்தி, பற்களின் மேற்பரப்பு அமிலங்களில் கரையாத வண்ணம் செய்கிறது. பாக்டீரியங்கள் இனப் பெருக்கத்தைத் தடுக்கிறது. தேய்ந்த பற்சிப்பிகளை மீண்டும் புதுப்பித்து வலிவுள்ளதாகச் செய்கிறது. புளோரைடின் இத்தகு செயல்களால் பல்சொத்தை தவிர்க்கப்படுகிறது. துல்லியமான அளவுள்ள புளோரைடைக் குடிக்கும் நீரில் கலந்தால், பல் சொத்தை ஏற்படுவதைத் தவிர்க்கலாம். பால், ரொட்டி, உப்பு, பருப்பு வகைகளிலும் புளோரைடு உள்ளது.

வளர்ச்சிப் பாதையில் தமிழகம் 2

பி.சி. கணேசன்

திறமையாகச் செயல்பட—மக்களுக்கு பலன் கிடைக்கும் வகையில் பணியாற்ற-லஞ்ச ஊழலற்ற ஆட்சி எந்த அளவுக்கு இன்றியமையாததோ அது போலவே வளர்ச்சித் திட்டங்கள் துரிதமாக நடைபெற வேண்டுமாளுல் சமூகத்தில் அமைதியும், மக்களிடையே ஒழுங்கு உணர்ச்சி, கட்டுப்பாட்டு உணர்ச்சி ஆகியவை இருப்பது அவசியம்.

சமூக அமைதி இல்லாதபோது என்ன விளைவுகள் ஏற்படுகிறது என்பதை ஒரு கணம் சிந்தித்து பார்ப்பது பயனுடையதாக இருக்கும். சட்ட ஒழுங்கு சீர் குலையும் போது ஆட்சி இயந்திரத்தின் முக்கிய பகுதிகள் அனைத்தும் அந்த சட்ட ஒழுங்கினை பராமரிப்பதிலேயே ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. மக்களின் ஆக்கப்பணிகளுக்கு முழு கவனம் செலுத்தி துரித கதியில் செயல்பட வேண்டிய அரசு இயந்திரம், அதை விட்டு விட்டு கலவரங்களை சமாளிப்பதிலும், அத்து மீறல்களை அடக்குவதிலும், பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிப்பதை தடுப்பதிலும், சமூக அமைதியைப் பாதுகாப்பதிலும் முழு நேரத்தையும் செலவிடும் அவசியம் ஏற்படுமாளுல், வளர்ச்சிப் பணிகளை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதை பொது நலனில் அக்கறை உடைய அனைவரும் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

அகில இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் 1977-ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது தமிழகத்தில் அமைதிச் சூழ்நிலை நிலவியது என்ருலும் அதற்கு பின் வெகு விரைவில் இந்த அமைதிச் சூழ்நிலையைக் குலைப்பதற்கான முயற்சிகள் சமூக விரோத சக்திகளால் மேற்கொள்ளப்பட்டதை யாரும் சுலபத்தில் மறந்து இருக்க முடியாது. தொடர்ந்து பல நிலைகளிலும் போராட்ட சூழ்நிலையை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மாணவர்கள் போராட்டம்;

விவசாயிகள் போராட்டம்;

ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்;

பயிற்சி டாக்டர்கள் கிளர்ச்சி;

போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தம்;

மீனவர்கள் மோதல்,

கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்;

கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம்;

பொறியாளர்கள் உண்ணு விரதம்

என்று போராட்டங்களும், கிளர்ச்சிகளும் தூண்டிவிடப்பட்டு தொடர் கதை ஆயின. ஆளுல் அரசு எந்த சந்தர்ப்பத்திலும் நிதானம் இழக்கவில்லை. காரணம், அண்ணுவின் அணுகு முறையில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள ஒருவரை முதல்வராகப் பெற்று இருக்கும் அரசு தன்னுடைய அணுகு முறையிலும் அண்ணுவின் பாணியையே கடைப்பிடிப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு கொடுப்பதற்கு மட்டுமே காவல் துறையினர் பயன்படுத்தப்பட்டனர். போராட்டங்கள் நடைபெற்ற போதெல்லாம் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளை அழைத்து அவர்களோடு மனம் விட்டுப் பேசி, அரசுக்கு உள்ள பொருளாதாரச் சிக்கல்களை எடுத்துச் சொல்லி, நியாயமான கோரிக்கைகளை எந்த அளவுக்கு

தந்தை பெரியார் நூற்ருண்டு விழா, இவ்வாண்டு செப்டம்பர் 17-ஆம் நாள் தொடங்குகிறது. 16-9-78 'தமிழரசு' இதழ், அதிகப் பக்கங்களுடனும் கண்கவர் வனப்புடனும் அரிய செய்திகளுடனும் தந்தை பெரியார் நூற்ருண்டு விழா மலராக வெளி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிரேம்.

ஏற்க முடியுமோ அந்த அளவுக்கு ஏற்று செயல்படுத்த அரசு தவறியது இல்லை. இதை நடுநிலை உள்ளம் கொண்ட அனைவரும் நன்கு அறிவார்கள்.

தமிழக முதல்வரைப்பொறுத்த மட்டில் கோரிக்கைகளுக்காகப் போராடுகின்றவர்களைச் சந்திக்க எந்தச் சமயத்திலும் அவர் தயக்கம் காட்டியது இல்லை. குறிப்பாக, விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளைப் பலமுறை சந்தித்து, பல மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தினர். அந்தக் கூட்டங்களில் பங்கு கொண்ட விவசாயப் பிரதிநிதிகள் அனைவருக்கும் அவர்களது கருத்துக்களை எடுத்துச் சொல்ல முழுமையான உரிமை வழங்கப்பட்டது. அனைவரும் தங்கள் கருத்துக்களை மனம்விட்டுச் சொன்னார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வேறு எத்தனையோ அலுவல்களை கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தும்கூட, விவசாயிகள் பிரச்சினைகளுக்கு விசேஷமான முக்கியத்துவம் கொடுத்து, அவர்கள் சொன்ன ஒவ்வொரு விஷயத்தையும் முதல்வர் கவனமாகக் கேட்டு, தேவையான சந்தர்ப்பங்களில் தானே குறிப்பு எடுத்துக் கொண்டு முடிவில் அவர்கள் எழுப்பிய பிரச்சினைகள் அனைத்துக்கும்-அவை சிறியவை ஆனாலும், பெரியவை ஆனாலும்-விளக்கமாகப் பதில் அளித்தார் என்பதை பங்கேற்ற விவசாயப் பிரதிநிதிகள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

அந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட விவசாய சங்கப் பிரதிநிதி ஒருவர் மனம் திறந்து கூறிய ஒரு விஷயத்தை இந்த நேரத்தில் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

''எவ்வளவோ அலுவல்கள் இருந்தும் மற்றவர்களைப்போல ஃபைல்களை பார்த்துக்கொண்டே எங்கள் கோரிக்கைகளையும் கேட்டுக் கொண்டு இல்லாமல் முதல்வர் நாங்கள் சொல்லுகின்ற அனைத்தையும் கவனமாகக் கேட்டு, தானே குறிப்பெடுத்துக் கொண்டதை உள்ளபடியே நாங்கள் பெருமையாகக் கருதுகிறோம். எங்கள் பிரச்சினைகள் மீது அவருக்கு உள்ள அக்கறையினைப் புரிந்து கொள்ள இதுவே போதும்.''

ஆக, தமிழக முதல்வர் பிறருடைய குறைகளில் உள்ள நியாயத்தை புரிந்து செயல்பட முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வந்து இருக்கிறார் என்பதனை கோரிக்கைகளுடன் அவரை சந்தித்தவர்கள் தெளிவாக உணர்ந்து இருக்க முடியும். ஆனால் வளர்கின்ற சமுதாயத்தில் பல தரப்பு மக்களின் தேவைகளும், அபிலாஷைகளும் வளர்ந்தபடியேதான் இருக்கும். மக்களின் தேவைகள் அனைத்தையும் ஓர் அரசு ஒரே மூச்சில் பூர்த்தி செய்து விட்டது என்பதற்கான ஆதாரத்தினையும் உலக வரலாற்றில் எந்தப் பகுதியிலிருந்தும் யாரும் எடுத்துக் காட்டிவிட முடியாது.

ஆனால் கோரிக்கைகளுக்காக கிளர்ச்சிகளில் ஈடுபடுவது கடைசியாகக் கையாள வேண்டிய ஆயுதமாக இருக்கவேண்டுமே தவிர, கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக கிளர்ச்சிகளில் ஈடுபடுவது இந்த அரசைப் பொறுத்தவரையில் அவசியமில்லை என்பதைப் பல சந்தர்ப்பங்கள் தெளிவாக நிரூபித்து உள்ளன.

சமூக அமைதி என்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மிகவும் இன்றியமையாதது. பாரதப் பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சுதந்திரம் கொடுப்பதற்கு முன்னேயிருந்து இந்தக் கருத்தினை வலியுறுத்திச் சொல்லி வந்து இருக்கிறார் என்பது கவனிக்கத் தக்கது. இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் கூட்டு சேரா வெளிநாட்டுக் கொள்கையை (Policy of Non-alignment) நேரு தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அதற்கு அவர் சொன்ன காரணங்களில் குறிப்பிடத்தக்கது ஒன்று உண்டு. ''இந்தியா ஒரு ஏழை நாடு. தொழில் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் வளர்ச்சி அடைய வேண்டிய ஒரு நாடு. உலக அமைதி நீடித்தால் மட்டுமேதான் இந்திய நாடு வளர்ச்சிப் பாதையில் செல்வது சாத்தியமாகும். உலகம் எங்கும் போர் சூழ்நிலை உருவாகி விடுமானால், இந்தியப் பொருளாதாரம் செழித்துச் சிறப்பது முடியாமல் போய்விடும். ஆகவே பாரத தேசத்தின் நலன் கருதி, உலக அமைதி இருக்க வேண்டும் என்பதில் நாம் அனைவரும் முழுக் கவனம் செலுத்துவது அவசியம் ஆகிறது. அது போலவே இந்திய அரசியல் ஸ்திரத் தன்மையோடு (Stability) விளங்கினால்தான் நாம் அமைதியாக இருந்து மக்கள் வளர்ச்சிக்குத் தேவையான பணிகளில் முழு மூச்சுடன் ஈடுபட முடியும். அமைதி இழந்த சமூகத்தில் வளர்ச்சி காண்பது என்பது முடியாத காரியம். ஆகவே உலக அமைதி நிலவ கூட்டு சேரா வெளிநாட்டுக் கொள்கையும், நாட்டில் அமைதி நிலவ அரசியல் ஸ்திரத்தையும் பிரதானமானவைகளாக நான் கருதுகிறேன்.''

இப்படித் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியவர் பண்டித ஜவஹர்லால் நேரு. தேசத்துக்கு அவர் சொன்ன இந்த உண்மை ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் பொருந்தும். அனைத்து இந்திய அரசு, மக்களை சுபிட்சப் பாதையில் அழைத்துச் செல்ல என்னென்ன தேவைகளை நேருஜி வலியுறுத்தினரோ, அதைப் போலவே மாநில மக்களின் நல்வாழ்வுக்கும் அமைதிச் சூழ்நிலை இருப்பது அவசியம் என்று தமிழக அரசும், முதல்வரும் கருதுவது மிகப் பொருத்தமானது.

எனவே தான் தமிழகத்தில் அமைதிச் சூழ்நிலை உருவாக அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பினையும் தமிழக அரசு தொடர்ந்து கோரி வருகிறது. செயற்கையான தொல்லைகள் ஒரு புறம் இருக்க, இயற்கையின் சீற்றங்களும் சில சமயங்களில் அரசுக்கு எதிர்பாராத பல சோதனைகளை ஏற்படுத்தி விடுவது உண்டு. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்று நான்கு மாதங்களிலேயே தமிழகம் இதுவரை கண்டிராத புயலுக்கும், வெள்ளத்துக்கும் இலக்காயிற்று. புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், தஞ்சை, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. எதிர்பாராத விதமாக இயற்கை சீற்றம் கொள்வதை யாரும் முன் கூட்டியே கணித்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது சாத்தியம் இல்லை. இயற்கை எப்போது, எங்கே, எந்த ரூபத்தில், ஊழித் தாண்டவம் புரியும் என்று கணித்துச் சொன்னவர்கள் இதுவரை இல்லை. ஆனால் இயற்கையின் உற்பாதங்கள் நிகழும்போது ஓர் அரசு செய்யக் கூடியதெல்லாம் கால தாமதமின்றி உடனடியாக நிவாரண வேலைகளை மேற்கொள்வதுதான். இயற்கையின் சீற்றம் பற்றிய செய்தி கிடைத்தவுடன் போர்க்கால வேகத்துடன் தமிழக அரசு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டது. தமிழக அரசின் துரித நடவடிக்கைகளை அப்போது அனைவரும் பாராட்டியதை பத்திரிகை செய்திகள் வாயிலாக நாம் அறிந்தோம்.

—தொடரும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



...ONER OF TAMIL NADU
...VES AND HISTORICAL RESEARCH
1978
EGMORE, MADRAS.

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

— பேரறிஞர் அண்ணா

வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.



கலைவாணர் | உடுமலை நாராயணகவி | பேரறிஞர் அண்ணா

தமிழரசு

மலர் : 9 இதழ்: 5

1-9-1978

இந்த இதழில்....

வணக்கம்.

'கலைவாணர் ஒரு சகாப்தம்' என்று பேரறிஞர் அண்ணா ஒரு முறை குறிப்பிட்டார்கள். தனக்கென்று ஒரு சகாப்தத்தையே உருவாக்கிக் காட்டிய கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் நினைவு நாள் ஆகஸ்ட் திங்கள் 30-ம் நாள். கலைவாணரின் திருஉருவப் படத்தை இவ்விதழ் மேலட்டையில் வெளியிட்டு மறைந்தும் மறையாத அம்மேதைக்கு 'தமிழரசு' தன்னுடைய அஞ்சலியைச் செலுத்துகிறது. கலைவாணர் பற்றிய அரிய செய்திகளும், சுவையான தகவல்களும், படங்களும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

கோட்டை கொத்தளத்தில், நாட்டுக் கொடியை ஏற்றிவைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய பேருரையும், சுதந்திர நாளன்று வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஆற்றிய சிறப்புரையும் இவ்விதழிற்கு பெருமையூட்டுகி 'றன!

மகாகவி பாரதியாரின் புகழ் பாடும் கவிதை ஒன்றினை திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் 'தமிழரசு'க்கு வடித்துத் தந்துள்ளார்கள். வழக்கமான அம்சங்களும் இடம் பெற்றுள்ளன.

அடுத்த இதழ், தந்தை பெரியார் நூற்றாண்டு விழாச் சிறப்பு மலராக வெளிவருகிறது. பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய கருத்துப் பெட்டகமாக இம்மலர் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதனை மட்டும் இப்பொழுது சொல்லிக் கொள்கிறோம்.

காலத்தை வென்ற கலைவாணர்

பேரறிஞர் அண்ணா

இந்த நாளில் கலைவாணருடைய வாழ்க்கை பற்றியும், அவரால் வாழ்வு பெற்றவர்கள் பற்றியும், அவராலே கலைத் துறைக்குக் கிடைத்த பெருமை பற்றியும் பேசுகிறோம்.

கலைவாணர் தமக்குப் புகழ் தேடிக் கொண்டது மட்டுமின்றி மற்றவர்களுக்கும் வழி வகுத்துக் கொடுத்தார்.

கலைவாணர் நகைச்சுவையின் மூலம் கருத்துக்களை மக்களுக்கு இனிய முறையில், எளிய முறையில் உணர்த்தினார். மேலும், பலர் அந்தத் துறையில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றாலும் அதைப் பார்க்கிற போது கலைவாணருடைய நினைவுதான் நமக்கு வருகிறது. அவருடைய மற்றச் செல்வங்கள் என்ன ஆயின என்பது நமக்குத் தெரியும்.

தமிழர்கள் வாழ்விலும், தாழ்விலும், வெற்றியிலும் தோல்வியிலும் கலையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். பண்பு முழுவதும் கலை மூலம் உணர்த்தியவர்கள் தமிழர்கள்.

பிற மாநிலத்தில் உள்ளவர்கள் நம்முடைய கலைத் துறையை மிகவும் பாராட்டுகிறார்கள்.

நான் தூரக் கிழக்கு நாடுகளுக்குச் சென்ற போது கம்போடியாவில் ஒரு நடனக் காட்சியைப் பார்த்தேன். அதைப் பார்க்க வந்திருந்த அமெரிக்க நாட்டுச் செல்வக் குடும்பத்தில் பிறந்த பெண்கள் மேடையில் ஆடியவர்களைப் பார்த்து, அவர்களைப் போலவே கைவிரல்களை அசைத்தார்கள்.

நான் அவர்களிடம், "எங்கள்

'நெல்மணிகள் முற்றியதும் கதிர் சாய்ந்து எங்களை எடுத்துச் செல்லுங்கள்' என்று கூறுவது போலக் கலைவாணர், வாரி வாரி வழங்கினார், பணத்தை மட்டுமல்ல; நல்ல கருத்துக்களையும் வழங்கினார்.

பிறருடைய கலை வளர்ந்து இருப்பதைப் பார்த்தும் பாராட்டுகிற பண்பு அவருக்கு உண்டு.

பொதுப் பணியிலும் கலைவாணர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு 'தம்மால் முடிந்ததைச் செய்திருக்கிறார்.

எனக்குத் தெரிந்த வரையில்

கலைத் துறையில் தமிழகம் எப்போதும் முன்னணியில் இருந்திருக்கிறது. இசைத் துறையிலும், நாடகத் துறையிலும், இலக்கியத் துறையிலும்—எந்தத் துறையானாலும் தமிழகம் முன்னணியில் இருந்திருக்கிறது. கலைவாணர் போன்றவர்களால் மேலும் வளர்ந்திருக்கிறது.

இவ்வளவு வறுமைக்கு இடையிலும் இந்தக் கலைத் துறை வளர்ந்திருக்கும் போது, உள்ளபடியே செழிப்பாக இருந்திருக்குமானால் எப்படி (இக்கலைத் துறை) வளர்ந்திருக்குமோ என்ற ஐயப்பாடு எழுகிறது.

தமிழ் நாட்டுக்கு வந்து பாருங்கள். அங்கே கண்களாலும், கைகளாலும் கலையை உணர்த்தக் கூடியவர்கள் இருக்கிறார்கள் " என்று கூறினேன்.

ஆனால், இங்கே கலைத் துறையில் இருப்பவர்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வறுமையில் தள்ளப்பட்டு வருகிறார்கள். மீதி உள்ள பத்துப் பேரில் ஒருவர் இருவர் தான் முன்னணியில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் கலைவாணர். அதனால்தான் இறந்த பிறகும் அவர் புகழப்படுகிறார்.

முதன் முதலில் ரஷ்ய நாட்டுக்குப் போய் வந்த கலைஞர் என். எஸ். கே. தான்.

அவருடைய 'கிந்தனார் காலட்சேபம்' எல்லோருக்கும் பிடித்தமானது.

கலை காலத்தை வெல்வது.

அவருடைய நகைச்சுவை இப்போதும் ஏற்றுக் கொள்ளத் தக்க அளவுக்கு இருக்கிறது.

கலைக் கல்லூரி அமைத்து, அவர் ஆசானாக இருந்து பணியாற்ற வேண்டியவர்.

அவருடைய இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிட சபதம் ஏற்போம்!





கோட்டை கொத்தளத்தில் கொடி யேற்றி வைத்து முதல்வர் முழக்கம்

ஒரு மனிதன் வாழ்க்கையில் உயர்வது என்பதும், புகழ் பெறுவது என்பதும், மற்றவர்களுடைய நம்பிக்கையைப் பெறுவது என்பதும் எளிதல்ல. அதை விடக் கடினம் அவைகளைக் காப்பாற்றிக் கொள்வது. அதுபோல், இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு உழைத்த இந்தியத் தந்தை மகாத்மாகாந்தி அவர்களை நினைத்துக் கொள்கிற இந்த நேரத்தில், அவர்களோடு அவர்கள் கருத்தை ஏற்று வெவ்வேறு கொள்கைக்கு சொந்தக்காரர்களாக இருந்தாலும், நாட்டின் விடுதலைக்காக உழைத்த அத்தகைய தியாகம் செய்த அந்த நல்லவர்களுக்கு நாம் இப்போது மட்டுமல்ல எப்போதும் எங்கக்

அலைமுறையிலும் நன்றி காட்டக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

நன்றி என்பது, வார்த்தை அளவில் அழகுறச் சொல்லிவிட்டால் அது பயனுள்ளதாகாது. பெரியவர்களை நினைக்குந்தோறும் அவர்கள் இந்த நாட்டிற்கு ஆக செய்த தொண்டினை, தியாகத்தை நினைக்கும்போது மிகுந்த மகிழ்ச்சியுடன் பாராட்டுவது நம்முடைய கடமையாகும் என்று நினைத்தாலும் கூட அதே நேரத்தில் அவர்களுடைய நல்ல கொள்கையை நாம் பயன்படுத்துவோமானால்தான் நம்முடைய நன்றியைச் செவ்வனே செலுத்துகிறோம் என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய கடமைப்பட்டுள்ளவர்களாக இருக்கிறோம். அந்தச் சுதந்தர தாகத்தைத் தீர்த்தவர்கள் யார் யார் எங்கெங்கே இருக்கிறார்கள், எவ்வளவு துன்பங்களுக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுடைய குடும்பங்கள் எங்கே இருக்கின்றன என்று பட்டியல் போட்டுக் கணக்கிட்டு அதற்கு முனைந்தால் கூட செய்ய முடியாத வகையில் எங்கோ ஒரு மூலையில் அவர்கள் துன்பத்தில் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்காக என்னைப் போன்றவர்களுக்கு —இந்தப் பதவியைப் பெறுகிறபோது, அவர்களை நினைத்துப் பார்க்கத் தவறினால் நாங்கள் எங்கள் கடமையிலிருந்து வழுவுகிறோம் என்று பொருளாகிவிடும்.

இந்த நல்ல நேரத்தில் இயற்கை நம்மை உள்ளம் குளிரும் வகையிலும், அதே நேரத்தில் துன்பத்தை ஏற்படுத்தாமல் நாம் இங்கே எப்படி எந்த முறையில் நிற்பது என்கிற நிலைமையை உருவாக்கித் தருகிற நேரத்தில், இதைப் போன்ற இந்த நாடு பல வகையிலும், அகத்திலும் புறத்திலும் சுதந்தரத்தோடு, தனி மனித உணர்வோடு, பெற்ற உரிமையோடு வாழக் கூடிய நிலைமையை நாம் பெற்றுவிட்டோமா என்று நாம் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டில் சமூகம் என்று ஒன்று இருக்குமானால், அந்தச் சமுதாயத்தில் இருக்கிற மக்கள் அனைவரும், வகுப்புவாத வெறிக்கோ, அந்த நம்பிக்கைக்கோ ஆளாகி அதைச் செயல்படுத்த முனைகிற நேரம், ஒரு நிமிடமாவது இந்த நாட்டில் இருந்தால், அது சுதந்தரத்திற்குப் பாதகமாகும் என்ற கருத்தைப் பல்வேறு நேரத்தில் அவர்களுக்கே உரிய வார்த்தையில் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் இங்கே இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு பகுதிகளில் நடக்கிற நிகழ்ச்சிகளிலும், அந்த நிகழ்ச்சிகளையும், தியாகம் செய்தவர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அதற்காக மகாத்மா காந்தியிலிருந்து, நேருஜியிலிருந்து, பெரியாரிலிருந்து, நேதாஜியிலிருந்து, இது போன்று அத்தனை மக்களும், இளைஞர்களும் மற்றவர்களும், மாணவர்களும் அண்ணாவும் இந்திய சுதந்தரத்தை எப்படிப் போராடிப் பெற்றுத் தந்தார்கள், தியாகத்திற்குத் தங்களைச் சொந்தக்காரர்களாக்கி உழைத்தார்களோ, எத்தனை இன்னல்களுக்கு ஆளானார்களோ, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் 32வது ஆண்டு என்று சொல்கிற இந்த நேரத்திலும் கூட இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்று சொன்னால், அந்தக் கொள்கைகள் முழுமை பெற்று விட்டதா என்றால் இல்லையென்று சொல்கிற பதிலைத்தான் பெறுகிற வகையில் ஆங்காங்கு வகுப்புப் பூசலும் மத வெறியும், ஜாதி முரண்பாடும் தலைதூக்கிக் கொண்டு இருக்கின்றன என்பதும், அவ்வப்போது அவைகளைச் சமாளித்து அடக்குவதும், அந்த எண்ணங்களை மாற்றிட முயற்சிக்கவும், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், உரிமையோடு மற்றவர்களோடு ஒத்து வாழ வேண்டுமென்ற கொள்கையைச் செயல்படுத்துகிற ஒரு உரிமைக்குச் சொந்தக்காரர்களாக இல்லை என்று எண்ணி நாம் ஏமாற வேண்டாம் என்றாலும், இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்காங்கு நடைபெறுகிற நிகழ்ச்சிகள் சில நம் முன் நிழலாடிக் கொண்டிருக்கின்றன.

புறத்தால் கட்டுப்படுவது என்பது சட்டம். அகத்திலே கட்டுப்படுவது என்பது மனச்சாட்சி. இவைகள் இரண்டையும் ஒன்றாக்குவதுதான் அண்ணா அவர்களின் கொள்கையாகும். ஒரு மனிதன் எவ்வளவுதான் ஆற்றலும், அறிவும் பெற்றவனாக இருந்தாலும், எவ்வளவுதான் திறமை பெற்றவனாக இருந்தாலும், ஒரு தனி மனிதன் மட்டும் எதையும் இந்த உலகத்தில் சாதிக்க முடியாது என்பதும், மற்றவர்கள் ஒத்துழைத்தால்தான் மற்றவர்கள் உள்ளம் தியாகத்திற்கு சொந்தமாக இருந்தால்தான், விஞ்ஞான நுணுக்கங்கள் மூலம் முழுமை பெறும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களை யெல்லாம் காணுகிற இந்த நேரத்தில், என் உள்ளத்திலே ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. உண்மையிலேயே அந்த உணர்ச்சியைப் பெறுகிறேன். ஜாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று நான் நம்புகிறேன். நீங்கள் முயற்சித்தால், நீங்கள் முனைந்து நின்றால் இந்த நாட்டில் நடைபெறும் கொடுமைகள் நீக்கப்படும் என்று அண்ணாவும் ஐயாவும் சொல்லியிருந்தாலும், அவர்களின் கடைசித்தொண்டனாக நான் இன்று முதலமைச்சராக இருந்தாலும் நான் அதைச் சொல்வதில் பெருமையடைகிறேன்.

மனிதன் தன்னுடைய சுய அறிவோடு இருக்கிற போதே தவறுகள் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. படித்தவர்களாக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும் தவறு செய்வது தவிர்க்க முடியாதது. அப்படியிருக்கும்போது சுய நினைவையும் இழந்து நாம் பல தவறுகளைச் செய்யும்போது நம்மை ஏதோ ஒரு மயக்கத்திற்கு உள்ளாக்கக் கூடிய வகையில் நம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டால், நீங்கள் அனைவரும் உங்கள் முன்னால் சொல்கிற இந்தச் செய்தி, தமிழகம் முழுவதும், இந்தியா முழுவதும் பரவவேண்டும். மது அரக்கன் என்ற பேயை நாம் தமிழகத்திலிருந்து விரைவில் ஓட்டியாக வேண்டும்.

நான் தஞ்சைக்குச் சென்றபோது, மூன்று தாலுக்காக்களில் மதுவை அறவே மக்களாகவே ஒழித்து விட்டார்கள் என்பதையும், அங்கே மக்களாகவே ஒரு மாநாட்டை நடத்தினார்கள் என்பதும், இங்கே நான் வரும்போது, மக்கள் ஒன்றுபட்டு நாட்டிலே நன்மையை உருவாக்குவது என்ற முடிவுக்கு வந்தால் அதைத் தடுக்கும் சக்தி எதற்கும் இருக்க முடியாது.

மாணவர்கள் கல்வி பயிலத்தான் வேண்டும் என்பதில் எனக்குள்ள ஆர்வத்தை அதிகமாகச் சொல்லி, பெருமைப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. மூன்றாவது வகுப்பு வரையில் படித்து, ஏழ்மையின் காரணமாக அதற்குமேல் படிக்க முடியாமல் நாடகத்தில் சேர்ந்து வேலை செய்துதான் சம்பாதிக்க வேண்டும், வேறு வழியில்லை என்ற நிலை எப்படி ஏற்பட்டதோ அது போல் எத்தனையோ குழந்தைகள் இன்று வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது. அவர்களுக்கு எலலாம் கல்வி அளிப்பதன் மூலமும் அவர்களை இந்தியா முழுவதும் மட்டும்

இல்லாமல் உலகத்தில் ஆங்காங்கு இருக்கிற நல்லறிவாளிகள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், பகுத்தறிவுவாதிகள், அத்தனை பேரும் பாராட்டி, நல்லவர்களை, திறமையாளர்களை, அங்கே காண வேண்டும், தமிழகத்தில்தான் மீண்டும் காணவேண்டும், அந்தப் புகழ் மீண்டும் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டும் என்று நாம் எல்லாரும் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும் என்பது என் பணிவான வேண்டுகோளாகும்.

அதோடு மட்டுமல்ல, கல்வி பயிலுபவர்கள், ஏதோ படித்துப் பட்டம் பெறுகிறோம் என்று இல்லாமல், நாம் ஒருவர் கல்வி பெறுவதன் மூலம், 1,000 பேருக்காவது மக்களுக்காவது வாழ்வு தர இந்த வாலிய வயதில், இளமைப் பருவத்தில் கொள்ளும் அந்தக்கொள்கையை, உறுதியைப் பெற்றாக வேண்டும். அதேபோல் தொழிலாளப் பெருமக்கள், இந்த நாட்டில் உழைக்கிறவர்கள், ஏதோ யாருக்கோ அடிமையாக இருக்கிறோம் என்று எண்ணாமல், அந்த எண்ணத்தைத் தூக்கியெறிந்து விட்டு, இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் நாம் என்ற எண்ணத்தில், உழைப்பவர்கள்தான் உரிமை படைத்தவர்கள் என்ற நிலையில் அவர்கள் நல்ல உணர்வோடு அந்த எண்ணத்தைப் பெற்று, தொண்டு செய்ய வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் வேண்டிக் கொள்கிறேன்.

இந்தக் கஷ்டங்கள், துன்பங்கள், வரினும், நம்மைக் காப்பதற்காகவே வருகின்றன என்று எண்ண வேண்டும். இன்றைய தினம், விவசாயிகள் யாருடைய கைப்பாவையாகவும் இல்லாமல், தம்முடைய தேவையை, தங்களுக்கு இருக்கிற கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி, விவாதத்தின் மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் அனைத்துப் பிரச்சினைகளிலும் ஒரு நல்ல நிலைமையை உருவாக்கி இருப்பதை எண்ணி நான் உண்மையிலேயே பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஒவ்வொரு மனிதனும் எத்தனை காலம் உயிரோடு வாழ்கிறான் என்று கருதாமல், இந்த இடைக் காலத்தில் என்னென்ன நற்பணிகளைச் செய்தான் என்று கணக்கிட்டுப் பார்த்து நாம் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்று எண்ணி, பதவிகள் என்னென்ன பெற்றோம் என்பதைப் பார்க்காமல், நல்லதை எவ்வளவு செய்து இருக்கிறோம் என்று எண்ணினால்,

படுதா ?

பல ஆண்டுகளுக்கு முன் சென்னை ஒற்றைவாடைக் கொட்டகையில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரின் 'வள்ளுவம்' என்ற புதுமையான நாடகம் நடைபெற்றது. திருக்குறள் நெறி பரப்பும் அரிய நாடகம் இது.

என். எஸ். கே. — மதுரம் இணைந்து நடித்த காட்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது. அந்தக் காட்சி முடிந்தவுடன் திரையை விட மறந்து விட்டார் 'சீன்' தொழிலாளி. "திரையைப் போடு!" என்று எப்படி பகிரங்கமாகச் சொல்வது?

கலைவாணரின் நுண்ணறிவில் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. தம்முடன் நடித்துக் கொண்டிருந்த மதுரம் அம்மையாரை நோக்கி, "என்ன, நான் இவ்வளவு நேரம் சொன்னது உன் மனசிலே படுதா?...படுதா?... படுதா?" என்று ஒரு புதிய புதிர் உரையாடலைச் சமயோசிதமாகக் கற்பனையாகப் பேசினார். 'படுதா' என்ற சொல்லிலே அழுத்தம் கொடுத்து நகைச்சுவை ததும்ப அவர் பேசியதை 'சீன்' தொழிலாளி புரிந்து கொண்டு, 'சட்'டென்று முன் பக்கப் படுதாவை விட்டுக் காட்சியை முடித்தார். நுண்ணறிவுமிக்க என். எஸ். கே. யின் "படுதா?" வசனத்தை நன்கு புரிந்து கொண்ட அவையோர் அனைவரும் அரங்கம் அதிரக் கையொலி செய்ததை மெய்சிலிர்க்க நேரில் கண்டு மகிழ்ந்தேன்.

தகவல்:

—புத்தனேரி சுப்பிரமணியம்.

நமது எண்ணத்தை மாற்றிக் கொள்ள முடியும் என்ற உணர்வை, உறுதியை—தமிழகத்தில் இருக்கிற பெரும்பாலான மக்கள் நன்றாகப் பதிய வைத்து, தன் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள அரசோடும், மற்றவர்களோடும் ஒத்துழைக்க வேண்டும்.

தமிழக அரசு பல வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறுகிறபோது, வழக்குகளைப் போடுவதால் ஒரு அரசுக்குப் பெருமை வந்துவிடாது, அப்படிப் பெருமைப்படுகிறது என்று சொல்வதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் வழக்குகளே இல்லாமல், எந்தக் குற்றங்கள் செய்தாலும் கேள்வி கேட்பார் இல்லை என்று சொல்வது தொண்டுக்கு ஆதாரமாக அமையாது என்பதை அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சொன்னால் மக்கள் அதை அனுமதிக்க மாட்டார்கள். பழி வாங்கும் தன்மை தமிழக அரசுக்கு நிச்சயமாக இல்லை. அப்படி எந்தக் காரியத்தையும் செய்யாது என்று அமரர் அண்ணாவின் மீது ஆணையிட்டுச் சொல்லிக் கொள்கிறேன். உண்மை என்று இருந்தால்தான் நியாயமாக காரியங்கள் நடக்கிறது என்று இருந்தால்தான் இந்த அரசு ஈடுபடுமே ஒழிய—பழிவாங்கும் காரியங்களில் தவறான செய்கையில் இந்த அரசு ஈடுபடாது.

இந்த நேரத்தில் உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். என்னிடமோ, என்னுடன் இருப்பவர்களிடமோ, அரசாங்க அதிகாரிகளிடமோ, அரசு செயலாளர்களிடமோ, தலைமைச் செயலாளர் அவர்களிடமோ, காவல் துறையினரிடமோ தவறுகள் இருந்தால் சுட்டிக் காட்டுங்கள். அவர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்ற உறுதி கூறும்போதே, அப்படி தவறுகள் இருந்தால், மக்கள் சுதந்தரமாக அதை சுட்டிக் காட்டக்கூடிய நிலையில் இருக்கிறோம் என்ற நம்பிக்கையும் ஆசையும் ஆகும். இந்த அரசு மீது, அரசு அதிகாரிகள் மீது, உங்களுக்கு ஏதாவது தவறான செய்திகள் கிடைத்தால் தயவு செய்து இந்த அரசுக்கு தெரியப் படுத்தலாம். அதை நான் வரவேற்கிறேன்.

இந்தச் சுதந்தரம் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். ஒருவன் லட்சாதிபதியாக ஆகி விட்டால் மட்டும் முழு வாழ்வு பெற்றவனாகி விடமுடியாது. வாழ்வுக்கு

நிரந்தரமான உத்தரவாதம் தேவை. குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் என்ன நிலைமை ஏற்படுமோ என்ற ஏக்கம், அச்சம் எந்தத் தாய் தந்தையர்க்கும் இருக்கக் கூடாது. அந்த நிலைமையை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். எங்கள் குடும்பத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அதை அரசு பார்த்துக் கொள்ளும். எங்கள் கடமையைச் செய்வோம் என்ற நம்பிக்கையான சூழ்நிலை என்று உருவாகிறதோ, எல்லோரும் சமநிலை, சமத்துவ சமதர்ம சமுதாயத்தை அமைக்க என்று நாம் பாடுபடுகிறோமோ அன்றுதான் நமக்கு நல்வாழ்வு ஏற்படும். அந்த உறுதியான நம்பிக்கை ஒன்றுதான் இந்த நாட்டிற்கு வாங்கித் தந்த சுதந்தரமாகும். அப்படிக் கிடைத்த சுதந்தரத்தின் சொந்தக்காரர்களாக இருக்க முடியும். சமுதாயத்தில் மறுமலர்ச்சியும் மாற்றமும் தேவை. பொருளாதார அடிப்படைத் திட்டங்களை மாற்றியாக வேண்டும். அடுத்த தலைமுறை நாட்டில் பிரச்சினையைச் சந்திக்கக் கூடாத வகையில் நாம் திட்டங்களைத் தீட்டியாக வேண்டும்.

துரித கதியில் சொல்கிற எந்தக் கருத்துரையாக இருந்தாலும் கூட கடைசி வரையில் அந்தக் காரியத்தை நாம் முடித்தேயாக வேண்டும். அப்படிப் பட்ட திறமைசாலிகளை நாம் உருவாக்க வேண்டும். திறமை சாலியாக இருந்தால் மட்டும் போதாது. புகழும் இருந்தாக வேண்டும். சமுதாயத்தையும் பொருளாதாரத்தையும் இந்திய சுதந்தரத்தையும் நாம் ஒருமைப்படுத்தி, நாம் பணிபுரிய வேண்டும். அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். சில கோடிகளை வைத்திருக்கிற ஒரு சில பெரிய மனிதர்களுக்காக மட்டும் இல்லாமல், ஏழை மக்கள், உழைக்கும் வர்க்கத்தினருக்கு இந்தத் திட்டங்கள் பயன்பட வேண்டும் என்று சொல்லக்கூடிய வகையில் வேலையில்லாமல் மக்கள் இருப்பதற்கு மாறாக எல்லோருக்கும் வேலை என்ற நிலை வரவேண்டும். மற்ற மனிதர்கள், எந்த எந்த வசதியை—தேவையான அளவுக்குப் பெற்று வாழ்கிறார்களோ அதைப்போல் வாழ்கிற நிலைமை தமிழகத்தில் மட்டும் அல்ல, தமிழகத்தின் மூலமாக, இந்தியத் துணைக் கண்டம் பூராவுக்கும் பரவ வேண்டும் என்ற ஆசை, அண்ணாவின் கொள்கையின் விளைவை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த விளைவை நாம் அறுவடையாக்கிக் கொள்ளத் தயாராக வேண்டும். அந்த அறுவடையை எப்படிச் செய்வது என்று சொல்லும்போது, பயிர்களை அரிவாளால் அறுத்து அதை நெல் மணிகளாக ஆக்கும்போது நாம் பயனடைகிறோம்; அந்த அரிவாள் மக்களை அறுக்கப் பயன்படக் கூடாது. அது மக்களை வாழ்விக்க வேண்டும்.

நாம் குழந்தைகளை, இளைஞர்களை இப்போதே நாம் நமது தொண்டைச் செய்ய, புதிய சமுதாயத்தை உருவாக்க அவர்களை தயார் செய்யவேண்டும். பொருளாதாரச் சமத்துவத்தை உருவாக்கி, ஒன்றுபட்டு வாழும் நிலைமைக்கு இந்த நாட்டில், ஐயாவும், அமரர் அண்ணாவும், ராஜாஜியும், காமராஜர் அவர்களும் பாடுபட்டார்கள். அந்தக் கொள்கையை நிறைவேற்றும் அளவுக்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு மகாத்மா காந்தியை நினைதது இந்த அறப்போரில் வெற்றிபெற்று, எத்தனை தடைகள் இருப்பினும் அவைகளை தகர்த்தெறிந்து நாம் நமது கொள்கையை பெற்றாகவேண்டும்.

அதே போல், நம்முடைய இந்தப் புதிய சமுதாயத் திருத்தத்திற்குப் பொருளாதார அமைப்பை மாற்றி, ஒற்றுமையையும் உழைப்பையும் பயன்படுத்தி வெற்றி பெறும் வகையில் அறவழியில் உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்று தமிழ்ச் சமுதாயத்து மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய கடமையைச் செய்ய பின் வாங்கமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தாலும், அந்தக்கடமையைச் செய்யும்போது உங்களுக்குப் பாதுகாப்புத் தருகிற வகையில் காவல் துறையும், இராணுவமும் தயாராக இருக்கும். இந்தத் தியாகத்தைச் செய்யவும், உங்களுக்குப் பாதுகாப்புத் தரவும் தயாராக இருக்கிறார்கள். குறைகள் எங்கிருந்தாலும் சுட்டுக்காட்டிடுங்கள். என்னிடம் இருந்தாலும் சொல்லுங்கள் என்று கூறி, **இந்த சுதந்தர நாளில் நாம் சுதந்தர மக்களாக வாழவேண்டுமென்று கூறி, நாம் அத்தகைய முடிவுக்கு வந்து விட்டோம் என்று சொல்லி, புதிய பொருளாதார அமைப்பை, புதிய சமுதாயத்தை) அமைப்போம் என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தமிழக மக்கள் அனைவரையும் கை கூப்பி வேண்டிக்கொள்வது எனது கடமையாகும். ஒரு மனதோடு இருங்கள், ஜாதி பேதத்தை ஒழியுங்கள், மத நம்பிக்கையின் பெயரால் நாமே பிளவுபட அனுமதிக்காதீர்கள் என்று உங்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.**

சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிட இன்றைய தினம் சபதம் ஏற்போம் என்று கூறி, இந்தச் சுதந்தரத்தை நாம் எங்கே இருந்தாலும், காஷ்மீரோ கன்னியா குமரியோ எங்கிருந்தாலும் ஒன்றாகச் சேர்ந்து பாதுகாப்போம் என்று கூறி, இந்தச் சுதந்தரத்தை எந்தத் தியாகம் செய்தாவது காப்போம், காத்தே தீருவோம் என்ற உறுதி மொழியை எடுத்துக் கொண்டு,

இந்திய சுதந்திரம் வாழ்க ! இந்திய மக்கள் வாழ்க ! தமிழக மக்கள் வாழ்க! தமிழ் நாடு வாழ்க, அண்ணா நாமம் வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

[விடுதலை நாளன்று, சென்னைக் கோட்டையில் கொடியேற்றி வைத்து முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை]

கிராமப் பகுதிகளில் குடும்ப நலத் திட்டம்!

குடும்ப நலத் திட்டத்தைக் குறிப்பாக கிராமப்புறங்களில் தீவிரமாக்கச் செயல்படுத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கல்வி, சுகாதாரம், மகப்பேறு, குழந்தை நலம், குடும்ப நல் வாழ்வு, பெண்கள் உரிமை, சத்துணவு ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான கொள்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

மகப்பேறு மற்றும் குழந்தை சுகாதாரப் பணிகளை வளரச் செய்ய தனிக்கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. உள்ளூர் தாதிகளுக்குப் பயிற்சியளிக்கும் மாபெரும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் சமுதாய சுகாதார நல்வாழ்வுத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குடும்பநலத் திட்டத்தை மக்களிடையே தீவிரமாகப் பரப்புவதற்குக் கல்வி மற்றும் பிரசார இயக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1978 செப்டம்பர் மாதம் குடும்பநலத் திட்ட சிறப்பு நிகழ்ச்சிகளின் இரு வாரக் கொண்டாட்டம் கடைப் பிடிக்கப்படும்.

எல்லாரும் எல்லாம்பெற தொடர்ந்து தொண்டாற்றுவோம்

முதல்வர் உரை

வணக்கத்திற்குரிய தமிழகப் பெரியோர்களே!

அன்புக்குரிய தாய்மார்களே!

எனது ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே!

இன்று இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலை நாள்!

அந்நிய ஆட்சியின் பிடியிலிருந்து இந்திய நாடு விடுதலை பெற்ற 31வது ஆண்டினைக் குறிக்கும் இந்த நல்ல நாளில் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த நல்லோர், அதனைப் பாதுகாத்து, நாட்டின் நிலையை உயர்த்திட நாளும் பாடுபடும் அனைவருக்கும் நன்றி வணக்கம், செலுத்திடும் நல்ல நாளாக இந்நன்னாள் அமைந்துள்ளது.

விடுதலைக்கு வழிகோலிய தியாக மறவர்களுக்கு வீர வணக்கம் செலுத்திடும் இந்நாளில், அந்தத் தியாகிகளால் உருவாக்கப்பட்ட சுதந்திர நாட்டில், தமிழகத்தின் அரசுப் பொறுப்பினை ஏற்று அமரர் பேரறிஞர் அண்ணாவின் கொள்கையினைச் செயலாக்க வாய்ப்பளித்த தமிழக மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை, எளிய, உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்காகவும், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்கிற வேற்றுமை அகலவும், நாட்டின் உயிர்நாடியாகிய கிராம மக்கள் எல்லா வசதிகளையும் பெற்று நிறைந்த வாழ்வு பெறவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம் என்றும் இந்நன்னாளில் உறுதி கூறுகிறேன்.

சுதந்திரம் என்பது புறத்திலும், அகத்திலும் இருக்க முடியாது. அதே நேரத்தில் புறத்திலும், அகத்திலும் சில கட்டுப்பாடுகள் இருந்தாக வேண்டும்.

ஒரு மனிதன், அவன் எந்த மொழியைப் பேசுகிறவனாக இருந்த போதிலும், அவன் தன்னுடைய உள்ள உணர்வுகளை வெளியிட, அவற்றை உண்மையாகப் பிரதிபலிக்க உதவுவது அந்தந்த மாநில மொழிதான் என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

இயற்கை வளத்தினை ஒரு மனிதன் தன் வாழ்வுக்காக மட்டும் பயன்படுத்த விரும்பக் கூடாது. இந்த நிலைமை உள்ளத்திலும், புறத்திலும் இருந்தாக வேண்டும்.

மன நிறைவு என்பது அந்தந்த மனிதனுடைய அவசியத் தேவைகள், முழுமை பெறுவதால் மட்டும் ஏற்பட்டு விடாது. ஆற்றலும், அறிவும், விஞ்ஞான நுணுக்கத் திறமையும் மனித வாழ்வின் வளத்துக்கு — குறிப்பாக எதிர்கால உலகத்திற்கு உத்தரவாதமாகப் பயன்படக்கூடிய நிலைமை உருவாக்கப் பட வேண்டும்.

திறமையும், அளவிடற்கரிய அறிவும், ஆற்றலும் ஒருவர் பெற்றிருந்தாலும் கூட, இன்னொருவருடைய உழைப்பு—அறிவு — கல்வித் திறன் ஆகியவற்றின் உதவியின்றி வாழ முடியாது. அதுபோல் எந்த ஒரு தனி மனிதனும் தனக்காக மட்டுமே உழைப்பது என்று நினைத்தாலும், வாழ்க்கை முறையில் அது பிறருக்குப் பயன்பட்டே தீரும். இதை முழுமையாக உணர்ந்தால், பொது சுதந்திரத்தின் சிறு அங்கம்தான் தனி மனித சுதந்திரம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.,

தனி மனித சுதந்திரத்தின் மொத்த உருவம்தான் ஒரு நாட்டின் சுதந்திரம். அந்த நாட்டின் சுதந்திரம்தான் அந்த நாட்டு மக்க

யான வளமான வாழ்க்கைக்குத் தரும் உத்தரவாதமாகும்!

அனைத்து மக்களின் தியாக உணர்வில்தான் எதிர்காலச் சந்ததிகளின் சுதந்திரம் உறுதி செய்யப்படுகிறது. இதில் சாதியோ—மதமோ, உயர்வோ—தாழ்வோ மற்றும் உழைக்காதவர்—உழைப்பவர், வசதி மிக்கவர்—வசதியற்றவர் என்ற பேதங்களின் இடர்ப்பாடுகள் குறுக்கிட அனுமதிக்காமல் இருப்பதுதான் ஒவ்வொரு தனி மனிதனுடைய கடமையாகும். அந்தக் கடமையை நிறைவேற்றி, இந்தியத் துணைக் கண்டத்திற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த மகாத்மா காந்தி அடிகளையும், அவரைப் பின் தொடர்ந்து இந்தியச் சுதந்திரத்திற்குத் தியாகம் செய்த அனைவரையும் இந்த நேரத்தில் வாழ்த்தி வணங்குவது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்!

அரசியலை, ஒரு நாட்டிற்கு விடுதலை வாங்கித் தருவது என்ற நோக்கத்தோடு மட்டுமல்லாமல், சமுதாய அமைப்பிலுள்ள குறைபாடுகளையும், மனித மனத்திலிருந்த தவறான நம்பிக்கைகளையும் போக்கவும் மகாத்மா பாடுபட்டார். நமது நாட்டில் வாழும் மக்களுக்குச் சாதியாலோ—மதத்தாலோ உயர்வு தாழ்வு கற்பிப்பதை நீக்கி—சமத்துவ சுதந்திர உரிமை கிடைப்பதற்கும் ஏழை—பணக்காரர் என்ற நிலையை மாற்றி உழைப்பவர்கள் அனைவரும் நல்வாழ்வு பெறவும் பயன்படுத்த வேண்டுமென்று அய்யா பெரியார், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராசாசி போன்ற பெரியவர்கள் உழைத்ததன் பலன் இன்னமும் முழுமை அடையவில்லை.

ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒழுங்கிற்கும்—அதன் வாயிலாக ஒழுக்கத்திற்கும் சொந்தக்காரராக ஆக்கிக் கொள்ளவும் — மது, சாதி வெறி, மத வெறி போன்றவற்றின் பிடியிலிருந்து விடுபடவும் மகாத்மாவிலிருந்து இப்போது குறிப்பிட்ட அனைவரும், அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் அக்கறையோடு, இன்னமும் உழைக்கின்றனர்.

மக்களும், குறிப்பாக அரசியல்வாதிகளும் மனத்தூய்மை உள்ளவர்களாகவும் புனிதமானவர்களாகவும் இருந்தாக வேண்டுமென்ற தத்துவத்தைப் பின்பற்ற வேண்டியது நம் ஒவ்வொருவருடைய நீங்காக் கடமையாகும். அதுவே தனி மனித சுதந்திரத்திற்கு அடிப்படை என்பதை இந்த நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் நினைவுபடுத்திக்கொண்டு, அந்த அறவழியில் ஒருமை உணர்வோடு — ஒன்றுபட்ட மனத்தோடு — ஓய்வில்லா உழைப்பைத் தந்து நாட்டின் சுதந்திரத்தை மட்டுமல்லாமல், தனிமனித சுதந்திரத்தையும்— "உழைப்பவரே உயர்ந்தவர்" என்ற பேரறிஞர் அண்ணாவின் தத்துவத்தையும் காப்பாற்றுவோம் என்று இந்தச் சுதந்திர நாளில் நாம் எல்லோரும் உறுதி எடுத்துக் கொள்வோம்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''

''நாம் எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் ஓர் இனம்''

"நான் சென்றிருந்தால்...?"

பல வருடங்களுக்கு முன், டில்லியில் தென்னிந்தியக் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்தக் குழுவின் தலைவராகக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் சென்றிருந்தார்.

அவரது நிகழ்ச்சிகள் முடிந்தன. உடனே, அன்று இரவே சென்னைக்கு விமானத்தில் புறப்படத்தீர்மானித்தார் கலைவாணர். அன்று மாலை ருஷ்ய ஸ்தானீகர் மாளிகையில் நடக்கவிருக்கும் வரவேற்பு விழாவில் கலைவாணரும் கலந்து கொண்டால்தான் சிறப்பாக இருக்கும் எனக் கருதினார்கள் சக கலைஞர்கள். கலைவாணரோ, அதற்காகப் பிரயாணத்தை ஒத்தி போடவிரும்பவில்லை. உடனே கலைவாணர் நண்பர்கள் ஒரு சூழ்ச்சி செய்தார்கள். அன்று செல்வதற்கு விமானத்தில் இடமில்லையென்று சொல்லிவிட்டு, மறுநாள் 'புக்' செய்யும்படி அவரது காரியதரிசியிடம் தெரிவித்துவிட்டனர். அவரும் அப்படியே செய்தார். விருந்து சிறப்பாக நடைபெற்றது- கலைவாணர் கலந்து கொண்டதால்.

மறுநாள் காலை பத்திரிகையில், முதல் நாள் இரவு புறப்பட்ட விமானம் நாகபுரியில் கோர விபத்துக்குள்ளாகி எல்லோரும் மாண்டதாகச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. செய்தியைப் படித்துத் திடுக்கிட்ட சக கலைஞர்கள் கலைவாணரிடம் தாங்கள் செய்த தந்திரத்தைச் சொன்னதோடு, ''நல்ல காலம்! நீங்கள் அந்தப் பிளேனில் போகாமல் பிழைச்சீங்க!" என்றனர்.

அதற்கு உடனே அவர் ''அட போங்கய்யா! நான் அந்தப் பிளேனில் போயிருந்தா அதுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டிருக்காது. பத்திரமா என்னையும், மத்தவங்களையும் சென்னையிலே கொண்டு போய்ச் சேர்த்திருக்கும். நான் போகாததால்தான் அது விபத்துக்குள்ளாயிருச்சு'' என்று வருத்தத்துடன் சொன்னார்.

அங்குச் சில நிமிடங்கள் மௌனம் நிலவியது!

நன்றி: 'ஆனந்த விகடன்'.

என்ற உடன்பிறப்புணர்வோடு ஒன்றுபட்டு, அனைத்து மக்களும் சமத்துவத் தகுதியோடு, சமதர்ம உரிமையோடு, நமது நாட்டின் சுதந்திரத்தை—நாட்டின் ஒற்றுமையை—நமது தமிழ் மொழியைக் காப்போம் என இந்தச் சுதந்திர நாளில் அண்ணா மீது ஆணையிட்டு நமது கடமையை நிறைவேற்ற ஒன்றுபடுவோம்!

வாழ்க இந்திய சுதந்திரம்!
வாழ்க இந்திய மக்கள்!
அண்ணா நாமம் வாழ்க!

(வானொலி—தொலைக்காட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 15—8—78 அன்று ஆற்றிய உரை)

தமிழ்ப் பெரியார் என்.எஸ்.கிருஷ்ணன்

—வ.ரா.

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன், (1940இல் என்று நினைக்கிறேன்) ஒரு நாள் சாயங்காலம், நான் சென்னை ரேடியோ நிலயத்திற்குப் போய்க் கொண்டிருந்தேன். அன்றைக்கு, ரேடியோவில் என்னுடைய 'புரோகிராம்' ஒன்று இருந்தது. அதற்காக நான் போனேன்.

ரேடியோ நிலயத்துக்கு வெகு சமீபத்தில், ஒரு 'பார்க்' (காற்று வாங்குவதற்காக, பெஞ்சுகள் போட்டிருக்கும், செடிகள் நிறைந்த தோட்டம்) இருக்கிறது. அங்கே ரேடியோ செட் ஒன்று உண்டு. அன்றைக்கு நூற்றுக் கணக்கானவர்கள் பெரும்பாலும் பாமரர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள்--கூடியிருந்தார்கள்.

என்னோடு ஒரு நண்பர் வந்தார். 'ஏது, இத்தனை பேர்கள் கூடியிருக்கிறார்களே, என் புரோகிராமைக் கேட்பதற்காக' என்று கேலியாக, அந்த நண்பரைக் கேட்டேன். 'இல்லை, உங்களுக்கு முன், என். எஸ். கிருஷ்ணன் புரோகிராம் ஒன்று இருக்கிறது. அதைக் கேட்க, நூற்றுக்கணக்கானவர்கள் இங்கே கூடியிருக்கிறார்கள். உங்களுக்காக என்று எண்ணிக்கொண்டிருக்க வேண்டாம்' என்று நண்பர் விளக்கமாக எடுத்துச் சொன்னார்.

ஸர். சி. வி. ராமன் ரேடியோவில் எவ்வளவு அழகாகப் பேசுகிறார். நுட்பமாயிருக்கும் ஸயன்ஸ்ஸை, தெளிவாக எடுத்துச் சொல்லுகிறார். அவர் பேசுவதில் விஷயம் இருக்கிறது; நகைச்சுவை ததும்புகிறது. அப்படியிருந்தும், அவரது பேச்சைக் கேட்பதற்கு, நூற்றுக் கணக்கானவர்கள் கூடுவதில்லை. அழகாக அவர் தமிழில் பேசினாலும், கூடமாட்டார்கள் என்பதே என் கருத்து.

ராமனும் மேதாவி; கிருஷ்ணனும் மேதாவி. புராண ராமனையும் கிருஷ்ணனையும் பற்றி நான் சொல்லவில்லை. பூலோகத்தில், தற்காலத்தில் உலகப் புகழோடு வாழும் ஸர். சி.வி. ராமனையும், எப்பொழுது பேசப்போகிறார் என்று நூற்றுக்கணக்கானவர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கும் என். எஸ். கிருஷ்ணனையும் பற்றித்தான் நான் பேசுகிறேன். அவதாரங்களைப் பற்றி அல்ல.

பாமர ஜனங்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்களையும் துயரங்களையும் சில நிமிஷங்களுக்கேனும் மறக்கப் பார்க்கிறார்கள். காசில்லாமல் சந்தோஷத்தைப் பெற வேண்டும். காசு இல்லாமல், ரேடியோ மூலமாக சந்தோஷத்தைக் கொடுக்கும் கிருஷ்ணனை, அவர்கள் ஏன் தெய்வமாகக் கும்பிடமாட்டார்கள்?

சமீபத்தில், கிருஷ்ணனுடைய ஆக்டை ஒரு சினிமாப் படத்தில் பார்த்தேன். நான் பிரமித்துப் போனேன். கழைக் கூத்தாடிகளின் கூட்டத்தில் (படத்தில்) கிருஷ்ணன் இருக்கிறார். அவர்கள் வித்தை காண்பிக்கப் போவதை, கிருஷ்ணன் அறிவிக்கிறார், இந்த அறிவிப்பிலே, சாதுத்தனமான கொனஷ்டை.

முதலிலே, 'பாம்புக்கும் கீரிக்கும் கல்யாணம்—இல்லே—சண்டை' என்கிறார். பாம்புக்கும் கீரிக்கும் சண்டை என்று எப்பொழுதும் கேட்டுப் பழகியிருப்பவர்கள் சண்டைக்குப் பதிலாகக் கலியாணம் என்று கேட்டதும் கல கலவென்று சிரிக்கிறார்கள். கிருஷ்ணன், கலியாணம் என்று சொல்லும் விதமே அலாதியாக இருக்கிறது.

இன்னொரு அறிவிப்பு, 'இதோ கையிலிருக்கிற மாங்கொட்டையிலிருந்து, கூடையிலிருக்கிற மாஞ்செடியை வரவழைப்போம்' என்று வித்தை ரகசியத்தை விகடமாகவும் வேடிக்கையாகவும் ஆனால் சாதுத்தனமான குரலோடு, இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்பதைப் போல முகத்தை வைத்துக் கொண்டு, கிருஷ்ணன் சொல்லும் பொழுது தாங்க முடியாத துயரம் நேர்ந்திருந்தாலும் அதை உதறித் தள்ளி விட்டு, சிரிக்கத்தான் தோன்றும்.

அவர் நடக்கிற நடையும் நிற்கிற நிலையும், பேசுகிற குரலும், விழிக்கிற விழியும், எல்லாம் நம்மிடத்தில் சிரிப்பை அடிவயிற்றிலிருந்து கிளப்பத்தான் செய்கிறது.

ஹாஸ்யத்திலே, எந்த ரகம் மிகவும் உயர்ந்தது? பத்துப் பேர்கள் கூடியிருக்கிற இடத்தில் எல்லோரும் சிரிக்க வேண்டும் அப்படி எல்லோரும் சிரிக்காமல், ஒரி சமுதாயமாக ரண்டு பேர்கள் தலைகுனிந்து கொண்டு, அவமா

ணம் அடைந்தவர்களைப் போல் இருக்க நேரின், அந்த விகடம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது அல்ல.

தன்னைத் தானே நொந்து கொள்ளுவது மாதிரி சொல்லி எல்லோரையும் கல கல வென்று சிரிக்கச் செய்வதுதான் உயர்ந்த ரகமான விகடமாகும். கிருஷ்ணன் பிறரைக் கேலி செய்யும் விதமே விநோதமாயிருக்கிறது. யாரை அவர் கேலி செய்து, கிண்டல் பண்ணுகிறாரோ, அவரும் சேர்ந்து சிரிக்கும்படியான விதத்தில், கிருஷ்ணன் கேலி செய்கிறார்.

கிருஷ்ணன் பிறருடைய உள்ளத்தைக் குத்திப் பிளக்கிறதில்லை. அவர் பிறருடைய உள்ளத்தை விரியச் செய்கிறார்; அதை விளையாட்டுப் பொம்மையாக அடித்துவிடுகிறார்.

நான் சிரிக்க மாட்டேன் என்பது போல வாயைக் கெட்டியாக மூடிக் கொண்டிருப்பவர்களையும் கோட்டை வாசல் திறந்தது போல, வாயைத் திறந்து பார்த்துக் கொண்டே இருக்கும்படியாக கிருஷ்ணன் செய்து விடுகிறார்.

கிருஷ்ணன் படத்தில் இருந்தால், அவர் கையை அசைத்தாலும் போதும். அதை ரசிப்பது என்று ஜனங்கள் இப்பொழுது கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது கிருஷ்ணனுக்கு கிடைத்திருக்கும் பாக்கியம் அல்ல. **அது கிருஷ்ணன் செய்யும் வித்தையின் பயனாகும்.**

'ஓகோ, அப்படியா' என்று ஒன்றும் அறியாத அப்பாவி போல, கிருஷ்ணன் பேசும் போது, அந்தக் குரலில் ஏதோ காந்தம் இருந்து கொண்டு, ஜனங்களை அப்படியே இழுக்கிறது.

இங்கிலீஷ் படித்து விட்டு, நாகரிகத் தூண்கள் என்று தங்களை எண்ணிக் கொண்டிருப்பவர்களில் பலர், என்னிடம் கிருஷ்ணனைப் பற்றி, வாதாடியிருக்கிறார்கள். முன் பின் பார்த்திராத நகைச்சுவையும் ஆக்டும் கிருஷ்ணனிடம் இருக்கின்றன என்பது என் கருத்து. படித்த நண்பர்களில் பலர் இதை ஏற்றுக் கொள்வது இல்லை. கிருஷ்ணன் ஆக்டிலே பிரமாதமாக ஒன்றும் இல்லை என்று அவர்கள் அதட்டிப் பேசுவதைக் கண்டால் எனக்குச் சிரிப்பு வரும்.

சார்லி சாப்ளின் பக்கத்தில் நிற்கக் கூடக் கிருஷ்ணனுக்குத் தகுதியில்லை என்று அந்த நண்பர்கள் (தமிழில் அல்ல) இங்கிலீஷில் இடி இடிப்பதைப் போலச் சொல்லுவார்கள். தமிழ் இங்கிலீஷைப் போல ஆகுமா என்று தமிழன் என்ற உணர்ச்சியே இல்லாமல் பேசுகிற மனிதனிடம் எந்த வாதமும் செல்லாது என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான்.

தமிழ் நாடு தங்கள் நாடு என்று பெருமையோடு பேசிக் கொள்ள முடியாதவர்களிடம் சுயமரியாதை கொண்ட தமிழர்களுக்கு உறவு இருக்க முடியாது. சுயமரியாதைக்காக, உண்மையை மறந்தும் மறைத்தும் பேசலாமா என்பது போலி வாதம். தனக்குத் தெரியாது என்று தன் குடும்ப நிர்வாகத்தை அந்நியனிடம் ஒப்படைக்க எண்ணம் கொள்ளும் மனிதனோடு வார்த்தை யாடுவதில் பயனில்லை.

பாமரர்களை லட்சியம் செய்யாதவர்கள் தான் கிருஷ்ணனை ரசிக்க மாட்டார்கள். நமது நாட்டினரின் வாழ்வு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் கிருஷ்ணனை ரசிக்க முடியாது. ஹாஸ்யம் நாகரிகமாயில்லையே என்று அவர்கள் சொட்டாவி விடுவார்கள். தரித்திரத்திலும் துயரத்திலும் ஆழ்ந்து கிடக்கும் மனிதர்களை அசட்டை செய்வது எளிது. அவர்களுக்கு உபகாரம் செய்யும் உத்தமர்களைக் கேவலமாகப் பேசுவது, அதைக் காட்டிலும் எளிது.

> **கலையின் சக்தி**
>
> **கலையையும், இலக்கியத்தையும் நான் பெரிதும் மதிக்கிறேன்; விரும்புகிறேன். ஏனென்றால் கோடிக்கணக்கான மக்களுடன் பேசும் சக்தி கொண்டவை அவை**
>
> **—அண்ணல் காந்தியடிகள்**

கிருஷ்ணன் தமிழ் மக்களைச் சிரிக்க வைக்கும் மகான். தமிழர்கள் தங்கள் துயரத்தைச் சில நிமிஷங்களேனும் மறக்கும்படியாகச் செய்யும் பெரிய உபகாரியான கிருஷ்ணனை மதிக்காதவர்கள், நாட்டின் பொதுநன்மைக்கு பாதகம் நினைப்பவர்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

கிருஷ்ணன் தமது சொந்த வாழ்க்கையிலும் பரம ரசிகன் என்பது மதுரத்தைத் தோழியாகக் கொண்டதே, தெளிவாகக் காண்பிக்கிறது. கிட்டப்பாவுக்குச் சுந்தராம்பாள் வாய்த்தது போல, கிருஷ்ணனுக்கு மதுரம் வாய்த்திருக்கிறார். இல்லை; தப்பிதம். சுந்தராம்பாளுக்குக் கிட்டப்பா வாய்த்தது போல மதுரத்துக்குக் கிருஷ்ணன் வாய்த்திருக்கிறார். இது தமிழ் நாட்டின் பாக்கியமாகும்.

தமக்குத் திருப்தி ஏற்படுகிற வரையில், கிருஷ்ணன் தங்கள் பார்ட்டை ஒத்திகை செய்து கொண்டேயிருப்பாராம். திருப்தி இல்லாமல் போனால், ஒலிப்பதிவு செய்யவும் படம் பிடிக்கவும் அவர் இணங்க மாட்டாராம். கிருஷ்ணனோடு வேலை செய்வது சுலபமானது என்றும் சுவாரஸ்யமானது என்றும் ஒலிப்பதிவு செய்யும் எஞ்சினியர் ஒருவர் என்னிடம் சொன்னார். தலைக்கனம் கொண்டவர்கள்தான் ஒத்திகையை அலட்சியம் செய்வார்கள்.

செய்வன திருந்தச் செய் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் கிருஷ்ணனை நான் வாழ்த்துகிறேன். பொறுப்பை உணர்ந்து புத்திசாலித் தனத்துடன் காரியம் செய்பவர்கள் தமிழ்நாட்டில் அனேகர் இல்லை. அந்தச் சிறு கூட்டத்தில், கிருஷ்ணன் ஒருவர். அனாயாசமாக, நம்மவர்களை நகைக்கச் செய்யும் சிறந்த மேதாவியாகிய கிருஷ்ணனைத் தமிழ் நாடு ஒரு நாளும் மறக்காது.

தமிழர்கள், நன்றி கொல்லும் தன்மையை கனவிலும் அறியாதவர்கள். கிருஷ்ணனுக்கு இதைக் காட்டிலும் உயர்ந்த வெகுமதியும் வேண்டுமா? கிருஷ்ணன் நாகர்கோயில் கிருஷ்ணன் அல்ல. அவர் தமிழ்நாட்டு முழுத் தமிழ்க் கிருஷ்ணன்.

('தமிழ்ப் பெரியார்கள்' என்ற நூலிலிருந்து..)

என் கடன் களிப்பூட்டுதலே



கலைவாணர் என்.எஸ்.கே

களிப்பு என்றால், இன்பம், சந்தோஷம், ஆனந்தம் என்பது தானே பொருள்? மனிதவர்க்கம் அல்லும் பகலும் உழைப்பது எதற்கு? தொண்டுகள் பல புரிவது ஏன்? கனலிலே குதிப்பதும், கடலிலே குளித்து முத்தெடுப்பதும், கடும் வெயிலிலே கல்லுடைப்பதும் ஏன்? எல்லாம் இந்தக் களிப்பை அடைவதற்குத் தானே? இதிலிருந்து, தங்கள் வாழ்க்கையில் இன்பத்தைப் பெறுவதற்குத்தான் மானிட வர்க்கம் கஷ்டப்பட்டு உழைத்து வருகிறது. இந்தக் களிப்பு அதாவது இன்பமானது, அவரவர்கள் வாழ்க்கைத் தரங்களுக்கேற்ற முறையில், வெவ்வேறு உணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

தொழிலாளி, முதலாளியிடம் கூலியைச் சற்றுக் கூட்டித் தர வேண்டுமென்று கேட்கிறான். வேலை செய்யும் பாட்டாளிக்கு, முதலாளி கூலியைக் கூட்டிக் கொடுத்து அவனுக்குக் களிப்பை யூட்டுகிறான். கூலியை அதிகமாகப் பெற்ற பாட்டாளியின் களிப்பு, அவன் மனைவிக்கு அழகான ஒரு சேலை வாங்கிக்கொண்டு போக வேண்டுமென்ற ஆசையாக மாறுகிறது. வீடு சென்ற பாட்டாளி, தன் மனைவிக்குச் சேலையைக் கொடுத்த அந்த அம்மையாருக்குக் களிப்பையூட்டுகிறான். புடவையை வாங்கிக் கொண்ட மனைவி, புருஷனுக்குக் கடைக்கண் பார்வையால் களிப்பூட்டுகிறாள். இந்தக் களிப்பானது இவ்விருவருக்குமிடையே இருந்த காதலைப் பெருக்குகின்றது.

ஒரு நல்ல எழுத்தாளன், அருமையான பல விஷயங்களை அறிந்து ஆராய்ந்து கட்டுரை எழுதிக் களிப்பூட்டுகிறான். இந்தக் களிப்பானது, நாட்டு மக்களுக்கு நன்மையான கட்டுரைகளையும், புத்தகங்களையும் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை உண்டாக்குகிறது.

மேடைப் பிரசங்கியொருவர், அரசியல் விவகாரங்களைப்பற்றி அருமையாகவும், தெளிவாகவும் எடுத்துச் சொல்லி, மக்களுக்குக் களிப்பூட்டுகிறார். இந்தக் களிப்பு மக்களிடையே தேச நலத்தில் அக்கறையை உண்டாக்குகிறது. இப்படிப் பலப் பல.

இதேபோல், என்போன்ற நடிகர்கள் ஹாஸ்யக் கலையின் மூலமாக மக்களுக்குக் களிப்பூட்டுகிறார்கள். இந்தக் களிப்பு, சிரிப்பை உண்டாக்குகிறது. ஆகவே, என் கடன் களிப்பூட்டி, மக்களைச் சிரிக்க வைப்பதேயாம்.

ஏன் சிரிக்கச் சொல்கிறேன் என்றால், சிரித்தால் உடம்பில் எந்தவிதமான வியாதியும் ஏற்படாது. இன்னும் ஆரோக்கியமாக வாழ்வதற்குச் சிரிப்பு மிக மிக அவசியமானது என்று அண்மையில் அமெரிக்க டாக்டரொருவர் ஆராய்ச்சி மூலம் தெளிவுப் படுத்தியிருக்கிறார். அவர் மேலும் சொல்லுகிறார்.

சிரிக்கும்போது, காற்றுப்பை விரிகிறது. அப்படி விரியும்போது அந்தக் காற்றுப் பையில் பிராண வாயு அதிகமாகப் போய்ச் சேருகிறது. இப்படிப் பிராணவாயுவின் பெருக்கத்தால் நீண்ட வாழ்வை மக்களுக்கு அளிக்கிறது என்று அதே டாக்டர் காரணங்களைக் காட்டிக் கூறியிருக்கிறார்.

மனிதனுக்கு மட்டும்தான் சிரிக்கத் தெரியும். மிருகங்களுக்குச் சிரிக்கத் தெரியாது. ஏனென்றால், மனிதனுக்கு மனம் என்று ஒன்று இருக்கிறது. மிருகங்களுக்கு அறிவு உண்டு; ஆனால் மனம் இல்லை. மனிதனுக்கு மனமும் அறிவும் பிணைக்கப்பட்ட முறையில் அமைந்திருக்கிறது.

சிரிச்சால் மனம் தெளியும்; நோய் நொடிகள் சீக்கிரம் ஓடிவிடும்; சிரிப்புக்குச் செலவில்லை; தெரிந்தும் சிலர் சிரிக்கிறதேயில்லை; சிரிக்கிறபோது முகத்தை நீ பாரு; அது என்ன ஜோரு; அந்த அழகே வேறு!

ஆஹா-ஹா! உடம்பிலே ஒரு தெம்பு; உள்ளத்திலே ஒரு பூரிப்பு; முகத்திலே ஒரு அழகு; இவையனைத்தும் இந்தச் சிரிப்பில் இருந்தல்லவா கிடைக்கின்றது? ஆகவே, சிரிப்பையூட்டுபவரை டாக்டர் என்றுகூட அழைக்கலாம்.

சிரிப்பூட்டும் ஹாஸ்யம் ஒரு அருமையான கலை. இந்தக் கலையை நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய ரீதியிலும், பிறரைத் துன்புறுத்தாத முறையிலும் கையாள வேண்டும்.

இப்போது மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்து மகிழ வைக்க வேண்டுமானால், அந்தப் பணியைச் செய்யும் கலைஞருக்குப் பல துறைகளிலும் தேர்ச்சியும், தெளிந்த அறிவும் வேண்டும்.

அரசியல் துறையிலே—சமூக விவகாரங்களிலே— அறநெறிகளிலே-இலக்கியத் துறையிலே—சரித்திர ஆராய்ச்சியோடு சயன்ஸூம் கொஞ்சம் தெரிந்திருக்க வேண்டும். இப்படிப் பல்வேறு துறைகளிலும் முறையான ஞானமிருந்தால் மட்டும்தான் மக்களை சிரிப்பூட்ட வைக்கும் சிறந்த நகைச்சுவைக் கலைஞனாகச் சோபிக்க முடியும்.

[1949-ல் சென்னை வானொலியில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பேசியது.]

நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் அவர்களுடன் பொன்னாடை போர்த்தப் பெற்ற கலைவாணர்.

'ஸ்திரி ரத்னா' என்னும் கன்னடப் படத்தில் கலைவாணர், டி. ஏ. மதுரம்.

'நல்ல தம்பி' திரைப்படத்தில் நாட்டுக்குச் சேவை செய்ய வந்த நாகரிகக் கோமாளியாக....

"இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்கிறாரா கலைவாணர்....?

"புது வாழ்வு" திரைப்படத்தில் குலதெய்வம் ராஜகோபால், லலிதா ஆகியோருடன்....



ஓட்டுநர் தினகரராஜ், குலதெய்வம் ராஜகோபால், சி. எஸ். பாண்டியன், டி. ஏ. மதுரம் ஆகியோருடன்.

தமிழ்நாடு பரிசுச் சீட்டு

முதல் பரிசினை வென்றிடும் அதிருஷ்டசாலி நீங்களாக இருக்கலாம்!

இன்றே வாங்கிடுவீர்
தமிழ்நாடு பரிசுச் சீட்டு!

2 முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50,000



3 இரண்டாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 10,000
5 மூன்றாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 5,000

மற்றும் மூன்று வரிசைகளில் (CB-CD) ஆறுதல் பரிசுகள் உட்பட உளம் மகிழும் பல உன்னதப் பரிசுகள்.
குலுக்கலிலிருந்து கிடைக்கும் வருவாய் தமிழ்நாட்டில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் குடிநீர் வசதியளிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.
மொத்தப் பரிசுகள்:
2,655 (ஒவ்வொரு வரிசைக்கும்)
மொத்தப் பரிசுத் தொகை:
ரூ. 3,90,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்:
20-9-'78
பரிசுச்சீட்டின் விலை:
ரூ. 1/-

வெளியிட்டோர்:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை 600 002.

சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்தவர்

'தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று'

எனும் திருவள்ளுவரின் மொழிக்கேற்ப, புகழோடு தோன்றி, புகழ்பட வாழ்ந்து, புகழோடு மறைந்தவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் 'கலைவாணர் ஒரு சகாப்தம்' என்று கூறப்பட்ட கலைவாணரின் நினைவுகளை உங்களோடு சேர்ந்து பகிர்ந்துகொள்வதில் பெருமையடைகிறேன். எத்தனை நாள் அவரைப் பற்றிப் பேசினாலும், எத்தனை பேர் பேசினாலும் கலைவாணர் அவர்களைப் பற்றி புதிய செய்திகள்-இந்த நாட்டில் வளர்ந்து கொண்டே இருக்கும். காரணம், அவர் மக்களோடு இரண்டறக் கலந்த மாபெரும் கலைஞர்.

ஒரு பாரதி தோன்றியிராவிட்டால் தமிழ் புத்துயிர் பெற்றிருக்க முடியாது. ஒரு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தோன்றியிராவிடில் பகுத்தறிவு இயக்கம் வலுவடைந்திருக்க முடியாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தோன்றியிராவிட்டால், சிறந்த பண்பாடு, பொதுவாழ்வில் மறுமலர்ச்சி பெற்றிருக்க முடியாது.

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளும், நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனாரும் நம்மிடையே வந்திருக்காவிட்டால் நாடகக் கலை மேம்பாடு அடைந்திருக்க முடியாது.

இவர்களது வரிசையிலே வைத்து வணங்கப்பட வேண்டியவர் கலைவாணர் அவர்கள். கூத்தாடிகளாக-குறை மனிதர்களாக-அரிதார வேலைக்காரர்களாக மதித்து ஒதுக்கித் தள்ளப்பட்ட நடிகர் சமுதாயத்தில், அறிவு விளக்கேற்றி வைத்து, நடிகர்கள், மக்களுக்குத் தொண்டு செய்யப் பிறந்தவர்கள் என்ற நிலையை உருவாக்கி, நடிகர்கள் குலத்துக்கே பெருமையைத் தேடித் தந்து, நடிகர்களால் நாடாள முடியும் என்கின்ற வரலாறு படைப்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள்.

49 ஆண்டுகளே வாழ்ந்து-ஆயிரம்ஆண்டுக்காலச்சாதனையை கலைத் துறை மூலமாகச் செய்து காட்டிய செம்மல் கலைவாணர்.

நாகர்கோவிலைச் சார்ந்த ஒழுகிணசேரியில்சுடலைமுத்துப்பிள்ளை இசக்கியம்மாள் பெற்றெடுத்த அருந்தவப் புதல்வராகத் தோன்றிய கலைவாணர், குடும்பத்தின் ஏழ்மை நிலையில் மூன்றாம் வகுப்பு வரைதான் படிக்கும் நிலைபெற்றார். இந்த மூன்றே வகுப்பு பிற்காலத்தில் மூன்று தமிழையும் வளர்க்கவல்லது என்று அன்று யாருமே சோதிடம் கூறவில்லை. இளமையில் ஏற்பட்ட வறுமையின் காரணமாக சோடா வண்டியைத் தள்ளி வாழ்வைத் துவக்கியவர். பந்தாட்டு மைதானத்தில் பந்தெடுத்துக் கொடுக்கும் பையனாகப் பணியாற்றியவர். நாடக உலகம் செய்த நற்றவத்தினால் 'கிருஷ்ணன்' என்ற அந்த இளைஞன் நாடக உலகில் அடியெடுத்து வைத்தார். எடுத்த எடுப்பிலேயே சிறுசிறு வேடங்களை தாங்கினாலும், தனது அரிய ஆற்றலை வெளிப்படுத்தி, நாடக ஆசிரியர்களே பார்த்து வியக்கும் அளவுக்கு, சிறந்து விளங்கியவர். எனது கலையுலக ஆசான்கள் முத்தமிழ்க் கலாவித்வ ரத்ன டி.கே. எஸ். சகோதரர்களின் 'மேனகா' திரைப்படத்திலும், நடிக வேந்தர் எம். கே. ராதா அவர்களோடு, 'சதி லீலாவதி' திரைப்படத்திலும் நடித்து, துவக்கத்திலேயே புகழ்மிக்க நகைச்சுவை நடிகராக, நாட்டு மக்கள் உள்ளத்திலே இடம்பெற்றுவிட்டார். தொடர்ந்து தட்சயக்ஞம், திருநீலகண்டர், அசோக்குமார், ராமலிங்க சுவாமிகள், ஆர்யமாலா, சிவகவி, கண்ணகி, மனோன்மணி போன்ற வெற்றிப் படங்கள் பலவற்றில் நடித்தார்.

''ஜாதி சமயம் ஏது—குலத்தில்
தாழ்வு உயர்வும் ஏது?'

என்று பாட்டுப்பாடி, பகுத்தறிவுக் கருத்துக்களை எடுத்துக் கூறி, சிரிக்க வைத்துச் சிந்திக்கச் செய்து, சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்களையும் ஏற்றுக்கொள்ளும்படியாக திரைப்படங்கள் மூலம் அரிய பணிபுரிந்து, நாட்டுக்குச் சேவை செய்த நாகரிகக் கோமாளியாகத் தன்னை ஆக்கிக் கொண்டு, ஒப்பில்லாக் கலைஞராக, உயர்குணம் படைத்த செம்மலாக, பிறவி வள்ளலாக, சான்றோர் முதல் சாதாரணமானவர்கள் உள்ளத்திலே நீங்கா இடத்தைப் பெற்றவர் நமது அண்ணன் கலைவாணர் அவர்கள்.

அவரது கலைவாழ்வில் பாலுடன் சேர்ந்த சர்க்கரையாக,

திரு. டி. வி. நாராயணசாமி
செயலாளர், தமிழ்நாடு, இயல் இசை நாடக மன்றம்

துணையாக நின்றவர் மதிப்புக்குரிய டி. ஏ. மதுரம் அம்மையார். 'சாலிவாகனன்' என்ற படத்திலே இன்று நாம் பேசிக் கொண்டிருக்கும் சாதியொழிப்பை, முளையிலேயே கிள்ளியிருக்கிறார். தாழ்த்தப்பட்ட குலப்பெண்ணை, மேட்டுக்குடித்தனப் பையன் காதலித்துத் திருமணம் செய்துகொள்ளுவதாகக் கதையைச் சித்திரித்து, ''பிறப்பிலே எந்த வித்தியாசமும் இல்லை, நீ உப்பைத் தொட்டால் கரிக்கிறது—நீ மிளகாயைத் தொட்டால் காரமாகஇருக்கிறது எங்கே என்னைக் கிள்ளு அடடே வலிக்கிறது, என்ன பேதம்? பேதம்ஒன்றும்தெரியவில்லையே?'' என்று எல்லோரையும் சிரிக்க வைத்து, தொடையைக் கிள்ளச் செய்து, கொட்டகையையே சிரிப்பில் ஆழ்த்தி, மக்களைச் சிந்திக்க வைத்தவர். 'உத்தமபுத்திரன்' படத்தில் புல்கட்டு சுமந்து வரும் பெண்ணை, உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர் காதலிப்பதாகச் சித்திரித்து, பல நல்ல கருத்துக்களைச் சொல்லுவார். கலை வரலாற்றில் உடுமலை நாராயணகவி அவர்கள் எழுதித் தந்த 'கிந்தனர்' என்னும் கதையை காலட்சேபமாக நடத்திக் காட்டி அந்த நந்தன் பக்தியிலே சிறந்தவன்-இந்தக் கிந்தன் கல்வியிலே சிறந்தவன் என்று கலைத்துறையில் புதிய வரலாற்றைப் படைத்து, தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துவதற்காக, காந்திய வழியில் நின்று, புதிய வரலாற்றைப் படைத்தவர். 50 60 பாட்டுப் பாடி இந்த நாடு நன்னிலை அடையக் கனவு கண்டவர். தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களுக்கு, நாகர் கோவிலில், தனி ஒருவராக நினைவுத்தூண் எழுப்பிப் பெருமை பெற்றவர். காந்திமகான் சரித்திரத்தை வில்லுப்பாட்டாகப் பாடி நம்மை மகிழ்வித்தவர்.

டைரக்டர் கே. சுப்ரமணியம் அவர்களுடன் லெனின் பிறந்த நாட்டிற்குச் சென்று நொடிப் பொழுதில் தனது கலைத் திறனைக் காட்டி ரஷ்யர்களை மகிழ்வித்தவர்.

காந்தியத் தத்துவத்தை ரஷ்யாவில், ஒரு மேடையில் எடுத்துப் பேசிக் கொண்டிருந்தபோது, காந்தியத்தைப் பேசும்போது—மொழிபெயர்ப்பாளர் சரியாக மொழிபெயர்க்காததால், மீண்டும் தான் சொன்ன கருத்தை மொழி பெயர்த்தால்தான் பேசுவேன் என அறவழிப் போராட்டம் கண்டு, திரும்பவும் மொழி பெயர்க்கச் செய்து வெற்றி கண்டவர்.

தான் தயாரித்த 'மணமகள்' படத்தில், கர்நாடக இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஏ. எஸ். பி. அய்யர், கல்கியார் போன்றோரின் பாராட்டைப் பெற்றவர்.

'நல்லதம்பி' படத்தில் மது விலக்குப் பிரச்சாரத்தை அழகாக எடுத்துக் காட்டி, மதுவின் தீமைகளைத் தெளிவுபட எடுத்துக் காட்டி, சமதர்ம எண்ணங்களைத் தூவி, மக்களைத் திருத்தப் பாடு பட்டவர் கலைவாணர்.

இன்னும் எத்தனையோ படங்களில் சமுதாயத்திற்கு வேண்டிய நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்.

தேரோட்டியான கிருஷ்ணனுக்குத்தான் பாரதத்திலே பாராட்டு உண்டு. தன்னிடம் பல ஆண்டுகள் காரோட்டியாகப் பணியாற்றிய தினகர்ராஜ் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி விழா நடத்தித் தொழிலாளியை கௌரவப்படுத்தியவர்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, ரசிகமணி டி. கே. சி., கல்கியார், அறிஞர் வ. ரா. தொழிலாளர் தலைவர் ஜீவா. பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி ஆகிய பெருமக்களின் உள்ளத்திலே இடம்பெற்று அவர்களோடு உரையாடி மகிழ்ந்து, அவர்கள் கூறிடும் நல்ல கருத்துக்களை, ஏற்று எவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் மக்களுக்குக் கலைமூலம் எடுத்துச் சொல்லி, சர்வ சமய சமரசவாதியாக, சீர் திருத்தச் செம்மலாகத் திகழ்ந்தவர் கலைவாணர் அவர்கள்.

ஈகையிற் சிறந்தவர், வள்ளலார் ராமலிங்க அடிகளைப்போல! பசியைத் தீர்த்தவர்; பலபேரை வாழ வைத்தவர்; பலபேரை ஆக்குவித்தவர்; பலவீனர்களைப் பரிகசிக்காமல் ஆறுதல் காட்டி ஊக்குவித்தவர். நாதஸ்வரக் கலைமேதைகள் டி. என். ராஜரத்தினம்பிள்ளை, காருகுறிச்சி அருணசலம் போன்ற கலைச் செல்வங்களைப் போற்றி வளர்த்தவர்

ஆகவேதான், பெரியவர் வ.ரா 'தமிழ்நாட்டுப் பெரியார்களில் கலைவாணரும் ஒரு பெரியார்!' என்று எழுதிக் காட்டினார்.

கலைவாணர் மறைந்தபோது, மூதறிஞர் அண்ணா, 'கிருஷ்ணன் காலி செய்த இடத்தில் இன்னொருவர் புகழ்பெற முடியாது' என்றார்.

தந்தை பெரியார் 'நான் போய் கிருஷ்ணன் வாழ்ந்திருக்க வேண்டும்' என்றும் சொன்னார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 'கலைவாணர் ஒரு சகாப்தம்' என்று சொன்னார்.

'ஈதல் இசைபட வாழ்தல்
அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு'

உழைப்பால் பெற்ற செல்வத்தை ஏழைகளுக்கும், ஏன் எல்லோருக்கும் ஈந்து மகிழ்ந்தவர். இறுதியில் ஈவதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை வந்ததும், தனது உயிரையே ஈந்துவிட்டார்.

ஏழையாகப் பிறந்தார். ஏழைகளுக்காக வாழ்ந்தார். ஏழையாக மறைந்தார்.

அவர் புகழ் இந்த மாநிலம் இருக்கும் மட்டும் மங்காது, மறையாது. நகைச்சுவை அரசின் நினைவு என்றும் நிலைத்து நிற்கும்.

வாழ்க கலைவாணர் என்.எஸ். கே. அவர்தம் புகழ்!

(11-8-78-ல் வானொலியில் ஆற்றிய உரை).

தமிழரசு

ஆண்டுச் சந்தா ரூ. 12

அரையாண்டுச் சந்தா ரூ. 6

விவரங்களுக்கு:
சர்க்குலேசன் மேனேஜர், தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை—600 002.

திருநெல்வேலியில் சிறு உழவர் மேம்பாட்டுத்திட்டம்

—இராமஜெயராஜா, பி.எல்சி., (விவ)
தனி திட்ட அலுவலர்
திருநெல்வேலி.

"உழுவார் உலகத்தார்க்(கு)
ஆணி அஃது ஆற்ரு(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து''

என்ற குறளுக்கேற்ப உழவுத் தொழிலானது இவ்வுலகமாகிய தேருக்கு அச்சாணி போன்று அமைந்துள்ளது. எனவேதான் இதனை உயிர்த்தொழில் என்றும் கூட அழைப்பதுண்டு. மேலும், நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்ததும் இவ்வுழவுத் தொழில்தான்.

இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற உழவுத் தொழிலில் நமது நாட்டைப் பொறுத்தவரை ஈடுபட்டுள்ளவர்கள் 70 சதவிகிதம் ஆவார்கள். ஆதலால், நமது நாட்டின் பொருளாதாரம் இந்த உழவுத் தொழில் வளர்ச்சியையே பெரும்பாலும் சார்ந்து நிற்கிறது நமது நாட்டினுடைய செல்வ வளர்ச்சியில் 53 சதவிகிதம் உழவுத் தொழில் இருந்துதான் கிடைக்கிறது. ஏனைய பகுதிதான் தொழில் வளர்ச்சியிலிருந்து கிடைக்கிறது. இவ்வாறு உழவுத் தொழில் நம்நாட்டில் சிறப்பும் மேன்மையும் பெற்று விளங்கினாலும் அதிக விளைச்சலும், அதிக வருவாயும் இவ்வாறு நலிந்த நிலைமையில்தான் காணப்பட்டு வந்தது. இத்தகைய நலிந்த நிலைமைக்குப் பல காரணங்கள் உண்டு. அக்காரணங்கள் எல்லாம் நீக்க இத்தொழிலை மேம்படுத்த பல திட்டங்களை அரசு வகுத்து செயல்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டது.

முதலில் திட்டங்கள் செயல் படுத்துவதற்கு இந்திய ரிசர்வ் வங்கியினர் (Reserve Bank of India) சிற்றூர்களில் (கிராமங்களில்) அனைத்திந்திய ஊரகக் கடன் வசதி (All India Rural Credit Society) ஆய்வு நடத்த உழவர்களை முக்கியமாக மூன்று வகையாகப் பிரித்தனர்.

1. மத்திய தர நிலையத்திலிருந்து பெரு நிலையிலுள்ள உழவர்கள்	7½ ஏக்கருக்கும் அதற்கு மேல் உள்ளவர்கள்.
2. சிறு நிலையிலிருந்து மத்திய தர நிலையிலுள்ளவர்கள்	2½ ஏக்கர் முதல் 7½ ஏக்கர் வரை உள்ளவர்கள்
3. மிகச்சிறு நிலையிலிருந்து சிறு நிலையிலுள்ளவர்கள்	2½ ஏக்கருக்கும் அதற்கு கீழ் உள்ளவர்கள்.

இவ்வாறு வகைப்படுத்தி ஒவ்வொரு வகையிலும் எத்தனை சதவிகித உழவர்கள் அடங்கியுள்ளார்கள் என்றும் அந்தக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளனர்:

1. மத்தியதர நிலையிலிருந்து பெரு நிலையிலுள்ள உழவர்கள் 28.4%

2. சிறுநிலை முதல் மத்தியதர நிலையிலுள்ள உழவர்கள்-37.1%

3. மிகச்சிறு நிலையிலிருந்து சிறு நிலையிலுள்ள உழவர்கள்-34.5%

இப்புள்ளி விவரங்களிலிருந்து சிறு நிலை உழவர்கள், மத்தியநிலை உழவர்கள், வெகு சிறு நிலையிலுள்ள உழவர்கள் ஆகியவர்கள் எண்ணிக்கையின் அளவு அதிகம் என்பது தேற்றென விளங்கும். எனவே, இவர்களுடைய மேம்பாட்டின் அளவே உழவுத் தொழிலில் மேம்பாடு என்பது நன்கு அறிந்து கொள்ளலாம். அண்மையில் விஞ்ஞான ஆராய்ச்சியின் வாயிலாகக் கண்டுள்ள முடிவுகளை இத்தகைய உழவர்களும் மேற்கொண்டால்தான் மேற்கூறியபடி நலிந்துள்ள உழவுத் தொழில் சிறப்புப் பெறுவதோடு நாட்டினுடைய பொருளாதார

தந்தை பெரியார் படங்களை அனுப்பிவைப்பீர்!

"பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் இளமைப் பருவந்தொட்டு இறுதிவரையில் அவர்கள் கலந்து கொண்ட முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய நிழற்படங்களையும், அவர் முக்கிய தலைவர்களோடும், நண்பர்களோடும் சேர்ந்து காணப்படும் நிழற்படங்களையும், அவர் கைப்பட எழுதிய கடிதங்களையும் வைத்திருப்போர் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அவை அவரவர்க்கு முறைப்படி பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பி வைக்கப்படும். பெரியார் அவர்களுக்குப் பரிசுகள் எங்கெங்கு எவ்வாறு வழங்கப்பட்டன என்பது குறித்தும், அவற்றின் விவரங்களையும் எழுதி அனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்" என்று பெரியார் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனுப்ப வேண்டிய முகவரி :

இயக்குநர்,
செய்தித்துறை,
(செயலாளர், பெரியார் நூற்றாண்டு
விழாக் குழு)
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

வளத்தையும் பெருக்க நாட்டை வலுப்படுத்த முடியும். பொதுவாக உழவுத் தொழிலை மேம்படுத்த கீழ்க்கண்ட திட்டங்கள் நம் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன:

1. சட்டங்கள் மூலம் விவசாய சீர்திருத்தம் செய்தல்.

2. அ. தரிசு நிலங்களைப் பயன்படக்கூடியதாகச் செய்தல் (Reclamation of waste lands)

ஆ. மண்வளப் பாதுகாப்பு (Soil conservation)

இ. நீர்ப்பாசன வசதி அமைத்தல்.

ஈ. மானாவாரிச் சாகுபடி முறைகளை மேம்படுத்தல்.

உ. உயர்வகை விதைகளைப் பயன்படுத்துதல்.

ஊ. நன்கு பாதுகாக்கப்பட்ட உரங்களையும் இரசாயன உரங்களையும் பயன்படுத்தல்.

எ. உழைப்பை மிச்சப்படுத்திப் பயனை பெருக்கக்கூடிய உழவுக் கருவிகளைப் பயன்படுத்தல்.

ஏ. சீர்திருத்தப்பட்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுதல்.

ஐ. பூச்சி நோய்களை கட்டுப்படுத்துதல்.

3. குறைந்த செலவில் (Cheap credit) கடன் வசதி ஏற்பாடு செய்து கொடுத்தல்.

4. விளையும் பொருட்களை விற்பனை செய்வதற்கான வசதிகளை அமைத்துக் கொடுத்தல். மேலும் போக்குவரத்து சாதன வசதிகளையும் அமைத்துக் கொடுத்தல்.

5. பால்பண்ணை, தோட்டத் தொழில் மேலும் கிராம கைத்தொழில் போன்ற உதவித் தொழில்கள் (Subsidiary occupation) ஏற்படுத்துதல்.

6. இவைகளை அடைய கூட்டுறவு போன்ற அடிப்படை நிறுவனங்கள் மூலம் ஈடுபடத் தூண்டுதல்.

இத்தகைய திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்த போதிலும்

*"அருளில்லார்க்கு அவ்வுலகம்
இல்லை
பொருளில்லார்க்கு இவ்
வுலகம் இல்லை"*

என்ற வள்ளுவன் சொல்லுக்கிணங்க பொருள் வளம் குன்றிய அதிகப்படி எண்ணிக்கையில் காணப்படும் சிறு உழவர்களோ, மிகச் சிறு உழவர்களோ இத்திட்டங்களை மேற்கொண்டு பயனடைய முடியவில்லை. மாறாக பெருநிலையிலுள்ள மேற்கொண்டு பயனடைய முடியும் உழவர்களே இத்திட்டங்களின் பயனைப் பெறுவதற்கு வாய்ப்பிருந்தது. இவர்களின் எண்ணிக்கையின் அளவு சிறு உழவர்கள், மிகச்சிறு உழவர்களின் எண்ணிக்கையைவிட ஏற்கெனவே கூறிய படி குறைவுதான். ஆகவே, உழவுத் தொழில் முழு முன்னேற்றம் காணவேண்டுமென்றால் சிறு உழவர்களும் மிகச்சிறு உழவர்களும் இத்திட்டங்களின் பயனை அவசியம் பெற்றே ஆகவேண்டும்.

அந்துடன் ஒரு உண்மை என்னவென்றால் வாழ்க்கையும் வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தால் சிறு உழவர்களோ மிகச்சிறு உழவர்களோ தாங்கள் செய்யும் உழவுத் தொழிலில் அதிக ஆர்வம் காட்டி உற்பத்தியைப் பெருக்குகிறார்கள் என்பதுதான். அண்மையில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வுகூட இந்த உண்மைக்குச் சான்றாக அமைகிறது. இந்த உண்மையைக் கம்பநாடன்கூட தான் இயற்றிய "ராமகாதையில்" விளக்கி உள்ளார்கள்.

*"எய்ளை எழுபகை எங்கும்
இன்மையால்
மெய்பெருந் தினவுறு முழவுத்
தோளினன்
வையகம் முழுவதும் வறிஞன்
ஓம்பும் ஓர்
செய்எனக் காத்தினிது அரசு
செய்கின்றான்'*

அதாவது, ஒரு சிறு நிலமுடைய உழவன் எவ்வாறு அந்நிலத்தைக் கண்ணும் கருத்துமாகப் பேணிக் காப்பாற்றுவானோ அதுபோல தசரதன் தன் நாட்டைக் காப்பாற்றி அரசு செலுத்தினான் என்று பொருள்படும். ஆக சிறு உழவர்களுடைய மேம்பாட்டில் நாம் நல்லமுறையில் கருத்தை செலுத்த வேண்டும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இருக்க முடியாது. இதனைக்கருத்தில் கொண்டு தான் அரசு, இச்சிறு உழவர்களோ அல்லது மிகச்சிறு உழவர்களோ அல்லது உழவுத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களோ மேம்பாடு நிலை அடைய வேண்டுமெனக் கருதி சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தை 1971-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.



இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஏற்கெனவே சொல்லப்பட்டது. விவசாய முன்னேற்றத் திட்டங்களுடன் பசு வளர்த்தல் போன்ற உதவித் தொழிலை நடத்தி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதுதான். இதன் பொருள் தடையாக இருக்கக் கூடாதென்றே! அதனால் இந்த பொருள் வசதியினைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ வணிக வங்கிகள் மூலமாகவோ கடன் வசதி ஏற்பாடு செய்து அக்கடனில் ஒரு பகுதியை அரசாங்கமே ஏற்றுக் கொண்டு கடன் பளுவை இத்தகைய விவசாயிகளுக்குக் குறைத்து அவர்கள் இத்திட்டங்களின் பயனை அடைய இந்தச் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் மூலமாக முயற்சி செய்யப்படுகிறது. கூட்டுறவு வங்கிகளோ அல்லது வணிக வங்கிகளோ விவசாயிகளுக்கு இந்தப் பொருளுதவியை கடனாகக் கொடுப்பதற்கு எந்தவிதத் தயக்கமின்றி முன்வருவதற்குத் தான் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகையை இந்தக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு ஆதரவு தொகையாக (Subd.) இம்மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இந்த ஆதரவுத் தொகை வழங்குவதற்கு முதற்கண் விவசாயிகளை 3 பகுதிகளாக அவர்களுடைய நில உடைமை அளவின் அடிப்படையில் வகுக்கப்பட்டு எந்தெந்த வகைகளுக்கு எந்தெந்த வகையில் உழவர்கள் அமைகிறார்களோ அந்தந்த வகை உழவர்களுக்குக் கொடுக்கும் கடனில் எவ்வளவு பகுதி இந்த ஆதரவு தொகை இந்தமேம்பாட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வகைப்படுத்தும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே எவ்வாறு விவசாயிகளை வகைப்படுத்துவது கூறப்பட்டிருப்பினும் அதை இன்னும் தெளிவுபடுத்தும் வகையில் கீழே தரப்பட்டுள்ளது.

ஒரு வீடும், விவசாயத் தொழில் மூலம் வரக்கூடிய வருமானம் 60 சதவிகிதத்துக்கு மேலும் உள்ளவர்கள் விவசாயத் தொழிலாளர்கள் என வகைப்படுத்தப் பட்டுள்ளார்கள்.

நஞ்சை நிலமானால் 1.25 ஏக்கருக்கு மேற்படாமலும், புஞ்சை நிலமானால் 2.50 ஏக்கருக்கு மேற்படாமலும் உள்ள உழவர்களை மிகச்சிறு விவசாயிகள் அல்லது விளிம்பு நிலை விவசாயிகள் (Marginal Farmers) என வகுக்கப் பட்டுள்ளார்கள்.

குறிப்பு :

1. இத்தகைய விவசாயிகளுக்கு விவசாயம் தவிர வேறு தொழில்கள் மூலம் மாத வருவாய் 200.00-க்கு மேற்பட்டிருக்கக்கூடாது.

2. 2 ஏக்கர் புஞ்சை நிலம் 1 ஏக்கர் இறவை நிலத்திற்குச் சமம் என எடுத்துக் கொள்ளப்படும்.

உதாரணமாக ஒரு விவசாயிக்கு 2 அல்லது 3 ஏக்கர் புஞ்சையும் 1 ஏக்கர் நஞ்சையும் இருக்குமானால் அவர் ஒரு சிறு விவசாயியாகக் கருதப்படுவார். இக்கணக்குப்படி 3 ஏக்கர் புஞ்சையுடன் 1 ஏக்கர் நஞ்சை நிலம் இருந்தால் அதை 2 ஏக்கர் புஞ்சை எனக் கருதப்பட்டு மொத்தம் 5 ஏக்கர் புஞ்சை என எடுத்துக்கொண்டு அவர் சிறு விவசாயி என அறிவிக்கப்படுகிறார்.

இவ்வாறு கணக்கிட்டுக் கொள்வது அவசியம். இவ்வாறு வகுக்கப்பட்ட பின் அந்த அந்த வகுப்பு விவசாயிகளுக்குக் கீழ்க்கண்டவாறு மொத்தக் கடன் தொகையில் எந்த நிறுவனம் அதாவது கூட்டுறவுச் சங்கமோ அல்லது வணிக வங்கியோ கடன் வழங்குகிறதோ அந்தக் கடனில் கீழ்க்குறிப்பிட்டுள்ள அளவு உதவித் தொகை வழங்கப்பட்டு அந்த உதவித் தொகை போக மீதியுள்ள தொகையே அந்தந்த விவசாயியின் கடனாக எடுத்துக் கொண்டு அந்த அளவு கடனையே விவசாயிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்குத் திருப்பிக் கட்ட வேண்டும்.

1. உழவுத் தொழிலாளர்களுக்கும் விளிம்பு நிலை விவசாயிகளுக்கும் வழங்கப்படும் மொத்த கடனில் 100-க்கு 33.33 விழுக்காடு (அதாவது 3-ல் 1 முழு உதவித் தொகையாக வழங்கப்படும்) உதாரணமாக, 300-க்குக் கடன் வழங்கினால் இதில் $\frac{1}{3}$ பகுதியாக ரூ. 100 உதவித் தொகையாக வழங்கப்பட்டு மீதியுள்ள 200 ரூபாய்க்கு இவர் கடனில் பற்று வைக்கப்பட்டு அதை அவர் உரிய வட்டியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்குத் திருப்பிக் கட்ட வேண்டும்.

சிறு விவசாயிக்குக் கொடுக்கப்படும் கடனில் 100-க்கு 25 விழுக்காடு அதாவது $\frac{1}{4}$ பகுதி மொத்தக் கடனில் உதவித் தொகையாகக் கடன் வழங்கும் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டு மீதியுள்ள தொகையை அவரது கடன் தொகையில் பற்று வைக்கப்படும். உதாரணமாக ரூ. 400 கடன் வழங்கப்பட்டால் இதில் $\frac{1}{4}$ பங்கு ரூ. 100 உதவித் தொகையாகச் சம்பந்தப்பட்ட கடன் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டு மீதியுள்ள ரூ. 300 கடன் பற்று எழுதப்பட்டு அவர் திருப்பி உரிய வட்டியுடன் கட்ட வேண்டும். இவ்வாறு இத்தகைய உழவர் மேம்பாட்டிற்காகச் சிறு நீர்ப்பாசன சம்பந்தமாகக் கிணறு வெட்டுதல் கிணறுகளை ஆழப்படுத்துதல், நீரேற்றுக் குழாய்கள் அமைத்தல் (Pump set) போன்ற வகைகளுக்கும் விவசாய சம்பந்த மட்டில் மருந்தடிக்கும் கருவிகள் வழங்கல், செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல், விதை பூச்சி மருந்து உரம் வழங்கல், நிலங்களைச் சீர்திருத்த அமைத்தல், வண்டிகள் வாங்குதல், உழவு மாடுகள் வாங்குதல், உலோக தானிய குதிர்கள் வாங்குதல் போன்றவைகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்றன. மேலும் கறவை மாடுகள் வழங்குதல் போன்றவைகளுக்குக் கூட்டுறவு மூலமாக அல்லது வணிக வங்கிகள் மூலமாகக் கடன் வசதி செய்து அவைகள் மூலம் மேற்கூறியவாறு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

முக்கியமாக கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் வணிக வங்கிகள் மூலமாகவும் 1 முதல் 5 ஆண்டுக் குட்பட்ட குறுகிய, மத்திய காலக் கடன்களும் கிணறு வெட்டுதல் போன்ற நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த நிலவளவங்கி மூலம் 5 ஆண்டுக்கு மேற்பட்ட நீண்ட காலக் கடன் வசதியும் ஏற்பாடு செய்யப்படுகிறது. எனவே, சிறு விவசாயிகள், விளம்புநிலை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் இத்திட்டத்தில் நன்கு தொடர்பு கொண்டு திருநெல்வேலியை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒத்துழைப்புடன் நல்ல பயனை அடைய இதன் மூலம் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

இரத்த அழுத்தமும் சிறுநீரகக் கோளாறுகளும்!

டாக்டர் எம். எஸ். அமரேசன்
பேராசிரியர்
சென்னை மருத்துவக் கல்லூரி

இரத்த அழுத்த நோயைப் (Hypertension) பற்றி எல்லோரும் அறிந்து இருக்கக்கூடும். இந்நோய் மொத்த மக்கள் தொகையில் 5 முதல் 20 சதவிகிதமாகப் பல நாடுகளில் வேறுபடுகிறது. இத்தகைய வேறுபட்ட சதவிகிதம் இப்பிரிவிலுள்ள மருத்துவ நிபுணர்களுக்கு முக்கியமானதாகப்படுகிறது. ஆனால், இந்நோயைப் பற்றிய கருத்துக்கள் சிலவற்றை மட்டும் மருத்துவத் துறை அல்லாத படித்தவர்களும் சாதாரண மனிதர்களும் அறிந்திருப்பதால், இதனைப் பற்றிய முக்கிய உண்மைக் கருத்துக்களை மட்டும் எடுத்துக் கூறினால் போதும்.

வயது வந்தவர்களுக்கு இரத்த அழுத்தம் 140/90 மி. மீட்டருக்கு மேல் இருந்தால் அதனை நாம் இரத்த அழுத்தம் (Blood Pressure) என்று கூறுகிறோம். இது குழந்தைகளுக்கு வயதுக்குத் தகுந்தபடி மாறுபடும். இருதயம் விரிவடையும்போது ஏற்படும் இரத்த அழுத்தமே (Diastolic Blood Pressure) இரத்த அழுத்தம் ஏற்படுவதன் காரணமாகும். ஆதலால், இதனைக் குறைப்பதே நமது முக்கிய நோக்கமாக அமைகிறது. இவ்விரத்த அழுத்தம் இரத்த அழுத்தமானி என்ற கருவியால் அளவிடப்படுகிறது. இரத்த அழுத்தத்தை இரண்டு முறைகளில் அளவிடலாம். (1) ஓய்வாக இருக்கும்போது; (2) வேலை செய்யும்போது அல்லது வேலை செய்த பின்பு. பொதுவாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இருதயம் விரிவடையும்போது ஏற்படும் அழுத்தம் 100 மி. மீட்டராக இருக்கலாம்.

இரத்த அழுத்தத்தைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். இது, இருதயம் விரிவடையும்போது ஏற்படும் அழுத்தத்தைப் பொறுத்து இருக்கிறது. இவ்வழுத்தம் 90—109 மி. மீட்டராக இருந்தால் இதனை மிதமான இரத்த அழுத்தம் என்று கூறலாம். இவ்வழுத்தம் 129. மி. மீட்டராக இருந்தால் கட்டுக்கடங்கிய இரத்த அழுத்தம் எனலாம். இவ்வழுத்தம் 130 மி. மீட்டருக்கு மேல் இருந்தால் இதனைக் கடுமையான இரத்த அழுத்தம் என்று கூறலாம். இத்தகைய கடுமையான இரத்த அழுத்தம் உடையவர்களை மருத்துவமனையில் சேர்த்துச் சிகிச்சை அளித்தல் நன்மையாகும். சிறுநீரக நிபுணர் (Nephrologist) இத்தகைய நோயாளிகளைக் குணப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். இரத்த அழுத்தத்திற்குக் காரணமான சிறுநீரகக் கோளாறுகளையும், சிறுநீரக அறிவுகளையும் அவர்கள் கண்டு ஆராய்கிறார்கள்.

இவ்விரத்த அழுத்தம் இயல்பான நிலையில் இருக்கச் செய்யச் சிறுநீரகம் முக்கிய பங்கு வகிக்கிறது. உடலில் உள்ள பல திரவங்களின் அளவுகளையும், தண்ணீர், சோடியம் போன்றவைகளின் இயல்பான அளவுகளையும் முறைப்படி வைத்திருப்பதற்கும் சிறுநீரகம் முக்கிய உறுப்பாகிறது. நம் உடல் 60 முதல் 70 சதவிகிதம் தண்ணீரும் சோடியமும் இயல்பான நிலையில் இருப்பதற்குச் சிறுநீரகம் முக்கிய காரணமாக அமைகிறது. இதோடு மட்டுமல்லாது அதிகமான இரத்த அழுத்தத்தை மட்டுமல்லாது அதிகமான இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கு வேண்டிய பல பொருட்களை (Anti-hypertensive) சிறுநீரகம் உற்பத்தி செய்கிறது. சிறுநீரகத்திற்குச் செல்லும் இரத்த அளவைக் குறைத்தால் சிறுநீரகம் இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்துவதற்குரிய (Hypertensive substances) பொருட்களை உற்பத்தி செய்து, இரத்த அழுத்தத்தைப் பல மடங்கு அதிகப்படுத்துகிறது.

முன்பு இவ்விரத்த அழுத்தத்தின் காரணங்கள் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனல், இன்றோ அறிவியலின் முன்னேற்றத்தாலும் உயிர் வேதியலின் மூலமும் பல புதுமையான கதிரியக்க முறையாலும், இரத்த அழுத்தத்தின் காரணத்தை நாம் எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. நாற்பது வயதுக்குக் குறைந்தவர்க்கு இரத்த அழுத்தம் இருந்தால் கீழ்க்காணும் சிறுநீரக வியாதிகள் இரத்த அழுத்தத்திற்குக் காரணமாக அமையலாம்.

சிறுநீரக வியாதிகள் :

1. குறுகியகாலச் சிறுநீரக அணு அழற்சியும், அதனை ஒத்த நோய்களும் (2) நீண்டகாலச் சிறுநீரக அணு அழற்சி, (3) சிறுநீரகக் கீழ் அணு அழற்சி (4) நீர் கோத்த சிறுநீரகம் (5) பண் கூட்டுக்குழி சிறுநீரகம் (6) சிறுநீரக உருக்குநோய் (7) குழந்தை பிறந்த பிறகு ஏற்படும் இரத்த அழுத்தம் (8) சிறுநீரக இரத்தக் குழாய்களில் ஏற்படும் வியாதிகள் (சிறு நீரக இரத்தக் குழாய் அடைப்பு) (9) நாளமில்லாச் சுரப்பிகளின் வியாதிகள் முதலியன ஆகும்.

மேற்கூறியவற்றிலிருந்து இவ்வகையான இரத்த அழுத்தம் உண்டாவதற்குச் சிறுநீரகம் முக்கிய பங்காகிறது என்பது எளிதில் புலப்படும். காரணமே தெரியாத முதன்மையான இரத்த அழுத்தத்திற்கும் (Primary Hypertension) சிறுநீரகம் காரணமாக இருக்கலாம். இது சோடியம், தண்ணீர் அளவுகளின் வித்தியாசத்தாலும், புராசுடோகிளாண்டின் என்ற பொருள் குறைவதாலும், குறைவான கொழுப்புப் பொருள் உண்டாவதாலும், ரெனின், ஆன்ஜியோடென்சின் உற்பத்தி குறைவதாலும் சிறுநீரகத்திற்குள் இருக்கும் சோடியம், தண்ணீர் அளவுகளில் மாற்றம் ஏற்படுவதாலும் இத்தகைய அதிகமான இரத்த அழுத்தம் ஏற்படுகிறது எனலாம். கடுமையான இரத்த அழுத்தத்தைக் (Severe Hypertension) குணப்படுத்தவில்லை என்றால் சிறுநீரகமே (Kidney) முதலில் பாதிக்கப்படுகிறது. இத்தகைய காரணங்களால் சிறுநீரக நிபுணர்கள் இரத்த அழுத்தமுடையவர்களை ஆராய்வதிலும் அவர்களைக் குணப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்று கூறுவது மிகையாகாது.

ஒருவர் வேலையில் சேரும் போதும், 40 வயதுக்கு மேற்பட்டவர்களைப் பரிசோதிக்கும் போதும் இரத்த அழுத்தத்தை அளவிட வேண்டும். இதன் மூலம் இரத்த அழுத்தமுடையவர்களை எளிதில் கண்டறியலாம். இவர்கள் முக்கியமாக தலைவலி, மயக்கமான நிலை, பார்வைக் கோளாறு போன்றவற்றால் அவதிப்படுவார்கள். ஆதலால் மருத்துவரிடம் ஆலோசனை பெற வரும் ஒவ்வொருவருக்கும் இரத்த அழுத்தப் பரிசோதனை செய்வது நலம். இவ்வாறு நாட்டில் உள்ள எல்லோருக்கும் இரத்தப் பரிசோதனை நடத்துவதே இரத்த அழுத்தமுடையவர்களை அறிய ஒரு வழியாகும்.

இரத்த அழுத்தமுடையவர்களைக் கீழ்க்கண்ட முறைகளில் ஆராய வேண்டும். 1. சிறுநீர்ப் பரிசோதனை, 2. உயிர்வேதியல் பரிசோதனை (Bio-Chemical estimation) 3. புதுமையான ஐசோடோப் முறையில் சிறுநீரகத்தைக் காணும் முறை (Interavenous urogram I. V. P.) சிறுநீரக இரத்தக் குழாய்களைக் காணும் முறை (Renal Arterial Ingridgram) இந்த முறைகளின் மூலம் நாம் இரத்த அழுத்தத்தின் காரணத்தை எளிதில் அறிய முடியும். இவ்வாறு அறிந்தால், நோயின் காரணத்தை ஆரம்ப காலத்தில் குணப்படுத்த ஏதுவாகும். எடுத்துக்காட்டாக, இரண்டு சிறுநீரகத்தில் ஒரு சிறுநீரகம் வியாதிக்கு உட்பட்டிருந்தால் அதனை எடுத்துவிடுவதாலும் சிறுநீரக நோய்களை ஆரம்ப காலத்தில் கட்டுப்படுத்துவதாலும், குழந்தைப் பிறப்புக்குப் பிறகு ஏற்படும் சிறுநீரக அடைப்பு வியாதிகளைக் குணப்படுத்துவதாலும் இரத்த அழுத்தத்தை இயல்பான நிலைக்குக் கொண்டு வர இயலும்.

இவ்வாறு பலமுறைகளில் ஆராய்ந்து ஆரம்ப காலத்தில் குணப்படுத்தினுல் இரத்த அழுத்த நோயின் அதிகரிப்பைத் தடுக்கலாம். இவ்வாறு குணப்படுத்துவதற்குரிய காரணத்தை அறிந்த பின் நோயாளிகளிடம் நோயைப் பற்றியும் இரத்த அழுத்தத்தைச் சீரான அளவில் வைத்திருக்க உதவும் முறைகளைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு இரத்த அழுத்தத்தைச் சீரான முறையில் வைத்திராவிட்டால் இருதயப்பாதிப்பும் மூளையிலுள்ள இரத்த நாளங்களின் பாதிப்பும் ஏற்படும் என்று எச்சரிக்கை செய்தல் அவசியம்.

இரத்த அழுத்த மாறுபாடுகளை அறிந்து வாரத்திற்கு ஒரு முறை அல்லது 15 ஒருமுறை இரத்த அழுத்தத்தை அறிதல் வேண்டும். இவ்வாறு நாம் இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருந்தால் சில சமயங்களில் அதிகமான இரத்த அழுத்தமும் மருந்துகள் இல்லாமலேயே சீரான நிலையை வந்தடையும். கடுமையான இரத்த அழுத்தம் உடையவர்கள் மருந்துகளைச் சீராக உட்கொள்ளல் அவசியம். இவர்கள் தங்களுடைய இரத்த அழுத்த வேறுபாட்டை அறிந்து மருந்துகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நோயாளியின் இரத்த அழுத்தத்தைக் குணப்படுத்த முடியாத நிலையில் இருந்தால் நோயாளிகளுக்குத் தொந்தரவு அளிக்காத வகையில் அவர்களுடைய இரத்த அழுத்தத்தைப் பல்வேறு நிலைகளில் எடுக்க நோயாளியின் சுற்றத்தார்க்குக் கற்றுக்கொடுத்துவிடலாம். அவர்களுக்கு மருந்தையும் அதற்கேற்ற வகையில் மாற்றிக் கொடுக்கச் சொல்லிக் கற்றுக் கொடுக்கலாம். அப்போது நோயாளி, மருத்துவரை, மாதத்திற்கு ஒரு முறை வந்து பார்த்தால் போதுமானது. நோயாளியின் மனநிலையை அறிந்து சிகிச்சை செய்வது நலம். இப்பேர்ப்பட்ட நோயாளிகளுக்குச் சில சமயம் அவர்கள் உண்ணும் உணவில் கொழுப்புச் சத்துள்ள பொருள், உப்பின் அளவு இவற்றைக் குறைத்தோ, மாற்றியோ, கொடுத்தால் இரத்த அழுத்தம் மிதமான நிலைக்கு வரலாம்.

இந்நோயாளிகளுக்குக் குறைவான சக்தி அளிக்கும் உணவு வகைகளையும் உப்புப் பொருட்களையும் கொழுப்புப் பொருட் வேண்டும். இவையே இரத்த அழுத்தம் குறையக் காரணமாகும். எல்லா இரத்த அழுத்த நோயாளிகளும் குறைவான உப்பு எடுத்தல் என்பது அவசியமில்லாத ஒன்றாகும். சில சமயம் சிறுநீரக நோய் உடையவர்கள் சீரான உப்பும் அல்லது அதிகமான உப்பும் எடுத்தல் அவசியம்.

எனவே, இரத்த அழுத்தம் குணப்படுத்தக் கூடிய நோய் ஆகும். இதற்கு நோயாளியை நன்கு ஆராய்தல் அவசியம். சில சமயங்களில் இரத்த அழுத்தக் காரணத்தைக் குணப்படுத்த முடியவில்லை என்றால் நோயாளியை நல்ல நிலையில் (In comfort) இருக்கச் செய்தல் அவசியம். இதற்கு இரத்த அழுத்தப் பரிசோதனை முறை; நல்ல மலிவான மருந்தை எடுத்துக் கொள்ளும் முறை; உணவு உட்கொள்ளும் முறை, எடை சீராக வைத்திருக்கும் முறை போன்றவற்றைப் போதிப்பது அவசியம்.

இரத்த அழுத்தம் பல முக்கிய உறுப்புகளாகிய இருதயம், மூளை, சிறுநீரகம் போன்றவற்றைப் பாதிக்கும் என்பதை எல்லோரும் அறிய வேண்டும். எனவே, ஆரம்பக் காலத்தில் இரத்த அழுத்தத்தை அறிவதால், முக்கிய உறுப்புகளின் பாதிப்பைத் தடுப்பதோடுமன்றி இரத்த அழுத்த நோயாளியை நீண்ட காலம் நலமாக வாழ வைக்கவும் ஏதுவாகிறது.

உலக சுகாதார நாள் விழா

மலரிலிருந்து

இந்தியாவில் டெலக்ஸ்

1978-ஆம் ஆண்டில் தபால் தந்தித் துறை எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் டெலக்ஸ் நிலையங்களின் திறனளவை அதிகரிப்பதன் மூலமும், புதிய டெலக்ஸ் நிலையங்களை திறப்பதன் மூலமும் நாட்டில் சுமார் 1,200 டெலக்ஸ் இணைப்புகளை அளிப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்துள்ளது.

1978 ஜனவரி முதல் தேதி நிலவரப்படி நாட்டில் 14,184 டெலக்ஸ் தொடர்பு இணைப்புகளுடன் கூடிய 98 டெலக்ஸ் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய பொது டெலக்ஸ் அலுவலகங்கள் 32 இருக்கின்றன.

1977-78-ஆம் ஆண்டில், சர்வதேசத் தகவல் தொடர்பு சர்வீஸ் பம்பாயில் 27 நாடுகளுடன் நேரடியாக தொலைபேசித் தொடர்பு கொள்ளக்கூடிய தானியங்கி வசதியைச் செய்தது. இந்த டெலக்ஸ் எக்சேஞ்சு நூதனத் தகவல் தொடர்பு வசதியைக் கொண்டது. சர்வதேச டெலக்ஸுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த வசதி படிப்படியாக மற்றநாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படும். தற்போது 27 நாடுகளுடன் நாம் நேரடியாக டெலக்ஸ் தொடர்பு கொள்ள முடியும். மேலும் 168 நாடுகளுடன் ஒரு சுவிட்ச் மூலம் தொலை பேசித் தொடர்பு கொள்வதற்கான வசதியும் தற்போது உள்ளது

வெண்பாலில் ஊடுருவிகள்

டாக்டர் கோ. அரங்கசாமி,
துணைவேந்தர்,
வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை.

இயற்கையில் நிறைந்துள்ள நுண்ணுயிர்கள், பல்வேறு விதமான தொழில் துறைகளில் முதன்மையாகப் பால் பண்ணைத் துறை உணவுத் துறை, 'ஆண்டிபயாடிக்' போன்ற மருந்து உற்பத்தித் துறை, வைட்டமின்கள், அமினோ அமிலங்களைத் தயாரிக்கும் தொழில் துறை, மதுவகைகளைத் தயாரிக்கும் துறை ஆகியவற்றில் ஆற்றும் சிறப்பான செயல்கள் பற்றியும், அவற்றால் மக்களினம் பெறும் பயன்களைப் பற்றியும் சிறிது விரிவாகக் காண்போம்.

பாலில் புரதம் 3.25 விழுக்காடும், லேக்டோஸ் (பால் சர்க்கரை) 4.8 விழுக்காடும், கொழுப்புச்சத்து 3.8 விழுக்காடும், உப்புக்கள் 0.73 விழுக்காடும், நீர் 87.25 விழுக்காடும், வைட்டமின் 'ஏ', ரைபோபிளேவின், தயமின் முதலிய பல்வேறு வைட்டமின்களும் காணப்படுவதால், அது மக்களுக்கு ஒரு முழுமையான உணவுப் பொருளாகிறது.

நுண்ணுயிர்களுக்குத் தேவை எல்லாச் சத்துப் பொருள்களும், கனிமங்களும் அதிக அளவில் பாலில் இருப்பதால் அது நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சாதனமாகிறது. இயற்கையில் காற்றில், மண்ணில், நீரில் உள்ள பல நுண்ணுயிர்கள் பல்வேறு வழிகளில் பாலுடன் கலக்கின்றன. பால் கறக்கும் சமயத்தில் பாத்திரத்தின் மூலமும், நீரிலிருந்தும், காற்றிலிருந்தும் பல நுண்ணுயிர்கள் பாலில் கலக்கின்றன. பால் கறப்பவர்களும் இதற்குப் பல வழிகளில் பொறுப்பாவர். இவ்வாறு பாலில் கலக்கும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேற்றவாறு மாறுபடுகின்றது.

நல்ல முறையில் நல்வாழ்வுச் சூழ்நிலையில் கறந்து பாதுகாப்புடன் சேமித்து வைக்கப்படும் பாலில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் நுண்ணுயிர்கள் காணப்படுகின்றன. ஆனால், மிகச் சாதாரண முறையில் நல்வாழ்வு குறைந்த சூழ்நிலையில் சேமிக்கப்படும் பாலில் நுண்ணுயிர்கள் மிக அதிக அளவில் காணப்படுகின்றன.

பாலில் காணப்படும் நுண்ணுயிர்கள் மூன்று வகைப்படும். 1. சாதாரணமாகக் காணப்படும் லேக்டிக் அமிலம் தயாரிக்கும் நுண்ணுயிர்கள்; 2. பல்வேறு வழிகளில் வந்து சேர்ந்து பாலினைக் கெடுக்கக் கூடிய ஆனால், நோய்களை உண்டு பண்ணாத நுண்ணுயிர்கள், 3. மக்களுக்கும், விலங்குகளுக்கும் நோய்களை உண்டு பண்ணும் நுண்ணுயிர்கள்.

துப்புரவுப் பணி

தோல் பதனிடுதல், பெருக்குதல், திறந்தவெளி கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல் போன்ற துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளோர் தாழ்த்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்குத் தரப்படும் சலுகைகளைப் பெற முடியாமல் இருந்து வருகின்றனர். இவர்களின் கல்வித் தரத்தை முன்னேற்ற இந்திய அரசு, 1977-78-ஆம் ஆண்டு முதல் இந்தியா முழுவதும் 500 பேருக்கு உயர்மெட்ரிக் உபகாரச் சம்பளம் வழங்கும் திட்டத்தை அமல்படுத்தியது.

1978-79 ஆகிய நடப்பு ஆண்டிலும் மத்திய அரசு இத்திட்டத்தைத் தொடர்ந்து அமல்படுத்துகிறது. இதில் தமிழ்நாட்டிற்காக 20 உபகாரச் சம்பளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட எல்லா உயர்மெட்ரிக் (Post-Matriculation) அல்லது உயர் செகண்டரி (Post-Secondary Courses) வகுப்புகளில் படிப்பதற்கு இந்த உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

மாதத்திற்கு ரூ. 70லிருந்து ரூ. 125 வரை கல்விப் பிரிவிற்கு ஏற்றாற்போல் உபகாரச் சம்பளம் மாறுபட்டிருக்கும். நிர்வாகச் செலவு, கட்டணங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்விச் சுற்றுலாச் செலவினங்கள் ஆகியவை உள்ளிட்டதாக உபகாரச் சம்பளங்களின் மதிப்பு இருக்கும்.

பெற்றோர் அல்லது காப்பாளரின் மொத்த வருமானம் எல்லா வழிகளிலும் சேர்த்து மாதம் ரூ. 750-க்கு மேல் இருக்கக்கூடாது. இந்த உபகாரச் சம்பளத்திற்கான செலவுகள் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். தாழ்த்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலை வாழ் மக்கள் இயக்குநரின் தனி உதவியாளர் இந்த உபகாரச் சம்பளம் வழங்கும் அதிகாரியாவார்.

உபகாரச் சம்பளம் வழங்கப்படும் பல்வேறு கல்வி வகுப்புகள் பற்றிய முழு விவரங்களை அறிய, தாழ்த்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் நல இயக்குநரின் தனி உதவியாளர், சென்னை-5 என்ற முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டும்.

'கருணா' நெல் 'அஞ்சுகம்' பாசிப்பயறு பெயர் மாற்றம்.

"ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்படும் புதிய ரகங்களுக்கு அரசியல் தலைவர்களின் பெயர்களையும், தனிப்பட்டவர்களின் பெயர்களையும் சூட்டுவதில்லை என்று அரசு மேற்கொண்ட முடிவுக்கு ஏற்ப, ''கருணா'' என்ற நெல்லுக்கு ''கோ. 33'' என்றும், ''அஞ்சுகம்'' என்ற பாசிப்பயறுக்கு 'வைகாசி பச்சைப்பயறு' என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது".

இவ்வாறு தமிழக வேளாண்மை — நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

'ஸ்ட்ரெப்டோகாக்கஸ்' 'லியுகோனஸ்டாக்' போன்ற பாக்டீரியாக்கள் பால் சர்க்கரையைத் தாக்கி 'லேக்டிக்' அமிலமாக மாற்றுகின்றன. இவை மட்டுமின்றி 'லேக்டோபேசில்லஸ்' குழுவைச் சேர்ந்த பல்வேறு பாக்டீரியாக்கள் பாலில் மிகச் சாதாரணமாகக் காணப்படுகின்றன. இவையும் பாலினை 37 முதல் 50 செ. கி. வெப்பநிலையில் வைத்திருக்கும்பொழுது பால் சர்க்கரையைத் தாக்கி 'லேக்டிக்' அமிலமாக மாற்றுகின்றன.

கவனக்குறைவாக வைக்கப்படும் பாலில் 'மைக்ரோகாக்கை', ஸ்டெபைலோகாக்கை' போன்ற பாக்டீரியாக்கள் அதிகமாகக் காணப்படும். ''எச்சரிரியா கோலி' போன்ற பாக்டீரியாவும் பாலில் காணப்படுகின்றன. இவை பாலில் மிக விரைவில் வளர்ந்து, கரிவளி, தீ நாற்றம் முதலியவற்றை ஏற்படுத்துவதால் இவை தீமை பயப்பன.

மற்றும், சில நுண்ணுயிர்கள் 'லேக்டிக்' அமிலம் தயாரிப்பதுடன் சில தீமைகளையும் விளைவிக்கின்றன. பாலிலுள்ள புரதச் சத்தாவது இவற்றினால் தாக்கப்பட்டுக் கெட்டு விடுகின்றது. 'பேசில்லஸ் கிளாஸ்ட்ரிடியம்', 'புரோடியஸ்', 'சர்சினா' போன்ற பாக்டீரியாக்கள் இம்மாதிரி செயல்பட்டு, பாலைக் கெடுத்து விடுகின்றன. 'ஏரோபேக்டர்' 'ஏரோஜின்ஸ்' 'மைக்ரோகாக்கஸ்', 'ஸ்ட்ரெப்டோகாக்கஸ்' போன்ற பாக்டீரியாக்கள் பாலைத் திரிய வைக்கின்றன. இந்த வகைப் பாக்டீரியாக்கள் அவற்றின் ஊயிரணுக்களிலிருந்து கோந்து போன்ற பசைப்பொருள்களை வெளிப்படுத்துவதால் பால் நூல் போன்றதாகவும் மற்றும் கொழுப்பாகவும் மாறிவிடுகின்றது. மற்றும் 'பேசில்லஸ் சூடாமோனஸ்' போன்ற பாக்டீரியாக்கள் ஒரு சில நொதிகளை வெளிவிடும்போது அவை பாலிலுள்ள 'கேஸின்' என்னும் புரதச் சத்தை மாற்றித் தயிராக உறையச் செய்கின்றன. ஒரு சில நுண்ணுயிர்கள் பாலிலுள்ள கொழுப்புச் சத்தைத் தாக்கி, 'கிளிசிரால்' மற்றும் பல கொழுப்பு அமிலங்களாக மாற்றுகின்றன. அதனால் பாலுக்கு ஒருவகைப் புளிப்புத் தன்மை உண்டாகின்றது. மேலும் 'செர்ரேஸியா மார்ஸஸன்ஸ்' என்னும் பாக்டீரியா பாலில் சிவப்பு வண்ணத்தை வெளியேற்றிப் பாலில் கரைத்து விடுவதால், பால் நிறம் மாறிக் கெட்டு விடுகிறது.

பாலைத் தொடர்ந்து சேமித்து வைத்தால் அதில் ஒரு சில குறிப்பிட்ட பாக்டீரியாக்கள் வளர்ச்சியடைகின்றன. குறிப்பாகக் குளிர்பதன அறைகளில் வைத்திருக்கும்பொழுது குளிர்ச்சியை விரும்பும் 'சைக்ரோபில்லிக்' பாக்டீரியாக்கள் அதிகமாகப் பாலில் வளர்ச்சியடைகின்றன. ஆனால், மிக அதிக வெப்பமான நிலையில் வைத்திருந்தால் (அதாவது 60' செ. கி. நிலையில்) வெப்பத்தை விரும்பும் 'தெர்மோபில்லிக்' பாக்டீரியாக்கள் வளர்ச்சியடைந்து பாலினைப் பாழ்படுத்தி விடுகின்றன. ஒருசில பாக்டீரியாக்கள் அதிக வெப்பத்தினையும் தாங்கி வளர்ச்சியடையக் கூடியவையாதலால், அந்தச் சூழ்நிலையில் பாலுக்கு மிகுதியான தீமை பயக்கத் தக்கன.

பல்வேறு விதமான நோய் உண்டு பண்ணும் நுண் கிருமிகளும், பாலின் மூலமாகப் பரவி, கடும் நோய்களை மக்களிடையே பரவச் செய்கின்றன. 'ட்யுபர்குலோசிஸ்' அல்லது எலும்புருக்கி நோய்,' புருலஸ்லோசிஸ்' என்னும் கருச்சிதைவு நோய், 'மாஸ்டைடிஸ்' அல்லது மடிவீக்கம் என்னும் நோய்கள் பாலின் மூலம் பரவுகின்றன. மற்றும் மக்களுக்கு வரும் நோய்களில் குறிப்பாக எலும்புருக்கி நோய். நலிவுச் காய்ச்சல், தொண்டைக் கட்டு, இரத்த பேதி ஆகியவற்றை ஏற்படுத்தும் நுண்கிருமிகள் பாலின் மூலம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப பரவி மககளுக்கு நோய்களை ஏற்படுத்துகின்றன.

நுண்ணுயிர்கள் பாலுடன் கலந்து தீமை பயப்பதைத் தடுப்பதற்குப் பல்வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. பால் மடியிலிருந்து வெளி வந்ததும் அதில் ஒரு மில்லியில் நூற்றுக்குக் குறைவான சில பாக்டீரியாக்கள் காணப்படுகின்றன. ஆனால், அதே போல் இடங்கள் மாறி வீடுகளுக்குச் சென்று அங்குப் பயன்படுத்தப்படும் சமயம் ஒரு மில்லியில் பலகோடி பாக்டீரியாக்கள் இருக்கின்றன. சுற்றுப்புறச் சூழ்நிலையை மிகத் தூய்மையாகவும், நல்வாழ்வு முறையிலும் வைத்துக் கொண்டால் பாலில் காணப்படும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை மிகக் குறைந்த அளவுக்குக் கட்டுப்படுத்தலாம்.

'பாஸ்டுரைசேன்' என்னும் முறையாவது சாதாரணமாகக் காணப்படும் பாக்டீரியாவை அழிப்பதற்கு மிகச் சிறந்த முறையாகும். இம்முறையில் பாலை 143' டிகிரி எஃப் (62.6' சி) வெப்பத்தில் 30 நிமிடங்கள், அல்லது 161' எஃப் (62.6' சி) வெப்பத்தில் 30 நிமிடங்கள், அல்லது 161' எஃப் (71.6' சி) வெப்பத்தில் 15.30 விநாடிகள் வைத்திருந்தால் எலும்புருக்கி நோயினை ஏற்படுத்தும் மைகோபேக்டீரியம்' உட்படப் பலவிதமான பாக்டீரியாக்கள் அழிந்து விடும். ஆனால், அதிக வெப்பத்தைத் தாங்கும் ஒரு சில பாக்டீரியாக்கள் மட்டும் அழிவதில்லை.

மற்றும், 'பாஸ்டுரைசேசன்' செய்யப்பட்ட பாலைத் தக்க பாதுகாப்பான, சிறிது குளிர்ச்சியான சூழ்நிலையில் வைத்திருந்தால் அவற்றின் எண்ணிக்கை அதிகமாவதில்லை. பாலும் விரைவில் கெட்டுப் போவதில்லை. 'பாஸ்டுரைசேசன்' செய்வதால் பாலிலுள்ள வைட்டமின் மற்ற சத்துப் பொருள்களுக்கு ஒருவிதத் தீங்கும் ஏற்படுவதில்லை. பாலின் சுவையும் அதிகமாக மாறுவதில்லை. நுண்ணுயிர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து 'பாஸ்டுரைசேசன்' செய்யப்பட்ட பாலினை 'ஏ' பிரிவு 'பி' பிரிவு என்று தரம் பிரிக்கலாம். 'ஏ' பிரிவு பாலில் ஒரு மில்லியில் 20,000 பாக்டீரியாவுக்குக் குறைவாகவும், 'பி' பிரிவு பாலில் ஒரு மில்லியில் 50,000 பாக்டீரியாவுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் என அறுதியிடப்பட்டுள்ளது.

(சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி வெளியிட்ட விழா மலரிலிருந்து).

கண்ணைக் கவரும் கன்னியாகுமரி

டாக்டர் ஏ. என். பெருமாள்,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

அழகால் அன்னியரையும் அருளால் இந்நாட்டவரையும் ஒருங்கு திரட்டி உவகை கூட்டும் கவின் மிக்க இடமாகக் கன்னியாகுமரி விளங்குகிறது. முக் கடலும் மோதி முழங்கிப் பாரதத் தாய், தமிழ்த் தாய், கன்னியாகுமரித் தாய் ஆகிய மூவரின் இணையடிகளை இன்பமுடன் பரவித் தழுவும் காட்சி கண்ணுக்கு விருந்தும், கருத்துக்கு எழுச்சியும் ஊட்டுவதாகும். பஃறுளியாற்றையும், பன்மலையடுக்கத்தையும் அன்று உண்டு கொதித்த கடல், இன்று மலைச் சிறுவர்களாகிய பாறைகளை அலைக் கரத்தால் அமுக்கிப் பிடித்துவிழுங்குவதையும் பின்னர் அவற்றைக் கக்கிக் களித்து கரையில் மோதுவதையும் கண்டு கண்டு சுவைக்கலாம். சில சமயம் பாறைகளை அமிழ்த்த முடியாமல் அவற்றின் தலையில் பாலைக் கொட்டுவதுபோல் தண்ணீரைக் கொட்டிப் பணிவதைப் பார்க்கலாம். பச்சைப் பாசி பரவியிருக்கும் பாறையின் உச்சந் தலையில் ஊற்றிய நீரால் ஏற்படும் பெருமை போன்று அதனைக் காண்போரின் தலையும் கருத்து நிறைவால் சிறந்து விளங்கும்.

மனிதனின் அறிவும் மாபெரும் உண்மையும் இணைவது போன்று தோன்றினும் இன்னும் விரிந்து பெருகும் இயல்பினை உடையது என்னும் அறிவினை இனிமையாக விளக்கும் இயற்கை அன்னையின் எழில் மிக்கக் கோலம் போன்று, அடி வானமும் அலை கடலும் ஒன்றையொன்று இணைவதாகத் தோற்றம் காட்டிச் சிறந்துள்ளன. கோண அமைப்பில் காணப்படும் கன்னியாகுமரி முனைப் பகுதியில் மூன்று கடல் அலைகளும் முட்டி மோதுவது கண்ணுக்கு இன்பம். படித் துறையில் பணிவாக இறங்கிப் பாய்ந்து வரும் அலையில் பாய்ந்து குளிப்பது உடலுக்கு இன்பம்.

காலை வேளையில் கதிரவனின் உதயக் காட்சி காண வேண்டிய இனிய காட்சி. புகைப்படக் கருவிகள் புதையலாகக் கருதும் நல்ல காட்சி. அதனைக் காணும் ஆவலில் காத்து நிற்கும் மக்களுக்கு எதிராகப் படரும் மேகக் கூட்டம் ஆயிரம் ஆயிரம் அன்பர்களின் சாபவுரையால் சல்லடையாகிச் சின்னா பின்னமாகச் சிதறிச் செல்வதையும் சில சமயம் பார்க்கலாம். பல கல் தொலைவிலிருந்து பார்க்க ஆவலுடன் வந்திருக்கும் மக்களை ஏமாற்றி விளையாடுவதில் இந்த மேகத்துக்கு என்னதான் இன்பம் கிடைக்கப் போகிறதோ தெரியவில்லை!

பூரணிமை நாளில் மாலைக் காலம் மிக்க மகிழ்வினைத் தரும் நல்ல காலம். மக்கள் கூட்டமும் மித மிஞ்சி இருக்கும். அன்று மேலைக் கடலின் விளிம்பில் வீழும் ஞாயிறும் கீழக்கடலின் முகட்டில் முழுமையாக எழும் திங்களும் ஒரே சமயத்தில் நேர் எதிர் எதிராகத் தோன்றிச் சிறக்கும். காந்தி மண்டபத்தின் மேல் மாடியில் தெற்குப் புறத்தில் நின்று இந்தக் காட்சியைக்கண்டு சுவைப்பவர்களது கண் செய்த தவமே தவம்! இதேபோன்று அமாவாசை நாள் காலை நேரத்தில் உதிக்கும் சூரியனைச் சேர்ந்து சந்திர வட்டம் ஒளி மழுங்கித் தோன்றுவதைச் சில சமயம் பார்க்க முடியும். இது மிக மிக அரிய காட்சியாகும்.

கடலுக்குள் இணை பிரியா அக்காள் தங்கையாக இரண்டு பாறைகள் உள்ளன. அந்த இரட்டைப் பாறைகளில் பெரியது விவேகானந்த சுவாமிகளுக்கு மன அமைதியையும் ஞானவொளியையும் ஊட்டிய இடமாகும். இரவோடு இரவாக அவர் எப்படிக் கடலில் நீந்திப் பாறையை அடைந்து விட்டார் என்பது வியப்புக்குரியதாகும். மேலும், படியும் பிடியும் இல்லாத பாறையின் உயரே ஏறிவிட்டது வியப்பிலும் வியப்பான செயலாகும். அந்தப் பாறையில் இன்று மிகப் பெரும் அளவில் கவின் மிக்கக் காட்சியாக விவேகானந்தர் மண்டபம் கல்லால் கட்டப்பட்டு உள்ளது. கல்லைச் செதுக்கிக் கவின் கலையை வளர்க்கும்கலைஞர் பெருமக்கள் இன்றும் உள்ளனர் என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக அந்த மண்டபம் விளங்குகிறது. சுவாமியின் சிலை நடப்பட்டிருக்கும் நடுக் கூடம் கலையின் கொலுவிருப்பாகவே உள்ளது. விவேகானந்தர் பாறைக்குச் செல்ல இப்பொழுது நல்ல முறையில் விசைப் படகு வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், பயணிகள் தக்க முறையில் தங்குவதற்குத் தகுதியான அறைகளும் கட்டப்பட்டுள்ளன. புதுமையான கலைக் கோயிலாக விவேகானந்தர் மண்டபம் விளங்குகிறது.

பழமையின் கலைவண்ணத்தைக் குமரிப் பகவதியம்மன் கோயில் கவினுறத் தாங்கியுள்ளது. பதுமைகள் உயிர் ஓவியங்களாகவே உள்ளன. கல்லால் செய்யப்பட்ட ஒரு யாளியின் வாய்க்குள் கல்லுருண்டை ஒன்று உள்ளது. அதைப் பற்றி அறிந்தவர்கள் அனைவரும் சிற்பியை வியந்து செல்கின்றனர். ஆலயத்தின் கருவறையில் அன்னைக் கன்னியாகுமரி அருளுருவாய் அன்புத் தாயாய்க் காட்சி தருகிறாள். பன்மொழி பேசும் பலநாட்டுப் பக்தர்களும் இனிய இசை கேட்டதும் மேலுடுப்பை அகற்றி இடுப்பில் கட்டிக் கொண்டு பணிவன்புடன் பரவசமுற்று வணங்கி நிற்பது நற்காட்சியாகும்.

குமரியம்மன் கோயிலுக்கு மேற்கே அண்ணல் காந்தியடிகளின் நினைவு மண்டபம் வடக்கின் கலையை விளக்கிக் காட்டிப் பொலிந்துள்ளது. 1948 பிப்ரவரித் திங்கள் 12ஆம் நாள் அண்ணலின் அஸ்திக் கலசம் ஒரு மேடையில் வைக்கப்பட்டு பின் கடலில் கரைக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் அதே நாள் அந்த மேடையில் சூரிய ஒளி பட்டுச் சிதறும் நிலையில் மண்டபத்தில் துளைகள் இடப்பட்டுள்ளன. மண்டபத்துள் நின்று மகாத்மாவை மனமார நினைப்பவரின் உள்ளம் அமைதி நிறைந்து ஆறுதலடைவது உறுதி. ஆயினும் கண்கள் நீரால் நிறைந்துவிடும்.

ஆலயத்தின் தெற்குப் பகுதியில் விவேகானந்தரது சிலையும், ஆதிசங்கரர் சீடர்களுடன் அமர்ந்து இருக்கும் சிலைகளும் தனித் தனி மண்டபங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் காணும்போது உத்தமர்களுடன் உறவாடும் உள்ள வெழுச்சி ஏற்படுகிறது.

கடற்கரையில் வெள்ளை, சிவப்பு, கருப்பு, ஊதா, இளம் மஞ்சள் ஆகிய பல வண்ண மணல்கள் காணப்படுகின்றன. அவற்றைத் தனித் தனியாக எடுத்து விற்பனை செய்கிறார்கள். கன்னியாகுமரியிலிருந்து சுமார் 15 கல் தொலைவில் மேற்கே இருக்கும் மணவாளக் குறிச்சியில் 7 வகை மண்களை ஆலைகள் மூலம் பிரித்து எடுத்துவெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். குமரிக் கடற்கரை பலவிதமான சங்குகள் ஒதுங்கும் இடமாகும். அழகான கிளிஞ்சல்களைக் கவின் பெறும் மாலைகளாகக் கட்டிக் கடைகளில் விற்கின்றனர். அவற்றை விரும்பி அதிக விலை கொடுத்து வாங்காத அன்னிய நாட்டினரே இல்லை என்று சொல்லலாம்.

கன்னியாகுமரியின் கிழக்குப் பக்கக் கடற்கரைப் பகுதியில் உயரமான ஊசிக் கோபுரத்தையுடைய மாதா கோயில் உள்ளது. அதன் உச்சியிலிருக்கும் தங்கக் கலவையுடைய சிலுவை மாலைக் காலத்து மஞ்சள் வெயிலில் தகதகவென மின்னி ஒளி வீசும். கோபுரம் ஏசு பெருமானின் பெருந் தியாகத்தின் உயர்வையும் பொற் சிலுவையின் ஒளிக் கதிர் அன்பின் அருட் சுடரொளியையும் குறித்துக் காட்டுகின்றன.

வடமேற்குப் பகுதியில் அன்பும் அருளும் நிறைந்த அல்லாவின் புனித இடமான அழகுக் கலை நிரம்பிய பள்ளி ஒன்று உள்ளது. அதைச் சுற்றிச் சூழ தென்னை மரங்கள் வீசும் தென்றலுக்கு இசைய, தங்கள் ஓலைக் கரங்களை ஆட்டி அசைந்து நடனமாடுவதைக் காணலாம்.

தூரக் கடல் தாண்டும் கலங்களுக்கு வழி காட்டி நிற்கும் கலங்கரை விளக்கம் வடக்கிலிருக்கும் தூரத்து மலைகளுக்கும் தோன்றிச் சிறப்பதாகும். நவீனக் காட்சியாக அது நின்று நிலவுகிறது. ரயிலில்லா ஊராயினும் விரைவில் ரயிலைக் காண வாய்ப்புடன் உள்ளது. தமிழ்நாட்டுத் தலைநகருடனும் மற்றும் முக்கிய நகர்களுடனும் விரைவுப் பேருந்தால் இணைக்கப்பட்டுள்ளது. கேரளத்தின் கோநகருடன் குமரிக்கு நெருங்கிய தொடர்பு உண்டு.

பரந்த கடற்கரை; பரவசம் ஊட்டும் வெண் மணல்; தவழ்ந்து விளையாடும் தென்றல் காற்று; அத்தனையும் கூடி அனைவரையும் மகிழ்விக்கும். எங்கும் எதிலும் எழில் ததும்பிக் களிப்பதைக் கன்னியாகுமரியில் காணலாம். அன்பும் அருளும் நிறைந்த இடம். பாவம் போக்கிப் புனிதமடைய பல்லோர் குழுமும் பான்மையுடைய புண்ணியத் தலமாக அது விளங்குகிறது. உலக மக்கள் உவகையுடன் வந்து உள்ளத்தில் அமைதி பெற்றுத் திரும்புவதற்குத் தகுதியான இடமாகக் கண்ணுக்கு இனிய கன்னியாகுமரி விளங்குகிறது!



விவசாயிகளுக்குப் பெருநஷ்டத்தை விளைவிக்கும் எதிரி— எலி

எலித்தொல்லையை அறவே நீக்க ஒரே வழி ரோடா:ஃபாரின் (ஆன்டிகோவாகுலண்ட்)

rodafarin 'C' KILLS TO THE LAST RAT



மிசோராமில் பஞ்சத்திற்கு அடிப்படையான காரணம் எலிகளின் நாசவேலைதான். எலிகள் விவசாயிகளின் முதல் எதிரி என்றும் அவை அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடும் விஷம் மூலம் உடன்கொல்லும் சக்திபெற்ற மருந்து கலந்த இரையை எலிகள் நாளடைவில் கண்டுகொண்டு ஒதுக்கிவிடுவதால், அவை பயனற்றுப் போகின்றன. இங்கிலையில், பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) நிறுவனத்தினர் ஆராய்ச்சியில் பெரும் முன்னேற்றம் கண்டு, எலிகளை அறவே ஒழிக்க வல்ல ரோடா ஃபாரினைத் தயாரித்திருக்கிறார்கள்.

ரோடாஃபாரின் உடன் கொல்லும் மருந்தல்ல. அதுவேலை செய்யும் முறையாவது, எலிகளின் ரத்த நாளங்களிலிருந்து ரத்தப் போக்கை ஏற்படுத்தி, அதே சமயம் ரத்தம் விரைவில் உறையாவண்ணம் செய்து, மெதுவாக ஆனால் நிச்சயமாக உயிரைப் போக்கிவிடுவதேயாகும். ரோடாஃபாரின் கலந்த இரை அதிகச் செறிவு இல்லாததாலும், விஷம் கடுமையாக இல்லாததாலும் எலிகள் இவ்விரையைத் தவிர்க்காமல், உட்கொண்ட மூன்றும் நாளிலிருந்து இறக்கத் தொடங்குகின்றன. குறிப்பாக, அதிகச் சேதம் ஏற்படுத்தும் வரப்பு எலிகள் 24 மணி நேரத்திற்குள்ளேயே இறந்து விடுகின்றன. ஆனால் ரோடாஃபாரின் கலந்த இரை தற்செயலாக மனிதர்களாலோ, வளர்ப்புப் பிராணிகளாலோ, கால்நடைகளாலோ உட்கொள்ளப்பட்டாலும் தீங்கு விளைவிக்காது.

ரோடாஃபாரினின் முற்றிலும் பயன்தரும் வேலைத்திறன், பல கிராமங்களில் நிரூபிக்கப்பட்டு விட்டது. குறிப்பாக, லட்சத் தீவில் ரோடாஃபாரின் உதவியுடன் எலிகளை முழுமையாக ஒழித்த பின் அங்கு தேங்காய் விளைச்சல் 150 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

ரோடாஃபாரின்*—எலிகளின் எதிரி. விவசாயிகளின் நண்பன்.

*உலகெங்கும் வார்ஃபாரின் என்ற மறுபெயர் கொண்டது.

FDS PCI 2750 TAM

பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) பி. லிட்.,
28, எர்ரபாலுச் செட்டித் தெரு, த. பெ. எண். 102, சென்னை 600 001. தொலைபேசி எண்: 24266, 24267.
177, ஜெயில் ரோடு, த. பெ. எண். 3774, கோயமுத்தூர் 641 018. தொலைபேசி எண்: 25975.
53, அமெரிக்கன் கல்லூரிக் கட்டிடம், த. பெ. எண் 53, அழகர்கோயில் ரோடு, மதுரை 625 002. தொலைபேசி எண். 30440.

பி.ஸி.ஐ. ஈ.டி.பி. ஆம்ப்யூல்
சேமித்து வைத்திருக்கும் தானியங்களை பூச்சிபூண்டுகளின் தொல்லையிலிருந்து எளிதான முறையில் சிறப்பாகக் காக்க எங்கும் கிடைக்கிறது.

சத்துணவில் மீன்

வெ. சுந்தரராஜ்
வெ. செல்வன்
வேளாண்மை அறிவியல் நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
பாண்டிச்சேரி.

மனித உணவு, நோய் நொடியின்றி நெடிது வாழ மனிதனின் உடல் வளத்துக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்புடைத்தாகச் சத்து நிறைந்து அமைதல் வேண்டும்.

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட பசுமைப்புரட்சியால் உணவுப் பொருள் விளைவில் தன்னிறைவேயன்றி சத்துணவுப் பொருள் பெருக்கம் ஏற்பட்டதாகக் கூறவியலாது. மேலும், நம் நாட்டில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப சத்துணவுப் பொருட்களின் விளைவும் இருத்தல் வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டே பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து நீலப்புரட்சி (Blue Revolution), வெண்மைப் புரட்சி (White Revolution) ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. நீலப்புரட்சி என்பது மீன் வளம் பெருக மீன்துறையில் ஏற்பட்டு வருகின்ற வேகமான வளர்ச்சியைக் குறிக்கிறது.

மனிதனின் சக்திக்கும் வளர்ச்சிக்கும் சமவிகிதத்தில் சத்துணவு தேவை. சத்துணவில் புரதம் (Protein), மாவுப்பொருள் (Carbo hydrate), கொழுப்பு (fat), தாதுச் சத்து (Minerals) ஆகியவை அடங்கியுள்ளன. இச்சத்துக்களோடு உயிர்ச் சத்துக்களும் (Vitamins) அவசியம் தேவை.

உடலில் ஏற்படும் பல்வேறு பெற தாதுச் சத்துக்களோடு உயிர்ச்சத்துப் பெரிதும் துணை செய்கின்றது. முக்கிய உயிர்ச் சத்துக்களை 'அப்டெக்' (Abcduk) என்கின்றோம். இளம்பிள்ளைகளுக்கு இவை எவ்வளவு முக்கியம் என்பதைப் பெற்றோர் நன்கறிவர். உயிர்ச்சத்துக்களில் ஏதேனும் ஒன்று குறைவுபட்டாலும் அதனால் பற்றுக்குறை நோய் (Deficiency Disease) ஏற்பட்டுவிடும். புரதம், கொழுப்பு, மாவுச் சத்துக்கள் குறைந்தால் உடல் வளர்ச்சி பாதிக்கப்படும்.

இந்திய மருத்துவத்துறையின் பரிந்துரைப்படி மனித உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதம், நமது அன்றாட உணவில் 55 கிராம் இருக்கல் வேண்டும். ஆனால், அரிசியையும், கோதுமையையும் முக்கிய உணவாகக் கொள்ளும் பழக்கத்தினால், நமது மக்கள் குறைந்த அளவுப் புரதத்தையே உட்கொள்கின்றனர்.

வற்றாத நமது பழக்கவழக்கங்களும் காரணமாயுள்ளன. மேலும், இறைச்சி, முட்டை, பால் போன்ற சத்துணவுப் பொருட்கள் தம் உணவில் இடம் பெறுவண்ணம் மக்களின் வருமானம் குறைந்து காணப்படுதலும் நாள்தோறும் பெருகி வரும் மக்கள் தொகையில், உணவுப் பொருட்களின் உற்பத்தியில் தன்னிறைவின்மையும் முக்கிய காரணங்கள் எனலாம். இவற்றால் மக்களின் அன்றாட உணவில் சேர வேண்டிய புரதம் சேர முடிவதில்லை. வசதியுடையோர்தான் சத்துணவைச் சுவைக்க முடியும் என்ற நிலை நிலவுகின்றது.

மீனுணவில் தேவையான புரதம் உள்ளது. மீனின் விலையும் குறைவு. மீனை உணவில் அதிகம் பயன்படுத்தினால் புரதப் பஞ்சத்தைப் போக்க முடியும். மீன், இறைச்சி, முட்டை மற்றும் பாலுக்கு இணையான அல்லது அதிகமான சத்துக்கள் அடங்கியுள்ளன. மீன்களைச் சிறு பிள்ளைகள் முதல் முதியோர் வரை அனைவரும் உணவாகக் கொள்ளலாம். மீனுணவு பிற மாமிச உணவுகளைப் போலன்றி எளிதில் செரிக்கக் கூடியது. மேலும், மீனின் புரதத்தில், அவசியமான பல அமினோ அமிலங்கள் உள்ளன.

மீன்களில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, சோடியம், பொட்டாசியம், மக்னீசியம் சல்பர் ஆகிய தாதுச் சத்துக்களும் உள்ளன. குறிப்பாகக் கடல் மீன்களில் அயோடின் (Iodine) அதிகமாகும். மீனிலிருந்து தயார் செய்யப்படும் அடர் புரதத்தில் (Fish protein Concentrate) ஃப்ளோரின் (Florine) அதிகம். எண்ணெய்ச் சத்து நிறைந்த சார்டைன் (Oil Sodine)

அனபாஸ் (Anabas testudimous) போன்ற மீன்களில் உயிர்ச்சத்து (Vitamins-C) அதிகமுள்ளது. ட்யூனா (Tuna), ஹேலிபட் (Halibut) போன்ற மீன்களில் உயிர்ச்சத்து D பெருமளவு உள்ளது. மீன்களின் ஈரலிலும், சினையிலும், உயிர்ச்சத்து 'B' அதிகம் காணப்படுகின்றது. பொதுவாக மீன்களில் உயிர்ச்சத்து ஏ, டி, பி காம்ப்ளெக்ஸ், பி-12 ஆகியவை மீனின் சதையிலும், சற்று அதிகமாக ஈரலிலும் காணப்படுகின்றன.

பல்வகை மீன்களின் (செதிள், வால், துடுப்பு, குடல் போன்ற) கழிவுகள் நீங்க மீன்களைப் பொறுத்து, 40 முதல் ஏறத்தாழ 90 சதம் வரையான பாகங்களை அப்படியே உணவுக்குப் பயன்படுத்த முடியும். சில நுண்ணிய மீன்களை அப்படியே முழுவதுமாக உணவுக்குப் பயன்படுத்தலாம். மீன்களில் 15-25 சதம் வரை புரதமும், 0.2 முதல் 19.4 சதம் கொழுப்பும், 13.9 சதம் வரை மாவுப் பொருள்களும் உள்ளன. மீன்களில் உள்ள குறைந்த அளவு மாவுச் சத்தும் (க்ளைக்கோஜன்-Glycogan) மீன்கள் இறந்ததும் லேக்டிக் அமிலமாக (Lactic Acid) மாறி விடுவதால் நாம் உண்ணும் மீனில் மாவுச்சத்து இருக்க முடியாது. எரிக்கும் சக்தி (Calory) (Caloric Value) 79 முதல் 413 வரையிலும் காணப்படுகின்றது. இரும்புச் சத்து 0.5 சதம் முதல் 6.8 சதம் வரையுள்ளது. வைட்டமின் 'சி' 0 முதல் 32 மி. கிராம் (Anabous testudimous) வரையுள்ளது. நமது அன்றாட உணவுப் பொருட்களின் சத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது சத்துணவில் மீனின் பங்கு மிக முக்கியமான தென்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் விளங்கும்.

உணவுக்கு இவ்வளவு மீன் தேவை என்று கணக்கிட்டு மீனவர்கள் மீன் பிடிப்பதில்லை. மேலும், ஓரளவு வளர்ந்த மீன்களை மட்டும் பிடிப்பதும் இல்லை. இதனால் சிறிய மீன்களும் பிடிக்கப்பட்டு வீணாகி விடுகின்றன. நமது நாட்டு அண்மைக் கடலிலும், தூரக் கடலிலும் பெருமளவு மீன்களை நாம் பிடிக்க முடியாமலிருப்பது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ 16-18 இலட்சம் மெட்ரிக் டன் உள்ள மீன்களில் நாம் 2 மெட்ரிக் டன் மீன்களை மட்டுமே பிடிக்க முடிகின்றது.

மீனவர்களின் குப்பங்களின் அல்லது குப்பங்களின் அருகே தகுந்த குளிர்சாதன வசதி இன்மையால் மீன்கள் கெட்டுவிடாமல் பின்னர் விற்பதற்காக ஓரளவு மீன்களை மட்டும் உப்பிட்டும் (Salting), காயவைத்தும் (Sundrying), புகை போட்டும் (Smoking) மீனவர்கள் பக்குவம் செய்து கொள்கின்றனர். இவ்வகை ஏற்பாடுகளினாலும் மீன்களின் புரதத்தில் இழப்பு ஏற்படுவதுண்டு. எனவே, அளவோடு மீன் பிடித்து உடனே விநியோகித்தல் ஒரு 'புரதக் காப்பு' முறையாகும். வளர்ந்து கிடக்கும் மீன்கள் கடலில் செத்து வீணாகாமல் அவை அனைத்தையும் நவீன வசதிகளமைந்த மீன்பிடி கப்பல்கள் மூலம் பிடித்து நம் மக்களுக்கும் வேற்று நாட்டோருக்கும் தந்து நமது பொருளாதாரத்தையும் பலமுள்ளதாக்கலாம்.

ஆஸ்திரேலியா போன்ற நாட்டினர் நல்ல மீன்கள் கிடைக்காமல் நச்சுத் தன்மையுள்ள மீன்களைக் கூடப் பிடித்து, நஞ்சை நீக்கிப் பின்னர் உண்ணும் நிலையில் உள்ளனர். ஆனால், ஏறத்தாழ 4,667 கிலோ மீட்டர் கடற்கரையோடு விரிந்து, பரந்த கடலைப் பெற்ற நாம் பெருமளவு மீன்களைப் பிடிக்காமல் இருப்பதும், பிடித்தவற்றை உள்நாட்டு மக்களுக்குக் கொண்டு செல்லாமலிருப்பதும், சில வேளைகளில் வீணாக்குவதும் வருந்தத்தக்கது.

தமிழக அரசினரால் வாங்கப்பட்டுள்ள தஞ்சை, நெல்லை போன்ற மீன்பிடி கப்பல்களாலும், வசதிகளாலும் இனி அதிக மீன்கள் பிடிக்கவும், பிடித்த மீன்களை உடனடியாக விநியோகிக்கின்ற வாய்ப்புகள் பெருகியிருக்கின்றன.

மீனின் புரதம் வெப்பத்தாலும், காற்றின் ஈரப்பதத்தாலும் (Humidity) குறைந்து விடுகிறது. ஆகையால், மீன்களைப் பிடித்த சில மணி நேரங்களில் அவற்றைப் பயன்படுத்துவது அவசியமாகின்றது.

அதிக அளவில் கிடைக்கும் தரத்தில் குறைந்த மீன்களைக் கால்நடைகளுக்கும், கோழி, வாத்து போன்றவைகளுக்கும் உணவாகப் பயன்படுத்துவதோடு மீன் தூள் (Fish Flour), மீன் உணவு (Fish meal), மீன் உரம் (Fish manure) ஆகியவை தயாரிக்கவும் பயன்படுத்தலாம்.

மீனுணவில் (Fish meal) 88.4 சதம் புரதமும் உள்ளது. நமது நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் மீனுணவும் ஒன்றாகும். இணையற்ற புரதம் செறிந்த இவ்வுணவை, சற்று கவனத்தோடு மனித உபயோகத்திற்காகத் தயாரிக்கப்படும் மீன்மாவு (Fish flour) என்கின்றோம். மீன் மாவை, 3-4 வயதுக் குழந்தைகளும் ஏற்றுக் கொள்ளும். இதனை, ரொட்டி, பிஸ்கட், கேக், கூழ் போன்றவற்றோடு சேர்த்துச் சத்துணவாய் செய்து சாப்பிடலாம்.

மீன்களிலிருந்து மீன் எண்ணெய் (Fish oil), அடர் புரதம் (Fish Protein Concentrate) ஆகியவையும் தயாரிக்கலாம்.



ஈரலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை லிவர் ஆயில் (Liver oil) அல்லது ஈரல் எண்ணெய் என்கிறோம். லிவர் ஆயிலில் வைட்டமின் 'A'யும், 'D'யும் அதிகம் இருப்பதனால் இதனை மருந்தாகக் குழந்தைகளுக்கும் 'ரிக்கெட்ஸ்' மற்றும் எலும்புருக்கி நோய் உள்ளோர்க்கு மருந்தாகவும் தரலாம்.

அடர் புரதத்தில் 'C' யும், 'P' யும், தாதுப்பொருட்களும் உள்ளன. கோதுமை போன்ற உணவுப் பொருட்களோடு மீனின் அடர் புரதத்தையும் சேர்த்துச் சாப்பிடுவோமானால் பெருமளவு புரதம் உடலோடு சேரும். உதாரணமாக, கோதுமை உணவை மட்டும் ஒருவன் உட்கொள்வானேயானால் கோதுமையின் புரதத்தில் 50 சதம் மட்டுமே உடலோடு சேர்கின்றது. ஆனால், 3 சதம் மீனின் அடர் புரதத்தையும், கோதுமையோடு சேர்த்துச் சாப்பிடுவானேயானால் 67.2 சதம் உடலோடு புரதம் சேர்வது குறிப்பிடத்தக்கதாகும்.

நமக்குத் தேவையான அளவு மீன்களைப் பெற கடலில் கிடைக்கும் மீன்கள் மட்டும் போதுமானதல்ல. எனவே, ஆறு, ஏரி, குளம், குட்டைகளிலும், கழிவு நீர்க் குளங்களிலும் தீவிர முறையில் வேகமாக வளரும் பலவகை மீன்கள் வளர்க்கப்படுகின்றன. இம்முறையில் மீன் வளர்ப்பதால் ஆண்டொன்றுக்கு ஓர் எக்டர் நீர்ப்பரப்பிலிருந்து 9,000 கிலோ மீன்கள் வரை உற்பத்தி செய்ய முடியும்.

அன்றாட உணவுப் பண்டங்களின் சத்துப் பொருட்கள்

	பொருள்	ஈரம் Moisture %	புரதம் Protein %	கொழுப்பு Fat %	மாவுப் பொருள் Carbo-hydrate %	கால்சியம் Calcium (Mg/100 gm)	பாஸ்பரஸ் Phaspharaus (Mg/100 gm.)	இரும்பு Iron Mg/100 gm.)	தாதுப் பொருட்கள்	எரிக்கும் சக்தி
1.	கடல் மீன்	...69.26-89.30	9.05-26.10	0.50 9.64	...	71.40 11.50	13.30 663.70	1.25 10.14	... ...	... ...
2.	நன்னீர் மீன்	...53.7-...82.0	13.7-25.2	0.6-19.4	...	130-790	120-650	0.42-226	...	...
3.	பசும் ப்பால்	...87.5	3.2	4.1	4.4	120	90	0.2	0.8	67
4.	கோழிமுட்டை	...73.7	13.3	13.3	...	60	220	2.1	1.0	173
5.	வாத்து முட்டை	...71.0	13.5	13.7	0.8	70	260	3.0	1.0	181
6.	இறைச்சி	...71.5	18.5	13.3	...	150	150	2.5	1.3	194
7.	கோழி	...72.2	25.9	0.6	...	25	245	...	1.3	109
8.	பன்றி	...77.4	18.7	4.4	...	30	200	2.2	1.0	114
9.	வாத்து	...72.3	21.6	4.8	0.1	4	235	...	1.2	130
10.	அரிசி (பச்சை)	...13.7	6.8	0.5	78.2	10	160	3.1	0.6	345
11.	அரிசி (புழுங்கல்)	...13.3	6.4	0.4	79.0	9	143	4.0	0.7	346
12.	கோதுமை	...12.8	11.8	1.5	71.2	41	306	4.9	1.5	346
13.	உளுந்து	...10.9	24.0	1.4	59.6	154	385	9.1	3.2	347
14.	துவரம் பருப்பு	...13.4	22.3	1.7	57.6	73	304	5.8	3.5	335

நன்னீர்ப் பரப்பு தவிர கடலோரப் பகுதிகளில் 14 இலட்சம் எக்டர் சதுப்பு நிலங்கள் நமது நாட்டில் உள்ளன. இப்பகுதிகள் மீன் வளர்ப்புக்கு மிகவும் ஏற்றவை. இவற்றில் தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 80,000 எக்டர் பரப்பளவு உள்ளது. நமது நாட்டின் சதுப்பு நிலப் பகுதிகளும் மீன் வளர்ப்புக்குள் கொண்டு வரப்படும்போது கூடுதலாக 31 இலட்சம் டன் மீன்கள் உற்பத்தி செய்ய முடியும் என்றும் ஏறத்தாழ 28 இலட்சம் (28,40,000) பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

வேளாண்மையே முக்கிய தொழிலாகக் கொண்ட நம் முன்னோர் வேளாண்குடி மக்கள், இலாபம் தரும் தொழிலான மீன் வளர்ப்பையும் ஒரு துணைத் தொழிலாக மேற்கொள்வார்களேயானால், உடல் ஆரோக்கியத்திலும், வளர்ச்சியிலும், பொருளாதாரத்திலும் அவர்கள் வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை!





உங்கள் குழந்தைகளை மகிழ்விக்க...

ஜி. மணிமேகலை
உணவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்
பல்கலைக் கழகம்
கோவை-3.

மாலையில் பள்ளியிலிருந்து உங்கள் குழந்தைகள் களைத்துப் போய் பசியோடு வீடு திரும்புகிருர்கள்! அவர்களுக்கு வேண்டிய உணவு அளித்து-அவர்களுடைய களைப்பைப் போக்குவதில் பெற்றெடுத்த அன்னையருக்குத்தான் எவ்வளவு அக்கறை! பலகாரங்கள் தயார் செய்து 'ரெடி'யாக வைத்துக் கொண்டு குழந்தைகளை வரவேற்கிருள் தாய்! இது ஒவ்வொரு வீட்டிலும் நாம் காணும் அன்ருடக் காட்சியல்லவா?

பள்ளிகளிலிருந்து வீடு திரும்பும் உங்கள் குழந்தைகளின் பசி தீர்க்க வேண்டி பால், காப்பி, டீ போன்ற பானங்களையும், ரொட்டி, பிஸ்கட், முறுக்கு, பழம் போன்ற உணவுப் பண்டங்களையும் கொடுத்து நாம் மகிழ்கிருேம்! குழந்தைகள் பெரிதும் விரும்பி உண்ணும் பிஸ்கட்டுகளை ஏன் நம் வீட்டிலேயே தயார் செய்யக்கூடாது? மிகவும் சுலபமாக பிஸ்கட் வகைகளைத் தயார் செய்யலாமே!

பிஸ்கட் :

மைதா—100 கிராம்

பால்பவுடர்—10 கிராம்.

சர்க்கரை—15 கிராம்.

பேக்கிங் சோடா—½ தேக்கரண்டி

டால்டா—45 கிராம்.

வெண்ணிலா எசன்ஸ்—2 துளிகள்

மைதா மாவுடன் சோடா உப்பும் சேர்த்து இரண்டு முறை சலித்துக் கொள்ளவும். பின்னர் சர்க்கரை (பொடி செய்தது) பால்பவுடர் சேர்த்து டால்டாவையும் உடன் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். சப்பாத்திக்கு மாவு தேய்ப்பதுபோல் செய்து கொண்டு வேண்டுமான வடிவத்தில் வெட்டி எடுத்து பிஸ்கட் சுடும் (Baking Ovan) அடுப்பில் வைத்து கேஸ் அடுப்பில் அல்லது ஸ்டவ்வில் வைத்து பிஸ்கட் வேக வைக்கவும்.

குழந்தைகளின் விருப்பத்துக்குத் தக்கவாறும், நாம் செய்யும் பிஸ்கட்டின் உணவுச் சத்தை அதிகரிக்கவும், கொட்டை வகைகள் (நிலக்கடலை, முந்திரி) எள், ஜாம், கிரீம் போன்றவற்றையும் உடன் சேர்த்துப் பல வகையான சுவைமிக்க பிஸ்கட்கள் தயார் செய்யலாம்.

ஸ்பைசீ பிஸ்கட் :
(Spicy Biscuit) :

மைதா—100 கிராம்.

சர்க்கரை—5 கிராம்.

உப்பு—5 கிராம்.

மிளகாய்ப் பொடி—250 மி.கி.

சீரகம் பொடி—250 மி.கி.

சீரகம்—மணத்துக்கு ஏற்றவாறு.

டால்டா—45 கிராம்.

பேக்கிங் சோடா—½ தேக்கரண்டி

மாவைப் பிசைந்து கொண்டு மேலே சொன்னது போலச் செய்யவும்.

எள் பிஸ்கட் :

மைதா—100 கிராம்.

வறுத்து பொடி செய்த எள் —20 கி.

சர்க்கரை—20 கிராம்.

டால்டா—45 கிராம்.

பேக்கிங் பவுடர்—½ தேக்கரண்டி

இதனுடன் வேண்டுமானுல் வறுத்து பொடி செய்த நிலக்கடலை (1 மேஜைக்கரண்டி) சேர்த்துக் கொள்ளலாம். பின்னர், மேலே சொன்னது போலச் செய்யவும்.

உப்பு பிஸ்கட் :

மைதா—100 கிராம்.

சர்க்கரை—5 கிராம்.

உப்பு—5 கிராம்.

டால்டா—45 கிராம்.

பேக்கிங் சோடா—½ தேக்கரண்டி

வெண்ணிலா எசன்ஸ்—2 துளிகள்

மாவைப் பிசைந்து கொண்டு பிஸ்கட் செய்வது போலச் செய்யவும்.

கிரீம் பிஸ்கட் :

சர்க்கரைப் பொடியுடன் வெண்ணெய் சேர்த்து நன்ருகக் கலக்கிக் கொள்ளவும். வேண்டுமானுல் கலர் பவுடரும், எசன்ஸையும் சேர்த்து நன்ருகக் கலக்கிக் கொள்ளவும். ஒரு பிஸ்கட்டின் மேற்புறம் கிரீமைத் தடவவும். அதன்மீது மற்ருெரு பிஸ்கட்டின் மேற்புரத்தைச் சேர்க்கவும். அதாவது இரண்டும் பிஸ்கட்களை கிரீமின் உதவியுடன் சேர்க்கலாம். கிரீம் தயார் செய்யும்போது லேசாக வறுத்துப் பொடி செய்த முந்திரி பருப்பையும் சேர்த்துக் கொள்ளவும். கிரீம் உபயோகிப்பது போல நிலக்கடலை வெண்ணெய்யையும் பயன்படுத்தலாம்.

ஜாம் பிஸ்கட் :

கிரீம் உபயோகிப்பதற்குப் பதிலாக பிஸ்கட்டில் 'ஜாம்' வைத்துக் கொடுக்கலாம். அன்ஞசிபழ ஜாம், பலவகைப் பழங்கள் கொண்டு தயார் செய்த ஜாம். (Mixed Fruit Jam) ஆரஞ்சு மார்மலேடு போன்றவற்றை உபயோகித்தால் குழந்தைகள் மிகவும் விரும்பி உண்ணுவார்கள்.

கோதுமையிலிருந்து (மைதா) தயார் செய்யப்பட்ட பிஸ்கட்டுடன் பழ ஜாம், கிரீம், முந்திரி பருப்பு போன்றவற்றைச் சேர்த்துக் கொடுக்கும்போது புரதத்துடன் வைட்டமினும், தாது உப்பும் கலோரியும் கிடைக்கும்.

நெற்பயிரில் காணப்படும் புதியநோய்கள் - தடுப்பு முறைகள்

டாக்டர் எம். என். அழகியநாகலிங்கம்,
சி. எல். சுப்பிரமணியன்,
ஆர். மோகன்.
தமிழ்நாடு வேளாண்மைக் கல்லூரி
ஆராய்ச்சி நிலையம், மதுரை.

தமிழ்நாட்டில் நெற்பயிர் சுமார் 2,250,000 எக்டேர் நிலப் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. சராசரியாக ஓர் எக்டேருக்கு நெல்லின் மகசூல் 1.85 டன்களே கிடைக்கின்றன. கீழை நாடுகளான ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளை ஒப்பிடும்பொழுது இந்த மகசூல் மிகமிகக் குறைவானதேயாகும். இதற்குக் காரணம், நம் விவசாயப் பெருமக்கள் நோய்க்கு இலக்காகும் புதிய நெல் ரகங்களில் போதிய பயிர்ப் பாதுகாப்பு குறித்த தருணத்தில் செய்யாததேயாகும்.

நவீன விவசாயத்தில் பயிர்ப் பாதுகாப்பு என்பது ஒரு இன்றியமையாததொன்ருகும். நெற்பயிர் பல்நோய்களினுலும் பூச்சிகளினுலும் தாக்கப்படுகிறது. ஏற்கெனவே, தமிழ்நாட்டில் நிலவிவரும் நெற்பயிர் நோய்களான குலைநோய், செம்புள்ளி நோய் போன்றவை தவிர தற்பொழுது புதிய சில நோய்களும் தோன்றியுள்ளன. அவற்றின் அறிகுறிகளையும், கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் கீழே காண்போம்:

நெல் உறை அழுகல் நோய் (Paddy Sheath Rot) :

இது ஒரு பூசணநோய். இந்நோய் தமிழ்நாட்டிலும் அதன் அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் மேலும் மேற்கு வங்கத்தில் முதன் முதலாக 1973-ஆம் ஆண்டு தோன்றி தீவிரமடைந்தது. இந்நோயின் அறிகுறி, நெற்கதிர் வெளிவரும்பொழுது நன்கு காணப்படும். நோய், இளம் கதிரைச் சுற்றியுள்ள உறையில், முதலில் சிறு கரும்புள்ளி வடிவத்தில் தோன்றி பின்னர் பெரிதாகி உறை முழுவதற்கும் பரவுகிறது. இவ்வாறு தாக்கப்பட்ட உறையிலிருந்து நெற்கதிர் வெளிப்படுவதில்லை. அல்லது பாதி கதிரே வெளிப்படுகிறது. நோயானது நாளடைவில் பரவி உள்ளிருக்கும் கதிரையும் அழுகச் செய்கின்றது. எனவேதான், இதற்கு 'உறை அழுகல்நோய்' எனப் பெயரிடப்படுகின்றது. நன்கு நோய் தாக்கிய கதிர்களில் பால்பிடிப்பது இல்லை. மேலும், அவை கருமை நிறமாக மாறிவிடுகின்றன.

இந்நோய் தாக்குதலினுல் தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் சுமார் 60 சதவிகிதம் மகசூல் குறைந்துள்ளது என ஆராய்ச்சியின் மூலம் தெரிய வருகின்றது. இந்நோய் எல்லாக் காலங்களிலும் நெற் பயிரில் காணப்படினும், நவம்பர் முதல் ஏப்ரல் வரை இவை கடுமையாக நெற் பயிரைத் தாக்குகின்றன. ஐ. ஆர். 8, 20, 22, கண்ணகி, மேலும் கோ. 39 போன்ற நெல் ரகங்கள் இந்தோயினுல் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. பவானி, ஏ. டி. டி. 10 போன்ற சில நெல் ரகங்கள் இந்நோய்க்கு எதிர்ப்புச் சக்தி கொண்டுள்ளன.

எனவே, உறை அழுகல் நோயைக் கட்டுப்படுத்த நோயெதிர்ப்புத் திறன் கொண்ட நெல் ரகங்களையே பயிரிட வேண்டும். விதைகளை விதைக்கும் பொழுது விதை நேர்த்தி செய்ய வேண்டும். நல்ல விதைகளை, அக்ரசான் அல்லது செரசான் மருந்துடன் 2 கிராம் மருந்தை ஒரு கிலோ விதையுடன் கலந்த பின் விதைக்கவேண்டும். தழைச் சத்து அதிகமாக இடுவது நோய் மேலும் தீவிரமடைவதற்கு ஏதுவாக அமைவதால், குறிப்பிட்ட உர அளவு விகிதத்தைப் பின் பற்றுவது நலம். வயலில் காணப்படும் இந்நோயை ஊடுருவிப் பாயும் பூசணக் கொல்லி மருந்தான பேவிஸ்டின் (0.1 சதவிகிதம்) அல்லது கிஞேசான் (250 மில்லி) அல்ல டைதேன் எம்.45 (0.2 சதவிகிதம்) மருந்து கொண்டு கதிர் தோன்றும்போது குறைந்தது 15 நாட்களுக்கு ஒரு முறை இருமுறைகளாவது தெளித்தால் நோய் நன்கு கட்டுப்படும் என்று ஆய்வின் மூலம் தெரிகின்றது.

அட்டவணை-1

பூசண மருந்து	உறை அழுகல் நோய் பூசண வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்ட அளவு சதவிகிதத்தில்
பேவிஸ்டின் (0.1)	72.00
டைதேன் எம். 45 (0.2) ...	66.66
கிஞேசான் (250 மில்லி/ ஏக்கர் ...	64.00
டெரோசால் (0.2).	58.63

இலையுறைக் கருகல் நோய் (Sheath blight) :

இதுவும் ஒரு பூசண நோயாகும். இந்நோய் தமிழ்நாட்டிலும் அதன் அண்டை மாநிலங்களிலும் 1921-ஆம் ஆண்டு முதல் நெற்பயிரைத் தாக்கி வருகிறது. ஏடிடி. 31, கருணை போன்ற நெல் ரகங்கள் மதுரை மாவட்டத்தில், 1977-ஆம் ஆண்டு கடுமையாக இந்

நோயினால் தாக்கப்பட்டு விவசாயிகளுக்குப் பெரும் இழப்பை விளைவித்தன.

இந்நோயின் அறிகுறியாக, நீள் வட்டவடிவ சாம்பல் நிறமான புள்ளிகள் அடித்தண்டைச் சுற்றியுள்ள இலையுறையில் (Sheath) தோன்றும். நோய் மேலும் பரவி எல்லா இலை உறைகளையும் தாக்கி தண்டுப்பகுதியையும் அழுக வைக்கின்றது. இதன் காரணமாக இலைகள் பழுப்பு நிறம் அடைந்து, காய்ந்து கீழ் நோக்கித் தொங்க ஆரம்பிக்கின்றன. காய்ந்த தோகைகளில் எண்ணற்ற கடுகு போன்ற கருமையான "இழை முடிச்சுகள்" காணப்படும். இவை யாவும் பூசணத்தின் வித்துகள் ஆகும். இளம் பயிரிலேயே இந்நோய் தாக்குமாயின், செடி கருகி மகசூல் வெகுவாகப் பாதிக்கப்படும். இந்நோய் உறை அழுகல் நோய் தாக்கும் எல்லா நெல் ரகங்களையும் பெரும்பாலும் தாக்குகின்றன.

இந்நோயைக் கட்டுப்படுத்த முன் கூறியது போல நோயெதிர்ப்புச் சக்தி கொண்ட நெல் ரகங்களைப் பயிரிடுதல், விதை நேர்த்தி செய்தல் போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். பொதுவாக, வடிகால் வசதியற்ற வயல்களில் இந்நோய் மிக எளிதாகப் பரவுகின்றது. எனவே, நோய் கண்ட வயல்களில் தண்ணீரை வடித்து கிளைசான் ஓர் ஏக்கருக்கு 250 மில்லி என்ற விகிதத்தில் செடியின் தண்டுப்பகுதி நன்கு நனையும்படி தெளித்தால் நோய் நன்கு கட்டுப்படும்.

பாக்டீரியா இலைக்கருகல் நோய் (Bacterial leaf blight) :

இது ஒரு பாக்டீரியா என்ற நுண்கிருமியால் உண்டாகும் நோயாகும். இது தமிழ்நாட்டில் 1962-ஆம் ஆண்டு தோன்றி இன்றுவரை கடுமையான சேதத்தை விளைவித்து வருகின்றது. தமிழ்நாட்டில் இந்நோய் 60 சதவிகிதம் மகசூல் நஷ்டத்தை விளைவிப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

இந்நோயின் அறிகுறியாக முதன் முதலில் மங்கிய மஞ்சள் நிறமான நீர்கோத்த புள்ளிகள் இலையின் நுனியில் தோன்றுகின்றன. பின்னர், அவை கீழ் நோக்கிப் பரவ ஆரம்பிக்கும். இலையின் ஓரங்கள் அலைஅலையாக காய்ந்த மஞ்சள் நிற சருகாகவும் நடுநரம்பையொட்டி இலை, பசுமையாகவும் இருக்கும். நோய் முற்றும் பொழுது இலை முழுவதும் காய்ந்து விடும். அதிகக்

கீழத்தஞ்சை வேளாண்மைத் தொழிலாளர் ஊதியம்—இடைக்கால நிவாரணம்...

1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டத்தின் கீழ, தஞ்சை மாவட்டத்தின் கீழ்ப் பகுதி வட்டங்களாகிய சீர்காழி, மாயூரம், நன்னிலம், திருவாரூர், நாகப்பட்டினம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகியவற்றில் நியாய ஊதியங்களை மாற்றியமைக்கும் பிரச்சினையைக் கருதி ஒரு நபர் கமிஷன் ஒன்று 15—7—78ல் அரசினால் நியமிக்கப்பட்டது நினைவிருக்கும்.

இக்கமிஷன் தனது முடிவான பரிந்துரைகளை அளித்து அவை அரசினால் கருதப்படுவதற்குள் குருவைப் பயிர் நடவும், கணிசமான அளவு சம்பாப் பயிர் நடவும் முடிந்துவிடும். ஆகையால், கமிஷன் அளிக்கவிருக்கும் முடிவான பரிந்துரைகள் மீது அரசு முடிவெடுக்கும் முன், இடைக்காலத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க, பயிரிடு பருவத்தில் நடைபெறும் எல்லாவிதப் பணிகளுக்கும் கீழ்க்கண்டவாறு ஊதியம் நிர்ணயிக்கப்படலாம் என கமிஷன் இடைக்காலப் பரிந்துரை அளித்துள்ளது.

ஆண்கள்—ரூ. 6.50 ரொக்கம், அல்லது 6 லிட்டர் நெல் மற்றும் ரூ. 2.75 ரொக்கம். பெண்கள்—ரூ. 4.50 ரொக்கம் அல்லது 5 லிட்டர் நெல் மற்றும் ரூ. 1.50 ரொக்கம்.

அரசு இப்பரிந்துரையை ஏற்று அவ்வாறே ஆணை வெளியிட்டுள்ளது.

காற்றின் ஈரப்பதம், தொடர்ந்து மழை போன்ற சாதகச் சூழ்நிலையில் பாக்டீரியா திட்டு திட்டாக இலையின் மேல் கசிந்து படிகின்றது. எனவே, இலைகள் மீண்டும் நோய் பரவுவதற்குக் காரணமாக அமைகின்றன.

இந்நோய்பரவுவதற்கு நோயுற்ற விதைகளே முதற் காரணமாக அமைகின்றன. மேலும், அவை வைக்கோல், அடித்தூர் போன்றவற்றிலும் வாழும் தன்மை கொண்டுள்ளன. முக்கியமாக இவை விதைகளின் மூலம் பரவுவதால் விதைகளை விதைநேர்த்தி செய்து விதைப்பது நல்லது. விதைகளை 0.025 சதவிகிதம் அக்கிரிமைசினும், 0.05 சதவிகிதம் நனையும் செரசானும் கலந்த நீரில் சுமார் 8 மணி நேரம் ஊறவைப்பதன் மூலம் பாக்டீரியாவை அழிக்கலாம். மேலும், 52 டிகிரி சென்டிகிரேட் வெப்பம் உள்ள நீரில் சுமார் 15 நிமிடம் விதையை ஆழ்த்திப் பாக்டீரியாவை அழிக்கலாம்.

மேலும், நோயுற்ற பயிரில் ஏக்கருக்கு 90 கிராம் அக்ரிமைசினுடன் 400 கிராம் தாமிரப் பூசணக் கொல்லியைக் கலந்து தெளிப்பதன் மூலம் நோயை நன்கு கட்டுப்படுத்தலாம்.

நெல் மணி கரிப்பூட்டை நோய் (Bunt or Kernal smut) :

இந்நோய் 1975-ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில், கண்ணகி நெல் ரகத்தை மிகவும் வெகுவாகத் தாக்கியது. இந்நோய் கதிர் பிரியும் பருவத்தில் தோன்றுகிறது. கதிரில் வெகுசில மணிகளே பாதிக்கப்படுகின்றன. கதிர் முற்றும்பொழுது கருமையான பொடி வெளிவருவது தெரியும். நோய் தாக்கியிருக்கும் கதிர்களை தனியாகச் சேகரித்து அவற்றை அழிப்பதன் மூலம் இந்நோயை நன்கு கட்டுப்படுத்தலாம். இந்நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்ட நெல் ரகங்களைப் பயிரிடுவதன் மூலம் இந்நோயை முற்றிலும் அழிக்கலாம். தற்பொழுது இந்நோயினால் மகசூல் அவ்வளவாகக் குறைவதில்லை.

தமிழ்மொழியின் மறுமலர்ச்சிக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய பணி மகத்தானதாகும்.

நாளும் நற்றமிழ் வளர்த்து நாவன்மையினால் நானிலத்தாரைக் கவர்ந்த நாயகன்—பல்கலை உணர்த்தி நமக்கெல்லாம் பாடமாகிவிட்ட பைந்தமிழ் வேந்தன் திருப்பெயரில் ஒரு பல்கலைக் கழகம்!

அதுதான், பேரறிஞர் அண்ணா தொழில் — நுட்பவியல் பல்கலைக் கழகம்.

சீர்மிகு சென்னையில் செப்டம்பர் திங்கள் 4-ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் துவங்கப்படவிருக்கும் இந்தப் பல்கலைக் கழகம், எதற்காக அமைக்கப்படுகிறது?

கழகமாக விரிந்து வளருவதற்கு வேண்டிய எல்லாப் பிரிவுகளும் கொண்டதுமான கிண்டி பொறியியற் கல்லூரி, இதன் தலைமையிடமாக இருக்கும்.

கிண்டி அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரியில் இருக்கும் கீழ்க்கண்ட சென்னைப் பல்கலைக் கழகத்தின் நான்கு துறைகளும் உருவாகவிருக்கும் பல்கலைக் கழகத்தின் பகுதிகளாக இருக்கும்

1. வேதியியல் தொழில் நுட்பவியல் துறை.

2. தோல் தொழில் நுட்பவியல் துறை.

3. நெசவுத் தொழில் நுட்பவியல் துறை.

4. கட்டடக்கலை மற்றும் நகர அமைப்புப் பள்ளி.

2. சமுதாயத்தின் தற்போதைய தேவைகளுக்குப் பொருத்தமானதாகவும், நீண்ட காலத் தேவைகளுக்கு ஏற்றதாயும், எதிர்பார்க்கப்படும் புது வகை இயல்கள், ஆழ்ந்த நுண்ணிய அறிவுத் துறைகள், இவற்றினால் ஏற்படும் மாற்றங்கள், வளர்ச்சிகள் ஆகியவற்றுக்குப் பொருந்துவதான பொறியியல், தொழில் நுட்பவியல் தொடர்புள்ள அறிவியல் ஆகியவற்றில் ஒரு கல்வித் திட்டத்தை வகுத்து அதனைச் செயற்படுத்துதல்;

3. பொறியியல், தொழில் நுட்பவியல், தொடர்புள்ள அறிவியல்கள் ஆகியவற்றின் அறிவு வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல்; இத்துறைகளில் ஆராய்ச்சி நடத்தலும் மேம்படுத்தலும்; இவற்றால் கண்டறிந்தவற்றைச் சமுதாய மேம்பாட்டிற்காக மக்களி

பேரறிஞர் அண்ணா தொழில்-நுட்பவியல் பல்கலைக் கழகம்

தமிழ்நாடு மாநிலத்தில் பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் தொடர்புள்ள அறிவியல் உயர்கல்வியையும் ஆராய்ச்சியையும் பேணி வளர்க்கவும் முன்னேற்றவும், மாறும் தேவைகளை உணர்ந்து அதற்கேற்ப உடனுக்குடன் போதிய அளவு இயங்கக் கூடியதாக இருக்க உறுதிப்படுத்தவும், மேலும் தொழில்நுட்பக் கல்வியில் ஒரு தேவையான தலையாய நிலையமாக விரிந்து வளரவும், ஒரு தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் அமைப்பதென்று முடிவெடுக்கப்பட்டது.

இந்தப் பல்கலைக் கழகம் ஒருமை வகை (Unitary Type)யாக இருக்கும். இந்த மாநிலத்தில் ஒரு முதன்மையான கல்வி நிலையமும், தொழில்நுட்பப் பல்கலைக்

மேலும், சென்னை குரோம் பேட்டையிலிருக்கும், சென்னை தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனமும் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்குள் கொண்டுவரப்படும்.

பேரறிஞர் அண்ணா தொழில்-நுட்பவியல் பல்கலைக் கழகத்தின் நோக்கமென்ன?

1. கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி, வளர்ச்சி, பரப்புதல், பணிகளோடு மற்றும் பல்கலைக் கழகம் தகுதியெனக் கருதுகிற ஏனைய வழிகள் மூலம் பொறியியல், தொழில் நுட்பவியல், தொடர்புள்ள அறிவியல் ஆகியவற்றில், உயர் கல்விக்கான வசதிகளுக்கு வகை செய்தல், வாய்ப்புகளை வழங்குதல்;

டையே பரப்புதலும், வளர்த்தலும்; பொறியியல் தொழில் நுட்பவியல், தொடர்புள்ள அறிவியல்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் தொடர்ந்து உருவாக்கப்படும் கருவிகள், கருத்துக்கள், நடைமுறைகள் பற்றி மக்கள் பரவலாக அறிந்து கொள்ள வகை செய்தல்;

4. தொழில் நுட்பக் கல்வி வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் ஒரு புறமும், தொழில் அதிபர்கள், அரசு பொறியியல் துறை வல்லுநர்கள் மறுபுறமுமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து, ஒத்துழைக்க உதவும் நிலையமாகச் செயல்படுதல்; மாணவர்களிடையே தொழில் முயற்சியை ஊக்குவித்தல்;

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும்!

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்
துணையாகும்!

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண் 20367)
மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.

இந்தப் பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டுள்ள தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்குத் தற்போது அரசு 211 இலட்ச ரூபாய் செலவு செய்து வருகிறது. இது தவிர இப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கென ரூ. 30 இலட்சம் செலவு பிடிக்கும்.

இப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கென்று கிண்டியில் 250 ஏக்கர் நிலமும், கட்டடத்திற்கென ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்க செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

தமிழ்ப் பெருங்குடி மக்களின் இல்லங்களிலும் உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்று விளங்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருப்பெயரைத் தாங்கி துவங்கப் படவிருக்கும் இந்தப் பல்கலைக் கழகம், காலமெல்லாம் பேரறிஞர் அண்ணாவின் புகழை—நினைவை—சிந்தனையைப் போற்றிக் கொண்டே இருக்கும் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை!

"நகைச்சுவை அரசர்"
என். எஸ். கிருஷ்ணன்

ஹாஸ்யத்தை நடிப்பதற்கும், ரசிப்பதற்கும் நுண்ணறிவு அதிகம் வேண்டும். நவரஸங்களிலும் சிறந்தது ஹாஸ்ய ரஸம். அதைப் படிப்பது மிகக் கஷ்டமுங்கூட. பழங்காலத்திலிருந்தே நம் நாடக மேடையில் ஹாஸ்யம் கையாளப்பட்டு வந்திருக்கிறது. எனினும், முக்கிய நடிகர்கள் வேஷம் மாற்றிக் கொள்ளுவதற்கும், பெரிய காக்ஷிகளை மாற்றி அமைப்பதற்கும் தேவையான அவகாசத்தை அளிப்பதற்காகவே பெரும்பாலும் ஹாஸ்யம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் ஹாஸ்யத்தைத் தமிழ்ப் படங்களில் ஒரு முக்கிய அம்சமாக ஆக்கியவர் என். எஸ். கிருஷ்ணன். தமிழ்ப்படம் ஓடுவதற்கு ஹாஸ்யம் அத்தியாவசியம் என்று, அவர், காரியத்தில் காட்டியிருக்கிறார். படம் மோசமாயிருந்தால்கூட ஹாஸ்யப் பகுதி நன்றாயிருந்தால் படத்திற்கு நிறைய வசூல் கிடைத்துவிடும் என்பது சில படங்களின் விஷயங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

கிருஷ்ணன் பள்ளிப் படிப்பில் குறைந்தவரே தவிர அறிவில் சிறந்தவர். பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் காணப்படும் ரஸமான ஹாஸ்யச் சம்பவங்களையும், துணுக்குகளையும் அவ்வப்போது குறித்து வைத்துக் கொள்ளுவார். அதோடு தினசரி வாழ்க்கையில் இயல்பாக ஏற்படும் சம்பவங்களையும், பேச்சுக்களையும் கவனித்து வைத்துக்கொண்டு, அவற்றிற்கு நகாஸ் கொடுத்து, தகுந்த சந்தர்ப்பங்களில் அவைகளைப் படங்களில் புகுத்தி விடுவார். ஆங்கில ஹாஸ்யப் படங்களை அடிக்கடி பார்த்து வருவார். இப்படியெல்லாம் அவர் இடைவிடாத முயற்சியில் ஈடுபட்டிருந்ததனால்தான் அவரது நடிப்பு நாளாவட்டத்தில் விருத்தி அடைந்திக்கிறது; மற்ற ஹாஸ்ய நடிகர்களைவிட அவருக்கு அதிக பொதுஜன ஆதரவும் ஏற்பட்டிருக்கிறது.

* * * *

கிருஷ்ணன் வெறும் நடிகர் மட்டுமல்ல. படத்தொழிலின் பல விஷயங்களிலும் அவருக்கு நல்ல ஞானமுண்டு. கதையையும், கதைக்கேற்ற ஹாஸ்ய சம்பவங்களையும், அதற்கேற்றபடி சம்பாஷனை, பாட்டு முதலியவைகளையும் அவரே அமைத்துக் கொள்ளுவார். இது முடிந்ததும் தம் கோஷ்டியாரோடு வீட்டிலேயே திருப்தி ஏற்படும் வரையில் பன்முறை ஒத்திகை பார்த்துக் கொள்வார். அவருடைய கோஷ்டி ஸெட்டுக்கு வந்துவிட்டதானால், உடனே கேமிரா ஓட வேண்டியது ஒன்றுதான் பாக்கியாக இருக்கும். வந்ததும் போனதுமாக, பட முதலாளிக்குச் சிரமமே கொடுக்காமல், தம் பாகத்தைக் கச்சிதமாக நடித்துக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்கள். இவ்வேற்பாடு பட முதலாளிகளின் சிரமத்தையும், செலவையும் வெகுவாகக் குறைத்ததால், கிருஷ்ணன் தம் பாகங்களைத் தாமே டைரெக்ட் செய்து கொள்ளும்படி விட்டுவிட்டனர். இப்படி விட்டுவிட்டது இருதரப்பினருக்கும் நல்ல பலனை அளித்தது.

(குண்டூசி. பி. ஆர். எஸ். கோபால் எழுதிய நட்சத்திர மாலை என்னும் நாலிலிருந்து)

குப்பை மேட்டிலிருந்து உணவு மேசை வரை!

தி. கோ. தணிகாசலம், துணை வேளாண்மை இயக்குநர்

ஒரு வீட்டுக்குச் சாப்பிடப் போகிறோம். வீட்டரசி நாம் சாப்பிட உட்கார்ந்ததும் ''குப்பைக் கூளத்தை உண்ண ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்பாரேயானால் நாம் அதை ஒரு நகைச்சுவைத் துணுக்காகக் கருதித்தான் சிரித்து மழுப்புவோம். ஆனால், அந்தப் பெண்மணி சொல்லுவது முற்றிலும் உண்மையாகவே இருக்கக்கூடும். அது இன்று பொருந்தாமல் போகலாம். ஆனால், இன்னும் ஒரு பத்தாண்டுக்குள் விவசாயக் கழிவுப் பொருள்களை, நேரடியாக நாம் உட்கொள்ளத் தக்க அருமையான உணவுப் பொருள்களாக்கி டின்களில் அடைத்து வியாபாரிகள் பெருமையுடன் விற்கவும் கூடும். அவற்றை நாம் விலை கொடுத்து மகிழ்ச்சியுடன் வாங்கவும் செய்வோம்!

இப்படிப்பட்ட பொருள்களைக் கொண்டு, வருங்காலத்தில் நடக்கக்கூடிய ஒரு விருந்து எவ்வாறு இருக்கும் என்பதைப் பார்ப்போமா?

அங்கே சாப்பாட்டு மேசை மேல் வைத்துள்ள மெழுகுவர்த்திகள் இறந்த பிராணிகளின் கொழுப்பிலிருந்து தயார் செய்வதாய் இருக்கும். நம் நாட்டில் ஆண்டுதோறும் மடிந்து போகும் ஆடு, மாடு, கோழி, நாய் முதலிய வீட்டுப் பிராணிகளின் தொகை மொத்தம் 2.5 கோடிக்கும் அதிகம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால், இவை அனைத்தின் சடலங்களையும் சேகரிப்பதற்கு முறையான வழி எதுவும் இப்போது இல்லை. இறந்து போகும் ஆடு மாடுகளின் தொகை மட்டும் ஒரு கோடியே 36 இலட்சத்திற்கும் அதிகம் என்றும், இறந்து போகும் எருமைகளின் தொகை மட்டும் 40 இலட்சத்திற்கும் அதிகம் என்றும் தெரிகிறது.

இவற்றின் தோல்களை கிராமங்களில் செருப்பு தயாரிப்போர் உபயோகித்துக் கொள்கிறார்கள். தாமாக இறக்கும் பிராணிகளின் தோல்களிலிருந்து- இந்தச் செருப்புகள் தயாரிக்கப்படுவதால் காதி கிராமோத்யோக் பவன் விற்பனை நிலையங்கள் அனைத்தும் இவற்றை முக்கிய பொருளாக வாங்கி விற்கின்றன. ஆனால், இந்த ஆடு, மாடுகளின் தோலற்ற சடலங்கள் வெறுமே புறக்கணிக்கப்படுகின்றன. இதனால் பண நஷ்டம் எவ்வளவு ஏற்படுகிறது என்பதைப் பற்றியோ இவை அங்கங்கே அழுகிக் கிடப்பதால் காற்றும் நீரும் எவ்வளவு மாசுபடுகின்றன என்பதைப் பற்றியோ யாரும் நினைப்பதில்லை. இவற்றிலிருந்து கிடைக்கும் கொழுப்பிலிருந்து வருங்காலத்தில் மெழுகுவர்த்தி முதலான உபயோகமான பொருள்களைத் தயாரிக்கலாம்.

இப்பொழுதெல்லாம் சணல் தழைகளைக் கழிவுப் பொருளாக வீசிவிடுகிறார்கள். அதிகமாகப் போனால் அவற்றை வேலிபோடவும் கூரை வேயவும் எரிபொருளாகவும் உபயோகிக்கிறார்கள். ஆனால், சணல் தட்டைகளிலிருந்து செல்லுலோஸ் குழம்பு தயாரித்து அதிலிருந்து ரேயான் நூல் செய்யலாம். இப்படி உற்பத்தியாகக் கூடிய ரேயான் புடவைக்கு நிச்சயம் நல்ல வரவேற்பு இருக்கும். உண்மையில் உங்களுக்கு விருந்து போடும் வீட்டரசி, இத்தகைய புடவை ஒன்றில் ஒளிவீசிக் கொண்டிருந்தாலும் ஆச்சரியப்பட வேண்டாம்! சணல் அறுவடைக்குப் பிறகு சணல் இழைகள் போக மிஞ்சும் தட்டைகள் அந்த இழைகளின் எடையைப் போல இரண்டரை மடங்கு உள்ளவை. அவற்றில் செல்லுலோஸ் ஏராளமாக இருக்கிறது. நம் நாட்டில் இத்தகைய ஒரு பொருளைச் சற்றும் மதிக்காமல் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 25 இலட்சம் டன் அளவுக்கு வீணாக்குகிறோம்.

பசியைக் கிளப்பும் பானங்களை விருந்துக்கு முன்னர் சாப்பிடுவது என்பது இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகு ஒரு நாகரிகமாக இருக்குமோ இராதோ தெரியாது. ஆனால், அப்படி இருக்கும் பட்சத்தில் நாம் சாதாரணமாக இப்போதெல்லாம் வீணாக்கிவிடும் இளநீரையே அதற்கு உபயோகிப்பார்கள் என்று தோன்றுகிறது. அது இல்லாவிட்டால் முந்திரிப் பருப்போடு விளையும் பழம் இருக்கிறதே அதையே இத்தகைய பானங்களுக்கு உபயோகிக்க முடியும். மரத்திலிருந்து நேரடியாகப் பறித்து இந்தப் பழத்தைச் சாப்பிட்டால் சுவை அவ்வளவு நன்றாயிராது என்பதுடன் வாயிலும் நார்நாராகக் கூடிவரும். ஆனால், இந்தப் பழத்தில் 'சி' வைட்டமினும் சர்க்கரை கால்சியம் ஃபாஸ்ஃபரஸ் இரும்பு, முதலிய சத்துக்களும் நிறைய உண்டு. நன்கு பதப்படுத்தி இந்தப் பழத்தை உபயோகித்தால் அருமையான சர்பத் கிடைக்கும்.

இதிலிருந்து மிட்டாய் செய்யலாம். சட்னி செய்யலாம். ஊறுகாய் போடலாம். சாப்பாட்டுக் காய்கறியாகக்கூட இதை உபயோகிக்கலாம். அல்லது இந்தப் பழத்தையே பதப்படுத்தி டின்களில் போட்டு உபயோகித்துக் கொள்ளலாம் முந்திரிப் பழத்திலிருந்து என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதை மைசூரிலுள்ள மத்திய உணவுநுட்ப ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்திருக்கிறது. இந்த ஆராய்ச்சியின் பலன்களை நம் நாட்டில் முந்திரி விளையும் பகுதிகளுக்குக் கொடுக்க முடியும் என்றால் எவ்வளவு சிறப்பாய் இருக்கும் !

மைசூர் கழகத்தில் இப்போது நடக்கும் சில பரிசோதனைகள் வெற்றி அடைந்தால் வருங்காலத்தில் சப்பாத்திக்கான கோதுமை மாவில் பருத்தி விதை மாவையும் கலந்து உபயோகிக்க முடியும். ஏனென்றால் பருத்தி விதையில் புரதச்சத்து நிறைய இருக்கிறது. குவாடிமாலா நாட்டிலுள்ள ஆராய்ச்சி நிலையம் ஒன்றில் பருத்தி விதையின் மாவையும், சோள மாவையும் கலந்து சத்து நிறைந்த உணவுப் பொருள் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பருத்தி விதையிலிருந்து எண்ணெய் எடுத்துப் பிறகு மிஞ்சும் பிண்ணாக்கை ஆடு மாடுகளுக்குத் தீவனமாக உபயோகிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கழிவுப் பொருள்களை மட்டும் உபயோகித்து நமக்கு விருந்து படைக்க வேண்டுமென்று யாராவது நினைத்தால் பத்தாண்டுகளுக்குப் பிறகு இதற்கு நிறைய

வாய்ப்பு இருக்கும். பட்டாணித் தோல், புலவு, வெங்காயத் தோல் பொரியல், உருளைக்கிழங்குத் தோல் சூப்பு, முட்டைக்கோஸ் தண்டுகளைப் போட்டுக் குழம்பு என்று ஏகப்பட்ட வகைகளைப் போட்டு நம்மைத் திணறடிக்கலாம். இந்தக் காய்கறிகளையெல்லாம் நம் வீட்டுத் தோட்டத்திலேயே நமது சமையலறையின் கழிவுப் பொருள்களுடைய பலம் கொண்டே விளைவிக்க முடியும். அது போதாதென்றால் ஆலைக் கழிவுப் பொருள்களையும் உரமாக உபயோகித்துக் கொள்ளலாம்.

வீட்டில் காப்பியோ தேனீரோ தயாரித்த பிறகு மிஞ்சும் கழிவுப்பொருள் உரமாகப் பயன்படும். கசாப்புக் கடையில் வீணாகும் துண்டு துணுக்குகளை மீன்களுக்கு இரையாகப் போடலாம். இவற்றையே வைத்துக்கொண்டு தொக்கு தயாரிக்க முடியும். இதையெல்லாம் பொரிப்பதற்குத் தேவைப்படும் எண்ணெய்யைப் பருத்தி விதையிலிருந்தோ புகையிலை விதையிலிருந்தோ அரிசித் தவிட்டிலிருந்தோ எடுக்கலாம். பாரத நாட்டில் அரிசித் தவிட்டு எண்ணெய்யின் உபயோகங்கள் இனி வருங்காலத்தில் மிகப் பெருமளவில் அதிகரிக்கும்.

பாரத நாட்டின் முக்கியமான பயிர்களில் நெல்லும் ஒன்று. ஆண்டுக்கு 6.5 கோடி டன் நெல் இந்நாட்டில் விளைகிறது. இதனால் 4 கோடி டன் அரிசியும், சுமார் ஒரு கோடி டன் உமியும், 20 லட்சம் டன் தவிடும் கிடைக்கின்றன. நெல் குத்துவதை இன்னும் சிறப்பாகச் செய்தால் மேற்கொண்டு 4 இலட்சம் டன் தவிடு கிடைக்கக்கூடும். அரிசி தவிட்டிலிருந்து 15 அல்லது 20 சதவிகிதம் நயமான எண்ணெய் எடுக்க முடியும். மொத்தம் 4 இலட்சம் டன் அளவுக்கு இத்தகைய எண்ணெய்யை நாம் ஆண்டுதோறும் தயாரிக்க முடியும். இதன் பண மதிப்பு 1.2 கோடி ரூபாயாகும். தென்கிழக்கு ஆசியாவில், பர்மா, தாய்லாந்து முதலிய பல நாடுகளில் அரிசித் தவிட்டெண்ணெய் மிக அதிகமாக உபயோகிக்கப்படுகிறது.

நாட்டில் கிடைக்கும் அரிசித் தவிட்டை உமியோடு சேர்த்து ஆடுமாடுகளுக்குத் தீவனமாகப் போடுகிறார்கள். அல்லது மட்டமான எரிபொருளாகக் கருதி எரித்து விடுகிறார்கள். இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. தவிட்டைச் சரியானபடி பக்குவப்படுத்தாவிட்டால் அதிலுள்ள கொழுப்புச் சத்துமிக்க அமிலம் அதிலிருந்து கிடைக்கும் எண்ணெய்யைக் கெடுத்துவிடும். நெல்லைப் புழுக்குவதால் இதைத் தவிர்க்க முடியும். ஆனால், வடநாட்டிலுள்ள மக்கள் புழுங்கலரிசியைச் சுவைத்துச் சாப்பிடுவதில்லை. இதைக் கருதி மைசூர் மத்திய உணவு நுட்ப ஆராய்ச்சிக் கழகமும் ஜபல்பூர் பல்கலைக் கழகமும் தவிட்டைப் பக்குவப்படுத்துவதற்கு ஒன்றிரண்டு புதிய முறைகளைக் கண்டுபிடித்திருக்கின்றன. வர்த்தக ரீதியில் இன்னமும் இந்த முறைகளைச் செயல்படுத்திப் பார்க்கவில்லை. இப்போது நம் நாட்டில் தயாரிக்கப்படும் கொஞ்சநஞ்ச அரிசித் தவிட்டெண்ணெய்யும் சோப்புத் தொழிற்சாலைகளின் உபயோகத்துக்குப் போய் விடுகிறது.

முந்திரி பருப்பு போன்ற விலை மதிப்புள்ள ஒரு பொருளை உற்பத்தி செய்யும் மக்கள் உண்மையில் வறுமை மிக்கவர்களாக வாழ்கிறார்கள். அவர்கள் போதிய உணவோ, சத்துணவோ இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். முந்திரியின் பழத்திற்கு இத்தனைப் பலன்கள் செலவில்லாமல் கிடைக்கும்பொழுது, அவற்றின் மூலம் இந்த மக்களுக்கு எவ்வளவு நல்ல சத்துணவு கிடைக்கச் செய்யலாம்!

விருந்து ஆரம்பமாகிறது! விருந்தோம்பும் வீட்டரசி முதலில் உங்களுக்குப் பரிமாறும் சப்பாத்தி மாங்கொட்டையிலிருந்து தயாரானதாக இருக்கலாம். ஸ்டார்ச் சத்து நிறைந்த மாங்கொட்டைகளிலிருந்து ரொட்டி தயாரிக்க முடியும் என்பதை மைசூர் கழகம் கண்டுபிடித்திருக்கிறது. மாங்கொட்டையிலிருந்து இக்கழகம் எண்ணெய்கூட வடித்திருக்கிறது. மாங்கொட்டையின் மொத்த எடையில் 12 சதவிகித அளவுக்கு இந்த எண்ணெய்யை எடுக்க முடிந்திருக்கிறது. சர்பத், ஜெல்லி ஆகியவற்றில் உபயோகிக்கும் கனிப்பசைச் சத்து மாம்பழத்திலிருந்து கிடைக்கக்கூடியது என்று அண்மையில் பரிசோதனை மூலம் கண்டுபிடித்திருக்கிறது. பாரத நாட்டில் 42 கோடி மக்கள் கொடிய வறுமையில் வாடுகிறார்கள். பசிக்கொடுமையோடு நிரந்தரப் போராட்டம் நடத்தி வரும் இந்த மக்களுக்கு மேற்சொன்ன தகவல்கள் அனைத்தும் மிகவும் முக்கியமாகும்.

மாம்பழம் சம்பந்தப்பட்ட கழிவுப்பொருள்களாகவே ஆண்டுக்குச் சுமார் 8,500 டன் வரை வீணாக்குகிறோம். பழங்களையும் காய்கறிகளையும் பதம் செய்யும் நிலையங்களிலிருந்து 1970 மட்டும் 25,000 டன் அளவுக்குக் கழிவுப் பொருள்கள் வீணாயின. சரியாகக் கணக்குப் போட்டால் வீணாவது இதைவிட அதிகமாகவே இருக்கும். ஏனென்றால் பாரத நாட்டில் மொத்தம் சுமார் 2 கோடி டன் அளவுக்குப் பழங்களும் காய்கறிகளும் விளையும்போது, அதில் ஆயிரத்துக்கு நான்கு என்ற விகிதத்தில்கூட பதப்படுத்தப்படுவதில்லை. பாக்கி எல்லாம் கழிவுப் பொருளாகவே வீணாகிறது.

மாட்டுச் சாணத்திலிருந்தும் மற்ற கழிவுப் பொருள்களிலிருந்தும் எரிவாயு தயாரிக்கும் ஏற்பாடு சமீப ஆண்டுகளில் மக்களின் ஆதரவைப் பெரிய அளவில் பெற்றிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் காதி-கிராமோத்யோக் பவனும் மற்றும் பல காந்திய நிலையங்களும் மேற்கொண்ட முயற்சியே ஆகும். உங்களுக்கு வருங்காலத்தில் விருந்து படைக்கும் வீட்டரசி ஒரு பண்ணையில் வசிப்பவராக இருந்தால், நிச்சயம் அந்த விருந்தை அவர் சாண எரிவாயு அடுப்பு ஒன்றினால்தான் சமைத்திருப்பார்!

உலகத்திலேயே மாடுகள் மிக அதிகமாக உள்ள நாடு பாரதம் தான். இங்கே ஆண்டுக்கு 133.5 கோடி டன் அளவுக்குச் சாணம் கிடைக்கிறது. இது முழுவதுமே வீணாகிவிடுகிறது என்று சொல்ல வேண்டும். இந்தச் சாணத்தை வரட்டியாக்கி எரிப்பதால் ஒரு முக்கியமான சாதனத்தை நாம் இழந்து விடுகிறோம் என்பதோடு வரட்டி எரிவதன் மூலம் ஏற்படும் புகையும் கரியமிலவாயுவும் நமது சுற்றுச் சூழலை மாசுபடுத்தியும் விடுகின்றன. கிடைக்கும் மாட்டுச் சாணத்தில் மூன்றில் ஒரு பகுதிதான் இப்போது உரமாகப் பயன்படுகிறது. ஆனால், ஒரு விவசாயியிடம் ஐந்துமாடுகள் இருந்தால்கூட அவருக்கு ஒரு நாளுக்குக் கிட்டத்தட்ட 10 கன அடி அளவுக்கு எரிவாயு கிடைக்க முடியும். ஐந்து பேருள்ள ஒரு குடும்பத்தில் சமையலுக்கு இது முற்றிலும் போதுமானதாகும். சமையலுக்கும் போக ஒன்றிரண்டு விளக்குகளை எரிக்கவும் முடியும்.

சாண எரிவாயு தயாரிப்பதில் உள்ள ஒரே சங்கடம் செலவுதான். ஒரு சாண எரிவாயு இயந்திரத்தை நிறுவுவதற்குச் சுமார் ரூ. 3,000 செலவாகிறது. இது கிராம மக்களுக்குப் பொதுவாகக் கட்டுபடியாகாத செலவாகும். பணமே இருந்தால்கூட இத்தகைய சாதனமெல்லாம் பிரதானமாக பெண்களுக்கே பிரயோசனப்படுவது என்ற காரணத்தால் ஆண்கள் இதில் முதலீடு செய்வதை விரும்புவதில்லை. ஆயினும், சாண எரிவாயு தயாரிப்பதற்குக் குறைந்த செலவில் ஒரு சாதனத்தை உருவாக்க நம் நாட்டுத் தொழில் நுட்ப நிபுணர்கள் முயன்று

கிறார்கள். சைனாவில் உபயோகப்படுவதுபோன்ற ஒரு சாதனத்தைப் பாரத நாட்டின் சில பகுதிகளில் பயன்படுத்தி வருகிறார்கள். இதற்கு ஆகும் செலவு வழக்கமான செலவில் மூன்றில் இரண்டு பகுதியே.

காய்கறிகளிலிருந்து கிடைக்கும் கழிவுப்பொருட்கள் மாட்டுச் சாணத்துடன் சேர்ந்தால் எரிவாயுவின் தரம் உயர்வாக இருப்பதோடு வாயு அதிகமாகவும் கிடைக்கிறது. அனாவசிய எதிர்ப்புகள் இல்லாவிட்டால் மனிதனின் கழிவுகளைக்கூட இந்த நோக்கத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அப்படி உபயோகித்துக் கொண்டால் நாடு முழுவதற்கும் பொதுவான ஒரு பெரிய சுகாதாரப் பிரச்சினை தீர்ந்து விடும் என்பதோடு, மாடுகள் குறைவாக உள்ள வீடுகளில்கூட எரிவாயு சாதனம் வைத்துக் கொள்வது சாத்தியமாயிருக்கும். எரிவாயு சாதனத்தில் படியும் சாம்பல் நல்ல உரமாகப் பயன்படக்கூடியது.

குளங்களிலும் தண்ணீர்த் தொட்டிகளிலும் வளரும் பாசித் தாவரத்தை அதிகமாக விளைவிப்பதற்கும் இதை உபயோகித்துக் கொள்ளலாம். இந்தப் பாசித் தாவரம் புரதச்சத்து மிகுந்தது. இதை உரமாகவும் உபயோகிக்கலாம். மாட்டுத் தீவனமாகவும் உபயோகிக்கலாம். சாண எரிவாயு சாதனத்திலிருந்து கிடைக்கும் காய்ந்த சாம்பல் கரும் பச்சை நிறத்தில் இருக்கிறது. இந்த நிறத்தை நீக்கி நமது உணவிலேயே சேர்த்துக் கொள்வதற்குத் தகுதியாக்குவது பற்றி நமது விஞ்ஞானிகள் பரிசோதனைகளை நடத்தி வருகிறார்கள்.

பாரத அரசின் விஞ்ஞான தொழில்நுட்ப தேசியக் குழுவின் திட்டமிடும் குழு, கழிவுப் பொருள்களைப் பயன்படுத்திக் கொள்வது பற்றி ஓரளவு விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. ஒவ்வொரு துறையிலும் ஆராய்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் என்னென்ன தேவை இருக்கிறது என்பதைப் பற்றிய புதிய உபயோகங்களைக் காண்பதற்காக நம் நாட்டின் தேசிய ஆராய்ச்சிக் கூடங்களும் வேளாண்மைப் பல்கலைக் கழகங்களும் ஆய்வு நிலையங்களும், தீவிரமாய் முயன்று வருகின்றன. சில நுட்பமான முறைகள் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த முறைகளைச் செயல்படுத்துமாறு தனியார் தொழில்துறையினரை அரசு அழைத்திருக்கிறது. ஆனால், சில சமயம் நுட்ப முறைகள் சிறப்புடன் உருவாக்கப்பட்டால்கூட அவற்றைச் செயல்படுத்திப் பார்க்க நிறைய பேர் முன்வருவதில்லை.

வர்த்தக ரீதியில் எதையும் செய்ய முற்படும்போது கிராம மக்களும், பழங்குடி மக்களும் உணவாக உபயோகிக்கும் பொருள்கள் அவர்கள் கையை விட்டு முற்றிலும் போய்விடாதவாறு பார்த்துக் கொள்வது முக்கியம். சமையல் எண்ணெய் வகைகள் சிலவற்றைத் தயாரிக்கும்போது முறையில் கோளாறு காரணமாக அந்த எண்ணெய்கள் சாப்பிடத் தகுதியற்றவை என திடீரென்று அறிவிக்கப்படுகின்றன. அதோடு அந்த எண்ணெய்கள் சோப்பு ஆலைகளுக்கும் வேறு தொழில்களுக்கும் கொடுக்கப்பட்டு விடுகின்றன. வழிவழியாக மக்கள் உபயோகித்து வந்துள்ள இந்தச் சமையல் எண்ணெய் வகைகளில் ஏதாவது கோளாறு இருந்தால் கிராம மட்டத்தில் எளிதாக அதை அகற்றக்கூடிய முறைகளைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி நடைபெற வேண்டும். இதனால் பல தலைமுறைகளாக இந்த எண்ணெய்களை உபயோகித்து வந்திருப்போருக்கு அவற்றைத் தொடர்ந்து உபயோகிப்பது சாத்தியமாகும்.

இதிலெல்லாம் எதை எந்த வரிசைக் கிரமத்தில் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்வது நலம். இதையும் தீர்மானித்து கூடவே பொது மக்களுக்கு உதவக்கூடிய இலட்சியங்களையும் தெளிவாக வரையறுத்துக் கொண்டு விட்டோமானால், இந்நாட்டின் இரண்டு பிரச்சினைகளை ஒரு மாபெரும் முயற்சி மூலம் நம்மால் தீர்க்க முடியும். அதாவது கழிவுப் பொருள்களை என்ன செய்வது என்ற பிரச்சினையும், பசிக்கொடுமைக்குப் பரிகாரம் என்ன என்ற பிரச்சினையும் ஒரே அடியில் தீர்ந்து போகும்.

கழிவுப் பொருள்களை மீண்டும் உபயோகித்துக் கொள்வதற்கு மாபெரும் இயக்கமொன்று நடத்தினோமானால், குப்பை மேடுகளிலிருந்து ஏதாவது உணவுப் பொருள்கள் கிடைக்குமா என்று தேடி அலைந்து அதற்காகத் தெரு நாய்களுடன் போட்டியிடும் ஏராளமான மக்களுக்கு நிச்சயமாக நல்ல உணவு கிடைக்க வகை செய்யலாம்!

நன்றி: பாரத பத்திரிகைக் கழகம்.

நகைச்சுவைப் பெருமை

"வாழ்க்கைக்கு நகைச் சுவை அவசியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?"— காந்தியடிகளைப் பார்த்து ஓர் அன்பர் கேட்டார்.

"அந்த இயல்பு என்னிடம் இல்லாவிட்டால் என்றோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்" — காந்தியடிகள் இவ்வாறு பதில் தந்தார்.

சிரிக்கத் தெரியாமலிருந்தால் எனக்குப் பொதுவாழ்க்கையிலே ஏற்பட்ட சங்கடங்களால் பைத்தியமே பிடித்து விட்டிருக்கும்; விளையாட்டுத் தனமல்ல அது! விசாரத்திலே மூழ்கிக் குழப்பமடைந்து போகாமலிருக்க— அது தகுந்த முறை.

—பேரறிஞர் அண்ணா
('தம்பிக்கு' கடிதத்தில்)

சிரித்தால் நோயே அணுகாது; மனம் விட்டு, வாய் விட்டுச் சிரிக்க வேண்டும்''.

—மருத்துவர்கள் உரை.

சிரிக்கத் தெரியாதவர்கள் விலங்குகளுக்கு இணையாவார்கள்.

—கலைவாணர் என்.எஸ்.கே.

நிலக்கடலை சாகுபடியில் மகத்தான சாதனை!

போராக்ஸ் உபயோகித்து கடம்பத்தூர் விவசாயி
திரு. சிவபாதம் ரூ. 750 கூடுதல் லாபத்தைப் பெற்றுள்ளார்.

போராக்ஸ் நிலத்தில் போரான் (நுண்ணூட்டச் சத்து) குறைபாட்டைப் போக்கி நிலக்கடலை, பருத்தி, கரும்பு, காய்கறிகள், வேர்ப் பயிர்கள், புகையிலை, வாழை, தென்னை, நெல், தேயிலை மற்றும் காப்பி போன்ற அநேக பயிர்களின ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் அமோகமான மகசூலுக்கும் வழி வகுக்கிறது.

போரான் பற்றுக்குறையின் அறிகுறிகளை கவனிக்கவும்

பயிர்களுக்கு தழை-மணி-சாம்பல் சத்து உரங்கள் மட்டுமல்லாமல், மற்ற பல நுண்ணூட்டச் சத்துக்களும் தேவைப்படுகின்றன. அத்தகைய ஒரு முக்கியமான நுண்ணூட்டச் சத்தான போரான், விளைச்சலைப் பெருக்க உதவுகிறது. ஆனால் போரான் பற்றுக்குறை, பயிரின் ஆரோக்கியமான வளர்ச்சியை பல வழிகளில் பாதிக்கக் கூடும்... நிலக்கடலையில் பருப்பு வளர்ச்சி குன்றிப்போதல்; தென்னையில் வளர்ச்சியைப் பெருக்கும் பாகங்கள் இறந்து மரங்கள் காய்ந்து போதல்; பருத்தியில் காய்கள் உதிர்தல்; நெல் மற்றும் கரும்பில் வளர்ச்சி குன்றுதல்; தக்காளிச் செடிகள் வளர்ச்சி குன்றி காய்ப்பிடித்தல் குறைவாகவும்; பழங்கள் சொரசொரப்புடன், உருண்ட வடிவம் இல்லாமல் மேடுபள்ளமாக அமைதல்! முட்டைகோஸில் தண்டின் உள்பாகம் கெட்டு வளர்ச்சி குன்றி கோஸின் எடை குறைதல்; உருளைக்கிழங்கில் கிளைகள் தடித்து, கிழங்கின் உள்பகுதியில் வளைவு வளைவாக பழுப்பு நிறம் பல இடங்களில் ஏற்படுதல்;

திராட்சையில் பழங்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு பெரிதாகவும் சிறியதாகவும் இருத்தல்; தேயிலையில் செடியின் இலை ஓரங்கள் சுருங்குதல்; காப்பிச் செடியின் இலைகள் அழுகுதல், உதிர்தல்; முதலியன போரான் பற்றுக்குறையின் விளைவுகள்.

போராக்ஸ் இடாதது போராக்ஸ் இட்டது.

போராக்ஸ் நல்ல பலன் தருகிறது—நிரூபணம் இதோ!

போராக்ஸ் உபயோகிப்பதன் மூலம் நிச்சயமான பலன் பெறலாம் என்பது, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனைகள் நிரூபித்துள்ளன. குறிப்பாக சமீபத்தில் நாங்கள் நடத்திய ஒரு சோதனையில் (பாக்கம் கிராமம்) போராக்ஸ் உபயோகித்ததனால் நிலக்கடலை மகசூல் 67% அதிகரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

போராக்ஸ் உபயோகிப்பது எப்படி?

நிலத்தில் இடும் முறைக்கு, எக்டருக்கு 3 முதல் 10 கிலோ போராக்ஸ் சிபாரிசு செய்யப் படுகிறது. இலைமேல் தெளித்தல் முறைக்கு 1.5 முதல் 3 கிலோ போராக்ஸ்-ஐ 180 முதல் 360 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும். நிலத்தில் இடும் முறைக்கு போராக்ஸ்-ஐ மணலுடன் கலந்து தூவலாம். அதை காம்ப்ளக்ஸ் வகை உரங்கள் அல்லது சூப்பர்பாஸ்பேட் போன்ற உரங்களுடன் கலந்தும் இடலாம்.

போராக்ஸ் (நுண் சத்துக் கலவை) எங்கு கிடைக்கிறது?

போராக்ஸ் எல்லா உர விற்பனையாளர்களிடமும், மற்றும் பூச்சிக் கொல்லி, பூஞ்சாளக்கொல்லி போன்ற விவசாய தேவைப் பொருட்கள் விற்பனையாளர்களிடமும் கிடைக்கிறது. 4 கிலோ பேக்கிங்கில் கிடைக்கிறது.

திலதர்ன் போராக்ஸ் லிமிடெட்
34, பார்னபி ரோடு, கீழ்ப்பாக்கம்,
சென்னை—600 010 டெலிபோன்—666671—72

ACIL. SB.1 TM-77

நெகிழுகின்றோம்

—திருமதி சௌந்தரா கைலாசம்

வீரத்தை—பிறந்தபொன் னாட்டுப் பற்றின்
வேகத்தைப் பாடுதற்கு வந்து விட்ட
நேரத்தை அறிந்தகலை வாணி, வெள்ளை
நிறங்கொண்ட கமலத்தின் நீங்கி, வீணை
பாரத்தை இறக்கிவிட்டுப் பார தத்தில்
பாரதியாய் அவதரித்துப் பாடி னாளோ?
காரத்தைக் கொண்டதமிழ்க் கவிதை யாலே
கண்கலங்க வைத்துப்போ ராடி னாளோ?

பஞ்சாக மலையெல்லாம் பறந்த போது
பரங்கியரின் திருப்பாதம் தனைப்பி டித்துக்
கெஞ்சாத கவிமகனை—வெள்ளைக் காரர்
கெடுபிடி-கண் டொருசிறிதும் என்றும் எங்கும்
அஞ்சாத சிங்கத்தை—கவிதை யாலே
அறப்போரின் உயிர்வளர்த்த அற்புத த்தை
நெஞ்சாரப் போற்றிமிகப் புகழு கின்றோம்
நினைக்கின்றோம்: உவக்கின்றோம்; நெகிழு கின்றோம்!



விழியிரண்டு ஞானத்தின் ஊற்று; நின்று
விம்முமிரு தோளிமய வெற்பு; வாயின்
வழிதிரண்டு வருவதெல்லாம் உணர்ந்து பார்த்தால்
வானறியாப் புத்தமுது: வந்து மூண்ட
பழிவெருண்டு தலைதெறிக்க ஓடு தற்குப்
பணிசெய்த பாரதியை எண்ணும் போதே
களிதிரண்டு வருகிறது நமது நெஞ்சில்
கரமிரண்டும் குவிகிறது வணங்கத் தானே!

கொட்டுமறைப் பாட்டெழுதி வருவான்; சின்னக்
குழந்தைக்கும் ஒன்றெழுதித் தருவான்; நல்ல
பட்டுமனக் காரனவன் பாட்டில் தேச
பக்தியினை யேதருவான் ஊற்றி; நின்று
கொட்டுமுர சென்றவனைப் போற்றி, சின்னக்
குயிற்பாட்டை நெஞ்சமதில் ஏற்றி, மின்னல்
வெட்டெனச்—சொல் வந்துவிழப் பாடும் அந்த
வித்தகனை, பாரதியை நினைவில் வைப்போம்!

நமக்கு நாள்தோறும் எத்
னேயோ கடிதங்கள் வருகின்
ன. அவை எல்லாவற்றையும்
ாம் பாதுகாத்து வைப்பதில்லை.
க்கியமான கடிதங்களை மட்
மே நாம் பத்திரப்படுத்தி வைக்
றோம். இது வீட்டளவில் நாம்
சய்கின்ற ஒரு செயலாகும்.

நாட்டளவில், பொதுமக்
ளுக்குப் பயன்படுகிற வகையில்
க்கியமான ஆவணங்கள், பத்
ரங்கள், கோப்புகள் முதலா
வற்றைச் சேகரித்து, பத்
ரப்படுத்திப் பாதுகாத்து வரு
ன்றது ஒரு நிறுவனம். அது
ான் சென்னையிலுள்ள தமிழ்
ாடு ஆவணக் காப்பகம்!

சென்னை எழும்பூரில்,
ரயில்வே நிலையத்திற்கு அருகில்
ழகியதோற்றத்தோடு காட்சி
ளிப்பதுதான் இந்த ஆவணக்
ாப்பகம்.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
லகிலேயே இத்துறையில் முன்
ணியில் நிற்கும் ஒரு நிறுவன
ாகும். 1909-ல் தான் இதற்
கனத் தனிக்கட்டடம் அமைக்
ப்பெற்றது என்றாலும், 1805-ல்
ளுநர், லார்ட் வில்லியம்
பண்டிங்க் காலமுதலே,
சன்னையில் ஆவணக்காப்பகம்
யங்கி வருகிறது.

வெளி நாடுகளிலிருந்தும்கூட,
ராய்ச்சியாளர்கள் பலர் நீண்ட
ாட்கள் சென்னையில் தங்கி,
ங்குள்ள ஆவணங்களிலிருந்து
தங்களது ஆராய்ச்சிப் பொருள் பற்றியவற்றைப் படித்துப் பயனடைகிறார்கள். இங்குள்ள

(இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் 7 முதல் 13-ந் தேதி முடிய மத்திய அரசின் கோரிக்கைக்கு இணங்க அரசின் எல்லா மாநிலங்களிலும் ஆவணக் காப்பக வாரம் கொண்டாடப்பட்டது. அதனையொட்டி சென்னையிலுள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகம் பற்றிய சுவையான தகவல்கள் இங்கே வெளியிடப்படுகின்றன.)

ஆராய்ச்சி மண்டபத்தில் இங்ஙனம் வருவோர் அமைதியாகத் தங்களது வேலையைத் தொடர விதிகளுக்குட்பட்டு எல்லா வசதிகளும் செய்து கொடுப்பதுடன், 30 ஆண்டுகளுக்கு முன்னுள்ளவற்றில் அவர்களுக்குத் தேவையான ஆவணங்களும் எடுத்து அளிக்கப்படுகின்றன. இங்குள்ள ஆவணங்களில் தேவையானவற்றை எளிதில் தேடியெடுக்க அட்டவணைகளும், குறிப்புப் புத்தகங்களும் (Index) உள்ளன.

''ஆவணக் காப்பகம்'' என்றால் என்ன?

காகிதம் மக்களது வாழ்வில் வெகுவாக உபயோகப்படுத்தப்பட்டு வரும் காலமிது. ஆவணக் காப்பகம் என்றால், பொதுப்பத்திரங்கள், கட்டுகள் முதலியவற்றை (Public Records) வைத்திருக்கும் இடம் எனப் பொருளாகும். அத்தகைய பத்திரங்கள், கட்டுகள் முதலியவற்றை ஆவணங்கள் எனக் குறிப்பிடுகிறோம்.

நாள்தோறும், இத்தகைய ஆவணங்கள் மலைமலையாக எங்கும் குவிகின்றன. அவையனைத்தையும் இங்கு கொண்டுவந்து குவித்திருப்பதாகப் பொருளில்லை. அரசு மற்றும் முக்கிய நிறுவனங்களில் இவ்வாறு சேர்ந்துவரும் ஆவணங்களில் முக்கியமானவை இங்குப் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. இவ்வாறு இங்குச் சேர்க்கப்பட்டுள்ள ஆவணங்களோ ஏராளம், ஏராளம்! அவற்றுள் பின்வரும் ஆவணங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம்:

1. டச்சு ஆவணங்கள் (1657 முதல் 1845 வரை) 2. டேனிஷ் ஆவணங்கள் (1777-1845) 3. பர்சியன் ஆவணங்கள் (1670-1847) 4. சென்னை அரசின் ஆவணங்கள் (1858-1972) 5. மாவட்டங்களின் ஆவணங்கள் (1767-1857) 6. சர்ச்சுகளின் ஆவணங்கள் (1749-1907) 7. மாவட்ட நீதிமன்றக் கோப்புகள் (1804-1858) 8. உயர்நீதிமன்ற கோப்புகள் (1801-1862) 9. ஷெரிப் அலுவலகக் கோப்புகள் (1789-1920) 10. 'ரிசீவர் ஆப் கர்னூடிக் ஸ்டைபண்ட்ஸ்' கோப்புகள் (1845-1847) 11. ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் ஆவணங்கள் (1670-1857).

ஆவணக் காப்பக வார விழா.

இவையன்றி வருவாய்த்துறை வாரியம், மற்றும் ஒருசில துறைத் தலைவர்களின் அலுவலக ஆவணங்களும், அரசினரின் இரகசியக் கோப்புகளும் இங்குப் பாதுகாப்பாகவும் முறைப்படிப் பிரித்தும் வைக்கப்பட்டுள்ளன. தமிழக அரசிற்கும், மற்றைய அலுவலகங்களுக்கும், இந்த ஆவணங்கள் பல்வேறு பொருட்களில் முடிவெடுப்பதற்காக அடிக்கடி தேவைப்படுகின்றன. அவ்வப்போது ஆவணங்களைத் தேவையான குறிப்புகளுடன், எடுத்து அனுப்பும் பணியும் ஆவணக் காப்பகத்துடையதாகும். இவ்வாறு பொதுவான ஆராய்ச்சியில் மட்டுமின்றி பொது நிர்வாகத்திலும் ஆவணக் காப்பகத்திற்குப் பெரும் பங்கு உண்டு.

ஆவணங்களை நீண்டகாலம் வைத்திருப்பது மிகவும் கடினமான பணியாகும். ஏனென்றால், சாதாரணமாக 50 ஆண்டுகளில் பெரும்பாலும் காகிதம் உளுத்து வீணாகிவிடும் தன்மை படைத்தது. விஞ்ஞான ரீதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து வந்தாலொழிய, காகிதக் கட்டுகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இருக்காது.

இதற்கான அமிலத்தன்மை போக்கியும், 'ஷிபான்' என்று சொல்லப்படும் துணியை இருபுறங்களிலும் ஒட்டியும் முக்கியமான கட்டுகள் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. இப்படிச் செய்தால், எழுதியுள்ளதை அல்லது அச்சடிக்கப்பட்டுள்ளதை எளிதாகப் படிக்கவும் முடியும். ஆனால், இங்குள்ள ஆவணங்களின் அளவுடன் உடலுழைப்பை ஒத்துப்பார்த்தால், அவையனைத்தையும் முறைப்படி பூச்சிகளை அழித்துப் பாதுகாப்பது இயலாத செயலாகும்.

எனவேதான், பூச்சிகளை அழிப்பதற்கென தனி எந்திரம் ஒன்று அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது. இதன் கொள்ளளவு 500 கன அடிகளாகும். தவிர மேலெர்ட்டல் வேலைக்கெனவும் (Lamination) ஒரு எந்திரம் தருவிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்காகக் கட்டப்பட்டுள்ள தனிக் கட்டடத்தை வரும் ஆவணக்காப்பக வாரத்தில் திறந்து வைக்கவும், இந்த எந்திரங்களைச் செயல்பட வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் பல உபயோகமுள்ள ஆவணத் தொகுப்புகளும், குறிப்புரைகளும் வெளியிட்டிருக்கிறது. நடப்பு நூற்றாண்டில் நாடு சுதந்திரம் பெற்றது வரையில் உள்ள ஆவணங்களிலிருந்து, முக்கியமானவற்றைத் தொகுத்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆவணங்களைப் பாதுகாப்பது அரசினரின் பொறுப்பு மட்டுமல்ல, பொதுமக்களும் இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆலயங்கள், சர்ச்சுகள், மசூதிகள், கல்வி நிறுவனங்கள், பொதுநல மன்றங்கள் முதலியவற்றிற்கும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உண்டு. நமக்கும் நம் சந்ததியினருக்கும் தொடர்பு தருவதே ஆவணங்கள்தான்.

களிப்புக் கடலில்

கரிக்கல வாக்கம்

அது ஒரு குக்கிராமம்!

அன்று அந்தக் கிராமமே விழாக்கோலம் பூண்டிருக்கிறது.

ஆடவர், பெண்டிர், சிறுவர்கள் குதூகலத்துடன் குழுமியிருக்கின்றனர்.

சென்னையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில், திருவள்ளூருக்கு அருகாமையில் உள்ளது கரிக்கலவாக்கம் என்னும் கிராமம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில், கிராம ஏற்புத் திட்டத்தின்கீழ் பாரத ஸ்டேட் வங்கி இக் கிராமத்தை ஏற்றுள்ளது.

ஆகஸ்டுத் திங்கள் 8ஆம் நாள் நடந்த இக்கிராம ஏற்பு விழாவில் அங்கு வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்குப் பலவகைத் தொழில் கடனுதவிகள் வழங்கப்பட்டன.

வளர்ச்சித் திட்டங்களுக்குப் பொருளாதார உதவி செய்வதில் பாரத ஸ்டேட் வங்கியானது, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தனது கிராம ஏற்பின் மூலம் விவசாயிகளுக்கு நேரடியாகப் பண உதவி செய்து வருகிறது. வேளாண்மை வளர்ச்சிக்காக இந்தியா முழுவதிலும் ரூ. 436.64 கோடி வரை டிசம்பர் 1977-க்குள் பணஉதவி செய்துள்ளது.

தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், பாண்டிச்சேரி மாநிலங்களை உள்ளடக்கிய சென்னை வட்டாரத்தில் மட்டும் வேளாண்மை வளர்ச்சிக்கென சுமார் 85.50 கோடி ரூபாய்களை 4.19 இலட்சம் கணக்குகளில் (ஜூன் இறுதிவரை) இது வழங்கியுள்ளது.

அரசின் குறிக்கோளுக்கிணங்க, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் மறுமலர்ச்சி ஏற்படும் வகையில் இவ்வங்கியானது ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமென்ற பெயரில் புதியதொரு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது; வங்கியின் ஒவ்வொரு வேளாண்மை வளர்ச்சிக் கிளைகளின் மூலமாக நாடு முழுவதிலும் ஒவ்வொரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அரசு, மற்றும் இதர சமூக நிறுவனங்களுடன் இணைந்து அதன் முன்னேற்றத்திற்காக உழைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

சென்னை வட்டாரத்தில் இவ்வாறு 25 கிராமங்கள் ஏற்கப்பட்டு, கிராமவாசிகளின் பொருளாதாரத் தேவைகளோடு, சமூக, கலாச்சாரத் தேவைகளையும் உணர்ந்து இது செயல்படுகின்றது. இத்தகைய திட்டங்கள் கிராமியத் தன்மையைப் பாதிக்காமல், கிராமத்தின் பொருளாதாரம் மற்றும் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.

இத்திட்டத்தின் மூலம் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருவள்ளூர் வேளாண்மை வளர்ச்சிக் கிளையானது கரிக்கலவாக்கம் கிராமத்தில், டிசம்பர் '77 வரை 3,500 தேர்ந்தெடுக்கப்பட்ட

விவசாயிகளுக்கு ரூ. 1 கோடிக்கும் மேலாகக் கடனுதவி செய்துள்ளது.

பயிர் வளர்ப்பிற்கு மட்டுமின்றி பால் மாடுகள் வாங்குதல், வேளாண்மைக் கருவிகள், எருதுகள் வாங்குதல், வாத்துகள் பாதுகாப்பு முதலானவற்றிற்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. கிராமக் கைவினைஞர்களுக்கும், வேலையற்ற இளைஞர்களுக்கும் குடிசைத் தொழில்களைத் தொடங்கவும், சிறு வணிகங்கள் செய்யவும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

இக் கிராமத்தில் 259 வீடுகள் உள்ளன. இதில் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் அரிசனங்களும், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளவர்களுமே. விவசாயத்தையே வாழ்க்கைப் பிழைப்பாக ஏற்றுக்கொண்டவர்கள், வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு குடும்பத்தையும் விசாரித்ததில் கிடைத்த தகவல்களின்படி, ஒவ்வொருவரிடமும் உள்ள திறமைகளைப் பயன்படுத்தும் வகையில் இவ்வங்கி ஒரு திட்டம் தீட்டியது. அதன்படி சுமார் ரூ. 14 இலட்சம் வரை 5 ஆண்டுகளில் வழங்கி கிராமத்தை மேம்பாடடையச் செய்யத் திட்டமிட்டுள்ளது. இதுவரை 200 குடும்பங்களுக்கு ரூ. 1 இலட்சம் வரை கடந்த 7 மாதங்களில் வழங்கியுள்ளது.

கிராம மக்களின் ஏழ்மையை நீக்கிப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதோடு, திருவள்ளூர் அரிமா சங்கத்தின் துணையோடு கிராமத்தின் சமூக வளர்ச்சியிலும் பங்கேற்க இது திட்டமிட்டுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட ஆதாரப்பள்ளி மாணவ மணிகளுக்குச் சீருடைகள், புத்தகங்கள், எழுதுபொருட்கள் முதலானவற்றை வாங்குவதற்காக அவர்களுடைய பெற்றோர்களுக்குக் கடனுதவி செய்துள்ளது.

ஒரு ஏழைக் குயவரின் இல்லத்தைச் சார்ந்த வேலை கிடைக்காத இளைஞர் ஒருவருக்கு அருகாமையிலுள்ள அரசு களிமண் பொருட்கள் தயாரிப்பு (Govt., Pottery & Ceramic Training Centre) நிறுவனத்தில் தொழிற்பயிற்சியில் வழி சேர வகை செய்துள்ளது.

கோழிப்பண்ணை நடத்தும் ஒருவர், வங்கியின் பேரார்வத்தைக் கண்டு மகிழ்ந்து, தானும் ஒரு சுவர்க்கடிகாரத்தைப் பள்ளியொன்றிற்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்.

வங்கியானது தனது ஊழியர்கள் அளித்த நன்கொடை மூலம் ஆதாரப்பள்ளி மாணவர்களுக்கென்று விளையாட்டுப் போட்டிகளை நடத்திப் பரிசுகளும் வழங்கிச் சிறப்பித்துள்ளது. அதோடு படிப்பகம் ஒன்றைத் துவக்க ரூ. 501 நன்கொடையும் வழங்கியுள்ளது. கிராமவாசிகளுக்கு, ஊழியர்கள் உபயோகித்த துணிமணிகள், மருந்துகள் முதலானவற்றை அன்பளிப்பாக வழங்கியதோடு உள்ளூர் மருத்துவர்களின் உதவியோடு மருத்துவ சேவையும் செய்து வருகிறது.

கிராமத்திற்குக் குடிநீர் வசதிகள் செய்து கொடுப்பதற்காக அரசு அதிகாரிகளை இது அணுகுகிறது. பொருளாதாரத் திட்டங்களுக்கான கடனுதவியில் எல்லாப் பொறுப்பினையும் வங்கி ஏற்றுக் கொள்வதோடு சமூக, பண்பாட்டுத் தேவைகளைப் பொறுத்தமட்டில் கிராமவாசிகளின் எல்லா முயற்சிகளிலும் துணை நின்று வருவதை நாம் பார்க்கிறோம்.

இந்தக் கிராமத்தைப் பார்க்கிறோம்! சுற்றிலும் பனைமரங்களே காட்சி தருகின்றன. சற்று தொலைவில் கோரைகளும் வீசு... கின்றன. இக்கிராம மக்க... பனைப் பொருள்கள் செய்தல் பாய் முடைதல் போன்... தொழில்களில் மிகுதியாக ஈடு... பட்டுள்ளனர்.

பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் திரு பி.சி.டி. நம்பியார் அவர்கள் கிராம மக்களுக்குக் கடன்கள் வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்வது தான் எங்கள் வங்கியின் குறிக்கோள். குடிநீர் வசதி, சுகாதாரம், வீட்டுவசதி முதலான தேவைகளை நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம்.

''கரிக்கலவாக்கம் கிராமப் பகுதியில் பனைமரங்கள் அதிக அளவில் இருப்பதால் பனைத் தொழிலில் அந்தக் கிராமங்களுக்குப் பயிற்சி தர பாரத ஸ்டேட் வங்கியின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து கணிசமான தொகை வழங்கப்படும். தமிழ்நாடு பனைவெல்லம் மற்றும் தும்புப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனம் இந்தப் பயிற்சித் திட்டத்துக்கு உதவும்.''

விழாவினையொட்டிக் கவின் மிகு கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பல்வேறு கடனுதவிகள் பெற்ற அந்த ஏழை எளிய மக்களின் முகத்தில் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் ஒளிவிட்டன. கரிக்கலவாக்கத்திற்கு நல்ல எதிர்காலமிருக்கிறது என்பதையும் அந்நிகழ்ச்சி சொல்லாமல் சொல்லியது!

விபத்திலும் நகைச்சுவை...!

எந்தத் துயரமான கட்டத்திலும் கலைவாணரால் சிரித்துக் கொள்ள முடியும். கடைசி வரையில் அவரிடம் மாபெரும் துணையாக இருந்த சக்தி இது ஒன்றுதான்.

ஒரு முறை சென்னைக்கு வந்து கொண்டிருந்த கம்பெனி வேன் சிறு விபத்துக்குள்ளாகியது. நல்ல வேளையாக உயிர்ச் சேதம் இல்லை. சேதி கேட்டுக் கலைவாணர் காரில் ஓடிவந்தார். ''நல்லவேளை உயிர்ச் சேதம் இல்லை'' என்று சொல்லிக் கொண்டே காரிலிருந்து கீழே சிதறிக் கிடந்த பழங்களை எடுத்து, சூழ இருந்தவர்களுக்கெல்லாம் ஒவ்வொன்றாகக் கொடுத்து விட்டுத் தானும் ஒன்றை எடுத்துத் தின்றுகொண்டிருந்தார். அப்பொழுது அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்த பஸ் இவரைக் கண்டதும் நின்று விட்டது. பிரயாணிகள் எல்லோரும் கீழே இறங்கி வந்து, 'ஆஹா......என். எஸ். கே.' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே அவர் பக்கமாக வந்தார்கள். ஒரு பிரயாணி 'என்ன சேதி! வேன் இப்படிக் கிடக்கிறதே' என்று கேட்டார். அதற்கு என். எஸ். கே. ''ஒண்ணுமில்லே, பழம் சாப்பிடணும்னு நினைச்சோம். உடனே காரை இப்படிச் சாய்த்து வச்சிட்டு பழம் சாப்பிட்டுக் கொண்டிருக்கோம். விஷயம் இவ்வளவுதான்!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார். ஒரு விபத்துச் செய்திகூட, கலைவாணருக்கு நகைச்சுவைதான்.!

வளர்ச்சிப் பாதையில் தமிழகம்

— பி. சி. கணேசன்

(3)

இந்த அரசு பொறுப்பேற்ற நாட்களிலிருந்து இயற்கை, மக்களுக்கும், அரசுக்கும் பலவிதங்களிலும் சோதனைகளை ஏற்படுத்தியதை யாரும் இதற்குள் மறந்து இருக்க முடியாது. பருவ நிலையும், இதர இயற்கை சூழ்நிலைகளும் சரியாக இருக்கும் போதே கூட, ஏராளமான பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ள ஓர் அரசு, பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே இயற்கையின் கோரக் கொடுமைகளைச் சந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

1977-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வட கிழக்குப் பருவ மழை எதிர் பார்த்ததைவிட தீவிரம் அடைந்து தமிழகம் எங்கும் கனத்த மழையைக் கொடுத்தது. மழையோடு கடுமையாக புயலும் வீசிற்று. ஏறத்தாழ 10 நாட்கள் சென்னை மாநகரில் தாழ்வான பகுதிகள் வெள்ளக் காட்டில் மூழ்கிப் போயின. பருவ மழை காலத்திற்குச் சற்று முந்தியே தொடங்கிப் பெய்ததோடு அந்தக் குறிப்பிட்ட நாட்களில் வழக்கமாகப் பெய்யும் மழையை விட 72 சத விதம் கூடுதலாக பெய்ததாகவும் வான் ஆராய்ச்சி நிலையத்தார் புள்ளி விவரம்கொடுத்து இருக்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து நவம்பர் 12-ஆம் தேதி மற்றொரு இயற்கையின் கோரத் தாண்டவம் தமிழகத்தில் நடைபெற்றது. இதுவரை வரலாறு காணாத அளவுக்கு புயலின் கொடுமையும், வெள்ளத்தின் வேகமும் அமைந்தது. பல மாவட்டங்களில் தண்ணீர் காடாகி போக்குவரத்தை முழுமையாக துண்டித்தது.

இந்தக் கட்டுரையில், அதாவது 'வளர்ச்சிப் பாதையில் தமிழகம்' என்கிற கட்டுரையில், இந்த வெள்ளச் சேதம் பற்றி இவ்வளவு விரிவாக நாம் குறிப்பிடுவதற்கு காரணம் இருக்கிறது. ஒரு சமுகத்தில் ஆக்க ரீதியான காரியங்களும், மக்கள் வளர்ச்சிக்கான திட்டங்களும் விரைந்து நடைபெற வேண்டுமானால், போக்குவரத்து வசதிகள் செம்மையான முறையில் அமைதல் வேண்டும். ஏற்கனவே தமிழக அரசு கிராமப் புறங்களை நகர்ப் புறங்களோடு இணைத்து, வணிகத் தொடர்புகளை இரு பகுதிகளுக்கு இடையேயும் ஏற்படுத்தி, கிராமத்தில் உற்பத்தியாகும் நுகர் பொருள்களை நகரங்களில் விற்பனை செய்து கிராமப் புற பொருளாதாரத்தை செழிக்கச் செய்வதற்கு திட்டங்கள் தீட்டிக் கொண்டு இருந்த வேளையில், வெள்ளமும், புயலும் வந்து ஏற்கனவே இருக்கின்ற தொடர்புகளை துண்டித்து விடுமானால் அது எத்தகைய சிக்கலை உண்டாக்கும் என்பதை நிர்வாகத்துறை பற்றி சராசரி அறிவுடையோரும் புரிந்து கொள்ள முடியும். அதிலும் புதிய அரசு பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே இத்தனை சோதனைகளைச் சந்தித்து மீள்வது என்பதைச் சாதாரணமெனச் சொல்லிவிட முடியாது.

இயற்கையின் சீற்றத்தால் போக்குவரத்துப் பாதைகள் மட்டும் துண்டிக்கப்படவில்லை. தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் வெள்ளக்காடு ஏற்பட்டதன் விளைவாக, வயல்கள் நீரில் மூழ்கி போய் பெரும் சேதத்திற்கு உள்ளாயின. இதனால் விதைத்து, நாற்று நட்டு, களை பிடுங்கி, அறுவடைக்கு காத்து இருந்த உழவர் பெரு மக்கள், தங்களுடைய எதிர்கால கனவுகள் எல்லாம் மண் மேடிட்டுப் போனதால், சொல்லொணா துயரத்துக்கு ஆளாயினர். வெள்ளத்தில் சிக்கி தவித்த மக்களை மீட்பதும், சேதத்தின் அளவைக் கட்டுப்படுத்துவதும், மண் மேடிட்டப்போன பயிர்களை மறுபடியும் பயிர் செய்யும் பக்குவத்தை அடையச் செய்வதும், அரசு துரித வேகத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஆயின.

இந்தச் சாதனையை தமிழக முதல்வரும், தமிழக அரசும் போர்க்கால முனைப்போடு சமாளித்த விதம், தமிழக வரலாற்றில் சிறப்புமிக்க ஓர் ஏடாக என்றென்றும் திகழும் என்பதில் சந்தேகம் இல்லை.

அமைதிக் காலத்தில் நிர்வாகப் பணிகளை நிறைவேற்றுவது என்பது ஒன்று; எதிர் பாராத இடுக்கண்கள் பெரிய அளவில் வந்துற்றபோது, நிதானம் குலையாமல் மக்களின் தேவையை உணர்ந்து நிவாரணப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவது என்பது மற்றொன்று.

இந்தச் சோதனையை தமிழக அரசு வெற்றிகரமாக சமாளித்தது.

நாட்டில தொழில் வளம் பெருக வேண்டுமானால், மின்சக்தி இடையூறு இன்றி கிடைக்க வேண்டும். புயல் வீசியபோதுமின் கம்பங்கள் வேரோடு பெயர்த்து எறியப்பட்டு மின் இணைப்புக்கள் பல இடங்களில் துண்டிக்கப்பட்டு போயின. வீடுகள் இருண்டு போனது மட்டும் அல்லாமல், தொழிற் கூடங்களும் செயலற்று போயின. குறிப்பாக, கிழக்கு தஞ்சை பகுதியில் மின்சார சப்ளை பெருமளவுக்கு பாதிக்கப்பட்டது. அதே சமயம் மின்சாரத் துறை விரைந்து செயல்பட்டு புயல் வீசிய 72 மணி நேரத்திற்குள் மீண்டும் மின் வசதி துண்டித்துப்போன இடங்களுக்கு எல்லாம் மின்சாரம் கிடைக்கும் வகையில் பணி புரிந்ததைப் பாராட்டாதவர்கள் இல்லை.

வளர்ச்சிப் பாதையில் இது என்ன பெரிய முன்னேற்றமா என்று சில அவசரக்காரர்கள் கேட்கக் கூடும். இருக்கின்றவைகளுக்கு இயற்கையின் சீற்றத்தால் சேதம் விளைகின்றபோது, அதை விரைந்து முன்பு இருந்த நிலைக்கு கொண்டு வருவதும் ஒரு சாதனையே. இதை இளம் பருவத்தில் இருந்த அரசு ஏற்றமுடன் செய்து முடித்தது என்பது அதனுடைய செய் திறன் நேர்த்திக்கு ஒரு சான்று.

(தொடரும்).

'அண்ணாவின் இதயம்' கே. ஆர். ஆர்.

''கலைஞர்கள், பலருக்கு, நிழல் தரும் மரமாக இருந்தவர் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள்.''

''அண்ணாவின் இதயமே கே. ஆர். ஆர்.

இவ்வாறு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரபபன் குறிப்பிட்டார்.

சென்னை மயிலை, ஆர். ஆர். சபாவில் ஆகஸ்டு 5-ஆம் நாள் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமியின் 7-வது ஆண்டு நினைவுநாள் விழா நடந்தது. அவ்விழாவில் கலந்துகொண்டு நடிப்பிசைப் புலவருக்கு நினைவு அஞ்சலி செலுத்துகையில் மேறகண்டவாறு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''முப்பது ஆண்டுக் காலமாக என்னுடன் அன்புடன் பாசத்தோடு பழகி வந்தவர் கே. ஆர். ஆர்.'' என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறினார்.

''திராவிடர் இயக்கத்துக்காகப் பல இலட்சங்களை இழந்தவர் கே.ஆர்.ஆர்.'' என்று விழாவிற்குத் தலைமை வகித்த இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

''அரசியலில் உதாரணபுருஷராக அவர் விளங்கினார். கடமை உணர்ச்சியோடு காரியங்களைச் செய்தார்'' விரைவில் சென்னையில் நடிப்பிசைப் புலவருக்குச் சிலை எழுப்பப்படும்'' என்று மாநில சிறுசேமிப்புத் திட்டத் துணைத்தலைவர் திரு எ.). எஸ். ராஜேந்திரன் அவர்கள் கூறினார்.

கிந்தன் பெற்ற புகழ்...

நந்தன் கதாகாலட்சேபத்தில் நாட்டம் இல்லாத பலரும் அதில் உள்ள மெட்டுக்களுக்காகவும், கதை அமைப்புக்காகவும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்கள். இதைப் புரிந்து கொண்ட கலைவாணர் அதே கதை அமைப்பிலும், மெட்டுகளிலும் கிந்தனார் கதையை அமைத்துக் காலட்சேபம் செய்தார். முந்தியது அடிபட்டுப் போய்விட்டது.

திருநெல்வேலியில் ஒரு நிகழ்ச்சி. யாரோ ஒரு பாகவதர் நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்திலே நந்தனார் கதை நடத்தினார். அதே நேரத்தில் அதே ஊர் தியேட்டர் ஒன்றில், கிந்தனார் கதாகாலட்சேபத்தைக் கலைவாணர் நடத்தினார். கோவிலில் என்ன நிகழ்ச்சி நடந்தாலுமே குழுமி நெருக்கும் அநேக பக்த கோடிகளே, கலைவாணரின் நிகழ்ச்சியைக் காண வரிசையில் நின்று அனுமதிச் சீட்டுப்பெற்று உள்ளே வந்தார்கள். ரசித்தார்கள்; கைதட்டினார்கள். 'கிந்தனார் கதையில் கிருஷ்ணன் ஒன்றும் மோசமாகச் சொல்லிவிடவில்லையே; கல்வியின் அவசியத்தைப் பற்றித்தானே சொல்கிறார்' என்றும் புகழ்ந்து கொண்டார்கள்.

அடுத்த சில மாதங்களில் பக்கத்து ஊரில் உள்ள ஒரு சபாவில் கிந்தனார் நிகழ்ச்சியைக் கலைவாணர் நடத்திக் கொண்டிருந்தார். முதல் வரிசையிலே முதல் ஆளாக, அன்று நந்தன் சரித்திரம் நடத்திய பாகவதர் வந்து உட்கார்ந்திருந்தார். கிந்தனைப் பிரமாதமாக ரசித்தார். காலட்சேபம் முடிந்ததும் மேடைக்குள்ளே வந்து கலைவாணரை அணைத்துக்கொண்டு பாராட்டி, ''உங்களுக்குச் சரஸ்வதியோட அனுக்கிரகம் பூரணமாக இருக்கிறது; நீங்கள் தீர்க்காயுசா இருக்க வேண்டும்'' என்றும் ஆசி கூறிப் போனார். மனம் நிறைந்த மகிழ்வுடன் கலைவாணர் நன்றி கூறினார்.

—[திரு சுப்பு ஆறுமுகம் எழுதி, ஸ்ரீமகள் கம்பெனி வெளியிட்டுள்ள 'கலைவாணர் என். எஸ். கே.' என்னும் நூலிலிருந்து...]

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

கனி வளம் கொழிக்கும் சேலம்
கலை நலம் தோன்றும் கோலம்
ஆடித் திருவிழாக் காலம்!

அரசுப் பொருட்காட்சி 78
சேலம்
(1978 ஆகஸ்ட் 6 முதல் செப்டம்பர் 19 வரை)
சேலம் நகரில்
போஸ் மைதானத்தில்

இலட்சக் கணக்கான மக்களைக் கவர்ந்திடும் வகையில் அமைந்திடும் பொருட்காட்சி

முதன் முறையாக அரசுப் பொருட்காட்சி!
மத்திய - மாநில அரசுத்துறைகள்
பொதுத்துறை நிறுவனங்கள்—
தனியார்துறை நிறுவனங்கள் பலவும்
பங்கேற்கின்றன.

தனிப்பட்ட கேளிக்கைப் பகுதிகளில்
நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள்!
திரைப்படக் காட்சிகள்!

எல்லாரும் மகிழ — நல்லதொரு வாய்ப்பு



பதிவு எண். M. 8676

பாதுகாக்கவேண்டிய
கருத்துக் கருவூலம் இந்தச் சிறப்பிதழ்



"பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்றார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவர்.

ஆனாலும் எப்படியோ மனிதச் சமுதாயத்தின் அறியாமையால், நமது வாழ்க்கை முறையில் புரையோடிய கொடுமையாகத் தீண்டாமைப் பழக்கம் வேரூன்றி விட்டது. மனிதனை மனிதன் தள்ளி வைப்பது ஒரு வெறியாய்ப் போய்விட்டது. அண்ணல் காந்தியடிகள் தீண்டாமைக் கொடுமை நாட்டையே பாழ்படுத்திவிட்டதை உணர்ந்து, அந்தத் தீயப் பழக்கத்தை அடியோடு களைய வேண்டும் என்பதற்கு அயராது பாடுபட்டார்.

பள்ளிப் பருவத்தில் தீண்டாத வகுப்பைச் சேர்ந்த ஒரு பையனுடன் காந்தி விளையாடினார். இதை அவரது அன்னை புத்லிபாய் தடுத்தார். தன் தாய் சொல்வதைத் தட்டாது கேட்கும் காந்தி, இதில் மட்டும் தாய் சொல்லுக்குக் கீழ்ப்படியவில்லை.

ஆண்டவனின் குழந்தைகள்

பின்னர் ஒருமுறை காந்தியடிகள் இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்: 'நானும் என் சகோதரர்களும் எந்தத் தீண்டப்படாதவரையும் தொட்டுவிட்டால், எங்கள் தாய், எங்களைத் தலை முழுகச் சொல்லுவார். அப்பொழுது எல்லாம் நான் சிரிப்பது வழக்கம்' என்று.

தமிழரசு

1-10-78

மலர் 9 ❀ இதழ் 7

இப்படி இளமையிலேயே தீண்டாமையை அடியோடு ஒழிக்க வேண்டும் என்ற உறுதியுடன் காந்தியடிகள் இருந்தார். தென்னுப்பிரிக்காவிலேகூட தீண்டாதோருடன்தான் காந்தியடிகள் கூட்டுறவு கொண்டார். தீண்டாதாரின் நிலையை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன் காந்தியடிகள் செயல்பட்டார்.

தீண்டாதோர் நல்வாழ்வுக்காக 1918-ல் பம்பாயில் ஒரு கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்துக் காந்தி சென்றார். பேசுவதற்காக எழுந்த அவர், 'இந்தக் கூட்டத்தில் யாராவது தீண்டாதோர் இருக்கிறாரா?' என்று கேட்டார். எவரும் கையைத் தூக்கவில்லை. காந்தி பேச மறுத்துவிட்டார்.

அகமதாபாத்துக்கு அருகில் இருந்த காந்தியின் ஆசிரமத்துக்குத் தீண்டாதோரின் குடும்பம் ஒன்று வந்தது. ஆசிரமத்திலே நிரந்தர மக்களாகத் தங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படியே அவர்களைக் காந்தி சேர்த்துக் கொண்டார்.

இதனுல் ஆசிரமத்தில் பெரும் நெருக்கடி எழுந்தது. தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்த தந்தையையும் தாயையும் அவர்களுடைய மகள் லட்சுமியையும் ஆசிரமத்திலுள்ள பெண்கள் ஏற்றுக் கொள்ளத் தயங்கிஞர்கள்.

தானிபென் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பு பெண் அடுக்களையில் புகுந்து உணவு சமைப்பதும், பாத்திரம் பண்டங்களைத் துலக்குவதும் கஸ்தூரிபாவுக்குப் பிடிக்கவில்லை. காந்தியடிகளிடம் முறையிட்டார்.

காந்தியடிகளின் பிடிவாதம் அன்னை கஸ்தூரிபாவுக்கு நன்கு தெரியும். முடிவில் காந்தியடிகளுக்கே வெற்றி.

பின்னர், ஒருநாள் காந்தி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த லட்சுமியைத் தம் சொந்த மகளாக சுவீகாரம் செய்து கொண்டார்.

''பண்டைக்கால இந்து மதத்தில் தீண்டாமை இல்லை. சதுப்பு நிலத்தில் எழும் விஷவாயு (மையாஸ்மா) போன்றது தீண்டாமை. அவை இந்து மதத்தின் தத்துவங்களுக்கு எதிரானவை ஆகும். நான் மறுபிறவி எடுக்க விரும்பவில்லை, ஆனுல், தவறி மறுபிறவி எடுப்பதானுல் ஒரு தீண்டப்படாதவனுகவே பிறக்க விரும்புகிறேன். அப்படிப் பிறந்து, அவர்களுடைய துயரங்களையும் துன்பங்களையும் அவர்கள்மீது மற்றவர் சொரியும் அவமதிப்புக்களையும் நானும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். என்னையும் விடுவித்துக் கொண்டு அவர்களுடைய துன்பநிலைகளிலிருந்து அவர்களையும் விடுவிக்க முயல இதன் மூலம் எனக்கு ஒரு வாய்ப்புக் கிட்டும்''-என்றூர் காந்தியடிகள்.

அடுத்த பிறவியில் தாழ்த்தப்பட்டவராக பிறுவதற்கு முன்பே இந்தப் பிறவியிலேயே அத்தகையவராக வாழ காந்தியடிகள் முயன்றூர். ஆசிரமக் கழிப்பறைகளைத் தாமே சுத்தம் செய்யும் வேலைகளை காந்தியடிகள் மேற்கொண்டார். அதன் விளைவாக எல்லாருமே அப்பணிகளை மேற்கொண்டார்கள். இதனுல் அந்த வேலை செய்பவர்கள் தீண்டத்தகாதவர் என்ற எண்ணம் அங்கு எழவில்லை.

தாழ்த்தப்பட்டவர்களை, தீண்டாதோர், பறையர் என்றெல்லாம் குறிப்பிட்டு வந்தார்கள். காந்தியடிகள் தீண்டப்படாத மக்களை 'ஹரிஜன்' அதாவது 'ஆண்டவனின் குழந்தைகள்' என்று அழைத்தார். பின்னர், தமது வாரப் பத்திரிகைகளுக்கு இந்தப் பெயரையே வைத்தார். இந்த 'ஹரிஜன்' என்ற சொல்லைக் கால வழக்கில் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

காந்தியடிகள் தீண்டாமை அடியோடு நீங்க வேண்டும் என்பதற்காக ஆற்றிய பணிகள் கொஞ்சமல்ல!

தென்னுப்பிரிக்காவில் நிறவேற்றுமையை எதிர்த்துப் போர் தொடங்கிய அண்ணல் அவர்கள் நம் தாய்த் திருநாட்டில் தீண்டாமையை அடியோடு களைய வேண்டும் என்று விரும்பிஞர்.

அண்ணலின் கனவை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம், நாம்.

'எல்லாரும் ஓர் குலம்; எல்லாரும் ஓர் நிறை' என்னும் சமுதாயச் சமன்பாட்டை உருவாக்குவதே அண்ணலுக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனுகும்.

தமிழ்நாட்டில் அண்ணல் காந்தியடிகள்

அண்ணல் காந்தியடிகள் தமிழகத்திற்கு இருபது முறை வந்துள்ளார்கள். விவரம் வருமாறு:

1)	1896 அக்டோபர்	தென்னுப்பிரிக்காவிலிருந்த போது
2)	1915 ஏப்ரல்	இந்தியாவிற்கு நிலையாகத் திரும்பியபின்னர்
3)	1916 பிப்ரவரி	
4)	1917 செப்டம்பர்	
5)	1919 மார்ச்	
6)	1920 ஆகஸ்ட்	
7)	1921 ஏப்ரல்	
8)	1921 செப்.	
9)	1925 மார்ச்	
10)	1927 ஆகஸ்ட்	கதர் யாத்திரை
11)	1927 நவம்.	இலங்கையிலிருந்து திரும்பிய வழியில்
12)	1927 டிசம்.	சென்னை காங்கிரசுக்கு
13)	1929 மே	திருத்தணி
14)	1933 டிசம்பர்	அரிஜன யாத்திரை
15)	1934 ஜனவரி	அரிஜன யாத்திரை
16)	1936 மே	பெங்களூர் சென்ற வழியில்
17)	1936 ஜூன்	பெங்களூரிலிருந்து திரும்பிய வழியில்
18)	1937 ஜனவரி	
19)	1937 மார்ச்	
20)	1946 ஜனவரி	

தன்மான இயக்கத் தந்தைக்கு தமிழக அரசு எடுத்த விழா!

சீர்திருத்தச் செம்மல், சிந்தனைச் சிற்பி, பகுத்தறிவுப் பகலவன், வெண்தாடி வேந்தர், ஈரோட்டுச் சிங்கம், தமிழ்நாட்டு ரூசோ என்றெல்லாம் நாட்டவரால் போற்றிப் புகழப்படும் நந்தமிழ் நாயகனும் தந்தை பெரியார் நூற்றுண்டுத் துவக்க விழா, அவர் பிறந்த திருவிடமான ஈரோட்டில் மிகச் சீரும் சிறப்புமாக நடந்தது.

ஈடு இணையில்லா விழா !

செப்டம்பர் திங்கள் 17, 18 இருநாட்கள்-ஈரோடு நகரே விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் வெள்ளம் போல் தமிழர் கூட்டம்! தெருவெல்லாம் தந்தை பெரியாரின் திருவுருவப் படங்கள், தோரணங்கள், வரவேற்பு வளைவுகள். கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.

தமிழக அரசின் சார்பில் நடந்த இந்த ஈடு இணையிலாத திருவிழா முதல் நாள் காலை மங்கல இசையுடன் தொடங்கியது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், நூற்றுண்டு விழா ஓராண்டு முழுவதும் நடைபெறுகிறது என்றும், தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் விழா நடக்கவிருக்கிறது என்றும் கூறிஞர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழாவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமை வகித்தார்.

காலம் ஒருநாள் வரும்!

இந்திய அரசு பாதுகாப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் துவக்க விழாச் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''சிறந்த தலைவரான பெரியார் ஒரு ஸ்தாபனமாக-ஒரு இயக்கமாகத் திகழ்ந்தவர். அநீதி, அக்கிரமங்களை எதிர்த்து நாட்டு மக்களுக்காக அரும்பாடுபட்டவர் அவர். பெரியாருக்குத் தமிழகத்தில் மட்டுமே தொண்டர்கள் இருந்தாலும்கூட, அவர் இந்தியா முழுவதற்கும் சொந்தமானவர்.

''அவரது கொள்கைகளும், தத்துவங்களும் விவாதத்துக்குரியவையாக இருக்கலாம். ஆனுல், அவரது கொள்கைகளின் அடிப்படை நிரந்தரமானது. அனைவரும் அவற்றை ஏற்றுக் கொள்ளும் காலம் வரும்.

மதுரை சோமசுந்தரம் குழுவினரின் இன்னிசை.

ஊர்வலத்தில் வந்த ஊர்திகளில் ஒன்று......

இந்தியாவுக்கே வழிகாட்டி !

''அநீதிகளுக்கும், அக்கிரமங்களுக்கும் ஆளான மக்களுக்கு அவர்களது துயரங்களைத் தீர்க்கப் பாடுபட்டார். நாட்டில் எந்தக் கொடுமைகள் நடந்தாலும் அதை எதிர்த்துத் தமிழ்நாட்டிலிருந்து குரல் கொடுத்துக் கொண்டிருந்தார் பெரியார்.

''பெரியாரின் தத்துவங்கள், போதனைகள் ஆகியவை இந்தியா முழுவதற்கும் வழிகாட்டியாக இருக்கும்.''

விடுதலை வீரர் !

தந்தை பெரியார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''விடுதலைக்குப் பாடுபடும் வீரராகவே தனது பொது வாழ்வினைத் தொடங்கினார். ஆனால், பிறகு பகுத்தறிவுக் கண்கொண்டு சமூகப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, தன்மான இயக்கத்தைத் தோற்றுவித்தார். வாழ்க்கையின் ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகுவதற்குத்தக்க வகையில் பல்வேறு சமுதாயத் திட்டங்களை அவர் வகுத்தார்.

''அறிவைப் புறக்கணிக்கும் மூடப் பழக்க வழக்கங்களை ஒதுக்கிவிட்டு, பகுத்தறிவின் அடிப்படையில்தான் வாழ்க்கையை அமைக்க வேண்டும் என்பதை மக்களிடம் வலியுறுத்திக் கூறிய ஒரே தலைவர்-ஒப்பற்ற தலைவர்-ஈ. வெ. ரா. அவர்கள்தான். யாருக்கும் பணியாத, எதற்கும் வளைந்து கொடுக்காத பகுத்தறிவாளர்; மானுடநெறி காக்கும் பண்பாளர். அன்பும், அறிவும் இணைந்த வாழ்க்கையையே மக்கள் வாழ வேண்டும் என்று விரும்பினார். நீதி, நேர்மை, சமத்துவம், அறம் அனைத்தும் நிலவுகின்ற சுதந்திரச் சூழ்நிலையில் சமுதாயம் வளர்ந்து முன்னேற வேண்டுமென்பதற்காகப் பாடுபட்ட தீவிர சமுதாய சீர்திருத்தவாதி அவர்.

''நம் காலத்தில் காணப்படும் சமுதாயக் கேடுகளை வேரறுக்க அயராது பாடுபட்டவர். மது விலக்கை ஆதரிப்பதில் அவர் எவ்வளவு அழுத்தமாகச் செயற்பட்டார் என்பதை யாரும் மறுக்க முடியாது. பெண்ணடிமை ஒழியப் பாடுபட்டார். பெண்களை அடிமைப்படுத்தும் அனைத்தையும் அகற்ற வேண்டும் என்று எல்லா அரசுகளையும் அவர் வற்புறுத்தினார்.

''வெறும் அறிவையும், அறிவியலையும் மட்டும் நம்பினால், நாம் அரக்கர்களாகி விடுவோம். பகுத்தறிவு என்பது கைப்பிடியே இல்லாத கூர்மையான கத்தி. அதை எந்தப் பக்கத்தில் தொட்டாலும் காயம் ஏற்படும். ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காக மட்டுமே போராடிய ஈ. வெ. ரா. போன்ற பெரியார்களின் வாழ்க்கையிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் பாடம் இதுதான்.

''இந்த உலகில் ஒருவனுக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கையை விட வேறொரு வாழ்க்கை கிடையாது. எனவே, இந்த வாழ்க்கையை இந்த உலகில் முறையாக நடத்த முயல வேண்டும். எப்போதும் தன்னம்பிக்கையுடனும் நேர்மையுடனும் பாடுபட்டு இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதே பெரியார் நமக்குத் தரும் பாடம்.''

நாடு போற்றும் நற்பணி !

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

''பெரியார் தன்மான உணர்வையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தினார். நாடு போற்றக் கூடிய நல்ல பணியைச் செய்தார்

''பெரியார் அஞ்சல் தலையை வெளியிடுவதால் அவருக்குப் பெயர் புகழ் ஏற்படுமா என்றால், அது இல்லை. ஆனாலும், இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

''பெரியார், அஞ்சல் தலையை வெளியிடுமாறு மத்திய அரசுக்குக்

கோரிக்கை விடுத்தபோது, மத்திய அரசில் இருந்தவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் தாமதப்படுத்தி வந்தார்கள்.

''ஆனால், இப்போதுள்ள மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தபோது, பரிசீலனை செய்கிறோம் என்று கூறி சில வாரங்களில் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்கள். இதற்காக மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

''மத்திய அரசு அய்யாவின் அஞ்சல் தலையை வெளியிடத் தாமதப்படுத்தியதற்குக் காரணம், அய்யா பெயர் சொன்னால் அச்சப்படுகிறவர்கள் தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல், இந்தியா முழுவதும் இருக்கிறார்கள்.

''தாழ்ந்த சமுதாயத்தை நிமிர்ந்து நிற்கச் செய்த அய்யாவை நினைத்துப் பார்க்கும் போது அச்சப்பட்டாலும், அஞ்சல் தலையை வெளியிட மத்திய அரசு ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி !

''அஞ்சல் தலையைப் பார்க்கும் போது என் உள்ளத்தில் தோன்றியது என்னவென்றால், 100 ஆண்டுகள் கழித்து அந்த அஞ்சல் தலையைப் பார்க்கும் சமுதாயத்தினர் என்ன பேசுவார்கள் என்று சிந்தித்தேன்.

''அய்யாவின் அஞ்சல் தலையை வெளியிட்டது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் 50 இலட்சம் அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது. இதைக் காண்பவர்கள் உள்ளத்தில் ரவீந்திரநாதத் தாகூர் போன்றுள்ள இவர் யார் என்ற கேள்வி எழாமல் இருக்காது.

''பெரியார் சமுதாயப் பணிக்குப் பாடுபட்டார். தாய்க்குலத்திற்குச் சம உரிமைக்குத் தன் வாழ்நாள் முழுவதும் தியாகம் செய்தார்.

''இந்த விழா கொண்டாடுவது என்னைப் பெருமைப்படுத்திக் கொள்வதற்காக அல்ல. பெரியாரின் கொள்கைக்காக இரத்தம் சிந்திய தொண்டர்களுக்கே இந்தப் பெருமையின் பங்கு ஏற்படும். அந்தத் தொண்டர்களுக்கு நன்றி கூறுவது நம் முதல் கடமை. தொண்டர்களுக்கு நன்றி கூறாவிட்டால், அது பெரியாருக்கு நாம் செய்யும் துரோகம்.''

விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள், முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திரு வி. வி. இராமசாமி அவர்கள் ஆகியோர் தந்தை பெரியார் அவர்களின் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறினார்கள்.

அஞ்சல்தலை வெளியீடு :

பெரியார் நூற்றாண்டுவிழாவையொட்டி, பெரியார் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. அஞ்சல் துறை அலுவலர் திரு ஜானகிராம் அவர்கள் கொடுத்த அஞ்சல் தலையை மேதகு தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் வெளியிட்டார். இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களும் இந்த அஞ்சல் தலைகளைப் பெற்றுக் கொண்டனர்.

மாண்புமிகு முதல்வரின் பேருரைக்குப் பின்னர் திரு முத்துசாமி, எம். எல். ஏ., அவர்கள் நன்றி நவில முற்பகல் நிகழ்ச்சி சிறப்புடன் நிறைவேறியது.

சிறப்பு அணிவகுப்பு ஊர்வலம் :

விழாவையொட்டி பிற்பகல் பிரம்மாண்டமான ஊர்வலம் நடந்தது. தந்தை பெரியாரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கருத்து விளக்க அலங்கார வண்டி

பெரியார் அஞ்சல் தலையை வெளியிட்டு மேதகு ஆளுநர். மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்களிடம் 'ஆல்பம்' வழங்குகிறார்.

மகளிர் அரங்கில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி. பி. டி. சரசுவதி, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன், திருமதி சௌந்தரா கைலாசம், திருமதி அனந்தநாயகி.

களுடன், என். சி. சி., சாரணர், ஊர்க்காவல் படையினர், மகளிர் ஆகியோரின் அணிவகுப்பும் வ. உ. சி. சிதம்பரனார் பூங்காவிலிருந்து நாதசுர இசை முழங்க ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தை முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாலை நடந்த மகளிர் அரங்க நிகழ்ச்சிக்குத் திருமதி சத்தியவாணிமுத்து எம். பி. அவர்கள் தலைமை வகித்தார். திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினார்.

விழாவில் தந்தை பெரியாரின் அருமை பெருமைகளை விளக்கி மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள், திருமதி மனோரஞ்சிதம் சனார்த்தனம் அவர்கள், திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள், திருமதி டி. என். அனந்தநாயகி அவர்கள், திருமதி பார்வதி அர்ச்சுனன் அவர்கள், செல்வி பாகிரதி அவர்கள், திருமதி அரசு மணிமேகலை அவர்கள், திருமதி மண்டோதரி கணேஷ் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

கனிமிகு கலைநிகழ்ச்சி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் தலைமையில், சைதை நரிக்குறவர் மாணவரில்ல நடனம், கலைமாமணி குலதெய்வம் ராஜகோபால் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி, 'இசைப்பேரரசு கலைமாமணி' மதுரை சோமு அவர்களின் இன்னிசை ஆகியவை சிறப்பாக நடந்தன.

கருத்துமழை பொழிந்தது !

18-9-78 அன்று நடந்த இரண்டாம் நாள் விழா, 'மந்திரமா? தந்திரமா?' என்னும் உண்மை விளக்கத் தந்திரக் காட்சிகளுடன் தொடங்கியது. திரு ஆர். ஏ. வி. பத்ரன் அவர்கள் இதனை அமைத்திருந்தார்.

பிறகு நடந்த கருத்தரங்கிற்கு வந்திருந்தவர்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் வரவேற்றார். திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமை வகித்தார்.

கருத்தரங்கில் பல்வேறு தலைப்புகளில், பெரியாரின் சிறப்பியல்புகளை விளக்கி தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு. க. இராசாராம் (பெரியாரும் மொழிக்கொள்கையும்), திரு ஏ. பி. சனார்த்தனம் எம். பி. (பெரியாரும் சாதி ஒழிப்பும்), திரு டி. கே. சீனிவாசன் (பெரியாரும் அறிஞர் அண்ணாவும்), டாக்டர் வா. செ. குழந்தைசாமி (பெரியாரும் அறிவியல் கண்ணோட்டமும்), திரு. டி. வி. நாராயணசாமி (பெரியாரும் போராட்டங்களும்), திரு திருக்குறளார் வீ. முனிசாமி (பெரியாரும் காந்தியடிகளும்), டாக்டர் அவ்வை நடராசன் (பெரியாரும் தன்மான உணர்வும்), திரு கொண்டல் எஸ். மகாதேவன் (பெரியாரும் எழுத்துச் சீர்திருத்தமும்), திரு சிலம்பொலி செல்லப்பன் (பெரியாரும் சமூகச் சீர்திருத்தமும்) ஆகியோர் கருத்து மழை பொழிந்தனர்.

தேன்மழை பொழிந்தது !

பிறகு, கவியரங்கம் நடந்தது. வந்திருந்தோரை வரவேற்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் பேசினார். கவியரங்கிற்குக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமை வகித்தார்.

கவியரங்கில் பல்வேறு தலைப்புகளில் கவிஞர் பெருமக்கள் தம் கவிதைகளைப் பாடினார்கள்.

மாண்புமிகு கிராமக் கைத்தொழில்கள் அமைச்சர் திரு க. இராசாமுகமது (சீர்திருத்தச் செம்மல் பெரியார்), கவிஞர் புலமைப்பித்தன் எம். எல். சி., (சிந்தனைச் சிற்பி பெரியார்), கவிஞர் கா. வேழவேந்தன் (புரட்சி எழுத்தாளர் பெரியார்), கவிஞர் தஞ்சை வாணன் (சமூகச் சீர்திருத்தவாதி பெரியார்), கவிஞர் வைரமுத்து (மொழிப் போர் வீரர் பெரியார்), கவிஞர் கோவை இளஞ்சேரன் (அறப் போர் வீரர் பெரியார்), பெரும் புலவர் வீ. அரங்கனார் (தன்மான வீரர் பெரியார்), கவிஞர் பொன்னடியான் (வைக்கம் வீரர் பெரியார்), கவிஞர் ஆர். நாராயணசாமி (பகுத்தறிவுத் தந்தை பெரியார்), கவிஞர் பொன்மணி வைரமுத்து (பெண்ணுரிமைப் பேணுநர் பெரியார்), கவிஞர் தன கனிமொழியன் (புரட்சிப் பேச்சாளர் பெரியார்) ஆகியோர் தேன்மழை பொழிந்தனர்.

சீர்மிகு சிறப்புச் சொற்பொழிவுகள்:

பிறகு, பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளையெல்லாம் விளக்கிடும் வண்ணம் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், மதுரை மாநகராட்சி மேயர் வணக்கத்துக்குரிய எஸ். முத்து அவர்கள், திரு ப. உ. சண்முகம் அவர்கள், திரு குமரி அனந்தன் எம்.பி., அவர்கள், திரு சி. சுப்பிரமணியம் எம்.பி. அவர்கள், திரு. கல்யாணசுந்தரம் எம்.பி. அவர்கள், திரு கருப்பையா மூப்பனார் எம்.பி., அவர்கள், திரு கே. எஸ். அப்துல் வகாப் எம். எல். சி. அவர்கள், சிதம்பரம் கிருஷ்ணசாமி அவர்கள், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், திரு எஸ். எம். துரைராஜ் அவர்கள் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவில் பங்கு பெற்றனர்.



பெருமைப்படக்கூடிய நிகழ்ச்சி

மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், விழா நிறைவுச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

''இந்த நிகழ்ச்சி ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல; மக்களின் வரிப்பணத்தில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. நாட்டின் பகுத்தறிவுவாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து நடத்தும் ஒரு விழாவாகும் இது. தாய், பிள்ளை, தொழிலாளி அனைமுதலாளி, வரும் தலை நிமிர்ந்து பெருமைப்படக்கூடிய நிகழ்ச்சியாக இது உள்ளது.

தமிழைக் காப்போம் !

''அண்ணா சொன்னதில் எதை நான் செய்யவில்லை? தமிழ் மொழியை அழிக்க எந்த மொழி வந்தாலும் அதை எதிர்ப்போம். ஆனால், இந்தி மட்டுமே ஆட்சி மொழி, தேசிய மொழி என்றால் அதைக் கடுமையாக எதிர்ப்போம். ஆனால், அதை விடுத்து இந்தியே கூடாது என்று சொல்லப் போகிறேமோ? இந்தி மொழிக்குப் பதிலாகப் புதிதாக உருதுமொழியோ வங்காள மொழியோ வந்தால் நாம் ஏற்க முடியுமா?''

அன்று இரவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் தலைமையில், கே. பி. ராஜ்மோகன் குழுவினரின் ''பெரியார் ஒரு சகாப்தம்'' என்னும் நாடகம் நடந்தது.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. எச். மொய்னுதீன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் நன்றி நவில வரலாற்றுச் சிறப்பு மிக்க தந்தை பெரியார் நூற்றாண்டுத் தொடக்க விழா நிறைவெய்தியது.

தமிழரசு அடுத்த இதழில்

மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகள்— சுருக்கம் இடம் பெறும்.

முதல் சந்திப்பு

நமக்கும் காந்திஜிக்கும் இருந்த தொடர்பைக் குறித்துப் பெரியார் இந்த நூல் ஆசிரியரிடம் கூறிய சில கருத்துக்களாவன:—

"காந்தியார் மீது நான் காங்கிரசில் இருந்தபோது எனக்கு விசுவாசம் இருந்தது. 1921 ஆக இருக்குமென்று நினைக்கிறேன். ஈரோட்டிற்கு காந்தியார் வந்திருந்தார். எங்கள் வீட்டிற்கும் வந்தார். அப்போதுதான் நான் அவரை முதன் முதலில் சந்தித்ததாகும்.

"காந்தியார் எனக்கு இரண்டு முறை கடிதங்கள் எழுதியிருக்கிறார். ஒருமுறை என்னுடைய தொண்டைப் பாராட்டிக் கடிதம் எழுதினார். மற்றொரு முறை அவர் எனக்குக் கடிதம் எழுதியது என்னுடைய கையில் வலி ஏற்பட்டு நான் துன்பப்பட்ட சமயமாகும். 'நீங்கள் இராட்டையை அதிக நேரம் சுழற்றியதால் இந்த வலி ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆகையால் வலி குறையும் வரை சிறிது காலத்திற்கு இராட்டையைச் சுழற்றுவதை நிறுத்தி வையுங்கள்' என்று அவர் எழுதியிருந்தார். சட்ட மறுப்புப் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு காலம். ஆயிரக் கணக்கில் ஆண்களும் பெண்களும் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறைக்குச் சென்றுவிட்டார்கள். அந்தச் சமயம் இந்திய அரசுடன் சமாதானப் பேச்சு நடத்தி அரசியலில் அமைதியான நிலையை ஏற்படுத்தக் கருதி சர். சங்கரன் நாயர் ஒரு சமாதான மாநாடு கூட்டினர். சமாதானப் பேச்சைத் தொடங்குவதற்கு முன்பு போராட்டத்தைக் காங்கிரஸ் கைவிட வேண்டுமென்று அவர் ஒரு நிபந்தனை கூறினர். அதை காந்தியார் ஏற்கவில்லை. இந்தப் போராட்டத்தை நிறுத்துவது என் கையில் இல்லை; ஈரோட்டில் ஈ. வெ. இராமசாமியின் தங்கை, மனைவி, ஆகியோர் கையில் இருக்கிறது" என்று அந்த மாநாட்டிலேயே கூறினர்.

இவ்வாறு காந்தியார் கூறியதற்குக் காரணமும் இருந்தது. அம்முறை சட்ட மறுப்பில் பங்கு கொண்டு என் மனைவி சிறைக்குச் சென்றபின், ஏராளமான பேர் அந்த அம்மாளைப் பின்பற்றிச் சிறைக்குச் சென்றார்கள். எங்கள் குடும்பத்திற்கு ஈரோட்டில் நல்ல செல்வாக்கு உண்டு. மேலும், நான் நகராட்சித் தலைவராகவே இருந்திருக்கிறேன். ஆகையால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக அதிகமான பேர்-நண்பர்களும் ஆதரவாளர்களும்—சிறைக்குச் சென்றுவிட்டார்கள். ஆகையால் அங்கு இருந்த அதிகாரிகள் 144 தடை உத்திரவு போடுவதற்கு யோசிக்க வேண்டியதாகப் போய்விட்டது. 'சட்ட மறுப்புப் போராட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தனிப்பட்ட முறையில் வழக்குத் தொடரட்டும்; அதன் பின் நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். நாமாகத் தடையுத்தரவு போட வேண்டாம். தடையுத்தரவு போட்டால் போராட்டம் சமாளிக்க முடியாத அளவு மேலும் கடுமையாகலாம்' என்று கருதி விட்டுவிட்டார்கள். இது இந்தியா முழுவதற்கும் ஒரு முன் மாதிரியான வெற்றியாக, 144-ஐயே தோற்கடித்த வெற்றியாகக் கருதப்பெற்றது. நான் காங்கிரசின் மீது பற்றுக் கொண்டிருந்த காலத்தில் இந்தியைப் பரப்புவதிலும் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தேன். ஈரோட்டில் இந்தி கற்றுக் கொடுக்கப் பள்ளி ஒன்றையும் தொடங்கி நடத்தினேன். அந்தப் பள்ளியைத் தொடங்கி வைத்தவர் பண்டித மோதிலால் நேரு ஆவார். அந்தக் காலத்தில் மது விலக்கிலும் எனக்கு ஈடுபாடு இருந்தது. மதுவிலக்கை வெற்றியாக்கும் எண்ணத்துடன் என்னுடைய தென்னந்தோப்பில் இருந்த தென்னைகளை வெட்டினேன். என்னைப் பின்பற்றி என்னுடைய நண்பர்களும் தங்கள் தென்னந்தோப்புகளிலிருந்த தென்னைகளை வெட்டினார்கள்."

—திரு அ. இராமசாமி, பி.ஏ.,
('தமிழ்நாட்டில் காந்தி' எனும் நூலிலிருந்து...)

பெரியார் குறித்து பேரறிவாளர்கள்

இந்தியாவில் இன்று பொது வாழ்வில் உள்ள மிக முக்கியமான பிரபலஸ்தர்களில் பெரியார் அவர்களும் ஒருவர் என்பதைத் தயங்காமற் கூறுவேன்.

செய்கையில் உண்மை, நீதியை நிலை நாட்டுவதில் அடங்கா ஆர்வம், சிறிதும் தன்னலமென்பதே இல்லாத வாழ்க்கை— இவைகளே ஒரு மனிதனைச் சிறந்தவனாக ஆக்கக்கூடியனவென்றால், உண்மையிலேயே பெரியார் நம்முடைய மிகச் சிறந்த மனிதர்களில் ஒருவராவார். நாட்டிற்குத் தொண்டு புரிவதற்காகவே தம்முடைய வாழ்க்கையைப் பயன்படுத்துவதிலுள்ள அவரது ஆர்வமும், இந்திய சமுதாயத்திலுள்ள கேடுகளை ஒழிப்பதற்காக அவைகளுக்கெதிராய்ச் செய்து வரும் பிரச்சார முறைகளும், அவைகள் மீது அவருக்குள்ள நியாயமான கோபாவேசமும், இக்காரணங்களுக்காக அவர் செய்துள்ள மகத்தான தியாகங்களும் தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்தில் பெரியாருக்கு ஒரு நிரந்தரமான இடங் கிடைக்குமாறு செய்துவிட்டன.

—சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

இராமசாமிப் பெரியார், அவர் ஈரோட்டில் பிறந்து வளர்ந்தவர். அவர் தம் புகழோ தென்னாடெங்கிலும், வடநாட்டிலும், பிற நாடுகளிலும் பண்டிக் கிடக்கின்றன! காரணம் என்ன? தோழர் ஈ. வெ. ராவின் உண்மையும், வாய்மையும், மெய்ம்மையும் செறிந்த அறத் தொண்டாகும்.

தோழர் இராமசாமியார் பல நூல் பயின்றவரல்லர் ; அவர் செல்வராயினும் எளிமையில் நின்று பழகியவர் ; இக்காலச் சூழ்ச்சியே அவருக்குத் தெரியாது. அவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்.

உரிமை வேட்கை, அஞ்சாமை முதலியன ஈ. வெ. ராவின் தோற்றத்திலேயே பொலிதல் வெள்ளிடை மலை.

—திரு. வி. க.

சீரார் ஈ. வெ. ரா. அவர்களுக்கும் எனக்கும் உள்ள அக நரும் நட்பு யார் என்ன சொன்ன போதிலும் என்றும் குறையாது.

—இராஜாஜி.

பெரியார் அவர்கள் வாழ்நாள் முழுவதும் சாதி, மூடநம்பிக்கைகளை முழு மூச்சுடன் எதிர்த்த பெருந் தலைவர்....

—ஜெயப்பிரகாஷ் நாராயணன்.

வைக்கம் வீரர் ஒரு மனிதர் அல்லர்; அவர் எனக்கு ஒரு மனிதராகத் தோன்றவில்லை. ஒரு கொள்கையாகவே தோன்றுகிறார்.

உலகத்தில் எந்தெந்தத் தேசங்கள் முன்னேறியிருக்கின்றனவோ, அந்தந்தத் தேசங்களில் இவரது கொள்கை நிலவக் காணலாம். மற்றும், தீவிரமாக எந்த மக்கள் சுதந்திரப் போராட்டம் செய்கின்றனரோ, அந்த மக்கள் இந்தக் கொள்கையையே கொண்டிருப்பதையும் காணலாம்.

—எஸ். இராமநாதன்

மற்றவர்களுடைய உணர்ச்சி எவ்வாறு பாதிக்கப்படும் என்பதைக் கொஞ்சமும் மதியாது, தமக்குச் சரியென்று பட்டதை வலியுறுத்தி வந்த காரணத்தாலேயே நான் அவரிடம் மாறாத அன்பு கொண்டேன். அத்தகைய ஒரு சிறந்த குணமே இப்போது நம் மக்களின் முற்போக்குக்கு அவசியமாயிருக்கிறது.

—டாக்டர் பி. சுப்பராயன்

மேனாட்டில் அன்று பிறந்து வளர்ந்த சாக்ரடீஸ் என்ற ஓர் அறிஞரைப் பற்றிக் கேட்டோம். ஆனால், கண்டோமில்லை. இவ்விந்தியாவிலேயே, அங்ஙனம் கண்டதாகக் கூறுவாருமில்லை.

எனினும், இத்தமிழ் நாட்டில், இன்று அரும்பெரும் செயலாற்றும் ஒரு சாக்ரடீஸைக் கண்டோம்; தாடியோடு கண்டோம். அவர்தான் நம் ஈ. வெ. இராமசாமிப் பெரியார்.

—பட்டுக்கோட்டை அழகிரிசாமி.

திரு ஈ. வெ இராமசாமிப் பெரியார் சட்டசபைகளைப் பற்றியோ, அரசாங்கத்தைப்பற்றியோ கவலைகொள்ளாதவர் அவர் ஏழைகளுக்குத் தொண்டு செய்வதே தமது பிறவியின் பயன் என்று கருதியிருப்பவர்.

—எம். ஆர். ஜெயகர்

தற்காலத் தமிழகத்தில் தலைநின்று, ஒல்லும் வகை ஓயாது உழைத்து, தமிழர் வாழ் உயர்வளம் சிறக்க உரிமைப் போர்த் தலையணியில் பொருதுவரும் ஒப்புயர்வற்ற தலைவர், இராமசாமிப் பெரியார். காந்தியடிகளாலும் பாராட்டப்பெற்றுப் பொது நலம் பேணும் அறம் திறம்பா அருண்மறவரிவர். கலாநிலையக் கல்விப் பட்டங்கள் பெறுமலும், மானமிழந்து பிறர் பின் நின்று பதவி முதலிய வீண் பெருமை தேட விரும்பாமலும், ஊக்கமும் வாய்மையும் ஆக்கமனைத்தும் தரும் என்பதை நாள்தோறும் தாம் வாழ்ந்து காட்டும் சால்புடையார். கல்வி வளம் செல்வம் போல் மிகுந்து மலிந்த ஆங்கில நாட்டில், கல்லூரிப் பயிற்சி மிக இல்லாமல், தன்னலமறந்து, பிறர் உரிமை பேண முயன்று, பெருமையும் புகழும் பெற்றுயர்ந்து "பிராட்லா" வைப் போலவே, நமது பெரியாரும் தம் வாழ்வனைத்தும் தமிழர் உரிமை பேணும் அறப் போருக்குதவி, நல்லோர் மதிப்பும் அல்லோர் அழுக்காறும் நாளும் பெருக்கும் இயல்புடையார்.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

திரு இராமசாமி நாயக்கரைப் பற்றி, நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவரைப் பற்றி ஐரோப்பாவிலே உள்ள பார்லிமெண்டில் பேசப்படுகிறது என்றால் நாயக்கரின் புகழைப் பற்றி நான் என்ன சொல்வது?

திரு நாயக்கரிடத்திலுள்ள விசேஷ குணம் என்னவென்றால், மனத்திற்படும் உண்மையை ஒளிக்காமல் சொல்லும் ஓர் உத்தம குணந்தான்.

—வ. உ. சிதம்பரனார்.

மருந்துச் செடிகளின் ராணி

நம் நாடானது தொன்றுதொட்டே மருந்துச் செடிகளின் இருப்பிடமாக இருந்து வருகிறது. ஆனல், விஞ்ஞான முறையில் அனுபவமில்லாததனல் இத்தகைய மருந்துச் செடிகளைப் பற்றி அநேகமாகத் தெரிந்திருக்க வழியில்லை. தொன்றுதொட்டு நம் பெரியோர்கள் இத்தகைய செடிகளை வில்லைகளாக மாற்றமல் அப்படியே உபயோகித்து வந்தார்கள். ஆனல், தற்போது மேல் நாட்டினர் நம் நாட்டுச் செடிகளை வாங்கி அதிலிருந்து வில்லைகளைத் தயாரித்து அவற்றை நம் நாட்டிற்கே அதிக இலாபத்துடன் விற்றுக்கொண்டிருக்கின்றனர். நாமே அவ்வாறு வில்லைகளாகத் தயாரிப்போமானல் நோயின்றி வாழ, நலம் பெற, நாடு செழிக்க ஏதுவாகும்.

அதுவுமின்றி வெவ்வேறு மருந்துச் செடிகளை விஞ்ஞான முறையில் பயிரிட்டு ஏற்றுமதி செய்து அயல்நாட்டுச் செலாவணியை (Foreign exchange) அதிகரிக்கலாம். குணமாகாத நோய்களாகிய சர்க்கரை நோய் (Diabetes), புற்று நோய் (Cancer) ஆகிய நோய்களைக் குணப்படுத்துவதில் இவைகளுக்கு முதலிடம் உண்டு. உலக மக்களின் நலத்திற்காகவே இத்தகைய மருந்துச்செடி பயிரிடுவதை ஏற்றுக் கொள்ளலாம். மனிதனின் நோய்களை நீக்கி, நல்வாழ்வு பெற இத்தகைய மருந்துச் செடிகளைச் செவ்வனே பயிரிடுவோமாக!

நமது நாடு 1963-64 ஆம் ஆண்டில் ரூ. 3.63 கோடி மதிப்புள்ள மருந்துச் செடிகளை ஏற்றுமதி செய்தது. ஒவ்வொரு ஆண்டில் இத்தகைய ஏற்றுமதி அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. 1974-75 ஆம் ஆண்டில் ரூ. 17.5 கோடி மதிப்புள்ள மருந்துச் செடிகளை ஏற்றுமதி செய்தது. நாம் இன்னும் இரசாயன முறைகளைக் கையாளுவோமெனில் இத்தொழிலில் அதிக அளவில் அந்நிய நாட்டுச் செலாவணி ஈட்டலாம் என்பதில் ஐயமில்லை.

நம் நாட்டில் 2,000 வகை மருந்துச் செடிகள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. காட்டுச் சுண்டைக்காய் Solanum Viarum
2. டையஸ்கோரியா Dioscorea floribunda
3. டிஜிடாலிஸ் Digitalis lanata
4. எட்டிக்காய் Strychnos naxvomica
5. நித்திய கல்யாணி Catharanthus rosea
6. சர்பகந்தி Rauwolfia serpentiana
7. பாப்பி (அபினி செடி) Papaver Somniferum
8. சென்ன Cassia angustifolia
9. மருந்துப் புதின Mentha piperita
10. பிளேன்டேகோ Plantago ovata
11. வெட்டிவேர் Vetiveria zizanoides
12. பைரத்திரம் Chrysanthemum cinerariifolium
13. கேந்தி Tagetes erecta
14. பக்வீட் (பபரே) Fagopyrum tartaricum
15. பப்பாளி Carica papaya
16. பெல்லடோன Atropa belladonna

ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆண்ட போது, இந்நாட்டுச் செடிகளின் செல்வத்தைக் குறிப்பிடும் வகையில் இந்தியாவை 'உலகச் செடிகளின் களஞ்சியம்' (Botanical Garden of the World) என்று அழைத்தனர். நாம் இந்நிலையை நன்குணர்ந்து தற்போது முக்கியமாய்ப் பயிரிடும் மருந்துச் செடியைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

தற்போது தமிழ்நாட்டிலே நித்திய கல்யாணி 1000 எக்டேரிலும், செசியா (Cassia angustifolia) 300 எக்டேரிலும் பயிரிடப்பட்டு வருகின்றன. முக்கியமாக நித்திய கல்யாணி அல்லது சுடுகாட்டு மல்லி என்னும் செடியைப் பற்றி ஈண்டுக் காண்போம்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோவை ஆகிய மாவட்டங்களில் தற்போது இச்செடி அதிகமாகப் பயிரிடப்படுகிறது.

நித்திய கல்யாணி மடகாஸ்கர் நாட்டைச் சேர்ந்தது. தற்போது பிலிப்பைன்ஸ், மொஸாம்பிக், ஆஸ்திரேலியா, வியட்நாம், இலங்கை, இஸ்ரேல் ஆகிய நாடுகளில் இதைப் பயிரிட்டு வருகின்றனர். இதன் பூக்கள் அழகாகவும், வண்ண வண்ண நிறங்களாகவும் இருப்பதனல் இதை ஒரு பூந்தோட்டப் பயிராகவும் பயிர் செய்து வருகிறர்கள். ஆகவே, இதை வீட்டுத் தோட்டங்களிலும் பார்க்கலாம்.

இந்தச் செடியானது, மிகக் குறைந்த கவனிப்புடன் எங்குப் பயிரிட்டாலும் வரக் கூடியது. ஆகவே, இதை வெகு சுலபமாக நாம் பயிரிட்டு இலாபம் பெறலாம்.

நாற்றங்கால் :

நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை நன்கு உழவேண்டும். பெரிய மண் கட்டிகளை உடைத்து 3 X 1 மீட்டர் அளவுக்கு நிலத்தை விடச் சற்று உயர்ந்த பாத்திகள் அமைக்க வேண்டும். இந்தப் பாத்திகளில் மக்கிய தொழு உரத்தை ஒரு பாத்திக்கு 25 கிலோ வீதம் மேலாகப் பரப்ப வேண்டும். ஒரு வாரத்திற்குப் பிறகு இதை மண் வெட்டியால் கொத்தி, மறுபடியும் சமப்படுத்த வேண்டும். ஒரு பாத்திக்கு 50 கிராம் விதை போதுமானது. ஒரு எக்டருக்கு 300 கிராம் விதை தேவைப்படும். இந்த விதையை வரிசைகளில் மேலாகத் தூவி அதற்கு மேல் விதைகளை மறைக்க நல்ல வண்டல் மண்ணைத் தூவ வேண்டும். பிறகு தினமும் தண்ணீர் ஊற்ற வேண்டும். ஏழு நாட்களுக்குள் விதை முளைத்துவிடும். சுமார் 45 முதல் 60 நாட்களுக்குப் பின்னர் நாற்றுக்களைத் தோட்டத்தில் நடலாம்.

தோட்டத்தின் தயாரிப்பு முறை :

நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை நன்றக உழவேண்டும். பிறகு பெரிய மண் கட்டிகளை உடைத்து, ஒரு எக்டருக்கு 25 டன் வீதம் மக்கிய தொழு உரமிட்டு மீண்டும் ஒரு முறை நன்றக உழவேண்டும். நிலத்தை நன்றகச் சமப்படுத்திய பிறகு 45. செ.மீ. இடைவெளிவிட்டு பார் (Ridges and furrows) பிடிக்கவும். நீர் பாய்ச்சிய பிறகு 20 செ. மீ. இடைவெளியில் பார்களின் ஒரு சரிவில் நாற்றுக்களை நடவேண்டும்.

நீர்பாய்ச்சுதல :

செடி நட்டவுடன் ஒரு முறையும், பின், மூன்றும் நாள் ஓர் உயிர் தண்ணீரும் பாய்ச்ச வேண்டும். இதேபோல் மூன்று நாட்களுக்கு ஒரு முறை 4 தடவைகள் நீர் பாய்ச்சுதல் நல்லது. பிறகு பத்து நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினல் போதுமானது.

களை எடுத்தல் :

எப்பொழுது களை தெரிகிறதோ, அப்போது நன்றகக் கொத்திவிட்டுக் களைகளை எடுக்க வேண்டும். இந்த மாதிரி இரண்டு தடவைகள் எடுத்தால் போதும். செடிகள் நிலத்தை நிறைத்த பின் களைகள் வருவது நின்று விடும்.

உரமிடல் :

நட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு 25 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச்சத்தும் செடியின் பக்கத்திலிட்டுக் கொத்திவிட வேண்டும். நட்ட இரண்டு மாதத்திற்குப் பிறகு 25 கிலோ தழைச் சத்தையிட்டுக் கொத்தி விட வேண்டும்.

நோய்களும் தடுப்பு முறைகளும் :

இச் செடி பொதுவாகப் பூச்சி பூஞ்சாளங்களால் தாக்கப்படுவதில்லை. எனவே, மருந்து தெளிக்க அவசிய மேற்படாது. ஆனல், ஒரு வகை வைரஸ் நோய் தோன்றும். அப்பொழுது இலைகள் சிறுத்துச் செடிகள் குட்டையாகி விடும். அத்தகைய செடிகளைப் பிடுங்கி எரித்துவிட வேண்டும்.

அறுவடை :

நட்ட ஆறு மாதத்திற்குப் பிறகு செடிகள் அறுவடைக்குத் தயாராகிவிடும். ஆண்டுக் கணக்கில் அப்படியே விட்டு விடுவதுமுண்டு. அவ்விதச் செடியிலுள்ள மருந்து (Alkaloid) அதிகரித்துக் கொண்டே போகும். என்றலும் நட்ட ஆறு மாதத்திலிருந்து ஓர் ஆண்டிற்குள் நன்றக அறுவடை செய்வதே சிறந்தது.

இந்தச் செடியை ''மருந்துச் செடிகளின் ராணி'' என்று கூறலாம். இதில் வேர்களில் சில மருந்துகள் இருக்கின்றன. தண்டில் சில உள்ளன. மற்றும் இலைகளில் சில இருக்கின்றன. ஆகவே, எந்தப் பக்குவத்தில் மருந்து தயாரிப்போர் வேண்டும் என்று சொல்லுகிறர்களோ அந்தப் பக்குவத்தில் அறுவடை செய்து அனுப்பலாம்.

நன்கு வளர்ச்சியுற்ற நித்திய கல்யாணிப் பயிர்

சாதாரணமாக அறுவடைக்கு முன் மூன்று நாட்கள் தொடர்ந்து தினமும் நீர் பாய்ச்சுதல் வேண்டும். பின்னர் செடியை வேருடன் பிடுங்கவேண்டும். வேரில், ஒட்டியுள்ள மண்ணை நீரால் கழுவி, வேரையும் செடியையும் பிரித்து வெட்டிக் காயப் போட வேண்டும். நன்றகக் காய்ந்தவுடன் மருந்து தயாரிப்போருக்கு அனுப்பி வைக்கலாம். வேர்களில்தான் அதிகமாக மருந்துச் சத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, வேர்ப் பகுதிக்கு அதிகமான விலை கிடைக்கும். வேர்ப் பகுதிக்கு ஒரு கிலோவுக்கு ரூ. 3.00லிருந்து ரூ. 15.00 வரைக்கும் விலை கிடைக்கும். செடிப் பகுதி ரூபாய் ஒன்றிலிருந்து ரூபாய் எட்டு முடிய விலை பெறும்.

சோதனைக்கூட ஆராயச்சிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரகங்கள்

அதிக மகசூல் அளிக்கவல்ல ஒரு ரகம்

ஆராய்ச்சி முடிவுகள் :

செடியின் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சியின் முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன:

ஆறுமாத வயதுடைய 20 செடிகளின் சராசரி அளவுகள்;

செடிபற்றிய விவரம்	அளவு/எடை/ எண்ணிக்கை
செடியின் உயரம்	45.15 (செ.மீ.)
செடியின் கிளைகள்	12.50 (எண்ணிக்கை)
செடியின் இலைகள்	37.30 (எண்ணிக்கை)
செடியின் எடை	65.50 (கிராம்)
செடியின் வேரின் எடை	9.80 (கிராம்)
செடியின் வேர் பாகத்திற்கு மேலுள்ள எடை	55.70 (கிராம்)
செடியின் வேரின் அதிகமான நீளம்	85.25 (செ.மீ.)
செடியின் சராசரி வேரின் நீளம்	21.02 (செ.மீ.)

தற்போது எல்லாரும் இச்செடியை ஒரே இனமாகப் பயிரிட்டு வருகிறுர்கள். ஆனுல் இதில் முக்கியமாக மூன்று வகைகள் இருக்கின்றன. அவை சிவப்புப் பூ தரக்கூடிய ரகம், வெள்ளைப் பூ தரக்கூடிய ரகம் மற்றும் வெள்ளைப் பூவில் சிவப்புப் பொட்டு வைத்தது (Ocillatus) போன்ற பூ தரக்கூடிய ரகம் ஆகும். சாதாரணமாகச் சிவப்புப் பூவைத் தரும் செடியைத்தான் பெரும்பாலும் பயிரிட்டு வருகிறுர்கள். இவ்வொரு ரகம் வெவ்வேறு இனங்களைக் தன்னகத்தே கொண்டுள்ளதால் அடுத்த தலைமுறைப் பயிரில் அவை வெவ்வேறு ரகங்களாகப் பிரிந்து செல்ல ஏதுவாகிறது. இப்பிரிவைத் தடுத்து ஒரே ரகமாகப் பிரித்தெடுப்பதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனுல் வெகு விரைவில் ஒரு நல்ல ரகத்தை எதிர் பார்க்கலாம்.

இந்தச் செடியானது விதைகளின் மூலம் தான் பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது ஆராய்ச்சியின் மூலம் இதை மற்ற முறைகளிலும் இன விருத்தி செய்யலாம் என்பதைக் கீழே கொடுத்துள்ள அட்டவணை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

	சதவீதம்
விதை முளைப்பு ...	50
வெட்டுத் துண்டுகள் வேர் விடுதல் (cutting) ...	52
வேர், இலை பாகங்களைத் தவிர மற்ற எல்லா பாகங்களையும் துண்டாக்கிநடலாம் ...	...
காற்றுப் பதியன் (Air playering) ...	90
பெரிய செடியை நட்ட இடத்திற்கு மாற்றி நடுதல் ...	100

மேலே கொடுத்துள்ள அட்டவணையிலிருந்து இச்செடியைப் பல முறைகளில் இனப்பெருக்கம் செய்யலாம் என்று காண்கிறோம், விதையே கதி என்றில்லை. மற்ற முறைகளைக் கையாண்டு இந்தச் செடியை வளர்க்கலாம். குறிப்பாக உயர் ரகங்கள் உருவாக்கப்படும் நேரத்தில் அவற்றை இன விருத்தி செய்ய விதையில்லா இனப் பெருக்கத்தை நாம் கையாளலாம்.

செடியின் மருந்துகள் (Alkaloid) ரகத்திற்கு ரகம் மாறுபட்டு இருக்கின்றன. அதுவுமில்லாமல் இடத்திற்குத் தக்கதாயும், வயதிற்குத் தக்கதாயும் இந்தச் செடியின் மருந்துத் தன்மை மாறும். வெள்ளைப் பூ, சிவப்புப் பூ ஆகிய இவ்விரு இனங்களிலும் வேர், தண்டு, இலை ஆகியவற்றின் மருந்தின் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

செடியின் பாகம்	மருந்தின் கொள்ளளவு—சதவீதத்தில்	
	சிவப்பு மலர்ச் செடியில்	வெள்ளை மலர்ச் செடியில்
இலை	1.24	0.63
தண்டு	0.73	2.24
வேர்	2.00	1.63

ஆகவே சில வகைகளில் வேரிலும், சில வகைகளில் தண்டிலும், இன்னும் சிலவற்றில் இலையிலும் மருந்தின் அளவுகள் அதிகமாக உள்ளன. இது பற்றிய பூரண ஆராய்ச்சி இன்னும் நடந்து கொண்டே இருக்கின்றது.

தற்போது நித்திய கல்யாணியிலிருந்து எழுபத்தைந்து வகை மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முக்கியமான சில கீழே தரப்பட்டுள்ளன.

1. அஜ்மாலிசின் Ajmalicine
2. அல்ஸ்டோனின் Alstonine
3. காஇவின்சின் Canvincine
4. சதரான்தின் Catharanthine



நாற்று ஒன்றின் வேர்ப் பகுதி



வெட்டுத் தண்டில் உருவாகிய வேர்ப் பகுதி

இடது : ஒரு நாற்றுச் செடி

வலது : தண்டுத் துண்டிலிருந்து சோதனைக் கென உருவாக்கப் பட்ட ஒரு செடி

5. கவின்சின் Cavincine
6. காதரின் Catharine
7. ஐசோலூரோசின் Isoleurosine
8. லூரோசின் Leurosine
9. லூரோசிவின் Leurosevine
10. லிக்நெரிநின் Lichndrinine
11. லாக்நெரின் Lochnerine
12. லாக்நெரிசின் Lochnericine
13. லாக்நெரிடின் Lochneridine
14. லாக்நெரிவின் Lochnerivine
15. மிட்ராபிலின் Mitraphyline
16. பெரிவிடின் Perividine
17. பெரிவின்சின் Perivincine
18. பெரோசின் Perosine
19. புசிலின் Pusiline
20. புசிலிநின் Pusilinine
21. ரிசர்பின் Reserpine
22. சர்பென்டைன் Serpentine
23. சிட்சிரிகின் Sitsirikine
24. டெட்ராஅய்ட்ரோ ஆல்ஸ்டோனின் Tetra hydro alstonine
25. வின்பிளாஸ்டின் Vinblastine
26. வின்கேயின் Vincain



27. வின்கேமிசின் Vincamicine
28. வின்காமின் Vincamine
29. வின்சீன் Vinceine
30. வின்கிரைஸ்டின்Vincristine
31. வின்டாலின் Vindaline
32. வின்டோலிசின் Vindolicine
33. வின்டோனின் Vindolinine
34. வினேடிசின் Vinosidine
35. வின்லூரோசின் Vinleurosine
36. வின்ரோசெடின் Vinrosadine

மேலே கூறப்பட்டவற்றை நோக்குங்கால் இச்செடி உயர்ந்த மருந்துகளைத் தன்னகத்தே பெற்றுள்ளது என்பது புலனுகிறது. எனவே, இதைச் சீரிய முறையில் நாம் பயிரிடுவதுடன் மேற்கொண்டு ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்து இதன் முழுப்பயனையும் பெறப் பாடுபடுவோமாக!

க. நஞ்சன்,

டாக்டர் கி. ம. ப. நம்பீசன், தா. பாலஸ்,

தே. வீரராகவ தாத்தம், ப. ம. கிருட்டிணன்

வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம்,

மதுரை.



அதிர்ஷ்டம் உங்களுக்காக காத்திருக்கிறது!

வாங்கிடுவீர்

தமிழ்நாடு பரிசுச் சீட்டு

ஒவ்வொரு வரிசையிலும் 2 முதல் பரிசுகள்

ரூ. 50,000 வீதம்

குலுக்கல் நாள் 20-10-78

ஒவ்வொரு வரிசையிலும் 3 இரண்டாவது பரிசுகள் ரூ. 10,000 வீதம்

ஒவ்வொரு வரிசையிலும் 5 மூன்றாவது பரிசுகள் ரூ. 5,000 வீதம்

மொத்தப் பரிசுத் தொகை ரூ.11,70,000

மொத்தப் பரிசுகள் 7965

மொத்தம் 3 வரிசைகள் CE, CF, CG.

பரிசுச் சீட்டின் விலை ரூ. 1/- மட்டும்

வெளியீடு:

இயக்குநர்,

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்

அரசினர் தோட்டம், சென்னை-600 002.

குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு பயிர்களுக்குத் தேவை

விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.

ஏரியா மானேஜர்

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY MADRAS FERTILIZERS

MFL-1517

வறுமையை நீக்கி வளமையை நிறைக்க வழி வகுப்போம்!

மேன்மை தங்கிய சட்டமன்ற உறுப்பினர்களே!

சட்டமன்றத்தின் இணைந்த கூட்டத்திற்கு வந்துள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும், ஏற்படும் பொருளாதார வளர்ச்சி சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களுக்கு மற்றவர்களை விட அதிகமாகப் போய்ச் சேர்ந்து அதன் விளைவாக வறுமை ஒழிப்பும், ஏற்றத் தாழ்வுகளின் குறைப்பும் ஏற்பட வேண்டும் என்பதும், இத்தகைய முயற்சிகள் மக்கள் அனைவரின் அடிப்படைச் சுதந்தரங்கள் குன்றாத வகையில் அமைய வேண்டுமென்பதும் நமது அடிப்படை இலட்சியமாகும்.

எழுத்துச் சுதந்தரம், பேச்சுச் சுதந்தரம் நாட்டு மக்கள் அனைவருக்கும் கிட்டியுள்ளது. இவற்றை அனுபவிக்கும்போது பிறருக்கு ஊறு நேரா வண்ணம், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையில், ஒவ்வொருவரும் செயல்படவேண்டுமென்பதை நாம் அனைவரும் மறந்துவிடலாகாது. அவ்வாறு ஒருவருக்கொருவர் இணைந்து வாழும் முறையிலேயே, ஒருவருக்கொருவர் உதவும் வழியிலேயேதான் பொருளாதார சுதந்தரத்தை அடைவதற்கு நம்மால் முடியும். பொருளாதாரச் சுதந்தரத்தை ஒவ்வொருவரும் பெற, சுவைக்க, பல்வேறு முயற்சிகளில் தமிழக அரசு ஈடுபட்டு, திட்டங்கள் பலவற்றை, அதிலும் குறிப்பாக சமுதாயத்தில் பிற்பட்டோர், கிராமப் பகுதி வாழ் மக்கள் ஆகியோர்களுக்குப் பயனளிக்கும் வகையில் செயல்படுத்தி வருகின்றது. இத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்குச் சமுதாய வாழ்வில் ஒழுங்கும், கட்டுப்பாடும், அமைதிச் சூழலும் உருவாக்க அனைவரும் பாடுபடுவது இன்றியமையாததாகும்.

சென்ற ஆண்டு விவசாய விளைபொருள் உற்பத்தியில், நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு போன்ற பல்வேறு விளைபொருள்களிலும் உயர்ந்த உற்பத்திச் சாதனைகளை நமது மாநிலம் எய்தியுள்ளது. விவசாய இடுபொருள்களைத் தக்க தருணத்தில் அளிப்பதன் மூலமும், நம்மிடம் உள்ள நீர் ஆதாரங்களை நன்கு பயன்படுத்துவதன் மூலமும், விரிவாக்கப் பணிகளைச் செம்மையாக நடத்துவதன் மூலமும், இந்த ஆண்டு இம்முயற்சியில் தொடர்ந்து இன்னும் அதிக உற்பத்தி அளவுகளை அடைவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. சென்ற ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் விற்பனைக்கான தனி இயக்குநரகம் ஒன்று உருவாக்கப்பட்டது.

மாவட்டங்களிலுள்ள பல்வேறு வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் உறுப்பினர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பதவிக் காலம் முடிவுற்றபோதும் மறு தேர்தல்கள் நடத்தப்படாததால், தொடர்ந்து பதவி வகித்து வந்தார்கள். விற்பனைக் குழுக்களின் நிர்வாகத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாலும், உறுப்பினர்கள் போதுமான அளவு அக்கறை எடுத்துக் கொள்ளாததாலும், வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தை விரிவாகத் திருத்தும் வரை காத்திராமல், குழுக்களைக் கலைத்துவிட்டு அவசரச் சட்டமொன்று பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பதிலாகச் சட்ட வரைவு

நமது மாநிலத்தில் உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருந்து வருகிறது. உணவுப் பொருட்கள் வெளிச் சந்தையில் நியாயமான விலையில் எளிதாகக் கிடைக்கின்றன. வரும் குறுவைப் பயிரும் நன்கு அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அடுத்த ஓர் ஆண்டில் பொது விநியோகத்திற்குத் தேவைப்படும் அளவு அரிசியை அரசு கையிருப்பாகவும் வைத்திருக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் இந்த அளவு திருப்திகரமான உணவு நிலைமை இருந்ததில்லை என்று கூறுவது மிகையாகாது. அரசு எடுத்து வந்துள்ள விழிப்பான நடவடிக்கைகளின் விளைவாகத் தேவையான பண்டங்களின் விலைகள் பொதுவாகக் கட்டுக்குள்ளேயே இருந்து வருகின்றன. ஒரு ஆண்டுக்கு முன் கடலை எண்ணெய் விலை பெரிதும் உயர்ந்திருந்தது; அது தற்போது கட்டுக்குள் இருந்து வருகிறது. நல்லெண்ணெய் விலை கடந்த சில மாதங்களாக வெகுவாகக் குறைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளைவிட இந்த ஆண்டில் வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலையும் குறைந்துள்ளது.

விவசாய விளைபொருட்களை நன்கு உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வண்ணம், அவைகளுக்கு நியாயமான விலை கொடுப்பதன் அவசியத்தை அரசு உணரத் தவறவில்லை. முக்கியமாக, நெல் விநியோகிப்போருக்கு நியாயமான அடிப்படையில் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசு மத்திய அரசுடன் பல முறை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. அண்மையில் கூட்டப்பட்ட தென் மாநில முதலமைச்சர்களின் மாநாட்டிலும், நெல்லுக்கு நியாயமான விலை கொடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. அரசு, இதனடிப்படையில் நெல் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வண்ணம், நெல் நடமாட்டத்தின் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி விட்டது. வரும் குறுவைப் பருவத்திலும் இது தொடர வேண்டும் என்பதே இந்த அரசின் கொள்கையாகும். மேலும், முதன் முறையாக, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நேரடியாக விவசாயிகளிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல்லை விலைக்கு வாங்கி வருகின்றது. இதன் விளைவாக உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிட்டுமென்று அரசு நம்புகின்றது.

சென்ற எனது உரையின்போது, தமிழ்நாட்டில் அப்போது ஏறக்குறைய 9,300 நியாயவிலைக் கடைகள் இருந்தன என்றும், அந்த வசதியை மேலும் விரிவாக்கி தமிழ்நாட்டின் 16,000 ரெவின்யூ கிராமங்கள் ஒவ்வொன்றிலும் நியாயவிலைக் கடைகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவித்திருந்தேன். ஒன்பது ஆயிரத்திற்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகளில் இதுவரை நான்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட கடைகள், பல பொருள்களையும் விற்கும் கடைகளாக இத்திட்டத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளன. மேலும், சுமார் 1,500 புதிய கடைகள் கூட்டுறவுகளின் மூலமும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமும் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் திறக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின் வாயிலாக திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் பல பொருள்களையும் விற்கும் நியாய விலைக் கடைகள் செயல்படத் துவங்கி விட்டன.

அடுத்த கட்டமாக சேலம், தர்மபுரி, கோவை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் 2,000க்கு மேற்பட்ட கூட்டுறவுக் கடைகள் பல்பொருள் விற்பனை நியாயவிலைக் கடைகளாக மாற்றப்படுவதோடு, 2,500க்கு மேற்பட்ட புதிய கடைகளைத் திறப்பதற்கென நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய பால் வள நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கி வருகின்றது. இந்த ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிய பின், மொத்தம் பத்து இலட்சம் உறுப்பினர்கள் கொண்ட 4,600 பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படும். இப்போதுள்ள பால் சேகரிக்கும் அளவு, இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின் மூன்று மடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக கிராமப்புறங்களில் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, தொடர்ந்து கிராம மக்களுக்கு, அதிலும் குறிப்பாக ஏழை விவசாயிகளுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும், அதிக வருமானம் அதன் மூலம் கிடைக்கும். பால் உற்பத்தியுடன் இணைந்த பொருள்களான பால் பொடி, வெண்ணெய் போன்ற பிற பொருள்கள் உற்பத்தி செய்வதற்கும் இதன்கீழ் வழி செய்யப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டவையில் மேதகு ஆளுநர் உரை

மழை வளம் காப்பதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான பல மூலப் பொருட்களை அளிப்பதற்கும் காடுகள் ஆதாரமாக விளங்குகின்றன. எனவே, காட்டு வளத்தைப் பெருக்குவதிலும், அதனைப் பாதுகாப்பதிலும், அரசு பல நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொண்டுள்ளது. கடலோரப் பகுதிகளில் காற்றுத் தடுப்பாக, காடுகள் வளர்ப்பதற்கான புதிய திட்டம் ஒன்று மொத்தம் மூன்று கோடி ரூபாய்ச் செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 26 இலட்சம் ரூபாய் செலவில், 1,500 எக்டேரில் காடுகள் வளர்க்கப்படும்.

மூலப் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்யும் இடங்களாகக் கிராமங்களும், அவற்றிலிருந்து மற்றப் பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களாக நகரங்களும் இருக்கும் நிலை மாறினாலொழிய, கிராமங்கள் வளர்ச்சியடைய வழியில்லை; வேலை வாய்ப்புகள் பெருமளவில் பெருகுவதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும். எனவே, வேலை வாய்ப்புகள் பெருகுவதற்கேற்ற வண்ணம், கிராமத் தொழில்களை உருவாக்க முயற்சிகள் செய்ய வேண்டும். அதற்கேற்ற முதலீடுகள் கிராமப் பகுதிகளில் நடைபெற ஊக்குவிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசு பயன்படுத்தும் பொருட்களைக் கிராமத் தொழில்கள் செய்ய ஊக்குவிப்பதுடன், அர

நான் திராவிடர் சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்கொண்டு அதே பணியாய் இருப்பவன்.

கும், அரசு நிறுவனங்களும் அவற்றை வாங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நோக்கத்திற்கு உதவும் வகையில், சிறப்பான திட்டங்கள் பலவற்றைக் கதர்-கிராமத் தொழில் வாரியம் ஆர்வமுடன் செயல்படுத்தி வருகின்றது. இம்முயற்சிகளின் விளைவாக இந்த ஆண்டில் 30,000 பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாகுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கிராமத் தொழில் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்துவதற்கு வகை செய்யும் பொருட்டு, கதர்-கிராமத் தொழில் வாரியத்தை இரண்டாக விரிவாக்கி, கதர் உற்பத்தியைக் கவனிப்பதற்கு ஒரு அமைப்பும், கிராமத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு மற்றொரு அமைப்பும் உருவாக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. மத்திய கதர்-கிராம ஆணைக் குழுவின் அனுமதி பெற்று, இந்தப் புதிய அமைப்புகளைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் பட்டு நெசவுத் தொழில் மிகவும் தொன்மையானது. இதற்கு வேண்டிய பட்டு நூலை, வெளி மாநிலங்களிலிருந்தே பெரும்பாலும் நாம் பெற்று வருகின்றோம். அண்மைக் காலத்தில் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக, மலைப்பாங்கான பகுதிகள் மட்டுமன்றி, சமவெளிகளிலும் பட்டுப் புழு வளர்ப்பதை நல்ல முறையில் நடத்த முடியும் என்று கண்டறிந்துள்ளோம். இதனடிப்படையில், பட்டுப் புழு வளர்ப்பதற்கும், பட்டு நூல் எடுப்பதற்குமான சிறப்பான முயற்சிகளை அரசு எடுத்து வருகின்றது. கடந்த ஓராண்டில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக, சுமார் 20,000 பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்பட்டுள்ளன வென்று கணக்கிடப்படுகிறது.

50,000 மக்கள் தொகைக்கு மேற்படாத ஊர்களில், கருவிகள், இயந்திரங்கள் இவற்றின்மீது ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத முதலீடு உடைய சின்னஞ் சிறு தொழில்களுக்கு உதவும் பொருட்டு, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், இந்த நிதி ஆண்டு முடிவுக்குள் மொத்தம் 900 சிறு தொழிற்கூடங்களை அமைப்பதென்று முடிவு செய்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இந்தத் தொழிற்கூடங்கள் சிறு தொழில்கள் நடத்துபவர்களுக்கு தவணைக் கொள்முதல் முறையில் விற்கப்படும். இவ்வாறு கிராமக் கைத்தொழில்கள், பட்டுத் தொழில், சிறு தொழில்கள், சின்னஞ் சிறு தொழில்கள் ஆகிய துறைகளில் எடுக்கப்படும் பரவலான முயற்சிகளின் விளைவாக ஓராண்டுக் காலத்தில் மொத்தம் ஒரு இலட்சம் பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு உருவாக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நிதி ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் பலனாகச் சுமார் 25,000 பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சென்ற ஆண்டு வரை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில், பெரிய தொழில்களுக்கு மட்டுமே வட்டியில்லாக் கடனாக, விற்பனை வரி, சில விதிகளுக்கு உட்பட்டுத் திருப்பித் தரப்பட்டு வந்தது. இத்திட்டம், இப்போது சிறு தொழில்களும் பயனடையும் வண்ணம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, மாநிலம் முழுவதிலும், பெருநகர வளர்ச்சிப் பகுதிகள் நீங்கலாக, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள பகுதிகளில் சிறு தொழில்களை அமைப்பவர்களுக்கு, விற்பனை வரிக் கடன்கள் வழங்கப்படும். இதன் மூலம் சிற்றூர்களிலும், கிராமங்களிலும், சிறு தொழில்களைத் தொடங்கப் பலருக்கும் ஊக்கம் பிறக்கும் என்று அரசு கருதுகிறது. கிராமத் தொழில், சிறு தொழில் வளர்ச்சிக்குச் சிறப்புக் கவனம் செலுத்தும் அதே நேரத்தில், சிமெண்ட், இரசாயனப் பொருட்கள் போன்ற அடிப்படையான பெருந்தொழில்களை நிறுவுவதிலும் அரசு தொடர்ந்து நாட்டம் செலுத்தி வரும்.

கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில், பத்துச் சதவீதம் நிகர வருவாய் வரும் இலாபகரமான மின் இணைப்புகளையே கொடுப்பது என்ற கொள்கையின் அடிப்படையில், மின் இணைப்புக் கொடுப்பது, இலாபகரமானதென்றோ அல்லது இல்லையென்றோ முடிவெடுப்பதில் சிரமங்கள் இருப்பது அரசுக்குத் தெரிய வந்தது. எனவே, இனிமேல் இதை விட்டுவிட்டு, மின் இணைப்புக் கொடுப்பதற்கு விண்ணப்பம் கொடுத்த தேதியை அடிப்படையாகக் கொண்டு, முதலில் விண்ணப்பம் கொடுத்தவருக்கு முன்னதாகவும், பின்னால் விண்ணப்பம் கொடுத்தவருக்கு அதன் பின்னதாகவும், வரிசைக் கிரமப்படி மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு, அண்மையில், மின் உற்பத்தி மீது முதல் முறையாக ஆயத் தீர்வை விதித்துள்ளது. மின்சாரம் உற்பத்தி செய்து வழங்குவதில் மின் வாரியங்கள் இலாபம் ஈட்டுவதில்லை என்பதை எடுத்துக் காட்டி, இந்த ஆயத் தீர்வை விதிப்பதைக் கைவிட வேண்டுமென்று நமது அரசு பலமுறை வலியுறுத்தியுள்ளது. பிற மாநில அரசுகளும் இவ்வாறே வலியுறுத்தின. எனினும் மத்திய அரசு, ஆயத் தீர்வை விதிக்கும் முடிவினை மாற்றாது, உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின்மீது ஆயத் தீர்வை விதித்துள்ளது. இதனை மத்திய அரசுக்குச் செலுத்தும் வகையில், சிறப்புக் கட்டணம் ஒன்றை விதிப்பதற்கான சட்ட வரைவு ஒன்று, அவையின் ஒப்புதலுக்காக இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

உலக வங்கி ஒத்துழைப்புடன், 147 கோடி ரூபாய்ச் செலவில், தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளும், பேரூராட்சிகளும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறுவதற்கும், கழிவு நீரகற்று வசதிகள் பெறுவதற்குமான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் வாழும் 75 இலட்சம் பேர், பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் பெற்றுப் பயனடைவார்கள்; 12 இலட்சம் பேர், புதைச் சாக்கடைத் திட்டத்தின் மூலம் கழிவு நீரகற்றும் வசதி பெறுவர்.

மராட்டிய, கர்நாடக, ஆந்திர மாநிலங்கள் மனமுவந்து சென்னைக்குத் தர இருக்கும் 15,000 மில்லியன் கன அடி நீரில், முன்னதாக விரைந்து தனது பங்கான 5,000 மில்லியன் கன அடி நீரைக் கொடுப்பதன் பொருட்டு, தொழில் நுட்ப ஆய்வு செய்ய ஒப்புக் கொண்டதற்கு ஆந்திர மாநில அரசையும், ஆந்திர முதலமைச்சரையும் பாராட்டுவது எனது கடமையாகும். கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான ஆய்வு வேலைகள், விரைவாக, ஆந்திர மாநிலப் பகுதியிலும், தமிழ்நாட்டின் பகுதியிலும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. குடியரசுத் தலைவர் ஆட்சியின்போதும், அதற்கு முன் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட அரசும் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, காவிரி நீர்ப் பங்கீடு பற்றி இந்த அரசும் முனைப்பாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றது.

அண்டை மாநிலங்களுடன் நடந்து வரும் இப்பேச்சு வார்த்தைகளின்போது, பொது நன்மையை அடிப்படையாகக் கொண்டும், எந்த மாநிலத்திற்கும் பாதகம் ஏற்படாத வகையில் நல்ல தீர்வு காண வேண்டுமென்றும், தமிழ்நாட்டில் காவிரியின்கீழ்ப் பயிரிடப்படும் பரப்பளவு எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையில் முடிவுகள் இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலும், பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. மேலும், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில், தேவைக்கு மேல் உபரியான தண்ணீரில், ஒரு பகுதியையேனும் தமிழகத்திற்குப் பெற்று இராமநாதபுரம், நெல்லை, கோவை மாவட்ட வறட்சிப் பகுதிகளுக்கு நீர் கிடைக்கச் செய்ய, அண்டை மாநிலங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகளைப் பெருக்கும் வகையில், ஆரம்பச் சுகாதார நிலையம் ஒவ்வொன்றிலும், தற்போதுள்ள இரண்டு மருத்துவர்களுடன் மேலும், ஒரு மருத்துவரை நியமிக்கும் திட்டத்தின்கீழ் மொத்தம் 230 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 100 நடமாடும் குழுக்களும் இவ்வாண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வரும் தனி நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப்பட்டு சிறு சுகாதார நிலையங்கள், புதிதாக 50 திறப்பதற்கும் அரசு இவ்வாண்டு அனுமதி அளித்துள்ளது. கண்ணொளி காக்கும் திட்டம் ஒன்று, மதுரையை மையமாகக் கொண்டு, இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஐந்து பெரிய மருத்துவமனைகளிலும் 45 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் விரைவில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் இந்த மாவட்டங்களிலுள்ள மக்களின் கண்ணொளி பழுதுபடாமல் பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள், சிறப்பாக மேற்கொள்ளப்படும். உயிர் காக்கும் மருந்துகள், தேவையானவர்களுக்கு முறையாகச் சென்று அடைவதற்கும், அவை தவறான வழியில் வீணாகாமல் தடுப்பதற்கும், புதுமையான பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. மேலும், நாட்டு மருத்துவ முறையை மேம்படச் செய்யவும், சென்னை நகரிலுள்ள பெரிய மருத்துவ மனைகள் இயங்குவதிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து களைவதற்கான அறிவுரைகள் வழங்குவதற்கும், இரண்டு சிறப்பான மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

வெளிநாடுகளிலே, அதிலும் குறிப்பாக மேற்கு ஆசிய நாடுகளிலே, புதிதாக ஏற்பட்டு வரும் வேலைவாய்ப்புகளை, தமிழ்நாட்டில் உள்ளவர்கள் முறையாகப் பயன்படுத்தி பலனடைவதற்கு வழி செய்யும் வகையில், அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் (Overseas Employment Corporation) ஒன்றை அமைப்பதென்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது. வேலை வாய்ப்பு பற்றிய சரியான விவரங்கள் தரப்பட்டு, வெளிநாடுகளில் சென்று வேலை செய்ய விரும்புவோரின் சிரமங்கள் குறையும் வகையிலும், அவர்கள் ஈட்டும் பணம் தமிழகத்தில் செம்மையாக முதலீடு செய்வதற்கு வழிவகைகள் செய்யவும் இந்த நிறுவனம் பாடுபடும்.

உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேர்தல் நடத்தும் பணியினை, மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்தியதன் மூலம், அரசு துவங்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள், சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கான தேர்தல்களும் விரைவில் நடத்தி முடிக்கப்படும்.

வரவு-செலவுத் திட்டத்தின்போது, 400 உயர்நிலைப் பள்ளிகள் இரண்டு ஆண்டு மேற்படிப்புக்கான மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படும் என்று அரசு அறிவித்திருந்தது. கிராமப்புற மக்களின் நலனில் பெரும் நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு, இத்தகைய மேல்நிலைப் பள்ளிகளை 400-லிருந்து 916 ஆக உயர்த்தி, மேற்படிப்புக்கான வசதிகளை மாநிலம் முழுவதிலும் பரவலாக்கியுள்ளது பெருமைக்குரியதாகும். ஆண்டுத் துவக்கத்தில், பெற்றோர்களுக்கும் கல்வித் துறையைச் சார்ந்த வித்பன்னர்களுக்கும் இருந்த ஐயப்பாடுகள் நீங்கி, இன்று உயர்நிலைக் கல்விக்கு மேற்பட்ட இரண்டு ஆண்டுக்குரிய படிப்பைச் செயல்படுத்துவதில், தமிழக அரசு, மற்ற எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக விளங்குகிறது என மைய அரசு பாராட்டியுள்ளது, நாம் அனைவரும் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

சென்ற எனது உரையின்போது, தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் இவற்றை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டு இருந்தேன். வறுமையில் வாடும் தமிழ் அறிஞர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பது, காசி பல்கலைக் கழகம், விஸ்வபாரதி பல்கலைக் கழகம், குஜராத்திலுள்ள சர்தார் படேல்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் நமது நாட்டில் தோன்றிய சீர்திருத்தக்காரர்களின் உழைப்புகள் பலன் தராததற்குக் காரணம், விட்டுக் கொடுக்கும் தன்மையும் தாட்சண்யமும் ராஜதந்திரச் செய்கையும் தான்.

பல்கலைக் கழகம், ஆக்ரா பல்கலைக் கழகம் முதலிய பல பல்கலைக் கழகங்களுக்குத் தமிழ் பயிற்றுவிப்பதற்கான மானிய உதவிகள் தருவ தன் மூலமும், கிடைத்தற்கரிய சுவடிகளைத் திரட்டுவதன் மூலமும், தமிழ்க் கவிஞர் ஒரு வரை அரசவைக் கவிஞராக நியமிப்பதன் வாயிலாகவும் இந்த அரசு தமிழ் மொழி வளர்க்கும் பணிகளிலும் ஆர்வமுடன் ஈடு பட்டு வருகின்றது. மேலும், பிற நாட்டு நல்லறிஞர் எழுதிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும், அவ்வாறே தமிழ் இலக்கியங் களை மற்ற மொழிகளில் மொழி பெயர்க்கவும் அரசு சிறப்பு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. சட்ட மொழி பெயர்ப்புக் குழுவின் காலத்தை நீட்டித்து, சட்டங்களை மொழி பெயர்க்கும் பணியும் சிறப்பாக நடைபெற நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய அறிஞர்கள் ஆழ்ந்து சிந்தித்து, பல நாள் விவாதித்து ஒரு மனதாக, மாநில அரசுகளின் பொறுப்பின் கீழ் கல்வி இருக்கும் வண்ணம், அரசியல் சட் டத்தை இயற்றினார்கள். அந்நிலை, இடை யிலே மாற்றப்பட்டது. மீண்டும் 'கல்வி' மாநிலங்களின் பொறுப்பில் வரவேண்டு மென்ற இந்த அரசின் உறுதியான கருத்தைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை, மத்திய அரசு மேற்கொண்டுள்ளதைப் பாராட்ட விரும்புகிறேன்.

உனக்குப் பெருமை வேண்டுமானாலும் உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனித னுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக் கொள்.

மொழி, மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ள அடிப்படை உணர் வாகும். எனவே, மொழிக் கொள்கை மிகவும் கவனத்துடன் அணுக வேண்டிய ஒன்றாகும். தமிழகத்தின்மீது மொழித் திணிப்பு எந்த வகையில், உருவில், வழியில் வந்தாலும் சரி, அதனை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அது விபரீத விளைவுகளை ஏற்படுத்துமென்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முதல்வர், தென் மாநில முதலமைச் சர்களின் மாநாட்டைக் கூட்டி, தொடர் புடைய, முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விவாதித்திருப்பது வரவேற்பிற்கும் பாராட் டிற்கும் உரிய ஒன்றாகும். இந்த மாநாட்டில் முதலமைச்சர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, சில மத்திய அமைச்சரகங்கள் பிரதமரது உறுதிமொழிக்கு மாறாக, இந்தியைத் திணிப் பதை எடுத்துக் காட்டி, பிரதமர் இதனைத் தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்ட னர். அதன் பின்னர், நமது பிரதமர், நாடாளுமன்றத்தில் யார் மீதும் மொழித் திணிப்பு இருக்காதென்றும் மொழி பற்றிய கொள்கையினைச் செயல்படுத்தும்போது,

வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஊறு ஏதும் நேரிடாத வகையில் செயல்படுவோம் என்றும் அண்மையில் கூறியுள்ளதை இந்த அவைக்குக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

எனினும், பிரதமரின் வாக்குறுதிகளை மறு தலிக்கும் வகையில், மைய அரசின் சில அமைச் சரகங்கள் தொடர்ந்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. சென்ற ஆண்டில் நான் குறிப்பிட்டது போல, தமிழக அரசு இரு மொழிக் கொள்கையைச் செயல்படுத்துவதில் தொடர்ந்து உறுதியான நம்பிக்கை கொண் டுள்ளது. அண்மையில், நாட்டின் கல்விக் கொள்கைப் பற்றி பல்வேறு மாநிலங்களின் கருத்தை ஆராயும் நேரத்தில், இருமொழிக் கொள்கையின்பால் நமக்குள்ள உறுதிப் பாட்டை அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நமது அனைவரின் மதிப்பிற்கும், மரி யாதைக்கும் உரிய, விடுதலைப் போராட்டத் தில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்தி, தியாகத்தின், நாட்டுப் பற்றின் இலக்கண மாகத் திகழ்ந்த, மறைந்த தலைவர் காமராசர் அவர்களின் நினைவாக, மதுரையில் உள்ள பல்கலைக் கழகத்திற்கு அவரது பெயரிடப் பட்டு இருப்பதை மன்ற உறுப்பினர்கள் அனை வரும் வரவேற்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

சாதி, சமய வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கிட, சமதர்மக் கோட்பாடுகள் மக்களி டையே மலர்ந்து மணப்பரப்பிட கடுமையாகப் பணியாற்றி, தமிழ்நாட்டு மக்களின் அன்புக் கும், நம்பிக்கைக்கும் உரியவராக வாழ்ந்த பேரறிஞர் அண்ணாவின் பெயர் தாங்கி உருவாக இருக்கும் ''பேரறிஞர் அண்ணா தொழில்—நுட்பவியல் பல்கலைக் கழகம்'' நமது நாட்டின் குடியரசுத் தலைவரால் அடுத்த வாரம் திறக் கப்பட இருக்கிறது என்பதையும் மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு தொழில் நுட்பக் கல்லூரிகளையும், நிறுவனங்களையும் இணைத்து உருவாக்கப்பட்டி ருக்கும் இந்தப் பல்கலைக் கழகம், தொழில் நுட் பக்கல்வியின் தரத்தை உயர்த்துவதோடு, நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், அதன் விளைவாகப் பொருளா தார வளர்ச்சிக்கும் பெருந்துணையாக இயங் கும் என்பதில் ஐயமில்லை. கோவையிலும், திருச்சியிலும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்து வதற்கு அரசு வலியுறுத்தி வருகின்றது. இதற் கான ஒப்புதலை பல்கலைக் கழக ஆணைக்குழு விரைவில் வழங்குமென்று எதிர்பார்க்கப்படு கிறது.

சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக் கின்ற மக்களின் நலன்களையும், தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களின் உரிமை களையும் பாதுகாத்து வளர்ப்பதில் நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு, மூட நம்பிக்கை களைச் சுட்டெரித்து, அறியாமைச் சேற்றில் நெளி புழுக்களாக வாழ்ந்திட்ட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, சமு தாய சீர்திருத்தத்தின் ''விடிவெள்ளி'' எனும் சிறப்பினைப் பெற்று, தனது இறுதி மூச்சிருந்தவரை தொடர்ந்து பணி மேற் கொண்ட பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் நினைவாக, மத்திய அரசு சிறப்பு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண் டது. இதற்கு மத்திய அரசு தனது ஒப்புதலைத் தந்து இருப்பதை மகிழ்ச்சியுடன் பாராட்டு கிறேன்.

அவரது சிறந்த பணியின் காரண மாக, நாட்டின் இந்தப் பகுதியில் சாதி, சமயச் சழக்குகளின்றி, அறிவார்ந்த முறை யிலே அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வதற்கான அமைதிச் சூழ்நிலை உருவாயிற்று என்றால் அது மிகையாகாது. ஆனால், சில சமூக விரோதிகள் ஆங்காங்கே சாதி வேறுபாடுகளைத் தூண்டி விட்டு, ஒன்றுபட்டு வாழும் மக்களிடையே குழப்பத்தையும், உடைமைகளுக்குச் சேதத் தையும், உயிர்களுக்கு ஆபத்தையும் ஏற் படுத்த முயல்வதை எனது அரசு, நடு நிலை நின்று, உறுதியாகக் கண்டிக்கிறது. சமூக விரோதிகள் இவ்வாறு குழப்பம் விளைவிப்ப தைத் தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கை களுக்கு முழு ஒத்துழைப்பையும் மன்ற உறுப் பினர்களனைவரும் தருவீர்கள் என்று நான் உளமார நம்புகிறேன்.

விழுப்புரத்தில் நடந்த துயரச் சம்பவம், நம் அனைவரையும் நடுங்க வைக்கின்ற ஒன்றாகும். அந்த எதிர்பாராத, விரும்பத்தகாத கலவரத்தின் மூலம் படு கொலைக்கு ஆளாகியவர்களுக்காக வருத்தத் தையும் அவர்களை இழந்து வாடும் குடும்பத் தினருக்கு நம் அனைவரின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளு கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை உரு வாக்குகின்றவர்கள் எப்படிப்பட்ட உயர்ந்த பதவிகளில் இருந்தாலும் சரி, எப்படிப்பட்ட வசதியும் செல்வாக்கும் பெற்றவர்களாக இருந்தாலும் சரி, சமூக விரோதத் தீமை களில் ஈடுபடுவார்களானால், தயவு தாட்சண்ய மின்றி, அவர்கள்மீது கடுமையான நட வடிக்கை எடுக்கப்படும். இந்த அரசு எக் காரணத்தைக் கொண்டும் அவர்களை மன்னிக் காது. இந்த துயர நிகழ்ச்சிகளை ஒட்டி துயர் துடைக்கும் முயற்சிகளுக்காக நிதி உதவி தந்த பிரதமர் அவர்களுக்கும், மற்றவர்களுக் கும், தங்களாலான மற்ற உதவி செய்தவர் களுக்கும் இந்த அரசு நன்றி தெரிவித்துப் பாராட்டுகின்றது.

காந்தியடிகள் கனவு கண்டதற்கேற்ப வும், அண்ணா அவர்கள் விழைந்ததற்கொப்ப வும், நமது மாநிலத்தை இலஞ்ச ஊழலற்ற மாநிலமாக உருவாக்க அரசு உறுதி பூண்டுள் ளது. நிர்வாகத்தின் எல்லா மட்டங்களிலும் இத்தீமையைக் களைந்தெறிய அரசு முனைப் பாக நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

அரசின் மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்த எல்லாக் கட்சிகளும் ஒத்து ழைப்பதற்காக நன்றி கூறக் கடமைப்பட்டுள் ளேன். தஞ்சையில் அண்மையில் நடைபெற்ற மதுவிலக்கு மாநாட்டில் அவர்கள் அனைவரும் ஒத்துழைத்ததற்கு நன்றி கூற விரும்புகிறேன். மற்ற இடங்களில் அத்தகைய மாநாடுகள் நடத்த எடுக்கும் முயற்சிகளுக்கு, எல்லோரும் துணை நிற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளு கிறேன். இது அன்றி, சாராவி (De natured Spirit) வைத்திருந்து விற்பதற்கான உரி மரங்கள், அரசு பொது நிறுவனங்கள், கூட்டு றவுகள், தொழில் வணிக இயக்குநர், மத்திய தொழில் வளர்ச்சித் தலைமை இயக்குநர் ஆகி யோரிடம் பதிவு செய்திருப்பவர்களைத் தவிர, மற்ற தனிப்பட்டவர்களுக்கு வழங்குவதைத் தடை செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

நாட்டிலுள்ள நல்லோர் அனைவரும், ஏழை எளிய மக்களின் வாழ்வுக்கு வளம் கூட்டும் மதுவிலக்கினை நன்முறையில் செயல்படுத்த, மதுவிலக்குப் பிரசாரம் உட்பட தங்களாலான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளு கிறேன். அரசின் உயிர்க் கொள்கையான மதுவிலக்கை நிறைவேற்றுவதில், அண்மைக் காலமாக, உண்மையான பொறுப்புணர் வுடன் தங்கள் உயிரையும் துச்சமென மதித்து கடமையாற்றி வருகின்ற காவல் துறை அதி காரிகளை இந்த நேரத்தில் பாராட்ட விரும்பு கிறேன். ஏழை மக்கள் நலம் பயக்கும் மது விலக்குத் திட்டத்தை நிறைவேற்றும்போது, மாநில அரசுக்கு ஏற்படுகின்ற மிகப் பெரிய நிதியிழப்பை ஈடுகட்டுவதற்கான சிறப்பான வழிமுறைகளைக் காண வேண்டும் என்று மத்திய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். அரசியலமைப்புச் சட்டத்தின் நெறி முறைகளைச் செயல்படுத்துவதில் ஆர்வ மும் அக்கறையும் காட்டிய காரணத்தினால், தமிழகமும், குஜராத் மாநிலமும் பெருத்த வருவாயை இழக்க நேரிட்டுள்ளது.

எனவே, இந்த இழப்பின் விளைவாக, வளர்ச்சிப் பணிகளும், நியாயமான செலவினங் களும் குன்றிவிடாதபடி, மத்திய அரசு சிறப்பு நிதிஉதவிக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று

ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கிறானோ அப்படியே எல்லாரிடமும், தான் நடந்து கொள்வதே ஒழுக்கம் ஆகும்.

இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளது. மத்திய அரசு, நமது மாநிலத்தின் பற்றாக்குறை நிதி ஆதாரங்களையும் கொள்கைப் பிடிப்பினையும் கருத்தில் கொண்டு, கணிசமான அளவுக்கு நிச்சயமாக நிதி உதவி வழங்கும் என்று நம்பு கிறேன்; மறுக்கப்படும் நிலை ஏற்படாதென்று எதிர்பார்ப்போம்.

அண்டை மாநிலங்களுடன் தொடர் புள்ள பல பிரச்சினைகளைப் பற்றி, நட்பு உணர் வோடும், ஒருவரையொருவர் புரிந்துகொள் ளும் வகையிலும், அரசு, பல்வேறு கட்டங் களில் பேச்சுவார்த்தை நடத்தி வந்திருப்பது, பாராட்டுதற்குரியதாகும். இதன் மூலம் மாநிலங்களிடையே உள்ள பிரச்னைகள் மட்டு மின்றி, நாட்டின் பொதுவான நன்மைக்குரிய பல்வேறு பிரச்சினைகளிலும் பொது கருத்துக் களை உருவாக்கிச் செயல்படவும் வழி வகை செய்யப்பட்டு இருக்கிறது.

அண்மையில், சென்னையில் முதன் முறையாக நடைபெற்ற தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடும், அதைத் தொடர்ந்து வேறு பல மாநில முதல்வர்கள் கலந்து கொள்ள இருக் கும் முதலமைச்சர்கள் மாநாடும், நாட்டிற்கே வழிகாட்டியாக அமைந்து, நாட்டின் ஒற்றுமைக் கும், மேம்பாட்டிற்கும் ஏற்ற பல கருத்துக் களையும் செயல்முறைகளையும் உருவாக்கும் என நம்புகிறேன். மண்டலக் குழுக்கள் (Zonal Council) கூட்டப்படாமல் இருந்து

[தொடர்ச்சி 28-ஆம் பக்கம்]



குடியரசுத் தலைவரின் தமிழக வருகை!

"இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்துக்கு அண்ணாவின் பெயரை வைத்ததன் மூலம் மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை முதலமைச்சர் கூறாமல் கூறியிருக்கிறார்" என்று சென்னை கிண்டியில் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தைத் திறந்து வைத்து இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம். சஞ்சீவரெட்டி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

இந்தியக் குடியரசுத் தலைவர் செப்டம்பர் திங்களில் தமிழ்நாட்டில் மூன்று நாட்கள் சுற்றுப் பயணம் செய்தார்.

செப்டம்பர் 4-ஆம் நாள் நடந்த பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்துக் குடியரசுத் தலைவர் திரு நீலம், சஞ்சீவரெட்டி அவர்கள் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:

"55 ஆண்டுகளுக்கு முன் இதே வீதியில் ஒரு பள்ளியில் நான் படித்ததை எண்ணிப் பார்க்கிறேன். அப்போது இந்தப் பொறியியல் கல்லூரி மட்டுமே இருந்தது.

"இப்போது பல விதங்களில் மாற்றம் ஏற்பட்டு உள்ளது. ராஜாஜி, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், பிரகாசம், காமராஜ், அண்ணா போன்றவர்கள் தென்னாட்டுக்குக் கிடைத்த அரும் பெரும் தலைவர்கள்.

"அண்ணா அவர்களின் தாரக மந்திரமான கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு ஆகியவைகளின் வழியில் மாணவர்களாகிய நீங்கள் செயல்பட வேண்டும்.

"மாணவர்களாகிய நீங்கள் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும். நேரத்தை வீணடிக்கக்கூடாது."

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்த நாட்டின் எதிர்காலம் இளைஞர்களாகிய உங்களைப் போன்றவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பொறுப்புடன் நீங்கள் நடக்க வேண்டியவர்கள் என்பதை எப்பொழுதும் மறந்துவிடக்கூடாது.

"உங்களுடைய எண்ணங்கள், வேறு எங்கோ இழுத்துச் செல்லப்படுவதற்கு நீங்கள் அனுமதிக்கக்கூடாது. குறிப்பாக எந்த அரசியல் பிரச்சினைகளுக்கும் இடம் கொடுக்காதீர்கள். அரசியல் கட்சிகள் உங்களிடையே தலையிட்டு, அவர்களுக்கு நீங்கள் அடிமையாகக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி விடாதீர்கள்.

"அரசியல்வாதிகளை, உங்களுக்குச் சாதகமாக, உங்கள் தன்மைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமேயன்றி அவர்களுடைய இச்சைகளுக்கு உங்களை நீங்களே பலியிட்டுக் கொள்ளக்கூடாது.

"திறமை வாய்ந்த, ஆசிரியர்கள், பேரறிஞர்கள் நுண்ணறிவாளர்களைப் பின்பற்றிக் கல்வி கற்பதில் அக்கறை செலுத்திட வேண்டுமென்று மிகவும் பரிவுடன் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

" 2000 ஆண்டுகளாக வளராமல் இருந்த விஞ்ஞானம்-அறிவாற்றல்-20 ஆண்டுகளில் வளர்ந்துள்ளது என்பதை நினைத்துப் பெருமிதம் அடையும்போது, அதற்காக உழைத்த அறிஞர்களை நினைத்துப் பார்த்து, அவர்கள் சென்ற வழியில் தமது கடமையைத் தொடர மாணவர்களாகிய நீங்கள் முன்வர வேண்டும்.

"விஞ்ஞானத் துறையில் வழிகாட்டிகளாக இருந்த முன்னோர்களின் கருத்துக்களை உறுதுணையாகக் கொண்டு எதிர்கால மக்களின் வாழ்வு வளம்பெற இளைஞர்கள் பாடுபட வேண்டும்.

"நீங்கள் எந்தெந்தச் சூழ்நிலையில் கல்வி கற்க நேர்ந்தாலும் கல்வி கற்றுத்தரும் ஆசிரியர்களை மதித்து, அவர்களுடன் நீங்களும் ஒத்துழைக்க வேண்டும்-ஆசிரியர்கள் அனைவரையும் போற்றி, மதித்து நடக்க வேண்டும்.

"பேரறிஞர் அண்ணா அவர்கள் மறுமலர்ச்சி சமுதாயத்தில் [illegible] காண வேண்டும் என்பதற்காக வாழ்நாள் [illegible] ம் அயராது பாடுபட்டார். [illegible] ரது பெயரால் அமைந்துள்ள [illegible] கல்லூரியில் படிக்கும் [illegible] கள் அண்ணாவின் கொள்ளை [illegible] —அறிவுரைகளைக் கடை [illegible] த்து நாட்டு முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும்; உங்களுடைய அறிவும், ஆராய்ச்சித் திறனும் இ[illegible] நாட்டிற்குப் பயன்பட வேண்டும்."

மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.:

"அதிகப்படியான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும்

என்ற கொள்கையைவிட, அதிகப்படியான மக்களால் உபயோகிக்கப்படக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் கொள்கையே அதிகமான மக்களைக் கொண்ட இந்தியாவுக்கு ஏற்றது என்ற மகாத்மா காந்தியின் கொள்கையை மனத்திற்கொண்டு அதற்கேற்றாற்போல் மாணவர்களுக்குப் பயிற்சி தரும் முயற்சியில் தொழில் நுட்பக் கழகங்கள் செயல்பட வேண்டும்.''

விழாவில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், ''தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் நிர்வாகத் தலைமைப் பீடங்களாக மட்டும் இருக்காமல் அறிவுத்துறையின் தலைமையிடமாகவும் செயல்பட்டு வருகிறது எனக் கூறினார். ''பல புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கிட, தக்க பயிற்சி அளித்திடும் நிலையாகப் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் விளங்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில் அமைச்சர்கள், மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள், மத்திய அரசு கல்வித் துறைச் செயலாளர் திரு பி. சபாநாயகம் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள். சென்னைப் பல்கலைக் கழகப் புதிய துணை வேந்தராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு ஜி. ஆர். தாமோதரன் அவர்கள், சென்னை நகர ஷெரீப் திரு சையத் யூசுப் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு பி. சிவலிங்கம் அவர்கள், புதிய பல்கலைக் கழகம் குறித்த அறிக்கையைப் படித்தார். விழாவில் கலந்து கொண்டவர்களை அரசு கல்விச் செயலாளர் திரு. சி. ஜி. ரங்கபாஷ்யம் அவர்கள் வரவேற்றார்கள்.

பாலமந்திர் சிறுவர் அனாதை விடுதி

சென்னை தேனாம்பேட்டையிலுள்ள பாலமந்திர் அனாதைச் சிறுவர் விடுதி, அதன் சார்பு நிலையங்களான கல்விக் கூடங்களை பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் நினைவாகக் காணிக்கையாக்கும் விழா செப்டம்பர் 4-ஆம் நாள் சிறப்பாக நடந்தது.

இவ்விழாவில் கலந்துகொண்ட குடியரசுத் தலைவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''காமராஜ் மெத்தப் படித்த மேதையோ, பணக்காரரோ அல்ல. அப்படியிருந்தும் அவரை மக்கள் நினைவில் வைத்துக் கொள்வதற்கு அரவது உண்மையான பணியும் நேர்மை, நாணயம் ஆகியவைகளும்தான் காரணமாகும்.

ஒரு சாதாரணக் குடிமகனும் நாட்டுக்குச் சேவை செய்ய முடியும் என்பதை இந்திய ஜனநாயகம் நிரூபித்துள்ளது. காமராஜ் ஏழைகள் யாராக இருந்தாலும் நேசித்தார். அவர்களுக்கு உதவ வேண்டும் என்று விரும்பினார். அவர் திருமணமாகாதவர்தான். ஆயினும் ஏழைக் குழந்தைகளை அவர் மிகவும் நேசித்தார்.

''ஜாதி மத அடிப்படையில் அந்த நேசத்தை அவர் வைத்துக் கொண்டதில்லை. ஜாதிப் பாகுபாடு நாட்டுக்கு ஆபத்து என்று அவர் சொல்லுவார். ஆனால் இன்று நாட்டில் என்ன நடைபெறுகிறது?

ஏழைகளின் வாழ்க்கையைக் கவனிக்காமல் போனால் அமைதி ஏற்படுமா?

நாம் உதவி செய்யும்போது ஜாதிப் பிரிவை மட்டும் கவனித்தால் போதுமா? ஏழைகள் யாரோ, தேவை யாருக்கோ, அவர்களுக்கு உதவிகள் கிடைக்க வேண்டும். இது காமராஜரின் விருப்பமாகும்.''

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 'பாலமந்திர்' தொடக்கப் பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

''குழந்தைகள் தொடக்கத்தில் எப்படி வளர்க்கப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அவர்கள் வாழ்வு அமைகிறது. அந்தக் குழந்தைகளின் வளர்ச்சியிலிருந்துதான் நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது.

''தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பண்பட்டவர்களாக வெளிவர வேண்டும். இந்த அமைப்புகள் நிம்மதியாக இயங்க-நிலைமை, சூழ்நிலை சிறப்பாக அமைய எண்ணுவது எங்களது சிறப்பான கடமை ஆகும்.

''தமிழக அரசு பாலமந்திருக்குக் கடனாகக் கொடுத்த ரூ. 2 இலட்சம், மானியமாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அமைப்பு, யாரிடமும் கையேந்தாமல் இருக்குமளவிற்கு தமிழக அரசு பார்த்துக் கொள்ளும்.

''எத்தனை கோடி ரூபாய் கல்விக்குச் செலவழித்தாலும் அது நமது சமுதாயத்திற்குச் செய்யும் தொண்டு.''

மத்திய மின்துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் ஜி. ராஜகோபாலன் நினைவு திறந்தவெளி அரங்கத்தையும், நூல் நிலையத்தையும் திறந்து வைத்துப் பேசினார்.

மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கி பாலமந்திர் சத்தியமூர்த்தி உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசினார்.

இந்து நூற்றாண்டு விழா!

''இந்து'' பத்திரிகையின் நூற்றாண்டு விழா சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் செப்டம்பர் 4-ஆம் நாள் கொண்டாடப்பட்டது. தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமையில், குடியரசுத் தலைவர் இந்த விழாவைத் தொடங்கி வைத்து 'இந்து பத்திரிகையின் நூற்றாண்டு வரலாறு பற்றிய புத்தகத்தை வெளியிட்டார். முதல் பிரதியை முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பெற்றுக் கொண்டார்.

ராஜாஜி நூல் வெளியீட்டுவிழா :

உப்புலூரி காளிதாஸ் ஆங்கிலத்தில் எழுதியுள்ள ராஜாஜி பற்றிய புத்தகத்தின் வெளியீட்டு விழா கிண்டி, ஆளுநர் மாளிகையில் நடந்தது. இந்த விழாவிற்கு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமை தாங்கினார். புத்தகத்தை வெளியிட்டு, குடியரசுத் தலைவர் அவர்கள் பேசுகையில் ''ராஜாஜியுடன் பலமுறை சிறைத் தண்டனை அனுபவித்தவன். சிறைச்சாலையில் இருந்தபோது ராஜாஜியிடம் இருந்து ஏராளமான பாடங்களைக் கற்றுக் கொண்டேன். பள்ளிக்கூடத்திலும், கல்லூரியிலும் பல்கலைக் கழகத்திலும் படிக்க முடியாத வாழ்க்கைக்குத் தேவையான பாடங்களை ராஜாஜியிடமிருந்து அனுபவ பூர்வமாகக் கற்றுக் கொண்டேன்'' என்றார்.

குமாரசாமி ராஜா சிலை திறப்பு விழா!

இராஜபாளையத்தில் முன்னாள் முதல்வர் பி. எஸ். குமாரசாமி ராஜாவின் திருவுருவச் சிலையைக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார். குமாரசாமி ராஜாவின் நினைவாகக் கட்டப்பட்டுள்ள வளைவைத் தமிழக ஆளுநர் அவர்கள் திறந்து வைத்தார். விழாவுக்கு, முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமை தாங்கினார். சிலை திறப்பு விழா மலரை மத்திய மின்துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் வெளியிட்டார்.

'காந்தி கிராமத்தில்'

மதுரை மாவட்டத்தில் இரு நாட்கள் சுற்றுப்பயணம் செய்த குடியரசுத் தலைவர் அவர்கள் காந்தி கிராமத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டார்.

புதிய மருத்துவமனைக் கட்டடத்தைக் குடியரசுத் தலைவர் திறந்து வைத்தார்.

காந்தி கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குப்போய் கிராமங்களுக்குச் சிகிச்சை அளிக்க ஒரு நடமாடும் மருத்துவமனை வேண்டும். காந்தி கிராமத்திற்கு சிகிச்சைக்கு வரும் புறநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப் புதிய கட்டடம் அமைத்துத் தரவேண்டும் என்று கோரிக்கைகள் விடப்பட்டன.

''இந்த இரு கோரிக்கைகளையும் தமிழக அரசு உடனடியாக நிறைவேற்றி வைக்கும்'' என்று விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சவுந்தரராசன் அவர்கள் அறிவித்தார். முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களின் அனுமதி பெற்று இதனை அறிவிப்பதாகவும் அவர் கூறினார்.

கோரிக்கைகளை உடனடியாக முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்ட முறை குறித்துக் குடியரசுத் தலைவர் அவர்கள் தனது உரையின்போது மிகவும் பாராட்டினார்:—

''சில கோரிக்கைகள் இங்கு எழுப்பப்பட்டன. அவைகளில் பெரும்பாலானவற்றை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டதன் மூலம் முதல் மார்க் வாங்கிவிட்டார்.''

விழாவில் முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில், ''எந்த வேறுபாடும் இல்லாமல் தேவைப்படுவது அளிக்கப்பட வேண்டும் என்ற ஜாதிமத பேதமற்ற காந்திஜியின் சமுதாயத்திற்குக் காந்தி கிராமம் ஓர் எடுத்துக்காட்டு'' என்றார்.

விழாவில் மத்திய மின்துறை அமைச்சர் திரு பா. இராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டார்.

மதுரை மாநகராட்சி வரவேற்பு:

மதுரை மாநகர மேயர் திரு. முத்து அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு மாலை அணிவித்தார்.

மதுரை மாநகராட்சிச் சார்பில் குடியரசுத் தலைவர் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு ஒன்றும் அளிக்கப்பட்டது.

[23-ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரும் நிலையில், இவ்வாறு முதலமைச்சர்கள் கூடிப்பேசுவது சாலப் பொருத்தமானதாகும்.

புதிய ஐந்தாண்டுத் திட்டத்தில், வறுமையை ஒழிப்பதும், வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவதும் முக்கிய குறிக்கோள்களாக அமைந்துள்ளன. இவற்றை நிறைவேற்றும் பொறுப்பில், மாநில அரசுகளும், மத்திய அரசும் சமபங்காளிகளாகச் செயல்படுகின்றனவென்றாலும், இப்பணியில் மாநிலங்களின் பொறுப்பே மிகுதியானது. இந்தப் பின்னணியில், மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களை கூடுதலாகத் தரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று, அண்மையில் நடந்த தேசிய வளர்ச்சி மன்றக் குழுவின் கூட்டத்தில் நமது அரசு எடுத்துரைத்துள்ளது. சட்டப்படி மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வருகின்ற மானியங்களை உயர்த்த வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. மேலும், மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள வேளாண்மை, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளின்கீழ், மத்திய அரசு நாடு முழுமைக்குமாக சிறப்புத் திட்டங்கள் பலவற்றை தீட்டி, மாநிலங்கள் அவற்றைச் செயல்படுத்தும் நிலைமாறி, இந்தத் துறைகளில் மத்திய அரசு தீட்டும் திட்டங்கள் மிகக் குறைவாக இருக்க வேண்டுமென்று 1968-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திய கருத்து, மீண்டும் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்திக் கூறப்பட்டது.

மாநிலங்களுக்கு வருவாய் தரக்கூடிய முறையில், மத்திய அரசு வரி விதிக்கக்கூடிய, நிதி தரக்கூடிய பல்வேறு இனங்களின் கீழும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் எல்லா மாநிலங்களும் எடுத்துக் காட்டியுள்ளன. இவற்றின் விளைவாக, மாநில அரசுகளுக்கு சட்ட ரீதியான முறையிலும், மற்ற வழிகளிலும் கூடுதல் நிதி ஆதாரங்கள் கிடைப்பதற்கு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாநிலங்கள் வளமான நிதி ஆதாரத்துடன் செயல்படுவதே, நாட்டின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும்; மத்திய அரசையும் மேலும் வலிமையுள்ளதாக அமைக்க உதவும்.

மனிதன் என்பதற்கு அறிகுறி, அறிவு, ஆராய்ச்சி அனுபவத்தால் தன்னால் விளங்கிக் கொள்ள முடியாத எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாதவன் என்பதைத் தான் பொருளாகக் கொள்ள வேண்டும்.

நிர்வாக இயந்திரத்தைச் செம்மைப் படுத்தி, மக்களின் தேவைகளுக்கேற்ற வண்ணம் விரைந்து செயல்படுத்துவதற்கேற்ற வகையில், பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகின்றது. மேலும் அரசு, அலுவலர்கள், தங்கள் குறைகளைத் தக்க முறையில் எடுத்துரைக்க வாய்ப்புக்கள் தரும் வகையில், அரசுச் செயலாளர்கள் மட்டத்திலும், அந்தந்தத் துறைத் தலைவர்கள் மட்டத்திலும், அலுவலர்கள், அதிகாரிகள் அடங்கிய கூட்டுக் குழுக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, அண்மையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், அரசு அலுவலர்கள் பணி புரிவதுபற்றிய பல்வேறு விதிகளை ஆராய்ந்து, சீரமைப்பதற்காகத் தனிக் குழு ஒன்றையும் அரசு நியமித்துள்ளது.

அண்மையில் அளிக்கப்பட்டுள்ள சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளை, அவசர அனுதாப உணர்வுடன், இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. விரைவில் இப்பரிந்துரைகளின் மீதான அரசின் முடிவுகள் வெளியிடப்படும். சென்ற எனது உரையில் குறிப்பிட்டதுபோல, ஏழை எளியவர்களுக்குச் சட்ட சம்பந்தமான உதவிகள் செய்வதற்காக, மாவட்டங்கள் அனைத்திலும் சட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவை நன்கு பணியாற்றத் துவங்கியுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் கூற விரும்புகிறேன். நீதிபதி திரு. இஸ்மாயில் அவர்களின் அறிக்கையை ஒட்டி, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டுள்ள இந்த அரசு, நிச்சயம் முறையான முடிவுகளை எடுக்கத் தவறாது.

சில நாட்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. விவாதத்திற்கு முக்கியமான சட்டப் பணிகள் முன் வைக்கப்பட்டுள்ளன. தனக்கெனத் தனித் தன்மையையும், மரபையும், மங்காப் புகழையும் பெற்றிருக்கின்ற தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள், அவையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பையும், ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். நமது மாநில மக்கள் வளம் பெருகி, மகிழ்வுடன் வாழ்வதற்காக நீங்கள் அனைவரும் மேற்கொள்ளவிருக்கும் முயற்சிகள் வெற்றிபெற உங்களனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வணக்கம்.

[தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவைக் கூட்டத்தில் ஆளுநர் 30—8—1978 அன்று ஆற்றிய உரை].



நாட்டில் மனித சமுதாயத்தில் எத்தனை பேர் நம்புகிற காரியமானாலும் கருத்தானாலும், எத்தனை பேர் நடத்தி வருகிற காரியமானாலும் அவைகளைப் பற்றி எல்லாம் சிந்திக்காமல், அவைகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் ஒவ்வொரு கருத்தையும் தன் பகுத்தறிவைக் கொண்டும் பிரத்தியட்ச அனுபவத்தைக் கொண்டும் சிந்தித்து ஆராய்ந்து தெளிவு பெற்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கலைவாணர் நினைவுநாள் விழா

ஆகஸ்ட் 30-ஆம் நாள்.

தமிழகத்து மக்களைத் திரைப் படத்தின் மூலமாகச் சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்து, சீர் திருத்தக் கருத்துக்களைப் புகுத்திச் சமுதாயப் புரட்சி செய்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் நினைவுநாள்.

இந்த ஆண்டு அவரது நினைவு நாளை இயல், இசை, நாடக மன்றம் சென்னை கலைவாணர் அரங்கில் 30-8-78 அன்று கொண்டாடியது.

விழா, காலை 10 மணிக்குத் தொடக்கம் ஆகியது. திரு சி. எஸ் பாண்டியன் அவர்கள், 'நகைச் சுவைக் கதம்பம்' என்ற தலைப்பில்-கலைவாணர் பாடிய பாடல்களைத் தொகுத்து, விளக்கவுரைகளுடன் நடத்திய நிகழ்ச்சி அனைவரின் பாராட்டையும் பெற்றது.

பின்னர் கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி தொடக்கவுரை நிகழ்த்த, கவிஞர் சுரதா அவர்களின் தலைமையில் 'கவிஞர் நெஞ்சில் கலைவாணர்' என்னும் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் கே. ப. பெருமாள், புத்தனேரி சுப்ரமணியன், நாரண துரைக்கண்ணன். வேழவேந்தன், வானம்பாடி, திருமதி பொன்மணி வைரமுத்து, எஸ். டி. சுந்தரம், அப்துல் ரகுமான் ஆகிய கவிஞர்கள் பங்கேற்றனர்.

பிற்பகல் 6 மணிக்கு குல தெய்வம் ராஜகோபால் நடத்திய 'கலைவாணர் கதை'—வில்லுப் பாட்டு மிகச் சிறப்பாக அமைந்தது.

நரிக்குறவ வகுப்புக் குழந்தைகளின் நாட்டிய நிகழ்ச்சிக்குப் பின்னர், மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் தலைமையில் கருத்தரங்கம் தொடங்கியது. மாண்புமிகு நிதி அமைச்சர் கி. மனோகரன் அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசிய தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் திரு டி.வி. நாராயணசாமி. தமது உரையில் குறிப்பிட்டார்.

"தமிழக அரசின் ஆணை பெற்று-அரசின் சார்பில் கலைவாணர் நினைவு நாளை-தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கொண்டாட முன் வந்திருக்கிறது. கலைவாணரின் நினைவு நாளை எந்தெந்த வகையில் போற்ற வேண்டுமோ. அந்தந்த வகையில் எல்லாம் போற்றுவதற்கு தமிழ்நாடு, இயல், இசை நாடக மன்றம் அரசின் சார்பில் முன்வந்திருக்கிறது.

"வாழையடி வாழையென வந்த திருக்கூட்டக் கலைஞர் மரபினில் கலைவாணர் தனி இடம் பெற்றுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். நமது சமுதாயத்தை இலட்சிய வாழ்வுள்ள சமுதாய

மாக ஆக்கி-சமுதாய சீர்திருத்தத்தை உருவாக்கி-சேவை செய்பவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த ஒப்பற்றவர் கலைவாணர்!''

இந்தக் கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு நிதி அமைச்சர் திரு கி. மனோகரன், தொடக்க உரையில் குறிப்பிட்டார்:

''இங்கே வில்லுப்பாட்டிலே கலைவாணரின் தனித்தனிச் சிறப்பை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவரது மனிதாபிமான உணர்வை-மனிதத் தன்மையைக் கோடிட்டுக் காட்டினார்கள். நான் அந்த இடத்திலிருந்து தான் கலைவாணரைக் கவனிக்கிறேன்.

''இன்னார் இனியார் என்று அவர் பார்த்ததில்லை. எங்கேதோ அங்கு அதை ஓடிச்சென்று ஏற்றுக் கொள்வதில் அவர் முன்னோடியாக விளங்கினார்.

''இலட்சக் கணக்கில் பணம் சம்பாதித்தார். அதனைப் பிறருக்கு வாரி வாரி வழங்கினார். கேட்டவர்களுக்கெல்லாம் வழங்கினார். அதனால்தான் அவர் நிற்கிறார்.. நம் நெஞ்சத்திலே, நிலைத்துவிட்டார் - நீங்காதிருக்கிறார்.

''அமெரிக்கா பற்றி ஓர் இளம் புலவன் சொன்னான்:

மாட மாளிகையல்ல பெரிது
கூட கோபுர மல்ல பெரிது
விண்மூட்டும் கட்டடம் அல்ல
பெரிது.
கண்கவரும் பூங்கா அல்ல
பெரிது!
இதயம்தான் பெரிது—
இரும்புப் பெட்டி அல்ல!
மனம்தான் பெரிது
மற்றவை அல்ல.....!

''அந்த வகையில், கலைவாணர், மனம் படைத்தவராக-இதயம் உள்ளவராக விளங்கினார்.''

பின்னர் திரு ஏ. ஆர். மாரிமுத்து எம். எல். ஏ. உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

'கலைஞர்களிலேயே, மக்களை ரசிக்க வைக்கவும் சிந்திக்க வைக்கவும் கூடிய சக்தி என். எஸ். கே. அவர்களிடம் இருந்தது. அவர், சுதந்திர இயக்கத்துக்கு அனுசரணையாக இருந்தார்.''

பின்னர். உரையாற்றிய திரு. மார்க்க பந்து. எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.

''கலைவாணர் கலையில் சிறந்து விளங்கிய பெருமகனார். எத்தனை மேடைகள் போட்டுப் பிரச்சாரம் செய்தாலும், மக்கள் நெஞ்சங்களில் பதிக்க முடியாத கருத்துக்களைத் திரைப்படத்தின் மூலம் எளிதில் பதிய வைத்தவர் அவர்.''

பின்னர் பேசிய திரைப்பட இயக்குநர் திரு (கிருஷ்ணன்) பஞ்சு குறிப்பிட்டார்.

''கலைவாணரைக் குறித்துச் சொல்வதென்றால் 44 வருட அனுபவங்களைக் குறிப்பிட வேண்டும். ஒவ்வொருவரின் திறமையையும் எப்படி எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்—அவர்களுக்கு எப்படி எப்படி உதவ வேண்டும் என்பதை எல்லாம் நன்கு அறிந்திருந்தவர் கலைவாணர்.''

பின்னர் பேசிய தா. பாண்டியன் குறிப்பிட்டார்.

''நகைச்சுவை நடிகர்களில் பலர் வழுக்கி விழுந்து சிரிக்க வைப்பார்கள். இன்னும் பலர் பல்வேறு சேட்டைகள் செய்வார்கள். நம்மைச் சிரிக்க வைப்பதற்கு அவர்கள் படும் பாட்டைப் பார்த்தால் அவர்கள் மீது நமக்கு அனுதாபம்தான் ஏற்படும். கட்டாயச் சிரிப்பை நம் மீது திணிப்பார்கள். ஆனால் கலைவாணரின் சிரிப்பு அப்படி அல்ல. கலைநயத்தோடு கருத்து விளக்கத்தையும் செய்து நம்மைச் சிரிக்க வைத்தவர் கலைவாணர். அவரைப் பார்த்தவுடனேயே நமக்குச் சிரிப்பு வந்துவிடும்.''

''பல்கலைக் கழகங்கள் கற்றுத் தராத பாடத்தைக் கற்றுத் தந்த பேராசான் அவர்! இந்தச் சமுதாயத்தைச் சொல்லால் அடித்துச் சொரணை வரவழைத்த கலைஞன் கலைவாணன்.''

பின்னர் பேசிய திரு தி. க. பகவதி குறிப்பிட்டார்.

''கலைவாணர் எங்கள் நாடகக் குழுவில்தான் கலைவாழ்க்கையைத் துவக்கினார். அவருக்குத் தெரியாத கலை கிடையாது. நாதசுரம்-தவில்-ஆர்மோனியம்-மிருதங்கம் முதலிய வாத்தியங்களைத் திறம்பட வாசிப்பார். அவரே ஒருமுறை சீன் எழுதினார். எதையும் சீக்கிரத்தில் கற்றுக் கொள்ளும் திறமை அவரிடம் இருந்தது. துணிவுமிக்கவராகவும் அவர் விளங்கினார். பேராற்றல் படைத்த கலைஞர் அவர்.''

பின்னர் பேசிய மேஜர் சுந்தரராஜன் குறிப்பிட்டார்.

''கலைவாணரின் நினைவுநாள் விழா, ஜாதி அடிப்படையில்-அதாவது நடிகர் என்ற முறையில் நாங்கள் எல்லாம் பெருமைப்படும் தினமாகும். கூத்தாடிகள் என்று சொல்லப்பட்டு வந்த நடிகர்களைப் பெருமைக் குரியவர்களாக்குவதற்குப் பாடுபட்ட முதற்கலைஞர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்.''

அடுத்துப் பேசிய திரைப்பட இயக்குநர் திரு ப. நீலகண்டன் குறிப்பிட்டார்.

''கதாநாயகன், கதாநாயகி, வில்லன், காமெடியன் என்று உள்ள பாத்திர வரிசையில் நான்காவது இடம்தான் நகைச்சுவை நடிகருக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. நான்காவது இடத்துக்கு, முதல் மரியாதையை ஏற்படுத்திக் கொடுத்தவர் கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் தான்.''

பின்னர், கலைவாணருடன் நீண்ட காலம் பணிபுரிந்த திரு வெ. நாராயணன் உரையாற்றினார், அப்போது அவர் குறிப்பிட்டார்.:

'''கலைவாணரின் விழாவை அரசு நடத்தி வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தி. ஆனால் ஒரு வேண்டுகோள். கலைவாணரின் நினைவுநாளை வசதி குறித்து வேறு தேதிக்கு மாற்றிக் கொள்ளக் கூடாது. ஆண்டுதோறும் இதே ஆகஸ்ட் 30-ல்தான் நடத்த வேண்டும்.

''மது விலக்கு குறித்து ஒரு முறை வானொலியில் கலைவாணர் ஒரு நிகழ்ச்சி நடத்தினார், அதனை அப்போது டெல்லியில் இருந்த ராஜாஜி, கேட்டுவிட்டு, கல்கிக்குக் கடிதம் எழுதினார், இந்த நிகழ்ச்சியை மக்களுக்கு நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்று.''

பின்னர் திரு அப்துல் வகாப் எம். எல். சி. பேசியபோது குறிப்பிட்டார்.

''மக்களைச் சிரிக்க வைப்பது—நோய் வந்தவர்களுக்கு மருந்து கொடுப்பது போன்ற ஒரு பணி. அந்தப் பணியைத் திறம்படச் செய்த பெரியார் நம் கலைவாணர் உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் நடிகருக்குச் சிலை வைத்திருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். அவர் வாழ்ந்த காலத்தில் அவரைவிட அள்ளிக் கொடுத்தவர்கள் எவரும் இருந்திருக்க முடியாது.''

பின்னர் பேசிய திரு எஸ். எஸ் ராஜேந்திரன் குறிப்பிட்டார்:

''கலைவாணரின் நகைச்சுவை சாகா வரம் பெற்றவை. கலைத்துறை மூலமாக நல்ல சேவை செய்ய முடியும் என்று அறிஞர் அண்ணாவை நம்ப வைத்தவர் கலைவாணர் அவர்கள்தான்!

''தற்புகழ்ச்சி என்றால் கலைவாணருக்குச் சிறிதும் பிடிக்காது. தான் சம்பாதித்த பணத்தில் காந்தியடிகளுக்கு ஒரு ஸ்தூபியை நாகர்கோவிலில் கட்டினார்.

''தமிழ் உள்ள அளவும் கலைவாணரின் பெயர் வாழும் என்பதில் ஐயம் இல்லை''

பின்னர், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு எஸ். அரங்கநாயகம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''கலைவாணர் வெறும் நடிகர் என்பதற்காக அல்ல, தமிழ் காக்கப் பிறந்தவர் என்பதற்காக நாம் பாராட்டுகிறோம். ஒருவரைப் பாராட்டுவதற்கு என்னென்ன காரணங்கள் இருக்க வேண்டும் என்று நாம் கருதி வருகிறோமோ அதற்குத் தக்கவராக இருந்தவர் கலைவாணர் என்பதால் நாம் அவரைப் பாராட்டுகிறோம்.

''கலைவாணர் பிறருக்காக வாழ்ந்தார்; நாமும் அவரைப் போல மற்றவர்களுக்காக வாழ மாட்டோமா என்ற ஆசையுடன் தான் இந்த விழாவை நடத்துகிறோம்.

''ஜாதி அமைப்பு-சுரண்டலை அடிப்படையாகக் கொண்டது. அதைத் தகர்த்தெறியவேண்டும் என்று கருதினார். அதற்குக் காரணங்கள் வேதம் என்றாலும் அதை எதிர்க்க வேண்டும் என்று சங்கநாதம் ஒலித்துத் தொண்டாற்றிய பணியாளர் கலைவாணர்.''

பின்னர், விழாவுக்குத் தலைமை ஏற்றிருந்த மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் உரையாற்றினார்கள். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

'கலைவாணர் இன்று இருந்திருந்தால் அவருக்கு நாம் முத்து விழா நடத்தியிருக்க வேண்டும். ஆனால் 50 ஆண்டுக்குள்ளேயே அவர் மறைந்து விட்டார். 100 ஆண்டு வாழும் கலைஞனுக்கு எவ்வளவு புகழ் சேருமோ அதை விடப் பெரும் புகழை 50 ஆண்டுக்குள்ளேயே நடத்தி முடித்து விட்டார்.

''என். எஸ். கேயை நான் அறிந்தது குறைவுதான். அதுவே மறக்க முடியாதது. என்னையும் அண்ணாவையும் சந்திக்க வைத்தவர் கலைவாணர். இருவேறு துருவங்களாக, அரசியல் நிலைமையால் பிரித்து வைக்கப்பட்ட பிரிவினைக் கிடையே எங்களைப் பிணைக்க வைத்தது அவரது தொண்டு!

பின்னர், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சிறப்புரை யாற்றினார்; அவரது உரையில் அவர் குறிப்பிட்டார்:

''இன்று தமிழக அரசே கலைவாணர் விழாவை நடத்துகிறது என்றால் அதற்குக் காரணம் கலைவாணர் நடந்து காட்டியதுதான்.

''எனது 17-வது வயதில் எனக்கு அரசியலைச் சொல்லித் தந்தவர் கலைவாணர்.

''நாடகக் கம்பெனியில் சமபந்தி போசனத்தை உருவாக்க அரும்பாடு பட்டவர்.

''மனிதன் ஒரு தத்துவத்துக்கு-கொள்கைக்கு சொந்தக் காரனாக இருக்க வேண்டும்; பிறர் மதிக்கத் தக்க வகையில் அவன் வாழ்ந்தாக வேண்டும். இந்த இரண்டு கொள்கைகளையும் அவர் கற்றுத் தந்தார்.

''ஒரு மனிதன் எப்படி வாழக் கூடாது என்பதை வாழ்ந்து காட்டியிருக்கிறார். ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதைச் சொல்லிக் காட்டியிருக்கிறார்.

''ஒரு விஷயத்தை உங்களிடம் இன்று சொல்கிறேன். கலைவாணர் வாழ விரும்பாமல்தான் நம்மையெல்லாம் விட்டுச் சென்றார். கொடுத்த மாத்திரைகளை எல்லாம் சாப்பிடாமல் அவர் தூக்கி எறிந்து விட்டார். அந்த அளவுக்கு அவர் வேதனையில் இருந்தார்.

''புகழும் பணமும் நிரந்தரம் என்று சிலர் நடக்கிறார்கள். அந்தக் காலத்தில் கலைவாணர் செய்ததுபோல் தர்மம் யாரும் செய்யவில்லை.

''கலைவாணர் ஒரு சகாப்தம். ஆனால் அது முடிந்து விட்ட சகாப்தம்.

''இன்று அவர் இருந்திருந்தால் எனக்கு இந்தக் கஷ்டமில்லை. அவர்தான் முதலமைச்சராக இருந்திருப்பார். அவருக்கு நான் உதவியாக இருந்திருப்பேன்.

''தமிழ்ப் பண்புக்கும், தமிழ்க் கலாச்சாரத்துக்கும் தமிழர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கும் இலக்கணமாக இருந்தவருக்கு மரியாதை காட்டவே இந்த விழா நடத்தப்படுகிறது.''

தமது உரைக்குப் பின்னர், கலைவாணருடன் நீண்ட காலமாகப் பணிபுரிந்தவரும், அவரது நினைவு நாள் விழாவினைப் பல்லாண்டுகளாக நடத்தி வருபவருமான திரு வே. நாராயணன் அவர்களுக்கு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் முதல்வர் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தார்.

பின்னர், விழா இனிது நிறைவெய்தியது.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
தமிழ்ப்பித்தன்.

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும் !

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்
துணையாகும் !

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.

எண்ணெய் வித்துக்கள் பரிசோதனை நிலையம்

திண்டிவனம்

எஸ். மாதவராவ், பி.எஸ்.சி.,(விவ)
பயிர் சிறப்பறிஞர்,
எண்ணெய் வித்துப் பரிசோதனை நிலையம்,
திண்டிவனம்.

திண்டிவனம் எண்ணெய்வித்துப் பரிசோதனை நிலையம், தமிழ்நாட்டில் உள்ள நிலையங்களில் பழமையானதொன்றாகும். 1935-ஆம் ஆண்டு சிறிய அளவில் நிறுவப்பட்ட இப்பண்ணை 1962—ஆம் ஆண்டில் வட்டாரப் பண்ணையாக விரிவாக்கப்பட்டது.

இந்நிலையம் திண்டிவனம் பாண்டிச்சேரி சாலையில், திண்டிவனத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் சுமார் 60 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்நிலையத்தில் பயிரின வளர்ச்சியியல், உழவியல், மண்வளம், பூச்சியியல் மற்றும் பூஞ்சாள இயல் வல்லுநர்கள், ஒருங்கிணைந்து பயிர் நுண்ணறிஞர் தலைமையில் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையத்தின் மண் அமைப்பு மணிலா சாகுபடிக்கு ஏற்ற செம்மண் பூமியாகும். தென்மேற்குப் பருவக்காற்றாலும், வடகிழக்குப் பருவக்காற்றாலும் இப்பகுதியில் சராசரியாக 1116 மி.மீ. மழை கிடைக்கிறது. இதில் 40 சதவிகிதம் தென்மேற்குப் பருவக்காற்றாலும், 50 சதவிகிதம் வடகிழக்குப் பருவக்காற்றாலும், மீதமுள்ள மழை கோடையிலும் கிடைக்கிறது.

பயிரின் வளர்ச்சியியல் :

நிலக்கடலை: நிலக்கடலை ஆராய்ச்சிக்கு அடிப்படையென்று கருதி அதன் பல குண வேறுபாடுகளையறியும்பொருட்டு சுமார் 850 ரகங்கள் பல நாடுகளிலிருந்தும் கொண்டுவரப்பட்டுப் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சியின் பல வழிமுறைகள் மூலம் இது நாள் வரை 12 ரகங்கள் நமது மாநிலத்தின் வெவ்வேறு தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப அதிக மகசூல் கொடுக்கக்கூடிய ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவைகளில் விவசாயிகளிடம் மிகவும் பரவலாகப் பயிரிடப்பட்டு வருபவை குறைந்த வயதில் (105 நாள்) டி.எம்.வி. 7ம், 9ம் நீண்டகால வகையில் (125 நாள்); டி.எம்.வி. 10-ம் ஆகும். அண்மையில் வெளியிடப்பட்ட குறைந்த வயது ரகம், டி.எம்.வி. 11 மற்றும் டி.எம்.வி. 12-ம் ஆகும். டி.எம்.வி. 10 ரகம் அகில இந்தியாவிலும் வெகுவாக விவசாயிகளிடம் பரவிவருகின்றது.

இன வளர்ச்சியியலில் நிலக்கடலையில் தனிவழித் தேர்வுமுறை தவிர இனச்சேர்க்கை மூலம் முற்றிலும் புதிய மாற்றமுள்ள பல இலட்சக்கணக்கான தினுசுகள் இப்பொழுது ஆராயப்பட்டு வருகின்றன.

இதன் பலனாக, 75 நாள் வயது கொண்ட மணிலா ரகங்கள் பல தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசோதனையில் உள்ளன. இவை விரைவில் விவசாயிகளுக்குக் கிடைக்க விதை உற்பத்தித் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ரகங்கள் எதிர்காலத்தில் தீவிர பயிர்ச் சாகுபடித் திட்டங்களுக்கு மிகவும் பயன்படும்.

நிலக்கடலையின் மூதாதையர் என்று சொல்லப்படும் சில வகைகள் குறிப்பாக அராக்கிஸ் மாண்டிக்கோலா என்ற வகையுடன் இனச்சேர்க்கையால் விளைந்த தினுசுகளில் காயின் அமைப்பு சிறியதாகயிருந்தாலும் ஒவ்வொரு செடியில் கிடைக்கும் காயின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேற்கொண்டு தொடரப்பட்ட ஆராய்ச்சியினால் அதிக எண்ணிக்கையுடன் பெரிதான காய்கள் கிடைக்க வழியுண்டு எனவும் தெரிகிறது. இந்த முயற்சி, ஆராய்ச்சியில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையத்தின் சிறப்பினைக் கூறுமிடத்து இங்குச் செயல்படுத்தப்படும் இனச்சேர்க்கை வழிமுறைகளில் முதல் இரண்டாம் தலைமுறையில் தேர்ந்தெடுத்த சந்ததிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் நான்கிற்கும் மேற்பட்ட பெற்றோர் குணங்களை ஒன்று சேர்த்து புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதைக் குறிப்பிடலாம். 1974ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தினால் குறைந்த வயதுடன் அதிக மகசூல் பருமனான பருப்புகள் அதிக எண்ணெய்ச்சத்து கொண்ட பல தினுசுகள் மகசூல் பரிசோதனையில் உள்ளது.

இம்முறை மேலும் தீவிரப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம்

மகசூல் பரிசோதனையில் 30 ரகங்களும்,
ஆரம்பப் பரிசோதனையில் சுமார் 1,000 ஒட்டு
ரகங்களும் உள்ளன. ஆராய்ச்சியின் பல திட்
டங்களில் வறட்சியைத் தாங்கவல்ல ரகங்கள்,
மற்றும் பெரும் பருப்பு கொண்ட ரகங்கள்
இனச்சேர்க்கை வழிமுறையினுல் உருவாக்கப்
பட்டுச் சுமார் 100 வகைகள் மகசூல் பரி
சோதனையில் உள்ளன. முதல் இரண்டாவது
தலைமுறை, மற்றும் பல பெற்றேர்களை மேற்
கூறிய தலைமுறைகளில் ஒருங்கிணைந்ததால்
விளைந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட சந்ததிகள்
ஆராய்ச்சியில் இருந்து வருகின்றன.

இந்நிலையத்திலிருந்து 5 எள் ரகங்கள்
இதுவரை வெளியிட்டுள்ளது. எல்லா மாவட்
டங்களிலும் எல்லாப் பருவங்களிலும் திண்டி
வனம் 3-ம், கோடை சாகுபடிக்குத் திண்டி
வனம் 4-ம், மற்றும் தென் மாவட்டங்களுக்கு
மானுவாரி சாகுபடிக்குச் சிறந்த எள் இவ்
வாண்டு வெளியிடப்பட்ட திண்டிவனம் 5-ம்
ஆகும். இவைகளில் திண்டிவனம்-3 ரகம்
இனச்சேர்க்கையால் விளைந்ததாகும் என
ஆராய்ச்சிக்கு அடிப்படையென சுமார் 380
எள் ரகங்கள் பயிர்செய்யப்பட்டு வருகின்றது.
எள் ஆராய்ச்சியில் கோடைசாகுபடிக்கு
அதிகக் கிளைகள் கொண்ட ரகங்களும் மானு
வாரி மற்றும் குளிர்காலச் சாகுபடிக்கு மித
மான கிளை அமைப்புகளும் சிறந்தது எனத்
தெரியவந்தது. இந்த எண்ணத்தில் புதிய
மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள புதிதாக இனச்
சேர்க்கையினுல் கண்டுபிடிக்கப்பெற்ற கிளைகள்
இல்லாத நிறைந்த கணுக்களுடன் கணுக்களில்
அதிகக் காய்கள் (2-3) மற்றும் காய்களின்
அறைகள் 4-க்கு மேற்பட்டு அமையப் பெற்ற
ரகங்களாகும். இவ்வகையில் செடிகளின்
எண்ணிக்கையினை அதிகரிப்பதனுல் அதிக
மகசூல் கிடைக்கிறது.

எள் ஆராய்ச்சியிலும் மணிலாவில்
போலவே முதல் இரண்டாம் தலைமுறை
சந்ததிகளில் இனச்சேர்க்கையினுல் நான்கிற்
கும் மேற்பட்ட பெற்றேர்களின் குணங்களை
ஒருங்கிணைந்து புதிய ரகங்கள் உருவாக்கப்
பெற்று வருகின்றது. தற்சமயம் மகசூல் பரி
சோதனையில் 300 ரகங்களும், ஆரம்பப் பரி
சோதனையில் 1,000 வகைகளும் உள்ளன.
இனச் சேர்க்கையால் விளைந்த சந்ததிகள்
ஆயிரத்துக்கும் மேற்பட்டவை பரிசிலிக்கப்
பட்டு வருகின்றன.

ஆமணக்கில் இந்நிலையத்திலிருந்து 3
நீண்டகால ரகங்கள் (6 மாதம்) வெளியிடப்
பட்டுள்ளன. திண்டிவனம் 2 ரகம் ஊடுபயி
ராக மஞ்சள் மிளகாய்ச் சாகுபடி செய்யும்
நிலங்களுக்கு ஏற்றது. கரும்பு, வெற்றிலைத்
தோட்டங்களில் வரப்பு ஓரங்களில் நட திண்டி
வனம் 3 சிறந்தது. பல பயிர்த் திட்டங்களில்
ஆமணக்கில் நீண்ட கால வயதால் ஏற்படும்
பிரச்சினையைத் தவிர்க்கவும், மேலும் இது ஒரு
இலாபகரமான பயிர் என்று சொல்ல மகசூல்
அதிகரிக்க வேண்டிய சூழ்நிலையி
யிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு
சேலம் 2 என்ற குறுகியகால (120 நாள்)
வகையைவிட 105 நாளில் அறுவடைக்கு
வரும் ரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அனு
சரணை ஆராய்ச்சியில் வரும் பருவங்களில் இது
பரிசோதிக்கப்படும். இது தவிர 70 நாளில்
அறுவடைக்கு வரும், ஊடுபயிருக்கு ஏற்ற
வகை தேர்ந்தெடுக்கப்பட்டு ஆராயப்பட்டு
வருகின்றது. மேலும், குறுகியகால ஒட்டு ரகம்
வெளியிடவும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்
பட்டு வருகின்றன.

சூரியகாந்தி :

சூரியகாந்தியில் முக்கிய ஆராய்ச்சிகள்
கோவில்பட்டி நிலையத்தில் கரிசல் மண்வளத்
துக்கு ஏற்ற சூழ்நிலையில் செய்யப்பட்டு வரு
கின்றன. திண்டிவனத்தில் அங்குத் தேர்ந்
தெடுக்கப்பட்ட சில ரகங்கள் மகசூல் பரி
சோதனை செய்யப்படுகிறது. இது தவிர
மகசூல் அளிக்க வல்ல ரகங்களை உருவாக்க
இனச்சேர்க்கை மூலம் ஆராய்ச்சிகள் இங்கு
நடைபெற்று வருகின்றன.

சோயாபின் :

நம் மாநிலத்திற்குப் புதிய பயிர்வகை
யான சோயா பயிரின் பல வகைகள்
இங்கு மகசூல் பரிசோதனை செய்யப்படுகிறது.

உளுந்து :

உளுந்தில் இனச்சேர்க்கை மூலம் புதிய
ரகங்கள் உருவாக்கப்பட்டுத் தற்போது 3
தினுசுகள் விவசாயிகள் நிலங்களில் அனு
சரணை ஆராய்ச்சியில் இருக்கிறது. மேலும்,
உயர் விளைச்சல் தரும் ரகம் கண்டுபிடிக்க
ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வரு
கிறது.

மக்காச்சோளம் :

அதிக மகசூல் கொடுக்கக்கூடிய முக்கிய
புரதச்சத்துப் பொருள்களான லைசின், ட்ரை
டோபேஃன் மிகுதியாக உள்ள ரகங்களை உரு
வாக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்
றன. இதன் பயனுக விளைந்த மக்காசோளத்



மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கதிர்நரசிங்கபுரம் உழவர் ஆய்வு மன்றம், தமிழ்நாட்டிலேயே சிறந்த உழவர் ஆய்வு மன்றமாகத் (1977—78) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான சுழற்கேடயமும், ரொக்கப் பரிசு 300 ரூபாயும் வழங்கப்பட்டது.

திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தில் நடந்த பண்ணை இல்ல ஒலிபரப்பின் 12-வது ஆண்டு விழாவில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் முன்னிலையில் இப்பரிசு வழங்கப்பட்டது.

தினுசுகள் வரும் பருவங்களில் விவசாயிகளின்
நிலங்களில் அனுசரணை ஆராய்ச்சியில் மகசூல்
பரிசோதனை செய்யப்படும்.

அகில இந்திய ஒருங்கிணைந்த திட்டங்களுடன் இந்நிலையத்தின் பங்கு

இந்நிலையம், மற்ற மாநிலங்களில் உள்ள
நிலையங்களுடன் தொடர்பு கொண்டு
வேளாண் நுண்ணறிஞர்களால் ஏற்பட்டிருக்
கும் குழுக்களால் அகில இந்திய ரீதியில் பரி
சோதிக்க முடிவு செய்யப்படும்.

சோளம், கம்பு, ஆமணக்கு, எள் போன்ற
பயிர்களில் உள்ள ரகங்கள் அனுப்பப்பட்டு
இங்குப் பரிசோதனை செய்து முடிவுகளை அளிக்
கின்றது. இதனுல் நமது நாட்டில் பல இடங்
களில் நடைபெற்று வரும் ஆராய்ச்சிகளின்
திட்டங்களை இங்குள்ளவர்கள் வல்லுநர்கள்
அறிந்து கொண்டு புதிய செயல் திட்டங்களை
உருவாக்க ஏதுவாக இருக்கிறது.

நிலக்கடலை :

நிலக்கடலைக்குத் தேவையான உழவியல்
முறைகளில் இடைவெளி, களையைக் கட்டுப்
படுத்துதல், தேவையான அடியுரம் மற்றும்
மேலுரத்திற்கு மண்வளத்துறையுடன் ஒருங்
கிணைந்து பரிசோதனையிட்டு முடிவு கூறப்படு
கிறது.

	மானுவாரி (செ.மீ.)	இறவை (செ.மீ.)
இடைவெளி கொத்து ரகம்	30X10	30X15
கொடி ரகம்	30X15	30X20

விதைகள் தேர்ந்தெடுப்பதில் சிறிய
அல்லது பெரிய பருப்புகள் ஒரே ரகத்தில்
இருந்தாலும் முளைப்புத்திறன் பாதிக்கப்படுவ
தில்லை. ஆனுல், முற்றுத சுருக்கம் விழுந்த
பயிர்கள் முளைப்புத்திறனைப் பாதிக்கிறது.

களையைக் கட்டுப்படுத்த விதைத்தபின்
24 மணி நேரத்திற்குள் ஏக்கருக்கு லாசோ
1.6 லிட்டர் அல்லது டோக்-இ 25, 3 லிட்டர்
அல்லது ஹெக்சாமர் நைட்ரோஃபன் 3
லிட்டர் மருந்தை 40 கிலோ மணலில் கலந்து
சீராகத் தூவுவதால் இரு இலை களைகளை முழு
வதும், ஒரு இலை களைகளைச் சுமார் 40 சதமும்
கட்டுப்படுத்த முடிகிறது. இதனுல் முதல்
களையெடுப்பைத் தவிர்க்கலாம்.

அடியுரமாக ஊட்டம் ஏற்றிய தொழு
உரம் இடுவதால் முழு உர சிபாரிசினுல்
கிடைக்கும் மகசூல் கிடைப்பதுடன் தொழு
உரத்தின் தேவை 7 பங்கு குறைகிறது. அடி
யுரமாக 5 கிலோ நுண்ணூட்டச்சத்து கலவை
சிபாரிசு செய்யப்படுகிறது.

மேல் உரமாக 45-ஆம் நாள், ஏக்கருக்கு
80 கிலோ ஜிப்சம் இரண்டாம் களையெடுப்பின்
போது இட்டு, மண் அணைப்பதால் நல்ல
திரட்சியான பருப்புகள் கிடைப்பதுடன் மக
சூலும் 15-லிருந்து 20 சதம் அதிகமாகக்
கிடைக்கிறது.

எள் :

அடியுரமாக சிபாரிசு செய்யப்படும் உரம்
தவிர ஏக்கருக்கு 2 கிலோ மங்கனிஸ் சல்பேட்
அடியுரமாக இடுவதால் 15 சதம் கூடுதல்
மகசூல் கிடைக்கிறது.

மானுவாரி எள்ளிற்கு இடைவெளி
30X20 செ. மீ. இறவை எள்ளிற்கு இடை
வெளி 30X30 செ. மீ. சிபாரிசு செய்யப்படு
கிறது. விதையுடன் மணல் கலந்து வரிசையில்
மேலும் விதைப்பதால் விதைகள் 2 செ. மீ.
ஆழத்தில் சீராக விதைக்கப்படுகின்றன.
மேலும் செடிகளை 15ஆம் நாளும் 25 ஆம்
நாளும் களைந்து எடுப்பதால் எல்லாச் செடி
களும் தகுந்த இடைவெளியுடன் வளர்ந்து
நல்ல பலன் அளிக்கிறது.

ஆமணக்கு :

குறைந்த வயது சேலம் 2 மற்றும் அருணு
ஆமணக்கு ரகங்களுக்கு 45X30 செ. மீ.
இடைவெளியுடன் செடி நுனியில் அமைந்
திருக்கும் பூவும் இரண்டு பக்கக் கிளைகளும்
தவிர மற்றவைகளைக் கிள்ளி எடுத்துவிடுவ
தால் அதிக மகசூலும், செடிகளின் நீண்ட
வயதான 130 நாட்களிலிருந்து 105 நாட்
களுக்குக் குறைக்கலாம்.

பூச்சியியல் :

பூச்சியியல் பிரிவில் எண்ணெய்வித்துக்
களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி
அவைகளின் சேதத்தைத் தவிர்க்கும் வழி
முறைகள் பற்றி ஆராய்ச்சிகள் பல நடந்து
வருகின்றன. நிலக்கடலையைத் தாக்கும், காய்
துளைப்பான், சுருள் பூச்சி, சிவப்புக் கம்பளிப்
புழு மற்றும் அசுவணி, எள்ளைத் தாக்கும்
காய்த்துளைப்பான், அசுவணி, சூரியகாந்தியைத்
தாக்கும் பகையினை வெட்டுப்புழு போன்ற
பூச்சிகள் முக்கியமானவையாகும்.

இந்தப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி,
அவைகளின் சேதத்தைத் தடுத்து நல்ல
மகசூல் பெற, திண்டிவனம் எண்ணெய்
வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தில் அமைந்
துள்ள பூச்சியியல் பிரிவில் நடத்தப்பட்ட விரி
வான ஆய்வுகளின் பயனுகத் தெரியவந்துள்ள
கண்டுபிடிப்புகளைப் பற்றி சுருக்கமாக இங்குத்
தரப்படுகிறது.

நிலக்கடலையைத் தாக்கும் காய்த்துளைப்பான் :

கரிய நிறம் கொண்ட இந்தப் பூச்சிகள்
மண்ணிலேயே வாழும் தன்மை வாய்ந்தவை.
இதன் உடலின் பின் பக்க வடிவில் இடுக்கி
போன்ற உறுப்பைக் காணலாம். இந்தப்
பூச்சிகள் நிலக்கடலையைக் காய்பிடிக்கும் பரு
வத்தில் தாக்கி சேதம் விளைவிக்கின்றது.
இந்தப் பூச்சிகள் காய்களில் பருப்புகள்
தோன்றும் நிலையில் அவற்றைத் துளைத்து
உள்ளிருக்கும் பருப்புகளைத் தின்றுவிடும்.
அதோடு மட்டும் இல்லாமல் அவை ஏற்படுத்
திய துளைகளின் மூலம் பூஞ்சாளங்கள் பரவி
காய்களையே மக்கச் செய்துவிடும். தாக்கப்
பட்ட நிலக்கடலையைப் பிரித்துப் பார்த்தால்
கறுப்பு நிறம் கொண்ட மக்கிய பொருள்களை
மட்டுமே காண முடியும். இப்பூச்சிகள், புதி
தாக வெளியிடப்பட்டுள்ள டி. எம். வி. 10
ரக நிலக்கடலையை அதிக அளவில் தாக்கி
சேதம் விளைவிக்கின்றன. இவற்றைக் கீழ்க்

கண்ட பூச்சிக்கொல்லிகளை முதல் தடவையாக விதைப்பதற்கு முன்பும், இரண்டாவது முறையாக இரண்டாவது களை எடுப்பின்போது இடுவதின் மூலம் கட்டுப்படுத்தலாம். எக்டேருக்கு டி. டி. டி. ஐந்து சதத்தூள் 40 கிலோ அல்லது மேலத்தியான் 5 சதத்தூள் 40 கிலோ அல்லது டிரைக்குளோர்ப்பான் 5 சதந்தூள் 40 கிலோ அல்லது டைசல் போட்டான் 5 சதக் குருணை மருந்து எக்டேருக்கு 30 கிலோ என்ற அளவில் ஏதாவது ஒரு மருந்தைப் பயன்படுத்தி இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

நிலக்கடலையில் சுருள் பூச்சி :

நிலக்கடலைப் பயிரின் முன் பருவத்தில் விதைத்து 20 முதல் 75 நாட்கள் வரையில் சுருள் பூச்சியின் தாக்குதலை எல்லா ரக மணிலாவிலும் காணலாம். இருப்பினும் மானாவாரி மணிலாவில்தான் இப்பூச்சியின் தாக்குதல் அதிக அளவில் காணப்படுகின்றன. இறவையில் பயிராகும் மணிலாவில் இதன் தாக்குதல் அதிக அளவில் காணப்படுவதில்லை. இந்த சுருள் பூச்சியின் தாக்குதலால் மணிலாவில் சுமார் 15 முதல் 35 சதம் சேதம் விளைகின்றது.

கருந் தலையுடைய சாம்பல் நிறப் புழுக்கள் இலைகளை ஒன்றோடு ஒன்று இணைத்து, சுருட்டி உள்ளிருந்து கொண்டே இலையில் உள்ள பச்சையத்தைச் சுரண்டி தின்பதினால் இலைகள் காய்ந்து சருகாய் விடுகின்றன. இதனால் செடியின் வீரியம் குறைந்து நல்ல மகசூல் பெற இயலாமல் போய்விடுகின்றது.

என்டோசல்ஃபான் 4 சதம் தூள் எக்டேருக்கு 25 கிலோ அல்லது டி. டி. டி. 5 சதம் தூள் 25 கிலோ அல்லது கார்பரையில் 10 சதம் தூள் 25 கிலோ அல்லது என்டோசல்பான் மருந்து திரவத்தை 750 மில்லி அல்லது தூவான் 750 மில்லி என்ற அளவில் ஏதாவது ஒரு மருந்தை விதைத்த் 20, 40, 60 நாட்களில் தெளித்தல் (அல்லது) தூவுதல் மூலம் நிலக்கடலையில் சுருள் பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

நிலக்கடலை சிவப்புக் கம்பளிபூச்சி :

இந்தச் சிவப்புநிறக் கம்பளிப் புழுக்கள் மானாவாரி மணிலாவில் பெருவாரியாகத் தோன்றி நிலக்கடலைப் பயிர்களை அடியுடன் அழித்துவிடுகின்றன. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள செஞ்சி, வல்லம், மேல்மலையனூர், வட்டாரங்களில் ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்குப் பருவக்காற்றில் பெய்யும் முதல் மழையின்போது இப்பூச்சிகள் பெருவாரியான அளவில் தோன்றி மானாவாரி மணிலா அனைத்தையும் அழித்துவிடுகின்றன. மற்ற இடங்களில் சிறிது குறைந்த அளவில் தோன்றினாலும், அதிக அளவில் சேதத்தை விளைவிக்கின்றன. மழை பெய்த இரண்டாம் நாளில் மாலை பூமியின் உள்ளிருக்கும் கூட்டுப் புழுக்களில் இருந்து வெளிப்படும் ஈ, வெள்ளை நிற பட்டாம்பூச்சிகள் இனச்சேர்க்கைக்குப் பின் இலைகளின் அடிப்புறத்தில் குவியல், குவியலாக முட்டை இடும். சாம்பல் நிற ரோமத்தில் இருக்கும் இளம் புழுக்கள் முதல் பருவத்திலிருந்து மூன்றும் பருவம் அடையும் வரை கூட்டமாக இருந்து கொண்டு இலைகளைச் சுரண்டித்தின்றும், பின்பு அதன் ரோமங்கள் நீண்டு சிவப்பு நிறமுள்ள நான்காவது பருவம் அடைந்தவுடன் இப்புழுக்கள் வீரியம் அடைந்து, தனித்தனியாகப் பிரித்து, பூமிக்கு மேல் உள்ள செடியின் எல்லாப் பாகங்களையும் உண்பதன் மூலம் செடியை அடியுடன் அழித்துவிடும்.

இந்தச் சிவப்பு நிறக் கம்பளிப்புழுவைக் கட்டுப்படுத்த. பி.எச்.சி. 10 சதம் தூள் 25 கிலோ அல்லது திரவ மருந்துகளான எண்டோசல்ஃபான் 750 மில்லி அல்லது குவினல்ஃபாஸ் 750 மில்லி அல்லது பாக்சோர்பின் 2.5 லிட்டர் என்ற அளவில் ஏதாவது ஒன்றை இளம்புழுக்கள் தோன்றியவுடன் தூவியோ அல்லது தெளித்தோ இவற்றை எளிதில் அறவே ஒழித்துவிடலாம். வளர்ந்த புழுக்களில் நீண்ட அடர்த்தியான உரோமங்கள் இருப்பதால் இவற்றைக் கட்டுப்படுத்துவது சிறிது கடினமே.

மழை பெய்த மறுநாள் வெளிப்படும் பட்டாம்பூச்சிகளை விளக்குப் பொறிகளை உபயோகித்து கவர்ந்து அழிப்பது மிகவும் எளிது. இப்படி ஒழித்தால் பட்டாம்பூச்சியை அழிப்பது இரண்டாயிரம் கம்பளிப்புழுக்களை ஒழிப்பதற்குச் சமம்.

நன்கு வளர்ந்த புழுக்கள் வயல்விட்டு வயல் நகராமல் இருக்க, தாக்கப்படாத வயலைச் சுற்றி 1 அடி ஆழமும், 6 அங்குல அகலமும், உள்ள குழிகளை வெட்டித் தடுக்கலாம். குழிகளில் சேரும் புழுக்களின் மேல் மண்ணெண்ணெய்யை தெளித்து அழித்துவிடலாம்.

அசுவிணி :

கறுப்பு அல்லது பச்சை நிறமுள்ள அசுவிணிகள் கூட்டம் கூட்டமாக இலைகளின் அடியிலும் முளைக்குருத்துகளிலிருந்து கொண்டு சான்றினை உறிஞ்சி விடுவதால் செடிகள் சுருண்டு சுருங்கி வாடிவிடும். அதிக அளவில் தாக்கப்பட்ட இளம் செடிகள் பட்டுவிடுகின்றன. இறக்கைகள் உள்ள அசுவிணிகள் பறந்து சென்றும், இறக்கையற்றவைகள் காற்றில் அடிக்கப்பட்டும் மற்ற செடிகளுக்குப் பரவுகின்றன. நன்கு வளர்ந்த அசுவிணிகள் கருநிறமாக இருக்கும். இந்த அசுவிணிகள் எல்லாப் பருவங்களிலும் அனைத்து ரகமான நிலக்கடலையிலும் தோன்றி கணிசமான சேதம் விளைவிக்கின்றன.

இப்பூச்சிகளைத் திரவ மருந்துகளான டைமெதோவேட் எக்டேருக்கு 750 மில்லி அல்லது மெதில் செடுமெடான் 750 மில்லி ஏதாவது ஒரு மருந்தை உபயோகித்துக் கட்டுப்படுத்தலாம்.

எள் கொண்டைப்புழு :

கரிய தலையுடைய வெள்ளை நிறப்புழுக்கள் இளம் எள் செடியில் நுனி இலைகளை ஒன்றோடொன்று இணைத்து உள்ளிருந்துகொண்டே குவித்து இளம் இலைகளைச் சுரண்டி உண்ணுகின்றன. செடிகள் பூக்கும் பருவத்தில் பூக்களைக் குடைந்து அண்டகாசத்தைத் தின்பதனால் காய்கள் காய்ப்பதில்லை. காய் பிடித்த பக்குவத்தில் இப்புழுக்கள் காய்களைக் குடைந்து உள்ளிருக்கும் விதைகளை உண்பதால் விதைகள் நாசமடைகின்றன. குளிர் காலத்தில் பயிரிடப்படும். எளிதில் இந்தக் கொண்டைப் பூச்சியின் தாக்குதல் அதிகமாகக் காணப்படுகின்றது.

இப்பூச்சியை, எண்டோசல்ஃபான் 4 சதத்தூள் எக்டேருக்கு 25 கிலோ அல்லது கவினல்ஃபாஸ் 1.5 சதம் தூள் 25 கிலோ அல்லது மாலதியான் அல்லது டி.டி.டி. 5 சதத்தூள் 25 கிலோ அல்லது திரவ மருந்து என்டோசல்பான் எக்டேருக்கு 750 மில்லி அளவில் ஏதாவது ஒரு மருந்தைக் கொண்டு தூவியோ தெளித்தோ நல்ல முறையில் கட்டுப்படுத்தலாம்.

சூரியகாந்தியில் தோன்றும் பூச்சிகள் :

பூச்சைத் தத்துப்பூச்சிகள், கூன்வண்டுகள் :

இவை இலைகளைத் தாக்கிச் சாற்றை உறிஞ்சியும், அவற்றைத் துளைத்தும் சேதப்படுத்துகின்றன. இவற்றால் பயிர் மகசூல் பாதிக்கப்படுகிறது. இவற்றை பி.எச்.சி. 10 சதம் தூளுடன் டி. டி. டி. 5 சதத்தூளை 25 கிலோ அளவில் கலந்து தூவி கட்டுப்படுத்தலாம்.

இளம் குருத்துகளும் பூங்கொத்துகளும் காய்ப்புழுக்களால் துளைக்கப்பட்டு சேதமாக்கப்படுகின்றன.

இவற்றை எக்டேருக்கு எண்டோசல்ஃபான் திரவமருந்து 1,000 மில்லியையோ டாக்ஸோ பீன் என்ற மருந்தை 1,000 மில்லியையோ தண்ணீரில் கலந்து மொட்டுகள், பூக்கள் வெளிவரும்போது தெளித்துக் கட்டுப்படுத்தலாம்-சூரியகாந்திப் பூக்களில் பகல் நேரங்களில் தேனீக்கள் நிறைய வந்து போவதால் மாலை நேரங்களில் மருந்து தெளிப்பது சாலச் சிறந்ததாகும்.

பூஞ்சாளயியல் :

மணிலாவைத் தாக்கும் தூர் அழுகல், வேர் அழுகல், துருநோய் மற்றும் டிக்கா ஆகிய நோய்களைப் பற்றியும், எள்ளைத் தாக்கும் சாம்பல் நோய், ஆல்டெர் நேரியா மற்றும் பீலிலை நோயைப் பற்றியும் விரிவான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தழைச்சத்து சேர்க்கும் நுண்ணுயிர்களான வரசோபியம் மற்றும் அசட்டோபேக்டர் பற்றியும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட நோய்களைப் பற்றிய ஆராய்ச்சி கீழ்க்கண்ட மூன்று குறிக்கோள்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(1) விதைகளும் காலத்திற்கு ஏற்றவாறு நோயின் வீரியத்தன்மை எவ்வாறு மாறுபடுகிறது.

(2) இனச்சேர்க்கை செய்யப்படும் புதிய இனங்களுக்குண்டான நோய் தாங்கும் சக்தி.

(3) பூஞ்சானக் கொல்லி மருந்துகளால் நோய்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது? பொதுவாக எண்ணெய்வித்துச் சாகுபடியாளர்களின் தேவைகளும் நடைமுறை சாத்தியக் கூறுகளும் நினைவில் கொள்ளப்படுகின்றன.

இந்நிலையத்தின் நோய்ப் பிரிவில் விவசாயிகளுக்கு உபயோகமான சில முக்கிய கண்டுபிடிப்புகள் இங்குச் சுருக்கமாகத் தரப்படுகின்றன.

நிலக்கடலை :

வேர் அழுகல் நோய் மற்றும் தூர் அழுகல் நோய் :

நம் நாட்டில் நிலக்கடலையின் சராசரி மகசூல் குறைவாக இருப்பதற்கு உரிய செடி நெருக்கம் இல்லாதது மிக முக்கிய காரணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறைந்த செடி நெருக்கத்திற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும் அந்த வேர் அழுகல் மற்றும் தூர் அழுகல் என்னும் பூஞ்சான நோய்கள் மிக முக்கியமான காரணமாகும். ஏனெனில், இந்நோய்கள் விதைகள் மூலமும் மண்ணின் மூலமும் பரவுவதால் இவை விதை முளைக்கும் பருவத்திலேயே தாக்கி விதைகளை முளைக்காமலேயே செய்து விடுகின்றன. விதைகள் முளைத்தபின் இப்பூஞ்சாணங்கள் வேர் பாகத்தையும், தூர் பாகத்தையும் தாக்கிச் செடியை வாடிவிடச் செய்யும். இவ்விரு நோய்களும் மானாவாரிப் பயிரிலும், இறவைப்பயிரிலும் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் இப்பொழுது பயிரிடப்படும் எல்லா ரகங்களும் இந்நோய்களுக்கு இலக்காகக் கூடியவையே.

இந்நோய்கள் வந்தபின் கட்டுப்படுத்துவது மிகக் கடினம். இந்நோய்களைக் கட்டுப்படுத்த எளிய, சிக்கனமான முறை விதை நேர்த்தி



நீலகிரி மாவட்டம் கூடலூர் என்ற இடத்தில், கூட்டுறவு முறையில் 5 ஆயிரம் எக்கர் நிலத்தில் தேயிலை பயிர் செய்து ஐந்து தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காகப் பத்துகோடி ரூபாய் ஒதுக்கப்படவிருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளில் 5,000 நிலம் இல்லாத ஏழைகள் மற்றும் இலங்கை அகதிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவார்கள். முதலில் இவர்களைக் கூலியாட்களாகச் சேர்த்து, பின்பு தேயிலைப் பயிர் வளர்ந்ததும் அவரவர் பறிக்கும் தேயிலையின் அளவிற்கு ஏற்ப அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படும். முதற் கட்டமாக ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள்.

செய்வதேயாகும். விதைக்கும் முன் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் திராம் என்னும் மருந்தைக் கலந்து விதைக்க வேண்டும். விதை நேர்த்திசெய்ய பாவிஸ்தீன் பைகளை உபயோகித்தல் நலம். இம்மருந்து வேர் அழுகல் மற்றும் தூர் அழுகல் நோய்களைக் கட்டுப் படுத்துவதால் மருந்து கலக்காத விதையினை விட 10 சதம் முளைப்புத்திறனை அதிகரிக்க வல்லது. பயிர் வளர்ந்தபின்னும் இந்நோய்கள் மிக அதிக அளவில் கட்டுப்படுத்தப்பட்டு மகசூல் அதிகரிக்கிறது.

டிக்கா நோய் :

டிக்கா என்னும் இலை நைவுப்புண் நோய் பயிர் 35 முதல் 45 நாள் வயதடையும்போது தோன்றி அதிகரித்துக்கொண்டே செல்லும். பல நைவுப்புண்கள் ஒன்று சேர்வதால் இலை கருகி உதிர்ந்துவிடும். இந்நோய் தண்டு மற்றும் காலைக்காம்பு ஆகிய பகுதிகளையும் தாக்கவல்லது. நைவுப்புண்ணிலுள்ள பூஞ்சான வித்துக்கள், காற்றின் மூலமும் தண்ணீரின் மூலமும் எடுத்துச் செல்லப்பட்டு, நோய் மேலும் மேலும் பரவுகிறது. இந்நோயினால் 20 முதல் 30 சதம் வரை மகசூல் பாதிக்கப்படுகிறது. அடர்கொடி ரகமான டி.எம்.வி. 10-க்கு இந்நோயை ஓரளவு தாங்கும் சக்தியுண்டு.

நோய் தவிர்த்தல் :

ஜூன் மாதம் ஆரம்பிக்கும் பருவமழைப் பருவத்தில் பருவமழை ஆரம்பித்த முதல் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்திற்குள் மணிலாவை விதைத்தால் டிக்கா நோயின் தாக்குதல் குறைவாகவுள்ளது. அதற்குப் பிறகு காலம் கடந்து விதைத்தால் டிக்காநோய் அதிகமாகத் தாக்குகிறது. எனவே, தென்மேற்குப் பருவமழைக்காலத்தில் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்திற்குள் மணிலாவை விதைத்தால் டிக்காநோயின் தாக்குதல் குறைவாகவுள்ளது. அதற்குப் பிறகு காலம் கடந்து விதைத்தால் டிக்கா நோய் அதிகமாகத் தாக்குகிறது. எனவே, தென்மேற்குப் பருவமழைக்காலத்தில் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்திற்குள் மணிலாவை விதைத்து டிக்காநோயைப் பெருமளவு தவிர்த்து மகசூலை அதிகரிக்கலாம்.

துருநோய் :

இந்நோய் தமிழ்நாட்டில் சமீப காலத்தில் தோன்றி நிலக்கடலைக்கு அதிக சேதத்தை விளைவித்துள்ளது. இலையின் அடிப்பாகத்தில் பழுப்பு நிறத்தில் சிறுசிறு கொப்புளங்களைப் போன்று தடித்திருக்கும். அதைத் தொட்டுப் பார்த்தால் பூஞ்சானவித்துக்கள் அதாவது கையில் இருப்புத் துருபோல் ஒட்டிக்கொள்ளும். இந்நோய் டிக்கா நோய் தோன்றியதும் அதாவது விதைத்த 40-45 நாள்களில் உண்டாகும்.

பூஞ்சான விதைகள் காற்றின் மூலமும் தண்ணீர் மூலமும் எடுத்துச் செல்லப்பட்டுமிக வேகமாக இந்நோய் பரவவல்லது. சிறிது குறைந்த வெப்பமும் அதிகமான காற்றின் ஈரப்பதமும் இந்நோய் வேகமாகப் பரவ உதவுகின்றன. தமிழ்நாட்டில் இப்பொழுது பயிரிடப்படும் ரகங்கள் எல்லாவற்றிலும் இந்நோய் தோன்றுகிறது. மானாவாரியிலும்

இறவைப் பயிரிலும் இந்நோய் காணப்படுகின்றன. இந்நோய் 50 சதம்வரை மகசூலைக் குறைக்கவல்லது.

நோய் தவிர்த்தல் :

டிக்கா நோயைப் போலவே துருநோயை ஓரளவு தவிர்ப்பதற்குத் தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்திற்குள் மணிலாவை விதைத்துவிட வேண்டும். இவ்வாறு விதைத்த மணிலாவைக் குறைந்த அளவே துருநோய் தாக்குகிறது. இதற்குப் பிறகு ஆகஸ்டு மாதத்தில் விதைத்த மணிலாவில் நோய் மிகுதியாகிறது.



நோய்த் தடுப்பு முறை :

இந்நோயைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு டைத்தேன் எம். 45 (600 கிராம்) கரையும் கந்தகம் (1.2 கிலோ) தாமிரக்கொல்லி மருந்து (600 கிராம்) விட்டாவாக்ஸ் (300 கிராம்) ஆகிய பூஞ்சானக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 300 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 45-ஆம் நாளிலும் 60-ஆம் நாளிலும் தெளிக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட முதல் மூன்று பூஞ்சானக் கொல்லிகள் டிக்கா நோயையும் கட்டுப்படுத்த வல்லது.

மணிலாவின் முக்கிய நோய்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த முறைகள் :

மணிலாவின் முக்கிய நோய்கள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி நல்ல மகசூலைப் பெற கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த முறைகளை கையாள வேண்டும்.

(1) வித்துநேர்த்தி: விதைக்குமுன் ஒரு கிலோ விதைக்கு திராம் 4 கிராம் வீதம் கலந்து விதைக்க வேண்டும். இது வேர் அழுகல் மற்றும் தூர் அழுகல் நோய்களைக் கட்டுப்படுத்தி நல்ல செடி நெருக்கம் இருக்க வகை செய்கிறது. இதனால் மகசூல் அதிகரிக்கிறது.

(2) பயிரில் மருந்து தெளித்தல்:

விதைத்த 45-ஆம் நாளிலும் 50-ஆம் நாளிலும் கீழ்க்கண்ட மருந்துகளில் ஏதாவது ஒன்றைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

டைத்தேன் எம். 45	ஏக்கருக்கு	600 கிராம்
கரையும் கந்தகம்	,,	1200 கிராம்
தாமிரப்பூசணக்கொல்லி	,,	600 கிலோ
கந்தகத்தூள்	,, ...	10 கிலோ

இவைகள் டிக்கா நோயையும் துருநோயையும் கட்டுப்படுத்த உதவும்.

என் :

சாம்பல் நோயும் (Powdery Mildew), ஆல்டெர்நேரியா என்னும் இலைநைவுப் புண் நோயும் எள்ளைத் தாக்கும் மிக முக்கிய பூஞ்சான நோய்கள். இந்நோய்கள் தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. இவைகள் 20 முதல் 30 சதம் வரை இவ்விருநோய்களுக்கும் இம்மகசூலைப் பாதிக்கின்றன. நம் மாநிலத்தில் பயிரிடப்படும் எல்லா எள் ரகங்களும் இவ்விரு நோய்களுக்கும் இலக்காகின்றன. இவ்விரு நோய்களையும் கட்டுப்படுத்தி எள் மகசூலை வெகுவாக அதிகப்படுத்த முடியும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நீலகிரியில் பொன்நிற நூற்புழுக் கட்டுப்பாட்டுத் திட்டம்

உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு வரும் பல நாடுகளில் கோல்டன் நெமடோட் (Golden Nematode) எனப்படும் பொன்னிற நூற்புழு கடுமையான சேதத்தை விளைவித்து வருகிறது.

இந்நூற்புழு முதன் முறையாக இந்தியாவில் நீலகிரி மாவட்டத்தில் 1961-ஆம் ஆண்டு பேராசிரியர் ஜோன்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பொன்னிற நூற்புழு ஆராய்ச்சி நிலையம் 1964-ஆம் ஆண்டு நீலகிரியில் உதகமண்டலத்தில் ஆரம்பிக்கப்பட்டு 1967-ஆம் ஆண்டு இந்திய ஜெர்மானிய நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1965-ஆம் ஆண்டில் நீலகிரியில் 800 ஏக்கர் நிலத்தில் இப்புழுவின் தாக்குதல் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. படிப்படியாக இப்பொன்னிற நூற்புழுவின் தாக்குதல் விதைக் கிழங்குகளின் மூலமாகவும், ஓடும் தண்ணீர், காற்று, விவசாயத்திற்குப் பயன்படுத்தும் கருவிகள், கால்நடைகள் மூலமாக இதர நிலங்களுக்குப் பரவி தற்சமயம் சுமார் 2,600 எக்டேர் நிலத்தில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நூற்புழு பாதிக்கப்பட்ட நிலங்களில் கிழங்குப் பயிரின் செடிகள் பகலில் வெயிலில் வாடியும், ஆணி வேர் வளர்ச்சியடையாமலும், கிளை வேர்கள் அதிகமாகவும் காணப்படும். தாக்கப்பட்ட வெண்ணிற முட்டைக் கூடுகள் காணலாம். இம்முட்டைக் கூடுகள் முதிர்ச்சியடைந்த பின் மண்ணில் விழுந்து விடுகிறது. இப்பொன்னிற நூற்புழு தாக்கப்பட்ட நிலத்தில் மகசூல் 80 சதவிகிதம் வரை குறையும். நூற் புழுவைக் கட்டுப்படுத்தக் கையாளும் முறைகள்:

நீலகிரியில் நூற்புழு தாக்கப்பட்ட நிலங்களில் 1971-ஆம் ஆண்டு முதல் 1976 வரை 5,600 ஏக்கர் நிலத்தில் டாசனிட் 10 சதவிகித குருணை மருந்து இந்திய ஜெர்மானிய நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தினரால் போடப்பட்டது. இதனால் உருளைக் கிழங்கின் மகசூல் அதிகரித்ததோடல்லாமல், நூற்புழுவின் தாக்குதல் சுமார் 80 சதவிகிதம் வரை குறைந்துள்ளதாக ஆராய்ச்சிகளின் மூலம் தெரிய வந்தது.

தொடர்ந்து நடத்தப்பட்டுவந்த ஆராய்ச்சிகளின் வாயிலாக டெமிக் 10 சத குருணை மருந்தை ஏக்கர் ஒன்றுக்கு 8 கிலோ வீதம் நடவின் போது பார்களில் இடுவதால் நூற்புழுவின் தாக்குதலைக் குறைத்தும், மகசூலை அதிகரித்தும் உள்ளது. இம்முறையில் டெமிக் மருந்தை உருளைக்கிழங்கிற்கு இடுவதால் ஒரு ஏக்கருக்கு ரூ.210 தான் செலவாகும்.

இது தவிர, ப்யூரடான் ஃப்ளோபல் 40 சதம் (Furadan Flowable) என்ற மருந்தின் கரைசலில் விதைக் கிழங்குகளை மூன்று நிமிடங்கள் ஊற வைத்து நடவு செய்வதன் மூலம் நூற்புழுவின் தாக்குதலைக் கட்டுப்படுத்த தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

நூற்புழு தாக்கப்பட்ட நிலத்திலிருந்து விதைப்பதற்கு எடுத்த விதைக் கிழங்குகளை, நூற்புழு தாக்கப்படாத நிலத்திற்கு விதைப்பதற்கு எடுத்துச் செல்லு முன் 'மிதைல் புரோமைடு' (Methyl Bromide) என்ற மருந்தை (காற்றுப்பட்டால் ஆவியாகும்) ஒரு டன் விதைக் கிழங்கிற்கு 60 மில்லி மருந்து என்ற விகிதத்தில் காற்றுப்புகாத தார்ப்பாயினுள் 5 மணி நேரம் வைத்திருப்பதன் மூலம், கிழங்குகளின் மீது ஒட்டியுள்ள முட்டைக்கூடுகள் கொல்லப்படுகின்றன என்பதும் கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையில் தரப்பட்டு வருகிறது.

இதுபோலவே 'கால்சியம் ஹைப்போ குளோரைடு (Calcium Hypochlorite) 9 சதவிகித கரைசலில் விதைக் கிழங்குகளை 30 நிமிடங்கள் ஊறவைத்து எடுத்து விதைப்பதன் மூலம், விதைக் கிழங்குகளின்மீது ஒட்டியுள்ள நூற்புழுவின் முட்டைக் கூடுகள் முழுமையாகக் கரைக்கப்பட்டு விடுகிறது என்பதும் தற்சமயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்ந்து ஆராய்ச்சியில் இருந்து வருகிறது.

எனவே, உருளைக்கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகள் நீர்போகம், கார்போகப் பருவங்களில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யும்போது டெமிக் 10 சத குருணை மருந்தை நடவின்போது பார்களில் ஒரு ஏக்கருக்கு 8 கிலோ வீதம் இட்டும், கடைபோகத்தில் பயிர் சுழற்சியைக் கைப்பிடித்து தானியப் பயிர்களையோ அல்லது காய்கறிகளையோ பயிரிடுவதன் மூலமும், விதைக்கிழங்குகளை வாங்கும்போது வேளாண்மைத் துறையின் ஆலோசனையைக் கேட்டும், பொன்னிற நூற்புழுவைக் கட்டுப்படுத்த ஈடுபட்டால் நீலகிரியில் உருளைக்கிழங்கு உற்பத்தி பெருகி நம் மாவட்டத்தில் வேளாண்மை வளம் செழிக்கும் என்பது உறுதி.

மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
மேலுரமிட மேன்மையான உரம்
ஸ்பிக் யூரியா

* அழகிய வெண்முத்து வடிவங்கள்
* அதிகத் தழைச்சத்து 46.2%
* மிகக் குறைவான பையூரெட்-0.3% தான்
* ஆசியாவிலேயே மிகப் பெரிய, ஸ்பிக் தொழிற்சாலையில் தயாராகிறது.

சிறப்பான யூரியா வேண்டுமா? ஸ்பிக் யூரியா என்று கேட்டுவாங்குங்கள்.

CAS SPIC 4 TM 77

சந்தனத்தின் கதை

குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என் நிலத்தை நான்கு வகையாகப் பிரித்திருக்கின்றனர் நமது முன்னோர். இதன் காரணமாகத் தான் உலகம் 'நானிலம்' என்றும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நான்கு நிலங்களிலும் காடும், காடு சார்ந்த பகுதிகளும் 'முல்லை' என வழங்கப் பெறுகின்றன.

நமது தமிழகத்தில் 'முல்லை' நிலப் பகுதிகள் செழிப்பாக உள்ளன. தமிழகத்தில் கான் வளம் அதிகம். இதை உணர்த்தும் வகையில்தான், பாவேந்தர் பாரதிதாசன் தனது நாட்டுப் பாடலில்,

அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அமைவாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நஞ்சை
முல்லைக் காடு மணக்கும் நாடு

என்று பாடியுள்ளார்.

பாவலர்களாலும், புலவர்களாலும் போற்றப்பட்டு வரும் வனச் செல்வமான 'சந்தனத்'தின் பெருமையை இக்கட்டுரை கூறுகிறது.

கட்பட்லா

பகர்தாத்

ஐஜ்போக்கல்

அனிபெக்கர்

செரியா

சாரிட்ருட்

இவையெல்லாம் என்ன? சுவையான இனிப்புப் பண்டங்களா? இல்லை! 'கமகம' வென மணம் தரும் சந்தன மரத்தின் திருநாமங்களே இவை!

சந்தனத்தின் மகிமை

சந்தனத்தின் மகிமையைச் சொல்லிக் கொண்டே போகலாம். அது மணத்துக்கு மட்டுமல்ல, மருந்துக்கும் பயன்படுவதை நாம் பார்க்கிறோம். வேனல் கட்டி, வேர்க்குரு போன்றவற்றுக்குச் சந்தனம் நல்ல மருந்தல்லவா? ஏந்தெழில் மிக்க ஏந்திழையைச் சந்தனச் சிலை என்கிறோம்: சந்தன நிறம் என்கிறோம். பூவோடு நார் சேர்ந்தாற் போல, சந்தன மரத்தோடு சேர்ந்த மற்ற மரங்களும் மணம் பெறும் என்று நீதி வெண்பா கூறுகிறது. ''சந்தனத்தைச் சேர்தருவுந் தக்க மணங் கமழும்'' என்கிறது அது.

'அரைக்கினும் சந்தனம் தன் மணம் குன்றுது அல்லவா? திருமணத்தில், விழாக்காலங்களில், பூசை வேளைகளில் சந்தனம் நமக்குப் பயன்படும் ஒரு முக்கிய பொருளாக—புனிதப் பொருளாகத் திகழ்கிறது.

பட்டு வேட்டியும், பட்டுச் சட்டையும் அணிந்து கொண்டு, நெற்றியில் ஒரு சிறு சந்தனப் பொட்டு இட்டால் போதுமே! அதன் அழகே தனி அல்லவா?

கோடைக் காலத்தில் நம் கை வசம் நல்ல சந்தனம் இருந்தால் போதுமே, கொடைக்கானலையே நம் வீட்டுக்குக் கொண்டு வரலாமே!

சந்தனத்தின் கதை . . .

மனத்துக்கு இன்பமூட்டி நம்மை மகிழ்விக்கும் மணக்கும் சந்தனத்துக்கும் ஒரு கதை உண்டே!

தமிழ்நாட்டில் வனத் துறையின் கீழுள்ள காட்டின் மொத்தப் பரப்பளவு 20,844 சதுர மீட்டராகும். இதில் 17,300 சதுர கிலோ மீட்டர் ஒதுக்குக் காடாகவும், எஞ்சிய 3,544 கிலோ மீட்டர் ஒதுக்கு நிலமாகவும் உள்ளது.

இயற்கை வளம் மிக்க காடுகள் இன்றியமையாத பல செல்வங்களை நமக்கு வாரி வழங்குகின்றன. அவற்றுள் ஒரு முக்கிய பொருளாகத் திகழ்வது சந்தன மரம்.

இயற்கைச் சந்தன மரங்கள் வடார்க்காடு, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம் மாவட்டங்களில் வளர்கின்றன. மேலும், திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சைமலைக் குன்றுகளிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அழகர் கோயில் பள்ளத் தாக்கிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றால மலையிலும் சந்தன மரங்கள் வளர்கின்றன. மதுரை மாவட்டத்தில் சிற்சில இடங்களில் சந்தன மரங்கள் காணப்படுகின்றன.

ஜவ்வாது மலையில் . . .

தமிழ்நாட்டில் சந்தனக் கட்

டைகள் மிகுதியாகக் கிடைப்பது, வடார்க்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலையில்தான். திருப்பத்தூரையும், வேலூரையும் தலைமை இடங்களாகக் கொண்டு உள்ள இரண்டு கோட்டங்களின் கீழ் ஜவ்வாது மலை வருகிறது.

வேலூர்க்கோட்டத்தில் சந்தன மரக் காடுகளின் பரப்பு அளவு 21,653 எக்டேரும், திருப்பத்தூர்க் கோட்டத்தில் 65,144 எக்டேரும் ஆகும். ஆக, ஜவ்வாது மலையில் உள்ள சந்தன மரக்காட்டின் மொத்தப் பரப்பு 85,000 எக்டேர் ஆகும்.

இந்த இரண்டு கோட்டங்களிலிருந்தும் 1974-75 முதல் 1976-77 முடிய ஏலத்தில் விற்கப்பட்ட சந்தனக் கட்டைகளின் அளவும், கிடைத்த வருவாயும் வருமாறு :

1974-75ல், 721 டன், ரூ. 3,72,81,000. 1975-76ல், 1,185 டன், ரூ. 2,41,92,000. 1976-77ல், 1,450 டன், ரூ. 5,73,23,000.

வருவாயில் முதன்மை!

வனச் செல்வங்களில் சந்தன மரம் முக்கிய இடம் பெறுவது போல, வருவாயிலும் அது முதன்மை பெற்று வருகிறது. ஆண்டுதோறும் சுமார் 1,500 டன் சந்தனக் கட்டைகள் ஏலத்தில் விற்கப்பட்டு ரூ. 5 கோடிக்கும் மேலாக வருவாய் வருகிறது. சந்தனக் கட்டைகள் திருப்பத்தூர், சத்தியமங்கலம் ஆகிய இடங்களிலுள்ள அரசுக் கிடங்குகளில் ஏலம் விடப்படுகின்றன.

சந்தனத் தைலம்!

சந்தன மரங்களில் சுமார் 16 வகைகள் உள்ளன. இவற்றில் உயர்ந்த வகையைச் சேர்ந்தவை கட்பட்லா (Ghat Badla), பக்ரதாத் (Bagradad) சந்தனக் கட்டைகளாகும். இவற்றின் தற்போதைய மதிப்பு டன் ஒன்றுக்கு 88,000 ரூபாயாகும்.

சந்தனக்கட்டையினை ஏலத்தில் விற்பதற்குப் பதிலாக, சந்தனத் தைலம் தயாரிக்கும்தொழிற்சாலை ஒன்றினை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தத் தொழிற்சாலை வடார்க்காடு மாவட்டத்தில் அமையும். இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். அடுத்த ஆண்டு மத்தியில் உற்பத்தி தொடங்கும் சந்தன மரத்திலிருந்து கழிக்கப்படும் பகுதிகள் (Sap Wood) ஊதுவத்தி முதலான வாசனைப் பொருட்கள் செய்யப்பயன்படும்.

செயற்கை முறையில . . .

வனத் துறையின் வருவாயில் 40 சதவீதத்திற்கும் மேல் சந்தன மர விற்பனை மூலமே கிடைக்கிறது. சந்தன மரம் மேலும் வளம் கொழிக்க, தக்க இடங்களில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்க்கப்படுகிறது.

1977-78ஆம் ஆண்டில் 8.43 இலட்சம் ரூபாய் செலவில் 200 எக்டேர் பரப்பில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்ப்பு மற்றும் இயற்கைச் சந்தனக் காடுகளில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

1978-79ஆம் ஆண்டில் 169 எக்டேர் பரப்பில் சந்தன மரம் வளர்ப்பும், மற்றும் 840 எக்டேரில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ள ரூ. 10.89 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடத்தலைத் தடுக்க . . .

அழகு இருக்கிற இடத்திலே ஆபத்தும் இருக்கும் என்பார்கள். அதைப் போல, அதிக விலை மதிப்பு வாய்ந்த பொருளுக்கும் ஆபத்து இருப்பது இயல்புதானே? ஆம். விலை மதிப்பு மிக்க சந்தன மரக் கட்டைகள் கடத்தப்படுவதை அடிக்கடி நாம் செய்தித்தாள்களில் படிக்கிறோம். அதனால் அரசுக்குப் பெருமளவு இழப்பு ஏற்படுகிறது.

ஆகவே, சந்தன மரக் காடுகளைச் சீரிய முறையில் பாதுகாத்திட, தற்போதுள்ள நிர்வாக அமைப்புக்களைத் தக்கவாறு மாற்றியமைத்து, திருவண்ணமலையில் இதற்கென தனியே ஒரு கோட்டத்தினை ஏற்படுத்தவும் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இத்திட்டம், கோவை வட்டத்திலும் சந்தன மரப் பகுதிகளைக் காக்கக் கூடுதலாகக் காப்பு ஆட்கள் நியமிக்கத் தனி இயங்கு குழுக்களை ஏற்படுத்தவும், வாகனங்கள் போன்ற போக்குவரத்து வசதிகளைத் தரவும், ஆயுதங்கள் வழங்கவும் வகை செய்கிறது.

வெள்ளையரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்திய தீரர் திப்புசுல்தான், நாட்டின் வளத்தினைப் பெருக்குவதில் மிகுந்த அக்கறை காட்டினார். வேளாண்மையே நாட்டின் உயிர்நாடி என்பதை அவர் வலியுறுத்தினார். நாட்டின் செல்வச் செழிப்புக்கான பயிர்களை வளர்க்க வேண்டும் என்பதிலே மிகவும் கண்டிப்பாக இருந்தார்.

தம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு 1788-ஆம் ஆண்டில் ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். 'கரும்பு, கமுகு, தென்னை ஆகியவைகளைப் பயிரிட்டு வளர்ப்போருக்கு வரிச் சலுகை காட்டுவதாகவும் உள்நாட்டுத் தேவைக்காகவும் வெளிநாட்டு ஏற்றுமதிக்காகவும் தேக்கு, சந்தன மரங்கள் முதலியவைகளைப் பயிரிட வேண்டும்; அவைகளை மிகவும் கவனத்துடன் பாதுகாத்து வரவேண்டும்' என்றும் கட்டளை பிறப்பித்தார்.

கடத்தலின் கதை!

சந்தன மரங்கள் எப்படிக் கடத்தப்படுகின்றன?

கடத்தல்காரர்களின் கையாட்கள் கட்டைகளைத் திருடி காடுகளில், மலைப் பகுதிகளில், குளத்தில், ஆற்றங்கரைகளில், கிணற்றில், சாலையோர வயல்களில் மறைத்து வைக்கின்றனர். அங்கிருந்து அவை பழக்கூடையாகவும், உதிரிப் பொருட்கள் வடிவிலும் பொய்யான அடையாளத்துடன் வெளியே வருகின்றன. பிறகு, அவை கார்கள் மற்றும் ரயில்கள் மூலமாக திருச்சி, சென்னை, திருச்சூர், கள்ளிக்கோட்டை, ஐதராபாத், கல்கத்தா முதலிய இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

சில நேரங்களில் சில மனிதர்களால் சந்தன மரம் படாதபாடு படுகின்றது! அது சிறு கட்டைகளாக வெட்டப்பட்டு, துணி மூட்டை போன்று காட்சி அளிக்கும்! அந்த மூட்டைகள் சரக்கு வண்டிகள் மூலமாக திருச்சூர், மைசூர், பம்பாய், திரிபுரா போன்ற வடகிழக்கு எல்லையோரப் பகுதிகளுக்குப் பயணம் செய்கின்றன!

விழிப்புடன் செயலாற்று . . . !

ஆகவே, கடத்தலைத் தடுக்கப் பணியாளர்களை விழிப்பாக இருக்கும்படியும், சரக்கு வண்டிக் கிடங்குகளை அடிக்கடி கண்காணிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வனத்துறை அமைத்த 'சந்தன மர ஆய்வுக் குழு' தந்த கருத்தின் அடிப்படையில், கடத்தல் பற்றித் தகவல் தருவோருக்குத் தாராளமாகப் பரிசு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 65 டன்கள் சந்தனக் கட்டைகள் சம்பந்தப்பட்ட 745 வனக் குற்றங்கள், வனத் துறைச் சிப்பந்திகளால் கண்டு பிடிக்கப்பட்டனவாம்.





கடந்த இரண்டு ஆண்டுகளில் இங்கு 19 அம்பாசிடர் கார்கள் கைப்பற்றப்பட்டனவாம்.

காடுகளைக் காத்திட . . .

விலை மதிப்புள்ள சந்தன மரக் காடுகளைக் காப்பதற்கென்றே சேலம், தர்மபுரி, வேலூர், திருப்பத்தூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமையகமாகக் கொண்டு ஏழு இயங்கு குழுத் தனிப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

இக்குழுக்கள் சந்தன மரம் நிறைந்த காட்டுப் பகுதிகளில் அங்குமிங்கும் சுற்றி, சந்தன மரம் திருடுவோரைக் கையும் களவுமாகப் பிடிக்கின்றன. இத்துடன்கூட வனச் சோதனைச் சாவடிகள், மற்றத் துறைகளைச் சார்ந்த சோதனைச் சாவடிகள் ஆகியவையும் சந்தன மரக் களவையும், கடத்தலையும் கண்காணிக்கின்றன. அதோடு காவல் துறையின் உதவியும் பெறப்பட்டு உள்ளது.

சந்தன மரக் கடத்தல் குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்கிட, திருத்திய வனச் சட்டத்தில், மூன்று ஆண்டுகள் கடுங்காவல் அல்லது 10,000 ரூபாய் அல்லது இரண்டும் விதிக்க வகைசெய்யப்பட்டுள்ளது.

எனவே, காடு வளர கை கொடுப்பதை விடுத்து, ''கை வரிசை''யைக் காட்டுவது நல்லதல்லவே! நம்முடைய நலம் நாடும் நல்லரசுக்கு, நல்லாதரவு நல்கினால்தானே நாடு வளம் பெறும், வீடும் நலம் பெறும்!

விவசாயிகளுக்குப் பெருநஷ்டத்தை விளைவிக்கும் எதிரி— எலி

எலித்தொல்லையை அறவே நீக்க ஒரே வழி ரோடா:ஃபாரின்

(ஆன்டிகோவாகுலன்ட்)

rodafarin 'C'

KILLS TO THE LAST RAT



மிசோராமில் பஞ்சத்திற்கு அடிப்படையான காரணம் எலிகளின் நாசவேலைதான். எலிகள் விவசாயிகளின் முதல் எதிரி என்றும் அவை அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடும் விஷம் மூலம் உடன்கொல்லும் சக்திபெற்ற மருந்து கலந்த இரையை எலிகள் நாளடைவில் கண்டுகொண்டு ஒதுக்கிவிடுவதால், அவை பயனற்றுப் போகின்றன. இந்நிலையில், பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) நிறுவனத்தினர் ஆராய்ச்சியில் பெரும் முன்னேற்றம் கண்டு, எலிகளை அறவே ஒழிக்க வல்ல ரோடாஃபாரினைத் தயாரித்திருக்கிறார்கள்.

ரோடாஃபாரின் உடன் கொல்லும் மருந்தல்ல. அதுவேலை செய்யும் முறையாவது, எலிகளின் ரத்த நாளங்களிலிருந்து ரத்தப் போக்கை ஏற்படுத்தி, அதே சமயம் ரத்தம் விரைவில் உறையாவண்ணம் செய்து, மெதுவாக ஆனால் நிச்சயமாக உயிரைப் போக்கிவிடுவதேயாகும். ரோடாஃபாரின் கலந்த இரை அதிகச் செறிவு இல்லாததாலும், விஷம் கடுமையாக இல்லாததாலும் எலிகள் இவ்விரையைத் தவிர்க்காமல், உட்கொண்ட மூன்றும் நாளிலிருந்து இறக்கத் தொடங்குகின்றன. குறிப்பாக, அதிகச் சேதம் ஏற்படுத்தும் வரப்பு எலிகள் 24 மணி நேரத்திற்குள்ளேயே இறந்து விடுகின்றன. ஆனால் ரோடாஃபாரின் கலந்த இரை தற்செயலாக மனிதர்களாலோ, வளர்ப்புப் பிராணிகளாலோ, கால்நடைகளாலோ உட்கொள்ளப்பட்டாலும் தீங்கு விளைவிக்காது.

ரோடாஃபாரினின் முற்றிலும் பயன்தரும் வேலைத்திறன், பல கிராமங்களில் நிரூபிக்கப்பட்டு விட்டது. குறிப்பாக, லட்சத் தீவில் ரோடாஃபாரின் உதவியுடன் எலிகளை முழுமையாக ஒழித்த பின் அங்கு தேங்காய் விளைச்சல் 150 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

ரோடாஃபாரின்*—எலிகளின் எதிரி.
விவசாயிகளின் நண்பன்.

*உலகெங்கும் வார்ஃபாரின் என்ற மறுபெயர் கொண்டது.

FDS PCI 2750 TAM

பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) பி. லிட்.,

28, எர்ரபாலுச் செட்டித் தெரு, த. பெ. எண். 102, சென்னை 600 001. தொலைபேசி எண்: 24266, 24267.
177, ஜெயில் ரோடு, த. பெ. எண். 3774, கோயமுத்தூர் 641 018. தொலைபேசி எண்: 25975.
53, அமெரிக்கன் கல்லூரிக் கட்டிடம், த. பெ. எண் 53, அழகர்கோயில் ரோடு, மதுரை 625 002. தொலைபேசி எண். 30440.

பி.ஸி.ஐ. ஈ.டி.பி. ஆம்ப்யூல்

சேமித்து வைத்திருக்கும் தானியங்களை பூச்சிபூண்டுகளின் தொல்லையிலிருந்து எளிதான முறையில் சிறப்பாகக் காக்க.

எங்கும் கிடைக்கிறது.

பறவைகளே! பறவைகளே!

பறவை இடம் பெயர்தல் அல்லது வலசை போதல் பறவை உலகத்தில் ஒரு வியப்புக்குரிய நிகழ்ச்சி. இதில் விளக்கப் பெறுபல அம்சங்கள் பரம இரகசியமாகவே இருந்து வருகின்றன.

ஆண்டுக்கொரு முறை பல்லாயிரக் கணக்கில் பலவிதப் பறவைகள் குளிர்காலத்தில் வடக்கேயிருந்து தெற்கே வந்து தங்கி அதே பறவைகள் கோடை ஆரம்பிப்பதற்கு முன் வடதேசங்களுக்குச் செல்கின்றன.

பரந்த கடல்களுக்கு மேலும், உயர்ந்த மலைகளுக்கு மேலும் பல ஆயிரம் மைல் தூரத்திற்கு இவ்விடப் பெயர்ச்சி நடக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பிரதேசத்திலிருந்து மற்றொரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குச் சென்று திரும்பி வருதல், வரும் நேரம், இடம் முதலியவை சிறிதும் மாறுவதில்லை. திட்டவட்டமாகச் சொல்லக் கூடியதாக இருக்கின்றன. எந்த இடத்திலிருந்து கிளம்பியதோ கிட்டத்தட்ட அதே இடம் அல்லது தோட்டம் அல்லது நீர் நிலைகளுக்குத் திரும்பி அடைகின்றன.

இப்பயணம் மேற்கொள்ள அவற்றைத் தூண்டுவது எது? ஏன் இவ்வித ஆபத்துக்கள் நிறைந்த பயணம்? எந்த மார்க்கங்களில் போக வேண்டும், எவற்றின் வழி திரும்ப வேண்டும் என்று எப்படி அவைகளுக்குத் தெரிகிறது?

பறவைகளைப் பிடித்து வளையங் கட்டிவிடுதல் சோதனைச்சாலையில் ஆராய்ச்சி நடத்துதல் முதலியவற்றால் பல உண்மைகளை அறிந்திருக்கின்றோம். எனினும் அடிப்படைக் கேள்விகளுக்கு முழுத் திருப்தி தரும் பதில் இன்னும் கிட்டவில்லை.

வடகோளத்தில் கூடு கட்டி குஞ்சு பொரித்த இடங்களிலிருந்து இறை தேடி உண்ண தெற்கு நோக்கி வருகின்றன. தென் கோளத்தில் தாங்களே குறிப்பிட்ட இடங்களில் தங்கியிருந்து மறுபடியும் வடபிரதேசங்களில் குளிர் ஒய்ந்து பணி உறையும் காலத்தில் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று விடுகின்றன. இம்மாதிரி வடக்கே இனப் பெருக்கம் தெற்கே வந்து தங்கிச் செல்லும் பறவையினங்கள், வரித்தலை வாத்து, சிறவி ஜாதிகள், வாத்து இனங்கள் முதலிய தண்ணீர்ப்பறவைகளும், வயிரி வம்சத்தைச் சேர்ந்த ஹாரியர் (Horrier) என்ற பறவைகளும் டெர்ன் (Tern) என்று சொல்லப்படும் பலவித கடற்கரைப் பறவைகளும், சில வாலாட்டிக் குருவிகளும், தமிழ்நாட்டிற்கு கிழக்கு ஐரோப்பா மற்றும் இரஷ்யப் பகுதிகளிலிருந்து வந்து போகின்றன.

ஆர்டிக் டெர்ன் (Arctic Tern) என்னும் வடதுருவ கவிட்டை வரல் வடதுருவத்திலிருந்து தென்துருவத்துக்கும், தென் துருவத்திலிருந்து வட துருவத்துக்கும் ஆண்டுதோறும் 35,000 கிலோ மீட்டர் தூரம் பறக்கிறது தமிழ்நாட்டில் முகவரி எழுதிய அலுமினிய மோதிரங்கள் இட்ட காட்டு வாத்துக்கள் சில 4,800 கிலோ மீட்டர்களுக்கு அப்பால் சைபீரிய நாட்டில் பிடிபட்டிருக்கின்றன.

இவ்வித நீண்ட தூர இடப் பெயர்ச்சி ஆரம்பிப்பதற்குப் பல நாட்களுக்கு முன்பே அதிக உணவை உட்கொண்டு உடலில் கொழுப்புச் சத்தைச் சேர்த்துக் கொள்கின்றன. பறந்து செல்லும் பல நாட்களின் போது இவ்வாறு சேர்த்து வைத்த கொழுப்பே சக்தி அளிக்கிறது.

பகலில் சூரியனின் திசையும் இரவில் விண்மீன்களுமே திசையறியும் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று ஆராய்ச்சி மூலம் தெரியவருகிறது. இப்பயணிகள் சுமார் 600 மீட்டர் முதல் 1300 மீட்டர் உயரத்தில் பறந்து செல்வதால் தரையிலுள்ள குறிகளை அவைகள் அவ்வளவாகப் பயன்படுத்த முடியாது என்று தெளிவாகிறது.

இது தவிர இவ்வாறு கண்டம் விட்டுக் கண்டம் போகும் பயணம் தவிர மலை உச்சியிலிருந்து கீழும் குறிப்பிட்ட இடங்களிலிருந்து சில மைல்களுக்கு அப்பால் குறிப்பிட்ட இடங்களுக்கும் சில பறவையினங்கள் இடப்பெயர்ச்சி செய்கின்றன.

அஞ்சலக இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

மத்திய, மாநில அரசு ஊழியர்களை அழைக்கிறது

5 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள்
அஞ்சலக இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் ஏற்கெனவே இன்ஷ்யூர் செய்துள்ளார்கள்.

அதற்குக் காரணம்:

- குறைந்த பிரிமியம், ஓராண்டுப் பிரிமியத் தொகையை முன்பணமாகச் செலுத்துபவர்களுக்குத் தள்ளுபடி உண்டு.
- அதிக போனஸ் அளிக்கப்படுகிறது (தற்சமயம் அறக்கட்டளைகள், தனிப் பட்டவர்கள் ஆகியோரின் இன்ஷ்யூர் தொகைக்கு ரூபாய் 100—க்கு ஆண்டு ஒன்றுக்கு முறையே ரூ. 25, ரூ. 33 வீதம் வழங்கப் படுகிறது.
- பிரிமியத் தொகை சம்பளப் பட்டியலிலிருந்தும் ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

  ரொக்கமாகவும் பெற்றுக் கொள்ளப்படுகிறது.
- வருமான வரியில் தள்ளுபடி பெறுவதற்குரிய தகுதி பிரிமியம் செலுத்து வோருக்கு உண்டு.
- கடன் தொகைகள், கோரிக்கைத் தொகைகள் விரைவில் வழங்கப் படுகின்றன.

உங்களது பாலிசிக் கணக்கு—
நீங்கள் பணிபுரியும் மாநில அஞ்சல் துறைத் தலைவரால் நிர்வகிக்கப்படுகிறது.

நீங்கள் மாற்றல் ஆகும்போதெல்லாம்
உங்கள் மாநில அஞ்சல்துறைத் தலைவருக்குத் தயவுசெய்து தகவல் கொடுங்கள்.

உங்களது குடும்பத்தினரின்
பாதுகாப்பிற்காகவும்
முன்னேற்றத்திற்காகவும்
அஞ்சல் இன்ஷ்யூரன்ஸ்
திட்டத்தில் சேருங்கள்.

மேலும் விவரங்கள் அறிந்து கொள்ள
உங்கள் மாநில அஞ்சல்துறைத்
தலைவருக்கு எழுதுங்கள் அல்லது
அவருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

''உட்காக்'' என்னும் காட்டுக் கோழி இமயமலைச்சாரலில் கூடு கட்டிப் பெருகி தமிழ்நாட்டில் நீலகிரி, கொடைக்கானல், வந்து திரும்புகின்றன. அவ்வாறே ''இந்தியன் பிட்டா'' என்ற காசிக்கட்டுக்குருவி இமயமலைச் சாரலிலிருந்து குளிர் மலைக்காலங்களில் நமது தமிழ்நாட்டில் கடற்கரையோர மாவட்டங்களுக்கு வந்து தங்கிவிட்டு மறுபடியும் வடக்கே செல்கின்றன. இவ்வினத்திய பெருங்கூட்டங்கள் இலங்கைத் தீவுக்கும் சென்று திரும்புகின்றன. செங்கால் நாரை அல்லது பூநாரை என்ற பெரிய பறவை கூடுகட்டிக் குஞ்சு பொரிப்பது குஜராத்தைச் சேர்ந்த கச்சுப் பகுதியில் இவை ஆயிரக் கணக்கில் ''புலிகாட்'' ஏரிச்சார்பிலும், வேதாரண்யத்திற்கு அருகிலும் ஆண்டுதோறும் தங்கியிருந்து பின் செல்லுகின்றன.

இக்குறுகிய வரலாற்றினின்று பறவையின இடப்பெயர்ச்சி எவ்வளவு வியக்கத்தக்க இயற்கை நிகழ்ச்சி என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

பறவையினங்களில் இடப் பெயர்ச்சி அல்லது வலசை போகுதல் என்ற வியக்கத்தக்க

வனவிலங்கு வார விழா!

வனவிலங்கு வார விழா இவ்வாண்டு அக்டோபர் முதல் வாரத்தில் கொண்டாடப்படுகிறது. வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் பற்றி பொதுமக்களிடையே பரப்புவதை மையக் கருத்தாகக் கொண்டு இவ்விழா கொண்டாடப்படுகிறது.

வனவிலங்கு வார விழாவின்போது வனவிலங்கு சம்பந்தமாக நடக்கவிருக்கும் அறிவு விளக்கப் பணிகள் விழாவின் முக்கிய அம்சமாகும். பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் கீழ்க்கண்ட வனவிலங்கு பாதுகாப்பு உறுதி மொழியை இந்த வனவிலங்கு வார விழாவின்போது எடுத்துக் கொள்வார்கள்.

உறுதிமொழி:

''மனித நாகரிகத்திற்கு அடித்தளமாக உள்ள இயற்கையின் படைப்புகளைப் பாதுகாப்பதிலுள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து, அழிந்து கொண்டிருக்கும் வன விலங்குகளைப் பாதுகாப்பதிலும், குறைந்துகொண்டு வரும் காட்டு வளத்தைப் பாதுகாப்பதிலும் முயற்சி எடுப்பேன் என உறுதி கூறுகிறேன்.''

ஆண்டுதோறும் நடக்கும் நிகழ்ச்சியைப் பற்றி இரண்டுவித ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

ஒருவித ஆராய்ச்சி கிளம்பும் இடம், பயணவழி, தங்குமிடம், திரும்பிச் செல்லும் வழி, போய்ச் சேருமிடம் முதலியவற்றைப் பற்றியது.

இரண்டாவது வித ஆராய்ச்சி காலா காலத்தில் பயணம் மேற்கொள்ளத் தூண்டுவது எது, எவ்விதமாக அவை ஒரே திசையைக் கையாண்டு வழக்கமான இடங்களை அடைகின்றன என்பது பற்றியுமாகும்.

முதற்சொன்ன ' ஆராய்ச்சி, பறவைகளை வலைகளாலும் பொறிகளாலும் பிடித்து, அவைகளின் உருவத்திற்கேற்ப செய்து வைத்த அலுமினியம் தகடுகளாலான மோதிரங்களை ஒருவிரலில் மாட்டிவிட்டு விடுதல்; இம்மோதிரங்களில் வரிசை எண்ணும், மோதிரமிட்ட குழுவின் சுருக்கெழுத்தும், பிடி பட்டால் தெரிவிக்க வேண்டிய முகவரியும் பொருத்தப்பட்டிருக்கும்.

Bombay Natural History Society குழுவினரால், நடத்தப்பட்ட பறவைய்யின இடர்ப்பெயர்ச்சி ஆராய்ச்சியில் *160* **BNHS —Reports to BNHS Bombay** என்று குறிப்பிருக்கும். முதல் குறித்த நம்பரிலிருந்து ஆவணங்களைப் பரிசோதித்தால் எந்த தேதியில், எந்த இடத்தில், எந்த இனப் பறவை பிடிக்கப்பட்டு, மோதிரமிட்டு விடப்பட்டது என்று விளங்கும்.

இவ்வாறு மோதிரமிட்டு விடப்பட்ட பறவைகள் பயணத்தின் போதோ அல்லது பயணம் முடிந்த பிறகோ அல்லது திரும்பி வரும் பொழுதோ அல்லது பல காலங்களுக்குப் பிறகோ பிடிபடும்; அல்லது சுடப்படும். கண்டு எடுத்த மோதிரத்திலிருந்து வேண்டிய முகவரிக்குத் தெரிவித்தால் ஆவணங்களிலிருந்து அந்தப் பறவையின் பயண வரலாறு அறியலாம்.

இவ்வாறு **Bombay Natural History Society** ஆராய்ச்சிக் குழுவினரால் மோதிரமிட்டு அனுப்பிய பறவைகளில் பல பறவைகள்

இரஷிய நாட்டில் பிடிபட்டிருக்கின்றன. இவ்வித ஆராய்ச்சிக் குழுக்கள் பல மேற்கத்திய நாடுகளிலும் இரஷ்யாவிலும் நமது நாட்டிலும் ஆராய்ச்சி நடத்திக் கொண்டு வருகின்றன. இந்த வளையமிடுதல் ஆராய்ச்சியிலிருந்து தெளிவான விஷயங்களின் கோர்வையிலிருந்து பல பறவையினங்களின் பயண வரலாறு தெளிவாகிக் கொண்டு வருகிறது.

மற்றொரு ஆராய்ச்சி, பறவைப் பயணிகள் எவ்விதத் தூண்டுதலில் எவ்வாறு பயணத் திசையை நிர்ணயிக்கின்றன என்பதாகும். இதற்கு ஒரு பெரிய செயற்கைக் கோளம் ஒன்றை அமைத்து அதனுள் இயற்கை விதிக்கேற்ப, விண்மீன்கள் போன்றும் சூரிய சந்திரன் போன்றும் விளக்குகளை அமைத்தார்கள். இக்கூண்டிற்குள் சில பறவைகளையும் விடுவித்தனர். நாள்தோறும் இப்பறவைகளைக் கவனித்து, காலா காலத்தில், அவைகள் நோக்கும் திக்கும், பறக்க ஆரம்பிக்கும் திசை முதலியவைகளைக் கவனித்து விண்மீன்களையும் சூரியனையும் கொண்டே பறவையினங்கள் திசை நிர்ணயிக்கின்றன என்று கண்டுபிடித்தார்கள். இவ்வித ஆராய்ச்சியை நடத்திக்கொண்டு இருப்பவர் 'அமெரிக்கர்கள்'.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.



7
COMMISSIONER ...
ARCHIVES AND ... ACH
7 ... 1978
SCHOOL, MADRAS-8.

முகப்பு

தமிழரசு

மலர் : 9
இதழ் : 9
1-11-1978

தென்பாண்டி மண்டலத்தின்— பிற்படுத்தப்பட்ட மக்களின் தன்னேரில்லாத் தலைவராகவும், நாட்டு விடுதலைப் போராட்டத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராகவும் திகழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தமிழக அரசு அப்பெருமகனாருக்கு இவ்வாண்டு சீரோடும் சிறப்போடும் விழா எடுத்துள்ளது. பசும்பொன் தேவர் பிறந்த நாள் 30-10-1908; அன்னார் மறைந்த நாள் 30-10-1963. நலிந்து கிடக்கும் மக்களின் வாழ்விலே நம்பிக்கை ஒளி ஊட்டவும், நாட்டு விடுதலைக்காகவும் நாளெல்லாம் பாடுபட்ட அந்த வீரத் திருமகனாரின் திருஉருவப் படத்தை இவ்விதழின் முகப்பில் வெளியிடுவதில் 'தமிழரசு' பெருமை கொள்கிறது.

பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்— தமிழ்நாடு அரசு அமலாக்குகிறது.

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு ஏற்று, அதனை நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்மொழி எழுத்துத் தொகுதி எளிதில் கையாள முடியாதபடி அதிகமாக உள்ளதால், அச்சிடுதல், தட்டச்சு செய்தல் போன்றவற்றில் அதிக நேரம் விரயம் செய்யப்படுவதைத் தவிர்க்கும் வகையில் தமிழ் எழுத்துத்தொகுதிகளில் சீர்திருத்தம் தேவை எனப் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள், தமது வாழ்நாளில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கையாண்டு வந்ததுடன் அதனை அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மிகவும் வலியுறுத்தி வந்தார். அதனை நடைமுறைப்படுத்த தக்க ஆணை வெளியிட வேண்டி, பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவினர் அரசைக் கேட்டுக் கொண்டனர்.

பெரியார் நூற்றாண்டு விழாவினை 18-9-78 அன்று ஈரோட்டில் தொடங்கி வைத்து பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு செயற்படுத்துமென தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநரும் பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வர, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிப் பரிந்துரை செய்துள்ளார்.

தமிழக முதல்வர் அறிவிப்பிற்கிணங்கவும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநரின் பரிந்துரையை ஏற்றும், சீர்திருத்திய எழுத்துக்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சீர்திருத்திய தமிழ் எழுத்து வடிவங்கள் அனைத்து அரசு அலுவலகங்களிலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும், உள்ளாட்சித் துறை வரம்பிற்குட்பட்ட நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலும் தமிழக அரசின் வரம்பிற்குட்பட்ட வாரியங்கள், கழகங்கள், நிறுவனங்களிலும் பின்பற்ற வேண்டும்.

தமிழ் மொழியில் வெளிவரும் நாளிதழ்களும் பருவ ஏடுகளும், தமிழ்ப் புத்தகம் வெளியிடுவோரும், அச்சிடுவோரும் சீர்திருத்திய தமிழ் எழுத்து வடிவங்களைக் கையாள வேண்டுமென அரசு பரிந்துரை செய்துள்ளது. தமிழக அரசு வெளியீடுகளிலும் அரசிதழ்களிலும், மற்றும் தமிழில் அச்சிடப்படும் எல்லா இனங்களிலும் சீர்திருத்திய எழுத்து வடிவங்கள் கையாளப்படும்.

நடைமுறையிலுள்ள எழுத்துக்கள்	சீர்திருத்திய எழுத்துக்கள்
ஐ	அய்
ஔ	அவ்
ணா	ணா
றா	றா
னா	னா
ணை	ணை
லை	லை
ளை	ளை
னை	னை
ணொ	ணொ
றொ	றொ
னொ	னொ
ணோ	ணோ
றோ	றோ
னோ	னோ

சிறுகுடும்ப நெறி செழிப்புக்கு வழி!

குடும்பநலத் திட்ட இருவார விழா இவ்வாண்டு அக்டோபர் 16 முதல் 31 வரை இந்தியப் பெருநாடு முழுவதும் நடைபெற இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இவ்விழாவில் தொடர்பு கொண்டு குடும்ப நலக் கோட்பாடுகள் குறித்துச் சிந்திக்கவும் கருத்துரை பரிமாறிக் கொள்ளவும் இதை நல்லதொரு வாய்ப்பாகக் கருதுகிறேன்.

குடும்பநலத் திட்டத்தின் நோக்கமும், கொள்கையும் நல்ல குடும்ப அமைப்பைக் கொண்டதாக நாடு விளங்க வேண்டும் என்பதாகும். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்ருர் பாவேந்தர் பாரதிதாசன். அப்படிப்பட்ட நல்ல குடும்பங்களை, அதாவது திட்டமிட்ட குடும்பங்களைக் காணும் முயற்சியிலேயே குடும்ப நலத் திட்டம் செயலாற்றி வருகிறது. திட்டமிட்ட குடும்பங்களைக் கொண்ட நாடுதான் வளமாகவும் வலிவுள்ளதாகவும் விளங்கும்.

இந்நாட்டு மக்கள் தொகைப் பெருக்கத்துக்குத் தலையாய காரணங்களாக இருப்பவை பழைய சமுதாய அமைப்பும் சூழ்நிலையுமேயாகும்.

நாட்டு நலத்தில் அக்கறை கொண்ட நல்ல உள்ளம்படைத்த பெரியோர்கள் இதற்கு முக்கிய காரணமாகக் கூறுவது, இளமையில் திருமணம் செய்து கொள்வதுதான் என்கிருர்கள். ஆண்களுக்குச் சாதாரணமாக 18 வயதிலும், பெண்களுக்கு 15 வயதிலும் திருமணம் முடிக்கும் முறை இங்கு நிலவி வருவதையும் இப்போது மத்திய அரசின் ஏற்பாட்டின்படி இவ்வயது வரம்பு முறையே, 21, 18 என உயர்த்தப்பட்டிருப்பதையும் நாம் அறிவோம். இப்படி உயர்த்தப்பட்டுள்ள வயது வரம்புகூட போதுமானதல்ல என்பது பலருடைய கருத்தாகும்.

பிள்ளைப்பேறு வயதுப் பிரிவிலுள்ள ஆடவரையும் பெண்டிரையும் இளம் வயதிலேயே இணைத்து விடுவதால் மக்கள் பேறு மலிந்து பெருகி விடுவதோடு, தாய்க்குலத்தின் உடல் நலமும்-நலிந்து-நசிந்து விடுகிறது. பற்பல குடும்பங்களில் தக்க இடைவெளியில்லாமல் தாய்மார்கள் பிள்ளைப் பேற்றுக்கு ஆளாகும் நிலையினையும் கண்டு வருகிருேம்.

இத்தகைய காரணங்களால் நாட்டில் மக்கள் தொகை பெருகி விடும். அதே நேரத்தில், குடும்பத்தில் வறுமை-ரோய்-தொல்லை-துயரம்-கவலை அதிகரித்து தாய்மார்கள் எலும்பும் தோலுமாகி, ஏக்கமே உருவாகி விடுகின்றனர். குடும்பமே சோகக் களமாகி விடுகின்றது.

குடும்பநலத் திட்டம் மாதர் நலத்தை அடிப்படையாக வைத்தே எழுந்த திட்டமாகும். மாதர் நலம் குன்றினல் வீட்டு நலமும் குறையும். வீட்டு நலம் குறைந்தால் நாட்டின் தரம் குறையும். குடும்பநலத் திட்டம் என்ற கோட்பாட்டைச் சமுதாய நல்வாழ்வுக்கு அடிகோலுவது என்ற கோணத்தில்தான் நாம் பார்க்க வேண்டும்.

உலகில் உள்ள நாடுகளெல்லாம் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்த முனைந்துள்ளதற்குக் காரணம், உலக அளவிலான மக்கள் தொகை அந்த அளவுக்கு வேகமாகப் பெருகி வருவதேயாகும்.

41 ஆண்டுகளில் இன்றைய உலக மக்கள் தொகை இரட்டிப்பாக ஆகிவிடும் என்றும் கி. பி. 2,000-ல் உலக மக்கள் தொகை 623 கோடியாக இருக்கும் என்றும் உலக அளவிலான புள்ளி விவர அறிக்கை கூறுகிறது.

இந்தியாவில் இன்னும் 35 ஆண்டுகளில் மக்கள் தொகை இரட்டிப்பாகுமென்றும் அந்த அறிக்கை கூறுகிறது. கி. பி. 2,000-ல் இந்தியாவின் மக்கள் தொகை 101 கோடியாக உயர்ந்துவிடும் என மதிப்பிட்டுள்ளனர்.

மக்கள் தொகை அளவில், உலகில் முதலிடம் பெறும் நாடு சீனு. அதன் மக்கள் தொகை 93 கோடி. அதனல் குடும்பநலத் திட்டத்தைச் சீனு வெகுவாகச் செயல்படுத்தி வருகிறது அண்மைக் காலமாக!

அரசியல் சட்டந்திலேயே அதற்கு வகை செய்து அடுத்த மூன்று ஆண்டுகளில் சீனுவின் மக்கள் தொகை வளர்ச்சியை ஒரு சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென அறிவித்துள்ள சீனத் தலைவர் குவா-கூ-பெங், திட்டமிட்ட தேசியப் பொருளாதார வளர்ச்சிக்குக் குடும்ப நலத் திட்டம் மிகமிகத் தேவையான ஒன்று என்கிருர்.

உலகிலேயே சீனுவிற்கு அடுத்த இடத்தை மக்கள் தொகையால் பெற்றிருப்பது இந்தியா. இங்கு நாம் 1982-83க்குள் பிறப்பு விகிதத்தை ஆயிரத்துக்கு 30 ஆகக் குறைக்க வேண்டுமெனத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிருேம்.

தமிழ்நாடும் இத்திட்டச் செயலாக்கத்தில் தனி அக்கறை காட்டிச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் மக்கள் தொகை 1961-ல் 3 கோடியே 40 இலட்சம். 1971-ல் 4 கோடியே 10 இலட்சம். இப்போது 4 கோடியே 50 இலட்சத்தையும் தாண்டிச் சென்று கொண்டிருப்பதாக அறிகிருேம்.

உலக அளவிலும் சரி, இந்தியாவிலும் சரி மக்கள் தொகைப் பெருக்கம் கண்ணுக்குப் புலப்படாத ஒன்ருக, கருத்துக்கு எட்டாத ஒன்ருகவளர்ந்து கொண்டே போக அனுமதித்தால் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை நாட்டில் காண்பது கடினம்.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு அதாவது 1977—78-ல் 81.1 இலட்சம் டன்கள் அளவுக்கு உணவு தானியங்களைப் பெருக்கியிருக்கிருேம். அதற்கு முந்திய ஆண்டு உற்பத்தியைக் காட்டிலும் 10.52 இலட்சம் டன்கள் அதிகமாக உற்பத்தி செய்துள்ளோம். தமிழ்நாட்டில் உணவு தானியங்களின் உற்பத்தி 14.7 சதவிகிதம் ஒரே ஆண்டில அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே காலகட்டத்தில் இந்தியா முழுதும் எடுத்துக் கொண்டால் உணவு தானியங்களின் உற்பத்தி 12.6 சதவிகிதம்தான் அதிகரித்துள்ளது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோற்றைப் பதம் பார்ப்பது போல தமிழகத்தில் கடந்த ஆண்டு, எத்தனையோ இடுக்கண்களுக்கு இடையில் தொல்லைகளுக்கு மத்தியில், அத்தனையையும் சமாளித்து, எல்லா முனைகளிலும் வளர்ச்சியைக் கண்டு வருகிருேம். தொழில் துறையிலும் வேளாண்மையிலும் தக்க முன்னேற்றம் காணத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிருேம்.

குறிப்பாக, கிராமப்புற மக்களுக்கு என்றே திட்டங்களை வகுத்தளித்து வரும் நம் அரசு தாய்க்குலத்தினர் வீட்டிலிருந்தே தொழில் செய்து தங்கள் வருவாயையும் வளத்தையும் பெருக்கிக் கொள்வதற்காகத் தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பல புதுமைகளைப் புகுத்திச் செயல்படுத்துவதில் அக்கறையும் தனிக் கவனமும் காட்டி வருகிறது.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்வில் ஒளியூட்ட முழுமுயற்சி எடுத்து வருகிறோம். கிராமப் பகுதிகளுக்கும் குறிப்பாக நலிந்த பிரிவினருக்கும் முன்னுரிமை கொடுத்து, வளர்ச்சிப் பணிகளுக்கான ஒதுக்கீடுகளை வரவு-செலவுத் திட்டத்தில் உயர்த்துவதை நமது அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

விவசாயப் பெருமக்களின் வேதனையைப் போக்கப் புதுச் சலுகைகளை வழங்கி உணவு உற்பத்தியைப் பன்மடங்கு உயர்த்த ஆவன செய்து வருகிருேம். கல்வியைப் பெருக்குவதிலும் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

1975-76-ல் 123 கோடி ரூபாய் தான் கல்விக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இப்போது 1978 79-ல் கல்விக்காக 176 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளது. அரசு இப்படிப் பல வழிகளிலும் நாட்டு மக்களின் நலத்தை மட்டுமே தலையாய நோக்கமாக-கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. வகுக்கப்பட்ட திட்டங்களின்வழி **அரசு செயல்படுத்தப்படும் இத்தகைய பணிகளால் விளையும் பயனைச் சமுதாயம் முழுமையாகப் பெற வேண்டுமாளுல் மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டாக வேண்டும்.**

மது அருந்துவது, மக்கள் அறியாமலே எத்தகைய கேடுகளை அவர்களுக்கு உண்டாக்குமோ அதுபோல, மக்கள் தொகைப் பெருக்கமும் நாம் அறியாமலேயே சமுதாயத்திற்குக் கேடுகளை உண்டாக்கும் என்பதை அனைவரும் மனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

தந்தை பெரியாருக்குத் தக்க வகையில் நூற்றாண்டு விழா எடுத்து வருகிறது தமிழ்நாடு அரசு. நூற்றாண்டு விழாவுக்கு உரியவராக உள்ள தந்தை பெரியார் அவர்கள் 1920 முதலே திட்டமிட்ட குடும்பம் வேண்டும் என்பதில் அக்கறை காட்டி அதற்கு ஆதரவாக அருந்தொண்டு ஆற்றியுள்ளார்கள். காப்பாற்ற முடியாத அளவில் குடும்பத்தில் குழந்தைகள் பெருகுமானல் கோணல்கள் மலியுமென்று பல்வேறு வகையில் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் சம கல்வி வாய்ப்பும், வேலைவாய்ப்பும் வழங்கப் பெற வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்கள். ஆடவரைப் போலவே பெண்டிரும் தக்க கல்வியும் தகுந்த பணி வாய்ப்புகளையும் பெறுவார்களேயாளுல், அவர்கள் சார்ந்த குடும்பங்களில் பிள்ளைப்பேறும் கணிசமாகக் குறைந்து விடுமென்று குறிப்பிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு இத்திட்டச் செயலாக்கத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது. ஆனுல், இப்போது, அதிலே ஒரு தொய்வு ஏற்பட்டிருப்பதாக உணருகிருேம். தொய்வோ, சுணக்கமோ, இத்திட்டச் செயலாக்கத்தில் இருக்கக் கூடாது. அரசின் துறைகள் அத்தனையும் பாகுபாடு ஏதுமின்றி இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்ய முனைந்து செயல்பட வேண்டுமென விரும்புகிறேன்.

இப்போது தேசியக் குடும்பநல இருவார விழா எடுக்கப்படுகிறது. கிராமப்புற மக்கள் எல்லாம் இத்திட்டம் பற்றிய நல்ல விளக்கங்களைப் பெற இவ்விழாவைப் பயன்படுத்திக் கொண்டு வெற்றி காண முனைய வேண்டும். குடும்ப நலத் திட்டம் தாய்சேய் நலம் காக்கப் பெரிதும் உதவுகிற திட்டமாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

பொதுவாகத் தமிழ்நாட்டு மக்களும் சிறப்பாகத் தாய்க்குலமும் இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவமனைகளுக்கு அல்லது ஆரம்பச்சுகாதார நிலையங்களுக்கு வரும் மக்களிடம் அன்புடன் பழகி, கனிவு காட்டி திட்டத்தின்பால் மக்களுக்கு ஒரு பிடிப்பை ஏற்படுத்த வேண்டியது மருத்துவ உலகத்தில் நீங்காக் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னியக்க நிறுவனங்களைச் சார்ந்தோர், பொதுநலத் தொண்டில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொண்டுள்ள மற்ற ஸ்தாபனங்களைச் சார்ந்தோர், தொழில் அதிபர்கள் ஆகிய அனைவரும் குடும்ப நலத் திட்ட வெற்றிக்கு உதவிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பநலத் திட்டம் என்ற கோட்பாடு தனிப்பட்ட எந்த நபருடைய கொள்கையும் அல்ல. அல்லது எந்தக் கட்சியினுடைய கொள்கையும் அல்ல. அது, நாடு முழுமைக்குமான சமுதாயக் கொள்கை; உலகளாவிய கொள்கை; அனைவரும் ஒருமித்த கருத்துடன் ஏற்றுச் செயல்படுத்த வேண்டிய கொள்கை.

எனவே, அதிலே அரசியல், சாதி, சமய இனவேறுபாடுகளுக்கோ, வேற்றுமைகளுக்கோ இடமே இல்லை. எந்தவித வேறுபாடும் இன்றி நாட்டு மக்கள் அனைவரும் ''சிறு குடும்ப நெறி'' ஏற்க முந்த வேண்டுமென்றும், குறிப்பாகத் தாய்க்குலம் இத்திட்டத்திற்கு நல்லாதரவு நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

— முதல்வர் உரை —

[குடும்ப நல இருவார விழாவினையொட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 17-10 78 அன்று சென்னை வானெலி, தொலைக்காட்சி மூலமாக மக்களுக்கு விடுத்த வேண்டுகோள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு ஆர். சௌந்திரராசன் அவர்கள் முதல்வரின் கருத்துக்களை வாசித்தார்.]

பசும்பொன்னார் பேசுகிறார்!

...மனித வர்க்கத்தினர் பல்வேறு பிரிவினராய் பலவித வித்தியாசங்களுடன் வாழ்ந்துவரும் இற்றையநிலையில் தெய்வத் தன்மை பெற்ற குறள் பற்றியும் விதவித மான வியாக்யானங்கள் கூறுபவர் உண்டு. புலமையில் மூன்று விதங்களுண்டு. அவை: கவிப் புலமை, கலைப் புலமை, தவப் புலமை என்பர். இம்மூன்று புலமையிலும் தேர்ந்து தெளிந்த நிலைபெற்ற புலவரே இக்குறளைச் செய்தவர். இத்தெளிவு அறி வோர்க்கு எப்பொருளும் சமநோக்குடனே தென்படும்.

* * * * * *

பரிசு பெறலாம் என்று பாடிய நூல் அல்ல திருக்குறள். எம்மதத்தினர்க்கும், எக்குலத்தினர்க்கும், எந்நாட்டவர்க்கும் பொதுவான நீதிகளைத் தரும் பெருமை பெற்ற நூல், குறள். பழமை, புதுமை இவ்விரண்டிற்குமிடையே, கடந்து போன இடைக்காலத்தில் எத்தகைய சிதைவுக்கும் உள்ளாகாது விளங்குவதிலிருந்தே இந் நூலின் பெருமையை உணரலாம்.

* * * * * *

ஆதியிலிருந்து பிறந்த ஒலியை வடிவ மாக்கி எழுத்து ரூபம் கொடுக்கப்பட்டது. எழுத்துக்கள் உருவ எழுத்து, கோட் டெழுத்து, கோலெழுத்து, சதுர எழுத்து என நான்கு வகைப்படும். உருவ எழுத் தாக தமிழ் இருந்த காலத்திலேயே சீனம் முதலிய பாஷைகள் பிரிந்தன. கோட் டெழுத்தாக இருந்த காலத்திலே சமஸ் கிருதமும் மற்றுமுள்ள பாஷைகளும் பிரிந் தன. வட்ட எழுத்தாயிருந்த காலத்தில் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற பாஷைகள் பிரிந்தன. இற்றைய தமிழ் எழுத்து சதுர எழுத்தாயிருக்கிறது.

இந்த எல்லா வகையான மாறுதல் களையும் பெற்ற ஆதிமொழி தமிழாகும்.

பணம் படைத்த செல்வனொருவ னிடம் சென்று, ''நீங்கள் எப்படிப் பணக் காரரானீர்கள்'' என்று கேட்டால், 'நான் பட்ட பிரயாசை சொற்பமா? அதன் பய னாகவே கிடைத்தது' என்று கூறுவான். ஆனல் பணத்தை இழந்து தரித்திர நிலை யடைந்தபோது போய், 'நீர் எவ்வாறு தரித்திரரானீர்' என்று கேட்டால், 'நான் குடித்தேன், விபசாரம் செய்தேன், கேளிக் கையில் செலவு செய்தேன்; இதனால்தான் தரித்திரனானேன்'' என்று ஒப்புக்கொள் வானா? ஒருபோதும் மாட்டான். 'கடவுள் என்னைக் கெடுத்து விட்டார்' என்றே கூறுவான். வாழும் காலத்தில் ஏற்பட்ட பிராபல்யத்திற்குத் தானே காரணம் என்னும் மனிதன், தரித்திர கால இழிவிற் கும் தானே பொறுப்பு என்பதை ஒப்புக் கொள்வதில்லை.

* * * * * *

நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்து முடிப்பதற்காகவே இந்தச் சரீரம் கிடைத்தது. சரீரம் எதனால் ஆக்கப்பட் டுள்ளது என்பதை வைத்திய நூல்கள் விரிவாகக் கூறியுள்ளன. இந்தச் சரீரத்தி னுள்ளே அண்டம், பிண்டம், ஊர்வன, பறப்பன, விலங்குகள் போன்ற பலவகைப் பட்ட கருவிகளமைந்துள்ளன. சரீரத்தைப் பற்றும் வியாதிகள் 444 என்றும் கண்டு இருக்கின்றனர். வியாதி எவ்விதம் வரு கின்றது என்று பார்ப்போமானால் இந்தச் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் கண்ணுக் குப் புலப்படாத அணுக்களால் நிறைந்த தென்றும், வெளியேயுள்ள அணு ஒன்று சரீரத்தின் ஒரு பாகத்தை வந்தடையும் போது எதிர்வரும் அணுவை தன்னுடன் வரவேற்று தன் வயப்படுத்திக் கொள்ள முடியாத நிலைமை ஏற்படும்போது வியாதி உண்டாகிறது. எதையும் தாங்கும் வலிமை பெற்ற உடல் வேண்டும்.

'' தேவர் இதய நாதம் '' நூலிலிருந்து....

தேவரைக் குறித்து அறிஞர்கள்

''தேவருக்கு நாம் செய்யும் ஒரே கடமை-அவருடைய ஆத்மா சாந்தி அடைய நாம் எடுத்துக் கொள்ளும் ஒரே பணி-தேவருடைய புனிதமான உள்ளத்தில் உறைந்து கிடந்த எண்ணங்களை நிறைவேற்றுவதுதான்''

—பேரறிஞர் அண்ணா.

பசும்பொன் தேவர் எத்தனையோ வசதி உடையவராக இருந்தும் மக்களுக்காக—ஏழை, எளியவர்களுக்காக வாழ்ந்தார். கடைசியில் மறைந்ததுகூட, வாடகை வீட்டில்தான்; கையைத் தலைக்கு வைத்துப் படுத்தார்; சுகமே கண்டறியாதவர், மக்களின் சுகத்தையே மனத்தில் கொண்டு இருந்தார்.

இதனைச் சொல்லும்போது ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. 1957-ஆம் ஆண்டு; முதுகுளத்தூர் கலவரத்தின் காரண மாகக் கைது செய்யப்பட்ட அவரை எங்கோ கொண்டு சென்று, கடைசியில் சென்னை மத்திய சிறையில் வைத்திருந்தார்கள். ஒரு முக்கிய மான காரியத்துக்காக அவரைச் சந்திக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது; சந்திக்க ஏற்பாடு ஆயிற்று. சிறையில் 'டவர்' என்று சொல்லும்படியான மாடியில் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். மாடியில் போய் என்னை முதலில் உட்கார வைத்துவிட்டு, பிறகு தேவரை அழைத்து வந்தார்கள்; தேவர் என்னை —நெருங்கினர்—தெய்வ அம்சத்துடன்— என்னல் காணமுடிந்தது. 'சட்'டென்று அவரது பாதத்தைத் தொட்டு வணங்கி மெல்ல எறிட்டு, திருமுகத்தை நோக்கினேன்; அவர் கண்களி லிருந்து முத்து முத்தாகக் கண்ணீர் வடிந்தது. கலங்கியே விட்டேன்; உடனே அவரது திருவாயி லிருந்து வெளிவந்த வார்த்தை என்ன தெரி யுமா? ''நமது மக்கள் எப்படி இருக்கிருர்கள்?'' என்பது தான் அந்த வார்த்தை—இந்த நிலையில் கலங்கிப் போய்விட்டேன். என்னுடைய கண் களும் குளமாயின. திரும்பவும் அவரது திருமுகத்தை நோக்கினேன். பல நிமிடங்கள் ஆகிவிட்டன. கொடுஞ்சிறையில் தள்ளப்பட்ட நிலையிலும் அவரது நாட்டம் எல்லாம் மக்களைப் பற்றியதாகவே இருந்தது. எதற்கும் கலங்காத வீரத்திருமகன் மக்களை எண்ணியவுடன் கண்ணீர் மல்கி விட்டார்; வேலுக்கும் வாளுக் கும் துப்பாக்கிக்கும் துரைத்தனத்துக்கும் அஞ்சா நெஞ்சன், மக்களை நினைத்தும் நெஞ்சுருகி விட்ட காட்சியைக் காணும் பாக்கியம் பெற்றேன். தேவரின் திரு உள்ளத்தில் குடிகொண்டு இருந்தது தெய்வம் அல்ல; மக்கள் தான் என்பதை அன்று கண்டேன்.

—பி. கே. மூக்கையாதேவர்.

எனது அரிய நண்பர் பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர், எல்லையற்ற ஞான முடையவர். ஆத்மீகத் துறையில் அவரது பேச்சு, மக்களுடைய ஒழுக்கத்தை வளர்க்கும் ஆற்றல் பெற்றதாகும். அரசியலில் அவரை விரும்பாதவர்கள்கூட ஆத்மீகத்துறையில் அவருக்குள்ள நாவன்மை குறித்து வியந்து போற்றுவதுண்டு.

—சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்.

...திருவாளர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், தனிப்பெரு வீரர்; வெஞ்சமர் வரினும் அஞ்சாத சிங்கம்; இந்தியப் பண்பாட்டி லும், பெருமையிலும் குறையாத அன்பர்; தமிழகத்தின் மேன்மையிலும், கலைப் பெருமை யிலும், உயர்விலும் நிறைந்த பற்று மிக்கவர்.

அரசியல் அறிஞர்; அற்புதப் பேச்சாளர்;

—அ. கி. பரந்தாமனார்.

சர்வதேச விவகாரங்கள் பற்றி அவர் வெளியிடுகிற கருத்துக்கள் மிகமிக நுண்ணிய தாக இருக்கின்றன. அவர் கையாளும் சொற் களும் நல்ல முதிர்ச்சி பெற்றவையாக இருக் கின்றன. ஒவ்வொரு கருத்துக்கும் அவர் கொடுக்கின்ற வேகம் அனைவரையும் இழுத்துச் செல்கின்றது. மேலும் அவர் ஒரு சிறந்த பேச்சாளர்—பேச்சாளர் என்று சொல்லி விட்டால் போதாது—எவரையும் கனிய வைக்கும் சொல்லறிஞர் என்றே சொல்லிவிடலாம்!

—பெர்டினாக்ஸ்

(தலைசிறந்த ஆங்கில எழுத்தாளர், டில்லி.)

தந்தை பெரியாரால் 'பெரியார்' என்று பாராட்டப்பட்டவர்

தந்தை பெரியார் அவர்களால் பெரியார் என்று பாராட்டப்பட்டவர் பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் ஆவார். பி. கே. முக்கையாத் தேவர் பொன்விழா மலரில்', தந்தை பெரியார் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில், ''பெருமைமிக்க பெரியார் முத்துராம லிங்கத் தேவர் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

தேவர் செய்த உதவி

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் ஆன்மிக நெறியில் அளவில்லாத பற்றுக்கொண்டிருந்தபோதிலும், நாட்டுமக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் காரணமாக அரசியல் துறையிலும் அங்கம் வகித்திருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராக நின்று, வெற்றி பெற்றுத் தமது தொகுதி மக்களுக்குப் பணிபுரிந்திருக்கிறார். முக்குலத்தோருக்கு அவர் தலைவராக-வழிகாட்டியாகத் திகழ்ந்திருந்தாலும் மற்ற இனத்தவரின் நலனுக்கும் தொண்டு புரிந்திருக்கிறார். அவரிடம் சாதிவேற்றுமை கிடையாது; ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமே என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை.

1957-ஆம் ஆண்டு ஏப்ரலில் பொதுத்தேர்தலில் அவர் இராமநாதபுர மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அதே ஆண்டு செப்டம்பர் திங்கள்! அப்போது தீபாவளி சமயம். இராமநாதபுர மாவட்டத்தின் முக்கிய தொழில் நகரான சிவகாசியில் மிகுந்த முதலீடு செய்து பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் பல வியாபாரிகள். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களில் பெரும்பான்மையோர் நாடார் இனத்தவரே. பட்டாசுத் தொழில் லாபம் தரும் தொழில் என்பதை அறிந்து, தங்களது வீடு, நிலம் போன்றவற்றை அடமானம் வைத்து வங்கிகளில் பெருந்தொகையைக் கடனாகப் பெற்று, பட்டாசுத் தொழிலில் பயன்படுத்தியிருந்தார்கள் பல முதலாளிகள்.

இராமநாதபுர மாவட்டத்திலுள்ள சிவகாசியில் தயாராகும் பட்டாசுகள், இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற பல்வேறு மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு வந்தன. மேற்குறிப்பிடப்பட்ட மாநிலங்களில் எல்லாம் சிவகாசி பட்டாசுகளுக்கு மிகுந்த வரவேற்பு உண்டு.

வட மாநிலங்களுக்குச் செல்ல வேண்டிய பட்டாசுகள் வேகன்களில் ஏற்றப்பட்டுச் சிவகாசி புகைவண்டி நிலையத்தில் சரக்கு ரயில் பகுதியில் தயாராக இருந்தன. பட்டாசுகள் இருந்த சரக்கு வேகன் ஒன்றில், எதிர்பாராமல் தீப்பிடித்துக் கொண்டதால் பட்டாசுகளும் வீணாகின; வேகனும் வீணாகியது; இந்தச் செய்தியை அறிந்த அந்நாளைய மத்திய ரயில்வே அமைச்சர் திரு. ஜகன்ஜீவன்ராம் அவர்கள் தென்னகத்திலிருந்து பட்டாசு, மத்தாப்பூ போன்ற வெடிமருந்துப் பொருள்களை சரக்கு ரயிலில் ஏற்றிக் கொண்டு போகக்கூடாது என்று உத்தரவு போட்டுவிட்டார். அதன் காரணமாக வட மாநிலங்களுக்கு அனுப்பப்பட வேண்டிய பட்டாசுகளை அனுப்ப இயலாமல் வியாபாரிகள் தவித்தார்கள். சரக்குகள் தேங்க ஆரம்பித்தன; அதனால் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட ஆரம்பித்தது. தொழிலை நம்பி-வங்கிகளிடமிருந்து கடன் பெற்றிருந்த முதலாளிகள்-மிகவும் சிரமம் அடையக் கூடிய இக்கட்டான சூழ்நிலை உருவாயிற்று.

வேறு வழியின்றி, பட்டாசு வியாபாரிகள் இராமநாதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான திரு உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்களை அணுகினர். தங்களது இன்னல்களை எடுத்துரைத்தனர்; தேவர் அவர்களின் முறையீடுகளைக் கவனத்துடன் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் சிவகாசி பட்டாசு வியாபாரிகளின் கோரிக்கையை எடுத்துரைத்தார்; அவர்கள் படும் இன்னல்களை ஆணித்தரமாகக் குறிப்பிட்டார். "அவர்களுக்குப் பல கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என்றும், அந்த நட்டம் இந்தியப் பொருளாதாரத்தையே பாதிக்கும்" என்றும் முழங்கினார்.

தேவர் அவர்களின் நாவன்மை, பிரதமர் நேருவைக் கவர்ந்தது. தொகுதி மக்களின்பால் தேவருக்கு இருந்த அக்கறையை நேரு நன்கு அறிந்தார், அவரது வாதத் திறமையையும் உணர்ந்தார்.

உடனே தனது அருகில் இருந்த ரயில்வே அமைச்சரிடம் நேரு வலியுறுத்த, அவரும் சென்னை ரயில்வே துறையினருக்கு செய்தி அனுப்ப — சென்னையிலிருந்து அதிக வேகன்கள் சிவகாசியை நோக்கி விரைந்தன. அவை, சிவகாசியில் தேங்கிக் கிடந்த பட்டாசுகளை வாரி அள்ளிக் கொண்டு பம்பாய், கல்கத்தா, டில்லி ஆகிய மாநிலங்களுக்குச் சென்றன.

இன்று, சிவகாசியில் செழித்து வளர்ந்திருக்கும் பட்டாசுத் தொழில், அன்று, தேவரின் முயற்சி மட்டும் இல்லாதிருந்திருந்தால் வளர்ச்சியுற்றியிருக்காது என்பது திண்ணம்!

மிகப் பெரும் தொழிலுக்கு அஸ்திவாரமாக அமைந்த, தேவரின் அன்றைய நாடாளுமன்றப் பேச்சை, பார்வையாளர் பகுதியில் இருந்து கேட்டவன் நான்; அந்தப் பேச்சும் அதன் பயனாக எழுந்த நல்விளைவும் இன்னும் என் நெஞ்சில் நிழலாடிக்கொண்டிருக்கின்றன.

எஸ். மனோகரன், தேவாரம்.

நேதாஜியின் பாராட்டு

இரண்டாவது உலக யுத்தத்தின்போது சிங்கப்பூருக்கு நேதாஜி சென்றார். இந்திய தேசிய இராணுவத்திற்கு ஆள் திரட்ட அவர் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தார். ஒரு சினிமாத் தியேட்டரில் கூட்டம் நடந்தது. அதில் பல இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் கலந்து கொண்டனர். சிங்கப்பூரில் பிரபல வர்த்தகரும் செல்வாக்குள்ளவருமான ஒரு தமிழரை நேதாஜியிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். கூட்ட நிருவாகிகள்.

நேதாஜி, "இந்தியாவில் உங்களுக்கு சொந்த ஊர் எது?" என்று அவரிடம் கேட்டார். "மதுரைப்பக்கம்" என்று அவர் பதிலளித்தார்.

உடனே நேதாஜிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அந்த வர்த்தகரைக் கட்டித் தழுவிக் கொண்டு, "ஓ! மதுரை! முத்துராமலிங்கத் தேவர் ஊர்" என்றார். மறுமுறை அந்த வர்த்தகரையே "மிஸ்டர் தேவர்" என்று கூப்பிடவும் ஆரம்பித்தார். "தேவர் சிறந்த வீரர்; அவருடைய ஊர்க்காரரான நீங்கள் இந்திய தேசிய இராணுவத்துக்கு நிச்சயம் உதவி செய்வீர்கள்" என்றும் உணர்ச்சியோடு நேதாஜி கூறினார்.

தகவல்: மருதங்கிளி

வீரத் துடிப்புள்ள ஆண்மைச் சிங்கம்

— கவியோகி சுத்தானந்த பாரதியார் —

சிவகங்கை மறக்குலச் செம்மல்கள் நல்ல தமிழ்ப் புலவர்கள்; கவிகள்; சித்தாந்த வித்தகர், சிவ முருகபக்தர். தமது செல்வமெல்லாம் மக்கள் நலத்திற்கே வாரி வாரித் தூவிய வள்ளல் தியாகிகள். இவர்கள் "வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா, ஹரஹர மகாதேவ" என்ற முழக்கத்துடன், திருப்புகழ் பாடிக்கொண்டே படைநடத்தினர். சிவகங்கை சசிவர்ணம் தஞ்சை அரண்மனை விழாவில் ஒரு சிங்கத்துடன் போராடி வென்று சிங்கத்தேவர் என்ற பட்டம் பெற்றார். இவரே இராமனாதபுரம் சேதுபதிக்கு வாட்பணி புரிந்து சிவகங்கை ஜமீனை வீரக் காணிக்கையாகப் பெற்றார். இவருக்கு சாத்தப்பையர் என்ற முனிவர் ஆசியும் பஞ்சாட்சர உபதேசமும் கிடைத்தது. இப்படி எத்தனையோ வீரத் திருவாளர் என் முன் நிற்கின்றனர். அவருள் ஒருவர் டில்லிபாச்சாத் தேவர்.

டில்லிபாச்சா, மிடுக்காக, எடுப்பாக, முறுக்கு மீசையுடன், குயில் ரத்தக் கண்களுடன், உரத்த முண்டாக்களுடன் என் முன் காட்சியளிக்கிறார். நான் பதினறுவயது மட்டும் இவருடன் ஒட்டுறவாகப் பழகினேன். எனது தமிழாசிரியர் தெய்வ சிகாமணி யோகியே இவருக்கு சங்க இலக்கியங்களைக் கற்பித்தார். இவர் திருக்குறளும் பெரியபுராணமும் கம்பராமாயணமும் பாடம் கேட்டபோது, நானும் அருகிருந்து கேட்டதுண்டு. டில்லி பாச்சாத் தேவர் பாரதத் திருவிழா நடத்தி, வீரவரிசைகளை ஊக்கினார். இவரே எனக்கு குஸ்தி, சிலம்பம், வாள்வீச்சு, துப்பாக்கிசுடல் எல்லாம் பழக்கினார். வீர சிதம்பரம் பிள்ளை இவரிடம் பேரன்பு பூண்டவர். ஒரு தீபாவளியின்போது சிதம்பரம் பிள்ளையின் முன், நான், வாள் வீசி "சபாஷ் பாண்டியா" என்ற பட்டம் பெற்றேன். டில்லிபாச்சாவுக்கு நாட்டு விடுதலையே கனவும் நனவுமாயிருந்தது.

இந்த டில்லிபாச்சாவுக்கு மிகப் பிரியமான சிறுவன் முத்துராமலிங்கம், பசும்பொன் வீரன். அவன் தாயில்லாப்பிள்ளை; வீரத் தாயே அவனைப் பாலூட்டி வளர்த்தாள். ஒருதரம் நாங்கள் அரண்மனைக்கு முன் காங்கிரஸ் கூட்டம் போட்டோம். எதிரிகள், கூட்டத்தில் பன்றி விட்டடித்தனர். கோழைகள் எழுந்தோட முயன்றனர். நாங்கள் பன்றியை அடித்து விரட்டி அமைதி காத்தோம். கூட்டம் முடிந்ததும் நான் டில்லி பாச்சாவைக் கண்டேன். அப்போது அந்த வீரச் சிறுவனும் அங்கிருந்தான். "ஏன் அய்யா-சும்மா பேசிக்கிட்டே போனால் காரியம் ஆகுமா! மீசை முறுக்கி வாள்பிடித்துச் சாடுங்கள்! விடுதலை கதறிக்கொண்டு வரும்" என்றான். டில்லி பாச்சா ஒரு புலிக்குட்டி வளர்த்தார். அதை மடியில் தூக்கி வைத்துக்கொண்டு அச்சிறுவன் அப்படிப் பேசினான்.

இந்த அதிசயச் சிறுவனே தமிழகத்தின் மறக்குல மாணிக்கம் முத்துராமலிங்கம் என்னும் தெய்வீக வீரன்-வடலூர் யோக சமாஜத்திற்குத் தேவர் அடிக்கடி வருவதுண்டு. என்னுடன் உண்பார், தியானிப்பார், உலகநிலை பற்றிப் பேசுவார், ஆத்மீக அரசியல் வேண்டும் என்பார். தேவர் மிக மிக எளிய வாழ்வு வாழ்ந்தார். இரவில் துண்டை விரித்துப் படுத்தார்; காலையில் நீராகாரம் பருகினார்; பழையது சாப்பிட்டார். அவரைப் பார்த்தால், இலட்சாதிபதி என்று தெரியாது. பசும்பொன் ஜமீந்தார் என்று அறிய முடியாது. அவர் ஏழைகளுக்குச் செய்த தான, தருமங்கள் வெளியே தெரியாது. அவர் தூய பிரமச்சாரி. முத்துராமலிங்கர் அணுவணுவிலும் வீரத்துடிப்புள்ள ஆண்மைச்சிங்கம்.

மதுரையில் 22—10—1978 அன்று நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழாவில் தந்தை பெரியார் உருவப் படத்தை நாவலர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில், மேதகு கேரள ஆளுநர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் திறந்து வைத்தார்.

படமும் செய்தியும்

தமிழ்நாட்டில் மக்களிடையே குடும்ப நலம் குறித்துச் செய்யப்பட்ட பிரச்சாரப் பணி சம்பந்தமான புகைப்பட ஆல்பத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராஜன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்குகிறார். 16—10—1978

குந்தா நீர் மின் திட்டம் 4-வது கட்டம் 2-வது 50 மெகாவாட். இயந்திரத்தை 17—10—1978 அன்று மாண்புமிகு முதல்வர் இயக்கி வைக்கார்

தமிழாராய்ச்சியில் பொறியியல் நிபுணர்

நாரண துரைக்கண்ணன்

இருபதாம் நூற்றாண்டு நம் தமிழகத்துக்குப் பொற்காலம் என்று சொல்ல வேண்டும். ஏன்? பாரத தேசத்துக்குக்கூட பெருமைமிக்க காலந்தான். இந்த நூற்றாண்டின் முற்பகுதி முடியுந் தருணத்தில்தானே நம் இந்தியத் துணைக் கண்டத்துக்குச் சுதந்தரம் கிடைத்தது? இதைத் தொடர்ந்து இந்திய ஐக்கியக் குடியரசு ஏற்பட்டது.

இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அந்நியர் ஆதிக்கத்தில் சிக்கியிருந்ததன் காரணமாக, பாரதத்தின் பழம் பெருமைக்குப் பங்கம் ஏற்பட்டது. தமிழகத்தின் தனிச் சிறப்புக்குக் களங்கம் உண்டாயிற்று. நம் கலை நாகரிகங்களுக்கெல்லாம் சீர் குலைவு நேர்ந்தது.

போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சு நாட்டினர், பிரிட்டிஷார், மொகலாயர் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக வந்து பலவிதச் சூழ்ச்சி முறையால் தத்தம் ஆளுகையை நிலைநாட்ட முயன்றதும், அவற்றால் நம் பெருந் தேசத்துக்கு ஏற்பட்ட சோதனைகளும் துன்பந் துயரங்களும் அளவில்லாதவையாகும்.

தாதாபாய் நௌரோஜி, சுரேந்திர நாதபானர்ஜி, விபின் சந்திரபாலர், பாலகங்காதர திலகர், கோபாலகிருஷ்ண கோகலே, காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, வல்லபபாய் பட்டேல், இராஜேந்திர பிரசாத், மௌலானா ஷௌகத் அலி, முகம்மது அலி, அபுல்கலாம் ஆஸாத், கவியரசர் தாகூர், கவிஞர் முகம்மது இக்பால், சுபாஷ் சந்திரபோஸ், வ. உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, வ. வே. சுப்பிரமணிய ஐயர், பெருங்கவிஞர் பாரதி, திரு வி. கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, பெரியார் ஈ. வெ. இராமசாமி, இராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜர், பேரறிஞர் அண்ணா முதலிய நாட்டுப் பற்றும், இனப் பற்றும், மொழிப் பற்றும் கொண்ட தேசத் தலைவர்களும் பேரறிஞர்களும் பிறநாட்டினரின் படையெடுப்பாலும் ஆட்சியாலும், நம் கலை, இலக்கியம்,

பணபாடுகளுக்கு உண்டான சீர்குலைவை மாற்றப் பெரிதும் முயன்றனர்; அரும்பெருந்தொண்டு புரிந்தனர். இப்பெரு மக்கள் தங்களுக்குப் பின்னாலும் தக்க வாரிசுகளைத் தோற்றுவித்துச் சென்றிருக்கின்றனர்.

இலக்கியம், சமயம், கலைத் துறைகளை மட்டும் எடுத்துக் கொண்டால் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை, சோமசுந்தர பாரதியார், இரா. இராகவ ஐயங்கார், மு. இராகவ ஐயங்கார், உ. வே. சாமிநாத ஐயர், சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாவேந்தர் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் என்று வாரிசுகளின் பெயர்ப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இப்பேரறிஞர் வரிசையில் ஒருங்கு வைத்து மதிக்கத்தக்கவர்தான் சேலம் மாவட்டச் செம்மலான பாகல்பட்டி வே. மாணிக்க நாயகர் அவர்கள், இப்பெருமகன் நம் தமிழ்மொழிக்கும் இனத்துக்கும் புரிந்துள்ள பெருந்தொண்டை, தமிழுக்கும் தமிழருக்கும் நல்வாழ்வு ஏற்பட்டிருக்கும் இத்தருணத்தில் நினைவுகூர்வது பொருத்தமாயிருக்கும்.

தாளாண்மையால் பொறியியல் வல்லுநராய் விளங்கியிருந்த பா. வே. மாணிக்க நாயகர் தமிழ்மொழி வளத்துக்கும் தமிழ் இன உயர்வுக்கும் ஆகப் பணிபுரியத் தொடங்கிய காலத்தைச் சிந்தித்துப் பார்த்தால் தான் அவருடைய மாபெருந் தொண்டின் பெருமையை நாம் நன்கு உணரமுடியும்.

* * *

பதினென்காம் நூற்றாண்டிலிருந்து தமிழ் இலக்கியங்களில் வடமொழியாட்சி மிகுதியாய் விட்டது. மணிப்பிரவாள நடையும் திசைச் சொற்களும் சேர்ந்து மலையாளம், கன்னடம், தெலுங்கு துளுபோன்ற மொழிகள் உண்டாய்விட்டன. அதற்கு முன்பே மொகலாயரின் அரசாட்சியால், உருது, அரபு, பாரசீக மொழிகள் தமிழில் நுழைந்துவிட்டன. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோரின் நுழைவினால் ஆங்கிலம், பிரெஞ்சு மொழி இலக்கியங்களின் செல்வாக்கு தமிழைப் பெரிதும் தாக்கியது. டச்சு, போர்ச்சுகீஸ் சொற்கள் ஊடே கலக்கலாயின.

இவ்வாறு ஒரு பக்கம் வடமொழி முதலியவைகளாலும் மற்றொரு பக்கம் ஆங்கிலம் முதலிய பிறநாட்டு மொழிகளாலும் தமிழ் மொழியின் வளர்ச்சியும் இலக்கிய வளமும் தடைப்படலாயின.

'தமிழில் முதல் நூல்களே கிடையா. தமிழில் காணப்படும் நூல்கள் அனைத்தும் வடமொழி நூல்களிலிருந்து பிறந்த வழி நூல்களும் சார்புநூல்களுந்தான், என ஒரு சாரார் துணிந்து சொல்லுங்காலம் ஏற்பட்டது. தமிழ் மொழிக்கே சிறப்பாகவுள்ள திருக்குறள், சிலப்பதிகாரம், சிவஞானபோதம் போன்ற அருமையான நூல்களைக் கூட வடமொழியாக்கந்தான் எனச் சாதிக்க முயன்றவர்கள் உண்டு.

அத்துடன் 'வடமொழி' முதலிய பிறமொழிகளின் உதவியின்றி, தமிழ்மொழி தனித்தியங்க முடியாது என்னுந் தருக்கோடு சொல்லத் தொடங்கிய தமிழ்ப்பகைவர்கள் மிகுதியாயினர். அவர்களுக்கு அறைகூவல் விடுவது போல், மறைமலையடிகளார் 'கலைச்சொற்கள் தவிர மற்றவற்றுக்கெல்லாம் எம்மொழியினுடைய சேர்க்கையுமில்லாமல் தமிழால் தனித்து இயங்க முடியும்' என்பதை, 'தனித் தமிழ் இயக்கம்' ஒன்றைத் தொடங்கி நிறுவிக் காட்டினார்.

'பேச்சிலும் எழுத்திலும் வரைதுறையின்றிப் பிறமொழிச் சொற்களைக் கலந்தால் காலப்போக்கில் தமிழ் மொழியின் தனிச்சிறப்பு குன்றிவிடும்' என்ற பேருண்மையைத் தமிழ்ப் புலவர்களுக்கும் மக்களுக்கும் உணரவைப்பதற்கு அடிகளார் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியையும் அது காரணமாக அவருக்கு ஏற்பட்ட கடும் எதிர்ப்பையும் பழியையும் பலர் அறிவர்.

மறைமலையடிகளார் தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த காலம் 1916-ஆம் ஆண்டாகும். அதே காலத்தில்தான் பா. வே. மாணிக்க நாயகர் தமிழின் தனிச்சிறப்பைத் தம்முடைய அரிய ஆராய்ச்சியால் வெளிப்படுத்தத் தொடங்கினார். பொறியியல் துறையை மேற்கொண்டிருந்த அவருக்கு தமிழ் மொழி வளர்ச்சியில் அக்கறையும் தமிழின் தனிச் சிறப்பை ஆராய்ச்சி வாயிலாக வெளிப்படுத்த வேண்டுமென்ற ஆர்வமும் மறைமலையடிகளாரின் அறிவுரையையும் ஆற்றல்மிக்க எழுத்தையும் கேட்டதாலும் படித்ததாலும் ஏற்பட்டிருக்க வேண்டும் அல்லது அவருக்கே இயற்கையாக இத்தமிழ் ஆராய்ச்சித் துறையில் நாட்டம் விழுந்திருக்கலாம். எது எப்படியிருந்தாலும், தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தவரை மட்டுமல்லாமல், தனித்தமிழின் சிறப்பை ஆராய்ச்சி செய்யும் முறையிலும் மாணிக்க நாயகர் மறைமலையடிகளாருடன் ஒத்த கருத்துடையவராய் இருந்திருக்கிறார் என்று நன்கு தெரிகிறது.

பெரியாரின் மகிமை

பெரியார் பொது வாழ்வில் தலையிட்ட பின் அதிகாரிகளின் நட்பு மிகுந்தது; அறிவாளிகளின் கூட்டுறவு வளர்ந்தது. செல்வர்களின் சேர்க்கை பெருகிற்று. காலஞ்சென்ற பா. வெ. மாணிக்க நாயக்கர் போன்ற பெருந்தமிழறிஞர்கள் இவருடைய யுக்தியான வேடிக்கைப் பேச்சுக்களுக்காகவே இவரது கூட்டாளிகளாயினர்.

—[சாமி சிதம்பரனார் எழுதிய 'தமிழர் தலைவர்' என்ற நூலிலிருந்து]

* * *

மாணிக்க நாயகர் தாம் அரிதின் முயன்று கண்டுபிடித்த தமிழ் ஆராய்ச்சி முடிவுகள் முதன்முதலாக 1917-ஆம் ஆண்டில் வெளியிட்டிருக்கிறார். 'தென்னிந்தியக் கழகம்' என்ற அமைப்பொன்றின் ஆண்டுவிழாவில் அச்சமயம் சிறந்த அறிஞராக விளங்கிருந்த நீதிபதி சர். டி. சதாசிவ ஐயர் அவர்கள் தலைமையில் இவர், 'The Tamil Alphabets-Its Mystic Aspect' என்ற தலைப்பில் தமிழ் எழுத்துக்களின் நுட்பதிட்பங்களை விளக்கிப் பேசியிருக்கிறார்.

இச்சொற்பொழிவில்தான் இவர், 'தமிழ் எழுத்துக்கள் மொழியியல்புடன் மட்டுமின்றி மறையியல் உண்மையோடும் தோன்றியுள்ளன. உலகியலுடன் அருளியலும் பிணைந்திருக்கிறது'' என்ற பேருண்மையை விளக்கியிருக்கிறார். இந்த ஆராய்ச்சி வாயிலாக இவர் ஓங்காரத்தின் உண்மைத் தத்துவத்தைச் சாதாரண அறிவுடையோரும் புரிந்து கொள்ளுகிற முறையில் விளக்கியிருக்கிறார். சாத்திரப் பண்டிதர்களும் தத்துவஞானிகளுங்கூட இவரைப் போல இவ்வளவு எளிதாக விளக்கிக் கூறவில்லை என்று சொல்லலாம்.

''தமிழில் காணப்படும் 'ஓ' என்னும் குறியொன்றே 'அஉம்' என்ற மூன்று எழுத்துக்களின் வரிவடிவங்களின் உள்ளடக்கி நிற்கிறது. அவ்வடிவே எல்லா எழுத்துக்களின் அடிப்படையாகும். கடவுளுக்கு வடிவங்களும் மந்திரங்களும் அவற்றின் அமைப்பாகவே எழுந்துள்ளன. இதுவே ஓங்காரம். ஓங்காரமே உலகத் தோற்றம். உயிர்களின் பிறப்பின் தொடக்கமும் முடிவும் மந்திரங்களின் வடிவந்தான்' என விரித்துரைத்துள்ள இவர், ''அம்பலவாணரின் ஐந்தொழில்களின் அமைவுதான் அதற்குரிய கடவுள் வடிவங்களாகும். தமிழகத்துச் சிவபெருமான் வழிபாடே மிகத் தொன்மை வாய்ந்தது. அதுமட்டுமன்று, நன்மை சார்ந்ததுமாம். உண்மை இயலினைத் தனிநிலை அல்லது ஆயுதம் என்னும் முப்பாற்புள்ளியின் அமைவு கொண்டு உணரலாம். சிவனின் முக்கண்ணையும் முப்பாற் புள்ளி உணர்த்தும் என்ற தம் அரிய ஆராய்ச்சி முடிவை வெளிப்படுத்தியிருக்கிறார். இவர் தம் கருத்துக்கு ஆதாரமாக, திருக்குறள், தொல்காப்பியம், திருமந்திரம், சிவஞானபோதம் முதலிய சித்தாந்த சாத்திர நூல்கள், தாயுமானவர் பாடல், கம்பரின் கவிதைகள் முதலியவைகளிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கிறார்.

மேலும், மாணிக்க நாயகர் 'ஓ'வின் வரிவடிவத்தை வரைந்து 'அவஉம்' மூன்றும் அடங்கியிருக்கிற உண்மையும் மற்ற உயிர்மெய் எழுத்துக்களுக்கும் அது அடிப்படையாக இருக்கிறது என்ற உண்மையையும் வரைகோடுகள் வரைந்து படம் போட்டு விளக்கியிருக்கிறார்.

* * *

நீதிபதி சதாசிவ ஐயர் தலைமையில் பேசிய இதே பேச்சை 1927-ஆம் ஆண்டில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பெருமண்டபத்தில் மறைமலையடிகளார் தலைமையில் மாணிக்க நாயகர் அவர்கள், ''தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்'' என்ற தலைப்பில் பேசினார். நேரில் கேட்கும் வாய்ப்பைப் பெற்ற எனக்கு இச்சிறந்த சொற்பொழிவு அறிவு விருந்தாக இருந்தது.

நாயகரவர்கள் 'ஓ' எழுத்தை வைத்து எல்லா எழுத்துக்களையும் வரைந்து காட்டியதோடு, கருவிலிருக்கும் குழவியிலிருந்து கூன் விழுந்த கிழவர் வரை எல்லாரிடத்திலும் ஓங்கார வடிவ அமைப்பை அட்டைகளில் ஓவியங்களாக வரைந்து காட்டியதும் கருவியின் தோற்றம், குழந்தை வளர்ச்சி, புழுபூச்சிகள், பறவை, விளங்குகின்ற தன்மை, மீன்களின் வளர்ச்சிமுறை, மூளையின் இயற்கை முதலியவை குறித்துக் கூட விஞ்ஞான முறையில் விளக்கியதும் இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

துறவிப் பெரியார்

பெரியாருடைய துறவிக் கோலப் படம் இன்றும் உள்ளது. இப்படம் காலஞ்சென்ற பா. வெ. மாணிக்க நாயக்கர் அவர்களால் பெரிதாக்கப்பட்டு ''ஆயில் பெயிண்ட்'' செய்யப்பட்டதாகும்.

—[சாமி சிதம்பரனார் எழுதிய 'தமிழர் தலைவர்' என்ற நூலிலிருந்து]

அடுத்து, 1930-ஆம் ஆண்டில் சென்னை இராயப்பேட்டை பால சுப்பிரமணிய பக்த ஜனசபையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில், மாணிக்க நாயகர் அவர்கள் 'கடவுளுக்குப் பிறப்பு, உறுப்பு இல்லை' என்ற விநோதமான தலைப்பைத் தந்து, இறைவனின் படைப்பு இரகசியத்தையும் பிரபஞ்சத்தின் தோற்றத்தையும் சித்தாந்த சாத்திர அடிப்படையில் தத்துவ ஞானத்தோடு தர்க்கரீதியாகப் பேசி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினார். சிரத்தையுடன் கேட்டவர்களைச் சிந்திக்கவும் வைத்தார். அத் தத்துவப் பேச்சு, நூல் வடிவில் வந்திருந்தால் தமிழ் மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டிருக்கும்.

மூன்றாவதாக நாயகர் அவர்களின் நாவன்மைமிக்க நல்லுரையைக் கேட்டது, அதே 1930 ஆம் ஆண்டில் வடசென்னையில் நடந்த சைவசித்தாந்த மகாசமாஜ ஆண்டு விழாவில். அன்று திருக்கோவிலூர் மடத்துத் தலைவர் ஞானியார் சுவாமிகள் எனப்பட்ட சிவசண்முக மெய்ஞான சிவாசாரிய சாமிகள் தலைமையில் ''இம்சை'' என்னும் பொருள் பற்றி அவர் பேசித் தலைவரையே ஆழ்ந்து சிந்திக்க வைத்து விட்டார். ஞானியார் சுவாமிகள் அமரும் மான்தோல் ஆசனம், அவர் ஏறிச் செல்லும் பல்லக்கு, பல்லக்கைச் சுமக்கும் ஆட்கள் முதலியவற்றைச் சுட்டிக்காட்டி ''அஹிம்சையையும் ஜீவகாருணியத்தையும் போதித்து வரும் ஞானியார் சுவாமிகளாலேயே இம்சையைத் தவிர்க்க முடியவில்லையே! அல்லல் வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கும் சாதாரண மக்களால் எப்படி இம்சை புரியாமல் வாழ்க்கை நடத்த முடியும்? என்று வினா எழுப்பினார் பெரும்புலமையும் சாத்திர ஞானமும் நாவன்மையும் வாய்ந்த ஞானியார் சுவாமிகளே நாயகர் அவர்கள் எழுப்பிய வினாக்களுக்குச் சரியான விடைபகர்ந்து விளக்குவதற்குச் சிரமமாயிருந்தது.

பின், நாயகரவர்களே ஒருவிதமாகப் பதிலும் சொன்னார். ''உணவுப்பொருள்கள் பெரும்பாலும் உயிர்க்கொலை வாயிலாகக் கிடைப்பவைதாம். செடி கொடி மரங்களிலிருந்து கிடைக்கும் காய்கறிவகைகள் கூட, ஜீவ இம்சை செய்து பெறுவதுதான்; செடி கொடி மரங்களுக்குக்கூட உயிர் உண்டு என்று நம் முன்னோர் தெரிவித்திருக்கின்றனர். விஞ்ஞான ரீதியாக எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் பகுத்தறிவாளர்கள்கூட, ஜகதீச சந்திர போஸ் என்ற இந்திய விஞ்ஞானியின் 'தாவரங்களும் உயிர்ப்பொருளே' என்று ஆதார பூர்வமாகத் தெரிவித்துள்ள உயிரியல் உண்மையை ஒப்புக் கொள்வர். ஆகவே, உயிர்க் கொலைக் குற்றத்துக்கும் பாவத்துக்கும் உட்படாமல் உணவு உண்ணவேண்டுமானால் சைவ உணவு உட்கொள்பவர்கள் வித்து நீக்கப்பட்ட சேனைக் கிழங்கு போன்ற கிழங்கு வகைகளையும், புலால் உண்ணும் பழக்கமுடையவர்கள் இயற்கையாக இறந்த எருமைமாடு போன்ற விலங்குகளின் இறைச்சியையும் பயன்படுத்தலாம்'' என்று விசித்தரமான யோசனையைத் தெரிவித்து அவையோரைத் திகைப்பில் ஆழ்த்தினார்.

இப்பேச்சைக் கேட்டபிறகு, 1919-ஆம் ஆண்டில் கரந்தை தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் ஞானியார் சுவாமிகளின் தலைமையில் நாயகரவர்கள் பேசிய 'மெய்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு' என்ற தலைப்பு கொண்ட பேச்சு எவ்விதம் இருக்கும் என்பதை என்னால் ஒருவாறு ஊகிக்க முடிந்தது. அப்பேருரை முழுக்க முழுக்க, சைவசித்தாந்தத்தின் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் ஒண்மையை விளக்குவதாக இருப்பதை நூல் வடிவில் வந்துள்ள கட்டுரையைப் படித்துப் பார்க்கும் அறிஞர்கள் உணர்வார்கள்.

நாயகரவர்கள் எப்பொருள் குறித்துப் பேசினாலும் பெரும்

பாலும் விநோதமான தலைப்புகளைத் தந்து நையாண்டி முறையைக் கையாண்டு நகைச்சுவை ததும்பப் பேசும் இயல்பைப் பெற்றிருந்தார். பெரிய சாத்திர உண்மைகளைக்கூடப் பாமர மக்களும் புரிந்துகொள்ளவேண்டுமென்ற நோக்கத்துடன் தான் இவர் தம் சொற்பொழிவில் இவ் விந்தையான முறையைக் கடைப்பிடித்து வந்தார்.

நான்காவதாக மாணிக்க நாயகர் அவர்களுடைய சொற்பொழிவை 1931 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மறைமலையடிகள் தம் வாழ்விடமான பல்லவபுரத்தில் அம்பலவாணர் திருமாளிகையில் நடத்திய பொதுநிலைக் கழக ஆண்டுவிழாவில் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதுதான் நான் கேட்ட கடைசிப் பேச்சு. அவர் பேசிய இறுதிப் பேச்சும் அதுதான்.

* * *

அங்கு நாயகரவர்கள் மறைமலையடிகளாரின் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவின் தலைப்பு, 'கம்பன் புளுகும் வால்மீகியின் வாய்மையும்' என்பதாகும். இது ஒரு சிறந்த திறனாய்வுப் பேச்சு. அன்று அவருடைய மேதைமைமிக்க பேச்சைக் கேட்ட அறிஞர்கள், நாயகரவர்களுக்கு வடமொழியிலும் தமிழ் மொழியிலும் எவ்வளவு ஆழ்ந்த புலமையிருந்தது என்பதை அறிந்து வியந்தனர். கம்பரின் கவிதைநயங்களை நன்குணர்ந்து சுவைத்திருக்கும் அவருடைய சுவையுணர்வு அவர் பேசிய இனிய பேச்சில் தெரிந்தது.

கம்பரை ஆங்கிலப் பெருங்கவி மில்டனுக்கு இணையாக வைத்துப் புகழ்ந்தார் அவர். ஆனால், 'கம்பர் மகாகவி வால்மீகி இரவிகுல அரசகுமாரனைக் காட்டிய இராமனை இறைவன் அவதாரமாகக் கற்பித்துக் கதைப்போக்கையே மாற்றியிருப்பது சரியல்ல' என்று அவர் கண்டனத்தைத் தெரிவித்தார்.

தலைமை வகித்த மறைமலையடிகளாரும், 'தலைசிறந்த பாவலனான கம்பன் தன் கற்பனைத் திறனையும் அற்புதக் கவிதையாற்றலையும் வெறுங் கட்டுக் கதைக்குப் பயன்படுத்தினானே அங்கணத்துள் அமிழ்தைக் கொட்டினாற்போல' என்று ஆற்றாமையோடு உரைத்தார்.

பா. வே. மாணிக்க நாயகர் பெற்றோரால் பன்னிரண்டு பிராயத்துக்குமேல்தான் பள்ளிக்கே அனுப்பப்பட்டார். ஆனாலும், இவர் இருபத்தைந்து வயதுக்குள் பி. இ. பட்டம் பெற்றுவிட்டார். பொறியியலில் புலமை பெற்றதுடன் இவர் திருப்தியடையவில்லை. அரசாங்கத்தில் உதவிப் பொறியாளர், செயற் பொறியாளர் பதவிகளை வகித்துப் பெயர் பெற்ற இவர் நாற்பத்தொன்றாவது வயதில் பாரிஸ்டர் பட்டம் பெறுதற்கு இலண்டன் சென்றார். இயற்கையிலேயே பேரறிவு படைத்திருந்த இவர் உயர்பட்டப் படிப்புகளின் பயனை அடைவதற்காக மிகவும் ஊக்கமுடையவராய் இருந்திருக்கிறார் என்பது இதிலிருந்து தெரிகிறது.

இலண்டனில் நாயகரவர்கள் 'Reinforced Concrete' என்பது குறித்து ஆராய்ச்சி நடத்தினார். அந்த ஆராய்ச்சியில் வெற்றி கண்டதற்கு அடையாளமாக, 'Calculograph for Reinforced Concrete' என்ற புதுமையான கருவியொன்றைக் கண்டுபிடித்தார். இக்கருவி மூலம் 'Reinforced Concrete' அமைப்பு முறையில் ஏற்படும் பெருஞ்சிக்கலான கணக்குகளை யும் மிக எளிதாகச் செய்து முடித்துவிட முடிந்ததாம். இத்துறையில் இவருடைய கண்டுபிடிப்புகளை ஆங்கிலப் பேரறிஞர்கள் பெரிதும் பாராட்டினர்.

தமிழக மக்கள் அனைவருக்கும் காவிரி நீரை வழங்கியுதவும் மேட்டூர் அணைத்திட்டம் நல்ல முறையில் உருவாவதற்கு மூல காரணமாக இருந்தவர் மாணிக்க நாயகர் என்பது அக்காலத்தில் இருந்தவர்கள் பலருக்கே தெரியாது என்றால், இன்றைய தலைமுறையினர்க்குத் தெரியாமல் இருப்பது வியப்பில்லை.

நாயகரவர்கள் மேற்பார்வை பொறியாளராக இருந்தபோதுதான், இவர் தக்க இடத்தைத் தேர்ந்தெடுத்து மேட்டூர் அணையைக் கட்டி முடித்தார். இந்த அணை அம்மேதையினுடைய பெயரைப் பறைசாற்றிக்கொண்டிருக்கும். மாணிக்க நாயகர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளை மட்டுமின்றி மற்றும் பல, மேனாட்டு மொழிகளையும் கற்றிருந்தார். ஆதலால், ஒலி இலக்கண ஆராய்ச்சியை இவரால் செய்ய முடிந்தது. 'உலகின் முதல் மொழி, மென்மையான மொழி தமிழ்தான். குறைந்த எழுத்துக்களைக் கொண்டு உயிர் மூச்சு மிகுதியாக வெளியாகாமல் இனிய ஒலியுடன் பேசக்கூடிய மொழியும் தமிழ்தான்' என்றும் அறுதியிட்டு உறுதியாகச் சொல்லுந்திறனை இந்த மேதையிடந்தான் நாம் கண்டோம்.

வானியல் ஆராய்ச்சியிலும் சோதிடக் கலையிலும் நாயகர் வல்லவராயிருந்தார். தத்துவ ஞானியான இவருக்கு இசை ஞானமும் இருந்தது. ஓவியராகவும் இவர் பயிற்சி பெற்றிருந்தார். போட்டோ பிடிக்கும் பழக்கமும் இவருக்கு உண்டு. தையல், பின்னல், தச்சு போன்ற சாதாரணக் கைத்தொழில்களைக் கூட அறிந்திருந்தார் என்றால், இவர் வாழ்க்கையை எவ்வளவு பயனுடையதாக நடத்தி வந்திருக்கிறார் என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் நாயகரவர்கள் ஆராய்ச்சிலேயே ஆழ்ந்திருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தினர் வெளியிட்ட 'Lexicon' என்ற 'தமிழ்ப் பேரகராதி'க்குத் தம் அறிவாற்றலை உதவி, ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.

மனிதனின் நிறை ஆயுள் எனப்படும் நூறு ஆண்டுகளில் செய்து முடிக்க முடியாத அரும் பெரும் செயல்கள் பலவற்றை மாணிக்க நாயகர் தாம் வாழ்ந்த அறுபது ஆண்டுகளில்-அதிலும் மாணவப் பருவம் போக 35 ஆண்டுகளில் செய்து முடித்திருக்கிறார் என்பதை அறியும்போது அவர் வாழ்வின் ஒவ்வொரு பொழுதையும் அறிவாராய்ச்சியிலும் செயல் முறையிலுமே பயனுடையதாகக் கழித்திருக்கிறார் என்று நாம் உணருகிறோம்.

இன்றைய இளந்தலைமுறையினர் இம்மாமேதையின் இலட்சிய வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு நடந்தால் நம் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் நன்மையுண்டாகும்.

தேசிய வளர்ச்சிப் பத்திரங்களில்

மக்கள் மேலும் மேலும் அதிகமாக முதலீடு செய்ய முன்வருகின்றனர்

ஏன் தெரியுமா? இது அரசு பாதுகாப்புப் பெற்ற முதல்தரமான சேமிப்புப் பத்திரம். சிறு சிறு சேமிப்பு மூலம் சேர்ந்த பணத்தை மொத்தமாக முதலீடு செய்ய இது வசதி செய்கின்றது—போனஸ், கிராஜுயுட்டி, காலாவதியான ஆயுள் இன்சூரன்ஸ் பாலிசி திரும்பப் பெறும் தொகை, சம்பள பாக்கித் தொகை போன்றவைகளை முதலீடு செய்யலாம்.

சுலபமான நடைமுறை, நல்ல வருமானம்—வருடம் 13 சதவிகிதம் (சாதா வட்டி) இதர அனுகூலங்கள் இந்தத் திட்டத்துக்கு கவர்ச்சியூட்டுகிறது. சேமிப்போருக்கு நல்ல வருமானமுண்டு. நீங்களும் இந்த வசதிகளைப் பெறலாம்

ரூ 100 ஆண்டுகளில் ரூ. 155 ஆக வளர்கிறது

யார் யார் வாங்கலாம்?
யார் வேண்டுமானாலும்—ஆண், பெண், மாணவர்கள், தொழிலாளி, ஓய்வூதியம் பெறுவோர், விவசாயி, சுயமாகத் தொழில் செய்வோர் வயது வரம்பில்லை-தனியாகவும் கூட்டு கணக்கிலும் வாங்கலாம்.

எவ்வளவுக்கு?
உச்சவரம்பு இல்லை, மூன்று தொகைகளுக்கு—ரூ. 10, ரூ. 100, ரூ. 500க்கு கிடைக்கின்றன.

என்ன செய்வது?
பத்திரம் வழங்கும் அலுவலகத்துக்குப் போய், நிர்ணயிக்கப்பட்ட பாரத்தை பூர்த்தி செய்து பணத்தை செலுத்தவும். உங்கள் கையில் உடனே பத்திரம் கொடுக்கப்படுகிறது.

வரிச் சலுகைகள்
ரூ. 3000 வரை வட்டிக்கு (இதர அங்கீகாரம் பெற்ற சேமிப்புகளில் கிடைக்கும் வட்டியையும் சேர்த்து) வருமான வரி விலக்குண்டு. காலாவதியில் கிடைக்கும் மொத்த தொகையில் வரி பிடித்தமிருக்காது. வருமான வரிக்கு வசதியாக இருக்கும் வகையில் வருடா வருடம் வட்டி கணக்கிடப்படுகிறது மூலதன லாபத்தை 6 மாதங்களில் இப்பத்திரங்களில் முதலீடு செய்தால் முழு வரிச் சலுகை கிடைக்கும்.

எங்கு வாங்குவது?
நாடெங்குமுள்ள தபாலாபீஸ்களிலும் அரசுடமையான வங்கிகளிலும் வாங்கலாம். இவற்றின் கிளைகள் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றன.

இதர வசதிகள்
நாமிநேஷன் செய்யலாம். ஒரு தபாலாபீஸ் பேங்க் கிளையிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றிக் கொள்ளலாம்.

உங்கள் பணம் வேகமாக வளரட்டும் தேசிய வளர்ச்சிப் பத்திரங்களை வாங்குங்கள்

தேசிய சேமிப்பு நிறுவனம்
தபால்பெட்டி எண். 96, நாக்பூர்-440001

davp 78/173



மூவர் உலா

தந்தை பெரியாருக்கும் மூதறிஞர் ராஜாஜிக்கும் பேரறிஞர் அண்ணாவுக்கும் ஓர் ஒற்றுமை இருந்திருக்கிறது. மேடைப் பேச்சில் தமக்கென தனிப் பாணியை அமைத்துக் கொண்ட இம் மூவரும், முதன் முறையாக எந்த ஊரில் எப்போது மேடைப் பேச்சைத் துவக்கினார்கள் என்ற விவரம் நமக்குத் தெரியாவிட்டாலும் கூட, அவர்கள், சென்னைத் திருநகரில்தான் இறுதியாக உரையாற்றியிருக்கிறார்கள் என்பது வரலாறு அறிந்த செய்தியாகிவிட்டது.



சென்னை தியாகராயநகரில் 14.1.'69 அன்று நடைபெற்ற கலைவாணர் சிலை திறப்பு விழா தான் பேரறிஞர் அண்ணா கடைசியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய நிகழ்ச்சி. உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும், ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுரை வழங்கியிருந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் சிரிப்புச் சக்கரவர்த்தியின் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேருரை ஆற்றினார் பேரறிஞர் அண்ணா. அந்த நேரத்திலும் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய மறக்கவில்லை அவர். அந்தப் பொது விழாவிற்குப் பின்னர், நோய் அதிகரித்ததால், மருத்துவமனைக்குச் சென்ற அண்ணா, திரும்பி வராமலே போய்விட்டார்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள், சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் 8.10.1972 அன்று நடைபெற்ற காந்தி பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். அந்நாளைய ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவந்த இராஜாஜி அவர்கள், துவக்கத்தில், தாம் எழுதிக் கொண்டு வந்திருந்த ஆங்கிலப் பேச்சைப் படித்தார். பின்னர் பொது மக்கள் மிகுந்த அளவில் வந்திருந்ததை உணர்ந்து, சிறிது நேரம் எளிய இனிய தமிழில் உரையாற்றினார். அதன் பின்னர் கடும் நோயினால் பாதிக்கப்பட்டு விட்டதால், அதுவே, அவர் பேசிய கடைசிக் கூட்டமாக—பொதுநிகழ்ச்சியாக அமைந்துவிட்டது.

தந்தை பெரியார் அவர்கள் சிந்தனையாளர் கழகத்தாரால் சென்னை தியாகராய நகரில் 19.12.1973-ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்தில் பேசினார்.

சமுதாய இழிவு ஒழிப்பு சம்பந்தமாகச் சென்னையில் ஒரு மாநாட்டைக் கூட்டுவதற்கு அப்போது பெரியார் ஏற்பாடு செய்து வந்ததனால், அப்பொதுக் கூட்டத்தில் மிகவும் வீராவேசமாகப் பேசினார்.

''நான் இனியும் எவ்வளவு காலத்திற்கு உயிரோடு வாழப்போகிறேன்; எனக்குப் பிறகு இந்தக் கருத்தையெல்லாம் எடுத்துரைக்க நாதி ஏது?'' என்று அவர் குறிப்பிட்டார்.

விரைவில் மறையப்போகிறோம் என்ற உள்ளுணர்வு அவருக்கு ஏற்பட்டிருந்ததை அவரது அன்றைய பேச்சு தெளிவாக்கியது.

அந்நிகழ்ச்சிக்குப் பின்னர், நோய் முற்றியதால் அதுவே அவரது கடைசிப் பொதுநிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் 24.12.'73 அன்று அவர் மறைந்தார்.

மூவரின் இறுதிப் பயணமும் அரசு மரியாதையுடன் சென்னையில் நடைபெற்றது.

அதுமட்டுமல்ல; மூவருக்கும் சென்னையிலேயே நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்டுள்ளன.

த.பி.

பெரியாரும் ராஜாஜியும்

ஆர். துரைராஜ்,
ஓய்வு பெற்ற உதவி காவல் ஆணையர்.

1953-ஆம் ஆண்டு ராஜாஜி தமிழகத்தின் முதல்வராக இருந்தார். மத்திய அரசாங்கம் இந்தியை வலிய தமிழ்நாட்டில் புகுத்திக் கொண்டிருந்த காலம்!

முதல் முதல் பெரியார் இதை எப்படியும் தடுத்தே ஆகவேண்டுமென்று உறுதி கொண்டார். கழகத்துத் தொண்டர்களை அரசாங்க ஆபீஸ்களில் இந்தியை அழிக்க ஆணையிட்டார். எல்லா போர்டுகளிலும் உள்ள இந்தி எழுத்துக்களை அழிக்க ஒருநாள் குறிக்கப்பட்டது. அப்பொழுது நான் வாலாஜா சாலை போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக இருந்தேன். என் சரகத்துக்குள் அநேக அரசாங்கக் கட்டிடங்கள் சேப்பாக்கத்திலும், கடற்கரை ஓரத்திலும் இருந்தன.

ராஜாஜி கொதித்து எழுந்தார். காவல்துறையினருக்கு, ஒரு போர்டையும் அழிக்க விடக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். எனவே, அரசாங்கக் கட்டடங்களுக்கு ஏராளமான போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டது. அன்று இரவு உத்தரவுகள் வந்து கொண்டேயிருந்தன. தொண்டர்களும் மறுநாள் காலை 6 மணிக்கு இந்தி அழிப்புப் போராட்டத்தைத் துவக்க 'ரெடி'யாக இருந்தார்கள். காலை சுமார் 4 மணிக்கு ஒரு அதிர்ச்சி தரும் உத்தரவு வந்தது. ராஜாஜி என்ன நினைத்தாரோ? அவரும் தமிழர்தானே? உத்தரவு என்னவென்றால், காலையில் தொண்டர்கள் இந்தியை அழிக்க வந்தால் காவல்துறையினர் அவர்களை ஒன்றும் செய்யக்கூடாது; வேறு ஒரு அசம்பாவிதமும் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதே அந்த உத்தரவு.

மறுநாள் காலை, நான் சேப்பாக்கத்தில் ஒரு அரசாங்கக் கட்டடத்திற்கு முன்பு சில போலீசாருடன் நின்று கொண்டிருந்தேன். தொண்டர்படை, ஏணி, வாளி, தார், பிரஷ் முதலியவற்றுடன் வந்து எங்களைப் பார்த்துக் கொண்டே ஏணியை ஒரு கட்டடத்தின் முன்னால் போட்டு மேலே ஏறி இந்தி போர்டை அழிக்க ஆரம்பித்தார்கள். நாங்கள் ஒன்றும் செய்யாமல் இருந்ததைப் பார்த்து அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். இதைப் போலவே சென்னையில் எல்லா இடங்களிலும் நடந்தது. கலவரம் இல்லை; சொத்து சேதமில்லை. உயிர்ச் சேதமில்லை. எல்லாம் சுமார் 10, 11 மணிக்குள் முடிந்து விட்டது. ராஜாஜிக்கும் சந்தோஷம், பெரியாருக்கும் சந்தோஷம்.

ராஜாஜி முதல்வராக இருக்கும்போது அரசியல் கருத்து வேறுபாட்டால் பெரியார் அவரைத் தாக்கு தாக்கு என்று தாக்கிக் கொண்டிருந்தார். இருவரும் ராஜதந்திரிகள். இவர்களைப் போல் ராஜதந்திரிகளை இனி பார்க்கப் போவதில்லை.

இது நடந்த ஒரு மாதத்திற்குப் பிறகு ராஜாஜி தன் வீட்டை விட்டு, காலை, வழக்கம் போல் சட்டசபைக்கு வந்து கொண்டு இருக்கிறார். அப்பொழுது அவருக்குப் பாதுகாப்பாக முன்னும் பின்னும் இரண்டு கார்கள் வருவது உண்டு. பின்வரும் கார் அவருக்குத் தெரியாது. அந்தக் காரில் நான் அண்ணாசாலை நாகூர் தர்க்காவிலிருந்து அவர் காரைப் பின் தொடர்ந்து வருகிறேன். சட்டசபை, கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் அப்பொழுது இருந்தது. அவர் காரை கவனித்தவுடன் பின் தொடர்ந்தேன். அண்ணாசாலை போஸ்ட் ஆபீஸ் அருகில் கார் நெருக்கடியில், அவர் கார் என் கண்ணிலிருந்து தப்பிவிட்டது. நேராகச் சட்டசபைக்கு வர, அங்கு இன்னும் ராஜாஜி கார் வரவில்லை என்று தெரிய வந்தது. எனக்கு மனக்கலக்கம். அதைப் போலவே மற்றவர்களுக்கும் கவலையாகிவிட்டது. பிறகு சுமார் அரைமணி நேரங்கழித்து ராஜாஜியின் கார் சட்டசபைக்கு வந்தது. டிரைவரை விசாரித்தேன். 'கார் அண்ணாசாலை போஸ்டாபீஸ் அருகில் வரும் போது உனக்குப் பெரியார் வீடு தெரியுமா? என்று கேட்டதாகவும் தெரியும் என்று சொன்னதாகவும் உடனே அங்கே போகும்படி சொன்னதாகவும்' டிரைவர் குறிப்பிட்டார்.

அப்பொழுது பெரியார் மீரான் சாகிப் தெருவில் இருந்தார். மிகவும் பக்கம். டிரைவருக்கு ஒரே ஆச்சரியம். ராஜாஜி போய் பெரியார் வீட்டு முன்னால் இறங்க, மேல் அங்கி இல்லாமல் முற்றத்தில் உட்கார்ந்திருந்த பெரியார் எழுந்து ராஜாஜியைச் சேர்த்துக் கட்டிக் கொண்டாராம். மணியம்மையாரிடம் சொல்லி காப்பி கொண்டுவரச் சொல்லி அவருக்கு அன்போடு கொடுத்தாராம். இருவரும் சிரித்துக் கொஞ்ச நேரம் பேசிய பிறகு, ராஜாஜி இருவரிடமும் விடை . பெற்றுக் கொண்டு வந்ததாக டிரைவர் கூறினார். என்னே! இந்தப் பெரியவர்களுடைய நட்பு!

1½ இலட்சம் நூல்களின் உறைவிடம்

"உயிர் காலேஜ்" என்றால் உங்களுக்குத் தெரியும், 'வன விலங்குக் காட்சிச் சாலை' (Zoo) என்று!

'செத்த காலேஜ்' என்றால் 'அரும்பொருள் காட்சியகம்' (Museum) என்றும் உங்களுக்குத் தெரியும்!

ஆனால், 'புஸ்தக காலேஜ்' (Book College) என்றால் உங்களுக்குத் தெரியுமா?

அதுதான் மிகப் பழைமையான நூலகமாக விளங்கும் 'சென்னை இலக்கியச் சங்கம்' Madras Literary Society.

சென்னை நுங்கம்பாக்கம், கல்லூரிச் சாலையிலுள்ள பள்ளிக் கல்வி இயக்கக அலுவலக வளாகத்தில் அமைந்துள்ளது இப்பழம் பெரும் நூலகம்.

கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிய ஆங்கிலேயர்களால் இச்சங்கம் 1812ல் துவக்கப்பட்டது. தமிழகத்தில், ஏன் இந்தியாவிலேயே முதன் முதலில் துவக்கப்பட்ட ஆங்கில நூலகம் இதுதான்! இதன் முதல் தலைவர் சர் ஜான் நியூ போல்ட்; பென்ஜமின் கய் என்பவர் இதன் செயலாளர்.

துவக்கத்தில் இச்சங்கம், ஆங்கில இலக்கியம், வரலாறு, தத்துவம், அரசியல், அரசு அறிக்கைகள் முதலிய பல துறைகளில் தேர்ந்த புலமை மிக்க உயர்ந்த நூல்களை இங்கிலாந்திலிருந்தே தருவித்து, உறுப்பினர்களுக்கு வழங்கியது.

அன்றைய ஆங்கில அரசின் ஆதரவிலும், செலவிலும் எழுப்பியதே இன்று காட்சி தரும் இந்நூலகக் கட்டடம்.

இந்நூலகத்தில் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெளிவந்த அருமையான ஆங்கில நூல்கள் இருக்கின்றன. 166 வயதான இந்நூலகத்தில் சுமார் ஒன்றரை இலட்சம் நூல்கள் உள்ளன. இந்நூல்களை அழகுற அடுக்கி வைப்பதற்கான மிகப் பெரிய எஃகு அலமாரிகள் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்டன.

இந்நூலகத்திற்கு ஒருபெருமை உண்டு. அதாவது நேதாஜி இந்நூலகத்தின் ஒரு உறுப்பினராக இருந்திருக்கிறார்! அலிபூர் சிறையில் அவர் இருந்தபோது, இந்நூலகத்திலிருந்துதான் புத்தகங்கள் அனுப்புவார்களாம்! அவர் 23-5-1935ல் வியன்னாவிலிருந்து எழுதிய கடிதம் ஒன்றை இன்றுங்கூட இந்நூலகத்தில் பார்க்கலாம்.

இந்நூலகம், கிடைத்தற்கரிய அரிய நூல்களின் கருவூலமாக விளங்குவதற்கு ஓர் எடுத்துக் காட்டு :

இங்கே 1872ல் வெளிவந்த ரிக் வேதம், 1880ல் வெளிவந்த புத்த ஜாதகக் கதைகள், 1869ல் வெளிவந்த நெப்போலியனின் கடிதங்கள், ஷேக்ஸ்பியரின் நூல்கள், இலத்தீன், கிரீக், சிரியா, அராபிக், எதியோபியன் மொழிகளில் வெளிவந்த பைபிள்கள், 1812ல் வெளிவந்த மலேயா மொழி அகராதி, 1815ல் வெளியான சீன மொழி அகராதி, 1806ல் வெளிவந்த ஜான்சன் அகராதி முதலானவை புத்தகப் பிரியர்களுக்குப் பேரின்பம் தருவனவாகும்.

இது எப்படித் தோன்றியது?

துவக்கத்தில் அரசு அலுவல்களில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேயர் பலர் ஒன்று சேர்ந்து அமைத்த இலக்கிய வட்டமே, இந்தச் சங்கம். இன்று முழுக்க முழுக்க நூலகமாக மட்டுமே இது பயன்பட்ட போதிலும், தொடக்க நாளில் பல்வேறு இலக்கியப் பணிகளில் இது ஈடுபட்டிருக்கக் கூடும். இந்தக் கழகத்தின் முழு நீளமான பெயரில் காணும் "ராயல் ஏஷியாடிக் சொசைட்டி" என்பது என்ன? அதனுடன் இதற்கு உள்ள தொடர்பு எப்படிப்பட்டது? என்பன போன்ற விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லையாம்! என்றாலும் இது சம்பந்தமான முழு விவரங்களைக் கேட்டு இதன் கௌரவச் செயலாளர் திரு எஸ். வி. பி. ராவ் அவர்கள் இங்கிலாந்துக்குக் கடிதம் எழுதியுள்ளாராம்.

இங்கிலாந்திலுள்ள 'ராயல் ஏஷியாடிக் சொஸைட்டி' உறுப்பினர் ஒருவர் சென்னைக்கு வந்தால், இந்த நூலக உறுப்பினராகக் கருதப்படலாம் என்றும், இந்த நூலக உறுப்பினர் ஒருவர் அங்கே சென்றால் அதன் உறுப்பினராகக் கருதப்படலாம் என்றும் ஒப்பந்

தம் ஒன்று உள்ளதாம். இந்தத் தகவல் சங்க விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளனவாம்.

சுமார் 250 உறுப்பினர்களையும், 90 சந்தாதாரரையும் கொண்டு செவ்வனே பணியாற்றும் இந்த நூலகம், உறுப்பினர் வீடு தேடி வந்து புத்தகங்களைத் தருகிறது. சந்தாதாரரோ நூல்களைத் தேடி இங்கே வருகின்றனர்.

இந்நூல் நிலையம் பெரும்பாலும் ஆங்கில நூல்களையே கொண்டதாயினும், தமிழகத்தின் சிறந்த கலைக் கருவூலமாகத் திகழ்கிறது. 19வது நூற்றுண்டின் தமிழக வரலாற்றை ஆராய்வோருக்கு இந்நூலகம் பல புதிய செய்திகளைத் தரவல்லது.

உறுப்பினரிடையே தேர்ந்து எடுக்கப்பட்ட நிர்வாகக் குழு மாதம் ஒரு முறை கூடுகிறது. வழக்கறிஞரும், பத்திரிகாசிரியரும், தொழிலதிபரும், அயல் நாட்டுத் தூதரும், முன்னுள் நீதிபதியும், சமூக சேவகியுமான அந்தக் குழுவினர், நூலகத்துக்குப் புதிய புதிய நூல்கள் வாங்குவது பற்றித் தீர்மானிக்கின்றனர். ஆங்கில நூல்கள் பற்றி விமரிசனங்கள், செய்திகள், விளம்பரங்கள், தாம் கேட்டிருந்தவை ஆகிய பலவற்றையும் ஆய்ந்து மாதந்தோறும் 28, 30 புது நூல்கள் வாங்குகிருர்கள். வாங்கிய பிறகு அந்தப் பட்டியலை உறுப்பினர்களுக்கு அனுப்புகிருர்கள்.

சுமார் ஒன்பது மாதக் காலம் ஒவ்வொரு நூலும் புதுப் புத்தகமாகக் கருதப்படும். சந்தாதாரர்கள் இந்தக் காலத்துக்குப் பிறகே அவற்றைப் பெறலாம்.

பேட்டைக்கு ஒருகிழமை என்ற கணக்கில் உறுப்பினர்களின் வீடு தேடிப் புத்தகங்கள் வருகின்றன. வாரம் ஒரு நாள் ஒவ்வோர் உறுப்பினர் வீட்டுக்கும் சென்று படித்த புத்தகத்தை வாங்கிக் கொண்டு, புதிய நூல்களை வழங்கும் பணியைச் சைக்கிள் ஆட்கள் ஒழுங்காக நிறைவேற்றி வருகின்ருர்கள்.

"நான் இருபது ஆண்டுகளாக இங்கே உறுப்பினராக இருக்கிறேன். என்ன வெயிலானுலும், மழையானுலும் வாரம் தவருமல் புதுப் புத்தகம் வந்து விடுகிறது" என்று பெருமையுடன் கூறுகிருர் ஓர் உறுப்பினர்.

நூலகத்தின் புத்தகங்களை ஆசிரியன் பெயர்ப்படி வகைப்படுத்தி 1904 வரையில் ஒரு பட்டியல் மூன்று, நான்கு தொகுதிகளில் வெளியாயிற்று. பின்பு, 1924-1931ஆம் ஆண்டுகளில் பிற்சேர்க்கைகள் வெளியாயின. அவை

நூலகத்தைப் பார்வையிடுகிருர் மேதகு ஆளுநர்

யாவுமே ஆசிரியரின் வரிசையில் அமைத்த பட்டியல்கள். மிகவும் மதிப்புள்ள பல அரிய நூல்கள் இங்கே உள்ளன. புதுப் புதுப் புத்தகங்கள் வெளியாகும்போதே வாங்கும் வழக்கம் இருப்பதனுல், இன்று பிரபலமாக உள்ள ஏராளமான இலக்கியங்கள் அவை முதல் முதல் வெளியான பதிப்பிலேயே இங்கே கிடைக்கின்றன. விக்டர் ஹியூகோவின் ஏழை படும்பாடு (பிரெஞ்சில்), ஸ்காட் நாவல்கள், ஆஸ்கார் ஒயில்ட் புத்தகங்கள், டென்னிஸன், பிரவுன் முதலிய கவிஞர்களின் நூல்கள், வால்ட் விட்மனின் புத்தகம், ஜேன் ஆஸ்டின் நாவல்கள் பலவற்றின் முதற்பதிப்புப் பிரதிகள் இங்கே உள்ளன. அவை தனியே வைத்துப் போற்றப் பெறுகின்றன.

ஆங்கில நூல்களே பெரும்பாலும் சேர்க்கப்பட்டாலும் தொடக்கக் காலத்தில் பிரஞ்சு புத்தகங்களும், சமஸ்கிருத நூல்களும் இருந்தனவாம். ஹார்வர்ட் ஓரியண்டல் சீரிஸ் புத்தகங்களும் உள்ளன. "பிப்ளியோதிகா இண்டிகா" என்ற சமஸ்கிருத புத்தகப் பட்டியலும் அபூர்வ நூலாகக் கிடைக்கிறது.

இந்த நூலகம், அருஞ் செல்வமாகப் போற்றும் ஓர் ஓவியம் அபெ. ஜே. ஏ. டுபோயி என்ற பிரெஞ்சு அறிஞரின் படம் ஆகும். படத்தில் இந்தியப் பயணிபோல் உடை உடுத்திக் கொண்டு தோற்றமளிக்கும் டுபோயி 1792 முதல் முப்பத்தோரு ஆண்டுக்காலம் தென்னிந்தியாவில் பயணம்செய்தவராம். இந்தியப் பழக்க வழக்கங்களை விளக்கி இவர் ஒரு நூல் எழுதியிருக்கிருர். அந்த நூலுக்கு மாக்ஸ் முல்லர் முன்னுரை வழங்கியுள்ளார். அந்த முதல் நூல் இங்கே இருக்கிறது.

1887ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தைப் பதிவு செய்த சாசனம், 1746, 1759ஆம் ஆண்டுகளில் சென்னை நகரத்து வரைபடங்கள் (அப்பொழுதெல்லாம் சென்னை என்பது வெறும் கோட்டை மட்டுமே) ஆகியவை சில இந்நூலகத்தில் தேடிப் பார்த்தபோது கிடைத்திருக்கின்றனவாம்!

நூல்கள் தவிர பத்திரிகைகளும் இங்கே வாசகர்களுக்கென தருவிக்கப்படுகின்றன. அவற்றை உறுப்பினர்கள் ஏலத்திலும் எடுத்துக் கொள்ளலாம்.

"என் தகப்பனுர் இங்கே நீண்ட நாள் உறுப்பினர். நான் இருபது ஆண்டுகளாக இந்நூலகத்தோடு தொடர்பு கொண்டு வருகிறேன்" என்று பெருமிதத்துடன் கூறுகிருர் ஒரு தொழில் நிர்வாகி.

தமிழகத்தின் தலைசான்ற தொல் பொருள் காட்சிக்குத் துவக்கத்தில், மண்ணியல் தாதுப் பொருள்களைக் கொடை அளித்து கண்காட்சியைத் தோற்றுவித்த இந்த இலக்கியச் சங்கம்—நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ், அன்னி பெசண்ட், பி. எஸ். சிவசாமி ஐயர், சீனிவாச அய்யங்கார் போன்ற தேசத் தலைவர்களின் அரவணைப்பில் ஓங்கி வளர்ந்த இந்தப் பழம் பெரும் இலக்கியச் சங்கம்—இலக்கிய ஆர்வமுடையோருக்கு இன்னமுதாய் விளங்கி வருகிறதென்றுல் அது மிகையல்ல!

—பி. வி. ஜி.

கரும்பில் அதிக இலாபம் பெற்றிட!

திரு. த. கணபதி,
பி.எஸ்சி. (விவ) டி.எச்.
துணை வேளாண்மை இயக்குநர்.

கரும்பில் நல்ல இலாபம் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் பல இருக்கின்றன. ஒரு பயிரின் இலாபம் கிடைக்க நல்ல விளைச்சலும் நல்ல விலையும் கிடைக்க வேண்டும். நல்ல விளைச்சலைக் குறைந்த செலவில் எடுப்பது இலாபத்தை மேலும் அதிகப்படுத்த வாய்ப்பைத் தருகிறது என்பதை நாம் அறிவோம்.

ஒரு பயிரின் நல்ல மகசூல்—பருவம், ரகம், நிறம், நீர், உரம், சாப்பு, நுட்பம் திறமை இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையும். இதோடு நல்ல விலை கிடைத்தால் இலாப நோக்கில் ஆர்வமும், அக்கறையும் நமக்கு ஏற்படுவது இயற்கை. முக்கியமாக சாதக நிலைமைகள் நல்ல விளைச்சலை உண்டு பண்ணுவதற்கு அவசியம் என்பதை நாம் நன்கு அறிவோம்.

எனினும், கரும்புச் சாகுபடியில் அதிக இலாபம் அல்லது நல்ல இலாபம் பெற பல உழவியல் நுட்பங்கள் அதிக விளைச்சலை ஏற்படுத்துவதற்கும், வழக்கமாக ஏற்படும் சாகுபடிச் செலவுகளைக் குறைந்த செலவில் செய்வதற்கும் வழி வகுக்கின்றன. அவற்றை இங்கு நாம் காணலாம்.

நிலத்தைப் பொறுத்தவரையில் நன்செய், தோட்டப் பகுதிகளில் வடிகால் வசதியுள்ள வளமான மண் கண்டமுள்ள நிலம் சிறந்தது. மண்ணில் அமில காரநிலை 7.5 உகந்தது என்ருலும் 6.5-லிருந்து 8.5க்குள் இருக்கும் நிலம் வேண்டும். ஆண்டு முழுவதும் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும் வசதியிருக்க வேண்டும். நிலமும், நீரும் பொருந்திவிட்டால் அதிக மகசூலுக்கு அளவே இல்லை.

நிலத்தைப் பண்படுத்துவதற்கும், பின்செய் நேர்த்திகளுக்கும் குறைந்த செலவில் செய்திடும் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். ஆழ உழுது களைகளைக் கட்டுப்படுத்த 'விக்டரி' இரும்புக் கலப்பை அல்லது டிராக்டர் கலப்பை கொண்டு உழவேண்டும். பார்பிடிக்க பார் கலப்பை, ஊடு உழவுக்கு 'ஜூனியர் ஹோ' போன்ற பற்கலப்பை இவற்றை உபயோகிக்க வேண்டும். இவற்ருல் வேலைத் திறன், பணம்-மிச்சம், பலன்-அதிகம்.

பட்டத்திற்கு ஏற்ற ரகங்களைப் பயிர் செய்ய வேண்டும். தனிப்பட்டம் முன்பட்டம் இவற்றிற்கு ஏக்கருக்கு 40-57 டன் மகசூல் கொடுக்கும் ரகங்களும், நடுப்பட்டத்திற்கு 55-67 டன் மகசூல்கொடுக்கும் ரகங்களும், பின் பட்டத்திற்கு 60-82 டன் மகசூல் கொடுக்கும் 771-779 எண் உள்ள ரகங்களும். தமிழ்நாடு வேளாண்மைத் துறையால் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. இந்த ரகங்களைக் கரும்பு வளர்ச்சித் திட்ட மேற்பார்வையில் செயல்படும் நாற்றங்காலிலிருந்து எட்டு மாத விதைக் கரும்புகளைப் பெற்றுக் கரணை தயார் செய்து நடவேண்டும். கரணை தேர்வில் கவனம் செலுத்திஞல் கணிசமாக மகசூல் கிடைத்திடும்.

கரணைச் செலவைக் குறைத்திடப் பல வழிகள் உண்டு. அவரவர்க்கான நாற்றங்காலை ஏக்கருக்குப் பத்து செண்ட் என்ற அளவில் விதைக் கரணைகளைக் கரும்பு வளர்ச்சித் திட்டம் மூலம் பெற்று ஆண்டுதோறும் பெருக்கிக் கொள்ள முற்பட வேண்டும். ஏக்கருக்கு 60 ஆயிரம் பரு என்ற விகிதத்தில் நடவு செய்ய வேண்டும். இதற்கு மேல் அதிகம் இடுவதால் பலன் இல்லை. இந்த அள

வைக் குறைத்து ஏக்கருக்கு 20-30 ஆயிரம் பருக்களை ஒரு பரு கரணைகளாக டிசம்பர்-ஜனவரி மாதம் முன்பட்டத்தில் 15-30 சென்டி மீட்டர் இடைவெளியில் படுக்கை வசதியில் கானில் பக்க வாட்டில் நடவேண்டும். இம் முறையால் கரணைக்காகும் செலவைப் பாதியும், அதற்கு மேலும் குறைத்துச் செலவை மிச்சப்படுத்தலாம். அதோடு மட்டுமின்றி ஒரு பரு நடவில் கிளைப்புகள் தாய்க்கரும்பு போன்று ஒருமித்து சம வளர்ச்சியில் காணப்படுகிற மகசூல் அதிகரிக்கிறது.

கரணைகளை நடுவதற்கு முன்பு 'பெவிஸ்டின்' என்ற மருந்துடன் கலந்து நடவு செய்தால் அகலால் அரிட்டான் இவற்றில் தோய்த்து நடுவதைவிட அதிக முளைப்புத் தன்மை கிடைக்கிறது. 100 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் பெவிஸ்டினும், ஒரு கிலோ யூரியாவும் கலந்து கரணைகளை 5 நிமிடம் நனைத்து நடவேண்டும். இதனால் நோய்கள் கட்டுப்படுத்தப்படுவதோடு பருக்களின் நல்ல முளைப்புத் தன்மையும், வீரியமும் கிடைக்கிறது., அதிகக் கரும்பு உற்பத்திக்கு வழி வகுக்கிறது.

கரணையைக் காலில் நடுவதற்கு முன்பு அவற்றைக் கரையான் தாக்காமலிருக்க ஏக்கருக்கு இருபது கிலோ பி. எச். சி. 10 சதத் தூளைக் காலில்போட்டு நட வேண்டும். இதனால் நீர்க் கரையான் கரணையைத் தாக்காது முளைப்பு நன்றாக இருக்கும். பயிர்த்தொகை குறையாது அமையும். அதிக மகசூலும் கிடைக்கும்.

காலில் கரணையை நடுவதால் ஆழமாக வேர் ஓடி நல்ல பலன் கொடுக்கிறது. மண் அணைக்க ஏதுவாகிறது. கரும்பு சாயாது காக்கப்படுகிறது.

கரும்பின் மகசூல் ஏக்கருக்கு எத்தனை கரும்பு வெட்டுக்கு வருகிறது என்பதைப் பொறுத்தது. அதிகக் கரும்பு அதிக கரணைகளில் மகசூல், நடப்பட்ட கரணைகளில் பழுது ஏற்பட்டு இடைவெளிகள் காணப்பட்டால், கரணை நட்ட 21-ஆம் நாள் பழுது போட வேண்டும். பழுது போடுவதற்கு நடவின்போது பத்து வரிசைக்கு ஒரு வரிசை இரட்டை வரிசை நடவு செய்து கொள்ள வேண்டும். இவ்விரடடை வரிசையிலிருந்து முளைத்த கரணைகளைக் கொண்டு பழுது போட வேண்டும். அல்லது ஒரு பரு கரணைகளை மேட்டு நாற்றங்காலில் நட்டு அவற்றிலிருந்து 21 நாட்களில் எடுத்து நட வேண்டும். பழுது போட்டு பயிர்த் தொகை நிலைத்தால் உயர் விளைச்சலுக்கு உறு துணையாகும்.

கரும்புக்கு முதல் எதிரி, களை என்று சொல்லலாம். களைகளைக் கட்டுப்படுத்த ஆழ உழுவது, களை எடுப்பது போன்றவை மேற்கொள்ளப்படுகிறது. கரும்பு நடவு செய்த மூன்று நாட்களுக்குள் லாசோ, மேசட், அட்ரசின், செங்கார் போன்ற களைக் கொல்லியைத் தெளித்து விட்டால் களை கரும்புடன் போட்டியிட வாய்ப்பில்லாமல் செய்து விடுகிறது. மகசூலும் அதிகமாகிறது.

களையைக் கட்டுப்படுத்த பாரில் சருகு பரப்பிகளை முளைக்க விடாமல் செய்து விடுவதோடு நிலத்தில் ஈரம் காத்திடும் சூழ்நிலையை ஏற்படுத்தித் தண்ணீர் செலவைக் குறைத்து விடலாம், கரும்பு நட்ட மூன்று நாட்களில் பத்து செ. மீ. உயரத்தில் சருகை பாரில் பரப்பிட வேண்டும். சருகு மக்கியதும் அவற்றை மண்ணுடன் கலந்து நிலத்தை வளப்படுத்திக் கொள்ளலாம். சருகு பரப்பினால் இளங்குருத்துப் புழு, தாக்குதல் மட்டுப்படுத்தப்படுகிறது. மருந்தடிக்கும் செலவு மிச்சப்படுகிறது.

கரும்புக்கு உரம் இடுவதில் காலத்தே கொடுப்பதும், தக்க அளவில் கொடுப்பதும் அவசியம். முடிந்த அளவு அங்கக உரங்களை அடி உரமாக அவசியம் கொடுக்கப்பட வேண்டும். மணிச்சத்து உரத்தை அடி உரமாகக் கொடுக்க வேண்டும். மேலுரமாகத் தழைச்சத்து, சாம்பல் சத்து உரங்களை நட்டு 45-90ஆம் நாட்களில் கொடுக்க வேண்டும். மேலுரத்தைச் சிதறி மண் அணைப்பதற்குப் பதிலாகக் கரும்புத் தூரின் பக்கமாக 30 செ. மீ. இடைவெளியில் கடப்பாரை அல்லது கம்பு இவற்றால் 10 செ. மீ. ஆழக்குழிகள் போட்டு அதில் உரத்தை இட்டு மூட வேண்டும். உரத்தின் பலன் பயிருக்கு முழுமையாகக் கிடைக்கும். நல்ல விளைச்சலும் கிடைக்கும்.

கரும்பு நட்டு 100-110 நாட்களில் மேலுரமாக இடும் யூரியாவில் பாதி அளவைச் சமமாகப் பிரித்து 50 சத தெரிவுக் கலவையாகத் தண்ணீரில் கரைத்து விசைத் தெளிப்பானால் சோகையில் தெளித்தால் யூரியாவை மிச்சப்படுத்தி, செலவையும் மிச்சப்படுத்தலாம். இதனால் உரமும் மிச்சம், உரமிட்டு தண்

ணீர் கட்டும் செலவும் மிச்சம், யூரியாவைப் பிற்பகலில் நிலத்தில் நல்ல பதமாயிருக்கும் பொழுது தெளிக்க வேண்டும்.

கரும்பு நடவிலிருந்து அறுவடையாகும் வரை அதனைத் தாக்கும் நோய், நொடிகளைச் செலவு அதிகமின்றிக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். அதன்படி சாகுபடி முறையில் மேற்கொள்ளும் உழவியல் நுட்பங்கள் பூச்சிகளைப் பூச்சிகளால் கொல்லும் உயிரியல் முறைகள் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன.

பூச்சிக் கொல்லி மூலம் கட்டுப்படுத்தும் இரசாயன முறை தவிர்க்க முடியாத நிலையில் மிகக் குறைந்த அளவில் மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக நடவின் போது காலில் பி. எச். சி. 10 சதம் போடுதல், கரணைகளை மருந்தில் தோய்த்தல், வளர்ச்சிக் காலத்தில் இலைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ‘என்டோ சல்பான்’ போன்ற மருந்துகளை ஓரிரு முறை தெளித்தல் ஆகும்.

உயிரியல் முறைப்படி கரும்பைத் தாக்கும் இளங்குருத்துப் புழு, இடைக்கணுப்புழு, குருத்துப் புழு, இவற்றைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகளை முறைப்படி கரும்பு வயலில் பரப்ப விட்டால் இக்கொடிய புழுக்களின் சந்ததிகள் அறவே அழிக்கப்படுகின்றன. இந்த ஒட்டுண்ணிகளைக் கரும்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கரும்புத் துணை வேளாண்மை அலுவலகத்திலும் உற்பத்தி செய்து எல்லா விவசாயிகளுக்கும் சலுகை விலையில் விநியோகிக்கப்படுகிறது. இவ்வொட்டுண்ணிகளை எல்லா விவசாயிகளும் ஒருமித்து உபயோகித்தால் குருத்துப்பூச்சி, இடைக்கணுப்பூச்சிகளை நிரந்தரமாகக் கட்டுப்படுத்த வாய்ப்புண்டு.

கரும்பின் நடவுக்குப் பின் மேலுரம் இடும்போது மண் அணைத்தல் சருகு நீக்குதல், 7-ஆம் மாதம் சருகு நீக்கிக் கரும்பை எடுத்துக் கட்டுதல் ஆகிய பின்செய் நேர்த்திகள் கரும்பைச் சாயாது காத்து மகசூலை அதிகப்படுத்தும்.

கரும்பு அறுவடை செய்வதன் கவனம் செலுத்த வேண்டும். கரும்பு விளைந்ததும் தாமதமின்றி வெட்ட வேண்டும். கரும்பைத் தரையோடு பதிய வெட்டி அறுவடை செய்ய வேண்டும். இதனால் மட்டும் ஏக்கருக்கு 3-லிருந்து 4 டன் அதிக மகசூல் கிடைக்கிறது. அதோடு இவ்வாறு அறுவடை

கட்டைப் பயிர் மகசூல் பெற்றிட...!

கரும்பில் கட்டையிடுவது வழக்கம். இதனால் கரும்புச் சாகுபடிச் செலவில் மிச்சம். குறிப்பாக நிலத்தைப் பயன்படுத்துவது. விதைக்கரணைக்காகும் செலவு, நடவு மருந்து முதலியவைகள் மிச்சம். அத்தோடு மகசூலும் ஒரு மாதத்திற்கு முன்பு கிடைக்கும் வாய்ப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

கரும்பு கட்டை விடும்போது கவனிக்க வேண்டியவைகளை அதன்படி மேற்கொள்ள வேண்டும். ஓரிரு தடவைக்குமேல் கட்டை விடக்கூடாது. கட்டை விடுமுன்பு சரகு பரப்பி நெருப்பு வைத்து, பூச்சி பூசனங்களை அழித்துவிட வேண்டும். அறுவடை செய்த ஒரு வாரத்தில் கட்டை சீவ வேண்டும். பக்கங்களை அணுகி, பாரை உடைத்து, பாரை சீர்செய்ய வேண்டும். அடியுரமாக மாட்டுரம், மணிச்சத்து இவற்றைத் தாய்ப் பயிருக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்து தண்ணீர் கட்ட வேண்டும். கட்டை சீவும் அன்றே அல்லது அறுவடையாகும் அன்றே பழுதுபோடுவதற்கு ஒரு பரு நாற்றங்கால் தயார் செய்து பருக்காக நடவு செய்துகொள்ள வேண்டும். சாதாரணமாக ஏக்கருக்கு 5000 ஒரு பரு நாற்றுக்கள் தேவைப்படும். கட்டை சீவிய 20-25 நாட்களுக்குள் முடிந்தால் அதற்கும் முன்னதாகப் பழுது போடவேண்டும்.

கட்டை சீவிய நாள், நட்ட 30-ஆம் நாள் என்று கணக்கில் கொண்டு மற்ற பின்செய் நேர்த்திகள் மேற்கொள்ள வேண்டும். மேலுரமிடுவதைக் கட்டை சீவிய 30-ஆம் நாள் 60-ஆம் நாளில் கொடுக்க வேண்டும். உரத்தைத் தூரின் பக்கமாக 4 அங்குலம் (10 செ. மீ.) குழிகள் அமைத்து அதில் இடவேண்டும். 70-20 நாட்கள் 50 சத யூரியா கரைசலை ஏக்கருக்கு 22 கிலோ வீதம் இருமுறையாக விசைத் தெளிப்பானால் தெளித்து நல்ல மகசூலைப் பெறலாம்.

குறிப்பாக மேற்கூறிய செய் நேர்த்தி பராமரிப்பு முறைகளினால் கட்டைக் கரும்பின் கணிசமான அதிக மகசூலைப் பெறலாம். கட்டைக்கரும்பு குறைந்த வகையில் அதிகக் கரும்பு மட்டுமல்லாமல் அதிக வெல்லமும், சர்க்கரையும் கொடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

செய்வது கட்டைப் பயிர் விடுவதற்குப் பக்குவமாக அமைகிறது.

கரும்பின் கட்டைப் பயிரிடுவதால் கரணைச் செலவு, ஆரம்பச் சாகுபடிச் செலவு மிச்சப்படுகிறது. கட்டைப் பயிரில் நல்ல மகசூல் இலாபம் பெறுவதற்குக் கரும்பு வெட்டியதும், சருகு பரப்பி எரித்து பூச்சி, பூஞ்சாளங்களை ஒழிக்க வேண்டும். அறுவடையான ஒரு வாரத்தில் கட்டைச் சீவ வேண்டும். பார் உடைத்து உரமிட்டு மண் அணைக்க வேண்டும். 20 நாட்களுக்குள் பழுது போட வேண்டும். மேலுரத்தைக் கட்டைச் சீவிய, 30, 60 நாட்களில் இருமுறை இடவேண்டும். 70, 80ஆம் நாளில் யூரியாவை முன்கூறிய மாதிரி கூடுதல் தழைச்சத்துக் கொடுக்க தெளிக்க வேண்டும். இம்மாதிரி கட்டைப் பயிர் பராமரிப்பில் கவனம் செலுத்தினால், அதிக இலாபம் எடுப்பதற்கு வாய்ப்புகள் அதிகமுண்டு.

கரும்புச் சாகுபடியில் உபரி வருமானம் எடுப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன. ஊடு பயிராகக் கரும்பு நடவு செய்ததும், உளுந்து, பாசிப்பயறு, வெங்காயம், கொத்தமல்லி போன்ற பயிர்களைப் பார்களின் மேல் ஓரிரு வரிசையில் ஊன்றி 30-40 நாட்களுக்குள் மகசூல் பெறலாம். ஊடு பயிரிலிருந்து ஏக்கருக்கு 200-லிருந்து 500 ரூபாய் வரை வருமானம் எடுக்க முடியும்.

மேலும், ஓரப்பயிராக வாழைச் சாகுபடி செய்து வருவாயைப் பெருக்கலாம். கரும்பு நடவு செய்யும்போது வாழையை வரப்பு ஓரங்களில் 8-9 அடி இடைவெளியில் ஏக்கருக்கு 100 வாழைக் கன்றுகள் வரை நடலாம். கரும்பு வெட்டுவதற்குள் குறைந்தது, 800-1000 ரூபாய் கூடுதல் வருமானத்தை வாழை மூலம் பெற முடியும்.

கரும்பு நடவில் புதிய முறை

கரும்பு நடவில் புதிய முறைகளை வேளாண்மைத் துறையால் பல பரிசோதிக்கப் பெற்று நல்ல பலனைக் கரும்பு விவசாயிகள் பெற்று வருகிறார்கள். இந்த சிறந்த முறைகளை எல்லாக் கரும்புச் சாகுபடியாளர்களும் மேற்கொண்டு நல்ல விளைச்சலைப் பெறலாம். கரும்புக் கரணைக்காகும் செலவையும் பாதிக்கு மேல் குறைக்கலாம்.

ஒரு ஏக்கருக்கு 60,000 பருக்களை 30,000 இருபது அல்லது 20,000 முப்பது கரணைகள் மூலம் நடப்படுகிறது. கரணைகளைக் காலில் முனைக்குமுனை தொடும்படி தொடர்ச்சியாகப் பறிக்கப்படுகிறது. இதற்குப் பதிலாகக் கீழ்க்கண்ட நடவு முறைகள் சிறந்து விளங்குகின்றன.

1. ஏக்கருக்கு 15,000 இருபருக் கரணைகளைக் காலில் 30. செ. மீ. (1 அடி) இடைவெளியின் கானிற்குக் குறுக்கே நடவு செய்தல். இதனால் விதைக்கரணை அளவு பாதியாகக் குறைக்கப்படுகிறது. கரணைக்குக் கரணை போதிய இடைவெளி கிடைக்கிறது. பருக்குப்பரு இடைவெளி இருப்பதால் முளைக்கும்பொழுது பயிர் நெருக்கம் குறைகிறது. வளர்ச்சிக்கு வசதி ஏற்படுகிறது. கரணைகள் நல்ல ஆழத்தில் நடப்படுவதால் மண் நன்றாக அணைக்கப் பெற்று கரும்பு சாயாமல் இருப்பதற்கும் உதவுகிறது. இம்முறையைக் கரும்புச் சாகுபடியாளர்கள் எளிதில் மேற்கொண்டு நல்ல பலனைப் பெறலாம்.

ஏக்கருக்கு 15,000 ஒரு பரு கரணை பாரின் சரிவில் 30 செ. மீ. (1 அடி) இடைவெளி படுக்கை வசதியில் நட்டு விதைக்கரணைச் செலவைக் கால் பங்காகக் குறைக்கலாம். இந்த முறையில் பருவுக்குப் போதிய இடைவெளியும் நன்றாகக் கிளை வளர்வதற்கு வசதியையும் பெற்று கிளைப்புகளெல்லாம் தாய்க்கரும்பைப் போன்று ஒன்றுபோல் வளர்ந்து நல்ல பலனைக் கொடுக்கும் தன்மையை அடைகிறது. அதிகமாகக் கரணைகளை நடுவதைவிட இந்த முறையில் அதிகப் பலன்கூட கிடைக்கிறது. என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த முறையைப் பங்குனி, சித்திரை மாதங்களில் தவிர மற்ற மாதங்களில் மேற்கொள்ளலாம்.

மேற்கூறிய நடவு முறையில் நடப்படும் பருக்கள் அனைத்தும் சீராகப் பராமரிக்கப்பட வேண்டும். முளைக்காத இடத்தில் நடவு செய்த 20-25 நாட்களில் பழுது போட வேண்டும். பழுது போடுவதற்கு ஒரு பரு கரணை நடவு செய்யும்போதே ஒரு பருக் கரணைகள் மேட்டு நாற்றங்காலில் சதுர மீட்டருக்கு 250 என்ற அளவில் நடவு செய்து அதனைப் பராமரித்து வர வேண்டும். சாதாரணமாக ஏக்கருக்கு 1000-1500 பழுதுகள் போட வேண்டியிருக்கும். அதற்கான ஒரு பரு நாற்றங்கால் தயார் செய்து கொண்டு நட்ட 29-25 நாட்களில் இவற்றை எடுத்து நடவேண்டும். கரணை நாற்றுக்கள் 15-20 நாட்களில் எடுத்து நடுவது தகும்.

ஆகவே, இந்தச் சீரிய முறைகளை மேற்கொண்டு கரணைக்காகும் செலவை மிச்சப்படுத்தி சிறந்த மகசூலை கரும்புச் சாகுபடியாளர்கள் பெற்றிட முடியும்.

கரும்பிற்குப் புதிய முறையில் உரமிடல்

கரும்புக்கு நீரும், உரமும் உயிரும் உடலும் போன்றது. இரண்டின் நிறைவான தன்மை உயர்வான விளைவிற்கு உகந்ததாகும்.

கரும்பிற்கு அடியுரமாக ஏக்கருக்கு 25 கிலோ மணிச்சத்தும், மேலுரமாக 70-10 கிலோ தழைச்சத்தும், 45 கிலோ சாம்பல் சத்தும் இரண்டாகப் பிரித்து நட்டு 45-ஆம் நாள், 90-ஆம் நாள் கரும்பின் தூரில் பரப்பி மண் அணைத்துத் தண்ணீர் கட்டப்படுகிறது. இவ்வாறு தூரில் மண் அணைப்பதற்குப் பதிலாக இடும் உரத்தைக் கரும்பின் தூரின் பக்கமாக நான்கு அங்குலம் குழிகள் அமைத்து அதில் தழைச்சாம்பல் உரங்களைக் கலந்து போட்டு மூடிவிடுவது நல்லது. குழிகள் சிறு கடப்பாரை அல்லது கரும்பின் மூலம் குழிகள் போட்டுவிடலாம். மேலும், மண் அணைத்து பின் இக்குழிகள் போடப்படுவதால், குழிகள் போடுவது மிகவும் எளிதாக இருக்கும்.

குழி முறையில் உரமிடுவதால் உரமும் இதன் முழுப்பலனும் பயிருக்கும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. உரமிட்டதும் தண்ணீர் விட முடியாத சூழ்நிலை பயிரைப் பாதிக்காது. தண்ணீர் சாதாரணமாக விடும் பொழுது உரம் சிறுகச்சிறுகப் பயிருக்கு முறைப்படி கிடைக்க உதவுகிறது. இந்த முறையில் ஆரம்பத்தில் சிரமம் என்று கருதப்பட்டாலும், நாளடைவில் பழக்கத்தில் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே, குழி முறையில் உரமிட்டு உரத்தில் முழுப்பலனையும், அதனால் அதிக விளைச்சலையும் கரும்பு விவசாயிகள் பெற்றிட வேண்டும்.

விதைக்கரணைகளை மருந்துடன் கணக்கிட....

கரும்புக் கரணைகளை நடுவதற்கு முன்பு அவற்றினைப் பூசணக் கொல்லி மருந்தில் தோய்த்து நட வேண்டும். இதனால் கரும்பில் விதை மூலம் பரவும் கரணை அழுகல் நோய், கரிப்பூட்டை நோய் முதலியவைகள் கட்டுப்படுத்தப்படுகிறது.

கரும்புக்கரணைகளை அகலான் அரிடான் போன்ற பூசனக் கொல்லியில் கலந்து நடுவதை நாம் நன்கு அறிவோம். 100 லிட்டர் தண்ணீரில் 500 அகலான் அல்லது 250 கிராம் அரிடான் மருந்தினைக் கலந்து அதில் கரணைகளை 15 நிமிடம் நனைத்து நடவு செய்ய வேண்டும்.

மேற்கூறிய இரண்டு பூசனக் கொல்லிக்குப்பதிலாகப் பெனிஸ்ட்டான் என்ற புதிய பூச்சிக் கொல்லி மருந்தை உபயோகிப்பதற்கு வேளாண்மைத் துறை பரிந்துரை செய்கிறது. இந்தப் பூசணக்கொல்லியை 100 லிட்டர் தண்ணீருக்கு 50 கிராம் என்ற அளவில் கலந்தால், போதும். இந்த மருந்து கரைசலில் கரணைகளை நனைத்துவிட்டால் பருக்கள் அதிகமாக முளைப்புச் சக்தியைப் பெறுகிறது.

அகலான் அரிடானை பெனிஸ்டின் கரைசலில் 100 லிட்டருக்கு ஒரு கிலோ யூரியா என்ற அளவில் கலந்து அதில் கரணைகள் நனைத்து நடவு செய்ய வேண்டும் கரணைகளை 5 நிமிடம் நனைத்தால் போதும், பருக்கள் விரைவாக வீரியமாக வளர்வதற்கு ஏதுவாகிறது.

ஆகவே, கரும்பு விதைக் கரணைகள் நடும் முன்பு நோயின்று அவற்றைப் பாதுகாக்க அகலான் அரிடான் பென்ஸ்டால் போன்ற பூசணக்கொல்லி மருந்துகளில் ஒன்றை முறையே 500, 250, 50 கிராம் என்ற அளவில் 100 லிட்டர் தண்ணீரில் ஒரு கிலோ யூரியாவுடன் கலந்த அக்கரைசலில் கரணைகளை 5 நிமிடம் நனைத்து நடவு செய்வது ஒரு புதிய முறையாகும். பெனிஸ்டின் என்ற பூசணக்கொல்லி உபயோகிப்பது நல்ல பலனைக் கொடுக்கக் கூடியதாகும். இதற்காகும் செலவுல், அகலான் அரிட்டானுக்கு ஆகும் செலவும் ஒரே மாதிரிதான். இப்புதிய மருந்தையும், புதிய முறையில் மேற்கொண்டு பலனை அடைந்திட முடியும் என்றால் அது மிகை அல்ல!



மண் பரிசோதனையும் அதன் பயன்களும்

த. இராமலிங்கம்,
மண் பரிசோதனை நிலையம்,
காஞ்சிபுரம்.

மண் பரிசோதனை இயக்கம் தமிழ்நாட்டிற்குச் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப் படுத்தப்பட்டது. 1956-ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் கோவை நகரில் முதல் மண் பரிசோதனை நிலையம் அமைக்கப்பட்டது. பின் 1960-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் ஆடுதுறையில் இரண்டாவது மண் பரிசோதனை நிலையம் துவக்கப்பட்டது.

மண் பரிசோதனையின் அவசியத்தையும், பயனையும் உணர்ந்த அரசு, மண் பரிசோதனை நிலையங்களைப் பிற மாவட்டங்களிலும் அமைக்க ஆவன செய்தது. அதன்படி தற்பொழுது புதுக்கோட்டை மாவட்டத்தைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் மண் பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் காஞ்சீபுரத்திலும், வடஆர்க்காடு மாவட்டத்தில் மேல் ஆலத்தூரிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூரிலும், தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறையிலும், திருச்சி மாவட்டத்தில் திருச்சியிலும், சேலம் மாவட்டத்தில் சேலத்திலும், தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரியிலும், கோவை மாவட்டத்தில் கோவையிலும், நீலகிரி மாவட்டத்தில் ஊட்டியிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடியிலும், மதுரை மாவட்டத்தில் மதுரையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயிலிலும் மொத்தம் 13 மண் பரிசோதனை நிலையங்கள் உள்ளன.

இவை தவிர ஆடுதுறை, கோவில்பட்டி, தர்மபுரி ஆகிய இடங்களில் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் உள்ளன.

மண் பரிசோதனை நிலையங்களின் பணி என்ன?

வேளாண்மை மக்களிடமிருந்து நேரடியாகவும் விரிவாக்க அலுவலர்கள் மூலமும் பெறப்படும் மண் மாதிரிகளைப் பரிசோதனை செய்து, நிலத்தின் தன்மை, கார அமிலநிலை, உப்பின் நிலை, பயிருணவுச் சத்துக்களின் நிலை ஆகியவற்றை அறிந்து நிலவளத்தைக் காக்கவும், குறைந்த செலவில் அதிக இலாபம் பெறுதற்குரிய உரப் பரிந்துரைகளைச் செய்வதும் தான் மண் பரிசோதனை நிலையங்களின் பணியாகும்.

நிலவளத்திற்கு அடுத்தாக முக்கியத்துவம் வாய்ந்த நீர்வளத்தை அறியவும் மண் பரிசோதனை நிலையங்கள் உதவுகின்றன. சிறந்த நிலவளமும், மேம்பட்ட நீர் வளமும் வேளாண்மைக்கு அடிப்படைத் தேவைகளாகும்.

மண் பரிசோதனை அவசியந்தானா?

உலகத்தில்நீர் முக்கால் பங்கும் நிலம் கால்பங்கும் உள்ளன. இந்தக் கால் பங்கு நிலமே மனிதர்களுக்கு வேண்டிய உணவுப் பொருளைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. பயிர் வளர்ச்சியைப் பொறுத்தும், உற்பத்தித் திறனைப் பொறுத்தும் நிலங்களைச் சரிவர விளையாத நிலங்கள் என்றும், ஓரளவிற்கு விளையக்கூடிய நிலங்கள் என்றும், நன்றாக விளையக் கூடிய நிலங்கள் என்றும் பிரித்துக் கூறலாம்.

விளையாத நிலங்கள் ஏற்படக் காரணம் என்ன என்பதை மனிதன் தன் பகுத்தறிவைக்கொண்டு ஆராய முற்பட்டதன் விளைவாகக் கண்டறியப்பட்டவையே உவர், களர், அமில நிலங்கள் எனும் நோய்வாய்ப்பட்ட நிலங்கள். இப்படி நோயுற்ற நிலங்களைக் கண்டறிந்து அவைகளைச் சீர் திருத்தி, மேன்மைப்படுத்தி நல்ல விளைச்சலைத் தரக்கூடிய நிலமாக மாற்றுவதற்கு மண் பரிசோதனை அவசியம்.

சுருங்கச் சொன்னால் விளையாத நிலங்களை விளைவிக்கச் செய்ய மண் பரிசோதனை அவசியம்.

விளையாத நிலங்கள் யாவை? அவைகளை மண் பரிசோதனையின் மூலம் எப்படி விளைவிக்கச் செய்ய முடியும் என்பதைக் காண்போம்.

உடல் நலிவுற்ற ஒருவன் மருத்துவரிடம் சென்றால், மருத்துவர் முதலில் சோதித்துப் பார்ப்பது இரண்டு விஷயங்களை. ஒன்று நோயாளியின் உடல் வெப்பநிலை. இந்த உடல் வெப்பநிலை ஒரு குறிப்பிட்ட அளவில்தான் இருக்க வேண்டும். அதாவது 98.4 டிகிரி பாரன்ஹீட். உடலின் வெப்ப நிலை இதைவிட அதிகமாக இருந்தால் காய்ச்சல் என்கிறார். குறைவாக இருந்தால் ஜன்னி கண்டு விட்டதாகக் கூறுகிறார். இந்த இரண்டு நிலையுமே விரும்பத் தகாத ஆபத்தைத் தரக்கூடிய நிலைகளாகும். இந்த இரண்டு நிலைகளில் எதுவோ ஒன்றுதான் ஒரு சமயத்தில் இருக்க முடியும். ஆக அதற்கு மருந்து கொடுத்து உடலின் வெப்ப நிலையைச் சீராக்குவதற்கு மருத்துவர் முயலுகிறார்.

அதேபோன்று நிலத்தின் ஆரோக்கியத்தை அறிய வேண்டுமானால் முதலில் செய்யவேண்டிய சோதனை அந்நிலத்தின் கார அமில தன்மையை அறிதல் ஆகும் இதை அறிவியல் துறையில் பி. எச். என்று கூறுவார்கள். நிலத்தின் கார அமிலத் தன்மை ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் இருந்தால்தான் பயிர் நன்கு வளர்ந்து நல்ல விளைச்சலைக் கொடுக்க முடியும். அந்தக் குறிப்பிட்ட அளவு என்பது 6.0 முதல் 8.5 வரை ஆகும். நிலத்தினுடைய கார அமிலத்தன்மை இந்த அளவுக்குள் இருந்தால், அந்த நிலை சொந்தக்காரருக்கு ஒரு பிரச்சினை குறைந்தது என்று பொருள். கார அமிலத்தன்மை 8.5க்கு மேல் 8.9 வரை இருந்தால் அந்நிலம் மத்திம களர் உடைய நிலம் என்று சொல்லப்படும். கார அமில நிலை என்பதும் அதற்கு மேலும் இருந்தால் அந்நிலம் களர் நிலம் என்று சொல்லப்படும். கார அமில நிலை 6-க்குக் குறைவாக இருந்தால் அமில நிலம் என்று சொல்லப்படும். களர் நிலங்களும் அமில நிலங்களும் நோயுற்ற அல்லது குறைபாடு உள்ள நிலங்களாகும்.

இக்குறைபாடுகளை நீக்கினால் தான் நிலம் நன்றாக விளையும். மண் பரிசோதனை நிலையங்களில் பெறப்படும் மண் மாதிரிகளுக்கு முதலில் கார அமிலத் தன்மை அறியப்படுகிறது. இத்தன்மையை அதாவது பி. எச். எந்த அளவில் உள்ளது என்பதை அறிவதற்கு பி. எச். மீட்டர் எனப்படும் கருவி பயன்படுத்தப்கிறது. ஆக, மண் பரிசோதனை நிலையத்திலுள்ள பி. எச். மீட்டர் என்ற கருவியின் உதவியால் ஒரு நிலத்தின் மண் நல்ல நிலையில் உள்ளதா அல்லது களராக உள்ளதா அல்லது அமிலத் தன்மையைக் கொண்டு உள்ளதா என்று அறிய முடிகிறது. மண்ணில் களரோ அல்லது அமிலத் தன்மையோ காணப்பட்டால் அம்மண்ணை எப்படிச் சீர்திருத்தி நல்ல மண் ஆக்க வேண்டும். என்ற விவரங்களை மண் பரிசோதனை நிலையத்தில் அக்குறைபாடுடைய நிலச் சொந்தக்காரருக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

களர் நிலங்களும் அவைகளைச் சீர்திருத்தும் முறைகளும் :

நமது நாட்டில் உள்ள களர் நிலங்களின் பரப்பளவைக் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது சுமார் 2.8 மில்லியன் எக்டேர் இவ்வகை நிலமாக உள்ளது. இப்பரப்பளவில் பெரும் பகுதி ஹரியானா, பஞ்சாப், உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார் மாநிலங்களில் பரவிக் கிடைக்கிறது. இதில் இருபத்து மூவாயிரம் எக்டேர் நிலம் நம் தமிழ் நாட்டில் உள்ளது.

நிலம் மத்திய களராக இருப்பின் அதனால் ஏற்படும் தொல்லையும் குறைவு. அந்நிலத்தைச் சீர் திருத்தம் செய்வதும் எளிது. மத்திம களர் உள்ள நிலங்களுக்கு அதிக அளவு தொழு உரங்கள், தழை உரங்கள், பிரஸ் மட் போன்ற அங்ககப் பொருட்களைத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு இடுவதன் மூலம் களர் தன்மையை நீக்கி நல்ல நிலமாக மாற்றலாம். சமீபத்தில் நடந்த ஆராய்ச்சிகளின்படி நெற் பதர் என்று கூறப்படும் கருக்காய்களைக் களர் நிலத்திற்கு இடுவதன் மூலமும், களர் தன்மையைக் குறைக்க முடியும் என்று தெரிய வருகிறது.

களர் நிலங்களில் இடம் பெயரக்கூடிய சோடிய அயனிகள் அதிக அளவில் உள்ளன. களர் நிலத்தில் பயிர் செய்வதும் கடினம். பயிர் விளைச்சலும் குறைவு. எப்பொழுதும் இம்மண்ணின் பௌதீக குணங்கள் மிகவும் மோசமானதாக இருக்கும். இம்மண்ணில் காற்றோட்டமும், நீரோட்டமும் குறைந்து காணப்படும். மேற்கண்ட தன்மையால் பாய்ச்சப்பட்ட நீரோ அல்லது மழை பெய்தால் நிலத்தில் விழுந்த நீரோ மண்ணின் அடிப்பகுதிக்குச் செல்லாமல் தேங்கியே நிற்கும். இதற்குக் காரணம் நீரை உட்கிரகிக்கும் உணர்வு களர் மண்ணுக்கு மிகவும் குறைவு என்பதே. களர் நிலத்தின் மண் துகள்கள் தனித் தனியாகப் பிரிந்து விடுகிறது. நீர் இருக்கும்பொழுது கூழின் நிலை, நீர்வற்றிய காலத்தில் பாறையின் நிலை, உழவுக்கு உற்ற நிலை ஒரு பொழுதும் இல்லை. இந்த மண்ணின் கார அமில நிலை அதிகமாய் இருப்பதால் வளரும் பயிருக்குத் தேவையான அத்தியாவசியச் சத்துக்கள் போதிய அளவுக்குக் கிடைக்காது.

களர் நிலத்தைச் சீர்திருத்தும் முறை :

களர் மண்ணின் பௌதீக குணத்தை நல்ல நிலைக்குத் திருத்த களர் மண்ணில் அதிகமாய் இருக்கும் இடம் பெயரும் சோடியத்தை நீக்கி கால்சிய அயனிகளைப் புகுத்த வேண்டும். இந்தப் பணிக்குத் தேவையான கால்சியத்தை, கால்சிய உப்பாகிய ஜிப்சத்தைப் பயன்படுத்திப் பயனடையலாம்.

ஜிப்சத்தைப் பயன்படுத்தும் முறை :

ஜிப்சத்தை வேதியலார் 'கால்சியம் சல்பேட்' என்று அழைக்கின்றனர். இதில் 23.2 சதவிகித கால்சியச் சத்தும், 18.6 சதவிகித கந்தகச் சத்தும் உள்ளது. இந்தியா முழுவதும் களர்



மாணவா சிறு சேமிப்பு

பள்ளி மாணவர்களின் சிறு சேமிப்புத் திட்டத்திற்குப் பலனளிக்கும் புதிய திட்டமொன்றை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின்படி பள்ளிச் சிறுவர்கள் தங்களது சஞ்சாயிக்கா கணக்குகளில் சேமித்துள்ள தொகையை அஞ்சல் நிலைய 'டைம் டெபாசிட்டில்' முதலீடு செய்து அதன் மூலம் அதிக வட்டியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பள்ளிகளில் சிறுசேமிப்புக் கணக்குகளை நிர்வகித்துவரும் நிர்வாகிகள், அவர்கள் திரட்டிய தொகையின் ஒரு பகுதியை அஞ்சல் நிலையத்தில் ஒரு ஆண்டு 'டைம் டெபாசிட்' டிலோ அல்லது இரண்டு ஆண்டு 'டைம் டெபாசிட்' டிலோ முதலீடு செய்து அதன் மூலம் முறையே 7, 7.5 சதவிகித வட்டியைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தப் புதிய திட்டத்தின் மூலம் தமிழ்நாடு, பாண்டிச்சேரியிலுள்ள 3000 சஞ்சாயிக்கா பள்ளிகளில் 10 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள்.

நிலங்களைச் சீர்திருத்தப் பயன்படும் ஒரு பொருள் உண்டென்றால் அது இந்த ஜிப்சம்தான். இதற்கு மூலகாரணம் இது நிறைய அளவில், குறைந்த விலையில் எளிதில் எங்கும் கிடைக்கும் பொருளாக இருப்பதுதான்.

பயன்படுத்தப்படும் ஜிப்சத்தின் தரம்

குறைந்தது எழுபது சதவிகித சுத்தமுடைய ஜிப்சத்தைத்தான் வேளாண்மைப் பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும். முப்பது சதவிகிதத்திற்குமேல் ஜிப்சத்தில் கலப்படம் இருப்பின் ஜிப்சத்தை ஏற்ற, கொண்டுவர, இறக்க அதிகச் செலவாகும்.

ஜிப்சம் உபயோகிக்க வேண்டிய அளவு

களர் மண்ணைத் திருத்துவதற்குத் தேவையான ஜிப்சத்தின் அளவு நிலத்திற்கு நிலம் மாறுபடும். எவ்வளவு அளவு, நிலம், களர்த் தன்மைக்குப் பலியாகியுள்ளது என்பதைப் பொறுத்து ஜிப்சத்தின் அளவு மாறுபடும். மிகவும் பாதிக்கப்பட்ட களர் நிலத்திற்கு ஏக்கருக்கு 5 முதல் 6 டன் ஜிப்சம் இடவேண்டியிருக்கும்.

ஜிப்சம் எவ்வாறு களரை நீக்குகிறது?

ஜிப்சம் கால்சிய அய்னிகளையும், சல்பேட் அயனிகளையும் வழங்குவதற்காக நீரில் கரைகிறது. கால்சிய அயனிகள் சோடிய அயனிகளை இடப்பெயர்ச்சி செய்கிறது. இடப்பெயர்ச்சி செய்யப்பட்ட சோடிய அயனிகள் நிலத்தை விட்டு அகற்றப்பட வேண்டும். மண்ணின் பௌதீக குணம் தரமானதாக மாறுகிறது. இதனால் பயிர் நன்முறையில் வளர வழி பிறக்கிறது.

ஜிப்சத்தை இட ஏற்ற நேரமும் இடவேண்டிய முறையும்

கோடை காலமே களர் நிலத்தைத் திருத்த ஏற்ற காலம். நிலத்தை ஒரே மட்டமாக்கி, ஜிப்சத்தை இட்டு நீர் பாய்ச்சுவதன் மூலம் ஊக்கம் தரும் வெற்றியைப் பெறமுடியும். களர் நிலத்தைச் சீர்படுத்த நிலத்தில் 50 முதல் 100 அடிக்கு ஒன்றாக 2 அடி அகலமும் 2 அடி ஆழமும் உள்ள ஒன்றுக்கொன்று இணையான வடிகால் வாய்க்கால்களைத் தோண்ட வேண்டும். இந்த வடிகால் வாய்க்கால்கள் அனைத்தையும் ஒரு பெரிய வடிகால் வாய்க்காலுடன் இணைக்க வேண்டும். பின் நிலத்தில் நீரைத் தேக்கி உழவேண்டும்.

சிபாரிசு செய்யப்பட்ட அளவு ஜிப்சத்தை நிலத்தில் போட்டு நன்றாக உழுது மண்ணுடன் கலக்கச் செய்ய வேண்டும். ஜிப்சம் இட்டு உழுத பிறகு, நிலத்தில் நீரைத் தேக்கி, அந்நீர் வடிகால் வாய்க்கால்களுக்கு வந்து சேரும் வரை பொறுத்திருந்து வாய்க்காலில் வடிந்த நீரை வெளியேற்றிக் கொண்டே இருக்க வேண்டும். இவ்விதம் குறைந்தது நான்கு தடவையாவது உழுது, நீரைத் தேக்கி, வாய்க்காலில் வடிந்த நீரை வெளியேற்ற வேண்டும். இவ்வாறு வடித்த நீரை வேறு நிலங்களின் பாசனத்திற்கு உபயோகித்தல் கூடாது. நடத்தப்பட்ட பரிசோதனைகளின் மூலம் நிலத்தில் ஜிப்சத்தைப் போட்டு 10 செ.மீ. ஆழத்திற்கு ஜிப்சம் மண்ணில் கலக்குமாறு உழுது கலப்பது நல்லது.

எவ்வெப்பொழுது ஜிப்சம் இட வேண்டும்?

களர் நிலத்திற்கு அடிக்கடி ஜிப்சம் இடவேண்டியதில்லை. ஒரு தடவை ஜிப்சம் இட்டாலே போதும். ஆனால், தொடர்ச்சியாகப் பயிர் செய்ய வேண்டியது தவிர்க்க முடியாதது. பயிர் சுழற்சியில் நெல்லும் ஒரு பயிராக இருப்பின் நிலச் சீர்திருத்தம் விரைவான ஒன்றாக இருக்கும். களரைத் திருத்தத் தொடங்கிய பின்பு நிலத்தைப் பயிர் செய்யாமல் தரிசாக வைத்திருக்கக் கூடாது. களர்நிலச் சீர்திருத்தத்தில் விஞ்ஞான முறைப்படி பயிர் செய்வது அத்தியாவசியமான ஒன்று. பல்லாண்டாகக் களர் நிலமாகக் கிடந்த மண்ணில் ஜிப்சத்தை இட்டு விஞ்ஞான முறைப்படி நெல்லைப் பயிரிட்ட முதலாண்டிலேயே எக்டேருக்கு 30 முதல் 25 குவிண்டால் கோதுமையும் கிடைத்துள்ளது. பயிர் செய்வதற்கு முன்பு பசுந்தாள் உரப் பயிரான தக்கைப்பூண்டை (டேஞ்சா) பயிரிட்டு அந்நிலத்திலேயே மடக்கி உழுதுவிட வேண்டும்.

அமில நிலத்தைச் சீர்திருத்தும் முறை:

அமில நிலத்தைச் சுண்ணாம்பு இட்டுத்தான் சீர்திருத்த வேண்டும். எவ்வளவு சுண்ணாம்பு இட வேண்டும் என்பதை மண் பரிசோதனை நிலையம், அம்மண்ணைப் பரிசோதனை செய்து பரிந்துரை செய்யும். பரிந்துரை செய்யப்பட்ட அளவு சுண்ணாம்புப் பயிர் செய்வதற்குக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்பே நிலத்தில் இட்டு, உழுது மண்ணுடன் நன்கு கலக்கும்படிச் செய்ய வேண்டும்.

உடல் நலிவுற்ற மனிதனுக்கு மருத்துவர் செய்யும் இரண்டாவது சோதனை நாடித் துடிப்பின் எண்ணிக்கையை அறிதல் ஆகும். இந்த நாடித் துடிப்பும் ஒரு குறிப்பிட்ட அளவே அதாவது நிமிடத்திற்கு 72 இருக்க வேண்டும். இந்த எண்ணிக்கை குறைந்தாலும், அதிகமானாலும் ஆபத்து.

அதேபோல் மண்ணில் செய்யப்படும் இரண்டாவது சோதனை உப்பின் அளவை அறிதல் ஆகும். மண்ணிலுள்ள கரையக்கூடிய உப்புக்களை மட்டும் அளவிடுதல் ஆகும். இந்த அளவை அறிவியல் முறைப்படி Electrical Conductivity என்று சுருக்கமாக E.C. என்று கூறுவர்.

மண்ணிலுள்ள இந்த உப்புக்களின் நிலையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் இருந்தால்தான் பயிர் நன்கு வளர்ந்து, நிறைந்த மகசூலைக் கொடுக்கும். அந்தக் குறிப்பிட்ட அளவு என்பது பூஜ்யம் முதல் ஒன்று வரை ஆகும். ஒன்றுக்குமேல் மூன்று வரை இருந்தால் அந்நிலத்தில் உவர்

தன்மை மத்திம நிலையில் உள்ளது என்று கூறப்படும். வடிகால் வசதிகளைப் பெருக்குவதன் மூலம் மத்திம நிலையில் உள்ள உவர் தன்மையை நீக்க முடியும். மூன்றுக்குமேல் இருப்பின் அந்நிலத்தில் உப்புக்கள் அதிக அளவில் உள்ளன என்று பொருள். இம்மாதிரி நிலங்களில் மழை பெய்த பின் ஈரம் குறைந்தாலோ அல்லது பாசனத்திற்குப் பின் ஈரம் குறைந்தாலோ உப்புக்கள் மண்ணின் மேற்பரப்பில் பூத்துக் காணப்படும். உவர் நிலத்திற்கு நல்ல சுத்தமான நீரைப்பாய்ச்சி, உழுது, நீரைத் தேக்கி வைக்க வேண்டும். மறுநாள் நீரை வடிக்க வேண்டும். இவ்வாறு குறைந்த ஐந்து அல்லது ஆறுதடவை நீரைப் பாய்ச்சி, உழுது, நீரைத் தேக்கி வைத்துவிட வேண்டும். இவ்வாறு வடித்த நீரை வேறு நிலங்களில் பாசனத்திற்கு உபயோகித்தல் கூடாது. இவ்வாறு நீரைத் தேக்கி வடிப்பதன் மூலம் உவர் நிலத்தைச் சீர்திருத்தலாம்.

மருத்துவரிடம் செல்லும் நோயாளிக்கு வெப்பநிலையும், நாடித் துடிப்பும் சரியான நிலையில் இருந்தாலும், சத்துக்களின் பற்றாக்குறையால் உதாரணமாக கால்சியம் சத்து, இரும்புச் சத்து, வைட்டமின் சத்துக்கள் ஆகியவற்றின் பற்றாக்குறையால் சில நோய் ஏற்பட்டு ஆரோக்கியம் கெட்டு இருக்கலாம் அதே போன்று மண்ணில் கார அமில நிலையும், உப்பின் நிலையும் சரியான அளவில் இருந்தும், சில நிலங்களில் மகசூல் குறைவாகக் கிடைக்கும். இதற்குக் காரணம் மண்ணிலிருந்து கிடைக்கக்கூடிய சத்துக்களின் பற்றாக்குறையே ஆகும். மண்ணிலிருந்து பயிருக்குக் கிடைக்கக்கூடிய சத்துக்கள் மொத்தம் பதிமூன்று. அவைகளில் அதிக அளவில் பயிருக்குத் தேவைப்படுவது தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகும். இச்சத்துக்களின் பற்றாக்குறைவால் மகசூல் குறையும்.

ஆகவே, மண் பரிசோதனை நிலையத்தில் கார அமில நிலை, உப்பின் நிலை இவைகளைக் கண்டு அறிவதுடன் மண்ணிலுள்ள பயிருக்குக் கிடைக்கக்கூடிய தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகிய சத்துக்களின் அளவும் கண்டறியப்படுகிறது. மண்ணிலுள்ள இச்சத்துக்களின் அளவிற்குத் தகுந்தாற்போல் அம்மண்ணில் அடுத்து வரும் பயிருக்குத் தேவையான உரச் சிபாரிசு செய்யப்படுகிறது. மண் பரிசோதனை நிலையத்தின் பரிந்துரைப்படி உரம் இடுவதால், பயிருக்குத் தேவையான உரங்களை இட்டு அதிக மகசூல் பெற முடிகிறது.

ஆகவே, விளையாத நிலங்களை விளைவிக்கச் செய்யவும். விளைவு குறைந்து காணப்படும் நிலங்களில் உற்பத்தித் திறனைப் பெருக்கி மகசூலை அதிகரிக்கவும் மண் பரிசோதனை அவசியமாகிறது.

சில சந்தர்ப்பங்களில், மண் நன்றாக இருந்தும், இதற்குப் பயன்படுத்தப்படும் நீரின் தரம் குறைவாக இருந்தால் நல்ல மகசூல் கிடைக்காது. ஆகவே, மண் பரிசோதனை செய்யும் பொழுது அந்நிலத்திற்குப் பயன்படுத்தப்படும் நீர் மாதிரியையும் பரிசோதனை செய்தல் அவசியம். நீர் மாதிரியில் குறைபாடு இருந்தால் அக்குறைபாடு உடைய நீரை எப்படிப் பயன்படுத்தினால், அதனுடைய கேடு விளைவிக்கும் தன்மை அதிகமாகத் தெரியாது என்பதுபற்றிச் சில வழிமுறைகள் விவசாயிகளுக்குச் சொல்ல முடியும்.

ஆகவே, வேளாண்மைப் பெருங்குடி மக்கள் தங்களுடைய நிலத்து மண்ணையும், அந்நிலத்திற்குப் பயன்படுத்தப்படும் பாசன நீர் மாதிரியையும் அருகிலுள்ள மண் பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து பரிந்துரைகளைப் பெற்றுப் பயனடைவார்களாக!

குந்தா நீர் மின்திட்டம் — நான்காவது நிலை

எழில் கொஞ்சும் நீலகிரி மலைகளினூடே அமைந்துள்ளது, மிகப் பெரிய குந்தா நீர் மின்திட்டம். குந்தா நான்காவது நிலை விரிவாக்கப் பணிகள் இப்பெரிய மின் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

17.10.78 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் குந்தா நீர் மின் திட்டத்தின் நான்காவது பிரிவினைத் துவக்கி வைத்தார்.

மூன்று நிலைகளில் குந்தா மின் திட்டம் செயல்படுத்தப்பட்டது. முதல் இரண்டு நிலைகளின் பணிகள் 1957லிருந்து 1961 வரையிலான காலத்தில் செய்து முடிக்கப்பட்டன. மூன்றாவது நிலைப் பணி 1966ல் முடிக்கப்பட்டது. பெரிதும் சிறிதுமாக 16 அணைகளும், 45 ஆயிரம் மீட்டர் நீளமுள்ள ஒன்றோடொன்று தொடர்புபடுத்தும் வாய்க்கால்கள் 14,300 மீட்டர் நீளமுள்ள எஃகு பென்ஸ்டாக் குழாய்கள், 5 மின்நிலையங்களும் மொத்தம் 73 கோடி ரூபாய் செலவில், இத்திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டன. கொழும்புத் திட்டத்தின்கீழ், ரூ. 21.5 கோடிக்கு (43 மில்லியன் டாலர்கள்) கனடிய உதவி கிடைத்தது.

இப்பொழுது குந்தா நான்காவது நிலைப் பிரிவுகள் செயல்படத் துவங்கியதனால், இப்பொழுது உள்ள குந்தா மின் நிலையம் 3-ல் கூடுதலாக 60 மெகாவாட் மின் உற்பத்தி பிரிவு ஒன்றும், குந்தா மின் நிலையம் 4-ல் கூடுதலாக 50 மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவு ஒன்றும் உருவாகி, பயனுக்கு வந்துள்ளன. இதனால், குந்தா நீர்மின் திட்டத்தின் மொத்த நிறுவனத் திறன் 425 மெகாவாட்டிலிருந்து, 535 மெகாவாட்டுகளாக உயரும்.

போரேக்ஸ் என்றால் குறைந்த செலவு நிறைந்த லாபம்

செடிகள் நன்ருக வளர தழைச்சத்து, மணிச்சத்து. சாம்பல் சத்து ஆகிய மூன்று முக்கிய ஊட்டச் சத்துக்களோடு மேலும் பல ஊட்டச் சத்துக்கள் சிறிய அளவில் தேவைப்படுகின்றன. அவ்வாறு தேவைப்படும் முக்கியமான நுண்ணூட்டச்சத்துக்களில் 'போரான்' ஒன்ருகும்.

போரான் பற்ருக்குறையின் காரணமாக பல பயிர்களில் மகசூல் குறைவதோடு தரமும் குன்றி விடுகிறது. போரான் பற்ருக்குறைக்கான அறிகுறிகள்.

நிலக்கடலே: விதையின் மத்தியில் கருமையான குழி விழுதல்; இலேகள் ஒழுங்கற்ற மஞ்சள் அல்லது நீர்க்கோர்த்த கரும்புள்ளிகளுடன் காணப்படுதல்.

தென்னே: தென்னேயில் போரான் சத்துக் குறைவு ஏற்பட்டால் ஓலேகள் ஒழுங்கற்ற பல்வேறு வடிவ அமைப்புடன் காணப்படும். ஓலே மடலின் நுனியில் ஒன்று அல்லது இரண்டு "கொக்கி" போன்ற வளர்ச்சிகள் காணப்படுதல், மடலின் நீளவாக்கில் மடிப்புகள் தோன்றுதல் ஆகியவை இச்சத்துக் குறைவிஞல் ஏற்படும் தொடக்கநிலே அறிகுறிகளாகும். இச்சத்து தேவையான அளவைவிட மிகவும் குறைந்திருந்தால் இலேயின் மடல்கள் சரியாக விரியாது. இலேயின் திசுக்கள் முறியும் தன்மையுடையதாக மாறி ஓலேகள் எளிதாக முறிந்துவிட ஏதுவாகும்.

மேலும் இச்சத்துக் குறைவிஞல் இலேயின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு முழு வளர்ச்சி அடையாமல் ஓலே நுனியில் குஷ்டம் போன்ற வளர்ச்சி காணப்படும்.

இந்தச் சத்துக் குறைவின் பாதிப்பு நீடிக்குமாஞல் வளரும் குருத்துப் பாகம் உடைந்து உலர்ந்து போகும்.

பருத்தி: பருத்திக் காய்களும், பிஞ்சுகளும் அதிக அளவில் உதிர்ந்துவிடும். பிஞ்சுக் காய்களின் அடிப்பாகத்தில் வெடிப்புகள் காணப்படுவதோடு, அந்த வெடிப்புகளிலிருந்து கருமையான திரவம் வெளிவந்து கொண்டிருக்கும். பருத்திக் காய்களின் அடிப் பாகத்தின் உட்புறம் கருமையாக மாறும். முற்றிய காய்களும் சரிவர வெடிக்காது.

கரும்பு: கரும்பின் குருத்திலுள்ள இலேகளில் நீர்க்கோர்த்த நீள வடிவமான மிகச் சிறிய புள்ளிகள் முதலில் தோன்றும். பிறகு இவை பெரிதாகி இலேகள் நார் நாராகக் கிழிந்துவிடும். இலேகள் சிறியதாகவும், குறுகியும் மஞ்சள் நிறமாகவும் காணப்படும். கரும்பின் வளர்ச்சி குன்றியிருக்கும். மேலும் கரும்பு பருமஞகவும் ஆவதில்லே.

நெல்: நெற்பயிரின் வளர்ச்சி குன்றியிருக்கும். புதிதாகத் தோன்றும் இலேகள் வெண்மையாகவும், உட்புறமாக மடிந்தும் இருக்கும். போரான் பற்ருக்குறை அதிகமாஞல் புதிய தூர்கள் வெளிவந்த போதிலும் பயிரின் குருத்து மடிந்துவிடும்.

தக்காளி: செடி வளர்ச்சி குன்றி காணப்படுவதுடன் வேர் மற்றும் தண்டின் வளரும் பகுதிகள் கருகி காய்ந்துவிடும். இலேகள் ஆரஞ்சு கலந்த மஞ்சள் நிறமாக மாறும். செடிகள் காய்ப்புக்கு வராது. காய்த்தாலும் பழங்கள் ஒழுங்காக முற்ருமல் சொர சொரப்பான புள்ளிகளுடன் காணப்படும்.

மூட்டைக்கோஸ்: தண்டின் உட்பாகம் கெட்டுவிடும். இலேகள் பழுப்பு நிறமாக மாறி, மென்மையற்று, தோல் போலக் காணப்படும்.

காளிபிளவர்: (பூக்கோஸ்) பூக்களில் பழுப்பு நிறம் தோன்றும். இதஞல் அதன் விலே மதிப்பு குறைகிறது.

உருளேக்கிழங்கு: இச்சத்துக் குறைவிஞல் செடியின் வளர்ச்சிப் பகுதியான நுனிப் பகுதியின் வளர்ச்சி தடைப்பட்டுவிடும். இதஞல் பக்கலில் (ஓரத்தில்) உள்ள பருக்கள் வளர ஆரம்பித்து, கணுக்களுக்கு இடையில் உள்ள நீளம் குறைந்து செடியின் தோற்றம் "புதர்" போன்று வளர்ச்சியுடன் காணப்படும். பாதிக்கப்பட்ட செடியின் திசுக் குழாய் நாள வளேயங்கள் (Vascular Rings) பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ காவி வண்ணமாக மாறிவிடும். இதுவே, இந்தச் சத்துக் குறைவிஞல் ஏற்படும் மிகச் சிறப்பான அறிகுறியாகும். மேலும் கிழங்குகளே வெட்டிஞல் வெட்டிய பகுதியின் மேற்புறம் விரைவில் வண்ணமிழந்துவிடும். (discolouration).

ஆப்பிள் & பேரிக்காய்: கிளேகளில் நுனிக்கருகல் நோய் உண்டாகும். கிளேகளின் கொழுந்துகள் வாடி கருகி விடுவதுடன் கிளே நுனியிலிருந்து கீழ்நோக்கி வாடி காணப்படும். பழங்களின் மேல் பழுப்பு நிறப் பகுதிகள் தோன்றும். பிறகு அப்பகுதிகள் குழிவடைந்து காணப்படுவதுடன் பழத்தின் உட்பகுதி கெட்டியாக மாறுகிறது.

திராட்சை: கொடியின் வளரும் கொழுந்துகள் வாடி, கருகிவிடும். அவ்வாறு கருகும் பகுதியின்கீழ் உள்ள கணுக்களின் இடைவெளி மிகக் குறைந்து காணப்படும். குலேகளில் குறைந்த பழங்கள் உண்டாவதுடன் பழங்கள் ஒரே அளவினதாய் இருப்பதில்லே.

தேயிலே: தேயிலேயில் போரான் குறைவு ஏற்படுமாஞல் வளரும் நுனிப் பகுதிகள் மேலிருந்து கீழ்நோக்கி உலர ஆரம்பிக்கும். அதைத் தொடர்ந்து பக்கக் குருத்துகள் வளர ஆரம்பிக்கும். நாள்டைவில் அவைகளும் நுனிப் பகுதியிலிருந்து கீழ் நோக்கி உலர ஆரம்பிக்கும். இக் குறைவிஞல் பாதிக்கப்பட்ட செடிகளின் இலேகள் தடிப்பாகவும், தோல் போலவும், இலே முனே மழுங்கியும், சுருக்கங்கள் நிறைந்தும் காணப்படும்.

காபி: போரான் குறைவிஞல் பாதிக்கப்பட்ட செடிகளின் வளரும் முனேப் பகுதி உலர்ந்து போகும். இரண்டாம் நிலே மற்றும் மூன்ரும் நிலே கிளேக் குருத்துகள் இறந்துபோன நுனிக் குருத்துகளுக்கு அடியில் வளரத் தொடங்கி விசிறி போன்ற வடிவத்தில் காணப்படும். பெரும்பாலான இலேகள் குறுகலாக அளவில் குறைந்தும், திருகிய வடிவமைப்புடனும், தடிப்பாகவும், தோல் போன்ற தன்மையுடையதாகவும் இருக்கும். தண்டின் கணுக்களுக்கிடையே உள்ள இடைவெளி மிகவும் குறைந்தும் காணப்படும். இலேயின் முனேப் பகுதி ஒழுங்கற்ற வளர்ச்சியுடனும், வெளிர்பச்சை வண்ணத்திலும் காணப்படும். இலேயின் அடிப் பாகம் மட்டும் கரும்பச்சை வண்ணமாகவே இருக்கும். இது போரான் சத்துக் குறைவை வெளிப்படுத்தும் அறிகுறியாகும். இதஞல் இலேகள் உதிரவும் வாய்ப்புண்டு.

உங்கள் பயிர்களுக்குத் தேவை எஸ். பி. போராக்ஸ். இது பயிர்களுக்கு முக்கியமாகத் தேவைப்படும், 'போரான்' என்னும் நுண்ணூட்டச் சத்தையளிப்பதோடு போரான் பற்ருக் குறையைப் போக்கி மகசூலேயும் அதிகரிக்கிறது. இந்த உண்மையை பயிர்களுக்கு ஒருமுறை போராக்ஸ் இடுவதன்மூலம் தெரிந்துகொள்ளலாம்.

பவானி சாகரில் பயிரிடப்பட்ட நிலக்கடலேப் பயிருக்கு ஹெக்டேருக்கு 10 கிலோ போரான் அளித்ததன் மூலம் 45 சதவிகிதம் அதிக மகசூல் கிடைத்தது என்ருல் அது வியப்பாகத் தோன்றும். ஆஞல் உண்மை.

பயிர்களுக்கு பரிந்துரைக்கப்படும் அளவு

மண்ணிலுள்ள நுண்ணூட்டச்சத்தின் அளவைப் பொருத்தும், பற்ருக் குறையின் அளவைப் பொருத்தும் ஹெக்டேருக்கு 3 முதல் 10 கிலோ வரை நிலத்திலிட பரிந்துரைக்கப்படுகிறது. பயிருக்கு இலேமூலம் அளிப்பதாஞல் 1.5 முதல் 3 கிலோ வரை 180-லிருந்து 360 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும்.

பரிந்துரைக்கப்படும் போரான் நுண்ணூட்டச்சத்தின் அளவு மிகக் குறைவாகயிருப்பதால், நிலத்திலிடுவதற்குமுன் தேவையான அளவு மணலுடன் கலந்து தூவிஞல் நிலம் முழுவதும் பரவலாகயிடுவதற்கு வசதியாயிருக்கும்.

சூப்பர் பாஸ்பேட், மற்றும் கூட்டுரங்களுடன் கலந்தும் நிலத்திற்கு இடலாம்.

சாண எரிவாயு

கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளேயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருமலே நாயக்கன்பாளேயத்தில் திரு என். ஆர். வேலுச்சாமி நாயுடு அவர்கள் சாண எரிவாயு அடுப்பு ஒன்றை அமைத்துள்ளார்.

இந்தச் சாண எரிவாயு அடுப்பு 1973-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் அளவு 8 கன மீட்டர். இயந்திரத்தின் கன அடி 300 ஆகும். இதனே அமைக்க ரூ. 4000 செலவாயிற்று. இதற்கு மானியம் ரூ. 500 கிராமக் கதர் மற்றும் தொழில் வாரியத்திடமிருந்து பெறப் பெற்றது.

இதற்கு நாள்தோறும் 10 மாடுகளின் சாணம் தேவைப்படுகிறது. நல்ல உரம் கிடைக்கிறது. உரத்திலிருக்கும் புல் விதைகள் அழுகி விடுகிறது. இதஞல் நிலத்தில் புல் அதிகம் முளேப்பதில்லே. மேலும், அதிக வெப்பத்தில் இருப்பதால் தழைச்சத்தும் உரத்தில் அதிகம் கிடைக்கிறது.

இச்சாதனம் மற்ற இயந்திரங்களேப் போல் அடிக்கடி பழுதாவதில்லே. இதற்குத் தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் வேண்டிய அவசியமில்லே. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சாயம் பூசிஞல் போதுமானது. வேறு எத்தவிதமான பழுதும் வருவதில்லே. ஒரு தடவை சாண எரிவாயு அடுப்பு அமைத்து விட்டால் சுமார் 30 ஆண்டுகளுக்கு இதைப்பற்றி எந்தக் கவலேயும் இல்லாமல் இருக்கலாம். சுமார் 100 அடி தூரம் வரை இந்த எரிவாயுவைக் கொண்டு சென்று உபயோகப்படுத்தலாம்.

இதன் மூலம் நாள்தோறும் 10 பேர்கள் உள்ள குடும்பத்திற்குத் தேவையான சமையல் செய்ய எரிவாயு கிடைக்கிறது.

இந்த எரிவாயு மூலம் இல்லத்திற்கு வேண்டிய 'கேஷ்' விளக்குகளும் அமைத்துக் கொள்ளலாம்.



திருச்சி மாவட்டத்தில்

சுண்ணும்புத் தொழில்களுக்கு வாய்ப்பு

பொ. அ. இராமமூர்த்தி

வளர்ச்சி அலுவலர்

கதர் கிராமத் தொழில் கமிஷன்

திருச்சி மாவட்டம், தமிழகத்தின் மையமாக அமைந்துள்ள பல்வளங்களும் பொருந்திய காவிரி பாயும் செழிப்பான பிரதேசமாகும்.

1971 புள்ளிவிவரப்படி, இம்மாவட்டத்தில் மொத்த மக்கள் தொகையில் 37 சதவிகிதம் தொழிலாளர் குடும்பங்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுடுள்ளன. அதில் கனிவளங்களைத் தோண்டுவதிலும் பாறைகளை வெட்டுவதிலும் 4,115 நபர்கள் ஈடுபட்டுள்ளனர். மொத்த மக்கள் தொகையில் 18.33 சதவிகித ஆதிவாசிகளும் தாழ்த்தப்பட்ட குடியினரும் வசிக்கிறார்கள். இவர்கள் பயிர்த் தொழில்கள் கட்டட வேலைகள், மற்றும் சிறு தொழில்களில் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்துகின்றனர்.

திருச்சி மாவட்டத்தில் 10 வட்டங்களில் 8 வட்டங்களிலும் சுண்ணும்புத் தொழிலுக்கான மூலப் பொருட்களான சுக்காங்கல், ஓடைக்கல், படிகக்கற்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. இம்மாவட்டத்தில் 140 மிலியன் டன் சுண்ணும்பு கல்வளம் உள்ளது. தமிழகத்தில் உள்ள 400 மிலியன் டன் கல்வளத்தில் 35 சதவிகித அளவுக்குக் கல்வளத்தை 140 மிலியன் டன் சுண்ணும்பும், கல்வளத்தில் படிகக்கல் (Calcites) 112.8 மிலியன் டன்னும், பவழ வடிவு சுண்ணும்புக்கல் 7.2 மிலியன் டன்னும், 19.2 மிலியன் டன் கடல் வண்டல் சுண்ணும்புக் கல்லும் எஞ்சிய 0.8 மிலியன் டன் கிளிஞல் சுண்ணும்புக்கல் மற்றும் சுக்காங்கல் பாறைகளும் ஆகும். இவை தவிர குளம், ஓடைகள், ஏரிகள் மற்றும் வயல் வெளிகளிலும் ஏராளமாக ஓடைக்கல் சிறுசிறு உருளை வடிவில் செம் பழுப்பு நிறத்தில் கிடைக்கின்றன. அரியலூர் பகுதியில் கிடைக்கும் சுக்காங்கல் வெண்மை நிறமும் காரமும் கொண்ட தரமான கல்லாகும்.

சுண்ணும்புக் கற்கள் தவிர சுண்ணும்பு உட்பொருட்கள் தயார் செய்ய உதவும் மூலப்பொருட்களான காவிக்கல், ஜிப்ஸம், பொஸலாணு கழிவுகள் போன்ற கனிவளங்களும் சுமார் 22 மிலியன் டன் அளவில் இம்மாவட்டத்தில் கிடைக்கின்றன. கிளிஞல் வகை சுண்ணும்புக்கல் அரிய லூர்ப் பகுதியில் குறிப்பிடும் அளவுக்கு கிடைக்கிறது. பட்டை திட்டி அலங்கார ஆபரணப் பொருட்களாகவும், கலைப் பொருட்களாகவும் செய்ய பெரிதும் இவை பயன்படுகின்றன.

இம்மாவட்டத்தில் அரியலூர் மண்ணச்சநல்லூரில் மற்றும் சாந்து மற்றும் தயாராகும் சுண்ணும்புதான் வெள்ளைப்பூச்சுச் சுண்ணும்புதான் பிரசித்தி பெற்றது. திருச்சி நகரில் ஆங்காங்கே அங்காடிகளை வைத்து சுண்ணும்பைச் சிறு சிறு குடும்பங்கள் விற்பனை செய்து பிழைத்து வருகின்றன. தொழிலாளர் குடும்பங்கள் அனேநகமாக எல்லாக் கிராமங்களிலும் புராதனச் சூளைகளை அமைத்து சிறு முதலீடு செய்து சுண்ணும்பு உற்பத்தி செய்து தங்கள் ஜீவனங்களை நடத்தி வருகின்றனர்.

மழைக்காலம் தவிர இதர பருவங்களில் சுண்ணும்பு உற்பத்தி பெரும் நடைபெறுகின்றது. குடும்பங்கள் பாலும் அந்தக் கல்வி பயிலாத ஏழைகளாகவும், மக்களாகவும் தாழ்ந்த குடி சூளைகளில் கூலி இருப்பதால் வேலை செய்தே பிழைக்க வேண்டி உள்ளது. அந்தச் சூளைகள் பெரும்பாலும் விவசாயக் குடியானவர்களுக்கும் கட்டட காண்ட்ராக்ட் நடத்தும் வியாபாரிகட்கும் சொந்தமாக உள்ளவையே. அண்டை மாவட்டமான தஞ்சையில் தரமான சுண்ணும்புக்கல் இல்லாத காரணத்தால் அரியலூர், ஜயங்கொண்டம் பகுதியிலிருந்துதான் மூலப் பொருள் தருவிக்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத் தக்கது. இம்மாவட்டத்தில் ஏறக்குறைய 640 தொழிலாளர் குடும்பங்கள் புராதனச் சுண்ணும்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சராசரியாக மாதத்தில் எட்டு அல்லது பத்து காளவாய்கள் வரை ஒரு குடும்பம் சுண்ணும்பு உற்பத்தி மேற்கொள்கிறது. எனவே, மாதத்தில் 16 டன்-20 டன் அளவு சுண்ணும்பு உற்பத்தி ஒரு குடும்பம் செய்வதன் மூலம் மாவட்டத்தின் மொத்த உற்பத்தி ஒரு மாதத்திற்கு சுமார் 10,240 டன் என்று கொள்ளலாம். பொங்கல் காலங்களில் 10 முதல் 20 சூளைவரை அக்குடும்பத்தினர் மேற்கொள்வதால் அதிக வருவாயும் கிடைக்கிறது. நடுத்தர வியாபாரிகள் ஏராளமாக சுண்ணும்பு உற்பத்தி செய்து கட்டடம் மற்றும் தோல் பதனிடும் துறை, சர்க்கரை ஆலை, காகிதம், பதநீர், சாலை சீரமைப்பு தண்ணீர் சுத்திகரிப்பு முதலிய துறைகட்கும் சுண்ணும்பை விற்பனை செய்கின்றனர்.

இம்மாவட்டத்தில் கிடைக்கும் 112.8 மிலியன் டன் படிகக் கற்களில் பெருவாரியானவை சிமெண்ட் தொழிற்சாலைக்குப் பல ஆண்டு குத்தகை உரிமையாக வழங்கப்பட்டுள்ளது. இதர தனிப்பட்ட நபர்கட்கும், வீட்டு வசதி வாரியம், மற்றும், சேலம் உருக்காலைக்கும் குத்தகை உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில் கமிஷன் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டுவரை 4 தனிப்பட்ட கைவினைஞர்கட்குச் சுண்ணும்பு உற்பத்திக்காக மூலதனக் கடன் உதவியாக தலா ரூ. 2,000 அளிக்கப்பட்டு 15 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நடைமுறை ஆண்டில் மேலும் 50 கைவினைஞர்கட்குக் கடன் வசதி அளிக்க ஏற்பாடாகி உள்ளது. இதன் மூலம் 150 குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த ஆண்டு முடிவில் ரூ. 3.24 இலட்ச மதிப்புள்ள சுண்ணும்பு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. படித்து, வேலையில்லாத இளைஞர்களுக்கும் உதவும் வகையில் சுயதொழில் வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் 5 நபர்கட்கு நவீன சுண்ணும்புச் சூளைக்காக நிதியுதவி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் மாவட்ட கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செயல்படுகின்றன.

இவை தவிர கதர் கிராமத் தொழில் கமிஷனின் சுண்ணாம்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழிலியல் சுண்ணாம்பு தயார் செய்ய உதவும் பி.சி.டி. டைப் அதாவது 3, 5, 10 டன் தினசரி சுண்ணாம்பு உற்பத்தி யூனிட், சிமெண்ட் தட்டுப்பாடுள்ள இந் நேரத்தில் கட்டட வேலைகட்கு ஏற்ற கதர் கமிஷனால் கண்டு பிடிக்கப்பட்ட சிமெண்ட் மாற்று உபபொருளான லிம்போ கலவை தயார் செய்யும் யூனிட்கள், சுண்ணாம்பு கற்பாறைகள் வெட்டி எடுக்கும் யூனிட், சாக்குக் கட்டிகள், உற்பத்தி யூனிட், சாதாரணமாக எங்கும் கிடைக் கும் சுக்காங்கல் மூலம் தயார் செய்யும் ஹைட்ரோ சிமெண்ட் யூனிட், கூடிட்ட கட்டடப் பொருட்கள், பூச்சுக்கலவைப் பொருட்கள் தயார் செய்யும் யூனிட், வாசனை சுண்ணாம்பு உற் பத்தி யூனிட், கோழித் தீவனத் திற்கான சிப்பித்துகள் யூனிட் ஆகியவற்றுக்கான நிதி உதவித் திட்டங்களையும் இம்மாவட்டத் தில் செயல்படுத்திச் சுமார் 250 தொழிலாளர்களின் குடும்பங் கட்கு அதிக ஊதியமும் படித்து வேலையற்ற 100 இளைஞர்கட்கு வேலைவாய்ப்பும் கிடைக்க மத்திய அரசின் 6 ஆண்டு சுழல் திட்டத் தின்கீழ் வழிவகை செய்ய உத் தேசித்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் கிடைக் கக்கூடிய சுண்ணாம்புக் கல் வளங் களின் தன்மையையும், அளவை யும் பொருந்து பின்வரும் இடங் களில் உற்பத்தி நிலையங்களை நிறுவ சாத்தியக் கூறு உள்ளது.

லால்குடி வட்டம்:

தச்சங்குறிச்சி, கல்பாளையம், பகுதிகளில் பி.சி.டி. டைப் நவீனச் சூளைகள் அமைத்து கெமிக்கல் சுண்ணாம்பு தயார் செய்து தொழில் நிறுவனங்கட்கு விற்பனை செய்யலாம். இந்த இடங்களில் கூட்டுறவுச் சங்கங் களோ, தனிப்பட்ட தொழில் வினைஞரோ நிதியுதவி பெற்று தொழில் உற்பத்தியை கொள்ள லாம்.

கரூர் வட்டம் :

தாந்தோணி கரூர் பகுதிகளில் லிம்போ கலவை தயார் செய்தல் பி.சி. டைப் சுண்ணாம்பு உற்பத்தி, கட்டடப் பொருட்கள் உற்பத்தி முதலிய திட்டங்களை மேற் கொள்ள வாய்ப்புள்ளது.

அரியலூர் வட்டம்:

அரியலூர், ரெட்டிபாளையம், ஜயங்கொண்ட செந்துரைப் பகுதிகளில் பூச்சுக் கலவை, சாக்குக்கட்டி, கெமிகல் சுண் ணாம்பு உற்பத்தி, கூடிட்ட கட்டடப் பொருட்கள் மற்றும் உபபொருட்கள் தயார் செய்யும் யூனிட்டுகள் ஏற்படுத்தி வேலை வாய்ப்பு அதிகரிக்கச் செய்ய வழியுள்ளது.

பெரம்பலூர் வட்டம் :

இவ்வட்டத்தில் பவழவடிவு சுண்ணாம்புக் கற்கள் ஏராளமாகக் கிடைப்பதால் கால்சியம் கார் பைடு தயார் செய்யவும் ப்ளீச்சிங் பவுடர் தயார் செய்யவும் தேவை யான கெமிகல் சுண்ணாம்பு தயார் செய்யும் உற்பத்தி நிலையங்களை கல்பாடி, ஓலைப்பாடி போன்ற இடங்களில் ஏற்படுத்த வழி யுள்ளது.

குளித்தலை வட்டம்:

இவ்வட்டத்தில் ஏராளமாக படிப சுண்ணாம்புக்கல் கிடைப்ப தால் இன்டஸ்ட்ரியல் சுண்ணாம்பு நிலையங்களை ஏற்படுத்தி வேலை வாய்ப்பு அளிப்பதுடன் மாவட் டத்தின் இன்டஸ்ட்ரியல் சுண் ணாம்பின் தேவையையும் பூர்த்தி செய்து கொள்ள வழிவகையுள் ளது. கூட்டுறவுச் சங்கமாகவோ, தனிப்பட்ட நபர்களாகவோ பதிவு பெற்ற சார்பு நிலையங் களாகவோ இம்மாதிரி உற்பத்தி நிலையங்களை நிறுவி வேலைவாய்ப் பையும் மாவட்ட சுண்ணாம்பின் தேவையையும் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

திருச்சி வட்டம் :

திருச்சி, சமயபுரம், நகர்ப் பகுதிகளில் தொழில் மேற்கொள் ளத் தக்க எல்லா வசதிகளும் இருப்பதால் சுண்ணாம்பு மற்றும் அதனைச் சார்ந்த உபபொருட்கள் உற்பத்தி செய்முறை விளக்க கேந்திரங்கள் இரண்டை கதர் கிராமத் தொழில் துறை அமைப்பின் நிறுவி மாவட்டத் தில் முன் மாதிரி உற்பத்தி கேந் திரமாகவும், பயிற்சி நிலையங் களாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கதர் கிராமத் தொழில் வாரி யத்தின் நிதி உதவித் திட்டத் தைத் தவிர தேசிய வங்கிகளின் மூலம் குறைந்த வட்டி சலுகை அடிப்படையில் சுண்ணாம்பு வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள கை வினைஞர்கட்கும் படித்து வேலை யற்ற இளைஞர்கட்கும் தேவை யான நிதி உதவி கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

திருச்சி மாவட்டத்தில் சுண் ணாம்புத் தொழில் வளர்ச்சிக் கான வாய்ப்பு நிரம்ப உள்ளது. மத்திய அரசின் தொழில் கொள் கையில் அடிப்படையில் திருச்சி மாவட்டத்திலும் மாவட்ட தொழில் மையம் அமையப் போகிறது. அதில் கிராமத் தொழில் துறையின் பங்கு குறிப் பிடத்தக்க வகையில் இருப்ப தால் சுண்ணாம்புத் தொழில் மேம்பாட்டுக்கான வாய்ப்பு களும் மேலே கூறப்பட்ட சாத் தியக் கூறுகளை பறைசாற்றும் என்பதில் ஐயமில்லை.

புதிய உற்பத்தித் திட்டங்களை நிறுவ தேவைப்படும் நிதி உத வியை கமிஷனைத் தவிர மாநிலக் கடன் வசதி நிறுவனங்களும் தேசிய வங்கிகளும் வழங்க ஆயத்த மாக உள்ளன. இந்த 6 ஆண்டு சுழல் ஆண்டின் இறுதியில் இம் மாவட்டத்தின் வேலைவாய்ப்பும், உற்பத்தியுல் தொழிலாளர் குடும்ப ஊதிய முன்னேற்றமும் பன்மடங்கு பெருகிட வாய்ப்பு நன்கு உள்ளது. மாவட்டத்தில் சுழல் திட்டப்படி 200 புராதனத் தொழிலாளர்களுக்கு மூலதனக் கடன் வசதிகள் அமைத்து அவர்கள் தம் உற்பத்தி பெருகிட வழி செய்வதற்கும் 100 படித்து வேலையற்ற இளைஞர் சமுதாய மும் இந்த மாவட்டத்தில் 6 ஆண்டிற்குள் சுய தேவை யூனிட்டுகள் அமைத்து வாழ்க்கை முறையை மேற்கொள்ளவும் சாத்தியக் கூறு உள்ளது. அதனால் மாவட்டத்தின் சுண்ணாம்பின் தேவையும், அண்டை மாவட்டங் களின் தேவையும் நிறைவுபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நன்றி : திருச்சி வானொலி நிலையம்.

உணவு உற்பத்தியில் புதிய சாதனை!

1975-76-ஆம் ஆண்டு நெல் உற்பத்தி 48.7 மில்லியன் டன். ஆனால் 1976-77-ஆம் ஆண்டு நெல் உற்பத்தி 41.9 மில்லியன் டன் மட்டுமே. இவ் வாண்டு நெல் உற்பத்தியில் முந்தைய சாதனையான 48.7 மில்லியன் டன்களைக் காட்டிலும் 4 டன்கள் அதாவது 52.8 மில் லியன் டன் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன. இது சென்ற ஆண்டு உற்பத்தியைக் காட்டி லும் 10.8 மில்லியன் டன் அதிக மாகும். இவ்வுற்பத்தி சாதனை நெல் உற்பத்தியில் எதிர்காலத் தில் முக்கிய சாதனைகள் புரியக் கூடும் என்பதற்கான அறிகுறி யாகும்.

மத்திய பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு, மேற்கு வங்காளம், பஞ்சாப், ஒரிஸ்ஸா மாநிலங்கள் உணவு உற்பத்தியில் சாதனை புரிந்த மாநிலங்கள்.

காஞ்சிபுரம் உழவர் பயிற்சி நிலையம்

தி. கோ. தணிகாச்சலம்,
துணை வேளாண்மை இயக்குநர்,
உழவர் பயிற்சி நிலையம்,
காஞ்சிபுரம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு உழவர் பயிற்சி நிலையம் அமைய வேண்டுமென மத்திய அரசின் திட்டத்தின் கீழ் செங்கை மாவட்டத்திற்கென உழவர் பயிற்சி நிலையம் காஞ்சிபுரத்தில் 14-9-76 முதல் செயல்பட்டு வரு கிறது. இப்பயிற்சி நிலையம் செங்கற்பட்டு மாவட்ட விவசாயி களுக்குப் பயிற்சியளிக்கும் நோக் கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

உழவர் பயிற்சியின் நோக்கங்கள் :

(1) உயர் விளைச்சல் ரகங்களை விவசாயிகள் பயிர் செய்யும் பொழுது வேளாண் நுணுக்கங் களை ஏன், எதற்காகக் கையாள வேண்டும் என்ற அறிவினைப் புகட் டவும், விஞ்ஞான முறைப்படி விதைகளை உரங்களை, பூச்சி பூசண கொல்லி மருந்துகளை உபயோகித் தல், பண்ணைத் திட்டங்கள் தீட்டி சாகுபடி செலவைக் குறைத்து அதிக மகசூல் மற்றும் மிகுந்த இலாபம் பெறும் வழி யைச் செயல் முறை மூலம் விளக்குதல்.

(2) கிராமங்களில் முன் மாதிரி விவசாயிகளை உருவாக்குதல்.

(3) நடைமுறை விவசாயத் தில் ஏற்படும் சிக்கல்களுக்குப் பரிந்துரைக்கான வேளாண்மை விரிவாக்க ஊழியர்களிடமும், விவசாய விஞ்ஞானிகளிடமும் அவ்வப்பொழுது அதற்கான தீர்வு காண ஊக்குவித்தல்,

(4) வேளாண்குடி மக்களுக்கு விவசாயத்திற்கு வேண்டிய மூலப் பொருட்களை எங்கு வாங்குவது எந்தச் சமயத்தில் உபயோகிப்பது அதனை எப்படிப் பெறுவது மற்றும் கிராமக் கடன் வசதிகளைப் பயன் பெறும் முறைகளைப் பற்றிய பொது அறிவைத் தூண்டிவிடுவ தற்குமான உயர்ந்த நோக்கங்கள் நான்கையும் மனத்தில் கொண்டு இப்பயிற்சித் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்நிலையத்தின் பணிகளும் : இது வரை ஆற்றியுள்ள சாதனைகளும் :

(1) நிலையப் பயிற்சி: செங்கை மாவட்டத்திலுள்ள 27 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒவ்வொரு ஆண்டிலும் 20 ஊராட்சி ஒன்றி யங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்வமுள்ள விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல். இப்பயிற்சி மகளிர்க்கென தனித்தனியே நடத்தப்படுகிறது. இப்பயிற்சி யின் அடிப்படை விவசாயம் மற்றும் திருந்திய சாகுபடி முறைகள் பற்றிய பயிற்சியும் செயல் விளக்கங்களும் அளித்தல். ஒவ்வொரு பயிற்சியிலும் 25 பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுத்து பயிற்சியளிக்கப்படுகிறார்கள். பயிற்சியின் காலம் 4 நாட்கள். ஒவ்வொரு நாளுக்கும் பயிற்சி யாளர்களுக்கு ரூ. 5 மான்யமாக வழங்கப்படுகிறது.

இதுவரை பயிற்சியளிக்கப்பட்டுள்ள விவரம்:

	1976-77	1977-78	1978-79 ஜூலை வரை
நடத்தப்பட்டுள்ள பயிற்சிகள்	20	21	10
பயிற்சி பெற்றுள்ள உழவர்கள்	419	259	90
மகளிர்	80	262	166

(2) உழவர் ஆய்வு மன்றங்கள் உழவர்கள் தொடர்ந்து நிலை யத்தினருடன் தொடர்பு கொண்டு தங்கள் விஞ்ஞான வேளாண்மை அறிவைப் பெருக் கிக் கொள்ளவும், அதன் மூலம் கிராமங்களில் விவசாயிகளிடை ஒரு விழிப்புணர்ச்சியை ஏற் படுத்தவும் உழவர் ஆய்வுமன் றங்கள் அமைக்கப்படுகின்றன. செங்கை மாவட்டத்தில் இது வரை உழவர்களுக்கென 200 ஆய்வு மன்றங்களும், மகளிர்க் கென 100 ஆய்வு மன்றங்களும் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆய்வு மன்றத்திலும் 20 உழவர்கள் அங்கம் வகிப்பர். ஒவ்வொரு மன்றத்திற்கும் ஓர் பயிற்சி பெற்ற ஆர்வமுள்ள முன்னோடி விவசாயி அமைப்பாளராக இருப் பார்.

இவற்றின் பணி :

(1) முன்னோடி விவசாயி அமைப்பாளர் மற்றும் அங்கத் தினர்கள் புதிய முறைகளை நன்கு அறிந்து தங்கள் நிலத்தில் கடைப் பிடித்து மற்றவர்களும் கையாள உறுதுணையாக இருப்பார்.

(2) புதிய கண்டுபிடிப்புகளை உழவர் பயிற்சி நிலையத்தினருடன் தொடர்பு கொண்டு செயல் விளக்கங்கள், விளக்கப்பாத்திகள் மற்றும் பெருவிளக்கப் பண்ணைகள், அமைப்பாளர் நடத்துவார்.

(3) அதுபோது ஏற்படும் ஐயங்களை நிலையத்தினர்க்கு எழுதி தெளிவு பெறுவார்.

(4) ஒவ்வொரு நாளும் வானொலியில் ஒலிபரப்பப்படும் விவசாய சம்பந்தமான நிகழ்ச்சி களைக் கேட்டு விவாதிப்பர். குறிப் பாக செவ்வாய்க்கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் மன் றத்தினர்க்காக ஒலிபரப்பப்படும் சிறப்பு நிகழ்ச்சிகளை மன்ற அங் கத்தினர்களுடன் கேட்டு விவாதம் செய்து, அது சம்பந்தமான, ஐயங்களை வானொலி நிலையத்தி னர்க்கு எழுதித் தெளிவு பெறுவார் கடிதங்கள் எழுத தேவையான அஞ்சல் அட்டை களும், தபால் தலைகளும் நிலையத் தினரால் வழங்கப்படுகின்றது.

(5) தங்கள் சீரிய அனுபவங் களினால் பெற்ற நன்மைகளை மற்றவர்களும் தெரிந்து கொள்ள வானொலியில் பேட்டி அளிக்க வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.

(6) விவசாய சம்பந்தமான கருத்தரங்குகள் மற்றும் உழவர் பெருவிழாவில் கலந்து கொள்ளு தல்.

(3) அமைப்பாளர் பயிற்சி:

உழவர் ஆய்வு மன்றங்களைச் சிறப்பாக நடத்தவும், வானொலி கேட்டு விவாதம் செய்து ஐயங்கள் எழுப்பவும் அமைப் பாளர்களுக்கென தனியே பயிற்சி யளிக்கப்படுகிறது. இப்பயிற்சி 2 நாட்களுக்கு நடத்தப்படுகிறது.

முதல்வரின் முத்துக்கள்

பதவியும் பணமும் வரும், போகும்; எப்போது வரும், எப்போது போகும் என்று யாருக்கும் தெரியாது.

ஆனால் மக்களின் நல்லெண்ணம் ஒன்று தான் நிலைத்து நிற்கும். அதைத்தான் புகழ் என்று சொல்கிறோம். அன்பு என்று குறிப்பிடு கிறோம். அன்பு ஒன்று மட்டும்தான் நீண்ட காலத்துக்கு நிரந்தரமாக, உண்மையாக நிலைத்து நிற்கும். அன்பை—விலை கொடுத்து வாங்க முடியாது அன்பைப் பெறுவதற்கு தியாகம் செய்ய வேண்டும்.

கலப்புத் திருமணம் என்று சொல்லுகிறார்கள். இனிமேல் அப்படிச் சொல்லிக் கொள்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஜாதி ஒழிய வேண்டும், ஜாதியே கூடாது என்று சொல்லி நடந்து வருகிற நாம் இன்ன ஜாதி—இந்த ஜாதி என்று சொல்லுவதன் மூலம் ஜாதிக்கு நினைவுச் சின்னம் வைத்தாற்போல் நிலை ஏற்படுகிறது. அந்த நிலையைப் போக்க வேண்டும்.

* * * *

மாணவர்கள் நன்கு படித்து ஒளிமயமான அறிவியல் துறையில் வளர்ந்தால் எத்தனை மகத்தான உயர்வை இந்த நாடு அடைய முடியும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். நம்முடைய இளைஞர்களின் முன்னேற்றத்தில் இருக்கிறது இந்த நாட்டின் முன்னேற்றம்.

ஒவ்வொரு பயிற்சியிலும் 25 அமைப்பாளர்கள் பங்கு பெறுவர். ஒரு ஆண்டில் 5 பயிற்சிகள் நடத்தப்படும். இதுவரை நடத்தப்பட்ட பயிற்சிகள்:

	1976-77	1977-78	1978-79 ஜூலை 31 வரை
நடத்தப்பட்ட பயிற்சிகள்	5	6	11
பயிற்சிபெற்ற அமைப்பாளர்கள்	96	133	66

பயிற்சியாளர்களுக்கு இதர செலவினங்களுக்காக, ரூ. 5, ஒரு நாளிற்கு மான்யமாக வழங்கப் படுகிறது.

(4) செயல் விளக்கங்கள்:

நிலைய பயிற்சியின்போது வகுப்பறைப் பயிற்சியுடன் நேரிடை செயல் விளக்கங்களும் நடத்தப்படுகிறது. இவை திருந்திய முறைகள் பற்றியன.

மேலும், அமைப்பாளர்களின் உதவியுடன் கிராமங்களில் விவசாயிகளின் நிலங்களில் திருந்திய முறைகள் பற்றிய செயல் விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. இம்மாதிரி செயல் விளக்கங்கள் நடத்தப்படும் முன்னர் வானொலி மூலம் அறிவிக்கப்படுகிறது. இதனால் அதிக அளவில் செயல் விளக்கங்களை நேரிடையாகக் கண்டு பயனடைய வாய்ப்பளிக் கப்படுகிறது.

ஒவ்வொரு செயல் விளக்கத் திற்கும் ரூ. 20 மான்யம் அளிக் கப்படுகிறது.

(5) மகளிர்க்கென ஒரு நாள் பயிற்சி — மற்றும் சத்துணவு தயாரிப்புப் பற்றிய செயல் விளக்கங்கள் நடத்துதல்:

கிராமங்களிலுள்ள உழவர் மகளிர் வேளாண்மைப் பற்றிய அடிப்படை அறிவு பெற இப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சியின்போது மண், விதை, உரம் காய்கறிச் சாகுபடி மற்றும் தானிய சேமிப்பு எலி ஒழிப்புப் பற்றிய பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மேலும், உயர்வள ரகங்கள் பயிரிடும்போது தானியங்களை சத்து கெடாமல் உணவு தயாரிப்பு பற்றிய நேரிடை செயல் விளக்கங்களும் நடத்தப்படுகிறது செயல் விளக்கங்களுக்கென ரூ. 20 மான்யம் அளிக்கப்படு கிறது.

(6) மாதாந்திர வெளியீடுகள்:

உழவர் ஆய்வு மன்றங்கள் திறம்படச் செயலாற்ற விஞ்ஞான வேளாண்மை பற்றிய செய்திகளை அவ்வப்போது தெரிய வாய்ப் பளிக்க வேண்டும். 'உழவர் நண்பன்' என்ற திங்கள் வெளியீடு இப்பணிக்காக நிலையத் தினர் வெளியிடுகின்றனர். இந்த இதழில் பயிர்ச் சாகுபடி குறிப்புகள் உழவர் மன்ற அமைப்பாளர்கள் அனுபவங்கள் வெளியிடப் படுகின்றன.

(7) சிறப்பு வெளியீடு:

திங்கள் வெளியீடான உழவர் நண்பனைத் தவிர அவ்வப்போ சிறப்பு வெளியீடுகள் முக்கியமான தலைப்பில் வெளியிடப்படுகின் றன. இதுவரை 4 வெளியிடப் பட்டுள்ளன.

(1) மண் பரிசோதனை

(2) நெல்லுக்குப் பயிர்ப்பாது காப்பு

(3) ஈராண்டுச் சாதனை

(4) விளையாத நிலங்களை விளைவிக்கச் செய்வீர்!

இவ்வெளியீடுகள் உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர் களுக்கும், வேளாண்மைத்துறை விரிவாக்கப் பணியாளர்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

(8) குறுகிய காலப் பயிற்சி:

சிறு உழவர் மேம்பாட்டுத் திட் டத்தில் பங்கு பெறும் விவசாயிகள் மற்றும் கிராமங்களில் தானிய சேமிப்புப் பணியில் ஈடுபடும் விவ சாயிகளுக்குக் குறுகிய காலப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சியில் பங்கு பெறும் விவ சாயிகளுக்கு மான்யம் ஏதும் வழங்கப்படுவதில்லை.

1977-78-ல் சிறிய உழவர் களுக்கென ஒரு பயிற்சியும், தானிய சேமிப்புப் பற்றி 18 பயிற்சிகளும் சோமங்கலம் கிராம புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 6 பயிற்சிகளும் அளிக்கப்பட் டன.

1978-79-ல் 31-7-78 வரை சிறு உழவர்களுக்கென, 4 பயிற்சி களும் தானிய சேமிப்புப்பற்றிய 7 பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள் ளன. 325 விவசாயிகள் இதனால் பயனடைந்துள்ளனர்.

(9) வானொலி பெட்டிகள் வழங்குதல்:

உழவர் ஆய்வு மன்றங்கள் சிறப்புற செயல்பட வானொலிப் பெட்டி இல்லாத உழவர்களுக்கு மான்ய விலையில் வானொலிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. 1978-79-ல் 100 மன்றங்களுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப் பட்டுள்ளன.

(10) மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி:

வேளாண்மைத் துறை அலு வலர்களுக்கு ஆண்டுதோறும் ஆண்டுத் துவக்கத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி யில் நிலைய அலுவலர்களுக்கும் பங்குகொண்டு பயிற்சி அளித்து வருகின்றனர்.

மேலும் வட்டார அளவிலான பணியார்களுக்கான பயிற்சி மற்றும் முன்பருவ விழாக்களி லும் பங்குகொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

(11) சுற்றுலா:

வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் அரசினர் பண்ணைகளைப் பார்வையிட்டுப் பயனடைய ஆண்டுதோறும் அமைப்பாளர்களைச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகிறது.

1977-ஆம் ஆண்டு பிப்ரவரியில் சென்ற சுற்றுலாவில் தமிழ்நாட் டில் உள்ள முக்கிய ஆராய்ச்சி நிறுவனங்களான கோவை, வேளாண்மைப் பல்கலைக்கழகம் குடுமியான்மலை ஆராய்ச்சி நிறு வனம் மற்றும் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையங்களுக்கு 40 அமைப்பாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

1977-ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் டெல்லியில் நடைபெற்ற 'அக்ரி எக்ஸ்போ' கண்காட்சியைக் காண நிலையத் தின் சார்பாக 4 அமைப்பாளர் களும் மற்றும் 90 விவசாயிகளும் அழைத்துச் செல்லப்பட்டனர். இச்சுற்றுலாவின்போது பஞ்சாப், அரியானா மாநிலங்களில் உள்ள பண்ணைகளைக் காணவும், அங் குள்ள விவசாயிகளிடையே கருத்து பரிமாறிக் கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

(12) கருத்தரங்குகள்:

மாவட்டத்திலுள்ள விவ சாயிகள் ஒவ்வொரு பட்டத்திலும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள கருத்தரங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

1977 மார்ச் மாதத்தில் திரூரில் ஒரு கருத்தரங்கும், 16-4-77-ல் சென்னையில் ரோட் டரி சங்கத்தின் சார்பாக ஒரு கருத்தரங்கும், 26-6-77-ல் பண் ணூரிலும், 6-7-77 அச்சிறுபாக் கத்திலும், 2-10-77 சென்னை யிலும் கருத்தரங்குகள் அமைக் கப்பட்டன.

(13) பட்டிமன்றம்:

வானொலி மூலம் 'நவரைச் சாகுபடிக்கு ஏற்றது ஐ. ஆர். இருபதா? காஞ்சியா?' என்ற தலைப்பிலும் 23-1-78 காஞ்சியில் 'விவசாயத்திற்குப்பெரிதும் உதவு வது உரமே! பயிர்ப்பாதுகாப்பே!' என்ற தலைப்பிலும் 7-4-78 சென்னையில் 'விவசாய உற்பத்திக் குப் பெரிதும் உதவுவது அரசின் ஆதரவே! விவசாயிகளின் ஆர்வமே!' என்ற தலைப்பில் பட்டி மன்றங்களும் ஏற்பாடு செய்யப் பட்டு மன்ற அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

(14) உழவர் பெருவிழா:

மாவட்டத்திலுள்ள விவசாயிகள் வேளாண்மைத் துறையினரின் பணிகளில் கண்டு பங்குகொள்ள வும் வாய்ப்பளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு முக்கிய ஆராய்ச்சிப் பண்ணை அல்லது அரசினர் பண்ணையில் உழவர் பெருவிழாக்கள் நடத்தப்படு கிறது.

30-3-77-ல் திரூரில் நடை பெற்ற பெருவிழாவில் 200 மன்ற அமைப்பாளர்களும், விவ சாயிகளும் கலந்து கொண்டனர்.

2-10-77-ல் சென்னை நிலையத் தினர் 'வீடும் வயலும்' நிகழ்ச்சி துவக்க விழா ஒன்றும், 23-1-78 அன்று உழவர்களுக் கான பட்டமளிப்பு விழாவொன் றும் ஆக இரண்டு, உழவர்பெரு விழாக்களும் நடத்தப்பட்டன. 2 பெருவிழாக்களிலும் 1500-க்கும் மேற்பட்ட அமைப்பாளர்கள், உழவர்கள் கலந்து கொண்டனர்.

7-4-78 அன்று சென்னையில் செங்கை மாவட்ட உழவர் ஆய்வு மன்றத்தினர் ஒரு உழவர் பெரு விழா நடத்தினர்.

(15) வானொலி செய்திதொடர்பு:

வானொலி நிலைய 'வீடும் வயலும்' நிகழ்ச்சிகளில் அமைப்பாளர்கள் மற்றும் உழவர்கள் பங்குகொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது.

விடை வினா 1976, 77-ல் 1 நிகழ்ச்சியும், 1978,79-ல் நிகழ்ச்சி களிலும் அமைப்பாளர்கள் பங்கு கொண்டனர்.

தமிழரசு

ஆண்டுச் சந்தா ரூ. 12

அரையாண்டுச் சந்தா ரூ 6

விவரங்களுக்கு:

சர்க்குலேசன் மேனேஜர்,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை—600 002.

'விவசாயிகளுடன் பேட்டி' என்ற தலைப்பில் 1976-77-ல் 12 அமைப்பாளர்களும், 1977-78-ல் 64 அமைப்பாளர்களும், 1978-79-ல் 45 அமைப்பாளர்களும் பங்கு கொண்டனர்.

விவசாயிகள் அன்றாடம் வேளாண்மை நுணுக்கங்களை அறிந்து செயல்பட வானொலியின் வாயிலாக முக்கிய செய்திகள் ஒலிபரப்பப்படுகின்றன. மற்றும் பண்ணைச் செய்திகளிலும் நிலையம் பற்றிய செய்திகள் ஒலி பரப்பப்படுகின்றன.

(16) வேளாண்மை கருத்துக் காட்சிகள் அமைத்தல்:

நிலைய பயிற்சிகளின்போதும் கருத்தரங்குகள், உழவர் பெரு விழாக்களிலும் கருத்துக் காட்சிகள் அமைக்கப்படுகின்றன.

1976-77-ல் 21 காட்சிகளும், 1977-78-ல் 30 காட்சிகளும், 1978-79-ல் இதுவரை 10 கண் காட்சிகளும் அமைக்கப்பட்டுள் ளன.

(17) படக்காட்சி:

நிலையத்திலுள்ள திரைப்படக் காட்சி கருவியைக் கொண்டு நிலைய பயிற்சியின்போது பயிற்சி யாளர்களுக்கும் விழாக் காலங்கள் மற்றும் முன்பருவ விழாக்களிலும் படக்காட்சிகள் அமைக்கப்படு கின்றன. வேளாண்மை பற்றிய செய்திப் படங்கள் காட்டப்படு கின்றன.

1977-78ல் 135 படக்காட்சிகள் காட்டப்பட்டன. பயனடைந் தோர் எண்ணிக்கை 34,000.

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும் !

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்
துணையாகும் !

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.

1978-79-ல் 31-1-78வரை 48 படக்காட்சிகள் காட்டப்பட்டு 13,300 விவசாயிகள் பயனடைந்

(18) அமைப்பாளர் கடிதங்கள் :

உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர்களிடமிருந்து ஐயங்கள் பெறப்பட்டு அவைகளுக்குப் பதில் அளிக்கப்படுகிறது.

1977-78 700-க்கும் மேற்பட்ட கடிதங்கள் பெறப்பட்டு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

1978-79ல் இதுவரை 500 மேற்பட்ட கடிதங்கள் பெறப்பட்டு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

(19) தீவிர தானிய சேமிப்பு மற்றும் எலி ஒழிப்பு வாரங்கள் :

தானிய சேமிப்பு இயக்கத்தினருடன் கிராமங்களில் தீவிர தானிய சேமிப்பு இயக்கமும், எலி ஒழிப்பு நடவடிக்கைகளும் நடத்தப்படுகின்றன.

1977-78ல் 4 கிராமங்களிலும், 1978-79ல் 31-7-78 வரை 4 கிராமங்களிலும் தீவிர இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன.

(20) சிறந்த ஆய்வு மன்றங்களுக்குப் பரிசு :

செங்கை மாவட்டத்தில் உள்ள சிறந்த ஆய்வு மன்றங்கள் 5-க்கு ஆண்டுதோறும் பரிசளிக்கப்படுகிறது.

1976-77-ல் (1) பரத்தம்பேடு (2) நின்னகரை, (3) அண்ணா நகர்-புழல், (4) ஒரக்காடு, (5) தேவதானம் ஆகிய 5 மன்றங்களுக்கும்—

1977-78-ல் (1) ஆலப்பாக்கம் (2) நூத்தஞ்சேரி, (3) புதுப்பட்டு, (4) பெரியகாட்டுப்பாக்கம், (5) தொழுவூர், (6) முட்டவாக்கம், (7) வில்லிவலம், (8) அத்திமாஞ்சேரிப் பேட்டை (பெண்), (9) எல்லாபுரம்(பெண்) (10) ஊத்துக்காடு (பெண்).

ஆகிய பத்து மன்றங்களுக்கும் பரிசளிக்கப்பட்டுள்ளன. நிலையத்தினரால் 5 பரிசுகளும் ஸ்பிக் உர நிறுவனத்தினரால் 5 பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

1978-79-ல் வானொலியில் அதிகமானக் கேள்விகளை கேட்பதற்கான பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அத்திமாஞ்சேரிப் பேட்டை உழவர் மகளிர் மன்றத்திற்கு மாநில அளவிலான பரிசு அளிக்கப்பட்டுள்ளதென்பதைப் பெருமையுடன் குறிப்பிடலாம்.



நான் யார்?

ஈ. வெ. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்.

அந்தத் தொண்டு செய்ய எனக்கு 'யோக்கியதை' இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததனால் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.

இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும், பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்டு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பதாலும், நான் அத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன்.

சமுதாயத்தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன்.

(பெரியார் கைப்பட எழுதியது)

[திரு. வே. ஆனைமுத்து தொகுத்து 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்—1' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.]

சொட்டு நீர்ப் பாசன முறை

தோன்று தொட்டு நமது நாட்டில் பல்வேறு வகைப் பாசன முறைகள் கையாளப் பட்டு வருகின்றன. அவைகளில் முக்கியமானவைகளாக கணக்கின்றி வயல்களில் நீரைத் தேக்கும் முறை, சால் பாசன முறை, பாத்திப் பாசன முறை, வட்டப் பாத்திப் பாசன முறை, சிறு சால் பாசன முறை ஆகியவைகளைக் குறிப்பிடலாம். இவைகளன்றி, அண்மைக் காலத்தில் தெளி நீர்ப் பாசன முறையும் கையாளப் பட்டு வருகிறது. இம்முறைகள் யாவற்றிலும் பாசனத் திறன் மிகக் குறைவேயாகும். இது தவிர நல்ல நிலங்கள் வரப்புகளுக்காகவும், வடிகால்களுக்காகவும் குறைந்தது 5 சதவிகிதம் வீணாக்கப்படுகின்றன. மற்றும் ஒவ்வொரு பருவத்திலும் வாய்க்கால் வரப்புகள் அமைப்பது, நிலத்தைச் சமப்படுத்துவது, விவசாயிக்கு ஒரு பெரும் பிரச்சினையாகும். இத்தனைப் பிரச்சினைகளுக்கும் ஒட்டு மொத்தமான தீர்வாக அமைந்ததுவே சொட்டு நீர்ப் பாசன முறையாகும். இம்முறை உண்மையிலேயே விவசாயிகளுக்கு ஒரு வரப் பிரசாதம் ஆகும்.

சொட்டு நீர்ப் பாசன முறை

பயிர்களுக்கு அதிக அளவு பாசன நீரை அளிப்பதன் மூலம் அதிக மகசூலை எடுக்க முடியும் என்ற எண்ணம் இன்னும் விவசாயிகளிடையே நிலவி வருகிறது. இது தவறு என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. பயிருக்குத் தேவையான அளவில் பாசனம் செய்தால்தான் அதிக மகசூல் எடுக்க முடியும். இதனால் அதிக அளவு நீரையும் சேமிக்க முடியும்.

நீரை அதிக அளவில் நீண்ட கால இடைவெளியில் பயிருக்குக் கொடுப்பதை விட, குறைந்த அளவில் குறுகிய இடைவெளியில் கொடுத்தால் பயிரின் வேர்ப் பாகத்தில் ஏற்படும் அழுத்த நிலை தவிர்க்கப்பட்டு பயிர் நன்கு வளரும். இதுதான் இம்முறையின் தத்துவமும் கூட.

இம்முறையை மேற்கொள்வதால் இரு வழிகளில் அதிக அளவில் வீணாகும் நீர்ச் சேதத்தைத் தடுக்க முடியும்.

1. நீர் எடுத்துச் செல்வதால் ஏற்படும் கசிவுச் சேதம்.

2. நீர் ஆவியாதலால் ஏற்படும் சேதம். இவை இரண்டினைத் தவிர, பாசன முறையில் வேறு பல முக்கியப் பிரச்சினைகளையும் தீர்க்கும் ஆற்றல் பெற்றுள்ளது இம்முறை. அவையாவன :

*நீர்ச் சேமிப்பு — குறைந்த அளவு பாசன நீர்.

*அதிகப்படியான மகசூல்.

*உப்பு நீரையும் பாசனத்திற்குப் பயன்படுத்தல்.

*பயிர் வளர்ச்சிக் காலக் குறைப்பு.

*குறித்த காலத்தில் விவசாயம்

*உரமிடுவதில் சிக்கனம்.

*அதிக அளவு பாசனத் திறன்.

*நிலம் சமப்படுத்தத் தேவையின்மை.

*களைத் தொல்லைக் குறைப்பு.

*பாசனத்திற்கு அதிக அளவு நிலம்.

*வடிகால் வசதிதேவையின்மை

*தரமான விளை பொருள்.

இம்முறையில் குழாய்கள் மூலம் பயிர்களின் வேர்ப் பாகத்தில் நீர் சொட்டுமாறு செய்யப்படுகிறது. இதனால் பயிரின் வேர்ப்பாகத்தில் எந்த வித அழுத்தமும் ஏற்படாது. தேவையான அளவு நீரை அதிகப்படியான சக்தியைப் பயன்படுத்தாது எடுத்துக் கொள்ள ஏதுவாகிறது. குறைந்த அளவு நிலப் பகுதியிலேயே ஈரம் பரவுவதால் ஆவியாதல் முறை நீர்ச்சேதம் தடுக்கப்படுவதோடு, நீர் பயிரின் வேர் ஆழத்திற்குக் கீழும் ஊடுருவிச் செல்வதும் தடுக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு இம் முறையின் அமைப்பு முறைகள், அனுகூலங்கள் நீர்ப்பாசனத்திறன் ஆகியவைகளை விளக்கும் பொருட்டு பல்வேறு விவசாயப் பண்ணைகளில் செயல் விளக்க முறைகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

மழைகள் ஆண்டுதோறும் பொய்த்து, மொத்த மழை அளவு குறைந்து கொண்டே வருவதால் கிணற்றில் நீர் மட்டம் அபாயகரமான வேகத்தில் கீழ் நோக்கிப் போய்க் கொண்டே இருக்கிறது. இந்நிலை நீடிக்குமானால், ஒரு சமயத்தில் இம்முறையைத் தவிர வேறெந்த முறையையும் பயன்படுத்த வாய்ப்பே இருக்காது.

ஆகவே, இன்றைய வறட்சி நிலையில் இம் முறையினை மேற்கொண்டால், அதிகப்படியான நிலத்தினைப் பாசனத்தின் கீழ்க் கொண்டு வருவதோடு உற்பத்தியையும் பெருக்கி நாட்டு முன்னேற்றத்திற்கும் அடிகோல முடியும் எனத் திட்ட வட்டமாகக் கூறலாம்.

ஏலக்காய்

ஏற்றுமதி வாய்ப்பு

தற்போதைய வளமான சாகுபடி விளைச்சலின் அடிப்படையில், நடப்புப் பருவத்திற்கான (1978—79) ஏலக்காய் உற்பத்தியின் பூர்வாங்க மதிப்பீடு 4,000 மெட்ரிக் டன்னாக அமையுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், கேரளம், தமிழ்நாடு, கர்நாடகம் மாநிலங்களில் பங்கு முறையே 2,900 மெட்ரிக் டன், 300 மெட்ரிக் டன், 800 மெட்ரிக் டன் ஆகும்.

1976-77 பருவத்தில் நடந்த ஏல விற்பனையைப் போல் 1977—78 பருவத்தில் நடைபெற்ற ஏல விற்பனை இரு மடங்காகப் பெருகியது. கேரளத்திலே ஏலங்களின் வாயிலாக நடந்த விற்பனை கிட்டத்தட்ட மும்மடங்கு உயர்ந்தது.

1978—79ல் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள 4,000 மெட்ரிக் டன் ஏல உற்பத்தியில், 2,800 மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப்படும்; கிடைக்கும் அந்நியச் செலாவணியின் பெறுமானம் ரூ. 50 கோடி!

1978 ஜூலை 3-ஆம் தேதி 1,29,269.20 ஏக்கர் பரப்புக் கொண்ட 18,004 தோட்டங்கள் கேரளத்தில் பதிவு செய்யப்பட்டன. கர்நாடகத்தில் 61,278.75 ஏக்கர் பரப்புக் கொண்ட 8,936 ஏலப் பண்ணைகளும், தமிழ்நாட்டில் 17,374.83 ஏக்கர் நிலப்பரப்புள்ள 1,270 தோட்டங்களும் பதிவாகியிருக்கின்றன.

கேரளம், கர்நாடகத்திலுள்ள ஏலச் சாகுபடியாளர்கள் தங்களது பகுதிகளைச் சார்ந்த தாசில்தார்களிடமும், தமிழ்நாட்டு விவசாயிகள் மாவட்ட ஆட்சியாளர்களிடமும் தங்களுடைய நிலங்களைப் பதிவு செய்து கொள்ளாமலிருந்தால், அவர்கள் உடனடியாகப் பதிவிற்கான விண்ணப்பங்களை அனுப்புவது நல்லது!

அறிவியல் அரங்கம்

தாவரங்களால் சிந்திக்க முடியுமா?

பேராசிரியர் அ. மகாதேவன்
இயக்குநர் : தாவர இயல்
மேற்படிப்பு மையம்
சென்னைப் பல்கலைக் கழகம்.

சிந்தனையும் சிந்திக்கும் திறமையும் மனிதர்களுக்கும், மற்ற விலங்குகளுக்கும் மட்டும்தானா? இல்லை. தாவரங்களும் சிந்திக்கின்றன. ஆனால், தாவரங்களிடம் மூளை இல்லை, நரம்பும் இல்லை. அதனால் அவைகளால் சிந்திக்க முடியாது என்று நம்மில் பலர் நினைப்பது உண்டு. அது முற்றிலும் தவறு. காரணம் என்னவென்றால், தாவரங்களின் சிந்திக்கும் திறன்களைத் திறம்பட அளப்பதற்குக் கருவிகள் ஒன்றும் இல்லை. ஆனால், சிந்திப்பதைச் செய்கையின் மூலம் அறிவிப்பது தான் நல்ல பண்பாடு என்று நம் பெரியோர்கள் கூறுவார்கள். தாவரங்கள் தங்கள் சிந்தனைகளைச் செய்கையிலும் உணர்ச்சியிலும் திறமையாகக் காட்டுகின்றன.

தாவரங்கள் உணர்ச்சி உள்ளவை என்பது, ஒரு கொடி தன்னை அடுத்துள்ள மரமோ, கம்பமோ எதானாலும் அதன் மேல் தாவுவதிலிருந்தே நமக்குத் தெரிகிறது. அண்மையில் வெளி வந்த செய்தி புதுமையாகவும் விந்தையாகவும் உள்ளது. தம்மை வாழ்த்துபவர் அருகில் வந்தால் அவரை விருப்பத்துடன் ஏற்கிறது. மாறாக, வருகிறவர் தம்மைக் கிள்ளித் துன்பமுறுத்துபவர் அருகில் வரும்போது, அலறுவதும் கருவியின் மூலம் தாவரங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். உணர்ச்சி என்பது சிந்தனையின் முடிவு அல்லவா?

இசைக்கு மயங்காதவர் யாரேனும் உண்டா? தாவரங்களும் அப்படியே! சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சிங் அவர்கள் இசையால் தாவரங்களுக்கு வரும் பல மாற்றங்களைப் பற்றி விஞ்ஞானக் கட்டுரைகள் வெளியிட்டார். அவரது ஆராய்ச்சி முறையில் பல தவறுகள் இருந்தாலும் ஆராய்ச்சியின் முடிவுகள் என்னவென்றால் தாவரங்கள் இசையில் மயங்கிவிடுகின்றன. கர்நாடக இசையில் செடிகளின் வளர்ச்சி நன்றாக இருந்ததாம். மாறாக, மேல் நாட்டு இசையில், தாவரங்களின் வளர்ச்சியில் மாற்றங்கள் இருந்தன.

தற்போது மேல்நாடுகளில் இந்த ஆராய்ச்சிகளைத் தீவிரமாகச் செய்து வருகிறார்கள். ஹைடிரில்லா என்னும் கொடியின் இலையை எடுத்து அதை நுண்ணோக்கியால் பரிசீலனை செய்து பார்த்தால், நிறைய செல்கள் காணப்படும். ஒவ்வொரு செல்லிலும், சைட்டோப்பிளாசம், பசுங்கணிகங்கள் என்ற முக்கியப் பொருள்கள் உள்ளன. இதில் பசுங்கணிகங்களின் சுழற்சியைக் காணலாம்.

இசைக் கருவியால் சிறு ஒலியை நுண்ணோக்கியின் அருகில் எழுப்பினால் பசுங்கணிகங்கள் முன்னிலும் வேகமாகச் சுழல்கின்றன. இசை அதிகமாக, அதிகமாக, பசுங்கணிகங்கள் சுழற்சியும் அதிகமாவதைக் கண்கூடாகக் காணலாம். மேலும், ஒரு இசைக் கருவியினின்று, இன்னொரு கருவியை உபயோகித்தால், பசுங்கணிகங்கள் சுழல்வதும் மாறிக்கொண்டிருக்கின்றன. உதாரணமாக, வயலின் இசைக்குப் பசுங்கணிகங்கள் அமைதியாகச் சுழல்கின்றன.

இவைகள் சிந்திக்கும் திறமையைக் காட்டுகின்றனவா இல்லையா என்பதை நாம் சிந்திக்க வேண்டும்!

இன்னும் ஒரு உவமையை எடுத்துக் கொள்வோம். இசைக்குப் பதிலாக, நஞ்சுப் பொருள் ஒன்றை இந்த ஹைடிரில்லாச் செடிக்கு மிகக் குறைந்த அளவில் ஊசி மூலமாகச் செலுத்தினால், பசுங்கணிகங்கள் உடனேயே சுழல்வதை நிறுத்திவிடுகின்றன. செல்லின் உள்ளே அமைதி நிலவுகிறது. ஆனால், நஞ்சுப் பொருளை மாற்றிவிட்டால், செல் திரும்பவும் செயல்படுகிறது!. நஞ்சுக்குப் பதிலாக, மயக்கம் தரும் மருந்தை அனுப்புவோமாயின், மயங்குகிறது செல்! பசுங்கணிகங்கள் மயக்கமடைகிறது.

''தொட்டால் வாடி'ச் செடியின் இலையைத் தொட்டால், அந்த இலையும் அதன் மேலும் கீழும் உள்ள இலைகள் கண் இமைக்கும் நேரத்திற்குள் வாடிவிடுகின்றன. சில விநாடிகளுக்குப் பிறகு இலைகள் திரும்பவும் மகிழ்ச்சியாகக் காணப்படுகின்றன. விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக இந்தத் ''தொட்டால் வாடியை'' ஆராய்ந்து இதற்கான காரணத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தச் செடிகளில் ஒரு இரசாயனப் பொருள், செடியைத் தொட்டவுடன் உடனேயே செடியின் பல பகுதிகளிலும் மின் அணுவைப்போன்று விரைந்து சென்று இலைகளை வாடச் செய்கிறது. சில விநாடிகளுக்குப் பிறகு, அந்த இரசாயனப் பொருள் அழிந்து விடுகிறது. திரும்பவும் ''தொட்டால் வாடி'' வாடாமல் இருக்கிறது. மறுபடியும் தொட்டால், தாவரத்தின் உடல் அமைப்பில் மாறுதல் ஏற்படுகிறது. இந்த உவமை சிந்தனையின் திறமையைக் காட்டுகிறதா? அல்லது சிந்தனையின் விளைவாகச் செய்கையில் காட்டுகிறதா? [நன்றி: வானொலி]

விவசாயிகளுக்குப் பெருநஷ்டத்தை விளைவிக்கும் எதிரி—எலி

எலித்தொல்லையை அறவே நீக்க ஒரே வழி ரோடா:பாரின் (ஆண்டிகோவாகுலண்ட்)

rodafarin 'C' KILLS TO THE LAST RAT

மிசோராமில் பஞ்சத்திற்கு அடிப்படையான காரணம் எலிகளின் நாசவேலைதான். எலிகள் விவசாயிகளின் முதல் எதிரி என்றும் அவை அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடும் விஷம் மூலம் உடன்கொல்லும் சக்திபெற்ற மருந்து கலந்த இரையை எலிகள் நாளடைவில் கண்டுகொண்டு ஒதுக்கிவிடுவதால், அவை பயனற்றுப் போகின்றன. இங்கிலையில், பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) நிறுவனத்தினர் ஆராய்ச்சியில் பெரும் முன்னேற்றம் கண்டு, எலிகளை அறவே ஒழிக்க வல்ல ரோடாஃபாரினைத் தயாரித்திருக்கிறார்கள்.

ரோடாஃபாரின் உடன் கொல்லும் மருந்தல்ல. அதுவேலை செய்யும் முறையாவது, எலிகளின் ரத்த நாளங்களிலிருந்து ரத்தப் போக்கை ஏற்படுத்தி, அதே சமயம் ரத்தம் விரைவில் உறையாவண்ணம் செய்து, மெதுவாக ஆனால் நிச்சயமாக உயிரைப் போக்கிவிடுவதேயாகும். ரோடாஃபாரின் கலந்த இரை அதிகச் செறிவு இல்லாததாலும், விஷம் கடுமையாக இல்லாததாலும் எலிகள் இவ்விரையைத் தவிர்க்காமல், உட்கொண்ட மூன்றும் நாளிலிருந்து இறக்கத் தொடங்குகின்றன. குறிப்பாக, அதிகச் சேதம் ஏற்படுத்தும் வரப்பு எலிகள் 24 மணி நேரத்திற்குள்ளேயே இறந்து விடுகின்றன. ஆனால் ரோடாஃபாரின் கலந்த இரை தற்செயலாக மனிதர்களாலோ, வளர்ப்புப் பிராணிகளாலோ, கால்நடைகளாலோ உட்கொள்ளப்பட்டாலும் தீங்கு விளைவிக்காது.

ரோடாஃபாரினின் முற்றிலும் பயன்தரும் வேலைத்திறன், பல கிராமங்களில் நிரூபிக்கப்பட்டு விட்டது. குறிப்பாக, லட்சத் தீவில் ரோடாஃபாரின் உதவியுடன் எலிகளை முழுமையாக ஒழித்த பின் அங்கு தேங்காய் விளைச்சல் 150 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

ரோடாஃபாரின்*—எலிகளின் எதிரி. விவசாயிகளின் நண்பன்.

*உலகெங்கும் வார்ஃபாரின் என்ற மறுபெயர் கொண்டது.

FDS PCI 2750 TAM

பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) பி. லிட்.,

28, எர்ரபாலுச் செட்டித் தெரு, த. பெ. எண். 102, சென்னை 600 001. தொலைபேசி எண்: 24266, 24267.
177, ஜெயில் ரோடு, த. பெ. எண். 3774, கோயமுத்தூர் 641 018. தொலைபேசி எண்: 25975.
53, அமெரிக்கன் கல்லூரிக் கட்டிடம், த. பெ. எண் 53, அழகர்கோயில் ரோடு, மதுரை 625 002. தொலைபேசி எண். 30440.

பி.ஸி.ஐ. ஈ.டி.பி. ஆம்ப்யூல்

சேமித்து வைத்திருக்கும் தானியங்களை பூச்சிபூண்டுகளின் தொல்லையிலிருந்து எளிதான முறையில் சிறப்பாகக் காக்க.

எங்கும் கிடைக்கிறது.

வளர்ச்சிப் பணியே சமுதாய நலம்

ஆண்டுதோறும் சமுதாய நலவார விழா அண்ணல் காந்தி அடிகள் பிறந்த அக்டோபர் இரண்டாம் நாள் தொடங்கி ஒரு வார காலம் கொண்டாடப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

ஆண்டு தோறும் நடைபெறும் விழாக்கள்-நம் மகிழ்ச்சியை வெளிப்படுத்த நமக்குக் கிடைத்த வாய்ப்பு என்பது மட்டுமின்றி நாம் கடந்து வந்த காலத்தை—அக்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை—அந்நிகழ்ச்சிகளால் நாம் பெற்ற நன்மைகளை-நெகிழ்ச்சியுடன் எண்ண வைக்கும் தூண்டுகோல் என்று நான் கருதுகிறேன்.

கடந்த ஆண்டு இதே நாள், நான் வானொலியில் உரையாற்ற அழைக்கப்பட்டபோது புரட்சித் தலைவர் தலைமையிலே அமைந்த இவ்வரசு பதவியேற்று நான்கு திங்களே நிறைவு பெற்றிருந்தன. ஆனால், இன்றைக்கு இந்த அரசு ஓராண்டு காலப் பயணத்தை முடித்து விட்டது. இவ் ஓராண்டு காலத்தில் சமுதாய வீதியில் இவ்வரசு எத்தனை வெற்றிகளை ஈட்டியுள்ளது என்பதைப் பற்றி எண்ணிப் பார்ப்பது இங்கு பொருத்தமாக அமையும் என்று நம்புகிறேன்.

ஒரு தனி மனிதனின்-அத்தனி மனிதன் சார்ந்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிட்டு நிறைவேற்றும் பெரும் பொறுப்பை-ஏற்றுள்ள உள்ளாட்சி அமைப்புகள் கடந்த ஓராண்டில் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல, குறைவற்றதுமாகும். வளர்ச்சிப் பணிகளுக்காக இவ்வாண்டில் சமுதாய வளர்ச்சி என்னும் தலைப்பின் கீழ் தமிழ்நாடு அரசு ஏறத்தாழ 143 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. அதாவது சராசரியாக ஓர் ஒன்றியத்திற்கு 38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து

'நீரின்றி அமையாது உலகு' என்பது ஆன்றோர் வாக்கு. மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீர் இல்லாத குறையினைக் களைவதில் இந்த அரசு தீவிரமாய் முனைந்து செயலாற்றி வருகிறது. நீர் வழங்கு சிறு திட்டங்களுக்காக மட்டும் 1977-78, 1978-79 ஆண்டுகளில் 270 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் குடிநீர் வசதி இல்லாத சிற்றூர்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலை உருவாகும். இது உறுதி.

கடந்த ஆண்டில், இயற்கையின் சீற்றம் வளர்ச்சிப் பணிகளுக்குப் பெரும் இடையூறாக இருந்தது. புயல் மற்றும் வெள்ளத்தால் பாழ்பட்ட சாலைகளைப் பழுதுபார்க்க மட்டும் இந்த அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ. 168 இலட்சம் மானியமாகவும், ரூ. 171.5 இலட்சம் கடனாகவும் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஊராட்சி, மக்களாட்சித் தத்துவத்தின் ஆரம்பப்பள்ளியே ஊராட்சி. நாட்டு வளர்ச்சியிலே நாட்டம் கொண்ட நல்லவர்களைப் பொதுப்பணியில் ஈடுபடச் செய்யும் முயற்சியின் முதற்படியிலேயே இவ்வரசு வெற்றி கண்டுள்ளது.

மக்களாட்சி முறையில் ஊராட்சி ஒன்றிய மற்றும் நகராட்சித் தலைவர்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சித் தலைவர்களை வாக்காளர்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் 'நேரடித் தேர்தல் முறை', வரும் தேர்தல்களில் நடைமுறைக்கு வர உள்ளது. இந்த மாற்றத்தின் மூலம் வருங்காலங்களில் உள்ளாட்சி அமைப்புகள் மேலும் சிறப்புமிக்க-திறமைமிக்க குடியரசு நிறுவனங்களாகத் திகழும் என்பது மிகையாகாது.

கல்விக் கண் திறக்கும் பணிக்கு ஈடு எதுவுமில்லை. ''ஒரு கல்விச் சாலையைத் திறப்பவன் ஒரு சிறைச்சாலையை மூடுகிறான்''—என்று ஆங்கிலத்தில் ஒரு பொன்மொழி உண்டு.

பொருளாதார நிலையில் நலிவுற்று, தன் பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி தன் குடும்பத்திற்காக உழைக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளான அவல நிலையை அடைந்த மாணவ—மாணவியருக்குக் கல்வி புகட்டும் திட்டம்தான் 'முறை சாராக் கல்வித் திட்டம்' என்பது. இத்திட்ட செயலாக்கத்தில் ஊராட்சி

> எங்களுக்குத் தேசம் தான் தெய்வம்; தேசத்தின் மக்கள் தான் எங்கள் சொத்து, சுகம் எல்லாம். அதற்கு ஆபத்து வரும்போது எங்கள் உயிர்களை உருவிக் கொடுத்தாவது தேசத்தைக் காத்து நிற்போம்.
>
> —பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

ஒன்றியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. கல்வித் துறையினரால் ஓர் ஒன்றியத்திற்கு இரண்டு முறை சாராக் கல்வி நிலையங்கள் என்ற விகிதத்தில் நடத்தப்படும் நிலையங்கள் மட்டுமின்றி நிதி வசதி சிறப்பாக உள்ள ஒன்றியங்களில் 780 கல்வி நிலையங்கள் தொடங்கப்பட அரசு ஆணையிட்டுள்ளது.

இத்தகைய சிறப்பு மிகு திட்டத்தினை உள்ளாட்சி அமைப்புகள் ஏற்றுச் செயல்படுத்துவது இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் என்பதை நான் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

மேலும் இவ்வரசு செயல்படுத்தி வரும் பல்வேறு சிறப்புத் திட்டங்களுள் ஒன்றிரண்டு பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

நெல்லை மாவட்டம், மேலநீலித நல்லூர் ஒன்றியத்திலுள்ள நான்கு சிற்றூர்களில் நிறைவேற்றப்படும் கிராம முழு வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் அச்சிற்றூர்களில் வாழும் 1102 குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதாகும். மற்ற மாவட்டங்களில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னோடியாக அமைந்த இத் திட்டத்தின் தொடக்கமே வெற்றியுடன் அமைந்திருப்பது செழுமையான சூழ்நிலை. இந்தப் பகுதிகளில், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 32 இலட்சத்திற்கான செயற்குறிப்புகள் இறுதிப்படுத்தப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

ஆய்வின் திட்டத்திலுள்ள கிராம மேம்பாட்டுத் திட்டம் என்பது சமுதாயத்தில் நலிந்த பகுதியினருக்கு அதிக வேலை வாய்ப்பு ஏற்படுத்தி விளை பொருள்கள் உற்பத்தியை அதிகரித்து கிராமப்புற மக்கள் வாழ்வினை வளம் பெறச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று. இத்திட்ட நிறைவேற்றத்திற்காக மதுரை மாவட்டத்தில் திருப்பரங்குன்றம் ஒன்றியமும், இராமநாதபுரம் மாவட்டத்தில் காயபட்டி ஒன்றியமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆவுடையார் கோவில் ஒன்றியமும், வட ஆர்க்காடு மாவட்டத்தில், தெள்ளாறு ஒன்றியமும், செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவாலங்காடு ஒன்றியமும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செஞ்சி ஒன்றியமும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைமலை ஒன்றியமும் குமரி மாவட்டத்தில் கிள்ளியூர், தக்கலை, முஞ்சிறை ஒன்றியங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் தருமபுரி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டு வரும் 'ஒருங்கிணைந்த ஊரக முன்னேற்றத் திட்டமும்' குறிப்பிடத்தக்க வகையில் பலனளித்து வருகின்றது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிற்றூர்களின் முன்னேற்றத்தில்—தனியார் நிறுவனங்களும்-அறக்கட்டளைகளும் காட்டும் ஆர்வத்தை இன்றைய சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான நிலை என்றே குறிப்பிட வேண்டும். இத்தகைய நிறுவனங்கள் கிராமப்புற வளர்ச்சியில் காட்டும் ஆர்வத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் இவ்வரசால் அளிக்கப்படுகின்றன.

மைசூர் மறுவாழ்வு மற்றும் முன்னேற்ற நிறுவனம் என்ற அமைப்பு தமிழகத்தில் தன் பணியை ஆற்ற இருக்கிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் வாழ்க்கை நிலையை, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, பால் வளம் பெருக்குதல் முதலிய பல்வேறு உற்பத்திப் பணிகளை ஊக்குவிப்பதன் மூலம், உயர்த்துவது இவ்வமைப்பின் நோக்கமாகும். முதற்கட்டமாக இத்திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த தாளவாடி ஒன்றியத்திலும், தர்மபுரி மாவட்டத்தில் தள்ளி ஒன்றியத்திலும், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் ஒன்றியத்திலும் சுமார் 2 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட இருக்கின்றன. இத் திட்ட நிறைவேற்றத்திற்கான பணியாளர்கள் உட்பட அனைத்து உதவிகளையும் தமிழக அரசு அளிக்கும்.

"பாடி" எனப்படும் மக்கள் ஒத்துழைப்பினை முன்னேற்றப் பணியில் ஈடுபடுத்தும் திட்டத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இத்திட்டத்தின்படி ஆங்காங்கே உள்ள பொது நல நிறுவனங்கள் பொதுப் பணியில் ஈடுபட அனுமதி அளிக்கப்படுவது மட்டுமின்றி அந்நிறுவனங்களின் பணிக்காக உதவித் தொகையும் அளிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு அலுவலராக ஊர் வளர்ச்சி இயக்குநர் செயல்படுவார்.

கிராமப்புற மக்களின் நல்வாழ்வையே எல்லாத் திட்டங்களுக்கும் மையமாகக் கொண்டுள்ள இந்த அரசு நகர்ப்புற முன்னேற்றம் பற்றிய திட்டங்களில் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவது எனது கடமை என்று கருதுகிறேன்.

நகர்ப்புற ஏழைகளுக்கு உதவும் வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நிறைவேற்றி வரும் ரூ. 48 கோடி மதிப்புள்ள வீட்டுவசதித் திட்டங்களும், சமுதாயத்தில் அடித்தள மக்களுக்கு இருப்பிடம் வழங்க அரும்பாக்கத்தில் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டமும், வில்லிவாக்கம் கொடுங்கையூர் ஆகிய பகுதிகளில் நிறைவேற்றப்படவிருக்கும் வீட்டுவசதித் திட்டங்களும், நகர்ப்புற மக்கள் வாழ்வில் இந்த அரசு எடுத்துக் கொண்ட ஆர்வத்தை விளக்கும் எடுத்துக் காட்டுகளாகும்.

பொதுவாக இந்நாட்டின் விழாக்கள் இருப்பவன், இல்லாதவன், படித்தவன், பாமரன், உழுபவன்-உழுவிப்பவன், முதலாளி-தொழிலாளி, என்ற எவ்வித வேற்றுமையும் இன்றி அனைவரும் மகிழ்வுடன் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்திருக்கின்றன. ஆண்டுதோறும் கொண்டாடப்படும் இந்தச் சமுதாய நல வார விழாவின்போது இதுவரை ஆற்றியுள்ள பணிகள் பற்றி வரம்பிட்டுக் காட்டியுள்ளேன். அடுத்து வரும் விழாவிற்குள் மேலும், மேலும் நன்மைகளை மக்கள் எய்துவர் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்து அரசின் திட்டங்களையும் - அத்திட்டங்களின் மீது மக்கள் காட்டும் ஆர்வத்தையும் பகிர்ந்து கொள்ள வாய்ப்பினை நல்கிய வானொலி நிலையத்தினருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

வாழ்க தமிழ்! வணக்கம்.

[சமுதாய நல வார விழாவை ஒட்டி 3—10—78 அன்று வானொலியில் ஆற்றிய உரை]

ஏழைக் குடும்பங்கள் ஏற்றம் பெற்றிட....

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
செல்வி பி. டி. சரசுவதி

மகளிர் நலம் தொடர்பான திட்டங்களைப் பொறுத்த வரையில், பணி புரியும் மகளிருக்கான விடுதிகளுக்கு வழங்கப்படுகின்ற மானியங்களை முறைப்படுத்தும் விதி முறைகளைத் தளர்த்தி உள்ளதற்காக மைய அரசின் சமூக நல அமைச்சகத்துக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஏழைகளாகவும், ஆதரவற்றவர்களாகவும் உள்ள மகளிருக்குப் பொருளாதார வகையில் புது வாழ்வு அளித்திட சிறப்புத் திட்டங்களை வகுப்பது தேவைதான் என்பதை நாம் அனைவரும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அதே சமயத்தில் ஆதரவற்ற கைம்பெண்களின் நிலைமை அவலம் மிக்கதாக உள்ளது. அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டியது அவசியமாகிறது. இதனை நன்கு உணர்ந்து, தமிழ்நாட்டில் கைம்பெண்களின் நலனுக்கான சில தனித் திட்டங்களைத் தொடங்கியுள்ளோம்.

ஆதரவற்ற கைம்பெண்கள் கணவரால் கைவிடப்பட்ட மகளிர் ஆகியோரைக் காப்பதற்கு என்று பணி இல்லங்களை நடத்துகின்றோம். அவர்கள் அந்த இல்லங்களில் தங்களுடைய இரு குழந்தைகளுடன் மூன்று முதல் ஐந்தாண்டுக் காலம் தங்கலாம். அக்கால அளவில் அவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் முதலியன இலவசமாக அளிக்கப்படுகிறது. அப்போது அம்மகளிர்க்கு, பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுதுவதற்காக விரைவில் பயன்படத் தக்கவாறு வரையறுக்கப்பட்ட பாட வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவ்வாறு பள்ளி இறுதி வகுப்பில் தேறியவர்கள் ஆசிரியப் பயிற்சி பெறுவதற்காக அவர்களுக்கு ஆசிரியக் கல்விப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. படிப்பு சரியாக வரவில்லை என்றால் அவர்களுக்குத் தையல் வேலையிலும் மனைப் பராமரிப்பு வேலையிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. அடுத்து, மறுமணம் செய்து கொண்ட தம்பதியருக்கு தேசீய சேமிப்புப் பத்திரங்கள் வடிவில் ரூ. 5,000 மதிப்புக்கு ரொக்க உதவி அளிக்கப்படுகிறது. மூன்றுவதாக, ஆண்டுக்கு 3,000 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உடைய கைம்பெண்களின் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த சிறுவர்கள் மக்கட் தொகையில் 54 சதவீதம் உள்ளனர். அரிசன வகுப்பையும் பழங்குடியினரையும் சேர்ந்த குழந்தைகள் சுமார் 18 சதவீதம் உள்ளனர். எல்லோருக்கும் முன்னரே கிடைத்து வருகிற இலவசக் கல்வி வசதியுடன் இந்தச் சலுகையும் இவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. தங்கள் கணவரின் பணி மூலமாகத் தமக்குக் கிடைக்க வேண்டிய வருங்கால வைப்பு நிதி, ஆயுள் ஈட்டுறுதித் தொகை முதலியவற்றைப் பெறுவதிலும் தங்கள் குழந்தைகளை அனாதை இல்லங்களில் சேர்த்துக் கொள்ள இடம் பெற்றுத் தருவதிலும் அவர்கள் வாழ்க்கையைத் தொடருவதற்குப் பெறக் கூடிய பயிற்சி வாய்ப்புக்களைப் பற்றியும் அதன் பின்னர் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்புக்களைப் பற்றியும் அவர்களுக்கு எடுத்துரைத்து உதவும் வகையில் வழிகாட்டி உதவும் நிலையங்கள் இக் கைம்பெண்கள் நலன் கருதி நான்கு இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் கல்வித் தகுதி பெற்ற கைம் பெண்டிர் இருவருக்கு மருத்துவக் கல்லூரிகளில் தமிழக அரசு இடம் தந்துள்ளது. 40 வயதும் அதற்கு மேற்பட்டும் உள்ள கைம்பெண்களுக்குத் தமிழ்நாட்டில் மாதம் தோறும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும், கிராமப் பெண்களுக்குச் சாக்கட்டி தயாரித்தல், காகித உறை தயாரித்தல் போன்ற தொழில்களில் அவர்களுக்கு வீட்டிலேயே பயிற்சி அளித்து வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. கிராம நிலையில் இதற்கு வேண்டிய மூலப்பொருட்கள் பெண்களுக்குக் கொடுக்கப்படும். செய்து முடிக்கப் பெற்ற பொருட்கள் கிராமத்திலேயே சேகரிக்கப்படும். அத்தகைய பொருட்களை அரசு முக்கியமாகக் கொள்முதல் செய்யும். மூலதன முதலீடு சம்பந்தப்படாத அத்தகைய பொருள்கள் மட்டுமே தெரிந்தெடுக்கப் பட்டுள்ளன. இத்தகைய திட்டத்தின் மூலமாக கிராமப் பெண்களின் பொருளாதார மேம்பாட்டில் பெருத்த மாறுதல் ஏற்படக்கூடும் என்று நாம் நம்புகிறோம். துயருக்கு ஆளான மகளிருக்கு உதவும் திட்டத்தைக் கடந்த ஆண்டில் இந்திய அரசு கொண்டு வந்தமை மகிழ்ச்சிக்குரிய செயலாகும். இத்திட்டம் வறியவராய் உள்ள கைம்பெண்டிருக்குப் பெரும் அளவு நன்மை அளிக்கிறது. இதுபோல வறுமையில் உழலும் ஆதரவற்ற கைம்பெண்டிர் நலன் கருதி திட்டங்களை மத்திய அரசின் சார்பில் கொண்டு வருவது குறித்து

மைய அரசின் சமூக நல அமைச்சர் ஆவன செய்ய வேண்டும்.

அனைத்து நாடுகள் குழந்தைகள் ஆண்டாக 1979-ஆம் ஆண்டு கொண்டாடப்பட விருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழ்நாட்டுக் குழந்தைகள் நல வாரியம் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அண்மையில் கூடிற்று. இவ் வாரியத்தின் கீழ்க்காணும் கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன :

1. ஆதரவற்ற சிறுவர்களுக்கு உதவுவதற்காக நிதி திரட்டும் பொருட்டு சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் ஒன்று நடத்துதல்.

2. 'ஆதரவற்ற குழந்தைகள் நலனுக்காக முதலமைச்சர் நிதி' என்ற பெயரில் சிறப்பு நிதி ஒன்று ஏற்படுத்துதல் கொடைத் தன்மை கொண்டவர்கள் அந் நிதிக்குத் தாராளமாக நிதி வழங்கி உதவுமாறு முதல் அமைச்சர் அவர்களால் வேண்டுகோள் விடுக்கப்பெறும். இந்த நிதிக்கு எல்லாத் திரைப்பட அரங்குகளிலிருந்தும் ஒரு நாள் வசூல் தொகை அளிக்கப்படும். சினிமா டிக்கெட்டுகளின் மீது மேல்வரி விதிக்கப்படலாம்.

3. தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் உள்ள 17 ஆயிரம் கிராமங்களில் சமூக நலத் துறை ..யிரம் பாலவாடிகளை (குழந்தைகள் காப்பகங்களை) நடத்தி வருகிறது. அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் கிராமத்திற்கு ஒன்று வீதம் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

4. தமிழ்நாட்டில் 6 முதல் 16 வயதிற்குள் உள்ள சிறுவர்களில் 75,000 சிறுவர்கள் உடல் ஊனம் உற்றவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளனர். அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டில், வறியவர்களாக உள்ள உடலூனமுற்றவர்கள் அனைவருக்கும் ஊன்றுகோல் என உதவும் செயற்கை உறுப்புகளையும் துணைக் கருவிகளையும் இலவசமாக வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. உடலூனமுற்ற சிறுவர்கள் அனைவரும் பள்ளி சென்று வர, இலவசப் பயண அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பெறும். இதுபோன்றே, எட்டாவது வகுப்பு வரை பயிலுகின்ற உடலூனமுற்ற அனைவருக்கும் இலவசமாகப் புத்தகங்கள், நோட்டுகள் வழங்குவது எனக் கருதப்பட்டுள்ளது.

5. குழந்தைகளுக்கான திரைப்படங்கள் தயாரிக்கப் பெற்று, அவை மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்து ஊர்களிலும் திரையிடப்படும். சென்னை மாநகரிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் சிறுவர்களுக்கான நூலகங்கள் ஏற்படுத்தப்பெறும்.

நமக்குப் போதுமான நிதி வசதி கிட்டினுலொழிய குழந்தைகள் நலனுக்கான ஆக்கபூர்வமான திட்டங்களைத் தொடங்குவது என்பது இயலாது என்பதை அனைவரும் அறிவோம். இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசின் சமூக நல அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு கருத்தை வேண்டுகோளாக எடுத்துரைக்க விரும்புகிறேன். வங்க தேச விடுதலைப் போர் நிகழ்ந்தபோது அங்கிருந்து குடிபெயர்ந்து வந்த அகதிகள் புது வாழ்வுக்காக அறிமுகப்படுத்தப்பட்டதைப் போல சிறப்பு அஞ்சல் தலை ஒன்று வெளியிடப்படலாம். இந்த அஞ்சல் தலையை மக்கள் அனைவரும் தாங்கள் சாதாரணமாக அனுப்புகின்ற அஞ்சலுடன் கட்டாயமாக வாங்கிக் கூடுதலாக ஒட்டி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளலாம். இந்த வகையில் திரட்டுகின்ற நிதியை, குழந்தைகளின் நலனுக்காகப் பயன்படுத்தலாம். அனைத்து நாடுகள் குழந்தைகள் ஆண்டினைக் கொண்டாடும் வகையில் குழந்தைகள் நலன் குறித்த சில சிறப்புத் திட்டங்களை இந்திய அரசு தொடங்க வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன். மாநில அரசுகள் தத்தம் திட்டங்களைத் துவக்குவதற்குப் பெரிதும் இது தூண்டுகோலாக அமையும்.

அனைத்து நாடுகள் குழந்தைகள் ஆண்டினைக் கொண்டாடுகையில், சிறுவர்களில் குறிப்பிட்ட பகுதியினரை, அதாவது உடல் ஊனமுற்ரோரின் நலன் குறித்து நாம் முழு நாட்டம் செலுத்துவது மிகவும் அவசியமாகும் என்று நான் உறுதியாகக் கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் உடல் ஊனமுற்ரோர்களின் நலன் கருதி நாங்கள் சில திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறோம். அவையாவன : வறியவராக உள்ள முடமானவர்கள் ஐநூறு பேர்களுக்கு ஆண்டுதோறும் மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. காது கேளாதவர்களாக உள்ள பள்ளி செல்லும் சிறுர்கள் 200 பேர்களுக்கு காது கேட்பதற்குத் துணைபுரியும் கருவிகள் வழங்கப்படுகின்றன. இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டு ஊனமுற்ற குழந்தைகளுக்கு காலிபர்கள் (Calipers) எனப்படும் ஊன்றுகோல் இணைத்த பூட்சுகளை இலவசமாக வழங்கும் திட்டம் ஒன்றை இந்த

வாசகர்களுக்கு....!

'தமிழரசு' 1.10.78 இதழில் பக்கம் 6ல் வெளியிடப் பட்டுள்ள 'தன்மான இயக்கத் தந்தைக்குத் தமிழக அரசு எடுத்த விழா' என்னும் கட்டுரையில்,

திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் (பெரியாரும் கலையுலகப் புரட்சியும்) என்பதற்குப் பதிலாக 'பெரியாரும் போராட்டங்களும்' எனத் தவறுதலாகக் குறிப்பிட்டுள்ளதற்காகவும், 'பெரியாரும் போராட்டங்களும்' என்ற தலைப்பில் உரையாற்றிய திரு. திருவாரூர் தங்கராசு அவர்களின் பெயர் விடுபட்டுப் போனதற்காகவும் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆண்டில்தான் முதன் முதலாக நாங்கள் தொடங்கியுள்ளோம். மேலும், விழிப் புலன் இழந்த மகளிருக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பாதுகாப்பான பட்டறை (Sheltered Workshop) ஒன்றை அண்மையில் தொடங்கியுள்ளோம். இந்தப் பட்டறையில் முதலில் அவர்களுக்கு நெசவு நெய்தல், சாக்குக் கட்டிகள் (Chalk) தயாரித்தல் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படும். பின்னர் அவர்கள் இந்தப் பட்டறைகளிலே ஊதியம் பெறும் தொழிலாளிகளாக வேலைக்கு அமர்த்தப்படுவர். பார்வையற்றவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க இந் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வட்டார அடிப்படைகளில் இத்தகைய பாதுகாப்பான பட்டறைகளை மத்திய அரசு பெரிய அளவில் நிறுவ வேண்டும்.

பார்வையற்ரோர் மறுவாழ்வு நமது சிறப்பு கவனத்தைப் பெற வேண்டும். சென்னையில் மிகவும் பிரபலமான செயின்ட் லூயி நிறுவனம் எனப்படுகின்ற தொண்டு நிறுவனத்தின் பார்வையிழந்த மாணவர்கள் நடத்தும் "வாத்தியக் குழு" ஒன்றுள்ளது. இந்த மாணவர்கள் வணிக அடிப்படையில் அவ்வப்போது இசை விருந்து அளித்து வருகின்றனர். இத்தகைய தகுந்த துறைகளில் குறிப்பாக பார்வையற்ரோருக்குச் சிறப்புப் பயிற்சி வசதிகள் அளிக்கப்பட வேண்டும். புத்தி சுவாதீனம் இல்லாதவருக்கு இரண்டு அல்லது மூன்று நிறுவனங்கள் வட்டார அடிப்படையில் அமைக்கப்பட்டு ஒவ்வொரு நிறுவனத்திலும் குறைந்தது 500 சிறுவர்களுக்குப் பயிற்சி ஆராய்ச்சி வசதிகள் அளிக்கப்பட வேண்டும் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகளில் அவர்களை வேலை பயில்பவராக நியமிக்கலாம் என்றும் அதற்குரிய பயிற்சி உதவிப் பணம் குறித்த செலவை அரசு முழுவதும் முதலாண்டில் ஏற்கும். அடுத்த ஆண்டில் பாதி அளவில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒன்பதாவது வகுப்புகளுக்கு மேல் பயிலுகின்ற உடலூனமுற்ற மாணவர்களுக்குப் போதிய படிப்புதவித் தொகைகளை வழங்குகின்ற திட்டம கடந்த ஆண்டிலிருந்து பரவலாக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் நடப்பு ஆண்டுக்காக இத்திட்டத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகையை இந்திய அரசு இன்னும் கொடுக்கவில்லை. இதனுல் மாணவர்களுக்குக் கணிசமான அளவு இடையூறு விளைந்துள்ளது. இததொகை உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் சமூக நல வாரியமும், சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகமும் ஒருங்கிணைந்த முறையில் பணியாற்றுகின்றன. சமூக நலத் துறை இயக்குநரே இவ் வாரியத்தின் உறுப்பினர்—செயலாளராகவும் உள்ளார். களப்பணியில் மத்திய சமூக நல வாரியத்தின் மேற்பார்வை அதிகாரிகளுக்கும் மாவட்ட சமூக நல அதிகாரிகளுக்கும் இடையே நெருக்கமான உறவும் ஒத்துழைப்பும் நிலவுகிறது. இதன் மூலம், தொலைவில் அமைந்துள்ள கிராமப் பகுதிகளிலும் மாநில சமூகநல வாரியத் திட்டங்களை மிகத் திறம்படச் செயற்படுத்தப்பட முடிகிறது.

நடப்பு ஆண்டில் கிராமப் பகுதிகளில் பணிபுரிந்து வருகிற தொண்டு நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கு மாநில அரசு ரூ. 1 லட்சம் அளித்துள்ளது. மொத்தத்தில், தமிழ்நாட்டில் இந்த ஏற்பாடுகள் யாவும் மன நிறைவு அளிக்கிற முறையில் நடைபெற்று வருகின்றன.

சமூக நலன் குறித்த மிகவும் சிறப்புமிக்க திட்டம பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அதாவது, தமிழக அரசு நிறைவேற்றி வரும் மது விலக்குத் திட்டமாகும் இத்திட்டம் (குஜராத் மாநிலத்துடன்) தமிழ்நாடு மாநிலத்தை இந்நாட்டிலேயே, முற்றிலும் வேருக — பெருமைப்படத்தக்க இடத்தில் வைத்துள்ளது. இதனுல், இம்மாநிலத்தின் வருவாய் சுமார் 100 கோடி அளவில் பாதிக்கப் பட்டுள்ளபோதிலும், நாம் இக்கொள்கையினின்றும் சிறிதும் பிறழவில்லை. ஏனெனில் சமுதாயத்தில் மிகவும் நலிந்த பிரிவினரின் பொருளாதார சமூக நல வளர்ச்சிக்கான தனித்ததோர் திட்டமாக விளங்குவதால் மது விலக்குத் திட்டம், தனிச் சிறப்பு மிக்க திட்டமாக விளங்குவதோடு மட்டுமல்லாமல், எல்லா வகை நலன்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாகச் சமுதாயத்தில் மிகக் குறைந்த வருமானம் உடைய மிக எளியவராய் உள்ள எளியவருக்கு 400 முதல் 500 கோடி பெறுமான வாங்கும் சக்தியினை அளித்துள்ளோம்.

இவ்வாறு அளிக்காவிடின், இந்த வாங்கும் சக்தி மதுவினை வாங்குவதற்காகவே செலவிடப் பட்டிருக்கும். ஆனுல், இபபோது உணவு, உடை போன்ற இன்றியமையாத் தேவைகளைப் பெறுவதற்கு மட்டுமே பயன்படுத்தப் படுகிறது. இவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கு இது நேரடித் தொடர்புள்ளதாகும். ஒரு குடும்பத்தில் பொருளீட்டுபவர் ஈட்டியசொற்ப வருமானத்தை மது குடிப்பதிலே செலவிட்டுவிட்டுத் திரும்புகையில், அந்தக் குடும்பத்திலுள்ள பெண்களும் குழந்தைகளுமே மிகவும் தாங்கொணுத் துயரடைகின்றனர். நூறு கோடி ரூபாய் வருவாயை நாம் விட்டுக்கொடுத்தாலும், ஏழையரின் இல்லத்தில் நிம்மதியை ஏற்படுத்தியுள்ளோம். பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் வாழ்க்கையில் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். இந்த வருவாய் இழப்பின் காரணமாக, தமிழ்நாடு ஒன்றும் சீர்குலைந்து விடவில்லை. மேலும் முக்கியமான வளர்ச்சித் திட்டங்களையும் கைவிடவில்லை. நிதி வகையில் மிகவும் இக்கட்டான நிதி நிலைமைக்கு உள்ளாறுலும் கூட தமிழகத்தில் இலட்சக் கணக்கான ஏழைக்குடும்பங்களில் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறோம்.

[26-9-'78 அன்று புதுடில்லியில் நடைபெற்ற அகில இந்திய சமூக நலத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து.]

தேவர் பேசினுல்....

"பசும்பொன் தேவர் பேசினுல், தமிழ் அன்னையே பேசுவதாக நான் நம்புகிறேன். தேவரின் திருவாயில் அமர்ந்து கொண்டு என் தமிழ் அன்னை பேசுகிருள்" என்று சொல்லித் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் தேவரைக் கட்டித் தழுவிக் கொள்வது உண்டு.

* * * *

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தம்முடைய நிலங்களை எல்லாம், அவற்றைக் குத்தகைக்கு எடுத்துப் பயிரிட்டுக் கொண்டிருந்த விவசாயிகளுக்கே கொடுத்து விட்டார். பசும்பொன் தேவர் மறைந்ததும் திரு. மூக்கையாத் தேவர் தம் தலைவரின் பெயரால், அவர் நினைவாகக் கல்லூரிகளைக் கட்ட முன் வந்தார். அப்போது அந்த விவசாயிகளை அணுகி 'தேவர் நினைவாகக் கல்லூரிகளைத் தொடங்க ஏதாவது உதவி செய்ய இயலுமா?" என்று கேட்டார். அந்த விவசாயிகள் தாங்கள் பெற்றிருந்த நிலங்களை எல்லாம் அவர் ஆரம்பிக்க நினைத்த கல்லூரிக்கே அளித்துவிட முன்வந்தார்கள்.



தூத்துக்குடி அனல்மின் நிலையம்

கே. சொக்கலிங்கம்,
ஐ. ஏ. எஸ்.
தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்.

ஐந்தாவது திட்டக் காலத்தில் தமிழ்நாட்டின் மின்சார 'கிரீட்' (Grid)டில் சேர்க்கப்பட்ட உத்தேசித்திருந்த 925 மெகாவாட் திறன் கொண்ட அமைப்புக் கொள்ளளவில், 420 மெகாவாட் திறன் மத்தியப் பிரிவிலிருந்தும், 455 மெகாவாட் திறன் மாநிலப் பிரிவிலிருந்தும் பெறப்படுபவை ஆகும். மொத்தக் கொள்ளளவின் பெருக்கத்தில் 44 சதவீதம் என்ற அளவில் 210 மெகாவாட் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் முதல் பொறித் தொகுதி அமைந்து, அதற்கேற்ற மின்விசைப் பயனளிக்கக் கூடிய இது மாநிலப் பிரிவைச் சேர்ந்ததாகும்.

இத்திட்டம் முக்கியமாக, தூத்துக்குடித் துறைமுகத்தையொட்டிய நிலப் பகுதியில் வளரும் தொழிற்சாலைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டதானாலும், இது இம்மாநிலப் பகுதியில் குறிப்பாக கோடைக் காலத்தில் பெரியாறு, பாபநாசம், மற்றும் கோதையாறு மின் நிலையங்களின்மின்சார நிலைமையை நிலையாக வைத்துக் கொள்ளவும் உதவும்.

கடந்த காலம் போல் வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் இறக்குமதி செய்யும் வாய்ப்புகளைத் தொடர்வதை இனியும் எண்ணத்திற் கொள்ள இயலாது. தொழிலுற்பத்தியும், வேளாண்மைப் பொருள் உற்பத்தியும் குறையாமல் நிலைக்க நம் மாநிலத்தில் அமையும் மின் திட்டங்களைச் சுற்றியே அவை உள்ளன. ஏற்கெனவே மின்சாரப் பற்றுக் குறை மாநிலமாக அமைந்துள்ளமையால், இத்திட்டத்தை இயல்பாகவே காலதாமதம் இன்றி விரைவுபடுத்தவும் நிறைவேற்றவும் வேண்டியிருக்கிறது.

இந்த அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு மிகவும் பொருத்தமான இடமாகத் தற்போது பல்வேறு துறையினர் செறிந்து புழங்கி வருகின்ற தூத்துக்குடி அமைந்துள்ளது. நகரத்திலிருந்து வெகு தூரத்திற்குத் தள்ளிப் போகாமல் அமைந்த இத்திட்டம் உப்பங்கழிகளும் அமைதியான நீலத் திரை கடலுமாக மனோரம்மியமான பின்னணியுடன் கண்ணைக் கவரும் 122 மீட்டர் உயர புகை போக்கியுடனும், பிரம்மாண்டமான மின்நிலையத்தின் கட்டுமானங்களுடனும் எழுந்து நிற்கிறது.

ஒரு பொறித் தொகுதிக்கு 210 மெகாவாட் திறன் என்ற கொள்ளவில் மூன்று பொறித் தொகுதிகள் கொண்டு இறுதியாக மொத்தம் 630 மெகாவாட் அமைப்புக் கொள்ளளவுடன் அமைந்து, ஆண்டிற்கு 3,300 மில்லியன் யூனிட்டுகளை உற்பத்தி செய்யக் கூடிய இந்திட்டம் ரூ. 211 கோடி செலவில் மதிப்பீடு செய்யப்பட்ட மிகப் பெரிய திட்டமாகும்.

இதற்கான நீராவிக் கொதிகலன்கள் 139 கிலோ கிராம் செ. மீ. 2 என்ற அழுத்தத்தில் 540 டிகிரி சி. வெப்பத்தில் மணிக்கு 700 டன் நீராவியை உற்பத்தி செய்யக்கூடியவையாக திருச்சியிலுள்ள பி.எச்.இ.எல். (BHEL) நிறுவனத்தாரால் தயாரிக்கப்பட்டவையாகும். கொதிகலன் கட்டுமானமானது மொத்தம் சுமார் 9,400 டன் எடையுள்ள சார

உறுப்புகளும், கொதிகலனின் உடற் பகுதியும் (Boiler Drum) பகுமின் வடிகலமும் (Electro Static Precipitator) உள்ளடக்கியதாகும். ஏறத்தாழ இருபதாயிரம் இணைப்புகள் கைதேர்ந்த உலோகப் பூச்சிணைப்பினால் (Welding) இணைக்கப்பட வேண்டியுள்ளது. கொதிகலன் 1ல் கட்டுமானம் சுமார் 80 சதவீதம் நிறைவேறியுள்ளது. நீர்ச் சக்தி சோதனை (Hydraulic Test) யும் ஏற்கெனவே முடிவுற்றிருக்கிறது.

இதற்கான டர்போ-ஜெனரேடர் இணை பி.எச்.இ.எல் நிறுவனத்தாரின் ஹரித்துவார் தொழிற்சாலையிலிருந்து தருவிக்கப்பட்டது. 120 டன் எடையுள்ள கொதிகலனின் உடற்பகுதியும் உருளையான அழுத்தக் கலனும் (Cylindrical pressure vessel) ஆகிய இவ்விரண்டையும் திருச்சியிலிருந்து கொண்டு வருவதற்கும் பெருந்தட இருப்புப் பாதை வழியாக ஹரித்துவாரத்திலிருந்து திருச்சிக்கு வந்து சேர்ந்த 175 டன் எடையுள்ள மின் உற்பத்தி இயந்திரத்தின் அசையா உறுப்பையும் (Stator of the Generator) தூத்துக்குடிக்கு கொண்டு வருவதற்கு சாலை வழியிலான தனித்த சிறப்புப் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியிருந்தது. இதற்கான சென்னை அனுமின் திட்டத்தில் உள்ள 185 டன் சுமைத் திறன் கொண்ட டிராக்டர் டிரெயிலர் வாடகைக்கு வரவழைக்கப்பட்டது. இந்த டிராக்டரில் எடுத்துச் சென்ற கட்டுக் கோப்பின் நீளம் 41 மீட்டரும், அகலம் 4 மீட்டரும் ஆகும். கொதிகலனின் உடற்பகுதியோடு இந்தக் கட்டுக்கோப்பின் உயரம் 5.6 மீட்டர் (18 அடி) ஆகும். இந்த உந்து வண்டி 14 அச்சுருளைகள் கொண்டது. இதற்காக வழியில் அமைந்த பாலங்களையும் சாலைக் கண்மாய்களையும் பலப்படுத்த வேண்டியிருக்கிறது. சுமையினை இடையூறு ஏதுமின்றி எளிதாக எடுத்துச் செல்ல வேண்டி இந்த டிராக்டர்-டிரெயிலருடன் உதவிக்காக ஆட்களும் உபகரணங்களும் கொண்ட உந்து வண்டித் தொகுதி ஒன்று உடன் சென்றது.

மின் நிலையத்தின் மின் உற்பத்திப் பொறியின் அசையா உறுப்பினை (Stator) அதனிடத்தில் சரியாகப் பொருத்த அதனை தூக்க வேண்டி போக்குவரவு வசதி கொண்ட 124 டன் எடையுள்ள மின்சாரத்தால் இயங்கும் இருபது மின்தூக்கிகள் (Cranes) பயன்படுத்தப்பட்டன.

இந்தக் கொதிகலன்களில் பயனபடுத்தத் தேவைப்படும் கரி வங்காளம்-பீகாரைச் சேர்ந்த ராணிகஞ்ச் கரிக் களத்திலிருந்து கொணரப்படுகிறது. அங்கிருந்து கரி, கப்பலில் தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்து சேர்கிறது. துறைமுகத்தில் மணிக்கு இரண்டாயிரம் டன் கரியினை எடுக்க வல்ல இயந்திர மயமாக்கப்பட்ட 'கன்வேயர்' அமைப்பிற்குக் கரி மாற்றப்படுகிறது. இத்திட்டத்தில் அமையவிருக்கும மூன்று மொறித் தொகுதிகளுக்குமாக ஆண்டிற்கு மொத்தம் 1.8 மில்லியன் டன் கரி தேவைப்படுகிறது. இதன் பொருட்டு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 30,000 டி. டபிள்யூ. டி. கப்பல்களைக் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்துள்ளது. தற்போது 'தமிழ்ப் பெரியார்' 'தமிழ் அண்ணா' என்ற கப்பல்களின் மூலம் கரி கொணர்தல் நடந்தேறுகின்றன.

மின் உற்பத்திப் பொறி ஹைட்ரஜன் வாயுவால் குளிர்விக்கப்படுகிறது. மொத்தம் மூன்று மின் உற்பத்திப் பொறிகளுக்கும் மணிக்கு ஒரு இலட்சம் கியூபிக் மீட்டர் என்ற அளவில் குளிர் கலன் (Condenser) களுக்குக் கடலிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இது சென்னையைப் போன்ற பத்து பெரிய நகரங்களின் மக்கட் தொகையின் தண்ணீர்த் தேவைக்குச் சமம் ஆகும்.

குளிர்விக்கக் கடல் நீரைப் பயன்படுத்துதல், பயன்படுத்தும் இருப்புப் பாகங்களின் அரிப்புக்கும், அவற்றில் கடற் தாவரங்கள் வளர்ந்து மண்டுவதற்கும் இடமளித்துப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். இப்பிரச்சினையைத் தீர்க்க, குளிர் கலன்களின் குழாய்களுக்குச் செப்பும், நிக்கலும் (Cupro-Nickel) கலந்த உலோகத்தைப் பயன்படுத்துதலையும், பயன்படுத்தும் எஃகுக் குழாய்களுக்குக் 'கேதோடிக்' பாதுகாப்புச் செய்யப்பட்டு கடல் தாவர வளர்ச்சியைத் தடுக்க வெந்நீர் செலுத்துதலையும் செய்ய வேண்டியுள்ளது.

1.43 எம்ஜிடி என்ற அளவில் கொதிகலனில் பயன்படுத்துவதற்கும் வேறு பல உபயோகத்திற்கும் தேவைப்படும் குடிநீருக்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாரால் தாமிர வருணி நதியிலிருந்து தூத்துக்குடி தொழிற்பேட்டை வரை அமைக்கப்பட்ட குடிநீர்க் குழாய்களிலிருந்து நீர் எடுக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது. அதுமட்டுமின்றி, இத்திட்டக் களம் வரை 600 மிலலி மீட்டர் விட்டமுள்ள குழாய்கள் கொண்ட 7.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு கிளை வழி நீர்க்

குழாய் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாரால் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

எரியும் கரியிலிருந்து கிடைக்கும் தூசிச் சாம்பல் (Fly ash) உலர்ந்த நிலையில் சேகரிக்கப்பட்டு, கட்டட வேலைகளுக்காகச் சிமெண்டில் கலக்கப்பட்டுப் பயன்படுத்தப்படவோ அதனை ஈரஞ் சேர்ந்த சகதி வடிவில் கடலில் கலந்து விடவோ செய்யப்படலாம்.

இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படவிருக்கும் 15.75 கிலோ வோல்ட் மின்சாரம் 3 X 84 மில்லியன் வோல்ட் ஆம்பியர் திறன் கொண்ட தொடர் மின்மாற்றிகளின் (Bank of Transformers) மூலம் 230 கிலோ வோல்ட் மின்விசைக்கு உயர்த்தப்படுகிறது. இந்த மின் நிலயத்திலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளிச்செலுத்த நான்கு 230 கிலோ வோல்ட் மின்வரத்துத் தடங்கள் (Transmission System) படிப்படியாக கட்டுவிக்கப்படுகின்றன. அவைகளில் இரண்டு மதுரையையும், நெய்வேலியையும் இணைக்கும்.

இத்திட்டத்திற்குக் கோட்டா என்ற இடத்திலுள்ள இன்ஸ்ட்ருமென்டேஷன் லிமிடெட் என்னும் பொதுத் துறையைச் சேர்ந்த நிறுவனத்தார் மின்சார அளவுமானிகளும், கட்டுப்படுத்தும் மின்சாரக் கருவிகளும் பெற்றுத் தருகிறார்கள். இதில் சில கருவிகள் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை; சில ருசிய நாட்டினரின் தொழில் நுட்பப்படித் தயாரிக்கப்பட்டவை.

இந்த மின் நிலயத்தில் புள்ளி விவரம் எடுக்கும் அமைப்பினைப் (data acquisition system) பொருத்தி வருகிறோம். அனல் மின் நிலயங்களில் பல்வேறு முக்கியமான விவரங்களைப் பதிவு செய்யவோ எடுத்துக் காட்டவோ இதுபோன்ற கணிதப் பொறி (Computer) பொருத்தப்படுதல் இந்நாட்டிலேயே இதுதான் முதல் முறையாகும்.

ஒப்பந்தக்காரர்களால் வேலைக்கு அமர்த்தப்பட்ட சுமார் 4,000 நபர்களுடன், இங்கு மின்வாரியத்தைச் சேர்ந்த சுமார் 300 பொறியாளர்களும், 250 கணக்காயர்களும் கட்டுப்பாட்டு அலுவலர்களும், 1,250 களப் பணியாளர்களும் இத்திட்டத்தில் வேலை செய்கிறார்கள்.

இங்கு வேலை செய்யும் மின் வாரிய அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் ஹட்கோ அமைப்பின் அடிப்படையில் அமைந்த பலமாடிக் கட்டடங்கள் சுமார் 1,000 குடியிருப்புகளுடன் கூடி 'டுட்டி-தெர்மல் நகர்' (Tuty-Thermal Nagar) என்ற பெயரில் ஒரு புதிய நகரம் எழுந்துள்ளது. இன்னும் பல குடியிருப்புகளும் எழுந்தவண்ணமுள்ளன. இம்மாபெரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மின் வாரியப் பணியாளர்களின் பொருட்டுப் பள்ளிகள், மருத்துவ மனைகள், கடைகள், பொழுதுபோக்கு மன்றங்கள், பேரவைக் கூடம் ஆகிய வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

இதன் முதல் மின் உற்பத்திப் பொறித் தொகுதி 1978ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் செயலாற்றத் துவங்கும். இரண்டாவது பொறித் தொகுதிக்கு 1979ஆம் ஆண்டு ஜூன் மாதமும், மூன்றாவது பொறித் தொகுதிக்கு 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதமும் குறியீடாக வைக்கப்பட்டுள்ளது.

பாராட்டும் வேண்டுகோளும்

'தமிழரசு' 16-9-78 தந்தை பெரியார் நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ் மிக மிகச் சிறப்பான முறையில் வெளிவந்துள்ளது கண்டு தமிழக மக்கள் மகிழ்ந்து பாராட்டுகின்றனர். தந்தை பெரியார் அவர்களின் நீண்ட காலத் தொண்டர்கள் அனைவரும் இவ்விதழைப் பார்த்துப் பார்த்து, படித்துப் படித்துப் பரவசமடைகின்றனர்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு மட்டுமே இதுபோன்று தந்தை பெரியார் புகழை தங்கு தடையின்றி தரணியெங்கும் பரப்ப முடியும் என்ற உண்மையை எல்லோரும் உணரத் தலைப்பட்டு விட்டனர்.

நிற்க, மேற்படி இதழில் தந்தை பெரியாரின் வாழ்க்கைக் குறிப்புகள் என்ற தலைப்பில் 1938ல்

''இரயில்வே நிலயங்களிலுள்ள உணவு விடுதிகளில் 'பிராமணாள்' 'இதராள்' சாப்பிடுமிடம் என்றிருந்த இழிவை ஒழித்தார்.

என்று வெளிவந்துள்ளது. இது 1941ல் (20-3-1941) நடந்தது. 1938ல் அல்ல.

இதற்கு ஆதாரமாகப் பின் கண்ட இரண்டு சான்றுகளையும் தங்கள் பார்வைக்கு அனுப்பியுள்ளேன் :

1. 20-3-1941ல் நான் திருச்சியிலிருந்து அப்போது ஈரோட்டிலிருந்து வெளிவந்த 'விடுதலை'க்கு அனுப்பிய தந்திச் செய்தி (இச் செய்தி 21-3-1941) விடுதலையில் பெரிய தலைப்பில் (Box News) ஆக வெளியிடப்பட்டது. நான் அப்போது திருச்சி சந்திப்பில் இரயில்வேயில் பணியாற்றி வந்தேன்.

2. தந்தை பெரியார் அவர்களின் மேற்படி இழிவு ஒழிப்புப் போராட்டத்திற்குத் துவக்க முதல், நான் ஆற்றிய தொண்டின் காரணமாகப் பெரியார் அவர்கள் என்னைப் பாராட்டி எழுதிய 22-3-1941 தேதி கடிதத்தின் போட்டோ நகல்.

ஆகவே, தாங்கள் அருள் கூர்ந்து தமிழக அரசின் வெளியீடுகளில் வரும் செய்திகள் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவையாதலின் சிறு பிழையும் காலப் போக்கில் பெரிதாகக் கொள்ளப்படும் என அஞ்சுகிறேன்.

ஆகவே, தாங்கள் அருள் கூர்ந்து 'தமிழரசு' அடுத்த இதழில் இதற்கான பிழைத்திருத்தம் வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகளை'த் தொகுத்து வெளியிட்ட திருச்சி, சிந்தனையாளர் கழகச் செயலாளர் திரு வே. ஆனைமுத்து அவர்கள் கவனத்திற்கும் இத்திருத்தம் ஏற்கனவே என்னால் கொண்டுவரப்பட்டு அவரும் இது திருத்தப்பட வேண்டியதே என்பதை ஒப்புக் கொண்டுள்ளார் என்பதை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

—வை. இராமச்சந்திரன்
தலைவர்,
சிந்தனையாளர் பேரவை,
12, பெரியார் நகர்,
மதுரை—625016.

'தமிழரசு இதழில் வெளியிடப்பட்ட தந்தை பெரியாரின் வாழ்க்கைக் குறிப்புகள் திரு. வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்து வெளியிட்ட பெரியார் 'ஈ. வெ. ரா. சிந்தனைகள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும். எனினும் நேர்ந்த இத்தவற்றைச் சுட்டிக் காட்டியமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். தங்கள் கடிதத்தை வெளியிடுவதன் மூலம் அத்திருத்தத்தை வெளியிட்டுள்ளோம். —ஆசிரியர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

பதிவு எண். M. 8676



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.

—பேரறிஞர் அண்ணா

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!



தமிழரசு

மலர் : 9 இதழ் : 10

16—11—1978



முகப்பில்:

துன்பம் சூழ்ந்த நேரத்திலும்.....

1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் நாள்!

சென்னை எண்ணூரில் தாழங்குப்பம் அருகே உள்ள மர்மத் தீவுக்கு உவகையுடன் உல்லாசப் பயணம் சென்றனர் பள்ளி மாணவர்கள்.

ஆனால், அவர்களது உவகை, உல்லாசமெல்லாம் நீடித்து நிற்கவில்லை. அதற்கு மாறாக அவர்கள் உயிரையே குடித்தது!

சென்னை வண்ணாரப்பேட்டை பி.ஏ.கே. பழனிச்சாமி உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த 64 மாணவர்கள் சாரண ஆசிரியருடன் இனிய பயணம் மேற்கொண்டனர்.

அதிகாலை எழுந்து, சீவி முடித்துச் சிங்காரித்து, அன்னை இட்ட அமுதை உண்டு, பெற்றோரிடம் 'போய் வருகிறேன்' என்று உவகை பொங்க உல்லாசப் பயணம் மேற்கொண்ட அந்த இளம் உள்ளங்கள், இரு படகுகளில், படகிற்கு 32 பேர் வீதம் பரவசத்துடன் பாடிச் சென்றனர் மர்மத் தீவு நோக்கி!

ஆனால், அவர்களில் சிலரது உடல்கள் தண்ணீரில் ஆடி வரும் என்று அவர்கள் நினைத்திருப்பார்களா?

இரண்டாவதாகச் சென்ற படகு வழியில் கவிழ, மாணவர்கள் அனைவரும் நீரில் மூழ்கினர். நம் நெஞ்சையெல்லாம் பிழிய வைக்கும் அந்தப் பிஞ்சு உள்ளங்கள்—நாளையத் தலைமுறைகளான அந்த மாணவ மணிகள் மரணமென்னும் கோரப்பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டனர்.

அந்தச் சமயத்தில்—உயிருக்குப் போராடுகின்ற அந்த நேரத்தில்—மலையாக வந்தான் ஒரு வீரச் சிறுவன்! பெயர், அண்ணாமலை!

தம் சக நண்பர்கள் உயிருக்குப் போராடும் காட்சியை அவன் பார்த்துக் கலங்கியிருக்கக்கூடும். நீச்சல் தெரியாதிருந்தும் கூட, தன் உயிரையும், தன் தோழர்களின் உயிரையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் கவிழ்ந்த படகின் ஒரு துடுப்பைப் பற்றிக் கொண்டான்.

அருகே தத்தளித்துக் கொண்டிருந்த மூன்று நண்பர்களும் துடுப்பைப் பற்றிக் கொள்ளத் துணை நின்றான். அவர்களும் பற்றிக் கொண்டார்கள். நீரில் மூழ்காமல் காப்பாற்றப்பட்டார்கள்.

வீரச் சிறுவன் அண்ணாமலையின் இந்த விவேக மிக்க செயலை இப்போது நினைத்தாலும்கூட நம் உடலெல்லாம் புல்லரிக்கிறது!

நேரு பிறந்த நாளான நவம்பர் 14 குழந்தைகள் தினமாகவும் கொண்டாடப்படுகிறதல்லவா? அந்தக் குழந்தைகள் — நாளைய நாயகர்களாக விளங்கப் போகிற இளஞ் செல்வங்கள், சமயோசித அறிவு, துணிவு, துன்பம் சூழ்ந்த நேரத்திலும் போராடிப் பிறரையும் காப்பாற்றும் திறன் இவையெல்லாம் ஒருங்கே பெற்றிருக்க வேண்டும் என்று அமரர் நேரு கனவு கண்டார் அல்லவா?

அந்தக் கனவு நனவாகிற வகையிலே செல்வன் அண்ணாமலையின் வீரச் செயலைப் பாராட்டி உயிர்க் காப்புப் பணிக்கான தமிழக முதல்வரின் விருது—தங்கப் பதக்கத்தினைப் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாள், இராசரத்தினம் ஸ்டேடியத்தில் நடந்த விழாவில், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் மகிழ்ச்சியுடன் வழங்கினார்கள்.

குதூகலமாய்க் கொண்டாடப்படும் இந்தக் குழந்தைகள் நாளில் செல்வன் அண்ணாமலை விருது பெறும் படத்தினைத் "தமிழரசு" முகப்பில் வெளியிட்டுப் பெருமிதம் கொள்கிறது.

எங்கிருந்தாலும் என் சிந்தை முழுவதும் செந்தமிழ் நாட்டில்தான்!

வெளிநாடு செல்லும் முன் முதல்வர் விடுத்த செய்தி

அமெரிக்க அரசு விடுத்த அன்பழைப்பினை ஏற்று, உங்கள் அனைவரின் நல்வாழ்த்துக்களோடு அமெரிக்கா, மெக்ஸிகோ, பிரிட்டன், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு என்னுடைய ஐந்து வாரப் பயணத்தை மேற்கொள்ளுகிறேன். இதற்கு முன்னரும் நான் ஆசிய ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு சுற்றுப் பயணம் சென்றிருக்கிறேன் என்றாலும் இம்முறை நான் மேற்கொள்ளும் பயணத்தைத் தனிச் சிறப்புடையதாகக் கருதுகிறேன். இப்போது நான் தமிழக மக்களின் பிரதிநிதியாக இந்த நாடுகளுக்குச் செல்லுகிறேன் என்பதை எனக்குக் கிடைத்துள்ள அரிய நல்வாய்ப்பாகக் கருதுகிறேன்.

அமெரிக்காவிலும் நான் செல்ல இருக்கின்ற இதர நாடுகளிலும் எவ்வாறு வாழ்க்கையில் மக்கள் முன்னேற்றம் பெற்றிருக்கிறார்கள் தொழில் வளர்ச்சி எந்தெந்த வகையிலெல்லாம் ஏற்பட்டிருக்கிறது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அங்குள்ள அரசுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் ஆகியவற்றை நான் நேரடியாக அறிந்து கொள்வதற்கும், அறிந்தவற்றை நம்முடைய மக்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதற்கும் என்னுடைய இந்தப் பயணம் சிறந்த வாய்ப்பாக அமையுமென்று நம்புகிறேன்.

ஐந்து வாரங்கள் தமிழக மக்களோடு நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போகிறதே என்கிற ஏக்கம்-மனக்குறை எனக்கு இருந்தாலும் வெளிநாடுகளில் நான் பெறும் அனுபவத்தை, மக்களுக்கு பயன்படுத்தும் வாய்ப்புக் கிடைக்கிறதே என்கிற எண்ணத்துடன், ஏக்கத்தைப் போக்கிக் கொண்டு, உங்களின் சக்தி நிறைந்த நல்வாழ்த்துகளோடு என்னுடைய பயணத்தை மேற்கொள்ள முடிவு செய்தேன்.....

ஐந்து வாரங்கள் தமிழகத்திலே நான் இல்லாமல் போனாலும் என்னுடைய அன்புக்கும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்கும் உரிய என்னுடைய உடன்பிறப்புக்களைக் கொண்ட அமைச்சரவையும், கடமை தவருமல் பணிபுரிகின்ற அனுபவமிக்க அதிகாரிகளும் நாட்டு மக்களின் கடமைகளை செவ்வனே நிறைவேற்ற இருக்கிறார்கள். தமிழக மக்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் அரசுப் பணிகளும் மக்கள் முன்னேற்றப் பணிகளும் தொடர்ந்து சீரோடும் சிறப்போடும் நடைபெற அரசுக்கு முழு ஒத்துழைப்பினையும் அளிப்பார்கள் என்பதிலும் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

அக்டோபர் மாதம் 23-ல் ஹார்த்தால், கடை அடைப்பு நிகழ்ச்சிகள் தொடர்பாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள் நேற்றைய தினம் தலைமைச் செயலகத்தில் என்னைச் சந்தித்து சுமார் 90 நிமிடங்கள் என்னுடன் பேச்சு நடத்தினார்கள். மனம்விட்டுப் பேசி, கசப்புணர்ச்சியின்றி கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். 'பந்த்' போன்றவைகள் நடப்பதன் விளைவாக தவிர்க்க முடியாமல் வன்முறைச் செயல்கள் நிகழ்ந்து விடுகின்றன என்கிற கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டோம். பொதுவாக வேலைநிறுத்தம், கடை அடைப்பு, ஏனைய கிளர்ச்சிகள் நடைபெறும்போது வன்முறைச் செயல்கள்-பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல் போன்ற கொஞ்சமும் இடமளித்தல் கூடாது என்கிற என்னுடைய கருத்தினை, என்னைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர்களிடம் வலியுறுத்திக் கூறினேன். அதனை எதிர்க்கட்சித் தலைவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும் ஒப்புக் கொண்டார்கள்.

என்றாலும், இதுபோன்ற ஹார்த்தால்கள், கிளர்ச்சிகள் நடைபெறும்போது பொதுத் தன்மையில் கைது செய்யப்படுகிறவர்களை விடுவிக்கும் பழக்கம் ஏற்கெனவே தொடர்ந்து இருந்து வருவதை அவர்கள் எடுத்துக் கூறி, அது போலவே இப்போதும் கைதானவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். கிளர்ச்சியில் ஈடுபட்டு, பொதுவாகக் கைதானவர்களிடம் பரிவுடன் நடந்து கொள்ள அரசு தயாராக இருப்பதை நான் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் பாதுகாப்பு நடவடிக்கையாகவும் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதில் அரசுக்குச் சங்கடம் எதுவும் இருக்காது என்பதை எடுத்துக்கூறிய நான், வன்முறையில் நேரடியாக ஈடுபட்டவர்களையும் வன்முறைக்கும், கலவரத்திற்கும் திட்டமிட்டு தூண்டியவர்களையும் விடுவிப்பதில் அரசுக்குள்ள சங்கடத்தை எடுத்துச் சொன்னபோது, அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். கிளர்ச்சி சம்பந்தமாகக் கைதானவர்கள் விஷயத்தில் அரசு நிச்சயம் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ளும் என்றும், அதே சமயம் வன்முறையில் ஈடுபட்டவர்களையும், வன்முறைக்குத் தூண்டியவர்களையும் சட்டத்தின் தீர்ப்புக்கு விடுவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை என்ற அரசின் முடிவு நியாயமானது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மற்றபடி தொழிலாளர் நலன், அவர்களின் முன்னேற்றம், தொழிற் சங்க உரிமை ஆகியவற்றைப் பேணிக் காப்பதில் தமிழக அரசு தூய உணர்வுடன் அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும் என்று நான் உறுதி அளிக்கிறேன். ஆனால், அதே நேரத்தில் எந்தக் காரணத்திற்காகவும், தொழிற்சாலைகள் மூடப்படாமல், தொழில் வளர்ச்சி தடைப்படாமல் தொழில் அமைதி கெடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு இருக்கிறது என்பதை எல்லோரும், குறிப்பாகத் தொழிற்சங்கத் தலைவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இதில் நிர்வாகிகள், தொழிலாளிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகிய மூன்று தரப்பினருக்கும் பொறுப்புண்டு. சம்பந்தப்பட்ட அனைவரும், பிரச்சினை எதுவானாலும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். தொழிலாளர்கள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை நிர்வாகிகளுடன் பேசி சுமுகமான தீர்வு காண அரசும், அதிகாரிகளும் முழு ஒத்துழைப்பினையும் தருவார்கள் என்பதனையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே அனைத்துக் கட்சித் தலைவர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும், அரசு அலுவலர்களும் ஏனைய பல்வேறு துறையினரும், தொழில் அதிபர்களும், அனைவரும் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் அளித்து தமிழகத்தின் நலன்கருதி அமைதிகாக்கத் துணை நிற்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஐந்து வாரங்கள் நான் வெளிநாடுகளில் இருந்தாலும் என்னுடைய சிந்தனை முழுவதும் தமிழகத்தைச் சுற்றியேதான் இருக்கும் என்பதை நான் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. எனது இந்தப் பயணத்தை தமிழக மக்களின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை தீட்டுவதற்கான ஆக்கப் பயணமாக எண்ணி மேற்கொள்கிறேன். தமிழக மக்களின் ஒன்றுபட்ட ஆதரவையும், இதயபூர்வமான நல்வாழ்த்துக்களையும் என்னோடு துணையாகக் கொண்டு பயணம் புறப்படுகிறேன். தமிழக அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பினைத் தந்து, அமைதி காத்து, ஆக்கப் பணிகளில் ஈடுபட அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்க அண்ணாவின் நாமம்.

(31-10-1978).

கூட்டுப் பண்ணையால் கோடி நன்மை!

நம் நாட்டில் விவசாயிகள் மிகச் சிறியதான துண்டு நிலங்களை உடைமையாகப் பெற்றுப் பயிரிட்டு வருகிறார்கள். இக் காரணத்தால் விஞ்ஞான ரீதியில் எந்திரங்களைக் கொண்டு பரந்த அளவில் உழுதல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் முதலியவற்றைச் செய்வதில் பல சிரமங்கள் இருக்கின்றன.

பெரிய நிலப்பரப்பில் விவசாயம் நடத்துவதன் நன்மைகளை விவசாயிகள் அறிந்து கூட்டு விவசாய முறைக்கு ஒத்துழைத்தால் நாம் உற்பத்தியில் எதிர் காலத்தில் பெரிய முன்னேற்றம் உண்டாக்கிவிட முடியும். கூட்டுறவு முறையில் ஒத்துழைப்பாகப் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்குவது என்பது இன்னும் நம் நாட்டில் ஏற்படவில்லை.

ஒருங்கிணைந்த ரீதியில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல், ஒருங்கிணைந்த முறையில் நிலத்துக்குச் சத்தூட்டுதல், அறுவடைக்குப் பிந்திய நடவடிக்கைகளைத் தொழில் நுட்பத் திறனோடு ஒருங்கிணைந்த முறையில் செய்தல் முதலியவற்றையெல்லாம் விவசாயிகள் கூட்டு முயற்சியாக மேற்கொள்ளலாம். தீவிர விவசாயத்தின் வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்வதற்கும் சிறிய விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற தொழில் தடைகளைக் குறைப்பதற்கும் கூட்டுறவு முறை விவசாயம் மிகவும் பயன்படும்.

மேற்கூறிய முறைகளை இயன்ற வரையில் கடைப்பிடித்து நாட்டின் உற்பத்தியும், உற்பத்தித் திறனும், நிலவளமும், பொது நலமும் உயர யாவரும் ஒத்துழைப்பது விவசாயத்தில் வளர்ந்து வரும் எதிர் காலத்தின் இன்றியமையாத தேவையாகும்.

— டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்

கிராம வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு

—மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

திரு கே. ஏ. கிருஷ்ணசாமி

மக்கள் தொகையில் சுமார் 70 சதவீதம் கிராமவாசிகளாய் இருக்கும்போது, கிராமப் பொருளாதார வளர்ச்சியின்றி தேசியப் பொருளாதாரம் வளர்ச்சி பெற முடியாது என்பது வெளிப்படை. தற்போதுள்ள கிராம அமைப்பில் பெருத்த மாறுதலின்றி, கிராம மூலப் பொருள்களையும், வேலையின்றி இருப்பவர்களையும் முழுமையாகப் பயன்படுத்தி கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே கிராம வளர்ச்சியின் நோக்கமாகும்.

உழவுத் தொழில் நவீன மயமாக்கப்பட வேண்டும்; அதன் துணைத் தொழில்களான பால் பண்ணை, ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்றவை வளர்ச்சியடைய வேண்டும். அதே போல சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இவற்றின் ஒட்டு மொத்தமான விளைவாக வேலையின்மை, குறைந்த வேலை வாய்ப்பு ஆகியவை குறைவதுடன், நிலத்திலிருந்தும், இதர வகையிலும் வரும் வருமானம் பெருக வேண்டும்.

உழவுத் தொழில் நமது ஆதாரத் தொழிலாகும். தேசிய வருவாயில் 50 சத வீதம் பங்கு அளிக்கும் தாய்த் தொழில் இது. இத் தொழிலில் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டுதான் திருவள்ளுவர்

''சுழன்றும் ஏர்ப்பின்னது
உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை''

என்று கூறியுள்ளார்.

உழவுத் தொழில் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அதுதான் மிக முக்கியமான தொழில்; உலகமே இதை நம்பியுள்ளது. உணவுடன் இதர தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களையும் உழவுத் தொழிலே உற்பத்தி செய்கிறது. உழவுத் தொழிலை நம்பியே பொருளாதாரத்தின் இதர துறைகள் இயங்கி வருவதால், உழவுத் தொழிலே உலகத்தின் அச்சாணி என்று திருவள்ளுவர் அழகாகக் கூறியுள்ளார்.

''உழுவார் உலகத்தார்க்கு
ஆணி; அஃ்து ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து''

நீர்ப்பாசன வசதிப் பெருக்கம், மின் உற்பத்திப் பெருக்கம் போன்ற வேளாண்மை வளர்ச்சிப் பணிகளுக்குப் பெரும் அளவில் அரசு முதலீடு செய்திருந்தும் சாகுபடி முறையில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டிருந்தும், பெரும்பாலான உழவர்களுக்கு வேளாண்மைத் தொழில் வாழும் ஒரு முறையாக உள்ளதே அல்லாமல், மற்ற தொழில்களைப் போல இலாபமளிக்கும் தொழிலாக இல்லை.

வேளாண்மை ஒரு தொழிலாகச் செயல்பட வேண்டுமானால், விவசாயிகளுக்குக் கடன், ஏனைய இடுபொருள்கள் ஆகியவை போதுமான அளவிலும் உரிய காலத்திலும் கிடைக்கச் செய்வதுடன், நவீன வேளாண்மை முறைகளையும் எல்லாரும் மேற்கொள்ளவும் செய்ய வேண்டும். வேளாண்மை போதுமான அளவிற்கு வளர்ச்சி பெற்றாலும் கூட, அதனைச் சார்ந்த தொழில்களான பால் பண்ணை, ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்றவை மூலமும் மற்றும் அந்தந்தப் பகுதிக்கு ஏற்ற சிறு தொழில், குடிசைத் தொழில்கள் மூலமும் அவர்களுக்குப் பயன் உள்ள வகையில் வேலைவாய்ப்பும் வருவாயும் கிடைக்கச் செய்யாவிட்டால் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் காண இயலாது.

கிராமங்களைத் தொழில் மயமாக்கும் நோக்கத்துடன் நாட்டிலுள்ள 460 மாவட்டங்களிலும், மாவட்டத் தொழில் மையங்களை ஏற்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

அண்மையில், தமிழ்நாட்டில் சேலம், தருமபுரி, செங்கல்பட்டு, தென்னார்க்காடு, புதுக்கோட்டை, இராமனாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டு இறுதிக்குள் மீதமுள்ள 7 மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. தொழில்களைப் பதிவு செய்தல், தொழில்களுக்கான மூலப் பொருள்களை ஒதுக்குதல் போன்ற அதிகாரங்கள் மாவட்ட தொழில் மையங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியமும் இம்மையங்களுக்கு ஒத்துழைப்பு நல்கும். மாவட்டங்களிலுள்ள வசதிகளைக் கண்டறிய தொழில்நுட்பப்பொருளாதார ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது ; இந்த ஆய்வின் முடிவுகள் முக்கிய வங்கிகளுக்கும், தொழில் நடத்த முன் வருவோருக்கும் தெரியப்படுத்தப்படும்.

இந் நிலையில் கிராம வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு மிக முக்கியமானதாகும்.

சாகுபடிக்காகக் குறுகிய காலக் கடன்களையும், இரசாயன உரம் போன்ற இடு பொருள்களையும் நில மேம்பாட்டிற்கும் துணைத் தொழில்களுக்கும் நீண்ட கால, நடுத்தரக் காலக் கடன்களையும் கூட்டுறவு நிறுவனங்கள் நெடு நாட்களாக அளித்து வருகின்றன.

தொழில் துறையில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி, விற்பனை ஆகியவற்றை இணைத்து அருமையாகப் பணியாற்றி வருகின்றன. வேறு சில சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களுக்கும் இது போன்ற கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. தங்கள் விவகார எல்லையை அண்மையிலுள்ள கிராமங்களுக்

கும் விரிவுபடுத்தி, சமீப ஆண்டுகளில் சிறு தொழில்களுக்குக் கடன் வழங்குவதில் நகர கூட்டுறவு வங்கிகள் கூட ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளன.

1972ஆம் ஆண்டு 'வங்கிக் குழு' (Banking Commission) தெரிவித்தவாறு உள்ளூர் மக்கள் பங்கு கொள்ளுதல், மக்களாட்சி முறையிலான நிர்வாகம், உள்ளூர் தேவைகளையும் உணர்வு பூர்வமான நோக்கங்களையும் நிறைவு செய்தல் ஆகிய கோட்பாடுகளைக் கொண்ட கூட்டுறவு நிறுவனங்களே கிராம வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் பொருத்தமான நிறுவனங்களாகும்.

காலஞ் சென்ற பெரியவர் டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் போன்ற தலை சிறந்த, தன்னலமற்ற கூட்டுறவாளர்களின் சலியாத உழைப்பினுல் தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் வலுவாக வேருன்றி, மேலும் வளர்ந்துள்ளது. தற்போதைய தேவைகளுக்கேற்ப ஒரு சில மாற்றங்கள் செய்யப்படுவதன் மூலம், கிராம வளர்ச்சியின் முக்கியக்கருவியாகக் கூட்டுறவு நிறுவனம் செயல் பட முடியும்.

வேளாண்மைத் துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் பெரும்பங்கு யாவரும் அறிந்த ஒன்று ; எனினும், அவற்றின் சேவையை மேலும் அதிகரிக்கும் தேவை உள்ளது. கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் வேளாண்மை விரிவாக்கப் பணியை மேற்கொள்வதன் மூலம் தொழில் நுட்ப அறிவை விவசாயிகள் உடனுக்குடன் பயன்படுத்துமாறு செய்யலாம். கடன் வழங்கும் முறை மேலும் எளிதாக்கப்பட வேண்டும். 'சுழல் முறைக் கடன்' வசதியைப் புகுத்தலாம் என்று ஒரு யோசனை கூறப்படுகிறது. இதன்படி, ஒவ்வொரு உழவருக்கும் உச்சக் கடன் வரம்பு நிர்ணயிக்கப்பட்டு, அந்த வரம்பிற்குட்பட்டு, தேவையான சமயத்தில், தேவையான தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்; ஒவ்வொரு முறை பணம் பெறும் போதும் கடன் அனுமதிக்காக (Sanc:ion) அவர் காத்திருக்கத் தேவையிலை. தனது விளை பொருள் விற்பனைத்தொகையை அவர் தனது கடன் கணக்கிற்குச் செலுத்துவார். நிலம் மற்றும் இதர சொத்துக்களின் மீது பெறப்படும் உரிமை (Charge) அல்லது ஒரு குழுவாகக் கொடுக்கும் நபர் பொறுப்பு (Group Security) கடனுக்கு ஆதாரமாகக் கொள்ளப்படலாம். உச்ச வரம்பை நிர்ணயம் செய்து அவருக்கு ஒரு 'கடன் அட்டை' வழங்கப்பட வேண்டும். கடன் சுலபமாகக் கிடைப்பது போலவே, அதைச்



திருவள்ளூர் கூட்டுறவு பிரதம நிலவள வங்கியின் டிராக்டர் வழங்கும் விழாவில் (1-11-78) மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் 201-வது டிராக்டரை வழங்கினார். கூட்டுறவுத்துறை அமைச்சரின் பேரவைச் செயலர் திரு ஆனூர் பி. ஜெகதீசன் அவர்கள் தலைமை தாங்கினார்.

சரியாகப் பயன்படுத்தித் திரும்பிச் செலுத்தவும் வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, மேற்கண்ட போசனையை எவ்வளவு தூரம் செயல்படுத்த முடியும் என்பது பற்றியும் ஆராய வேண்டும். கூட்டுறவு நிறுவனங்களுக்கும் இதர கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும் இடையே சரியான ஏற்பாடுகள் இருந்தாலன்றி, பல நிறுவனங்களின் மூலம் கடன் வழங்கும் முறை கிராமக் கடன் முறையிலுள்ள பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும்.

போதுமான அளவில், தேவையான காலத்தில் வழங்கப்பட வேண்டிய கடன் மிக முக்கியமானதாக இருந்தாலும், கடன் மட்டும்தான் எல்லாம் என்று கூறிவிட முடியாது. வேளாண்மை விளைபொருள், தொழில் உற்பத்திப்பொருள்கள் ஆகியவற்றை விற்பனை செய்ய ஏற்பாடு செய்வது, இவற்றின் உற்பத்திக்குக் கடன் வழங்குவதை விட மிக முக்கியமாகும். கதர் மற்றும் கைத்தறித் துணியைப் பொறுத்தவரை இவற்றை உற்பத்தி செய்தவரே விற்பனை செய்ய வேண்டும் என்ற நிலைமை இல்லாமல் இருப்பதுபோல் சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வலுவான விற்பனை ஏற்பாடுகள் மிகவும் தேவை.

கிராம வளர்ச்சிக்கு உதவும் வகையில் கூட்டுறவின் பங்கை மேம்படுத்தத் தேவையான ஆக்கப் பூர்வமான யோசனைகளை இக் கருத்தரங்கு முன்வைக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

(7-10-78 அன்று கோவையில் நடைபெற்ற 'கிராம வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு' குறித்து நடைபெற்ற கருத்தரங்கினைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.)

கூட்டுறவு வார விழா

14—11—'78
அனைத்திந்திய கூட்டுறவு நாள்

15—11—'78
உழவர் நாள்

16—11—'78
நுகர்வோர் நாள்

17—11—'78
நலிந்தோர் நல்வாழ்வு நாள்

18—11—'78
குடும்ப நல்வாழ்வு மற்றும் குழந்தைகள் நாள்

19—11—'78
கூட்டுறவுத் திட்ட நாள்

20—11—'78
தன்னாட்சி நாள்

முன்னேற்றப் பாதையில் கிராமங்கள்



நகர்ப்புறங்களில் கிடைக்கும் நல்லா வசதிகளும் கிராமங்களிலும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தைக் கருத்திற் கொண்டு அரசின் திட்டங்கள் யாவும் கிராமங்களையே மையமாகக் கொண்டு தீட்டப்படுகின்றன. ஏற்கெனவே செயல்பட்டுவரும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் பயனாகக் கிராமங்களில் சாலை வசதிகளும், பள்ளிக்கூட வசதிகளும், நீர்ப்பாசன வசதிகள் போன்ற பல முன்னேற்றங்கள் பெருகியுள்ளன. மேலும் மேலும் கிராமங்கள் வளம் பெற வேண்டும், வறுமைக் கோட்டிற்குக் கிழே உழலும் கிராம மக்களும் பயன்பெற வேண்டும், அவர்களின் வாழ்க்கைத் தரம் ஓரளவாவது உயர வேண்டும் என்பது அரசின் தலையாய இலட்சியம். தமிழக அரசு கீழே விவரிக்கப்பட்ட பல்வேறு கிராம முன்னேற்றத் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகிறது.

1978-79 ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அரசின் புதிய திட்டமான 'கிராமத் தன்னிறைவுத் திட்டம்' அறிவிக்கப்பட்டது. ஏழ்மை நிலையில் மூழ்கித் தவிக்கும் கிராமத்தினரும் தன்னிறைவு நிலையடைவதும் சிறிய நகரங்கள் பெற்ற வளர்ச்சியினை சிறிய கிராமங்களும் அடைய வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். கிராமக் கைத்தொழில்களிலும், குளம் குட்டைகளில் மீன் வளர்ப்பதிலும், பண்ணை வளர்ப்பு மண்பாண்டத் தொழில் முன்னேற்றம், தரமான விதைகளைப் பயிரிடுவதிலும் மற்றும் பன்றி, கோழி, ஆடுகள் வளர்ப்பது போன்ற பொருளாதார முன்னேற்றத் தொழில்களில் தாங்களாகவே ஈடுபட்டு ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு முன்னேறும் வழிகளில் கிராம மக்கள் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில் வட்டாரங்களில் ஆற்றும் பணிகள், சாலைகள் அமைத்தல், பராமரித்தல், பள்ளிகள் கட்டுதல், கிணறுகள் வெட்டுதல், விவசாய மேம்பாட்டுக்கு உரிய வழி முறைகள் வகுத்தல், நீர்ப்பாசன வசதிகள் பராமரித்தல், கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராமப் புறத் தொழில்களைத் திட்டமிட்டுச் செய்தல், கடன் வசதிகள் மூலம் ஆடுகள், கறவை மாடுகள், கோழி வளர்த்தல் போன்ற திட்டங்களினுல் ஏழை மக்களின் வறுமையை விரட்டுவது புதிய தன்னிறைவுத் திட்டத்தின் நோக்கம்.

இந்தத் திட்டத்தைச் செயலாக்க இராமனாதபுரம், புதுக்கோட்டை, கோவை, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, கன்னியாகுமரி, செங்கல்பட்டு, மதுரை ஆகிய எட்டு மாவட்டங்களில் மிகவும் பின்தங்கியுள்ள பத்து வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் பத்து கிராமங்களை அரசு தேர்வு செய்துள்ளது. இவ்வட்டாரங்களில் பெறப்படும் அனுபவங்களைக் கொண்டு மற்றுமுள்ள மாவட்டங்களிலும் இதை விரிவு படுத்த வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு கா. காளிமுத்து

வட்டார வளர்ச்சி மற்றும், கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கான வட்டாரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு விட்டன. ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஒப்புதலுக்குப் பின் இத் திட்டம் நடைமுறைக்கு வரும்.

மேற்கூறிய திட்டம் மாநில அரசின் நிதியிலிருந்து செயலாக்கப்படுவது. இது தவிர்த்து, மத்திய அரசின் நிதி உதவியுடன் கீழ்க்கண்ட தனித் திட்டங்களும் (Special Programmes) தமிழகத்தில் செயல்படுகின்றன.

(அ) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்.

(ஆ) வறட்சிப் பகுதித்திட்டம்

(இ) ஒருங்கிணைந்த கிராமப் புற வளர்ச்சித் திட்டம்.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டம், தமிழ்நாட்டில், 167 வட்டாரங்களில் செயல்படுகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும், குறுநில விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் 33.3 சதவீதமும் மானியமாக அளிக்கப்படுகின்றது. இந்த மானியம், நீர்ப்பாசன வசதிகளுக்காகவும், வேளாண் பண்ணைக் கருவிகள் வாங்குவதற்கும், உரமிடுவதற்கும், நிலச்சீர்த்திருத்தம் செய்வதற்கும், கறவை மாடுகள், ஆடுகள் வாங்குவதற்கும், பழ மரங்கள் உற்பத்தி செய்வதற்கும், மீன், பட்டுப் பூச்சி வளர்ப்புக்கும், வரப்புகளில் மரங்கள் நடுவதற்கும், உணவு தானியக் கிடங்குகள் அமைப்பதற்கும், மற்றும் இது போன்ற வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ச்சியைப் பின்னணியாகக் கொண்ட தொழில்களுக்கும் அளிக்கப்படுகின்றது.

இந்த 167 வட்டாரங்களிலும் ரூ. 15.50 கோடிக்குத் திட்டமிடப்பட்டு 31.3.'78 வரை ரூ. 6.50 கோடி மட்டுமே செலவு செய்ய

பட்டுள்ளது. இன்னும் ரூ. 9 கோடி செலவு செய்யப்பட வேண்டும். இந்தத் திட்டம் நடப்பு ஆண்டுடன் (1978-79) முடிவு பெறும் என்பதால் எஞ்சியுள்ள பணம் இந்த நிதியாண்டு இறுதிக்குள் செலவு செய்யப்பட வேண்டும். இதற்கான வழி முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வறட்சிப் பகுதித் திட்டம் :

இத்திட்டம் இராமனாதபுரம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. இதற்காக 1977-78ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவு செய்யப்பட்டு விட்டது. நடப்பு ஆண்டில் இராமனாதபுரம் மாவட்டத்துக்கு ரூ. 1.38 கோடியிலும் தர்மபுரி மாவட்டத்துக்கு ரூ. 26கோடியிலும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலும் பெறப்பட்டுச் செயல்படுத்தும் நிலையிலுள்ளன.

ஒருங்கிணைந்த கிராமப் புற வளர்ச்சித் திட்டம் :

இது மத்திய அரசின் புதிய திட்டம். நடப்பு ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட வேண்டியது ஆகும். இந்திட்டத்திற்கு முதல் கட்டமாக 130 வட்டாரங்களையும், இரண்டாவது கட்டமாக 31 வட்டாரங்களையும் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. இவற்றில் 100 வட்டாரங்களைச் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் பகுதிகளிலிருந்தும், 30 வட்டாரங்களை வறட்சிப் பகுதித் திட்டம் செயல்படும் பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது தவணையாக ஒதுக்கப்பட்டுள்ள 31 வட்டாரங்களை மேற்சொன்ன எந்தத் தனித் திட்டமும் செயல்படாத பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முதல் தவணையாக ஒதுக்கப்பட்ட 130 வட்டாரங்களிலும், வட்டாரம் ஒன்றுக்கு ரூ. 5 இலட்சம் வீதமும், மற்ற 31 வட்டாரத்திற்கு ரூ. 2 இலட்சம் வீதமும் நடப்பு ஆண்டில் செலவு செய்யப்பட வேண்டும். இரண்டாம் தவணையாக ஒதுக்கப்பட்டுள்ள வட்டாரங்களுக்கு மாநில அரசின் பங்குத் தொகை தேவையில்லை. முதல் தவணை வட்டாரங்களுக்கு மட்டும் மொத்தம் ரூ. 30 இலட்சம் மாநில அரசின் பங்குத் தொகை தேவை. ஆக 161 வட்டாரங்களிலும் நடப்பு ஆண்டில் (1978-79) ரூ. 7.12 கோடி மானியமாகச் செலவிடப்பட வேண்டும். முதலிரண்டு திட்டங்களைப் போன்றே இந்திட்டமும் சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றியும் வேலை வாய்ப்புப் பெறும் வசதியைப் பற்றியும் பின்னணியாகக் கொண்டது.

மேற்கூறிய மூவகைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் போதிய முன்னேற்றங்கள் இல்லை. ஒதுக்கப்பட்ட தொகை பெரும் பகுதி செலவு செய்யப்படாமல் தேங்கியுள்ளது. ஆகவே, இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும் முழுப் பொறுப்பும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கண்காணிப்பில் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் அவர்களின் கீழ் உள்ள ஊர்நல அலுவலர்களுக்கும், இதர அலுவலர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

ஊர்நல அலுவலர்களுக்கும், இதர திட்ட அலுவலர்கட்கும் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள் ஆகியவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஆறு மாத காலங்களில் செய்து முடிக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், செலவு செய்யப்படாது தேங்கியுள்ள ரூ. 9கோடி, மானியம் 31-3-79க்குள் செலவு செய்யப்பட வேண்டி இருப்பதால் கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலமாகச் சுமார் ரூ. 50 கோடி கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் வணிக வங்கிகள், கூட்டுறவுத் துறை வங்கிகள் ஆகியவற்றின் அலுவலர்களை அழைத்துப் பேசி அவர்களை இத்திட்டத்தில் முழுப் பங்கு பெறச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள மானியத்தைச் செலவு செய்வதிலும் திட்டத்தின் குறிக்கோள் அளவை நிறைவேற்றுவதிலும் காட்டக்கூடிய அக்கறையை விட, திட்டத்தின் முழுப் பயனும் உண்மையான சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், இவர்களுக்கு கிட்ட வேண்டும் என்பதில் மிகுந்த கவனமும் அக்கறையும் எடுத்துச் செயலாற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். அவர்களின் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில், திட்ட சம்பந்தப்பட்ட எல்லா அலுவலர்களும், குறிப்பாக வளர்ச்சித் துறை அலுவலர்களும் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டுமென நான் வற்புறுத்த விரும்புகிறேன்.



இது வரை இத்திட்டங்கள் வருவாய்த் துறையினராலும், வேளாண்மைத் துறையினராலும் செயல்படுத்தப்பட்டன. கடந்த ஆண்டுகளில் ரூ. 6.50 கோடி அளவுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு, ரூ. 9 கோடியளவில் தேங்கியுள்ளது. இத்தொகை இன்னும் ஆறு மாதக் காலத்திற்குள் எப்படியும் செலவு செய்யப்பட வேண்டும்.

கிராமங்களில் கிராம மக்களோடு ஒருங்கிணைந்து பணியாற்றுபவர்கள் வளர்ச்சித் துறைப் பணியாளர்கள், இதர துறையினரைவிட இப்பணிக்கு இவர்கள் மிகவும் தகுதி உடையவர்கள். கிராம முன்னேற்றப் பணிகளை மிகவும் துரிதமாகவும் செம்மையாகவும் செயல்படுத்த இவர்களால்தான் முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் மேற்படி திட்ட செயலாக்கப் பணியினை முழுவதுமாக வளர்ச்சித் துறைப் பணியாளர்களுக்கு அரசு ஒப்படைத்துள்ளது.

'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?'' என்று அறிஞர் அண்ணா குறிப்பிட்டுள்ளவாறு வளர்ச்சிப் பணியாளர்கள் எதையும் முடிக்க வல்லவர்கள். இதையும் அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டுவார்கள் என்று இத்துறையின் பொறுப்பை ஏற்றுள்ளவன் என்ற முறையில் நான் திடமாக நம்புகிறேன்.

குறித்த காலக் கெடுவுக்குள் எஞ்சியுள்ள — ஒதுக்கப்பட்டுள்ள தொகை முழுவதையும் செலவு செய்து கிராம மக்களின் வாழ்வில் ஒளி கூட்ட, அயராது பணியாற்றுவீர் என்று வேண்டுகிறேன்.



தமிழ் வளர்த்த மாமதுரையில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா!

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா, தமிழ் வளர்த்த மாமதுரையில் மிகச்சிரும் சிறப்புமாக நடந்தது.

தமிழ்நாடு அரசின் சார்பில் அக்டோபர் திங்கள் 21, 22 ஆகிய இரு நாட்களில் மதுரையில் பெரியார் (தமுக்கம்) மைதானத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நடந்தது. அன்று மதுரை நகரே விழாக்கோலம் பூண்டிருந்தது.

21-ந் தேதி மாலை மங்கல இசையுடன் விழா தொடங்கியது. தொடக்கத்தில் வணக்கத்துக்குரிய மதுரை மாநகர் மேயர் திரு எஸ். முத்து அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தீண்டாமையை எதிர்த்தார் பெரியார். 'தீண்டாமை' என்ற வார்த்தையிலுள்ள முதல் எழுத்தையும் (தீ), கடைசி எழுத்தையும் (மை) இணைத்தால் தீமை என்று வருவதைச் சுட்டிக்காட்டி, தீண்டாமை என்றாலே தீமைதான் என்பதை எடுத்துரைத்தார்.

''ஆமையாக இருந்தவர்களை-ஊமையாக இருந்தவர்களை வாய்திறந்து பேச வைத்த பெருமை பெரியாரையே சேரும். 'ஏன்? எப்படி? எங்கே?' என்ற கேள்விகளை எழுப்பும் ஆற்றலை மக்களுக்குக் காட்டியவர் பெரியார்''!

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.

கருத்தரங்கில் பங்கு கொண்டு பல்வேறு தலைப்புகளில் பலர் பேசினார்கள்; மாநிலத் திட்டக்குழுத் துணைத்தலைவர் திரு கோவை செழியன் அவர்கள் (சிந்தனையாளர் பெரியார்), சிறுசேமிப்புத் திட்ட துணைத் தலைவர் திரு எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் (கலையுலகப் புரட்சியாளர்), திருக்குறளார்

வீ. முனுசாமி அவர்கள் (தொண்டிற் சிறந்தவர் பெரியார்), டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் (மொழிப்போர் வீரர் பெரியார்), டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் (தன்மான வீரர் பெரியார்), திரு. ஈரோடு எம். சுப்பய்யா அவர்கள் (அறப்போர் வீரர் பெரியார்), பேராசிரியர் எஸ். ஏ. சையது அப்துல்லா அவர்கள் (புரட்சிப் பேச்சாளர் பெரியார்).

அன்று இரவு கலை நிகழ்ச்சி நடந்தது. சென்னை சைதாப்பேட்டை நரிக்குறவர் பள்ளி மாணவர்களின் நடன நிகழ்ச்சியும், திரு. சி. எஸ் பாண்டியன் குழுவினரின் 'கிந்தனார்' கலை நிகழ்ச்சியும் அனைவரையும் கவர்ந்தன.

22-ந் தேதி காலை மகளிர் அரங்கம் நடந்தது.

திருமதி பா. வளர்மதி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்தார்.

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், தந்தை பெரியாரின் தன்மைகளை எடுத்துரைத்தார்.

தந்தை பெரியாரின் அருமை பெருமைகளை விளக்கிப் பேராசிரியர் திருமதி சாரதா நம்பி ஆரூரன் அவர்கள், பேராசிரியர் திருமதி இளம்பிறை மணிமாறன், அவர்கள், டாக்டர் மீனாட்சி முருகரத்தினம் அவர்கள், திருமதி அருண்மொழி வில்வம் அவர்கள், திருமதி விசயா முத்துவண்ணன் அவர்கள், திருமதி விசாலாட்சி சிவலிங்கம் அவர்கள், திருமதி வி. சகுந்தலா அவர்கள் ஆகியோர் பேசினர்.

பிறகு நடந்த கவியரங்கில் கருத்துமழை பொழிந்தது.

மாண்புமிகு கிராமக் கைத்தொழில்கள் அமைச்சர் திரு கா. இராசாமுகமது அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கவிஞர் புலமைப்பித்தன் எம். எல். சி., அவர்கள் கவியரங்கிற்குத் தலைமை வகித்தார். திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் துவக்க உரை ஆற்றினார்.

கவியரங்கில் கீழ்க்காணும் கவிஞர் பெருமக்கள் பல்வேறு தலைப்புகளில் தம் கவிதைகளைப் பாடினார்கள்:

திரு ஈரோடு தமிழன்பன் அவர்கள், கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவர்கள், கவிஞர் மீ. இராசேந்திரன் அவர்கள், டாக்டர் சக்தி பெருமாள் அவர்கள், கவிஞர் இ. முத்துராமலிங்கம் அவர்கள், திருமதி அரசு மணிமேகலை அவர்கள், கவிஞர் நாஞ்சில் ஆ. அரிது அவர்கள், கவிஞர் மு. சிங்காரவேலன் அவர்கள் ஆகியோர் கருத்துமழை பொழிந்தனர். பிறகு, 'மந்திரமா தந்திரமா?' என்னும் உண்மை விளக்கத் தந்திரக் காட்சியினை திரு கே. பி. சாமிநாதன் அவர்கள் நிகழ்த்திக் காட்டினார்.

அன்று மாலை மதுரை கல்லூரித் திடலிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தில் அலங்கார வண்டிகளுடன், தேசிய மாணவர் படையினர், காவல்துறை பாண்டு வாத்தியக் குழுவினர், ஊர்க்காவல் படையினர் ஆகியோர் அணிவகுத்து வந்தனர். ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் கரகம், சிலம்பம், பம்பை முதலியன பங்கு பெற்றன.

பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் பெரியாரின் கொள்கைகளையும், போராட்டங்களையும் விளக்கும் அலங்கார வண்டிகள் வந்தன. பெரியார் ஈரோடு நகரசபை தலைவராக இருந்தபோது நிறைவேற்றிய குடிநீர்த் திட்டம் பற்றிய காட்சி திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் சார்பில் சித்திரிக்கப்பட்டு இருந்தது.

கதர் இயக்கத்தில் பெரியார், மது ஒழிப்புப் பணியில் பெரியார், வைக்கம் வீரர் பெரியார், தொழிலாளர்களின் தோழர் பெரியார், பெண்ணுரிமைக்காகப் பாடுபட்ட பெரியார், மொழிப் போராட்டத்தில் பெரியார், புரட்சி எழுத்தாளர் பெரியார், அண்ணாவின் அரசை பெரியார் காணிக்கையாகப் பெற்றது ஆகிய காட்சிகள் ஊர்வலத்தில் சிறப்பிடம் பெற்றன.

நத்தம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் கொண்டு வரப்பட்ட ஒரு குதிரை, ஊர்வலத்தில் தாளத்துக்கு ஏற்றபடி நடனம் ஆடிச் சென்றது. அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.

மேலமாசி வீதியும், தெற்கு மாசி வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைக்கப்பட்ட மேடையில் மாண்புமிகு முதல் அமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் நின்று ஊர்வலத்தைப் பார்வையிட்டார்.

ஊர்வலத்தில் 13 அலங்கார வண்டிகள் வந்தன. ஒரு வண்டியில் பழனி நாதசுரக் கல்லூரி மாணவர்கள் இசைமுழங்கிய வண்ணம் இருந்தனர்.

தந்தை பெரியார் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த விழா மேடையில், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 60 திருமணங்களை நடத்தி வைத்தார். அதில் 28 கலப்புத் திருமணங்கள், 32 விதவை மறுவாழ்வுத் திருமணங்கள்.

பிறகு, சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அந்த நிகழ்ச்சிக்கு டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினார்.

கேரள மாநில ஆளுநர் மேதகு திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் தந்தை பெரியார் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், திரு கே. எஸ். அப்துல்வகாப் எம். எல். சி., அவர்கள், காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு ஜி. இராமச்சந்திரன் அவர்கள், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், திரு எஸ். வி. இலட்சுமணன் அவர்கள், திரு. திருவாரூர் தங்கராசு அவர்கள், திரு ப. நெடுமாறன் அவர்கள், திரு ப. உ. சண்முகம் எம். எல். ஏ., அவர்கள் ஆகியோர் தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளையும், சிறப்பியல்புகளையும் விளக்கிக் கூறினார்கள்.

மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், விழா நிறைவுச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

''நாம் போற்றி வணங்கிப் பின்பற்றும் அய்யா அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். அண்ணா-அய்யாவின் கொள்கைகளை இன்றைக்குத் தமிழகத்தில் 80 சதவீதத்தினர் செயல்படுத்தி வருகின்றனர்.''

இறுதியில் திரு கே. பி. ராஜமோகன் குழுவினரின் ''பெரியார் ஒரு சகாப்தம்'' என்னும் நாடகம் நடந்தது.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி. சி. சிரியாக் ஐ. ஏ. எஸ்., அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறைவெய்தியது!

தமிழ்நாட்டு கூட்டுறவு நூற்பு ஆலைகள்

தமிழ்நாட்டிலுள்ள பன்னிரெண்டு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் ஒன்பது ஆலைகள், மொத்தத்திறனை 1.86 இலட்சம் கதிர்களிலிருந்து 3.02 இலட்சம் கதிர்களாக அதிகரிகசும் வண்ணம் ரூ. 12 கோடி மூலதனச் செலவில் விரிவாக்கும் திட்டங்கள் மேற்கொண்டுள்ளன.

இதன் மூலம் ஒவ்வொரு ஆலையிலும் கதிர்களின் எண்ணிக்கை 12,000லிருந்து 25,000 ஆக இரட்டிப்பாக்கப்படுகின்றன. இந்த விரிவாக்கும் திட்டங்களினால் இந்த ஆலைகளின் நூல் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 95.21 இலட்சம் கிலோவிலிருந்து 172.80 இலட்சம் கிலோவாக உயரும்.

மேலும், இவ்வாலைகளின் மொத்த விற்பனை லேவாதேவி ஆண்டொன்றுக்கு ரூ.14.68 கோடியிலிருந்து ரூ.35 கோடியாக உயருவதுடன், கூடுதலாக 1,770 பேருக்கு வேலை வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன. இவர்களில் 1386 பேர் இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து வந்த அகதிகளாவர்.

சேலம், வேலூர், மேலூர், மாயூரம், தாராபுரம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகள் அவற்றின் விரிவாக்கும் திட்டங்களைச் சமீபத்தில் நிறைவேற்றி உள்ளன. எல்லாக் கூட்டுறவு நூற்பு ஆலைகளும் அவற்றின் உற்பத்தியை அதிகரித்து, நல்ல தரமான நூலை அளிப்பதைக் கருத்திற்கொண்டு ரூ.6 கோடி செலவில் அவற்றின் இயந்திரங்களை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றையும் மேற்கொண்டுள்ளன.

நல்ல தரமான கலர் நூலை நியாயமான விலையில் அளிக்கும் நோக்கத்துடன் 1978-79 மற்றும் 1979-80 ஆண்டுகளில் ரூ.96 இலட்சம் மூலதனச் செலவில் தமிழ்நாட்டில் 8 நவீன சாயச்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்குப் பசைபோடப்பட்ட பாவு நூல் கொடுக்க வேண்டுமென்பதற்காக சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை பசை போடும் பகுதி (Sizing Plant) ஒன்றை இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்க உத்தேசித்துள்ளது.

கரூர் அருகிலுள்ள மலைக்கோவிலூரில் அமைந்துள்ள திருச்சி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை அதன் விரிவாக்கத் திட்டத்தை ரூ.1.22 கோடி மூலதனச் செலவில் முடித்துள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷனும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும், தமிழக அரசும் சேர்ந்த இந்த மூலதனத்தை அளித்துள்ளன. இந்த விரிவாக்கும் திட்டத்தால் கூடுதலாக 235 பேருக்கு இந்த ஆலையில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.



▲ 13-11-'78 அன்று அரசினர் தோட்டத்தில் உள்ள செய்தி நிலையத்தில், சிறுவர்க்குதவும் வகையில் குழந்தைகள் நூலகத்தை, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் திறந்து வைத்தார்.

சிறுவர்களுக்கான திரைப்படக் காட்சியை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கி. பொன்னையன் அவர்கள் திறந்து வைத்தார். ▼

சிற்பக் கலை சிறந்தோங்கிட

நமது தமிழகம் கலைகளின் தாயகம். இசைக்கலை, நாட்டியக் கலை, இலக்கியக்கலை, ஓவியக் கலை, சிற்பக்கலை ஆகிய ஐம் பெரும் கலைகளைப் பண்டைத் தமிழக மன்னர்கள் பேணி வளர்த்த வரலாற்றுச் செய்திகளை நாம் அறிவோம்.

பண்டைத் தமிழகத்தின் சிறப்பை, பறைசாற்றிக் கொண்டிருக்கும் திருக்கோயில்களும், அங்குள்ள சிற்பச் செல்வங்களுமே இதற்குத் தகுந்த சான்றுகளாகும்.

இரண்டாயிரமாண்டு வரலாறு கண்ட இச்சிற்பக்கலை சிறந்த தொழில் நுட்பங்களையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்தோங்கியிருந்தது. மன்னர்கள் அரவணைப்பில் வளர்ந்த இச் சிற்பக்கலை அம்மன்னர்களின் ஆதரவு குன்றிய காலத்தில் படிப்படியாக நலியத் தொடங்கியது. உயர்ந்த செல்வாக்குப் பெற்று விளங்கிய சிற்பியர் குடும்பங்கள் தொழிற்துறையிலும் பொருளாதாரத் துறையிலும் நலிவுற்று, ஆதரவற்றிருந்தனர். அத்தகைய குடும்பங்களில் பிறந்த குழந்தைகள் கலைக் கல்வி பெறுவதை விடுத்து, நவீன காலக் கல்வி பெற்று அரசு ஊழியர்களாகவும் வேறு பல அலுவலர்களாகவும் பணியாற்ற முற்பட்டனர்.

அத்தகைய பின்னணிலேதான் பெரும் புகழும், மேன்மையும் பெற்று விளங்கிய நமது சிற்பக் கலை மரபுகளையும், தொழில் நுட்பங்களையும், கலை நுட்பங்களையும் மீண்டும் உயிர்ப்பிக்கும் நோக்கோடு தமிழக அரசு 1957-ஆம் ஆண்டு மாமல்லபுரத்தில் ஒரு சிற்பக்கலை மறுமலர்ச்சிக்கு மாநில அரசு நல்லதோர் அடித்தளம் அமைத்தது எனலாம். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்ச்சியை வழிவழியாக வந்த சிற்பச் சமூகத்ினரும், பொதுமக்களும் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். தங்கள் குழந்தைகளை இப்பயிற்சி நிலையத்திற்கு ஆர்வத்தோடு நம்பிக்கையோடும் அனுப்பி வைத்தார்கள்.

இப்பயிற்சி நிலையத்தைச் செம்மையாக நிறுவிதகுந்தபயிற்சி

எஸ். வையாபுரி

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்

அளிப்பதற்குத் தமிழகத்தில் தலைசிறந்த சிற்பியாக மதிக்கப் பெற்றவரும், பல்வேறு திருக் கோயில்களையும், சிற்பங்களையும் படைத்தவரும், குறிப்பாக கிண்டி காந்தி நினைவு மண்டபத்தை நிர்மாணித்தவருமான சிற்பகலாசாகரம் திரு ம. வைத்தியநாத ஸ்தபதி அவர்களை இப் பயிலகத்தின் தலைவராகத் தமிழக அரசு நியமித்தது.

சிற்பக்கலையிலும், திருக் கோயில் கட்டடக் கலையிலும் நான்காண்டு பயிற்சியளிக்க இப் பயிலகத்தில் அரசு தக்க வசதிகளைச் செய்து கொடுத்திருக் கிறது. 1962-வது ஆண்டில் சுமார் 4 இலட்ச ரூபாய் மதிப்பில் அழகியதொரு கட்டடத்தையும் கட்டி ஆண்டுதோறும் 15 மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு மேலும் வாய்ப்பளித்தது. பயிற்சி பெற வந்த மாணவர்கள் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தமையால், தொடக்கத்தில் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40-லிருந்து ரூ. 55 வரை உதவித்தொகையும் வழங்கி வந்தது. இதனை 10

ஆண்டுகளுக்கு முன்பு மாதம் ஒன்றுக்கு ரூ. 60 ஆக உயர்த்தியும் கொடுத்து மாணவர் துயர் துடைக்கவும் வகை செய்தது. நான்காண்டு பயிற்சி பெற்றுத் தேறிய மாணவர்களுக்கு Certificate of Proficiency நற்சான்றிதழ் வழங்கியது. இத்தகைய நிலை 1957-லிருந்து 1973-ஆம் ஆண்டு வரை நிகழ்ந்தது. இக்காலக் கட்டத்தில், இப்பயிலகத்தை, தமிழக அரசு, தொழில் வணிகத் துறை மூலம் செவ்வனே நடத்தியது.

சுதையால் சிற்பம் இயற்றிடும் மாணவர்.

இப்பயிலகத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் திறமை மிகுந்த சிற்பிகளாக பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகிறார்கள். சிற்பங்கள் செதுக்கும் சிற்பிகளாகவும், கோயில் நிர்மாணம் செய்யும் கட்டடச் சிற்பிகளாகவும், கோயில் சீரமைப்புப் பணிகளில் மேற்பார்வையாளர்களாகவும், தமிழகத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் ஆதரவில் ஸ்தபதிகளாகவும், தமிழக அறநிலையத் துறை ஆதரவின் கீழ் நடைபெறும் திருப்பணிகளில், ஒப்பந்தப் பணியாளர்களாகவும் வேலை செய்து வருகிறார்கள்.

இப்பயிலகத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆந்திர மாநிலத்தில் நல்ல வரவேற்பும் ஆதரவும் இருந்து வருகிறது. ஆந்திர அறநிலையத்துறையின் பொறுப்பான பதவிகளை அவ்வரசு இவர்களுக்கு வழங்கி அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வரசின் மூலமாக அமெரிக்கா சென்று அங்கு நடைபெற்ற நியூயார்க் விநாயகர் கோயிலிலும், பிட்டர்ஸ் பர்க் ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் கோயிலிலும் பிற சிற்பிகளோடு சேர்ந்து பணியாற்றும் அரிய வாய்ப்பையும் பெற்றிருக்கிறார்கள்.

அத்துடன் சொந்தத் துறையில் தொழிற்கூடங்களை அமைத்துக் கொண்டு உள்நாட்டுத் தேவைகளையும், அயல்நாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறார்கள். மற்றும் சிலர் மலேசியா, சிங்கப்பூர், மொரேசியஸ், ஸ்ரீலங்கா ஆகிய அயல்நாடுகளுக்குச் சென்று கோயில் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இப்பயிலகத்தில் தொடர்ந்து பயிற்சி பெற்றுத் தேறிய சிற்பிகளின் வளர்ச்சிக்காக அண்மையில் தமிழக அரசு தொடங்கி முடித்த பூம்புகார் மற்றும் வள்ளுவர் கோட்டப் பணிகளில் சிறப்பான பங்கு ஏற்றுத் தமிழகத்திற்குப் புகழ் தேடித் தந்திருக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் 1960-ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழகத்திலும், ஆந்திர மாநிலத்திலும், மற்றும் பீகார், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம், டெல்லி ஆகிய பிற மாநிலங்களிலும், நடந்தேறிய கோயில் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுப் பெரும்புகழ் ஈட்டியிருக்கிறார்கள். பொருளாதாரத்துறையில் பின்தங்கியிருந்த சிற்பியர் குடும்பங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வறுமையிலிருந்து விடுபட்டு இன்று ஓரளவு செழிப்போடு வாழ்ந்து வருகின்றன.

இச்சிறிய பயிலகம் சிற்பக் கலைத் துறையில் மாபெரும் புரட்சியையே செய்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, கலை மரபுகளைப் போற்றிக் காத்து, கலைத்துறையில் ஒரு மறுமலர்ச்சிக்கான அருஞ்சேவை செய்து வருகின்றது. இங்குப் பணிபுரிந்து வரும் ஆசிரியப் பெருமக்கள் திறமையும், ஆர்வமும் மிக்கவர்கள். சேவை மனப்பான்மை கொண்டவர்கள். மாணவர் தம் முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறைகொண்டவர்கள். புதியன படைக்கும் ஆசையும், ஆற்றல் உடையவர்கள். அதுமட்டுமல்ல; இப்பயிலகத்தை மேலும் விரிவுப் படுத்தி, தமிழகச் சிற்பக்கலையை ஒரு கல்லூரி அளவில் ஓங்கச் செய்து காலத்திற்கேற்ற-தேவைகேற்ற புதிய அம்சங்களை இத்துறையில் புகுத்தி, புதிய வரலாறு படைக்கவும் விரும்புகிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் 1973-ஆம் ஆண்டு இப்பயிலகம் தொழில் வணிகத் துறையிலிருந்து, தொழில் நுட்பக் கல்வி துறைக்கு மாற்றப்பட்டது.

இப்பயிலகத்தின் ஆற்றலைப் புரிந்து கொண்ட தொழில் நுட்பக் கல்வித்துறை அப்பயிலகத்தின் இலட்சியத்தையும், பாடத் திட்டங்களையும், பயிற்சி முறைகளையும் ஆய்ந்து கீழ்க் கண்ட சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறது.

பாடத்திட்டங்களையும், பயிற்சி முறைகளையும் ஆய்ந்து, தகுந்த மாற்றங்களுடன் சீர்திருத்தி, வாரியத் தேர்வுகளையும் (Board of Examination) புகுத்தி, பயிற்சியில் வெற்றியடைந்த மாணாக்கர்களுக்கு Diploma-க்குப் பதிலாக வழங்கப்பட்டு வருகிறது.

இங்குப் பயிற்சி பெற்ற மாணாக்கர்களை அரசுத் துறைகளில் தக்கப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ளலாம் என்று ஆணையிட்டுப் பயிற்சி பெற்ற சிற்பிகளுக்குத் தகுந்த அந்தஸ்தை அளித்திருக்கிறது.

பண்டைக் காலத்தில் பல தரப்பட்ட சிற்பிகள் ஒரே தலைவரின் கீழ் குழுவாகப் பணியாற்றியிருக்கிறார்கள். இதனை இன்று Guild என்று சொல்லுகிறோம். அனைவரும் சேர்ந்து ஒரே மரபைக் காத்து, வளர்த்து ஓரினத்தைச் சார்ந்த-ஒருமைப்பாடுடைய-கலைச் சின்னங்களை இயற்றியிருக்கிறார்கள். சிறிது விரித்துக் கூறின், கல்லாலும், செங்கல்லாலும், சுதையாலும், மரத்தாலும், உலோகத்தாலும், செய்யப்பட்ட சிற்பங்கள் அனைத்தும் ஒரே இலக்கண மரபிலும், ஒரே கலை மரபிலும் இயற்றப் பெற்றிருப்பதைக் காணலாம். பிற்காலத்தில் அக்குழுக்கள் சிதறி வேவ்வேறு விதமான கலைக் கூறுகளைப் பெற்று மரபுகள் வழுவி சில குறைபாடுகளுடன் இக்கலை குன்றி விட்டதாகச் சிற்பிகளும், கலை ஆய்வாளர்களும் கூறுவர். எனவே, அப்பழைய முறையை மீண்டும் புதுப்பிக்கவும், அதன் மூலம் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கவும் இப்பயிலகத்தில் கல், மரம் சுதை, உலோகம், வண்ணம் ஆகிய பொருள்களால் சிற்பங்கள் செய்வதற்கேற்ற தனித் தனிப் பிரிவுகள் (Six Electives) தொடங்கப் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிற்கும் ஆண்டுதோறும் ஐந்து மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மாணவர்களும் தத்தம் விருப்பத்திற்கேற்ற பிரிவைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

இப்பயிற்சி நிலையத்தில் ஏற்கெனவே கற்பிக்கப்பட்டு வந்த கோயிற் கட்டடக் கலை சம்பந்தமான பாடத்திட்டங்களைப் பரிசீலனை செய்து தக்கசீர்திருத்தங்களைப் புகுத்தி, மரபு வழுவாமல் திருக்கோயில்களைக் கட்டுவதற்கும், அதே சமயத்தில் இக்கால விஞ்ஞானத்தால் பெற்ற தொழில் நுட்பங்களையும், கட்டடப் பொருள்களையும் பற்றியச் செய்திகளையும் இவர்களுக்குப் போதித்து, இக்காலத் தேவைகளைப் புரிந்து, சேவை செய்யத் தக்க அறிவையும், ஆற்றலையும் ஏற்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின், பண்டையக் கட்டடக் கலையோடு இன்றைய Civil Engineering கல்வியும் இணைந்து செயல்படுமாறு பயிற்சி திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது.

மாறிவிட்ட இக்காலச் சூழ்நிலையில், பண்டைக் காலச் சிற்பக்கலையும், கட்டடக் கலையும், புதுப்பொலிவுப் பெற்று, மேலும் வளர முடியுமென்று இப்பயிலக ஆசிரியர்கள் நம்புகிறார்கள். நவீன காலக் கட்டடங்களில், தமிழகக் கட்டடக் கலையம்சங்களைத் தேவையான இடங்களில், தேவையான அளவில் சுவையுணர்வோடு புகுத்த முடியும் என்று சொல்லுகிறார்கள். பல இடங்களில் இக்கருத்தைச் செயல்படுத்தியும் வருகிறார்கள். எனவே, அந்த இலட்சியத்தைத் துரிதமாக அடைய இவ்வரசு வழிவகை செய்ய வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். அவர்களது கோரிக்கையைத் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் அறிந்து, இத்துறைக்குப் பட்டப் படிப்பு (Degree programme) கொண்டு வர இயலுமா என்று ஆய்ந்து கொண்டிருக்கிறது.

இப்பயிலகத்தில் மரத்தில், சிற்பங்கள் செய்வதற்குரிய தனிப்பிரிவு ஒன்று இயங்கி வருகிறதல்லவா? இப்பிரிவுக்கு வழிவழியாக உபயோகித்து வந்த ஆயுதங்கள் இருப்பினும், புதிய ஆயுதங்களும், இயந்திரங்களும், இத்துறைக்கு அறிமுகமாகி இருக்கின்றன. சிற்பங்களை விரைவில் செய்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சிறுகச் சிறுக இத்துறையில் நவீன காலக் கருவிகளைப் புகுத்தி, பணிகளைச் சிரமமின்றி செய்யவும் தீர்மான வேலைகளைச் செவ்வனே செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பயிலகத்திற்கு ரூ. 25 ஆயிரம் மதிப்புடைய புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளது. அத்துடன் மாணாக்கர்கள் ஓய்வு நேரங்களில் படித்துத் தாங்கள் ஈடுபட்டிருக்கும் துறைக்கேற்ற அறிவு சேர்ப்பதற்கு ஏதுவான புத்தகங்களையும் வாங்கி (Book Bank) புத்தக வங்கி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

தனித்தன்மை வாய்ந்த இப்பயிலகத்திற்கு Academic Autonomy கொடுக்கலாமா என்பதும் ஆய்வில் உள்ளது.

இப்பயிலகம் பாலிடெக்னிக் அந்தஸ்து பெறுவதற்கான நடவடிக்கைகளைத் தொழில்நுட்பத் துறை மேற்கொண்டுள்ளது.

கோவிற் கட்டட வேலை

தமிழக அரசின் கல்விச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், அறநிலையத் துறை ஆணையர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் முதலிய தலைமை அதிகாரிகள் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைத்து இப் பயிலகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இப்பயிலக மாணவர்கள் அடிக்கடி சிற்பங்களையும், கோயிற் கட்டடங்களையும் நேரடியாகச் சென்று, தங்கிப் பார்த்து அவற்றின் கலைக் கூறுகளை மனத்தில் பதிய வைத்துக் கொள்ள அடிக்கடி ஆய்வுப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, இப்பயிலகத்திற்கு ஒரு 'மினி' பேருந்து அரசிடமிருந்து வாங்கி வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெற்றுத் தேறிய சுமார் 10 சிற்பிகள் வரை பணியாற்றத் தக்க ஓர் உற்பத்திப் பிரிவு இப்பயிலகத்தோடு இணைக்கப்பட்டு, 1969-ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இது வரை இந்நிலையம், 16 இலட்சம் ரூபாய் மதிப்புடைய சிற்ப வேலைகளைச் செய்திருக்கிறது.

இவ்வுற்பத்திப் பிரிவின் நோக்கம் யாதெனில், பரம்பரைச் சிற்பிகள்' குடும்பத்தைச் சேராதவர்களும், இந்நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களும், உடனடியாக வெளியுலகத்தில் வேலை தேட முடியாதவர்களும் போன்ற சிற்பிகளுக்கும்வேலை வாய்ப்பு அளிப்பதேயாகும். இங்கு வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதே வெளி வட்டாரங்களில் நல்ல வேலை வாய்ப்புக்கள் வரும்பொழுது எச்சமயத்திலும் அவ்வேலைகளில் ஈடுபட எந்தத்தடையும் இல்லாது இவ்வுற்பத்திப் பிரிவு செயல்படுகிறது. அதாவது, மாணவர்களுக்கு ஓர் ஆதரவாகச் செயல்படுவதே இவ்வுற்பத்திப் பிரிவின் நோக்கம்.

இப்பயிலகத்தில் ஐந்தாண்டு டிப்ளமோ பயிற்சியளிக்கப்படுகின்றது. விருப்பப் பாடங்கள் 6 ஆகும். விருப்பப் பாடம் ஒன்றுக்கு ஐந்து மாணவர்கள் விதம் ஆண்டுதோறும் 30 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். தற்போது மொத்தம் 115 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இப்பயிலகத்திற்கு இயற்கையிலேயே போதுமான இடவசதியில்லை. இதற்கிடையில் மாமல்லபுர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அங்கேயே புதிய கட்டடங்கள் கட்டிக்கொண்டு

கட்டடக் கலை வரைபடம் தயாரிக்கும் மாணாக்கர்கள்

விரிவுபடுத்த வாய்ப்பு இல்லாதிருக்கிறது. எனவே, மாமல்லபுரம் கிராமத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் 30 ஏக்கர் நிலம் வாங்கும் யோசனை உள்ளது. புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வழிவழியாகச் சிற்பக்கலை போதிக்கப்பட்டு வந்த பண்டைக் காலத்திலும் இப்பயிலகத்தில் 21 ஆண்டுகளிலும் தமிழே போதனாமொழியாக இருந்து வந்திருக்கின்றது. சிற்ப நூல்கள் அனைத்தும் தொன்றுதொட்டு சமஸ்கிருத மொழியில்தான் எழுதப்பட்டிருக்கின்றன. இங்குப் பயிலும் மாணவர்களுக்கு சமஸ்கிருதமொழி கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டிருப்பினும் குறுகிய காலத்தில் தேவையான மொழியாற்றல் பெறமுடியாதவர்களாகவே இருக்கிறார்கள். எனவே, தமிழில் சிற்பக்கலைப் பாட நூல்கள் நான்கினை எழுதிப் பதிப்பிப்பதற்காக 1965-ஆம் ஆண்டிலும் பாட நூல்கள் நான்கினை எழுதிப் பதிப்பிப்பதற்காக 1965-ஆம் ஆண்டிலும், 1970-ஆம் ஆண்டிலும் அரசு தக்க ஆணைகளைப் பிறப்பித்தது. போதிய அறக்கொடையும் வழங்கியது. அதன பயனாய் முதல் நூலான 'சிற்பச் செந்நூல்' என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத் திருக்கோயில்கள் அனைத்தும் தமிழ் மண்ணில் தோன்றிய சிற்பிகளாலேயே கட்டப்பட்டிருக்கின்றன. தமிழகப் பண்பாட்டுச் சிறப்புகளே அக்கோயில்களில் காணப்படுகின்றன. மேலும், பண்டைச் சமஸ்கிருத சிற்ப நூல்களைத் தமிழகத்தில் பிறந்த சிற்பிகளே இயற்றியுள்ளார்கள். இத்தனையிருந்தும் தமிழில் சிற்பக்கலை நூல் ஒன்று இல்லையே என்ற ஒரு குறை நீண்டநாட்களாகத் தமிழ்த்துறையில் இருந்து வந்தது. 'சிற்பச் செந்நூல்' வெளியிடப்படுவதன் மூலம் அக்குறை நீங்குகிறது எனலாம்.

மாமல்லபுரம் சர்தேசப் புகழ் வாய்ந்த சுற்றுலா நகரமாக மிளிருகிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் இப்பயிலகம் இருக்க வேண்டுமென்று தமிழக அரசு மாமல்லபுரத்தில் இதனை முன்னர் நிறுவியது. இதனால் இப் பயிலகம் பெரும் பயனடைந்துள்ளது. இங்கு வராத பெரியோர்களே இல்லையெனலாம். இங்குள்ள ஆசிரியர்களும், மாணாக்கர்களும் வெளி உலகத்திற்கு நல்ல வண்ணம் அறிமுகமாகிறார்கள். வேலை வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன.

வெளிநாட்டுப் பயணிகளை வெகுவாக ஈர்க்கும் சக்தி கொண்டதாக இப்பயிலகம் சிறந்து விளங்குகிறது!

கோவையில் வளரும் சிறு தொழில்கள்

"சிட்கோ'' என்று சுருக்கமாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு தனி நிறுவனமாக 23-3-1970 அன்று நிறுவப்பட்டு, பின்பு 21-3-1971 முதல் ஒரு பொது நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் மூலக் குறிக்கோள், சிறு தொழில்களுக்கு உதவி செய்தல், தொழில் நுட்ப ஆலோசனை கூறல், நிதி வசதி அளித்தல், மற்றும் அத்தொழில்களுக்குத் தேவையானபாதுகாப்பு வழங்கிப் பேணி வளர்த்தல் ஆகும்.

மேலும், ''சிட்கோ'', தமிழ் நாடு அரசின் கீழ் இயங்கி வந்த 783 தொழிற்கூடங்கள் கொண்ட 35,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 33 தொழிற்பேட்டைகளையும், 1,117 தொழிலாளர் குடியிருப்புகளையும், தமிழக அரசின் நியமனத்தின்பேரில் பராமரிக்கும் பொறுப்பை நிறைவேற்றி வருகிறது.

இவற்றில் கோவையில் இரு தொழிற்பேட்டைகள் உள்ளன. அவை 1) குறிச்சியில் 7 தொழிற்கூடங்கள், 2) ஈரோட்டில் 15 தொழிற்கூடங்கள்.

சிட்கோவின் தொழிற்பேட்டைத் திட்டங்கள் :

தொடக்கம் முதல் 31-3-78 முடிய சிட்கோ 332 தொழிற்கூடங்களை ரூ. 332.76 இலட்சம் மதிப்பில் 9 இடங்களில் கட்டி வழங்கியுள்ளது. இம்மாவட்டத்தில் ரூ. 58.00 இலட்சத்தில் கட்டப்பட்ட 63 தொழிற்கூடங்கள் அடங்கும்.

மேலும், 1978-79ஆம் ஆண்டு மட்டும் தற்போது திட்டமிட்டுள்ளபடி கோவையில் குறிச்சியில் 26 தொழிற்கூடங்கள், திருப்பூரில் 30 தொழிற்கூடங்கள் ஆக மொத்தம் 56 தொழிற்கூடங்களை ரூ. 47.74 இலட்சங்கள் மதிப்பீட்டில் கட்டித் தொழில் முனைவோர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. இதனால் 1,170 பேர் களுக்கு இம்மாவட்டத்தில் வேலை வாய்ப்புத் தோற்றுவிக்கப்படும்.

கிராமப் புற வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு கிராமம் மற்றும், குடிசைத் தொழில் வளர்ச்சிக்கானத் தொழில் துவக்க முன் வருபவர்களுக்குச் சின்னஞ் சிறு தொழிற்கூடங்களைக் கட்டித் தரும் புதிய திட்டம் ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது. இதன்படி 1978-79ஆம் ஆண்டு 90 சின்னஞ் சிறு தொழிற்கூடங்களை இந்த மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப்பட இருக்கின்றன:

1. தாராபுரம்
2. காசிபாளையம்
3. கோபி
4. அனுப்பர்பாளையம்
5. குறிச்சி
6. அவினாசி
7. காங்கேயம்
8. கொடுமுடி
9. சின்னியம்பாளையம்

இத்திட்டத்தின்படி தொழில் ஆரம்பிக்க ஆர்வமுள்ளோர் முன் வருவார்களேயானால், மேலும் அதிக இடங்களில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்கான இடங்கள் மாவட்ட கோட்டாட்சித் தலைவர், மாவட்டத் தொழில் மையம், சிறுதொழில் முனைவோர் சங்கம் ஆகியவற்றின் கூட்டாலோசனைகளுடன் நிர்ணயிக்கப்படும். இத் திட்டத்தினால் முதல்



ரப்பர் தயாரிக்கும் தொழிற் கூடம்.

கட்டத்தில் 210 பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் இம்மாவட்டத்தில் தோற்றுவிக்கப்படும்.

சின்னஞ்சிறு தொழிற்கூடத் திட்டம்:

1. ஒரு சின்னஞ் சிறு தொழிற் கூடத்தின் மதிப்பு ரூ. 6,900 மட்டுமே.

2. சுலபமான தவணைகளில் பணம் கட்டும் வசதி, அதாவது:

(அ) தொழிற்கூடம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் 3 சதவிகிதம் நிர்வாகச் செலவுக்காகவும், 5 சதவிகிதம் முன்பணமாகவும் செலுத்த வேண்டும்.

(ஆ) மீதித் தொகையை நாள் ஒன்றுக்கு ரூ. 4 வீதம் செலுத்த வேண்டும்.

(இ) கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் 10 ஆண்டுகள்.

(ஈ) தொழிற்கூடம் அமைந்துள்ள கிராமம்—ஊராட்சியின் மக்கட் தொகை 50,000க்கு மேற்படாமலும், இயந்திரச் சாதன முதலீடு ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்படாமலும் உள்ள நிறுவனங்களுக்குக் குறைந்த வட்டியில் பணம் வழங்கும் கடன் உதவித் திட்டமும் இதில் அடங்கும்.

கிடைத்தற்கரிய மூலப் பொருட்களை விநியோகித்தல்:

இரும்பு, நிலக்கரி, தீப்பெட்டி, மெழுகு, பொட்டாசியம் குளோரைடு, மட்டன் 'டாலோ' முதலிய மூலப்பொருட்களை 'சிட்கோ' விநியோகித்து வருகிறது. இதன்படி 31-3-1978 முடிய இம்மாவட்டத்தில் சுமார் 746 தொழிற்கூடங்களுக்கு மூலப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பாலிதீன் பைகள் செய்யும் தொழிற் கூடம்.

மேற்படி 15 சதவிகிதம் மத்திய மூலதன உதவி அளிக்கும் திட்டத்தில் தமிழ்நாடு 1977-78ல் முதலிடம் பெற்றுள்ளது.

இந்திட்டத்தின்படி 'சிட்கோ' 1-4-1974 முதல் இதுவரை 685 நிறுவனங்களுக்கு ரூ. 159.93 இலட்சங்கள் வரை உதவி அளிக்க அங்கீகரித்துள்ளது.

இவ்வாண்டு 150 நிறுவனங்களுக்கு ரூ. 30. இலட்சங்கள் வரை மேற்படி திட்டத்தில் உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

விற்பனை வசதி....

சிறிய அளவில் தொடங்கிய இத்திட்டத்தின் கீழ் இது வரை ரூ. 3.93 இலட்சம் மதிப்புள்ள பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சிறு தொழில் உற்பத்தியாளர்களுக்கு உரிய சிறப்பு விலைச் சலுகை அடிப்படையின்கீழ் பொருட்களை விற்பனை செய்ய விரும்பும் சிறு தொழில் விற்பனையாளர்களைக் கண்டறிந்து கணிசமாகப் பொருட்களை வாங்கும், மின்சார வாரியம், வீட்டு வசதி வாரியம், குடிநீர் மற்றும் கழிவுப் பொருள் வாரியம் முதலிய பொது நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு விற்பனை வசதி வாய்ப்பினை ஈட்டுந் தரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிட்கோ - தமிழ்நாடு சிறு தொழில் முதலீட்டுக்கழகக் கூட்டு (SIDCO - IIIC) திட்டத்தின் கீழ் தவணை முறையில் இயந்திரங்கள் வாங்கக் கடனுதவி வழங்கும் திட்டத்தில் 1-4-1974 முதல் ஜூன் 78 முடிய "சிட்கோ" 1,058 தொழில் முனைவோர்க்கு இயந்திரங்கள் வாங்க ரூ. 1,690 இலட்சங்கள் வரை உதவி அளிக்க அங்கீகரித்துள்ளது.

இதில் கோவை மாவட்டத்தில் மட்டும் 14 நிறுவனங்களுக்கு ரூ. 73.01 இலட்சம் வரை உதவி அளிக்க அங்கீகரிக்கப்பட்டு, இதன் பயனாக 100 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அகதிகள் முன்னேற்றத் திட்டத்தின் கீழ்:

ஜனவரி 1978ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் அகதிகள் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கியின் கூட்டுடன் அகதிகளை நிரந்தரமாக வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் சிறு தொழிற்சாலைகளுக்கு, வேலைக்கு அமர்த்தப்படும் ஒவ்வொரு நபருக்கும் ரூ. 10,000 வீதம் கணக்கிட்டு குறைந்த வட்டி கடனுதவி வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் இதுவரை 4 தொழிற்கூடங்களுக்கு ரூ. 2.30 இலட்சம் வழங்கப்பட்டு 23 அகதிகளுக்கு வேலைவாய்ப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

குறிச்சித் தொழிற்பேட்டை:

இத்தொழிற்பேட்டையில் 63 தொழிற்கூடங்கள் 1974 மத்தியில் கட்டி முடிக்கப்பட்டு, தவணை முறைத் தொழிற்கூடம் வழங்கும் முறையின்படி வழங்கப்பட்டு வருகின்றது. இத்தொழிற்பேட்டையின் மொததப் பரப்பளவு 45.18 ஏக்கராகும். இந்தத் தொழிற்கூடங்களில் பொதுவாக அலுமினியம், மற்றும் பித்தளைத் தகடுகள் அச்சு இயந்திரங்கள், இயந்திர உதிரிப் பொருட்கள், பாலீதின் பைகள், பேப்பர் பைகள் மற்றும் வார்ப்பட பொருள்கள் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் நடைபெற்று வருகின்றன.

மேலும் "சிட்கோ" தொழிலகங்களுக்குத் தேவையான அத்தியாவசியமான உதவியைப் பெற்றுத் தந்திருப்பதுடன், தொழிற்பேட்டையின் பராமரிப்பையும் பொறுப்பில் கொண்டுள்ளது. இத்தொழிற்பேட்டை திட்டத்தின் மூலம் சுமார் 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

முன்னேற்றப் பாதையில்...

தமிழ்நாட்டில் உள்ள பதினாறு மத்திய கூட்டுறவு வங்கிகளின் நடவடிக்கைகள் பற்றிய ஆய்வு அறிக்கையினை தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி அண்மையில் வெளியிட்டுள்ளது. அறிக்கையில் காணப்படும் விபரங்கள் இந்நிறுவனங்களின் சிறப்பான முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகின்றன.

1977—78-ம் ஆண்டு இறுதியில் இந்த வங்கிகள் பெற்றிருந்த இட்டு வைப்புகளின் நிலுவை ரூ. 12,651·15 லட்சமாக இருந்தன. மத்திய வங்கிகளின் சுய நிதி ஆதாரங்களுக்கு இட்டு வைப்புகள் 71 சதவிகிதத்துக்கும் அதிகமாக இருந்து வருகின்றன. இது ஓர் சிறப்பு அம்சமாகும். ஐந்து மத்திய கூட்டுறவு வங்கிகள், அதாவது கோயமுத்தூர், சென்னை, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மத்திய வங்கிகள், ஒவ்வொன்றிலும் ரூ. 10 கோடிக்கும் அதிகமான அளவில் இட்டு வைப்பு நிதிகள் குவிந்திருந்தன. இந்த 5 வங்கிகளிலும் சேர்ந்திருந்த இட்டு வைப்புகள் 58 சதவிகிதத்துக்கும் மேலாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய வங்கிகள் பெற்றிருந்த கடன்களின் நிலுவை ரூ. 17,045·99 லட்சம். முன் ஆண்டு இறுதியில் இருந்ததைவிட இது ரூ. 4,314·49 லட்சம் அதிகம். இக் கடன்களில் 99 சதவிகிதத்துக்கும் மேல் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியிலிருந்து பெறப்பட்டிருந்தது.

இணைக்கப்பட்ட சங்கங்களுக்கு மத்திய வங்கிகள் வழங்கி நிலுவையிருந்த கடன்கள் ரூ. 30,124·17 லட்சம். முந்திய ஆண்டில் இவைகளின் நிலுவை ரூ. 23,608·15 லட்சம். பெரும்பாலான கடன்கள், அதாவது ரூ. 19,429·89 லட்சம், தமிழ் நாட்டின் விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கு வழங்கப்பட்டிருந்தன. நெசவுத்துறை முன்னேற்றத்துக்கு வழங்கிய கடன்களின் நிலுவை ரூ. 1,368·67 லட்சம் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நலிந்தோர்க்கு நகைக் கடன் உதவி, இதர துறைகள் மூலம் ரூ. 9,330·61 லட்சம் கடன் அளிக்கப்பட்டிருந்தது. மத்திய வங்கிகள் வழங்கியிருந்த கடன்களில் 58 சதவிகிதத்துக்கும் அதிகமான தொகை அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து கொடுக்கப்பட்டிருப்பது ஓர் சிறப்பு அம்சமாகும்.

மின் விளக்குப் பொறி

பயிர்களுக்கு ஊறு விளைவிக்கும் பூச்சிகளில், சிலவற்றைத் தவிர மற்ற எல்லாமே மூன்று பருவங்களைக் கடந்துதான் அந்துப்பூச்சிகளாக மாறுகின்றன. அதாவது 1. முட்டைப் பருவம், 2. புழுப் பருவம், 3. கூட்டுப் புழுப் பருவம், 4. அந்துப் பூச்சிப் பருவம்.

தாய் அந்துப் பூச்சியும், ஆண் அந்துப் பூச்சியும் இனச் சேர்க்கைக்குப் பின் நூற்றுக்கணக்கான முட்டைகளைப் பயிரின் இலைகளின் இடுகின்றன என்பதனை எல்லாரும் அறிவோம்.

பயிர்களுக்கு ஊறு விளைவிக்கும் பூச்சிகளில் பெரும்பாலானவை எல்லாப் பருவத்திலும் பயிர்க் காலம் முழுவதும் ஊறு விளைவிப்பதில்லை. சில குறிப்பிட்ட பருவத்தில் குறிப்பிட்ட பயிரின் வளர்ச்சிக் காலத்தில்தான் தீங்கு விளைவிக்கிறது. பயிருக்கு ஊறு விளைவிக்கும் இப்பூச்சிகள் கூட்டுப் புழுவில் இருந்து அந்துப் பூச்சிகளாக வெளிவந்த உடனேயே அழித்து விட்டால் பின் அவை முட்டையிட்டு அவற்றிலிருந்து வெளிப்படும் பல நூற்றுக்கணக்கான புழுவைக் கட்டுப்படுத்த ஆகும் செலவு மிக மிச்சமாகும். மேலும், பூச்சி பயிரை, ஓரளவு சேதப்படுத்திய பின்னர்தான் நம்மால் பூச்சியை ஒழித்து எஞ்சியுள்ள பயிரைக் காப்பாற்ற முடியும்.

ஆகவேதான், அந்துப் பூச்சிகளைப் பிடித்து ஒழிக்கவும், எப் பருவத்தில் எந்தப் பூச்சிகள் அதிகம் வருகின்றன எனக் கணக்கிடவும் மின் விளக்குப் பொறி வைக்கப்படுகிறது.



சாதாரணமாகவே தாய் அந்துப் பூச்சிகள் இரவில் விளக்கின் ஒளியில் ஈர்க்கப்பட்டு விளக்கைச் சுற்றி வரும். இந்தத் தத்துவத்தை வைத்துத்தான் மின் விளக்குப் பொறியில் 125 வாட்ஸ் பாதரசக் குமிழ் வைக்கப் பட்டுள்ளது.

இரவில் இவ் விளக்கு பிரகாசமாக எரியுமபொழுது 2 மைல் சுற்றளவு வரை ஒளி நன்கு தெரியும். இதன் ஒளியால் தாய் அந்துப் பூச்சிகள் கவரப்பட்டு விளக்கைச் சுற்றிப் பறக்கும் பொழுது அதில் அமைக்கப்பட்டு உள்ள பாபல் தகட்டில் அடிப் பட்டுப் புனல் போன்ற அகன்ற வாயுள்ள துத்த நாக அண்டாவில் விழுகிறது.

அண்டாவில் விழுந்த அந்துப் பூச்சி வெளியே வர மீண்டும் பறக்கும் பொழுது அண்டாவில் ஒரு சிறு கண்ணுடிப் புட்டியில் வைக்கப்பட்டுள்ள நூவான் என்ற மருந்து நனைந்த பஞ்சிலிருந்து வெளிப்படும் விஷ வாயு இப் பூச்சிகளைக் கொன்று விடும். இவை அண்டாவில் அடியில் இணைத்துள்ள அடிப்பாகத்தில் சிறு துளைகள் இடப்பட்ட கண்ணுடிப் புட்டியில வந்து விழுந்து விடும்.

இவ்விதம் விழும் பூச்சிகளை தினமும் பிரித்து அவற்றின் எண்ணிக்கையை தினமும் ஒரு பதிவேட்டில் குறித்து வர வேண்டும். ஏதாவது ஒரு அந்துப் பூச்சி விழுந்தால், நிச்சயமாக அவற்றைத் தங்களுடைய பயிர்களிலும் காணலாம். ஆகவே, அந்துப் பூச்சிகள் மின் விளக்குப் பொறியில் கண்டதும் தம் பயிர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்பு செய்தால் அதிகச் செலவில்லாமல் தூள் மருந்தாலேயே பூச்சிகளிலிருந்து பயிரைக் காக்கலாம்.

மேலும் இந்தப் பதிவேட்டை நல்ல முறையில் பராமரித்து வந்தால் ஆண்டில் எந்த மாதத்தில் எந்தப் புழுக்கள் அதிகம் தோன்றும் என்றும் கணித்து முன்கூட்டியே விலை குறைவாய் உள்ள தூள் மருந்து தூவி, பயிர்களைக் காக்கலாம்.

ஆகவே, விவசாயிகள் தாமே இந்த மின் விளக்குப் பொறிகளைத் தங்கள் தோட்டத்தில் 5 ஏக்கருக்கு ஒன்று வீதம் வைத்தால் பூச்சிகள் தொல்லை பெரிதும் குறையும். இரவு நேரத்தில் மாலை 7 மணி முதல் இரவு 12 மணி வரை வைத்தால் போதுமானது. இதற்காகும் ஒரு நாளைக்காகும் செலவு 50 காசுக்கும் குறைவு தான்!

கோழி முட்டைகளை அநேக நாட்கள் பாதுகாக்கும் முறை

கிராமங்களிலும், பட்டணங்களிலும் அநேகர் கோழிப் பண்ணைகள் வைத்துள்ளனர். ஏனெனில், இது ஒரு இலாபகரமான தொழிலாகும். கோழிப் பண்ணைகளின் வளர்ச்சி சென்ற பத்து ஆண்டுகளில் மிகவும் அதிகரித்துள்ளது.

கோழிமுட்டை ஒரு சத்து மிகுந்த உணவுப் பொருள். இதில் புரதச் சத்து, கொழுப்புச் சத்து, இரும்புச் சத்து, உயிர்ச்சத்துக்கள் ஏ, பி, போன்றவை உள்ளன. முட்டையின் புரதச்சத்தின் தரம் மற்ற எல்லா உணவுப் பொருட்களின் புரதங்களைவிட மேலானது. இத்தகைய தன்மை வாய்ந்த முட்டை, விரைவில் கெட்டுப் போகிறது. சாதாரணமாக முட்டை, அறை வெப்ப நிலையில் (28°-34°சி) ஒரு வாரம் மட்டுமே தரமுள்ளதாய் இருக்கிறது.

நம் நாட்டில் ஆண்டொன்றுக்குச் சுமார் 12,000 மில்லியன் முட்டைகள் உற்பத்தியாகின்றன. ஆனால், அவற்றைப் பாதுகாத்து அதிக நாட்கள் கெடாமல் சேமித்து வைப்பதற்கு வசதியில்லை.

விற்பனை வசதிகள், சீரான முறையில் இல்லாததால் சில சமயங்களில் பண்ணைகளிலோ அல்லது வியாபாரிகளிடமோ முட்டைகள் விற்காமல் தேங்கி விடுகின்றன. அச் சமயங்களில் முட்டைகள் கெட்டுப் போவதால் நஷ்டமேற்பட நேரலாம். மேலும், முட்டைகள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து வெகு தொலைவிற்கப்பாலுள்ள இடங்களுக்குச் சில சமயங்களில் அனுப்பப்படுகின்றன. இதனால் முட்டையிட்டுப் பல நாட்களுக்குப் பின்பே அது விற்பனையாக வேண்டியுள்ளது. நம் நாட்டின் வெப்பநிலை அதிகமானதால், முட்டை சீக்கிரத்தில் கெட்டுப்போக ஏதுவாகிறது.

புதிய முட்டையின் தரத்தை அறிவதெப்படி?

ஒரு முட்டையை உடைத்து, தட்டில் ஊற்றினால், அது புதிய முட்டையாக இருப்பின், அதிகமாகப் பரவாமல் இருக்கும். மேலும், முட்டையின் வெண்கரு சிறிது கெட்டியாக இருக்கும். முட்டையின் மஞ்சள் கரு உயரமாகவும், குவிந்தும் இருக்கும். ஆனால், நாள்பட்ட பழைய முட்டையை உடைக்கும்போது அதன் வெண்கரு நீர்போல், தட்டில் அதிகமாகப் பரவும். மேலும், அதன் மஞ்சள் கரு தட்டையாகவும், அகலமாகவும் இருக்கும். இவ்வாறான முட்டை தரம் குறைந்ததாகும். மேலும், பழைய முட்டையில் காற்றுப்பை பெரியதாக இருக்கும். இக்காற்றுப் பைகளின் அளவை, முட்டையினூடே வெளிச்சத்தைச் செலுத்திப் பார்ப்பதன் மூலம் அறியலாம்.

இவ்வாறு ஏற்படும் சேதங்களைத் தடுத்து, முட்டையைச் சுலபமாக அதிக நாட்கள் பாதுகாக்கத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உணவு நுண்ணியல் துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக ஒரு சுலபமான வழிமுறை கண்டறியப்பட்டுள்ளது.

கடலை எண்ணெய் 100 மில்லி லிட்டர், தண்ணீர் 100 மில்லி லிட்டர், ட்ரைஇத்தனல் அமைன் (Triethanol amine) 1 மில்லி லிட்டர், ப்யூடிலேடட் ஹைடிராக்ஸி டாலுவீன் (Butylated Hydroxy Toluene) 100 மில்லி கிராம், அக்ரிமைசின் (Agrymycin) 20 மில்லி கிராம் இவற்றை ஒன்றாக ஒரு 'மிக்ஸியில்' அடித்துக் கலந்து கொள்ள வேண்டும். இப்போது நீரும் எண்ணெய்யும் சேர்ந்த 'எமல்ஷன்' கலவை வெண்மை நிறத்தில் காணப்படும். இதை ஒரு தெளிப்பானைக் (Sprayer) கொண்டு முட்டைகளின்மேல் அடிக்க வேண்டும். வீடுகளில் கொசு மருந்து அடிக்க உபயோகிக்கும் கருவியை இதற்குப் பயன்படுத்தலாம். ஆயிரக்கணக்கான முட்டைகளுக்கு, விவசாயத்தில் உபயோகிக்கும் பெரிய தெளிப்பான்களைப் பயன்படுத்தலாம். ஆனால், ஏற்கெனவே வேறு மருந்துகளையும், கொல்லிகளையும் தெளிக்க பயன்படுத்தப் படுத்தப்பட்ட தெளிப்பான்களை இதற்கு உபயோகிக்கக்கூடாது. தெளிப்பான்கள் இல்லாத நேரங்களில், ஒரு பஞ்சை இந்தக் கலவையில் நனைத்து முட்டைகளின் மேல் துடைக்கலாம்.

ஒரு லிட்டர் 'எமல்ஷன்' கலவையைக் கொண்டு சுமார் 6,000 முட்டைகளைத் துடைக்கலாம். அல்லது 3,500 முட்டைகளின் மேல் தெளிக்கலாம். ஆயிரம் முட்டைகளைக் கலவையால் துடைக்க 85 காசும், கலவையால் தெளிக்க ரூ. 1.50 ஆகும். கலவையைத் தெளிக்கும்போது, அது முட்டை இல்லாத இடங்களிலும் படுவதால் அதிகச் செலவாகிறது. ஆனால், பெரிய கோழிப் பண்ணைகளில் கலவையைத் தெளிக்கும் முறையே சிறந்ததாகும். பெரிய தெளிப்பானை உபயோகிக்கும்போது, ஒரு மணி நேரத்தில், இரண்டு வேலையாட்கள் வைத்து, 8,000 முட்டைகளின்மீது தெளிக்கலாம்.

முட்டைகளைத் துடைப்பதால் குறைந்த செலவானாலும், இப்படிச் செய்ய அதிக நேரமாகும். மேலும், ஒவ்வொரு முட்டையாகத் துடைக்கும்போது, அவை விழுந்து உடைய வாய்ப்புண்டு. இதனால் தெளிக்கும் முறையே சிறந்தது.

இவ்வாறு கலவை தெளிக்கப்பட்ட முட்டைகளை நல்ல காற்றோட்டமுள்ள அறைகளில் வைக்க வேண்டும். இம்முட்டைகளை அறை வெப்பநிலையில் 4 வாரங்களுக்கு, முட்டையின் தரம் அதிகமாகக் குறையாமலும், கெடாமலும் வைத்திருக்கலாம்.

எஸ். நீலகண்டன்,
ஏ. பி. சாந்தி,
உணவு நுண்ணியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.

அதிக உற்பத்திக்கான புதிய ரகங்கள்



விவசாய ஆராய்ச்சியில் நமது நாடு மிகுந்த திறமை கொண்டதாக விளங்குகிறது. இதன் காரணமாக அதிக தானிய உற்பத்தியை அடைய முடிந்தது. கடந்த ஆண்டு 1,260 லட்சம் டன் தானியம் உற்பத்தி செய்யப்பட்டது. மதிப்பீடு செய்யப்பட்ட 52.8 இலட்சம் டன் நெல் உற்பத்தியும், 31.5 இலட்சம் டன் கோதுமை உற்பத்தியும் அதிக உற்பத்தி தரும் ரகங்களை விவசாயம் செய்வதால் ஏற்பட்ட விளைவாகும். இந்த ரகங்கள் நோய் தாங்கும் சக்தி கொண்டவையாகவும், அதிக உற்பத்தி தருவனவாகவும் உள்ளன. சிறந்த பயிர் விளைச்சல் முறையும், அதிக உற்பத்திக்கு ஒரு காரணமாகும்.

நாட்டில் மக்காச் சோளம் உற்பத்தியில் புதிய சாதனை ஏற்படுத்தப்பட்டது. பீகாரில் ரபி பருவ மக்காச் சோளத்தைப் புகுத்தி புதிய சாதனையை ஏற்படுத்தப்பட்டது. கரீப் பருவ மக்காச் சோளத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியின் கூடுதலாக இது இருக்கிறது. கடலைப் பருப்பு வகையில் புதிய பருப்பு வகையைப் புகுத்துயதின் மூலம் மத்திய மற்றும் தீபகற்பப் பகுதிகளில் நல்ல விளைச்சல் ஏற்பட்டது. பருத்திச் சாகுபடியில் எச். 655, எப். 414, எச். 777, எல்டி. 713 ஆகிய புதிய ரகங்கள் புகுத்தப்பட்டன. ராஜஸ்தான் கால்வாய்ப் பகுதிகளிலும், பஞ்சாப், அரியானா பகுதிகளிலும் இப்பயிர் நல்ல மகசூல் ஆகியிருக்கிறது. பூச்சிக் கொல்லி நிர்வாகத் தொழில் நுட்பம் அபிவிருத்தி அடைந்ததின் மூலம் பருத்தியைத் தாக்கும் பல்வேறு பூச்சிகளைக் கொல்லும் முறை பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஒருங்கு இணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பருத்தி விளையும் மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இருந்த பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. அதன் மூலம் 8 வகையான நிலக் கடலை ரகங்களும், இரு வகை சூரியகாந்தி விதை உள்ளிட்ட பல் வேறு தானியங்களில் புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சூரியகாந்தி விதைகளில் கண்டுபிடிக்கப்பட்ட 2 ரகங்கள் தற்போது வர்த்தக உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றன. புதிய சணல் ரகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 125 நாட்களில் எக்டேர் ஒன்றுக்கு 7 முதல் 8 குவிண்டால் சணல் விளையும் ரகமும், 150 நாட்களில் விளையும் சணல் பயிர் ரகமும் இந்தப் புதிய கண்டு பிடிப்பில் இடம் பெற்றுள்ளன.

குறைந்த காலக் கரும்பு ரகமான சிஓ 7704, சிஓ 7712, சிஓஏ 7601, சிஓசி 67-1 ஆகியவை புகுத்தப்பட்டுள்ளன. அதில் சிஓ 7712, எட்டு மாதப் பருவம் கொண்டவை. அது 18சதவிகிதம் சக்ரோஸை 90 சதவிகிதம் சுத்தமாக கொடுக்கும் தன்மை கொண்டதாகும். இதைப் போலவே 9 மாதங்களில் பலன் தரும் சிஓஏ 7601 என்ற ரகம் அதிக விளைச்சல் தரும் ரகமாகும்.

எண்ணெய் வித்துக்களுக்கு ஊக்க விலை

நிலக்கடலை, சூரியகாந்தி விதை சோயா பீன்ஸ் ஆகியவற்றிற்கு குவிண்டால் ஒன்றுக்கு 175 ரூபாய் உதவி விலை கொடுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது 1977-78 பருவத்திற்காகக் கொடுக்கப்படும். சென்ற ஆண்டு நிலக்கடலைக்கு, கொடுத்த உதவி விலையை விட இது 15 ரூபாய் அதிகமாகும். சோயா பீன்ஸ்க்கு 30 ரூபாய் (குவிண்டால் ஒன்றுக்கு) அதிகம் கொடுக்கப்படுகிறது. சூரியகாந்தி விதைக்கு10ரூபாய் அதிகம். உதவி விலையில் அதிகரிப்பு ஏற்பட்டது. விவசாயிக்கு எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய விவசாயக் கூட்டுறவு விற்பனை ஐக்கிய நிறுவனம் இந்த உதவி விலை சம்பந்தமான பணிகளை மேற்கொண்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் அதற்கு முந்திய ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 78 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களை விட அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் 90 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. இது எண்ணெய் வித்துக்கள உற்பத்தியில் 15.4 சதவிகிதம் அதிகம். 1977-78ல் நிலக்கடலை உற்பத்தி 60.7 இலட்சம் டன் ஆகும். அதற்கு முந்திய ஆண்டில் உற்பத்தி செய்தது 52.6 இலட்சம் டன்.

கிராமப்புற ஏழைகளுக்கான சத்துணவு

நமது நாட்டில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது. சமூகத் தோட்டங்கள், பள்ளிகள், வீட்டுத் தோட்டங்கள் ஆகியவற்றில் காய்கறிகளையும், பழங்களையும் மேலும் உற்பத்தி செய்வதற்கு இந்தத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கோழிப் பண்ணைகள் கிராமங்களிலும், வட்டாரங்களிலும் அமைக்கப்படுகின்றன. தகுந்த இடங்களில் மீன் வளர்க்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. இதுவரை 48 ஆயிரம் பள்ளித் தோட்டங்களில் 13,158 எக்டேர் நிலங்களிலும் 30.55 லட்சம் வீட்டுத் தோட்டங்களில் 50 ஆயிரம் எக்டேர் நிலங்களிலும், 17,500 சமுதாயத் தோட்டங்களில் 9 ஆயிரம் எக்டேர் நிலத்திலும் காய்கறிகளும் பழங்களும் உற்பத்தி செய்ய இந்தத் திட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. 7 ஆயிரத்துக்கு மேற்பட்ட வட்டாரங்களில் கோழிப் பண்ணைகளும், 75 ஆயிரம் கிராமங்களில் கோழிப் பண்ணைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீன் வள அபிவிருத்திக்காக 84 ஆயிரம் எக்டேர் நீர்ப் பரப்பில் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. சத்து உணவுகளை எப்படி உற்பத்தி செய்வது என்பது பற்றி கிராம மக்களுக்கு விளக்கச் செயல்கள் மூலம் நம்ப வைத்து அதன் மூலம் இத்திட்டத்தை மேலும் மேம்பாடடையச் செய்ய வேண்டும். இதன் மூலம் அவர்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் மாறுபடும். நமது நாட்டில் சத்துணவுத் திட்டம் தற்போது 1,754 வட்டாரங்களில் செயல்படுகின்றன. இது நாட்டிலுள்ள வட்டாரங்களில் மூன்றில் ஒரு பகுதியாகும். சுய உதவியின் அடிப்படையில் ஆங்காங்கே கிடைக்கும் சத்துணவு வளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இதன் மற்றொரு அம்சம் சமையலிலும், உணவு முறைகளிலும், புதிய வழிமுறைகளை செயல் விளக்கம் மூலம் செய்வதாகும். இதில் 30 ஆயிரம் மகிளா சமிதிகளும், 9.39 இலட்சம் உறுப்பினர்களும் 25 ஆயிரம் இளைஞர் மன்றங்களும், 5.2 இலட்சம் உறுப்பினர்களும் பங்கு கொண்டுள்ளனர். இந்த உறுப்பினர்களுக்கு போதிய பயிற்சியை அளிக்கப்படுகிறது.

ஆனைமலை அழைக்கிறது!

நள்ளிரவு!

நடுக்காட்டில் நாங்கள் அகப்பட்டுக் கொண்டோம்.

எங்களைச் சுமந்து வந்த 'ஜீப்' இப்படி 'மக்கர்' பண்ணும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை!

அங்கு வருவதற்கு முன், அது கொடிய விலங்குகள் வாழும் பயங்கரக் காடு என்று கேள்விப்பட்டது அடிக்கடி நினைவுக்கு வந்தது!

என்றாலும் அசட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு 'ஜீப்'பைத் தள்ளிப் பார்த்தோம். எங்கள் 'பாச்சா' ஒன்றும் அதனிடம் பலனளிக்கவில்லை.

காரிருள்-பயங்கரக் காடு-கொடிய விலங்குகள்-எங்களைக் கலக்கியது!

உடனே 'ஜீப்'பைக் காட்டிலேயே விட்டுவிட்டு 'வேனில்' எல்லாருமாக ஏறிக்கொண்டு விரைந்தோம்.

'காரிருளில் காட்டுக்கு யாராவது போவார்களா?' என்று நீங்கள் கேட்பது புரிகிறது. காட்டில் விலங்குகளைப் பார்க்க வேண்டாமா? அந்த அனுபவத்தை உங்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாமா?

8,000 அடி உயரத்தில்...!

அக்டோபர் திங்கள் 4-ஆம் நாள்!

தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு, வானொலி, தொலைக் காட்சி உட்பட சுமார் 35 செய்தியாளர்கள்-கோவை மாவட்டத்தில் மூன்று நாட்கள் சுற்றுப் பயணம் செய்யப் புறப்பட்டோம்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இந்த அரிய வாய்ப்பைத் தந்தது.



6-ந் தேதி மாலை, எங்களை ஏற்றி வந்த பேருந்து, பூமியிலிருந்து சுமார் 8,000 அடி உயரத்திலுள்ள 'டாப் சிலிப்'புக்குப் பாம்புபோல ஊர்ந்து சென்றது. வளைந்து வளைந்து சென்ற பாதையில், மேலே மேலே போய்க் கொண்டே இருந்தோம். கீழே பார்க்கின்றோம். 'கிடு கிடு' பாதாளம். கோவை நகரே தெரிகிறது. உயர்ந்து வளர்ந்த பல வகையான மரங்கள். பசுமையான அடர்ந்த செடிகொடிகள், புதர்கள், கற்பாறைகள், எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேலெனப் பந்தல் போட்டிருக்கும் இயற்கை அன்னையின் எழில் தாண்டவம்! பார்த்துக்கொண்டே போகிறோம்.

'டாப் சிலிப்' என வழங்கும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தோம்.

உடனே பெட்டிப் படுக்கைகளை விடுதியில் வைத்துவிட்டு, அவசர அவசரமாகப் புறப்பட்டோம், காட்டைச் சுற்றிப் பார்க்க!

வனத்துறையின் 'வேனில்' சிலரும், 'ஜீப்'பில் சிலருமாகக் காட்டுக்குள் புகுந்தோம். எங்களுக்கு முன்னதாகப் புகைப்படக்காரர்களும், தமிழ்நாடு திரைப்படப் பிரிவினரும், தொலைக் காட்சி நிலையத்தினரும் கையில் 'காமிரா'வை வைத்துக்கொண்டு அலைந்து கொண்டிருந்தார்கள்.

''அதோ! யானை!'' ஒருவர் தூரத்தில் இருந்த ஒன்றைச் சுட்டிக்காட்டினார். நாங்கள் அந்தத் திசைப்பக்கம் ஆவலுடன் பார்த்தோம். யானைபோல் இருந்த கருத்த கற்பாறை அது!

அந்த 'வேன்' காட்டுக்குள் புகுந்து நெளிந்து சென்றது. வேனுக்குள்ளேயே மேற்புறத்தைத் திறந்து கொண்டு, ஏணியின் மேலே ஏறி நின்று ஒருவர் 'சர்ச் லைட்' ஒளியைக் காட்டுக்குள் பாய்ச்சி விலங்குகளைக் காட்டத் தயாராக நின்று கொண்டிருந்தார்.

நாங்கள் மாலை புறப்பட்ட போது ஐந்து வகையான கிளிகள் பறந்து செல்வதைப் பார்த்தோம்!

உஸ்...பேசாதே!

டாப் சிலிப்பில் 60 கிலோ மீட்டர் தூரம் வரை போகலாம் என்றும், காட்டுக்குள் வரும் போது யாரும் பேசக்கூடாது என்றும், மிருகங்களைப் பார்ப்பது உங்களுடைய 'லக்' என்றும் வன அலுவலர் ஒருவர் முன்கூட்டியே எங்களுக்குத் தெரிவித்திருந்தார். அதன்படி நாங்கள் யாரும் பேசாத மௌனியாய் கண்களை நாலாபக்கமும் சுழற்றிக்கொண்டு வந்தோம்.

கொஞ்சங் கொஞ்சமாக இருள் கவ்விக் கொண்டு வந்தது. கொடிய விலங்குகளும், பாம்புகளும் நிறைய இருக்கின்றன என்று வன அலுவலர் சொன்னதை நினைத்துக் கொண்ட எங்களுக்கு உள்ளூர பயம்தான். என்றாலும் காட்டில் தன்னிச்சையாகத் திரியும் விலங்குகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உந்தித் தள்ளியது.

'வேன்' சென்று கொண்டிருந்தது!

ஒருவர் 'கரடியைப் பார்த்தேன்!' என்று சொன்னதும், உடனே மற்றொருவர் 'கரடி விடாதீர்!' என்று சொல்லி முடிப்பதற்குள், வேனிலிருந்த விளக்கின் ஒளி காட்டுக்குள் பாய்ந்தது. 'அதோ, பாருங்கள்! காட்டெருமைகளை!' என்றார் வன அலுவலர். ஒளியைக் கண்டு கண்ணைச் சிமிட்டும் காட்டெருமைகளைக் கண்டோம்.

போகாத இடந்தனிலே..

சுமார் 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வரகலியாறு வரை சென்றோம். அதற்கு மேல் கரடுமுரடான காட்டுப்பாதை. பொதுவாகப் பார்வையாளர்கள் போகாத பாதை அது. அங்கும் சென்றோம். இருள் சூழவே வந்த வழியே திரும்பினோம்!

அப்போது மான்களையும் பார்த்தோம். மானின் மருண்ட விழியைப் பார்த்ததால் என்னவோ, நாங்களும் கொஞ்ச நேரத்தில் மருண்டோம்...ஆம். அப்போது தான் 'ஜீப்' 'மருண்டு' நின்று விட்டது!

மறுநாள் காலை 5 மணிக்கெல்லாம் தயாராகிவிட்டோம். கடுங்குளிரில் கம்பளியைப் போர்த்திக் கொண்டு 'வனவாசம்' சென்றோம்!

ஆனைமலைக்கு வந்து யானைகளைப் பார்க்கவில்லையே என்ற ஏக்கத்தோடு சென்று கொண்டிருந்தோம். அப்போது முதன் முதலில் கருங்குரங்கு முகத்தில் விழித்தோம். நரிமுகத்தில் விழித்தாலும் பரவாயில்லை! கொஞ்ச தூரம் சென்றோம். கிரௌஞ்சப் பறவை ஒன்று பறந்து சென்றது. இப்பறவையைக் காண்பது மிகவும் அரிதாம்!

உயிர்மேல் ஆசை!

''இங்கிருந்து, நடந்து போனால் அங்கிருக்கிற பள்ளத்தாக்கில் யானையைப் பார்க்கலாம்'' என்றார் வன அலுவலர். நாங்கள் அதற்குச் சம்மதித்தோம். வேனை ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு, பாதையே இல்லாத மரஞ்செடி கொடிகளுக்கிடையே நடக்க ஆரம்பித்தோம். முன்னே வன அலுவலர் செல்ல, பின்னே ஒருவர்பின் ஒருவராக வரிசையாகச் சென்றோம். அந்தக்காட்சி யாத்திரை செல்வது போல இருந்தது!

சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தூரம் வரை சென்றுவிட்டோம். எங்களுக்கு உயிர்மேல் ஆசை

வந்து விட்டது! இப்படியே திரும்பிவிடலாமா என்றும் மெல்ல பேசிக்கொண்டோம். நடந்து போகும்போது இடையிடையே சில்லென்று ஓடிய சிற்றோடையைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது.

மரத்தில் தவம்!

நாலாபக்கமும் பார்த்தவாறே சென்ற எங்களை ஒரு மரத்தடிக்கு அழைத்து வந்தார் வன அலுவலர். அந்த மரத்தில்தான் பிரபல புகைப்படக்காரர் திரு. கிருஷ்ணன் என்பவர் தவம் கிடந்தார் என்பதை அறிந்தோம்.

(திரு கிருஷ்ணன் அவர்கள் வன விலங்குகளைப் படம் எடுப்பதில் வல்லுநர்.) ரொட்டி, தண்ணீர், கூழ் இவைதாம் அவருக்கு ஆகாரமாம். மரத்துக்குப் பத்தடி தூரத்தில் தரையில் உப்பு தூவப்பட்டிருந்ததைப் பார்த்தோம்.

காட்டில் உப்பு எப்படி வந்தது?

உப்பு என்றால் விலங்குகளுக்குக் கொள்ளை ஆசையாம். அதை விரும்பித் தின்ன விலங்குகளெல்லாம் அங்கே வருமாம். அப்போதுதான் மரத்தின்மேலே இருக்கும் புகைப்படக்காரர் தம் 'கைவரிசையைக்' காட்டுவாராம்.

பள்ளத்தாக்கும் வந்தது! எங்களுக்குப் பசியும் வந்தது; பயமும் வந்தது! அங்கே 'சலசல' வென சிற்றோடையின் ஓசை கேட்டதே தவிர, யானை ஒன்றும் தென்படவில்லை. நடந்து வந்த களைப்பில் ஒரு மேட்டுப் பகுதியில் அமர்ந்தோம். கால்களைப் பார்த்தோம். செடிகொடிகள் கீறிய அடையாளம் இருந்தது. எங்கள் புகைப்படக்காரர் ஒருவரின் காலில் 'அட்டை' உறிஞ்சியதால் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

பிறகு, வந்த வழியே வராமல் வேறு வழியாக விரைந்து சென்று 'வேன்' இருக்குமிடத்தை அடைந்தோம். அப்போதுதான் மூச்சு வந்தது!

விரைந்து வரும்போது இரு பக்கமும் 'சலசல'வெனச் சத்தம் கேட்டது. பிறகு விசாரிக்கும் போதுதான், அது பாம்புகள் ஓடும் சத்தம் எனத் தெரிய வந்தது!

யானையைப் பார்த்தோம்!

விடுதிக்கு வந்த நாங்கள் பிறகு மீண்டும் பயணமானோம், கேரள மாநிலத்திலுள்ள பரம்பிக்குளம்-ஆளியாறு அணைக்கட்டைப் பார்க்க!

எழில் கொஞ்சும் அந்த அணைக்கட்டைப் பார்த்துவிட்டுத் திரும்பும் வழியில் காட்டில் மூங்கில் மரங்களைச் 'சடசட'வென முறிக்கும் சத்தம் கேட்கவே, எங்களை ஏற்றி வந்த பேருந்து சட்டென நின்றது. எல்லாரும் ஜன்னல் வழியே தலையை நீட்டிக்கொண்டு வெளியே பார்த்தோம். இரண்டு மூன்று யானைகள் மூங்கில் மரங்களை முறித்தும் சாய்த்தும் அட்டகாசம் செய்து கொண்டிருந்தன. எங்கள் புகைப்படக்காரர் காமிராவுடன் ஓடி அதைப் படமெடுத்துக் கொண்டு வந்தார்.

வழியில் கருங்குரங்குகளை நிறைய பார்த்தோம். அவை மரத்துக்கு மரம் தாவி 'சர்க்கஸ்' ஆடிக்கொண்டிருந்தன!

ஆனைமலைச் சரணாலயம் :

ஆனைமலை வனவிலங்குச் சரணாலயம் எங்குள்ளது?

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வட்டப் பகுதிகளில் இச்சரணாலயம் அமைந்துள்ளது. மலை முகடுகள் மிகுந்த மேலைத் தொடர் மலைகள் மாவட்டத்தின் மேற்கு எல்லையாக அமைந்துள்ளன. இவற்றுள் 2,250 உயரச் சிகரங்கள் உள்ளன.

இம்மலைத் தொடர்களின் கிழக்குச் சரிவுகள் வனவளம் மிகுந்து காணப்படுகின்றன. வட பகுதியில், சந்தன மரங்கள் ஏராளம் உண்டு. நடுப்பகுதியிலும், தென்பகுதியிலும் தேக்கு ஈட்டி, வெண்தேக்கு, வேங்கை, மருது போன்ற மரங்களும், விறகு மூங்கில் போன்றவையும் குங்கிலியம், சீயக்காய், பிரம்பு, தேன், நெல்லி, மாங்காய் போன்ற சில காட்டுப் பொருள்களும் கிடைக்கின்றன.

இத்தகைய வனச்செல்வங்கள் நிறைந்த காடுகளிலேதான் ஆனைமலை வன விலங்குச் சரணாலயம் அமைந்துள்ளது. இது தென் வடலாகச் சுமார் 40 மைல் நீளமும், கிழக்கு மேற்காகச் சுமார் 30 மைல் அகலமும், பரந்து விரிந்து சுமார் 940 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ளது.

வேறெங்கும் இல்லை!

உயர்ந்த மலைகளும், செழிப்பான பள்ளத்தாக்குகளும், பீட பூமிகளும் ஒருங்கே சேர்ந்துள்ளமை இச்சரணாலயத்தைத் தவிர வேறெங்கும் காண இயலாத ஒன்றாகும்.

இங்கு மிதமான தட்பவெப்ப நிலையின் காரணமாகவும், பசுமையான தாவரங்கள் செறிந்து காணப்படுவதாலும் பெரும்பான்மையான வனவிலங்குகள் இச்சரணாலயத்தில் வாழ்கின்றன.

ஆனமலை வனவிலங்குச் சரணாலயத்தைக் கண்டு மகிழ்ந்திட பொள்ளாச்சியிலிருந்தோ, வால்பாறையிலிருந்தோ, உடுமலைப் பேட்டையிலிருந்தோ பார்க்க நல்ல வசதிகள் உள்ளன. என்றாலும் பொள்ளாச்சியிலிருந்து 42 கிலோ மீட்டர் தூரத்தில் 'டாப் ஸ்லிப்' என்னும் இடம் உள்ளது. இதனையே பலரும் பார்க்க விரும்புகின்றனர்.

'டாப் ஸ்லிப்' எப்படி வந்தது?

'டாப் ஸ்லிப்' (Top-Slip) என்னும் பெயர் எப்படி வந்தது?

நூறு ஆண்டுகளுக்கு முன், மரங்களை வெட்டி இங்குள்ள ஒரு சரிவான இடத்திலிருந்து உருட்டிவிடுவார்களாம். அந்த மரங்கள் உருண்டு வந்து அடிவாரத்துக்கு வந்துவிடுமாம். உச்சியிலிருந்து வழுக்கி விழுந்ததால் அதற்குப் பெயர் 'உச்சி வழுக்கல்' அதாவது 'டாப் ஸ்லிப்' (Top-Slip) என்ற பெயர் வழங்கலாயிற்றாம். (இதைக் கேள்விப்பட்டதும் செய்தியாளர்கள் பலர், 'யாருக்கு உச்சி வழுக்கை?' என்று தம் தலையைத் தடவிப் பார்த்துக் கொண்டனர்!).

ஆனைமலை என்ற பெயர் எப்படி வந்தது? வால்பாறையில் ஒரு பெரிய யானை படுத்திருப்பது போலக் காணப்படுவதாலும், யானைகள் இங்கு அதிகமாக இருப்பதாலும் இப்பெயர் வந்தது என்று கூறுகின்றனர்.

இந்த 'உச்சி வழுக்கல்' என்னுமிடம் அடர்ந்த காடுகளின் நடுவில் அமைந்துள்ள ஒரு சின்னக் குடியிருப்பு ஆகும். வனத்துறையினரே பெரும்பாலும் வாழ்கின்ற இப்பகுதியில், நவீன வசதியுள்ள அழகிய ஓய்வில்லங்கள் பல உள்ளன. உட் அவுஸ், சித்தன் லாட்ஜ், பைசன் லாட்ஜ், அம்புலி இல்லம் ஆகியவை இந்த விடுதிகளின் பெயர்கள். இவற்றில் அம்புலி இல்லம் உயரமான இடத்தில் அமைந்துள்ளது. அங்கிருந்து கோவை, பொள்ளாச்சி நகரைக் காணலாம்.

காட்டுக்குள்ளே......!

இந்தச் சரணாலயத்தில் அதிக அளவில் யானைகள் உள்ளன. சாம்பர், புள்ளிமான், கடமான், எலிமான், சருகுமான் போன்றவையும், புலி, சிறுத்தை, சாம்பல் நிறக் காட்டெருமை, கரடி, செந்நாய், ராஜநாகம், மலைப் பாம்பு, சாரைப்பாம்பு முதலானவையும் உள்ளன. இவையன்றி கருங்குரங்குகள், மலபார் அணில்கள், கிளிகள், கொம்பு மூக்கன், மைனால், புல்புல், கரிச்சான்குருவி, விசில் அடிக்கும் குருவிகள் மற்றும் பல்வேறு பறவைகளையும் இங்குக் கண்டு மகிழலாம்.

செப்டம்பர் முதல் மார்ச் வரை பார்த்துப் பரவசமடைய ஏற்ற பருவகாலங்களாகும்.

உச்சி வழுக்கலில் தங்கிச் சரணாலயத்தில் செல்ல ஊர்தி வசதிகள் உள்ளன. யானை மீதும்

(பழக்கப்பட்ட யானை மீது) சவாரி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. யானைமீது ஏறிக் கொள்ள பஸ் ஸ்டாண்டு போல, யானை ஸ்டாண்டும் உள்ளது!

உலாந்தி பள்ளத்தாக்கு, சின்னார் பள்ளத்தாக்கு என்ற இடங்கள் வன விலங்குகளுக்கு நல்ல பாதுகாப்பான இடங்களாகும்.

வால்பாறையிலிருந்து சரணாலயத்தைக் காண விரும்பும் பயணிகள் சோலையார்-நீரார் போன்ற இடங்களிலுள்ள ஓய்வில்லங்களில் தங்கி உயர்ந்த மலைச்சிகரங்களின் அழகைக் கண்டு மகிழலாம். சுமார் 7,000 அடி உயரத்தில் இந்த இடம் உள்ளதால் குளிர் அதிகமிருக்கும்.

வால்பாறையிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அக்காமலைப் புல்வெளிகளில் அரிதாகக் காணப்படும் வரையாடுகள் உள்ளன. வால்பாறையைச் சுற்றியுள்ள அடர்ந்த பகுதிகளில் சிங்கவால் குரங்குகள் உள்ளன. கேழையாடுகள், யானைகள், காட்டெருமை போன்றவற்றையும் இங்கே காணலாம்.

உடுமலைப்பேட்டையிலிருந்தோ அமராவதி நகரிலிருந்தோ சரணாலயத்தைப் பார்க்க விரும்புவோர் உடுமலைப்பட்டை-மூணார் சாலையில் சென்றால் புள்ளி மான்கள், காட்டெருமைகள், யானைகள், சிறுத்தைப்புலி, கடமான்கள், கேழையாடுகள் முதலானவற்றைக் காணலாம். இங்கு பகல் நேரங்களைவிட மாலை நேரங்களிலேயே விலங்குகள் அதிகம் நடமாடுகின்றன. அப்போது அவற்றைக் கண்டு மகிழலாம்.

முதலைப் பண்ணை!

இக்காடுகள் வறண்ட இலையுதிர்க்காடுகள். வெப்பமான பகுதி இது. டிசம்பர்-ஜனவரி-பிப்ரவரி மாதங்கள் நன்றாக இருக்கும்.

இப்பகுதியிலுள்ள அமராவதி அணை நீர்த்தேக்கத்தில் முதலைகள் உள்ளன. அமராவதி நகரில் தமிழக அரசின் முதலைப்பண்ணை ஒன்றும் உள்ளது. 4 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை வயதுள்ள சுமார் 250 முதலைகளை இந்தப் பண்ணையில் பார்க்கலாம்.

ஒரு காலத்தில், ஆனைமலைச் சரணாலயத்தில் கருஞ்சிறுத்தைகள் நிறைய இருந்தன. ஆனால், இப்போது அவை ஒன்றுகூட இங்கே இல்லை. இவ்வாறு அரிய இனங்கள் அழிவதைத் தடுக்கவும் தக்கவாறு பாதுகாக்கவுமே இச்சரணாலயம் உள்ளது.

விலங்கின ஆராய்ச்சிகள் :

இச்சரணாலயத்தைச் சேர்ந்த வனவிலங்குக் காப்பாளர் திரு பி. பத்மநாபன் அவர்கள் கூறுகிறார்:

"இந்தச் சரணாலயத்தில் பல்வேறு விலங்கினங்கள் பற்றி ஆராய்ச்சிகள் செய்ய நால்வர் வந்துள்ளனர். அவர்கள் அன்றாடம் விலங்குகளைப்பின்தொடர்ந்து சென்று அவற்றின் பழக்க வழக்கங்களை அறிகின்றனர்.

"ஒரு சமயம் நான்கு அமெரிக்கர்கள் கருங்குரங்குகள் பற்றி ஆராய்ச்சி செய்ய இங்கு வந்திருந்தார்கள். மூன்று வகைக் குரங்குகளை அவர்கள் கண்டனர். என்றாலும் அவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை. சிங்கவால் குரங்கைப் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவர்களுக்கு! கடைசியில் அதைப் பார்த்துவிட்ட மகிழ்ச்சியில் கூத்தாடினார்கள். தென்னிந்தியாவிலேயே நான்கு வகையான குரங்குகளையும் (1. நீலகிரிக் கருங்குரங்கு 2. சாம்பல் நிறமந்தி, 3. சிங்கவால் குரங்கு, 4. சாதாரணக் குரங்கு. இதைப் பழனிக் குரங்கு என்றும் கூறுகின்றனர்.) ஒரே இடத்தில் இங்குதான் காண முடியும்.

"இங்கிலாந்திலிருந்து ஒரு பெண்மணி ஐந்தாண்டுகளுக்கு ஓர் முறை இங்கு வருவார். அவருக்கு ஐம்பது வயதிருக்கும். அவர் யானைகள் பற்றிய ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருந்தார். அவர் யானைகளைப் பின் தொடர்ந்தே போவாராம். யானை நீரில் நீந்திச் சென்றால், கூடவே அவரும்



நீந்திச் செல்வாராம். காடுகளில் சுற்றி இரவில் பாறை இடுக்குகளில் படுத்துக் கொள்வாராம்!

"இங்கு நிறைய தேக்கு, மரங்கள் உள்ளன. 1928ல் நடப்பட்ட அந்த மரங்கள் ஓங்கி வளர்ந்து அடர்ந்து காணப்படுகின்றன. ஒரு மரத்தை 80 ஆண்டுகள் கழித்தே வெட்டுவார்களாம். ஒரு மரத்தின் விலை சுமார் ரூ. 3,500. இங்குள்ள மரங்கள் தரமானவை. நியாய விலைக்குக் கிடைப்பவை. அரசு போக்குவரத்துக் கழகங்கள், டான்சி முதலானவற்றுக்கு இங்குள்ள மரங்களே பயன்படுகின்றன."

தென்மலை யானைகள்!

வனத்துறையின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக யானைக்குச் சிகிச்சை செய்து வருபவர் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். அவர் தம் அனுபவத்தைச் சுவைபட இங்கே கூறுகிறார்:

"இந்தச் சரணாலயத்தில் சுமார் 500 யானைகள் உள்ளன. யானைக்குச் சரியான நல்ல தீவனம், நீர் இல்லையென்றால் வயிற்றுப் போக்கு, அடைப்பான், ஈரல் சம்பந்தப்பட்ட நோய்கள் வருகின்றன.

"யானை நின்றுகொண்டே ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் தூங்கும். மத்தியான வேளையில் தண்ணீரில் குளிக்கும். சேற்றையும், மண்ணையும் வாரி இறைத்துக் கொள்ளும். தன் உடல் குளுமையாக இருக்கவே அது அவ்வாறு செய்கின்றதாம்!

"இங்குள்ள யானைகளைத் 'தென்மலை யானைகள்' என்று சொல்வதுண்டு. தமிழகத்து யானைகள் அழகான அமைப்புள்ளவை, கம்பீரமானவை. அதனால் அவற்றைக் கோவில்களில் உபயோகித்துக் கொள்கின்றனர்.

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். ஒரு பெரிய ஆண் யானையின் விலை ரூ. 25ஆயிரத்திலிருந்து ரூ.30ஆயிரம் வரை இருக்கும். குட்டி யானையின் (1 அல்லது 3 வயது) ரூ. 5,000 லிருந்து ரூ. 10,000 வரை இருக்கும். பெண் யானையின் விலையோ குறைவு.

"ஆனைமலைச் சரணாலயத்தில் 800 காட்டெருமைகளும் 5,000 மான் வகைகளும், 150 கரடிகளும், 8 புலிகளும், 30 சிறுத்தைகளும், செந்நாய், மரநாய், பன்றிக் கூட்டங்களும், புனுகுப் பூனை, பலவிதமான கழுகுகள், மலபார் ஆன்பில் (ஈருவாட்சிப் பறவை), நான்கு வகையான மரக்கொத்திகள், பாடும் பறவைகள், பறக்கும் ஓணான், உடும்பு, முதலை முதலானவை உள்ளன.

'கரடி' ஆறுமுகம்பிள்ளை!

இச்சரணாலயத்தில் திரு ஆறுமுகம்பிள்ளை என்பவர் வனப் பாதுகாவலராக இருந்தார். 1952-ஆம் ஆண்டு என்று எனக்கு நினைவு. அவர் காட்டைச் சுற்றிப் பார்க்கும்போது, திடீரென இரண்டு கரடிகள் அவர்மீது பாய்ந்தன! அவர் அவற்றோடு எவ்வளவோ போராடினார். அவை இரண்டும் அவரை உடலெங்கும் காயப்படுத்தின. சுமார் 40 காயங்கள் அவர் உடலில் இருந்தன. ஆறேழு மாதங்கள் மருத்துவமனையில் இருந்தார். ஓய்வு பெற்ற அவர் இப்போதும் உள்ளார். அந்தச் சம்பவத்திலிருந்து அவரைக் கரடி ஆறுமுகம்பிள்ளை என்று நாங்கள் அழைப்பதுண்டு!

யானை துரத்தியது!

"ஒரு சமயம் இங்கு என்னை ஒரு யானை துரத்தியது. தப்பி ஓடி வந்தேன். முதுமலையில் ஒரு யானை என்னை 200 கஜ தூரம் வரை துரத்திக் கொண்டு வந்தது. எங்கிருந்தோ கார் சத்தம் கேட்கவே அந்த யானை திரும்பி ஓடியது. நல்ல காலம், நான் உயிர் பிழைத்தேன்!

"இந்தக் காட்டில் ஒற்றைக் கொம்பன் யானை ஒன்று திரிவதாகவும், அது கொடூரம் வாய்ந்தது என்றும் சொல்கிறார்கள். அதெல்லாம் வீண் வதந்தி. அந்தக் கிழட்டு யானை சாதுவானது!

ஆனைமலையில் ஐ. ஜி.!

"இந்தச் சரணாலயத்தில் அவ்வப்போது யானைகள் பிடிக்கப்படுவது வழக்கம். அந்தச் சமயத்திலெல்லாம் எங்களுக்கு 'ஐ.ஜி.' தான் கைகொடுத்து உதவும். ஆம். எங்களுக்கு மிகவும் பழக்கமான, புகழ்மிக்க, வயதான அந்த 'யானைக்குப் பெயர்தான் ஐ. ஜி. அது, யானை பிடிக்கப்படும்போது, குழியிலிருந்து யானையை மேலே தூக்கவும், தள்ளவும் உதவும்.

"1969-ஆம் ஆண்டில் இவ்வாறு யானை பிடிக்கும்போது, குழியில் காலை வைக்க மறுத்துவிட்டது ஐ. ஜி.! இருள் சூழும் நேரம் வேறு. எவ்வளவோ சொல்லியும் அந்த ஐ. ஜி. குழியில் காலை வைக்க மறுத்துவிட்டது. அதனால் அடித்தும் பார்த்தோம். அதற்கும் அது அசைந்து கொடுக்கவில்லை. பிறகு ஒருவர் 'டார்ச்' லைட்டைக் கொண்டு குழியில் பார்த்தார். குழந்தை ஒன்று அங்கே விழுந்து கிடந்தது!

"காட்டில் எப்படி குழந்தை வந்தது? யானையைப் பழக்குகிறவர்கள் அங்கே குடியிருக்கிறார்களல்லவா? அவர்களுடைய குழந்தை ஒன்று எப்படியோ அங்குத் தவறி விழுந்துவிட்டது. அதன்மேல் எப்படிக் காலை வைப்பது என்று ஐ. ஜி. தயங்கியதே அதற்குக் காரணம். இந்தச் சம்பவத்திலிருந்து யானைக்கும் இதயமுண்டு என்று தெரிகிறதல்லவா?"

கரடி கதவைத் தட்டும்!

காட்டில் வாழும் விலங்குகளைப் பற்றித் தெரிந்துகொண்ட நாம், எட்டாயிரம் அடி உயரத்தில் அந்த விலங்கோடு விலங்காக மழை, வெய்யில், கடுங்குளிரில் காலமெல்லாம் வாழ்ந்துவரும் மக்களைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா?

யானையைக் கவனித்துக் கொள்ளும் திரு. ராயன் என்னும் முதியவர் கூறுகிறார்:

"நான் இங்கேயே பல ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறேன். கடந்த 30 ஆண்டுகளாக இந்த வேலையில் இருக்கிறேன். இரவு வேளையில் பயம்தான் என்றாலும் ஜாக்கிரதையாக இருப்போம். சில சமயங்களில் விலங்குகளுக்குப் பயந்து தீ மூட்டிக்கொண்டிருப்போம். இரவில் கதவு தட்டும் சத்தம் கேட்டால் உடனே திறந்து விடமாட்டோம். ஏனென்றால், சிலசமயம் கரடிகூட வந்து கதவைத் தட்டுவதுண்டு!"

'யானைப் பணி முகாம்' என்ற இடத்தில், சிறுசிறு குடிசைகள் மேட்டுப் பகுதியில் தென்படுகின்றன. அவற்றில் குழந்தையும் குட்டியுமாக வாழ்கிறார்கள் யானைப் பாகர்கள். அவர்களின் குழந்தைகள் தன்னிச்சையாக அந்தப் பகுதிகளில் பயமின்றி சுற்றித் திரிவதைப் பார்க்கலாம்!

யானைக்கு ராகி, கொள்ளு சேர்ந்த களி உருண்டைகள் உணவாகத் தரப்படுகின்றன. ஒரு வேளைக்கு ஏழு கிலோ வீதம் உணவு வழங்கப்படுகிறது. காலை 8 மணிக்கும் பிறகு மாலை 6 மணிக்கும் உணவு வழங்கப்படுகிறது. யானை ஒரு நாளைக்கு 20 மைல் தூரம் வரை நடந்து செல்கின்றன. 15 வயதிலிருந்தே அதற்கு மோப்பச் சக்தி உண்டாகிறது. காடுகளில் வெட்டிய மரங்களை அப்புறப்படுத்த பழக்கப்பட்ட பல யானைகள் இங்குப் பயன்படுகின்றன.

புலி இருந்தது!

வனத்துறையைச் சார்ந்த திரு அப்துல் காதர் என்னும் டிரைவர் கூறுகிறார்:

"ஒரு சமயம் ஒரு யானை என்னை 2 கிலோ மீட்டர் தூரம் வரை துரத்திக் கொண்டு வந்தது. ஒற்றை யானை இருந்தால் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அது ஆளைப்பார்த்து விட்டால் லேசில் விடாது. ஒரு நாள் இரவு விடுதியில் தங்கியிருந்த நான், சிறுநீர் கழிக்க வெளியே வந்தேன். அப்போது அங்கே புலி ஒன்று படுத்துக் கொண்டிருந்தது! எப்படித்தான் உள்ளே வந்ததேனோ எனக்கே தெரியாது! அந்தப் புலிதான் அங்குச் சுற்றித் திரிந்த பத்துப் பதினைந்து ஆடு மாடுகளை அடித்துத் தின்றது என்று பிறகு தெரியவந்தது!

யானையோடு பேசலாம்!

யானையோடு பேச முடியுமா? ஓ, தாராளமாக! யானைப்பாகர்கள் யானையோடு பேசுவதை-அதற்குக் கட்டளை இடுவதை-அதைத் தலைமேல் ஏற்று அது செய்வதைப் பார்க்கிறோம்.

'பார்' என்று சொன்னால் அது தும்பிக்கையைத் தூக்குகிறது. 'வரி' என்றால் தும்பிக்கையைக் கீழே இறக்குகிறது. 'டிரே' என்றால், கையிலுள்ள கம்பைப் பிடிக்கிறது. 'வெட்தா' என்றால் யானைப் பாகன் பின்னே செல்கிறது. 'செய்' என்று சொன்னால் நின்றுவிடுகிறது. 'வெடியட்' என்றால் நடந்து போகிறது. 'பைட்' என்றால் படுத்துக் கொள்கிறது.

யானைக் கூட்டத்தினிடையே கீதா என்னும் குட்டி யானை ஒன்று நின்று கொண்டிருந்தது. காட்டில் திரிந்து கொண்டிருந்த அது தவறி ஒரு குழியில் விழுந்து விட்டதாம். தாய் யானை அதைக் காப்பாற்ற எவ்வளவோ முயன்றதாம். 'கடைசியில் அதை நாங்கள் பிடித்துக்கொண்டு வந்து விட்டோம்' என்கிறார் ஒரு வனத்துறை அலுவலர்.

இப்படி ஆனைமலை சொல்லும் பல சுவையான கதைகளைக் கேட்டுக் கேட்டு இன்புற்றோம்.

ஒருநாள் இரவு அங்குத் தங்கி இருந்து, மறுநாள் ஆனைமலையை விட்டுக் கீழே இறங்கி வரும்போது, மானசீகமாக அந்தக் காடுவாழ் உயிரினங்களிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் பிரியாவிடை பெற்றது போன்ற ஓர் உணர்ச்சி!

அழகிய, இனிய, அமைதியான சூழலிலிருந்து பரபரப்பான நகர வாழ்க்கைக்குத் திரும்புகிறோமே என்ற ஏக்கம்!

'மீண்டும் எப்போது இங்கே வருவோம்?' என்ற பேராவல்!

எல்லாம் மனத்தில் அலைமோத, அந்த இயற்கை எழில்மிக்க ஆனைமலையை விட்டு எங்கள் பேருந்து கீழே இறங்கி வருகிறது. ஊரை அடைகிறோம். மறுபடியும் பரபரப்பான நகர வாழ்க்கையில் பிணைந்து போய்விடுகிறோம்!

அமைதியான-இயற்கை எழில் மண்டிக்கிடக்கும்-அரிய விலங்கினங்கள் பலவற்றை உள்ளடக்கிய அந்த ஆனைமலையிலுள்ள 'டாப்சிலிப்'பை, அருகிலேயே உள்ள அந்த மாவட்டத்து மக்கள் எத்தனைப் பேர் போய்ப் பார்த்திருப்பார்கள்?

—பி. வி. கிரி.

மண் பரிசோதனை ஏன்?

ச. பிரேமநாதன்,
உதவி மண் வேதியர்,
மதுரை மண் பரிசோதனை நிலையம்.

உழவியல் அறிஞர்களும், வேளாண்மை இரசாயன வல்லுநர்களும், மண்ணியல் விஞ்ஞானிகளும், விளைச்சலில் 40 சதவிகிதத்தை மண்ணின் வளமும், இரசாயன உரமுமே கொடுக்கும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். எனவே, உற்பத்தியைப் பெருக்க மண்ணிலுள்ள வளத்தை நிர்ணயித்து எவ்வளவு உரம் போட வேண்டும் என்பதை முடிவு செய்ய மண் பரிசோதனை மிகவும் அவசியம்.

பல்வேறு வகையான உரங்களும், அவற்றின் தேவையான அளவும், பயிருக்குப்பயிர், இடத்திற்கு இடம், நிலத்திற்கு நிலம், நிச்சயமாக மாறுபடும். உர உபயோகத்தின் மூலம் உணவு உற்பத்தி பெருகி உள்ளது என்பதை விவசாயிகள் பலரும் அறிவர். ஆனால், எந்த அளவு, எந்த வகையான இரசாயன உரம் பயிருக்குத் தேவை என்று அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். இந்தத் தேவையான உரங்களை தேவையான அளவில், தேவையான சமயத்தில் தேவைப்படும் பயிர்களுக்கு இடுவோமேயானால் நிச்சயமாக நாம் அதிகமான அளவு உணவு உற்பத்தியையும், அதற்கேற்ப இலாபத்தையும் அடையலாம். மண் பரிசோதனை, ஒரு நிலத்திற்கு எந்த அளவு, என்ன மாதிரியான உரம் தேவை என்பதை நிர்ணயிக்கும்.

அறிவியல் ரீதியில் விவசாயம் செய்துவரும் இந்நாளில், மண்ணை பரிசோதனை செய்யாமல் பயிர்களுக்கு உரமிடுவதென்பது, மருத்துவர் அறிவுரை இல்லாது மருந்து உண்பது போலாகும்.

மண்பரிசோதனை செய்யாவிடில், விவசாயிகள் பயிருக்கு அதிக (அளவோ குறைவான அளவோ உரமிட நேரிடும். இதனால் பயிருக்கு இன்றியமையாத உணவுச்சத்து தேவைக்கும் அதிகமாகவோ குறைவாகவோ கிடைக்க நேரிடும். இதனால் அவர்கள் இரசாயன உரமிட்டும், பயிர்கள் சரியான பலனைத் தராது. ஆகையால் மண்ணைப் பரிசோதனை செய்வதன் மூலம் மண்ணின் வளம். மண்ணின் தன்மை, மண்ணில் அமைந்திருக்கும் களர், அமிலம் மற்றும் உவர்தன்மை ஆகியவைகளைத் தெரிந்து கொண்டு, அதற்கேற்ப பரிந்துரைக்கப்படும் உரங்களையும், நிலச்சீர்திருத்த முறைகளையும் கடைப்பிடித்தால் கண்டிப்பாக உணவு உற்பத்தியில் உயர்நிலையை அடையலாம்.

மதுரை மாவட்ட வேளாண் பெருமக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு 1966-ஆம் ஆண்டில் மதுரையில் ஒரு மண் பரிசோதனை நிலையம் நிறுவப்பட்டு, நன்முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும் ஒரு சிறிய மண் பரிசோதனை நிலையம் தேனியில், சென்ற ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதுவரையில் 1,38000-க்கும் மேற்பட்ட மண்மாதிரிகளும் 164 பாசன நீர் மாதிரிகளும் பரிசோதனைகள் செய்யப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், விவசாயிகளின் நிலங்களில் உரப் பரிசோதனைகளும், நுண்ணூட்ட உரப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

மண் பரிசோதனையின் மூலம் இன்னும் சீரிய முறையில் உரப் பரிந்துரை செய்யும்பொருட்டு, ''மண் வள மதிப்பீட்டுப் பரிசோதனைகள்'' சென்ற மூன்று ஆண்டுகளாக விவசாயிகளின் நிலங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பரிசோதனைகளில், மாறுபட்ட மண் கூறுகளில், வெவ்வேறு அளவுகளில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து இடப்பட்டு, பயிர் மகசூல் கணக்கிடப்படுகிறது. இந்தப் பரிசோதனைகள் நெல், சோளம், கம்பு, பருத்தி (இறைவை, மானாவாரி), மிளகாய் மற்றும் கரும்பு போன்ற பயிர்களில் நடத்தப்பட்டன. இப்பரிசோதனைகளின் முடிவுகள் கம்ப்யூட்டர் மூலம் (Computor) பரிசீலிக்கப்பட்டு உர சிபாரிசுகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, வடபுதுப்பட்டியில் நடத்தப்பட்ட ஒரு பரிசோதனையில், எம். சி. யு. 5 பருத்திக்கு ஒரு ஹெக்டருக்கு 195 கிலோ தழைச்சத்தும், 3 கிலோ சாம்பல் சத்தும் இட்டு ரூ. 754 செலவு செய்ததால், மற்ற சாகுபடி செலவுகள் உள்ளிடாமல், ரூ. 10,000 ஒரு ஹெக்டருக்கு பெற முடியும் எனதெரிய வந்தது.

அதேபோல், மானாவாரியில் சோளப்பயிருக்கு ஹெக்டருக்கு 100 கிலோ தழைச்சத்து, 40 கிலோ மணிச்சத்து இடுவதின் மூலம் 3903 கிலோ மகசூல் ஏரமநாயக்கன்பட்டியில் நடத்தப்பட்ட பரிசோதனையில் கிடைத்துள்ளது.

மேற்கண்ட பரிசோதனைகளின் அடிப்படையில் தற்போது, உரப் பரிந்துரைகள் மாற்றி அமைக்கப்பட்டு ஒவ்வொரு பயிருக்கும் இரண்டு உர அளவுகள் பரிந்துரை செய்யப்படுகின்றன. ஒன்று உரச்சிபாரிசு அதிக லாபம் பெறவும், மற்றொன்று சிக்கன உரச் சிபாரிசும் வழங்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் தங்கள் வசதிக்கேற்ப இதில் ஏதாவது ஒரு உரச்சிபாரிசைப் பின்பற்றலாம்.

மண்பரிசோதனை செய்வதற்கு ஆகும் செலவு ஒரு மண்மாதிரிக்கு அல்லது ஒரு பாசன நீர் மாதிரிக்கு ஒரு ரூபாய் மட்டுமே. ஆகையால் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து சிக்கனமாக உரமிட்டு, அதிக விளைச்சலினால் அதிக இலாபமும் பெறலாம்.

நடப்பு ஆண்டில், மதுரையிலுள்ள மண் பரிசோதனை நிலையம் 38 உரப்பரிசோதனைகள் நடத்தத் தீர்மானித்திருக்கிறது. வேளாண்துறையில் இந்தச் சேவையை வேளாண் பெருங்குடி மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பெருவிளக்கத் திடலின் பெரும் பயன்

கோவை மாவட்டம், பெரிய நாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெருவிளக்கத் திடல் விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்த உதவும் புது யுக்திகளைக் கற்பிக்கவும், விவசாய விரிவினையாளர்கட்குக் கூறித் தெரிந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பளிக்கிறது.

இத்திடலில் விரிவினையாளர்களும், விவசாயிகளும் ஒருங்கு இணைந்து செயல்படுகிறார்கள். வேளாண்மை ஒரு இலாபகரமான தொழிலாக அமைந்து உண்டி கொடுக்கும் உழவர்களின் வாழ்க்கையை உயர்த்துகிறது.

நிலம், நீர் விவசாய வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. கூடுதலான நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டு வருவது என்பது நமது மாநிலத்தில் அரிது. நீர் கிடைப்பது அரிதாய் இருப்பதால் அவற்றினைச் சிரத்தையுடன் உபயோகிக்க வேண்டும். இலாபகரமாக விவசாயம் செய்ய மண்ணின் வளம் காத்தல் வேண்டும். அதற்கு நமது வேளாண் குடிமக்கள் கீழ்க்கண்ட யுக்திகளை அவசியம் மேற்கொள்ளல் வேண்டும்.

அ. மண் அரிப்பைத் தடுக்கவும், நிலத்தின் ஈரத்தைக் காக்கவும், நீர்ப்பாசனம், வடிகால் வசதிகள் சம்பந்தமான பிரச்சினைகளைச் சமாளிக்க விஞ்ஞான ரீதியில் நிலச்சீர்திருத்தம் அவசியம்.

ஆ. மண்ணின் உற்பத்தித் திறனைக் காக்கவும், மண்ணில் விளையும் பிரச்சினைகளைத் தவிர்க்கவும், மண் வளத்தை நிர்வகிக்க வேண்டும்.

ஆகையால், மண் வளம், நீர் வளம் பராமரித்தல், திருந்திய சாகுபடி முறைகள் மேற்கொள்வதன் மூலம் விவசாயிகளின் வளம் நிலையான மாறுதல் பெற்று உயர வாய்ப்பளிக்கிறது. அதற்காக விவசாயிகள் செலவிடும் அளவிற்கு அதிக இலாபம் பெற பல வழிகளை விஞ்ஞானிகள் வகுத்துள்ளனர். அம்முறைகள் ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து விவசாயிகளுக்குப் போய்ச்சேரும் கால நேரங்கள் குறைக்கப்பட வேண்டும்.

மானாவாரிக்கு அதிக ஊட்டச் சத்து ஏற்றப்பட்ட பண்ணை எரு பயன்படுத்துதல். இரசாயன உரமிடுதல், நுண்ணூட்டச் சத்துக்கள் இடுதல் மற்றும் களைக் கொல்லி பயன்படுத்துதல் ஆகிய புதிய தொழில் நுட்ப முறைகளை அதிக மகசூல் பெறப் பயன்படுத்த வேண்டும்.

நரசிம்ம நாயக்கன் பாளையம் கிராமத்தில் சோளம் மானாவாரி பெருவிளக்கத் திடல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்பெரு விளக்கத் திடல், நிலத்தின் சரிவிற்குக் குறுக்கே விதைக்கப்பட்டுள்ளது. 120 செ.மீ. அகல மேட்டுப்பாத்தியும், 30 செ.மீ. அகலமுள்ள வாய்க்கால்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மேட்டுப் பாத்தி விதைப்பின் நன்மைகள் :

1. கூடுதல் மகசூல்.

2. மண் அரிப்புக் குறைக்கப்படுகிறது.

3. வாய்க்கால்களில் ஓடி வரும் தண்ணீர் சேகரமாவதுடன் பாத்திகளில் தண்ணீர் உறிஞ்சப்படுகிறது. அதிகத் தண்ணீரை வடிக்க உதவுகிறது.

4. பாத்தியின் மேலுள்ள மண் பொருக்குத் தட்டி இருக்கும். பயிர் அறுவடைக்குப் பின் கோடையில் உழவு செய்ய எளிதாக இருக்கும்.

5. பாத்தியின் மேல் பகுதி விதைப்பதற்கு முன்கூட்டியே தயார் நிலையில் இருக்கும்.

6. பாத்தியின் அகலம் 120 செ.மீ. இருப்பதால் பலவிதப் பயிர் விதைப்பதற்கு ஏதுவாக உள்ளது. இடம் வீணாவதில்லை. களைகள் குறைவாகவுள்ளன.

7. இம்முறையில் தண்ணீர் பாய்ச்சவும் முடியும். பாத்திகளில் தண்ணீர் ஊடுருவிச் செல்லும்.

ஊட்டம் ஏற்றப்பட்ட பண்ணை எரு தயாரித்தல் :

நன்கு சலிக்கப்பட்ட 300 கிலோ தொழு உரத்துடன் 50 கிலோ சூப்பர் பாஸ்பேட் இரசாயன உரத்தை நன்றாகக் கலந்து ஒரு மாதம் மூடி வைக்கவும். பின்பு விதைப்பதற்கு முன் 35 கிலோ யூரியா உரத்துடன் நன்றாகக் கலந்து சோளம் மானாவாரிப் பயிருக்கு அடியுரமாக இட வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட 300 கிலோ ஊட்டமேற்றப்பட்ட பண்ணை எரு 5 டன் தொழு உரம் இடுவதற்குச் சமமாகும்.

நிறைந்த மகசூலுக்கு நீலப்பச்சை பாசி

அண்மையில் நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை மற்றும் தமிழ்நாட்டில் நடத்தப் பட்ட பரிசோதனைகளிலிருந்து நெல்லுக்கு நீலப்பச்சைப் பாசி இடுவதால் விளைச்சல் அதிகரிக்கிறது எனக் கணக்கிடப்பட்டிருக் கிறது.

நீலப்பச்சைப் பாசி, குழி முறையில் தயாரிக்கத் தேவையான பொருட்கள் :

1. சாய்வான குழி :
(அ) குழியின் மேல் அளவு : 1.5 மீ. X 2.5 மீ.

(ஆ) குழியின் கீழ் அளவு 1 மீ. X 2 மீ.

2. பாலிதின் தாள் (20 கேஜ்) 3 மீ. X 2 மீ.

3. சூப்பர் பாஸ்பேட் 100 கிராம்.

4. வயல் மண் 2 கிலோ.

5. மரத்தூள் அல்லது அரிசித் தவிடு 200 கிராம்.

6. கார்போ பியூரான் 3 சதவிகிதம் 25 கிராம்.

7. நீலப் பச்சைப் பாசி விதை 250 கிராம்.

தயாரிக்கும் முறை

1. முதலில் 6 அடி நீளம், 3 அடி அகலம், 9 அங்குல ஆழமுள்ள குழியை வெட்டிக் கொள்ளவும். 2. வெட்டிய குழியின் பக்கங்களையும், அடிப்பாகத்தையும் மண்ணைக் கொண்டு பூசவும். குழியினுள் பாலிதீன் தாளை நன்கு பரப்பி வைத்து மண்ணால் பூசவும். 3. குழியினுள் மண் கலந்த இரசாயன உரக் கலவையை இடவும். (அதாவது 2 கிலோ மண்ணுடன் 100 கிராம் சூப்பர் பாஸ்பேட், 200 கிராம் மரத்தூள் அல்லது அரிசித் தவிடு கலந்து குழியினுள் சீராக இடவும்.) 4. குழியினுள் தண்ணீர் 4 அங்குலம் அல்லது 5 அங்குலம் நிற்குமாறு போதிய அளவு ஊற்றவும். 5. 25 கிராம் கார்ப்போ பியூரான் 3 சதவிகிதம் (பியூராடான்) குருணை மருந்தை ஒரே பரவலாகத் தண்ணீரின் மேல் தூவவும். 6. பின்பு, நன்றாகப் பொடி செய்த 250 கிராம் நீலப் பச்சைப் பாசி விதைகளைக் குழியினுள் தூவவும். 7. தண்ணீர் வற்றியவுடன் 10, 15 நாட்களில் அறுவடை செய்யலாம். அறுவடை ஒவ்வொன்றுக்கும் 4 கிலோ நீலப் பச்சைப் பாசி கிடைக்கும். 8. அறுவடை செய்த நீலப் பச்சைப் பாசியை நிழலில் நன்கு உலர்த்திச் சேகரம் செய்து வைக்கவும்.

மீண்டும் நீலப்பச்சைப் பாசி தயாரிக்க இதே முறைகளைக் கையாளவும்.

அதிக அளவு தயாரிக்கும் முறை :

தேவையான பொருட்கள் :

1. 0.5 செண்ட் பாத்தி (20 ச. மீட்டர்).

2. சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ.

3. நீலப்பச்சைப் பாசி விதை 2.5கிலோ

தயாரிக்கும் முறை :

1) நிலத்தை நன்கு சேறு கலக்கி 0.5 செண்ட் பாத்தி தயாரிக்கவும். பாத்தியில் 2.5 செ.மீ. ஆழத்திற்குத் தண்ணிர் நிறுத்தவும். 2) 2 கிலோ சூப்பர் பாஸ்பேட் சீராக இடவும். 2.5 கிலோ நீலப்பச்சைப் பாசி விதையைப் பொடி செய்து சீராகத் தூவவும். 3) பாத்தியில் எப்பொழுதும் 2.5 செ.மீ. ஆழத்திற்குத் தண்ணீர் நிற்குமாறு பார்த்துக் கொள்ளவும். 4) முதல் அறுவடை 30வது நாளில் செய்யலாம். அதற்குப் பின்பு 15 நாட்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். 5) ஒவ்வொரு அறுவடைக்குப் பின்பும் 1 கிலோ சூப்பர் பாஸ்பேட் இடவும். 6) அறுவடை செய்த நீலப் பச்சைப் பாசியை நிழலில் நன்கு உலர்த்திச் சேமித்து வைக்கவும். 7, தேவைப்பட்டால் 0.5 கிலோ கார்போ பியூரான் இடவும். 8) ஒரு அறுவடைக்கு 8 கிலோ நீலப் பச்சைப் பாசி கிடைக்கும். 9, முதல் அறுவடைக்குப் பின்பு ஒவ்வொரு முறையும் 1 கிலோ சூப்பர் பாஸ்பேட் மட்டும் இட்டால் போதுமானது.

கவனிக்க வேண்டியவை :

1. வெட்டப்படும் குழி திறந்த வெளியில் சூரிய வெப்பம் படும்படியாக இருத்தல் வேண்டும்.

2. மழைக் காலங்களில் குழியை மூடி வைத்தல் அவசியம்.

3. மார்ச்-செப்டம்பர் மாதங்களில் நீலப் பச்சைப் பாசி அதிகமாக வளர்ச்சி அடைந்து பெருகுகிறது.

ஏற்படும் நன்மைகள் :

1. நீலப் பச்சைப் பாசி எக்டேருக்கு 25 கிலோ தழைச் சத்து உரத்தைப் பயிர் வளர்ச்சிக் காலத்தில் கொடுக்கிறது.

2. இடப்பட்ட உரத்தின் திறமையை அதிகரிக்கிறது.

3. மிகக் குறைந்த செலவில் தழைச் சத்தைப் பயிருக்கு அளிக்கலாம்.

4. 4 அல்லது 5 பயிர்க் காலங்களில் இது நிரந்தரமாக வயலில் இருந்து கொண்டு, வயலில் கேடு விளைவிக்கும் படரும் பச்சைப் பாசியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது.

நீலப் பச்சைப் பாசி, பரிந்துரை செய்யப் பட்ட தழை உரத்திற்கு மாற்றாக ஆகாது. பரிந்துரை செய்யப்பட்ட முழு உர அளவுடன் தான் இதனை இட வேண்டும்.

ஒரு தலைமுறையின் மறுபிறப்பு!

அம்புஜம்

மதுரையிலிருந்து போடிநாயக்கனூருக்கு ரயிலில் பயணம் செல்லுவோர் மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தைத் தாண்டியதும், ஒரு சூனியம் மிகுந்த செம்மண் பூமியைத் தொடுவானம் வரையிலும் காணலாம்!

அது ஒரு மார்கழி மாதத்தின் மாலைப்பொழுது! ஆடி மாதத்தில் வெறுமையாகக் கிடந்த அந்தச் செம்மண் பூமி, மார்கழி மாதத்தில் சோளம், கம்பு, தினை ஆகிய புஞ்சைத் தானியங்கள் நிறைந்தும், பயறு வகைச் செடிகளின் பசுமையைத் தாங்கியும் காட்சி தந்து கொண்டு இருக்கிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ''ஆப்பிரிக்கத் தங்கம்'' என அப்பகுதி வாழ் மக்களால் வருணிக்கப்படும் நிலக்கடலைச் செடி, மழைத்தாயின் கருணையால் செழித்து வளர்ந்து கிடக்கிறது.

மாலை நேரத்துச் சூரியன் உலகின் இன்னொரு பக்கத்தில் உதயமாக ஆயத்தப்பட்டு விரைந்து சுழலும் வேளையில், சிந்திடும் ஒளிக்கதிர்கள் மனிதன் ரசிப்பதற்காக இயற்கையன்னையால் உருவாக்கப்பட்ட இனிய காட்சிகள்!

கடலைக் காட்டிற்குக் காவல் காத்துக் கொண்டிருக்கும் தாயம்மாள் கிழவிக்கு இருப்புக்கொள்ளவில்லை. அவளது கணவன் சிவன்காளை சேர்த்து வைத்த ஐந்து ஏக்கர் புஞ்சை நிலத்தின் வடகோடியில் தோண்டியிருக்கும் கிணற்று மேட்டில் வேய்ந்துள்ள ஓலைக் குடிசைக்குள்ளிலிருந்து வெளிப்பட்டு, இரவுச் சாப்பாடு கொண்டு வரும் தன் பேரனை வழி நோக்கி விழி நிமிர்த்திப் பார்த்தாள். அறுபது வயதைத் தாண்டி விட்ட தாயம்மாளின் கண்கள மாலைச் சூரியனின் மோகனக் கதிர்களின் ஒளிபட்டுக் கூசிற்று! விழிகளுக்கு மேலாக நெற்றியில் இடது கையைக் குடைப்பிடித்தாற்போல் வைத்துக் கொண்டு, கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் பார்வையைச் செலுத்தினாள்.

பேரன் வருவதாகக் காணோம். காலையில் கொஞ்சம் கூழ் குடித்தது தான்! மதிய உணவை அவள் பார்த்ததே இல்லை! அவள் மட்டுமல்ல...நிலத்தை நம்பி வாழ்கின்ற கிராமத்து மக்களில் பெரும்பகுதியினரின் நிலை இது தான்!

தாயம்மாளுக்கு மயக்கமாக வந்தது. மீண்டும் குடிசைக்குள் நுழைந்து, அங்கே கிடந்த கல்லில் தலைவைத்து, கிழிந்து போன பாயில் படுத்தவாறு, நினைவுகளில் மூழ்கிப் போனாள்!

அந்தக் கிராமத்தில், ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த அவளது கண்கண்ட தெய்வம் ''சிவன்காளை'' சீமானாக வாழ்ந்த அந்த நாட்கள்!

எதிரே தெரியும் கிணறு! அவள் எண்ணங்களில் பூத்த நறுமலரையெல்லாம் இரக்கமின்றி அழித்து விட்ட பாழும் கிணறு! கடன் வாங்கிக் கிணறு வெட்டி புஞ்சையை நஞ்சையாக்கித் தானும் வாழ்ந்து, உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பணியாற்றிய பெருமை கிட்டும்

என்ற எண்ணத்தில், அரசின் கூட்டுறவு நிலவள வங்கியில் கடன் வாங்கி வெட்டிய கிணறு பொய்த்துவிட்ட நாளில், அவள் கணவன், சிவன்காளையின் பூதவுடலும் பொய்த்துப் போய் விட்டது!

ஓர் அரசியைப் போல் வாழ்ந்து கொண்டிருந்த தாயம்மாள், விதவையானாள். வாழ்வின் துயரங்களை அவள் அனுபவிக்கத் தொடங்கினாள்!

எதையெல்லாமோ எண்ணிப் பார்த்த தாயம்மாள், நினைவுகளிலிருந்து விடுபட்டவளாய் குடிசைக்கு வெளியே தலையை நீட்டி மீண்டும் ஒருமுறை எட்டிப் பார்த்தாள்.

கூப்பிடு தூரத்தில் தெரியும் கைகாட்டி மரத்தையொட்டிய தண்டவாளத்தைக் கடந்து பேரன் பெரியசாமி சோற்றுச் சட்டியைத் தலையில் வைத்துப் பிடித்தவாறு வந்து கொண்டிருந்தான்.

மதுரையிலிருந்து போடிநாயக்கனூருக்குச் செல்லும் ரயில் கிழக்கேயிருந்து ஒலி எழுப்பிக்கொண்டு வந்தது. ரயில் வருவதற்குள் தண்டவாளத்தை வேகமாகக் கடந்துவிடும்படி பேரனை இரைந்து கத்தி எச்சரிக்கை செய்தாள் கிழவி!

தாயம்மாள் இரவு உணவைப் பேரனுக்குப் பகிர்ந்தளித்து உண்டு மகிழ்ந்தாள். இந்த ஆண்டு பூமித்தாயின் ஆசைதீர மழைமகள் அழுது தீர்த்திருந்தாள்! தாயம்மாள் கிழவியின் நினைவுகள் அவள் வாயில் அசைபோட்டுக் கொண்டிருக்கும் வெற்றிலையோடு போட்டி போட்டுக்கொண்டிருந்தது.

எதையெல்லாமோ நினைத்துப் பார்த்த கிழவி நித்திரையில் ஆழ்ந்து போனாள்!

* * * *

...ரயில்வே லயனையொட்டியிருக்கும் வண்டிப் பாதையில் அரசுக்குச் சொந்தமான ''ஜீப்'' ஒன்று வந்து நிற்கிறது. அதிலிருந்து சில அதிகாரிகளும், சேவகர்களும் இறங்குகின்றனர். தாயம்மாள் கிழவி ஒரு பரபரப்போடும், நெஞ்சப் பதைப்போடும் அவர்களைப் பார்க்கிறாள்!

ஜீப்பிலிருந்து இறங்கிய அதிகாரிகள் கிணற்று மேட்டுக்கு வந்து சேர்ந்தனர். சேவகர்களின் அதிகாரக்குரல் தாயம்மாள் கிழவியை ஆணையிட்டு அழைத்தது. சர்வ அங்கமும் கூனிக் கூசியபடி கிழவி, அதிகாரி

களை மெல்ல நெருங்கினாள். அவர்களுக்கு மத்தியில் உள்ளூர்க் காரர்கள் சிலரும் இருந்தனர்.

அரசாங்கத்திடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாத காரணத்தால், காலம் கடந்த கடனாகிப் போனதாலும், வேறு வழியில்லாமல் போனதாலும், அவளது கணவன் ''சிவன்காளை'' சேர்த்து வைத்து விட்டுப்போன ஐந்து ஏக்கர் புஞ்சை நிலத்தையும் ஏலம் விட்டு, அரசு தனது கடனை எடுத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் நிலத்தை ஏலம் விட வந்துள்ளதாகவும் அதிகாரிகளில் ஒருவர் கிழவியிடம் கூறினார்.

தன் பாதங்களுக்கு நேராகப் பூமி வெடித்து விட்டதைப் போன்ற உணர்வுகள், கிழவியின் நெஞ்சைக் கலக்கியது.

இங்கே வெட்டினால் ஏழு கெஜத்தில் நிச்சயம் தண்ணீர் கிடைக்கும் என்ற சோசியன் சொல்லைக்கேட்டு, கிணறு வெட்டிய இடத்தில் ஏழு கெஜத்திற்குக் கீழே பெரும் பாறையொன்று குன்றாகக் காட்சியளித்த நாளில் கணவன்-சிவன்காளை மனம் நொந்து மாண்டு போனாரே, அந்த நாளின் துயரத்தைக் காட்டிலும் இந்த அதிகாரி தந்த துயரச் செய்தியால், தனது வம்சமே அழிந்துவிட்டதாகக் கருதிய கிழவி ''ஓ'' வெனப் பெரும் குரலெடுத்து அழத் தொடங்கினாள்.

அதிகாரிகளிடம் மண்டியிட்டாள்! ''இந்த ஆண்டு நிச்சயம் நல்ல விளைச்சல் வரும். எப்படியும் கடனில் ஒரு பகுதியை அடைத்து விடுமாறு என் மகன் நீலகண்டனிடம் சொல்லியிருக்கிறேன். கருணை காட்டுங்கள் அய்யா!'' என்று கெஞ்சினாள்.

தங்களால் உதவி செய்ய முடியாத நிலையில் இருப்பதாகக் கூறிய அதிகாரி, நிலத்தை ஏலம் விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஆணையிட்டுக்கொண்டிருந்தார். வட்ட ஆட்சியரும், கூட்டுறவு அதிகாரிகளும், ஊரிலுள்ள புதிய பணக்காரர்களில் சிலரும் அதிகாரியின் கட்டளைகளை நிறைவேற்றத் தயாராகிக்கொண்டிருந்தனர்!

ஏலம் தொடங்கிற்று!

தன்னுடைய கணவன் சிவன் காளையிடம் குற்றேவல் புரிந்த குமாரவேல் தன்னுடைய நிலத்தை ஏலம் எடுக்கத் துடித்துக் கொண்டிருப்பதை அறிந்த கிழவி, வீட்டிலிருக்கும் மகன் நீலகண்டனை அழைத்து வருமாறு பேரனை விரட்டிவிட்டாள்.

அதோ! மகன் நீலகண்டன் கையில் கத்தியுடன் குமாரவேலுவை நோக்கிப் பாய்கிறான்.

கொலை நடக்கப் போகிறது!...

அலறித் துடித்து எழுந்திருக்கிறாள் கிழவி!

* * * *

''தன்னுடைய கணவன் வாங்கிய கூட்டுறவுக் கடனைத்திருப்பிச் செலுத்தாவிட்டால், நிலத்தை ஏலம் விட நேரிடும்'' என்ற எச்சரிக்கையை அன்றையப் பகல் பொழுதில் கூட்டுறவு அதிகாரிகள் விட்டுச் சென்றிருந்தனர். அந்த நினைவுகள் தந்த துயரக் கனவை நினைத்துப் பார்த்த தாயம்மாள் கிழவி, அப்படி உண்மையாகவே நடந்து விடுமானால் என்ன செய்வது என்று நினைத்தவுடன் நடுநிசியில் புலம்பத் தொடங்கிவிட்டாள்.

துணைக்குப் படுத்திருந்த பேரன் பெரியசாமி விழித்துக்கொண்டு, பாட்டியின் அழுகைக்குக் காரணம் தெரியாமல் திகைத்தான்.

பாட்டி தான் கண்ட கனவையும், நினைவையும் பேரனிடம் கூறினாள்!

''பாட்டி! இதற்காக ஏன் அழுகிறாய்? நீ கனவு கண்டது உண்மையாக இருக்கலாம். ஆனால் பயப்படத் தேவையில்லை.

நீ கனவு கண்டதுபோல் நம் தலைமுறை அழிந்து போகாது!

நம்மைப் போன்ற எத்தனையோ ஏழைக் குடும்பங்களின் நிலையறிந்த தமிழக அரசு சிறிய விவசாயிகளைக் காக்கப் புதிய திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.

''அத்திட்டத்தின்படி சிறு விவசாயிகளைப் பொறுத்தவரையில் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கி, கிணறு வெட்டிப் பொய்த்துப் போனால், ஒன்பதாயிரம் ரூபாய் திருப்பிச் செலுத்தத் தேவையில்லை. என்னுடைய ஆசிரியர் இன்றுதான் அரசின் இப்புதிய திட்டத்தை எங்களுக்குச் சொன்னார்'' என்றான், பேரன்.

பேரன் சொல்லுவதை நம்ப முடியாமல் தாயம்மாள் கிழவி புருவங்களை மேலுயர்த்தி வியப்புத் தெரிவித்தாள். தன்னுடைய ஊருக்கு வருகை தந்திருந்த தமிழக அரசின் முதல்வரைத் தானும் ஒருமுறை தரிசித்ததை நினைவு படுத்திக் கொண்டாள். இரக்கம் மிகுந்த அவரின் நெஞ்சத்திற்கும், அரசிற்கும், நன்றி செலுத்திக் கொண்டாள்.

''இந்த ஆண்டு விளைச்சல் நன்றாக இருக்கும். கடலை விற்று வரும் பணத்தில் ஆயிரம் ரூபாயை அரசுக் கடனுக்கு நாம் செலுத்திவிடுவோம். நம்முடைய நிலம் ஏலம் போகாது!'' என்று பேரனிடம் பெருமையோடு கூறிக் கொண்டாள் கிழவி.

''ஆமாம் பாட்டி! நம்மைப் போன்றவர்களும், அரசிடம் கடன் பெற்றுக் கிணறு வெட்டி நீர் கிடைத்து நன்கு விவசாயம் செய்பவர்களும், அரசுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்தினால் தான், அரசின் கரம் வலுப்பெற்று, நம்மைப் போன்ற மற்ற ஏழை-எளிய விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவ முடியும்' என்றான் பெரியசாமி.

''ஓராயிரம் என்ன, இரண்டாயிரம்கூட கட்டலாம்! என் தலைமுறை இன்று மறு பிறவி எடுத்தது''—என்று தாயம்மாள் கிழவி மகிழ்ச்சியுடன் கூறினாள்.

'நாட்டுக்குத் தொண்டு
நமக்கு மகிழ்ச்சி!
நடக்கட்டும் போர்' என்றான்
வாழ்க சிதம்பரன் பேர்!

கேட்டுக்கும் வெள்ளையர் நீட்டுக்கும் துப்பாக்கி
வேட்டுக்கும் வெஞ்சிறை வீட்டுக்கும் அஞ்சாமல்
நாட்டுக்குத் தொண்டு---

வீட்டுக்கு வீடு விளக்கேற்றினான் எங்கும்
விடுதலை உணர்ச்சி உண்டாக்கினான்,
கூட்டுத் தொழில்களும் ஆக்க வேலைகளும்
குற்றமென்று சொன்ன கொடியர்க்கும் அஞ்சாமல்
நாட்டுக்குத் தொண்டு.....

தண்டா விளைச்சல்கள் தங்கச் சுரங்கங்கள்
அண்டும் பெருநாடே எங்கள் உடைமையென்று
தண்டோராப் போட்ட தமிழ னவனையே
தாழ்த்த முயன்ற தக்கைகட் கஞ்சாமல்
நாட்டுக்குத் தொண்டு.....

ஒப்போம் அயல்நாட் டுடைமைகள் என்றான்,
உரிமை எவற்றிலும் எமக்கென்று சொன்னான்.
கப்பல் கட்டி ஓட்டினான், வெள்ளையர்
செக்கிழுக்க வைத்தார் அந்தக் கேட்டிலும்
நாட்டுக்குத் தொண்டு.....

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

கப்பலை யோட்டிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன்—ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

மஞ்சிலா வான மதியின் ஒளிபோல
விஞ்சிநீ டூழி விளங்குகவே—வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்ப்புகழ்தான்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.

– கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

எல்லாரும் தேசபக்தர் இந்த நாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்பார்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணுத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்த நாளில்
வல்லாளர் சிதம்பரனார் சிறையிற் பட்ட
வருத்தமெலாம் விரித்துரைத்தால் வாய்விட் டேங்கிக்
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டிக்
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்

– நாமக்கல் கவிஞர்

கேட்டதெல்லாம் இங்கே கிடைக்கும்!

"உங்கள் கிணற்றை ஆழப் படுத்த வேண்டுமா? நவீன இயந் திரங்கள் வாடகைக்குக் கிடைக் கும்''

இந்த அறிவிப்பை எங்கேயா வது பார்த்ததாக நினைவு இருக் கிறதா?

கோவை மாவட்டத்தில் துடிய லூர் கூட்டுறவு விவசாய சேவா நிலையத்தில் (The Tudiyalur Co-operative Agricultural Services Ltd.,) இதுபோன்ற அறிவிப்பு களைப் பார்க்கலாம்.

கோயம்புத்தூரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள இந் நிலையம், 1955 - ஆம் ஆண்டு ''துடியலூர் கூட்டுறவு கிராம வங்கி' என்ற பெயரில் அமைக் கப்பட்டது.

வெள்ளிவிழா ஆண்டை நோக்கி வீறுநடை போட்டுவரும் இந்நிலையம், விவசாயிகளுக்கு ஒரு காமதேனுவாக, கேட்ட தெல்லாம் கிடைக்கும் வற்றாத ஊற்றாக விளங்கி வருகிறது.

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா நிலையம் என்ன செய் கிறது? அதன் பணிகள் என்ன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வோமா?

ஒரு விவசாயி, வேளாண்மை யில் நல்ல மகசூலும், அதிக இலாபமும் பெறவேண்டும் என்று எண்ணினால் அதற்குத் தேவை யான விதை, உரம், பூச்சி மருந்து, உழவுக் கருவிகள் முதலியன வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அவனுக்குப் போதிய பண வசதி இருக்க வேண்டும்.

இத்தனையும் இருந்தால் தானே அவன் நினைத்தது நிறை வேறும்? அத்தனைக்கும் அவன் எங்கே போவான்?

பயிர்க்கடன் ஓரிடத்தில் பெற லாம், உரங்களை இன்னோரிடத் தில் பெறலாம்; பூச்சி மருந்து எங்கேயாவது வாங்கிக் கொள்ள லாம். உழவுக் கருவிகளை ஒருவர் தரலாம். இப்படி இதற் கெல்லாம் ஒவ்வோரிடமும் அலைய வேண்டும்.

இவையெல்லாம் ஒரே இடத் தில் கிடைத்தால் எப்படி இருக் கும்?

துடியலூரிலுள்ள இந்நிலை யம், இதற்கெல்லாம் வழிவகை செய்கிறது.

* விவசாயிக்கு இங்கே கடன் தரப்படுகிறது.

* நல்ல தரமான விதைகள் வழங்கப்படுகின்றன.

* உரங்கள் தந்து உதவி செய் யப்படுகின்றன.

* பூச்சி மருந்துகள் கொடுக் கப்படுகின்றன.

* தெளிப்பான்கள், டிராக் டர்கள் வாடகையில் தரப்படு கின்றன.

* உழவுக் கருவிகள் பழுது பார்க்கப்படுகின்றன.

—இவையனைத்தும் ஒருங்கே ஒரே இடத்தில் கிடைப்பதால், எந்த விவசாயிதான் இதில் உறுப் பினராகச் சேர முன் வரமாட் டார்?

இந்தக் கூட்டுறவு நிலையம், எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு நல்ல பணியையும் செய்து வரு கின்றது.

அறுவடைக்குப் பின், விளைச் சல் பொருள்களை வாங்கி, பத் திரமாகச் சேமித்து வைத்துப் பாதுகாத்து, பிறகு நல்ல விலைக்கு விற்றுப் பணமும் தரு கிறது.

இந்த நிலையத்தின் செயல் எல்லை 13 வருவாய்க் கிராமங் களையும், 56 சிற்றூர்களையும தன்னகத்தே கொண்டது. இந்த எல்லைக்குள் உள்ள மக்கள் தொகை 1,10,442.

இந்நிலையத்தில் யார் வேண்டு மானாலும் உறுப்பினர்களாகச் சேரலாம்-ஆனால், அவர்கள் விவ சாயிகளாக இருக்க வேண்டும்!

இந்நிலையத்தில் 1955 ஆம் ஆண்டு 397 உறுப்பினர்கள் இருந்தனர். அவர்கள் செலுத்தி யுள்ள பங்கு மூலதனம் ரூ. 32,460. 1978 ஜூன் 30 முடிய 11,243 உறுப்பினர்கள் சேர்ந் துள்ளனர். அவர்கள் செலுத்திய பங்கு மூலதனம் ரூ. 12.58 இலட்சம்.

கையில் காசு இருந்தால்தானே எந்த வேலையையும் ஒழுங்காகச் செய்ய முடியும்? ஒரு விவசாயி, பயிர் செய்து அமோக விளைச்சல் கண்டு இலாபம் சம்பாதிக்கலாம் என்று கனவு காணலாம் .ஆனால், அது செயல் வடிவம் பெற அவ னுக்குப் போதிய பணம் வேண் டும். அத்தேவையை நிறை வேற்றுகிற வகையில் விவசாயிக் குத் தக்க காலத்தில் கடன் தந்து உதவுகிறது இந்நிலையம். நீண்ட காலக் கடனாகவும், குறுகிய காலக் கடனாகவும் உறுப்பினர் களுக்கு இது பல்வேறு கடன்கள் தந்து உதவுகின்றது.

விவசாயிகள் கடன் கேட்டு பிறகு அதைப் பெற வீணாக அலைய வேண்டியதில்லை. குறித்த காலத்தில், விரைவாகக் கடன் தரப்படுவதால், விவசாயி யும் உடனே செயலில் இறங்க முடிகிறது.

சேமமுற வாழ்வதற்குச் சேமிப்பு அவசியம் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந் நிலையம். விவசாயிகள் தாமாகவே முன்வந்து, நிலை யான சேமிப்பில் (Fixed Deposit) சேர்ந்துள்ளனர்.

அடுத்து, விவசாயிக்குத் தேவைப்படுவது விதைகள்; அது வும் நல்ல தரமான விதைகள். அவற்றைத் தேசிய விதைகள் நிறுவனத்திடமிருந்து வாங்கி, இந்நிலையம் விவசாயிகளுக்கு வழங்குகிறது.

விதைகளைச் சுத்தப்படுத்தித் தரவாரியாகப் பிரிக்கும் இயந் திரங்களையும் இங்கே நாம் காணலாம்.

உழவர்களுக்குத் தேவையான அம்மோனியம் சல்பேட், யூரியா, கால்சியம், அமோனியம் நைட் ரேட் என். பி. கே. கலவை உரங்கள் போன்றவற்றையும் இந்நிலையம் வழங்கி வருகின்றது.



பருத்தி விதைகளின் பஞ்சை நீக்கிச் சுத்தப்படுத்தும் இயந்திரம்.

பயிர்களுக்கு வேண்டிய கலப்பு உரங்களை இந்நிலையமே தயா ரித்து, விவசாயிகளுக்கு வழங்கு கின்றது. 'அசோகா மார்க்' கலவை உரங்கள் என்று இதற்குப் பெயர். இந்த உரங்கள் பல கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன.

அடுத்து, பயிர்களுக்குத் தேவைப்படுவது பூச்சிக் கொல்லி மருந்துகள். இவற்றை விற்பனை செய்யும் கூட்டுறவுச் சங்கங்களில் இந்நிலையம் முன்னோடியாக விளங்குகிறது. பல்வேறு நிலை யங்களிடமிருந்து மருந்துகளை வாங்கி, இது குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்குகிறது. 1977-78ஆம் ஆண்டில் ரூ. 103.79 இலட்சம் மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்துகள் விற் பனை செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையத்திலுள்ள நவீன பரிசோதனைக் கூடத்தில் பரி சோதிக்கப்பட்ட இம்மருந்துகள் ஐ. எஸ். ஐ. முத்திரை பெற்றவை யாகும்.

இந்நிலையத்தில் சுமார் 150 தெளிப்பான்கள் (Sprayers) உள் ளன. இவை விவசாயிகளுக்கு வாடகைக்குத் தரப்படுகின்றன. சொந்தமாகத் தெளிப்பான்கள் வைத்திருக்கும் விவசாயிகள், அவை கெட்டுப்போனால் இங்கே கொண்டு வந்து பழுது பார்த்துக் கொள்ளலாம். அதற்கென இங்குப் பழுது பார்க்கும் நிலைய மொன்று, திறமைமிக்கவர் களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

கால்நடைகளுக்குத் தேவை யான நல்ல தரமான தீவனத்தை யும் இந்நிலையம் தயாரிக்கின் றது. 'அசோகா மார்க்' கால் நடை கோழித் தீவனங்கள் விஞ் ஞான முறைப்படி சேமித்து விவ சாயிகளுக்கும், அரசு நிறுவனங் களுக்கும், கூட்டுறவுச் சங்கங் களுக்கும் வழங்கப்பட்டு வரு கிறது. கோழித் தீவனமும் இந் நிலையத்தாரால் தயாரிக்கப்படு கின்றது.

கூட்டுறவுத் துறையில் விவ சாயிகளால் விவசாயிகளுக்காகத் தயாரிக்கப்படும் கால்நடைத் தீவனத்தில் தரத்தில் சிறந்த குதிரை மசால், சாம்பல் சத்து, கால்சியம் மற்றும் பிற வைட்ட மின்கள் கலந்துள்ளன. கோழித் தீவனத்தில் தரத்தில் உயர்ந்த சகல ஊட்டப் பொருட்களும் பரி சீலிக்கப்பட்டு, போதுமான விகி தாசாரத்தில் சேர்க்கப்பட்டு வைட்டமின், நோயெதிர்ப்பு மருந்துகள், உப்பு வகைகள் ஆகியவை கலந்துள்ளன.

இந்நிலையத்தின் சார்பில் உழவுக்கருவிகள் தயாரிக்கும் தொழிற்கூடம் (Agro Tools Industries) ஒன்றும் இயங்கி வருகின்றது. மின்சாரத் தெளிப் பான்கள், கரும்புச் சாறு பிழியும் இயந்திரங்கள் முதலானவையும் இங்குத் தயாராகின்றன.

விதைகளைத் தூய்மையாக்கித் தரம் பிரிக்கும் இயந்திரம்.

'ட்யூகாஸ்' என்ற பெயரில் விசைத் தெளிப்பான்கள் கருவிகளையும் (Power Sprayers) இங்குள்ள தொழிற்கூடமே தயாரிக்கின்றது. அத்துடன் எல்லா விதமான தெளிப்பான்களையும் இது பழுதுபார்க்கிறது. ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள விசைத் தெளிப்பான்களுக்கான உதிரி பாகங்கள் இங்கு இருப்பில் வைக்கப்பட்டு விற்கப்பட்டுள்ளன.

இந்நிலையம், கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் உதவியுடன் 50 சாண எரிவாயு சாதனங்களைப் பல்வேறு இடங்களில் அமைத்துள்ளது. இங்குள்ள உழவுக் கருவிகள் தொழிற்கூடப் பொறியாளர்கள் பொறுப்பில் அமைந்துள்ளன.

பருத்தியின் இருப்பிடம் கோவை மாவட்டம் என்று சொல்லலாம். நீண்ட இழை உகாண்டா பருத்தி எம். சி. யூ. 5 ரகம் பருத்தி இங்குதான் பயிரிடப்படுகிறது. அரசினரிடமிருந்து தரமான பருத்தி விதைகளை வாங்கி, விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. பருத்தி பயிரிட விதைகள், மருந்துகள், உரங்கள் முதலானவையும் வழங்கப்படுகின்றன. விளைந்த பருத்தியை இந்நிலையம் நல்ல விலைக்கு வாங்கிக் கொள்கிறது. பருத்தி விதைகளைச் சுத்தப்படுத்தும் நவீன இயந்திரங்களை இங்கே நாம் காணலாம்.

டிராக்டர் மட்டுமின்றி எல்லா விதமான விவசாய இயந்திரங்களும் இங்குப் பழுது பார்க்கப்படுகின்றன. சேவை மனப்பான்மையுடன் இந்நிலையம் பணி புரிந்து வருவதால், 'கேர்' நிறுவனம் சுமார் எட்டு இலட்சம் ரூபாய் செலவில் டிராக்டர்கள், இயந்திரக் கலப்பைகள், மருந்தடிக்கும் கருவிகள், டிரெயிலர்கள் போன்ற உழவுக் கருவிகளை நன்கொடையாக வழங்கியுள்ளன.

இந்த இயந்திரங்களை விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் 1977-78 ஆம் ஆண்டில் கிடைத்த வருமானம் ரூ. 3.20 இலட்சமாகும்.

இந்நிலைய உறுப்பினர்கள், நவீன விவசாய முறைகளைத் தெரிந்து கொள்ளும் வகையில் புதிய புதிய வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன.

இந்தத் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா நிலையம் பல புதிய திட்டங்களையும் செயலாக்கத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறது.

எல்லாவகையான விதை உற்பத்தி, விதைப்பெருக்கம் ஆகிய பணிகளுக்காக ரூ. 1.7 கோடி மதிப்பீட்டில் ஒரு தீவிரத் திட்டத்தைத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் அனுமதித்திருக்கிறது. இந்தத் திட்டத்தினால் கோவை மாவட்டத்தில் 23 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன் பெறும். இந்த நிலையத்தைத் தவிர, கோவை மாவட்டத்திலுள்ள 9 வட்டாரக் கூட்டுறவு விற்பனைக் கழகங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்முறைப்படுத்தும்.

பால் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களுக்கு அவர்களது அசையாப் பொருள்களை ஈடாகப் பெற்றுக் கொண்டு கடன் தொகைகள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்திற்கு ரூ. 15,000 செலவிடப்படவுள்ளது.

விரைவில் அமலாக்கவிருக்கும் திட்டம் ஒன்றும் உள்ளது. அது, துடியலூரைச் சுற்றிலும் ஏறக்குறைய 400-லிருந்து 500 ஏக்கர் வரை தாழை பயிரிட்டு, அதிலிருந்து தைலம் பிரித்தெடுக்க ரூ. 13.65 இலட்சம் செலவில் இயந்திரத்தை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உலகுக்கு அச்சாணியாகத் திகழும் உழவுக்கு-அந்த உழவுத் தொழில் செய்யும் உழவர்குடிப் பெருமக்களுக்குத் தேவையான உதவிகளையெல்லாம் ஒழுங்காகச் செய்து வரும் இந்நிலையம், இந்தியாவிலேயே முதன் முதலில் துவக்கப்பட்ட பெருமையோடு தலைநிமிர்ந்து நிற்கிறது!

— பி. வி. ஜி.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 71–வது பிறந்த நாள் விழா

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 71-வது பிறந்தநாள் விழா இந்த ஆண்டு தமிழக அரசின் சார்பில் சென்னையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை இராஜாஜி மண்டபத்தில் 30-10-78 திங்கள் மாலை 6 மணிக்கு விழா தொடங்கியது.

விழாவிற்கு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருஉருவப்படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்கள். அமைச்சர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நாட்டுப்பற்று, தமிழ் ஆர்வம், சொல்லாற்றல், சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட நலிந்த மக்களின் மேம்பாட்டுக்காக ஆற்றிய தொண்டு ஆகியவற்றைக் குறிப்பிட்டார்கள்.

திரு எஸ். எஸ். இராஜேந்திரன், துணைத் தலைவர், மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழு, திரு டி. வி. நாராயணசாமி செயலர், தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம், திரு பி. மாயத்தேவர், எம். பி. திரைப்பட நடிகர் திரு ஆர். முத்துராமன், திரைப்பட இயக்குநர் திரு பாலமுருகன் ஆகியோர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் அருந்தொண்டை, தியாக வாழ்வைப் போற்றிப் பேசினார்கள்.

செய்தித்துறையின் துணை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். உதவி இயக்குநர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் நன்றி கூறினார்.



பசும்பொன் கிராமத்திலுள்ள தேவர் நினைவு மண்டபத்தில் 30.10.78 அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.

பிஞ்சு நெஞ்சங்களில் நிறைந்திருந்த நேரு



கூட்டுறவு - முன்னேற்றத்தின் அடித்தளம்

— ஜவகர்லால் நேரு

எங்கு நோக்கினாலும், அதிலும் இந்தியாவில் மிகவும் குறிப்பாக, கூட்டுறவு இயக்கம்தான் உச்சமான முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. பலவகைக் காரணங்கள் மூலம் அந்த இயக்கம் முக்கியமானதாகிறது.

நம் சமுதாயத்தில் நலிந்துள்ள பகுதியினர்க்கு உதவ வேண்டும் என்பது நம்முடைய முதன்மையான குறிக்கோள்களில் ஒன்று; இதற்குக் கூட்டுறவு முறை உதவும், அல்லது அந்த வழியில் உதவ வேண்டும்.

கூட்டுறவு என்பது என்ன? அது கடன் கொடுக்கும் பாங்க் நடவடிக்கை மட்டுமல்ல; கிராமப் பொருளாதாரத்தின் முதன்மையான துறைகளிலெல்லாம் பங்கு பெறுவதே நம்முடைய கூட்டுறவு. பொதுமக்களின் இயல்பான ஊக்கத்தை அடிப்படையாகக்கொண்டிருக்க வேண்டும் என்பதும், மேல்நிலையிலிருந்து அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற இயக்கமாக வடிவெடுத்து விடக்கூடாது என்பதும்தான் கூட்டுறவின் முக்கியமான கருத்துக்கள்.

அரசாங்கத்தால் உதவமுடியும்; உதவவும் வேண்டும். ஆனால், பொதுமக்களின் பாராட்டுதல், பொதுமக்களின் கருத்து ஆதரவு, பொதுமக்களின் கூட்டுறவு ஆகியவற்றின் முதிர்ச்சியிலேதான் கூட்டுறவு இயக்கம் எழவேண்டும்.

விவசாயிகளுக்கும், சமுதாயத்தில் சமூக வகையாலும் பொருளாதார வகையாலும் நலிந்தவர்களுக்கும் எவ்வளவு தூரம் உதவியிருக்கிறது என்று பார்ப்பதுதான், இந்த இயக்கத்தின் வெற்றியைச் சோதித்து அறியும் வழியாகும்.

கிராமங்களை அடையும்போது ஒவ்வொரு விவசாயிக்கும் உள்ள சிக்கல்களைப் புரிந்து கொள்வீர்கள்; அவனுக்கு இந்த இயக்கத்தில் ஆர்வம் உண்டாகும்படிச் செய்ய வேண்டும்; அவனுக்கென்றே தோன்றியுள்ள இந்த இயக்கம் அவனுக்கும் கிராமத்துக்கும் எவ்வாறு நன்மை செய்யும் என்பதை அவன் உணரும்படி செய்ய வேண்டும். உள்ளூர் நிலவரத்தை அவன் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, சமூகத்திற்கு அவன் ஆற்றவேண்டியவை என்ன, சமூகத்திலிருந்து அவனுக்கு என்ன கிடைக்கும் என்பதை அவன் புரிந்து கொள்ள வேண்டும்.

எத்தனையோ காரியங்களுக்கு இந்தியா சரியான களமாக இருக்கிறது. உதாரணத்திற்கு, விவசாய முன்னேற்றத்தை எடுத்துக் கொள்வோம். எங்கெங்கே சிறந்த விவசாயி இருக்கிறானோ அங்கெல்லாம் 300 சத விகிதம் 500 சதவிகிதம்-சில சமயங்களில் அதற்கும் மேலாக—விளைச்சலைப் பெருக்கியிருப்பதைக் காண்கிறோம்.

இந்த நாட்டில் விளைச்சலை மிக விரைவாகப் பெருக்கிட முடியும் என்பதில் எனக்கு இம்மியளவும் ஐயமில்லை. ஓர் இடத்தில் அதைச் சாதிக்க முடியும் என்றால், பத்து இடங்களில் அல்லது அல்லது நூறு இடங்களில் அல்லது ஆயிரம் இடங்களில் அதையே சாதிக்க முடியும்; எல்லா இடங்களுக்கும் ஒரே சூழ்நிலையை ஏற்படுத்தினால், ஓர் இடத்தில் அடைந்த சாதனையை எல்லா இடங்களிலும் அடையலாம். விவசாயத்துறைக்குச் சொன்ன இந்தக் கருத்து மற்றத் துறைகளுக்கும் பொருந்தும். வாய்ப்பு மட்டும் கொடுத்து விட்டால், பயனடையும் திறமையும், தெளிவுபெறும் திறமையும் நம் மக்களுக்கு உண்டு.

சில சமயங்களில் நாம் திட்டங்கள் வகுக்கிறோம்; ஆனால் போதிய அளவு வேகமாக அவற்றை நிறைவேற்றுவதில்லை. இன்று நம் முன் எழுகின்ற துன்பங்கள் எவ்வளவோ உண்டு; இப்படிப்பட்ட கஷ்டங்கள் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கும். இந்தத் துன்பங்களைப்பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், நாம் முன்னேறுவதன் விளைவாகவே இந்தத் துன்பங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை உணரலாம். ஆகையால், இந்தத் துன்பங்களைக் கண்டு நாம் தளர வேண்டியதில்லை. மேலும் முன்னேறுவதற்கான அறைகூவல்களாக அவை அமைய வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளில் முன்னேற்றத்துக்கு உரிய ஏதோ ஒரு வகையானக் கடைக்கால் இட்டிருக்கிறோம். அந்த அஸ்திவாரத்தின் மீது கட்டடம் எழுப்புவது எளிமையாக இருக்கும். அவ்வாறே நாம் மேன்மேல் எழுப்புவோம் என்று நம்புகிறேன். கூட்டுறவு இயக்கமானது புதிய பாரதத்தைப் படைக்கும் இந்த மாபெரும் திருப்பணியிலே சிறப்பாகப் பங்கு பெற முடியும்.

(ஆதாரம்: ஜவஹர்லால் நேருவின் கருத்துரைகள்.)

நேரு பல நிலைகளில்.

காந்தியடிகள் இறந்தபோது...

எச். வி. ஆர். அய்யங்கார்

1948 ஜனவரி 30ஆம் தேதி பிற்பகலில் காந்திஜியை நாதுராம் கோட்ஸே சுட்டுவிட்டான். அப்போது ராஜாங்க காரியாலயத்தில் தமது ஆபீஸ் அறையில் பிரதம மந்திரி வேலை செய்து கொண்டிருந்தார். பிர்லா மாளிகையிலிருந்து எனக்கு டெலிபோன் செய்தி வந்தது. உடனே பிரதமரின் அறைக்குள் சென்று அவரிடம் செய்தியைச் சொன்னேன். அதை நம்பாதது போல ஒரு கண நேரம் என்னை அவர் வெறித்துப் பார்த்தார். பிறகு தமது குல்லாயை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டார். ''சரி; புறப்படுவோம்'' என்றார். எழுந்திருந்து கொண்டே, ''ரொம்பக் கவலைக்கிடமோ?'' என்று கேட்டார். நான், 'சொல்ல மகா வருத்தமா யிருக்கிறது. அவர் இறந்து கொண்டிருக்கிறார்; இந்நேரம் இறந்தே போயிருக்கலாம்'' என்றேன்.

அதிவேகமாகப் பிர்லா மாளிகையை நாங்கள் அடைந்தோம்; காந்திஜியின் திருமேனியைக் கண்டோம். அவருக்குத்தான் தமக்கென்று தனித்திருக்கக் கண நேர அவகாசங்கூடக் கிடையாதே! காம்பவுண்ட் சுவருக்கு உட்புறமும் வெளியிலும் திமுதிமு என்று பெருந் திரளான மக்கள் வெகு விரைவில் கூடி விட்டார்கள். கேட்டுகளை யெல்லாம் அடைத்திருந்தார்கள். மக்களை அமைதியாயிருக்கும்படி யாராவது கேட்டுக் கொள்ள வேண்டியிருந்தது. கம்பி வேலிக்கு அருகே இருந்த மேடை மீது பிரதம மந்திரி ஏறினார். போலீசாருக்கு இதிலே பயம். அவரையும் கொல்ல எவனாவது ஒரு கொலைகாரன் கூட்டத்துக்குள்ளே புகுந்து காத்திருக்கலாம் என்ற பயம்தான். போலீசார் எவ்வளவோ தடுத்துச் சொல்லியும் நேரு கேட்கவில்லை. ஆத்திரத்தோடு அவர்களை ஒதுக்கித் தள்ளினார். யார் வேண்டுமானாலும் தம்மைக் குறி பார்த்துச் சுடலாம் என்ற நிலையில் சில நிமிஷ நேரம் மேடையில் அப்படியே உட்கார்ந்திருந்தார்.

பிறகு மந்திரிகளும் சிவில் அதிகாரிகளும் ராணுவ தளபதிகளும் வந்து, சவச் சடங்கு ஏற்பாடுகளைப் பற்றி அவரைக் கலந்து ஆலோசித்தார்கள். இதற்கிடையிலே தேசத்துக்கு அவர் ரேடியோவில் பேச வேண்டும் என்று முடிவாயிற்று.

ரேடியோ நிலையத்துக்குக் காரிலே அவர் சென்றார். காரிலே அவர் தனியாக இல்லை. துணைவர்கள் அவரை நிம்மதியாயிருக்கவும் விடவில்லை. ரேடியோ நிலைய மைக்ரபோன் எதிரில் அவர் உட்கார்ந்தபோது ஒரு வார்த்தை கூடத் தயார் செய்து கொள்ளவில்லை; உணர்ச்சியை இன்ன விதந்தான் வெளியிட வேண்டும் என்று சிந்தித்து வைக்கவும் இல்லை. தம் இதயத்தையே திறந்து தேசத்தோடு பேசினார். வார்த்தைகள் தாமாக வெளிவந்தன. ஆங்கில உரைநடையிலேயே ஓர் அரிய இலக்கியமாக, ஒரு மனிதருக்கு மற்றொரு மனிதர் மனமுருகிச் சூட்டிய புகழ் மாலையாக, என்றும் கீர்த்தி பெற்றுத் துலங்கும் முறையில் அது அமைந்தது.

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

உயிலுக்குச் சாட்சி

என். ஆர். பிள்ளை

பண்டித்ஜிக்குப் பதினோராண்டுக் காலம் சேவை செய்யும் பாக்கியமும் அதிர்ஷ்டமும் எனக்குக் கிட்டின. தம்மிடம் பணி புரிவோரிடம் தமக்கு உள்ள பிரியத்தைக் கூச்சத்தோடு மனத்துள் வைத்திருப்பவர் அவர். இதை நான் அவரிடம் பல முறை காணும் வாய்ப்புக்கள் கிடைத்தன. என்னிடமும் பல முறை அவர் பல சமயம் விசேஷ அன்பு காட்டியிருக்கிறார். என் மனத்தில் ஆழப் பதிந்து என்றும் மறவாத ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்து என் துயரத்தை மிகவும் கூர்மையாக்குகிறது.

வினோபாவுடன்...

பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் காலையில் அயல் விவகார மந்திரி காரியாலயத்தில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது பிரதம மந்திரியின் அவசர அழைப்பு வந்தது. உடனே அவருடைய காரியாலயத்துக்குச் சென்றேன். நான் உள்ளே நுழையும் போதே அவர் புன்சிரிப்புடன், ''என் உயிலில் கையெழுத்துப் போட உங்களுக்கு ஆட்சேபம் இல்லையே?'' என்று கேட்டார். இதைச் செவியுற்றதும் நான் கொஞ்சம் திடுக்கிட்டேன். 'உயில்' என்ற சொல்லைக் கேட்டாலே, என்ன என்னவோ பயங்கள் எனக்கு உண்டாகும். பண்டித்ஜி மிக்க அமைதியாக இருந்ததைக் கண்டு, என்னை நானே தைரியப்படுத்திக் கொண்டேன். உயிலுக்கு முதல் சாட்சியான டாக்டர் கட்ஜூ முன்னதாகவே இங்கே வந்திருந்தார். காரியம் சீக்கிரமாகவே முடிந்தது; சுருக்கமாகவுந்தான்! சில நிமிஷ நேரத்தில் தமது உயிலிலே பண்டித்ஜி கையெழுத்திட்டார். நாங்கள் இருவரும் அதில் சாட்சிக் கையெழுத்துப் போட்டோம்.

அந்த வாய்ப்பால் பெருமை கொண்டு மிகவும் பரபரப்புள்ளவனாக என் அறைக்குத் திரும்பி வந்து சேர்ந்தேன். பண்டித்ஜியின் நண்பர் கோஷ்டியைச் சேர்ந்தவன் அல்ல நான். எனவே, இந்தக் கௌரவம் கிடைத்ததைப் பற்றி எண்ணிய போது, எனக்குப் பணிவு உணர்ச்சியே மிகுந்தது. உயிலிலே அவர் என்ன எழுதியிருக்கிறார் என்று பார்க்கவே எனக்குத் தோன்றவில்லை. மிகவும் சொந்த விஷயமாக, ஆப்த சமாசாரமாக, வெளி மனிதர்களுக்குச் சொல்லக் கூடாததாக இருக்கலாம் என்றே எண்ணினேன். ஆனால் நான் எண்ணியது தவறு.

அன்றைய வேலை முடிந்து, வீட்டுக்கு நான் புறப்படப் போகிற சமயம், பண்டித்ஜி என் அறைக்குள் வந்தார். சில சமயம் இப்படி அவர் வருவது வழக்கந்தான். ஏதோ அவசரக் கட்டளைகளை எனக்கு இடத்தான் அவர் வந்திருப்பார் என்று நான் நினைத்தேன். ஆனால் அவர் வந்த காரியம் அது அல்ல.

''என். ஆர்! இன்று காலையில் என் உயிலில் நீங்கள் கையெழுத்துப் போட்டீர்கள். ஆனால், அதில் நான் என்ன எழுதியிருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாதே. உயில் அதோ இருக்கிறது. அதை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்; காலையில் எனக்குத் திருப்பித் தாருங்கள்'' என்று அவர் சொன்னார்.

எனக்கு உண்டான நன்றி உணர்ச்சியைச் சொல்ல என்னால் முடியவில்லை. ஏற்ற வார்த்தைகள் என் மனத்தில் தோன்றிய போது, அவர் போய்விட்டார். 'என்ன ஆச்சரியமான மனிதர்!' என்று நான் சிந்தித்துப் பார்த்தேன். அவர் சொன்னார் என்பதற்காகச் சம்பிரதாயமாகவே நான் கையெழுத்துப் போட்டேன். அவரது உயிலில் கண்ட பொருளைப் படித்தறிய எனக்கு உரிமை இல்லை. ஆயினும், அதைப் படிக்கும்படி என்னிடம் சொன்னார். அது மட்டுமா? சாவகாசமாகவும் படிக்கச் சொன்னார்.

இதுதான் பண்டித்ஜியின் சிறப்பு. மென்மையான மரியாதையையும் மனித உறவிலே மற்றவருக்கு அளிக்க வேண்டிய நுட்பமான மதிப்பையும் அவர் செலுத்தினார். இதனால் அவரிடம் சற்றும் கஞ்சத்தனமில்லாமல் தங்கள் அன்பையும் பக்தியையும் அவர்கள் சொரிந்தார்கள். அவரிடம் பணி புரிவதே பேரானந்தம் என்று எத்தனை எத்தனையோ பேர் கண்டிருக்கிறார்கள்.

—'தி ஸ்டேட்ஸ்மென்', கல்கத்தா.

கோபமும் கனிவும்...

1940 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் பம்பாய் ஆஜாத் மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. மௌலானா ஆஜாத், புலாபாய் தேசாய், ஜவஹர்லால் நேரு ஆகியவர்கள் பேசினார்கள். நேரு பேச எழுந்தபோது, மழை கொட்டத் தொடங்கியது. கொட்டும் மழையில் அப்படியே லட்சக்கணக்கான மக்கள் அசையாமல் உட்கார்ந்து கொண்டு அவரது சொற்பொழிவைக் கேட்டார்கள்.

அப்போது ஒருவர் குடையொன்றை நேருவின் தலைக்கு மேலே பிடித்தார். ''மக்கள் நனையும்போது எனக்கு மட்டும் குடை எதற்கு? அப்பாலே போய்விடும்'' என்று அந்த நண்பரை நேரு கடிந்து கொண்டார். அடுத்த கணமே கோபம் தணிந்தது. ''குடை எனக்காக அல்ல; என் ஒலி பெருக்கியைப் பாதுகாக்கவே இந்த மனிதர் முயல்கிறார்'' என்று சிரித்துக் கொண்டே அவர் கூறியபோது கூட்டத்தினரும் உற்சாக ஆரவாரம் செய்தார்கள்.

வல்லபபாய் படேலுடன்...

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

செங்கற்பட்டு மாவட்டம், சோமங்கலத்தில் அமைக்கப்பட்ட திறந்தவெளி திரைப்பட அரங்கம் தான், இந்தியாவில் முதன் முதலில் வியாபார முறையில் அமைக்கப்பட்ட திறந்தவெளி திரைப்பட அரங்கமாகும்.

இந்தத் திரைப்பட அரங்கத்தை அமைப்பதற்காக தமிழ் நாடு அரசு 0.51 ஏக்கர் நிலத்தை அளித்துள்ளது. மேலும் இவ்வரங்கம் நிரந்தரத் திரைப்பட அரங்கமாக அமையும் வகையில் சட்ட விதிகளை அமைத்துள்ளது.

ஊரக வளர்ச்சி சீரமைப்புத் திட்டத்தின் கீழ் சோமங்கலம் வளர்ச்சிக்கான ஆக்கப் பணிகளை ஆற்றிய போது இந்தத் திறந்தவெளி திரைப்பட அரங்கத்தைக் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்காக பாரத ஸ்டேட் வங்கி நிதி உதவியது.

இந்தத் திரைப்பட அரங்கத்தைக் கட்டுவதற்கு, நிலத்தைச் சேர்க்காமல் ஆகிய செலவு ரூ. 92,000 ஆகும். இத் திரைப்பட அரங்கத்திற்கு நுழைவுக் கட்டணமாக இரண்டு விதக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. 45 காசு கட்டணத்தில் 281 இடங்களும் 70 காசு கட்டணத்தில் 192 இடங்களும் உள்ளன. திரைப்பட அரங்கம் முழுவதும் நிறைந்தால் ரூ. 260 வசூலாகும்.

படம் காட்டும் கருவி அமைந்துள்ள அறைக்கு இரு பக்கத்திலும் அவசர கால தேவைக்கான இரு தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் 150 பேர் தங்கலாம். படக் காட்சி நடந்து கொண்டிருக்கும் பொழுது. திடீரென்று மழை பெய்யத் தொடங்கினால், இந்தத் தங்குமிடங்களில் தங்கிக் கொள்ளலாம். தொடர்ந்து திரைப் படத்தையும் பார்க்க முடியும். திறந்த வெளி திரைப்பட அரங்கின் திரை, துணியால் ஆகியது அல்ல. சிமெண்ட் சுவரே- 'திரை' போன்று அமைக்கப்பட்டுள்ளது. அதனால், மழையால் பாதிப்பு ஏற்படாமல் தொடர்ந்து காட்சி நடைபெறும்.

சோமங்கலத்தின் மக்கள் தொகை 1,748 ஆகும். சுற்று வட்டாரத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கை 4,000 ஆகும். ஆனால், அந்தப் பகுதியில் வேறு திரையரங்கம் ஏதுமில்லை. ஆகவே சோமங்கலத்திலுள்ளவர்களில் நாள்தோறும் ஆயிரம் பேர் திரைப்படங்கள் பார்க்கும் வாய்ப்பு உள்ளது.

இது போன்ற திறந்தவெளி திரையரங்கம் சுகாதார வசதி மிக்கதாகவும் அமைந்துள்ளது. அரசின் ஆக்கப் பணிகளை விளக்கிடும் செய்திப் படங்களும், மக்களுக்கு அறிவூட்டும் பொருள் விளக்கப் படங்களையும் ஊரகப் பகுதிகளில் அமைக்கப்படும் திறந்தவெளி திரைப்பட அரங்கங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

திரையரங்கங்கள்...

இந்தியாவில் திரையரங்குகள் ஏறத்தாழ 80,000 மக்களுக்கு ஒரு திரையரங்கம் என்ற அளவில் அமைந்துள்ளன. அமெரிக்காவில் 10,000 மக்களுக்கு ஒரு திரையரங்கமும், பிரான்ஸ் நாட்டில் 8,000 பேருக்கு ஒரு திரையரங்கமும், இத்தாலி நாட்டில் 5,000 பேருக்கு ஒரு திரையரங்கமும், ஜப்பான் நாட்டில் 14,000 பேருக்கு ஒரு திரையரங்கமும், இங்கிலாந்து நாட்டில் 22,000 பேருக்கு ஒரு திரையரங்கமும், சோவியத் நாட்டில் 5,000 பேருக்கு ஒரு திரையரங்கமும் என்ற அளவில் அமைந்துள்ளன.

நமது நாட்டில் ஊரகப் பகுதிகளில் ஒரு நிரந்தரமான திரைப்படக் கொட்டகை அமைப்பது என்றால் குறைந்தது ஏழெட்டு இலட்ச ரூபாய் செலவாகும். ஆனால் திறந்தவெளி திரைப்பட அரங்கத்திற்கு ஏறத்தாழ ரூ. 90,000 மட்டும் போதுமானதாகும்!

இந்தியா போன்ற நாடுகளில் சுமார் 50,000 பேருக்கு ஒன்று என்ற அளவிலாவது திரைப்பட அரங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.



திறந்த வெளித் திரையரங்கின் மாதிரி வடிவத்தை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் பார்வையிடுதல்.

என்ன நன்மை?

ஊரகப் பகுதிகளில் அமைக்கப்படும் திரைப்பட அரங்குகளில் கதைப் படங்களுடன். தேசிய வளர்ச்சித் திட்டங்களை விளக்கும் படங்களை, உதாரணமாக— வேளாண்மைப் படங்கள், தொழில் வளர்ச்சிப் படங்கள், குடும்ப நலத் திட்டத்தை விளக்கிடும் படங்கள் போன்றவைகளை காட்டும் வாய்ப்புகள் உள்ளன. குறைந்த செலவில் மக்களுக்கு பொழுதுபோக்கு வசதியும் கிடைக்கிறது.

இந்தியாவில் முதன் முதலில் அமைக்கப்பட்ட திறந்த வெளி திரைப்பட அரங்கமாக சோமங்கலத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி திரைப்பட அரங்கம் திரு என். கிருஷ்ணசாமி அவர்களால் அமைக்கப்பட்டது.

சோமங்கலத்தில் அமைக்கப்பட்ட திறந்தவெளி திரைப்பட அரங்கத்தைத் திறந்து வைத்து மேதகு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், திரைப்படம் ஆற்றல் வாய்ந்த சாதனம், அது மக்களின் நல் வாழ்வுக்குப் பயன்பட வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், 'குறைந்த செலவில் கிராமப்புற மக்கள் திரைப்படங்களைப் பார்க்க, திறந்த வெளி திரைப்பட அரங்கம் பயன்படும். இது போன்ற நல்ல முயற்சிகளுக்கு அரசு ஆதரவு அளித்து உதவும்' என்று கூறினார்.

இன்றைய உலகில் திரைப்படம் மக்களின் பொழுதுபோக்கு அம்சங்களில் முதலாவதாக உள்ளது. நாட்டின் பொருளாதார நிலையைக் கண்ணுறும்போது, பொழுதுபோக்குக்கென நமது மக்கள், அதிலும் குறிப்பாக கிராமப்புற மக்கள் அதிகம் செலவழிக்கின்ற நிலையில் இல்லை. சொற்புச் செலவில், வசதிகளுடன் கூடிய நல்ல பொழுதுபோக்குப் பெற, திறந்தவெளி திரையரங்கம் அருமையானதொரு சாதனம்! இம் மாதிரி திறந்தவெளி திரை அரங்குகளை உருவாக்குவதற்காகும் செலவும் ரொம்பக் குறைவு ! திரைப்படம் பார்த்து மகிழ்கின்ற மக்களுக்காகும் செலவும் ரொம்பக் குறைவு! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!



ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்!

தென்னார்க்காடு மாவட்டத்தில் பல துறைகளில் சாதனைகளைக் காணலாம். அவற்றில் ஒன்று தென்னார்க்காடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் சாதனையாகும். முதன் முதலாக திண்டிவனத்தில் 1939-ஆம் ஆண்டு டிசம்பர் 12ந் தேதி திரு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள்தலைமையில் மணிலா விற்பனையை ஒழுங்குபடுத்தி, ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் மூலம் விற்பனையைச் செய்ய, விற்பனைக்கூடம் திறக்கப்பட்டது.

இன்று இம்மாவட்டத்தில் திண்டிவனம், விருத்தாசலம், திருக்கோயிலூர், உளுந்தூர்பேட்டை, கடலூர், விழுப்புரம், பண்ருட்டி, சின்னசேலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, காட்டுமன்னார்கோயில், திட்டக்குடி, சிதம்பரம், குறிஞ்சிப்பாடி, தியாக துர்க்கம், சங்கராபுரம், திருவெண்ணெய்நல்லூர், மணலூர்ப்பேட்டை, குனியமங்கலம், அவலூர்ப் பேட்டை, சேத்தியாத்தோப்பு முதலிய இடங்களில் விற்பனைக் கூடங்கள் செயல்படுகின்றன.



உழுவோம்! உழைப்போம்! உயர்வோம்!

உலகின் அச்சாணியாக விளங்குவது வேளாண்மை ஆகும். அதனுற்றுன் திருவள்ளுவர் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு' என்று உழவின் சிறப்பை உலகுக்கு உணர்த்திஞர்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், வளத்துக்கும் முக்கிய காரணமாய் விளங்குவது உழவும், தொழிலுமாகும். ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனே செய்வோம்' என்று மகாகவி பாரதியாரும் பாடியுள்ளார்.

வேகமான இந்த உலகில், வேளாண்மையும் வேகமாய் வளர்ந்து வருகின்றது. புதிய புதிய கண்டுபிடிப்புகள், புதிய புதிய ஆராய்ச்சிகள் நடந்த வண்ணமுள்ளன. இதற்கெல்லாம் காரணமாக விளங்குவது கோயம்புத்தூரிலுள்ள ''தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்' ஆகும்.

கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் இவ்வேளாண்மைப் பல்கலைக் கழகமானது 1971 ஜூன் முதல் நாள் அன்று துவங்கப்பட்டது.

பல்கலைக் கழகத்தின் குறிக்கோள் :

அ. வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த பல்வேறு துறைகளில் கல்வி கற்பித்தல். ஆ. வேளாண்மையிலும் அதுதொடர்புடைய பிற அறிவியல் துறைகளிலும் ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்துதல். இ. ஆராய்ச்சிகளில் கண்டறிந்த, உண்மைகளை உரிய அரசுத் துறைகளின் ஒத்துழைப்போடு கிராமப்புற மக்களை அடையச் செய்தல்.

இப்பல்கலைக் கழகத்தில் வேளாண்மைக் கால்நடை அறிவியல், மீன்வளம், வனத்துறை, வேளாண்மைப் பொறியியல், அடிப்படை அறிவியல் மற்றும் மானிடவியல் துறைகளில் அடிப்படையாகவும் நடைமுறைக்கேற்ற ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்கலைக் கழகத்தின் சின்னம் :

வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகியவற்றின் சிறப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் பல்கலைக் கழகத்தின் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சின்னமாகிய கோபுரத்தைப் பின்னணியாகக் கொண்டு அமைந்த தாமரை செழுமையைக் குறிக்கிறது. அதிலுள்ள ஏர்—உழவுத்தொழிலையும், மீன்—மீன் வளத்தையும், மரம்—வன வளத்தையும், காளை—கால்நடை வளர்ப்பையும், இயந்திரக் கலப்பை—வேளாண் பொறியியலையும், விளக்கு — மனையியலையும் குறிப்பிடும் அடையாளங்களாக உள்ளன. தாமரையின் பின்னணியாக உள்ள பசுமை நிறம் வேளாண்மை வளத்தைக் குறிப்பிடுகின்றது. இவை அனைத்துக்கும் சக்தியை வழங்கும் சூரியன் நடுவில் அமைந்துள்ளது. இச்சின்னத்தின் இருபுறமும் அமைந்துள்ள நெற்கதிர் தமிழ்நாட்டு நெற் சாகுபடியின் சிறப்பைக் காட்டுகிறது.

பல்கலைக் கழகத்தின் குறிக்கோள்: 'உழுவோம், உழைப்போம், உயர்வோம்' என்பதாகும்.

வேளாண்மைக் கல்வி :

வேளாண்மைக் கல்வியிலும், ஆராய்ச்சியிலும், விரிவாக்கப் பணிகளிலும் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது.

கோயம்புத்தூரில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியும் மிகவும் பழமையானவை. கோவை வேளாண்மைக் கல்லூரியின் பழைய மாணவரே இப்பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தராக அமைந்தது இக்கல்லூரிக்குப் பெருமை சேர்க்கிறது. இத்தகைய நல்ல மரபில் உருவான இப்பல்கலைக் கழகம் உழவர் பெருமக்களிடையே அறிவொளியைப் பரப்புகிறது. வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி. விரிவாக்கம் ஆகிய முத்துறையின் முன்னேற்றத்திற்கும் அரும் பணி ஆற்றுகிறது.

பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கல்வி நிறுவனங்கள் :

1. வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர். 2. வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், மதுரை. 3. கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை. 4. வேளாண்மைப் பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர். 5. அடிப்படை அறிவியல், மானிடவியல் கலைப்புலம், கோயம்புத்தூர். 6. மீன்வள அறிவியல் கல்லூரி, தூத்துக்குடி.

வேளாண்மைக் கல்லூரிகள் :

பி.எஸ்சி. (வேளாண்), எம்.எஸ்சி. (வேளாண்), பிஎச்.டி. ஆகிய பட்டக் கல்வி புகுத்திவந்த வேளாண்மைக் கல்லூரி 1972 ஆம் ஆண்டு தொடங்கி பி.எஸ்சி. (தோட்டக்கலை) பட்டக் கல்வியும் நடத்தி வருகிறது. இக்கல்விக்கு ஆண்டுதோறும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிருர்கள்.

கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரி 13 துறைகளைக் கொண்டது. அவற்றுள் உணவு நுண்ணியல் விதை நுண்ணியல், வனவியல், தீவனப் பயிரியல் துறைகள் பல்கலைக் கழகத் தோற்றத்திற்குப் பின்னர் உருவானவை.

இந்தியாவிலேயே முதன் முதலாக விதை நுண்ணியல் எம்.எஸ்சி. (வேளாண்) பட்டக் கல்வி இங்குத் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், 1976-77 முதல் பட்ட மேற்படிப்பு டிப்ளமா கல்வி, வேளாண்மைத் தொழில் நிர்வாகம் பற்றியும் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. மதுரையில் உள்ள வேளாண்மைக் கல்லூரியில் ஒன்பது துறைகள் உள்ளன.

கால்நடை மருத்துவக் கல்லூரி :

சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி 1976 டிசம்பர் 1 முதல் இப்பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமாக இணைந்தது. 1903ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இக்கல்லூரிதான், நம் நாட்டில் முதல் முதல் பிவி. எஸ்சி. பட்டக் கல்வியை வழங்கியது. அங்கு 16 துறைகளில் எம்.வி.எஸ்சி. பட்டக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

1977-78ஆம் ஆண்டு முதல் கோழிப் பண்ணை அறிவியல், ஒட்டுண்ணியியல், கால்நடை மருத்துவ நுண்ணுயிரியல் ஆகியவற்றில் பிஎச்.டி. பட்ட வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேளாண் பொறியியல் கல்லூரி :

கோயம்புத்தூரில் 1972இல் தொடங்கப்பட்டது. இக்கல்லூரியில் ஐந்தாண்டுகள் பி.இ. (வேளாண்) தொழில் பட்டக் கல்வி வழங்கப்படுகிறது. ஆண்டு தோறும் 50 மாணவர்கள் சேர்க்கப்படுகிருர்கள். இதில் நான்கு துறைகள் உள்ளன. பண்ணைத் திறன் மற்றும் பண்ணை இயந்திரங்கள், மண், நீர்ப் பாதுகாப்புகள், ஆகிய துறைகளில் எம்.இ. (வேளாண்) கல்வி 1977-78இல் தொடங்கப்பட்டுள்ளது. இங்கு வேளாண் தொழில்கள் என்னும் துறை ஒன்று தொடங்கும் திட்டமும் உள்ளது.

அடிப்படை அறிவியல், மானிடவியல் கலைப்புலம் :

இக்கலைப்புலம் 1972இல் தொடங்கப்பட்டது. இதில் எட்டு துறைகள் உள்ளன.

1975இல் சுற்றுப் புறச் சூழல் உயிரியல் எம்.எஸ்சி. பட்டக் கல்வி இங்கு ஆரம்பிக்கப்பட்டது. நம் நாட்டில் இத்தகைய கல்வி தொடங்கப்படுவது இதுவே முதலாவதாகும். பயிர் உடற் கூறியியலிலும் பட்ட மேற்படிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1977-78 முதல் சுற்றுப்புறச் சூழல் உயிரியல் பிஎச்.டி. பட்டக் கல்வியும் தொடங்கப்பட்டுள்ளது.

மீன் வளக் கல்லூரி :

ஒரு புதிய நான்காண்டுக் கால பி.எஃப். எஸ்சி. பட்டக் கல்வி 1977-78இல் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் 20 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்கல்லூரி தூத்துக்குடியில் செயல்பட்டு வருகிறது.

இவ்வாருக இப்பல்கலைக் கழகம் பி.எஸ்சி. (வேளாண்), பி.எஸ்சி. (தோட்டக்கலை), பி.இ. (வேளாண்), பி.வி.எஸ்சி, பி.எஃப். எஸ்சி., எம்.வி. எஸ்சி(வேளாண்), எம்.எஸ்சி., பிஎச்.டி. டிப்ளமா (வேளாண் தொழில் நிர்வாகம்) ஆகிய கல்விகளைக் கற்பிக்கிறது.

ஆண்டுதோறும் முதலாண்டுப் பட்டப் படிப்பிற்கென சுமார் 470 மாணவர்களும், மற்றும் எம்.எஸ்சி. பட்டப் படிப்பிற்கென சுமார் 300 மாணவர்களும் சேர்க்கப்படுகிருர்கள். மொத்தத்தில் தற்போது சுமார் 3,000 மாணவர்கள் இப்பல்கலைக் கழகத்தில் படிக்கிருர்கள். பாடம் கற்பிக்கும் முறையும் மேலை நாடுகளில் உள்ளது போன்று அமைக்கப்பட்டுள்ளது.

பகுதிநேர பட்ட மேற்படிப்பு :

பல்கலைக் கழகத்தில் பணியாற்றுபவர்கள் பட்ட மேற்படிப்பைப் பகுதி நேர அடிப்படையில் கற்க ஏற்படுத்தப்பட்டு உள்ள வாய்ப்பு, இப்பல்கலைக் கழகத்தின் தனிச் சிறப்பாகும். தற்பொழுது 180 பேர் அவ்விதம் எம்.எஸ்சி (வேளாண்) பிஎச்.டி. ஆகிய கல்வியைக் கற்கிருர்கள்.

ஆராய்ச்சி

இப்பல்கலைக் கழகத்தின் இரண்டாவது முக்கிய பணி வேளாண்மையில் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்வதாகும்.

இப்பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள 6 கல்லூரிகளிலும் தீவிர ஆராய்ச்சித் திட்டங்கள் பல செயல்படுகின்றன. ஒவ்வொரு ஆசிரியரும் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும். கல்லூரிகளைச்

வேளாண் பொறியியல் கல்லூரி



சார்ந்த ஆராய்ச்சிப் பண்ணைகளைத் தவிர, 30க்கும் மேற்பட்ட இடங்களில் ஆராய்ச்சி நிலையங்கள் இப்பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படுகின்றன. மொத்தத்தில் சுமார் 1,300 ஆராய்ச்சியாளர்கள் இப்பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகிறார்கள்.

1. ஆராய்ச்சிகளின் முடிவுகளைப் புத்தகங்கள், கையேடுகளாக அச்சிடுவது, கட்டுரைகளாக செய்திக் கதிர்களாகப் பத்திரிகைகள், மாத இதழ்களுக்கு அனுப்புவது, மற்றும வானொலி, டெலிவிஷன் முதலியவைகளுக்கு அனுப்பி வைப்பது.

2. விவசாயிகளுக்கென பயிற்சிகள் கோவை, மதுரை, ஒசூர், ஆகிய இடங்களில் நடத்தி ஆண்டொன்றுக்குச் சுமார் 2,000 விவசாயிகளுக்கு, பெண்கள் உட்பட பயிற்சி அளித்து வருகிறது.

3. அஞ்சல் வழிப் பாடத் திட்டத்தின்கீழ் தமிழ் எழுதப் படிக்கத்தெரிந்த விவசாயிகளுக்கு சில முக்கிய துறைகளில் உதாரணமாக தீவிர நெல் சாகுபடி, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்ப்பு போன்ற துறைகளில் மூன்று மாதங்கள் பாடங்கள் அனுப்பி இறுதியில் நேர்முகப் பயிற்சி நடத்தப்படுகிறது. கோவை, மதுரை, சென்னை ஆகிய இடங்களில் இதுவரை, சுமார் 3,700 பேர்கள் பயின்று சான்றிதழ் பெற்றுள்ளனர்.

4. வானொலியில் வேளாண் பள்ளி என்ற திட்டத்தின்கீழ் மேற்கண்ட பாடத் திட்டங்களை வானொலி மூலம் வாரம் ஒரு முறை அறிவித்து பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு வேளாண் துறையில் பாடம் கற்பித்து வருகிறது. 1978 ஜனவரி முதல் வானொலி வேளாண்மைப் பள்ளியில் பயில்வோருக்கும் ஒரு நாள் நேர்முகப் பயிற்சி கொடுக்கப்படுகின்றது.

5. தேசீய செயல் விளக்கத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்தில் சிறு விவசாயிகளின் பண்ணைகளில் நவீன முறையில் அறிவியல் அடிப்படையில் அராய்ச்சியாளர்கள் செயல்முறைகளைச் செய்து காண்பித்து அந்தப் பண்ணைகளில் சராசரி மகசூலை சுமார் மூன்று மடங்கு அதிகமாக்கிக் காட்டியிருப்பதுடன், இந்தப் பண்ணைகளை மாதிரிப் பண்ணைகளாக்கி மற்ற நூற்றுக்கணக்கான விவசாயிகளுக்கு இவைகளின் மூலம் பயிற்சி அளித்துள்ளார்கள்.

6. தமிழ்நாட்டில் அரசாங்கம், வங்கிகள், கூட்டுறவு மற்றும் தனியார் துறைகளில் செயல்பட்டு வரும் விரிவாக்கத் திட்டங்களுக்குப் பலவிதங்களில் உதவி, விஸ்தரிப்பாளர்களுக்குப் பல்கலைக் கழகத்தின் வல்லுநர்கள் மூலம் அவ்வப்போது பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

7. திருச்சியிலும், பாண்டிச்சேரியிலும் வேளாண் அறிவியல் நிறுவனங்கள் மத்தியஅரசின் பண உதவியுடன் நிறுவி அங்கு பல நோக்குப் பயிற்சிகள் முற்போக்கு விவசாயிகளுக்கும், மற்றும் விரிவாக்கத் துறையில் பணியாற்றுவோருக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன.

8. இப்பல்கலைக் கழகத்தைக் காண வரும் விவசாயிகளும் மாணவர்களும், உள்நாட்டு, அயல் நாட்டு வல்லுநர்களும் பல்கலைக் கழகத்தின் பணிகளைக்கண்டறியும் வகையில் மத்திய பொருட்காட்சி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

9. வானொலி மூலம் ஒலிபரப்பப்படும் புதிய கண்டுபிடிப்புகளையும், வல்லுநர்களின் பேச்சுகளையும் பதிவு செய்வதற்காக ஒரு வானொலிப் பதிவு அறை நிறுவப்பட்டுள்ளது. இங்கு வல்லுநர்களுக்கு வானொலிப் பேச்சில் பயிற்சியும் கொடுக்கப்படுகின்றது.

10. விவசாயிகள் தங்களுடைய சிக்கல்களுக்கு விடை வேண்டி வந்தால் நேரடியாகவும், கடிதம் எழுதினால் உடனடியாகப் பதில் கடிதம் அனுப்பியும் அவர்களுக்குத் தக்க விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அதே போல் விவசாயிகள் வானொலி நிலையத்தாரிடம் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதில்கள் கொடுக்கப்பட்டு அவை வானொலியில் ஒலிபரப்பாகின்றன.

உழவர் பயிற்சி நிலையங்கள் :

கோயம்புத்தூர், மதுரை, ஓரத்த நாடு ஆகிய மூன்று இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

இந்நிலையங்களில் உழவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி நடைபெறுகிறது. ஒசூரில் கால் நடை உதவியாளர் பயிற்சி மையம் ஒன்று உள்ளது. பல்கலைக் கழகத்தின்கீழ் உள்ள தேசிய செயல் விளக்கத் திட்டம், வயல் வெளிகளிலேயே செயல் விளக்கங்களை நடத்திக் காட்டுகிறது. இதனால் உயர் விளைச்சல் ரகங்களின் கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள், அவற்றின் உயர்விளைச்சல் திறன், அந்தந்த வட்டாரத்தின் சாகுபடிச் சிக்கல் அவற்றிற்கான தீர்வுகள் ஆகியவைகள் விவசாயிகளுக்குத் தெளிவாக உணர்த்தப்படுகின்றன.

விரிவாக்கப் பணி முறைகளை மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கும் விவசாயிகளுடன் தொடர்பு கொள்வதற்கும்இத்தேசியசெயல் விளக்கங்கள் ஒரு சோதனைக் கூடமாகப் பயன்படுகின்றன. மேற்கண்ட முறைகளில் இப்பல்கலைக் கழகம் கடந்த ஏழு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.

மற்றப் பல்கலைக் கழகங்களைப் போல் அல்லாமல், இவ் வேளாண்மைப் பல்கலைக் கழகம் வேளாண்மையில் பல துறைகளில் முதல் நிலை பட்டதாரிகள், முதுநிலைப் பட்டதாரிகளை உருவாக்குவதுடன் நின்று விடாமல், வேளாண் மக்களுக்குத் தேவையான, உடனுக்குடன் பயன்தரக் கூடிய பல ஆராய்ச்சிகளைச் செய்து அதன் முடிவுகள் விரிவாக்கப் பணிகள் மூலம் கிராமங்களுக்குச் சென்றடையும் சீரிய பணியையும் செய்து கொண்டிருக்கிறது என்று பெருமையோடு குறிப்பிடலாம்.

தகவல் தொடர்பு நிலையம்

1971ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டபோது, தகவல் தொடர்பு நிலையம் ஒன்று ஏற்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்தது.

நவீன வேளாண்மை முன்னேற்றத்தில் வேளாண்மைத் தகவல் தொடர்பு ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. வேளாண்மையிலும் பல்கலைக் கழக முன்னேற்றத்திலும் தகவல் தொடர்பு சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த நிலையத்தின் தேவை மிக அவசியமாகிறது.

இந்த நிலையமானது தகவல் தொடர்பை ஒரு விஞ்ஞானமாகவும், ஒரு கலையாகவும், ஒரு தலைசிறந்த பணியாகவும் கருதுகின்றது. இது ஒரு தனிப் பாடமாகக் கருதப்பட்டாலும் சமூக விஞ்ஞானத்திற்கு மிகவும் நெருங்கிய தொடர்புள்ள ஒன்றாகும். இதன் முக்கியமான பணி தமிழகத்திலும், இந்தியாவிலும், மற்ற இடங்களிலுள்ள பலதரப்பட்ட மக்களுக்குத் தகவல்களையும், ஆராய்ச்சியின் புதுமைகளையும் உணர்த்துவதாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



Shell

தமிழரசு
1-12-1978 50காசு

தோற்றம் : 10.12.1878

மறைவு : 25.12.1972.

மதுவிலக்கால் வரும் வாழ்வு— அதை மறந்து விட்டால் பெரும் தாழ்வு

இந்நாடு பல நூறு ஆண்டுகளாக அந்நியர் ஆட்சிக்கு அடிமைப்பட்டு நொந்து போய்விட்டிருந்தது. இன்று விடுதலை பெற்ற இந்நாளிலும்கூட இங்கே வாழுகின்ற மக்களில் 40 சதவீதத்திற்கும் அதிகமான பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்றனர். முழு மதுவிலக்கைக் கொண்டு வர வேண்டும் என்று கூறுகின்ற வாதத்திற்கு எதிராக வலிமையான எதிர்வாதம் இதுவரையில் எடுத்துரைக்கப்படவில்லை. இந்த நாட்டில் குடிப் பழக்கம் என்கின்ற துயரக்கேடு குடிக்கின்றவனையும் அவனுடைய குடும்பத்தாரையும் எல்லா வகையிலும் நொடித்துப் போகச் செய்கிறது. எனவே, இந்த நாட்டின் இலட்சக் கணக்கான ஏழை மக்களுடைய நல்வாழ்வையும் நலத்தையும் கருதி மதுவிலக்கு முழுமையாக வெற்றி பெற வேண்டுமென்று விருப்பம் கொள்ளாத தேசியவாதி எவனும் இருக்க மாட்டான். நமக்கு மிகப்பெரிய மிக மோசமான சவாலாக இருந்து நாட்டினைக் கேட்டில் ஆழ்த்துவது வறுமையே. இந்தச் சவாலைச் சமாளிப்பதற்காக ஏழ்மையில் இருந்தும், நொடிப்பு நிலையிலிருந்தும் கோடிக் கணக்கான மக்களை மீட்டுக் காக்கின்ற மதுவிலக்கை ஆதரிக்காத இந்நாட்டுக் குடிமகன் எவனும் இருக்க மாட்டான். இவ்வாறு மதுவிலக்கு என்பது பொய்யும் புரட்டும் அல்ல. வறுமையை எதிர்த்து நாம் நடத்துகின்ற வீரப்போரில் மதுவிலக்கைச் செயற்படுத்துவது முக்கியமானதொரு அங்கமாகும்.

மதுவிற்கு எதிராக மக்கள் கருத்தைத் திரட்டுதல் :

இந்தப் பகுத்தறிவின்படி, இந்தியா முழுவதிலும் முழு மதுவிலக்கு செயற்படுத்தப்பட வேண்டுமென்று நாம் எல்லோரும் மிக ஆவலுடன் முடிவு எடுத்திருக்கிறோம். நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தில் மதுவிலக்கு என்பது மிக இன்றியமையாத தேசியக் கொள்கையாக இடம் பெற்றுள்ளது. நமது விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் காலத்திலிருந்தே இந்த உயரிய இலட்சியத்திற்காக நாம் போராடி வந்துள்ளோம் என்பதை மறக்கவியலாது. ஏறத்தாழ 1912 ஆம் ஆண்டிலேயே, கோபால கிருஷ்ண கோகலே அவர்கள், ஆங்கிலப் பேரரசில் இந்திய ஆட்சிப் பொறுப்பு வகித்துவந்த அமைச்சரிடம் தெரிவித்த கருத்தாவது:

''இந்திய மக்களின் உளப்பாங்கினை ஒற்றித்தான் முழு மதுவிலக்கு என்னும் கொள்கையை நாங்கள் வற்புறுத்துகிறோம் என்பது உண்மை.'' 1925-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21-ஆம் நாளில் ஏறத்தாழ 30,000 இந்திய மகளிர் முழு மதுவிலக்கை உடனே செயற்படுத்துமாறு வைஸ்ராய் அவர்களை வேண்டிக்கொண்டு மனு ஒன்றைக் கொடுத்தார்கள். இந்தியாவில் மருந்துக் காரியங்களுக்காகவும், அறிவியல் பணிகளுக்காகவும் அல்லாமல் மற்றப்படி போதையூட்டுகின்ற மதுவகைகள் உற்பத்தி செய்வது, தயாரிப்பது, விற்பனை செய்வது, இறக்குமதி செய்வது ஆகியவற்றை ஒழிக்க வேண்டும் என்பதே அரசின் முடிவான கொள்கையாக இருக்க வேண்டுமென்பதை ஏற்குமாறு அன்றைய அரசுக்குப் பரிந்துரை செய்து, அந்நாள் மத்திய இந்தியச் சட்டமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

சுயராஜ்ய அரசியலமைப்புச் சட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக 1928-ஆம் ஆண்டு அனைத்துக் கட்சிகளின் மாநாடு ஒன்று கல்கத்தாவில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் நாம் மேலே கூறியது போல முழு மதுவிலக்கை அரசின் முடிவான கொள்கையாக ஏற்குமாறு கேட்டுக் கொள்கின்ற ஒரு

மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி

பகுதியை அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளைக் குறித்த அத்தியாயத்தில் சேர்க்க வேண்டுமென அம் மாநாடு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இவையெல்லாம் இந்தியநாட்டு மக்கள் விடுதலைப் போராட்டக் காலத்தின் போதே முழு மதுவிலக்கிற்குச் சாதகமாகத் தங்களுடைய வலுவான கருத்தை ஒருமுகமாகத் தெரிவித்துள்ளார்கள் என்பதற்குத் தெளிவான சான்றுகளாக அமைகின்றன.

அண்ணல் காந்தியடிகளார்

பொதுமக்கள் தெரிவித்த இந்த ஒருமித்த கருத்தினைத்தான் காந்தியடிகள் தம்முடைய பேச்சிலும், எழுத்திலும் பலமுறை எடுத்துரைத்துள்ளார். அவருடைய பேச்சுகளிலும், எழுத்துக்களிலிருந்தும் சில பகுதிகளை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமாகும்.

''முதன்மைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மதுவிலக்குக் கொள்கையைச் செயற்படுத்துவதால் ஏற்படும் செலவைக் காங்கிரஸ் கட்சி கருதிப்பார்க்க முற்பட்டால் அக்கொள்கையைச் செயற்படுத்தவே முடியாது; அதுவெறுங் கூப்பாடாகவே அமைந்துவிடும்.

* * *

''பல காலம் இனிமையாகவும், அமைதியாகவும் வாழ்ந்த நல்ல குடும்பங்களில் குடி என்னும் கேடு எத்தகைய தீங்கினை விளைவித்துத் துயரத்தில் ஆழ்த்தும் என்பதைக் குடிப்பழக்கமுள்ள கணவன்மார்களையுடைய பெண்களே உணர்வர்.''

* * *

''நஞ்சுடைய பாம்பு தீண்டினாலும் உடல் மட்டுமே அழியும். ஆனால், குடி என்னும் நஞ்சு உடலையும் ஆத்மாவையும் ஒருசேர அழிக்கவல்லது.''

* * *

குடியை ஒழிப்பது என்பது, ஒருவன் தன்னைத்தானே தூய்மையாக்கிக் கொள்கின்ற உயர்ந்த நெறிமுறை என்றும், நல்லொழுக்கத்தின் உயர்ச்சி என்றும், பொருளாதாரத் தாழ்வினின்று பெறும் விடுதலை என்றும், அளவிலாத் தேவைகள்—செலவுகள் இவற்றிலிருந்து விடுபடுதல் எனவும், தூய்மையான ஆரோக்கியமான வாழ்க்கையைத் தேடிக் கொள்வது என்றும் அண்ணல் காந்தியடிகள் கருதினார். இவ்வாறு காந்தியடிகளைக் காட்டிலும் மிகச் சிறப்பாக பொது மக்களின் கருத்தை எடுத்து உணர்த்த வல்லவர் யார்? காந்தியடிகள் அறிந்ததைப்போல இந்தியாவின் நிலைமைகளை, மிகச் சரியாக மிகத் தெளிவாகக் கற்று உணர்ந்துள்ளதாக வேறு யார் தான் கூறிக் கொள்ள முடியும்?

அனைத்துச் சமயங்களும், மதுவின் தீமைகளைக் கண்டிக்கின்றன :

வேதகாலம் தொட்டே நமது சமய இலக்கியங்கள் யாவும் மது அருந்துதல், சூதாடல் ஆகியவற்றின் தீய விளைவுகளை மிகக் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளன.

> **"ந**ம் நாட்டில் மதுவருந்துவோர் ஆயிரக் கணக்கில் உள்ளனர் என்கிற அவலநிலையைக் காட்டிலும் இந்நாடு வறுமையில் கெட்டழிந்து போனாலும் கவலைப்பட மாட்டேன்.
>
> ''நம்முடைய நாட்டில் மதுவிலக்கைச் செயற்படுத்துவதன் மூலம் நாம் நமது கல்வி வளர்ச்சிக்கு எதுவும் செலவிட முடியாமற் போனால் கூட, கல்வியில்லாத இந்தியாவையே நான் மேல் என்று கருதி வரவேற்பேன்.
>
> **—அண்ணல் காந்தியடிகள்**

நம்முடைய, இதிகாசங்களும், புராணங்களும் வல்லமையும், ஆற்றலும் பெற்ற கொடுங்கோலர்கள் பலர் எவ்வாறு மதுவாலும், மங்கையராலும் கெட்டொழிந்தனர் என்பதையும், கடவுளின் கருணையால் மக்கள் காக்கப் பெற்றனர் என்பதையும் நமக்கு அழகுற எடுத்தியம்புகின்றன. பின்வரும் கருத்தில் ஒரு பழமொழி உண்டு. ''உலகத்திலுள்ள அனைத்துப் பாவங்களையும் ஒரு தராசிலும் மது என்னும் பாவத்தை இன்னொரு தராசிலும் வைத்தால் சரி நிகராயிருக்கும்'' குடியால் அறிவு கெடுகிறது; மனத்தில் அறிவு நிலை பிறழ்ந்தபொழுது குழப்பம் நிலவுகிறது. அந்த வேளையில் பாவங்கள், பழிகள் எளிதில் விளைந்து விடுகின்றன. குற்றங்களைச் செய்கிறபொழுது அறிவற்றோர் பழியால் விளையும் துயரங்களுக்குப் பலியாகின்றனர். குடிப்பழக்கத்திற்கு அடிமையானவன் எல்லாவற்றையும் கைவிடுகிறான்! எல்லாவற்றையும் அழிக்கிறான்; அவனது அறிவு நிலைகெட்டுத் தடுமாறி நிற்பதால் பொய் எது, உண்மை எது என்று அறியாமல் மயங்கி உளறுகிறான். குடிபோதையில் தள்ளாடிக் கிடக்கின்ற இழிமகன் ஒருவன், பெற்ற தாயையே விரும்பும் ஈனச் செயலில் இறங்கி விடுகிறான். குடிப்பழக்கத்தின் கேட்டினை ஏறத்தாழ உலகின் எல்லாச் சமயங்களுமே கடுமையாகக் கண்டனம் செய்கின்றன.

மிக அண்மையில் மருத்துவ ஆராய்ச்சித்துறை கண்டறிந்த உண்மைகள் :

நவீனகால மருத்துவ இயல் மதுவை உறுதியாகக் கண்டனம் செய்கிறது. போதையூட்டுகின்ற பானங்கள் அனைத்தும் நச்சுத் தன்மை உடையவை என்று மருத்துவ இயல் கூறுகின்றது. தனி மனிதனுடைய சுதந்திர நிலைக்கு மது அல்லது சாராயம் மற்றும் போதையூட்டுகின்ற மருந்துகள் அனைத்தும் மிகக் கடுமையான கொடிய எதிரிகள் என்று பேராசிரியர் ஷார்ஃபென்பர்க் கூறுகிறார்.

மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநராகவும், ராயல் சொசைட்டி செயலாளராகவும் இருந்த டாக்டர் எச். எச். டேல், ராயல் கமிஷன் முன்னிலையில் பின்வருமாறு தமது முடிவை எடுத்துரைத்துள்ளார்: ''திறமையாகப் பணிபுரிவதற்கு மது ஒருபோதும் உதவியாக இருந்தது இல்லை. ஊறுபயக்கின்ற ஒரு தடையாகவே இருந்து வந்துள்ளது.'' ஒவ்வொரு துளி மதுவும் விஷமே. ''மருந்துகளும், மனமும்'' என்கின்ற தனது நூலில் டாக்டர் தெராப் பின்வருமாறு கூறுகிறார்:

''மனச்சாட்சியுள்ள மருந்தாக்க வல்லுநர் எவரும் ஆல்கஹால் என்பது மிகக் கொடிய புரோட்டோபிளாஸ்மிக் நஞ்சாக விளங்கும் பொருள் என்று சொல்வதைத் தவிர, வேறு எந்த வகையிலும் அதனைக் குறிப்பிட மாட்டார்கள். மது நமக்குச் சுறுசுறுப்பையும், புத்துணர்ச்சியையும் அளிக்கின்ற பொருள் அல்ல என்றும், அதற்கு மாறாக நமது சுறுசுறுப்பையும், புத்துணர்ச்சியையும் அது சிதைத்துவிடுகிறது என்பதையும் அவர் கூறுகின்றார். நம்முடைய களைப்பையும், அயற்சியையும் அது ஒருபோதும் அகற்றியதில்லை. மாறாக, நமது களைப்பைப் பெருக்குகிறது. மது நம்முடைய உடலில் எந்தெந்த உறுப்புக்களைத் தாக்குகிறது தெரியுமா? அது மூளையைத் தாக்குகிறது, கல்லீரலைத் தாக்குகிறது. சிறுநீரகத்தை அரித்து விடுகிறது, வயிற்றைக் குடைந்து புண்ணாக்குகிறது; ஏன் நமது இதயத்தையும், உடலின் ஒவ்வொரு பாகத்தையும், அதில் ஓடுகின்ற குருதியையும் கெடுக்கிறது என்பது உண்மை. ஸ்டராஸ்போர்க்கைச் சேர்ந்த மருந்தாக்கவியல் பேராசிரியர் ஆட்டோ ஷ்மீட்பர்க் என்பவர் கூறுவதாவது:

''குளோரோபாரத்தைப் போலவும், ஈதரைப் போலவும் மதுவும் மயக்கமூட்டும் பொருளே; மேலும் மங்கச் செய்வதும், மந்தமாக்குவதும், போதையூட்டி நிலைமறக்கச் செய்வதும் இதன் குணங்கள். அன்றியும், இது ஒரு புரோட்டோபிளாஸ்மிக் நச்சுப் பொருள். இது உடலில் தொடர்பு கொள்கின்ற ஒவ்வொரு திசுவின் ஆற்றலையும் குறைத்து விடுகிறது.'' புகழ்பெற்ற மருத்துவ விஞ்ஞானிகள் பலரும் இது பற்றிக் கூறியிருப்பதாவது:

''நவீன அறிவியல் மருத்துவத் துறையில் சிகிச்சை அளிக்கின்ற ஒரு துணைப் பொருளாக ஆல்கஹால் ஒருபோதும் இடம்பெறாது. ''நிமோனியா 'கிரிப்பே' போன்ற கடுமையான சளிக்காய்ச்சல் நோய்களின் சிகிச்சைக்கு அறிவியல் மருத்துவர்கள் ஆல்கஹாலே இனிமேல் பயன்படுத்த மாட்டார்கள். இது நன்மையளிக்காது என்பது மட்டுமல்ல. அத்தகைய நோய்களின்போது இது மிகக் கடுமையான தீங்கினை விளைவிக்க வல்லதுமாகும்.'' ''எந்த நோய்க்குமே ஆல்கஹால் ஒரு மருந்துப் பொருளாக அல்லது அப்போதைக்குச் சிகிச்சையளிக்கின்ற துணைப்பொருளாக இல்லை.'' பக்கவாத நோய், முடக்குவாத நோய் ஆகியவற்றிற்கு ஆல்கஹால் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. எந்த நோய்க்கும் ஆல்கஹாலை மருந்தாகப் பயன்படுத்துவதை உலகின் தலையாய மருத்துவர்கள் பலரும் நேரடியாகக் கண்டித்து வருகிறார்கள்.

மது அனுமதிச் சீட்டு என்பது வெறும் பித்தலாட்டம்!

நவீன மருத்துவ ஆராய்ச்சிகள் பெரிதும் வளர்ந்துள்ளன. எல்லா நோய்களுக்கும் சிறப்பான வகையில் குணம் அளிக்கின்ற மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிலையில் அறிவியல் முன்னேறிய இந்த நாளிலும்கூட பெரிய பெருமக்கள் மருத்துவக் காரணங்களுக்காக மது அருந்துவதற்கான அனுமதிச் சீட்டுகள் வேண்டுவதும், அவ்வாறே அவர்களுக்கு அனுமதிகள் வழங்கப்படுவதும் பெரிதும் வியப்பாக உள்ளது.

இப்போது மதுவானது எந்த நோய்க்கும் மருந்தாகாது; அதற்கு மாறாக மிகக் கடுமையான நஞ்சாக அமைகிறது. நவீன அறிவியல் மருத்துவம் முன்னேறியுள்ள நிலையில் எல்லா நோய்களுக்கும் சிறந்த மருந்துகளும் எல்லா வகையான உடல் துன்பங்களுக்கும் சிறந்த மருந்தாக்க முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆல்கஹால் இப்போது முக்கியமான ஒன்றல்ல. இந்த நிலையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 47-வது பிரிவுக்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகும்.

மேலும், மது அனுமதியைப் பெற்று வைத்திருப்பவர்கள் பலர் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட அளவுக்கு மேல்மேலும் அதிக எண்ணிக்கையில் எவ்வாறாவது மதுப்புட்டிகளைப் பெற்று விடுகின்றனர் என்றும், அரசு அதிகாரிகளுக்கு இலஞ்சம் அளிப்பதற்காக இந்த மதுப்புட்டிகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர் என்றும் இப்போது புகார் கூறப்படுகின்றன. அன்றியும் மது அனுமதி வைத்திருப்பவர்கள் பலர் நல்ல ஆரோக்கியமும், உடல் வலிமையும் உடைய பணக்காரர்களே என்பதும் தெரிய வந்துள்ளது.

மதுவிலக்கால் மாநில அரசுகளுக்கு வருவாய் குறையும் என்பது ஒரு கட்டுக்கதை:

மதுவிலக்கைச் செயற்படுத்துவதன் காரணத்தால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏதாகிலும் ஏற்படுமானால் நாம் அதுபற்றி எண்ணிப் பார்க்கும்பொழுது மதுவிலக்கால் நாம் அடைந்த சமுதாய நன்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். குடிப்பழக்கத்தால் விளைகின்ற பொருளாதார இழப்புக்கள், மற்றும் ஏனைய வகை இழப்புக்களை ஈடு செய்வதற்கு மதுவினால் கிடைக்கும் வருவாய் ஒருபோதும் உதவாது.

மதுவிலக்கைச் செயற்படுத்தியதன் விளைவாக ஏற்பட்ட வருவாய் இழப்பைச் சரிக்கட்டுவதற்காகவே விற்பனை வரி, கேளிக்கை வரி ஆகியன கொண்டு வரப்பட்டன. இன்னும் மதுவிலக்கைச் செயற்படுத்தாத பல மாநிலங்கள் இந்த வகையில் பல்லாண்டுகளாக கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் பெற்று வருகின்றன; அதே சமயத்தில் அவை மதுவிலக்கைச் செயற்படுத்தவும் இல்லை. அதனால், ஏழை மக்களிடமிருந்து மதுவின் மூலம் கிடைக்கின்ற வருவாயின் வாயிலாகப் பல கோடி ரூபாயைப் பெற்று வருகின்றன. மதுவிலக்கால் ஏற்படுகின்ற வருவாய் இழப்பில் 50 சதவீதத் தொகையை அளித்து உதவ மத்திய அரசு அன்புடன் முன் வந்துள்ளது. தற்போது இந்திய மாநிலங்கள் அனைத்தும் இனிமேலும் கால தாமதம் இன்றி மதுவிலக்கை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும்.

மதுவிலக்கைச் செயற்படுத்துவதன் வாயிலாக மாநிலங்கள் அனைத்திற்கும் மது வகையில் கிடைக்கின்ற வருவாய் ரூ. 750 கோடி அளவிற்கு இழப்பு ஏற்படும் என்று வாதிக்கப்படுகிறது. மது வகையில் ஆயத்தீர்வை மூலமாக அரசுக்கு ஒரு ரூபாய் வருமானம் வந்தால், ஏழைக் குடிகாரனிடமிருந்து நான்கு ரூபாய் பறிக்கப்படுகிறது என்பது பொருள்; எவ்வாறென்றால், மது விற்பவனுக்கு இலாபம், மூலப்பொருளின் விலை, புட்டியின் விலை போன்ற வகைகளில் ஆகும் செலவுகளை அவனே -டுக்க வேண்டும். எனவே, மதுவை உட்கொள்ளுகின்றவர்களுக்கு ஏற்படுகின்ற மொத்த இழப்பு ரூ. 3,000 கோடியாகும் (இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் பொருந்துவது). இப்படி விரயமாகிற தொகையைச் சேமிக்க முடிந்தால் மக்களின் வாழ்க்கை முறைகளை மேம்படுத்துவதற்கு அத்தொகையைப் பயன்படுத்தலாம். அவர்கள் வாழ்க்கை முறை மேம்படுவதால் அவர்கள் வாங்குகின்ற பொருட்களின் மூலமாகப் பெருமளவிற்கு விற்பனை வரி அரசுக்குக் கிடைக்கும்; அன்றியும் கேளிக்கை வரியாகவும் பெருந்தொகை அரசுக்குக் கிடைக்கும். இவ்வாறு அரசும் இதனால் ஆதாயம் பெறும். குடிப்பழக்கம் ஒழிவதால் முன்னர் குடித்து வந்து, பின்னர், அதனைவிட்டு விட்ட மக்களது குடும்பவாழ்வில் மகிழ்ச்சி நிலவும்.

மதுவிலக்கின் விளைவாக, தொழிலாளர்கள் மகிழ்ச்சி பெறுவது திண்ணம். தொழிலாளர்கள் வேலைக்கு வராமல் அடிக்கடி நின்று போவது என்பது குறைந்து விடும். விபத்துக்கள் குறையும். வேலை முடக்கங்களும் குறையும். எனவே, பெருந் தொழில்களும் தொழிற்சங்கங்களும், மதுவிலக்குக்கு ஆதரவு அளிக்க வேண்டும். இவையன்றி, குற்றங்கள் குறைந்திடுவதால் சுகாதாரக் கேடு பிரச்சினைகளும் குறைவதால், விபத்துக்களும் குறைவதால் இன்ன பிற வழிகளில் பெருமளவு செலவை அரசு மிச்சம் பிடிக்க இயலும்.

இலஞ்ச ஊழலும், சட்டம்—ஒழுங்கும்:

மதுவிலக்கைச் செயற்படுத்தினால் நிர்வாகத்தில் ஊழல் மலிந்து விடும் என்று சிலர் நம்பமுடியாத கற்பனை வாதங்களை முன் வைக்கிறார்கள். இந்தத் தவறான கருத்தும்கூட மதுவிலக்கைச் செயற்படுத்திய தமிழ்நாடு, குஜராத் மாநிலங்களில் நிலவுகின்ற நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால் அடிபட்டுப்போகும். இவ்விரு மாநிலங்களிலும், முழு மதுவிலக்கு செயற்படுத்தப்பட்டுள்ளது. நிச்சயமாக மற்ற மாநிலங்களைக் காட்டிலும் ஊழல் மிகக் குறைவு; அது மட்டுமல்லாமல், இங்கே சட்டம் ஒழுங்கு நிலைமையும்கூட மிகச் சிறப்பாக உள்ளது. இவ்விரு மாநிலங்களிலும் காவல்துறை நிர்வாகம் மிகச் சிறந்து விளங்குகிறது.

மதுவைக் குறைந்தளவு பயன்படுத்தினால் தீங்கில்லை எனக் கூறும் கருத்து:

மதுவை மித அளவாக உட்கொண்டால் அதனால் தீங்கில்லை என்று பலர் வாதிடுகின்றனர். ஆனால், மேலை நாட்டாருடைய அனுபவம் என்னவென்றால், அங்கே அளவாகக் குடித்து வந்தவர்களும், சிறிது காலத்தில் அதிக அளவில் குடிக்கத் தொடங்கி, குடிப் பழக்கத்திற்கு அடிமையாகிவிடுகிறார்கள். என்பதுதான். சிலர், நான் குடிப்பதுண்டு, ஆனால் குடிக்கு அடிமையாவதில்லை; நிதானம் தவறாமல் இருப்பேன், என்று பெருமையடித்துக் கொள்வார்கள். ஆனால், அவர்களும்கூட இறுதியில் மதுப்புட்டிக்கு அடிமையாகி விடுகிறார்கள். இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கத் தொடங்கிய பலரும் பிறகு புட்டி புட்டியாகவும், பீப்பாய் பீப்பாயாகவும் குடித்துப் பெருங் குடியர்களானார்கள் என்று காட்டுவதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

கள்ளச்சாராயம்:

மதுவிலக்குக்குக் கள்ளத்தனமாகப் பிறந்த குழந்தை தான் கள்ளச் சாராயம்என்று பலர் சொல்லுகிறார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. மதுவிலக்கு அமலில் இல்லாத மாநிலங்களில் கூட கள்ளச் சாராய உற்பத்தியின் விற்பனையும், மிகப் பல மடங்குகள் அதிகரித்துள்ளன என்பதைக் காட்டுவதற்கான புள்ளி விவரங்கள் உள்ளன. அண்மைக் காலத்தில் குஜராத், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களும் மதுவிலக்குச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைத் தவிர்த்துச் செம்மையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முனைந்துள்ளன.

உலகப் புகழ்பெற்ற அறிஞர்களும் கவிஞர்களும்:

உலகப் புகழ்பெற்ற அறிஞர்களும் கவிஞர்களும் குடிப் பழக்கத்தைக் கண்டனம் செய்திருக்கிறார்கள். உலகப் புகழ் வாய்ந்த கவிஞர் 'எவாஞ்சலின் பூத்' என்பவர் குடிப் பழக்கத்தின் கேடுகளை மிக உருக்கமாக, மனத்தில் ஆழப்பதியும் வண்ணம் ஒரு கவிதையில் வடித்துள்ளார். அதன் கவிதை வடிவத் தமிழாக்கம் பின்வருமாறு:—

''.... .....
குடியெனும் கொடிய பழக்கம் இங்கே
கூற்றென இழைத்த கொடுமைகள் எண்ணில;
....
குடித்த குருதிப் புனலுக்கு அளவில்லை
குடிப் பழக்கத்தால் கோடியும் தொலைந்தன
மதுவைப் பற்றி மற்றெதும் விற்ற
மாண்பிலார் செயல்கள் மனத்தை உருக்கிடும்;
வீடு வாசல் விட்டவர் எண்ணிலார்
மாடு கன்று மக்கள் சுற்றம்
தேடும் செல்வம் யாவும் தொலைத்தோர்
கூடா வொழுக்கம் குறுகிட வீழ்ந்தோர்
'குடிலன்' களாகக் குணம்மிகத் தாழ்ந்தோர்
கொடுமை வஞ்சகத்தின் கொள்கலன் ஆனோர்
தொகையிங் கெண்ணிடத் தொலையாது
அம்மா;
குடிப்பழக்கம் வந்து கூற்றென மாய்த்த
குழந்தைகள் வெள்ளம் கொள்ளிட மில்லை;
நல்மண உறவில் நடப்பெற்ற பயிர்கள்.
பொல்லாக் குடியால் பொசுங்கித் தீய்ந்தன,

பாலும் பளிங்கும் போலத் தூய
வெள்ளை உள்ளங்கள் கறைப்பட்டு வீழ்ந்தன!
உள்ளத்தைக் கொன்ற ஒவ்வாக் குடியவன்
உடலுக்கு விளைத்த ஊனமும் எண்ணில:
கண்ணொளி பறித்துக் கையும் காலும்
பின்னிக் கொள்ளவும் பின்ன முறவும்
பேத முறவும் சேதம் புரிந்தது;
பகுத்தறிவை இங்கு பாழ்படுத் திற்று;
ஆண்மையை வீழ்த்தி அவலம் செய்தது;
பெண்மை என்னும் பெருங்கலன் தன்னை
பேணும் மகளிரின் பெருமையைச் சிதைத்து
சிறுமையில் ஆழ்த்திக் கொடுமை புரிந்தது!
குடியால் மடிந்த குடும்பம் பலப்பல
குடியால் முறிந்த மனங்கள் எண்ணில
குடியால் சிதறுண்ட உயிர்கள் கோடி!
குடிப்பழக் கத்தால் தற்கொலை முனைக்குக்
குறித்துச் சென்றோர் எண்ணிலர்; அந்தோ!
உலகைத் தழுவிய மரணப் பேரலைகளை
எழுப்பிப் பாய்ந்த பெருவெள்ள மாக
வந்த போர்கள், கொள்ளை நோய்கள்
உயிர்கொல் நஞ்சுக் கலவைகள் யாவிலும்
கூற்றத்தின் ஆற்றல் குறைவறப் பெற்ற
குடிக்கேடு நிரப்பிய இடுகா டுகளே

மிகுதியாய் இங்கு மீந்திடக் காண்பீர்;
இனியும் இந்தக் குடியெனும் பழக்கம்
படிமீ திருக்கப் பார்த்திருப் பீரோ?

குடிப்பழக்கமும் நாட்டுப் பாதுகாப்பும்:

நாட்டின் பாதுகாப்புப் படைகளுக்கு மதுவகைகள் இன்றியமையாத் தேவை என வாதிடப்படுகிறது. அது ஒரு தவறான கருத்தாகும். அதனை முடிந்த அளவிற்கு விரைந்து திருத்திக் கொள்ள வேண்டும். உலகத்தில் பல நாடுகளின் இராணுவத் தலைவர்கள் பலரும் மது ஒரு பெரிய தொல்லை என்று எடுத்துரைத்துள்ளார்கள். இரண்டாம் உலகப் பெரும்போரில் 1941-ஆம்ஆண்டில் அமெரிக்கக் கடற்படை இருந்த துறைமுகத் தளமான பெர்ல் ஹார்பரில் ஜப்பானியர்கள் குண்டு வீசித் தாக்கினர். அமெரிக்கக் கடற்படை பெருமளவிற்கு அழிவுக்கு உள்ளாயிற்று. அதற்குப் பெரிதும் காரணமாயிருந்தது அதற்கு முந்தைய இரவில் கடற்படை வீரர்களும், இராணுவ வீரர்களும் முழுக் குடிபோதையில் இருந்ததேயாகும். அதுமட்டுமல்ல, அந்தப் போரின் தொடக்க ஆண்டுகளில் பிரான்சு நாடு மிக விரைந்து வீழ்ச்சியுற்றதற்குக் காரணம் என்ன என்பதை மார்ஷல் பீட்டெயின் என்பவரின் சொற்களால் அறியலாம். ''எங்களது வீழ்ச்சிக்குக் காரணம் இராணுவ வீரர்கள் அனைவரும் குடித்துத் தள்ளாடிக் கொண்டிருந்ததும், அவர்களால் போரிட முடியாததும் ஆகும்.''

அமெரிக்க நாட்டில் மதுவிலக்கு எவ்வாறு தோல்வியுற்றது ?

மதுவின் தொல்லை அமெரிக்க மக்களைப் பெரிதும் துன்பத்திற்கு ஆளாக்கியது. அந்த நாட்டு மக்களுக்கு மது உற்பத்தியும் விற்பனையும் தடை செய்யப்பட வேண்டும் என்று நம்பும்படியாக எடுத்துரைப்பதற்குப் பல ஆண்டுகள், பல தலைமுறைகள் பிடித்தது. 1920-ஆம் ஆண்டில் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் மதுவிலக்கின் பொருட்டு 18-வது திருத்தத்தை ஏற்றுக் கொண்டது. அதன் பிறகு இந்தச் சமூக நோய் ஒழித்துக் கட்டப்பட்டது என்று மக்கள் பெரிதும் மகிழ்ச்சியுற்றனர். ஆனால், 1924-ஆம் ஆண்டில் மதுவிலக்குக்கு எதிரான ஒரு சங்கம், செல்வாக்கு வாய்ந்த சில அதிகாரமுடைய குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் குழு, சட்டம், ஒழுங்கினைப் புறக்கணித்து குற்றங்களைப் புரிந்து ஒழுங்கின்மையைக் கைக் கொண்டு அதில் மகிழ்ச்சியும், எக்காளமும் கொண்டு, அதனால் ஆதாயம் பெற்று, பயனடைந்து வந்த சிலர் மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமையாக எதிர்க்கும் எண்ணத்துடன் இச்சங்கத்தை நிறுவினர். இந்தச் சங்கத்திற்குப் பின்னே ஆதரவாக அதற்குத் துணை நின்றவர்கள் மது தயாரிப்பாளர்கள். இவர்களுக்கு மதுவிலக்கின் காரணமாகப் பெருமளவு ஆதாயம் கிட்டாமல் போயிற்று. வருமான வரிக்குப் பதிலாக மக்கள் செலுத்த வேண்டிய மது வரியின் மூலம் பல இலட்சக் கணக்கான டாலரைச் சம்பாதிக்கும் பொருட்டு இவர்கள் வெளியில் யாருக்கும் தெரியாமல் இயங்கினர். இதற்காக அவர்கள் பெரும் பொருள் செலவிட்டு மதுவிலக்கு கள்ளச் சாராயம், குடி, அரசியல் ஊழல் ஆகியவற்றிற்கு ஊக்கமளித்து விட்டது என்று தவறானதொரு பொய்ப் பிரச்சாரத்தைச் செய்தார்கள். இதற்காக அவர்கள் பிறரை ஏமாற்றுதல், அச்சுறுத்துதல், உணர்ச்சி வயப்படச் செய்து ஆட்படச் செய்தல், இப்படி எந்த வழியையும் பின்பற்றத் தயங்கவில்லை. செய்தித்தாள்களுக்கு அவர்கள் லஞ்சம் கொடுத்தார்கள். சில அதிகாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் அதுபோலவே லஞ்சம் கொடுத்தார்கள். மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தார்கள். இதன் விளைவாக மதுவிலக்குத் திருத்தம் ரத்து செய்யப்பட்டது. அதன்பிறகு அமெரிக்க செனட் சபையின் பாராளுமன்றப் புலனாய்வுக்குழு 71-வது காங்கிரசின் இரண்டாவது கூட்டத் தொடரில் ஒரு பெரிய அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கை 5088 பக்கங்களைக் கொண்டது. அந்த அறிக்கையில் இந்த மதுவிலக்குத் திருத்தத்தை ரத்து செய்வதற்காகத் தவறான மோசடிப் பிரச்சாரம் செய்வதற்கு எவ்வாறு பல இலட்சம் டாலர்கள் செலவிடப்பட்டன. இதற்காகப் பத்திரிகைகளுக்கு எவ்வாறு லஞ்சம் கொடுக்கப்பட்டது; அரசியல்வாதிகளும், மற்றவர்களும் எவ்வாறு விலை பேசப் பட்டார்கள், அல்லது அச்சுறுத்தப்பட்டார்கள் என்கின்ற மயிர்க் கூச்செறியும் சம்பவங்கள் நிறைந்திருந்தன.

இன்று மது,அமெரிக்காவின் மிகப் பெரிய எதிரியாகும். அங்கு மது வகைகளால் விளைந்த கொடுமை அச்சந்தரத்தக்கது. குடிப் பழக்கத்தின் காரணத்தால் நிதி நிலைமை சீர் கெட்டது. மக்கள் வாழ்க்கை நிலைமையும் குடும்ப உறவுகளும் சீரழிந்தன. பலர் அகால மரணம் அடைந்தனர். கற்பனைக் கெட்டாத அளவுக்கு விபத்துக்களின் எண்ணிக்கை பெருகியது. பெருமளவு மக்கள், மனநோய்க்கும் உடல் நோய்க்கும் ஆளாயினர். இதனாலெல்லாம் அந்நாட்டு மக்கள் படுகின்ற துயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. இதனால் அந்நாட்டு மக்கள் இந்தப் பெரிய சவாலை எவ்வாறு ஏற்பதென்று தற்போது தீவிரமாகச் சிந்தித்து வருகின்றனர்.

மது ஒரு பெரிய கொலை அரக்கன் !

அமெரிக்க நாட்டில் மக்கள் குடிபோதையில் காரோட்டுவதால் ஏற்படுகின்ற சாலை விபத்துக்களில் ஏறத்தாழ ஆண்டொன்றுக்கு 24,000 பேர் இறக்கின்றனர். இந்த விபத்துக்களில் காயம் உறுவோர் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 8,50,000-க்கு அதிகமாகும். அங்கு மனநோய் மருத்துவ மனைகள் சிகிச்சை அளிக்கும் நிலையங்கள் ஆகியன குடிவெறியர்களால் நிரம்பி வழிகின்றன. அங்கே மணவிலக்குப் பெறுவோர் தொகை ஏராளம். இளங் குற்றவாளிகளின் எண்ணிக்கை மிகப் பெரியது. இவையன்றி இன்னும் பல பிரச்சினைகளும் அங்கு அரசையும் சமுதாயத்தையும் வாட்டுகின்ற பெரிய வேதனைகளாக உள்ளன. இதேபோன்ற நிலைமைதான் குடிப்பழக்கம் மிகுந்துள்ள மக்கள் வாழ்கின்ற பிற எல்லா நாடுகளிலும் நிலவுகின்றது.

தமிழ்நாடும் குஜராத்தும் வழிகாட்டுகின்றன

மதுவிலக்கு வெற்றி பெறுமா என்ற கேள்விக்கு காலம்தான் பதில் கூறவேண்டுமென்று முன்பு கருதினர். தமிழ்நாடு, குஜராத் ஆகிய மாநிலங்கள் இச் சோதனையில் வெற்றி பெற்றுள்ளன. இங்கு மதுவிலக்கு

திறம்படச் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு மதுவிலக்கின் விளைவாகப் பொருளாதார-வேலை வாய்ப்பு வளங்கள் பெருகிப் பரந்துள்ளன. இதனால் மக்கள் தொகையில் தொழிலாளர்கள் மற்றும் நலிந்த பிரிவினர் ஆகியோர் மேம்படுவதும், வளம்பெறுவதும் உறுதியாயிற்று. இவ்வரசுகள் தங்களது நிர்வாகப் பிரிவுகளின் வாயிலாக மதுவிலக்கை மிகக் கடுமையாகச் செயல்படுத்துகின்ற பணியை மேற்கொண்டுள்ள அதே சமயத்தில் இங்குள்ள பல தொண்டு நிறுவனங்கள் அரசுகளின் துணையுடன் மதுவிலக்கின் நன்மைகளை மக்களுக்கு எடுத்துரைக்கின்ற நற்பணியையும் நல்வாழ்வுப் பணிகளையும் மேற்கொண்டுள்ளன.

தமிழ்நாட்டிலும் குஜராத்திலும் மகளிர் பெரும்பான்மையோர், குடிப்பழக்கம் என்கின்ற கொடுமையை இயல்பாக எதிர்க்கின்றனர். இவ்விரு மாநிலங்களிலும் வாழுகின்ற மக்களில் தோராயமாக 96 சதவீதம் பேர் மதுவிலக்கை ஆதரிக்கின்றனர். ஆனால், எஞ்சியிருக்கின்ற சதவீதத்தினர் இதற்குத் தொல்லையாயிருக்க அனுமதிக்கப்படுவதில்லை. இவ்விரு மாநில அரசுகளும் தங்கள் அதிகாரிகளையும் பணியாளர்களையும் குடிக்க அனுமதிப்பதில்லை. அன்றியும் இங்கு மது அனுமதி பெற்று வைத்திருப்பவர்கள் எவரும் அரசு நியமிக்கின்ற எந்தக் குழுவிலும் அல்லது வாரியத்திலும் நியமனம் செய்யப்படுவதில்லை.

எதிர்காலத் திட்டம்:

இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளமான வருங்கால வாழ்க்கைக்கும் இதன் கோடிக்கணக்கான மக்களின் நன்மையைக் கருதி, மதுவிலக்கு இங்கு ''கட்டாய''த் தேவையாக அமைய வேண்டும். ஏழை, எளிய மக்கள் மீது உண்மையான அன்பைக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் இந்த குடியினால் விளைகின்ற தீமைகளுக்கு ஒரு முடிவு கட்ட உதவ வேண்டும். இப்போது நாடு முழுவதிலும் இன்னும் நான்காண்டுகளில் முழு மதுவிலக்கு செயற்படுத்தப்பட்டாக வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. இதனை இன்னும் விரைவாகவே கொண்டு வருகின்ற வகையில் நாடு முழுவதிலும் ஆதரவுக் கூட்டங்கள் நடத்தப் பெற வேண்டும். படிப்படியாக மதுவிலக்கைச் செயற்படுத்துவதற்கான திட்டங்களை பல மாநிலங்களும், மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளும் தொடங்கியுள்ளன என்பது மகிழ்ச்சிக்குரியது.

அரசுப் பணியாளர்க்கு நடத்தை விதிக் கோவை:

மத்திய அரசும், மாநில அரசுகளும் இப்போதிருந்தே தங்களுடைய பணியாளர்கள் அனைவரும் குடிக்க வொட்டாமல் செய்து அதற்கான நடத்தை விதிக்கோவை ஒன்றைக் கொண்டுவர வேண்டியது அவசியம். குடிப் பழக்கம் உள்ளவர்கள் அல்லது மது அனுமதி பெற்றிருப்பவர்கள் எவரையும் இந்த அரசுகள் எந்தக் குழுவிலும் அல்லது வாரியத்திலும் நியமனம் செய்யக் கூடாது. இப்படிச் செய்தால் ஒரு சில குழுவினரில், நாங்கள் குடிப்பவர்கள் என்று பெருமை அடித்துக் கொள்ளுகின்ற மனப்போக்கும் கருத்தும் பெரிதும் குறைந்து விடும். இந்திய அரசின் இந்தப் புதுக் கொள்கையைத் துணைக்கொண்டு இந்த

> மதுவிலக்குச் சட்டத்தை நாம் ஜாக்கிரதையாகக் காப்பாற்றினால், தேசத்தையே காப்பாற்றும் சக்தி அதனால் உண்டாகும். கள்ளுக்கு அணை போட்டால் சமூகத்தில் உணவு பலப்படும். கள் போய்விட்டால் காசு மிஞ்சும். கடன் வாங்க வேண்டாம். தரித்திரங்கள் ஒழியும்.
>
> —மூதறிஞர் ராஜாஜி.

நாட்டில் குடிப்பது மரியாதைக் குறைவானதொரு செயல் என்று கருதப்படுகின்ற நிலையில் இங்கே உள்ள உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளும் இந்த நாட்டிற்கு வருகின்ற வெளிநாட்டுத்தூதுவர்களும் தாமாகவே குடிப்பதைக் கைவிட வேண்டும். சட்டம் ஒழுங்கைச் செயற்படுத்துவது, மக்களிடையே மதுவை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வது என்று இருமுனையில் நின்று போராடித்தான் மதுவிலக்கின் இலக்கைத் திறம்பட எய்த முடியும். மதுவிலக்குச் சட்டங்களை மிகக் கடுமையாகச் செயற்படுத்துவதும், அச்சட்டங்களின் தண்டனை விதித்து துறைகளை இயற்றுவதும், தவிர்க்க முடியாதன. அதே சமயத்தில் அதற்கு ஒப்பாகப் பிரச்சார சாதனங்கள் அனைத்தின் மூலமாகவும் உயர்ந்த வகையில் மதுவிலக்கைக் குறித்துத் தெளிவாகப் பிரச்சாரம் செய்வதும் இன்றியமையாததாகும். குடிப்பழக்கம் என்பது ஒரு பெருங்கேடு என்பதை உலகமனைத்தும் ஒப்புக் கொண்டுள்ளது. இந்தக் கேடு அறவே ஒழிக்கப் படவேண்டியது அவசியம். குடிப் பழக்கத்தால் பொருளாதாரத் தாழ்வு ஏற்படுகிறது. மனமும் அறிவும் பாழாகின்றன. ஒழுக்கமும் பண்பும் சிதைந்து கெடுகின்றன. அண்ணல் காந்தியடிகளார் கனவு கண்ட இந்தியாவை உருவாக்க வேண்டுமானால், இங்குள்ள இலட்சக்கணக்கான ஏழை மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமானால், நமது தாயக மக்கள் மகிழ்ச்சியும் வளமும் பெற்று வாழ்ந்திடச் செய்ய வேண்டுமானால், நம்முடைய இலட்சிய முழக்கம் ''எப்பாடுபட்டேனும் மதுவிலக்கைச் செயல்படுத்த வேண்டும்; அதிலும் உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்'' என்று அமையும் குறிக்கோளை, நாடு கடைப்பிடித்தாக வேண்டும்.

முடிவுரை:

குடிப் பழக்கத்தால் விளைந்த கேடுகள் உலகமெங்கிலும் பெரும் கவலைகளையும் துயரங்களையும் தோற்றுவித்துள்ளன. உலக நாடுகள் அனைத்தும் தங்கள் உள்ளத்துக்குள் இந்தக் கொடுமையை ஒழிக்க உடனே முயல வேண்டாமா என்று சிந்தனை கொள்ளத் தொடங்கியுள்ளன. குடிப்பழக்கத்தினால் ஏற்படும் தீங்குகளை, தீயவிளைவுகளை ஒழித்திடும் பொருட்டு, பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குடியின் கேடுகளும் தீமைகளும் மலிந்து, இருண்டு, புயல்வீசிக் கொந்தளிக்கின்ற பெருங்கடற்பரப்பின் நடுவே, இந்திய நாடு ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்து, இச்சமுதாயத்தை குடிப்பழக்கம் என்னும் துயரத்திலிருந்து விடுவித்துக் கடைத்தேற்றுகின்ற ஒரு பெரும்பணியில் தலைமை தாங்கி வழி நடத்த முடியும் என்பது திண்ணம்.

(22-10-78 அன்று பெங்களூரில் நடைபெற்ற கருநாடக மாநில மதுவிலக்கு மாநாட்டினைத் துவக்கிவைத்து ஆற்றிய உரை.)

டிசம்பர் 24ல் ராஜாஜி சிலை திறப்பு விழா

"மூதறிஞர் ராஜாஜியின் 101-வது பிறந்த நாளான டிசம்பர் 10ஆம் தேதியன்று தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் அரசு சார் பில் ராஜாஜி நூற்றாண்டு விழா கொண்டாடப் படும்.

ராஜாஜி பிறந்த ஊரான தர்மபுரி மாவட் டம் தொரப்பள்ளியில் விழா மிகச் சிறப்பாக நடக்கும்.

எட்டடி உயரமுள்ள முழு உருவச்சிலை தயாரிக்கப்பட்டு வருகிறது. வெண்கலத்தால் ஆன இந்தச் சிலைக்கு ரூ. 30 ஆயிரம் செலவாகும். பீடம் அமைக்கும் செலவு உள்பட மொத்தம் ரூ. 50 ஆயிரம் ஆகும். சிலையைச் சுற்றிப் பூங்கா அமைக்கப்படும்.

சென்னையில் பாரிமுனைக்கு ராஜாஜி முனை என்று பெயர் வைக்க அரசு முடிவு செய் துள்ளது. சிலை திறப்பு விழாவுக்கு துணை

குடியரசுத் தலைவர் ஜாட்டி அழைக்கப்பட்டுள் ளார். தென் மாநில முதல் அமைச்சர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அரசு ஏற்றுள்ள அவரது இல்லத்தைச் சீராக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

ராஜாஜி வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சி அங்கு நிரந்தரமாக அமைக்கப்படும்.

ராஜாஜியின் நூல்களும் அந்த இல்லத்தில் இடம் பெறும்.

ராஜாஜியின் சிலை டிசம்பர் 24ஆம் தேதி யன்று சென்னை உயர்நீதி மன்றத்துக்கு அருகில் திறந்து வைக்கப்படும்.

கிண்டியில் உள்ள ராஜாஜி நினைவால யத்தை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ராஜாஜி உபயோகப்படுத்திய பொருட்கள் அங்கு வைக்கப்படும். நூல் நிலையம் ஏற்படுத்தப்படும். ராஜாஜியின் முழு வாழ்க்கை வரலாறும் வெளியிட முயற்சி மேற்கொள்ளப்படும்.

—[இத் தகவல்களை மாண்புமிகு செய்தி-அறநிலை யத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் 22-11-'78 அன்று பத்திரிகை நிருபர் களிடம் அறிவித்தார்]

உ

ராஜாஜியின் வாழ்விலே...

அன்றாட சொந்த நடைமுறை விஷ யங்களையும், பிற பொது விஷயங்களை யும், தானே மற்றவர்களின் துணையை நாடாமல் செய்து கொள்வதில் கண்டிப் பான பழக்கம் உடையவர் ராஜாஜி. இதில் 'வைராக்கியம்' உடையவர் என்று சொன் னாலும் மிகையாகாது. இரண்டாவது முறையாகச் சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராக அவர் இருந்தபோது, ஒரு நாள் வெளியூர் பிரயாணத்துக்காக, சென்டிரல் ஸ்டேஷன் நோக்கிச் சென்றார். அது, பல வெளியூர் ரயில்கள் வரவும், புறப்படவும் கூடிய மிக நெருக்கடியான நேரமாக இருந்ததால், போக்குவரத்துத் தேங்கிப் போய் அவரது கார் சென்டிரல் மேம்பாலத்தைக் கூட அடைய முடிய வில்லை. போக்குவரத்து அடைசலாக 'பாடிகார்டு ரோடு' வரை இருந்தது. இப் பொழுதைப் போல் அப்பொழுது போக்கு வரத்து முறையாக, இயல்பாக இயங்கும் வகையில் அந்நாளில் இருக்கவில்லை.

ரயில் வண்டி புறப்படுவதற்குச் சில நிமிடங்கள்தான் இன்னும் இருக்கிறது என்பதைத் தெரிந்து, நெரிசலில் விடுபட்டு இந்தக் கார் ஸ்டேஷனை அடைய இன்னும் அதிக நேரம் பிடிக்கலாம் என்பதை உணர்ந்து, முதல் அமைச்சர் வருகிறார் என்பதற்காக அதிக நேரம் வண்டி தாம தித்துப் புறப்பட நேர்ந்து, அதனால் பொதுமக்களுக்குக் கஷ்டம் ஏற்படக் கூடாது என்பதில் அக்கறை கொண்டு, எப்பொழுதுமே, எதிலும், என்றும் குறிப் பிட்ட நேரத்தில் கலந்து கொள்வதற்காக சற்று முன்னதாகச் செல்வதில் மிகவும் கண்டிப்புக் கொண்டவர் ஆனதால், வண்டிக் கதவைத் திறந்து, ஊன்றுகோல் உதவியுடன் நடைபாதை வழியாக அந்த 74 வயதில் இயன்றவரை விரைவாக, சென்டிரல் முன் 'ஜாம்' ஆகிப் போயிருந்த அந்தப் போக்குவரத்து நெரிசலையும், வளைந்து வளைந்து சென்று, தாண்டி, சென்டிரல் ரயில்வே நிலையத்தை அடைந்து, குறிப்பிட்ட நேரத்திற்கு முன் தனது வண்டியில்போய் ஏறிக்கொண்டு விட்டார். இந்த அவரது அரிய செயலை, வழியே காரில் அமர்ந்து இருந்தவர்களும், அங்கங்கே நின்றவர்களும், அதிசயத்துடன் பார்த்து வியந்து நின்றனர்.

ஒரு முறை திருக்குற்றாலத்தில் ரசிக மணி டி.கே.சி. அவர்கள் வீட்டில் ராஜாஜி அவர்கள் விருந்தினராகத் தங்கி இருந்தார். அப்போது ராஜாஜி அவர்கள் காங்கிரசி லிருந்து கருத்து மாறுபாடு கொண்டு சற்று ஒதுங்கி இருந்த நேரம். அவர் அங்கிருந் தாலும் அவரை நாடி இந்தியாவின் பல இடங்களிலிருந்தும், உலகின் பல பாகங் களிலிருந்தும் கூட தந்திகளும், கடிதங் களும் வந்து கொண்டே இருக்கும். அவ ரும் காலம் தவறாமல் அவைகளுக்குப் பதில் தந்து கொண்டே இருப்பார். அந் நாளில் குற்றாலத்தில், டெலிபோன், தந்தி வசதிகள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. ஒரு சிறிய தபாலாபீஸ் மட்டும்தான் உண்டு. நாளில் ஏதாவது ஒரே ஒரு நேரம் தபால் எடுப்பார்கள். ஒரே ஒரு தரம் மட்டும் தருவார்கள். தந்தி கொடுக்க வேண்டுமானால் குற்றாலத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள தென் காசிக்குத்தான் செல்ல வேண்டும். பஸ் போக்குவரத்தும் அடிக்கடி கிடையாது. அதுவும் எல்லாக் காலங்களிலும் கிடை யாது. டி. கே. சி. அவர்களின் கூட நிழ லாக இருந்து பணி ஆற்றிக்கொண்டிருந்த எஸ். வி. எஸ். மணிக்குச் சின்ன வயசு. மணிக்கும் அதிக ஆரோக்கியம்கிடையாது.

ராஜாஜி பல வார்த்தைகள் கொண்ட ஒரு பெரிய தந்தியை எழுதி, மணியிடம் தந்து தென்காசி தபால் நிலை யத்தில் கொடுத்து விட்டு வரச் சொன் னார். சுமார் எட்டு மணிக்குப் புறப்பட்டுச் சென்ற மணி, சைக்கிளில் சென்று திரும்பி வரப் பத்து மணிக்கு மேலாகிவிட்டது. தென்காசி, குற்றாலம் பக்கம் எப்பொழு துமே 'சோவென' பேய்க்காற்று அடித்துக்

கொண்டிருக்கும். பலமான எதிர்க்காற்றில், சைக்கிளில் வந்ததில் மிகவும் சோர்வு ஏற்பட்டிருந்தது. வந்து இறங்கியதுமே, ராஜாஜி 'அந்தத் தந்தியைக் கொடுத்து விட்டாயா?' என்று கேட்டு விட்டு, 'சரி, சீக்கிரமாய்ப் போய் இந்தத் தந்தியையும் கொடுத்து விட்டு வா' என்று சொன்னார். அந்தத் தந்தி டெல்லியில் வைஸ்ராயாக அப்பொழுது இருந்த 'லார்டு வேவல்' சில விஷயங்களைப் பற்றிக் கேட்டிருந்ததற்குத் தந்த விரிவான விளக்கம். அந்நாளில், அதற்கு 35 ரூபாய் சார்ஜ் ஆயிற்றென்றால் அந்தத் தந்தி எவ்வளவு நீளமானது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

அக்காலத்தில் தந்திக் கட்டணம் வார்த்தைக்கு அரை அணா ஒரு அணா என்று இருந்த காலம். ராஜாஜியிடம் ''தென்காசிக்குப் போய்விட்டு வந்தது மிகக் களைப்பாக இருக்கிறது. எதிர்க்காற்று வேறு. வேகமாக போக முடியலே. கொஞ்சம் கழித்து சாப்பிட்டு விட்டு மத்தியானமாகப் போய்க் கொடுக்கிறேனே'' என்று மணி தயங்கித் தயங்கிச் சொன்னதும், அப்பொழுது (67 வயதில்) ராஜாஜி ''பணத்தையும் அந்த தந்தி மேட்டரையும் இங்கே கொடு. அந்த சைக்கிள் எங்கே?' என்று புறப்படத் தயாரானார். இப்படி அவர் சொன்னதும், மணி நடுங்கிப்போய் இந்த வயோதிகரே செல்கிறாரே, இது ரசிகமணிக்குத் தெரிந்தால் என்னாவது? என்ற பயத்தில், துணிச்சல் ஏற்பட, மணியின் சைக்கிள் தென்காசியை நோக்கிப் பறந்தது. இதுதான் ராஜாஜி.

* * * * * *

சென்னை சென்டிரல் ஸ்டேஷன் பக்கம் உள்ள மெமோரியல் ஹாலில் கம்யூனிஸ்டுக் கட்சியினர் நடத்திய ஒரு பொது நிகழ்ச்சியில் ராஜாஜியும் பங்கு கொண்டு உரையாற்றச் சென்றார். வழக்கமாகப் பேச்சாளர்கள் எல்லோரும் பேசிய பின் கடைசியாகத்தான் ராஜாஜி பேசுவது வழக்கம்.

அதனால், முன் பேச்சாளர்களின் கருத்துக்களுக்கு விளக்கம் தரவும், அதை ஒட்டித் தனது தனிப்பட்ட அபிப்பிராயங்களை வலியுறுத்தவும் அவருக்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் அன்று விபரீதமாக, அங்கே கூட்டத்தில் முன்னதாகவே பேசிவிட்டு அவர் வெளியே புறப்பட்டு வந்துவிட்டார். வந்தபோது, அவர் வந்த கார் கடை வீதிக்குச் சென்றிருப்பதையும், வரச் சற்று நேரமாகலாம் என்பதையும் தன்னுடன் வந்திருந்தவர் சொல்லத் தெரிந்து கொண்டார். அவரது வழக்கப்படி, அவர் பேசி முடிக்க நேரமாகும் என்று எதிர்பார்த்து, அவரிடம் சொல்லாமலே வண்டியைக் கொண்டு போயிருந்தனர். அவரும் சாதாரணமாக மிக முக்கியம் அல்லாதவைகளை, முன்னதாகவே செய்யப்பட வேண்டாத அலுவல்களைப் பற்றி, முன்னதாகச் சொல்ல மாட்டார். அவ்வப்போது தான் அடுத்த வேலைகளைத் தெரிவிப்பார். அன்று அவருக்கு, மிக அவசரமாக சென்டிரல் ரயில்வே நிலயத்திற்கு சென்று, டெல்லி வண்டியில் செல்ல இருக்கும், மத்திய அமைச்சர் கோபாலசாமி அய்யங்காரை அவசரமாகச் சந்திக்க வேண்டி இருந்தது. 'ஹாலின்' படிக்கட்டில் அவர் வந்து நின்றதும், ஒரு கூட்டம் சேர்ந்து அவரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தது. அங்கே இருந்தபடியே, ரோட்டு அருகில் நின்ற ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரரை அழைத்து அதில் ஏறிக் கொண்டார். கூட வந்திருந்தவரிடம் 'பணம் இருக்கிறதா? என்று கேட்டார். அவரிடம் பணம் இல்லை. உடனே சுற்றி அங்கே கூடியவர்களைப் பார்த்து 'யாராவது அந்த ரிக்ஷாக்காரருக்கு, ஒரு ரூபாய் கொடுங்க' என்று சொன்னார். பலர் தர முன் வந்தனர், ஒரே ஒரு ரூபாயை மட்டும் வாங்கிக்கச் சொல்லி வண்டியை நேராக சென்டிரல் ஸ்டேஷன் நோக்கி விடச் சொன்னார். யாவும் கூடி நின்றவர்களுக்கு மிகவும் வியப்பாக இருந்தன.

குறிப்பிட்ட நேரத்தில் ரயிலில் அவரைச் சந்தித்துப் பேசினார். அதற்குள் ஒரு பிளாட்பாரம் டிக்கட்டும் வாங்கி வரச் செய்துவிட்டார். திரும்பி வரும்போது ஸ்டேஷனிலிருந்து ஒரு டாக்ஸியில் ஏறி நேராக வீட்டுக்கு வந்து விட்டார். சின்ன விஷயங்களில் கூட ராஜாஜி மற்றவர் தயவுகளை, எதிர்பாராதவர்; காரியங்களை ஒத்தி போடாதவர்!



திரூரில் முதல் கூட்டுறவுச் சங்கம்

தமிழகத்தில் 74 ஆண்டுகளுக்கு முன்னே பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த செங்கற்பட்டு மாவட்டத்தில் திரூர் என்ற சிற்றூரில்தான் முதன்முதல் கூட்டுறவுச் சங்கம் பிறந்தது. இன்று அது ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி செழித்து நிற்கின்றது. இன்று தமிழகமெங்கும் 4,800 கிராமங்களில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை உழவர் பெருமக்களின் அனைத்துத் தேவைகளையும் கவனித்து வாழ்வை வளங்கொழிக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.



சின்ன விஷயங்கள்...

முதறிஞர் ராஜாஜி

வாழை மரம் ஒன்றைப் பாருங்கள். அதன் வடிவம் வேர் முதல் நுனி வரையில் எவ்வளவு அமைப்பாக அமைந்திருக்கிறது! அகன்ற பச்சை இலைகள். தளதளவென்று உயிரொளியோடு மின்னும் தண்டுமரம். நுனியில் பாதி மூடியும், பாதி பாதி திறந்துமாக எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிற புதிய குருத்து. அடியில் பட்டுப்போல், அழகாய்ப் பழுப்பேறின பட்டை, 'என் வேலை முடிந்தது. வளரும் வளர்ச்சிக்குக் காப்பாகக் கீழே கிடக்கிறேன். தடையாக நிற்க மாட்டேன்' என்று வாய்திறந்து பேசுவதுபோல் இருக்கிறது. உயிர் படைத்த ஒரு ஜன சமூகத்தின் பண்பாட்டுக்கு வாழைமரம் எவ்வளவு பொருத்தமான உபமானம்!

குப்பையன் வீட்டுப் புழக்கடையில் அவன் தகப்பனார் வைத்த வாழைமரம் ஒன்று இருக்கிறது. மேலே விட்ட இலையெல்லாம் அறுபட்டு, மரம் மொட்டையாய்க் கம்பம்போல் நிற்கிறது. கீழே சாக்கடை நீர். அதில் அழுகிக் கிடக்கும் பட்டைகள். செடிக்கு ஜலம் தானாகச் சாக்கடையில் வந்தால் உண்டு. உலர்ந்து கிடந்தாலும் கேட்பார் இல்லை. இந்தப் பரிதாபமான நிலையிலும் குருத்துவிடப் பார்க்கிறது. எவ்வளவு கொடுமைக்கு இடையிலும் வளரப் பார்க்கிறது? வளராமல் போனால் செத்தல்லவோ போக வேண்டும்? இது நம் பண்பாட்டின் தற்போதைய நிலை என்று சொன்னால் குற்றமில்லை. குப்பையன் வீட்டு வாழை மரத்தில் இன்னும் உயிர் இருக்கிறது. அது காமதேனு அல்லவா? கொஞ்சம் கவலை செலுத்திக் கவனித்தால், எல்லாம் தரும். இதுவரையில் அதற்குச் செய்த கொடுமையையும் மறந்து குருத்துவிட்டு அழகாக வளரும்!

பண்பாடு என்பது முக்கியமாக மக்களின் வீட்டு விவகாரத்தில் கலந்து நிற்கும். ஆயினும் வீட்டுக்கு வெளியேகூடப் பண்பாட்டின் ராஜ்யம் உண்டு. வெளியூர்க்காரர்கள் ரயிலில் சென்னப்பட்டணத்துக்கு வந்தால், சென்ட்ரல் ஸ்டேஷனை அணுக அணுக, முதல் முதலில் காலையில் அவர்கள் காணும் காட்சி என்ன? ரயில் வேகமாய்ச் செல்லும்போது, வெளியே பாதையிலும் வயல் வெளிகளிலும் இருக்கும் ஜனங்களுக்கு, வண்டிக்குள் இருப்பவர்களின் முகங்கள் தெரிகிறதில்லை. ரயில் வண்டியின் வேகம் மறைத்து விடுகிறது. ஆனால் அதேமாதிரி

வண்டிக்குள் இருப்பவர்களுக்கு. வெளியே உள்ள பொருள்களும் நிகழ்ச்சிகளும் மறைந்து போவதில்லை. வியக்தமாகத் தெரிகின்றன. இந்த வித்தியாசம், பாவம், ரயிலோரம் காலைக்கடன் கழிப்பவர்களுக்குத் தெரியாது. வெளிநாட்டுப் பிரயாணிகள் சென்னை வந்து சேரும் தறுவாயில் ஜன்னல் வழியாக ஊரைப் பார்ப்பார்கள். 'இதென்ன, மதராஸ் ஜனங்கள் இப்படிச் செய்கின்றார்கள்! இவர்கள் ஊரில் மறைவான இடமே கிடையாதா? ரயிலோரம் திறந்த வெளியில் நாணமே இல்லாமல் வெளிக்கு உட்காருகிறார்களே!' என்று வியப்பும் அருவருப்பும் கொள்வார்கள்.

இது ஒரு சிறிய விஷயம். சொல்லுவதற்கும் படிப்பதற்கும் அவலட்சணமாகத்தான் இருக்கிறது. சின்ன விஷயமாயினும் பெரிய வெட்கக்கேடு. நம்முடைய தென்னாட்டின் பண்பாட்டு அழகையும் பெருமையையும் பற்றி வேறு ஊர்களில் பேசினால், அவர்கள் இதை எடுத்துக் காட்டுகிறார்கள். யாருமே இதைக் கவனிப்பார் இல்லையே என்று இதைப்பற்றி எழுதுகிறேன்.

ரயிலோரம் மண்ணெடுத்த குழிகளில் அழுக்கு ஜலம் தேங்கி நிற்பது சவுகரியமே. ஆயினும், அந்தச் சவுகரியத்திற்காக இந்த அநாகரிகக் காட்சியா நம்முடைய நாட்டுக்குப் புதிதாக வருகிறவர்களுக்கு நாம் முதலில் அளிக்க வேண்டும்? எங்கேயாவது மறைவாக உட்காரலாம். ரயிலோரம் வேண்டாம். தண்ணீருக்காகக் கையில் ஒரு செம்பு எடுத்துப் போனால் தீர்ந்தது. மண்ணில் ஒரு சிறு குழி பறித்து அதில் கழித்துவிட்டு மறுபடி அதன் மேல் மண்ணைப் போட்டு மூடிவிட்டால், எவ்வளவு நாகரிகமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்? ரயில் அல்லது ஜனங்கள் நடக்கும் பாதையோரம் தவிர்த்து வேறு இடம் இல்லவேயில்லையானால், யாராவது இதற்காக முயன்று ஒரு சுவர் போட வேண்டும். செடியோ, மரமோ, கொடியோ போட்டு வளர்த்துக் கொஞ்சம் மறைவு உண்டாக்க வேண்டும்; இது நம்முடைய ஊரின் பெயரைக் காப்பாற்றுவதாகும்.

போலீஸ்காரர்களுக்குப் பயந்து ஒருவேலை செய்யாமலிருப்பது போதாது. தெருவிலும், வாய்க்கால் ஓரத்திலும், ஜனங்கள் நடமாடும் வேறு பொது இடங்களிலும் மலசலங் கழிப்பது அநாகரிகம். ஊரைக் கெடுக்கிறது;

நமக்கும் நல்லதல்ல. யார் இருந்தாலும் இல்லாதிருந்தாலும், செய்யாமலிருக்க வேண்டும். வீட்டில் குழந்தைகள் கண்ட விடத்தில் அசுத்தம் செய்தால் சும்மா இருப்போமா? ஊரெல்லாம் ஒரு வீடு; நாம் அதில் குழ்ந்தைகள் அல்லவா? 'வீடு தான் நம்முடையது, ஊர் யாருடையதோ தெரியாது' என்றிருப்பது அநாகரிகம்.

சிறு வயதில் ஏற்படும் பழக்கமே என்றைக்கும் ஸ்திரமாக நிற்கும். பிறகு மாற்றுவது மிகக் கடினம். குழந்தைகள் பெரியவர்களைப் பார்த்தே எதையும் கற்றுக் கொள்ளுகிறார்கள். அடக்கம், பொறுமை, நயமொழி, மரியாதை பிறர் மனம் நோவாமல் கவனித்துப் பேசுவது, இவையெல்லாம் பெரியோர் எப்படி நடத்திக் காட்டுகிறார்களோ அதைத்தான் குழந்தைகள் கற்றுக் கொள்கிறார்கள். இதனால் பெரியோர் மிக்க ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்பது ஏற்படுகிறது. பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும். நம்முடைய குழந்தைகள் பிற்காலத்தில் பண்பட்டவர்களாக வாழ்க்கை நடத்த வேண்டுமானால், வயது முதிர்ந்தவர்களாகிய நாம் சிரமப்பட்டுக் கவனம் செலுத்தி ஒவ்வொரு காரியத்திலும் பெருந்தன்மையும் பொறுமையும் வினயமும் காட்ட வேண்டும்.

மனைவி கணவனிடம் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றி நம்முடைய புராண இதிகாசங்களில் விரிவான உபதேசம் இருக்கிறது. வேண்டிய அளவும் அதற்கு மேலேயும்கூட இருக்கிறது. ஆனால் அதைத் திருப்பிப் போட்டுக் காட்டவில்லை. பண்பட்ட கணவன் மனைவியிடம் நடந்து கொள்ள வேண்டியதைப்பற்றி நமக்குப் படிப்புப் போதவே போதாது. இதைப்பற்றி எழுதப் புகுந்தால் அது தனிப் புத்தமாக முடியும். பொதுவாக ஒரு சூத்திரம் சொல்லுகிறேன்.

கலியாணம் ஆகிவிட்டது. இனி இந்தப் பெண் என்னுடைய சொத்து. அவளுடைய பணிவிடையைக் கட்டாய வரி வசூலைப்போல நான் பெறலாம் என்று எண்ணுதல் கூடாது. இரு நண்பர்கள் ஒருவரை ஒருவர் மதித்து, ஒவ்வொரு நிமிஷமும் கவனத்துடன் நடந்து கொண்டு அன்பைச் சுயேச்சைப் பொருளாக எப்படி வளர்த்து வருகிறார்களோ, அப்படியே கணவன் மனைவியிடம் மரியாதையாகவும் அன்பாகவும் கவனமாகவும்

நடந்து கொள்ள வேண்டும். 'அவள் எப்படியும் மனைவிதான் எப்போதுமே மனைவி. என்னை விட்டுப் போய்விட முடியுமா? வீட்டிலுமா கவனமும் கவலையும்?' இவ்வாறு எண்ணி மனைவியை அலட்சியமாகவோ அகவுரவமாகவோ நடத்தக் கூடாது. கவலையும் கவனமும் செலுத்துவது வழக்கப்பட்டு, அதுவே வாழ்க்கைச் சுகமாகத் தோன்றும். அமிஞ்சி முறையில் வெற்றியுமிராது. சுகமுமிராது. இருவர் உடலும் பக்கமாகவே இருக்கலாம்; ஆனால் உள்ளம் வெகுதூரம் போய்விட முடியும்.

கணவனும் மனைவியும் அன்புடன் வளர விசேஷ சவுகரியம் இயற்கை அமைப்பில் இருக்கிறது. அதை வீண் விரயப்படுத்தாமல் பொன்னைக் காப்பது போல் காத்து மிக்க பக்குவமாய்ப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பண்பட்ட தம்பதிகளும் குழந்தைகளும் ஒரு குடும்பத்தில் கூடி வாழ்வதைப் பார்த்தால் வீட்டுக்குள்ளேயே வெளியே போகாமல் எல்லாச் சுகமும் சந்தோஷமும் அவர்கள் பெற்று வருவதைப் பார்க்கலாம். பெற்றோரும் குழந்தைகளும் ஒருவரோடு ஒருவர் தைரியமாகப் பேசி விளையாடி, பயம் என்பதே இல்லாமலும், ஆனால் அடக்கம், பொறுமை, மரியாதை முதலிய குணங்களை விட்டு விடாமலும் நடந்துகொள்ள முடியும் என்பதைப் பார்க்கலாம்.

வீட்டில் பணிவிடைக்கு வேலைக்காரர்கள் இருந்தால், அவர்களை நெருங்கிய பந்துக்களைப்போல் நடத்த வேண்டும். அவரவர் வயதுக்குத் தகுந்தாற்போல் மாமனாகவும் அத்தையாகவும் தம்பியாகவும் தங்கையாகவும் எண்ணி நடந்து கொள்ள வேண்டும். இதுவே பூர்விக முறை. இக்காலத்தில் வீட்டுப் பணியாட்களிடம் செலுத்தும் அன்பு, குறைந்து வருகிறது; தொழிற்சாலை முறையாக மாறிவிட்டது. வேலை செய்யும் திறமையும் தேக பலமும் நமக்கு இல்லாததால் வேலையாட்களை வைத்துக் கொள்ளுகிறோம். அவர்கள் நம்மைவிடத் தாழ்ந்தவர்கள் என்று வீட்டுக்காரனாவது, வீட்டுக்காரியாவது எண்ணி, பேச்சிலும் காரியத்திலும் அதைக் காட்டுவது அநாகரிகம். வீட்டில் வேலைக்கு அமரும் ஏழைகள், ஆணாயிருக்கட்டும் பெண்ணாயிருக்கட்டும், அவர்களும் நம்மைப்போல் உணர்ச்சி படைத்தவர்கள், குடும்பஸ்தர்கள். அவர்கள் தங்களுடைய குழந்தைகள், மனைவி, புருஷன் தாய், தந்தை இவர்களை வீட்டில் விட்டு விட்டு, நாம் செய்ய முடியாத வேலைகளைக் கொஞ்ச நேரம் நம் வீட்டில் நமக்காகச் செய்து கொடுத்து வருகிறார்கள். பணிவிடை செய்வதில் அவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும்படியாக, வேலை வாங்கும் எஜமானர்கள் அவர்களிடம் பெற வேண்டிய பணியைப் பெற்றுக் கொண்டு அவர்களைச் சந்தோஷமாய் வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டும்.



இதுவெல்லாம் மிக்க சிரமம் என்று எண்ண வேண்டாம். பண்பாடு பெறாதவர்களுக்கு மிக்க சிரமமாக இருப்பதெல்லாம் பண்பட்டவர்களுக்குச் சிரமமாயிராது. சுகமாகவே இருக்கும். பண்பாட்டின் இரகசியம் இதுவே. ஒரு வீட்டில் புகுந்தால், அந்த வீட்டில் வேலைசெய்யும் வேலைக்காரர் முகத்தையும் வேலையையும் பார்த்தே, குடும்பம் பண்பாடு பெற்ற குடும்பமா அல்லது அநாகரிகர்களாலாய குடும்பமா என்று தீர்மானித்துவிட முடியும். பண்பட்ட மேலோர் வீட்டில் வேலைக்காரர்கள் யார், பந்துக்கள் யார் என்று சொல்வதே கஷ்டமாயிருக்கும். பணிவிடையாட்கள் சுறுசுறுப்பாகவும் மலர்ந்த முகத்தோடு மற்றவர்களுடன் அன்போடு கலந்தும் வேலை செய்து வருவார்கள். வீடு தங்களுடையதாகவே பாவித்துச் சந்தோஷமாகவும் தைரியமாகவும் நடந்து கொள்வார்கள். பண்பட்டவர்களுக்கே வேலைக்காரர்களை வைத்துக் கொள்ள உரிமையுண்டு. அநாகரிகர்களுக்கு அந்த உரிமை இல்லை.

மனித வர்க்கத்தை அண்டி வாழும் பிராணிகளான நாய், பூனை, காக்கை, குருவி முதலியவற்றினிடம் பண்பட்டவர்கள் நடந்துகொள்ளும் முறை வேறு; பண்படாதவர்களின் போக்கு வேறு. இந்தப் பிராணிகளின் உடலுக்குள் கிடக்கும் சூட்சும உணர்ச்சிகளையும் அவற்றின் மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் அன்பையும், பண்பட்டவன் எளிதில் காண்பான். அந்தப் பிராணிகளைப் பார்க்கும்போது அவைகளின் உடலில் சிறைப்பட்டுக் கிடக்கும் அந்தராத்மாவைப் பார்ப்பான். இதை இன்னும் விரித்தால் வேதாந்தமாகப் போகும். நம்மை அண்டிப் பிழைக்கும் பிராணிகளிடம் அன்பு காட்டுவதுதான் பண்பாடு. 'கசாப்பு வகை உண்பதில்லை, சைவ உணவுதான் கொள்வேன்' என்று விரதம் காப்பது மட்டும் போதாது.

வீட்டில் வந்து தயிர், பால், காய், கறி முதலிய பண்டங்களை விற்றுப்போகும் ஏழை ஜனங்களிடம் நடந்து கொள்ளுவதிலும் பண்பாடு உண்டு. அவர்களை வேலைக்காரர்களாக எண்ணுவது தவறு. ஒரு கிழவி தன் ஜீவனத்தை நடத்துவதற்காக, அப்பளம் அல்லது அவல், சிரமப்பட்டுச் செய்து கொண்டு வந்து, தருகிறாள். 'பாட்டி, வேண்டாம் அல்லது 'வாருங்கள் பாட்டி, உட்காருங்கள்' என்று சொல்ல வேண்டும். இவ்வாறே எல்லோரிடமும் நடந்து கொள்ளவேண்டும் தங்கள் ஜீவனம் நடத்தத் தான் பண்டங்களை விற்பவர்கள் வீடு வீடாய்ச் சென்று பொறுமையுடன் நடந்து கொள்கிறார்கள். ஆனால் தருமத்துக்குப் பயந்து

சமுதாயத் தொண்டும் செய்கிறார்கள். எந்தச் சாதியாராயினும், தலையில் விறகுச் சுமை எடுத்து வருபவர்கள் வரையில், சமுதாயத் தொண்டர்கள்; அவர்களுக்கும் நம்மைப்போல் குடும்பங்கள் உண்டு, எல்லா உணர்ச்சிகளும் உண்டு என்பதை அவர்களைக் காணும்போது நாம் மனத்தில் மறவாமல் வைத்துக் கொண்டு, அவர்களிடம் வியாபாரம் செய்ய வேண்டும். தயிர்க்காரிதன் பானையில் கொண்டு வந்திருக்கும் தயிரை விற்றுத் தீர்த்தபின், தன் கிராமத்துக்குத் திரும்பிப்போய்த் தன் குழந்தைகளைக் கவனிக்க வேண்டியவள். அவ்வாறு அவள் தன் வீட்டுக்குள் நுழையும் போது சிரித்துக் கொண்டு, சந்தோஷமாக நுழைய வேண்டும். அவள் அங்கே போனதும், அவளுடைய குழந்தைகளெல்லாம் அவளைச் சுற்றிக் கொள்ளும் அல்லவா?

உலகம் கொடுமையானது என்கிற உணர்ச்சியோடு அவள் தன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தால், அந்தச் சாபம் நம்மை எரிக்கும். பண்பாடடைந்த குடும்பங்களில் பால், தயிர், காய்கறி, விறகு முதலிய பண்டங்களைத் தலையில் தூக்கி வந்து விற்பவர்களை அன்புடன் வரவேற்றுக் காலதாமதம் செய்யாமல் வேலையை முடித்து அனுப்புவார்கள். சந்தர்ப்பம் நேரிட்ட போது, அவர்களுடைய சுக துக்கங்களை விசாரிப்பார்கள். பண்பாடு பெறாதவர்களுக்கு அவர்களுடைய பெயர் கூடத் தெரியமாட்டாது. பால்காரன், தயிர்க்காரி, காய்கறிக்காரன் என்றுதான் பெயரில்லாமல் பேசுவார்கள்.

வண்டியில் பிரயாணம் செய்யும்போதும், குளக்கரை முதலிய பொது இடங்களிலும், சாத்தியமான அளவு ஒருவருக்கொருவர் முக்கியமாய்க் குழந்தைகள், பெண்கள், வயோதிகர் முதலியவர்களுக்கு இடம் கொடுத்துதவி ஒருவரை ஒருவர் தடுத்து வீண் போட்டி போடாமல் நடந்து கொள்ள வேண்டும். இதுவும் பண்பாட்டுக்கு அடையாளம். பொது இடங்களில் பிறர் சவுகரியத்தைக் கவனியாமல் இருப்பது கீழோர் குணம். பலர் கூடும் இடங்களிலும் பிரயாணம் செய்யும்போது பண்பட்டவர்களின் நடவடிக்கையில் அடக்கமும் பொறுமையும் உதார குணமும் பார்க்கலாம். பண்படாத மனிதன் தன்னுடைய கவுரவம் எங்கேயாவது குறைந்து போகுமோ என்று பயந்து எப்போதும் கர்வமாகவே நடந்து கொள்வான். பண்பாட்டுக்கே சமஸ்கிருதத்தில் 'வினயம்' என்று பெயர். அடக்கம்தான் பண்பாட்டில் முக்கிய அம்சம். இந்த அடக்கம் கூழைக் கும்பிடாக இராது. அடக்கத்துடன் தைரியமும் அன்பும் கலந்திருக்கும். பயம் அடக்கமல்ல, பண்பாடுமல்ல. பரம்பரையாகப் பண்பாடு வாய்ந்த குடும்பங்களில் சரியான அடக்கத்தைப் பார்க்கலாம். அதில் பயம் காணமாட்டாது.

இப்படியே இன்னும் அநேக சின்ன விஷயங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். பண்பாடு என்பது ஒவ்வொரு விஷயத்திலும் வேலை செய்யும். ஆணுக்கும் பெண்ணுக்கும் முகத்தில் களை வீசச் செய்யும். அதுவே அழகும் ஆபரணமுமாகும்.

ராஜாஜி

பல நிலைகளில்....

பிறந்தநாள் கதை!

தன் பிறந்த நாள் கொண்டாட்டங்களைச் சிறிதும் விரும்பாத ராஜாஜி அவர்களுக்கு நம் நாடு மட்டுமின்றி வேறு பல நாடுகளிலும் அவருடைய நூற்றுண்டு பிறந்த தின விழாவைச் சிறப்பாகக் கொண்டாட இருக்கின்றனர். எந்தப் பிரச்சினையிலுமே விவாதத்தையும் கருத்துப் பரிமாறலையும் மிகவும் விரும்பிய அவருக்கு அவருடைய பிறந்த தினமே விவாதத்திற்குரியதாய் இருந்து வந்திருக்கிறது! அவருடைய வாழ்நாளில் டிசம்பர் திங்கள் 8ஆம் நாள் அன்றுதான் நண்பர்களும் அன்பர்களும் திரண்டு வந்து அவருக்கு மாலைகள் அணிவித்து வாழ்த்தி வணங்கிவிட்டுப் போவது வழக்கம். மேற்கு வங்கத்தின் முதல் இந்திய கவர்னராக ராஜாஜி பதவி வகித்தபோது அவருடைய 70வது பிறந்த நாளை (அதாவது 69 முடிந்து 70 தொடங்கும் பிறந்த நாளை) நாடெங்கிலும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அவ்வமயம் அவருடைய மூத்த சகோதரர் தமிழகத்தில் வாழ்ந்து வந்தார். அவரை அணுகி, குடும்ப சம்பந்தமான டாகுமெண்ட்களைத் தேடிப் பார்க்குமாறு அப்போது வெளி வந்து கொண்டிருந்த 'ஹிந்துஸ்தான்'' என்னும் தமிழ்ப் பத்திரிகை வேண்டிக் கொண்டதில், ராஜாஜியின் தகப்பனார் சக்ரவர்த்தி வேங்கடார்யா அவர்க்ள் கன்னட மொழியில் எழுதி வைத்திருந்த ''சக்ரவர்த்தி ராஜகோபால''னின் ஜாதகம் கிடைத்தது! அதை அப்படியே மொழி பெயர்த்து 'ஹிந்துஸ்தான்' சிறப்பிதழில் வெளியிட்டிருந்தார்கள். ராஜாஜி மறைந்த பிறகு அவருக்கும் மகாத்மா காந்திக்கும் பேரனான திரு ராஜ்மோகன் காந்தி தன் தாய்வழிப் பாட்டனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுத முனைந்தபோது 'ஹிந்துஸ்தான்' ஆசிரியரும், பழம் பெரும் தேசபக்தருமான காலஞ்சென்ற ரா. நாராயண அய்யங்கார் அவர்கள் அந்த 'ஹிந்துஸ்தான்' பிரதியை என்னிடம் கொடுத்து அதில் உள்ள முக்கியமான தகவல்களை திரு ராஜ்மோகன் காந்தி அவர்களிடம் தெரிவிக்குமாறு பணித்தார். அதிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது தான் ராஜாஜியின் சரியான பிறந்த தினம்-1878ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10ஆம் தேதி செவ்வாய்க்கிழமை என்பது. டிசம்பர் 9ஆம் தேதி திங்கட்கிழமை இரவு 12 மணியைக் கடந்து மறுநாள் விடியுமுன் பிறந்திருக்கிறார். ஆகவே ஆங்கில மரபுப்படி அவர் பிறந்த தினம் 10-12-1878 என்று கொள்ளப்பட்டது. டிசம்பர் 10 ஆம் நாள்தான் உலகெங்கும் 'மனித உரிமைகள் தினம்' (Human Rights day) என்றும், ஆண்டுதோறும் அய்க்கிய நாடுகள் அவையால் கொண்டாடப்படுகிறது.

—கே. வேதமூர்த்தி

'ஆனந்த்' மாதிரி சங்கங்கள்

மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர்
திரு கே. இராசாமுகமது

ஆனந்த் அல்லது ''அமுல்'' மாதிரி சங்கம் என்பது கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் ஒன்று சேர்ந்து தங்களின் மேம்பாட்டிற்காக நடத்தப்படும் சங்கமாகும். இம்மாதிரி சங்கம் இந்தியாவைப் பொறுத்த மட்டில் குஜராத் மாநிலத்தில் கெய்ரா மாவட்டத்திலுள்ள 'ஆனந்த்'' என்ற இடத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டதால் இம்முறையில் இயங்கும் சங்கங்கள் ,ஆனந்த் மாதிரி சங்கங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. பொதுவாக ஐரோப்பிய நாடுகள் அனைத்திலுமே, முன்னேறியுள்ள நாடுகளில் இதே மாதிரியான அமைப்புகளே பால் வளத்தைப் பொறுத்த மட்டில் அமைந்திருக்கின்றன. இவைகள் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இச் சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க முடியும். இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டுமே இருப்பதால், பால் உற்பத்தியாளர்களின் நலனே முதன்மையாகக் கருதப்படுகிறது. தினசரிப் பணிக்கு செயலர், பால் சேகரிப்பவர், பரிசோதகர், செயற்கை முறை கருவூட்டுபவர் ஆகியவர்கள் இருப்பினும் சங்கம் சம்பந்தப்பட்ட திட்டங்கள், கொள்கைகள், எதிர்ப்படும் இடையூறுகளை நீக்கும் வழி முறைகள் ஆகியவற்றை வகுக்கும் பொறுப்பு அங்கத்தினர்களால் நிர்வகிக்கப்படும் சங்கக் குழுவையே (இயக்குநர்கள்) சார்ந்திருக்கும். இச் சங்கங்களின் தினப்படி வேலைகளில் தலைவரது அல்லது இயக்குனர்களது தலையீடு இல்லாமல் சம்பளம் பெறும் அலுவலர்களே செம்மையாகச் செய்வார்கள். இச்சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்குக் கடன் வசதிக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதோ, கொடுத்த கடனுக்காகப் பால் பணத்தில் பிடித்தம் செய்து கடனை அடைக்க ஏற்பாடு செய்வதோ கிடையாது. இச் சங்கங்கள் கடனை மையமாகக்கொண்டவை அல்ல. ஒவ்வொரு சங்கத்தின் வரையறைக்குள்ளும் ஒன்று அல்லது இரண்டு கிராமங்கள் மட்டுமே இருக்கும். ஒவ்வொரு சங்கத்தின் வரையறைக்குள்ளும் ஒன்று அல்லது இரண்டு கிராமங்கள் மட்டுமே இருப்பதால் இக் கிராமங்களிலுள்ள 'கால்நடைகளின் தரம் மேம்பாடு அடையத் தீவிரக் கவனம் செலுத்த இயலுவதோடு, அங்கத்தினர்களின் தேவைகளுக்கும் உடனடி பரிகாரம் காண இயலுகிறது. மேலும் அப்பகுதியில் உற்பத்தியாகும் பாலை முழு அளவில் கொள்முதல் செய்யக் கவனம் செலுத்த இயலுகிறது. இச்சங்கங்களில் காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு அங்கத்தினரது பாலும் தனித்தனியே பரிசோதிக்கப்பட்டு தரத்திற்குத் தகுந்த விலை தரப்படும். இதனுல் தரமான பாலை உற்பத்தி செய்வோர் அதிக விலை பெற வாய்ப்பு உள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்கு வருடம் முழுவதும் பாலுக்கு நியாயமான விலை கிடைப்பதால், பால் உற்பத்தியாளர்கள் கால்நடைகளை அறிவியல் முறைப்படி சத்துணவு கொடுத்துப் பேணிப் பாதுகாக்க இயலுகிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு வாரம் ஒரு முறை தவருமல் பால் பணம் பட்டுவாடா செய்யப்படும். இச்சங்கங்களில் கிடைக்கும் இலாபத்தில் பெரும் பகுதி அங்கத்தினர்களுக்கே போனஸாக வழங்கப்படுகிறது. இச்சங்கங்களின் செயலர்கள் முதலுதவியிலும், செயற்கை முறை கருவூட்டல் செய்வதிலும் பயிற்சி பெற்று அங்கத்தினர்களின் கால்நடைகளுக்கு உரிய சிகிச்சையும், செயற்கை முறைக் கருவூட்டலும் செய்து சீரான கால்நடை மேம்பாட்டிற்கு உதவுகிருர்கள். இச்சங்கங்கள் காலையிலும் மாலையிலும் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலை பெற்று மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றன.

இம்மாதிரி 30 முதல் 40 வரை சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் இவை மாவட்ட அளவில் ஒன்று சேர்ந்து மாவட்டப் பால்

உற்பத்தியாளர் ஒன்றியத்தை ஏற்படுத்துகின்றன. இம்மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் தமது அங்கத்தினர்களின் பாலை வருடம் முழுவதிலும் சீரான விலையில் விற்பதற்கு வசதி செய்து தருகின்றன. இம்மாவட்ட ஒன்றியங்கள் கிராமப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் வளர்ச்சி அடைவதற்கும் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான கட்டுக்கோப்பு, தொழில் நுட்ப வசதிகளான இலவச கால்நடை மருத்துவ வசதி, செயற்கை முறைக் கருவூட்டல், சமனீட்டுத் தீவனம், வீரிய புல் நாற்றுகள்-விதைகள் வழங்குதல், இரவு பகல் எந்நேரமும் அவசர கால மருத்துவ வசதி ஆகியவைகளை உற்பத்தியாளர்களுக்கு அவர்களது இருப்பிடத்திலேயே கிடைக்க ஏற்பாடு செய்கிறது. இந்த ஒன்றியங்கள் கிராம பால் உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. இவ்வொன்றியங்களும் பால் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளாலேயே நிர்வகிக்கப்படுவதால் பால் உற்பத்தியாளர்களின் நலன் பேணிப் பாதுகாக்கப்படுகிறது. இவ்வொன்றியங்கள் தேர்ச்சி பெற்ற தொழில் நுட்ப வல்லுநர்களை நியமித்து அவர்களின் மூலம் தொழில் நுட்பப் பணிகளைச் சிறப்பாக செயல்படுத்துகின்றன. தொழில் நுட்ப மேலாளர்கள் இவ்வொன்றியங்களில் பால் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரிவதால் பால் உற்பத்தியாளர்களின் தேவைகளை அறிந்து அவைகளைப் பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கின்றனர். இந்த மாவட்ட ஒன்றியங்கள் கலப்புக் கால்நடை தீவன தொழிற்சாலையையும் பால் பவுடர் தொழிற்சாலையையும் பெற்றிருக்கும். கால்நடை தீவன தொழிற்சாலையிலிருந்து நியாயமான விலையில் பால் உற்பத்தியாளர்களுக்குக் கால்நடை தீவனம் வழங்கப்படும். தேவைக்கு அதிகமான பாலை, பால் பவுடர் தொழிற்சாலை மூலமாக பவுடராக மாற்ற இயலுவதால், இம்மாவட்ட ஒன்றியங்கள் வருடம் முழுவதும் உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்தியாகும் மொத்தப் பாலையும் கொள்முதல் செய்து சீரான விலைக்கு விற்க வாய்ப்பு உள்ளது.

வழக்கமான சங்கங்கள்: பால் வழங்கும் சங்கங்கள்:

பால் உற்பத்தியாளர் சங்கங்கள் வழக்கமான சங்கங்களிலிருந்து மாறுபட்டவை. பால் வழங்கும் சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டுமின்றி எவர் வேண்டுமானாலும் அங்கத்தினராகலாம். இச்சங்கங்களில் தரத்தின் அடிப்படையில் இல்லாமல், கொள்முதல் செய்யப்பட்ட பாலின் அளவிற்குத் தகுந்தபடி விலை வழங்கப்படுகிறது. இதனால் தரமான பால் உற்பத்தி செய்வதற்குப் போதிய ஊக்கம் ஏற்பட வாய்ப்பு இல்லை. இச் சங்கங்கள் கடனை மையமாகக் கொண்டவை. பால் உற்பத்திக்கு மிகத் தேவையான தொழில் நுட்ப வசதிகள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இச்சங்கங்களின் வரையறைக்குள் நான்கு அல்லது ஐந்து கிராமங்கள் இருப்பதால் இப்பகுதியில் உற்பத்தியாகும் பாலை முழு அளவில் கொள்முதல் செய்ய கவனம் செலுத்த இயலுவதில்லை. இச் சங்கங்களில் மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது இரு வாரத்திற்கு ஒரு முறையோ பால் பணம் பட்டுவாடா செய்யப்படும். இச் சங்கங்களில் தினப்படி அலுவல்களில் தலைவரது தலையீடு அதிகமாக இருக்கும். இச்சங்கங்களில் மிகக் குறைந்த அளவிலேயே போனஸ் வழங்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள கூட்டுறவு பால் சங்கங்கள்:

தமிழகத்தில் கீழே, குறிப்பிடப்பட்ட திருத்தச் சங்கங்களும் வழக்கமான சங்கங்களும் உள்ளன : (31-3-1978).

மாவட்டம்	திருத்தப் பட்ட சங்கம்	வழக்க மான சங்கம்
சென்னை	...	4
செங்கற்பட்டு	100	107
வட ஆர்க்காடு	102	143
தர்மபுரி	91	15
தென் ஆர்க்காடு	16	56
கோயம்புத்தூர்	349	50
சேலம்	164	28
நீலகிரி	63	20
திருச்சி	19	91
தஞ்சாவூர்	...	58
புதுக்கோட்டை	...	21
மதுரை	243	220
இராமநாதபுரம்	1	112
திருநெல்வேலி	70	85
கன்னியாகுமரி	...	45
மொத்தம்	1218	1055

ஆனந்த் மாதிரி சங்கங்கள் ஏற்படுத்திய சமூக பொருளாதார மாற்றங்கள்:

கிராமங்களில் அதிக பால் உற்பத்தி செய்யப்பட்டு அதற்கு நியாயமான விலை கிடைப்பதால், கிராம மக்களின் பொருளாதார நிலை மேம்பாடு அடைவதுடன் கிராம மக்கள் சத்துணவை அதிக அளவில் உட்கொள்ள வழி வகை செய்கிறது. இம்மாதிரி, சங்கங்கள் சுத்தமான பால், நியாயமான விலையில் நகர மக்களுக்குக் கிடைக்க வழி வகை செய்துள்ளன.

1972-73ல் 20,000 மெட்ரிக் டன் பால் பவுடரை இறக்குமதி செய்து வந்த நாம், 1975க்குப் பிறகு பால் பவுடரை இறக்குமதி செய்யவில்லையெனில், அதற்கு ஆனந்த் மாதிரி சங்கங்களை அமைத்ததே காரணம். இம்மாதிரிச் சங்க அமைப்பால் கால்நடைகளைப் பெற்ற ஏழை விவசாயிகளிடையேயும், பால் பண்ணை சம்பந்தப்பட்ட இயந்திரங்கள் தயாரிப்பாளர்களிடையேயும், கால்நடை தீவன உற்பத்தி சம்பந்தப்பட்ட இயந்திரங்களைத் தயாரிப்பவர்களிடையேயும் பாலை, சங்கத்திலிருந்து குளிரூட்டும் நிலையங்களுக்கோ பால் பதப்படுத்தும் நிலையங்களுக்கோ கொண்டு செல்லும் வாகனங்களையும், நகரங்களில் பால் விநியோகம் செய்யும் வகையில் வாகனங்களைத் தயாரிப்பவர்களிடையேயும் உற்பத்தி சமீப காலங்களில் வரவேற்கத் தக்க அளவில் பெருகியுள்ளது.

கிராமங்களில் கிராம மக்களால் கிராம மக்களின் நன்மைக்காக ஆனந்த் மாதிரி சங்கங்கள் திறமையாக நடத்தப்பெறும் முறையானது, உயர்ந்த தரமான முறைகளை கிராம மக்களும் கடைப்பிடித்து வெற்றி அடைய இயலும் என்பதை நிரூபிக்கிறது. ஆனந்த் மாதிரி சங்க அமைப்பு உள்ள இடங்களில் நிலமற்ற விவசாயிகள் தங்கள் வருமானத்தில் 65-70 விழுக்காடு வரையும், சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகள் தங்கள் வருமானத்தில் 25-30 விழுக்காடு வரையும் பால் விற்பனையிலிருந்து பெற இயலுகிறது. ஆனந்த் மாதிரி சங்கங்களால் வேலை வாய்ப்பு அதிகரிப்பதுடன், சீரான வேலை வாய்ப்பை வருடம் முழுவதும் வழங்குவதுடன், பால் உற்பத்தி பெருகவும், பால் விற்பனையை அதிகரிக்கவும், சீரான வருமானம் கிடைக்கவும், உற்பத்தி, விற்பனை, வருமானம் ஆகியவற்றில் நிரந்தரத்தன்மையையும் அடைய உதவுகிறது. இம்மாதிரி சங்கங்களால் கிராம மக்களின் வாழ்வில் விரும்பத்தக்க பல மாறுதல்கள் தோன்றியுள்ளன. இம்மாதிரி சங்கங்கள் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் நிர்வகிக்கப்படுவதால் ஜாதி, தீண்டாமை, மதம் முதலிய வேறுபாடுகளைக் களைய உதவுகிறது.

அங்கத்தினர்களின் பொது வாழ்விலுள்ள நிலை கருதப்படாமல் சங்கத்தில் அனைவரும் சமமாக நடத்தப்படுவதால் சமதர்ம சமுதாயம் மலர வழி ஏற்படுத்துகிறது.

இம்மாதிரி சங்கங்கள் கிராமங்களின் நிலைமையை மேம்பாடு அடையச் செய்வதுடன் கிராமப் பெண்களுடைய நிலைமையையும், மேம்பாடு அடையச் செய்கிறது. கிராமப் பெண்களுக்குப் புதிய வருமானத்திற்கு வழி வகை செய்து தருகிறது. கிராமப் பெண்களுக்கு அறிவியல் முறைப்படி கால்நடைகள் பராமரிப்பது பற்றி செயல் முறை விளக்கங்கள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றின் மூலம் விளக்கப்படுவதால், தங்கள் குடும்பத்தை ஆரோக்கியமாகவும், சுகாதாரமான சூழ்நிலையிலும் வைத்திருக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து செயல்படுகிறார்கள்.

HYMN

- Rajaji

May the Lord forgive our sins
And gather all the nations
Here under this Uniting Roof.

To give up hate and fear
And learn to understand
Here under this Uniting Roof.

They took the risks of war
And dying, wished us take
The better risks of peace
Here under this Uniting Roof.

The good in every man
Is an atom too
Of measureless potential
Let us learn to find it
And explode it into lasting peace
Here under this Uniting Roof.

May the Lord forgive our sins
May the Lord forgive our sins
May the Lord forgive our sins
Here under this Uniting Roof.

(ராஜாஜி அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு 23-10-1966 அன்று திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களால் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் பாடப்பெற்ற பாடல் இது.)

நாடகக்கலை வளர்த்த நாயகர்

பேரறிஞர் அண்ணா

மூன்று மணி நேரம் வேறு பல வேலைகளிலே ஈடுபடவிருக்கின்ற மக்களை நாம் அழைக்கின்றோம்; ''இன்றையதினம் நாங்கள், இந்த நாடகத்தை நடத்துகின்றோம். காண வாருங்கள்,'' என்று அழைக்கின்றோம். மூன்று மணி நேரம் அவர்கள் தங்களுடைய சொந்தத் தொல்லைகளையெல்லாம் மறந்து, ஒரு புதிய உலகத்தில்-ஒரு தனி உலகத்தில்-மூன்று மணிநேரமே நிலைத்திருக்கும் உலகத்தில்-அமர்ந்திருக்கின்ற அந்த மூன்று மணி நேரத்தில், மக்கள், தங்களையும் தங்கள் பிரச்சினைகளையும் மறந்து, நாடக மேடையில் எந்தக் காட்சி காட்டப்படுகிறதோ அந்தக் காட்சியோடு தங்களை இணைத்துக் கொண்டு, நாடக மேடையில் எந்தக் கருத்து எடுத்துச் சொல்லப்படுகிறதோ, அந்தக் கருத்துக்குத் தங்களை உடையவர்களாக்கிக் கொண்டு, மெய்ம் மறந்த நிலையில்-ஆனால், புதியதோர் உலகில்-ஆனால், இன்பகரமான உலகில்-ஈடுபட்டிருக்கின்றார்கள். திரும்பிச் செல்கின்ற நேரத்தில் அவர்கள் உள்ளே நுழைகின்ற பொழுது கொண்டுவந்த கருத்தோடுகூட, இரண்டொரு கருத்துகளையாகிலும் வெளியே எடுத்துச் செல்கின்றார்கள். கருத்துக்களை எடுத்துச் செல்வதைவிட, நடை உடை பாவனைகளையே அதிகமாக எடுத்துச் செல்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடவில்லை. ஒரு நாடகத்தைப் பார்த்ததும், அதிலே கண்ட நடை, அதிலே பேசிய பேச்சு, அதிலே காணப்பட்ட உடைகள், அதிலே காணப்பட்ட காட்சி, அதிலே தெரிந்த புன்னகை ஆகியவைகளையெல்லாம் அதிகமான அளவுக்கு வெளியே கொண்டுசெல்வதில் நம்முடைய ரசிகர்கள் மிக்க சமர்த்தர்கள். ஆனால், நாடகம் மூலமாகத் தரப்பட்டிருக்கின்ற கருத்துக்களில் இரண்டொரு கருத்துக்ளையாகிலும் அவர்களுடைய உள்ளத்திலே தாங்கிச் செல்வார்களேயானால், அந்த மூன்று மணி நேரம் நாடகம் பார்த்ததன் பலனை அவர்களும் பெற்றவர்களாவார்கள். அவர்கள் மூலம் நாமும் பெற்றிருக்க இயலும் என்பதனாலே, நாடகம் எந்தக் கருத்தோடு நடத்தப்பட்டாலும், சில கருத்துக்களை மக்களுக்குத் தந்து அனுப்புகின்ற ஒரு கருவியாக—ஒரு வாய்ப்பாக—ஒரு பிரச்சாரமாகவே அது அமைந்திருக்கின்றது. அதிலும், தமிழகத்தில் மிக நேர்த்தியான முறையில் அந்தக் கருவி நல்ல விதத்திலே இயங்கிக் கொண்டு வருகின்றது.

அதற்கு ஒரு உறுதுணையாய் இருந்தவர்களுள் நம் சங்கரதாஸ் சுவாமிகள் முதல்வராவார்கள். பல நாடகங்களை நாடகக் குழுவினருக்கு அவர்கள் ஆக்கித் தந்திருக்கிறார்கள். அவர்கள் பல நாடகங்களைக் கோத்துக் கொடாமல் இருந்திருப்பார்களானால், பல்வேறு காப்பியங்களிலேயும் புராணங்களிலேயும் இணைந்து போய்த் தொக்கிப்போயிருந்த பல கருத்துக்கள் நாடக வடிவத்தைப் பெற்றிருத்தல் இயலாது.

அப்படிப்பட்ட புதிய நாடகங்களை அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னாலே ஆக்கிக்கொடுத்து, அவை மூலமாக நடிகர்களுக்கு நடிப்பதற்கேற்ற தன்மையையும் ஆக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். அதைத் தொடர்ந்து பல நாடகாசிரியர்கள் தமிழகத்திலே தோன்றியிருக்கின்றார்கள்.''

[தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து..10-9-1967.]

சங்கரதாஸ் சுவாமிகளின் புலமை!

சங்கரதாஸ் சுவாமிகளின் புலமைக்கு எடுத்துக்காட்டாக எண்ணற்ற சம்பவங்கள் இருக்கின்றன. அவற்றில் அதிசயிக்கத் தக்க ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் கூறுகிறேன்.

நான் நடிக்கத் தொடங்கிய காலத்தில் அநேகமாக எல்லா நாடகங்களிலும் எனக்கு நாரதர் வேடமே கொடுக்கப்பட்டு வந்தது. ஒருநாள் நாடக சபையின் உரிமையாளர்களில் ஒருவரான திரு. பழனியா பிள்ளை அவர்கள் சுவாமிகளிடம், ''சுவாமி! சண்முகம் கதாநாயகனாக நடிப்பதற்கு ஏற்றபடி ஒரு நாடகம் எழுதுங்கள்'' என்று கூறினார். அப்போது எனக்கு வயது ஏழு; என்றாலும் நன்றாக நினைவிருக்கிறது.

அன்று மாலை, சுவாமிகள் புத்தகக் கடைக்குச் சென்று அபிமன்யுசுந்தரி அம்மானைப் பாடல் பிரதியொன்று வாங்கி வந்தார். இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'அரிக்கன்' விளக்கை அருகில் வைத்துக் கொண்டு எழுதத் தொடங்கினார். மறுநாள் பொழுது விடிந்து நாங்கள் எழுந்தபோது சுவாமிகள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். அவரது படுக்கையருகே 'அபிமன்யு' நாடகம் மங்களப் பாட்டுடன் முடித்து வைக்கப்பட்டிருந்தது.

இது வெறும் கட்டுக் கதையன்று, உயர்வு நவிற்சியுமன்று. கண்கண்ட உண்மை. இச் சம்பவத்தை உடனிருந்து பார்த்த எங்கள் சக நடிகர்கள் சிலர் இன்றும் இருக்கின்றனர். திரு. பழனியா பிள்ளை அவர்கள் எல்லோரையும் அழைத்து, 'அபிமன்யு' நாடகத்தைக் காண்பித்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள்!.. அதற்கேற்ற உரையாடல்கள்! ஆரம்பத்திலிருந்து முடிவு வரை அடித்தல் திருத்தல் கிடையாது! ஒரு புத்தகத்தைப் பார்த்து நகல் எடுக்கும் வேலையைக்கூட இவ்வளவு விரைவாகச் செய்யமுடியாது. கற்பனையாக நான்கு மணி நேரம் நடைபெறக் கூடிய ஒரு நாடகத்தையே எழுதி முடித்து விட்டார் சுவாமிகள். அவருடைய புலமைத் திறனை என்னென்று கூறுவது?

''அடே சின்னப் பயலே! இந்த 'அபிமன்யு' நாடகம் உனக்காக எழுதப்பட்டது'' என்று கூறிச் சுவாமிகள் அன்று என் முதுகிலே தட்டியபோது எனக்கு அது பெரிதாகத் தோன்றவில்லை. இன்று அதை நினைத்துப் பூரிப்படைகிறேன்; பெருமிதங் கொள்கிறேன்.

—திரு டி. கே. சண்முகம்,
('தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்னும் நூலில்).

சங்கரதாஸ் சுவாமிகள் எழுதியுள்ள நாடகங்கள்

1. அபிமன்யு சுந்தரி
2. பார்வதி கல்யாணம்
3. பிரபுலிங்க லீலை
4. வள்ளி திருமணம்
5. பாதுகாபட்டாபிஷேகம்
6. இலங்கா தகனம்
7. அல்லி அர்ஜுனா
8. சிறுத்தொண்டர்
9. சதி அனுசூயா
10. பவளக்கொடி
11. சுலோசனா சதி
12. மணிமேகலை
13. மிருச்சகடி
14. சீமந்தனி
15. சாவித்திரி
16. கோவலன்
17. பிரகலாதா
18. ரோமியோவும் ஜூலியத்தும்

வல்லநாட்டு அணை வலிமை பெற்றது!

'ஹோர்ஸ்வொர்த்' அணைக்கட்டு, புதுக்கோட்டை மாவட்டத்தின் மிகப் பழம் பெரும் அணைக்கட்டு ஆகும். மிகப் பழங்காலத்தில் கல் அணையாக உருவாக்கப்பட்ட இது, ஆதியில் வல்லநாட்டு அணை என்றே வழங்கப்பட்டு வந்தது. முன்பு வல்லநாடு கண்மாய் ஒன்றுக்கு மட்டுமே இது பயன் கொடுத்து வந்ததால் இவ்வாறு வல்லநாட்டு அணை என்று சொல்லப்பட்டு வந்தது.

மாறிவரும் காலங்களுக்கேற்ப, இக்கல்லணையில் அவ்வப்போது சிற்சில வளர்ச்சிப் பணிகள் மற்றும் சீரமைப்புப் பணிகள் செய்யப்பட்டு வந்தன. குறிப்பாக இந்திய விடுதலைக்கு முன்னர், அப்போது புதுக்கோட்டை மன்னராக இருந்து வந்த மா மன்னர் திரு இராஜ கோபால் தொண்டமான் அவர்கள் ஆட்சியில் 1931 முதல் 1934 முடிய புதுக்கோட்டை அரசின் நிர்வாகியாக இருந்த திரு. ஹோர்ஸ்வொர்த், ஐ. சி. எஸ் அவர்கள் இப் பின்தங்கிய பகுதிகளில் மிகுந்த அக்கறை காட்டி, வல்லநாட்டு அணைக்குச் சீரமைப்பு வேலைகள் செய்து, மேலும் பல பகுதிகளுக்குப் பாசன வசதி கிட்டும் வண்ணம் உதவி புரிந்தார்.

அன்னாரது ஆர்வத்தால் வல்லநாட்டு அணை, புதிய மெருகோடு அதிக அளவில் பயன்தரத்தக்க வகையில் மாற்றியமைக்கப்பட்டு, அவரது நினைவாக 'ஹோர்ஸ்வொர்த் அணைக்கட்டு' என்ற பெயரில் வழங்கப்பட்டு வந்தது.

1959-60-ஆம் ஆண்டு வரை
இந்த அணைக்கட்டின் இடது
புறக் கால்வாயினால் வல்ல
நாட்டுக் கண்மாய் உட்பட 12
கண்மாய்கள் இந்த அணையின்
மூலம் பயன் அடைந்து வந்தன.
இவற்றின் பாசனப் பரப்பு
26.40 ஏக்கர். வெள்ளாற்றின்
நீரியல் கணக்குப்படி, மேலும் பல
கண்மாய்களுக்கும் பாசன வசதி
அளிக்க இயலுமா என்று ஆரா
யப்பட்டு, ரூ. 4.16 இலட்சம்
செலவில் இந்த அணைக்கட்டில்
சில வளர்ச்சிப் பணிகள் 1959-60
ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்
பட்டன.

இத்திட்டத்தில், வலதுபுறம்
ஒரு புதிய தலை மதகும், அதி
லிருந்து ஓர் உயர்மட்டக் கால்
வாயும் அமைக்கப்பட்டு, அணைக்
கட்டின் வலதுபுறம் மிரட்ட
நிலைக் கண்மாய் உட்பட மொத்
தம் 20 கண்மாய்கள் பாசன
நீர் பெற வழி செய்யப்பட்டது.
இவற்றின் பாசனப் பரப்பு 2755
ஏக்கர். இரண்டு கால்வாய்
களின் மூலம் இவ்வணைக்கட்டி
னால் பயன் பெறும் மொத்த
பாசனப் பரப்பு 5395 ஏக்கர்
ஆகும்.

1977-ஆம் ஆண்டு நவம்பர்
மாதம் ஏற்பட்ட புயல் மற்றும்
வெள்ளப் பெருக்கால், வெள்
ளாற்றில் வரலாறு கண்டிராத
அளவில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டு
இப்பழமையான அணைக்கட்டின்
இடதுபுறம் கரை சுமார் 200
மீட்டர் அளவுக்கு உடைப்பெடுத்
தது. ஆற்றின் போக்குக் கூட,
சிறிது மாறிவிட்டது. இடது
கரைப் பகுதியில் சில காலத்துக்கு
முன்னரும் 2 அல்லது 3 முறை
உடைப்பு ஏற்பட்டது. இதனை
நிரந்தரமாகத் தவிர்க்கும்
பொருட்டு இடதுபுறம் அணையை
விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்
டது.

மக்களின் நல்வாழ்வில் அக்
கறை காட்டி வரும் நம் தமிழ்
நாடு அரசு வெள்ளப்பாதிப்பு
வேலைகளுக்காக நிதி ஒதுக்கி,
இந்த அணைக்கட்டைச் செப்ப
னிட 1978-ஆம் ஆண்டு மார்ச்
மாதம் வேலைகள் துவங்கப்பட்
டன. விரிவுபடுத்தப்பட்ட
இந்தப் புதிய அணையின் உபரி
நீளம் 100 மீட்டர். பழைய
வழிந்தோடும் அணை, வினாடிக்கு
385 க. மீ. வெள்ளப் பெருக்
கினை வெளியேற்றும் திறனுள்
ளது. இப்புதிய அணையும்,
பழைய கட்டட அணையும்
மொத்தமாக வினாடிக்கு 655
கன மீட்டர் வெள்ளப் பெருக்கை
வெளியேற்றும் திறன் உடையது.

இப்புதிய ஏற்பாட்டால் இனி
வரும் காலங்களில் இடதுபுறக்
கரைக்கு ஆபத்து இருக்காது
என எதிர்பார்க்கப்படுகிறது.
மொத்தம் ரூ. 6.25 இலட்சத்
துக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு
வேலைகள் அனைத்தும் ரூ. 6
இலட்சம் செலவில் முடிவு பெற்
றுள்ளன.

சீரமைக்கப்பட்ட இந்த
அணை, மாண்புமிகு வேளாண்மை
மற்றும் பாசனத்துறை அமைச்சர்
திரு ப. குழந்தைவேலு அவர்கள்
தலைமையில், மாண்புமிகு
செய்தி-அறநிலையத் துறை
அமைச்சர் திரு. இராம.
வீரப்பன் அவர்களால் 21-10-78
அன்று திறந்து வைக்கப்பட்டது.



செந்தமிழில் சிற்பச் செந்நூல்

செந்தமிழில் முதன் முதலாகச் சிற்பக் கலையை விளக்கிடும் இலக்கண நூலாகச் சிற்பச் செந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தொழில் நுட்பக் கல்வித் துறையினரால் பதிப்பிக்கப்பட்ட இந் நூல், அச்சுத் தொழில் நுட்பப் பயிலகத்தில் அச்சிடப்பட்டதாகும்.

சமஸ்கிருதத்தில்தான் சிற்ப நூல்கள் உள்ளன. தமிழில் இருந்த சிற்பக் கலையைப் பற்றிய பண்டைய நூல்கள், காலத்தால் அழிந்து பட்டன என்று சொல்லப்படுகிறது. அக்குறையை இந்நூல் நீக்குகிறது.

தமிழ்நாடு அரசு 1965-ஆம் ஆண்டிலும், 1970ஆம் ஆண்டிலும் பிறப்பித்த ஆணைகளைத் தொடர்ந்து சிற்பச் செந்நூல் எழுதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு நடத்தி வரும் கட்டடச் சிற்பக் கலைப் பயிலகத்தில் பயின்று வரும் மாணாக்கர்களுக்கும், பிற பயிற்சி நிலைய மாணாக்கர்களுக்கும் பாட நூலாக இயற்றப்பட்ட நூல், சிற்பச் செந்நூல்,

தமிழகச் சிற்பக் கலை வரலாற்றில் முதன் முதலில் தமிழில் ஒரு ஸ்தபதியினால் எழுதப்படும் நூல் இதுவேயாகும்.

பண்டை நூலாசிரியர்கள் இததுறைககு அளித்த சிற்ப நூல்களையும், ஆகம நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு, மரபு வழுவாமல் மாணாக்கர் சிரமமின்றிப் படித்தறியத் தக்க எளிய தமிழில் எழுதப்பட்ட நூல். சிற்ப இலக்கணங்களுக்கேற்ப, தமிழகச் சிற்ப மரபு வழுவாமல் படங்களோடு முதன் முதலில் வெளிவரும் நூலாகும்.

இந்நூல், சிற்ப மாணாக்கர்களுக்கு மட்டுமல்லாமல்,

பணியாற்றும் ஸ்தபதிகள்;

சிற்பத் துறை கைவினைஞர்கள்;

சிற்பக் கலை ஆய்வாளர்கள்;

ஆகம விற்பன்னர்கள்;

கோயில் அர்ச்சகர்கள்;

கோயில் திருப்பணியாளர்கள்;

கலைக் காவலர்கள்

ஆகியோர்க்கும் பயன்படத் தக்கதாக எழுதப் பட்டிருக்கிறது. இஃது ஒவ்வொரு நூல் நிலையத்திலும் இருக்க வேண்டிய நூலாகும்.

காரைக்குடி திரு சா. கணேசன் அவர்களைத் தலைவராகக் கொண்டு மாமல்லபுர கட்டடச் சிற்பக் கலைப் பயிலகக் கண்காணிப்பாளர் திரு வை. கணபதி ஸ்தபதியால் எழுதப் பட்டது.

திட்டமிடப்பட்ட நான்கு நூல்களில் சிற்பச் செந்நூல் முதல் வெளியீடாகும். வெளிவர இருக்கும் பிற நூல்கள்:

தெய்வத் திருவுருவங்கள் (Iconography)

தமிழகக் கட்டடக் கலை நூல் (Architecture)

திருக்கோயில்களையும், சிற்பங்களையும் புதுப்பிக்கும் முறை (Renovation of Temple Buildings)

சிற்பச் செந்நூல் பற்றிய சுருக்கமான விவரங்கள் வருமாறு:

நூல்கள் :

1. பிரதிமா லக்ஷணம் (படிமக் கலை இலக்கணம்).
2. ரூபத்யான லக்ஷணம் (உருவ அமைதி இலக்கணம்)
3. பிராசாத லக்ஷணம் (கட்டடக் கலை இலக்கணம்)
4. ஜீர்ணோத்தார லக்ஷணம் (பழுது நீக்கிப் பாதுகாக்கும் நெறி)

1. பிரதிமா லக்ஷணம் என்பது, படிமக் கலை அளவு இலக்கண நூலாகும். படிமங்களை இயற்றுவதற்குரிய இலக்கணங்களையும், வதிகளையும், முறைகளையும் பேசும் நூல். இந்த நூல் முதல் சிற்பச் செந்நூலாக வெளிவருகிறது.

2. ரூபத்யான லக்ஷணம் என்பது, மேற் கண்ட சிற்ப இலக்கணங்களுக்கு ஏற்ப இயற்றப்பட்ட சிற்ப வடிவங்களின் அமைதிகளாகும். முதல் நூல் இலக்கணம் என்றால் இரண்டாவது நூல் அதன் இலக்கியமாகும். எண்ணற்ற வழிபடு படிமங்களின் உருவ வர்ணனைகளுக்கு ஏற்ப பண்டைச் சிற்பக் கலைஞர்களாலும், ஞானியர்களாலும் இயற்றப்பட்ட திருவுருவ விளக்கங்களின் தொகுப்பு நூல் இஃதாம்.

3. பிராசாத லக்ஷணம் என்பது, கட்டடக் கலை நூலாகும். கிராமம், நகரம், பட்டணம், இராஜஸ்தானி ஆகியவற்றின் அமைப்பிலக்கணமும், வீட்டுக் கட்டட இலக்கணங்களும், திருக்கோயில் கட்டட இலக்கணங்களும் அடங்கிய பெரு நூலாகும்.

4. ஜீர்ணோத்தார லக்ஷணம் என்பது, பழுது சிற்பங்களையும், கட்டடங்களையும் பழுது பார்த்துச் சீரப்பனிடும் முறையினை விளக்குவதாகும். கடந்த 7 ஆண்டுகளாகச் சிற்பக் கலை நூல் உருவாக்கும் இப்பணி நடைபெற்று வருகிறது.

ஆதார நூல்கள் :

மேற்கண்ட நூல்களை எழுதுவதற்கு ஆதாரமாகத் தமிழ்நாட்டிலும் வாழையடி வாழையாகத் தமிழகச் சிற்பக் கலை மரபிலே

பணி செய்து வரும் பல சிற்பக் கலைஞர்களிடமிருந்து அரிய சுவடிகள் சேகரிக்கப்பட்டன. அவற்றுள் மாமல்ல புரச் சிற்பக் கலைப் பயிற்சி நிலையத்தின் முன்னாள் முதல்வர், சிற்பக் கலாசாகரம் ம. வைத்திய நாத ஸ்தபதி அவர்களுடைய சுவடிகளே பெரும்பாலானவையாகும்.

மற்றும், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல் நிலையத்திலிருந்து சிற்பக் கலை பற்றிய பழைய சுவடிகளின் கையெழுத்துப் படிகள் பெறப்பட்டன. அங்ஙனமே பாண்டிச்சேரியில் இயங்கி வரும் (French Institute of Indology) பிரெஞ்சுக் கலைக் கழகத்தாரிடமிருந்து அரிய பல சுவடிகளும் கிடைக்கப் பெற்றன.

அத்துடன், அச்சு ஏறிய சிறந்த சிற்ப, ஆகம நூல்களையும் சேகரித்தோம். அங்ஙனமே ஆகம நூல்களும் வழக்காற்றில் இன்றுமுள்ளவைகளாகும்.

தமிழில் இயற்றியது ஏன்?

பண்டைய சிற்பக் கலை நூல்கள் அனைத்தும் ஓலைச் சுவடியில் கிரந்த லிபியில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டவை. சிற்பக் கலைச் செய்திகள் இலக்கணங்கள் அனைத்தும் செய்யுள் வடிவமாகவே இயற்றப்பட்டவை. இரத்தினச் சுருக்கமான அளவு முறைகள் நிரம்பியவை. கலைச் சொற்கள் மிகுதியாகக் கொண்டவை. கலைச் செய்திகளைச் சொல்லும் மொழி நடையே தனித் தன்மையது. சொற்களைக் கையாளும் முறையும், எண்களைக் குறிப்பிடும் பரிபாஷைச் சொற்களும் இலக்கிய மொழியிலிருந்து வேறுபட்டவை. சிற்பக் கலையில் பயிற்சியும், கலை நூல்களில் ஆராய்ச்சியும், உடையோரே படித்துப் புரிந்து கொள்ளக் கூடியவை. சிற்பக் கலையைப் போதிப்பதற்குரிய பயிற்று மொழியாகத் தொன்று தொட்டு தமிழே இருந்து வருகிறது. அங்ஙனமே மாமல்ல 'புரச் சிற்பக் கலைப் பயிலகத்திலும் கடந்த 21 ஆண்டுகளாகத் தமிழே பயிற்று மொழியாகவும் இருந்து வருகிறது. அங்ஙனமே சுவாமிமலை உலோகச் சிற்பப் பயிற்சி நிலையத்திலும், நாகர்கோயில் ரதப் பயிற்சி நிலையத்திலும் தமிழே போதனா மொழியாகும். எனவே, எல்லோரும் படித்துப் புரிந்து, கலை பற்றிய செய்திகளை அறியவும், அனுபவிக்கவும் தமிழில் இந்நூல் எழுதப் பெற்றிருக்கிறது.

விளக்கப் படங்கள்....

எல்லாவற்றுக்கும் மேலாக, சிற்ப இலக்கணங்களுக்கேற்ற விளக்கமோ உதவிப் படங்களோ ஏதும் அச்சுவடிகளில் இல்லை. எனவே, விளக்கவுரைகளும், விளக்கப் படங்களும், இலக்கணங்களோடு வெளிவருதல் இன்றியமையாதது என்று கருதி இயன்ற வரை இந்நூலைச் செம்மையாக ஆக்க முயன்றிருப்பதால் இந்நூல் செந்நூலெனப் பெயர் சூடி வருகிறது.

மொழி பெயர்ப்பு நூல் அல்ல......

சிற்பச் செந்நூல் ஒரு மொழி பெயர்ப்பு நூல் அல்ல. கை வசமுள்ள பண்டைச் சிற்பக் கலை நூல்களையும், சைவ-வைணவ ஆகம நூல்களையும் மீண்டும் மீண்டும் துருவி ஆராய்ந்து, பல்வேறு இலக்கணங்களையும், கருத்துக்களையும் செய்திகளையும் ஒரு சேரத் திரட்டி, ஒப்பு நோக்கி, பண்டைச் சிற்பக் கலை மேதைகள் படைத்தளித்த சிற்பச் செல்வங்களை நேரில் கண்டு சரி பார்த்து, தமிழகத்துச் சிற்பக் கலை மரபிற்கேயுரிய சிறப்பியல்புகளையும் கருத்திற் கொண்டு அவற்றையெல்லாம் இலக்கண விதி முறைகளோடு இயைந்து பல்வேறு விளக்கப் படங்களை அளவிட்டு வரைந்து அவற்றையும் இணைத்து, நடைமுறைக்கு ஏற்றவாறு எளிய தமிழில் வெளியிடப் பெறும் நூலே இச்சிற்பச் செந்நூல் ஆகும்.

இஃதொரு வழி நூல்....

சிற்பச் செந்நூல் இது, முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்ற மூவகை நூல்களில் இரண்டாவதாகிய வழி நூல் ஆகும். முன்னோர் நூல்களின் முடிவுகளை ஒத்துச் சென்று தமிழகச் சிற்பக் கலை மரபுகளையும் தொழில் மரபுகளையும் போற்றி, அவற்றை முற்றிலும் தழுவி, முன்னோர் நூல்களில் இடம் பெறாதவையும், சிற்பிகளுக்கு இன்றியமையாதவையும் ஆன நூல்களில் இடம் பெறாதவையும், சிற்பிகளுக்கு இன்றியமையாதவையும் ஆன நூல்களில் கலைச் செய்திகளையும் மரபின் நுட்பங்களையும் தொகுத்து இலக்கணம் வகுத்து, அத்தியாவசியங்களையும் அதில் அடங்கிய செய்திகளையும் தக்க தலைப்புகளில் அமைத்து, இடையிடையே விளக்கவுரைகளையும் விளக்கப் படங்களையும் தந்து, நூலுக்குரிய பல உத்திகளையும் கொண்டு குறைகளின்றி, அழகுபட, தெளிவாகவும், செம்மையாகவும் இயற்றப்பட்ட—ஒரு நூலுக்குரிய இலக்கணங்கள் அமைந்த—வெளியீடு ஆகும் இது.

இந்நூல் சிற்பக் கலையில் பயிற்சி பெறும் மாணாக்கர்களை மனத்திற் கொண்டு எழுதப்பட்டிருப்பினும், இக்கலையில் ஆர்வமுள்ளோர்க்கும், ஆராய்ச்சி செய்வோர்க்கும் பயன் தரக்கூடும்.

சிற்பிகள் எனப்படுவோர் கல், மண், மரம், செம்பு, சுதை, கடுசர்க்கரை, செங்கல், தந்தம், மெழுகு, வண்ணம் ஆகிய பத்து வகைப் பொருள்களில் ஏதேனுமொன்றில் உருவங்கள் இயற்றும் கைவினைஞர் ஆவர். பொருள்களின் தன்மையினால் செய்முறை வேறுபடும். ஆனால் இலக்கணங்கள், கலை நுட்பங்கள் யாவும் சிற்பிகள் அனைவர்க்கும் பொதுவே. எனவே, இச்சிற்பச் செந்நூல் மேற்கண்ட பத்து வகையான சிற்பிகளுக்கும் பயன் தரும் பொது நூலாகும்.

சிற்பக் கலை பயில்வோருக்குத் தெரிந்திருக்க வேண்டிய அடிப்படைச் செய்திகளும், மரபுகளும், செய்முறைகளும், இலக்கணங்களும், முதல் இருபத்தோர் அத்தியாயங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த பதினைந்து அத்தியாயங்களில் இலக்கணத்திற்கேற்ற சிற்பங்களையும், வழிபடு படிமங்களையும், நடைமுறையில் சிற்பிகள் இயற்றிட உதவும் அளவு முறைகளையும், கலைச் செய்திகளோடு சொல்லியிருப்பதைக் காணலாம்.

அணுகு முறை :

பண்டைச் சிற்ப நூல்களைப் பார்க்கின் அவற்றின் தொடக்கம் முதல் இறுதி வரை சிற்ப உருவங்களின் அளவுகளும், அளவுகொள் முறைகளுமே நிரம்பி வழிவதைக் காணலாம். கலை பற்றிய அடிப்படைச் செய்திகளையோ தத்துவக் குறிப்புகளையோ அவற்றில் மிகக் குறைவாகவே காண முடியும். ஏனெனில் அவற்றைப் பயிற்றுவிக்கும் ஆசிரியனே தன் கலை உணர்விற்கும், அனுபவத்திற்கும் ஏற்றவாறு மாணாக்களுக்கு விரிவாக எடுத்து உரைக்கும் வழக்கு கலைத் துறையில் தொன்று தொட்டு இருந்து வந்தமையாகும். ஆனால், இந்நூலில் ஆசிரியர் மாணாக்கனுக்குச் சொல்ல விரும்பிய கலைச் செய்திகள் எல்லாம் இடையிடையே தெரிந்த அளவு விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

படிம அளவுகளிலும், அளவு, கொள் முறைகளிலும், அவற்றைத் தொழிற்படுத்திப் படிமங்களை இயற்றும் முறைகளிலும், பண்டை நூலாசிரியர்கள் தத்தம் கொள்கைக் கேற்றவாறு இலக்கணம் வகுத்தளித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஒப்புநோக்கி சிறப்பு வாய்ந்த ஆலயங்களுக்குச் சென்று அங்குள்ள படிமங்களையும் கண்டு, அவ்வளவுகளை ஆராய்ந்து பார்த்து, வகுப்புகளில் கையாண்டு அழகுணர்ச்சிக்கும் நடைமுறைக்கும் ஒத்து வரக் கூடிய அளவுகளையும், இலக்கணங்களையும் அமைதிகளையும் இங்கு வலியுறுத்தியிருப்பதைக் காணலாம். அதே நேரத்தில் பிற நூலாசிரியர்களின் கருத்தையும் அவர்கள் கொண்ட அளவுகளையும் அடிக்குறிப்பில் காட்டியிருப்பதால் பிற நூலாசிரியர் கருத்தையும் சிற்பிகள் அறிந்து கொண்டு, விரும்பினால் பின்பற்றவும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

புதிய அத்தியாயங்கள்.....

சிற்பக் கலை பயில்வோரும், பயிற்றுவிப்போரும், இத்துறையில் பணி செய்வோரும், தாங்கள் ஆக்கும் படிமங்களின் அமைப்பு இலக்கணங்களைத் தெரிந்து, புரிந்து தங்களுடைய கற்பனைகளையும் கலந்து, துணிந்து செயலாற்றுவதற்கு அவ்வமைப்புகளுக்கு ஆதாரமாய் விளங்கும் தத்துவக் கருத்துக்களைச் சிற்ப நூல்களில் நேரடியாகக் காணக் கிடைப்பதில்லை. ஏனெனில், போதிக்கும் ஆசிரியரே தத்துவ நூல்களையும், ஆகம நூல்களையும் கற்றுத் தெளிந்து, கலை பயிலும் மாணாக்கர்க்கு இடையிடையே சொல்லித் தருவது நடைமுறை வழக்கமாகும். எனவே, குரு வழியே தெரிந்து கொள்ள வேண்டிய ஆகம, தத்துவக் கருத்துக்கள் ''ஆகமக் கொள்கை விளக்கம்'' என்ற தலைப்பில் இந்நூலில் தனி அத்தியாயமாக இடம் பெற்றுள்ளது. இவ்வத்தியாயத்தில் கூறப்பட்ட கருத்

துக்கள் குறைவேயாயினும், அக்கருத்துக்கள் தெளிவுடன் அமைய, அத்துறையில் முறையோடு கற்றுத் தேறிய பெரியோர்களின் ஆலோசனை பெற்றே அவை இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தொட்டுக் காட்டிய அச் செய்திகளை மேலும் ஆழ்ந்து ஆய்வதற்கு ஏற்ற ஆர்வத்தை அவை ஊட்டுமானால் இந்நூலின் பயன் மேலும் மிகுவதாகும்.

பண்டைச் சிற்ப நூல்களில் அங்குமிங்கும் சுட்டிக் காண்பிக்கப்படுவனவும் அடிப்படைச் செய்திகளுமான கை அமைதிகள், உடல் பங்க அமைதிகள், படிமத் திருக்கோலங்கள், ஆடை அணிகள், தலைக் கோலங்கள், கருக்கணிகள் தனித்தனி அத்தியாயங்களாக இந்நூலில் சிறப்பிடம் பெறுகின்றன. மரபுக்கேற்ற இலக்கணங்களும் வகுக்கப் பெற்று அம்மரபை விளக்கும் படங்களும் இடம் பெற்றுள்ளன.

பண்டைச் சிற்ப நூல்கள் ஆயுதங்களில் வடிவ அமைதி பற்றியும் அவை உணர்த்தும் பொருள் பற்றியும் அரிதாகவே பேசுகின்றன. ஆனால் பண்டைச் சிற்ப வடிவங்களில் குறிப்பாக தெய்விகப் படிமங்களில் சுமார் 120 ஆயுதங்களும், கருவிகளும், பிறபொருள்களும் இடம் பெற்றுள்ளதை நாம் காண்கிறோம். சிற்பிகளும், வழி வழியாக அவற்றைச் செய்து வருகின்றனர். அவ் ஆயுதங்களும், கருவிகளும், ஆழ்ந்த கருத்துக்களை உணர்த்தி நிற்கின்றன. இந்த நோக்கிலேயே அவைகள் சிற்பத்தில் அமைக்கப்படுகின்றன. இந்தக் கோணத்தில் ஆராயும்போது ஆயுதங்களையும், கருவிகளையும் பற்றி விளக்கிய சிற்ப நூலொன்று இருந்திருக்கக் கூடும் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆகம நூல்களும், புராண நூல்களும், காவிய நூல்களும் ஆயுதங்களைப் பற்றியும், கருவிகளைப் பற்றியும், ஆங்காங்குக் கூறுகின்றன. நடைமுறையில் சிற்பிகளிடையே செவி வழிச் செய்திகளாகப் புழக்கத்தில் ஒரு சில உள்ளன. இவை அனைத்தையும் உற்று நோக்கித் தொகுத்தும், பகுத்தும், விரித்தும் இந்நூலில் தனித் தலைப்பில் முதல் முதலாக இயன்ற வரை விளக்கப்பட்டுள்ளது. ஒரு சில சிறப்பான கருவிகள் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நமது நாட்டு அருங்கலைகள் —காவியம், இசை, நாட்டியம், ஓவியம், சிற்பம்—அனைத்தும் ஒரே இலட்சியமும், ஒரே தன்மையும் கொண்டு விளங்குபவை. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினைப் பெறச் செய்தலே அவற்றின் இலட்சியம். கலைத் துறையில் உள்ளதை உள்ளபடி சொல்வதும் செய்வதும் இல்லை. தாங்கள் கண்ட காட்சியினையும் அதனால் அகத்தில் எழுந்த ரசத்தையும் அனுபவித்து அந்த ரசானுபவத்தின் வெளிப்பாடாக —உள்ளதை உணர்ந்தபடி— செய்வது அல்லது சொல்வது மரபு. எனவே தான் காவிய இலக்கணத்தைச் சிற்பியும் தெரிந்து இருக்க வேண்டும் என்று கலை நூலாசிரியர் வற்புறுத்தி ''காவிய இலக்கணம் தெரியான் ஓவிய இலக்கணம் அறியான்'' என்று ரத்தினச் சுருக்கமாகப் பேசுவர்.

எனவே, பண்டைக் காலத்தில் மொழி இலக்கண நூலறிவு பெற்ற சிற்பக் கலைஞனுக்கு நவரசங்களைப் பற்றித் தெரிந்திருக்குமாதலால், அவற்றுக்குச் சிற்ப நூல்களில் தனி இடம் அளிக்கவில்லை. என்றாலும் இஃதொரு குறையாகவே தோன்றியதால் கலையும் 'சுவையும் என்ற தலைப்பில் மிகச் சுருக்கமாகச் சுவை பற்றிய செய்திகள் இங்கு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்றன. உடலுக்கு உயிர் போல கலைக்கு உயிராக அமைவது சுவையானதால் சுவை பற்றி ஒரு குறிப்பாவது இருத்தல் இன்றியமையாததன்றோ?

தெய்வத் திருமேனிகளைச் செப்புத் திருமேனிகளாக வடிப்பதில் தமிழகம் தனிப் பெருமை பெற்று விளங்குகிறது. செப்புத் திருமேனிகள் வார்ப்படப் படிமங்களாம். சிற்ப நூல்களில் வார்ப்படப் படிமச் செய்முறை பற்றித் தெளிவாகக் கூறவில்லை. இது தொழில் அம்சம் நிரம்பிய முறையாதலால் செய்முறை பற்றி விளக்கமாகப் பேசவில்லை. என்றாலும் இந்நூலில் செய்முறைகள் மிகச் செம்மையாகவும், விரிவாகவும், விளக்கப்படுகின்றன. தனி அத்தியாயமே எழுதப்பட்டுச் சிறப்படைகிறது.

சாஸ்திர உலகமும் அனுபவ உலகமும்

கலைத் துறையில் கலை நூல்களைக் கற்றறிந்தோர் சொல்லும் சொற்கள் தொழில் துறையில் பணி செய்வோர்க்குச் சரிவரப் புரிவதில்லை. அங்ஙனமே தொழில் துறையில் கையாளும் கலைச் சொற்கள் நூலறிந்த புலவோர்க்குப் புரிவதில்லை. இந்நூலில் இவ்விரு துறைகளும் ஒன்றி உறவாடுகின்றன.

மரபு காக்கும் படங்கள்...

சிற்ப இலக்கணங்களையும், அளவுகளையும் நேரடியாகக் கையாண்டு படங்கள் வரையும்போது பண்டைச் சிற்பிகள், உடல் அமைதிகளையும், ஆடை அணிகளையும், தலைக் கோலங்களையும் எங்ஙனம் இயற்றி அமைத்தார்களோ அச்சிறப்பான மரபிலேயே படங்கள் இந்நூலில் வரையப்பட்டிருக்கின்றன. தலை சிறந்த கலைப் படைப்புகளை நேரில் சென்று கண்டு அங்ஙனமே படங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இம்மரபைக் காப்பது இந்நூலின் அடிப்படை இலட்சியம் ஆகும்.

சிற்பச் செந்நூல் வெளியீட்டு விழா:

இவ்வரிய நூலை மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் 1-11-78 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் வெளியிட்டார்கள். 'சிற்பச் செந்நூல்' முதல் பிரதியைப் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு சிவலிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார். விழாவில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி, தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி, ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

தொடக்கத்தில், சிற்பச் செந்நூலின் பெருமையை விளக்கிக் காரைக்குடி கம்பன் அறநிலைய அமைப்பைச் சேர்ந்த திரு சா. கணேசன் அரிய உரை நிகழ்த்தினர்.

விழாவில் வரவேற்புரை நிகழ்த்திய தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் திரு சு. வையாபுரி அவர்கள், மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் கலைப் பயிலகத்தை மேம்படுத்த தொழில் நுட்பக் கல்வித்துறை பரிசீலித்து வரும் திட்டங்களை விளக்கினர். விழா முடிவில் நூலாசிரியர் திரு வை. கணபதி ஸ்தபதி நன்றி கூறினர்.

கோவை மாவட்டத்திலுள்ள ஆனைமலை வட்டாரம் 136.26 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. மேற்கே கேரள மாநிலம் எல்லையாகவும், கிழக்கே வடக்கேயும் பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம் எல்லையாகவும், தெற்கே ஆனைமலைக் குன்றுகள் எல்லையாகவும் உள்ளன. ஆனைமலை, பொள்ளாச்சியிலிருந்து 14 கிலோ மீட்டர் தூரத்தில் தென் மேற்கில் உள்ளது. இவ்வொன்றியத்தில் 19 ஊராட்சிகளும், 4 பேரூராட்சிகளும் அடங்கி உள்ளன.

நீர்ப்பாசனம், விதை விநியோகம், இயற்கை உர உற்பத்தி, இரசாயன உர விநியோகம், காய்கறிகள் வளர்ச்சித் திட்டம், மண், விதைப் பரிசோதனை, தென்னங்கன்று விநியோகம், மரம் நடும் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை செயல்படுவதோடு, பழச் செடிகள் விநியோகம் விவசாயக் கருவிகள், உழவு மாடுகள், கறவை மாடுகள்—பால் தரும் பசுக்கள் ஆகியவையும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறு நீர்ப் பாசனத் திட்டங்களுக்கும், கால்நடை வளர்ப்பிலும் அவர்களுக்குக் கடனும் மான்யமும் வழங்கப்படுகின்றன.

கால்நடைப் பராமரிப்பு:

ஆனைமலை ஊராட்சி ஒன்றியம் கேந்திரக் கால்நடைத் திட்டம் செயல்படுத்தும் ஒன்றியமாகும். இவ்வொன்றியத்திலுள்ள மலையாண்டிப் பட்டினம் கிராமத்தில் செயற்கை முறை இனவிருத்திக்கான நிலையம் நிறுவப்பட்டுள்ளது. பொள்ளாச்சி கால்நடை மருத்துவமனையிலிருந்து வித்து சேகரிக்கப்பட்டு, இவ்வொன்றியத்தில் உள்ள கால்நடைப் பராமரிப்புக் கிளை நிலையங்களான அம்பராம் பாளையம், காளியப்ப கவுண்டன் புதூர், பெரியபோது மற்றும் கம்பாலப்பட்டிக்கு அனுப்பப் பட்டு செயற்கை முறை இனவிருத்தி மூலம் உயர் ரகக் கால்நடை உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்காக விவசாயிகளிடம் குறைந்த கட்டணமாக ரூ. 2 மட்டும் ஒவ்வொரு கால்நடைக்கும் வசூலிக்கப்படுகிறது.

இவ்வொன்றியத்திலுள்ள கால்நடைகளுக்கு ஏற்படும் சப்பை நோய், தொண்டை அடைப்பான் நோய், வெக்கை நோய், கால் நோய், வாய் நோய் போன்ற நோய்களுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது. கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல்நோய்களுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது.

இவ்வொன்றியத்தில் கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலம் வேண்டிய அளவு உள்ளது. இங்கு குதிரை மசால் என்.பி. 21 புல் ரகம் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள்:

ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பரவலாக அனைத்து முக்கிய கிராமங்களிலும் இடம் பெற்றுச் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு வேண்டிய பயிர்க் கடன், உரம், மத்திய காலக் கடன்களை வழங்கி வருகின்றன.

மேற்கண்ட கூட்டுறவுச் சங்கங்களில் 10 கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குத் தேவையான கட்டுப்பாட்டுப் பொருள்களான அரிசி, கோதுமை ஆகியவை விநியோகம் செய்து வருகின்றது. மேலும், 8 கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் கட்டுப்பாட்டுப் பொருள்களுடன் நுகர்வோர் பொருட்களையும் பாலீதீன் பைகளில் அடைத்து விற்பனை செய்து வருகிறது.

பணிகள் விவரம்:

இவ்வொன்றியத்திலுள்ள கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் மூலம் 1977-78ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாக ரூபாய் 56,18,528.84 பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மத்திய காலக் கடனாக ரூ. 69,990 பட்டுவாடா செய்யப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூபாய் 7,65,572.56 மதிப்புள்ள கட்டுப்பாட்டுப் பொருட்களும், நுகர்வோர் பொருட்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ. 23,14,609.28 மதிப்புள்ள உரம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

இவ்வொன்றியத்தில் 1977-78ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு ஆரம்பமாகிச் செயல்பட்டு வருகின்றன.

சுப்பேகவுண்டன்புதூர், அங்கலக்குறிச்சி, ஆத்துப்பொள்ளாச்சி மற்றும் கீழ்க்கண்ட இடங்களில் கூட்டுறவுப் பால் விநியோகச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. சோமந்துரைசித்தூர், 2 கோட்டூர் மற்றும் கம்பாலபட்டி.

இவ்வொன்றியத்திலுள்ள வேட்டைக்காரன்புதூரில் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

குழந்தைகள் காப்பகம்:

இவ்வொன்றியத்தில் 7 குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன. அவை ஆனைமலை, சுப்பேகவுண்டன்புதூர், பெத்தநாயக்கனூர், தென்சித்தூர், தாத்தூர், வேட்டைக்காரன்புதூர், அர்த்தநாரி பாளையம் ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன. இவை 1967 முதல் நடைபெற்று வருகின்றன. இந்த மையங்கள் இலவசமாக மக்களால் வழங்கப்பட்ட கட்டடங்களில் நடைபெறுகிறது. இந்த 7 குழந்தைகள் காப்பகங்களிலும் 279 குழந்தைகள் பயன்பெறுகின்றன. அவர்களில் 37 பேர் அரிசனக் குழந்தைகள் ஆகும்.

இவ்வொன்றியத்தில் 30 மகளிர் மன்றங்கள் உள்ளன. இங்கு மொத்தம் 745 உறுப்பினர்கள் உள்ளனர். கோழி வளர்ப்பு, பின்னல் வேலை, வீட்டுத் தோட்டம் முதலிய வேலைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். சிறு சேமிப்பு, குடும்பநலத் திட்டப் பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டு உள்ளார்கள்.

போக்குவரத்து :

இவ்வொன்றியத்தில் 19 வருவாயத் துறை கிராமங்களும், 23 ஊராட்சிகளும், 55 குடியிருப்புகளும் உள்ளன. எல்லாக் குடியிருப்புகளுக்கும் போக்குவரத்து வசதியுள்ளன.



குடிதண்ணீர் :

இவ்வொன்றியத்திலுள்ள 55 குடியிருப்புகளில் 10 குடியிருப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாரால் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. மீதியுள்ள குடியிருப்புகளில் 30 குடியிருப்புகள், 16 மேல்நிலை நீர்த் தொட்டிகள் கட்டப்படும், 22 தரை மட்டத் தொட்டிகள் கட்டப்படும் கிராமங்களிலுள்ள கிராமக் கிணறுகள் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

மீதியுள்ள 15 குடியிருப்புகள் கிராமங்களிலுள்ள கிணறுகள் மூலம் குடிதண்ணீர் வசதி பெறுகின்றன.

இவ்வொன்றியத்தில் அங்கலக் குறிச்சி, ஜல்லிங்பட்டி, கம்பாலப் பட்டி போன்ற கிராமங்களிலுள்ள கிணற்றுத் தண்ணீரில் புளோரைடு என்ற நச்சுப் பொருள் இருப்பதால், அதற்கு ஒரு மாற்றுத் திட்டமாக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப் பட்டுச் செயல்படவிருக்கிறது.

கல்வி :

ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு மேல்நிலைப் பள்ளியும், ஐந்து உயர்நிலைப் பள்ளிகளும், 13 நடுநிலைப் பள்ளிகளும், 42 துவக்கப்பள்ளிகளும் உள்ளன.

இப்பள்ளிகளில் 13 நடுநிலைப் பள்ளிகளும், 38 துவக்கப் பள்ளிகளும் இவ்வூராட்சி ஒன்றியத்தின் நிர்வாகத்தின்கீழ் நடத்தப் பட்டு வருகிறது. மீதமுள்ள 4 துவக்கப் பள்ளி நிதி உதவி பெறும் பள்ளியாகும். இந்த 55 பள்ளிகளிலும் மதிய உணவு வழங்கப் படுகிறது.

இப்பள்ளிகளில் மொத்தம் 15,924 மாணவ, மாணவியர்கள் பயிலுகின்றனர். இவர்களில் 1,243 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். மொத்த மாணவ, மாணவியர்களில் 8 சதவிகிதம் ஆகும். 3,625 மாணவ, மாணவியர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

சமூகக் கல்வி :

இவ்வொன்றியத்தில் 17 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன.

தகவல் நிலையம் ஒன்றும் ஆனைமலையில் உள்ளது.

'இளைஞர் மன்றம்' ஆனைமலை, பெரியபோது, சோமந்துறை சித்தூர் முதலிய ஊராட்சிகளில் உள்ளன. பெத்தநாயக்கனூர், சின்னப்பம்பாளையம் ஆகிய ஊர்களில் வானொலி மன்றங்கள் உள்ளன.

முறை சாராக் கல்வி நிலையம் :

இவ்வொன்றியத்தில் தற்போது ஆனைமலை, பெரியபோது, ரமண முதலிபுதூர் ஆகிய மூன்று ஊர்களிலும் இடையில் பல்வேறு காரணங்களால் கல்வியைத் தொடர இயலாதவர்களுக்காக முறைசாராக கல்வி நடைபெற்று வருகிறது. இங்கு மொத்தம் 120 பேர்கள் பயின்று வருகின்றனர்.

மேலும், பொங்காளியூர், ஓடையகுளம் ஆகிய இரண்டு இடங்களிலும் விரைவில் துவங்க உள்ளது. மேலும் 7 இடங்களில் புதிதாக நிலையங்கள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறு சேமிப்பு :

'மகிளப் பிரதான் ஷத்திரிய பச்சாத்து யோஜன்' சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் இங்கு 20 பெண் முகவர்கள் உள்ளனர். இவர்கள் 1,500க்கு மேல் மொத்தக் கணக்குகள் சேர்த்துள்ளனர்.



கிராமத் தன்னிறைவுத் திட்டம் :

கோவை மாவட்டத்தில் ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், கிராம தன்னிறைவுத் திட்டத்தைச் செயற்படுத்த, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசின் ஒப்புதலுடன் கீழ்க்கண்ட கிராமங்கள் இத்திட்டத்தின்கீழ் பல்வேறு வகையான முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றத் தேர்வு செய்யப்பட்டு உள்ளன :

1. பெரியபோது
2. ஓடையகுளம்
3. ஆனைமலை
4. சோமந்துரை
5. பெத்தநாய்க்கனூர்
6. தென்சங்கம்பாளையம்
7. காரியாஞ்செட்டிபாளையம்
8. பில்சின்னம்பாளையம்
9. கம்பாலபட்டி
10. தென்சித்தூர்

இந்தப் பத்து கிராமங்களிலும் மக்களது வாழ்க்கைத் தரம், தொழில், வருமானம் ஆகியன பற்றி விரிவான புள்ளி விவரங்கள் சேகரித்து மேற்கண்ட கிராமங்களில் ரூ. 2,400க்குக் கீழ் ஆண்டு வருமானம் உள்ள வறுமைக் கோட்டில் உள்ளவர்களை மேம்படுத்தும் வகையிலும், இந்தப் பத்துக் கிராமங்களின் பொருளாதார வளத்தைப் பெருக்கும் வகையிலும் பல்வேறு அரசுத் துறைகள், பொது நிறுவனங்கள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், மக்கள் பணி மன்றங்கள் ஆகியவற்றின் உதவியோடு கிராமங்களது சுய முயற்சியை ஊக்குவித்துச் செயல்படுத்தும் வகையில் ஒரு விரிவான திட்டம் தயார் செய்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு உள்ளது.

இவ்வாறு ஆனை மலை ஊராட்சி ஒன்றியம் அடுக்கடுக்கான பல பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி, ஊர் நலம் ஓங்கிட உழைத்து வருகின்றது என்றால் அது மிகையல்ல!

பசுமைப் புரட்சி நம் நாட்டில் ஏற்பட முக்கிய காரணம் நமது சாகுபடி முறைகளில் அமோக விளைச்சல் ரகங்களைப் புகுத்தியதாகும். இந்த ரகங்களைப் பயிரிட்டு உயர் விளைச்சல் பெற வேண்டுமானால் சீரிய சாகுபடி முறைகளைச் சிறந்த முறையில் கையாள வேண்டியது அவசியம். இவ்வாறு அமோக விளைச்சல் ரகங்களைச் சாகுபடி செய்வதில் அனுசரிக்க வேண்டிய உழவியல் சம்பந்தமாக நுணுக்கங்கள் உழவர் அறிந்து செயல்பட அவர்களுக்குப் பயிற்சி அளித்தல் இன்றியமையாததாகும்.

உழவர் பயிற்சித் திட்டம் வடார்க்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை மற்றும் செய்யார் ஆகிய நான்கு வேளாண்மைக் கோட்டங்களிலுள்ள 36 ஊராட்சி ஒன்றிய வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்காகப் பணியாற்றி வருகிறது.

உழவர் பயிற்சி நிலையப் பணிகள்

உழவர்களுக்கு நவீன விவசாய நுணுக்கள் பற்றித் தீவிர செயல் முறைகளை விளக்கப் பல்வேறு விதங்களின் பயிற்சிகள் அளிக்கப்

பயிற்சியாளர்களுக்குரிய தகுதிகள்:

(1) பயிற்சியாளர்கள் விவசாயத்தில் ஈடுபடும் முற்போக்கு விவசாயிகளாக இருக்க வேண்டும். (2) வயது வரம்பு 18 முதல் 45 உள்ளவர்களாக இருக்க வேண்டும். (3) எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். (4) குறைந்தபட்சம் சுமார் 3 ஏக்கர் சாகுபடிக்கேற்ற நிலமிருக்கவேண்டும். (5) பயிற்சியாளர்கள் தொடர்ந்து 4 நாட்கள் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும்.

ராணிப்பேட்டையில் உழவர் பயிற்சி நிலையம்

எச். பாலசுப்பிரமணியன்
துணை வேளாண்மை இயக்குநர்,
நவ்லாக், இராணிப்பேட்டை.

உழவர் பயிற்சி :

உழவியல் ஓர் வளர்கின்ற விஞ்ஞானம், வேளாண் விஞ்ஞான ஆராய்ச்சி வளர்கிறது. தீவிரமடைந்து வருகிறது. இதனால் புதுப்புது கண்டுபிடிப்புகள் உழவர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கிட அவ்வப்போது வெளிவந்த வண்ணம் உள்ளன. இந்த புதிய ஆராய்ச்சி முடிவுகளை உழவர் பெருமக்கள் உடனுக்குடன் தெரிந்து அவ்வழி முறைகளைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இந்தக் குறிக்கோளையுடைய உழவர்க்குப் பயிற்சி அவசியமாகிறது. ஆகவே, தற்போது கடைப்பிடிக்கும் உழவு முறைகளில் புதிய உழவியல் நுணுக்கங்களைப் புகுத்தி நவீன சாகுபடி செய்து விளைச்சலை அதிகரிக்க உழவர் பயிற்சி இன்றியமையாதது. இப்பணியை உழவர் பயிற்சி நிலையங்கள் சிறப்பாகச் செய்து வருகின்றன.

தமிழகத்தில் இராமனாதபுரம் மாவட்டம் நீங்கலாக ஏனைய எல்லா மாவட்டங்களிலும் உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. வடார்க்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டை உழவர் பயிற்சி நிலையம் 1-3-68 அன்று துவக்கப்பட்டது. உழவர் பயிற்சி நிலையம் 'நவ்லாக்' என்ற இடத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் 1-2-71 முதல் செயல்பட்டு வருகிறது.

படுகின்றன. மற்றும் கால்நடை கோழி வளர்ப்பு குறித்து விளக்கங்கள் அளிக்கப்படுகிறது. இப் பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கும் மற்றும் விவசாய மகளிர்களுக்கும் அளிக்கப் படுகிறது. இப்பயிற்சி உழவர்கட்கு மட்டுமல்லாமல், உழவர் மகளிர்க்கும் அளிக்கப்படுவதால் அவர்களைச் சீர்மிகு சாகுபடி முறைகளில் நல்ல ஈடுபாடும், ஆர்வமும் உள்ளவர்களாக மாற்ற உதவுகிறது.

இதில் குறிப்பாக உயர்விளைச்சல் ரகங்கள், வீரிய ஒட்டுத்தானியங்கள் போன்றவைகளைக் கொண்டு எளிய சத்துள்ள பண்டங்களைத் தயாரிப்பது பற்றியும் செயல்முறைகள் செய்யப்படுகின்றன.

நிலையப் பயிற்சி :

இந்நிலையத்தினரால் ஒவ்வொரு ஆண்டும் 10 ஆண்கள் பயிற்சி முகாம்களும், 10 பெண்கள் பயிற்சி முகாம்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சியிலும் 25 பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சிக்கு அனுப்புவது சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் மற்றும் ஆணையாளர் வானொலி விவாதக் குழு அமைப்பாளர்கள் உதவுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உழவர் பெண் பயிற்சியாளர்கட்கும் தனித்தனியாய்ப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

நான்கு நாட்கள் பயிற்சியில் ஒருநாள் அண்மையிலுள்ள அரசினர் விதைப்பண்ணை மற்றும் விவசாயப் பரிசோதனை நிலையங்கள் ஆய்வுக் கூடங்களுக்கு அழைத்துச் சென்று நேரடிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர விவசாய சம்பந்தமாகப் படக்காட்சியும், கண்ணாடிப் படக்காட்சியும் காண்பித்து எல்லாப் பயிற்சி முகாமிலும் விளக்கப்படுகிறது.

பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் உணவுத் தொகைக்காக ரூ. 5 வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு 10 ஆண்கள் பயிற்சியும், 10 பெண்கள் பயிற்சியும் நடத்த திட்டமிடப்பட்டு, 20 முகாம்கள் 20 ஒன்றியங்களில் முடிக்கப் பட்டு, 500 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இது தவிர முதியோர் கல்வி துணை வேளாண்மை அலுவலர்களுக்குப் பயிற்சி முகாம்களும், பயிர்ப் பாதுகாப்பு போன்ற தனிப் பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன.

அமைப்பாளர்களுக்கு நிலையப் பயிற்சி :

வானொலி ஆய்வு மன்ற அமைப்பாளர்கட்கான தனி

பயிற்சி 2 நாட்கள் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின்போது உழவர் ஆய்வு மன்றம் செயல்பட வேண்டிய வழிமுறைகள், அமைப்பாளர்களது கடமைகள், உறுப்பினர்களது கடமைகள் முதலியவை குறித்தும் விளக்கங்கள் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின்போது ஒவ்வொரு நபருக்கும் நாளொன்றுக்கு ரூ. 5 உதவித்தொகையாக அளிக்கப்படுகிறது.

சுழற் பயிற்சி முகாம் :

இப்பயிற்சி ஒருநாள் அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் வயலில் நேரடி செயல் விளக்கங்கள் (நடவு, மேலுரமிடல், பயிர்ப் பாதுகாப்பு, களைக் கொல்லிகள் உபயோகித்தல்) முதலியவைகளைச் செய்து காட்டப்படுகின்றன.

பயிற்சியாளர்கள் செயல்விளக்கத்தைக் காண்பது மட்டுமல்லாமல், நல்ல செயல்திறனைப் பெற உதவுகிறது. இவ்வாண்டு 12 செயல்விளக்க வயல்கள் அமைக்கப்பட்டு 100 பயிற்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

சத்துணவுச் செயல்விளக்கம் :

சத்துணவுச் செயல்விளக்கம் இவ்வாண்டு 10 நடத்த திட்டமிடப்பட்டு பெண்கள் நிலையப் பயிற்சியின்போது கிராமத்தில் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய விரிவு அலுவலர் (சமூகநலம்) உழவர் பயிற்சி நிலையப் பெண் விளக்குனர் மூலம் பெண்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

உழவர் ஆய்வு மன்றங்கள் :

உழவர் பயிற்சி நிலையத்தின் மற்றொரு முக்கிய பணி, உழவர் ஆய்வு மன்றங்கள் அமைத்து அவை திறம்படச் செயல்பட உறுதுணையாக இருந்து ஊக்குவிப்பதாகும்.

உழவர் ஆய்வு மன்றம் என்பது ஒரு சிறிய விவசாய அமைப்பு அல்லது குழு போன்ற சிறிய அமைப்பாகும். இதன் தலைவர் பயிற்சி பெற்ற நபராக இருக்க வேண்டும். குறைந்தது 20 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது அமைப்பாளர் பொறுப்பு. உழவர் ஆய்வு மன்றங்களின் முக்கிய பணி, கருத்து மற்றும் அனுபவ பரிமாற்றமும், கூட்டமாகச் செயல்திட்டம் வகுத்து நவீன விவசாய முறைகளைப் பின்பற்றி மற்ற சிறிய விவசாயிகளுக்கு முன்மாதிரியாகவும் எடுத்துக்காட்டாகவும் விளங்குவதாகும்.

இக்குழு இரவு 7.25 மணி முதல் 8.00 மணி வரை செவ்வாய், வெள்ளி, ஞாற்யிறுக்கிழமைகளில் ''உழவர் உலகம்'' நிகழ்ச்சியைத் தவறாமல் கேட்டு எந்தெந்த பொருள் பற்றி பேசப்படுகிறதோ அதைப்பற்றி விவாதித்து, சந்தேகங்களை மறுநாளே வானொலி நிலையத்திற்கும், சம்பந்தப்பட்ட உழவர் பயிற்சி நிலையத்திற்கும் அனுப்ப வேண்டும்.

அடுத்த செவ்வாய், வெள்ளி, ஞாயிறு அன்று வானொலியில் பதில்கள் ஒலிபரப்பபப்படுகின்றன. இது தவிர கேள்விகட்கு உழவர் பயிற்சி நிலயத்திலிருந்தும் பதில் அளிக்கப்படுகிறது. தற்போது 200 ஆண்கள் விவாதக் குழுவும், 100 பெண்கள் விவாதக் குழுவும் செயல்படுகின்றன.

இவர்களுக்கு வானொலிப் பெட்டிகள் மானிய விலையில் மத்திய அரசு உதவியுடன் வழங்கப்பட்டுள்ளன.

கடிதப் போக்குவரத்திற்குக் கவர்கள், அஞ்சல் கார்டுகள், பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன அவ்வப்போது நிலைய அலுவலர்கள் விவாதக் குழுக்களைப் பார்வையிட்டு மன்றம் திறம்படச் செயல்பட அறிவுரை வழங்கப்படுகிறது.

தானியச் சேமிப்பு இயக்கம் :

உழவர் பயிற்சி நிலையத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 கிராமத்சில் தானியச் சேமிப்பின் அவசியம் பற்றி எடுத்துக்கூறி விவசாயிகளின் தானியங்களை நன்றாகச் சேமித்துவைக்கவும், எலிகளிலிருந்து காக்கவும் ஆலோசனைகளும், உதவிகளும் செய்யப்படுகிறது.

விவசாய சம்பந்தமான வெளியீடுகள் :

இந்நிலையத்தில் ஒவ்வொரு மாதமும் ''உழவர் செல்வம்'' என்ற இதழ் விவசாயச் சம்பந்தமான குறிப்புகளுடன் வெளிவருகிறது. இந்த வெளியீடுகள் உழவு ஆய்வு மன்ற அமைப்பாளர்கள் மற்றும் விவசாயத்துறை அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இவை தவிர 10 ஆண்டு வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் நன்கு செயல்படும் உழவர் ஆய்வு மன்றங்களை ஊக்குவிக்க ரூ. 1000 மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அமைப்பாளர் கல்விச் சுற்றுலா :

ஒவ்வொரு ஆண்டும் ஆர்வமுள்ள அமைப்பாளர்களையும் குழுக்களின் அங்கத்தினர்களையும் விவசாயக் கல்விச் சுற்றுலா தமிழ்நாட்டிலுள்ள விவசாயச் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களுக்கும் மற்றும் ஆய்வுக் கூடம் போன்ற இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ரூ. 1000 இதற்காகச் செலவிடப்படுகிறது.

மற்ற பயிற்சிகள் :

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிறுவிவசாயிகள் 25 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆறுநாட்கள் விவசாயப் பயிற்சி அந்தந்த வட்டாரத் , தலைமையிடத்தில் உழவர் பயிற்சி நிலையத்தினரால் நடத்தப்படுகிறது. ஆண்டுக்கு 15 பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

முறைசாரா கல்வித் திட்டத்தின்கீழ் ஆசிரிய பெரியோர்களுக்கு வேளாண்மை பற்றி ஒரு வாரம் பயிற்சி அளிக்கப்படுகிறது

விவசாயிகளுக்கான வானொலி அறிவிப்பு :

ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட பகுதிகளின் பருவநிலை மற்றும் செய்ய வேண்டிய விதை நேர்த்தி, நாற்றங்கால் அமைத்தல், நாற்றங்காலுக்கு உரமிடுதல் நடவு செய்தல், அடிஉரம் இடுதல், இடைவெளி மற்றும் மேலுரமிடுதல், பயிர்ப்பாதுகாப்பு போன்ற பயிர்கட்கேற்ற கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள் குறித்து அவ்வப்போது வானொலி மூலம் அறிவிக்கப்படுகிறது. இது தவிர பண்ணைச் செய்தி, மற்றும் முன்னேற்ற விவசாயிகள் அனுபவம் குறித்துப் பேட்டிக் கண்டு வானொலியில் ஒலிபரப்புதல் போன்ற பணிகளும், செயல் விளக்கப் பண்ணைகள் குறித்தும் அறிவுரை வழங்கப்படுகிறது.

உழவர் நாள் விழா :

ஒவ்வொரு ஆண்டும் உழவர் நாள் விழா நடத்தப்படுகிறது. அதுசமயம் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. விவசாயப் பெருங்குடி மக்களும், உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் பங்கு கொள்வார்கள். உழவர் நாள் விழாவில் சிறு கருத்துக்காட்சியும் அமைக்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சி நிலையத்தில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த விவசாயச் சிறுவர்களுக்கு ஓராண்டுப் பயிற்சியளிக்கும் விவசாயப் பள்ளி ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

1925ஆம் ஆண்டில எழுதிய சிறுகதை.

ஜெயராமன்

ராஜாஜி



''உன் பெயரென்ன?'' என்றார் வாத்தியார்.

''ஜெயராமன்'' என்றான் பையன்.

சிறுவனுடைய முகம் வாடி, உடல் மெலிந்து, கண்கள் குழி விழுந்து, பார்க்கப் பரிதாபமாயிருந்தது. மேலே போட்டிருந்த சட்டை யாரோ பெரிய பையனுடையது. இவனுக்காகத் தைத்ததல்லவென்று பார்க்கையிலேயே தெரிந்தது. இடுப்பில் கட்டியிருந்த துணியில் அங்கங்கே பொத்தல்கள். தலைக்குப் போட்டிருந்த குல்லாய் பல தினுசுத் துணியால் அங்கங்கே ஒட்டுப் போடப்பட்டிருந்தது. ஓரமெல்லாம் இற்றுப்போய் நூல் தொங்கிற்று. தலை மயிர் முழுதும் மொட்டையடித்துப் பல இடங்களில் புண் வந்த சொட்டை தெரிந்தது.

''உன் வயதென்ன, பையா!'' என்று கேட்டார் வாத்தியார்.

''ஒன்பது அய்யா'' என்றான் சிறுவன்.

எல்லாப் பையன்களும் சிரித்தார்கள். முதல் வகுப்புக்கு ஒன்பது வயதுப் பையன் வந்தானே யென்று அவர்களுக்கு வேடிக்கை. வாத்தியாரும் நகைத்துக்கொண்டே 'சத்தம்'! என்று கத்தினார். பையன்கள் வாய் மேல் கைகள் வைத்து மூடிக்கொண்டு, ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு கண்களால் சிரித்தார்கள்.

''ஏன் இத்தனை நாள் பள்ளிக்கூடத்தில் சேரவில்லை?'' என்றார் வாத்தியார்.

பையன் பதில் சொல்லாமல் தரையைப் பார்த்தான்.

''ஏன்?'' என்றார் வாத்தியார் மறுபடியும்.

''அம்மாவுக்கு வீட்டில் துணை யாருமில்லை. குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்றான்.

''மறுபடியும் வகுப்பிலுள்ள பையன்கள் சிரித்தார்கள்.

''உன் தகப்பனார் பெயரென்ன?'' என்றார்.

சிறுவன் பதில்சொல்லுவதற்கு முன் ஒரு பையன் எழுந்து, 'இவன் சாராய சுப்பன் மகன், சார்'' என்றான். எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள். பையன் தலை குனிந்தான். இதற்குள் மத்தியான விடுதி மணியடித்தது. பிள்ளைகளெல்லாம் வெளியே போய் ஓடிக் குதித்து விளையாடினார்கள்.

ஜெயராமனைச் சுற்றிப்பார்த்து சிறுவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். ''உன் தொப்பியைக் கொடு, பார்க்கலாம்'' என்றான் ஒருவன். ''அட அதையேன் தொடுகிறாய்? புண் ஒட்டிக் கொள்ளும்' என்றான் ஒருவன். ''குப்பையில் கிடந்ததை, பாவம்! அவன் அம்மா எடுத்துத் தைத்துச் சரிப்படுத்திக் கொடுத்திருக்கிறாள்'' என்றான் ஒருவன்.

''குழந்தை எடுத்துக் கொள்ள வீட்டுக்குப் போ'' என்றான் மற்றொருவன். சொக்காய் யாருடையதடா?'' என்றான் இன்னொருவன். ''உங்கொப்பன் நேற்று எவ்வளவு குடித்தான்?'' என்றான் வேறொருவன்.

''அடே இவனண்டை சாராய நாற்றமடா. இவனும் குடிப்பான் போலிருக்கிறது'' என்று ஒரு சிறுவன் இவனை முகர்ந்து மூக்கைப் பிடித்துக்கொண்டு, சுற்றிச் சுற்றி ஓடினான்.

''அடே நேற்று சாக்கடை 'டிச்'சில் கிடந்தானே அவனா உன் அப்பன்?'' என்றான் ஒருவன்.

''சாராய சுப்பன் மகன்!'' என்றான் ஒரு பையன். உடனே எல்லாப் பையன்களும் 'சாராய சுப்பன் மகன்', 'சாராய சுப்பன் மகன்' என்று சொல்லிக்கொண்டு அவனைச் சுற்றிச் சுற்றி ஓடினார்கள். ''அடே இவன்கூட நாம் எப்படியடா உட்காருகிறது?'' என்றனர் சிலர்.

இப்படிப் பலவாறு கேலி செய்வதைப் பொறுக்க முடியாமல், பையன் கண்களில் ததும்பின கண்ணீரை அடக்கியடக்கிப் பார்த்தான். கடைசியில் தாங்க முடியாமல் போய், திடீரென்று, ஒன்றும் சொல்லாமல் வெளியே ஓடினான். எல்லோரும் கூட்டமாய் அவன் பின் ஓடினார்கள். தெருவை அடைந்ததும் ஒரே ஓட்டம்பிடித்தான். குழந்தைகள் எல்லாரும் இரைச்சல் போட்டுக் கொண்டு, கொஞ்ச தூரம் பின்னால் ஓடினார்கள். ஜெயராமன் ஒரு சந்துக்குள் திரும்பி மறைந்து போனான்.

* * * *

''அம்மா!'' என்று வீட்டில் தன் தாயார் மடியில் தலை வைத்து விம்மி விம்மி அழுதான்.

''என் அப்பனே! என் கண் மணியே! ஏன் அழுகிறாய்? பள்ளிக்கூடத்தில் சேர்க்கமாட்

டேன் என்கிறார்களா?'' என்று அவன் தாயார் அவனைக் கட்டி முத்தமிட்டாள். கேட்கக் கேட்க பையன் பதில் சொல்ல முடியாமல் அழுது கொண்டேயிருந்தான்.

மறுபடி பள்ளிக்கூடத்தில் மணியடித்துக் குழந்தைகள் சேர்ந்ததும் வாத்தியார் ''எங்கே புதுப் பையன்?'' என்று விசாரித்தார்.

''அய்யா, அவன் ஓடிப்போய் விட்டான். இனி வரமாட்டான்' என்று ஒரு பையன் சொன்னான்.

''ஏன்?'' என்று கேட்டார் வாத்தியார்.

''எல்லோரும் கேலி செய்தார்கள். அவன் பாவம் அழுதுகொண்டு ஓடிப் போய்விட்டான்' என்று எல்லோரையும் விடச் சிறிய பையன் சொன்னான்.

''குழந்தைகள்! நீங்கள் செய்தது தவறு'' என்று வாத்தியார் சொன்னார். எல்லோரும் தலை குனிந்து கொண்டார்கள்.

''உங்களுக்குள் யாருக்கு அவன் வீடு தெரியும்?'' என்று வாத்தியார் கேட்டார். 'எனக்குத் தெரியும்'' என்று பல பிள்ளைகள் எழுந்தார்கள். 'போய் அவனை சமாதானப்படுத்திக் கூட்டிவர வேண்டும்., யார் போவீர்கள்.'' என்றார் வாத்தியார்.

''அய்யோ! அவன் அப்பன் அடித்துப் போடுவான்' என்றான் ஒருவன். மற்றவர்களும் ஒருவரையொருவர் பார்க்க ஆரம்பித்தார்கள். பிறகு ஒரு பையன், ''நான் போய் அழைத்து வருகிறேன், அய்யா!' என்றான்.

''பேஷ், சுந்தரம்!'' என்றார் வாத்தியார். ''போய் அவன் தாயாரிடம் சொல்லிக் கூட்டிக்கொண்டு வா,'' என்று சொல்லி அனுப்பினார் ''உதை தின்று வருவான்'' என்று பையன்கள் ஒருவர்க்கொருவர் மெள்ளச் சொல்லிக் கொண்டார்கள்.

2

சுப்பா நாயுடு பெரிய குடிகாரன். இதனால் இவனுக்கு ஊரில் 'சாராய சுப்பன்' என்றும் 'டிராம் சுப்பா நாயுடு' என்றும் பேர் வழங்கும். அவன் தகப்பனார் நல்ல பணக்காரராயிருந்தார். சிறுவயதிலேயே அவன் தாயார் இறந்து போய்விட்டாள். தகப்பனார் மகனை மிகச் செல்வமாய் வளர்த்தார். பையன் 16-வது வரையில் நன்றாய்ப் படித்தான். பிறகு கெட்ட சகவாசத்தினால் துர் வழக்கங்கள் பயின்றான். தகப்பனார் அவனை முதலில் கண்டிக்கவில்லை. பிறகு கண்டித்தும் பயன்படவில்லை. 22 வயது ஆனதும் விவாகம் செய்து வைத்துப் பார்த்தார்கள். இதனால் திருந்துவான் என்று நினைத்தார். அதுவும் பயனில்லாமல் போயிற்று. குடித்துவிட்டு வெட்கக் கேடான காரியங்கள் செய்வான். அந்த விசனத்தினாலேயே தகப்பனார் இறந்தார். தகப்பனார் இறந்தபின் சுப்பா நாயுடுவின் சகாக்கள் அவனை முழுதும் கெடுத்தார்கள். தலைக்குமேல் கடன் பட்டான். கொஞ்ச நாளில் சொத்தெல்லாம் பாழாயிற்று. சோற்றுக்கே திண்டாட்டமாயிற்று. கடன்காரர்களின் தொல்லையால் கோர்ட்டுக்கும் வக்கீல்களிடமும் போய், அலைந்ததில் விண்ணப்பம் எழுதப் பழக்கமாயிற்று. சொத்து முழுதும் போய் ஆசை தீர்ந்தபின் விண்ணப்பம் எழுதுவதே ஒரு தொழிலாக வைத்துக் கொண்டு, தினம் ஒரு ரூபாய் சம்பாதித்து 10 அணாவுக்குக் குடித்துவிட்டு மிஞ்சியதை சோற்றுக்கு மனைவியிடம் கொடுப்பான். ஒவ்வொரு நாள் அதுவுமில்லை. மனைவியை அடிப்பான். குடிவெறியில் ஒவ்வொரு நாள் அவளை வெளியில் தள்ளிக் கதவைத் தாள் போட்டு விடுவான்.

குடியிருந்த வீடும் கடன்காரர்கள் சுவாதீனம் செய்து கொண்டார்கள். அப்போது பெரிய கலகம் செய்து கோர்ட்டு சேவகனைக் கத்தியால் வெட்டினான். போலீசும் வந்து பிடித்துப் போய் விசாரணையாகி ஆறு மாதம் சிறையில் போட்டார்கள். குடும்பம் பசியால் தவித்தது. புருஷன் சிறையிலிருக்கையில் அவன் மனைவி கடன்காரனிடம் வாடகைக்குச் சீட்டு எழுதிக் கொடுத்து, அதே வீட்டில் குழந்தையுடன் குடியிருந்து வந்தாள். பிறகு அதுவும் கூடாது என்று கடன்காரன் சொல்ல, தன் பந்துக்களைக் கெஞ்சி ஒரு பழக் கடைத் தாழ்வாரத்தில் படல் கட்டிக்கொண்டு குடியிருந்து வந்தாள். சிறையிலிருந்து வந்து திரும்பினதும் சுப்பா நாயுடு முன்பைவிட அதிகம் குடிக்கலானான். மற்றவர்களைவிட இவன் நன்றாய் விண்ணப்பம் எழுதுவான். குடிகாரனாயிருந்தாலும் எல்லோரும் இவனிடத்திலேயே வந்து எழுதச் சொல்லுவார்கள். தினம் ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய்கூடச் சம்பாதிப்பான். ஆனால் அவ்வளவும் சாயந்திரம் சாராயக் கடைக்கே போகும். ஒவ்வொரு நாள் அதிக போதையாகித் தெருவிலும் சாக்கடையிலும் இரவெல்லாம் கிடப்பான். மறுநாள் விண்ணப்பம் எழுதக்கூட ஆகாது. அன்று சோற்றுக்கு இல்லாமல் வீட்டில் பெருங் கலகம் செய்வான்.

மனைவிகூட வேலை செய்ய வேண்டியதாயிற்று. முதன் முதலில் தெரிந்தவர்கள் சிலர் வீட்டுக்குப் போய் அறைக்கவும், இடிக்கவும் ஒப்புக்கொண்டு கால் படி, அரைப்படி அரிசிசம்பாதித்து காலம் தள்ளினாள். பிறகு எல்லார் வீட்டுக்கும் போனாள். கைக்குழந்தை ஒன்று. அதை ஜெயராமன் கையில் கொடுத்து விட்டு வேலைக்குப் போவாள். அச்சமயம் சுப்பா நாயுடு வீட்டுக்கு வந்தால் ஜெயராமன் கதி பரிதாபம். எங்கே உன் தாய் என்று உதைப்பான். குழந்தைக்கு அடிபடுமென்று ஜெயராமன் பதுங்கிப் பதுங்கி உடலெல்லாம் உதை வாங்கிக் கொள்ளுவான். 'ஓ'! என்று வலி பொறுக்க முடியாமல் அலறியழுவான்.

ஒவ்வொரு நாள் சுப்பா நாயுடுக்கு நல்ல புத்திவரும். பையனையும் குழந்தையையும் கட்டிக்கொண்டு அழுவான். இனி சாராயக்கடைப் பக்கம் போகவே மாட்டேன் என்று தீர்மானம் செய்து கொள்ளுவான். ஆனால்,. அடுத்த சாயந்திரமே கச்சேரியில் விண்ணப்பங்கள் எழுதி விட்டு வீடு திரும்பிவரும் வழியில், சாராயக் கடையண்டை வரும்போது எல்லாம் மறந்து போகும். தன்னையறியாமல் கடைக்குள் போவான்; மறுபடி பழைய கதைதான்.



3

கைக் குழந்தை கொஞ்சம் பெரிதானதும், எல்லாப் பையன்களும் பள்ளிக்கூடம் போவதைப் பார்த்துவந்த ஜெயராமனுக்கு, தானும் போய்ப் படிக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. ''இனி, குழந்தை பெரிதாயிற்றம்மா. தானே விளையாடிக் கொள்ளும்; நான் பள்ளிக்கூடம் போகிறேனம்மா'' என்று தாயாரிடம் சொன்னான்.

''என் கண்ணே! நீ பள்ளிக்கூடம் எப்படிப் போவாய்? உனக்கு, மேலே போட்டுக் கொள்ளச் சட்டைகூட இல்லையே! துணியெல்லாம் கந்தலாயிற்றே. எல்லோரும் உன்னைக் கேலி பண்ணுவார்கள். நீ நெஞ்சு உடைந்து போவாய்'' என்றாள்.

''இல்லையம்மா. பக்கத்து வீட்டுக் கிட்டு ஒரு சொக்காய் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறான். கிழிசல்களையெல்லாம் தைத்துக் கொடு. கேலி செய்ய மாட்டார்கள். செய்தால் என்ன? நான் பயப்படமாட்டேன். பள்ளிக்கூடத்திற்கு அனுப்பு'' என்று பையன் கெஞ்சினான்.

''இல்லை அம்மா! சந்தைப் பேட்டையிலிருக்கும் மஞ்சள் பள்ளிக்கூடத்தில் நாலு அணாத்தான் சம்பளம். அதில் சேருகிறேன்'' என்றான்.

வெகு பாடுபட்டு, இங்கும் அங்கும் கெஞ்சி, குல்லாய் ஒன்று சம்பாதித்து, கிழிஞ்சுபோன இடத்திலெல்லாம் அதை ஒட்டுப் போட்டுத் தைத்து, பையனைப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு நல்ல நாள் பார்த்து அனுப்பினாள்.

* * * *

''ஜெயராமனைக் கூட்டி வரச் சொன்னார் வாத்தியார்'' என்றான் சுந்தரம்.

''வேண்டாமப்பா. ஏழைகளுக்கு படிப்பு என்னத்திற்கு?'' என்றாள் ஜெயராமன் தாயார்.

''வாத்தியார் கூட்டிவரச் சொன்னார். நான் அழைத்துப் போகிறேன். அனுப்புங்கள்' என்றான் சுந்தரம்.

தாய் மகனைப் பார்த்தாள்.

''அம்மா! நான் போகமாட்டேன். எனக்குப் படிப்பு வேண்டாம்' என்றான் ஜெயராமன்.

''இல்லை, ஜெயராமா, பயப்படாதே, பையன்களெல்லாம் உன்னைக் கூட்டிவரச் சொன்னார்கள். யாரும் கேலி செய்ய மாட்டார்கள்'' என்றான் சுந்தரம்.

''மாட்டேன்! வேண்டாம்!'' என்றான் ஜெயராமன்.

* * * *

''அப்பா, நீ போ. அவன் வர மாட்டான். குழந்தையைப் பார்த்துக் கொள்ள வீட்டில் யாருமில்லை. நான் மிளகாய்ப் பொடி இடிக்க வெளியே போனால் குழந்தையை ஜெயராமனிடம் தான் கொடுத்துப் போக வேண்டும். ஏழைகளுக்குப் படிப்பு என்னத்திற்கு? நீ போ, அப்பனே. வாத்தியாருக்குச் சொல்' என்றாள்.

சுந்தரம் திரும்பிப் போய்விட்டான்.

சுப்பா நாயுடு அன்று வீட்டுக்கு வந்ததும், ''யார் உன்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினது? என்னை எல்லோரும் கேலி செய்யவா போனாய்?' என்று பெருங் கோபத்துடன் கூச்சலிட்டு, ஜெயராமனை ஒரே உதை உதைத்தான். வலி பொறுக்க முடியாமல் அவன் சுருண்டு கீழே விழுந்தான்.

''ஏன் குழந்தையை உதைக்கிறீர்கள்? நான்தான் அனுப்பினேன்'' என்று மனைவி குழந்தைக்குப் பக்கத்தில் வந்தாள்.

பளீர் என்று அவள் தாடையில் ஓர் அறை அறைந்தான். அவள் அப்படியே சுவர்மேல் சாய்ந்தாள் இன்னொரு அடி அடித்தான். கீழே விழுந்தாள். சுப்பா நாயுடுவுக்குக் கோபம் அதிகரித்தது. பக்கத்திலிருந்த உலக்கையை எடுத்தான்.

''எழுந்திரு!'' என்றான்.

''அய்யோ!'' என்று எழுந்தாள்.

''நான் குடிகாரன் என்று எல்லோரும் ஏசவா மகனைப் பள்ளிக்கூடம் அனுப்பினாய்?'' என்று வீடு அதிரக் கத்தி உலக்கையைத் தூக்கினான்.

''இல்லை நாயனா! அம்மா அனுப்பவில்லை. நான்தான் போனேன். அவள் வேண்டாம் என்றுதான் சொன்னாள்'' என்று ஜெயராமன் கதறிக்கொண்டு எழுந்து தகப்பன் கையைப் பிடித்துக் கொண்டான்.

''இன்று என்னவானாலும் ஆகட்டும். நான் யாருக்கும் பயப்படப் போவதில்லை. தீர்த்துவிடுவதுதான் சரி!'' என்று பையனை உதை உதைத்துத் தள்ளி, உலக்கையை வீசி மனைவியைப் பார்த்துப் போட்டான். அந்த அடி, சுவரில் பட்டுத் தப்பினாள். இல்லாவிடில், மண்டை பொடியாய்ப் போயிருக்கும்.

இதற்குள் கூச்சல் கேட்டு அண்டை வீட்டுப் பெண்கள் சிலர் ஓடிவந்தார்கள். சிலர் இது எப்போதும் நடப்பதுதான் என்று காதில் போட்டுக் கொள்ளாமலிருந்தார்கள். ஆனாலும் கூட்டம் சேர்ந்து விட்டது. சுப்பா நாயுடு உளறிக்கொண்டு போய் விட்டான்.

பையன் நினைவு தப்பிக் கிடந்தான்.

''அய்யோ, என் குழந்தாய், நான் உன்னைக் கொன்றேனே!'' என்று தாய் கதறினாள். எல்லோரும் எடுத்துத் தூக்கிப் படுக்க வைத்துத் தண்ணீர் கொடுத்தார்கள். உயிர் துடி துடியென்று துடித்துக்கொண்டிருந்தது.

''பிழைப்பானா தெரியவில்லையே!'' என்றாள் தாய்.

''பாவி! இப்படி அடிக்கலாமா? என்றார்கள்.

''அந்தப் பாழும் சாராயக் கடைகள் ஏன் வைத்தார்களோ!' என்றாள் ஒருத்தி.

ஒரு நாழிகையில் கைகால் குளிர்ந்துபோயிற்று. ''அய்யோ கெட்டேன்.'' என்று தாய் கூக்குரல் இட்டாள். ஜெயராமன் துயரக்கூட்டிலின்று விடுதலையடைந்து, அன்பே உருவமான அன்னை மடியில் போய்ச் சேர்ந்தான். அவனுக்கு இந்தப் பள்ளிக்கூடங்கள் இனி என்னத்திற்காக?

(சென்னை பாரதி பதிப்பகம் 'ராஜாஜி கதைகள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

விவசாயிகளுக்குப் பெருநஷ்டத்தை விளைவிக்கும் எதிரி— எலி

எலித்தொல்லையை அறவே நீக்க ஒரே வழி ரோடா:ஃபாரின்

(ஆன்டிகோவாகுலண்ட்)



மிசோராமில் பஞ்சத்திற்கு அடிப்படையான காரணம் எலிகளின் நாசவேலைதான். எலிகள் விவசாயிகளின் முதல் எதிரி என்றும் அவை அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடும் விஷம் மூலம் உடன்கொல்லும் சக்திபெற்ற மருந்து கலந்த இரையை எலிகள் நாளடைவில் கண்டுகொண்டு ஒதுக்கிவிடுவதால், அவை பயனற்றுப் போகின்றன. இந்நிலையில், பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) நிறுவனத்தினர் ஆராய்ச்சியில் பெரும் முன்னேற்றம் கண்டு, எலிகளை அறவே ஒழிக்க வல்ல ரோடாஃபாரினைத் தயாரித்திருக்கிறார்கள்.

ரோடாஃபாரின் உடன் கொல்லும் மருந்தல்ல. அதுவேலை செய்யும் முறையாவது, எலிகளின் ரத்த நாளங்களிலிருந்து ரத்தப் போக்கை ஏற்படுத்தி, அதே சமயம் ரத்தம் விரைவில் உறையாவண்ணம் செய்து, மெதுவாக ஆனால் நிச்சயமாக உயிரைப் போக்கிவிடுவதேயாகும். ரோடாஃபாரின் கலந்த இரை அதிகச் செறிவு இல்லாததாலும், விஷம் கடுமையாக இல்லாததாலும் எலிகள் இவ்விரையைத் தவிர்க்காமல், உட்கொண்ட மூன்றாம் நாளிலிருந்து இறக்கத் தொடங்குகின்றன. குறிப்பாக, அதிகச் சேதம் ஏற்படுத்தும் வரப்பு எலிகள் 24 மணி நேரத்திற்குள்ளேயே இறந்து விடுகின்றன. ஆனால் ரோடாஃபாரின் கலந்த இரை தற்செயலாக மனிதர்களாலோ, வளர்ப்புப் பிராணிகளாலோ, கால்நடைகளாலோ உட்கொள்ளப்பட்டாலும் தீங்கு விளைவிக்காது.

ரோடாஃபாரினின் முற்றிலும் பயன்தரும் வேலைத்திறன், பல கிராமங்களில் நிரூபிக்கப்பட்டுவிட்டது. குறிப்பாக, லட்சத்தீவில் ரோடாஃபாரின் உதவியுடன் எலிகளை முழுமையாக ஒழித்த பின் அங்கு தேங்காய் விளைச்சல் 150 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

ரோடாஃபாரின்*—எலிகளின் எதிரி.
விவசாயிகளின் நண்பன்.

*உலகெங்கும் வார்ஃபாரின் எனற மறுபெயர் கொண்டது.

FDS PCI 2750 TAM

பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) பி. லிட்.,

28, எர்ரபாலுச் செட்டித் தெரு, த. பெ. எண். 102, சென்னை 600 001.
தொலைபேசி எண்: 24266, 24267.
177, ஜெயில் ரோடு, த. பெ. எண். 3774, கோயமுத்தூர் 641 018.
தொலைபேசி எண்: 25975.
53, அமெரிக்கன் கல்லூரிக் கட்டிடம், த. பெ. எண் 53,
அழகர்கோயில் ரோடு, மதுரை 625 002. தொலைபேசி எண். 30440.

பி.ஸி.ஐ. ஈ.டி.பி. ஆம்ப்யூல்

சேமித்து வைத்திருக்கும் தானியங்களை பூச்சிபூண்டுகளின் தொல்லையிலிருந்து எளிதான முறையில் சிறப்பாகக் காக்க.

எங்கும் கிடைக்கிறது.

குழந்தைகளின் ராஜாஜி

கே. வேதமூர்த்தி

1979—ஆம் ஆண்டை குழந்தைகளின் சர்வதேச ஆண்டாகக் கொண்டாடவிருக்கிறார்கள்.

ராஜாஜி பிறந்ததின நூற்றாண்டையும் ஒரு ஆண்டுக்காலம் விழாவாகக் கொண்டாட இருப்பதாக ராஜாஜி பிறந்ததின நூற்றாண்டு விழாக் குழு அறிவித்திருக்கிறது. ராஜாஜி, நூற்றாண்டு விழாக்காலமும் ''சர்வதேச குழந்தைகள் ஆண்டும்' ஒருசேர சேர்ந்து வந்திருப்பது ஒரு விதத்தில் பொருத்தமென்றே தோன்றுகிறது!

'சக்கரவர்த்தித் திருமகனை'யும் 'வியாசர் விருந்தை'யும் தமிழில் படைத்த ராஜாஜி, தான் இவ்விரண்டு நூல்களையுமே குழந்தைகளை மனத்திற்கொண்டே எழுதியதாகத் தெரிவித்திருக்கிறார்.

ராஜாஜி குழந்தைகளுக்கென்றே கிள்ளைத் தமிழில் பல சிறுகதைகள் எழுதியிருப்பதோடு மட்டுமில்லாமல் 'வானொலி'யில் அவரே வாரா வாரம் தமிழில் கதைகள் சொன்னதும் நம்மில் பலருக்கு பசுமையாக நினைவிலிருக்கும். 'வானொலி' அறிவிப்பாளர் ''இப்பொழுது ராஜாஜி அவர்களே கதை சொல்வார்கள்'' என்று இனிமையாகவும் பெருமையாகவும் அறிவித்த குரல் இன்னும் பல காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும்! கருத்தாழமும் கவிநயமும் ஒருங்கே அமையப் பெற்ற அவரது 'வள்ளுவர் வாசகம்' இரகுபதி ராகவ', 'ராமகிருஷ்ண உபநிடதம்' போன்ற நூல்கள் எல்லாமுமே குழந்தைகளும்படித்துப் புரிந்து கொள்ளும்படியான பழகு தமிழில் எழுதப்பட்டிருப்பதால் குழந்தைகளுக்கு 'ராஜாஜித் தாத்தாவாக' அவர் என்றும் காட்சியளிப்பதில் விந்தையேதுமில்லை!

திரு ராஜ் மோகன் காந்தியுடனும் ராஜாஜியின் அருமைப் புதல்வர் திரு சி. ஆர். நரசிம்மன் அவர்களுடனும் ராஜாஜி வாழ்க்கை வரலாற்றுக் கமிட்டியில் பணிசெய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியபோது தான் ராஜாஜிக்குக் குழந்தைகளிடம் இருந்த அன்பும் பரிவும் அவர் முதுமைக்காலத்தில் தான் வந்தனவோ என்கிற கருத்து தவறு: இல்லற வாழ்க்கைத் தொடங்கிய அந்நாளிலிருந்தே ராஜாஜி அவர்கள் குழந்தைகளிடம் அளவுகடந்த அன்பும் கனிவும் கொண்டவராய் இருந்து வந்திருக்கிறார் என்பதுதான் உண்மை என்று தெரியவந்தது. அதை அறிய வைத்தவர் மாண்புமிகு க. ராசாராம் அவர்களின் தந்தையார், அண்மையில் மறைந்த திரு. கஸ்தூரிபிள்ளை அவர்களேயாகும்!

ராஜாஜியின் அருமைப்புதல்வர் திரு சி. ஆர். நரசிம்மன் அவர்களுடன் நானும் போவதுண்டு. 1974-ஆம் ஆண்டு ஒரு தரம் காந்தி ஆசிரமம் செல்வதற்கு முன் சேலத்தில் ஒருநாள் தங்கினோம். அன்றிரவு அன்றைய அமைச்சரவையில் உறுப்பினராக இருந்த மாண்புமிகு திரு க. ராசாராம் அவர்களைச் சந்திப்பதற்காக திரு சி. ஆர். நரசிம்மன் என்னையும் அழைத்துக் கொண்டு அமைச்சரின் இல்லத்திற்கு சென்றார். அகமும் முகமும் மலர்ந்து எங்களை வரவேற்ற அமைச்சருடன் திரு. சி. ஆர். நரசிம்மன் அவர்கள் உடனடியாக நாட்டு நடப்பைப் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார்கள். நல்ல வேளையாக என்னை அதே அறையில் வேறோர் இடத்தில் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்த திரு. கஸ்தூரிப்பிள்ளையிடம் அறிமுகம் செய்துவிட்டே அவர்களிருவரும் அரசியல் நிலவரம் பற்றி உரையாடலானார்கள். பெரியவர் திரு. கஸ்தூரிப்பிள்ளை அவர்கள் ராஜாஜிக்கும், காந்திக்கும் பேரனான திரு ராஜ்மோகன் காந்தி எழுதப்புகுந்திருக்கும்

ராஜாஜி வாழ்க்கை வரலாற்றைப் பற்றி மிகவும் ஆர்வத்துடன் விசாரிக்கையிலேயே அவருடைய மனக்கண் முன் அவர் பார்த்திருந்த ராஜாஜி திரும்பி வந்துவிட்டார்' ''தங்களுக்கு ராஜாஜியை எப்போதிலிருந்து தெரியும்?'' என்ற என் கேள்வி அவர் மனத்திரையில் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளை படமாக ஓட்டியயதுபோலும். திரு. கஸ்தூரிப் பிள்ளை தன்னுடைய பள்ளிப் பருவ நாளிலிருந்தே ராஜாஜியைப் பார்த்திருக்கிறார். அவருடன் பேசிப் பழகியுமிருந்திருக்கிறார். எப்படியென்றால், சேலத்து சீமானாக மிக்க வருவாயுள்ள வக்கீலாக ராஜாஜி வாழ்ந்து வந்த காலத்தில் ராஜாஜியின் இல்லத்திற்கருகிலிருந்த வீட்டில்தான் திரு. கஸ்தூரிப் பிள்ளையின் பெரியோர்களும் இருந்து அவர் பள்ளிக்குச் சென்றிருக்கிறார். அந்நாளிலேயே ராஜாஜி அரசியலார்வம் கொண்டவர் என்பது 1906-ஆம் ஆண்டு 'சூரத்' நகரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு சேலத்திலிருந்து அவர் சென்றார் என்பது ஊரறிந்த ஒன்றாம். வீட்டில் இளம் மனைவி, சின்னஞ் சிறிசுகளாகக் குழந்தைகள் வேறு பல உறவினர்கள் இவர்களல்லாமல் வருவோர் போவோரும் மிகுதியாக இருந்த குடும்பம் வக்கீல் ராஜாஜியினுடையது என்பது பள்ளிச்சிறுவன் கஸ்தூரியின் முதல் நினைவு.

அரசியல் மட்டுமின்றி, தொழில் துறை சம்பந்தமாகவும் அக்காலத்தில் அதாவது இந்த நூற்றாண்டின் முதல் வருடங்களில் ராஜாஜி அவர்கள் அடிக்கடி சென்னை சென்று வருவாராம். சென்னைக்கு அப்படி அவர் சென்றிருக்கிறார் என்று தெரிந்ததுமே அவர்கள் குழந்தைகள் மட்டுமின்றி அக்கம் பக்கத்து வீடுகளிலுள்ள குழந்தைகளெல்லோருமே திரு கஸ்தூரி உள்பட ராஜாஜி எப்போது சென்னையிலிருந்து வீடு திரும்புவார் என்று அவர் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்களாம்! ஏனென்றால் ராஜாஜி எப்போது சென்னை சென்றாலும் திரும்பி வரும்போது புதிது புதிதாக, தினுசு தினுசான விளையாட்டுச் சாமான்களும், இனிப்புக்களும் நிறைய வாங்கி வந்து தன் குழந்தைகளோடு நின்றுவிடாமல் அக்கம் பக்கத்திலுள்ளோர் குழந்தைகள் எல்லோருக்குமே பரிசாக அளிப்பாராம். இப்போது இன்னுமொன்றை திரு கஸ்தூரி அவர்கள் நினைவு கூர்ந்தார்கள்; விளையாட்டுச் சாமான்கள், இனிப்புகளுடன் கூடவே குழந்தைகள் விரும்பிப் பார்த்துப் படிக்க ஆவலூட்டும் வண்ணப்படங்கள் நிறைந்த எளிய முறையில் எழுதப்பட்ட புத்தகங்கள் பலவற்றையும் என்ன விலையாயிருந்தாலும் கவலைப்படாமல் வாங்கி வந்து எல்லோருக்கும் கொடுப்பாராம்! அவர் செலக்ட் பண்ணும் Modern Readers மிக அருமையாக இருக்கும். 'இப்படி விளையாட்டோடு சுவைமிக்க இனிப்புக்களும் அறிவாற்றலை வளர்க்க நூல்களும் வாங்கி வருவதோடு விளையாட்டுச் சாமான்களிலும் அக்காலத்திற்கு Modern ஆக இருப்பதாக வாங்கி வருவாராம்!

சுமார் 70 ஆண்டுகளுக்கு மேல் குழந்தைப் பருவத்தினரிடம் குறையாத அன்பை ராஜாஜி காட்டி வந்திருக்கிறார் என்பதை நினைத்தபோது, ராஜாஜி பிறந்த தின நூற்றாண்டை ''International year of the child'' என்று ராஜாஜியைப் பற்றித் தெரிந்திராத நாடுகளிலெல்லாம் கூட கொண்டாடப்போவது மிகவும் பொருத்தமே என்று தோன்றுகிறதல்லவா!

வழி காட்டும் தமிழக அரசு



''இந்தியா முழுவதும் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டு மது அரக்கன் அடியோடு ஒழிக்கப்பட்டால் ஒழிய இந்தியாவில் இருந்து வறுமை அகலாது. ஏழைகளாக இருப்போர் வாழ்விலும் முன்னேற்றம் ஏற்படாது. எனவே மதுவிலக்குத் திட்டம் அவசர அத்தியாவசியமானதாகும்.

'மதுவிலக்குத் திட்டத்தில் தமிழ்நாடு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறது. கடந்த 1947ஆம் ஆண்டில் இருந்து தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமலில் இருந்து வருகிறது.

''ஆனால், கடந்த 1974ஆம் ஆண்டில் மட்டும் அப்போதைய அரசு மதுவிலக்கை நீக்கியது. ஆனால் பொது மக்கள் குறிப்பாக தாய்மார்களின் தீவிர எதிர்ப்பின் காரணமாக மீண்டும் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது.

''மதுவிலக்குத் திட்டத்தில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்குச் சிறந்தமுன்னோடியாக விளங்குகிறது.''

— பிரதமர் மொரார்ஜி தேசாய்

கோவா மாநிலத்தில் உள்ள பானாஜியில் 15-11-78 அன்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்

மூதறிஞர் ராஜாஜியின் பொன் மொழிகள்

எல்லா ஜாதியினரிடையும், எல்லா சமயத்தாரிடையும் எவ்விதப் பாகுபாடுமின்றி கலப்புத் திருமணங்கள் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறேன். நம்முடைய ஜாதி, சமய பேதங்களினால் பிரச்சினைகளைத் தீர்க்க இதைத் தவிர வேறு வழியில்லை. ''ஜாதி ஒழிக'' என்று வெறும் கூப்பாடு போடலாம்; ஆனால் எல்லா ஜாதியாரிடையும் கலப்புத் திருமணத்தை ஊக்குவித்தாலன்றி இப்பிரச்சினை தீராது.

* * * * *

பாரத நாட்டை ஒரு காடாக்குவதோ அல்லது ஒரு நந்தவனமாக்குவதோ நம் சக்தியில் இருக்கிறது. ஒரு நந்தவனமாக்குவதென்றால் நம்மிடை தியாக உணர்ச்சி இருக்க வேண்டும்; கட்டுப்பாடு இருக்க வேண்டும். நாம் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டேயிருந்தால் ஒரு பயங்கர வனாந்தரத்தைச் சிருஷ்டிப்போமேயன்றி நந்தவனத்தை அல்ல.

* * * * * *

வாழ்க்கைக்குத் தேவையான விஷயங்களையெல்லாம் ஒரு கைப்பையில் அடைத்துக் கொள்வது போல் திணித்துக் கொள்வதல்ல கல்வி. ரயிலில் யாத்திரை செய்தீர்களானால், உங்கள் கைப்பையில் ஒரு மாதத்திற்கு வேண்டிய பொருட்களை அடைத்துக் கொண்டு புறப்படுவது என்று தீர்மானித்தீர்களானால், ஒன்று, பை கொள்ளாமல் பிதுங்கிப் போகும், அல்லது எடுத்துச் செல்லும் பொருள்கள் வழியிலேயே அழுகிப் போகலாம். ஆகவே பிரயாணத்தில் ஆங்காங்கே தங்கும் ஊர்களின் கடைத்தெருக்களில் கிடைக்கும் பொருட்களை வாங்கிப் புசிப்பது மேலே தவிர, ஒரு மாதத்திற்குக் காணும்படியாகச் சமைத்து, பையில் போட்டுக்கொண்டு வந்துள்ள பண்டத்தைத் தின்பதல்ல. அதைப்போலத் தான் வாழ்க்கையில் நீங்களாகவே அவ்வப்போது பொது விஷயங்களைக் கற்று வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும். சரியாகச் சிந்திக்கவும், நல்லபடியாக நடந்து கொள்ளவும் எச்சரிக்கையாக இருக்கவும் வாழ்க்கையில் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

* * * * * *

பிறர் அபிப்பிராயத்துக்குப் பயந்து கொண்டே வேலை செய்தோமானால் நாம் வாழ்க்கையில் எத்துறையிலும் முன்னேற முடியாது. நாம் திறந்த மனத்தினராய் இருக்கவேண்டும். பிறர் என்ன சொல்கிறார்கள் என்பதனைக் கேட்க வேண்டும். அவர்கள் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். அத்துடன் நிற்க வேண்டுமே தவிர பயந்துவிடக்கூடாது. பிறர் ஒப்பமாட்டார்கள், என்ற பயத்தின் காரணமாக ஒரு செயலைச் செய்வதோ செய்யாமல் இருப்பதோ கூடாது. மற்றவர்களின் சொல்லை மரியாதையோடு கேட்பாயாக! வேண்டுமானால் உன் மனத்தை மாற்றிக்கொள். ஆனால் மனத்தை மாற்றிக் கொள்ளாமல் பயத்தினால் உந்தப்பட்டு ஒரு காரியத்தைச் செய்யாதே. வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம்

—தொகுப்பு: எஸ். வி. எஸ்.

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும்!

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்
துணையாகும்!

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.

வேறு என்ன இருக்க முடியும்? நம் மனத்துக்குச் சரி என்று பட்டதைச் செய்துகொண்டே வருவோமானால் எல்லாமே சரியாக இருக்கும். இக்கருத்து ஏற்கெனவே ஆயிரம் முறை சொல்லப்பட்டதுதான்.. அந்த லட்சியத்தை அடையாதவரை இந்த உண்மையை திரும்பத் திரும்பச் சொல்வது நல்லதுதான்.

* * * * * *

கோபித்துக்கொள்ள வேண்டுமானால் அந்தக் கோபத்தை உங்கள் மேலேயே காண்பித்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களுக்குச் சொல்லிக் கொள்ளுங்கள், ''இனி நான் ஒழுங்காய் இருப்பேனாக'', மற்றவர்களுக்கு ''ஒழுங்காய் இரு'' என்று கட்டளையிடாதீர்கள். நீங்கள் உங்களுக்கே சொல்லிக் கொள்ளுங்கள். 'இனி நான் உண்மையையே பேசுவேனாக'' மற்றவர்களுக்கு; ''பொய் சொல்லாதீர்கள்? என்று சொல்லாமல் இருப்பீர்களாக. நீங்கள் ஒழுங்காக இருந்தால் மற்றவர்கள் உங்களைப் பின்பற்றுவார்கள்.

* * * * * *

ஒரு செடி நன்கு வளர நல்ல மண்ணும், நல்ல சூரிய வெளிச்சமும், எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் நல்ல ஜனநாயகப் பயிர் செழிக்கக் கீழே அதிகாரமும், மேலிருந்து அறிவுசார்ந்த ஊக்கமும்.

* * * * * *

பிறருடைய துன்பத்தைப் பார்த்து நம்மையறியாமலே நாம் துன்புறுகிறோம். பிறர் மகிழ்ச்சியைப் பார்த்து நாமும் அவர்களோடு சேர்ந்து மகிழ்கிறோம். இந்த கட்புலனுக்கெட்டாத சக்திதான் மனித சமுதாயத்தைப் பிணைத்து வைத்திருக்கிறது. பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருட்களையும் இணைத்து ஒழுங்காக இயக்கிச் செல்வது ஆகர்ஷண சக்தி என்பார்கள். அந்தச் சக்தியைப் போன்றதுதான் மனித சமுதாயத்தின் உள்ளங்களை இணைக்கும் சக்தியும்.

* * * * * *

ஒரு பெண்ணின் கல்விக்கு நாம் செலவிடும் பணம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதாகும். நமது நாட்டுத் தாய்மார்களின் கல்வியறிவைப் பொறுத்துத்தான் இருக்கிறது நமது எதிர்காலம்.

* * * * * *

அன்பினைக் கேட்காதே. கேட்டுப் பெறக்கூடியதல்ல...அன்பு. நீ அன்பு செலுத்து. தானாகவே நீ பிறரின் அன்புக்குப் பாத்திரனாகிவிடுவாய்.

* * * * * *

நமது முன்னோர்கள் மிகப் பெரியவர்கள்தான். ஆனால் உண்மைக்கும், அவர்கள் பெருமைக்கும் தற்சமயத்தில் தொடர்பில்லை. அவர்கள் ஒரு குறித்த காலத்தில் ஒரு குறித்த கருத்தைக் கொண்டிருந்தார்களென்றால் அதே கருத்தை என்றும் நாம் மூடப்பிடிவாதத்துடன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில்லை. நம் முன்னோர்களை நாம் போற்றுவோமாக! ஆனால் நமது சிந்தனையைச் சரியான வழியில் செலுத்திச் சிந்திப்போமாக. அவர்கள் கருத்துக்களை மடத்தனமாக மேற்கோள் காட்டாமல் இருப்போமாக!

* * * * *

அரசாங்க நிர்வாகப் பொறுப்பிலிருப்பவர்கள் கொள்கை வெறியர்களாக இருக்கக்கூடாது. பிரத்தியட்ச நிலைமைகளை உணர முயல வேண்டும். எது சரி, எது தவறு என்பதனை நம் நாட்டு மக்களின் நன்மையின் அடிப்படையில் சீர்தூக்கிப் பார்த்து இயங்க வேண்டும். கொள்கை வெறியர்களாக இருப்பது சுலபம். நாட்டு நிர்வாகத்தை நடத்த மிக உயர்தரமான திறமை வேண்டும்.

* * * * *

பத்திரிகைகளைப் படித்தால் உலகத்தில் நடக்கும் சமாச்சாரங்கள் தெரியும்.

பத்திரிகைகளிலாவது புத்தகத்திலாவது சொன்னதெல்லாம் உண்மை என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. விவேகத்தை உபயோகித்து எது பொய், எது உண்மை என்று ஆராய்ந்தே முடிவுக்கு வரவேண்டும்.

மகாத்மா காந்தியுடன்..
சர்தார் வல்லபபாய் படேலுடன்...
பண்டித நேருவுடன்...
தலைவர்களுடன்
வினோபா பாவேயுடன்...
டாக்டர் எஸ்·ராதாகிருஷ்ணனுடன்...

கென்னடியுடன்...
லால்பகதூர் சாஸ்திரியுடன்...
ராஜாஜி
கஸ்தூரிபா மற்றும் பலருடன்...
மவுண்ட் பேட்டன் தம்பதியருடன்....
ஜின்னாவுடன்...

தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.

ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

டான்சி



தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014

ராஜாஜிக்கு அறிஞர்கள் புகழ்மாலை

—தொகுப்பு: எஸ். வி. எஸ்.



"இந்தக் காலத்தில் சமூக சீர்திருத்தம் பற்றிப் பேசுவது எவருக்கும் எளிது. அந்தக் காலத்தில் அதைத் துணிந்து செயல் படுத்திய முதல் பார்ப்பனர் ராஜாஜியே ஆவார். ராஜாஜி இருந்திருக்கவில்லையானால் காந்தியாரே சமபந்தி போஜனத்திற்கும், சமூக சீர்திருத்தக் கொள்கைகளுக்கும் இசைவு தந்திருக்கமாட்டார்.''

—பெரியார் ஈ.வே.ரா.

ராஜாஜி மிக உறுதியான கருத்துக்களும் நம்பிக்கைகளும் கொண்டவர். எது நேரினும் அவற்றைப் பிடிவாதமாகப் பற்றிக் கொண்டிருப்பவர். அவர் பல்வேறு பிரச்சினைகளுக்கு அணுகுமுறையில் காந்தியடிகளின் அடிப்படை வழிமுறையை ஒப்புக் கொண்டாரே தவிர, என்றும் எந்தக் கருத்தினையும் தாம் சொந்தமாகச் சிந்திக்காமல் ஒப்புக் கொண்டதில்லை.

மகாத்மா காந்தியிடம் எங்களுக்கிருந்த பக்தியின் விளைவாக மகாத்மா காந்தியின் முன்னால் சிந்தனா சக்தி மழுங்கி அவர் கூறுவதைப் பகுத்தாராய முடியாமல் போய்விடும். ராஜாஜிக்கோ மகாத்மா காந்தியடிகளிடம் அளவுகடந்த பற்றும், நம்பிக்கையும் இருந்தாலும்-அவர் தம் சிந்தனா சக்தியைத் தம் வசம் விட்டுப்போக அனுமதித்ததில்லை. எது நிகழ்ந்தபோதிலும், அவர் தாம் ஆராய்ந்து கண்ட முடிவில்தான் நிற்பார். அப்படி யார் வார்த்தையையாகிலும் ஏற்றுக் கொண்டாரென்றால் அதைப்பற்றி அவர் தாமே தீர ஆராய்ந்த பிறகே மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

ஆகவே, ராஜாஜி சில நேரங்களில் எங்களிடமிருந்து மாறுபட்டாலும், அல்லது பல நேரங்களில் எங்களோடு ஒத்துப்போனாலும், எப்போதும் எங்கள் முன்னுள்ள எந்தப் பிரச்சினைக்கும் அவர் தமது கூர்த்த மதியினால் ஆராய்ந்து கூறும் கருத்துக்கள் மெய்சிலிர்க்க வைப்பதாக இருக்கும்.....மொத்தத்தில் ராஜாஜி, அடிப்படையில் பாரத நாட்டின் மிக உயர்ந்த மனத்தின் பிரதிநிதியாவார்.

—ஜவாஹர்லால் நேரு.

அடுத்த இதழிலும் ராஜாஜி குறித்துசெய்திகள் இடம்பெறும்

ராஜாஜி தமது நீண்ட பணியினால் மக்கள் மதிக்கும் நிலைக்கு உயர்ந்துவிட்டார். தமது நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலக நாடுகளின் மக்கள் அவரைப் பெரிதும் போற்றுகின்றனர். அவரைப் பெற்றெடுத்த தாயக' பெருமிதம் கொண்டால் அது நியாயமே!

—ஸர் முகம்மது ஸப்ருல்லா, பாகிஸ்தான்.

ராஜாஜியைப் போன்ற கிடைத்தற்கரிய உயர்ந்த உள்ளம் படைத்தவரை மதிக்க அவர் சொல்லும் கருத்துக்கள் எல்லாவற்றுடனும் ஒத்துப் போக வேண்டும் என்பதில்லை. பிறருக்குத்தான் ராஜாஜி முரண்பாடுடையவராகத் தோன்றுகிறாரே தவிர, பார்க்கைப் போல், அவர் உள்ளம் முரண்படாமல் ஒரே சீராக இயங்கி வருகிறது. அவர் மட்டும் இந்தியா சுதந்தரம் அடைந்த ஆரம்ப ஆண்டுகளில் நாட்டையாள அனுமதிக்கப்பட்டிருந்தால், காந்தீயக் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்திருப்பார்!

—டபிள்யூ. ஆர். க்ராக்கர், முன்னாள் ஆஸ்திரேலிய நாட்டின் தூதர்.

நான் ராஜாஜியை மிகப் பெரிய மனிதர் என்பேன். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே மிக நெருக்கடியான கட்டங்கள் ஏற்பட்ட நேரங்களில்கூட அவர் தமது நடுநிலைமையையும் நேர்மையையும் இழந்துவிடவில்லை. தமது மக்களுக்கு விழுங்க முடியாத கசப்பானதாக இருக்கும் என்று தெரிந்தும் தமது சீரியநல்லயோசனைகளை வழங்கியிருக்கிறார். அந்த யோசனைகளை ஏற்று நடந்திருந்தால், இந்தத் துணைக்கண்டத்தில் அமைதி ஏற்பட்டிருக்கும். இந்தியாவின் கவுரவம் உலக அரங்கில் பெரிதும் உயர்ந்திருக்கும்.

—பீல்டு மார்ஷல் முகம்மத் அயூப்கான், முன்னாள் பாகிஸ்தான் ஜனாதிபதி

ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு 1980-ஆம் ஆண்டு ஜனவரியில் மதுரையில் நடைபெறும்.

இம்மாநாடு செனிகல் என்ற நாட்டில் ஆப்பிரிக்காவில் நடைபெறுவதாக இருந்தது. அந்நாட்டினர் விழாக் கொண்டாடுவதை, திரும்பப் பெற்றுக் கொண்டதையடுத்து 5-வது உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் நடத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் 1968-ல் நடைபெற்றது.

தற்பொழுது, சங்கம் வைத்து, தமிழ் வளர்த்த நான்மாடக் கூடலாம், மதுரைத் திருநகரில், 5-வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்த அண்ணாவின் வழி வந்த புரட்சித் தலைவர் தலைமையிலான தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

விழா சிறப்பான முறையில் கொண்டாடப்படும். மதுரை காமராஜ் பல்கலைக் கழக ஆதரவுடன் நிகழ்ச்சிகளில் பல நாட்டு அறிஞர்கள் கலந்து கொள்வார்கள்.

உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாகக் கொண்டாட முதல்வர் தலைமையில் விழாக் குழு அமைக்கப்பட இருக்கிறது.

—இவ்வாறு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஸோக்ரதர் போன்ற ஒருவர்

—திரு. வி. க

"இந்நூலை ஆங்கிலத்தினின்றும் தமிழில் பெயர்த்தெழுதிய ஆசிரியர், திரு மிகு சேலம், சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார். இப்பெரியார், மக்கள், ஆன்மாவை மறந்து, சத்தியம் தவறி, அறியாமையால் பொருளல்லவற்றைப் பொருளாகக் கொண்டு, பாழுக்கு உழைத்து வரும் வேளையில் அன்னார்க்கு அறியாமையை உணர்த்துமாறு ஒத்துழையாமை தோன்றி இயங்கும் நேரத்தில், தாம் அவ்வியக்கத்தில் சேர்ந்து சத்தியம் காத்தற் பொருட்டுச் சிறைக்கோட்டம் நண்ணிய காலத்தில், அறியாமை உணர்ந்து, மெய்யறிவு பெற்ற ஒரு சத்தியாக்கிரகியின் மரண தண்டனை வரலாற்றை எழுதியது போற்றத்தக்கதே.

ஸோக்ரதர் வரலாற்றை ஸோக்ரதர் போன்ற ஒருவர் எழுதுவதே சிறப்பு. ஏனையோர் சொல்லில், சொல்லணியில் அறிவைச் செலுத்தி எழுதுவர். நமது ஆச்சாரியார் தமது உடல் சிறைப்பட்டுத் தமது உயிர் சுதந்தர இன்பத்தில் தோய்ந்து கிடந்தபோது இந்நூலை மொழி பெயர்த்திருக்கிறார். இந்நூலை வாசிக்கும்போது கிரீஸ் தேசமும், நியாய மன்றமும், ஸோக்ரதர் பிரசங்கமும், சிறைச்சாலையும், அவர் போதனையும், சகித்தற்கரிய அவரது மரணக் காட்சியும் புலனாகி மனத்தைக் கவர்ந்து செய்கையறச் செய்கின்றன. இது நூலாசிரியன் மனநிலையைப் புலப்படுத்துகிறது. கசிந்து கசிந்துருகிப் பாடினோர் பாடலை ஓதுவோரும் கசிந்து கசிந்து உருகுதல் இயல்பு. இதை எழுதிய போது ஆசிரியர் இராஜகோபாலர் தம்மை மறந்து ஸோக்ரதராயிருந்தார் என்பது இந்நூலை வாசிக்கும் சத்தியாக்கிரகிகளுக்கு இனிது புலனாகும். இந்நூலை ஸோக்ரதர் போன்ற ஒருவர் எழுத நேர்ந்ததைக் குறித்து தமிழ்நாடு கழிபேருவகையுறும் என்பதில் ஐயமில்லை."

—ராஜாஜியின் 'ஸோக்ரதர்' என்ற நூலுக்கு தமிழ்ப் பெரியார் திரு வி. க. அவர்கள் எழுதிய முகவுரையிலிருந்து......

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!

"சாராயம் நம உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா

வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழரசு

16-12-1978 50 காசு.



தாயகம் திரும்பினார் தமிழக முதல்வர்

டிசம்பர் திங்கள் 9-ஆம் நாள்!

சென்னை விமான நிலையம் மக்கட் கடலில் மூழ்கிக் கிடந்தது!

நாற்பது நாட்கள் மேலை நாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களை வரவேற்க மக்கள் கூட்டம் விமான நிலையத்தின் உள்ளும் புறமும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

வழிநெடுக சாலையின் இரு புறங்களிலும் வெள்ளம்போல் தமிழர் கூட்டம், விழிகளில் அன்பைத், தேக்கி முதல்வர் அவர்களை வாழ்த்தி வரவேற்கக் காத்திருந்தது!

சிங்கப்பூரிலிருந்து சரியாக 12.45 மணிக்கு விமானம் வந்து சேர்ந்தது. முதலில் விமானத்திலிருந்து இறங்கிய முதல்வர் அவர்கள், அலைமோதிய அன்பு உள்ளங்களைப் பார்த்துக் கையசைத்தபடியே வெளியே வந்தார். அப்போது 'எம். ஜி. ஆர். வாழ்க!' என்ற வாழ்த்தொலி விண்ணைப் பிளந்தது.

முதலில் முதல்வர் அவர்களை மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களும், நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்களும், மாலை அணிவித்து வரவேற்றார்கள் தொடர்ந்து அமைச்சர்கள், சட்டப்பேரவைத் தலைவர், துணைத் தலைவர், பேரவைச் செயலாளர்கள் ஆகியோரும் மாலை அணிவித்து வரவேற்றனர்.

பிறகு முதல்வர் அவர்கள், விமான நிலையத்தில் அமைத்திருந்த மேடைக்கு வந்தார். சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள் மாலை யணிவித்து வரவேற்றனர். ஏராளமான பெண்களும் மேடைக்கு வந்து மாலை அணிவித்து வாழ்த்தினர். அப்போது முதல்வர் அவர்கள் பல குழந்தைகளுக்கு பெயர் சூட்டினார்.

மாலைகள் மலைபோல் குவிந்தன. எங்கு நோக்கிடினும் மகிழ்ச்சி ஆரவாரம்; வாழ்த்தொலிகள்.

வரவேற்பையும், வாழ்த்துக்களையும் நன்றிப் பெருக்குடன் ஏற்றுக்கொண்ட மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''அய்ந்து வார காலமாக வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, அங்கு பல அறிஞர்களைச் சந்திக்கும் வாய்ப்பையும், தமிழ்நாட்டுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களை அறியும் வாய்ப்பையும் பெற்றேன்.

''நான் வெளிநாட்டுக்குச் சென்றபோது, இதே இடத்தில் பேசினேன். அத்தனை மக்களும் அரசியல் கட்சிகளும் அரசோடு ஒத்துழைத்து உறுதுணையாக இருக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன்.

''அதன்படி அய்ந்து வார காலமாக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள், கருத்துக்களை வெளியிடும் வாய்ப்பைப் பயன் படுத்தி, போராட்டம் எதுவும் நடத்தாமல்-மக்களைத் தொல்லைகளுக்கு ஆட்படுத்தாமல் இருந்ததற்காக அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

தமிழரசு
மலர் : 9. இதழ் : 12
16—12—1978

வாழ்க அண்ணா புகழ்!



வளர்க புரட்சித் தலைவர் அரசு!!

மாண்புமிகு புரட்சித்தலைவரும் தமிழக முதல்வருமான எம்.ஜி.ஆர். அவர்கள் வெளிநாடு சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு தாயகம் திரும்பியதற்கு நெஞ்சம் நிறைந்த இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விளம்பரத் துறையில் தலைசிறந்து விளங்குவது! அண்ணா பப்ளிசிட்டீஸ்! நிறுவனமே!!

'தமிழரசு' மற்றும் தினசரி செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் சிறந்த முறையில் விளம்பரங்கள் வெளியிட எங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

மானேஜர்
அண்ணா பப்ளிசிட்டீஸ்
இலுப்பூர்—622 102 : : புதுக்கோட்டை மாவட்டம்

[சென்னையில் கிளை அலுவலகம் விரைவில் திறக்கப்படவிருக்கிறது.]

''அறிஞர் அண்ணா கூறிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கைகளைக் கைக்கொண்டு, எத்தனை எத்தனைச் சோதனைகள் வந்தாலும் பொறுமை காத்திட்ட அண்ணாவின் தம்பிகளுக்கும் நன்றி கூறுகிறேன்.

''ஆட்சிப் பணிகளைச் சிறப்பாகச் செய்த தலைமைச் செயலாளருக்கும், செயலாளர்களுக்கும் மற்றும் அரசு ஊழியர்களுக்கும், காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.''

விமான நிலையத்தை விட்டு திறந்தவேனில் புறப்பட்டு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலையை நோக்கி வந்தார் முதல்வர் அவர்கள்.

அண்ணாசாலையில் மக்கள் வெள்ளம் அலைமோதியது. அந்த அன்பு வெள்ளத்திலே மிதந்து வந்த முதல்வர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தார். பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, அங்கே போடப்பட்டிருந்த மேடையில் நின்று தமது மகிழ்ச்சிப் பெருக்கை வெளியிட்டார்.

''ஏறத்தாழ அய்ந்து வார காலம் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த நான், இன்று உங்கள் ஆசியுடனும் உங்கள் அரவணைப்பினால் கிடைத்த உறுதியோடும் திரும்பிவந்து உங்கள் முன் நிற்கிறேன்.

''பல்வேறு நாடுகளில் அறிஞர்களையும், அதிகாரிகளையும், பொதுமக்களையும் சந்திக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

''அமெரிக்க அரசாங்கத்தின் சார்பில் அழைப்பு விடுத்த பிரதிநிதிகளையும் இந்தியாவிலுள்ள, குறிப்பாக சென்னையிலுள்ள தூதுவர்களையும், அவர்கள் எடுத்த அக்கறை, செயல்பட்ட விதம் குறித்தும் தமிழக அரசின் சார்பில் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''பல்வேறு நாடுகளுக்குச் சென்று அய்ந்து வார காலமாக நான்பெற்ற அனுபவத்தைத் தமிழகத்தின் எதிர்கால நலனுக்காக எந்தெந்த வகைகளில் பயன்படுத்த முடியுமோ அந்தந்த வகைகளில் பயன்படுத்திக் கொள்வேன்.

''அந்தப் பொறுப்பைத் தமிழக மக்களின் பிரதிநிதியாக உள்ள அனைந்திந்திய அண்ணா தி.மு. கழக அரசு ஏற்றிருக்கிறது.

''இந்த வகையில் அனைந்திந்திய அண்ணா தி. மு. கழகத்தின் பிரதிநிதியாகவும், தமிழக அரசின் முதலமைச்சர் என்கிற பொறுப்பிலும், அண்ணாவின் தம்பி என்கிற நல்ல நம்பிக்கையோடும் தமிழக மக்களுக்கு நான் சொல்லும் செய்தி இதுதான், **தமிழகம் எதிர்காலத்தில் உழைத்து வருகின்ற மக்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும்.**

''தொழிலாளர்கள் - உழைக்கும் வர்க்கம் உயரவேண்டும். இந்த நாட்டில் உழைப்பவர் வசதிபெற வேண்டும். உரிமை பெறவேண்டும். அந்தநாள்தான் இந்த நாட்டின் உண்மையான சுதந்தர நாள் என்று பேரறிஞர் அண்ணா சொன்னதை இங்கு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''அதை வாயளவில் சொல்லாமல் செயலளவில் செய்து இந்த நாட்டையும், தமிழகத்தையும், உயர்த்த என்னென்ன திட்டங்கள் தேவைப்படுகிறதோ, அதற்கு வெளிநாடுகளிலிருந்து நான் பெற்ற அனுபவத்தை தக்க நேரத்தில் பயன்படுத்துவேன் என்று அண்ணாவின் சிலை முன் நின்று உறுதி கூறுகிறேன்.

''18 மாதங்களுக்கு முன்பு பதவி ஏற்றபோது மக்களுக்கு அளித்த வாக்குறுதியில் நாங்கள் சொன்னதைச் செய்ய முடியாமல் போகும்போது, எங்கள் பதவியைத் தூக்கியெறிந்துவிட்டு மக்களோடு மக்களாக வந்து நிற்போம் என்பதை இங்கே மீண்டும் உறுதிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''இளைஞர்கள் எதிர்காலத்தில் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பொறுப்புகளைப் பெற்றாக வேண்டும். அதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் மாபெரும் பொறுப்பு நமக்கு உண்டு.

''உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்ற தத்துவத்தைத் தமிழகத்தில் உருவாக்கிக் காட்டுவோம் என்று உறுதி கூறுகிறேன்.

''நான் வெளிநாட்டிற்குச் சென்றிருந்தபோது போராட்டங்கள், கலவரங்கள் இல்லாமல் தமிழகத்தில் அமைதி நிலவ வழி வகுத்த அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்துத்துறை அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

''கடமையைச் செய்வதில் கண்ணியத்தோடும், பொறுப்போடும் கட்டுப்பாட்டோடும், பொறுப்புணர்வோடும் நடந்து கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் உழைத்துத்தான் பிழைக்க வேண்டிய மக்களாக வேண்டும்.

''நான் சென்ற மேலைநாடுகளில் வேலைக்கு ஆள் இல்லை என்கிறார்கள். இங்கே ஆளுக்கு வேலை இல்லை. **இந்த நிலையை மாற்றிக் காட்டுவோம். அதற்காகப் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுவது எதிர்காலக்கடமை என்பதை உணர்ந்து செயல்படுவோம்.**

''அந்த வகையில் நாங்கள் செய்யும் முயற்சிகளுக்கு உங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டும்.''

பிறகு, முதல்வர் அவர்கள் தலைமைச் செயலகம் வந்தார். அங்கு ஆயிரக்கணக்கான ஊழியர்கள் அவரை வரவேற்றார்கள். பிறகு தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் அவரை வரவேற்றார்.

அவ்வமயம் முதல்வர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''என்னுடைய பயணம் பயன் உள்ள பயணமாகும். தமிழ் நாட்டுத் தொழில் வளர்ச்சிக்காக, தொழில் வளர்வதன் விளைவாக பல்லாயிரக்கணக்கானவர்களுக்குத் தொழில் வாய்ப்புப் பெருக, என்னால் ஆன அனைத்தும் செய்யக் கூடிய வகையில் பல புதிய விவரங்களையும் தொடர்புகளையும் பெற நல்ல வாய்ப்புப் பெற்றேன்.

''அமெரிக்க அரசு நன்றி கூறிப் பாராட்டும் அளவுக்குத் தங்கள் அதிகாரிகள் மூலமாக, பல்வேறு தனியார் துறையைச் சேர்ந்த தொழில் அதிபர்கள் போன்றவர்களைச் சந்திக்கவும், மருத்துவத் துறை, கல்வித்துறை, காவல்துறை போன்றவைகளில் அவர்கள் செயலாற்றும் விதத்தை ஓர் அரசு எந்த அளவுக்கு வெளிப்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு முழு வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள் எனக் கூறும்போது என் உள்ளத்தில் நன்றி உணர்ச்சி ஏற்படுகிறது என்பதை மனநிறைவோடு கூறிக் கொள்கிறேன்.

''நான் சென்ற நாடுகளில் எல்லாம், குறிப்பாக அமெரிக்க நாட்டில் எங்கெங்கு சென்றேனோ அங்குள்ள இந்தியப் பேரரசின் தூதரக அதிகாரிகளைக் கொண்டு எனக்கும், என்னோடு வந்த என்னுடைய அந்தரங்கச் செயலாளர் லட்சுமிநாராயணனுக்கும் முழு ஒத்துழைப்பையும் தந்ததோடு, அந்தந்த நாட்டு அரசு அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு நாங்கள் யாரைச் சந்திக்க விரும்புகிறோமோ அவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்புக்களை நிறைவேற்றித்தரவும், அவர்கள் எடுத்துக்கொண்ட அக்கறையையும் பொறுப்புணர்ச்சியையும், செயலாற்றும் முறையையும் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

''என் பயணம், நான் மேலே சொன்ன பல பிரச்சினைகளைப் பற்றி இருந்தது என்றாலும் அத்தோடு கடல் அரிப்பினால் ஏற்படுகிற அபாயத்தைத் தடுத்து நிறுத்தவும், அண்மைக் காலங்களில் கடல் கொண்ட இடங்களைத் திருத்தி அமைத்து நிலமாக்கவும் வேண்டிய தகவல்களையும் பெற்றதோடு மட்டும் அன்றி, சிங்கப்பூர் நாட்டில் அந்த ஆட்சியினர் இது விஷயத்தில் எடுத்துக்கொண்ட நடைமுறைச் செயல்களின் விளைவாக என்ன பலன் ஏற்பட்டுள்ளது என்பதை நேரடியாகப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும் என்னால் முடிந்தது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.''

தாயகம் திரும்பிய தமிழக முதல்வரைக் காண்பதற்கு, தமிழகத்து மக்களே, சென்னை நகரில் திரண்டிருந்தனர் என்றால் மிகையாகாது.

வெள்ளப் பகுதியில் விரைவான நடவடிக்கை!

நவம்பர் திங்கள்!

ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கால கட்டத்தில் தமிழகம் இயற்கையின் சீற்றத்தை எதிர்நோக்கின்ற துர்ப்பாக்கிய நிலை! இவ்வாண்டும் வங்கக் கடலில் உருவான புயல் சின்னம், வழக்கம்போல் தமிழகத்தை ஒரு 'கை' பார்த்து விட்டுச் சென்றது!

இதன் விளைவாகக் கடும் மழை பெய்து, காவிரி டெல்டாப் பகுதியில் உள்ள எல்லா ஆறுகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு. ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் நீரில் மூழ்கின.

தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, கன்னியாகுமரி மாவட்டங்களில் வடகிழக்குப் பருவமழை கடுமையாகப் பெய்தது.

நீலகிரி மாவட்டத்தில் பெய்த பெருமழை காரணமாகச் சில பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டு நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு உடனடியாக முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 1,000 வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதேபோல் தஞ்சை மாவட்டத்திலும் இறந்த 6 குடும்பங்களுக்குத் தலா ரூ. 1,000 வழங்கப்பட்டது.

நிலச்சரிவு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிட அரசு தீவிரம் காட்டியது. உடனடியாக, விரைந்து பல நடவடிக்கைகளை எடுத்தது.

நிவாரணப் பணிகளைக் கவனிக்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும் ஊட்டிக்கு விரைந்து சென்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டு மைல் தூரம் நடந்து சென்று ஆறுதல் கூறினர்.

பாதிக்கப்பட்ட பாதைகளைச் செப்பனிட 'புல்டோசர்' கொண்டு வரப்பட்டன. நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி வழங்கியும், உணவு, தங்கும் வசதி செய்து கொடுத்தும் அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்தது.

மீட்புப் பணிகளிலும், சாலைகளைச் சீரமைக்கும் பணிகளிலும் வெலிங்டனிலுள்ள. இராணுவத்தினரும் (மதராஸ் ரெஜிமெண்ட்) ஈடுபட்டனர். ஊட்டியில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரம் பேர்களுக்கு வேட்டி, சேலை, போர்வைகளை நிதியமைச்சர் அவர்கள் வழங்கினார்.

வெள்ளத்தாலும், நிலச்சரிவாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணியைத் தீவிரப்படுத்த உயர்மட்டக் குழு, மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் தலைமையில் கூடி ஆலோசனை நடத்தியது. இதில் அமைச்சர்கள் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், திரு சி. பொன்னையன் அவர்கள் திரு க. இராசாமுகமது அவர்கள் மற்றும் அதிகாரிகள் உயர் காவல் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்க்ப்பட்ட மக்களுக்கு உதவியைத் தீவிரப்படுத்துவது குறித்து இக் குழு ஆலோசித்தது.

வெள்ளத்தாலும், நிலச்சரிவினாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போர்க்கால வேகத்தில் அரசு, நிவாரணப் பணிகளைச் செய்தது.



தமிழகத்தில் ஏற்பட்டுள்ள இயற்கையின் சீற்றம் குறித்து மேலை நாடு சென்றுள்ள மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதங்களை அறிந்து முதல்வர் அவர்கள் மனவேதனை அடைந்தார். மக்களின் துயர் துடைக்கத் தீவிரமாகப் பணிகளை நடத்துமாறு நிதியமைச்சர் அவர்களை முதல்வர் கேட்டுக் கொண்டார்.

''நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கிப் பலர் உயிரிழந்த செய்தி கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்கட்கு எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிவாரணப் பணியில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கும் மற்றவர்களுக்கும் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். உயிரிழந்த குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரண நிதி கிடைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்'' என்று முதல்வர் அவர்கள் வாஷிங்டனிலிருந்து தந்தி அனுப்பியுள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 1,800 பேர்கள் 11 முகாம்களில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. உணவும், ரொக்கப் பணமும் கொடுக்கப்பட்டது. இறந்தவர்களின் குடும்பத்துக்கு ஆயிரம் ரூபாய் உதவிப் பணமும் அரிசி, மண்ணெண்ணெய், வேட்டி, சேலை ஆகியவையும் தாராளமாக வழங்கப்பட்டன.

புயலிலிருந்து காப்பாற்றிக் கொள்ளப் பாதுகாப்பு மண்டபம், முதல் முதலாக நாகப்பட்டினத்தை அடுத்த அக்கரைப்பட்டியில், இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. அங்கே 500 பேர் தங்கக் கூடிய வசதிகள் உள்ளன. இது போன்று மேலும் 6 மண்டபங்கள் விரைவில் முடிவடையவிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புகளைப் பார்வையிட அனைத்து இடங்களுக்கும் நள்ளிரவிலும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் சென்று பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, இருப்பிடம் ஆகிய வசதிகளை வழங்க ஏற்பாடுகள் செய்தார்.

தஞ்சை மாவட்டத்தில் மீண்டும் உடனடியாகச் சாகுபடி செய்வதற்குத்தேவையான விதை நெல், இரசாயன உரம், பூச்சி பூஞ்சாண மருந்துகள் ஆகியவற்றை வழங்கிட அரசு தயாராக உள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்தார். வெள்ளச் சேதம் பற்றி ஆலோசிக்க உயர் மட்டக் குழு மீண்டும் மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் கூடியது.

அமைச்சர்கள் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள், திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், திரு கா. காளிமுத்து அவர்கள், திரு சி. பொன்னையன் அவர்கள், திரு க. இராஜா முகமது அவர்கள் திரு பா. குழந்தைவேலு அவர்கள், அரசு தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள், வருவாய்த்துறைச் செயலாளர், நிவாரணப்பணி அதிகாரி மற்றும் உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவின்படி மத்திய அரசுக்கு, நிபுணர் குழுவை அனுப்பும்படி கடிதம் ஒன்றை நிதியமைச்சர் அவர்கள் எழுதினார். அந்தக் கடிதத்தைத் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு க. ராசாராம் அவர்கள் புதுடெல்லிக்கு எடுத்துச் சென்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களைச் சந்தித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி அளிக்க மத்தியக் குழு ஒன்றை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார். திரு ராசாராம் அவர்களின் கோரிக்கையைப் பிரதமர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகளைத் தமிழக அரசு அறிவித்தது.

புயல் விளைவாக மண்டபம், பாம்பன் ஆகிய பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டதன் காரணமாக மண்டபத்தில் அமர்த்தப்பட்டிருந்த இலங்கை அகதி வாழ் மக்களுக்கு அடைக்கலம் அளிக்கும் பொருட்டு, அவர்கள் மண்டபம் முகாமிலிருந்து அழைத்து வரப்பட்டு இராமநாதபுரத்திலுள்ள மன்னர் கலைக் கல்லூரியில் தங்குவதற்கு இட வசதி அளித்து. பாதுகாப்பாக வைக்கப்பட்டனர். அவர்களுக்கு வேண்டிய உணவு, உறைவிடம் இதர வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள், புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்து வந்து, இராமநாதபுரத்தில் 2000 பேர்களுக்கு ரொட்டியும், உணவுப் பொட்டலங்களும் வழங்கினார். மேலும் புயலால் பாதிக்கப்பட்ட மண்டபம், வேதாளை, வடகடல், பாம்பன்பாலம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டு உடைமைகளையும், வீடுகளையும், சொத்துக்களையும் இழந்த மக்களைப் பார்த்து அவர்களுக்கு ஆறுதல் சொன்னார்.

இராமநாதபுர மாவட்ட சமூக நல வாரிய உறுப்பினர் திருமதி லீலாவதி தர்மர் அவர்களால் இந்தியக் குழந்தைகள் நல சங்கம் சார்பாக ரூபாய் 1000-க்கு காசோலையும் உணவு வழங்குவதற்காகக் கொடுக்கப்பட்டது.

இங்கும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் ஆறுதல் கூறினார்.

முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி இராமேஸ்வரம் பகுதிக்கு ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள பொருள்களும், இலங்கைக்கு ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள பொருள்களும் அனுப்பப்பட்டுள்ளன.

வெள்ள நிவாரண நிதிக்கு பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள், பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார்.

வெள்ளம்-நிலச்சரிவு இதனால் ஏற்பட்ட இழப்புகள் ஏராளம் என்றாலும் தமிழக அரசு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்ததன் காரணமாகப் பெருத்த சேதம் தவிர்க்கப்பட்டது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் நிவாரணப் பணிகள் விரைந்து நடைபெறுகின்றன.

துன்பம் சூழ்ந்த நேரத்திலும் தளராமல் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்ட தமிழக அரசை வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய நிபுணர் குழு வெகுவாகப் பாராட்டியது.

படமும் செய்தியும்

ஸ்ரீலங்காவின் மேதகு குடியரசுத் தலைவர் திரு டபிள்யூ ஆர். ஜெயவர்த்தனே அவர்களையும், திருமதி ஜெயவர்த்தனே அவர்களையும் சென்னை விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களும் 7-11-1978 அன்று வரவேற்றார்கள்.

ஸ்ரீலங்காவில் அண்மையில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு அளித்துள்ள ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை சென்னைத் துறைமுகத்தில் 1.12.'78 அன்று கப்பலில் ஏற்றும் நிகழ்ச்சியில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களும், ஸ்ரீலங்கா ஹைகமிஷனர் திரு எஸ்.கவுதம் தசா அவர்களும் கலந்து கொண்டனர்.

ஜாம்பியா பிரதமர் திரு டேனியல் லிஸுலே அவர்கள் டிசம்பர் 4-ந் தேதி சென்னை வந்தார். அவரை விமான நிலையத்தில் மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களும், உணவு அமைச்சர் திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்களும் சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்களும் கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களும் வரவேற்றனர்.

மத்திய அரசின் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறையின் ராஜாங்க அமைச்சர் திரு ஜகதாம்பி பிரசாத் யாதவ் அவர்களும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராஜன் அவர்களும் கலந்துகொண்ட பாராளுமன்ற கருத்துரைக் குழுக் கூட்டம், தலைமைச் செயலகத்தில் 7-11-1978 அன்று நடைபெற்றது.

ஊட்டியில் நிலச்சரிவால் சேதமேற்பட்ட இடங்களை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்களும் 7.11.'78 அன்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்டோருக்குச் சேலை, வேட்டி மற்றும் நிதி உதவிகள் வழங்கினர்.

புதுக்கோட்டையிலிருந்து 70 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மீமிசல் கடலோரக் கிராமத்தில் தமிழ்நாடு அரசும் செஞ்சிலுவைச் சங்கமும் கூட்டாகக் கட்டியுள்ள புயல் பாதுகாப்புப் புகலிடத்தை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் 30.11.'78 அன்று திறந்து வைத்தார்கள். (புயல் பாதுகாப்புப் புகலிடம் முதன்முதலில் நாகப்பட்டினம் அருகில் அக்கரைப் பேட்டையில் கட்டப்பட்டு முன்பே திறக்கப்பட்டுவிட்டது).

போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்யும் பண்டே குழு, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களை 27-10-1978 அன்று சென்னையில் சந்தித்தது.

இது தான் கல்வியின் நோக்கம் எனும் இலக்கு உருவாக வேண்டும்!

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்
திரு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய
பட்டமளிப்பு விழாச் சிறப்புரை

மதிப்பிற்குரிய கல்லூரி முதல்வர் அவர்களே! பேராசிரியப் பெருமக்களே! கல்வித் தகுதி என்னும் கலைநலம் பொலிய இங்கே நிறைந்திருக்கும் பட்டதாரிச் செல்வியரே! மாணவ மணிகளே!

இரண்டாம் ஆண்டாக உங்கள் கல்லூரியில் நிகழும் பட்டமளிப்பு விழாவில் பங்குகொண்டு, பட்டதாரிகளாகிய உங்களை வரவேற்று வாழ்த்தி உரையாற்றும் இந்த நல்வாய்ப்பினை எனக்கு அன்போடு நல்கிய ஆசிரியப் பெருமக்களுக்கும், கல்லூரி முதல்வருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

35 ஆண்டுகளுக்கு முன்பாக, என்னுடைய கலை ஆர்வ மிகுதியால் கல்லூரிக் கல்வி பயிலும் வாய்ப்பை நான் இழந்தவன் என்றாலும் கூட, எனக்கு இந்தப் பெருமையை நீங்கள் பரிவோடு வழங்கியிருக்கிறீர்கள். பொது வாழ்க்கை என்னும் பல்கலைக் கழகத்தில், பகுத்தறிவு இயக்கம் என்னும் கல்லூரியில், பொது அறிவுப் பாடங்களைப் பெரியாராகிய முதல்வரிடத்திலும், பேராசிரியர் அண்ணாவிடத்திலும் பயின்ற பலருள் ஒரு மாணவன் என்ற தகுதியைக் கருதியே நீங்கள் என்னை இங்கே அழைத்திருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். என்றும் மறக்க முடியாத, எப்போதும் இனிமையும் மகிழ்ச்சியும் நிறைந்தனவாகச் சில நிகழ்ச்சிகளே வாழ்க்கையில் நிகழும் — அத்தகைய ஒரு இனிமையான நிகழ்ச்சி இது. கல்விப் பொலிவும், கற்று முடித்த தெளிவும் பெற்று, அறிவு மிளிர, இந்தக் கல்லூரி மண்டபத்திலிருந்து சமுதாயச் சாலைகளில் பயணம் தொடங்கி, அணிவகுத்துச் செல்லும் அறிவுப் படைதான் —இந்த அரிவையர் படை என்று எண்ணும்போது பெருமகிழ்வடைகிறேன். தமிழகத்தின் ஓர் அமைச்சர் என்ற முறையிலும், உங்களை ஒத்த மகளிரின் ஒரு தந்தை என்ற நிலையிலும் உங்களை வாழ்த்துவதையும் வரவேற்பதையும் எனது கடமையாகக் கருதுகிறேன்.

"அன்னையும் ஆசானும் ஆருயிரைக் காப்பானும்
என்னும் படி அமைந்தீர் இப்படியே பெண்ணுலகம்
ஆளும்நாள் எந்நாளோ! அந்நாளே துன்பமெல்லாம்
போகும்நாள்! இன்பப் புதியநாள்! என்றுரைப்பேன்
அன்னைஎனும் தத்துவத்தை அம்புவிக்குக்காட்டவந்த
மின்னே! விளக்கே! விரிநிலவே! வாழ்த்துகின்றேன்"

என்று பாவேந்தர் பாரதிதாசன், பாவையரை வாழ்த்தும் பாட்டு வரிகளையே உங்களுக்கும் என் வாழ்த்தாக்கி விழாவுரையைத் தொடங்குகிறேன்.

கலைவளமும் கல்வி நலமும் பொருந்திய தமிழ் நாட்டு தலைநகராகிய, சென்னை திருநகரில் பேரறிஞர் அண்ணாவின் திருப்பெயரோடு திகழ்கிற நெடுஞ் சாலையில், மதத்தால் இஸ்லாமியராக, மொழியால் தமிழராக, செயலால் பண்பாளராக, ஆற்றலால் அரும்பெரும் தலைவராக, அமைதியால், அன்பால் கண்ணியத்தின் நாயகராக விளங்கிய தலைவர் காயிதே மில்லத் அவர்களின் பெயரில், புகழோங்கி நிற்கும் இந்த மகளிர் கல்லூரி, இரண்டாவது ஆண்டாகப் பட்டம் பெற்ற மாணவியரை மக்கட் பணிக்கு இன்று வழங்குகிறது. மகளிர் கல்லூரி என்ற பெயரில் நான்கு ஆண்டு இளமையோடு இது திகழ்ந்தாலும், அரசினர் ஆடவர் கல்லூரியாகப் பல்லாண்டு காலம் விளங்கிய பழமையும், பெருமையும் இக்கல்லூரிக்கு இயல்பாகவே உண்டு. அந்தத் தொன்மையின் வலிவும் மரபும் உங்கள் கல்லூரிக்கு உரமாக அமைந்து முதுமையின் அறிவையும், இளமையின் வலிவையும் உங்களுக்குத் தந்திருக்கின்றன. அறிவு வளத்திலும், கல்வி நலத்திலும், சிந்தனைச் சிறப்பிலும், வீரப் பெருக்கிலும், கற்பின் பொற்பிலும் தமிழக மகளிர் ஏற்றம் பெற்றது இன்று நேற்றல்ல ; அரச மகளாகிய ஆதிமந்தியாரும், அறிவுத் திலகமாகிய அவ்வையாரும், வீரம் பாடிய மாசாத்தியாரும், வெற்றியைப் பாடிய காக்கைபாடினியாரும் சங்க காலத்தில் வாழ்ந்த நற்றமிழ்ப் புலவர்கள். அறிவின் பிழம்பான காரைக்கால் அம்மையாரும், தியாகத் திலகமாகிய திலகவதியாரும், பூக்களைச் சூடிக் கொடுத்தும், பாக்களைப் பாடிக் கொடுத்தும் பார்புகழ் கொண்ட ஆண்டாளும் இடைக்காலத்தில் வாழ்ந்த மாதர் மணிகளாவர். குடும்பத் தலைவியராகவும், கொள்கைத் தலைவியராகவும் விளங்கிய கஸ்தூரிபா அம்மையார், அன்னை நாகம்மையாரைத் தொடர்ந்து இன்றைய நாளிலும் அறிவரசியரின் படைவரிசை அறிவியல், வணிகம், கலை, இலக்கியம் முதலிய புதுப்புதுத் துறைகளில் பட்டம் பெற்ற இளவரசியராக — வாழையடி வாழையாக வளர்ந்திருப்பதை உங்கள் வழியாகத் தமிழ் உலகம் கண்டு களிக்கிறது.

வாழ்க்கை என்பதே எண்ணத்தால் அமைவது; எண்ணம் என்பது மனத்தில் எழுவது. எந்த வாழ்க்கைக்கும் எண்ணம்தான் மூலம் ; எண்ணுகிற மனம்தான் கருவூலம். எண்ணங்களின் பெருக்கமே வாழ்வின் வளர்ச்சியாக வடிவம் பெறுகிறது. எனவேதான், 'மனம் போல வாழ்வு' என்று நம் நாட்டுப் பழமொழி கூறுகிறது. மனமானது பண்படவும், பயிற்சி பெறவும், மனத்தின் முயற்சிகள் சிறப்படையவும், சீரிய சிந்தனைச் செல்வம் செழித்தோங்கவும் உள்ளம் பற்றிப் படர்வதற்கான பற்றுக்கோடாக அமைவதையே 'கல்வி' என்று உலகம் நெடுங்காலமாக அழைத்து வருகின்றது. 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்று தமிழ் மூதாட்டியான அவ்வையார் அன்றே இதனைப் பாடியுள்ளார். உலகக் கல்வியாளர்கள், கல்வியின் அடிப்படையை, கல்வியின் நோக்கத்தை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆராய்ந்து — உள்ளத்தை மேம்படுத்தும் ஒப்பற்ற சாதனமாக கல்வியை அமைப்பதுதான் பொருத்தம் என்று முடிவு கட்டியிருக்கிறார்கள்.

எனவே, கல்வி என்பது கல்லூரியோடு முடிந்து விடுவதல்ல ; வாழ்க்கை முழுவதும் **தொடர்ந்து நிகழும் அறிவுப் பயணமாக** அமைவதற்கு இது ஆரம்பம். பட்டம் பெறுவது என்பது நெடிய வாழ்க்கைப் பயணத்தில் ஒரு மைல் கல்தான் — அதுவே பயணத்தின் இறுதி இலக்கு அல்ல என்று இந்த நாட்டின் மாபெரும் சிந்தனையாளரும் தத்துவ ஞானியுமான டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறியதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். ("Graduation is only a mile stone in the journey of life and not the end of it") இங்கே—கல்விச் சாலைகளில் நீங்கள் பெறும் அறிவு, சமுதாய வீதிகளில் நீங்கள் செயற்படும்போதுதான் உரமும் ஊட்டமும் பெறுகின்றது. கல்லூரிகளில் கற்றுக் கொடுப்பதைக் கல்வி' என்பதைவிட, கல்விக்குரிய கருவிதான் அங்கே வழங்கப்படுகிறது என்பதுதான் பொருத்தம் என்று அறிஞர் எமர்சன் ஒருமுறை குறிப்பிட்டார். எனவே, கல்வி என்பது அழகுக்கான ஓர் அணிகலன் அல்ல ; மனிதர்களின் அவசியத் தேவையாகவே, மக்களாட்சி மலர்ந்துள்ள இக்காலத்தில் கல்வி போற்றப்படுகிறது. அறிவுச் செல்வத்தை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், அரசாங்கம் கோடிக்கணக்காகச் செலவழிக்கிறது. முன்பெல்லாம் வசதி பெற்றவர்களும், வாழ்க்கையில் வாய்ப்புடையவர்களும்தான் கல்லூரிக் கல்வியைஎட்டிப்பார்க்க முடிந்தது. அப்படிப்பட்ட வாய்ப்பைப் பெற்றவர்கள், புதிய அந்தஸ்தை அடைந்தவர்களாக, சமுதாயத்திலே உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டார்கள். இப்போது அந்த நிலைமை இல்லை. என்றாலும், கல்வி பயிலும் வாய்ப்பு அனைவருக்கும் இன்று வாய்த்திருக்கிறது என்று நாம் மகிழ்ச்சியடையும்போது, ஏறத்தாழ வாழ்வில் 16 ஆண்டுகள் செலவு செய்து நாம் பெறுகிற கல்விப் பயிற்சியும், பயிற்சியினால் விளையும் அறிவும் வாழ்வுக்குத் தேவையான ஆற்றலைப் பெறுவதற்கான அடிப்படையை நமக்கு அளித்திருக்கிறதா? என்ற கேள்வியை எழுப்பி அதற்கு விடை காணுமாறு உங்களை வேண்டுகிறேன்.

இன்று நீங்கள் பெற்ற பட்டங்கள், அந்தப் பட்டங்கள் கற்றுத் தந்த பாடங்கள், அந்தப் பாடங்களுக்கு அடிப்படையான கல்வித் திட்டங்கள், நமக்கு எந்த இலட்சியத்தைச் சுட்டிக் காட்டுகின்றன என்று நீங்கள் எப்பொழுதும் எண்ணிப் பார்க்க வேண்டும். எனக்கு இதில் அய்யமுண்டு. ஏனெனில் 'கல்வியின் நோக்கம் இதுதான்' என்ற தெளிவான வரையறை இன்று வரை மாணவர் உலகத்துக்குத் தரப்படவில்லை என்றே நான் கருதுகிறேன். சாதாரணமாக நாம் பயணம் மேற்கொள்ளும்போது, கோவை செல்கிறவர்கள் சென்னை மத்திய இரயில் நிலையத்தின் வழியாகச் செல்ல வேண்டும், மதுரை செல்கிறவர்கள் எழும்பூர் இரயில் வழியாகத்தான் பயணத்தைத் தொடங்க வேண்டும், இந்த ஊருக்குச் செல்கிறவர்கள் இந்தச் சந்திப்பில் மாறியாக வேண்டும் என்று, திட்டவட்டமாக வரையறுப்பதுபோல, நமது அறிவுப் பயணத்தில் தெளிவு அமைந்துள்ளதா என்பது இன்று வரை ஆராய்வதற்குரியதாகவே உள்ளது என்பதை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். சமுதாயமும், அரசும், கல்வித் துறை அறிஞர்களும் இதுபற்றி விரிவாகச் சிந்திக்க வேண்டும் என்பது என்னுடைய அவா.

மகளிர் கல்வி என்பது தமிழகத்துக்குப் புதியதல்ல. கல்விக்குரிய கடவுளையே 'கலைமகள்' என்று அன்னையாக்கித்தான் நாம் வழிபடுகிறோம். 'அறிவும் அருமையும் பெண்பாலரின் குணங்கள்' என்று தொல்காப்பியரும், 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று திருவள்ளுவரும், 'பெருந்தடங்கண் பிறைநுதலார்க்கு எல்லாம் பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தன' என்று கம்பரும், 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்த வந்தோம், எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லைகாண்' என்று பாரதியாரும், ''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்று கவிமணியும், ''அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள் அழகிய தமிழ்நாட்டின் கண்கள்'' என்று பாவேந்தர் பாரதிதாசனும், 'பொருந்து நற்கலை பூவை கற்பது திருந்தியே மிகும்' என்று வித்தகர் வேதநாயகரும், ஓர் ஆண் கல்வி கற்றால் அவன்மட்டும் தான் அறிவு பெறுவான்; ஆனால் ஒரு பெண் கற்றால் ஒரு குடும்பமே கல்வி அறிவு பெற்றதாகும் என்று பிறரும் இப்படி மகளிர் கல்வியின் மாட்சியை நமது பாவலர்களும் அறிஞர்களும் பலவாறாகப் பாராட்டியுள்ளனர். இவ்வளவு பாராட்டுக்குரிய கல்வியை, அதுவும் பட்டக் கல்வியைக் கற்கும் பெண்களில் பலர்—வசதியுடையவர்கள் —திருமண வாழ்வை எதிர்பார்த்துப் படிப்பு முடிந்ததும் இல்லத்திலேயே இருந்து விடுகிறார்கள். நடுத்தர, நலிந்த குடும்பத்துப் பெண்கள், சம்பாதிப்பதற்காக வேலைக்கு விண்ணப்பம் போடும் அனுமதிச் சீட்டாகத்தான் தங்கள் கல்விப் பட்டத்தைப் பயன்படுத்துகின்றனர். இவற்றைக் காணும்போது, பாடுபட்டு மகளிர் கற்ற கல்வியின் பயனைச் சமுதாயம் முழுவதுமாகப் பெறாமல் போய்விடுகிறதே என்ற ஏக்கம் எங்களைப் போன்றவர்கட்கு ஏற்படுகிறது. பட்டுச் சேலை உண்டு, பார்ப்போர் மயங்கும் அழகு உண்டு, பொன்னகை உண்டு, வீணை வாசிப்பாள், பாடலும் தெரியும், ஆடலும் கொஞ்சம் பழக்கம் உண்டு—என்பதோடு படிப்பிலும் பி.எஸ்சி. என்ற பட்டம் உண்டு என்று, தன் பிள்ளைக்குப் பெண் பார்க்க வரும் பெற்றோர்க்கு,

தன் அந்தஸ்தைக் காட்டும் அலங்கார அணி வகுப்பில், பாவையர் பெற்ற பட்டப்படிப்பும் ஓர் அலங்காரப் பொருளாக நமது சமுதாயத்தில் மதிக்கப்படுவதை எண்ணும்போது, இவ்வளவு திறமையும் விழலுக்கு இறைத்த நீராக வீண் போய்விடுமே என்ற அச்சமும் எனக்கு ஏற்படுகிறது. நீங்கள் பெறுகின்ற கல்வி உங்களுடைய வாழ்வுக்கும், நீங்கள் வாழும் சமுதாயத் துக்கும் முழுவதுமாகப் பயன்பட வேண்டும். அண்மை யில்தான் என் நண்பர் சொன்னார்; திருமணமான பெண் மாமியாருடன் எப்படிப் பழக வேண்டும், விருந்தினரை எப்படி வரவேற்க வேண்டும், குடும்ப வாழ்வை எப்படி நடத்த வேண்டும், குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும், சமுதாய நலத்துக்கு எந்த வகையில் உழைக்க வேண்டும் என்பவைகளைப் பற்றியெல்லாம் ஜப்பான் முதலிய நாடுகளில் பயிற்றுவிக்கப்படுகின்றனவாம். நமக்கோ—அன்றாட வாழ்வில் பயன்படுகிறதோ இல்லையோ, திட்டப்படி விலங்கியல், விஞ்ஞானம், வணிகம், இரசாயனம், பௌதிகம், கணக்கு எல்லாம் கற்பிக்கப்படுகிறதே, அதுபோல வாழ்க்கைக்குரிய மனப் பக்குவம், வாழ்வின் சூழல்களை உணர்ந்து கொண்டு உறவோடு பழகும் வாழ்க்கைக் கலை பற்றி ஏதேனும் பாடங்கள் உண்டா என்று ஒரு முதல்வரைக் கேட்டேன். நான் சொல்கிற பாடம் இது வரையில் இல்லாத பாடம் என்று அவர் விடையிறுத்தார். ஓர் அறிஞர் குறிப்பிட் டதுபோல, "கடலாழத்தைப் பற்றியும், வான் மீன் களைப் பற்றியும், பொருள்களின் இயல்புகளைப் பற்றியும், கற்பதில் ஆர்வம் காட்டும் நமக்கு மனித மன நுட்பங்களைப் பற்றியும், பிறரோடு மாறுபடாமல் ஒத்துப்போகும் பரிவுணர்ச்சியை வாழ்க்கையில் நாம் பெறவும் கற்பிக்கப்படவில்லை" என்று தான் கருத வேண்டியிருக்கிறது.

இந்தப் பட்டமளிப்பு விழாவிற்குக் கூட, உங்கள் முதல்வர் அவர்கள் என்னை அழைத்தபோது, மகளிர் மனப்பண்பையும், அவர்களின் திறமையையும் ஆற்ற லையும் சுட்டிக் காட்டி, அவர்களைப் பாராட்டிப் போற்ற ஓர் அம்மையாரையே கூட அழைத்திருக்கலாம் என்று நான் நினைத்தேன். ஏனெனில் மகளிர் உள்ளக் கருத்துக்களை, வாழ்க்கை நிலைகளை, மகளிரே தமக்குள் கூடிப் பேசி பல அரிய சீர்திருத்தங்களை அவர்களுக்குள்ளேயே வகுத்தாக வேண்டிய கட்டாயத் தில் நாம் இருக்கிறோம். மகளிர் உரிமைக்காகக் கூட, ஆதிக்கத்தால் அரிவையரை ஒரு காலத்தில் அடக்கி வைத்த ஆடவர்களே மீண்டும் மீண்டும் வந்து வாதாடு வதும் ஒரு வேடிக்கைதான். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று அவர்களை ஆடவர்களினம் தள்ளி வைத்திருந்த காலமும் உண்டு. இன்று ஆடவர்கள்தான் பெண்ணின் பெருமையையும் எடுத்துப் பேசுகிறார்கள். பெண்ணினத்தின் நலனை, உரிமையைப் பெறவும், அதற்குரிய கடமையையும், உங்களைப் போன்ற படித் துப் பட்டம் பெற்ற பாவையர்களே மேற்கொள்ள வேண்டுமே தவிர, இன்னும் அந்தப் பணியை ஆடவர் வசம் ஒப்புவிப்பது எலியின் சுதந்திரத்திற்குப் பூனை போராடுவதற்கு ஒப்பாகும் என்பதையும் இந்த நேரத்திலே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். உண்மையிலேயே ஆற்றல், சக்தி, திறன் என்பவைகள் பெண்களிடத்தில்தான் மிகுதியும் உண்டு. 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்கிறோமே, நல்லது ஆவதும் பெண்ணால்தான், தீயவை அழிவதும் பெண்ணால்தான் என்று கருதுவதே பொருத்தம். "சக்தி இல்லை என்றால், சிவனே என்று கிட" என்று கூட ஒரு பழமொழியுண்டு. எனவே பெண் இல்லை என்றால் ஆடவருக்குச் சக்தி இல்லை என்றுதானே பொருள்? இருபது வயதுப் பெண்ணுக்கு 25 வயது இளைஞனைத் திருமணம் முடிக்கிறோமே! அதிலிருந்தே 25 வயது மகனின், அறிவாற்றலுக்கு நிகர் 20 வயது பெண்ணின் அறிவு என்று தானே நமது முன்னோர்கள் நினைத்திருக்கிறார்கள். பெண் எங்கே ஆணை விட உயர்ந்துவிடப் போகிறாளோ என்ற அச்சத் தில்தான் நமது ஆண்டவனையே கூட 'மங்கை பங்கன்', 'மாதொரு பாதியன்' என்று அர்த்தநாரீசுவரர் வடி வத்தை ஏற்படுத்தி ஆணும் பெண்ணும் சமம் என்று சமாதானம் செய்ய முயன்றிருக்கிறார்கள். உலகில் தாய்க் குலம்தான் நாகரிகத்தின் தலைவாயிலுக்கு மனிதனை அழைத்துச் சென்றது. காடுமேடுகளில் ஓடிக் கண்ணில்படும் விலங்குகளை வேட்டையாடித் தின்ற மனிதனுக்கு முதலில் தீயைப் பாதுகாத்துத் தந்து, அதற்கென ஓர் இல்லத்தையும் தேவையென உணர்த்தி, பதமான உணவைச் சமைத்து வழங்கி மனிதனை நாக ரிகப்படுத்தியதும் பெண்தான். சேமித்த உணவை அரைத்து மாவாக்கியதும் பெண்தான். அதை முதலில் ரொட்டியாக்கிச் சுட்டதும் பெண்தான். இவ்வாறு ஆக்கத் தொழிலுக்கு மனிதனை ஆளாக்கி நெறிப்படுத்தி யவளே பெண்தான் என்று மானிடத் தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

பெண்கள் பிறக்கும்போதே தியாக வடிவங்களாகப் பிறக்கின்றனர். தியாகத் திருவிளக்குகளாகவே வளர் கின்றனர். பிறந்து மழலை மொழி பேசும் பருவம் தொடங்கி, சிறுமியாகி, பருவக் குமரியாகி, காதல் மனைவியாகி, அன்புத் தாயாகி, குடும்பத் தலைவியாகி, நரை முதிர்ந்த மூதாட்டியாகி, வாழும் ஒரு பெண்ணின் வாழ்வு, மாசற்ற, தனக்கென வாழாத, ஒரு தியாக வாழ்வாகத்தான் திகழ்கிறது. ஆண்டவன், தான் எங்கும் இருக்க முடியாது என்பதற்காகவே வீட்டுக்கு ஓர் அன்னையைப் படைத்தான் என்று டால்ஸ்டாய் கூறிய துண்டு.

ஒரு நாட்டின் சீர்திருத்தச் சிந்தனைகள் செயல் வடிவம் பெறுவதற்கு அந்நாட்டு மகளிரே பெருங்காரண மாவார்கள். சாதிச் சிக்கல்களாலும், மூட நம்பிக்கை முட்புதர்களாலும், பிற்போக்குக் கருத்துக்களாலும் பின்தங்கியிருக்கும் நமது சமுதாயத்தில், முற்போக்கு உணர்வுகளை முளைத்திடச் செய்யும் முயற்சியில் மகளிர் தான் முன்நிற்க வேண்டும்.

ஆடவர்கள் அவசரக்காரர்கள், ஆத்திரக்காரர்கள்; மகளிரோ நிதானமானவர்கள், உறுதியானவர்கள். சாதியை ஒழிப்பதாக ஆடவர்களால் நன்றாகப் பேச முடியும். ஆனால் மகளிரால் நயமாகச் செய்து காட்ட முடியும். கோமளா, கோகிலம், கமலா, விமலா, என்று தான் பெண்களின் பெயர்கள் வழங்கப்படுகின்றன. படிக்கும்போது வாலிபனாகிய முனிசாமியும், வேலை பார்க்கும்போது, நடுத்தர வயதான கந்தசாமியும் குடும்பத் தலைவரான பிறகு, முனிசாமி முதலியாராக வும், கந்தசாமி பிள்ளையாகவும் மாறிவிடுகின்றனர். ஆனால், செல்வி விமலா, திருமதியானதும் விமலா தானே தவிர, விமலா நாயுடுவாகவோ, விமலா பிள்ளை யாகவோ சாதாரணமாக மாறுவதில்லை. இவ்வாறு சாதியை ஒட்டவைத்துக் கொள்ளாத உயர்ந்த இனமாக நம்மிடையே பெண்ணினம் உள்ளது.

சாதி வேறுபாடுகள் சமுதாயத்தில் நீக்கப்பட்டே யாக வேண்டும். காதல் மணமும், கலப்பு மணமும் சாதி ஒழிப்புக்குப் பெரிதும் உதவும் சாதனங்களாகும். காதல் மணம் என்ற உயர்ந்த, உன்னதமான இலட்சி யத்தை அடைய முயலும்போது, சில நேரங்களில், சமுதாயச் சூழ்நிலைகளால், சில குறைகள்—குற்றங்க ளாக ஏற்பட்டு விடுவதையும் இளைய சமுதாயத்தின ரிடம் நாம் காண்கிறோம் என்றாலும், மாசற்ற மனங் களுக்கிடையே மலர்கின்ற அந்த மகத்தான காதல் கனிவைச் சமுதாயம் இரு கை நீட்டி வரவேற்று மகிழ்கிற

அளவிற்கு, கல்வி அறிவு பெற்றவர்கள், காதலில் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும், கடமை உணர்வையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன். 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்ற காட்டுமுறைக்கு கற்றுத் தேர்ந்தவர்கள் இரையாகிவிடக் கூடாது.

காதல் மலர்ந்த நெஞ்சங்களில் வேறுபாடோ, வெறுப்போ அணுவளவும் விளைவதில்லை. இந்த வகை யில் சமுதாயச் சீர்திருத்தங்களுக்கு, முன்னணியில் வந்து நிற்க உங்களைப் போன்ற படித்த மகளிர் பேரார்வம் காட்ட வேண்டும். கல்வி மனங்கள், தம்முள் கலந்து வாழும் சீர்திருத்தக் காதல் வாழ்வு எல்லோரிடமும் துளிர்க்குமானால், குடும்பநலத்திட்டத்துக்கு அரசு வந்து முரசறைய வேண்டிய அவசியம் இல்லை. இயல் பான குடும்ப வெற்றியாக அத்திட்டம் ஏற்றம் பெறும்.

சமுதாய வாழ்வின் சந்திப்பில் வந்து நிற்கும் உங் களை வாழ்த்தும்போது, தந்தை பெரியார் உங்களுக்கு ஆற்றிய வீர உரையையும் நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். "தற்போது பெண்களுக்குப் படிப்பும் வேலையும் இல்லாததால்தான் ஆண்களைச் சார்ந்து

வாழவேண்டுமென்கின்ற நிலை அவர்களிடம் இருக்கிறது. பெண்கள் ஆண்களைப் போன்று, துணிவாக நடந்து கொள்ள வேண்டும், பெண்கள் தனியாக வாழ முடியும்; எதையும் சாதிக்க முடியும் என்கிற நிலையில் வாழ வேண்டும். சுதந்திரமாக, கவலையற்று வாழ, தொல்லையற்று வாழ அறிவைக்கொண்டு சிந்தித்து அதன்படி பெண்கள் நடந்துகொள்ள வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

உடல், உள்ளம், உயிர் என்ற நிலையில் உடல் அளவில்தான், ஆடவர் மகளிர் என்ற வேறுபாடு உண்டே தவிர, உள்ளத்தில்—உயிரில் ஆண் பெண் என்ற வேறுபாடே இல்லை. இன்னும் சொன்னால் ஆடவர் உடலில் மகளிர் மனங்களும், மகளிர் மேனியில் ஆடவர் உள்ளமும் அமைந்திருப்பதையும் நாம் காண்கிறோம். இன்னும் ஆழ்ந்து ஆராயும் அறிவியல் அறிஞர்கள், அறிவை ஆணாகவும், உணர்வைப் பெண்ணாகவும் உருவகித்து, ஒரே மனத்தில் ஆண்மையும் பெண்மையும் மாறிமாறி இடம் பெறும் என்று கூடக் குறிப்பிடுகின்றனர். எனவே உடல் வன்மையையோ, மென்மையையோ காரணம் காட்டி ஆணுக்கும், பெண்ணுக்கும் உயர்வு தாழ்வு கற்பிப்பது பொருத்தமானதல்ல. 'வீரம், புலமை, ஆராய்ச்சியறிவு, துணிவு, இலட்சியநோக்கு ஆகியவை ஆண்களுக்கு மட்டுமே உரிமை ஆனவைகள் அல்ல. இயற்கையான உடற்கூறுகளின் அமைப்பினுல், பெண் இனம் பலவீனமானது அல்ல என்று டாக்டர் அலெக்சிஸ் காரெல் (Dr. Alexis Carrel) 'புரிந்துகொள்ள முடியாத மனிதன்' (MAN THE UNKNOWN) என்ற நூலில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

போர்க்களத்திலே வீரம் விளைத்த வரலாறுகளைச் சொல்லும்போது வெற்றி பெற்ற வீரர்களை மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் வேலுநாச்சியார், இராணி மங்கம்மாள், ஜான்சி ராணி, ஜோன் ஆப் ஆர்க் முதலிய வீராங்கனைகள்-வளையளணிந்த கரங்களில் வாளேந்தவும் முடியும், சோறு படைக்கும் கரங்களால் வீறு படைத்த வரலாறுகளை உருவாக்கவும் முடியும் என்பதற்கான சின்னங்கள் என்பதை ஏனோ நாம் நினைவுபடுத்திக் கொள்வதில்லை. அரசியலுக்குக் கூட மகளிரின் அறிவாற்றல் இன்று நேற்றல்ல, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எவ்வளவு நேர்த்தியாகப் பயன்பட்டது என்பதற்குத் தொண்டைமானிடம் தூதுபோய், போர் செய்ய நினைத்த வேந்தர்களின் பூசல்போக்கி, தன் வாதத்திறமையால் அறிவுறுத்திய அவ்வையாரை எண்ணிப் பார்க்கையில், உலக அரங்கில் அரசுகளின் தூதுவர்களாக அன்றே மகளிர் வெற்றியோடு விளங்கினார்கள் என்பது நமக்கு அளவில்லாப் பெருமையை அளிக்கிறது. இவ்வாறு எல்லாப் பணிகளையும், எல்லா நிலைகளிலும் எல்லா வகைகளிலும் எப்போதும் ஆற்றலோடு மகளிரால் ஆற்ற முடியும் என்பதை ஜப்பான், ருஷ்ய, ஜர்மானிய நாட்டு மகளிர், உலகுக்கு எடுத்துக் காட்டி வருகின்றனர். அத்தகைய வளர்ச்சி அன்னைத் தமிழகத்துப் பெண்களுக்கும் அமைய வேண்டும் என்பது எங்களைப் போன்ற சீர்திருத்த இயக்கத்தினரின் பெரு வேட்கையாகும்.

அண்மையில் ஆப்பிரிக்க நாட்டுச் செய்தித் துணுக்கு ஒன்றைப் படித்தேன்; அந்த நாட்டு ஆசிரியர் ஒருவர் ஆசிரியப் பதவியிலிருந்து விலகினார். அவர் விலகியதற்காகக் காட்டிய வேதனைக்குரிய காரணம் நம்முடைய சிந்தனைக்குரிய ஒன்றாகும். அவர் சொன்னார்: ''நான் வேதனையோடுதான் விலகுகிறேன். ஏனென்றால், நான் தலைமை ஆசிரியருக்குக் கட்டுப்படுகிறேன். தலைமை ஆசிரியரோ மேலதிகாரிகளுக்குக் கட்டுப்படுகிறார். மேலதிகாரியோ அமைச்சருக்குக் கட்டுப்படுகிறார். அமைச்சரோ முதலமைச்சருக்குக் கட்டுப்படுகிறார். முதலமைச்சரோ பொது மக்களுக்குக் கட்டுப்படுகிறார். ஆனால், பொதுமக்களின் செல்வங்களான மாணவமணிகளோ யாருக்கும் கட்டுப்படுவதில்லை—கட்டுப்படுவார்கள் என்ற நம்பிக்கையும் தெரியவில்லை'' என்று அவலத்தோடு விலகல் கடிதத்தை முடித்திருந்தார். எனவே, மாணவர்களிடையே அமைதியின்மை என்பது நம்நாட்டிலே மட்டுமல்ல, நானிலமெங்கும் பரவலாகக் காணப்படுகிற ஒரு புதிராகத்தான் உள்ளது.

மாணவ மனங்கள் இளமையும், எழுச்சியும், உற்சாகமும், அறிவார்வமும், உணர்வுத் துள்ளலும், துடிப்பும் கொண்டவைகள்தாம். அரசியல் சூழல், சமுதாயச் சீர்கேடுகள், வேலையின்மை, சூழ்நிலைக்குப் பொருந்தாத அமைப்புக்கள்—போன்ற காரணங்களும் மாணவர்களின் அமைதியின்மைக்கு அடிப்படைக் காரணங்களாகின்றன. அவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட கல்வியின் போக்குகள் கூட அவர்களை நாட்டு மக்களோடும், சமுதாய நல்வாழ்வோடும் பிணைக்கின்ற வகையில் இல்லாமல், அவர்களை அவற்றிலிருந்து பிரிக்கின்ற வகையில் அமைந்து விடுகிறதோ என்றுகூட நாம் அய்யப்பட வேண்டியுள்ளது. இவ்வளவுக்கும் மேலாக பெரும்பாலான பெற்றோர்களின் அக்கறையற்ற தன்மையும், அலட்சியப் போக்கும் இந்த அமைதியற்ற தன்மைக்கு அடிப்படையாக அமைந்துள்ளன என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். கல்லூரிக்கு அனுப்பும் வரையில்தான் நமது கடமை; பிறகு அவனைப் பொறுப்புள்ளவனாக மாற்றுவது கல்வி நிலையத்தின் கடமை என்று பிறர் மீது பொறுப்பைச் சுமத்தி விட்டுத் தட்டிக் கழிக்கும் மனப்போக்கினைக் கொண்டிருக்கிறோம் என்று தந்தை என்ற வகையில் என்னையும் சேர்த்தே குறிப்பிடுகிறேன். பள்ளிக் கூடத்தை இரண்டு நாளாய் மூடி விட்டார்கள். இந்தப் பிள்ளைகளை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே என்று வீட்டில் அன்னைமார்கள் இன்றும் பேசுவது பொறுப்பை பிறர் மீது சுமத்தும் பெற்றோர்களின் போக்கின் ஆரம்பநிலையாகும். பெற்றோர், மாணவர், கல்வியாளர் என்று முக்கூட்டு அணியாகத்தான் கல்வியின் போக்கை நாம் வகுக்க வேண்டும். இதுபற்றி அறிவுலகம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. ஆனால் எந்த நிலையிலும், மகளிர் கல்லூரிகள் எந்தச் சலனமும் அசைவும் இல்லாமல், அமைதியான நீரோடையாகவும் அசைகின்ற தென்றலாகவும் நடந்து வருவது மெத்தப் பாராட்டுக்குரியது. இதுதான் நமது நாட்டுப் பெண்மையின் இயற்கைப் பண்பும்கூட.

'இவ்வுலகில் காணப்படும் பலவித ஆனந்தங்களில் மிகவும் உன்னதமானது குடும்ப மகிழ்ச்சியே''.

—ராஜாஜி

இன்றைய, இருபதாம் நூற்றாண்டு, அறிவியல் நூற்றாண்டு என்று அகிலத்தால் போற்றப்படுகிறது. எல்லாத்துறைகளிலும் எல்லா நெறிகளிலும், எல்லா நோக்குகளிலும் அறிவியலின் ஆற்றல் உணரப்பட்டு, சமுதாய வளர்ச்சிப் பாதையிலே, ஒவ்வொரு துறையிலும் அறிவியல் நுணுக்கம் ஊடுருவிப் பாய்ந்து நிற்கின்றது. 1850-ஆம் ஆண்டு வரையிலும் மனிதன் தன் வாழ்வுக்காகச் செலவழித்த ஆற்றல் (சக்தி) எவ்வளவு இருக்கும் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த அளவையை 9Q என்று குறிப்பிடுகின்றனர். 33 ஆயிரம் மில்லியன் டன் நிலக்கரியை எரித்தால் கிடைக்கக்கூடிய சக்தியை ஒரு 'Q' என்பர். இப்படி'9Q சக்திதான் மனிதனால் 1850-ஆம் ஆண்டு வரை செலவழிக்கப்பட்டுள்ளது. 1850-ஆம் ஆண்டு முதல் 1950-ஆம் ஆண்டு வரை உள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்தில் மட்டும் செலவாகியுள்ள சக்தியோ 5Q வாகும். 18 நூற்றாண்டுகளில் செலவழித்ததில் பாதிக்கு மேல் இந்த ஒரு நூற்றாண்டிலேயே, செலவழிக்க மனிதன் கற்றுக் கொண்டுள்ளான் என்கின்றனர். இதிலும் 1950-க்குப் பிந்திய 28 வருடங்கள் கணக்கில் இன்னும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த 150 ஆண்டுகளில் உலகில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சி, அய்யாயிர ஆண்டுக் காலப் பண்பாட்டையே அசைப்பதாக வளர்ந்து விரிந்து வருகிறது என்று பேரறிஞர் பெர்ட்ரண்டுரசல் குறிப்பிட்டுள்ளார். இப்படி அறிவியல் சிந்தனைகள் நொடிக்கு நொடி வளர்ந்துகொண்டிருக்கும் இந்த விஞ்ஞான யுகத்தில், நமது சமுதாயம், குறிப்பாகத் தமிழ்ச்சமுதாயம்—அதிலும் குறிப்பாகப் பேரறிஞர் அண்ணா சுட்டிக் காட்டியதுபோல், ஏழை எளிய மக்கள் நிரம்பிய இந்தச் சமுதாயம், எப்படிப்பட்ட மூட நம்பிக்கைகளில் பிற்போக்குச் சிந்தனைகளில் உழன்று கொண்டு பின்தங்கியுள்ளது என்பதைக் கல்வி ஒளிதான் நமக்குக் கண்ணாடிபோல் காட்டி நம்மைத் திருத்த வேண்டும். மனித ஆற்றல் என்பது சூழ்நிலைக்கோ, சுற்றுப் புறத்துக்கோ அடிமையாகி அமிழ்ந்துவிடுவதல்ல. விலங்குகள் சூழ்நிலைக்கு இரையாகலாம்: சூழ்நிலைக்கு ஏற்பப் பறவைகள் மாறலாம். ஆனால், மனிதனோ சூழ்நிலையைத் தனக்கு அடிமை கொள்வான்—தனக்கு ஏற்றவாறு சூழ்நிலையை மாற்றுவான். அப்படி மாற்றிக்கொண்ட வரலாறுதான் அறிவியலின் வரலாறு. அந்த அறிவியல் விரைவுக்கு ஏற்ப மகளிர் இனம் தம்மை மாற்றிக்கொண்டு நல்ல வளர்ச்சி பெறவேண்டும்.

தாய் தந்த கல்வி

நான் பல நூல்கள் படித்திருந்த போதிலும், நம்முடைய சமுதாயத்தைப் பற்றிய நூல்களைப் படிக்கவில்லை. என்னுடைய சமயத்தைப் பற்றி என்னுடைய தாயாரிடம் இருந்துதான் கற்றுக்கொண்டேன் அதை நூல்களில் இருந்தும் கற்றுக்கொள்ளவில்லை; குருவினிடமிருந்தும் கற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் நானாகப் பின்னால் கற்றுக் கொண்டவைகளுக்கும், என் தாயாரிடமிருந்து கற்றுக் கொண்டதற்கும் எவ்வித முரண்பாடும் காணப்படவில்லை.

—மூதறிஞர் இராஜாஜி



இரு பெண்ணின் கல்விக்கு நாம் செலவிடும் பணம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதாகும். நமது நாட்டுத் தாய்மார்களின் கல்வியறிவைப் பொறுத்துத்தான் இருக்கிறது நமது எதிர்காலம்.

—மூதறிஞர் ராஜாஜி

வேலையின்மைச் சிக்கல் பெரிதாக வளர்ந்துள்ள இன்றைய நிலையிலும், மகளிரிடத்தில் மட்டுமே சிறப்பாக மிளிரும் தாய்மை, இல்லறம் காக்கும் திறமை, மனைகளை அலங்கரிக்கும் மாண்பு, இயல்பான பொறுமை, மனத் தெளிவு, நிதானம், நளினம், புலமை, பொறுப்பு, திறனாய்வு முதலிய பண்புகள் எல்லாவற்றையும் பரிமளிக்கச் செய்யும் பல்துறை வாய்ப்புக்களை, சமுதாய வாழ்வுக்குப் பயன்படும் வகையில் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும், கல்வி உலகத்தால் சிந்திக்கப்பட்டு ஆவன செய்யப்பட்டு வருகின்றன. மருத்துவர், செவிலியர், ஆசிரியர், தட்டெழுத்தர், பொறியியல் கட்டிடக் கலைஞர், நுண்கலை ஆய்வாளர், செய்தி திருபர், செய்திப்பட அமைப்பாளர், ஓவியக்கலைஞர், வங்கியில் கணக்காளர், நிறுவனச் செயலர், நேர்முக அலுவலர், சுற்றுலா வழிகாட்டி, தொல்பொருள் ஆய்வோர், சிற்பக்கலை, தத்துவ நுண்பொருள் விளக்குநர், நூலகர், வரவேற்பாளர், மின்துறை இணைப்பாளர், தொலைபேசித் துறையினர் போன்ற பல துறைகளில் மகளிர்க்கான வாய்ப்புக்கள் மிகுதியாக்கப்பட்டு வருகின்றன. பெண்களுக்கான உயர்நிலைக் கல்வி, நாட்டுக்கு நன்மை தருவதாகவும், நாட்டின் நன்மைக்கு அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பினைத் தக்க வகையில் அவர்களுக்கு வளர்ப்பதாகவும், அவர்களுக்கு வருவாய்க்கு ஏற்ற வழிவகுப்பதாகவும், சமுதாயத்தில் அவர்களுக்குள்ள மதிப்பினை மேலும் உயர்த்தவல்லதாகவும் மிளிர, பலவகைகளில் சிந்திக்கப்பட்டு வருகின்றன.

கல்லூரிக் கல்வி முடித்து வாழ்வுப் பயணம் தொடங்கும் உங்கள் உள்ளம், நம் சமுதாய உயர்வுக்கு எல்லா நிலைகளிலும் எண்ணற்ற நன்மைகளைச் சாதிக்க—எழுச்சி பெற வேண்டும் என்ற விருப்பத்தில்தான் என் கருத்துக்களில் அங்குமிங்குமாகச் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டினேன். உங்கள் கல்வி வாழ்வு பொலிவடையவும், உங்கள் உணர்வுகள் வலுவடையவும், உங்கள் கனவுகள் நனவாகவும், உங்கள் எண்ணங்கள் மலரவும், உங்கள் வாழ்வு உயர்ந்தோங்கித் தழைக்கவும், சீரிய முயற்சிகள் சிறந்து செழிக்கவும் என் உளமார்ந்த வாழ்த்துக்களை உங்களுக்கு உரிமையாக்கி, சமுதாயப் பணிக்கு வழங்குவதால் நாம் வறியவர்களாகி விடமாட்டோம்-வலிமை கூடியவர்களாகத்தான் நாம் மாறுவோம் என்று கவியரசி மேடலின் பிரிட்ஜெஸ் கூறிய கவிதை வரிகளை நினைவூட்டி

Life is the mirror of king and slave
And it is just what we are and do
Then give to the world the best you have
And the best will come back to you.

உங்களை வாழ்க வளர்க என்று அன்போடு வாழ்த்தி மகிழ்கிறேன். 'பெண்கள் பேதையர்கள் அல்ல மேதைகள்!' 'தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளும் கை'. சமுதாயத்தில் சமய-மத-இனங்களின் பேரால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற கண்மூடிப் பழக்கத்தைப் பெண்கள் தங்கள் கல்வி அறிவால் திருத்த வாய்ப்புண்டு. திருத்தியாகவும் வேண்டும். சமுதாயத்தின் உயர்வு மகளிரின் கரங்களில்தான் தங்கியுள்ளது. மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற காடுமணக்க வரும் கற்பூரப் பெட்டகமாகவும், நீடுதுயில் நீக்கப் பாடிவரும் நிலாவாகவும், வேண்டாத சாதி இருட்டு வெளுக்க வந்த தூண்டாத மணிவிளக்காகவும், அறம் பாடவந்த அறிவையர்களாகவும், மறம் பாட வந்த மாதரசிகளாகவும், மண்டும் மதங்கள் அண்டாத நெருப்பாகவும், அயலார் எதிர்ப்புக்கு அணையாத விளக்காகவும் கலைச் செல்வியரான நீங்கள் புகழோடு திகழ வேண்டும், ஒளிர வேண்டும், மேன்மை பெற்று மிகச் சிறப்பாக மிளிர வேண்டும், புதிய உலகுகாணப் புறப்படும் வீராங்கனைகளாக நீங்கள் விளங்க வேண்டும். வெற்றி உங்களுடையதுதான் என்று மனதார வாழ்த்திப் பாராட்டுகிறேன். வணக்கம்.

[சென்னை காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரியில் 24-11-78 அன்று ஆற்றிய பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு]

8-10-72 அன்று சென்னை கிண்டி ராஜபவனத்தில் நடைபெற்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழா—இதுதான் ராஜாஜி கலந்து கொண்ட இறுதிப் பொது நிகழ்ச்சி.

1930-ல் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது ராஜாஜி தமது குழுவினருடன்.

புதுப்பாளையத்தில் (சேலம் மாவட்டம்) ராஜாஜி தோற்றுவித்த காந்தி ஆசிரமத்தின் வெளித்தோற்றம்.

தாழ்த்தப்பட்ட சமுதாயம் தழைத்தோங்கிட..

தீண்டத்தகாதவர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட ஒரு பகுதி மக்களின் துயர் துடைக்க, நலம் பெருக்க அரிசன மற்றும் ஆதிவாசிகள் நலத்துறை பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.

இம்மக்கள் சிறப்புற்றுத் திகழ சமுதாயத்தில் மதிப்புடன் வாழ, முன்னேற்றம் பெற, கல்வி, பொருளாதாரம், வீட்டு வசதி போன்றவைகளைப் பெற சீரிய முறையில் அரிய பல திட்டங்களை அரிசன, ஆதிவாசிகள் நலத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களைச் செயல்படுத்த நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 16.95 கோடியாகும்.

கல்வி :

எல்லா அரிசன பழங்குடி மற்றும் மதம் மாறிய கிறிஸ்தவ அரிசனக் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காக, அவர்களின் பெற்றோர் வருமானத்தைப் பாராது நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை இலவசமாகப் புத்தகங்கள் இத்துறையால் வழங்கப்படுகிறது. மேற்படி மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தை இத்துறையே நேரடியாகச் செலுத்திவிடுகிறது. தேர்வுக் கட்டணங்களையும் இத்துறையே தேர்வுகள் இயக்குநருக்கு நேரிடையாகச் செலுத்திவிடுகிறது.

1977-78 ஆம் ஆண்டு முதல், மெட்ரிக் படிப்புக்கு மேல், கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்கள் படிப்புக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை என்ற அரசின் உத்தரவு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டம் தோறும் புகுமுக வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் சாந்தி நினைவு உபகாரச் சம்பளம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

கல்விக் கூடங்கள் :

தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்க அரிசன நலத்துறையின் கீழ் 741 தொடக்கப் பள்ளிகளும், 80 நடுத்தரப் பள்ளிகளும் 18 உயர்நிலைப் பள்ளிகளும், 3 மேல் நிலைப் பள்ளிகளும், 100 ஓர் ஆசிரியர் பள்ளிகளும் ஆக 942 பள்ளிகள் செயல்படுகின்றன. 5 உயர் நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூட வசதிகள் இவ்வாண்டில் செய்து தரப்பட்டுள்ளன. மாணவ, மாணவியருக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத் திட்டத்தில் ''கேர்'' நிறுவனம் தொடர்ந்து பெரும்பங்கேற்று வருகிறது.

விடுதிகள் :

கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் தங்குவதற்கு விடுதிகள் அரிசன நலத்துறையின் பராமரிப்பில் இயங்கி வருகின்றன. இவ்வாண்டில் மேலும் 14 புதிய மாணவ, மாணவியர் இல்லங்களும் ஒரு கல்லூரி மாணவியர் விடுதி ஒன்றும் திறக்க செயல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஊட்டம் பெற இவ் விடுதிகளில் வாரத்திற்கு ஒருமுறை புலால் உணவு கொடுக்கப்படுகிறது. அரிசன நலப் பள்ளிகளில் பயிலும், மாணவ மாணவியருக்கும் விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கும் சீருடைகள் வழக்கம்போல் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்

திரு பெ. செளந்தர பாண்டியன்

முன்தேர்வுப் பயிற்சி நிலையம் :

இந்திய அரசுப்பணி, இந்தியக் காவல்பணி போன்ற வேலைகளைத் தாழ்த்தப்பட்டோர் பெற, பயிற்சி அளிக்க முன் தேர்வு, பயிற்சி நிலையம் இத்துறையின் கீழ் செயல்படுகிறது. தமிழ்நாடு அரசுப்பணிகளுக்குச் செல்ல இளநிலை எழுத்தர், தட்டெழுத்தர் போன்றவைகளுக்கான பயிற்சி அளிக்கும் சிறப்பு நிலையங்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் மேற்பார்வையில் இயங்கி வந்தன. கடந்த இரண்டு ஆண்டுகளாக இத் தேர்வுகள் நடத்தப்படாத காரணத்தால் சிறப்பு நிலையங்கள் நடைபெறவில்லை. மேலும் ஆண்டுதோறும் 900 தட்டச்சர் மற்றும் 450 சுருக்கெழுத்தர்களை உருவாக்க தனியாக சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பொருளாதாரம் :

பொருளாதார முன்னேற்றத்திற்கெனக் கறவை மாடுகள் வாங்க இத்துறை இவ்வாண்டு மானியமாக வழங்க ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இது தவிர, தொழில்களுக்கு வட்டி இல்லாக் கடன் வழங்குவதை—தேவைக்கேற்பக் கடன் தொகையை அதிகரிக்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இதற்கென இவ்வாண்டு ரூ. 11.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் தையல், செருப்புத் தைத்தல், முடி திருத்துதல், தச்சு மற்றும் சலவைத் தொழில் போன்ற 21 தொழில்களில் பயிற்சி பெற்றோருக்கு இலவசமாகத் தொழில் கருவிகள் வழங்கப்படுகின்றன. 317 பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குடிசைத் தொழில்களும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றன.

வீட்டு வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்துவதில் விரைவு நடவடிக்கை, மேற்கொள்ள சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. வீடுகள் கட்டிக்கொடுக்கும் பணி தமிழ்நாடு அரிசன வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இதற்கென இவ்வாண்டு 2.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரிசனக் குழந்தைகளிடம் நல்ல சுகாதாரப் பழக்கங்களைக் கொண்டுவர சமுதாய நல மன்றங்கள், கன்னியாகுமரி மாவட்ட வண்ணான் சமூகத்தினருக்கு வண்ணான் துறைகள் கட்டியும், கலப்புத் திருமணம் புரிந்தோருக்குத் தங்கப்பதக்கம் ரூ. 200 ரொக்கம் மற்றும் 3 செண்ட் வீட்டுமனை அளித்தும், வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் தங்களின் குழந்தைகளைப் பாதுகாப்பாக விட்டுச் செல்ல பரவலாக 50 காப்பகங்கங்கள் வீதம் 1977-78 மற்றும் 1978-79 ஆண்டுகளில் அமைத்தும், சென்னை மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் நல்ல முறையில் பராமரிக்கப்படும் அரிசனக் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டி வழங்கியும், சென்னை மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடும் கிராமங்களுக்கு முறையே ரூ. 1,000, ரூ. 500 வீதம் இரு பரிசுகள் அளித்தும், ஏழை அரிசனங்கள் இறந்துவிட்டால் அவரது ஈமக் கடன்களைக் கவனிக்க ரூ. 50 வழங்கவும் அரசு உத்தரவு இட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த விதிமுறைகள் வகுக்கப்பட்டு ரூ. 4.33 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் தற்போது செயல்பட்டு வருகிறது. அரிசன, ஆதிவாசி மற்றும் மதம் மாறிய கிறிஸ்தவ அரிசனங்களின் நலன்களைச் சீரியமுறையில் அரிசன நலத்துறை கவனித்து வருகிறது. இத்தருணத்தில் கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு மான்யத் தொகையை அதிகரிப்பது பற்றிய செயல்குறிப்பு நடவடிக்கையில் உள்ளது.

இவ்வாறு பல திட்டங்கள் அரிசன, ஆதிவாசிகள் நலத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சமுதாயம் வளம்பெற

தமிழ்நாட்டில் சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்களுக்கும், 2.5 முதல் 5 வரையுள்ள வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் உடல் ஊனமுற்ற குழந்தைகள், ஆண், பெண் ஆகியோருக்கும் பல்வேறு திட்டங்கள் தீட்டி சமூகநலத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கணவனைஇழந்த பெண்களின் நல்வாழ்விற்கான திட்டம் தனியாக இயங்க வேண்டுமெனக் கருதப்பட்டதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, சென்னை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் 'வழிகாட்டி நிலையங்கள்' அமைக்க அனுமதியளித்துள்ளது.

இந்தப் பெண்களின் குழந்தைகளைச் சமூக நல நிலையங்களால் நடத்தப்படும் விடுதிகளில் சேர்த்து இலவச உணவு, இலவசக் கல்வி, பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படுகின்றன.

கணவனை இழந்த பெண்கள் சேவை இல்லங்கள் மூலமும், தனியார் சமூக நல நிலையங்கள் மூலமும் கல்வி, சிறு கைத்தொழில்கள் பயிற்றுவித்தல், இலவச தையல் இயந்திரங்கள் வழங்குதல், அவர்களது கணவர் பணியிலிருந்தபோது இறந்திருந்தால் அன்னாரது குடும்பத்திற்குச் சேரவேண்டிய ஓய்வூதியம், சேமநலநிதி, பணிக்கொடை முதலியன பெற்றுத்தர ஏற்பாடுகள் செய்தல், தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மூலம் தொழில் புரிய சிறு கடன் உதவி பெற்றுத் தருதல் முதலியன இவ்வழிகாட்டி நிலையம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

'விதவைகளுக்கான வழிகாட்டி நிலையம்' சென்னையில் இவ்வாண்டு பிப்ரவரி முதல் செயல்பட்டு வருகின்றது. இந்நிலையத்தில் சமூக நல இயக்குநரின் கீழ் ஒரு சிறப்பு அலுவலர் பணியாற்றி வருகிறார்.

குடிசை வாழ் மக்கள் மேம்பாடடைய...!

"மக்கள் நலனுக்காகப் பல திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஏற்றபடி அதிக வசதிகளைச் செய்து கொடுக்கத் திட்டம் தீட்டி வருகிறோம்'' என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், சென்னை மாநகராட்சி நேரு விளையாட்டரங்கத்தில் 24-10-78-ல் நடந்த குடிசை வாழ் மக்கள் மேம்பாட்டுப் பணி விழாவினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

அவ்வமயம் ஆதி ஆந்திர மக்கள் 869 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்களையும் உடல் ஊனமுற்ற 56 பேருக்கு வங்கி உதவித் தொகைகளையும், தாயகம் திரும்பியோர் தொழில்களை மேற்கொள்ள வங்கிக் கடனுதவிகளையும், தச்சு வேலைக் கருவிகள், முடிதிருத்தும் கருவிகள், 49 சலவைப் பெட்டிகள் ஆகியவையும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன.

ஏழை, எளிய மகளிர் உட்பட ஆண்கள் 11 பேர்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்தியன் வங்கி வழங்கிய 28 ஆயிரத்து 300 ரூபாய் கடன் உதவித் தொகையும், சிண்டிகேட் வங்கி வழங்கிய 12 ஆயிரம் ரூபாய் கடன் உதவித் தொகையும், பாரத் ஸ்டேட் வங்கி வழங்கிய நிதி உதவியும் ஏழை எளியவர்களுக்கு வழங்கப்பட்டன.

காது கேளாத சிறுவர், சிறுமியர் 22 பேருக்கு இலவசமாகக் காது கேட்கும் கருவிகளையும் முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இவை தவிர, 12 புதிய பேருந்து வழித் தடங்களும் துவக்கி வைக்கப்பட்டன.

விழாவுக்குத் தலைமை வகித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சென்னையில் 500 புதிய வீடுகள் கட்ட ஏற்பாடுகள் நடக்கின்றன. முன்பு வீடுகள் கட்ட முடியாத சூழ்நிலை இருந்தது. இன்று அந்த நிலை மாறியிருக்கிறது. இதனால் தொழில் உற்பத்தி அதிகமாகியுள்ளது. விற்பனை வரி மூலமாக நல்ல வருவாய் கிடைக்கிறது.''

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் பேசுகையில், ''ஏழைத் தாய்மார்கள், வீட்டில் இருந்தபடியே பொருளீட்ட சமூகநலத்துறை 25 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்டியுள்ளது'' என்றார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் பேசுகையில், ''இன்று பல்வேறு வழித்தடங்களில் புதிய பேருந்துகள் விடப்படுகின்றன. பகுதிகளுக்கும், புறகண்டிராத பகுதிகளுக்கும் இந்த நகர்ப் பிரிவு 10 புதிய மெட்ரோ விடுகிறது. இத பேருந்துகளை பகுதிகளிலுள்ள 50 னால் 41 ஆயிரம் மக்கள் பலன் அடைகிறார்கள்'' என்றார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் பேசுகையில், ''சாலை வளர்ச்சிக்கு 4.23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறைக்கு 6.55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படிச் சென்னைப் பெருநகர வளர்ச்சிக்கு மட்டுமே உலக வங்கியின் உதவி பெற்று, 45 கோடியே 18 இலட்சம் செலவு செய்து சென்னை மாநகர் ஓர் அதிசய பூமியாகமாற விருக்கிறது'' என்றார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் பேசுகையில், ''தமிழகத்தில் கடந்த 15 மாதங்களாக நடக்கும் நல்லாட்சியை இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமே பாராட்டிக் கொண்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. ராமபத்திரன் அவர்கள் பேசுகையில், ''சுமார் 1202 குடிசைப் பகுதிகளில் 250 குடிசைகளை எடுத்து, அவற்றில் 250 குடும்பங்கள் குடியிருக் மாடி வீடுகளாகக் கட்டித் த ஏற்பாடு நடைபெற்று வருகிறது. மேலும், பத்தரைக் கோ ரூபாய் செலவில் புதிய திட்டமு தீட்டப்பட்டு வருகிறது'' எ றார்.

விழாத் துவக்கத்தில் சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவல திரு செ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் அனைவரையும் வ வேற்றுப் பேசினார். சென்னை மாவட்ட ஆட்சியாளர் திரு எம் வேங்கடாசலம் அவர்கள் நன் தவில, விழா இனிதே முடிந்தது.

சென்னை நுங்கம்பாக்கம், கல்லூரிச்சாலையில் அமைந்துள்ள 'பூம்புகார்' என்னும் தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி இணையத்திற்குள் நுழைகிறோம்.

சிற்றுளி கொண்டு சிலை செதுக்கும் சிற்பியின் கைவண்ணம் பார்க்கிறோம்.

வண்ணத்தைக் குழைத்துத் தம் எண்ணத்தை வடிவமைக்கும் ஓவியனின் கைத்திறம் கண்டு வியக்கிறோம்.

கல்லால், மண்ணால், காகிதத்தால், உலோகத்தால் உருவம் சமைத்து உயிர் பெற்ற பொம்மையோ என நம் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் கண்கவர் கலைப்பொருள்களைக் காண்கிறோம்.

தமிழ்நாட்டுக் கைத்திறம் நன்கு வெளிப்படும் வண்ணம், பல்வேறு கலைப் பொருள்களை உருவாக்கி உலகெங்கும் பாராட்டுப் பெற்றுள்ள ஓர் ஒப்பற்ற நிறுவனம்தான், தமிழ்நாடு அரசின் பூம்புகார் இணையகம். இது 1973-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் துவங்கியது.

சென்னையிலுள்ள இந்த பூம்புகார்தான், மத்திய வடிவமைப்பு நிலையமாகச் (Desig. Centre) செயல்பட்டு வருகின்து. இங்குப் புதிய புதிய மாதிரி வடிவமைப்புகள் செய்யப்படுகின்றன. பிறகு அவை பெருமளவில் தயார் செய்வதற்கென, வெளியே இருக்கும் உற்பத்திக் கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

சென்னையிலுள்ள இந்த வடிவமைப்பு நிலையத்திலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தக் கலைப் பணியில் இங்குச் சுமார் 100 பேர் ஈடுபட்டிருக்கின்றனர்.

கைத்தொழில் பொருட்களின் விற்பனையை முறைப்படுத்தி, கைத்தொழிற் கலைஞர்கள் படைப்புக்கேற்ற தகுந்த ஊதியத்தைப் பெறச் செய்யும் நோக்கோடு துவக்கப்பட்டுள்ள கலைக்கூடம்தான் பூம்புகார். அது இன்று பதினேழு விற்பனை நிலையங்களையும், பதினெட்டு உற்பத்திக் கூடங்களையும் கொண்டு செவ்வனே இயங்கி வருகின்றது.

விற்பனை நிலையங்கள் தமிழ்நாட்டில் சென்னை, மாமல்லபுரம், மதுரை, திருநெல்வேலி, கோவை, சேலம், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, கடலூர், நெய்வேலி, வேலூர் ஆகிய இடங்களிலும், புதுடெல்லி, பம்பாய், பெங்களூர் போன்ற இடங்களிலும் உள்ளன.

'பூம்புகார்' தயாரிக்கும் பொருள்கள் என்னென்ன?

உலோகத்தாலான அழகிய மரத்தாலான கண்கவர், சிற்பங்கள், தேர்கள், கற்சிலைகள், புகழ்மிக்க தஞ்சாவூர்க் கலைத் தட்டுகள், பனை, பிரம்பு, மூங்கிலால் ஆன பொருட்கள், சடம்பு நார்ப் பொருட்கள், அரக்கால் ஆன கடைசல் பொருட்கள், காகித மாவுப் பொருட்கள் போன்றவை நேர்த்தியான முறையில் இங்குள்ள உற்பத்திக் கூடங்களில் உருவாகிய வண்ணம் உள்ளன.



காலத்துக்கேற்ற வகையிலும் மக்களின் ரசனைக்கேற்றவாறும் கலைப்பொருட்களும் (Handi-Crafts) அன்றாட உபயோகத்திற்கான அழகிய பொருட்களும் (Utility Articles) பூம்புகாரில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நவநாகரிக உலகிற்கேற்ப தம்மை அலங்கரித்துக் கொள்வதோடு, தாம் வாழும் வீட்டையும் அலங்கரித்துக் கொள்ள பலர் ஆசைப்படுவதுண்டு. அந்த ஆவலை—ஆசையை நிறைவேற்ற பூம்புகார் மகிழ்ச்சியுடன் முன் வருகிறது. அதாவது, இல்லத்தின் உட்புறம் எழிலோடு விளங்கிட இது உதவுகிறது.

இந்தியாவிலேயே கைவினைப் பொருட்களுக்கான அமைப்புகளில் மிகப் பெரியது என்று பெரும் புகழும் பெற்று விளங்குவது பூம்புகார்.

இங்கே உருவாக்கப்படும் பொருட்கள் தரமானவை; நியாய விலையில் கிடைப்பவை.

வணக்கத்துக்குரிய கடவுளர் உருவங்களும், பூசைப் பொருட்களும் விளக்குகளும், மிகச் சாதாரணமாகச் செய்து விடுவதில்லை; அவை சாத்திர விதிகளின்படி உருவாக்கப்படுகின்றன. உலோகத் தகட்டில் செய்யப்பட்ட சிலுவை, மக்கா, மதினா போன்றவை ஏழை எளியவர்களும் வாங்குமாறு காகிதக் கூழிலும் தயாரிக்கப்படுகின்றன.

ஒரு பெரிய மேசையின்மீது உள்ள துணியில் இருவர் வண்ணங்களைக் கொண்டு சித்திரம் எழுதுவதைப் பார்க்கிறோம். மிக நுண்ணிய வேலைப்பாட்டுடன் கூடிய அந்த அழகிய சித்திர வேலைக்கு மிகவும் பொறுமை வேண்டும் என உணர்கிறோம்.

Poompuhar

பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்றுதும்!

இயற்கை வண்ணங்களால் எழிலுறப் புனையப் பெறும் அதற்குக் 'கலம்காரி சித்திரம்' என்று பெயராம். இந்தச் சித்திரமுறையில், நவீனச் சித்திர முறையும் பூம்புகார் சித்திரக் கூடங்களில் பரிசோதிக்கப்படுகிறது. இவ்வாறு பழமையும் புதுமையும் இணைந்தவையாகவும், நாகரிக வளர்ச்சிக்கு ஏற்றவையாகவும் கைவினைப் பொருட்கள் இங்கே நாளும் தயாராகின்றன.



திருமணம், பிறந்தநாள், பாராட்டு விழா போன்ற விசேட நாட்களில் அன்புடன் வழங்குவதற்கேற்ப அழகிய பரிசுப் பொருள்களும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. அவை, சாதாரண மக்கள் வாங்குவதற்கேற்பக் கலையழகுடன் உருவாக்கப்படுகின்றன.

பூம்புகார் மூலம் உற்பத்தியாகும் கலைப்பொருட்கள் ரூ. 2 முதல் ரூ. 10 ஆயிரம் வரை உள்ளன. மரத்தாலான சிற்ப வேலைப்பாடமைந்த அழகிய சூட்டித் தேர் 6 அடி உயரமும் 6 அகலமும் உள்ளது. இதன் விலை தான் ரூ. 10,000.



வெளியில் விற்கும் கலைப் பொருள்கள் பற்றி பூம்புகார் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி திரு ஆர். கிருஷ்ணசாமி அவர்கள் கூறுவதாவது:

''பாம்புத் தோலில் செய்யப்பட்ட மணிபர்ஸ், பைகள், பெல்ட் முதலானவற்றை நாம் பார்க்கிறோம். இவையெல்லாம் செயற்கைப் பாம்புத் தோல்கள், மரத்தால் செய்யப்படும் கலைப் பொருள்கள்கூட உண்மையானவை அல்ல. 'ரோஸ் வுட்' என்று சாயம்பூசி விற்பதும், தேக்கு என்று வேறு ஏதோ ஒரு மரத்தாலானவற்றைத் தருவதும் இன்று சர்வசாதாரணமாக நடைபெறும் வியாபாரத் தந்திரங்களில் ஒன்றாகும். இப்படி மரத்தில் மட்டும் அல்ல, உலோகத்திலும் கூட கலப்படம் செய்வதுண்டு.''

தரமான பூம்புகார் கலைப் பொருள்கள் மூலம் ஆண்டுக்கு ரூ. 1.5 கோடி வருமானம் கிடைக்கிறது. வரும் ஆண்டுகளில் ரூ. 2 கோடி வரை வருமானம் எதிர் பார்க்கப்படுகிறது.

கைத்தொழில் கலைஞர்கள் தங்கள் பொருட்களை நேரிடையாக விற்றுப்பயனடையும் வண்ணம், புதுக் கொள்முதல் திட்டத்தைப் பூம்புகார் செயல்படுத்துவதன் மூலம், நடுத்தரகர்களின் ஆதிக்கத்திற்கு முடிவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பூம்புகார் தயாரிக்கும் கலைப் பொருள்களுக்கு வெளிநாட்டில் நல்ல வரவேற்பு உள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஆஸ்திரேலியா, தூரக்கிழக்கு ஆசிய நாடுகள் ஆகிய இடங்களில் இப்பொருள்கள் விரும்பி வாங்கப்படுகின்றன.

மேலை நாட்டில் வாழும் இந்தியர்களுக்குப் பூசைப் பொருள்கள், கற்சிலைகள், மரச்சிற்பங்கள் முதலானவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தற்போது பாய், பிக்னிக் கேன் நாற்காலிகள் ஏற்றுமதியாகின்றன.

பல ஆண்டுகள் நிலைத்து நிற்கக் கூடிய, தரமான பொருள்களைத் தயாரித்து, தன்னிகரில்லாப் புகழுடன் தலைநிமிர்ந்து நிற்கும் தமிழக அரசின் பூம்புகார்!

ராஜாஜியின் வாழ்க்கைக் குறிப்புகள்

1878 டிசம்பர் 10ஆம் நாளில் ஒசூருக்கு அருகில் உள்ள தொரப்பள்ளி கிராமத்தில் சக்கரவர்த்தி வெங்கடார்யா - சிங்காரம்மா ஆகியோரின் 3வது புதல்வராகப் பிறந்தார்.

1889 ஒசூர் பள்ளிப் படிப்பு முடிவு.

1891-97 பெங்களூரில் உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி.

1897 பி.ஏ. பட்டதாரியானார்.

1898 தாயார் மறைவு—திருமணம்—(திருமலை சம்பங்கி அய்யங்கார் என்பரின் மகள் அலர்மேலு மங்கம்மாளை (மங்கா) மணந்தார்).

1899 வழக்குரைஞர் பட்டம்.

1900 வழக்குரைஞர் பணி துவக்கம்.

1901 சேலத்தில், நண்பர்களுடன் சேர்ந்து இலக்கிய மன்றத்தைத் துவக்கினார்.

1902 மூத்த மகன் கிருஷ்ணசாமி பிறப்பு.

1904 இரண்டாவது மகன் ராமசாமி பிறப்பு.

1906 மூத்த மகள் நாமகிரி பிறப்பு.

கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு பிரதிநிதியாகச் சென்றார்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் வழக்குரைஞராகப் பதிவு செய்தல்.

1907 சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பங்கு பெற்றார்.

1909 புதுவையில் கவிஞர் சுப்ரமணிய பாரதியாருடன் சந்திப்பு — மூன்றுவது மகன் நரசிம்மன் பிறப்பு.

1910 கர்நூலில் நடைபெற்ற சமூகச் சீர்திருத்த மாநாட்டில் பங்கு பெற்றார். காந்தியடிகளின் சொற்பொழிவைக் கேட்டார்.

1911 சேலம் நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்.

1912 இரண்டாவது மகள் லட்சுமி பிறப்பு.

1915 மனைவி மரணம்.

1917-19 சேலம் நகராட்சி மன்றத்தின் தலைவர்.

1918 ராஜாஜியைச் செயலாளராகக் கொண்ட தேசிய சங்கம் நிறுவப்பட்டது.

பம்பாயில் காங்கிரஸ் சிறப்பு மாநாடு.

1919 மார்ச் திங்களில் சென்னையில் குடியிருப்புத் தொடக்கம். காந்தியடிகள் சென்னைக்கு வருகை : ராஜாஜியின் வீட்டில் தங்கினார்.

1920 காந்தியடிகளின் விடுதலை இயக்கத்தில் சேர்ந்தார்.

1921 மூத்த சகோதரரும் தந்தையாரும் மறைவு.

டிசம்பர் 21ல், முதல் சிறைத் தண்டனை.

1922 'யங் இந்தியா', 'லீடர்', 'நோசேஞ்ச்' ஆகிய இதழ்களின் ஆசிரியர் பொறுப்பு.

பெல்காம் காங்கிரஸ் மாநாடு.

சேத் ஜம்னாலால் பஜாஜ் நிறுவிய அகில இந்திய சர்வ சேவா சங்கத்தில்உறுப்பினர் பொறுப்பு.

திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமத்தை நிறுவினார்.

1930 இந்திய மதுவிலக்குச் சங்கத்தின் செயலாளர் பொறுப்பு.

வேதாரண்யம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு 9 மாத சிறைத் தண்டனை.

1932 பூனா ஒப்பந்தம் உருவாக ஒத்துழைத்தார்.

அரிசனங்களுக்கு ஆலயப் பிரவேச இயக்கத்தில் முனைந்து நின்றார்.

1937-39 பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தின் முதல்வராக இருந்தார்.

1939 முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார்.

1942 'வெள்ளையனே வெளியேறு' என்ற காங்கிரசின் கொள்கையில் மாறுபட்டு காங்கிரஸ் இயக்கத்தை விட்டு வெளியேறினார்.

1946 மீண்டும் காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு, செயற்குழு உறுப்பினரானார்.

செப்டம்பர் திங்களில் காங்கிரஸ்-முஸ்லீம் லீக் கூட்டு அமைச்சரவை; பண்டித நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால மந்திரி சபையில் அமைச்சரானார்.

1947 ஆகஸ்ட் 15ஆம் நாளில் இந்தியா விடுதலை பெற்றது.

அரசின் ஆட்சிப் பொறுப்பில் உறுப்பினர். மேற்கு வங்கத்தின் ஆளுநர் பொறுப்பு

1948 இந்தியாவின் முதல் இந்தியக் கவர்னர்-ஜெனரல்.

1950 ஜனவரி 26ல் இந்தியா குடியரசு நிலை பெற்று, இராசேந்திர பிரசாத் குடியரசுத் தலைவர் ஆகியமையால் மீண்டும் மைய அரசில் அமைச்சர் பொறுப் பேற்றார்.

1952 மைய அரசின் அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகினார்

சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார்.

1954 பாரதரத்னா பட்டம் பெற்றார்.

மாநில முதல்வர் பொறுப்பிலிருந்து விலகினார்.

1958 80வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

1959 சுதந்தரா கட்சியை உருவாக்கினார்.

1962 அணு ஆற்றலைத் தீய செயலுக்குப் பயன்படுத்துவதை எதிர்க்கும் குழுவில் பங்கு பெற்று, அமெரிக்கா சென்று, அந்நாளைய அமெரிக்க குடியரசுத் தலைவர் கென்னடியைச் சந்தித்தார்.

1967 சென்னை மாநிலத்தில் பொதுத் தேர்தலில் பேரறிஞர் அண்ணாவுக்கு உறுதுணையாக இருந்து, காங்கிரஸ் அல்லாத அமைச்சரவை உருவாகப் பாடுபட்டார்.

1971 93வது பிறந்த நாள் விழா.

1972 டிசம்பர் 25ல் சென்னையில் மறைவு.

டிசம்பர் 26ல் அவரது உடல் அரசு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பெற்று எரியூட்டப்பெற்றது.

தாழ்த்தப்பட்டோருக்குத் தரைப்படைப் பயிற்சி

தாழ்த்தப்பட்ட-மலை வாழ் வகுப்பினைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்கள் இராணுவத்தில் அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக (கமிஷண்ட் ஆபீசர்), தமிழ்நாடு அரசு ஒரு தனிப் பயிற்சியினை ஏற்பாடு செய்துள்ளது.

மத்திய அரசின் பணியாளர் தேர்வுக் கழகத் தேர்வுக்காக இந்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தத் தேர்வு இரு கட்டங்களில் இருக்கும். ஒன்று தேர்வு எழுதுவது. அதற்குப்பின் ஒரு திங்கள் கழித்து. இராணுவத் தேர்வுக் கழகம் ஒரு நேர்முகத் தேர்வு நடத்தும். அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் இராணுவத்தில் அதிகாரி ஆவார்கள்.

இதற்காகத் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் தாழ்த்தப்பட்ட மலை வாழ் வகுப்புக்களைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்க்ள் அழைக்கப்பட்டிருந்தனர். அதில் மொத்தம் 15 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 7-9-78 முதல் அவர்களுக்கு திருச்சி நகரிலுள்ள முன்னாள் இராணுவத்தினர் நல இயக்ககத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இரு பேராசிரியர்களும், 3 உதவிப் பேராசிரியர்களும் அவர்களுக்கு ஆங்கிலம், பொது அறிவு ஆகியவற்றில் பயிற்சி அளித்து வருகின்றனர்.

இந்த 15 இளைஞர்களுக்கும் திருச்சியில் இலவச உணவு-தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அது தவிர மாதம் ரூ. 25 உதவித் தொகையாகத் தரப்படுகிறது.

இந்தப் பயிற்சி, தமிழகத்தில் முதல் முறையாக நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சி வகுப்புகளை அண்மையில் திருச்சி வந்திருந்த தென் மண்டல இராணுவத் தலைவர் மேஜர் ஜெனரல் மகாதேவன் அவர்கள் பார்வையிட்டார்.

தமிழக அரசுக்குப் பாராட்டு

"தமிழகத்தில் மதுவிலக்கு சிறப்பாக நடக்கிறது. இது மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகும்" என்று நாகாலாந்து அமைதிக் குழுத் தலைவரும், சர்வோதயத் தலைவருமான டாக்டர் அறம் அவர்கள் பாராட்டியுள்ளார்.

கோவை, தொழிலாளர் கல்வி மண்டல அலுவலகமும், காந்தி அமைதி நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்த காந்திய சிந்தனை முகாமினை டாக்டர் அறம் அவர்கள் துவக்கி வைத்துப் பேசினார்.

"நாகாலாந்தில் மதுவிலக்கினைத் தீவிரமாக அமல்படுத்துவது குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டில்மதுவிலக்கினைத் தீவிரமாக அமல்படுத்துவது, நமது நாட்டில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகும்" என்றார் அவர்.

நாடகப் பேராசிரியரின் நினைவு நாள்-விழா

தமிழ் நாடக உலகின் தலைமை நாடகப் பேராசிரியர் என்று புகழ்ப்பெற்ற தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவு நாளை தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 13-11-1978 அன்று கலைவாணர் அரங்கில் கொண்டாடியது. மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் இந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றார்.

நாடகப் பேராசிரியருக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் பெருந்திரளாக வந்திருந்த பொது மக்களை, மன்றத்தின் தலைவர் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திரு பு. ரா. கோகுல கிருஷ்ணன் வரவேற்றார். வரவேற்புரையில் அவர் குறிப்பிட்டார்.

"வாழ்க்கை முழுவதையும் தமிழுக்காக-தமிழ் நாடகத்திற்காக அர்ப்பணித்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். அதனால் அவர் திருமணம்கூடச் செய்து கொள்ளாமல் தூய துறவு வாழ்க்கை நடத்தினார்.

"தமிழ் மக்களுக்கு நாட்டுப் பற்று, டண்பு, அன்பு ஆகியவை இருக்க வேண்டும் என்பதைப் பழங்கால நடிகர்களுக்கு எடுத்துச் சொன்னார். தூய நாடகங்களைத் தமிழுக்கு முதல்-முதலில் அறிமுகம் செய்தவர் சங்கரதாஸ்.

"சங்கரதாஸ் தூண்டிவிட்ட நாடக உணர்வுதான்-அவர் உருவாக்கித் தந்த நாடகத் தமிழ் தான்-நமது நாட்டில் நாடகம் வளர்வதற்குக் காரணமாக இருந்திருக்கிறது.

"தூய தமிழை-தூய நடிப்பை வைத்து நாடகம் நடத்தியவர் சங்கரதாஸ். அவரை மறந்தவர்கள், தமிழ் நாடகத்தை மறந்தவர்கள் ஆவார்கள்.

"நிதி சால சுகமா? இல்லை! ராமனின் சந்நிதியே சுகம்' என்று தியாகய்யர் சொன்னாரே அதைப் போல, நாடகமே சுகம் என்று நம்பி வந்தார் சங்கரதாஸ்.

"நாடகம்-உள்ளத்தைப் பண்படுத்துவதாக இருக்க வேண்டும்; புண்படுத்துவதாக இருக்கக் கூடாது. நாடகங்கள் கீழ்த்தரமான உணர்வுகளை உருவாக்கக் கூடாது. உயர்ந்த எண்ணங்கள், தூய வாழ்க்கை,ஒழுக்க உணர்வு ஆகியவற்றை வளர்ப்பதற்கு நாடகங்கள் உதவ வேண்டும். அந்தப் பணியைச் செய்தார் சங்கரதாஸ்"

வரவேற்புரைக்குப் பின்னர், மாண்புமிகு கைத்தொழில் துறை அமைச்சர் திரு கே. இராசா முகமது அவர்கள் விழா வைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்!

"நாடகப் பேராசிரியர் என்றும், கற்றவர் என்றும், நல்லவர் என்றும் பாராட்டுகளைப் பெற்ற தமிழ்நாடகத்தின் பிதாமகனாகத் தோன்றி மறைந்த சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவு நாள் இங்கே கொண்டாடப்படுகிறது.

"ஒரு பெரிய தலைமுறைக்கும் இன்றைய தலைமுறைக்கும் உள்ள இடைவெளியில் உள்ளவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் நினைவு கூர்கிறேன்.

"சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் எல்லாம் நூல்வடிவில் வெளியிடப்பட வேண்டும், அதுமட்டுமல்ல அவரது நாடகங்கள் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.

"தமிழ்நாடகம் உலக இலக்கியங்களுடன் போட்டி போட்டு வாழ்வதற்குரிய தகுதி படைத்தது. புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியருக்கும் நமது சங்கரதாஸ் அவர்களுக்கும் ஒற்றுமை இருந்திருக்கிறது.

"ரோமியோ ஜூலியட் என்ற நாடகத்தில் காதலர்கள் பிரிந்து செல்லும்போது, Sweet Sorrow When we meet morrow என்று குறிப்பிடுகிறான் கதாநாயகன்.

"அதாவது பிரிவதை எண்ணும்போது வேதனையாகவும், மீண்டும் மறுநாள் சந்திக்கப் போவதை எண்ணும்போது அது இனிமையாகவும் இருக்கிறது என்பதை எடுத்துக் கூறும் வகையில் Sweet Sorrow எனக் குறிப்பிடுகிறான்.

"சங்கரதாஸ் அவர்களும் இதேபோல் ஒரு நிகழ்ச்சியை—தமது 'அபிமன்யு சுந்தரி' என்னும் நாடகத்தில் உருவாக்கியுள்ளார்.

"சுந்தரி என்பவள், அவளது விருப்பத்திற்கு மாறாக [illegible] யோதனின் மகனுக்கு [illegible] துக் கொடுக்கப் பெற [illegible] றாள். [illegible]

மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் தலைமை உரை ஆற்றுகிறார்

அழைத்துச் செல்லும் நிகழ்ச்சியின்போது ஒலித்த மேள தாளங்கள் அவளுக்குத் துன்ப ஒலியைத் தந்தன. அவளது அத்தான் அபிமன்யு வந்து விட்டான் என்ற செய்தியை அறிந்த பின்னர், சுந்தரி மகிழ்ச்சியுறுகிறாள். முன்பு துன்பத்தைத் தந்த வாத்தியங்கள் இப்போது அவளுக்கு மனமகிழ்வைத் தருகின்றன. இதைச் சங்கரதாஸ் எழுதியுள்ள விதம் போற்றிப் பாராட்டுதற்குரியது.

''சங்கரதாஸ் அவர்கள், 'துந்துபிகளெல்லாம் தும் தும் தும் என்றும், சங்குகள் எல்லாம் பம், பம், பம் என்றும், தாளவகைச் சல்லரி, மல்லரி, கரடிகைகளோ தீம் தீம் தீம் , என்றும் முரசு, பேரிகை மிருதங்கங்களோ தோம் தோம் தோம் என்றும் தொனிக்கின்றன. ஆகவே இவ்வகை வாத்திய ஒலிகள் எல்லாம் ஒன்றுகூடி தும் பம் தீம் தோம், துன்பம் தீர்ந்தோம், துன்பம் தீர்ந்தோம், என்னும் பொருளைக் கொடுக்கலாயின' என்று உரையாடல் எழுதியுள்ளார். Unity of action, Unity of Time, Unity of Place என்னும் மூவகைப் பிரிவுகளைத் தமிழ் நாடகத்தில் அறிமுகம் செய்த பெருமை சங்கரதாஸ் அவர்களுக்கே உரியது.''

பின்னர், கலை மாமணி திரு கே. சாரங்கபாணி, சங்கரதாஸ் சுவாமிகளின் திரு உருவப்படத்தைத் திறந்து வைத்துக் குறிப்பிட்டார்.

''இனிமை, எளிமை நிறைந்த பாடல்கள், தேன் சொட்டும் தமிழில் சங்கரதாஸ் அவர்கள் எழுதிய உரைநடைகள் - தமிழ் நாடகத்திற்கு வலுவூட்டின. சுவாமி என்றால் தமிழ் நாடக உலகத்தில் சங்கரதாஸ் சுவாமிகள் ஒருவரையே குறிக்கும்.''

அடுத்துப் பேசிய திரைப்பட நடிகர் திரு டி. எஸ். துரைராஜ் குறிப்பிட்டதாவது: ''நான் சுவாமிகளைப் பார்த்தது கிடையாது, அவர் எழுதிய நாடகங்களில் நடித்திருக்கிறேன் என்னும் பெருமை எனக்கு உண்டு.''

அடுத்துப் பேசிய கலைமாமணி திருமதி எஸ். டி. சுப்புலட்சுமி சங்கரதாஸ் சுவாமிகளிடம் நேரடியாகப் பயிற்சி பெறவில்லை. ஆனால் என் தந்தையிடம் பயிற்சி பெற்றிருக்கிறேன். என் தந்தை, சுவாமிகளிடம் சீடராக இருந்திருக்கிறார். எனவே அவர் கற்பித்த பாடம்-எனக்கு உதவியிருக்கிறது.

''முன்பெல்லாம் நாடகத்தைப் போற்றிவந்த மக்கள் நாடகக்காரர்களை மதிப்பதில்லை. நாடகம் நடத்தச் சென்ற இடத்தில், தங்குவதற்குக் கூட இடம் தரமாட்டார்கள். இன்று, அந்த நடிகர் உலகத்தைச் சேர்ந்த ஒருவர் தமிழகத்தின் முதல்வராக வந்திருக்கிறார் என்பதை எண்ணும்போது நடிகர் சமுதாயமே பூரிப்படைகிறது.

''சங்கரதாஸ் அவர்கள் உரையாடல், பாடல் யாவும் நன்கு அமைக்கும் திறமை பெற்றிருந்தார். நாடகத்தின் மூலமாக அவர் பக்தியை வளர்த்தார். தமிழ் நாடகத்துறையை நல்ல விதம் அமைப்பதற்கு அரும்பாடுபட்டார்.''

பின்னர், கலைமாமணி எம். கே. ராதா அவர்கள் உரையாற்றினார்: அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''சுவாமிகளும், என் தந்தையாரும் மிக நெருங்கிப் பழகியவர்கள். சுவாமிகளது நாடகத்தில் நடிக்க வேண்டும் என்றால் தனி தைரியம்-உடல் வலிவு வேண்டும்.

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகத்திலே தமிழ் இருந்தது அது அழியாதது; அந்த நாடகத்திற்கு அழிவே கிடையாது!''

''கலை கலைக்காக மட்டுமல்ல; பாசம், அன்பு, பண்பு ஆகியவற்றிற்கும்தான் என்பதைக் கற்றுத் தந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள்.

''சென்னையில் உருவாகிவரும் நடிகர் சங்கக் கட்டடத்தில்-சங்கரதாஸ் பெயரால் ஒரு நினைவுச் சின்னம் உருவாக்க வேண்டும்!

அடுத்துப் பேசிய, கலைமாமணி எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்:

''சங்கரதாஸ் சுவாமிகளின் சாதனைகளை - திறமைகளை மிகத் தெளிவாக எடுத்துக்கூறும் விழா இது. நான் சுவாமிகளுக்குப் பேரன் முறை வேண்டும். எனது ஆசான் டி. கே. சண்முகம் அவர்கள், சுவாமிகளுக்கு மாணவர்-நான் டி. கே. எஸ்ஸுக்கு மாணவன். எனவே, சுவாமிகளுக்கு நான் பேரன்தான்! இருந்த இடத்திலிருந்தே, ஒரே இரவில் ஒரு முழு நாடகத்தை உரையாடல், பாடல்களுடன் எழுதியிருக்கிறார் சங்கரதாஸ்; நாடகம் தயாரிப்பதில் அவருக்குத் தனித் திறமை உண்டு.

''சங்கரதாஸ் அவர்களால் உருவாக்கப்பட்ட நாடகத்துறையில் மறுமலர்ச்சி-திருப்புமுனை ஏற்பட்டது. அதனைச் செய்தவர் திரு கந்தசாமி முதலியார் ஆவார்.

''இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோள். நாடகக் கலைக்கு என்று (Boys Company) நடத்த முன்வரவேண்டும். அதற்காக அரசு மான்யம் ஒதுக்க வேண்டும். அப்போதுதான் உண்மை உணர்ச்சியுள்ள நடிகர்கள் உருவாக்கப்படுவார்கள்.

''காருள்ளளவும் கடல்நீர் உள்ளளவும் சுவாமிகள் புகழ் ஓங்குக!''

பின்னர், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்:

''தமிழ் நாடகத்துறைத் தலைமைப் பேராசிரியர் தவத்திரு சங்கரதாஸ் அவர்களின் நினைவு நாளை தமிழக அரசின் சார்பில், இயல் இசை நாடக மன்றத்தின் துணையோடு நடத்திக் கொண்டிருக்கிறோம்.

''அவரது நினைவு நாளை அரசின் சார்பில் நடத்துவது என்னும் முடிவை, சென்ற ஆண்டில் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்ததற்கிணங்க இவ்விழா ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

''தமிழகக் கலையுலகின் வரலாற்றை புகழ்மிக்க கலைஞர்கள் அணி செய்திருக்கிறார்கள். இந்திப் படங்களிலும் பங்கேற்று சிறப்பெய்திருக்கிறார்கள் நமது தமிழகக் கலைஞர்கள். உலகத்துக்கே சவால் விடும் கலைஞர்களைத் தமிழகம் உருவாக்கியளித்துள்ளது.

''நாடக நடிகர்கள் என்றால் சமுதாய விரோதிகள். தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்டு வந்த காலத்தை திருமதி எஸ்.டி. சுப்புலெட்சுமி அம்மையார் நினைவுபடுத்தி. அதே நாடக நடிகர் எம். ஜி. ஆர் தான் இன்று தமிழக முதல்வராக வந்திருக்கிறார் என்றும் எடுத்துரைத்துப் பெருமிதப்பட்டார்.

''இதையெல்லாம் நினைக்கும் போது சங்கரதாஸ் அவர்களே, நீங்கள் விதைத்த விதை அழிந்துவிடவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

''நடிகர்களும் மதிக்கத் தக்கவர்கள்தான்.போற்றத் தக்கவர்கள்தான் என்பதைத் தமிழகம் இன்று உணர்ந்திருக்கிறது. இந்த உண்மையை முன்பே உணர்ந்திருந்ததனால் தான் அண்ணா அவர்கள், கலைஞர்களுக்குச் சமுதாயத்தில் மதிப்புக் கிடைக்க வேண்டும் என்று எண்ணினார். அந்த எண்ணத்தை முதல்வர் எம். ஜி. ஆர். நிறைவேற்றி வருகிறார்.

''ஒரு கலைஞன் நாட்டை ஆளமுடியும் என்பதற்கு விதை விதைத்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். அரசியல் இல்லை என்றால் வாழ்வு இல்லை என்பது எப்படி உண்மையோ, அதுபோல சங்கரதாஸ் சுவாமிகள் இல்லையென்றால் தமிழ்நாடகம் இல்லை.

''நாடகக் கலைஞர்கள் ஒரு காலத்தில் மக்களை விட்டு ஒதுங்கியிருந்தார்கள். அவர்களை எல்லாம், பேரறிஞர் அண்ணா, அழைத்து, வாழ்க்கையின் மைய மண்டபத்தின் வாசலுக்கு வா, மக்களைவிட்டு விலகிச் செல்லாதே! சமுதாயத்தோடு சமுதாயமாக இரு' என்று கூறினார்.

''பல்கலைக் கழகங்களில் பெற முடியாத கல்வியை-உயர்வை, ஒரு நாடகக் கம்பெனி வழங்குகிறது. நாடகக் கம்பெனியில் ஒருவன் பணி புரிந்தால் அவர் வெளியே வரும்போது-நாடக ஆசிரியராக வரலாம். பாடலாசிரியராக வரலாம் — நடிகராக வரலாம் - சீன் எழுதுபவராக வரலாம்-வயலின் வாசிப்பவராக வரலாம்-ஆர்மோனியம் வாசிப்பவராக வரலாம். நூற்றுக்கு நூறு விற்பன்னர்களாக உருவாக்கும் திறமை நாடகப் பல்கலைக் கழகத்துக்கு உண்டு.

''சங்கரதாஸ் சுவாமிகள், நாடகத்தில், நாரதரின் பாத்திரத்தின் வாயிலாக, தனது கருத்துகளை எடுத்துரைத்து வந்தார். அவரது இலக்கியங்களை நாம் பாதுகாக்க வேண்டும்.''

பின்னர், இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் நன்றியுரை கூறினார். அதன் பின்னர், சுவாமிகள் எழுதிய 'அபிமன்யு சுந்தரி' என்னும் நாடகத்தை மதுரை தமிழ்நாடு நாடக நடிகர் சங்கத்தவர் சிறப்பாக நடத்தினர். சுவாமிகளின் பேராற்றலுக்குச் சான்றாகத் திகழ்ந்தது அந்நாடகம்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
தமிழ்ப்பித்தன்

அபிமன்யு சுந்தரி' என்னும் நாடகத்தில் ஒரு காட்சி

மாவட்டங்களில்...

சென்னை மாநகரில் பணியாற்றி வரும் நீதிபதிகள், மெட்ரோபாலிடன் மாஜிஸ்திரேட்டுகள் ஆகியோருக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் அடுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றியிருக்கிறது. சென்னை எழும்பூர் பிரதம மெட்ரோபாலிடன் கோர்ட் இயங்கி வரும் இடத்தருகே 36 குடியிருப்புகளும், சைதாப்பேட்டை நீதிமன்றம் அருகே 18 குடியிருப்புகளும் கட்டப்படவிருக்கின்றன.

ஓராண்டுக் காலத்திற்குள் இந்த வீடுகள் கட்டப்பட்டு நீதிபதிகளுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதால், சென்னை நகரில் பணியாற்றும் அனைத்து நீதிபதிகள், மெட்ரோபாலிடன் மாஜிஸ்திரேட்டுகளுக்கு வீட்டு வசதி கிடைத்துவிடும்.

இந்த வீடுகள் தவிர, நீதிமன்ற கட்டடப் பகுதியில் வழக்குறைஞர்களுக்கான அறைகள் கட்டும் திட்டமும் நிறைவேற்றப்படவிருக்கிறது. அங்குப் பத்து இலட்சம் ரூபாய் செலவில் நாற்பது அறைகள் கட்டப்படும்.

எழும்பூர் நீதிமன்றம் இயங்கி வரும் இடத்தில் புதிய பல மாடி நீதிமன்றக் கட்டடம் ஒன்றும் கட்டப்படும். இந்தக் கட்டடத்தில் 12 நீதிமன்றங்கள் செயல்பட வசதிகள் செய்யப்படுவதுடன், அந்தக் கட்டடத்தில் வழக்குரைஞர்கள் தங்குமிடம், பெண் வழக்குரைஞர்களுக்குத் தனி இடம், நூலகம், கழிவறைகள் உட்பட எல்லா வசதிகளும் செய்து தரப்படவிருக்கின்றன.

இது தவிர வருவாய்த் துறையில் பணியாற்றும் 769 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு மொத்தம் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வீடுகள் கட்டித் தரத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது....

சென்னை அண்ணா சாலையில் 'இந்து' பத்திரிகை அலுவலகத்திற்கு எதிரிலும், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கு எதிரிலும் இரண்டு சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்ணா சாலையில் அமைக்கப்பட்டு உள்ள சுரங்கப் பாதை 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவிலும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கு எதிரே கட்டப்பட்டுள்ள சுரங்கப் பாதை 13 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ளன.

சென்னையில் மேலும் 7 சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட விருக்கின்றன. அண்ணா சாலையில் எல்.ஐ.சி.க்கு எதிரில் 9 இலட்சம் ரூபாய் செலவிலும், கிண்டி ரயில் நிலையத்துக்கு எதிரில் பதினைந்து இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலும் தண்டையார்ப்பேட்டை தொற்றுநோய் மருத்துவ மனைக்கு எதிரே பத்து இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலும் அமையவிருக்கும் சுரங்கப் பாதைகளின் வேலைகள் வரும் ஜனவரியில் துவங்கும்.

சஃபையர் தியேட்டர் எதிரிலும், சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு அருகே வால்டாக்ஸ் சாலையிலும் அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதைகள் டிசம்பர் மாதக் கடைசியிலும், வடக்குக் கடற்கரைச் சாலையிலும், சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரிக்கு எதிரிலும் அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதைகள் ஜனவரியிலும் துவங்கும். இந்தச் சுரங்கப் பாதைகள் எல்லாம் உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டவை.

புதிதாக அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதைகளில் மழை நீர் தேங்காமல் இருக்க புதிய புதிய உத்திகள் கையாளப்பட்டுள்ளன. சுரங்கப் பாதைகளில் கடைகள் போடுவது, பிச்சைக்காரர்கள் தங்குவது போன்ற காரியங்களைத் தீவிரமாகத் தடுப்பது பற்றி அரசு யோசித்து வருகிறது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்தின் முதல் கட்ட வேலைகள் அடுத்த ஆண்டு இறுதிக்குள்ளாக முடிவடைந்துவிடும். முதல் கட்டமாக ஒரு நடைபாதையும், புறநகர் ரயில்வே போக்குவரத்துக்காக இரண்டு ரயில்வே லைன்களும் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்துக்காக மிருகக்காட்சிச் சாலையின் ஒரு பகுதி எஸ். ஐ. ஏ. ஏ. திடல் மூர் மார்க்கெட் ஆகிய இடங்கள் அடங்கிய 42 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்க எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன.

சென்னைக்கும் கும்மிடிப்பூண்டிக்கும் இடையே மின்சார ரயில் பாதையமைக்கும் திட்டம் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் முடிவடைந்துவிடும். அதைப்போல் சென்னை திருவள்ளூர் மின்சார ரயில் பாதை அடுத்த ஜூன் மாதம் முடிவடையும்.

செங்கை மாவட்டத்தில் ....

செங்கற்பட்டு மாவட்டம் உணவு விஷயத்தில் என்றைக்குமே தன்னிறைவு பெற்ற மாவட்டமாக இருப்பதுடன், உற்பத்தியிலும் மற்ற மாவட்டங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது.

இவ்வாண்டு 6 இலட்சத்து 3 ஆயிரத்து 846 ஏக்கர்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 639 ஏக்கர்களில் உயர் விளைச்சல் நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. தகுந்த நேரத்தில் மழை பெய்து வருவதாலும், தேவையான உரங்கள் கையிருப்பில் இருப்பதாலும், இவ்வாண்டு நல்ல மகசூலை எதிர்பார்க்கலாம் எனக் கூறப்படுகிறது.

சர்வ தேச சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்தை மேலும் மேலும் வளர்த்திட பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மீனவர் குடிசைகளும் மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் விடுதியின் சில பகுதிகளும் கடல் அரிப்பினால் சேதமடைகின்றன. மேலும், சேதமடையாமல் இருக்கும் பொருட்டு, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் மத்திய பொதுப் பணித் துறை தடுப்புச் சுவர் கட்டத் திட்டமிட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொன்றும் சுமார் 26 ஆயிரம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய குளியல் அறை மற்றும் கழிவு அறைகள், கடற்கரை மற்றும் ஐந்து ரதங்கள் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன. நவீன மின் விளக்குகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. திருக்கழுக்குன்றத்திலும் பல வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

மானா மதுரையில் வரவேற்பு முகாம்

மண்டபத்தில் உள்ள வரவேற்பு முகாம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர், மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்பட்டுச் செல்லும் வரை, தற்காலிகமாகத் தங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பாகும். இந்த முகாமிலுள்ள வீடுகள் முதலில் இலங்கை அரசால் தொற்றுநோய் ஒதுக்கிட முகாமாக உபயோகப்படுத்தப்பட்டு வந்தவை. 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் வாங்கப்பட்டன.

மண்டபம் முகாமிலுள்ள வீடுகள் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டடங்களாக இருப்பதாலும், தற்போது அங்கு நீண்ட காலமாக உபயோகத்தில் இருந்து வரும் கழிவு நீர், சாக்கடைக் குழாய்களை மாற்றிவிட்டு புதிதாகக் குடிதண்ணீர் வசதியும், கழிவு நீர் சாக்கடைக்குழாய்களையும் அமைப்பது அவசியமெனக் கண்டறியப்பட்டது.

நீர் சாக்கடைக்குழாய்களை மாற்றியமைக்கும் திட்டத்திற்குப் பதிலாக, இந்த மண்டபம் முகாமையே ஒரு புது இடத்திற்கு மாற்றுவது எனத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை உப வட்டம் கே. கே. பள்ளம் கிராமத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான 25 ஏக்கர் தரிசு நிலத்தில், மேற்படி முகாமைப் புதிதாகக் கட்ட தீர்மானம் செய்யப்பட்டது. இந்தப் புதிய வரவேற்பு முகாம், 500 குடும்பங்களுக்கு வீடுகளும், மற்றும் அலுவலகம், மருத்துவமனை, பண்டகசாலை முதலிய கட்டடங்கள் உட்பட ரூ. 37.23 இலட்சம் செலவில் அமைப்பதற்கு மத்திய அரசுக்கு ஒரு திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசு அனுமதி வந்தவுடன் மானாமதுரையில் புதிய வரவேற்பு முகாம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்படும்.

தாயகம் திரும்பியோர்க்கு....

ஆனால், ரூ. 40 இலட்சம், அளவிற்கு மிகப்பெரும் செலவில் குடிதண்ணீர் வசதி மற்றும் கழிவு

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் அதாவது டான்டீ (TANTEA) நிறுவனத்தின் மூலம் ரூ. 674.03 லட்சம் செலவில் 3750 ஏக்கர் பரப்பில் 1875 குடும்பங்களை (3750 நபர்கள்) குடியமர்த்தும் திட்டம் அமல்படுத்தப்பட்டது. இதுவரை 1585 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

மேலும், நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்திலுள்ள ஜன்மம் நிலத்தில் சுமார் 4000 ஏக்கர் நிலம் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் ரூ. 389 இலட்சம் செலவில் 1500 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிட்டு 750 குடும்பங்களை (1500 நபர்கள்) குடியமர்த்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 2500 ஏக்கர் நிலத்தில் ரூ. 552.17 இலட்சம் செலவில் 1250 குடும்பங்களைக் (2500 நபர்கள்) குடியமர்த்தும் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆக, மேற்படி இரண்டு திட்டங்களின் கீழ் 2000 குடும்பங்களை (4000 நபர்கள்) குடியமர்த்துவதன் மூலம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு பெருமளவில் தேயிலைத் தோட்டக் கழகத்தில் வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டம் செயல்படவிருக்கிறது.

மேலும், நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம் நிலங்களை பட்டா உறுதி செய்தல் (Settlement) சம்பந்தமாக உச்சநீதி மன்றத்தில் இருந்து வரும் தடுப்பு ஆணை நீங்கி அவ்வப்பொழுது கிடைக்கும் நிலங்களையும் தேயிலைத் தோட்டக் கழகத்தின் மூலம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்களைக் குடியமர்த்துவதற்கு, கொடுக்கப்படும்.

வண்ணமயம்
வண்ணமயமான பருத்திப்
பட்டாடைகள் குவிந்துள்ளன
உங்கள் குடும்பத் தேவை
யனைத்திற்கும் கோ-ஆப்டெக்ஸ்
துணிகளையே தேர்ந்தெடுங்கள்.
புடவைகள் ● ஷர்ட்டிங்குகள் ●
● வேட்டிகள் ● ரெடிமேடுகள்
லுங்கிகள் ● ஜனதா புடவைகள்
கோ-ஆப்டெக்ஸ்

வாழை முடிக்கொத்து நோய்

மலை வாழை ஒரு நிரந்தரப் பயிராக பழனி, சிறுமலைப் பகுதிகளில் சுமார் 35,000 ஏக்கரில் மானாவாரியாகத் தனிப் பயிர் அல்லது காப்பியுடன் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்யப்படுகிறது.

இது மிகவும் விரும்பப்படும் ஒரு ரகமாகும். ஏனென்றால் இது நீண்ட தூரப் பயணத்துக்கு ஏற்றது. ஒரு ஆண்டிற்கு சுமார் 1.75 இலட்சம் டன் பழங்கள் உற்பத்தியாகிறது. அதன் மதிப்பு 5.5 அல்லது 6 கோடி ரூபாயாகும். தவிர இப்பயிர் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட மக்களுக்குச் சாகுபடியிலும், வியாபாரத்திலும் வேலை வாய்ப்பு அளிக்கிறது. இவ்வளவு பெரிய வாழைத் தொழிலில் அண்மைக் காலமாக முடிக்கொத்து நோய் என்ற நோயின் பாதிப்பால், சிறு விவசாயிகளின் பொருளாதாரம் சிதறுண்டு போகவும் உற்பத்தி மிகவும் குறையவும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

1-10-1976 முதல் மேற்குத் தொடர்ச்சிமலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்நோயைக் கட்டுப்படுத்த ஒரு திட்டம் மத்திய அரசு உதவியுடன் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அத்திட்டத்தில் சிபாரிசு செய்யப்படும் தடுப்பு நடவடிக்கைகளாவன:

1. நோய் பாதிக்கப்பட்ட வாழைகளை அகற்றுதல்.

2. நல்ல மரங்களுக்கு 21நாள் இடைவெளியில் பூச்சி மருந்து தெளித்தல்.

இதில், நோயுள்ள மரங்களை அகற்றுதல் பிரதானமானது. இதற்குச் சரியான முறை முதலில் குருத்தில் உள்ள அசுவினிப் பூச்சிகளைக் கொல்ல குருத்தில் மண்ணெண்ணெய் ஊற்றிவிட்டு, பிறகு 24 மணிநேரம் கழித்து மரத்தை வெட்டுதலாகும். மண்ணெண்ணெய் ஊற்றாமல், மரத்தை மட்டும் வெட்டினால், சில இடுக்கிலுள்ள அசுவினிப் பூச்சிகள் பறந்து சென்று நோயைப் பரப்பிவிடும்.

தற்பொழுது இதைச் செய்ய மரத்தின் உச்சியை அடைய ஏணி உபயோகப்படுத்தப்பட்டு மண்ணெண்ணெய் ஊற்றப்படுகிறது. துரதிருஷ்டவசமாக இவ்வாறு செய்வது மலைப் பிரதேசத்தில் கஷ்டமானது, அபாயகரமானது, ஏனெனில் நிலங்கள் மிகச் சரிவாக இருக்கின்றன. தவிர வாழை மரங்களும் மிக உயரமாக உள்ளன. இதைச் செய்ய 2 ஆட்களும் ஒரு பையனும் தேவையாக உள்ளது. இதனால் விவசாயிகள், நோய் வாழைக்கு மண்ணெண்ணெய் ஊற்றத் தயங்குகிறார்கள். இது இத்திட்டத்தில் ஒரு பெரிய இடையூறாக உள்ளது.

புதிய முறை:

ஏணிவைத்து ஊற்றும் அவசியத்தை மாற்றி, இலகுவாக மண்ணெண்ணெய் தரையிலிருந்தே ஊற்ற ஒரு புதிய முறை வகுக்கப்பட்டுள்ளது. ஒரு நாளில் 2 ஏக்கர் பரப்பில் இவ்வாறு செய்ய ஓர் ஆளும், ஒரு பையனும் மட்டும் போதும். ஒரு வடிவ குச்சி, ஒரு துளையிடப்பட்ட டப்பா, மெல்லிய கம்பி, தேவையான நூல் இவைதான் இம்முறைக்குத் தேவையான பொருட்கள். இவற்றிற்குச் செலவு ஒன்றும் இருக்காது.

மேற்படி பொருட்களை வைத்துப் புதிய சாதனத்தைத் தயாரித்துக் கீழ்க்கண்ட படத்தில் கண்டபடி, தரையிலிருந்து டப்பாவில் மண்ணெண்ணெய் ஊற்றிவிடலாம். குச்சியை மேலே உயர்த்தி வாழைக் குருத்தின் மேல் கம்பியை இழுத்து டப்பாவைச் சாய்த்து மண்ணெண்ணெய்யை ஊற்றிவிடலாம்.

இப்புதிய சாதனத்தின் உதவியால் மண்ணெண்ணெய் ஊற்றுவது எளிதாகியுள்ளது. தவிர மலையில் வேலையாட்கள் கிடைக்காத நிலையில் இப்புதிய முறை உபயோகமாக உள்ளது.

கே. மனோகரன், பி.எஸ்சி.,

கே. வி. சீனிவாசன், பி.எஸ்சி.,

சம்பா மற்றும் தாளடி நெல் நடவு வயல் கட்டுக்கோப்பு பயிர் பாதுகாப்பு.

ஆர். பட்டாபிராமன்,

துணை வேளாண்மை இயக்குநர், திண்டிவனம்.

நெல் நாற்றுக்களை (100 மி. லிட்டர் டர்ஸ்பான் மருந்து 500 கிராம் யூரியா 50 லிட்டர் நீர்) டர்ஸ்பான் கரைசலில் 20 நிமிடம் வேர்ப் பாகம் நனையுமாறு வைத்துப் பிறகு நட வேண்டும்.

நடவு நட்ட 10ஆம் நாள் கார்ப்போபியூரான் 3 சதவீதம் ஜீ மருந்து 13.3 கிலோ கிராமை 40 கிலோ மணலுடன் நன்றாகக் கலந்து வேர்ப் பாகத்தில் அப்ளிகேட்டரின் உதவியால் வைக்கவும். (அல்லது) நடவு வயலில் 2.5 செ.மீ. நீரைத் தேக்கி அவற்றில் 26.6 கிலோ கார்போபியூரான் 3 சத ஜீ. மருந்தை நட்ட 10ஆம் நாள் தூவவும், மூன்று நாட்கள் வரை தண்ணீர் தொடர்ந்து கட்டி வர வேண்டும்.





குறிப்பு : டர்ஸ்பான் மருந்தில் நாற்றுக்களைத் துவைத்து நடாத சமயங்களில் மட்டும் இம்முறையைப் பின்பற்ற வேண்டும்.

நட்ட 20ஆம் நாள் கீழ்க்கண்ட ஏதாவது ஒரு மருந்தைத் தெளிக்க வேண்டும்.

	சத இ.சி.	மி.லி.
மிதைல் பாரதியான்	50	200
என்டோசல்பான்	35	300
பெனிட்ரோதயான்	50	250
பாஸ்போமிடான்	100	110
பென்தயான்	100	200
பாஸலோன்	35	600
குயினல்பாஸ்	25	300

குளிர்கால எள் சாகுபடி

ஆர். பட்டாபிராமன்

துணை வேளாண்மை இயக்குநர், திண்டிவனம்.

தமிழ்நாட்டில் பயிராகும் எண்ணெய் வித்துக்களில் மணிலாவிற்கு அடுத்துள்ள முக்கியமானது. நமக்குத் தேவையான எள் முழுவதும் நம் மாநிலத்தில் உற்பத்தியாவதில்லை. ஆண்டுதோறும் சுமார் 3 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படும் எள் பயிரிலிருந்து 40,000 டன் எள் மாத்திரமே, இம்மாநிலத்தில் கிடைக்கின்றது. நமது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள, எள் பெருமளவில் ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து ஆண்டுதோறும் இறக்குமதி செய்யப்படுகிறது.

குறுகியகாலப் பயிரான எள் சாகுபடி செய்வது சிரமம் இல்லாதது. சாகுபடிக்கு ஆகும் செலவும் குறைந்ததே. தனிப் பயிராகவும், மற்றப் பயிர்களுடனும், பலதரப்பட்ட நிலங்களில் சாகுபடி செய்யலாம்.

மானாவாரி மணிலாவிற்குப் பின் இரண்டாம் புஞ்சைப் பயிராகக் குளிர்காலத்தில் பயிராக்க மிகவும் ஏற்றது. நஞ்சை நிலங்களில் நெல் அறுவடை செய்த பின் கோடைக் காலத்தில் இறவைப் பயிராகச் சாகுபடி செய்யலாம். இறைவைப் பயிருக்குத் தேவைப்படும் நீர் வசதியும் அதிகமல்ல. நம் மாநிலத்தில் மானாவாரிப் பயிராக, மணிலா சுமார் 20 இலட்சம் ஏக்கரில் சாகுபடியாகிறது. இதில் பெரும்பகுதியில் குளிர் காலத்தில் சிரமம் ஏதுமில்லாமல், எள் சாகுபடி செய்யலாம். இதேபோல் மற்ற புஞ்சைப் பயிர்களுக்குப் பின்னும் எள் சாகுபடி செய்ய ஏற்றது. எனவே, எள் உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்க வாய்ப்புள்ளது.

பருவகால வேறுபாடுகளால் எள் அதிகம் பாதிக்கப்படும். பெருவாரியான எள் இரகங்கள் சீராக எல்லாப் பருவத்திலும் பலன் அளிப்பதில்லை. ஆகையால் பருவத்திற்கு ஏற்ற இரகங்களைத் தேர்ந்தெடுப்பது மிக அவசியம்.

குளிர் காலத்தில் எள் அதிக அளவில் தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, தஞ்சை முதலிய மாவட்டங்களில் பயிராகிறது. திண்டிவனம் எண்ணெய்வித்துப் பரிசோதனை நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள திண்டிவனம்-2, திண்டிவனம்-3, திண்டிவனம்-5, எள் இரகம் குளிர்காலச் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது.

இவற்றில் திண்டிவனம்-2 என்ற இரகம் குளிர்காலத்தில் மட்டும் சாகுபடி செய்ய ஏற்றது. மற்ற பட்டங்களில் சரியாகப் பலனளிக்காது. இதன் விதைகள் மங்கிய வெண்மை நிறம் உள்ளவை. இது நாக்பூர் வெள்ளை எள் இரகத்தையும், சாத்தூர் தினுசையும், கரு ஒட்டு மூலம் சேர்த்து உண்டாக்கப்பட்ட இரகம். இதன் 6, 8 அறைகளுடன் உருண்டையாக இருக்கும். முற்றிய காய்கள் அதிகம் வெடித்துச் சேதம் ஏற்படாது. எண்பத்தைந்து நாட்களில் பலனளிக்கும். ஒரு ஏக்கரிலிருந்து, 150 கிலோ மகசூல் கிடைக்கும்.

திண்டிவனம் 3 என்ற இரகம் உள்நாட்டு இரகம் ஒனறை, மலபார் காட்டு எள் தினுசுடன் இனச்சேர்க்கை மூலம் சேர்த்து உண்டாக்கப்பட்டது. குளிர் காலத்தில் மானாவாரிப் பயிராகவும், கோடையில் இறைவைப் பயிராகவும் பயிர் செய்ய ஏற்றது. கொண்டைப்புழு, வேர் அழுகல் நோய் முதலியவற்றால் அதிகம் பாதிக்கப்படாதது. குளிர்காலத்தில் ஏக்கருக்கு 150 கிலோ மகசூல் தரவல்லது. இறைவைப் பயிராகக் கோடையில் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 300 கிலோ மகசூலளிக்கும்.

திண்டிவனம் 5 என்ற இரகம் ஸ்ரீவில்லிப்புத்தூர் நாட்டு ரகத்திலிருந்து தனிச்செடி தேர்வு மூலம் உண்டாக்கப்பட்டது. இதன் வயது 75-80 நாட்கள். மானாவாரிக்கும் , குளிர்காலத்திற்கு ஏற்றது. மானாவாரியில் ஏக்கருக்கு 160-170 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. இந்த மூன்று இரகங்களின் விதைகளிலும் எண்ணெய்ச் சத்து முறையே 52, 52, 53:8 சதம் உள்ளது.

வடிகால் வசதியுள்ள இரு மண்பாடான நிலம் எள் சாகுபடிக்கு ஏற்றது. நீர்தேங்கும் இடங்களிலும், அமில நிலங்களிலும் எள் சரியாக வளராது. விதைப்பதற்கு முன், நன்கு புழுதியாகும்படி நிலத்தை உழுது சமன்படுத்த வேண்டும். பொதுவாக விவசாயிகள் எள் பயிருக்குக் குறிப்பாக மானாவாரி சாகுபடியில் உரம் சீராக அளிப்பதில்லை. ஆனால், மற்ற பயிர்களைப் போல எள் பயிருக்கும் போதுமான உரம் அளிக்கவேண்டும். மற்ற பயிர்களைவிட எள் நிலத்திலிருந்து அதிகப்படியான சத்துப் பொருட்களை எடுத்துக் கொள்ள கூடியது.

மானாவாரி சாகுபடியில் எள் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 300 கிலோ தொழு உரத்துடன் 9 கிலோ தழைச்சத்தும், 5 கிலோ மணிச்சத்தும், 5 கிலோ சாம்பல் சத்தும் தரக்கூடிய இரசாயன உரங்களை அடி உரமாகப் போட வேண்டும். நன்கு மட்கிய 300 கிலோ தொழு உரத்தில் பரிந்துரை செய்யும், மணிச்சத்து. சாம்பல் சத்து உரங்களைப் பதமான ஈரமுள்ள தொழு உரத்தில் நன்கு கலந்து 30 நாட்கள் மூடி வைத்திருந்து பிறகு வயலில் இடவும். வயலில் இடும்பொழுது, பரிந்துரை செய்யும் தழைச்சத்து உரத்துடன் கலந்து தூவி உழுது மண்ணில் கலந்து விடவும் இந்த விகிதத்தில் சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியாவும், 32 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், 9 கிலோ மூரியேட் ஆப் பொட்டாசும் தேவை.

ஒரு ஏக்கர் விதைக்க 2 அல்லது 2.5 கிலோ தரமான எள் விதை தேவைப்படும். எள் விதைகள் மிகவும் சிறியவையாக இருப்பதால் விதையுடன் ஒன்று அல்லது இரண்டு பங்கு மணல் அல்லது

எள்ளில் 183 சதம் புரதச் சத்தும், 43.3 சதம் கொழுப்பும், 25.2 சதம் மாவுப்பொருளும், மேலும் தாது உப்புக்கள், கால்சியம், பாஸ்பரம், இரும்பு போன்ற சத்துப் பொருட்களும், வைட்டமின் ஏ-யும், பி-யும் அதிக அளவில் உள்ளன. எள் பிண்ணாக்கில் 13 சதம் கொழுப்புச் சத்தும், 40 சதம் புரதச் சத்தும், 26 சதம் மாவுச்சத்தும், 9 சதம் தாது உப்பும் உள்ளன. பிண்ணாக்கு நல்ல கால்நடைத் தீவனமாகும்.

நடக்கும் குளிர்காலப் பட்டத்தில், விவசாயப் பெருமக்கள் எங்கெல்லாம் எள் விதைத்துப் பயிர் செய்ய வாய்ப்பு இருக்கிறதோ, அங்கெல்லாம் எள் சாகுபடி செய்ய முன்வர வேண்டும்.

அதிக மகசூல் குளிர் காலத்தில் பெற, திண்டிவனம் 2, 3 அல்லது 5 என்ற இரகங்களைப் பயிரிடலாம். நிலம் நல்ல வடிகால் வசதியுடன் இருக்க வேண்டும். நன்கு பண்படுத்தப்பட்ட நிலத்தில் அடியுரமாக ஏக்கருக்கு 300 கிலோ தொழு உரமும், தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து முறையே 9 கிலோ, 5 கிலோ, 5 கிலோ என்கிற அளவில் போடவும்.

ஒரு ஏக்கருக்கு 2லிருந்து 2.5 கிலோ விதை தேவை. விதைத்த 15 நாட்களில் ஒரு முறையும், 25 நாட்களில் ஒரு முறையும், அதிகமாக உள்ள செடிகளைக் களைத்துவிட வேண்டும். சீரான வளர்ச்சியுடன் இருப்பின் 25 நாட்களில் செடிக்குச்செடி 20 செ.மீ. இடைவெளி இருக்கும்படி களைத்து விடவும். கொண்டைப்புழு இலைப்புள்ளி நோய், பூவிலை நோய் முதலியவற்றால் சேதம் ஏற்படாமல் தடுக்கத் தக்க மருந்துகளைச் சரியான சமயத்தில் உபயோகிக்கவும். செடி நன்கு முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும்.

விவசாயப் பெருமக்கள் நல்ல முறையில் குளிர்கால எள் சாகுபடி செய்து சீரிய பலன் பெறலாம்!

சாலைகளின் பெயர் மாற்றம்

சென்னையில் உள்ள

சென்னையில் உள்ள "பாடி கார்ட் ரோடு" "பல்லவன் சாலை" என்று மாற்றி அழைக்கப்படும்.

இதே போல் சென்னை அண்ணா சாலையில் இருந்து மின்வாரிய செயலகத்திற்குச் செல்லும் "ஆர்மி குளோத்திங் பாக்டரி சாலை"யின் (Army Clothing Factory Road) பெயர் 'மின் வாரிய சாலை' (Electricity Avenue) என்று அழைக்கப்படும்.

இச்சாலைகளின் பெயர்களை மாற்றி அழைக்க மாநகராட்சிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

காணக்கிடைக்காத சிங்கவால் குரங்கு!

இறைவன் படைப்பில் எண்ணற்ற அரிய உயிரினங்கள்; அவற்றில் ஒன்றுதான் எளிதில் காணக்கிடைக்காத சிங்கவால் குரங்கு!

அகில உலகிலும் மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதியில்தான், இந்த அபூர்வ குரங்கினம் காணப் படுகின்றது. இவ்வினத்தின் பாதுகாப்பு முக்கியத்துவம் குறித்து நம் நாட்டோரும் வெளி நாட்டோரும் அறிந்து கொள்ளும் பொருட்டும், சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டும் அஞ்சல் தந்தித் துறையினர் அண்மையில் சிங்கவால் குரங்கின் உருவம் அச்சிடப்பட்ட உறைகளில் சிறப்பு முத்திரைகளைப் பதித்து நெல்லையிலிருந்து 30 மைல் தொலைவில் உள்ள களக்காடு அஞ்சல் நிலையத்தில் வெளியிட்டுள்ளனர்.

விழாவையொட்டி, அஞ்சல் தலைக் கண்காட்சியும் சிறப்பு விற்பனையும், அங்குள்ள அரசு மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்றது. வனத்துறையினர் உயிருடனிருந்த இரண்டு சிங்கவால் குரங்குக் குட்டிகளையும், கண்காட்சியில் வைத்திருந்ததை அனைவரும் பார்த்துப் பரவசமடைந்தனர்.

சாம்பல் கலந்து விதைத்தால், விதைப்பு சீராக இருக்கும். விதை மூலம் பரவும். பூஞ்சான நோய்களான வேர் அழுகல் நோய், வாடல் நோய், இலைப்புள்ளி நோய் முதலியவை வராமல் தடுக்க காப்டான் அல்லது தைரம் என்னும் பூஞ்சாள மருந்தை விதையுடன் கலந்து விதைக்க வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் மருந்து தேவைப்படும். குளிர் காலத்தில் மானாவாரிப் பயிராக எள் விதைக்க ஏற்ற பட்டம் ஐப்பசி-கார்த்திகைப் பட்டமாகும்.

விதைக்கும்போது, விதைகள் நிலத்தில் மிக ஆழமாகப் புதைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆழமாகப் புதையுண்ட விதைகள் நன்கு முளைப்பதில்லை. விதை தெளித்த பிறகு லேசாக மரக்கலப்பையால் உழுது, விதைகளைமூடவேண்டும். விதைகள் முளைத்தவுடன் நெருக்கமாகக் காணப்படும். விதைத்து 35 நாட்களில் செடிகள் பூக்க ஆரம்பிக்கும். இந்தச் சமயம் நிலத்தில் போதுமான ஈரப்பசை இருப்பது அவசியம். இல்லாவிட்டால் செடிகள் நன்கு களைத்துப் பலனளிக்காது. ஆகையால், தேவைப்பட்டால் இறைவை வசதியுள்ள இடங்களில் இத்தருணத்தில் ஒருமுறை நன்கு நீர்ப்பாய்ச்சினால் நல்ல பலன் கிடைக்கும். நனையும் கந்தகத் தூள் 1.2 கிலோவை ஏக்கருக்கு 300 லிட்டர் தண்ணீரில் கலந்து 35-வது, 50-வது நாட்களில் தெளித்தால், சாம்பல் நோயைத் தடுப்பதுடன் மகசூலும் கணிசமாக அதிகரிக்கிறது.

திண்டிவனம் 2, 3, 5, இரகங்கள் 85 நாட்களில் அறுவடைக்கு வரும். நன்கு முதிர்ச்சி அடைந்த செடிகளின் இலைகள், தண்டுபாகம், காய்கள் முதலியன மஞ்சள் நிறமாக இருக்கும். இலைகளும் வேகமாக உதிர ஆரம்பிக்கும். இது அறுவடை செய்வதற்கு ஏற்ற சமயம். இதற்குப் பின் அறுவடை செய்வதில காலங்கடத்தினால், காய்கள் வெடித்து விதைகள் சேதமடையும். போதுமான முதிர்ச்சி அடைந்தவுடன் செடிகளை அறுவடை செய்ய வேண்டும். செடி முற்றுவதற்கு முன் அறுவடை செய்தாலும் காலங்கடந்து அறுவடை செய்தாலும் விதைகள் பழுதடைந்து மகசூல் பாதிக்கப்படும். வெட்டி எடுத்துச் செடிகளை அடிப்பாகம் வெளிப்புறம் இருக்குமாறு வைத்து, வட்ட வடிவமான குவியலாக அடுக்க வேண்டும். இவ்வாறு 5-6 நாட்கள் வைத்திருந்தபின், குவியலைக் கலைத்து செடிகளைப் பரப்பிவிட வேண்டும் ஒன்றிரண்டு நாட்கள் வெய்யிலில் காய்ந்தபின், காய்கள் வெடித்து விதைகள்விழுந்துவிடும், இதற்குப் பின் செடிகளைத் தட்டி, விதைகள், பூராவும் பிரித்துச் சேகரிக்க வேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட விதைகளை நன்கு வெய்யிலில் உலர்த்தி பின் சுத்தப்படுத்த வேண்டும். சுத்தப்படுத்திச் சேமிக்கப்பட்டுள்ள விதைகளில், ஈரப்பசை 5 சதத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வெண்டும்.

எள் பயிரைத் தாக்கும் பூச்சிகளில், கொண்டைப்புழு மிக முக்கியமானது. பச்சை நிறமுடைய இப்புழுக்கள், செடி பூக்க ஆரம்பிக்குமுன்பிருந்து எல்லா நிலையிலும், செடிக்குச் சேதம் விளைவிக்கும். செடியின் இலைகளை இப்புழுககள் கூடு போலக்கட்டும். முதிர்ந்த செடிகளில் குருத்துக்களையும், தண்டுகளையும் துளைத்துச் சேதம் விளைவிக்கும். இதைக்கட்டுப்படுத்த ஏக்கருக்கு 10 கிலோ டி.டி.டீ 5 சதம் தூளைத் தூவ வேண்டும். தயோடான் அல்லது என்டிரினை ஏக்கருக்கு 300 லிட்டர் வீதம் 300 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலமும், இப்புழுவைக் கட்டுப்படுத்தலாம். இம்மருந்துகளை விதைத்த மூன்றாவது வாரத்திலிருந்து 20 நாட்கள் இடைவெளியில் புழு தோன்றுவதைப் பொறுத்து இரண்டு அல்லது மூன்று முறை தெளிப்பது நல்ல பலன் தரும்.

எள்ளில் தோன்றும் நோய்களில், இலைப்புள்ளி நோயும் பூவிலைநோயும் முக்கியமானவை. இலைப்புள்ளி நோயால், இலைகளில் கருஞ்சிவப்பு நிறப்புள்ளிகள் தோன்றும். இலைக் கருகும். பூக்கள் மலர்வதும், காய்கள் பிடிப்பதும் பாதிக்கப்படும். விதையுடன் காப்டான் அல்லது தைராம் மருந்தை ஏற்கெனவே கூறியபடி, ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் கலந்து விதைப்பது ஓரளவுக்கு இந்நோயைக் கட்டுப்படுத்தும். வளர்ந்த செடிகளில் நோய் பரவாமல் இருக்க 'ஜீனப்' என்ற மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் மருந்து வீதம் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 300 லிட்டர் கரைசல் தேவைப்படும்.

பூவிலை நோய் கண்ட செடிகள் பலன் தரா. பூ பாகங்கள் இலைபோல் மாறிவிடுவதால், காய்கள் பிடிப்பதில்லை. நோய் தோன்றுவதற்கு முன் உண்டான காய்களையும் நோய் தோன்றிய பின், விதைகள் பாதிக்கப்படுகின்றன. செடிகளின் வளர்ச்சி குறைந்து, கிளைகள் அதிகமாகி சிறுத்து, இலைகளும், கிளைகளும் கொத்துக் கொத்தாகக் காணப்படும். வைரஸ் போன்ற நுண்ணுயிர்கயால் ஏற்படும் இந்நோயைக் கட்டுப்படுத்துவது சிரமம். நோய் தோன்றிய செடிகளைப் பிடுங்கி எறிந்துவிட வேண்டும். இந்நோய்களைப் பரப்ப ஜேசிட் என்னும் தத்துப் பூச்சிகள் உதவுகின்றன. இவைகள் நோய்கண்டு செடியின் சாரை உறிஞ்சியபின், நோய் காணாத செடியின் சாரை எடுக்கும்போது நோய் பரவுகிறது. ஆகையால், இப்பூச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இந்நோய் பரவாமல் ஓரளவு தடுக்கலாம். மெட்டாசிஸ்டாக்ஸ், ரோகார், சுமித்தியான் போன்ற மருந்துகளில் ஏதாவது ஒன்றை ஒரு ஏக்கருக்கு 300 மில்லிலிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிப்பதன் மூலம் பரப்பும், தத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

சேலம் மாவட்டத்தில் குளுகோஸ் தொழிற்சாலை!

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் அருகே பத்து இலட்சம் ரூபாய் செலவில் குளுகோஸ் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. மரவள்ளிக்கிழங்கிலிருந்து குளுகோஸ் தயாரிக்கப்படும். இதற்குக் கல்பகனூரில் 7 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலை அமைக்கப்படும். இதன் மூலம் 600 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

தமிழ்நாட்டில் முதன் முதலாக சேலத்தில் தொழிற்துறை சார்பில் பதினைந்து இலட்சம் ரூபாய் செலவில் சுரங்கத் தாதுப்பொருள் இரசாயனக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இங்குத் தாதுப்பொருட்கள் தரம் குறித்து சிறுதொழிற்சாலைகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கம்பு சாகுபடி

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 1.25 இலட்சம் ஏக்கரில் சென்ற ஆண்டு கம்பு பயிரிடப் பட்டது. இந்த ஆண்டு சுமார் 1.50 இலட்சம் ஏக்கருக்கும் மேலாக விவசாயிகள் கம்பு பயிரிட்டுள்ளது, வேளாண்மைத் துறையின் பெரிய முயற்சியாகும்.

முதன் முதலாக விவசாயிகள் நாட்டுக் கம்பு ரகங்களைத்தான் பயிரிட்டு வந்தார்கள். இதற்கு ஆகும் செலவு குறைவாக இருந்தாலும், மகசூலும் மூன்று அல்லது நான்கு மூட்டைகள் அதாவது 300 அல்லது 400 கிலோ மட்டுமே கிடைத்து வந்தது. நாட்டுக் கம்பு பயிரிடுவதானால் விவசாயிகளுக்கு ரூ. 150 முதல் ரூ. 250 வரை ஏக்கருக்கு இலாபமாகக் கிடைத்து வந்தது.

இந்த அவல நிலையை மாற்ற விவசாயத் துறையினர் கடும் முயற்சி எடுத்தனர். கே. எம். 1, மற்றும் கே. எம். 2 என்னும் குடுமியாமலை ஒட்டுக் கம்பு ரகங்கள் விவசாயிகளுக்கு அறிமுகப் படுத்தப்பட்டன. இந்த கே.எம். 1, மற்றும் கே. எம். 2 கம்பு ரகங்கள் மானாவாரியாகவே 1,000 முதல் 1,200 கிலோ வரை ஒரு ஏக்கருக்கு மகசூல் தருபவை. இந்தக் கம்பு ரகத்திற்கு ரூ. 350 முதல் ரூ. 450 வரை சாகுபடிச் செலவு ஆகும். எனவே, இலாபமும் ஒரு ஏக்கருக்கு ரூ. 600க்கு மேல் கிடைக்கும்.

ஒட்டு வீரிய கம்பு தினுசுகளான கே. எம். 1 மற்றும் கே. எம். 2 ரகங்கள் வறட்சியையும் தாங்கி வளரக் கூடியவை. இறவையாகவும் பயிரிட உகந்தது. சுமார் 80 நாட்களில் ஏக்கருக்கு மானாவாரியாக 800 கிலோவுக்கும் மேலாக மகசூல் தர வல்லது. இதனால் விவசாயிகளுக்கு நிகர இலாபம் ரூ. 600-க்கு மேல் ஆகும்.

இந்த உயர் விளைச்சல் ரகத்தில் அமோக விளைச்சல் திறனைக் கண்டு 1978-79ஆம் ஆண்டு கூடுதல் பரப்பில் கம்பு விதை வினியோகம் செய்யத் திட்டமிடப் பட்டு அதன்படியே இந்த ஆண்டு 1.40 ஏக்கரில் கம்பு பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் வீரிய ஒட்டுக் கம்பு விதை வினியோகம் அதற்கு முந்தைய ஆண்டின் வினியோகத்தை விட பல மடங்கு ஆகும். விவசாயத் துறையினரே 60,000 கிலோவுக்கும் மேலாகச் சென்ற ஆண்டு விதை வினியோகம் செய்துள்ளனர்.

இந்த ஆண்டு ஒட்டு வீரியக் கம்பு விதை வினியோகத்தைக் கூடுதலாகச் செய்யும் பொருட்டு 1,00,000 கிலோவுக்கும் மேலாக விதைவினியோகத்துறை மற்றும் தனியார் நிறுவனம் இணைந்து செயல்பட்டது பெருமைக்குரிய செய்தியாகும்.

மேலும், விவசாயிகளுக்கு நிரந்தரமாகவும் கூடுதல் மகசூலும், மேலும் பெருகவும் திட்டமிட்டு இந்த 1978-79 ஆண்டில் செயல் படுத்த வகை செய்து வருகிறது.

இந்த ஆண்டு புதிய திட்டத்தில்..

இப்புதிய ஆராய்ச்சியின்படி கம்பு விதையை உப்பு நீரில் அதாவது 20 சதவீத வீரிய உப்புக் கரைசலில் போட்டு மிதக்கும் விதைகளை அப்புறப்படுத்துவதனால், தேன் அழுகல் நோயினால் தாக்கப்பட்ட விதைகளை அறவே அழிக்க முடிகிறது. இதற்குச் சிரமம் அதிகம் இல்லை. சாதாரண உப்பு ஒரு கிலோவை 5 லிட்டர் நீரில் கரைத்துக் கொண்டால் போதுமானதாகும். இந்தப் புதிய 20 சதவீத உப்புக் கரைசலில் கம்பு விதையைப் போட்டு விதை நேர்த்தி முறையைப் பரீட்சார்த்தமாக 10,000 ஏக்கரில் புகுத்தப்பட்டு ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

இதைப்போன்று விதையைப் பெவிஸ்டன் என்னும் ஊடுருவி வேலை செய்யும் பூசணக்கொல்லி மருந்துடன் கலந்து விதைக்கவும் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த ஆராய்ச்சியின் விளைவாகக் கம்புப் பயிருக்குக் குறைந்தது 40 நாட்களுக்கும் மேலாக எந்தவிதமான நோயும் வராமல் பாதுகாப்புக் கொடுக்க வகை செய்யப் பட்டிருக்கிறது. இந்த முறையும் பரீட்சார்த்தமாக 500 ஏக்கரில் விவசாயிகளுக்கு விளக்க ஏற்பாடு செய்யப்பட்டு, அந்த முயற்சியில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது.

மானாவாரி கம்புப் பயிருக்கும் ஏக்கருக்கு 16 : 8 : 0 என்ற விகிதத்தில் 16 கிலோ தழைச் சத்து போடவும், 8 கிலோ மணிச்சத்தும் போட்டு பயிரிட எல்லா விவசாயிகளும் இம்முறையைப் பின்பற்ற பரிந்துரை செய்யப்பட்டு பெரும்பான்மையாகக் கடைப்பிடித்த விவசாயிகள் சென்ற ஆண்டு 1,200 கிலோ மகசூல் கூட மானாவாரிக் கம்புப் பயிரில் பெற்றது மிகச் சிறப்பான செய்தியாகும். அந்த சிறப்பு நிலையைக் கண்ட விவசாயிகள் இந்த ஆண்டு பெருமளவில் மானாவாரி கம்புப் பயிருக்கும் பெருமளவில் உரமிட்டு கம்புப் பயிர் மிகவும் சிறப்பாகப் பயிரிடப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு கம்புப் பயிரிடும் விவசாயிகளுக்குப் பலவித ஆராய்ச்சி யுக்திகளும் சீரிய சாகுபடி முறைகளையும் கடைப்பிடிக்கச் செய்து மானாவாரியாக கே. எம். 1 மற்றும் கே. எம். 2 பயிரிட்டு ஏக்கருக்கு 1,000 கிலோவுக்கும் மேலாக மகசூல் பெற்றிட தென் ஆர்க்காடு மாவட்ட விவசாயிகள் அதிக விளைச்சல் பெற்றிடவும், அதனால் அதிக இலாபம் கிடைத்திடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

—திரு ஆர். எத்திராசன்,
துணை வேளாண்மை இயக்குநர்,
கடலூர்.

வேளாண்மை விளைபொருள்கள் தரம்பிரிப்பு

எஸ். பி. சண்முகம்
மாவட்ட வேளாண்மை அலுவலர்
(விற்பனை)
மதுரை

விளை நிலமெல்லாம் பசுமை! அதனால் விவசாயிகளின் களமெல்லாம் நிறையக் கண்டோம். விரிவாக்கப் பணியாளர்கள் அனைவருக்குமே, தங்களின் பணியால் கழனி நிறையக்கண்டு களிப்புறுகின்றனர். அதனால் அதிக விளைவைக் கண்ட விவசாயிக்கு உள்ளத்திலோ கலக்கம். பெற்ற மகசூலை எப்படி விற்பது எங்கே விற்பது, என்ன விலைக்கு விற்பது என்றெல்லாம் கவலை குடி கொள்கிறது! இக்குறையை நீக்கவும், தான் உற்பத்தி செய்த விளைபொருளைத் தொழில் நுட்ப ரீதியில் தரம் பிரித்து நல்ல இலாப விலைக்கு விற்பதற்கு ஆலோசனையும், அறிவுரையையும் வழங்கும் பணியை வேளாண்மை விற்பனைத் துறை செய்து வருகிறது.

இத்துறையில், விவசாயிகளுக்குத் தங்களின் விளைபொருளை வியாபாரத்திற்கு அனுப்புவதற்கு முன், அப்பொருளின் ஈரம், பதர் முதலியவற்றின் சதவீதம் அறிந்து அதற்கான தர நிர்ணயத்தை விவசாயிக்குத் தெரிவித்தும் அந்தக் தரத்திற்குக் கிடைக்கக்கூடிய விலை விவரத்தையும் முன்கூட்டியே அறிவிக் கப்படுகிறது.

ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கும் மற்றும் கமிஷன் மண்டிகளுக்கும் விற்பனைக்கு வரும் விளை பொருட்களிலிருந்து மாதிரிகள் எடுத்து, அப்பொருள்களின் தரம் கணித்து, தரத்தைப் பற்றிய விவரங்களை விவசாயிகளுக்கு அறிவிக்கப்படுகிறது.

மேலும், நுகர்வோருக்கும் தரமான சுத்தமான, கலப்படமற்ற உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்ய 'அக்மார்க்' முறையில் தரம் பிரிக்கப்படுகிறது.

தரம் பிரிப்பதால் ஏற்படும் நன்மைகள்:

பொதுவாகத் தரம் பிரிப்பதால், உற்பத்தியாளர், உபயோகிப்பாளர் ஆகிய இருசாராருமே பயனடைவதுடன் அவர்களுக்குள் ஒருவித நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது.

உற்பத்தியாளர் தன்னுடைய பொருளின் தரத்தை முன் கூட்டியே அறிந்து கொள்வதால் அவருடைய பொருளுக்குரிய நியாயமான விலையை எவ்வித இடையூறுமின்றி அவரால் பெற முடிகிறது.

அவர் தன்னுடைய பொருளின் தன்மையை முழுவதுமாக உணர்ந்திருப்பதால் வாங்குவோரிடம் உறுதியுடன் பேரம் பேசி நியாயமான விலை பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

உபயோகிப்பவர்களைப் பெருமளவில் பாதிக்கும் கலப்படம் முற்றிலும் தவிர்க்கப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக வியாபாரத்தில் தரம் பிரித்தல் மூலம் ஒரு பொருளுக்கு நிர்ணயிக்கப்படும் விலை நியாயமானதாகவும், பொருள் நிறைந்ததாகவும் அமைகிறது.

எனவே, தரம் பிரிப்பதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இந்திய நாடு முழுவதற்குமாக, மத்திய அரசு 1937-ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை இயற்றி அமலாக்கியுள்ளது. ''வேளாண்மை விளைபொருள் சட்டம் 1937'' என்பது இதன் பெயராகும். பற்பல விவசாயக் கால்நடைப் பொருள்களுக்கு, அதனதன் குண அம்சங்களுக்கேற்ப, தர நிர்ணய அளவுகளைத் தீர்மானிப்பதற்கு இச்சட்டம் மத்திய அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளது. அதில் தரக் குறியீடுகள், தரம் பிரித்துச் சிப்பம் செய்யப்பட்டு முத்திரை பதிப்பித்தல் ஆகியவற்றிற்கான விதிமுறைகளை வகுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் மூலம் குறிப்பிடப்படும் தரங்களுக்கு ''அக்மார்க்'' தரங்கள் (அக்ரிகல்சுரல் மார்க்கெட்டிங்' என்பதன் சுருக்கம்) என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு தரம் பிரிக்கப்படும் பொருள்களுக்குத் தரத்திற்குத் தக்கவாறு அக்மார்க் முத்திரைச் சீட்டுக்களையும், தக்க தரக்குறியீட்டையும், அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அலுவலர்களால் வழங்கப்படுகிறது. இச்சட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரம் மத்திய அரசின் விற்பனை மற்றும் ஆய்வு இயக்ககத்திற்கு (Directorate of Marketing & Inspection to the Government of India) வழங்கப்பட்டுள்ளது. இதன் தலைமை அலுவலர் வேளாண்மை விற்பனை ஆலோசகர் (Agricultural Marketing Adviser) ஆவார். மாநிலங்களில் இந்தச் சட்டம் சம்பந்தப்பட்ட மாநில வேளாண்மை விற்பனைத் துறையுடன் ஒருங்கிணைந்த ஒத்துழைப்புடன் செயல் ஆக்கப்படுகிறது.

தரம் பிரிப்பு வகைகள்:

ஒவ்வொன்றின் உபயோகத்தைப் பொறுத்தும், குறிக்கோளைப் பொறுத்தும் தரம் பிரிப்பதை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

'அக்மார்க்' தரம் பிரிப்பு:

(1) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் விளைபொருள்களுக்கு (2) உள் நாட்டிலேயே உபயோகப்படுத்தப்படும் விளைபொருள்களுக்கு, (3) உற்பத்தியாளர் மட்டத்தில் தரம் பிரிப்பது அல்லது வணிக முறைத் தரம் பிரிப்பு.



'அக்மார்க்' தரம் பிரிப்பு: (உள் நாட்டு உபயோகத்திற்கு)

இம் முறையில் உள்நாட்டில் உபயோகப்படுத்தப்படும் பொருள்களுக்கு அக்மார்க் முறையில், தரம் பிரிக்கப்படுகிறது. தானே விருப்பமுடன் முன்வரும் வியாபாரிகளுக்கு இம் முறையில் தரம் பிரித்துத் தரப்படுகிறது. உணவு எண்ணெய்களான நிலக் கடலை எண்ணெய், நல்லெண்ணெய், நெய், மசால், பொருள்கள், தேன் முதலியனவும் சென்ற ஆண்டு முதல் கடலை மாவு, சீயக்காய்த்தூள் முதலியவைகளும் தரம் பிரித்துத் தரப்படுகின்றன.

மேலும், சில பொருட்களுக்கு மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாடு இல்லாமல் ''அக்மார்க்'' முறையில் தரம் பிரிக்கப்படுகின்றது. அவை, அரிசி, உருளைக் கிழங்கு, முட்டை, சாத்துக்குடி, மாம்பழம் போன்ற பழவகைகள், வெல்லம், மிளகாய் வத்தல், பருப்பு வகைகள் தரம் பிரித்துத் தரப்படுகின்றன.

இம்முறைப்படி, நெய், எண்ணெய் மற்றும் மசாலாப் பொருள்கள் போன்றவற்றைத் தரம் பிரித்து அவற்றின் குண அம்சங்களைப் பகுத்து ஆராய்ந்து தரக் குறியீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மதுரை மாவட்டத்திற்கு மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு ஒரு 'அக்மார்க்' தரம் பிரிப்பு ஆய்வகம் இயங்கி வருகிறது. இவ்வாய்வகத்தில் அனுபவம் மிக்க முழு அளவு பயிற்சி பெற்ற துணை வேளாண்மை அலுவலர் (வேதியல்) பணிபுரிகிறார்.



அக்மார்க் தரம் பிரிக்கப்பட்ட பொருள்களுக்கு - அங்கீகரிக்கப்பட்ட பொருள்களுக்கு முத்திரை அல்லது லேபிள் கட்டணமும், தரம் பிரிப்புக் கட்டணமும் மிகக் குறைந்த அளவில் வசூலிக்கப்படுகிறது.

அக்மார்க் முறைப்படி கடந்த 1977-78 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அளவில் தரம் பிரிக்கப்பட்டு நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

வணிக முறை தரம் பிரிப்பு:

நுகர்வோருக்கும், வணிகருக்கும் பயன்படும் அக்மார்க் முறைத் தரம் பிரிப்பு அல்லாமல் விவசாயிகளும் பயனடையும் வகையில் இத் தரப் பிரிப்பு முன்சொன்னபடி விவசாயி உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்குச் செய்யப்படுகிறது.

தானே முன்வரும் விவசாயிகளுக்குத் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு எந்தவிதக் கட்டணமும் இன்றி, கட்டாயமும் இன்றி விவசாயிகளின் சம்மதத்துடன் செய்யப்படுகின்றது. இத் தரம் பிரிப்பு முறை 1937-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் சட்டத்திற்குட்பட்டதல்ல. இம் முறையின் சிறப்பான அம்சம், அது உற்பத்தியாளருக்கு தர உணர்வினை ஊட்டும் விதத்தில் விரிவாக்கப் பணியையும், கற்பிக்கும் பணியையும் செய்வதாகும். இம்முறையில் பயிற்சி பெற்ற தரம் பிரிப்பாளர் ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும், பணியாற்றி அங்கு வரும் விளை பொருள்களிலிருந்து மாதிரிகள் எடுத்து, வணிக முறையில் ஈரப்பதமானியின் மூலம் (Moisture Meter) ஈரப்பசை அறிந்தும், கல், மண், தூசி போன்ற அயல் பொருட்கள் பூச்சி, பூஞ்சாளம் தாக்கிக் கெட்டுப்போனவை, அதில் கலந்துள்ள இதர ரகங்களின் அளவு, முதிர்ச்சி அடையாதவற்றின் அளவு முதலிய பல வகையான குறைபாடுகளை கணக்கில் கொண்டு அதற்கேற்றவாறு தரம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன்படி நெல், நிலக் கடலைப் பருப்பு, நிலக்கடலைக் காய், எள் விதைகள், மிளகாய் வத்தல், பருத்தி, கரும்பு, வெல்லம் முதலிய பொருள்களுக்குத் தரம் பிரிக்கப்படுகிறது.

கடந்த 1977-78ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அளவு தரம் பிரித்துச் சாதனைகள் அடையப்பட்டுள்ளன.

மேற்சொன்ன அக்மார்க் தரம் பிரிப்பு மற்றும் வணிக முறை தரம் பிரிப்பு முறைகளைத் தவிர பருத்தி விவசாயிகள் பயனடையும் வகையில் மதுரை மாவட்ட தேனியை தலைமையிடமாகக் கொண்டு பருத்தி தரம் பிரிப்பு நிலையம் (Kapas Grading Centre) இயங்கி, பருத்திச் சாகுபடியாளர்களுக்கும், பருத்தி வாங்குவோருக்கும் ஒரு பாலமாக அமைந்து செயல்பட்டு வருகிறது. இம்முறைப்படி விற்பனைக்கு வரும் பருத்திகளிலிருந்து மாதிரிகள் எடுத்து நுட்பமாக கருவிகளைக் கொண்டு பருத்தியின் நிறம், சுத்தத் தன்மை, ஈரச்சதவீதம் போன்ற பல்வேறுபட்ட குண அம்சங்களைச் சோதித்து தரம் பிரிக்கப்படுகிறது. பின் அந்தந்தத் தரத்திற்கு ஏற்றவாறு தர நிர்ணய அட்டை (Grading Card) வழங்கப்படுகிறது. இந்தத் தர நிர்ணய அட்டையிலுள்ள விவரங்களை விவசாயியும், வியாபாரியும், அறிந்து, அப்பருத்தியின் தரத்தைக் கணக்கில் கொண்டு, விலை நிர்ணயம் செய்து வியாபாரி மேற்படி பருத்தியை வாங்க ஏதுவாகவும், தன்னுடைய பருத்தியின் தரத்திற்கான விலைதான் கிடைத்துள்ளது என விவசாயி மன நிம்மதியும், நம்பிக்கையும் ஏற்படவும் இந்நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையங்களில் பயிற்சியும், தேர்ந்த முன் அனுபவமும் பெற்ற துணை வேளாண்மை அலுவலர் (பருத்தி தரம் பிரித்தல்) ஒருவரும், இரண்டு பயிற்சி பெற்ற தரம் பிரிப்பாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். கடந்த 1977-78ஆம் ஆண்டில் தேனி பருத்தி தரம் பிரித்தல் நிலையத்தில் கீழ்க்கண்ட அளவு பருத்தி தரம் பிரித்துத் தரப்பட்டுள்ளது.

விவசாயிகள், வியாபாரிகள் அனைவரும் மேற்கூறிய திட்டங்களின் நோக்கத்தையும் அதனால் விவசாயியும், வியாபாரியும், உபயோகிப்போரும் பெறும் பயனை உணர்ந்து முழு அளவில் திட்டங்கள் வெற்றிபெற ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்.

குழந்தைகள் காப்பகங்கள்

குழந்தைகளுக்குச் சுகாதாரம், உணவு பற்றி மட்டுமல்லாது, சமூகம் மற்றும் மன வளர்ச்சி ஆகிய எல்லா வளர்ச்சிக்கும் குழந்தைப்பருவம் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது என, குழந்தை வளர்ப்பு மற்றும் வளர்ச்சித்துறை வல்லுநர்கள் ஒருமித்த கருத்துக் கொண்டுள்ளனர்.

குழந்தைநலம் மற்றும் வளர்ச்சியிலும் முன்னோடிக் கல்வியில் குழந்தைகள் காப்பகங்களின் வெற்றிகரமான முக்கியத்துவமும், இளம் சிறார்களிடையே காணப்படும் அதிக மரணம், ஆரோக்கியமின்மை, சத்துணவுக் குறைவு ஆகியவற்றைப் போக்க, பள்ளி செல்லும் சிறுவர்களைப்போல, இளம் சிறுவர்களோடு தொடர்பு கொள்ள முடியாத நிலைமை, அதன் பணியும், பணிபுரியும் தாய்மார்களின் குழந்தைகளுக்குப் பகல் பாதுகாப்பு நிலையங்களாகவும் பயன்படும் குழந்தைகள் காப்பகங்களின் இன்றியமையாமை பற்றிய பரவலான விழிப்புணர்ச்சி காரணமாக, தமிழக அரசு குழந்தைகள் காப்பகத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

குழந்தைகள் காப்பகங்கள்

இம்மாநிலத்தின் 14 மாவட்டங்களிலும் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் பரவலாக நடைபெறும் 4083 குழந்தைகள் காப்பகங்கள் மூலம் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணரலாம். இத்திட்டம் இம் மாநிலத்தில் மூலை முடுக்குகளிலுள்ள கிராமப்புறங்களிலும், குக்கிராமங்களிலும், மலைப் பகுதிகளிலும், போக்குவரத்து வசதியற்ற பழங்குடிகள் வாழ் பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

குழந்தைகள் காப்பகத் திட்டம், சமூக நலத்துறையினால் 1962-ல், 21 ஊராட்சி ஒன்றியங்களில் 747 குழந்தைகள் காப்பகங்களுடன் துவக்கப்பட்டது. அடுத்த மூன்றாண்டுகளில் மேலும் 293 குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட்டன. இவ்விதம் இத் திட்டம் மொத்தம் 47 ஊராட்சி ஒன்றியங்களில் அமலாக்கப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் நான்கு ஆண்டுகளில் ஆண்டுக்கு 200 வீதம் மேலும் 800 குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட்டன. இதே காலத்தில் இந்திய அரசு அனுமதித்த, படித்து வேலையற்றோருக்கான விரைவுத் திட்டத்தின்கீழ் 604 குழந்தைகள் நல நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் 604 படித்த—வேலையற்ற பெண்களுக்குக் குழந்தை நல அமைப்பாளராக வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. இவற்றுடன் கூட சென்னை நகர குடிசைப் பகுதிகளிலும் 25 பகல் பாதுகாப்பு நிலையங்கள் துவக்கப்பட்டன. இவற்றில் 11 பகல் பாதுகாப்பு நிலையங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் துவக்கப்

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

செல்வி பி. டி. சரசுவதி

பட்ட நிலையங்களுடன் இணைக்கப்பட்டன. எனவே, தற்சமயம் 14 நிலையங்கள் சென்னை நகரில் செயல்படுகின்றன.

இவ்வாண்டு தமிழக அரசு 159 குழந்
தைகள் காப்பகங்களும் மற்றும் அரிசனங்களுக்
கான 50 குழந்தைகள் காப்பகங்களும் துவக்க
அனுமதித்துள்ளது. இவையன்றி, குழந்
தைகள் காப்பகங்கள் தனிப்பட்ட பிரிவினருக்
காகவும் துவக்கப்பட்டுள்ளன.

அரிசனக் குடியிருப்புகளிலுள்ள குழந்தைகள் காப்பகங்கள்:

அரிசனக் குழந்தைகளின் நலனுக்காக 1975-76-ஆம் ஆண்டு அரிசனக் குடியிருப்புகளில் குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
வெளிநாடு சுற்றுப்பயணம்
வெற்றி பெற்று தாயகம் திரும்பியமைக்கு
நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள் !

புதுக்கோட்டை கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிட்.

கீழராச வீதி. [டவுன் பாங்க் மாடி] புதுக்கோட்டை.

புதுக்கோட்டை நகரம், அதன் எல்லையிலிருந்து ஒரு மைல் சுற்றளவிற்குள் உள்ள பகுதிகளில் காலி மனையிடம் உள்ளவர்களுக்கு புதிய வீடு கட்டவும், வீடு உள்ளவர்களுக்கு வீடு அபிவிருத்தி மற்றும் கூடுதல் கட்டிடம் கட்டவும் "கடன் வசதி" அளிக்கும் ஒரே ஸ்தாபனம்

'புதுக்கோட்டை கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்' ஒன்றே

நிர்வாகக் குழு

தலைவர் : திரு. S. V. சிவசாமி சேர்வை அவர்கள்
உப-தலைவர் : ,, K. சிதம்பரம்
உறுப்பினர்கள் : ,, R. ராஜகோபால அய்யங்கார்
,, ,, G. மலையப்பன்
,, ,, S. ஆறுமுகம் சேர்வை
,, ,, S. V. S. வெங்கடாஜலம்
,, ,, M. உத்திராபதி
,, ,, S. V. S. வைரவன் சேர்வை

S. V. சிவசாமி சேர்வை
தலைவர்.

S. K. பெரியசாமி, B. COM.,
காரியதரிசி.

ANNA PUBLICITIES. 7/78

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெளிநாடு சென்று
தாயகம் திரும்பியதற்கு இனிய வாழ்த்துக்கள் !

புதுக்கோட்டை டவுன் பாங்கு லிட்.,
புதுக்கோட்டை — 622001

புதுக்கோட்டை நகரில் உள்ள மற்றெல்லா வங்கிகளைவிட 'டிபாசிட்"களுக்கு அதிக வட்டி தரும் ஒரே வங்கி. முதலீடு செய்து பயனடைய வேண்டுகிறோம். 'பிக்சட் டிபாசிட்'டுகளுக்கு 10% வரை வட்டி வழங்குகிறோம்.

நிர்வாக சபை உறுப்பினர்கள்

திரு. S. V. சிவசாமி சேர்வை — தலைவர்

திரு. S. அய்யாச்சாமி,
,, S. ஆறுமுகம் சேர்வை
,, A. தியாகராச காடுவெட்டியார்
,, H. ஆசீர்வாதம் என்ற தங்கச்சாமி
,, M. உத்திராபதி என்ற பதி
,, G. சேதுராம பிள்ளை
,, R. S. காசிநாதன்

திரு. G. மலையப்பன்
,, R. ராஜகோபால அய்யங்கார்
,, K. வாசு தேவன்
,, A. K. இஸ்மாயில்
,, K. R. சுப்பையா
,, அரசு என்ற S. ரெங்கசாமி
,, P. செல்வராசு
(C.S.R. அரசினர் பிரதிநிதி)

S. V. சிவசாமி சேர்வை,
தலைவர்.

A. V. ஸ்ரீனிவாசன், B.COM., H.D.C.
காரியதரிசி.

ANNA PUBLICITIES /6/78

டுள்ளன. இதுவரை அரிசன குடியிருப்புகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 200 குழந்தைகள் காப்பகங்களில் 50 குழந்தைகள் காப்பகங்கள் அரிசன நலத்துறை நிதியுடன் நடைபெறுகின்றன. 150 குழந்தைகள் காப்பகங்களுக்கு ரூ. 8,000 மதிப்புள்ள கட்டடங்கள் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் கட்டித்தரப் படுகின்றன.

1978-79-ஆம் ஆண்டில் மேலும் 100 கட்டடங்கள் கட்டப்பட்டு குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட இருக்கின்றன. செங்கை மாவட்டத்திலுள்ள சோமங்கலம் என்னுமிடத்தில் கிராமப்புறச் சீரமைப்புப் பணித் திட்டத்தின்கீழ் குழந்தைகள் காப்பகங்கள், 2 அரிசன நலக்குடியிருப்புகளில் கட்டட வசதியுடன் துவக்கப்பட்டுள்ளன. இவற்றுடன்கூட இந்தியக் குழந்தைகள் நலக் குழுவின் மூலம் (Indian Council of Child Welfare) நடத்தப்படும் குழந்தைகள் காப்பகங்களுக்கும் கட்டட கட்டம் அரசு நிதி உதவி அளித்துள்ளது.

பிற்பட்டோர் நலத்துறையின் நிதியுடன் ஜில் நகரிலுள்ள பழங்குடியினரின் குடியிருப்புகளிலும் குழந்தைகள் காப்பகங்கள் 5 துவக்கப்பட்டுள்ளன.

மலைப்பகுதிகளில் குழந்தைகள் காப்பகங்கள் :

பனியா குழந்தைகளுக்காக நீலகிரி மாவட்டத்தில் 1976-77-ல் 10 குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் நலத்திட்டத்தின் கீழ் 1976-77ஆம் ஆண்டுகளில் தென் ஆர்க்காடு மாவட்டம் கல்ராயன் மலை, வட ஆர்க்காடு மாவட்டம் ஜவ்வாது மலை, சேலம் மாவட்டம் பச்சைமலை, கல்ராயன் மற்றும் அரனூத்துமலை, தர்மபுரி மாவட்டம் சித்தேரி மலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் பச்சைமலை ஆகிய பகுதிகளிலுள்ள மலைவாழ் மக்களின் குழந்தைகள் நலனுக்காக குழந்தைகள் காப்பகங்கள் 49 துவக்கப்பட்டுள்ளன.

1978-79-ல் ஆதிவாசி குழந்தைகளுக்காக குழந்தைகள் காப்பகங்கள் 25 துவங்க அரசு அனுமதியளித்துள்ளது. தென் ஆர்க்காடு வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி மற்றும் திருச்சி மாவட்டத்திலுள்ள மலைப்பகுதிகளில் குழந்தைகள் காப்பகங்கள் மேலும் 30 துவக்கப்பட இருக்கின்றன.

அகதிகளின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகங்கள் :

அகதிகளின் குழந்தைகளுடைய உணவுத் தரத்தை உயர்த்தும் நோக்கத்தில் மண்டபம், கும்மிடிபூண்டி, நெய்வேலி மாநில பண்ணைக் கழகம், திருச்சியிலுள்ள கொட்டம்பட்டு முகாம், சிவகங்கையிலுள்ள ஒ. புதூர் ஆகிய அகதிகள் முகாம்களில் குழந்தைகள் காப்பகங்கள் 5 துவக்கப்பட்டுள்ளன.

குடும்பக் குழந்தைகள் நலத் திட்டம் :

மத்திய சமூக நல வாரியம், தமிழக சமூக நல வாரியத்தின் மூலம் வில்லிவாக்கம், ஆத்தூர், பெரியநாய்க்கன்பாளையம் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் 1971 முதல் குடும்பக் குழந்தை நலத்திட்டங்கள் நான்கைத் துவக்கியது. குழந்தைகள் காப்பகங்கள், இளம் தாய்மார்களுக்குப் பயிற்சி முகாம் நடத்துதல் ஆகியவை இத்திட்டப்பணிகளாகும். ஆறு ஆண்டுக் காலத்திற்கு இத்திட்டப் பணிகளுக்கு, மத்திய சமூக நல வாரியத்தின் உதவி கிட்டும். ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகு, இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு இடத்திலும் ஆரம்பிக்கப்பட்ட 6 நிலையங்களும், மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டு தமிழக

தமிழக அரசுக்கு மத்திய நிபுணர்கள் பாராட்டு!

நவம்பர் முதல் வாரத்தில் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட புயல், நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தமிழக அரசு சிறப்பாகப் பணிபுரிந்துள்ளது என்று மத்திய நிபுணர் குழுத் தலைவர் திரு சோதி அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட உதகைப் பகுதியையும், மத்திய விவசாயத் துறைச் செயலாளர் திரு சோதி அவர்கள் தலைமையிலான குழு ஐந்து நாட்கள் சுற்றிப் பார்த்தது.

நீலகிரியில் ஏற்பட்ட சேதம் மிகவும் பயங்கரமானது என்றும், இதற்கு உடனடியான நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், நிரந்தரப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய குழு, கருத்து தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தபின் சென்னையில் 29.11.'78 அன்று, தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள், வருவாய் வாரிய உறுப்பினர் திரு கே. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள், துயர் துடைப்பு ஆணையாளர் திரு நடராசன் அவர்கள், மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடந்தது.

நிலச்சரிவுப் பகுதிகளிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், தமிழக அரசின் பல்வேறு துறைகள், வேண்டிய உடனடி நடவடிக்கைகள் எடுத்ததை நிபுணர் குழுத் தலைவர் பாராட்டினார். அரசு, உரிய சமயத்தில் எடுத்த முன் எச்சரிக்கை நடவடிக்கையினால் பெரும் சேதம் தடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

புயல், வெள்ளச் சேதப் பகுதிகளில் அரசின் அதிகாரிகள் சுறுசுறுப்பாகப் பணி புரிவதைத் தாம் நேரடியாகப் பார்த்ததாகவும் அவர் கூறினார்.

திரு ஆரூரான் சர்க்கரை ஆலை

வடபாதிமங்கலம் — தஞ்சாவூர் மாவட்டம்

விவசாயிகளுக்கு ஓர் நற் செய்தி!

கரும்பு நடவு செய்து ஆலையினரால் கொடுக்கப்படும்
கணிசமான மான்யத் தொகைகளைப் பெறுங்கள்.

1. முன்பட்ட நடவு மான்யம் :

(அ) ஆலையிலிருந்து 30 மைல்களுக்குட்பட்ட தொகுதி :

டிசம்பர் 78, ஜனவரி 79 நடவிற்கு	ரூ. 250	(ஏக்கருக்கு)
பிப்ரவரி 79 நடவிற்கு	ரூ. 200	(ஏக்கருக்கு)

(ஆ) ஆலையிலிருந்து 30 மைல்களுக்கு அப்பால் உள்ள தொகுதி :

டிசம்பர் 78, ஜனவரி 79 நடவிற்கு	ரூ. 200	(ஏக்கருக்கு)
பிப்ரவரி 79 நடவிற்கு	ரூ. 150	(ஏக்கருக்கு)

2. புதுரக கரும்பு நடவு மான்யம் :

ஏப்ரல் 79, மே 79, ஜூன் 79 மாதங்களில் கோ 671 நடவிற்கு	ரூ. 300	(ஏக்கருக்கு)

3. 'டிரான்ஸ்போர்ட்' மான்யம் :

ஆலையிலிருந்து 30 மைல்களுக்கு மேல் உண்டாகும் லாரி வாடகையை ஆலையினர் ஏற்றுக் கொள்வார்கள்.

4. மான்யத் தொகை வழங்குவதற்கான நிபந்தனைகள் :

(அ) ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்ச மகசூல் 27 டன்கள் இருக்க வேண்டும்.

(ஆ) கம்பெனி வெட்டு உத்திரவுப்படி காலத்தில் கரும்பு வெட்டி சப்ளை செய்ய வேண்டும்.

மேற்கொண்டு விபரங்களுக்கு எங்கள் கிளை அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாக மேலாளர்,
திரு ஆரூரான் சர்க்கரை ஆலை,
வடபாதிமங்கலம்.

ANNA PUB/2811/8/AS/11178/O.

அரசின் நிதி உதவியுடன் குழந்தைகள் காப்பகங்களாகச் செயல்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த குழந்தைகள் நல செயல் முறைத் திட்டம்:

இத்திட்டம் பூவிருந்தவல்லியில், இந்திய அரசின் முழு உதவியுடன் ஒரு முன்னோடித் திட்டமாக 1962-ல் ஆரம்பிக்கப்பட்டது. 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த பணி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 50 குழந்தைகள் காப்பகங்களும், 10 இளஞ்சிறார் காப்பகங்களும் திறக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திலும் 40 குழந்தைகளும், இளஞ்சிறார் காப்பகத்தில் 6 மாதம் முதல் 2½ வயது வரையுள்ள 10 குழந்தைகளும் சேர்க்கப்படுகின்றனர். ஐந்தாண்டுகளுக்குப் பின் இத் திட்டம் மாநில அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டு தலைமை அமைப்பாளரின் கண்காணிப்பில் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு ஒரு மருத்துவர், ஒரு பொது சுகாதாரச் செவிலியர், 2 சுகாதாரப் பார்வையாளர்கள், சுகாதார மேற்பார்வையாளர், 2 மருத்துவ உதவியாளரும் செவிலியர்களும் கூடிய ஒரு மருத்துவக் குழு பணிபுரிகின்றது. 2 தாய் சேய் மருத்துவ மனைகளும் இத்திட்டத்தின் கீழ் நடைபெறுகின்றன. இம்மருத்துவப் பணியாளர்கள் பூவிருந்தவல்லி பொதுச் சுகாதார உதவி இயக்குநரின் கீழ் பணிபுரிகின்றனர்.

பாலாஹார் உணவுத் திட்டம்:

எல்லாக் குழந்தைகள் காப்பகங்களிலும் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது. மொத்தம் உள்ள 4083 குழந்தைகள் காப்பகங்களில், சுமார் 1002 குழந்தைகள் காப்பகங்களில் 'கேர்' நிறுவன உதவியுடன், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் உணவுத் திட்டம் நடைபெறுகிறது. இந்தக் காப்பகங்களில் 120 பேருக்கு (40 குழந்தைகள் காப்பகக் குழந்தைகள், 40 மற்ற குழந்தைகள், 40 பாலூட்டும் அல்லது கர்ப்பிணி தாய்மார்கள்) உணவளிக்கப்படுகிறது. மற்ற செலவினங்களுக்காக நபர் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 3 காசு வீதம் 300 நாட்களுக்கு அளிக்கப்படுகிறது. பாலாஹார் உணவுத் திட்டம் 'கேர்' நிறுவன உதவியுடன் இவ்வியக்கத்தின் கீழ் நடைபெறுகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் 70 பேருக்கு (60 குழந்தைகள் காப்பகக் குழந்தைகளும், 10 பாலூட்டும் தாய்மார்களுக்கும் அல்லது கர்ப்பிணிகளுக்கும்) பாலாஹார் உணவு அளிக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் 80 கிராம் பாலாஹாரும் 7 கிராம் சாலட் எண்ணெய்யும் வழங்கப்படுகிறது. இவை உப்புமா, புட்டு, கிச்சிடியாகச் சமைத்து வழங்கப்படுகிறது. இவ்வுணவைச் சமைப்பதற்கான மற்றச் செலவினங்களுக்குத் தலைக்கு 1 நாளைக்கு 4½ காசு வீதம் ஆண்டின் 300 நாட்களுக்கும், போக்குவரத்துச் செலவினமாக ஒரு நிலையத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10-ம் தமிழக அரசு வழங்குகிறது.

குழந்தைகள் காப்பகங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்:

அநேகமாகப் பாலர் பள்ளிகள் தயாள குணமுள்ள கிராமப் பொதுமக்களால் வழங்கப்படும் இலவச கட்டடங்களில் நடைபெறுகின்றன. போதிய இடவசதியற்ற இடங்களில் நடைபெறும் குழந்தைகள் காப்பகங்களுக்கு 'கேர்' நிறுவன உதவியுடன் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

'கேர்' நிறுவனம் 1974-75-ஆம் ஆண்டிலிருந்து 1978-79-ஆம் ஆண்டிற்குள் 1000 கட்டடங்கள் கட்ட நிதி உதவியளிக்க ஒப்புக் கொண்டுள்ளது. இதற்கான அரசு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 500 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 150 கட்டடங்கள் அரிசனக் குடியிருப்புகளில் அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் கட்டப்பட்டுள்ளன. இதற்கான நிதி உதவி விவரம் வருமாறு:

	ரூபாய்
அரசின் பங்குத் தொகை:	3,000
ஊராட்சி ஒன்றியப்பங்குத்தொகை	3,000
* 'கேர்' நிறுவனப் பங்குத் தொகை	3,000

முன்பு 'கேர்' நிறுவனப் பங்குத் தொகை ரூபாய் 2000 ஆக இருந்தது. தற்சமயம் அது ரூ. 3,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கல்வி உபகரணங்கள் மீண்டும் அளித்தல்

குழந்தைகள் காப்பகங்கள் துவங்கும் போது ரூ. 500 மதிப்புள்ள கல்வி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அளிக்கப்படுகின்றன. 5 ஆண்டுகளுக்குப் பிறகு பயனற்ற உபகரணங்களைத் தள்ளுபடி செய்யவும், அதனிடத்தில் மீண்டும் புதிய உபகரணங்களை வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது படிப்படியாக அமலாக்கப்படுகிறது.

இவ்வாண்டு 354 குழந்தைகள் காப்பகங்களுக்கு மீண்டும் கல்வி உபகரணங்கள் அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெறாத பாலசேவிகாக்களுக்குப் பயிற்சி அளித்தல்

இக் குழந்தைகள் காப்பகங்களை நடத்த தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் உள்ளூர் பெண் சிறப்புத்தகுதி பெற 2 மாதம் பயிற்சி பெறுவர். ஆனால், இந்த பாலசேவிகாக்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் மிகக் குறைவாயிருப்பதாலும், திருமணம், உடல் நலக் குறைவு, மற்றும் மரணம் முதலிய பல காரணங்களாலும் சில பாலசேவிகாக்கள் வேலையை விட்டுச் சென்றுவிடுகின்றனர். எனவே, பதிலாக நியமிக்கப்படும் பயிற்சியில்லாத பாலசேவிகாக்களுக்குத் தொடர்ந்து பயிற்சியளிக்கத் தேவையாயுள்ளது. இந்த ஆண்டும் 221 பயிற்சியில்லாத பாலசேவிகாக்களுக்குப் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

சிறப்புத் திட்டங்கள்:

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்:

இந்திய அரசின் பொறுப்பில் தமிழகத்தில் சென்னை நகரம், தர்மபுரி மாவட்டத்திலுள்ள தளி, மதுரை மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டை ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் புகுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு திட்டத்திலும் 100 குழந்தைகள் காப்பகங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு திட்டத்திலும் 6 மாதம் வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கும், பாலூட்டும் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் சத்துணவு அளித்தல், மருத்துவப் பரிசோதனை, தடுப்பூசி போடுதல், மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல், முன்னோடிக் கல்வி அளித்தல் ஆகிய பணிகள் நடைபெறும்.



சத்துணவு அளிக்கும் பணி, மாநில அரசின் பணியாகும். 15 வயது முதல் 44 வயது வரையிலுள்ள பெண்களுக்குப் பயனளிக்கும் வகையில் நடைமுறைக் கல்வி அளிக்கும் நவீனத் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு திட்டத்தில் 100 குழந்தைகள் காப்பகங்களிலும், 40 குழந்தைகளுக்கு முன்னோடிக் கல்வியும், 5 வயதுக்கு உட்பட்ட 30 குழந்தைகள் மற்றும் 30 பாலூட்டும் அல்லது கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சத்துணவும் அளிக்கப்படுகிறது. இவ்வொருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி நிலையத்தில் நடைபெறும் உணவுத் திட்டத்தில், உள்ளூர் உணவுப் பொருட்களே பயன்படுத்தப்படும். ஒவ்வொரு அங்கன்வாடியும் பயிற்சியளிக்கப்பட்ட அங்கான்வாடிப் பணியாளரால் ஒரு ஆயாவின் உதவியுடன் நடத்தப்படுகிறது.

எழுதப்படிக்கத் தெரியாத பெண்களுக்கு கல்வியறிவுத்திறன் அளித்தல், இத்துறையின் சமூக நல முயற்சிகளில் அவர்களைப் பங்கேற்கச் செய்தல், நவீன முறையிலுள்ள சுகாதாரம், சுற்றுப் புறச் சுத்தம், குடும்பக் கட்டுப்பாடு முதலியவை பற்றி அதிகமாக அறிந்து சொள்ளச் செய்தல், சத்துணவு பற்றிய முக்கியத்துவம், வீட்டுப் பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு பற்றிய அடிப்படைத் தேவைகளில் பயிற்சி அளித்தல், நாட்டின் சுதந்தரப் பிரஜையாகச் செயலாற்றும் வண்ணம் பெண்களிடையே பழைய பழக்க வழக்கங்களை மாற்றுதல், புதியதாக அறிந்து கொண்ட தொழில், கைத்தொழில் முதலியவற்றில் நிலையான அக்கறை செலுத்தும்படி செய்ய தொடர்ந்து நடவடிக்கை எடுத்தல் முதலியன ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் பகுதியான நடைமுறைக் கல்வித் திட்டத்தின் பல்வேறு பணிகளாகும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்குக் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அதிகாரி பொறுப்பாளராவர். அங்கன்வாடிகளை மேற்பார்வையிட இவருக்கு உதவியாக 5 மேற்பார்வையாளர்கள் உள்ளனர். ஒரு மருத்துவர், 8 தாய்மை மருத்துவமனை செவிலியர், ஒரு பெண் சுகாதாரப் பார்வையாளர் அடங்கிய ஒரு மருத்துவக் குழுவும் இத்திட்டத்தின் கீழ் இயங்குகிறது. மருத்துவப் பணியாளர்கள் குழு, ஆரம்பச் சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டு, இத்திட்டத்தில் வகுக்கப்பட்ட மருத்துவப் பணிகளைச் செய்து வருகிறது. சென்னை நகரத்தில் மருத்துவப் பணியாளர்கள் குழு குழந்தைகள் நல வளர்ச்சி நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1978-79-ஆம் ஆண்டில் மேலும் இத்தகைய நான்கு திட்டங்களைத் துவக்குவதற்கு இந்திய அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டங்களை அமைப்பதற்குரிய இடங்களை முடிவு செய்ய மாநில அரசின் ஆணை வழங்கப்பட இருக்கிறது.

தாய் மற்றும் சேய் நலப் பணித் திட்டம்:

தாய் மற்றும் சேய் நலத்திட்டமும், உலக வங்கியின் உதவியுடன் நடைபெறும் சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தின் ஒரு விரிவாகும்.

1977-78 முதல் 1980 வரையிலுள்ள 3 ஆண்டுக் காலத்தில் வில்லிவாக்கம், அரும்பாக்கம் மற்றும் கொடுங்கையூர் பகுதிகளில் 200 குழந்தை நல நிலையங்கள் கொண்டு இரண்டு திட்டங்கள், இத்திட்டத்தின்கீழ் துவங்கப்படும். இந்தக் குழந்தை நல நிலையங்களுடன் 30 குழந்தைகளுக்கான இளஞ்சிறார் காப்பகங்களும் இணைக்கப்படும். 1978-79 ஆம் ஆண்டில் மேலும் 70 குழந்தைகள் காப்பகங்கள் துவங்கப்படும். 1979-80-ல் 100 குழந்தைகள் காப்பங்கள் கொண்ட 2-வது திட்டம் துவக்கப்படும்.

இந்தத் திட்டம், சமூகநல இயக்குநரால் அமல் நடத்தப்படுகிறது. உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெறும் இந்தத் தாய் மற்றும் சேய் நலப் பணித் திட்டத்திற்குச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், ஒத்துழைப்பு நல்கும் நிறுவனமாகும்.

பல்வேறு குழந்தைகள் காப்பகங்களின் விவரங்கள்:

1.	மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் மூன்று ஆண்டுத் திட்டங்களின்போது துவக்கப்பட்டவை ...	1040
2.	ஒருங்கிணைந்து குழந்தைகள் நல செயல்முறைத் திட்டம் பூவிருந்தவல்லி ...	50
3.	நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்கப்பட்டவை ...	800
4	விரைவுத் திட்டத்தின்கீழ் துவக்கப்பட்ட குழந்தை நல நிலையங்கள் ...	604
5.	குடும்ப குழந்தை நலத் திட்டம்.	24
6.	நகரத்திலுள்ள பகல் பாதுகாப்பு நிலையங்கள் ...	14
7.	ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்கியவை (இதில் அரிசன நலப் பள்ளிகளும் சேர்க்கப்பட்டுள்ளன) ...	513
8.	மலைவாழ் மக்கள், ஆதிவாசிகள், பனியா மக்கள் இவர்களுக்கான குழந்தைகள் காப்பகங்கள் ...	114
9.	ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ...	300
10.	தாய் மற்றும் சேய் நலத்திட்டத்தில் துவக்கப்பட்டவை ...	30
11.	சத்துணவுத் திட்டத்துடன் ஊரக வளர்ச்சித் துறையிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் ...	594
	மொத்தம் ...	4083

1977 - 78-ல் தமிழகத்தில் வளர்ச்சிப் பணிகள்

திரு கோவை. செழியன்

துணைத் தலைவர்

மாநிலத் திட்டக்குழு

தமிழகத்தின் இந்த ஆண்டு (1977-78) திட்டப் பணிகளை செயல்படுத்துவதில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம்-ஒன்று-வழக்கமாக 1978-79-ஆம் ஆண்டில் முடிவடைய வேண்டிய அய்ந்தாண்டுத் திட்டத்தை 1978-ஆம் ஆண்டோடு முடித்துக் கொண்டதாகவும், அதன் பின் மத்திய திட்டக் குழு எடுத்த முடிவின்படி தொடர் திட்டத்தை (Rolling Plan Corcept) மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவதாக - மக்களின் பேராதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கின்ற புரட்சித் தலைவர் திரு எம். ஜி. ஆரின் ஆட்சியில் பெரிய மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மூன்றாவதாக, இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகி சீர்குலைந்த விவசாயம், போக்குவரத்து, பாசன வசதி இவைகளை பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் இந்த ஆண்டு ஏற்பட்டு விட்டது. தமிழகத்தில் 1977-78-இல் இந்த அரசு செயல்படுத்திய பல்வேறு வளர்ச்சிப் பணிகளைப் பற்றிச் சில சொல்ல விரும்புகின்றேன்.

இந்த ஆண்டுத் திட்டச் செலவு ரூ. 296.64 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெள்ளக் கொடுமையினுல் கிட்டத்தட்ட 34 கோடி ரூபாய் செலவு அதிகமாகிவிட்டது. ஒரு நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைய வேண்டுமானால் அடிப்படை வளர்ச்சிகளைப் பெருக்குவதற்கு முதலிடம் தரவேண்டும். தொழில் துறையானாலும், விவசாயத் துறையானாலும் அதற்கு ஆதாரமாக மின்சாரம் அமைகின்றது. அதன் வளர்ச்சியைப் பொறுத்துத்தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அடங்கியிருக்கின்றது.

1977-78 அம் ஆண்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்ட தொகையில் மூன்றில் ஒரு பகுதியை மின்சார வளர்ச்சிக்கு ஒதுக்கியிருக்கின்றோம். அது சுமார் 98 கோடி ரூபாய் வருகின்றது. அய்ந்தாவது திட்ட ஆரம்பத்தில் கோடையாறு, நடுவட்டம், குந்தா நான்காவது கட்டம், சுருளியாறு ஆகிய மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன. கோடையாறு, நடுவட்டம் திட்டங்கள் ஏற்கெனவே முடிந்து விட்டன. இந்த ஆண்டு சுறுசுறுப்பாகப் பணியாற்றியதன் மூலம் சுருளியாறு, குந்தா திட்டங்கள் அண்மையில் மின்சார உற்பத்தியைத் தொடங்கின. இந்த இரண்டு திட்டங்கள் மூலம் 145 MW மின்சாரம் அதிகம் கிடைக்கின்றது. அய்ந்தாவது திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட தாமிரபரணி, நெல்லித்துறை, மேல்கொடுமுண்ட-லோன்-வேலி ஆகிய மின் திட்டங்களுக்கு மீண்டும் நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அனல்மின் திட்டங்களைப் பொறுத்த வரையிலும் எண்ணூரில் மின்சார உற்பத்தி அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. தூத்துக்குடி அனல்மின் திட்டத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் எப்படியும் மின்சார உற்பத்தியைத் தொடங்க வேண்டுமென்பதற்காக அரசு தீவிரமாகப் பணியாற்றி வருகின்றது.

மனிதனின் ஆதாரத் தேவையான உணவு உற்பத்திக்கு நீர்ப்பாசன வளர்ச்சி மிக முக்கியமான தொன்றாகும். ஆகவேதான் தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் சாத்தியமான எல்லா நீர்ப்பாசன திட்டங்களையும் தமிழக அரசு நிறைவேற்றி வருகின்றது.

நமது முதலமைச்சர் அவர்கள் கிராமப்புற வளர்ச்சிதான் ஒரு நாட்டின் உண்மையான வளர்ச்சிக்குச் சான்று என்பதை உணர்ந்து அதற்கு ஆதாரமான விவசாயத் துறைக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் நீரார் அணை திட்டம் முடிவடைந்தால் கிட்டத்தட்ட 2½ டி. எம். சி. தண்ணீர் அதிகம் கிடைக்கும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மலையை குடைவதிலும் (Tunneling), அணைக்கட்டு வேலைகளை தீவிரமாக்குவதிலும் முதன்மை காட்டுகின்றோம். வைகை கால்வாய்களை நவீனமாக்குவது மற்றொரு பெரிய திட்டமாகும். மேலும் 15 புதிய நீர்ப்பாசன திட்டங்களை இந்த அய்ந்தாண்டு காலத்திற்குள் முடிப்பதென்று முடிவு செய்து வேலைகளை தீவிரப்படுத்தி யிருக்கின்றோம். பெரியாறு கால்வாயை நவீனமாக்கும் திட்டத்தையும் மேற்கொண்டு அந்த வேலைகளை விரைவாக முடிக்க ஏதுவாக மதுரையில் புதிதாக ஒரு தலைமை பொறியாளர் விரைவாக முடிக்க மதுரையில் புதிதாக ஒரு தலைமை பொறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். காவிரி டெல்டா பகுதியில் வடிகால் திட்டங்கள் தொடர்பாக பதினைந்து புதிய பணிகளை இவ்வாண்டு நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் வட்டமலைக்கரை ஓடை, வரட்டுப் பள்ளம், குண்டேரி பள்ளம் திட்டங்களும், மதுரை மாவட்டத்தில் கிருதமாநதி பி. டி. ராசன் கால்வாய்த் திட்டம், நெல்லை மாவட்டத்தில் குண்டார், கொடுமுடியாறு முதலிய திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பிற்

பட்ட மாவட்டமான தரும புரிக்குப் பயன்படும் வகையில் பொன்னியாறு அணைத் திட்டமும், வீராணம் ஏரி, வடவாறு இவற்றின் வாய்க்கால்களைச் செம்மைப்படுத்த இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 25 இலட்சம் ரூபாய் செலவிற்கு உட்பட்ட திட்டங்களைச் சிறுபாசன சிறப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தி வருகிறோம்.

1977-78 ஆம் ஆண்டில் 25 ஆயிரம் ஏக்கர் புதிய ஆயக்கட்டுப் பகுதிகள் பலனடையும் வண்ணம் 200 பாசனப் பணிகள் சுமார் ரூ. 4 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநில வருமானத்தில் (State Income) ஏறத்தாழ 45 சதவீதம் விவசாயத்துறை நமக்கு அளிக்கின்றது. 1977-78ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி 62 இலட்சம் டன்னாக உயரவேண்டுமென்று திட்டமிட்டிருந்தோம். பருத்தி உற்பத்தி 4.20 இலட்சம் பேல், நிலக்கடலை உற்பத்தி 12.75 இலட்சம் டன் அடைய வேண்டுமென்று திட்டமிட்டிருந்தோம். ஆனால் இயற்கையின் சீற்றத்தால் விவசாய உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டது. விவசாயிகள் சொல்லொணாத் துயருக்கு ஆளாயினர்.

அரசாங்கத்தினுடைய முயற்சியினால் இந்த ஆண்டு அரிசி உற்பத்தி 59 இலட்சம் டன்னாகவும், பருத்தி 4 இலட்சம் பேல் அளவிலும், நிலக்கடலை 10.18 இலட்சம் டன் அளவிலும் உற்பத்தியாகியுள்ளது. இவ்வளவு பெரிய இயற்கையின் சோதனைக்குப் பின்பும் திட்டமிட்ட உற்பத்தி இலக்கை நாம் பெற வேண்டுமானால், அரசு எந்த அளவுக்கு முயற்சி எடுத்திருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இயற்கையின் எதிர்ப்பையும் முறியடித்து வெற்றி கண்டிருக்கிறோம். விவசாய உற்பத்தியாளர்களுக்கு, உற்பத்தியாகும் பொருள்களுக்கு நியாய விலை கிடைக்க வழி செய்யும் வகையில் தமிழ்நாடு விளைபொருள் இயக்குநர் அலுவலகம் (Directorate of Marketting) என்ற புதிய அமைப்பை இந்த அரசு உருவாக்கியிருக்கின்றது.

தமிழ்நாடு விவசாயப்பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்ட மீனளக் கல்லூரி, தூத்துக்குடியில் 1977-78ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. நீண்ட கடலோரப் பகுதியைக் கொண்ட தமிழகத்தில் மீன்வளம் மிகுந்து காணப்படுகிறது. ஆழ்கடல் மீன்பிடிப்பில் கவனம் செலுத்தி அதற்காக மெக்ஸிகோ நாட்டிலிருந்து இரண்டு பெரிய டிராலர்கள் வாங்கியிருக்கிறோம். ரேடியோ, டெலிபோன், குளிர்சாதன வசதி ஆகிய நவீன அமைப்புக்களைக் கொண்ட இந்த டிராலர்கள் மூலம் மீன் இருக்கும் பகுதியைக் கண்டுபிடித்து மீன் உற்பத்தி அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாசகர்களுக்கு...

1-12-78 'தமிழரசு' இதழில் வெளிவந்துள்ள 'ராஜாஜியின் வாழ்விலே' என்னும் கட்டுரை திரு. பரந்தாமன் எழுதிய 'ராஜாஜி நூற்றுக்கு நூறு' என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்களின் சக்தியையும், வளத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்த கல்வியும், சுகாதாரமும் மிக முக்கியம். அந்த வகையில் நமது மாநிலத்தில் இந்த ஆண்டு 36 புதிய தொடக்கப் பள்ளிகளும் 44 நடுநிலைப் பள்ளிகளும், 29 உயர்நிலைப் பள்ளிகளும் திறக்கப்பட்டன. இதன் மூலம் 1100 புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 200 தமிழ்ப் புலவர்களும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்களும் இதில் அடங்கியுள்ளனர்.

மனிதனின் அடுத்த தேவை சுகாதார வசதிகள். 24 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நடமாடும் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. டாக்டர், கம்பவுண்டர் ஆகியோர் அடங்கிய இந்தக் குழு ஒவ்வொரு நாளும் 6, 7 கிராமங்களுக்குச் சென்று மூலை முடுக்குகளில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சுகாதார வசதியைத் தருகின்றது. 20 ஊராட்சி ஒன்றிய டிஸ்பென்சரிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. பாளையங்கோட்டையில் உள்ள இந்திய மருத்துவ மனையில் புதியதாக 100 படுக்கைகள் கொண்ட கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்திய மாநிலங்களில் தொழில் துறையில் முன் வரிசையில் இருந்த தமிழகம் கடந்த ஆண்டுகளில் பின் வரிசைக்குத் சென்று விட்டது. இந்த அரசு மீண்டும் தமிழகத்தைத் தொழில் துறையில் முன்னணிக்குக் கொண்டுவர எல்லா முயற்சிகளையும் செய்து வருகின்றது.

இரண்டு பெரிய தொழில் மையங்களை அளிக்கும் பணியில் 'சிப்காட்' சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. பிற்பட்ட மாவட்டமான தருமபுரியில் உள்ள ஹோசூரில் 1000 ஏக்கருக்கு மேற்பட்ட இடத்தை மேம்படுத்தி மின்சார நீர் வசதிகளைத் தந்து தொழில் அதிபர்களுக்கு இடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ராணிப்பேட்டையில் உள்ள 700ஏக்கர் நிலப்பரப்பில் 24-க்கும் அதிகமாக தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 'சிட்கோ' நிறுவனம் இந்த ஆண்டு முடிவுக்குள் 200 தொழில் கூடங்களை பல்வேறு இடங்களில் கட்டி முடித்திருக்கின்றது. 'டான்சி' நிறுவனம் இவ்வாண்டு மூன்று புதிய தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கின்றது. அரசுத் துறையின் சார்பில் அரியலூரில் ஒரு பெரிய சிமெண்ட் தொழிற்சாலை கட்டி வருகின்றோம். இதனால் 1,100 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையின் முழு உற்பத்தி அளவை அடைவதற்கு எல்லா முயற்சிகளையும் அரசு எடுத்து வருகின்றது. அரசுத் துறையில் அமைக்கும் பொருட்டு 9 திட்டங்களை 'டிட்கோ' பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது. அதேபோல் தனியார் கூட்டு முயற்சியோடு சேர்ந்து 9 திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகின்றது. அடுத்த ஆண்டு மேலும் 8 திட்டங்களை 'டிட்கோ' ஏற்றுக் கொள்ளும்.

குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு 26.50 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. சமீபத்தில் எடுத்த கணக்கின்படி ஏறத்தாழ தமிழகத்தில் 47,000 குடியிருப்புக்களில் 3,566 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதியே இல்லாமல் இருக்கின்றது. 2,117 குடியிருப்புகளுக்கு நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் நிலமில்லாத ஏழைகளுக்கும், அரிசனங்களுக்கும் ஒரு குடும்பத்துக்கு மூன்றிலிருந்து அய்ந்து செண்ட் என்ற வகையில் சுமார் 35 ஆயிரம் குடும்பங்களுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. சுமார் 25 ஆயிரம் பேர்களுக்கு விவசாயம் செய்வதற்காக 30 ஆயிரம் ஏக்கர் நிலம் அளிக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொல்லப் போனால், தமிழ்நாட்டில் வரும் ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி சிறப்பான முன்னேற்றம் காண 1977-78ஆம் ஆண்டு திட்டப்பணிகள் வலுவான தொரு அடித்தளத்தை அமைத்துள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

(31-10-78 அன்று வானொலியில் நிகழ்த்திய உரை.)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

— அண்ணல் காந்தியடிகள்



ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!

உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.

Verified

இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை — சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!